ஸ்ரீ ஸத்குரு மூர்த்தயே நம:

பெல்லங்கொண்ட ஸ்ரீ ராமராய கவீந்த்ரர்
அருளிய

ஸ்ரீ சங்கராசங்கர பாஷ்யவிமர்சனம்

இரண்டாம் பாகம்
(பகுதி – 1)

பெல்லங்கொண்ட ஸ்ரீ ராமராய கவீந்த்ரர்
என்பவரால் ஸம்ஸ்க்ருதத்தில்
இயற்றப்பட்ட
இந்த க்ரந்தத்தின் தமிழாக்கம்

V.S. கமலாம்பாள் அம்மாள்

ॐ

ஸ்ரீ ஸத்குரு மூர்த்தயே நம:

பெல்லங்கொண்ட ஸ்ரீ ராமராய கவீந்த்ரர்
அருளிய

ஸ்ரீ சங்கராசங்கர பாஷ்யவிமர்சனம்

இரண்டாம் பாகம்

(பகுதி – 1)

श्री बेल्लंकोण्ड रामराय कवीन्द्रेण विरचितः
शङ्कराशङ्करभाष्यविमर्शः

द्वितीयो भागः

(प्रथमः अंशः)

பெல்லங்கொண்ட ஸ்ரீ ராமராய கவீந்த்ரர்
என்பவரால் ஸம்ஸ்க்ருதத்தில்
இயற்றப்பட்ட
இந்த க்ரந்தத்தின் தமிழாக்கம்

V.S. கமலாம்பாள் அம்மாள்

நூலின் தலைப்பு : ஸ்ரீ சங்கராசங்கர பாஷ்ய விமர்சனம்
(இரண்டாம் பாகம்)

விளக்கம் : பெல்லங்கொண்ட ஸ்ரீ ராமராய கவீந்த்ரர்

மொத்த பக்கங்கள் : 424

முதல் பதிப்பு : செப்டம்பர், 2019

மொத்த பிரதிகள் : 500

தமிழாக்கம் : **V. S. கமலாம்பாள் அம்மாள்**

அச்சிட்டோர் : ரத்னா ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,
ராயப்பேட்டை, சென்னை - 14.

பரிந்துரைக்கப்பட்ட
நன்கொடை : **₹ 500/-** (இரண்டு பகுதிகளுக்கும்)

<u>கிடைக்குமிடங்கள்</u>

ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்,
வேதபுரீ, தேனி - 625 531.
அலைபேசி - 99524 35784

ஸ்ரீபுவநேச்வரீ அவதூத வித்யாபீடம்,
கீழ ஏழாம் வீதி, புதுக்கோட்டை - 622 001.
அலைபேசி - 63814 19776

ஸ்ரீநாராயண தாமா,
7/13, முதல் பிரதான சாலை, கற்பகம் கார்டன்ஸ்
அடையாறு, சென்னை - 600 020.
அலைபேசி - 99416 13607

<u>வெளியீடு</u>

ஸ்ரீப்ரஜ்ஞா பப்ளிகேஷன்ஸ்
வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்
சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி - 625 531.
Email: swamiomkarananda@gmail.com



SWAMI DAYANANDA SARASWATI

Arsha Vidya Ashram Gurukulam
Alamarathumedu
Anaikatti (P.O.)
Coimbatore - 641 108

பெல்லங்கொண்ட ஸ்ரீ ராமராய கவீந்த்ரர் அவர்கள் இயற்றிய ''ஸ்ரீ சங்கராசங்கர பாஷ்ய விமர்சனம்'' என்கிற நூல் ஒரு சிறந்த விசாராத்மக க்ரந்தம். இந்த நூல் ஸம்ஸ்க்ருத மொழியில் வேதாந்த விஷயங்களை நன்றாக விளக்கியிருக்கிறது. வேதாந்தத்தில் மிகவும் முக்கிய விஷயங்களான ஆத்ம தத்துவம், ஸ்த்ய–மித்யா ஸம்பந்தம், ஞானம், முக்தியின் தன்மை முதலியவைகள் பூர்வபக்ஷ ஸித்தாந்த முறையில் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டு இருப்பது இதன் சிறப்பு அம்சம். இந்த முறை முமுக்ஷுக்களுக்கு ஏற்படும் ஸந்தேகங்களை படிப்படியாக நிவர்த்தி பண்ணும்.

ப்ரஹ்ம ஸ்ரீ வரஹூர் கல்யாண ஸுந்தர சாஸ்த்ரிகள் இந்த நூலை அழகாக பல வகுப்புகளில் மாதுஸ்ரீ கமலாம்பாள் அவர்களுக்கு விவரித்தபடியே இந்த நூல் அமைந்து இருப்பது இந்த நூலின் மற்றொரு மேன்மை. இதன் முன்பு வெளிவந்த ''ஸ்வாராஜ்ய ஸித்தி'', ''ஸம்க்ஷேப சாரீரகம்'' நூல்களைப் போலவே இந்த நூலையும் தமிழில் வெளிவர பெருமுயற்சி எடுத்து, ப்ரஹ்மஸ்ரீ சாஸ்த்ரிகள் கூறியபடியே இதை அமைத்துக் கொடுத்த மாதுஸ்ரீ கமலாம்பாளை போற்றி வாழ்த்துகிறேன். இந்த நூலை படிக்கும் முமுக்ஷுக்கள் எல்லோரும் மாதுஸ்ரீ கமலாம்பாள் அவர்களுக்கு கடமைப்பட்டு இருப்பார்கள்.

ஸ்ரீ தயானந்தா.

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

Swami Omkarananda

தேனி, வேதபுரீ

ஸ்ரீவிளம்பி வருஷம்

பங்குனி 3, திங்கட்கிழமை

(18-03-2019)

அருளாசியுரை

வேதாந்த சாஸ்த்ரங்களுள் ப்ரஸ்தாந த்ரயம் மிக முக்கியமானது. ஞாந நிஷ்டைக்காக வேண்டி, அநேகமான க்ரந்தங்கள் மஹான்களால் இயற்றப்பட்டிருக்கின்றன.

ச்ரவணத்தின் வாயிலாக, அத்வைத ஸித்தாந்தத்தின் பரம தாத்பர்யத்தை அறிந்துகொண்டாலும், நிறைய விசாரங்களை மேற்கொண்டு, ஸம்சயங்களை நிவ்ருத்தி செய்துகொள்வதற்கு இதுபோன்ற நூல்கள் உதவிபுரிகின்றன.

ச்ரவண மநந நிதித்யாஸனங்களுக்கு, ஸ்ரீதர்மராஜ அத்வரீந்த்ரர் இயற்றிய வேதாந்த பரிபாஷா என்ற நூலில் பின்வருமாறு இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

श्रवणं नाम वेदान्तानामद्वितीये ब्रह्मणि तात्पर्यावधारणानुकूला मानसी क्रिया।

ச்ரவணம் என்றால், வேதாந்தம் எனப்படும் உபநிஷத்துக்களுக்கு இரண்டற்ற மெய்ப்பொருள்தான் மையக்கருத்து என்பதை உணர்ந்துகொள்வதற்கு அநுகூலமான உள்ளச் செயல்பாடு என்று பொருள்.

मननं नाम शब्दावधारितेऽर्थे मानान्तरविरोधशङ्कायां तन्निराकरणानुकूलतर्कात्मकज्ञानजनको मानसो व्यापारः।

மநநம் என்றால், ச்ரவணத்தினால் அறிந்துகொள்ளப்பட்ட இரண்டற்ற மெய்ப்பொருளில், வேறு ப்ரமாணங்களோடு முரண்பாடு ஏற்படுமானால், அந்த முரண்பாடுகளை நீக்குவதற்கு அநுகூலமான சான்றுகள், யுக்திபூர்வமாக சரியான எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றைக் கூறி, அதன்மூலம் ஏற்படும் அறிவுத்தோற்றத்திற்குக் காரணமான உள்ளச் செயல்பாடு என்று பொருள்.

निदिध्यासनं नाम अनादिदुर्वासनया विषयेष्वाकृष्यमाणस्य चित्तस्य विषयेभ्योऽपकृष्य आत्मविषयकस्थैर्यानुकूलो मानसो व्यापारः।

நிதித்யாஸநம் என்றால், காரணம் தெரியாத, தவறான எண்ணங்களினால், புலன்களின் வாயிலாக, புறப்பொருட்களின்பால் கவரப்படும் சித்தத்தை (உள்ளத்தை), புறப்புலன்களிலிருந்து விடுபட்டு, ஆத்மா என்ற இரண்டற்ற பரம்பொருளிலேயே மனதை நிலைநிறுத்துவதற்கு அநுகூலமான உள்ளச் செயல்பாடு என்று பொருள்.

ப்ரஸ்தாந த்ரயங்களைக் கற்ற பிறகு, ஸித்தி க்ரந்தங்களைக் கற்க வேண்டும். அப்பொழுதுதான் ஸித்தி க்ரந்தங்கள் சிறந்த பயனைக் கொடுக்கும். ஸித்தி க்ரந்தங்கள் அனைத்துமே மநந க்ரந்தங்கள்தான்.

Acharya : Adiguru Sri Prajna Dakshinamurti Vidya Pitham, Theni. & Sri Bhuvaneswari Avadhuta Vidya Pitham, Pudukkottai.

Founder & Managing Trustee : Vedanta Sasthra Prachara Trust & Sri Dakshinamurti Seva Samiti, Theni.

SRI SWAMI CHIDBHAVANANDA ASHRAMAM, P.B. 23, Vedapuri, Chatrapatti Road, Theni - 625 531.
☎ 04546-253908 E-mail : swamiomkarananda@yahoo.com / gmail.com www.vedaneri.com

SRI SRI JUDGE SWAMIGAL ADHISTANAM, East 7th Street, Pudukkottai - 622 001. Ph : 04322-221440

முமுக்ஷுக்கள், மோக்ஷ ஸ்வரூபம், மோக்ஷ ஸாதநம் ஆகியவற்றை எப்பொழுதும் மறவாமல் நினைவில் கொள்ள வேண்டும். அத்வைத ஸித்தாந்தப்படி, மோக்ஷத்திற்கு ஸாதனம், ப்ரஹ்மாத்மைக்ய ஞாநம். அதற்கு வேதாந்த சாஸ்த்ர விசாரம் ஸாதனமாக இருக்கிறது.

आचार्यवान् पुरुषो वेद। (சாந்தோக்ய உபநிஷத் 6-14-2)

என்ற ச்ருதி வாக்கியத்தின்படியும்,

आचार्याद्धैव विद्या विदिता साधिष्ठं प्रापयति।

(சாந்தோக்ய உபநிஷத் 4-9-3) என்ற ச்ருதி வாக்கியத்தின்படியும்,

तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् समित्पाणि: श्रोत्रियं ब्रह्मनिष्ठम्।।

(முண்டக உபநிஷத் 1-2-12) என்ற ச்ருதி வாக்கியத்தின்படியும்,

நாம் வேதாந்த சாஸ்த்ரங்களைக் கண்டிப்பாக, குருமுகமாகத்தான் அத்யயநம் செய்ய வேண்டும். மநநக்ரந்தங்களுள், விசேஷமாக ஶங்கராஶங்கரபாஷ்ய விமர்ஶ: என்ற நூலானது, அத்வைத ஸித்தாந்தத்தையும், விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, அத்வைத ஸித்தாந்தத்தை நிர்த்தாரணம் (நிலைநிறுத்துதல்) செய்கிறது. பேதாபேத வாதம், அபேத வாதம் ஆகிய இரண்டிலும் ஏற்படும் சந்தேகங்களை, இந்த நூலின் வாயிலாகத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும்.

பரமபூஜ்யஸ்ரீ பரமார்த்தாநந்த ஸ்வாமிஜீ அவர்களின் சிஷ்யனாக இருப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அது மட்டுமல்லாமல், பரமகுருநாதர் பூஜ்யஸ்ரீ தயாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிஜீ அவர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைத்ததையும் வாழ்வில் கிடைத்தற்கரிய பெரும்பாக்யமாகக் கருதுகிறேன்.

பாஷ்ய பாவஜ்ஞ வரகூர் ஸ்ரீகல்யாணஸுந்தர சாஸ்த்ரிகளிடமும் எனக்கு பரிச்சயம் உண்டு. மாதுஸ்ரீகமலாம்பாள் அவர்களுடன் பழகும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கிறது.

இந்த ஶங்கராஶங்கர பாஷ்ய விமர்ஶத்தை எனது குருநாதர், ஸ்ரீசாஸ்த்ரிகளின் முன்னிலையில் விசாரம் செய்தபொழுது, சில வகுப்புகளில் அருகிலிருந்து ச்ரவணம் செய்யும் பாக்யம் எனக்குக் கிடைத்தது.

என்னுடைய குருநாதர் பரமபூஜ்யஸ்ரீ பரமார்த்தாநந்த ஸ்வாமிஜீ அவர்களின் அருளாணைக்கிணங்க, இந்நூலை வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட் மூலமாக வெளியிடுகிறோம்.

இந்நூல் வெளிவருவதற்கு மிகுந்த முயற்சி எடுத்துள்ள ப்ரஹ்மஸ்ரீ மணித்ராவிட் சாஸ்த்ரிகள் அவர்களுக்கும், ஸ்ரீஏ.எஸ்.வெங்கட்ராமன் அவர்களுக்கும், வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்டின் அறங்காவலர்களுக்கும், அச்சிட்டுக் கொடுத்த ரத்னா ஆப்செட் ப்ரிண்டர்ஸ்க்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

अहो शास्त्रं अहो शास्त्रं अहोगुरुरहो गुरुः।
अहो ज्ञानं अहो ज्ञानं अहो सुखं अहो सुखम्।।

உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

ஓம் நமோ நாராயணாய!

பேரன்புடன்

ஸ்வாமி ஓங்காராநந்த

ஸ்ரீ சத்குரு மூர்த்தயோகம்

''ஸ்ரீ சங்கராசங்கர பாஷ்ய விமர்சனம்'' என்ற இந்த க்ரந்தம் பெல்லங்கொண்ட ஸ்ரீ ராமராயகவீந்த்ரர் என்ற மஹாத்மாவினால் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றப்பட்டிருக்கின்றது. மிக அற்புதமான இந்த க்ரந்தத்தில், வஸ்து என்றாலே ஸவிசேஷமாகத்தான் இருக்கும் என்ற ஆக்ஷேபத்தை நிராகரித்து வஸ்து நிர்விசேஷம் என்று தெரிவிப்பதற்காக நிர்விசேஷ வஸ்து ஸ்வரூபம், சாஸ்திரம் என்ற சப்தப்ரமாணத்தினால் ஏற்படுகிறது என்று நிர்விகல்பகஞானம் பற்றி ச்ருதி, ஸ்ம்ருதி புராணம் முதலானவைகளைக் கொண்டும் யுக்தியைக் கொண்டும், அவஸ்த்தாத்ரயங்களில் ஏற்படும் அனுபவம் பற்றியும் தெரிவித்து, அதில் சுஷுப்தி நிலையில் அனுபவிக்கப்படும் வஸ்து நிர்விசேஷம் என்று உதாரணமாக, தெரிவித்து, உபநிஷத்துக்களெல்லாம் எந்த வஸ்துவை வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதது என்று தெரிவிக்கின்றதோ அந்த தத்வத்தை அனைவரும் அறிந்து, பேரின்பத்தை பெற வேண்டுமென்ற கருணையினால், இந்த க்ரந்தத்தில் கேள்வி, பதில் மூலமாக இயற்றி எவ்வித ஸந்தேஹத்திற்கும் இடமின்றி மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது. இதை தமிழில் புஸ்தகரூபமாக வெளியிட வேண்டுமென்று எனது குருநாதர் ஸ்ரீஸ்வாமிஜி தயானந்த ஸரஸ்வதி அவர்களின் ஆஞ்ஞைப்படி அவருடைய அருளால் இயற்றப்பட்டிருக்கிறது.

எத்தனையோ கோடி ஜன்மாக்களின் ஸுக்ருதவசாத் ஸ்ரீத்யாகேசன் திருவருளால் கிடைத்ததற்கரிய மஹாத்மாவான ஸ்ரீஸ்வாமிஜி தயானந்த ஸரஸ்வதி அவர்களை சரணடைந்து அவர் பாதபத்மங்களில் நமஸ்கரித்ததன் பலனாக அவர் அருட்கடாக்ஷம் பெற்று அவரிடம் ச்ரவணம் செய்கின்ற மஹத்தான பாக்யம் கிடைத்தது. முதன்முதலாக விவேக சூடாமணி என்ற க்ரந்தத்தை எனக்கு போதித்தருளிய ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கருணாகடாக்ஷத்தினால் எனைத்தடுத்தாட்கொண்டு பெறற்கரிய பேரின்பத்தை அளிக்க வேண்டுமென்ற தயைநிறைந்த உள்ளத்துடன் எனக்கு இதுவரை அவர் செய்திருக்கின்ற நன்மைகளை அளவிட்டுக் கூறமுடியாது. அவருடைய அருட்க்ருபையினால் வேதாந்த ச்ரவணம் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று எனது ஆசார்யரான பாஷ்யபாவஞ்ஞ ஸ்ரீ கல்யாண சுந்தர சாஸ்த்ரிகளிடம் ச்ரவணம் செய்யும் மஹத்தான பாக்யமும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் கிடைத்தது. ஸ்ரீசாஸ்த்ரிகளை ஆசார்யராக அடைகின்ற மஹத்தான பாக்யத்தை அடைந்தேன். அவரும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களைப் போலவே என்னை ஏற்று எனக்கு வேதாந்த பாடங்களை பல வருடங்கள் போதித்தருளியதற்கு எத்தனை ஜன்ம ஸுக்ருதமோ அறியேன். கிடைத்ததற்கரிய ஆசார்யரான ஸ்ரீசாஸ்த்ரிகள் என்னிடம் மிகவும் கருணை கூர்ந்து தன் ச்ரமத்தையே பாராமல் பல க்ரந்தங்களை போதித்தருளினார்கள். இவ்விதம் ச்ரவணம் செய்த க்ரந்தங்களை மனனத்திற்காக Notes எழுதி வந்தேன். அவைகளை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஏதோ ஒரு ஸந்தர்பத்தில் ஒரு க்ரந்தத்தை பார்க்க நேர்ந்தது. அதன் காரணமாக இவைகள் புஸ்தக ரூபமாக இயற்றப்பட்டால் எல்லோருக்கும் பயன்படும் என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு என்ன தெரியும், நான் எவ்விதம் இயற்ற முடியும் என்று தயங்கி

பல வருடங்கள் ஆயிற்று. ஆனால் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ஸங்கல்பம் வீண்போகாமல், ஸ்ரீசாஸ்த்ரி அவர்களின் இஷ்டப்படியும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் இஷ்டத்தையும் அவர்கள் ஆஞ்ஞையையும் நிறைவேற்ற வேண்டுமென்ற அவா இருந்தும் எனக்கு நம்மால் எவ்விதம் செய்ய முடியும் என்ற தயக்கத்தினாலேயே முயற்சி செய்யவில்லை. ஆனால் ஸ்ரீஸ்வாமிஜி அவசியம் செய்தே ஆகவேண்டும், இதனால் சாஸ்த்ரிகளுக்கும் ஸந்தோஷம் ஏற்படும் என்று தெரிவித்து, 'என்ன தயக்கம் நீங்களா எழுதப் போகிறீர்கள் நான்தானே எழுதப்போகிறேன்' என்று அவருடைய திருவாக்கினால் ஏற்பட்ட அந்த அருள் வாக்கினை கேட்டவுடன் என் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சியை வாக்கினால் வர்ணிக்க இயலாது. அதுவே எனக்கு மஹத்தான சக்தியை கொடுத்தது. உடனே அவருடைய அருட்திருப்பாதங்களில் நமஸ்கரித்து ஆசிபெற்றேன். அவர் திருக்கரங்களினாலேயே ஸம்க்ஷேப சாரீரகம் என்ற க்ரந்தத்தை ஆரம்பித்து எழுதிக் கொடுத்தார். அவர் அருட்வாக்கின்படியே என்புத்தி குஹையில் வீற்றிருந்து இதுவரை இயற்றப்பட்ட ஸம்க்ஷேப சாரீரகம், ஸ்ரீ ஸ்வாராஜ்ய ஸித்தி, ஸ்ரீ சங்கரா சங்கர பாஷ்யம் என்ற மூன்று க்ரந்தங்களும் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதால் இவையெல்லாம் என் குருநாதராகிய ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருட்க்ருபையாலும் எனது ஆசார்யரான ஸ்ரீசாஸ்திரி அவர்களின் அருட்க்ருபையாலும் அருளப்பெற்றிருக்கின்றது என்பதே உண்மை. ஆகவே அவர்கள் இருவர்களின் பாதபத்மங்களில் நமஸ்கரித்து எவ்வித திறமையும் அற்ற இந்த அபலையின் மூலமாக இவைகளை இயற்றி எனக்கு பெறற்கரிய பேற்றை அளித்ததற்கு என் உளங்கனிந்த நன்றியையும் என் நமஸ்காரங்களையும் தெரிவித்து அவர்கள் பாதபத்மங்களில் இவைகளை ஸமர்ப்பணம் செய்து அனேக கோடி நமஸ்காரங்களை செய்து எனக்கு அருள்கூர்ந்து ஆசிர்வதிக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களைப்பற்றி எவ்வளவோ எழுத நினைத்தும் நேரமின்மையினால் இயலவில்லை. அதேபோல ஸ்ரீசாஸ்த்ரி அவர்களைப் பற்றியும் எழுத நினைத்தும் நேரம் கிடைக்காத காரணத்தினால் முடியவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த க்ரந்தம் வெளியிடப்படுவதற்கு ஸ்ரீஸ்வாமிஜி தன் உடல் நலத்தைக்கூடப் பாராமல் அவருக்கு இருக்கின்ற வேலைகளில் அவைகளைப் பார்த்து பிழை திருத்தி அனுக்ரஹித்த அவருடைய கருணை உள்ளத்தை எவ்விதம் போற்றுவது என்றே தெரியவில்லை. அதேபோல் ஸ்ரீஸ்வாமிஜி பரமார்த்தானந்தாஜி அவர்களுக்கும் என் அனந்தகோடி நமஸ்காரங்களை தெரிவித்து என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூல க்ரந்தத்தை தமிழில் இயற்றி இருப்பதால் அதை சரிபார்க்க வேண்டும் என்று அதற்கு தகுந்த ஒருவரை தேடி அலைந்த போது ஸ்ரீஸ்வாமிஜியின் அருளால் ஸம்ஸ்க்ருத காலேஜில் வேதாந்தபாடம் போதிக்கின்றவரும் காசிக்ஷேத்ரத்தில் வேத வேதாந்தங்களை படித்தவருமான ஸ்ரீமணி த்ராவிட் என்ற மஹத்தான ஒரு ஆசார்யனை அடைந்து அவரிடம் என்னுடைய ஆவலை தெரிவித்தவுடன் அவருக்கு இருக்கின்ற வேலைகளில் சிரமத்தைப் பாராமல் என் வேண்டுகோளை நிறைவேற்றியருளிய அவர் பாதபத்மங்களில் நமஸ்கரித்து என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். என் நண்பர் ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்களும் செய்த உதவிகளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக சிறிய காலத்தில் சிரமத்தைப் பாராமல் பிரிண்ட் செய்து

கொடுத்த நண்பர் ரத்னா ப்ரஸ் ஸ்ரீ ராஜகுமாருக்கு என் நன்றி கலந்த நமஸ்காரங்களைச் செய்கிறேன். என்னுடைய குடும்பத்தார்களான கோபால்ராமன் எனது மருமகள் பெரியநாயகி கோபால்ராமன் முதலானவர்கள் எல்லோருமே இந்த விஷயத்தில் மிகவும் ஒத்துழைப்பு தந்து என் எண்ணம் ஈடேறச் செய்ததற்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூர்ண ஆசி அருள்புரியும்படி ப்ரார்த்திக்கிறேன். இந்த க்ரந்தத்தை படிக்கின்ற அனைவருக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளினால் பூர்ணத்வம் கிடைக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன். வித்வான்களுக்கு என் உளங்கனிந்த நமஸ்காரங்களை தெரிவிக்கின்றேன். இதில் ஏதாவது குணதோஷங்கள் இருக்குமானால் தயை செய்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

V. S. Kamalammal.

॥ श्रीगुरुभ्योनमः ॥

Dr. R. मणिद्राविडशास्त्री
अद्वैतवेदान्त-पूर्वमीमांसाचार्यः, मीमांसाशिरोमणिः,
मद्रपुरीयसंस्कृतमहाविद्यालयः,
मैलापूर्। चेन्नै- ४

Dr. R. Mani Dravid Sastri Ph.D.
Assistant Professor, Purvamimamsa,
The Madras Sanskrit College,
Mylapore, Chennai - 600 004

ஸ்ரீகுருப்யோ நம:

ஸ்ரீசங்கராசங்கர பாஷ்ய விமர்சனம் என்ற க்ரந்தம் பெல்லங்கொண்ட ஸ்ரீராமராய கவீந்த்ரரால் இயற்றப்பட்டது. இந்த க்ரந்தத்தில் ஸ்ரீபாஷ்யத்திலும், அதன் வ்யாக்யாநம் ச்ருதப்ரகாசிகையிலும் அத்வைத ஸித்தாந்தத்தின் மேல் எழுப்பப்பட்ட எல்லாவித ஆக்ஷேபங்களுக்கும் மிகத்தெளிவாக ஸமாதானம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தத்தின் மூலம் முமுக்ஷுக்கள் அத்வைத ஸித்தாந்தத்தை எவ்வித ஸந்தேஹமும் இல்லாமல் தெளிவாக புரிந்துக் கொள்ளலாம்.

இந்த க்ரந்தத்தை பாஷ்ய பாவஞ்ஞ ப்ரஹ்மஸ்ரீ வரஹூர் R. கல்யாணஸுந்தர சாஸ்த்ரிகளிடம் முறைப்படி கற்று தமிழில் எழுதியவர் மாதுஸ்ரீ V.S. கமலாம்பாள் அவர்கள். அவர் எழுதியது வெறும் தமிழாக்கமாக மட்டுமில்லாமல் பல கடினமான இடங்களில் மூல க்ரந்தத்தின் தாத்பர்யத்தை விளக்கும் வ்யாக்யானமாகவும் அமைந்திருக்கிறது.

தமிழில் அவர் எழுதிய இந்த க்ரந்தத்தின் முதல் பாகத்தை பூஜ்யஸ்ரீ ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி அவர்களின் அருளாசிகளுடன் அவரே அச்சிட்டு வெளியிட்டார். அவர் ஜீவித காலத்தில் இரண்டாவது பாகத்தை அச்சிட்டு வெளியிட முயற்சியெடுத்தும் பல்வேறு காரணங்களால் அது தடைபட்டு விட்டது. இப்போது அந்த இரண்டாவது பாகம் வெளியிடப்படுகிறது.

இந்த பாகம் வெளி வருவதற்கு பெரும் முயற்சியெடுத்து உதவியவர் ஸ்ரீ A.S.வெங்கட்ராமன் அவர்கள். இந்த கார்யம் மூலம் மாதுஸ்ரீ கமலாம்பாள் அவர்கள் மிகவும் ஸந்தோஷம் அடைவார் என்பதில் எந்த ஸந்தேஹமும் இல்லை. வேதாந்தத்தில் ருசி உள்ளவர்கள் இந்த க்ரந்தத்தைப் படித்து நிச்சயம் பயன் பெறுவார்கள்.

இந்த உத்தமமான கார்யத்தில் உதவி செய்த அனைவரும் ஸகல ச்ரேயஸ்களையும் அடைய பரமேச்வரனை ப்ரார்த்திக்கிறேன்.

மணி த்ராவிட சாஸ்த்ரிகள்

विषयसूचिका

74. ‘नेह नाना’ इत्यत्र रामानुजाभिमतार्थनिराकरणम्। 01
‘மனஸைவ இதம் ஆப்தவ்யம் நேஹ நானா அஸ்தி கிஞ்சன’ என்ற ச்ருதி வாக்யத்திற்கு ராமானுஜரால் தெரிவிக்கப்படும் அர்த்தம் சரியல்ல என்று நிராகரிக்கப்படுகிறது

75. अद्वैतसिद्धान्ते सुदर्शनाचार्यमतनिराकरणम्। 20
அத்வைத ஸித்தாந்தே ஸுதர்சனாசார்யமத நிராகரணம்

76. द्वैतज्ञानस्य मोक्षफलकत्वाभावेन तच्छास्त्रस्य अप्रमाणत्वोपपत्तिः। 37
சாஸ்திரம் த்வைத போதகமா, அத்வைத போதகமா என்று விஜாரித்து த்வைத போதகம் என்று சொல்வது சரியல்ல என்று கண்டிக்கப்படுகிறது

77. ऐक्यश्रुतेरुपासनापरत्वनिराकरणम्। 48
ஐக்யச்ருதே: உபாஸனாபரத்வ நிராகரணம்

78. ‘एकमेवेति’ श्रुतेः रामानुजाभिमतार्थनिराकरणम्। 60
‘ஏகமேவா.....’ என்ற ச்ருதி வாக்யத்திற்கு ராமானுஜரால் தெரிவிக்கப்படும் அர்த்தம் சரியல்ல என்று நிராகரணம் செய்யப்படுகிறது

79. ‘नेह नानास्ति किंचने’ति श्रुत्यर्थविचारः। 62
‘நேஹ நாநாஸ்தி கிஞ்சன’ இதி ப்ஙருத்யர்த்த விசார:

80. ‘यत्र हि द्वैतमिव भवति’ इति श्रुत्यर्थविचारः। 74
‘யத்ர ஹி த்வைதமிவ பவதி’ இதி ச்ருத்யர்த்தவிசார:

81. तैत्तिरीयश्रुत्यन्तर्गत ‘अदृश्ये अनात्म्ये’ इति पदार्थविचारः। 89
தைத்ரீய ச்ருத்யந்தர்கத ‘அத்ருச்யே, அனாத்ம்யே’ இதி பதார்த்த விசார:

82. ‘अनिरुक्त अनिलयन’ पदार्थविचारः 89
‘அனிருக்த, அனிலயன’ பதார்த்த விசார:

83. ‘अभयं प्रतिष्ठां विंदते’इत्यादिश्रुत्यर्थविचारः 97
‘அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே’ இத்யாதி ச்ருத்யர்த்த விசார:

84. गीतास्मृतेः निर्विशेषब्रह्मपरत्वोपपत्तिः। 108
கீதா ஸ்ம்ருதே: நிர்விசேஷப்ரஹ்மபரத்வ உபபத்தி:

85. पुराणवचनानां निर्विशेषब्रह्मपरत्वोपपत्तिः। 125
புராணவசனானாம் நிர்விசேஷப்ரஹ்மபரத்வ உபபத்தி:

86. 'सत्यं ज्ञानमनन्तं ब्रह्म' इति श्रुतौ अनन्तपदस्य अर्थविचारः। 142
'ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம' என்ற வாக்யத்தில் உள்ள அனந்தபத அர்த்த விசார:

87. 'एकदेशस्थितस्याग्नेः' इति श्लोकार्थविचारः। 146
'ஏகதேசஸ்திதஸ்யாக்னே:' என்ற ச்லோகார்த்தவிசார:

88. 'यया क्षेत्रज्ञशक्तिस्सा वेष्टिता नृप सर्वगे'तिश्लोकार्थविचारः 156
'யயா க்ஷேத்ரஞ்ஞ சக்திஸ்ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா' என்கிற ச்லோகார்த்த விசார:

89. 'तया तिरोहितत्वा'दित्यादिश्लोकार्थविचारः 157
'தயா திரோஹிதத்வாத்' இத்யாதி ச்லோகார்த்த விசார:

90. अथ 'प्रधान'मित्यादिश्लोकार्थविचारः। 158
அத 'ப்ரதான'மித்யாதி ச்லோகார்த்தவிசார:

91. 'तदेतदक्षय'मित्यादिश्लोकार्थविचारः। 161
'ததேததக்ஷயம்' என்பது முதலான ச்லோகார்த்தவிசார:

92. रामानुजाभिमतक्षेत्रज्ञस्वरूपनिर्वचननिराकरणम् 165
ராமானுஜாபிமத க்ஷேத்ரஞ்ஞஸ்வரூப நிர்வசன நிராகரணம்

93. आत्मनः स्वसंवेद्यतानिराकरणम्। 169
ஆத்மன: ஸ்வஸம்வேத்யதா நிராகரணம்

94. 'प्रत्यस्तमितभेद'मिति पुराणवचनस्य प्रपञ्चनिषेधपरत्वप्रतिपादनम्। 170
'ப்ரத்யஸ்த்தமிதபேதம்' இதி புராணவசனஸ்ய ப்ரபஞ்ச நிஷேதபரத்வப்ரதிபாதனம்

95. मूर्तामूर्तपदार्थविचारः। 172
மூர்த்தாமூர்த்த பதார்த்த விசார:

96. योगस्य सगुणब्रह्मैकविषयत्वेन तत्प्रकरणस्थश्लोकानां न निर्विशेषपरत्वमिति रामानुजशङ्का – तन्निरासश्च । 177

யோகஸ்ய ஸகுண ப்ரஹ்மைக விஷயத்வேன
தத்ப்ரகரணஸ்த்த ச்லோகானாம்
ந நிர்விசேஷபரத்வம் இதி ராமானுஜ சங்கா–தந்நிராஸஸ்ச

97. 'ज्ञानस्वरूपमखिलम्' इत्यादिश्लोकस्यापि प्रपञ्चमिथ्यात्वपरत्वप्रतिपादनम् । 186

'ஞானஸ்வரூபம் அகிலம்' இத்யாதி ச்லோகஸ்யாபி
ப்ரபஞ்சமித்யாத்வபரத்வ ப்ரதிபாதனம்

98. 'सोह'मित्यादिविष्णुपुराणवचनानां जगन्मिथ्यात्वपरत्वोपपत्तिः । 190

'ஸோஹ'மித்யாதி விஷ்ணுபுராண வசனானாம் ஜகன்
மித்யாத்வபரத்வஉபபத்தி:

99. 'अविकाराय शुद्धाय' इत्यादिश्लोकस्यापि निर्विशेषब्रह्मपरत्वोपपत्तिः । 208

'அவிகாராய சுத்தாய' இத்யாதி ச்லோகஸ்யாபி நிர்விசேஷ
ப்ரஹ்ம பரத்வ உபபத்தி:

100. ब्रह्मरुद्रविष्णुपदानामर्थविचारः । 218

ப்ரஹ்மருத்ரவிஷ்ணுபதானாம் அர்த்தவிசார:

101. शास्त्रस्य निर्विशेषब्रह्मपरत्वे 'निर्गुणस्याप्रमेयस्य' इत्यादिश्लोकोक्तप्रश्नप्रतिवचनानुपपत्तिशङ्का तन्निरासश्च 221

சாஸ்த்ரஸ்ய நிர்விசேஷ ப்ரஹ்ம பரத்வே 'நிர்குணஸ்ய அப்ரமேயஸ்ய'
என்கிற ச்லோகங்களில் காணப்படும் ப்ரச்னம், ப்ரதிவசனம்
என்பவைகள் பொருந்தவில்லையே என்கிற சங்கா நிராஸ:

102. मायाया ब्रह्मशक्तित्वोपपत्तिः । 226

மாயாயா: ப்ரஹ்மசக்தித்வ உபபத்தி:

103. 'परमार्थस्त्वमेवैक' इत्यनेनापि जगतः अपारमार्थ्यत्वोपपत्तिः । 233

'பரமார்த்தஸ்த்வமேவைக' இத்யனேனாபி ஜகத:
அபாரமார்த்யத்வ உபபத்தி:

104. 'तवैष महिमा' इत्यादिविष्णुपुराणान्तर्गतश्लोकानां जगन्मिथ्यात्वपरत्ववर्णनम् 235

'தவைஷ மஹிமா' இத்யாதி விஷ்ணுபுராணாந்தர்கதஸ்லோகானாம்
ஜகன்மித்யாத்வபரத்வவர்ணனம்

105. विशिष्टाद्वैतापेक्षयाऽद्वैतस्य दुष्टत्वशङ्का - तन्निरासश्च । 244
விசிஷ்ட்டாத்வைத அபேக்ஷயா அத்வைதஸ்ய துஷ்ட்டத்வ
சங்கா–தந்நிராஸஸ்ச

106. विष्णुपुराणस्य षड्विधतात्पर्यलिङ्गैर्निर्विशेषब्रह्मपरत्वप्रतिपादनम् । 249
விஷ்ணுபுராணஸ்ய ஷட்விததாத்பர்யலிங்கை:
நிர்விசேஷப்ரஹ்மபரத்வப்ரதிபாதனம்

107. श्रीभाष्ये अद्वैतमतविरुद्धांशखण्डनम् । 280
ஸ்ரீபாஷ்யே, அத்வைதமத விருத்தாம்ச கண்டனம்

108. जीवब्रह्मभेदपरत्वेन रामानुजाभिमतानां श्रुतीनामर्थविचारः 305
ஜீவப்ரஹ்மபேதபரத்வேன ராமானுஜ அபிமதானாம்
ச்ருதீனாம் அர்த்தவிசார:

109. सूतसंहितायाः निर्विशेषब्रह्मपरत्वप्रतिपादनम् 345
ஸூதஸம்ஹிதாயா: நிர்விசேஷப்ரஹ்மபரத்வப்ரதிபாதனம்

110. भागवतस्याप्यद्वैतपरत्वप्रतिपादनम् । 387
ஸூதஸம்ஹிதை போன்றே பாகவத ச்லோகங்களும் அத்வைதபரம்
என்றே நிருபணம் செய்யப்படுகின்றது

ஸதாசிவ ஸமாரம்பாம்,

சங்கராசார்யமத்யமாம்

அஸ்மத் ஆசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

ஸ்ரீ சங்கராசங்கரபாஷ்யவிமர்சனம்

இரண்டாம் பாகம்

(பகுதி – 1)

74

'नेह नाना' इत्यत्र रामानुजाभिमतार्थनिराकरणम् ।

'மனஸைவ இதம் ஆப்தவ்யம் நேஹ நானா அஸ்தி கிஞ்சன' என்ற ச்ருதி வாக்யத்திற்கு ராமானுஜரால் தெரிவிக்கப்படும் அர்த்தம் சரியல்ல என்று நிராகரிக்கப்படுகிறது

ராமானுஜர்-பூர்வ:- '*நேஹ நானா அஸ்தி*' என்ற வாக்யத்தில் 'நானா' என்ற பதம் பேதத்தை தெரிவிக்கின்றது. இந்த வாக்யம் ப்ரஹ்மம் ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகத, பேதம் இல்லாதது என்று தெரிவிப்பதாக அத்வைதிகளால் சொல்லப்படுகிறது. அது சரியல்ல. ஏனெனில் '*பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி*' (बहु स्यां प्रजायेयेति) என்ற வாக்யம் ப்ரஹ்மம், நானே அனேகமாக ஆகப்போகிறேன் என்று ஸங்கல்பித்து ஜகத்தை ச்ருஷ்டித்தது என்று ச்ருதியே தெரிவிக்கின்றது. அதனால் ச்ருதி ஸித்தமான நானாத்வத்தை '*நேஹ நானா அஸ்தி*' என்ற வாக்யம் நிஷேதம் செய்யவில்லை. ஜகத் ப்ரஹ்ம கார்யம் என்பதாலும், ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொண்டதாக இருப்பதாலும் ஜகத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் இருக்கிறது (அனன்யத்வம்). ஜகத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் இருக்கும் ஐக்யத்திற்கு விரோதியான அத்யந்தபேதம் இல்லை என்றே இந்த ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது என்று சொல்லவேண்டும்.

மேலும் ப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்த காரணமே அன்றி, உபாதான காரணமில்லை என்று '*நேஹ நானா அஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் தெரிவிப்பதாகவும், ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் அத்யந்த பேதம் இருப்பதாகவும் மாத்வாச்சாரியாரால் சொல்லப்படுகிறது. அவ்விதம் சொல்வது சரியல்ல என்றே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- ப்ரஹ்மத்திற்கும், ஜகத்திற்கும் கார்ய காரணபாவம் இருக்கின்றதால் ஜகத் ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லப்படுமானால், ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் வைலக்ஷண்யமே அறியப்படமுடியாது. ம்ருத்கார்யமான கடம் முதலானவை ம்ருதாத்மனா இருக்கின்றதே என்றால், அந்த இடத்தில் ம்ருத்தும் ஜடம், கடமும் ஜடம். அதனால் ம்ருதாத்மகம் கடம், என்றே ஸாதாரணமாக சொல்லலாம். அதுபோல் ஜகத் - ப்ரஹ்மம் என்ற இரண்டும் ஒன்றே என்று ஐக்யம் சொல்லமுடியாது. ஏனெனில் இரண்டும் வேறு என்று ஞானம் ஏற்படுகிறது. ம்ருத் கடம் என்ற த்ருஷ்ட்டாந்தத்தில் ம்ருத்தைக்காட்டிலும் கடம் வேறாக இருக்கமுடியாது. (விலக்ஷணமாக இருக்கமுடியாது.) ப்ரஹ்மம் ஜகத்தைக் காட்டிலும் வேறாக இல்லை என்று சொல்லமுடியாது. சிதசித் விலக்ஷணம் ப்ரஹ்மம் என்று உன் சாஸ்த்ரங்களிலேயே சொல்லப்படுகிறது. அதனால் ப்ரஹ்மம், ஜகத் இரண்டும் விலக்ஷணமில்லை என்று சொல்லப்படுவது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது.

மேலும், ப்ரஹ்மம் சிதசித் விலக்ஷணம் என்று சொல்லப்படுமானால் ப்ரஹ்மம் சிதசித் ரூபமாக பரிணாமத்தை அடையாது. எவ்விதம் பட விலக்ஷணமான ம்ருத்தானது படாத்மனா

பரிணாமத்தை அடைவதில்லையோ அதேபோல் சிதசித் விலக்ஷணமான ப்ரஹ்மம் சிதசித்தாக பரிணாமத்தை அடையாது. அதுமட்டுமல்ல, பரிணாம வாதம் என்ற உன் மத ஸித்தாந்தத்தின்படி வைலக்ஷண்யம் இருப்பதாகச்சொல்வது பொருந்தாது. வைலக்ஷண்யம் இருக்கிறது என்றால் கார்யம் காரணாத்மகம் என்று சொல்வது சரியல்ல.

மேலும் அப்யுபேத்ய வாதமாக 'தாரு (மரக்கட்டை) பாறாங்கல் என்பதெல்லாம் ஜடம், ஜன்யம் என்பதால் அவைகளும் ஒரு காரணத்திலிருந்தே உண்டாக வேண்டும். அதனால் இவைகளுக்கு காரணம் சித்ரூபம் (ப்ரஹ்மம்)' என்று சொன்னாலும் ஒருவாறு பொருந்தலாம். ஏனெனில் சிதசித் என்பதில், அசித் என்ற ஜடம் சேர்ந்திருப்பதால், அது (அசித்) உற்பத்தி விநாசமுடையது என்பதால், ப்ரஹ்மத்திலிருந்து உற்பத்தி என்று சொன்னாலும் சொல்லலாம். ஆனால் சித் என்பது சைதன்யமான ஜீவன், நித்யமான ஜீவனுக்கு உற்பத்தி விநாசம் கிடையாது. அதனால் ஜீவனுக்கு ப்ரஹ்மத்திலிருந்து உற்பத்தி விநாசம் சொல்லமுடியாது என்பதால் ஜீவரூபேண ப்ரஹ்மம் பரிணாமத்தை அடைந்ததாக எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் ப்ரஹ்மம் சிதசித் ரூபேண பரிணாமத்தை அடைகிறது என்று சொல்வது சரியல்ல. அதாவது தாரு, பாஷாணாதிகள் போல், ஜீவன் ப்ரஹ்மகார்யமல்ல. ஜீவன் சேதனவர்க்கம், அஜம் என்பதால் ப்ரஹ்மம் ஜீவனுக்கு காரணமாக ஆகாது. அதனால் ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் கார்யகாரண பாவத்தினால் ஏகத்வம் சொல்லமுடியாது.

பூர்வ:- கேவல ப்ரஹ்மம் ஜகத் ரூபேண பரிணாமத்தை அடைகிறது என்று என்னால் சொல்லப்படவில்லை. ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மமே ஜகத்ரூபேண பரிணாமத்தை அடைகிறது என்றே சொல்லப்படுவதால் கார்யம் காரணம் இரண்டிற்கும் ஸாலக்ஷண்யம் இருக்கின்றது. இவ்விதம் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம், ஜீவரூபேண பரிணாமத்தை அடைய முடியவில்லை என்றாலும், அசேதனமான ஜகத்ரூபேண பரிணாமத்தை அடைகின்றதால், ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் கார்யகாரண அனன்யத்வேன ஸாலக்ஷண்யம் இருக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் ஸாலக்ஷண்யம் இருக்கின்றது என்றால் இரண்டும் வெவ்வேறாக இருக்கவேண்டும். இரண்டு பொருள் இருந்தால்தான், இது ஸாலக்ஷண்யம் என்றோ அல்லது வைலக்ஷண்யம் என்றோ சொல்லமுடியும். கார்யகாரண பாவத்தினால் இரண்டிற்கும் ஐக்யம் என்று சொல்லப்படுமானால் அதன்பிறகு ஸாலக்ஷண்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? இரண்டு வஸ்து இருந்தால்தானே இரண்டிற்கும் ஸமான லக்ஷணத்வம் சொல்லலாம்?

மேலும், ஸூக்ஷ்ம சிதசித் ப்ரஹ்மம் ஜகத்தாக பரிணாமத்தை அடைந்திருக்கின்றது என்றால், அதனால் கிடைக்கின்ற அர்த்தம் என்னவென்றால், ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம், ஸ்தூல சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மமாக ஆயிற்று என்றுதான் அர்த்தம். அதனால் ஜகத்தாக ஆனதும் ப்ரஹ்மம்தான். அதனால் ஒரே ப்ரஹ்மம் காரணம் என்றும் அதுவே கார்யம் என்றும் சொல்லப்பட்டதாக ஆகிறது. காரணமும் ப்ரஹ்மம், கார்யமும் ப்ரஹ்மம் என்று தெரிவித்த பிறகு, கார்யம் ஜகத் என்று சொல்வதின் அர்த்தம் என்ன?

காரணம், கார்யம் என்ற இரண்டு நிலையிலும் ப்ரஹ்மந்தான் இருக்கின்றதே அன்றி ப்ரஹ்மகார்யம் என்று தெரிவிப்பதற்கு எதுவுமே இல்லை. இருக்கின்ற வஸ்து ஒன்றே என்றால், ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் ஐக்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ஸ்தூல சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம் கார்யபூத ஜகத் பதார்த்தம். ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம் காரணமான ப்ரஹ்ம பதார்த்தம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம் காரணம் என்றும், ஸ்தூல சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம் கார்யம் என்று தெரிவிக்கின்ற போதும் இரண்டிலும் சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மமென்றுதானே சொல்லப்படுகிறது? இதில் ஒன்று காரணம் என்றும், ஒன்று கார்யம் என்றும், ஒன்று ஸ்தூலம், ஒன்று ஸூக்ஷ்மம் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் சொல்லப்படுமானால் காரணமாக இருக்கின்றபோது ப்ரஹ்ம பதார்த்தமென்றும், கார்யமாக இருக்கின்றபோது ஜகத் பதார்த்தம் என்றும் எவ்விதம் சொல்லப்படுகிறது? இவ்விதம் ஸூக்ஷ்மம், ஸ்தூலம் என்பதைக்கொண்டு காரணம் கார்யம் என்று சொல்லப்படுமானால், கார்யமாகவும் காரணமாகவும் ஆகக்கூடியது ஜகத் என்றுதானே சொல்லவேண்டும்?

ஓரிடத்தில் ப்ரஹ்மம் காரணபூத ஜகத் பதார்த்தம் என்றும் மற்றொரு இடத்தில் ப்ரஹ்மம் கார்யபூத ஜகத் பதார்த்தம் என்றுதானே சொல்லவேண்டும்? கார்யம், காரணம் என்ற இரண்டிற்கும் ஒரேவிதமான அர்த்தம் தெரிவிக்காமல், ஒன்று ப்ரஹ்ம பதார்த்தம் – மற்றொன்று ஜகத் பதார்த்தம் என்று மாறுபாடான அர்த்தம் எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ப்ரஹ்மம், கார்யம் என்று சொல்லமுடியாததால், ஸ்தூல சிதசித் என்ற ஜகத்தே கார்யம் என்று கார்யபூத ஜகத் பதார்த்தம் என்று சொல்லப்பட்டது. ப்ரஹ்மம் கார்யம் என்று சொல்லமுடியாது என்றாலும், காரணம் என்று சொல்லலாம் என்பதால் ஸூக்ஷ்ம சிதசித் காரணபூத ப்ரஹ்ம பதார்த்தம் என்று சொல்லப்பட்டது.

ஸித்தா:- ஜகத் என்ற பதார்த்தம் கார்யமாகத்தான் இருக்கவேண்டுமென்று சொல்லவேண்டிய அவச்யமில்லை. கார்யம் காரணம் என்ற இரண்டுமே ஜகத்தில்தான் இருக்கின்றது. ஜகத் உற்பத்திக்கு முன்பு ப்ரஹ்மம் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்டமாக இருந்தது. உற்பத்திற்குப் பிறகு ஸ்தூலசிதசித் விசிஷ்ட்டமாக இருக்கின்றது. இதில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் எவ்வித மாறுதலும் கிடையாது. ஸூக்ஷ்மமாக இருந்தது எதுவோ அதுவே ஸ்தூலமாக பரிணாமத்தை அடைந்திருக்கிறது என்று சொல்லவேண்டுமே அன்றி, ப்ரஹ்மம் பரிணாமத்தை அடைவதாக சொல்லமுடியாது. உதாரணமாக ஸூக்ஷ்ம ரூபமாக இருந்த பீஜமே, ஸ்தூலரூபமான வ்ருக்ஷமாக ஆயிற்று. பீஜம்தான் வ்ருக்ஷமாக ஆகிறது என்றே சொல்லவேண்டும். ஸ்தூல சிதசித்திற்கு ஸூக்ஷ்ம சிதசித் காரணம். அதனால் சிதசித்திற்கும், ப்ரஹ்மத்திற்கும் கார்யகாரண பாவமே சொல்லமுடியாது. எந்த வஸ்து எந்த ரூபமாக பரிணமிக்கின்றதோ அந்த வஸ்துவே அதற்கு காரணம் என்று சொல்லவேண்டும்.

ஆகையால் ப்ரஹ்மம் ஜகத் காரணமும் இல்லை, ஜகத் ப்ரஹ்ம கார்யமுமில்லை. அதனால் ஜகத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் சொல்லமுடியாது. ஸூக்ஷ்ம சிதசித் என்பதே ஸ்தூல சிதசித் என்பதால் அங்குரம், பீஜம் இரண்டிற்குமே ஐக்யம் சொல்லலாமே அன்றி அங்குரத்தை விதைத்தவனும் அங்குரமும் ஒன்று என்று சொல்வதில்லை. ஸ்தூல சிதசித் ரூபமான ஜகத்

வ்யக்தம். அதற்கு காரணமான ஸூக்ஷ்ம சிதசித் ரூபமான அவ்யக்தமே காரணம் என்று சொல்லவேண்டுமே அன்றி ப்ரஹ்மம் காரணம் என்று சொல்லமுடியாது. இதையே ச்ருதியும் '*ந தஸ்ய கார்யம், கரணம் ச வித்யதே*' ("न तस्य कार्यं करणं च विद्यते") என்று ப்ரஹ்மம் எதற்கும் கார்யமுமல்ல, காரணமும் இல்லை என்று தெரிவிக்கின்றது.

பூர்வ:- '*பஹு ஸ்யாம் ப்ரஜாயாயேதி*' என்ற ச்ருதி வாக்யம், ஈச்வரன் ஸூக்ஷ்ம சிதசித்தான அவ்யக்தம் என்ற உபாதியைக்கொண்டு, வ்யக்த ரூபமான ஸ்தூல சிதசித்தாக ஆயிற்று என்று தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- பரமாத்ம ஸ்வரூபம் அவிகாரியானதால் பஹுபவனம் என்பது ஸம்பவிக்க முடியாது. அதனால் ஸ்வயமே ஜகத்தாக பரிணாமத்தை அடைந்ததாக உபநிஷத் தெரிவிக்கவில்லை. அவ்யக்தம் என்ற உபாதியைக்கொண்டு ஸூக்ஷ்ம சிதசித் என்பதே ஸ்தூல சிதசித்தாக ஆயிற்று என்று தெரிவிக்கின்றது. அதனால் உபாதி என்பதே வெகுவாக (அனேகமாக) ஆகிறது என்றே சொல்லவேண்டும். விக்ரியம் ஏற்படக்கூடிய வஸ்துவே வெகுவாக ஆகமுடியும். பரமாத்மா விகாரத்தை அடைகின்றது என்றால் அநித்யம் என்றே சொல்லநேரிடும். அதனால் பஹுதாபவனம், ப்ரஹ்மத்தினிடம் ஏற்படமுடியாது. விகாரியான பீஜம், பத்ர புஷ்ப, பலாத்மகமாக ஆகின்றதுபோல் பரமாத்மா விகாரி அல்ல.

ம்ருத் எவ்விதம் அவிகாரியாக இல்லையோ அதேபோல் ஈச்வர உபாதியும் அவிகாரி அல்ல. அதனால் உபாதியில்தான் அனேகமாக ஆகின்ற தன்மை இருக்கின்றதால் பஹுபவனம் உபாதியில்தான் ஸம்பவிக்கின்றது.

பூர்வ:- அப்படியானால் '*பஹுஸ்யாம்*'... என்ற வாக்யம் நானே அனேகமாக ஆகப்போகிறேன் என்று தெரிவிப்பதன் அர்த்தம் என்ன?

ஸித்தா:- ஜீவன், தன்னுடைய தேஹ தாதாத்ம்ய அத்யாஸத்தினால், அசேதனத்தில் ஏற்படும் கமனக்ரியை முதலானவைகளை, நான் நடக்கிறேன், நான் ஸங்கல்பிக்கிறேன் என்று எவ்விதம் தெரிவிக்கின்றானோ, அதேபோல், ஈச்வரனுக்கும் அவ்யக்தம் என்ற உபாதி தாதாத்ம்ய அத்யாஸத்தினால் ஸங்கல்ப்பிக்கிறேன் என்று தெரிவிக்கின்றார். அதற்காக பரமாத்மா ஸ்வரூபமே பரிணாமத்தை அடைவதாக சொல்லமுடியாது.

பூர்வ:- ஜீவன், அஞ்ஞானி. அதனால் அவனுக்கு தாதாத்ம்ய அத்யாஸம் ஏற்படலாம். ஆனால் ஸர்வஞ்ஞனான ஈச்வரனுக்கு தாதாத்ம்ய அத்யாஸம் இருப்பதாக எவ்விதம் சொல்லமுடியும்? இது பொருந்தாது.

ஸித்தா:- ஸ்ரீராமர் ஈச்வரன்தான். "*ஆத்மானம் மானுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம், ராஜ்யநாஶோ வனே வாஸோ நஷ்டா பார்யா த்விஜோ ஹத:। ஈத்ருஶியம் மமாலக்ஷ்மீர்நிர்தஹேதபி பாவகம்.*" ("आत्मानं मानुषं मन्ये रामं दशरथात्मजं, राज्यनाशो वने वासो नष्टा भार्या द्विजो हतः। ईदृशीयं ममालक्ष्मीर्निर्दहेदपि पावकम्") என்று அவர் தன்னை மனுஷ்யன் என்றும் தசரத புத்ரன் என்றும் ராஜ்யத்தை இழந்து வனவாஸம் செய்வதாகவும், பார்யாளை பறிகொடுத்தது, ஜடாயுமரணம் என்பது போன்ற எனக்கு ஏற்பட்ட கஷ்ட்டங்கள், அக்னியையே எரிப்பதுபோல் என்னை தஹிக்கின்றது என்றும், தேஹ தாதாத்ம்யத்தினால் தெரிவிக்கின்றாரே? ஆகவே ஈச்வரனுக்கும் மனுஷ்ய சரீரம் ஏற்படுகின்றபோது தேஹ

தாதாத்ம்யம் ஏற்படுகிறது என்றே சொல்லவேண்டும். அதனால் ஈச்வரனுக்கு எவ்விதம் தாதாத்ம்யம் ஏற்படும் என்ற கேள்விக்கே இடமில்லை.

பூர்வ:- ஸ்ரீராமருக்கு ஏற்பட்டதெல்லாம் லீலா வினோதம் என்று சொல்லவேண்டும்.

ஸித்தா:- லீலையினால் ராமருக்கு அத்யாஸம் ஏற்படலாம் என்றால் மாயையினால் ஈச்வரனுக்கும் அத்யாஸம் ஏற்படலாம்.

பூர்வ:- ஸர்வஞ்ஞனான ஈச்வரனிடம் மாயை இருப்பதாகச் சொல்லமுடியாது.

ஸித்தா:- ஸத்சிதானந்த ஸ்வரூபரான பரமாத்மாவான ஸ்ரீராமரிடத்தில் துக்கம் என்பதே இருக்கமுடியாது. அகண்ட ஆனந்த ஸ்வரூபத்தில் லீலையினால் துக்கம் ஏற்படலாம் என்றால், மாயையினால் ஸர்வஞ்ஞரிடத்தில் அஞ்ஞானம் ஏற்படலாமே?

பூர்வ:- ஸ்ரீராமருக்கு அவருடைய த்ருஷ்டியில் துக்கம் கிடையாது. லோகத்தில் இருப்பவர்களுக்கு அவருக்கு துக்கம் இருப்பதாக தோன்றுகிறதே அன்றி உண்மையில் அவருக்கு துக்கம் கிடையாது.

ஸித்தா:- பரமாத்மாவிற்கும் அவருடைய த்ருஷ்டியில் பஹுபவன ஸங்கல்பம் முதலான எதுவும் கிடையாது. ஜகத்தில் உள்ளவர்களுக்கே அவரிடம் ஸங்கல்பம் முதலானவை இருப்பதாக தோன்றுகிறதே அன்றி உண்மையில் கிடையாது. அவ்விதம் பரமாத்மாவினிடம் பஹுபவனம் என்ற ஸங்கல்பம் ஏற்படுவதற்கு மாயைதான் காரணம். அதேபோல் ஸ்ரீராமருக்கும் மாயையினால்தான் துக்கம் ஏற்படுகிறது என்று சொல்லலாமே அன்றி லீலையினால் ஏற்படுகிறது என்று சொல்வது சரியல்ல. மாயை, லீலை என்ற பதங்களுக்கு அர்த்தம் ஒன்றுதான். லீலை என்ற பதப்ரயோகத்தினால் எவ்வித ப்ரயோஜனமும் இல்லை. அதனால் மாயையினால் ஏற்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் லீலையினால் அனர்த்தகரமான கார்யத்தை எவரும் ஸம்பாதிக்கமாட்டார்கள். ஆகவே அஞ்ஞானத்தினாலேயே துக்கம் முதலானவை ஏற்படுகிறது என்றே சொல்லவேண்டும். பாகவதத்தில் ஹே ப்ரஹ்மன்! பகவான் சின்மாத்ரன், அவிகாரி நிர்க்குணன் என்பதால் அவரிடம் எவ்விதம் லீலையினால் குணங்கள் ஏற்படமுடியும் என்று ஒரு பக்தர் ப்ரஹ்மாவைக் கேட்க்கின்றார். அதற்கு ப்ரஹ்மாவானவர் பதில் தெரிவிக்கின்றபோது, நிர்க்குணமான பகவானுக்கு மாயையினால் குணங்களும், நிஷ்க்ரியமான ஸ்வரூபத்திற்கு க்ரியையும் ஸம்பவிக்கின்றது என்று தெரிவிக்கின்றார். மாயை என்றாலே, '*யன்னயேன விருத்யதே*' என்று எது யுக்திக்கு பொருந்தாதோ அதுவே மாயை என்று '*அகடித கடனா படீயஸீ மாயா*' என்று சொல்லப்படுகிறது.

सेयं भगवतो माया यन्नयेन विरुध्यते ।
ईश्वरस्य विमुक्तस्य कार्पण्यमुत बन्धनम् ॥

ஸேயம் பகவதோ மாயா யந்நயேன விருத்யதே ।
ஈஶ்வரஸ்ய விமுக்தஸ்ய கார்பண்யமுத பந்தனம் ॥

மாயை துர்க்கடம் என்றே சொல்லப்படுகிறது.

அதாவது, ஈச்வரன் ஸ்வத: விமுக்தன், அவருக்கு கார்ப்பண்யம், பந்தனம் என்பதெல்லாம் மாயையினால்தான் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

இதேபோல் அத்யாத்ம ராமாயணத்தில் ராமர், எங்கும் போகவும் இல்லை, இருக்கவுமில்லை, துக்கிக்கவுமில்லை எதையும் விரும்பவுமில்லை, அவர் ஆனந்தமூர்த்தி, அசலர், பரிணாமத்தை அடைபவர் அல்ல (அவிகாரி). மாயிகமான குணங்களினால் ராமர் இவ்விதம் இருப்பதாக மற்றுமுள்ளவர்களுக்கு தோன்றினாலும் உண்மையில் துக்கம் முதலானவை எதுவும் கிடையாது என்றே சொல்லப்படுகிறது. ஆகையால் ஈச்வரனுக்கும் அவ்யக்த தாதாத்ம்ய அத்யாஸத்தினால் பஹுஸ்யாம் என்ற ஸங்கல்பம் ஏற்படலாம்.

பூர்வ:- அவ்யக்தம் என்றாலும் மாயை என்றாலும் ஒன்றுதானே? அதனால் மாயையினால் ஈச்வரனுக்கு தாதாத்ம்ய அத்யாஸம் ஏற்படுவதாக எவ்விதம் சொல்லமுடியும்? கயிற்றில் ஸர்ப்பம் என்ற அத்யாஸம் அஞ்ஞானத்தினால் ஏற்படுகிறது. அதுபோல் மாயையில் அத்யாஸம் ஏற்படவேண்டும் என்றால் வேறொன்றினால்தானே ஏற்படவேண்டும்?

ஸித்தா:- பரமாத்மாவிற்கு மாயை என்பது உபாதி. இந்த மாயை, பரமாத்மாவிற்கு, மாயையான தன்னிடம் தாதாத்ம்ய அத்யாஸத்தை மாயையே உண்டுபண்ணுகிறது. மாயை என்பது ஸ்வபர நிர்வாஹகம் என்றே சொல்லப்படுகிறது. அதாவது மாயை தன்னிடத்திலும் அத்யாஸத்தை உண்டுபண்ணுகின்றது. அதேபோல் மற்ற வஸ்துக்களிலும் அத்யாஸத்தை உண்டு பண்ணுகின்ற ஸாமர்த்யம் உடையதாக இருக்கின்றது. இந்த ஜகத், ஈச்வர அதிஷ்டித மாயாகார்யமாக இருக்கின்ற காரணத்தினாலேயே, ஜகத் ஈச்வரனுடைய கார்யம் என்று உபநிஷத் தெரிவிக்கின்றது. அதனால் இந்த ஜகத் மாயாகார்யம் என்பதால் அதற்கு அதிஷ்டாதாவாக இருக்கின்ற ஈச்வர கார்யம் என்றே சொல்லப்படுவதால் ஜகத் ஈச்வர பரிணாமமில்லை. மாயா பரிணாமமே ஜகத். அதனால் காரணமான மாயை த்ரிகுணாத்மகமாக இருக்கின்றதாலேயே கார்யமான ஜகத்தும் முக்குணாத்மகமாக இருக்கின்றது. அதனால் இரண்டிற்கும் ஸாலக்ஷண்யமும் இருக்கின்றது. கார்யகாரணபாவமும் ஜகத்தில்தான் பொருந்தும். சைதன்யத்திற்கும் ஜடத்திற்கும் கார்யகாரண பாவம் பொருந்தாது. ஈச்வரனுக்கு இந்த ஜகத் விவர்த்தம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் இரண்டிற்கும் ஸாலக்ஷண்யம் இல்லை. ப்ரஹ்மம் ஸத்சிதானந்த லக்ஷணம், ஜகத் அந்ருத ஜட துக்காத்மகம். அதனால் இரண்டும் விலக்ஷணமாக இருப்பதால் ஜகத்காரணம் ப்ரஹ்மமென்று கார்ய காரணபாவம் சொல்லமுடியாது. ப்ரஹ்ம விவர்த்தம் ஜகத் என்ற தாத்பர்யத்தில்தான் '*யதோ வா இமானி பூதானி ஜாயந்தே...*' என்ற ச்ருதி வாக்யங்களும் ஜகத் காரணம் ப்ரஹ்மம் என்று தெரிவிக்கின்றதே அன்றி ப்ரஹ்ம பரிணாமம் ஜகத் என்று ஓரிடத்திலும் உபநிஷத் தெரிவிக்கவில்லை. அதனால் ப்ரஹ்ம பரிணாமம் ஜகத் என்ற முறையிலும், ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் ஐக்யம் சொல்லமுடியாது. இதேபோல் அந்தர்யாமி என்ற முறையினாலும் ஐக்யம் சொல்லமுடியாது. தேஹத்திற்குள் இருக்கின்ற ஜீவனே அந்தர்யாமி என்று சொல்வதால், தேஹமும் ஜீவனும் ஒன்று என்று சொல்ல முடியாது.

பூர்வ:- தேஹம் ஜடம் என்பதால், ஜீவன், ஜடமான தேஹத்தை நியமனம் செய்வதாகச் சொல்வது பொருந்தாது.

ஸித்தா:- இந்த தோஷம் உன் பக்ஷத்திலும் ஸம்பவிக்கின்றதே? ஜடமான இந்த ஜகத்தை, அந்தர்யாமியான பரமாத்மா எவ்விதம் நியமனம் செய்ய முடியும்? அதனால் ஜகத் என்பது ஈச்வரனுக்கு நியாம்யம் என்று சொல்லமுடியாது. ஜகத்திற்கு ஈச்வர நியாம்யத்வம் இருக்குமானால், தேஹத்திற்கும் ஜீவ நியாம்யத்வம் இருப்பதாக சொல்லலாமே?

பூர்வ:- ஜகத்தில் சேதன வர்க்கம் அசேதன வர்க்கம் என்று இரண்டு விதம் இருக்கின்றது. அதில் சேதன வர்க்கத்தையே நியாம்யம் என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால் அசேதன வர்க்க ஜகத்திற்கு, ப்ரஹ்மம் அந்தர்யாமி அல்ல என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. ஆனால் ஜகத்திற்கு அந்தர்யாமியாக இருப்பதால் ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் ஐக்யம் ஏற்படுவதாக முன்பு உன்னால் சொல்லப்பட்டதே?

பூர்வ:- அசேதனவர்க்கம் ப்ரஹ்ம கார்யம் என்பதால் காரணமான ப்ரஹ்மத்துடன் ஐக்யம் சொல்லலாம். சேதன வர்க்கத்திற்கு ப்ரஹ்மம் அந்தர்யாமியாக இருப்பதாலும் ஐக்யம் சொல்லலாமே?

ஸித்தா:- அசேதனத்திற்கு அசேதனமே காரணமாக இருக்க முடியும் என்றும், ப்ரஹ்மம் காரணமல்ல என்று இதுவரை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சேதனவர்க்கம் என்று சொல்லப் படும் ஜீவனும் ஸர்வாந்தரம் என்பதால் ஜீவனும் அந்தர்யாமி என்றே சொல்லவேண்டும். அதனால் ஜீவனுக்குள் ப்ரஹ்மம் அந்தர்யாமி என்று உன்னால் சொல்லப்பட்டதும் சரியல்ல. சைதன்யத்திற்குள் சைதன்யம் இருக்கின்றது என்று சொல்வது பொருந்தாது.

பூர்வ:- '*ஈஸ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேர்ஜுன திஷ்டதி । ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா*' ॥ 'ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति । भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥' என்ற பகவத் வசனம், ஈச்வரன் ஸர்வ பூதங்களுக்குள்ளும் இருக்கின்றார் என்றே தெரிவிக்கின்றது. ஸர்வபூதானாம் என்று தெரிவிப்பதால், ஸர்வ ஜீவர்களின் ஹ்ருதயத்திற்குள்ளும் ஈச்வரன் இருக்கிறார் என்றே தெரிவிக்கின்றது. அதனால் சேதன வர்க்கத்திற்குள் ஈச்வரன் இருக்கின்றார் என்றே சொல்லவேண்டும். மேலும், '*ஜானாமி தர்மம் ந ச மே ப்ரவ்ருத்தி:, ஜானாமி அதர்மம் ந ச மே நிவ்ருத்தி: கேனாபி தேவேன ஹ்ருதிஸ்திதேன யதாநியுக்தோஸ்மி ததா கரோமி*' ('जानामि धर्मं न च मे प्रवृत्तिः जानामि अधर्मं न च मे निवृत्तिः । केनापि देवेन हृदि स्थितेन यथा नियुक्तोस्मि तथा करोमि ॥') என்று துர்யோதனன் சொல்வதாக பாண்டவ கீதையில் (20) சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, எது தர்மம் என்று தெரிந்தும் நான் அதில் ப்ரவர்த்திக்கவில்லை, எது அதர்மம் என்று அறிந்தும் அதர்மத்திலிருந்து நிவர்த்திக்காமல் அதர்மத்தில் ப்ரவர்த்திக்கின்றேன். அதனால் என் ஹ்ருதயத்திற்குள் யாரோ ஒரு தேவன் இருந்து என்னை ஆட்டிவைக்கின்றான், அதன்படியே நான் (கார்யத்தைச்) செய்கிறேன் என்று துர்யோதனன் தெரிவிப்பதாக சொல்லப்படுகிறது. இப்பேர்ப்பட்ட வசனங்களினால் ஜீவனுக்குள், ஈச்வரன் அந்தர்யாமியாக இருந்து ஆட்டிவைக்கின்றார் என்று அறியப்படுகிறது.

ஸித்தா:- அந்த வாக்யத்திற்குள் இருக்கின்ற 'ஹ்ருத்தேசே' என்ற வாக்யத்திற்கு 'ஹ்ருதய ப்ரதேசத்தில்' என்றே அர்த்தம். அதனால் ஹ்ருதய ப்ரதேசத்தில் ஈச்வரன் அந்தர்யாமியாக

இருக்கின்றார் என்றே அர்த்தம். அவ்விதமின்றி, சைதன்ய ஸ்வரூபமான ஜீவனுக்குள் ஹ்ருதயம் இருக்கின்றது என்று எவ்விதம் அர்த்தம் சொல்லமுடியும்? ஹ்ருதயம், தேஹத்திலுள்ள ஒரு அவயவம். அதனால் ஜீவனுடைய ஹ்ருதய ப்ரதேசத்தில் ஈச்வரன் இருப்பதாக அர்த்தம் செய்வது சரியல்ல. 'ஸர்வபூதானாம்' என்ற வாக்யத்தில் உள்ள பூதசப்தம் கார்ய வர்க்கத்தை தெரிவிக்கின்றது. ஜீவனை பூதம் என்று சொல்லப்படவில்லை. ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசே என்று சொல்லப்படுவதால் பூத சப்தம் ஜீவனை தெரிவிக்கிறதென்றும் ஜீவனுக்குள் ஈச்வரன் திஷ்ட்டதி என்றும் அர்த்தம் செய்வது தவறு.

பூர்வ:- '*ஹ்ருத்தேசே*' என்ற வாக்யத்திற்கு, புண்டரீகாகாரமான ஹ்ருதய ப்ரதேசம் என்று அர்த்தம் சொல்வது சரியல்ல. அதனால் '*ஹ்ருத்தேசே*' என்றால் மனஸ் என்றே அர்த்தம் சொல்லவேண்டும். அதாவது ஜீவனுடைய மனஸில் ஈச்வரன் இருக்கின்றான் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- நீ சொல்வதுபோல் மனஸ் என்றே அர்த்தம் செய்யப்பட்டாலும்கூட, மனஸில் ஈச்வரன் இருக்கின்றார் என்ற அர்த்தம்தான் கிடைக்குமே அன்றி, ஜீவனுக்குள், ஈச்வரன் அந்தர்யாமியாக இருக்கின்றார் என்ற அர்த்தம் எவ்விதம் கிடைக்கின்றது? இவ்விதம் ஜீவன், ஈச்வரன் என்ற இரண்டிற்கும் பேதம் சொல்லப்படுமானால், ஜீவேச்வர அபேதம் என்பதோ, பரமாத்மாவிற்கும் ஜகத்திற்கும் ஐக்யம் என்பதோ எவ்விதம் ஏற்படமுடியும்? அதனால் ஐக்யம் என்பதே ஸம்பவிக்க முடியாது.

பூர்வ:- ஜீவனுக்குள் ஈச்வரன் அந்தர்கதமாக இருக்கின்றார் என்று *ஹ்ருத்தேசே* என்ற பதத்திற்கு அர்த்தம் சொல்லலாமே?

ஸித்தா:- ஜீவனை ஸூக்ஷ்மம் என்றும், அணு என்றும், நிரவயவம் என்றும் உன்னாலேயே சொல்லப்படுவதால், ஜீவனுக்குள் வ்யாபகமான பரமாத்மா அந்தர்கதம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- அணோரணியான், மஹதோ மஹியான் என்று வேதமே தெரிவிக்கின்றதே? ஜீவன் அணு என்றாலும் ஜீவனுக்குள் பரமாத்மா இருக்கிறார் என்று சொல்லலாம்.

ஸித்தா:- ஜீவன், பரமாத்ம ஸ்வரூபம் இருப்பதற்குரிய ப்ரதேசம் உடையவன் என்றால், ஜீவன் அவயவி என்று சொல்ல நேரிடும். ஸாவயவம் என்றால் அநித்யத்வம் ஸம்பவிக்கும். அதுமட்டுமல்ல. ஜகத் என்பது சேதனமாக இருந்தாலும், அல்லது அசேதனமாக இருந்தாலும், ஈச்வரன் அந்தர்யாமி என்று சொல்லப்படுமானால், அந்த அந்தர்யாமி சிதசித் விசிஷ்ட்டனா? அல்லது சுத்த ப்ரஹ்மமா? (நிருபாதிக ப்ரஹ்மம் அந்தர்யாமியா?) சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம், ஜகத்திற்குள் அந்தர்யாமி என்று சொல்லமுடியாது. (பொருந்தாது) சுத்த ப்ரஹ்மம் அந்தர்யாமி என்று சொல்லப்படுமானால், சுத்த ப்ரஹ்மம் என்பதையே ஒத்துக்கொள்ளாமல், எப்போதுமே விசிஷ்ட்ட ப்ரஹ்மந்தான் என்று தெரிவிக்கின்ற விசிஷ்ட்டாத்வைதியான உன் மத கொள்கைக்கு ஹானி ஏற்படும். அதனால் சுத்த ப்ரஹ்மம் அந்தர்யாமி என்று உன் சித்தாந்தத்தின்படி சொல்லமுடியாது. அதுமட்டுமல்ல. சுத்த ப்ரஹ்மத்திற்கு ஜகத் காரணத்வமும் சொல்லமுடியாது. மேலும் உங்கள் ஸித்தாந்தத்தில், சிதசித் விசிஷ்ட்ட

ப்ரஹ்மமே ஜகத் ரூபேண பரிணாமத்தை அடைகின்றது என்று சொல்லப்படுகிறது. சுத்த ப்ரஹ்மம் அந்தர்யாமி என்று உன்னால் சொல்லமுடியாது.

பூர்வ:- சுத்த ப்ரஹ்மம் ஜகத் அந்தர்யாமி என்றும், விசிஷ்ட்ட ப்ரஹ்மம் ஜகத் காரணம் என்றும் சொல்லலாமே?

ஸித்தா:- ‘*ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம*’ என்றே ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது. இரண்டு ப்ரஹ்மம் இருப்பதாகச்சொல்வது சரியல்ல.

பூர்வ:- இரண்டு ப்ரஹ்மம் என்று என்னால் சொல்லப்படவில்லை. விசிஷ்ட்டமாகவும், சுத்தமாகவும் ஒரே ப்ரஹ்மம்தான் இருக்கின்றது என்றே சொல்கிறேன்.

ஸித்தா:- ஒரே வஸ்து, சுத்தமாகவும், விசிஷ்ட்டமாகவும் இருக்க முடியாது. இரண்டிற்கும் ஸாமானாதி கரண்யம் சொல்லமுடியாது. எந்தவிதமான ஸம்பந்தமும் அற்றதான ஸ்வரூபமே சுத்த ப்ரஹ்மம். (அவிசிஷ்ட்டத்வம் சுத்தத்வம்.)

பூர்வ:- ப்ரஹ்மம், சேதனம், அசேதனம் இரண்டிற்குள்ளும் இருக்கின்றதால்தான், சிதசித் விசிஷ்ட்டம் என்று சொல்கிறோம். அதனால் ப்ரஹ்மம் அந்தர்யாமி என்று சொல்வதால் என்ன தவறு?

ஸித்தா:- சிதசித் என்ற இரண்டிற்குள் ப்ரஹ்மம் அந்தர்யாமியாக இருக்கின்றது என்றால், சிதசித் வேறு, ப்ரஹ்மம் வேறு என்று சொல்லவேண்டும். அவ்விதம் சொல்லப்படுமானால், சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம் ஜகத்திற்கு காரணம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ப்ரஹ்மம், சேதனா சேதன ரூபமான ஜகத்தை ச்ருஷ்டித்து அதன்பின் அந்தர்யாமியாக இருந்து நியமனம் செய்கின்றது என்று சொல்லலாமே?

ஸித்தா:- சிதசித் விசிஷ்ட்ட ஜகத்தை ச்ருஷ்டி செய்த பிறகு, அதற்குள் ப்ரஹ்மம் ப்ரவேசித்திருக்கின்றது என்பதால் ப்ரஹ்மம் விசிஷ்ட்டம் என்று சொல்லப்படுமானால், ச்ருஷ்டிக்குமுன் ப்ரஹ்மமும் அவிசிஷ்ட்டமாக, ஏகமாக இருந்தது என்றே சொல்லவேண்டும். இவ்விதம் ச்ருஷ்டிக்குமுன் ப்ரஹ்மம் அவிசிஷ்ட்டம் என்றால் உன் ஸித்தாந்தத்தில் ப்ரக்ருதி, புருஷன், ஈச்வரன் என்ற மூன்றும் நித்யம் என்று சொல்லப்படுவதால், உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படும். ப்ரக்ருதி, புருஷன் இரண்டும் அநித்யம் என்று சொல்லநேரிடும்.

இவ்விதம், சிதசித் விசிஷ்ட்டமான ஜகத்தை ச்ருஷ்டித்தபிறகு அதற்குள் அந்தர்யாமியாக ப்ரவேசித்தார் என்றால், காரணமின்றியே ஜகத் உற்பத்தி என்று சொல்லப்பட்டதாக ஆகும். ஏனெனில் சிதசித் ச்ருஷ்டிக்கு முன்னால் ப்ரஹ்மம் சிதசித் விசிஷ்ட்டமாக இல்லாததால் அந்த ப்ரஹ்மமும் ஜகத்திற்கு காரணமாக சொல்லமுடியாது. அதனால் காரணமின்றியே ஜகத் உற்பத்தி சொல்லப்படுமானால் ஜீவனும் ஜன்யம் என்று சொல்லநேரிடும். ஜீவன் ஜன்யமென்றால் ஜீவன் நித்யம் என்று சொல்லமுடியாது. அதுமட்டுமல்ல, ஜீவர்களுக்குள் தாரதம்யம் இருப்பதற்கு காரணம் என்னவென்றே சொல்லமுடியாது. ஜீவன் அநித்யம் என்றால் அவரவர் செய்த புண்யபாபங்களின் பலனை அவரவர் அனுபவிக்க முடியாமல் போகும். அதுமட்டுமல்ல ஜீவன் அநித்யம் என்றால் மோக்ஷம் யாருக்கு, எதற்கு மோக்ஷ சாஸ்திரம் என்ற கேள்விகள் ஏற்படும்.

பூர்வ:- ப்ரக்ருதி, புருஷன் என்ற இரண்டும் நித்யம். அதனால் ஈச்வரன் அவர்களுக்குள் எப்போதும் இருக்கின்றார். பூத பௌதிகங்களை ச்ருஷ்டித்த பிறகு அதற்குள் ஈச்வரன் புகுந்தார் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரக்ருதியைத் தவிர பூதம் பௌதிகம் என்று தனியாக வேறு எதுவுமே இல்லை. உதாரணமாக ம்ருத்தை அன்றி வேறாக எவ்விதம் கடம் என்பது இருக்க முடியாதோ அதுபோல் ப்ரக்ருதியை அன்றி பூதபௌதிகம் என்று வேறாக எதுவும் இருக்கமுடியாது. அவ்விதம் இருப்பதாகவே ஒத்துக்கொண்ட போதிலும், இரண்டிற்கும் கார்யகாரண பாவம் சொல்லமுடியாது. உன் ஸித்தாந்தத்தில் கார்யம், காரணம் இரண்டும் வேறு என்று பேதம் சொல்லப்படுவது முட்டாள்தனம் என்றும் அது குதர்க்கவாதம் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. அதனால் கார்யம் காரணம் இரண்டிற்கும் அபேதம்தான் சொல்லவேண்டும் என்று சொல்வதால், ப்ரக்ருதியும் பூதபௌதிகமும் வேறு என்று இப்போது முன்னால் சொல்லப்பட்டதற்கு விரோதமாக எவ்விதம் சொல்லமுடியும்? ப்ரக்ருதி புருஷன் இரண்டும் ப்ரஹ்ம கார்யமல்ல. இவ்விதம் ப்ரஹ்ம கார்யமாக இல்லாத ப்ரக்ருதி புருஷனுக்கும், ப்ரஹ்மத்திற்கும் கார்யகாரண பாவத்தைக்கொண்டு எவ்விதம் அபேதம் சொல்லமுடியும்? அவ்விதம் சொல்லமுடியாததால், ப்ரக்ருதி, புருஷன் என்ற இரண்டும் ப்ரஹ்மத்தை அன்றி வேறு என்று தானே சொல்லவேண்டும்? இவ்விதம் இருக்கின்ற உன் ஸித்தாந்தத்தைக் கொண்டு '*நேஹ நானா அஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் ப்ரஹ்மம் அனேக விதமாக இல்லை என்று தெரிவிக்கவில்லை என்றும், ப்ரஹ்மத்தை அன்றி அவைகள் வேறாக இல்லை என்றே தெரிவிப்பதாக இந்த வாக்யத்திற்கு அர்த்தம் செய்வது எவ்விதம் பொருந்தும்?

பூர்வ:- ப்ரக்ருதி, புருஷன் இரண்டும் அஜம் என்பதால் ப்ரஹ்மகார்யமல்ல. ஆகாசம் முதலான ஜகத் என்பதும் ப்ரக்ருதி கார்யமே என்பதால், ப்ரஹ்மகார்யம் அல்ல. அதனால் ப்ரக்ருதிக்கோ, அல்லது புருஷனுக்கோ, ஜகத்திற்கோ, ப்ரஹ்மத்துடன் கார்யகாரணபாவேன அபேதம் சொல்லவேண்டாம். ஆனாலும் ப்ரக்ருதி, புருஷன் ஜகத் என்ற மூன்றுக்கும், ப்ரஹ்மம் அந்தர்யாமி என்று சொல்லலாமே? எதற்கு எது அந்தர்யாமிகமோ அது அதற்கு அபின்னம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஒரு வஸ்துவில் வேறு ஒரு வஸ்து அந்தர்யாமியாக இருக்கின்றது என்று தெரிவிக்கின்றபோதே, அந்தர்யாமி வேறு, அதற்கு வெளியில் இருக்கின்ற வஸ்து வேறே என்று அர்த்தம் கிடைக்கின்றதே? அதனால் அந்தர்யாமியை காட்டிலும் ப்ரக்ருதி முதலானவை வேறானது என்ற அர்த்தம் கிடைக்கின்றது. இரண்டும் வெவ்வேறாக இருந்தால்தான் ஒன்றுக்குள் ஒன்று இருக்கிறது என்று சொல்லலாம். அதனால் பேதம்தான் ஸித்திக்கின்றதே அன்றி அபேதம் ஸித்திக்காது. க்ரஹத்திற்குள் தேவதத்தன் இருக்கின்றான் என்றால் க்ரஹத்திற்குள் இருக்கின்ற தேவதத்தனும், க்ரஹமும் ஒன்று என்று எவ்விதம் சொல்லமுடியும்? அந்தர்யாமி என்ற இந்த முறையிலும் அபேதம் சொல்லமுடியாது.

பூர்வ:- '*நேஹ நானா அஸ்தி கிஞ்சன*' "नेह नानाऽस्ति किञ्चन" என்ற வாக்யத்திற்கு வேறொரு முறையிலும் அர்த்தம் செய்யலாம். அதாவது, இந்த ஜகத்தில், ப்ரஹ்மத்தை காரணமாக கொள்ளாத வஸ்துவே கிடையாது. அதேபோல் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத

வஸ்துவும் கிடையாது. எந்த வஸ்துவானாலும் ப்ரஹ்மம் காரணமாக இல்லாமல் இருக்க முடியாது. அதேபோல் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத வஸ்துவும் கிடையாது. ஸர்வமும் ப்ரஹ்ம காரணகம் என்றும் ஸர்வம் ப்ரஹ்ம அந்தர்யாம்யகம் என்றே இந்த ச்ருதி வாக்யம் தெரிவிக்கிறது என்று சொல்லலாமே?

ஸித்தா:- இதுவும் சரியல்ல. ப்ரஹ்மத்தை அன்றி வேறான ஸர்வ வஸ்துக்களும் ப்ரஹ்மத்தை காரணமாகக் கொண்டது என்று சொல்லமுடியாது. ப்ரஹ்மத்திற்கு காரணத்வமே ஸம்பவிக்காது. ப்ரஹ்மம் காரணமும் அல்ல, கார்யமுமல்ல என்று ச்ருதியே தெரிவிக்கின்றது. ப்ரஹ்மம் அகாரணகம் என்பதால், ப்ரஹ்மத்தை காரணமாக கொள்ளாத வஸ்துவே கிடையாது என்று '*நேஹ நானா அஸ்தி*' என்ற வாக்யம் நிஷேதம் செய்வதாகச் சொல்வது சரியல்ல. அதேபோல் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத வஸ்துவே கிடையாது என்று நிஷேதம் செய்வதாகச் சொல்வதும் சரியல்ல. சைதன்ய ஸ்வரூபமான ஜீவனே ப்ரஹ்மம் என்று சொல்லப்படுவதால், ஜீவனுக்குள் ப்ரஹ்மம் அந்தர்யாமியாக இருக்கின்றது என்று சொல்லமுடியாது. அதனால் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத வஸ்துவே கிடையாது என்று நிஷேதம் செய்வதாக சொல்லமுடியாது.

பூர்வ:- சித்வஸ்து ப்ரஹ்ம அந்தர்யாமியாக இருக்கின்றது என்று சொல்லாவிட்டாலும், அசித் வஸ்துவில் ப்ரஹ்மம் அந்த:ஸ்திதமாக இருந்து ப்ரேரணை செய்வதாக சொல்லலாமே?

ஸித்தா:- சேதன வஸ்துவில்தான் ப்ரவ்ருத்தி என்பதே ஏற்படும். ஜடவஸ்துவிற்கு ப்ரவ்ருத்தி என்பதே ஏற்படமுடியாது. அதனால் ஜடவஸ்து அந்தர்யாமியினால் ப்ரேரிக்கப்படுவதாக சொல்வது சரியல்ல. அதனால் அசித் வஸ்துவும் ப்ரஹ்ம அந்தர்யாமிகம் என்று சொல்ல முடியாது. மேலும் ஜடவஸ்துவில் ப்ரவ்ருத்தியே ஏற்படாது என்பதால் அதை நியமனம் செய்யவேண்டிய அவச்யமே இல்லை. ஆகவே, சித், அசித் என்ற இரண்டுமே அப்ரஹ்ம அந்தர்யாமிகமானதால், ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத வஸ்துவே கிடையாது என்று சொல்வது பொருந்தாது. மேலும் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத வஸ்துக்களே கிடையாது என்றால், அந்த வஸ்துக்கள் எங்கே இல்லை? அதற்கு ஆதாரம் என்ன?

பூர்வ:- '*நேஹ நானா...*' என்ற வாக்யத்தில் உள்ள 'இஹ' சப்தம் இங்கே இல்லை என்றுதான் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- 'இஹ' என்ற சப்தம் இங்கே இல்லை என்றுதான் தெரிவிக்கின்றது. அதனால் எங்கேயும் இல்லை என்ற அர்த்தம் எவ்விதம் கிடைக்கும்?

பூர்வ:- இங்கே என்றால் இந்த லோகத்தில் எங்கேயும் இல்லை என்றே அர்த்தம். அதனால் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத வஸ்து இந்த லோகத்திலேயே கிடையாது என்றே அந்த வாக்யம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- லோகத்தில் இல்லாமல் இருக்கலாம். அலோகத்தில் இருக்கலாமே? அதாவது லோகம் எதில் இருக்கிறது என்றால் லோகத்தில் இருப்பதாகச் சொல்லமுடியாது. அதனால் அலோகத்தில் இருப்பதாகச் சொல்லவேண்டும். அலோகத்தில் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத வஸ்து இருக்கலாமே?

பூர்வ:- இஹ சப்தம் லோகத்தை குறிக்கவில்லை, ப்ரஹ்மத்தை குறிப்பதாகச் சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரஹ்மம், நிரவகாசம், பரிபூரணம். அதனால் ப்ரஹ்ம அந்தர்யாமிகமான வஸ்து ப்ரஹ்மத்தில் இருப்பதாகச் சொல்லமுடியாது. நிரவயவமான ப்ரஹ்மத்தில் ஒரு வஸ்து இருப்பதாகச் சொல்வதற்கே முடியாது. ஸாவயவமாக இருக்கின்ற வஸ்துவில்தான், அந்த வஸ்துவிற்குள் இருக்கின்றதென்றோ வெளியில் இருக்கின்றதென்றோ சொல்லமுடியும். மேலும் ப்ரஹ்மம் அனந்தரம் (அந்தரமில்லை) அபாஹ்யம் (பாஹ்யமில்லை) என்று ச்ருதியே தெரிவிக்கின்றது. அதனால் ப்ரஹ்மத்தில் ஆந்தரத்வமோ பாஹ்யத்வமோ ஸம்பவிக்கமுடியாது என்பதால் ப்ரஹ்மம் அந்தர்யாமி என்று சொல்லமுடியாது. ப்ரஹ்மம் பரிபூரணம் என்பதால் ஆந்தரம் (உள்) பாஹ்யம் (வெளி) என்பதே ஸம்பவிக்க முடியாது.

பூர்வ:- அப்படியானால், '*நேஹ நானா...*' என்ற வாக்யம் அப்ரஹ்மாத்மகமாகவும் அஸ்வதந்த்ரமாகவும் உள்ள வஸ்துவே ப்ரஹ்மத்திற்கு வேறாக லோகத்தில் இல்லை என்று தெரிவிப்பதாகச் சொல்லலாமே? ப்ரஹ்மாதீனமாக ஸ்வதந்த்ரமாக இல்லாத வஸ்து எல்லாமே ப்ரஹ்மாத்மகமாகத்தான் இருக்கவேண்டும். அதனால் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாமல் ஸ்வதந்தரமாக எந்த வஸ்துவும் இல்லை என்றே இந்த வாக்யம் தெரிவிப்பதாகச் சொல்லலாமே? (ஸ்வதந்த்ரம், பரதந்த்ரம் என்ற இரண்டு வஸ்துக்களில், ப்ரக்ருதி பரதந்த்ரம். பரதந்த்ரமான வஸ்து ப்ரஹ்ம அந்தர்யாமிகமாகத்தான் இருக்கும்.)

ஸித்தா:- ப்ரக்ருதி, புருஷன் இரண்டும் ப்ரஹ்ம கார்யமாக இல்லாததால் கார்யத்திற்குள் காரணம் இருப்பதாகச் சொல்லமுடியாது. ப்ரக்ருதி புருஷன் இரண்டும் அஜம் என்று சொல்லப் படுவதால் ப்ரஹ்மகார்யமல்ல. ப்ரஹ்ம கார்யமாக இல்லாததால், ப்ரஹ்ம அந்தர்யாமிகமாக இருக்கமுடியாது. இவ்விதம் ப்ரஹ்ம அந்தர்யாமிகமாக இல்லாத பரதந்த்ரமான இரண்டு வஸ்துகள் இருக்கின்றதால், இவைகளை இல்லை என்று ச்ருதிவாக்யம் நிஷேதம் செய்வதாக எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- அப்படியானால் ப்ரஹ்மாத்மகமாக இல்லாததும் ஸ்வதந்த்ரமாக இருக்கின்ற வஸ்துவே எதுவுமில்லை என்று நிஷேதம் செய்வதாக சொல்லலாமே?

ஸித்தா:- சேதனன் ப்ரஹ்மாத்மகமாக இல்லாமலும், ஸ்வதந்த்ரனாக இருக்கின்றதாலும், இப்பேர்ப்பட்ட வஸ்து எதுவுமே இல்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஏனெனில் சேதனன் ப்ரஹ்ம கார்யமல்ல என்பதால் அப்ரஹ்மாத்மகம்தான். ஆனால் சேதனன் பரதந்த்ரன் அல்ல. ஸ்வதந்தரமாக இருக்கின்றானே?

பூர்வ:- ஆத்மா பரதந்த்ரம் என்றே அனுபவஸித்தம். ஏனெனில் சித், அசித் என்ற இரண்டுமே பரதந்த்ரம்தான்.

ஸித்தா:- ஆத்மா, பரதந்த்ரம் என்று ஞானம் ஏற்பட்டாலும் உண்மையில் ஆத்மா பரதந்த்ரமில்லை. பரதந்த்ரமான அனாத்ம வஸ்துவின் தாதாத்ம்ய அத்யாஸத்தினால் ஆத்மா பரதந்த்ரம் என்று தோன்றுகிறது. அனாத்மா எல்லாம் அசேதனமாக இருப்பதால் பரதந்த்ரமாக இருக்கலாம். ஆனால் சேதனனான ஆத்மா பரதந்த்ரன் என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- ராஜா, ப்ருத்யன் என்ற இருவரும் சேதனனாக இருந்தும்கூட ப்ருத்யன் ராஜாவிற்கு பரதந்த்ரனாக இருக்கின்றானே?

ஸித்தா:- ராஜா என்றும் ப்ருத்யன் என்றும் தெரிவிக்கின்றபோது, ஜடாம்சம்தான் பரதந்திரம் என்று சொல்லமுடியுமே அன்றி சைதன்யாம்சம் பாரதந்த்ரியமில்லை.

பூர்வ:- இந்த தேஹத்தில் உள்ள தேஹி என்ற ஜீவனை எவ்விதம் ஆத்மா என்று சொல்லப்படுகிறதோ அதேபோல் பரமாத்மாவிற்கு ஜீவன் தேஹம் என்பதால் ஜீவனுக்கு ஆத்மா ப்ரஹ்மம் என்று சொல்லலாம். அதனால் ஜீவனும் ப்ரஹ்மாத்மகம் என்பதால் ஜீவனும் அஸ்வதந்த்ரன் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் லோகத்தில் எந்த வஸ்துவும் ஆத்ம பரதந்த்ரமாகவே இருக்கவேண்டும். ஜீவனுக்கும் பரமாத்மாதான் ஆத்மா என்பதால், ஜீவனும் பரதந்த்ரம் என்றே சொல்லவேண்டும். தேஹம் எவ்விதம் ஜீவனுக்கு பரதந்த்ரமோ அதுபோல் ஜீவனும் பரமாத்மாவிற்கு தேஹமானதால், பரமாத்மாவிற்கு பரதந்த்ரம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- தேஹத்திற்கு ஆத்மாவான ஜீவனுக்கும் ஒரு ஆத்மா இருப்பதாகச் சொல்லப் படுமானால், அந்த பரமாத்மாவான ப்ரஹ்மத்திற்கும் வேறு ஒரு ஆத்மா இருப்பதாகச் சொல்லலாமே?

பூர்வ:- அவ்விதம் சொல்லப்படுமானால் அனவஸ்த்தை முதலான தோஷங்கள் ஸம்பவிக்கும்.

ஸித்தா:- அப்படியானால் ஆத்மாவிற்கும் வேறொரு ஆத்மா தேவை இல்லை என்று சொல்லலாமே? ப்ரஹ்மத்திற்கு வேறொரு ஆத்மா தேவை இல்லை என்றால் ஆத்மாவிற்கும் வேறு ஆத்மா தேவை இல்லை என்று சொல்லலாமே? ஆத்மா மட்டும் என்ன அபராதம் செய்தது?

பூர்வ:- ஜீவன் ப்ரஹ்மகார்யம் என்பதால், ஜீவனுக்கு ஆத்மா ப்ரஹ்மம் என்று சொல்லப்பட்டது.

ஸித்தா:- ஜீவன் அஜம் என்பதால் ப்ரஹ்ம கார்யம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- ஜீவாத்மாவிற்குள் ப்ரஹ்மம் இருக்கின்றது என்று என்னால் அறியப்படுகிறது. அதனால் ஜீவனுக்கு ப்ரஹ்மம் ஆத்மா என்று சொல்கிறேன்.

ஸித்தா:- ப்ரஹ்மத்திற்குள் ஆத்மா இருப்பதாக என்னால் அறியப்படுகிறது. அதனால் ப்ரஹ்மம், ஆத்மாத்மகம் என்று சொல்கிறேன்.

பூர்வ:- ப்ரஹ்மத்திற்குள் ஆத்மா இருப்பதாக அறியப்படவில்லையே?

ஸித்தா:- ஆத்மாவிற்குள்ளும் வேறு ஆத்மா இருப்பதாக அறியப்படவில்லை.

பூர்வ:- ப்ரஹ்மம் ஸூக்ஷ்மத்திலும் அதிஸூக்ஷ்மம். அதுபோல் ஜீவன் ஸூக்ஷ்மம் அல்ல. அதனால் ஜீவனுக்குள் ப்ரஹ்மம் இருக்கலாம். ப்ரஹ்மம் அதிஸூக்ஷ்மம் என்பதால் ப்ரஹ்மத்தில் வேறு எதுவும் இருக்கமுடியாது.

ஸித்தா:- ப்ரஹ்மத்தில், ப்ரஹ்மாத்மகமாக அஸ்வதந்த்ரமான கார்யம் இருக்கின்றது என்று உன்னால் சொல்லப்படுகிறதே? இப்போது ப்ரஹ்மத்தில் ஒன்றுமே இல்லை என்று எதனால் சொல்லப்படுகிறது?

பூர்வ:- ப்ரஹ்மத்தில் ஜகத் இருக்கின்றது. ஜகத்திற்குள் ப்ரஹ்மம் இருக்கின்றது. ஜகத்திற்குள் இருக்கின்ற ப்ரஹ்மத்தில் வேறு எதுவுமில்லை என்றே சொல்கிறேன்.

ஸித்தா:- ப்ரஹ்மம் சேதனம். அதில் அசேதனமான ஜகத் இருக்கின்றது. அதற்குள் சேதனனான ஆத்மா இருக்கின்றது. அந்த ஆத்மாவிற்குள் வேறு எதுவும் கிடையாது என்று சொல்லலாமே? ஆத்மாவிற்குள் ஒன்றுமில்லை என்று தெரிவிக்கின்றதே அன்றி ப்ரஹ்மத்திற்குள் எதுவுமில்லை என்று சொல்லவில்லை என்று சொல்லலாமே?

காரணம் இல்லாமலேயே எதை வேண்டுமானாலும் சொல்லப்படுமானால் நானும் அதேபோல் சொல்லமுடியும். அதனால் இதுபோல் வாதம் செய்வது வ்யர்த்தம். ப்ரஹ்மமே ஆத்மா என்பதால், ஆத்மா ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லப்படுமானால், ஆத்மா, ஆத்மா என்றே சொல்லமுடியாது. ப்ரஹ்மாத்மகமாக இருப்பதெல்லாம் அனாத்மாவாகத்தான் இருக்க வேண்டும். அதனால் ஜீவன் அனாத்மா என்று சொல்லநேரிடும். அதனால் ஜீவனை ஆத்மா என்று சொல்லமுடியாது. ஆத்மா, வேறொன்றை ஆத்மாவாகக் கொண்டது என்று சொல்லமுடியாது. அதனால் ஆத்மா என்பதும் ப்ரஹ்மம் என்பதும் ஒரே தத்வம்தான். '*தத் ஸத்யம் ஸ ஆத்மா தத் த்வமஸி*' என்று ச்ருதியே தெரிவிக்கின்றது. ஒவ்வொரு வ்யஷ்டி தேஹ அவச்சின்ன சைதன்யமே ஜீவன். ஜீவசைதன்யம் என்பதும் வ்யாபகமான ஆத்ம ஸ்வரூபமே. வ்யஷ்டி தேஹத்தில் இருக்கின்றதால் ஜீவன் பரிச்சின்னனாக அறியப்படுகிறது (தோன்றுகிறது). வ்யாபகமான ஆகாசம் எவ்விதம் கடம் என்ற உபாதியினால் கடாகாசம் என்று சொல்லப்பட்ட போதிலும், அதன் வ்யாபகத்திற்கு ஹானி ஏதுமில்லை. இதேபோல் வ்யாபகமான ப்ரஹ்மஸ்வரூபமே, தேஹம் என்ற உபாதி அவச்சின்னமாக இருக்கின்றதால் ஆத்மா என்றும் ஜீவன் என்றும் சொல்லப்படுகிறதே அன்றி வ்யாபகமான ஆத்மசைதன்யத்திற்கு ஹானி ஏதுமில்லை.

பூர்வ:- ஜீவனுக்கு ஸ்வரூபம் சைதன்யம். சைதன்யம் என்பது ப்ரஹ்மம். அதனால் ஆத்மாவிற்கு ப்ரஹ்மம் ஸ்வரூபம் என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூபம் சைதன்யம் - சைதன்யமே ஆத்மா. அதனால் ப்ரஹ்மம் ஆத்மாத்மகம் என்று சொல்லலாமே? ஏனெனில், ஆத்மாவும் சைதன்யமானதால், ஆத்மா எவ்விதம் ப்ரஹ்மாத்மகமோ, அதுபோல் ப்ரஹ்மமும் ஆத்மாத்மகம் என்று சொல்லலாம். அதனால் சைதன்ய ஸ்வரூபமான ஆத்மாவில் சைதன்யஸ்வரூபமான ப்ரஹ்மம் இருக்கின்றதென்று செய்யப்படும் வாதம் பொருந்தாது.

பூர்வ:- ஜீவ சைதன்யத்திற்குள், ஜீவ சைதன்யம் இருக்கமுடியாது என்பது சரியே. ஆனால் ப்ரஹ்ம சைதன்யம் ஜீவ சைதன்யத்திற்குள் இருக்கலாமே?

ஸித்தா:- ப்ரஹ்ம சைதன்யத்தில் ப்ரஹ்ம சைதன்யமே இருக்க முடியாது என்றாலும், ஜீவ சைதன்யம் ப்ரஹ்ம சைதன்யத்திற்குள் இருக்கலாமே? ஒரு சைதன்யத்திற்குள் மற்றொரு சைதன்யம் இருக்கலாம் என்றால், அனவஸ்தை முதலான தோஷங்கள் ஸம்பவிக்கும். அதனால் சைதன்யம் ஏக ரூபம்தான். அந்த சைதன்யமே ஜீவ சைதன்யம் என்றும், ப்ரஹ்ம சைதன்யம் என்றும் சொல்லப்படவில்லையானால், அனவஸ்த்தை முதலான தோஷங்களுக்கு பரிகாரமே செய்யமுடியாது.

பூர்வ:- ஜீவ சைதன்யம் வ்யஷ்டி தேஹத்தில் வ்யாபித்திருந்து அந்த தேஹத்தை ப்ரகாசிக்கச் செய்கின்றது. ப்ரஹ்ம சைதன்யம் ப்ரஹ்மாண்ட பூத ஸமஷ்டி தேஹத்தை வ்யாபித்திருக்கின்றது. அதனால் இரண்டும் வேறு என்றே சொல்லலாமே?

ஸித்தா:- ஆகாசம் ஒன்றே. இதில் கட அவச்சின்ன ஆகாசம் கடாகாசம் என்றும் கட அனவச்சின்ன ஆகாசம் மஹாகாசம் என்றும் சப்தத்தில் பேதம் இருக்கின்றதே அன்றி உண்மையில், ஆகாசம் என்ற வஸ்துவில் பேதம் இல்லை. அதேபோல் சைதன்யம் ஏகம் என்றாலும் அதில் ஸமஷ்டி, வ்யஷ்டி என்று உபாதி பேதத்தினால் சப்தபேதம் இருக்கின்றதே அன்றி சைதன்யத்தில் எவ்வித பேதமும் கிடையாது. ஆகாசத்தில் ஆகாசம் இருக்கின்றது என்று சொல்வது எவ்விதம் பொருந்தாதோ, அதேபோல் ஜீவசைதன்யத்திற்குள் ப்ரஹ்ம சைதன்யம் இருக்கின்றது என்பதும் பொருந்தாது. சைதன்யத்திற்கு வ்யாப்ய, வ்யாபகபாவமோ, கார்ய காரண பாவமோ சொல்லமுடியாது. இரண்டுமே சைதன்யம் என்பதால், ஜீவன் ப்ரஹ்மாத்மகம் என்றோ, ப்ரஹ்மம் ஜீவாத்மகம் என்றோ சொல்லமுடியாது. சைதன்யம் ஏகம் என்றே அறியவேண்டும். ஜீவன் ப்ரஹ்மாத்மகம் என்று அபேதத்தைக் கொண்டு சொல்லப்படுமானால் தவறில்லை. ஆனால் ஜீவனுக்குள் ப்ரஹ்மம் ஆத்மாவாக இருப்பதாக சொல்வதே தவறு.

பூர்வ:- ஜீவன் அம்சம், ஈச்வரன் அம்சி என்பதால், ஜீவனை ஈச்வராத்மகம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- அம்ச அம்சி பாவத்தில் ஈச்வரனும் ஜீவனும் இருப்பதாகச் சொல்லப்படுமானால், இரண்டிற்கும் பேதமே இருக்கமுடியாதே? (கிடையாது). ஜீவனுக்கும், ஈச்வரனுக்கும் சரீர சரீரி என்ற பேதம் இருப்பதாக உன்னால் சொல்லப்படுகிறதே? நூல் என்பது அம்சம், வஸ்திரம் அம்சி என்று சொல்லப்படுவதுபோல் அம்ச அம்சி பாவத்தில் பேதமே சொல்லமுடியாதே? கடாகாசத்திற்கும், மஹாகாசத்திற்கும் எவ்விதம் ஸ்வரூப பேதமே கிடையாதோ அதேபோல், ஸர்வ வ்யாபகமாக இருக்கின்ற சைதன்யம் எதுவோ அதுவே ஈச்வரன். அதே சைதன்யமே வ்யஷ்டி தேஹத்திலும் வ்யாபித்து இருக்கின்றது. அதையே ஜீவன் என்று சொல்லப்படுகிறது. அதனால் ஜீவனாக இருக்கின்றவனே ஈச்வரன் என்று சொல்லவேண்டுமே அன்றி ஜீவனுக்கு, ஈச்வரன் அந்தர்யாமி என்று சொல்வது சரியல்ல. மேலும் அம்சம், அம்சி பாவம் என்று சொல்வதெல்லாம், அம்சிக்குள் அம்சம் இருக்கின்றதே அன்றி அம்சத்திற்குள் அம்சி இருக்காது. இவ்விதம் சொல்லப்படுமானால், ஈச்வரனுக்குள் ஜீவன் இருப்பதாகச் சொல்லவேண்டும். ஜீவனுக்குள் ஈச்வரன் இருப்பதாக சொல்லமுடியாது. அதனால் அம்ச அம்சி பாவமென்றால் உன் ஸித்தாந்தத்திற்கே ஹானி ஏற்படும். வஸ்த்ரம் என்ற அம்சிக்குள் நூல் என்ற அம்சம் (ஆந்தரமாக) இருக்கலாம். இதுபோல் ஜீவனை ஈச்வர அம்சம் என்று சொல்லப்படுமானால், ஈச்வரனுக்கு அந்தர்யாமித்வம் சொல்லமுடியாது. ஸ்ரீ ராமர், ஸ்ரீ க்ருஷ்ணர் எல்லாம், ஸ்ரீ விஷ்ணுவின் அம்சம் என்று உங்களால் சொல்லப்படுகிறது. அதனால் ஸ்ரீ ராமருக்கும் ஸ்ரீ க்ருஷ்ணருக்கும் ஸ்ரீ விஷ்ணு அந்தர்யாமி என்று சொல்ல முடியுமா? ராமரும், க்ருஷ்ணரும் விஷ்ணு என்றே (விஷ்ணுவே) சொல்லவேண்டும். இதுவரை விசாரிக்கப்பட்டதன் மூலம் - ஜீவன் அப்ரஹ்ம காரணகன் என்றும் (ஜீவன் ப்ரஹ்ம கார்யம் அல்ல என்றும்)

அப்ரஹ்ம அந்தர்யாமிகன் ஜீவன் என்றும் (ஜீவனுக்குப் ப்ரஹ்மம் அந்தர்யாமி அல்ல என்றும்) ஜீவன் அப்ரஹ்மாத்மகன் (ஜீவன் ப்ரஹ்மாத்மகம் அல்ல) என்றும், ஜீவன் ஸ்வதந்த்ரன் என்றும் தெரிவிக்கப்பட்டது. இப்பேர்ப்பட்ட ஆத்மாவை ச்ருதி நிஷேதம் செய்வதாக சொல்வது பொருந்தாது என்று ஸித்தம் செய்யப்பட்டது.

பூர்வ:- சித்ஸ்வரூபமான ஆத்மாவை நேஹ நானா அஸ்தி ச்ருதி வாக்யம் நிஷேதம் செய்வதாக என்னால் சொல்லப்படவில்லை. ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாத ப்ரஹ்மத்தை ஸ்வரூபமாக கொள்ளாத ஸ்வதந்த்ரமான ப்ரக்ருதியை இந்த வாக்யம் நிஷேதம் செய்வதாக சொல்லலாம். ப்ரக்ருதி ப்ரஹ்மகார்யமாக இல்லாததால், அப்ரஹ்மாத்மகமாகவும், ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொள்ளாமலும், ஸ்வதந்த்ரமாகவும் ப்ரக்ருதி இல்லை என்பதையே இந்த வாக்யம் நிஷேதம் செய்கிறது என்று தெரிவிக்கிறேன்.

ஸித்தா:- இதுவும் சரியல்ல. ப்ரஹ்மாத்மகமாக இல்லாமலும், அந்தர்யாமிகத்வமாக இல்லாததுமான ப்ரக்ருதி என்ற வஸ்து இருக்கின்றதா? இல்லையா? இருக்கின்றது என்றால் இருக்கின்ற வஸ்துவை நிஷேதம் செய்யமுடியாது. இல்லை என்று சொல்லப்படுமானால், இல்லாத வஸ்துவை, இல்லை என்று நிஷேதம் செய்யவேண்டிய அவச்யம் என்ன?

பூர்வ:- உண்மையில் அவ்வித ப்ரக்ருதி இல்லை. ஆனாலும் ப்ராந்தியினால் அவ்விதம் ஒரு வஸ்து இருக்கலாமோ என்று ஸந்தேஹம் ஏற்படுகிறது. அதனால் இல்லை என்று ச்ருதி நிஷேதம் செய்கிறது என்று சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் சொல்வது எங்கள் அத்வைத ஸித்தாந்தம். உண்மையில் மாயை என்பதும் கிடையாது. ஆனாலும் ப்ராந்தியினால் ப்ரஸக்தம் என்பதால், அது பரமார்த்தமாக இல்லை என்று ச்ருதி நிஷேதம் செய்கின்றது என்பது எங்கள் ஸித்தாந்தம்.

பூர்வ:- ப்ரக்ருதி என்ற ஒரு வஸ்து இருக்கின்றது. அது ப்ரஹ்மாந்தர்யாமிகமாக இருந்தும் அப்ரஹ்மாந்தர்யாமிகம் என்றும் ப்ரஹ்மாத்மகமாக இருந்தும் ப்ரஹ்மாத்மகமாக இல்லை என்றும் அஸ்வதந்த்ரமாக இருந்தும் ஸ்வதந்த்ரமாக இருப்பதாக நினைக்கின்றார்கள் - இவ்விதம் ப்ராந்தி ஸித்தமாக அறியப்படுவதால் உண்மையில் அவ்விதமில்லை என்று ச்ருதி நிஷேதம் செய்கின்றது.

ஸித்தா:- இவ்விதம் அர்த்தம் தெரிவிக்க வேண்டுமானால் ச்ருதிவாக்யம் ப்ரஹ்மத்தில் எதுவுமே இல்லை என்று தெரிவிக்க முடியாது. ந இஹ நானா அஸ்தி என்று தெரிவித்திருக்க முடியாது. அதனால் ப்ரக்ருதி ப்ரஹ்மத்தில் இருப்பதாகவும், அதற்கு ஸ்வதந்த்ரம் முதலான தன்மைகள் கிடையாது என்று நிஷேதம் செய்வதாக அர்த்தம் செய்வது சரியல்ல.

பூர்வ:- உபநிஷத்தில் சில வாக்யங்கள் த்வைதம் இருக்கின்றது என்றே தெரிவிக்கின்றன. சில வாக்யங்கள் த்வைதம் இல்லை என்று நிஷேதம் செய்கின்றது. இவ்விதம் ஒன்றுக்கொன்று விரோதமான வாக்யங்கள் இருக்கின்றன. அதனால் த்வைதம் இருப்பதாக தெரிவிக்கின்ற வாக்யங்களுக்கு விரோதம் இல்லாமல் நிஷேத ச்ருதிக்கு அர்த்தம் செய்ய வேண்டும். அதுவே பொருந்தும். அதனால்தான் ப்ரக்ருதி இருக்கின்றதென்றும் ஆனால் அந்த ப்ரக்ருதிக்கு

அப்ரஹ்மாத்மகம் முதலான தன்மைகள் எல்லாம் இல்லை என்று நிஷேதம் செய்யப்படுகிறது என்று முன்பே சொல்லப்பட்டது. இதனால் த்வைத ஸத்பாவ ப்ரதிபாதக ச்ருதிக்கு விரோதம் ஏதும் ஏற்படாது.

ஸித்தா:- த்வைத ஸத்பாவ ப்ரதிபாதக வாக்யங்களெல்லாம் அனுவாத வாக்யங்கள். அறியப்படும் த்வைதத்தை அனுவாதம் செய்து தெரிவிக்கின்றன. த்வைத நிஷேத ச்ருதி வாக்யமே பாரமார்த்திகம். இவ்விதம் பாரமார்த்திகமான நிஷேத வாக்யச்ருதிக்கும், வ்யாவஹாரிகமான த்வைத ப்ரதிபாதகமான ச்ருதி வாக்யத்திற்கும் விரோதம் ஏதும் இல்லை. மித்யாபூதம் என்பதால் பரமார்த்தமாக இவை எதுவுமே இல்லை என்று சொல்லலாம். ஒன்று அவித்யா நிலையை தெரிவிக்கின்றது. ஒன்று வித்யா நிலையை தெரிவிக்கின்றது. இதில் விரோதம் ஏதுமில்லை.

பூர்வ:- அபாரமார்த்திகமான த்வைதத்தை, த்வைத ப்ரதிபாதகமான ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது என்றால், பாரமார்த்திகமான த்வைதம் ஒன்று இருந்தால்தானே, இது அபாரமார்த்திகம் என்று சொல்லலாம். அதாவது ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பம் அபாரமார்த்திகம் என்றாலும் பாரமார்த்திக ஸர்ப்பம் ஒன்று இருக்கின்றதால்தானே, இது அபாரமார்த்திகம் என்று சொல்லலாம். இதுபோல் பாரமார்த்திக பேதம் என்று ஒரு பேதம் கிடையாதே? அதனால் இது அபாரமார்த்திக பேதம் என்று சொல்லமுடியாததால் பேதம் பரமார்த்தம் என்றே செல்லவேண்டும்.

ஸித்தா:- கடம் நித்யமா அநித்யமா என்றால் நித்யம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் கடம் உற்பத்தி, நாசம் உடையது என்று அறியப்படுவதால் கடம் நித்யம் என்று சொல்லமுடியாது. அநித்யம் என்றே சொல்லவேண்டும். ஆனால் உன்னால் செய்யப்படும் வாதத்தின்படி நித்ய கடம் என்ற ஒன்று இருந்தால்தான் இந்த கடம் அநித்யம் என்று சொல்லமுடியும். அதனால் உன் வாதத்தின்படி கடம் அநித்யம் என்றே சொல்லமுடியாது.

ஆனால் கடம் அநித்யம் என்று சொல்வதற்கு காரணம் இருக்கின்றது. உற்பத்தி விநாசம் என்று தெரிவிப்பதற்கு நித்ய கடம் என்று ஒன்று தேவை இல்லை. அதேபோல் பேதம் வ்யவஹார தசையில் மட்டுமே அறியப்படுவதால் பாரமார்த்திகம் இல்லை என்று காரணம் சொல்லலாம். அதற்காக ஸத்யமான பேதம் ஒன்று இருக்கவேண்டிய அவச்யமில்லை (நிர்பந்தமும் இல்லை).

பூர்வ:- பரமார்த்த தசையிலும் த்வைதம் (பேதம்) இருக்கின்றதென்றே சொல்லலாம். எப்படியெனில், ஞானிகளைப் பற்றி தெரிவிக்கின்றபோது *'ஜக்ஷன், க்ரீடன் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யானைர்வா'* என்று ஞானிகள் ஞானத்தை அடைந்த பிறகும் யதேஷ்டமாக பூஜித்துக்கொண்டும் விளையாடிக்கொண்டும், ரமித்துக்கொண்டும் இருப்பார்கள் என்று உபநிஷத்துக்களில் சொல்லப்படுகிறதே? அதனால் த்வைதம் பரமார்த்தம் என்றே சொல்ல வேண்டும்.

ஸித்தா:- *'ஜக்ஷன்'*, *'க்ரீடன்..'* என்ற ச்ருதி வாக்யம், ஸகுணோபாஸன பலமாக சொல்லப்படுகிறது. ஞானிகளைப் பற்றி சொல்லப்பட்ட வாக்யமல்ல. ஞானபலமல்ல.

உபாஸனாபலத்தினால் ஹிரண்யகர்ப்ப லோகப்ராப்தியை அடைந்த ஜீவனுக்கு சொல்லப் பட்ட பலம். அதனால் பரமார்த்த நிலை பற்றி சொல்லப்பட்டதல்ல. நிர்விசேஷ ப்ரஹ்ம பாவத்தை அடைவதே பரமார்த்த நிலை. ஹிரண்யகர்ப்ப லோகப்ராப்தி பரமார்த்த நிலையும் அல்ல, அதற்கு முக்தி என்ற பெயரும் சொல்லமுடியாது. மேலும், ப்ரக்ருதி என்ற ஒரு தத்வம், ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொண்டதும், ப்ரஹ்மாத்மகமாகவும், அஸ்வதந்த்ரமாகவும் இருப்பதாக உன்னால் சொல்லப்படுகிறதே அந்த ப்ரக்ருதி எங்கே இருக்கிறது? ப்ரஹ்மத்தில் இருப்பதாகச் சொல்லமுடியாது. ஏனெனில் ப்ரஹ்மத்தில் ப்ரக்ருதி இருக்கின்றது என்று சொல்லப்படுமானால், எந்த வஸ்துவில் எது இருக்கின்றதோ, அந்த வஸ்து வ்யாபகம் என்றும் எதில் இருக்கின்றதோ அது வ்யாப்யம் என்று சொல்லவேண்டும். உதாரணமாக கடம், ஸராவம் முதலானவைகளில் ம்ருத் இருக்கின்றது என்றால் ம்ருத் வ்யாபகம், கடஸராவாதிகள் வ்யாப்யம். அதேபோல், ப்ரஹ்மத்தில் ப்ரக்ருதி இருக்கின்றது என்றால் ப்ரக்ருதி வ்யாபகம், ப்ரஹ்மம் வ்யாப்யம் என்று சொல்லநேரிடும். ப்ரஹ்மத்திற்குள் ப்ரக்ருதி இருக்குமானால், ப்ரஹ்மம் பாஹ்யம் ப்ரக்ருதி ஆந்தரம் என்று சொல்லப்பட்டதாக ஆகும்.

பூர்வ:- ம்ருத் த்ருஷ்ட்டாந்தம் சொல்வது பொருந்தாது. ஏனெனில் கடத்தில் ம்ருத் இருக்கின்றதென்றும் சொல்லலாம். அல்லது ம்ருத்தில் கடஸராவாதிகள் இருக்கின்றதென்றும் சொல்லலாம். காரணமான ம்ருத்தில் கார்யமான கடம் முதலானவை இருக்கலாம். காரணமான ம்ருத் வ்யாபகம், கடம் வ்யாப்யம் என்று சொல்லலாம். மேலும், ம்ருத் உள்ளே இருக்கின்றது, கடம் வெளியே இருக்கிறது என்று சொல்வதுபோல், ப்ரஹ்மத்தில் ப்ரக்ருதி இருக்கின்றது என்று சொன்னாலும், ப்ரக்ருதிக்கு ப்ரஹ்மம் வ்யாப்யம் என்றும் பாஹ்யம் என்றும் சொல்லவேண்டிய அவச்யமில்லை.

ஸித்தா:- உன்னால் தெரிவிக்கப்படும் த்ருஷ்ட்டாந்தமும், தார்ஷ்ட்டாந்தமும் பொருந்த வில்லை. கடம், ம்ருத்விகாரம். அதுபோல் ப்ரக்ருதி ப்ரஹ்ம விகாரமில்லை. ப்ரக்ருதி ப்ரஹ்ம கார்யம் என்று சொல்லப்படுமானால் ம்ருத் கட த்ருஷ்ட்டாந்தம் பொருந்தும். ப்ரக்ருதி அஜம் என்றும் நித்யம் என்றும் உன்னால் சொல்லப்படுகிறதால், ப்ரஹ்ம விகாரம் என்றோ, ப்ரஹ்மகார்யம் என்றோ சொல்லமுடியாது. அதனால் ம்ருத்கட த்ருஷ்ட்டாந்தம் பொருந்தாது. அதனால் ப்ரஹ்ம காரணம் என்று சொல்லமுடியாது. மேலும் ப்ரஹ்மம் கூடஸ்த்தம் என்பதாலும், ப்ரஹ்மம் காரணம் என்று சொல்லமுடியாது. அதேபோல் ப்ரக்ருதி அஜம் என்று உன்னால் சொல்லப்படுவதாலும், ப்ரஹ்மகார்யம் ப்ரக்ருதி என்றும் சொல்லமுடியாது. அதனால் த்ருஷ்ட்டாந்தம் சரியல்ல.

பூர்வ:- ப்ரக்ருதி ப்ரஹ்மத்தில் இல்லை, ப்ரஹ்மத்திற்கு அன்யமான ஒன்றில் இருப்பதாகச் சொல்லலாமே?

ஸித்தா:- அவ்விதம் சொல்லப்படுமானால், ப்ரஹ்மம் ஸர்வ வ்யாபகம் என்று சொல்ல முடியாதே? மேலும் ப்ரக்ருதிக்கு ப்ரஹ்மம் ஆதாரமில்லை என்றால், ப்ரஹ்மம் ஸர்வாதாரம் என்று சொல்லப்படுவதற்கு விரோதமாக ஆகும். அதுமட்டுமல்ல ப்ரஹ்மம் ஸர்வாத்மகம் என்றும் சொல்லமுடியாது. ஏனெனில் ப்ரஹ்மத்திற்கு அன்யமான ஒன்றில் ப்ரக்ருதி இருக்குமானால் ப்ரஹ்மகார்யமாக ப்ரக்ருதி இருக்க முடியாது. அதனால் ஸர்வாத்மகத்வம்

ப்ரஹ்மத்திற்கு சொல்லமுடியாது. மேலும் ப்ரஹ்மத்திற்கு அன்யமான ஒன்றில் ப்ரக்ருதி இருக்கின்றதென்றால், அன்யமாக இருக்கின்ற அந்த வஸ்துவும் ப்ரஹ்ம கார்யமல்ல என்றே சொல்லவேண்டும். அதனால் ப்ரஹ்மத்திற்கு அன்யமாக ஒரு வஸ்து இருக்கின்றது என்றால், ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறாக வேறு வஸ்துவே கிடையாது என்று 'நேஹ நானாஸ்தி' என்ற ச்ருதி வாக்யத்திற்கு அர்த்தம் தெரிவிப்பதற்கு, நேர் விருத்தமாக உன் ஸித்தாந்தம் விபரீதமாக அர்த்தம் தெரிவிக்கின்றது என்றே சொல்லப்பட்டதாகவே ஆகும். மேலும், ப்ரக்ருதி, ப்ரஹ்மகார்யமாக இல்லாவிட்டாலும் ப்ரஹ்மாத்மகமாக இருக்கலாமே என்று சொல்வதும் பொருந்தாது. எது ஒன்று கார்யமோ, அது அதன் காரணாத்மனாகத்தான் இருக்கவேண்டும். அதனால் ப்ரக்ருதி ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லமுடியாது. எந்த ஒரு விஷயம் கல்பிக்கப்பட வேண்டுமானாலும், த்ருஷ்ட்டமான ஒரு விஷயத்தைக்கொண்டே அத்ருஷ்ட்டமான ஒன்றை கல்பிக்கவேண்டும். லோகத்தில் அதற்கு த்ருஷ்ட்டாந்தமே கிடையாது என்றால், அவ்விதம் கல்பிக்கப்படும் விஷயத்தை ஒத்துக்கொள்ள முடியாது. அதனால் இத்தனை தோஷங்களையும் பரிகாரம் செய்வதற்காக ப்ரக்ருதி ப்ரஹ்மகார்யம் என்று சொல்லப்படுமானால், ப்ரக்ருதி அஜம் நித்யம் என்று உன்னால் செய்யப்பட்ட வாதம் சரியல்ல என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ப்ரக்ருதியைத் தவிர, மற்றுமுள்ள வஸ்துக்கள் எவ்விதம் ப்ரக்ருதியினால் உண்டாகின்றதோ, அதுபோல் ப்ரக்ருதி வேறு ஒரு வஸ்துவினால் உண்டாகவில்லை என்பதாலும் ஸ்வயமே ஜாதம் என்பதாலும் அஜம், நித்யம் என்று உபசாராத் சொல்லப்பட்டது.

ஸித்தா:- எந்த வஸ்துவானாலும், ஜாதம் என்றால் அதை அஜம், நித்யம் என்று சொல்லமுடியாது. ஸ்வயமே ஜாதம் என்றாலும் உற்பத்தி என்றாலே அதற்கு விநாசம் உண்டு என்று '*ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:*' என்று கீதாவசனம் தெரிவிக்கின்றது. அதனால் நித்யம் என்றும் சொல்லமுடியாது. உபசாராத் அஜம் என்று சொல்லப்படுமானால், அந்த வஸ்து உண்மையில் அஜம் அல்ல நித்யமல்ல என்றே அர்த்தம்.

பூர்வ:- அப்படியானால் ப்ரக்ருதி ஜாதம் அநித்யம் என்றே தெரிவிக்கிறேன்.

ஸித்தா:- ப்ரக்ருதி அநித்யம் என்றால், முக்தி காலத்தில் ப்ரக்ருதி இருக்க முடியாது. ப்ரக்ருதியே இல்லை என்றால் அதன் கார்யமான ஜகத்தும் இருக்கமுடியாது. அதனால் ஜீவன்தான் எஞ்சி இருக்கின்றான் என்பதால் ஜீவசைதன்யம், ஈச்வரசைதன்யம் இரண்டும் ஒன்றே என்று ஐக்யம் ஸம்பவிக்கின்றதால் '*ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம*' என்றே ஸித்திக்கின்றது. இவ்விதம் ஸித்தாந்தம் இருக்கின்றதால் '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற ச்ருதி வாக்யத்திற்கு எவ்வளவு கோளாறுகள் செய்யமுடியுமோ அவ்வளவும் செய்யப்பட்ட காரணத்தினால் அதன் பலனாக உன்னுடைய புத்தி வக்ரகமாக (வக்ரார்த்த வர்ணனம் என்றால் எந்த வாக்யத்திற்கு எது அர்த்தமோ அதை விட்டுவிட்டு, எது அர்த்தமாகாதோ அதை தெரிவிப்பதே வக்ரபுத்தி.) இருக்கின்றதென்றே அறியப்பட்டது (ஸித்திக்கின்றது.)

75

अद्वैतसिद्धान्ते सुदर्शनाचार्यमतनिराकरणम् ।

அத்வைத ஸித்தாந்தே ஸுதர்சனாசார்யமத நிராகரணம்

எந்த ஒரு பலனும் (ப்ரயோஜனமும்) இல்லாமல், ஸுதர்சனர் கோலாஹலம் செய்திருக்கின்றார். அதற்கு பதில் தெரிவிப்பதற்காக இப்போது ஆரம்பிக்கிறோம்.

ஸுதர்சனர்:- ஸத்குணங்களான ஸர்வகல்யாண குணங்களையுடையவர் பரமாத்மா. ஜகத்தானது துர்க்குணமாக இருக்கின்றது. அதனால் இவ்விதம் வேறுபட்ட தன்மையுடைய இரண்டிற்கும் ஐக்யம் சொல்வது பொருந்தாது. ச்ருதியினால் இவ்விதம் ஐக்யம் சொல்லப்படாததால் ச்ருதி இவ்விதம் ஐக்யம் தெரிவிக்கின்றது என்றால் அது பொருந்தாது (வ்யாஹதம்).

ஸித்தா:- அது ஸத்யமே. அதாவது ச்ருதியானது, ஸத்குணத்திற்கும் துர்குணத்திற்கும் ஐக்யம் என்று தெரிவித்திருக்குமானால் அந்த வாக்யம் விருத்தம்தான் (அது பொருந்தாது). அதனால்தான், ப்ரஹ்ம பரிணாமம் ஜகத் என்று தெரிவிக்கின்ற உங்கள் ஸித்தாந்தம் தவறு என்று எங்களால் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மகார்யம் ஜகத் என்றால், கார்யகாரண அனன்யத்வ ந்யாயத்தினால் ஸத்குணம், துர்குணமாகின்றது என்று சொல்லப்பட்டதாக ஆகும் என்பதால் தான், ப்ரஹ்ம பரிணாமம் ஜகத் என்ற வாதம் சரியல்ல என்று சொல்கிறோம். பரிணாமத்திற்க்கும், பரிணாமிக்கும் ம்ருத்கடம் போல் ஸாலக்ஷண்யம் இருக்க வேண்டும். இவ்விதம் சொல்ல முடியாது என்பதற்காகவே, எங்கள் ஸித்தாந்தத்தில், ஸத்குண ப்ரஹ்மத்தினிடம், துர்குணமான ஜகத், ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பம் போல் விவர்த்தம் என்றே சொல்கிறோம். விவர்த்த வாதத்தில் கார்யகாரண ஸாலக்ஷண்யம் இருக்க வேண்டுமென்ற அபேக்ஷை இல்லை (தேவையில்லை).

பூர்வ:- ஜகத் அபாரமார்த்திகம் என்று சொல்லப்பட்டாலும் அது ஹேயமாக இருப்பதால் அந்த ஜகத்துடன் உபாதேயமான ப்ரஹ்மத்திற்கு ஸம்பந்தம் உங்கள் மதத்திலும் எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் ஜகத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் அபேதம் சொல்வது பொருந்தாது. எவ்வித ஸம்பந்தமும் அற்ற ப்ரஹ்மத்திற்கு அதற்கு நேர் விரோதமான ஹேயமான ஜகத்துடன் ஸம்பந்தம் ஏற்பட முடியாது. *'ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம'* என்று ஸாமானாதிகரண்ய ஸம்பந்தமும் சொல்லமுடியாது.

ஸித்தா:- இதுவும் ஸத்யமே. ஆனால் இவ்விதம் தள்ளத்தக்கதான ஜகத்திற்கு, எவ்வித ஸம்பந்தமும் அற்ற ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தம் இருக்கின்றாதாக உங்களால் தான் சொல்லப்படுகிறது. அதாவது ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம், ஸ்தூல சிதசித் விசிஷ்ட்டமாக ஆகின்றது என்று உங்கள் ஸித்தாந்தம்தான் தெரிவிக்கின்றது. சிதசித் விசிஷ்ட்டம் என்று சித்ஸ்வரூபம், அசித் ஸ்வரூபத்துடன் ஸம்பந்தம் உடையது என்று

உங்களால் தான் சொல்லப்படுகிறது. எங்கள் ஸித்தாந்தத்தில், ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தம் சொல்லப்படும் ஜகத் ஹேயம் என்றும், அபரமார்த்தம் என்பதாலும் ஜகத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் பாரமார்த்திக ஸம்பந்தம் சொல்லமுடியாது என்றே சொல்லப்படுகிறது. ஜகத்தும் அபாரமார்த்திகம், அதன் ஸம்பந்தமும் அபாரமார்த்திகம் என்றே தெரிவிப்பதால், எங்கள் ஸித்தாந்தத்தில் தோஷமில்லை. உதாரணமாக ஒரு வ்ருக்ஷத்தில் ஒரு குரங்கு உட்கார்ந்திருக்கின்றது என்று இந்த்ரஜாலக்காரன் காண்பிக்கிறான் என்றால், குரங்கே மித்யாபூதம் என்பதால், அந்த குரங்கிற்கும் அந்த வ்ருக்ஷத்திற்கும் உள்ள ஸம்பந்தம் ஸத்யம் என்று சொல்லமுடியுமா? இதே போல் ஜகத் என்ற ஸம்பந்தி அதற்கு ப்ரஹ்மத்தினிடம் உள்ள ஸம்பந்தம் இரண்டுமே மித்யை என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஜகத், அதன் ஸம்பந்தம் இரண்டுமே இல்லை என்றால், அவ்விதம் இல்லாத ஒன்றை '*நேஹ நானாஸ்தி*' என்ற வாக்யம் நிஷேதம் செய்யவேண்டிய அவச்யம் என்ன?

ஸித்தா:- ஜகத் மித்யை என்ற வாதத்தில் இந்த தோஷம் இல்லை. வஸ்துவே இல்லையென்றாலும் நிஷேதம் செய்ய முடியாது. வஸ்து ஸத்யமாக இருந்தாலும் நிஷேதம் செய்ய முடியாது. ஆனால் ப்ராந்தியினால் ஒரு வஸ்து இருப்பதாக ப்ரதீதிக்கு விஷயமாகுமானால் அதுவே மித்யை என்று சொல்லப்படுவதால், மித்யையான வஸ்துவே நிஷேதத்திற்கு உரியதாக ஆகிறது. ஸத்யமான வஸ்துவை எவ்விதம் இல்லை என்று நிஷேதம் செய்ய முடியாதோ அதே போல் ப்ரஸக்தமாக இல்லாத வஸ்துவையும் நிஷேதம் செய்ய முடியாது. அதனால் ச்ருதியானது ஜகத்தையும் அதன் ஸம்பந்தத்தையும் நிஷேதம் செய்கின்றதனாலேயே, ஜகத்தும், அதன் ஸம்பந்தமும் மித்யை என்று அறியப்படுகிறது. எவ்விதம் சுக்தியே ரஜதமாக தோன்றும் இடத்தில் (ப்ராந்தி ஸ்தலத்தில்) ஐக்யம் சொல்லப்படுகிறதோ அதுபோல், ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் ஐக்யம் சொல்லப்படுமானால், அதில் பொருந்தாத விஷயம் ஏதுமில்லை. 'இதம் ரஜதம்' என்பது ''சுக்தி'' என்பது போல், '*ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம*' என்று ஐக்யம் சொல்லப்படுவதில் தவறு ஏதுமில்லை.

பூர்வ:- ஸர்வஞ்ஞனான ஈச்வரன் தன் இச்சையினாலேயே தள்ளத்தக்கதான இந்த ஜகத்தை ச்ருஷ்டித்தார் என்று சொல்வது சரியல்லவே?

ஸித்தா:- ஸத்யமே. ஆனால் இந்த தோஷமும் உன் ஸித்தாந்தத்தில் தான் ஸம்பவிக்கின்றது. ஈச்வர ஸங்கல்பத்தினால் இந்த ஜகத்தை ச்ருஷ்டித்தார் என்று உன்னால்தான் சொல்லப்படுகிறது. எங்கள் ஸித்தாந்தத்தில் ச்ருஷ்டி பரமார்த்தம் என்றே சொல்லப்பட வில்லை. ஜகத்தாக தோன்றுகிறது என்றே சொல்லப்படுகிறது. ச்ருஷ்டிக்கப்படுகிறது என்று சொல்லவில்லை. '*பஹு ஸ்யாம் ப்ரஜாயேய*' என்று ஈச்வரன் ஸ்வயமே ஹேயமான ஜகத்ரூபேண ஆகி இருக்கின்றார் என்றும் '*ஸச்சத்யச்சாபவத், நிருக்தஞ்ச அநிருக்தஞ்ச, நிலயனஞ்ச அனிலயனஞ்ச*' என்றெல்லாம் ச்ருதி தெரிவிக்கிறது என்றும் உங்களால் சொல்லப்படுகிறது.

ஜீவன், சரீர ஸம்பந்தப்பட்டிருக்கின்ற ஜீவஹிம்ஸை செய்வானாகில் ஸ்தாவரம் முதலான ஜன்மாவை அடைந்து பாபங்களில் அதிபாபத்தை செய்வதால் அதோகதியை அடைகிறான்

என்று சாஸ்திரம் தெரிவிக்கின்றது. சேதனனாக இருந்தும் புத்தி பூர்வகமாக ப்ராணஹிம்ஸை செய்வானாகில் மிகுந்த பாபத்தினால், யாரும் விரும்பாத ஸ்தாவர பாவத்தை அடைகிறான் என்று தெரிவிக்கின்றது. இவ்விதம் சேதன அசேதன ரூபமாக ஈச்வரன் ஸங்கல்பத்தினால் ஜகதாகாரமாக பரிணாமத்தை அடைகின்றார் என்றால், அஹோ! இப்பேர்ப்பட்ட மஹத்தான கஷ்டத்தை ஈச்வரன் அடைகிறார் என்று சொல்ல நேரிடும். ஸச்சிதானந்த ஸ்வரூபரான ஈச்வரன் விரும்பதகாத இந்த ஜகத்ரூபமாக ஆகின்றார் என்று சொல்வது பரிதாபத்திற்குரியது. எங்கள் ஸித்தாந்தத்தில் ஸ்வ இச்சையினாலோ, பர இச்சையினாலோ, ஜகத் ச்ருஷ்ட்டிக்கப்படவுமில்லை, ஜகத் ரூபமாக ஆகவுமில்லை என்றும் ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பம் போல், மாயையினால் ஜகத் தோன்றுகிறது என்றே சொல்லப்படுகிறதே அன்றி உண்மையில் ஜகத் என்பது இல்லை என்றே சொல்லப்படுகிறது. இவ்விதம், உண்மையில் ப்ரஹ்மத்தை அன்றி வேறு எதுவுமே கிடையாது என்று சொல்வதால், அத்வைத ஸித்தாந்தத்தில் எந்த விதமான தோஷத்திற்கும் இடமில்லை. ஈச்வரஸ்வரூபத்திற்கு காலத்ரயத்திலும் ஹானி இல்லை. அஸங்கஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கு எதனுடனும் ஸம்பந்தம் கிடையாது. தேச பரிச்சேதமோ, கால பரிச்சேதமோ, வஸ்து பரிச்சேதமோ எதுவுமே ப்ரஹ்மத்தினிடம் கிடையாது. அதனால் த்ரிவிதபரிச்சேதரஹிதம் ப்ரஹ்மம் என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ஈச்வரனுக்கு ஸர்வஞ்ஞத்வம் ஸ்வாபாவிகம் என்றே சொல்லவேண்டும். அஞ்ஞான கார்யம் என்று (ஆவித்யகம்) சொல்லமுடியாது.

ஸித்தா:- ஈச்வரனுக்கு ஸர்வஞ்ஞத்வம் ஸ்வாபாவிகமில்லை, மாயிகம் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் ப்ரஹ்மத்தை அன்றி வேறாக இருக்கின்ற எந்த வஸ்துவானாலும் அது ஆவித்யகமாகதான் இருக்க வேண்டும். அவித்யை என்பதே இல்லை என்றால் ஸர்வம் என்பதே இருக்க முடியாது. ஸர்வம் என்பதே இல்லை என்றால், ஸர்வஞ்ஞத்வம் எவ்விதம் இருக்க முடியும்? அதனால் ஸர்வஞ்ஞத்வம் ஆவித்யகம் என்றே சொல்லவேண்டும். ஸ்வத: ஸர்வஞ்ஞத்வம் இருக்க முடியாது.

பூர்வ:- ச்ருதி வாக்யம் '*ஸ்வாபாவிகீ ஞானபலக்ரியேதி*' ('स्वाभाविकी ज्ञानबलक्रियेति') என்று ஞானசக்தி, க்ரியாசக்தி என்ற எல்லாமே ஸ்வாபாவிகம் என்று தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- மாயா அவச்சின்ன சைதன்யமே ஈச்வரன் என்றே சொல்லவேண்டும். ஆனால் இந்த ச்ருதிவாக்யம் ஸ்வாபாவிகமாக, குரு உபதேசம் இல்லாமல், ஈச்வரனுக்கு ஸர்வஞ்ஞத்வம் இருப்பதாக தெரிவிக்கின்றதே அன்றி ஈச்வரனுக்கு மாயை என்ற உபாதி இல்லாமல் ஸர்வஞ்ஞத்வம் ஸ்வயமே இருப்பதாக சொல்லவில்லை. மாயா உபாதி அற்ற சுத்த சைதன்யத்திற்கு ஸர்வஞ்ஞத்வம் இருப்பதாக ச்ருதி தெரிவிக்கவில்லை. ஹிரண்யகர்ப்பருக்கு, ஈச்வர அனுக்ரஹத்தினால், ஈச்வர உபதேசத்தின் மூலமாக ஸர்வஞ்ஞத்வம் ஏற்படுகிறது என்றே தெரிவிக்கின்றது. ஆனால் ஈச்வரனுக்கு மாயா ஸம்பந்தத்தினாலேயே ஸர்வஞ்ஞத்வம் ஏற்படலாம் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் உபதேசத்தின் மூலம் ஹிரண்யகர்ப்பருக்கு ஸர்வஞ்ஞத்வம் ஏற்படுகிறது என்பதையே பகவான், ப்ருஹ்மாவிற்கு உபதேசித்தார். '*தேநே ப்ரஹ்ம ஹ்ருதா ய ஆதிகவயே*' 'तेने ब्रह्म

हृदा य आदिकवये' என்று பாகவத வசனம் தெரிவிக்கின்றது. ('*யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்*' என்ற ச்ருதியிலும் சொல்லப்படுகிறது) இவ்விதம் ஹிரண்யகர்ப்பர் ஈச்வர அனுக்ரஹத்தால் உபதேச மூலம் வேத வேதாந்தார்த்தங்களை அறிந்து ஸர்வஞ்ஞர் ஆனார் என்றும், அதன் பிறகு முன்கல்பத்தில் இருந்த ச்ருஷ்டி போலவே, இந்த ஜகத்தை ச்ருஷ்டித்தார் என்றே '*தாதா யதா பூர்வமகல்பயத்*' 'धाता यथा पूर्वमकल्पयत्' என்ற ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது.

பூர்வ:- ஸர்வஞ்ஞனான ஈச்வரனை மாயாஸம்பந்தம் உடையவர் என்று சொல்லப்படுமானால் ஈச்வரனுக்கு ஏற்படும் ஞானம் ப்ராந்தி ஞானம் என்றாகும். அதனால் ஈச்வரனை ப்ராந்தன் என்று சொல்லநேரிடும்.

ஸித்தா:- ஸத்யமே. ஸர்வஞ்ஞனான ஈச்வரனை ப்ராந்தன் என்று சொல்வது சரியல்ல. ஆனால் ஈச்வரனுக்கு ப்ராந்தி இருப்பதாக எங்களால் சொல்லப்படவில்லை. ஜீவன் ரஜ்ஜுவையே, ஸர்ப்பம் என்று நினைத்து ப்ரமிக்கின்றான். அதுபோல் ப்ரஹ்மத்தினிடம், ஸர்வஞ்ஞத்வம் இருப்பதாகவும், ஜகத் இருப்பதாகவும் ஜீவன் ப்ரமிக்கின்றான் என்றே சொல்லப்படுகிறது. ஈச்வரனுக்கு ப்ரமம் என்று சொல்லப்படவுமில்லை. அதனால் ஈச்வரன் ப்ராந்தன் என்று சொல்லப்படவில்லை.

பூர்வ:- ஜீவனும் ஈச்வரனும் ஒன்றே என்று நீங்கள் சொல்வதால், ஜீவனுக்கு ப்ராந்தி என்றால் ஈச்வரன் ப்ராந்தன் என்றே சொல்லப்படுவதாக ஆகும்.

ஸித்தா:- ப்ராந்தனான ஜீவனை, ஈச்வரன் என்று சொல்லப்படவில்லை. பந்தங்களிலிருந்து விடுபட்ட ஜீவனையே ஈச்வரன் என்று சொல்லப்படுகிறது. அதனால் முக்த ஜீவனுக்கு ப்ராந்தி என்பதே கிடையாது.

பூர்வ:- '*அனேன ஜீவேன ஆத்மனா அனுப்ரவிச்ய*' என்று ஜீவபாவேன, ஈச்வரனே சரீரத்தில் ப்ரவேசிக்கின்றார் என்று சொல்லப்படுவதால் ஜீவன் ப்ராந்தன் என்றால் ஈச்வரன் ப்ராந்தன் என்றே சொல்லப்பட்டதாக ஆகிறது.

ஸித்தா:- இதுவும் ஸத்யம். ஏனெனில் ஈச்வரன் ஜீவபாவத்தில் இருக்கின்ற போது ப்ராந்தி இருக்கின்றது. ஆனால் ஈச்வரன் என்றால் ப்ராந்தி இருக்க முடியாது. இதே போல் உன்னுடைய மதத்திலும் ப்ரஹ்ம பரிணாம ஜகத் என்று சொல்லப்படுவதால், ப்ரஹ்மமே ஜகத் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அதனால், ஜகத்திலுள்ள ஹேய குணங்கள் எல்லாம் ஈச்வரனிடம் இருப்பதாகவே சொல்லவேண்டும் என்பதால் இந்த தோஷம் உன் மதத்தில்தான் ஸம்பவிக்கின்றது.

பூர்வ:- ஹேய குணங்கள் உள்ள ஜகத் வேறு, ப்ரஹ்மம் வேறு என்பதால் அந்த குணங்கள் ப்ரஹ்மத்தில் இருப்பதாகச் சொல்லமுடியாது.

ஸித்தா:- ப்ரஹ்மமே ஜகத்தாக பரிணாமத்தை அடைந்திருக்கிறது என்று உன்னால் சொல்லப்பட்டிருக்கின்றதால், ஜகத்தின் குணங்கள் ப்ரஹ்மத்தில் இல்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்? ப்ரஹ்மமும், ஜகத்தும் அத்யந்த பின்னம் என்றால், ப்ரஹ்மம் ஜகத்திற்கு

பரிணாமி உபாதானம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அவ்விதம் சொல்லப்படும் உன்னுடைய பக்ஷம் சரியல்ல என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- சுத்த ப்ரஹ்மம் பரிணாமத்தை அடையவில்லை. சிதசித்விசிஷ்ட்ட ப்ரஹ்மமே ஜகத்தாக பரிணாமத்தை அடைவதாக சொல்லப்பட்டது.

ஸித்தா:- அதேபோல் மாயாவிசிஷ்ட்ட ப்ரஹ்மமே (ஈச்வரனே) ஜீவபாவத்தை அடைவதாக சொல்லப்படுகிறதே அன்றி சுத்த ப்ரஹ்மம் ஜீவபாவத்தை அடைந்ததாக எங்களால் சொல்லப்படவில்லை.

பூர்வ:- மாயாவிசிஷ்ட்ட ஈச்வரன் ஸர்வஞ்ஞன் என்பதால், அந்த ஈச்வரன் கிஞ்சிஞ்ஞனான ஜீவன் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- சிதசித்விசிஷ்ட்ட ப்ரஹ்மம் பரமானந்த ஸ்வரூபம் என்பதால் ஹேயகுண ஜகத்ரூபமாக ஆகின்றது என்று எப்படி சொல்லப்படுகிறது? விசிஷ்ட்ட ப்ரஹ்மம் என்றாலும், அதுவும் உத்க்ருஷ்ட்டம் தானே?

பூர்வ:- சிதசித்விசிஷ்ட்ட ப்ரஹ்மம் ஜகத்தாகவே மாறிவிட்டது என்று சொல்லவில்லை. ஜகத்திற்குள் அந்தர்யாமியாக இருக்கிறது என்று சொல்கிறேன்.

ஸித்தா:- ஈச்வரனும் ஸம்ஸாரியான ஜீவனாக ஆகிவிட்டதாக சொல்லப்படவில்லை. அந்த:கரணத்திற்கு சாக்ஷியாக இருக்கின்றவர் ஈச்வரன் என்றும் சொல்லப்படுகிறது. அதனால் ஸாபாஸ அஹங்காரமாக ஈச்வரன் ஆகின்றார் என்று சொல்லப்படவில்லை.

பூர்வ:- இவ்விதம் சொல்லப்படுமானால் ஜீவனை காட்டிலும், ஸாக்ஷியான ஈச்வரன் வேறு என்று பேதம் சொல்ல நேரிடுமே? ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் அபேதம் எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ஒரே சைதன்யம்தான், அந்த:கரண அவச்சின்னத்தினால் ஜீவன் என்றும், அந்த:கரண உபஹித சைதன்யம் ஈச்வரன் என்றும் ஸாக்ஷி என்றும் சொல்லப்படுகிறது. அதனால் சைதன்யத்தில் பேதம் சொல்லப்படவில்லை. அவச்சேதகத்தினால் பேதம் அறியப்படுகின்றதே அன்றி ஸ்வரூபத்தில் பேதம் கிடையாது. சைதன்யம் ஏகம் தான், ஒரே சைதன்யம்தான். சைதன்யம் அந்த:கரணத்தில் ப்ரதிபலிக்கின்ற போது, பிம்பஸ்தானீயமான சைதன்யம் ஈச்வரன் என்றும், ப்ரதிபிம்பத்தை ஜீவன் என்றும் சொல்லப்படுகிறது. இதனால் எவ்வித ஹானியும் கிடையாது.

பூர்வ:- ஸ்வத: ஈச்வரன் ஸர்வஞ்ஞன், அஸம்ஸாரி என்றாலும், அந்த:கரண அவச்சின்னமாகிறது என்றோ அல்லது ப்ரதிபிம்பம் என்றோ சொல்லப்படுவதால், ஈச்வரனுக்கு ஜீவபாவமும் கிஞ்சிஞ்ஞத்வமும், ஸம்ஸாரித்வமும் எவ்விதம் அவச்சேதகத்தினாலோ, ப்ரதிபிம்பத்தினாலோ ஏற்படமுடியும்? ஸர்வஞ்ஞ ஈச்வரன் அந்த:கரண ப்ரதிபலனத்தினால் கிஞ்சிஞ்ஞனாக ஆகிறான் என்றால் அதற்கு என்ன காரணம்? அஸம்ஸாரி ஸம்ஸாரியாக எவ்விதம் ஆக முடியும்?

ஸித்தா:- இந்த ஆக்ஷேபம் சரியல்ல. எவை எல்லாம் அனுபபன்னம் என்று (பொருந்தாது என்று) சொல்லப்படுகிறதோ அவை எல்லாம் மாயையினால் உபபன்னமாகிறது. மாயிகம் என்று சொல்லப்படுவதாலேயே அதற்கு காரணம் கேட்பது சரியல்ல. இந்த கேள்வியும் அதற்கு பதிலும் பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'பகவாநேக ஏவைஷ ஸர்வக்ஷேத்ரேஷ்வவஸ்தித: ।
அமுஷ்ய துர்பகத்வம் வா க்லேசோ வா கர்மபி: குத:' ॥

'भगवानेक एवैष सर्वक्षेत्रेष्ववस्थितः ।
अमुष्य दुर्भगत्वं वा क्लेशो वा कर्मभिः कुतः ॥

'ஸேயம் பகவதோ மாயா யந்நயேன விருத்யதே ।
ஈச்வரஸ்ய விமுக்தஸ்ய கார்பண்யமுத பந்தனம்' ॥

सेयं भगवतो माया यन्नयेन विरुध्यते ।
ईश्वरस्य विमुक्तस्य कार्पण्यमुत बन्धनम् ॥'

பகவான் ஒருவரே, அவரே ஸர்வக்ஷேத்ரங்களிலும் (சரீரங்களிலும்) இருக்கின்றார். அவருக்கு கர்மாதீனமாக ஏற்படகூடிய கீழான நிலையும், பலவிதமான கஷ்ட்டங்களும் எவ்விதம் ஏற்படமுடியும் என்று கேட்கின்ற போது, பகவானுடைய மாயையினால்தான் ஏற்படுகிறது. மாயை என்றாலே யுக்திகளுக்கெல்லாம் எது பொருந்தாதோ அதுவே மாயை என்றும், அதனால் ஈச்வரனானாலும் மாயாவசத்தினால் விமுக்தனான ஈச்வரன் பந்தனாகவும், பலவிதக்லேசங்கள் உடையவனாகவும் மாயையினாலேயே ஏற்படுகிறது என்று பாகவதத்தில் சொல்லப்படுகிறது. அதிகம் சொல்ல வேண்டிய அவச்யமில்லை. ஸச்சிதானந்த லக்ஷணமான ப்ரஹ்மம் அஸத்தாகவும் ஜடமாகவும் துக்காத்மகமாகவும் இருக்கின்ற ப்ரபஞ்சமாகவே ஆகிறதே? இவ்விதம் மாயையினால் ப்ரஹ்மத்திற்கு நேர் விருத்தமான தன்மையே ஏற்படுமானால், ஈச்வரன் மாயையினால் ஜீவபாவத்தை அடைகிறார் என்பதில் ஆச்சரியத்திற்கு என்ன இருக்கிறது? ஜீவபாவம் மாயையினால் ஏற்படுகிறது என்று சொல்லப்படுவதால் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை. ஜீவபாவம் உண்மையாக ஏற்படுவதாகச் சொன்னால் தான் ஸித்தாந்த ஹானி ஏற்படும். ஜீவபாவம் அபரமார்த்தம். அதேபோல் ஜகத்பாவமும் அபரமார்த்தம் என்பதால் ஆக்ஷேபத்திற்கு இடமே கிடையாது. இவ்விதம் அவித்யையினால் ஏற்படும் ஜீவபாவத்தினாலோ அல்லது ஜகத்தாக தோன்றுகின்றபோதோ ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு எந்த விதமான ஹானியும் கிடையாது. அதனால் ஈச்வரன் நித்யமுக்தன் என்று சொல்லப்படுகிறது. *'ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம'* என்று சொல்லப்படுவதால் மூன்றுவித பேதங்களும் அற்ற ஸ்வரூபம் என்றும் ச்ருதி தெரிவிக்கின்றது. இந்தக் கருத்தினால்தான் *'நேஹ நானாஸ்தி கிஞ்சன'* என்ற ச்ருதி ப்ரஹ்மத்தை அன்றி வேறாக மாயை என்பதோ ஈச்வரனோ ஜீவன் என்பதோ எதுவுமே கிடையாது என்று நிஷேதம் செய்து தெரிவிக்கின்றது.

பூர்வ:- ஈச்வரன் ஸர்வஞ்ஞன், ஸர்வசக்தன், ஸத்ய ஸங்கல்பனாக இருக்கின்றதால், ஹேயமான இந்த ஜகத் மாயையினால், ஈச்வரனிடம் தோன்றுகிறது என்றால், தன்னிடம் ஏற்படும் ஸம்ஸாரபந்தம் க்லேசங்கள் முதலானவைகளை தன் ஸங்கல்பத்தினாலேயே விலக்கக்கூடிய சக்தி உடையவர் என்பதால் அவைகளை ஈச்வரன் உடனே நீக்கலாமே? அவ்விதமின்றி மாயை, அதன் கார்யமான பந்தம் முதலானவைகளை வேதாந்த ச்ரவணாதிகளால்தான் நிவர்த்திக்க வேண்டும் என்று அவச்யம் என்ன?

ஸித்தா:- இந்த கேள்வி உன்னைத்தான் வஜ்ராயுதம் போல் சிரஸில் தாக்குகின்றது. இதற்கு ஸமாதானம் நீதான் சொல்லவேண்டும். நான் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதாவது ஈச்வரன் ஸதாவிசிஷ்டராகவே இருப்பதாக உன்னால் சொல்லப்படுகிறது (ச்ருஷ்டிக்கு முன் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டம் என்றும் ச்ருஷ்டிக்குப் பிறகு ஸ்தூல சிதசித் விசிஷ்டராகவும் ஆகிறார் என்று சொல்லப்படுகிறது) ஸர்வஞ்ஞராகவும், ஸர்வசக்தராகவும், ஸத்யசங்கல்பராகவும் இருக்கின்ற ஈச்வரன், அசித் விசிஷ்டமான ஜகத் பாவத்தை ஏன் விடவில்லை? அதே போல் துக்க கரமான ஸம்ஸாரத்தையுடைய சித் விசிஷ்டமான ஜீவபாவத்தை ஏன் விடவில்லை? இவ்விதம் ஹேயமான இரண்டையும் ஈச்வரன் ஏன் விடவில்லை? அசித் விசிஷ்டமான ஈச்வரன் துக்கிதனாகத்தான் இருக்க வேண்டும் என்பதால் ஜடமான இந்த துக்கத்தை ஈச்வரன் ஏன் விலக்கவில்லை? துக்கத்தை விலக்கக்கூடிய சக்தியுடைய ஈச்வரன், தன்னிடம் இருக்கின்ற துக்கத்தையே நிர்மூலமாக்க முடியவில்லை என்றால் அந்த ஈச்வரன், பக்தரக்ஷகன், பக்தவத்ஸலன் என்றெல்லாம் ஸ்துதிக்கின்றீர்களே? தன் கஷ்டத்தையே நீக்கமுடியாத பகவான், பரனுடைய கஷ்டங்களை எவ்விதம் நிர்மூலமாக்க முடியும்? அதனால் உன் மதத்தில்தான் இந்த கேள்விக்குப்பதில் சொல்லமுடியாது. ஆனால் எங்கள் ஸித்தாந்தத்தில் எவ்வித தோஷமும் கிடையாது. ப்ரஹ்மம் நிர்குணம். அதனால் ஹேயகுணமோ, உபாதேயகுணமோ கிடையாது. ஹேயம். உபாதேயம் என்ற எல்லாமே ப்ரக்ருதியின் தர்மங்கள். ஈச்வரனிடம் இந்த தன்மைகள் இருப்பதாக சொன்னால்தான் அவர் ஏன் இவைகளை விடவில்லை என்ற கேள்விக்கு இடம் உண்டு. ஈச்வரனிடம் ஹேயமோ, உபாதேயமோ எதுவுமே இல்லாததால் ஈச்வரன் எதையும் விட வேண்டிய அவச்யமே இல்லை.

பூர்வ:- *'ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப்னோதி ய இஹ நாநேவ பஶ்யதி'* 'मृत्योस्स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति' என்ற மந்த்ரம், எவருக்கு நானாத்வதர்சனம் (பேததர்சனம்) இருக்கின்றதோ அவன் ஜனன மரணத்திலேயே உழல்கிறான் என்று தெரிவிக்கின்றது. அதனால் பேதஞானம் ஸம்ஸாரஹேது என்று தெரிவிக்கின்றது மற்றொரு வாக்யம் *'ஜுஷ்டம் யதா பச்யத்யன்யமீஶமஸ்ய மஹிமானமிதி வீதசோக:'* 'जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानमिति वीतशोकः' தேஹாதிகளை காட்டிலும் அன்யம் ஈச்வரன் என்று அறிவானாகில் அந்த ஈச்வரனுடைய மஹிமையை இவன் அடைகிறான். அதனால் அவனுக்கு பந்த நிவர்த்தி ஆகின்றதால் முக்தி அடைகிறான் என்று இந்த வாக்யத்தினால் அறியப்படுகிறது. இவ்விதம், ஒரே பேத ஞானம். பந்த ஹேது என்று ஒரு வாக்யம் தெரிவிக்கின்றது. அதே பேத ஞானம் மோக்ஷ ஹேது என்று மற்றொரு வாக்யம் தெரிவிக்கின்றது. இவ்விதம் ஒரே

பேத ஞானம் பந்த ஹேதுவாகவும் முக்தி ஹேதுவாகவும் இருக்கமுடியாது. அதனால் '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் - அப்ரஹ்மாத்மகமாகவும், ஸ்வதந்த்ரமாகவும் ஒரு வஸ்து இருக்கின்றது என்று சொல்லப்படும் பேதஞானம் ஸம்ஸாரத்திற்கு காரணம். ஸர்வம் ப்ரஹ்மாத்மகம், ப்ரஹ்ம அந்தர்யாமிகம் பரதந்தரம் என்ற பேத ஞானம் எவனுக்கு ஏற்படுகின்றதோ அவனுடைய முக்திக்கு இந்த பேதஞானம் காரணமாகின்றது என்று அர்த்தம் செய்கிறோம். அதாவது ஒரே பேதஞானம் பந்தம், மோக்ஷம் என்ற இரண்டிற்கும் காரணம் என்று சொல்லுவது பொருந்தாது. அதனால் இரண்டு வித பேதஞானம் சொல்லப்பட்டது. இவ்விதம் அர்த்தம் சொல்லப்பட்டால்தான், பேதஞானம் என்பதற்கு முன்னால் சொல்லப்பட்ட ச்ருதி வாக்ய விரோதம் இல்லாமல் அர்த்தம் சொல்லப்பட்டதாக ஆகும்.

ஸித்தா:- இது சரியல்ல. ஏனெனில் அஹமேவ ஈச்வர: என்று சொல்லப்படுகிறது. அதுவே முக்திக்கு ஸாதனம். பேதஞானம் முக்திக்கு ஸாதனமல்ல (காரணமாகாது). அன்யம் ஈச்வரன், என்று தேஹாதிகளுடன் சேர்ந்து ஈச்வரனை அறிவது சரியல்ல, தேஹாதிகளுக்கு அன்யம், பஞ்ச கோசங்களுக்கு அன்யம் ஈச்வரன் என்றும், அந்த ஈச்வரன் நான் என்றும் அறியவேண்டும். அதுவே மோக்ஷ ஹேது என்றே (அபேத ஞானமே மோக்ஷஹேது) முண்டக ச்ருதி வாக்யம் (3.1) தெரிவிக்கின்றது. அதுமட்டுமல்ல '*த்விதீயாத்வை பயம் பவதி*' 'द्वितीयाद्वै भयं भवति' என்ற வாக்யம் (ஈச்வரனை அன்றி வேறாக) இரண்டாவது வஸ்து ஒன்று இருக்கின்றதாக அறியப்படுமானால் அதுவே பயஹேது என்று தெரிவிக்கின்றது. அதனால் ஜீவனைக் காட்டிலும் ஈச்வரன் வேறு என்று சொல்லுவது சரியல்ல, உதாரணமாக ராஜாவினிடம், அவருடைய ப்ரஜைகளுக்கு பயம் இருக்கின்றது. ராஜாவிற்கும் மற்றுமுள்ள ஜீவர்களுக்கும் நியந்தாவாக இருக்கின்ற ஈச்வரன், எல்லோருக்கும் பயஹேது என்றே சாஸ்த்ரம் தெரிவிக்கின்றது. '*பீஷாஸ்மாத் வாத: பவதே*' 'भीषास्माद्वातः पवते' என்ற ச்ருதியும் இந்த கருத்தையே தெரிவிக்கின்றது. இவ்விதம் பயஹேதுவான ஈச்வரனிடம், தான் வேறு என்ற எண்ணம் இருக்கின்ற பர்யந்தம் பயநிவர்த்தியே கிடையாது. ஆனால் ச்ருதியானது '*அபயம் வை ஜனகப்ராப்தோஸி*' 'अभयं वै जनक प्राप्तोसि' என்று முக்தனுக்கு அபய ப்ராப்தி ஏற்படுகிறது என்று தெரிவிக்கின்றதால், ஜீவேச்வர பேதம் இல்லை என்றே சொல்லவேண்டும். ஆகவே, ஜீவேச்வர பேதஞானம் ஒருபோதும் மோக்ஷ ஹேதுவாக ஆகாது.

பூர்வ:- ஈச்வரன் பய ஹேது என்றே சொல்லலாம். ஆனால் ஈச்வரன் என்னிடம் அந்தர்யாமியாக இருக்கிறார் என்ற ஞானம் யாருக்கு இருக்கின்றதோ அவனுக்கு மோக்ஷஹேது என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஈச்வரன் அந்தர்யாமியாக இருந்து ப்ரேரணை செய்வாராகில் ஜீவனை ஸ்வர்க்கத்திலும் கொண்டுவிடலாம், அல்லது நரகத்திலும் கொண்டுவிடலாம் என்று '*ஈச்வரப்ரேரிதோ கச்சேத்ஸ்வர்கம் வா ப்ஶ்வப்ரமேவவா*' 'ईश्वरप्रेरितो गच्छेत्स्वर्गं वा श्वभ्रमेववा' என்ற வாக்யம் தெரிவிக்கின்றது. அதனால் ஈச்வரன் அந்தர்யாமி என்ற ஞானத்தினால் பயநிவர்த்தியாகி மோக்ஷ ஹேதுவாக ஆகிறது என்று சொல்லமுடியாது.

பூர்வ:- அப்படியானால், நான் தாஸன், ஈச்வரன் எஜமானன் என்ற ஞானம் மோக்ஷஹேதுவாக ஆகலாமே? 'தாஸோஹம்' என்ற பேதஞானத்தினால் அபயப்ராப்தி ஏற்படலாமே?

ஸித்தா:- ராஜாவினிடமிருந்து தாஸனுக்கு பயம் கிடையாது என்ற வ்யாப்தி இருக்குமானால், உன்னால் சொல்லப்படுவது சரி என்றாகும். அவ்விதம் ஒரு வ்யவஹாரமும், அறியப்படவில்லையே? ராஜஸேவை என்பது மனுஷ்யர்களுக்கு கூர்மையான கத்தியின் நுனி போன்றது என்றே *'ராஜஸேவா மனுஷ்யாணாம் அஸிதாராவலேஹனம்'* 'राजसेवा मनुष्याणां असिधारावलेहनम्' என்று மிகவும் ஆபத்கரம் என்றே சொல்லப்படுகிறது. அதனால் தாஸோஹம் என்பதனால் பயநிவர்த்தி ஏற்படாது. அது மட்டுமல்ல ராஜ ஸேவை என்பது ஒரு ஸமயம் ஸாமர்த்யமாக பயமின்றி செய்யமுடியும். ஆனால் ஈச்வரன் ஸேவை மிகவும் கஷ்டம். ஏனெனில், ராஜாவானவன் தாஸனை கஷ்டப்படுத்துவானாகில், இவ்விதம் கஷ்டப்படுத்துகின்றானே, இவன் ஒழியமாட்டானா என்று அனர்த்த சிந்தனையாவது மனஸினால் செய்யமுடியும். அல்லது தன்னுடைய நன்மையைப் பற்றியாவது மனதினால் சிந்திக்கமுடியும். இவ்விதம் சிந்திப்பானாகில், அதை அறியக்கூடிய சக்தி ராஜாவிற்கு கிடையாது. ஆனால், ஸர்வஞ்ஞனாகவும் அந்தர்யாமியாகவும் இருக்கின்ற ஈச்வரனுக்கு ஸேவை செய்பவன், ஈச்வரனுக்கு அநிஷ்ட்டத்தை ஸங்கல்பித்தாலும் அல்லது தனது நன்மையை உத்தேசித்து அதற்கு வேண்டியதை ஸங்கல்பித்தாலும் நான் கஷ்ட்டப்படுவது ஈச்வரனுக்கு தெரியவில்லையா? கண்ணில்லையா? என்று நிந்தை செய்வதற்குக்கூட முடியாது. ஏனெனில் எல்லோருடைய மனஸிலும் அந்தர்யாமியாக இருப்பவர் ஈச்வரன் என்பதால் மனதால் கூட நினைக்க முடியாது. இதைவிட வேறு என்ன கஷ்டம் இருக்கமுடியும்?

பூர்வ:- ஈச்வர ப்ரீதி செய்பவர்களுக்கு கஷ்டமே கிடையாது என்று ப்ரஹ்லாதர் தெரிவிக்கின்றாரே? *'நஹ்யச்யுதம் ப்ரீணயதோ பஹ்வாயாஸோऽஸுராத்மஜா:'* 'नह्यच्युतं प्रीणयतो बह्वायासोऽसुरात्मजाः' என்று பகவத்ஸேவை செய்யப் படுமானால் கஷ்டமே வராது என்று தெரிவிகின்றாரே? அதனால் ஈச்வர ஸேவை ஸுலபம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- உன்னால் தெரிவிக்கப்பட்ட ச்லோகத்தில் அடுத்த வரியில் *'ஆத்மத்வாத் ஸர்வபூதானாம் ஸித்தத்வாதிஹ ஸர்வத:'* 'आत्मत्वात् सर्वभूतानां सिद्धत्वादिह सर्वतः' என்று அச்சுதனே ஸர்வசரீரங்களிலும் ஆத்மாவாக இருக்கின்றார். அவரே ஸர்வ வ்யாபகர். அதனால் அந்த அச்சுதனை ஸேவை செய்வதில் கஷ்டமே வராது என்று தெரிவிக்கின்றார். இவ்விதம் ஸர்வ ஜீவர்களிலும் இருப்பவர் அச்சுதனே என்ற அபேத சிந்தனையினால்தான் கஷ்டமில்லை என்றே சொல்லப்படுகிறது. அதைத்தவிர வேறு எந்த சிந்தனையானாலும் கஷ்டம்தான்.

பூர்வ:- பத்ரம், புஷ்பம், பலம், தோயம் என்ற கீதாவசனம், அல்பத்ரவ்யத்தினால் என்னை பூஜித்தாலும் அவனுக்கு ச்ரேயஸ் உண்டு என்று தெரிவிக்கின்றார். அதனால் ஈச்வர் ஸேவை ஸுலபம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஈச்வரன் இந்த்ரியங்களால் க்ரஹிக்ககூடியவர் அல்ல. இந்த்ரியங்களால் க்ரஹிக்கப்படுவராக இருந்தால் தானே பத்ரபுஷ்பங்களை அர்ப்பணம் செய்யமுடியும்.

பூர்வ:- ஈச்வரன் நிர்க்குணன் என்றோ அரூபம் என்றோ நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. கோவில்களில் உள்ள அர்ச்சாமூர்த்தியையே ஈச்வரன் என்று சொல்கிறோம். அதனால் பத்ரபுஷ்பாதிகளால் அர்ச்சித்து பூஜிப்பதில் கஷ்டம் ஏதுமில்லை.

ஸித்தா:- அஞ்ஞானத்தினால் மூடர்கள், உருவங்களில்தான் ஈச்வரன் இருக்கின்றார் என்று நினைத்து பூஜிப்பார்களானால், சாம்பலில் ஹோமம் செய்வது போல் *'அர்சாயாம் பஜதே மௌட்யாத்பஸ்மன்யேவ ஜுஹோதி ஸ:'* ('अर्चायां भजते मौढ्याद्भस्मन्येव जुहोति सः') வ்யர்த்தமாகும் என்று தெரிவிக்கின்றதால் ஈச்வர ஸேவை ஸுலபமல்ல.

பூர்வ:- அப்படியானால் ஈச்வரனிடம் சரணாகதி அடைந்தால் ஈச்வர ஸேவை ஸுலபமாகும். இதையே பகவானும் 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய' என்று தெரிவிக்கின்றார். அதனால் ஸர்வதர்ம பரித்யாகம் செய்து ஈச்வர சரணாகதி அடைவது ஸுலபம் என்பதால், ஈச்வரன் பயஹேது ஆகமாட்டார்.

ஸித்தா:- அஞ்ஞனான ஜீவன் ஸர்வதர்ம பரித்யாகம் செய்வதென்பது முடியாது. ஞானியாக இருந்தால்தான், அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற ஞானத்தினால் ஸர்வ தர்ம பரித்யாகம் செய்வான். அஞ்ஞன் ஏதாவது வேண்டுமென்று விரும்பி கார்யங்களைச் செய்வானே அன்றி எந்த தர்மத்தையும் கர்மாவையும் பரித்யாகம் செய்யமாட்டான். ப்ரஹ்மலோக பர்யந்தமான பலங்களில் வைராக்கியத்தை அடைந்த ஞானியினால் தான் ஸர்வதர்ம (கர்ம) பரித்யாகம் செய்யமுடியும்.

பூர்வ:- அஞ்ஞனுக்கு ஸர்வதர்மபரித்யாகம் ஸித்திக்காவிடில் ப்ராஞ்ஞனுக்கு ஸித்திக்கலாமே?

ஸித்தா:- ப்ராஞ்ஞன் என்று யாரை தெரிவிக்கின்றாய்? ஜீவேச்வரபேதம் உடையவன் ப்ராஞ்ஞனா? அல்லது அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற அபேத ஞானம் உடையவன் ப்ராஞ்ஞனா? ஜீவேச்வர பேதம் உடையவன் ப்ராஞ்ஞன் என்று ச்ருதி ஒத்துக்கொள்ளவில்லை. *'யோऽந்யாம் தேவதாமுபாஸ்தே அன்யோऽஸாவன்யோஹமஸ்மீதி ந ஸ வேத யதா பஶு:'* 'योऽन्यां देवतामुपास्ते अन्योऽसावन्योहमस्मीति न स वेद यथा पशुः' என்று ச்ருதி தெரிவிக்கின்றது. அதனால் ஜீவேச்வர பேதம் உள்ளவன் ப்ராஞ்ஞன் என்று சொல்லமுடியாது. *'ஆத்மா இத்யேவ உபாஸீத'* 'आत्मा इत्येव उपासीत' என்று ஈச்வரனை எவன் ஸ்வாத்மா என்று அறிகிறானோ அவனை ப்ராஞ்ஞன் என்றால் அது இஷ்டம்தான். ஈச்வரஸ்வரூபமே ஆத்மஸ்வரூபம் என்று எவன் அறிகின்றானோ அவனே ப்ராஞ்ஞன். அவனுக்கு ஜீவேச்வர பேதம் கிடையாது. ஜீவன், ஈச்வரன் என்ற இரண்டுமே சைதன்யம் என்பதால் லக்ஷண ஐக்யத்தினால் வஸ்து ஐக்யம் சொல்லப்படுகிறது. அதனால் ஞானியானவன் அஹம் ப்ரஹ்மாஸ்மி என்று அறிந்து ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுகிறான். அவனே ப்ராஞ்ஞன்.

பூர்வ:- எவனொருவன் புருஷோத்தமனான என்னை 'புருஷோத்தமன்' என்று அறிகின்றானோ அவனே அறிவாளி (அறிவிற் சிறந்தவன்) அஸம்மூடன் என்று பகவானே தெரிவிக்கின்றார். *'யோ மாமேவமஸம்மூடோ ஜானாதி புருஷோத்தமம்'* 'यो मामेवमसम्मूढो जानाति पुरुषोत्तमम्' என்று தெரிவிக்கின்றார். அதனால் பேத தர்சனமுள்ளவன் அஸம்மூடன் என்று தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- 'ஏவம்' என்று தெரிவிக்கின்றதால் அபின்னமான ஸ்வரூபபூதனென்று எவன் அறிகின்றானோ என்றே அந்த வாக்யத்தின் அர்த்தம். அதாவது *'புருஷோத்தமம் பரமாத்மானமாத்மாபேதேன யோ ஜானாதி ஸ ஏவாபேததர்ஶீ அஸம்மூட:'* 'पुरुषोत्तमम् परमात्मानमात्माभेदेन यो जानाति स एवाभेददर्शी असम्मूढः' என்று புருஷோத்தமனான என்னை எவன் பரமானந்த ஆத்ம ஸ்வரூபமாக அறிகின்றானோ அவனே அஸம்மூடன் என்று தெரிவிக்கின்றது. அதனால் உன்னால் சொல்லப்படும் அர்த்தம் பொருந்தாது.

பூர்வ:- பேதம் லோகப்ரஸித்தம் என்றும் இதை சாஸ்த்ரம் தெரிவிக்கவேண்டிய அவச்யமில்லை என்று தெரிவிக்கின்ற அத்வைத ஸித்தாந்தம் பொருந்தாது, பேதம் சாஸ்திரத்தினாலும் ஸித்திக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜீவேச்வர பேதம் சாஸ்த்ர ஸித்தம் என்று எவ்விதம் சொல்லப்படுகிறது? சாஸ்த்ரம் அறிந்தவர்கள், ஈச்வரன் வேறு, நான்வேறு (தான் வேறு) என்று தெரிவிக்கின்றார்களா? அல்லது அவ்விதம் ப்ரத்யக்ஷமாக அறியப்படுகிறதா? ப்ரத்யக்ஷமாக பேதம் அறியப் படுகின்றதால் அதை சாஸ்த்ரம் தெரிவிக்க வேண்டிய அவச்யம் என்ன? ஈச்வரனே இல்லையென்று தெரிவிக்கின்ற சார்வாகனோ, அல்லது ஈச்வரன் ஒருவன் இருக்கிறான் என்று தெரிவிக்கின்றவனோ யாராக இருந்தாலும் ஈச்வரோஹம் (நானே ஈச்வரன்) என்று லோகத்தில் யாராவது நினைக்கின்றார்களா? அல்லது தெரிவிக்கின்றார்களா? அவ்விதம் நானே ஈச்வரன் என்று சொல்வானாகில், (அபேதம் லோகப்ரஸித்தம் என்றும் சொல்லப்படுமானால்) அது சரியல்ல, பேதம் தான் உண்மை நிலை என்று அல்லவா சாஸ்திரம் தெரிவிக்க வேண்டும்.

பூர்வ:- பேதம் லோகப்ரஸித்தம் என்றே சொல்லவேண்டும் ப்ரத்யக்ஷமாக அறியப்படும் பேதம் இல்லையென்று சொல்லமுடியுமா? சாஸ்த்ர ஸித்தமாக இருந்தால் தான் ஒப்புக்கொள்வீர்களா?

ஸித்தா:- ப்ரத்யக்ஷஸித்தமாக இருந்தாலும், ப்ரமாணப்ரத்யக்ஷமாக இருந்தால்தான் ஒத்துக் கொள்ளமுடியும். ப்ராந்திப்ரத்யக்ஷமாக இருந்தால் எவ்விதம் உண்மையாக இருக்க முடியும்? அவ்விதம் ப்ராந்தியானாலும் உண்மை என்று ஒத்துக்கொள்ளப்படுமானால் ரஜ்ஜுவே ஸர்ப்பம் என்று ஏற்படும் ஞானமும் உண்மை என்றே சொல்ல நேரிடும்.

பூர்வ:- *'த்வாவிமௌ புருஷௌ லோகே'* 'द्वाविमौ पुरुषौ लोके' என்றும் *'ஞ்ஞாஞ்ஞௌ த்வாவஜாவீஶாநீஶௌ'* 'ज्ञाज्ञौ द्वावजावीशानीशौ' என்றும் *'குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே'* 'गुहां प्रविष्टौ परमे என்றும் *'த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா'* 'द्वा सुपर्णा सयुजा सखाया' என்றும் தெரிவிக்கின்ற ச்ருதி வாக்யத்தின் மந்த்ரங்கள் பேதத்தை தெரிவிக்கின்றதால் பேதம் சாஸ்த்ர ஸித்தம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ப்ரத்யக்ஷத்தினாலேயே பேதம் ஸித்திக்கின்றது என்றால் அதை மறுபடியும் சாஸ்த்ரம் ஸித்தம் செய்யவேண்டிய அவச்யம் என்ன? அவ்விதம் சாஸ்த்ரம் தெரிவிக்கின்றது என்றால் சாஸ்த்ரம் வ்யர்த்தம் என்றும், அப்ரமாணம் என்றும் சொல்ல நேரிடும். ஏனெனில் அனதிகதார்த்தத்தை தெரிவிப்பது எதுவோ அதுவே ப்ரமாணம் என்று சொல்லவேண்டும் என்பதால் லோகத்தில் அறியப்படுகின்ற விஷயத்தையே சாஸ்த்ரம் தெரிவிக்குமானால்

அது அப்ரமாணம் என்றே சொல்லவேண்டும். அதை ப்ரமாணம் என்று சொல்லமுடியாது. தெரிந்ததையே தெரிவிக்கின்றதால் அது ப்ரமாணமாக ஆகாது. இதுவரை அறியப்படாத விஷயத்தை எது தெரிவிக்கின்றதோ அதுவே ப்ரமாணம். அஞ்ஞாத ஞாபகம் ப்ரமாணம். அனதிகதமாகவும், அபாதிதமாகவும் ப்ரயோஜனமுடையதாகவும் உள்ள வஸ்துவை (விஷயத்தை) தெரிவிக்கின்றது (போதிக்கின்றது) எதுவோ அதுவே ப்ரமாணம் என்று ப்ரமாணத்திற்கு லக்ஷணம் சொல்லப்படுகிறது.

பூர்வ:- ஈச்வரன் வேறு, நான் வேறு என்றுதான், ஜீவன் அறிகின்றானே அன்றி, ஈச்வரனுடைய உண்மையான ஸ்வரூபம் அறிந்தவனல்ல. ஸர்வஞ்ஞன், ஸர்வசக்தன் என்பது போன்ற விசேஷணங்கள் உள்ளவர் ஈச்வரன் என்று ப்ரத்யக்ஷத்தினால் அறியப்படவில்லை. அதனால் சாஸ்த்ரம், ஈச்வரனுடைய ஸ்வரூப விசேஷங்களைப் பற்றி தெரிவித்து ஜீவ ஈச்வர பேதத்தை இந்த விதத்தில் போதிக்கிறது.

ஸித்தா:-ஸர்வஞ்ஞத்வம் முதலானவை ஈச்வரஸ்வரூபம் என்று போதிக்கின்ற விஷயத்தில் சாஸ்த்ரம் ப்ரமாணம் என்று சொல்லப்பட்டாலும் ஜீவேச்வர பேதத்திற்கு சாஸ்த்ரம் எவ்விதம் ப்ரமாணமாக ஆகமுடியும்? அதனால் லோகத்தில் அறியப்படும் பேதத்தை அனுவாதம் செய்து, பேதத்தை சாஸ்த்ரம் நிஷேதம் செய்கிறது என்று சொன்னால்தான் சாஸ்த்ரம் ப்ரமாணமாக ஆகும். அவ்விதமின்றி ஜீவேச்வர பேதத்தை தெரிவிப்பதற்காக, ஈச்வரனுடைய விசேஷதன்மைகளை மட்டும் சாஸ்த்ரம் போதிக்கின்றது என்றால் அது ப்ரமாணம் என்றே சொல்லமுடியாது. சாஸ்த்ரம் நேரிடையாகவே, '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்று பேதத்தை நிஷேதம் செய்கின்றதால், பேதநிஷேதம் செய்யவில்லை என்றும் விசேஷதன்மைகளை தெரிவிக்கின்றதென்றும் சொல்வது சரியல்ல. '*அதாத ஆதேசோ நேதி நேதி*' என்ற வாக்யம் நேரிடையாகவே நிஷேதம் செய்திருக்கின்றது.

பூர்வ:- லோகத்தில் '*ஸோயம் தேவதத்த:*' என்ற வாக்ய ப்ரயோகம் செய்கின்ற போது, 'அவனே இவன்' என்று ப்ரத்யபிஞ்ஞையினால் ஏற்படும் அபேத ஞானமும் ப்ரத்யக்ஷமாகவே ஏற்படுகிறது. அதனால் அபேத ஞானமும் லோக ஸித்தம் என்றே சொல்லவேண்டும். அதற்காக, லோகஸித்தமான அபேதத்தையே சாஸ்த்ரம் போதிக்கின்றதால் சாஸ்த்ரம் ப்ரமாணமில்லை என்று சொல்லமுடியுமா? அவ்விதம் சொல்லப்படுமானால் ஜீவ பரமாத்ம அபேதத்தை போதிக்கின்ற விஷயத்தில் சாஸ்த்ரம் ப்ரமாணமில்லை என்று சொல்ல நேரிடும். ஏனெனில் லோகஸித்தமான பேதத்தையே சாஸ்த்ரம் போதிக்குமானால் சாஸ்த்ரம் அப்ரமாணமாகும் என்று உங்களால் சொல்லப்படுவதால், அதேபோல் லோகஸித்தமான அபேதத்தை போதிக்குமானால் சாஸ்த்ரம் அப்ரமாணமென்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- இந்த ஆக்ஷேபம் சரியல்ல. லோகத்தில் எந்த வ்யவஹாரமாக இருந்தபோதிலும், அவையெல்லாமே பேதத்தையே அடிப்படையாகக் கொண்டே செய்யப்படுகிறது. அதுபோல் அபேதம் லோக ஸித்தம் என்று சொல்லமுடியாது. '*ஸோயம் தேவதத்த:*' என்ற இடத்தில், ஏற்கனவே (முன்பே) ஏதோ ஓரிடத்தில் பார்த்த தேவதத்தனே, இப்போது இங்கு எதிரில் இருப்பவன் என்று தெரிவிக்கின்ற போது ப்ரத்யபிஞ்ஞையினால் அவனே இவன் என்ற அபேத ஞானம் அறியப்பட்டாலும் கூட, எல்லா இடத்திலும் அவ்வித அபேத ஞானம் தான்

ஏற்படுகிறது என்று சொல்லமுடியாது. லோகத்தில் தேவதத்தனுக்கும், யஞ்ஞதத்தனுக்கும் பேதம் அறியப்படுகிறதே? தேவதத்த வ்யக்தியும், யஞ்ஞதத்த வ்யக்தியும் ஒன்று என்று அபேதம் அறியப்படவில்லை. அதனால் பேதம் அபேதம் இரண்டும் லோகத்தில் அறியப்பட்டாலும் கூட ச்ருதியினால் தெரிவிக்கப்படும் பேதமே இல்லாத அபேதம் லோக ஸித்தமல்ல.

'தத் த்வமஸி' என்ற வாக்யம் ஸர்வபேதங்களையும் இல்லை என்று நிஷேதம் செய்து (விலக்கி) அபேதத்தை போதிக்கின்றது. அதுபோல் தேவதத்தன், யஞ்ஞதத்தன் என்ற இரண்டு பேரும் ஒன்று என்பது லோகப்ரஸித்தமல்ல. நானும் ஈச்வரனும் ஒன்று என்று லோகத்தில் அறியப்படவில்லை. ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகதபேத அபாவரூபமான அபேதமே சாஸ்த்ரத்தினால் போதிக்கப்படுகின்றது. அதனால் அபேதம் லோகத்தினால் ஸித்திக்கின்றது என்று யாராலும் சொல்ல முடியாது.

பூர்வ:- ஜடமான கடம், படம், முதலியானவைகளின் பேதமே லோகஸித்தம். ஜீவேச்வர பேதம் லோக ஸித்தமல்ல. அது சாஸ்த்ரத்தினால்தான் அறியப்படுகிறது.

ஸித்தா:- நான் ஈச்வரன் இல்லை என்றே லோகத்தில் தெரிவிக்கின்றார்கள். எவ்விதம் கடம் படமில்லை. படம் கடமல்ல என்றும் நான் கட படமில்லை என்று சொல்லுவது போல் நான் ஈச்வரன் இல்லையென்று தானே எல்லாரும் சொல்கிறார்கள்?

பூர்வ:-அவ்விதமே நானும், ஈச்வரனும் வேறு என்பது லோகப்ரஸித்தமாக இருந்தபோதிலும், ஈச்வரன் நியாமகன், நான் நியம்யன் என்றும் ஈச்வரன் வ்யாபகர், நான் வ்யாப்யன் என்றும், அவர் ஸேஷி, நான் ஸேஷன் என்பது போன்ற விசேஷணங்கள் எல்லாம் லோகப்ரஸித்தம் என்று சொல்லமுடியாது. அதனால் இந்த தன்மைகளை சாஸ்த்ரத்தினால் தானே அறிய வேண்டும்?

ஸித்தா:- ஈச்வரனிடமுள்ள விசேஷத்தன்மைகள் அறியப்படவில்லை என்றால் நான் வேறு, ஈச்வரன் வேறு என்றே அறியமாட்டான். தன்னைக்காட்டிலும் வேறுபட்ட விசேஷத் தன்மைகளை உடையவன் ஈச்வரன் என்று அறிவதால் தான், ஈச்வரன் வேறு, நான் வேறு என்று நினைக்கின்றான். அஞ்ஞனாக இருக்கின்றவனும் ஆஸ்திகனாக இருப்பானாகில், தன்னைக்காட்டிலும் உத்க்ருஷ்ட்டன் (உயர்ந்தவன்) ஈச்வரன் என்று அவச்யம் அறிந்திருப்பான். ஏனெனில் தன்னுடைய நண்பனை ஈச்வரன் என்று நினைப்பதில்லை. ஈச்வரன் ஸ்வதந்த்ரன், நான் பரதந்த்ரன் என்று அறிந்திருப்பதனாலேயே, அவன் (ஈச்வரன்) ஆட்டி வைக்கின்றபடியே நாம் ஆடுகின்றோம் என்றே தெரிவிக்கின்றான். இதனால் ஈச்வரன் நியாமகன், நான் நியம்யன் என்றும் அவன் ஸர்வஞ்ஞன், ஸர்வ வ்யாபி என்றும் நான் கிஞ்சிஞ்ஞன், பரிச்சின்னன், என்றும் ஈச்வரனுக்கும் தனக்கும் இருக்கின்ற வித்யாஸத்தை சாஸ்த்ரம் தெரிவிக்காமலேயே அறிந்திருக்கிறான் என்றே சொல்லவேண்டும். அதனால்தான் சாஸ்த்ரம் லோக ப்ரஸித்தமான பேதத்தை அனுவாதம் செய்து நிஷேதம் செய்கின்றது என்று சொல்லப்படுகிறது. அனுவாத வாக்யம் என்னவென்றால், சாஸ்த்ரம் விதிக்கின்ற கார்யங்களில் ப்ரவ்ருத்தி ஏற்படுவதற்காக அந்த கார்யத்தை ஸ்தோத்ரம் செய்வதற்காக தெரிவிக்கப்படும் வாக்யமாக இருக்கலாம். அல்லது வேதத்தினால்

நிஷேதம் செய்யப்படும் விஷயத்தை நிந்தை செய்து தெரிவிக்கின்ற வாக்யமாகவும் இருக்கலாம். இப்பேர்ப்பட்ட விஷயங்களை தெரிவிக்கின்ற வாக்யங்களையே அனுவாத வாக்யம் என்று சொல்லப்படுகிறது. இதுவே அனுவாதவாக்யங்களின் தாத்பரியம் என்றும் வேறுதாத்பர்யம் எதுவும் கிடையாது என்று பூர்வமீமாம்ஸையில், அர்த்தவாத அதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பூர்வ:- அர்த்தவாத வாக்யத்திற்கும் அனுவாத வாக்யத்திற்கும் என்ன ஸம்பந்தம்?

ஸித்தா:- அனுவாத வாக்யமும் அர்த்தவாத வாக்யம் தான். லோக ப்ரஸித்தமான ஜீவேச்வர பேதத்தை சாஸ்த்ரம் ஸ்துதி செய்வதற்காகவே தெரிவிக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அதனால் பேதத்தை நிர்ணயம் செய்வதற்காக தெரிவிக்கவில்லை. எந்த விஷயம் (வஸ்து) ஸ்தோத்ரம் செய்யவேண்டுமோ, அந்த வஸ்துவின் விசேஷத்தை தெரிவிப்பதால் ஸ்துதியானது இருக்கின்ற விசேஷத்தையும் தெரிவிக்கலாம். இல்லாத விசேஷத்தையும் தெரிவிக்கலாம். அதனால் ஜீவேச்வர பேதம் ஸ்துதி செய்யபடுகின்றதே அன்றி, புதிதாக தெரியாத விஷயத்தை தெரிவிக்கவில்லை. அவ்வளவு விசேஷங்களையும் தெரிவிப்பதற்கு என்ன தாத்பர்யம் என்றால் அனுவாதம் செய்து தெரிவிப்பதனால் பேதம் லோக ப்ரஸித்தம் என்றே தெரிவிப்பது தாத்பர்யம். அதனால் லோகப்ரஸித்தமான ஜீவேச்வர பேதம் வேறு, சாஸ்த்ரத்தில் தெரிவிக்கின்ற ஜீவேச்வர பேதம் வேறு என்று சொல்லமுடியாது. பூர்வபக்ஷத்தை நிராகரணம் செய்வதற்காக ஸித்தாந்தி பூர்வபக்ஷத்தை, யுக்தியுடன் மிக அழகாகவும், தெளிவாகவும் எடுத்து சொல்லப்பட்ட பிறகு, அதில் உள்ள தோஷத்தை எடுத்து விளக்கமாக தெரிவித்து, பூர்வ பக்ஷத்தை நிராகரணம் செய்கின்றார். ஸித்தாந்தியே பூர்வபக்ஷத்தை விளக்கமாக தெரிவிக்கின்றார் என்பதற்காக அதுவே ஸித்தாந்தம் என்று சொல்லமுடியுமா? அதேபோல் அனுவாத ச்ருதிகளைக் கொண்டு அதுவே ஸித்தாந்தம் என்று சொல்லுவது சரியல்ல.

பூர்வ:- ஜீவேச்வர பேத ஞானத்திற்கு மோக்ஷம் பலன். அதை ப்ரதிபாதனம் செய்கின்ற மோக்ஷ சாஸ்த்ரமே ப்ரமாணம் என்று சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜீவேச்வர பேதஞானம் ப்ரத்யக்ஷமான லோகஸித்தம். சாஸ்த்ரம் பேதத்தை போதிக்கவில்லை. அதனால் சாஸ்த்ரம் ப்ரமாணமா இல்லையா என்ற சர்ச்சைக்கே இடமில்லை. அதனால் சாஸ்த்ரம் பேதத்தை தெரிவிப்பதாகச் சொல்வது சரியல்ல.

பூர்வ:- ஜீவன் வேறு, ஈச்வரன் வேறு என்று பேதத்தை அறிந்தால் மட்டும் போதாது, ஈச்வர உபாஸனை செய்ய வேண்டும். நான் உபாஸகன், ஈச்வரன் உபாஸ்யம். இவ்வித உபாஸனையினால் என்னுடைய அபீஷ்ட்டங்களை ஈச்வரன் நிறைவேற்ற வேண்டும் என்று ப்ரார்த்தித்து உபாஸனை செய்வானாகில் மோக்ஷபலம் ஸித்திக்கும். இவ்விதம் செய்யப்படவேண்டிய உபாஸனம் லோகப்ரஸித்தமல்ல என்பதால் சாஸ்த்ரம் உபாஸனையை விதிப்பதற்காக ஏற்பட்டது என்றே சொல்லலாம்.

ஸித்தா:- தன்னை அன்றி ஈச்வரன் வேறானவன் என்று ஈச்வர உபாஸனம் செய்வானாகில் அவன் பசுவிற்கு ஸமானம் என்று சாஸ்த்ரம் நிந்தை செய்கின்றது. அதனால் உபாஸ்ய

உபாஸக பாவத்தை தெரிவிக்கின்ற சாஸ்த்ரம் மோக்ஷசாஸ்த்ரம் என்றே சொல்லமுடியாது. பேதஞானம் பயஹேது என்று '*உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' "उदरमन्तरं कुरुते अथ तस्य भयं भवति" என்று சாஸ்த்ரமே தெரிவிக்கின்றது. தன்னைக்காட்டிலும் வேறானவர் ஈச்வரன் என்று அறிவானாகில், தனக்கு என்ன நேரிடுமோ என்ற பயம் ஏற்படாமல் இருக்க முடியாது. '*பீஷாஸ்மாத் வாத: பவதே*' "भीषास्माद्वातः पवते" என்ற ச்ருதியும், '*த்விதீயாத்வை பயம் பவதி*' "द्वितीयाद्वै भयं भवति" என்ற வாக்யமும் இந்த கருத்தையே தெரிவிக்கின்றது.

பூர்வ:- தன்னால் உபாஸிக்கப்படாத ஈச்வரனே பயஹேது என்பதால் உபாஸிக்கின்ற ஈச்வரன் பயஹேதுவாக ஆகமாட்டார் என்று சொல்லலாமே.

ஸித்தா:- ஸுர்யன், வாயு, முதலான தேவதைகள், மனுஷ்யர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுப்பதற்காக ஈச்வரனை உபாஸித்து ஆதிகாரிகர்கள் ஸ்தானத்தை அடைந்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மேலான ஸ்தானத்தை உபாஸனையினால் பெற்றிருந்தும் கூட அவர்களுக்கும் ஈச்வரனிடம் பயம் இருக்கின்றதாலேயே காலம் தவறாமல் அவரவர்க்கு உரிய கார்யங்களை நியமமாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சாஸ்த்ரம் தெரிவிக்கின்றது. இவ்விதம் தன்னை உபாஸித்தவர்களுக்கும் பய ஹேதுவாக இருக்கின்றார் என்றே அறியப்படுகிறது. முன் ஜன்மாவில் செய்த ஈச்வர உபாஸனையினால் ஆதிகாரிகள் ஸ்தானமே கிடைத்திருக்கின்றது. அதனால் ஜீவேச்வர பேத ஞானம் பயஹேது என்பதில் ஆக்ஷேபணைக்கே இடமில்லை.

பூர்வ:- ஈச்வர உபாஸனைக்குப் பிறகு அவருக்கு ஸேவை செய்தால் தான் பயஹேது. ஆதிகாரிகஸ்தானம் அடைந்தவர்களுக்கே ஈச்வரன் பயஹேது. உபாஸகர்களுக்கு பயஹேது என்று சொல்லமுடியாது. ஏனெனில் ஆதிகாரிக ஸ்தானம் என்றாலும் ஈச்வரன் நியதிக்கு உட்பட்டே ஆக வேண்டும். அதனால் ஈச்வர ஸேவை செய்பவனுக்கு ஈச்வரன் பயஹேதுவாக இருந்தாலும், உபாஸகனுக்கு பயஹேது என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ஈச்வர உபாஸனத்தினால் ஆதிகாரிக ஸ்தானத்தை அடைந்திருக்கின்ற யமதர்மராஜன் முதலானவர்களை காண்கின்ற போதே நமக்கு பயம் ஏற்படுகிறது. இவர்களே பயஹேதுவாக இருப்பார்களானால் இவர்களுக்கெல்லாம் ஈச்வரனாக இருப்பவர் பயஹேது அல்ல என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் ஈச்வர ஸேவை செய்யாவிட்டாலும் பயமில்லாமல் இருக்காது. ஈச்வரன் நியாமகன், ஜீவன் நியம்யன் என்பதால் ஒருபோதும் பயமில்லாமல் இருக்க முடியாது.

பூர்வ:- ஒரு தரம் பகவானிடம் சரணடைந்து, நான் உன்னைச் சேர்ந்தவன் என்று பகவானிடம் தெரிவிப்பவனுக்கு யாதொரு ஆபத்தும் வராமல் நான் காப்பாற்றுகிறேன். இதுவே என் வ்ரதம் என்று பகவான், '*ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதி ச யாசதே, அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம*' ('सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते। अभयं सर्वभूतेभ्यो ददाम्येतत् व्रतम् मम ॥') என்று தெரிவிப்பதாக ராமாயணத்தில் சொல்லப்படுகிறதே? அதனால் அபயப்ரதானம் கொடுக்கின்ற ஈச்வரன் எவ்விதம் பயஹேதுவாக ஆகமுடியும்? அதனால் சரணாகதி செய்யாதவனுக்கே பய ஹேதுவாகிறார் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஆதிகாரிஸ்தானத்தை அடைந்த ஸூரியன் முதலானவர்கள் சரணாகதி செய்தவர்கள் தானே?

பூர்வ:- ஈச்வர உபாஸனை செய்தார்களே அன்றி பகவானிடம் சரணாகதி அடையவில்லை அதனால் அவர்களுக்கு பயஹேதுவாகிறார் என்று சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் உபாஸனை செய்பவர்கள் சரணாகதி அடையவில்லை என்பது பொருந்தவில்லை. ராமாயண ச்லோகத்தில் '*அபயம் ஸர்வபூதேப்ய:*' என்று தன்னை சரண் அடைந்தவர்களை ஆபத்தின்றி மற்றவர்களிடமிருந்து காப்பாற்றுகிறேன் என்று தெரிவிக்கின்றாரே அன்றி என்னிடத்திலிருந்தும் பயம் கிடையாது என்று சொல்லவில்லை. அவச்யம் நேர்ந்தால் சிக்ஷையும் செய்வார். அதனால் மற்ற ஜீவர்களிடமிருந்து பயம் கிடையாது என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. சரணாகதி செய்யப்படுமானால் ஈச்வரனிடம் மட்டுமே பயம் என்றும், சரணாகதி செய்யாவிடில் ஈச்வரன், இன்னும் மற்றுமுள்ளவர்களிடமிருந்தும் பயம் என்பதே இந்த ச்லோகத்தின் தாத்பர்யம்.

பூர்வ:- பதிவ்ரதையான ஸ்தீரீயானவள் தன் புருஷனையே சரணாகதி அடைவாளாகில், அவளை, புருஷனானவன் எல்லாவற்றிலிருந்தும் காப்பாற்றுகிறான், தன்னிடமிருந்தும் ஆபத்திலாமல் காப்பாற்றுவது போல் ஈச்வரனிடம் சரணாகதி அடைந்தால் எல்லாவற்றிலிருந்தும் ஈச்வரன் காப்பாற்றுகிறார் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஸ்ரீசீதை மஹா பதிவ்ரதைதான். ஸ்ரீராமரையே சரணாகதி அடைந்திருந்தும், தன் பர்த்தாவான ஸ்ரீராமரிடம் பயமில்லாமல் இருக்கவில்லை. பர்த்தாவான ஸ்ரீராமரால் எவ்வளவோ கஷ்ட்டங்களை அனுபவித்தாள். அதனால் தனக்கு நியாமகனாக இருப்பாரேயானால் அவரிடம் பயத்துடந்தான் இருக்க வேண்டும். மேலும், ஜீவேச்வர பேதத்தை நிஷேதம் செய்கின்ற வாத, ப்ரதிவாதத்தில் பர்த்தா, பார்யை என்ற உதாரணங்களை தெரிவிப்பதற்கு என்ன அவச்யம்? அவச்யம் இருந்தாலும் கூட உதாரணம் பொருந்தவில்லை. பார்யைக்கு பர்த்தா எவ்விதம் பயஹேதுவோ அதேபோல் பார்யையும் பர்த்தாவிற்கு பயஹேது என்பது லோகத்தில் அறியப்படுகிறது. இதுபோல் தார்ஷ்ட்டாந்தத்தில் ஈச்வரன் தான் ஜீவனுக்கு பயஹேதுவாக இருக்கின்றானே அன்றி ஈச்வரனுக்கு ஜீவன் பயஹேது இல்லை. அதனால் உன்னால் சொல்லப்படும் நியாயம் பொருந்தாது.

பூர்வ:- ஈச்வரன் ஆனந்தத்தைக் கொடுப்பவராக இருக்கின்றதால், ஸர்வ ஜீவர்களுக்கும் ஆனந்தத்தை கொடுப்பாரே அன்றி, பயஹேதுவாக ஆகமாட்டார்.

ஸித்தா:- ஈச்வரன் ஸர்வ ஜீவர்களுக்கும் ஆனந்தத்தையே கொடுப்பார் என்று சொல்ல முடியாது. அவரவர் கர்மாவிற்கு தக்க பலனைத்தான் கொடுக்க முடியும். அதனால் ஆனந்தத்தையோ, துக்கத்தையோ கொடுப்பதற்கு ஈச்வ்ரனுக்கு ஸ்வதந்த்ரம் கிடையாது. அதனால் ஆனந்தஹேதுத்வம், துக்கஹேதுத்வம் இரண்டும் ஈச்வரனிடம் இருப்பதாக சொல்லலாம். கர்மபலத்தை கொடுப்பவர் ஈச்வரன். ஈச்வரன் ஒருவர் இருக்கின்றார் என்ற பயத்தில் தான், ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்கு தக்கவாறு நல்ல கார்யங்களை செய்வதும்,

கெட்ட கார்யங்களில் ஈடுபடாமலும் இருக்கின்றார்கள் என்றே அறிகிறோம். கொடுங்கோல் அரசனாக இருந்தாலும்கூட மற்றவர்களை ஹிம்ஸித்தாலும் தன் பெற்றோர்களை ஹிம்ஸிக்க மாட்டான். அதனால் ஸர்வ ஜீவர்களுக்கும் ஈச்வரன் பயஹேது என்றே சொல்லவேண்டும். ஈச்வரனை ப்ரபத்தி செய்பவனாக இருந்தாலும், என்றைக்காவது ஒருநாள் ஈச்வர கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ என்ற பயம் எல்லோருக்கும் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். எவ்விதம் சொல்லப்பட்ட போதிலும், தன்னை அன்றி வேறானவன் ஈச்வரன் என்ற பேதஞானம் இருக்குமானால் அவனுக்கு அபயப்ராப்தி என்பதே கிடையாது.

பூர்வ:- எவன் பயபக்தியுடன் ஈச்வரனை ஸேவிக்கின்றானோ, அவன் மரணமடைந்த பிறகு வைகுண்டம் போய் சேர்கின்றதால் அபயப்ராப்தி ஏற்படுகிறது என்றே சொல்லவேண்டும். ஜீவபாவேன இருக்கின்றவரையில் சிறிது பயம் இருந்தாலும் மரணத்திற்குப்பின் உபாஸகனுக்கு பயம் கிடையாது என்று சொல்லலாமே?

ஸித்தா:- வைகுண்ட ப்ராப்தி ஏற்பட்டாலும், ஜீவன் ஈச்வர பாவத்தை அடைய முடியாது. வைகுண்ட ப்ராப்தி, அத்வைத மோக்ஷஸித்தி அல்ல. அதனால் வைகுண்டத்திலும் ஈச்வர ஸேவை செய்யவேண்டும். அதனால் பயஹேது இல்லை என்று சொல்ல முடியாது.

பூர்வ:- வைகுண்ட ப்ராப்தி ஏற்பட்டாலும், ஸேவை செய்யவேண்டியதாக இருக்கின்றதால் பயஹேதுவாக இருந்தாலும், மறுபடி ஜீவனாக பிறக்க நேரிடுமோ என்ற பயத்திற்கு இடமில்லை. இவ்விதம் புனராவ்ருத்தி என்ற பயம் இல்லாததால், அதுவே அபயம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஸனகர் முதலான முனிவர்களை தடுத்து நிறுத்தியதன் காரணமாக ஜயன், விஜயன் என்ற இருவரும் சாபத்தின் பலனாக, மூன்று ஜன்மாக்களை அடைந்தார்கள் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. அதனால் புனராவ்ருத்தி இல்லை என்று எவ்விதம் சொல்ல முடியும்? கதி இருக்குமானால் ஆகதி உண்டு என்று வ்யாஸ ஆசாரியரே தெரிவிக்கின்றார். அதனால் சென்றவன், திரும்ப வந்தே ஆகவேண்டும். அது மட்டுமல்ல. ஸனகர் முதலான முனிவர்கள் ஜீவர்கள். ஈச்வரனல்ல. அவ்விதம் இருந்தும், உங்களால் முக்தி க்ஷேத்ரம் என்று தெரிவிக்கின்ற வைகுண்டத்தில் இருந்த ஜயன், விஜயன் இவர்களை பூலோகத்தில் பிறக்கச் செய்வார்களானால் ஈச்வரனிடமிருந்து பயம் ஏற்படாது என்பதற்கு என்ன காரணம், என்ன ப்ரமாணம் இருக்கின்றது. மேலும் ஸனகர் முதலானவர்கள் ஈச்வரன் அல்ல. அவர்களிடமிருந்து தன்னை சரணடைந்த ஜயவிஜயர்களை ஈச்வரனாலேயே காப்பாற்ற முடியவில்லை என்று அறியப்படுகிறது. இதனால் அறியப்படுவது என்னவென்றால், ஜீவனும் ஈச்வரனும் வேறு என்ற பேத ஞானம் இருந்தாலும், அல்லது ஜீவர்கள் ஒருவருக்கொருவர் வேறு என்ற பேத ஞானம் இருந்தாலும், எல்லாமே பயஹேது என்றே அறியப்படுகிறது. அத்வைத ஞானம் ஒன்றே அபயப்ரதம் என்றே அறியப்படுகிறது. அதனால் அத்வைத ஆத்ம போதம் அவச்யம் அடைய வேண்டும் என்றே ஸித்திக்கின்றது.

76

द्वैतज्ञानस्य मोक्षफलकत्वाभावेन तच्छास्त्रस्य अप्रमाणत्वोपपत्तिः।

சாஸ்திரம் த்வைத போதகமா, அத்வைத போதகமா என்று விஜாரித்து த்வைத போதகம் என்று சொல்வது சரியல்ல என்று கண்டிக்கப்படுகிறது

பூர்வ:- அத்வைதம் என்று ஒரு தத்வம் இருக்குமானால், அத்வைத ஞானத்தினால் மோக்ஷம் ஸித்திக்கின்றது என்று சொல்லலாம். அத்வைதம் தத்வம் என்று சொல்வதே ஸித்திக்காது. ஏனெனில், ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் என்ற ப்ரமாணங்களினாலும் த்வைதம் தான் ஸித்திக்கின்றது. லோகத்தில் எல்லோருக்கும் நான் வேறு, ஈச்வரன் வேறு என்றுதான் ஞானம் ஏற்படுகிறதேயன்றி நான் ஈச்வரன் என்று ஞானம் ஏற்படுவதில்லை. இதனால் ஜீவேச்வர பேதமே ஸித்திக்கிறது. அதேபோல், சைத்ரன் தன்னை மைத்ரனென்றோ, மைத்ரன் தன்னை சைத்ரன் என்றோ அறிவதில்லை. அவனவன் தன்னை மற்றவனிடமிருந்து வேறு படுத்தியே அறிகிறான். அதனால் ஜீவர்களுக்குள் பரஸ்பரபேதம் ஸித்திக்கின்றது. சிலபேர் தன்னை சிவோஹம் என்று சொல்கிறார்களேயென்றால், அது ப்ராந்தி ஞானம். அதேபோல் நண்பர்களாக இருந்தால் நானே நீ, நீயே நான் என்று தெரிவித்தாலும் அதுவும் ப்ராந்தி ஞானமேயன்றி, ப்ரமை அல்ல. (யதார்த்த ஞானமல்ல). ஈச்வரனாக இல்லாதவன் தன்னை ஈச்வரனாக நினைப்பதும், மைத்ரனாக இல்லாதவன் தன்னை மைத்ரன் என்று நினைப்பதும் அதஸ்மின் தத்புத்தியேயாகும். அதஸ்மின் தத்புத்தியென்பது மித்யாஞானமானதால், தத்வ ஞானத்தினால் தான் மோக்ஷஸித்தி ஏற்படும் என்பதால், த்வைத ஞானம்தான் ப்ரமாண ஞானமாகும். அதுவே தத்வ ஞானம். அதனால் த்வைத ஞானமே மோக்ஷஹேது என்று சொல்லவேண்டும். இதைத்தான் சாஸ்திரம் தெரிவிக்கவேண்டும். அத்வைத ஞானம் ப்ராந்தி ஞானமானதால் மோக்ஷபலகமென்று சொல்லமுடியாது. ஆகையால் அத்வைதம்தான் சாஸ்திரம் ப்ரதிபாதகம் என்று சொல்லப்படுமானால் வேதமே அப்ரமாணமென்றாகும்.

ஸித்தா:- இந்த ஆக்ஷேபம் சரியல்ல. அனாத்மாக்களில் அனேகம் இருக்கலாமே தவிர, ஆத்மாவில் அனேகம் இருக்க முடியாது. ஆத்மா அனேகம் என்று சொல்வதற்கு ப்ரமாணமே கிடையாது. 'ஸ ஆத்மா' என்று ஏகவசனத்தில் சொல்லப்படுவதால் ஆத்மா அனேகம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- 'ஸ ஆத்மா' என்பது பரமாத்வாவை குறிக்கின்றது. பரமாத்மா ஒருவர் தான் என்றாலும் ஜீவாத்மா அனேகம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- பகவான், கீதையில் ஜீவனை பராமர்சம் செய்து ஜீவனே பரமாத்மா என்று தெரிவிக்கின்றார். அதனால் பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- ஜீவ:ப்ராண தாரணே என்று, ப்ராணனை தரிப்பவன் ஜீவன் என்று சொல்லப்படுவதால் '*அப்ராணோ ஹ்யமனா: சுப்ர:*' என்று சொல்லப்படும் ப்ராணாதிகள் இல்லாத பரமாத்மாவும் ஜீவனும் ஒன்று என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- உண்மையில் அப்ராணனாகவும், அமனஸாகவும் ஸர்வ உபாதிகள் அற்ற பரமாத்ம ஸ்வரூபமே, அந்த:கரண உபாதிவசாத் ஜீவபாவத்தை அடைகிறது என்றே அந்த ச்ருதி வாக்யம் தெரிவிக்கிறது. ஜீவனென்றும், பரமாத்மாவென்றும் இரண்டு பேர் இருப்பதாக ச்ருதி தெரிவிக்கவில்லை.

பூர்வ:- ஜீவனென்பவன் பரிச்சின்னன், அபரிச்சின்னன் ஈச்வரன் இரண்டு பேரும் ஒன்று என்று எப்படி சொல்வது?

ஸித்தா:- ஜீவன் பரிச்சின்னன் என்றால் அநித்யன் என்று சொல்லநேரிடும். ஜீவனை, அநித்யன் என்று சொல்லமுடியாது. ஏனெனில் கர்மாவைச்செய்து அதன் பலனான ஸ்வர்க்காதிகளை அனுபவிக்கிறான் என்ற சாஸ்திர வாக்யத்திற்கு விரோதம் ஏற்படும். அதனால் ஜீவன் நித்யன் - அதனாலேயே அபரிச்சின்னன்.

பூர்வ:- ஈச்வரன் நியாமகன், ஜீவன் நியம்யன். இவ்விதம் பேதம் இருப்பதால் ஜீவனும் ஈச்வரனும் ஒன்று என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ஜீவன் நியம்யனாக இருப்பானாகில், அவன் ஈச்வரன் இட்ட கட்டளைக்கு கீழ்படிந்து கார்யங்களைச் செய்பவனாக இருக்க வேண்டும். விகாரம் அடையக்கூடிய வஸ்துவைத்தான் நியமனம் செய்ய முடியும். '*அவிகார்யோயமுச்யதே*' ('अविकारी अयमुच्यते) என்று ஜீவனை, பகவான் அவிகாரி என்று தெரிவிக்கின்றார். கூடஸ்தமான ஜீவனிடத்தில் யாதொருவிதமான க்ரியையும் ஏற்படாது என்று சொல்லப்படுவதால், ஜீவனை நியம்யன் என்று எப்படி சொல்வது? நியம்யத்வமே ஸம்பவிக்காது.

பூர்வ:- ஈச்வரன் வ்யாபகன், ஜீவன் வ்யாப்யன். ஆகவே இரண்டு பேரும் ஒன்று என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- ஜீவனையும் வ்யாபகன் என்றே சாஸ்திரம் தெரிவிக்கின்றது. '*யேன ஸர்வம் இதம் ததம்*' (ப.கீ 2.17) என்று ஜீவனுடைய ஸ்வரூபத்தினால் ஸர்வ ஜகத்தும் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது என்று பகவானால் சொல்லப்படுகிறது.

பூர்வ:- பரமாத்மா சேஷி, ஜீவன் சேஷன் - இவ்விதம், ப்ரதானம், அப்ரதானமாக இருக்கின்ற ஈசுவரனையும் ஜீவனையும் ஒன்று என்று எப்படி சொல்வது?

ஸித்தா:- ஆத்மாதான் எல்லாவற்றிர்க்கும் சேஷியே தவிர, ஆத்மா, வேறு ஒரு வஸ்துவிற்கு சேஷமாக ஆகிறதென்பது கிடையாது. ஈச்வரன் ஈச்வரார்த்தமில்லை. ஜீவார்த்தம்தான் ஈச்வரன். ''*ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி*'' என்பதால், ஆத்மாவிற்கு ஸர்வம் உபகாரகமாக இருக்குமே தவிர ஆத்மா வேறொன்றுக்கு உபகாரகம் என்று சொல்லமுடியாது. அதனால், ஆத்மா சேஷி, அனாத்மாக்கள் எல்லாம் சேஷம் என்று சொல்லமுடியுமே தவிர ஆத்மா சேஷமல்ல.

பூர்வ:- ஆத்மாவைத்தவிர மற்றதெல்லாம் சேஷம் என்றால், ஈச்வரனும் ஆத்மாவிற்கு சேஷம் என்றாகிறது. உலகத்திலுள்ள வஸ்துக்களுக்கெல்லாம் ஆத்மா சேஷியாக இருக்கலாம். ஆனால் ஈச்வரனுக்கு ஆத்மா சேஷம் என்று தான் சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஆத்மாவிற்கு பிரியமாக இருக்கின்றதால், அனாத்மாவை சேஷம் என்று சொல்கிறோம். அதுபோல் ஆத்மா சேஷம் என்று சொல்லவேண்டுமென்றால், ஈச்வரனுடைய ப்ரீதிக்காக ஆத்மாவில் ப்ரியம் என்று சொல்லவேண்டும். ஆத்மாவில் ப்ரியம் வேறொன்றுக்காக அல்ல. ஆத்மார்த்தமேவ ஆத்மா ப்ரியம் என்பதால் தான் '*ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி*' என்று ச்ருதி தெரிவிக்கின்றது. பசு, பத்னியாதிகளில் ஏன் ப்ரியமாக இருக்கிறான் என்றால், தனக்கு அனுகூலமாக இருப்பதால் ப்ரியமாக இருக்கிறான் என்று சொல்லப்படுகிறது. அதுபோல, ஈச்வரனிடத்தில் ஏன் ப்ரீதி என்று கேட்டால் தனக்கு அனுகூலமாக இருப்பதால் ப்ரீதி என்றுதான் சொல்லவேண்டும். அதனால் இந்த முறையில் ஆத்மா ஈச்வர சேஷம் அல்ல.

பூர்வ:- ஈச்வரன் தாரகன், ஜீவர்கள், ஈச்வரனால் தரிக்கப்படுபவர்கள். அதனால் இரண்டு பேரும் ஒன்று என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ஜீவன்தான் சரீராதிகளை தரிக்கின்றானே தவிர ஜீவனை யாரும் தாங்கவில்லை.

பூர்வ:- வ்யஷ்டிதேஹதாரி ஜீவனென்றும், ஸமஷ்டிதேஹதாரகன் ஈச்வரனென்றும் சொல்லலாமே?

ஸித்தா:- ஸமஷ்டி வேறு, வ்யஷ்டி வேறு இல்லை.ஸமஷ்டியில் எவன் இருக்கின்றானோ அவன்தான் வ்யஷ்டி ஸ்வரூபத்திலும் இருக்கின்றான். மஹாகாசமேதான் கடபடாதி வ்யஷ்டியிலும் இருக்கிறது. மஹாகாசத்தையன்றி வேறாக வேறொரு ஆகாசம் வ்யஷ்டியில் இருப்பதாகச் சொல்லப்படுவதில்லை. இதைத்தான் ப்ரஹ்லாதஸ்வாமியும், '*ஸர்வகத்வாத் அனந்தஸ்ய, ஸ ஏவ அஹம் அவஸ்தித:*' விஷ்ணு புராணம் 1.19.85 ('सर्वगत्वादनन्तस्य स एवाहमवस्थितः') பரமாத்மா எங்கும் நிறைந்தவர்- அதனால் நான், பரமாத்மாவாக இல்லாமல் எப்படி இருக்கமுடியும்? எங்கும் நிறைந்தவரானதால் அவரையன்றி நான் மட்டும் எவ்விதம் தனித்த ஸ்வரூபமாக இருக்கமுடியும். நான்தான் அவர் என்று தெரிவிக்கிறார். ஆகையால், ஜீவன் வேறு, ஈச்வரன் வேறு என்று சொல்லப்படுமானால், ஜீவனிருக்குமிடத்தில் ஈச்வரன் இருக்க முடியாது. அப்படியானால் ஈச்வரன் ஸர்வவ்யாபி என்று சொல்லமுடியாது. வ்யாபகமான ஈச்வரன்தான் அந்தந்த சரீரத்திற்குள் இருப்பதால் ஜீவன் என்ற பெயரை அடைகிறார் என்றே ஸித்திக்கிறது. அதனால், ஜீவேச்வர பேதம் ஸித்திக்கவில்லை. ஆகவே, ஈச்வரனும் ஜீவனும் ஒன்று என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ஈச்வரன் ஸர்வஞ்ஞன், ஜீவன் கிஞ்கிஞ்ஞன். இரண்டு பேரும் ஒன்று என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- சைதன்ய ஸ்வரூபமான ஜீவனுக்கும், ஈச்வரனுக்கும், ஞாத்ருத்வம் என்பதே ஸம்பவிக்காது. அதனால் ஸர்வஞ்ஞனென்றும் கிஞ்கிஞ்ஞன் என்றும் எப்படி சொல்வது? ஸர்வ அவபாஸகத்வம் என்ற ஸர்வஞ்ஞத்வம் இரண்டுபேருக்கும் இருக்கின்றதால் இதில் விசேஷம் இருப்பதாக சொல்லமுடியாது. ஆகவே, எந்த விதத்திலும் ஜீவேச்வர பேதம் சொல்ல முடியாது.

பூர்வ:- ஜீவன் பரிச்சின்னன், அவன் தனக்கு ஸம்பந்தப்பட்ட விஷயத்தையே ப்ரகாசப் படுத்துகிறான். ஈச்வரன் அபரிச்சின்னனாகையினால் ஸர்வத்தையும் ப்ரகாசப்படுத்துகிறார். அதனால் ஸர்வ அவபாஸகத்வம் இரண்டுபேருக்கும் துல்யம் என்று சொல்வது பொருந்தாது.

ஸித்தா:- ஜீவனுக்கு எதனுடனும் ஸம்பந்தம் என்பதே கிடையாது என்று '*அஸங்கோ ந ஹி ஸஜ்ஜதே*' என்று ச்ருதி தெரிவிக்கின்றது. அதனால் ஸ்வஸம்ருஷ்ட்ட (தன்னுடன் ஸம்பந்தப்பட்ட) பதார்த்தத்தை ப்ரகாசப்படுத்துகிறான் என்று சொல்வதே சரியல்ல.

பூர்வ:- ஈச்வரன் நித்யமுக்தன். ஜீவன் ஸம்ஸாரி - இருவரையும் ஒன்று என்று எவ்விதம் சொல்வது?

ஸித்தா:- அஞ்ஞான ஜீவன்தான் ஸம்ஸாரி. விஞ்ஞான ஜீவன் தான் அஸம்ஸாரியான ஈச்வரன். இதில் பேதமென்ன? இதே கருத்து பாகவதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அவித்யாஸம்பந்தமுள்ளவனே, அவித்யை உள்ளவரை பந்தன் என்றும், எவன் வித்யயை அடைகிறானோ அவன் நித்யமுக்தன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. '*யோऽவித்யயா யுக் ஸ து நித்யபத்தோ வித்யாமயோ யஸ்ஸ து நித்யமுக்த:*' 'योऽविद्यया युक् स तु नित्यबद्धो विद्यामयो यस्स तु नित्यमुक्तः' என்று பாகவதத்தில் சொல்லப்படுகிறது. வித்யாவானான ஜீவனைத்தான் நித்யமுக்தன் என்று சொல்லப்படுகிறதே அன்றி, ஜீவனைத்தவிர வேறான ஈச்வரன் நித்யமுக்தன் என்று சொல்லப்படவில்லை.

பூர்வ:- பயத்திற்கு ஹேது ஈச்வரன், பயப்படுகின்றவன் ஜீவன். அதனால் இருவரும் ஒருவரே என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- அனாத்மாவான தேஹாதிகளிலுள்ள தாதாத்ம்ய அத்யாஸத்தால்தான் ஜீவன் பயப்படுகிறானே அன்றி, ஸ்வத: ஜீவனுக்கு பயம் கிடையாது. நிருபாதிக நிலையில் பயம் என்பதே கிடையாது. தேஹ அத்யாஸமில்லாத ஸுஷுப்தியிலேயே பயம் ஏற்படுவதில்லை என்று அனுபவத்தினால் அறிகிறோம். அதனால், தேஹ தாதாத்ம்யம் இருந்தால்தான் பயம் என்று சொல்லலாமே அன்றி, ஸ்வயம் அபயஸ்வரூபந்தான் ஜீவன். ஈச்வரனும், அவித்யையுடனிருக்கும் ஜீவனுக்குத்தான் பயஹேதுவாகலாமே அன்றி ஸ்வஸ்வரூப விஞ்ஞானத்தையுடையவனுக்கு பயஹேதுவாகமாட்டார். ஏனெனில் அவனே ஈச்வரன். அவனையன்றி ஜீவன் ஈச்வரன் என்ற பேதம் இல்லாததால் அபயஸ்வரூபமென்றே சொல்ல வேண்டும்.

பூர்வ:- அத்யாஸமுள்ளவன் ஜீவன், அத்யாஸமற்றவன் ஈச்வரன் என்ற வித்யாஸம் இருக்கிறதே?

ஸித்தா:- தத்வத்தை அறியாத வரையில் ஜீவன் அநீச்வரன், தத்வம் அறிந்த பிறகு அவனே ஈச்வரன். அவித்யை உள்ள ஜீவனும் ஈச்வரனும் ஒன்று என்று அத்வைதிகளான எங்களாலும் சொல்லப்படவில்லை. தத்வ ஞானியைத்தான் ஈச்வரன் என்று சொல்கிறோம். ஏனெனில் அவனுக்குத் தான் ஜீவ, ஈச்வர அபேதம் ப்ரகாசிக்கின்றது.

பூர்வ:- ஒரே ஜீவன், ஈச்வரனாகவும், அஞ்ஞ ஜீவனாகவும் எப்படி இருக்கமுடியும்?

ஸித்தா:- ஜீவன் அவித்யாதசையில் ஈச்வர பின்னமாக இருக்கிறான். வித்யாதசையில் ஈச்வர அபின்னமாகிறான் என்பதால், இதனால் ஒன்றும் ஹானியில்லை. இரண்டு தன்மைகளும் காரணமின்றி ஏற்படுவதாகச் சொன்னால் தான் பொருந்தாது. அவித்யை, வித்யை என்ற காரணம் இருப்பதால் ஒரே ஜீவன் அந்தந்த நிலைக்கு தக்கபடி இருக்கிறான் என்பதில் பொருந்தாதது ஒன்றுமில்லை. மேலும், உன் ஸித்தாந்தத்தில், ஒரே ஜீவன் ஞான உத்பத்திக்கு பிறகு அஸ்தூலனாகவும் அக்ருசனாகவும், அதே ஜீவன் ஸ்தூலனாகவும் க்ருசனாகவும் ஞானம் ஏற்படுவதற்கு முன் இருப்பதாகச் சொல்கிறாயே? அது எவ்விதம் பொருந்தும்? ஞானோத்பத்திக்கு முன் ஸ்தூலனாகவும் க்ருசனாகவும் இருப்பவன் ஞானோத்பத்திக்குப்பின், அஸ்தூலனாகவும் அக்ருசனாகவும் இருக்கிறான் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ஞானோத்பத்திக்கு முன்பும் அக்ருசன் அஸ்தூலன்தான். ஆனாலும் ப்ராந்தியினால் தன்னை ஸ்தூலனாகவும் க்ருசனாகவும் நினைக்கிறானே தவிர, அது யதார்த்த ஞானமல்ல என்று சொல்கிறேன்.

ஸித்தா:- அதேபோல் தான், ஜீவனும் உண்மையில் ஞானோதயத்திற்கு முன்பும் ஈச்வரன் தான், ஆனாலும் அவித்யாதசையில் நான் ஈச்வரனில்லை என்று அறிவானாகில் அது ப்ராந்தி ஞானமே தவிர, யதார்த்த ஞானமென்று சொல்லமுடியாது.

பூர்வ:- ஜீவன், ஈச்வரனுடன் அபின்னம் என்று சொல்லப்படுமானால், ஜீவனுக்கு 'நான்' ஈச்வரன் என்றுதானே ஞானம் ஏற்படவேண்டும்? நாஹம் ஈச்வரன் என்ற ஞானம் எவ்விதம் ஏற்படலாம்?

ஸித்தா:- தேஹத்திற்கு வேறான ஜீவன், தன்னை ஸ்தூலோஹம், க்ருசோஹம் என்று ப்ராந்தியினால் நினைக்கிறான் என்று எவ்விதம் உன்னால் சொல்லப்பட்டதோ, அதுபோல, ப்ராந்தியினால் தன்னை, ஈச்வரனாக இருந்தும் ஈச்வரன் என்று ஞானம் ஏற்படவில்லை. தன்னை ஜீவனென்றே நினைக்கிறான்.

பூர்வ:- ஜீவனுக்கு, 'நான்' ஈச்வரன் என்று ஞானம் ஏற்படுமானால், அதை ப்ராந்தி ஞானம் என்று சொல்லவேண்டும். ஏனெனில், தன்னைக்காட்டிலும் வேறான தேஹாதிகளில் நான் ஸ்தூலோஹம் என்று எவ்விதம் அத்யாஸம் ஏற்படுகிறதோ அதுபோல், தன்னைக் காட்டிலும் வேறான ஈச்வரனிடம், அஹம் ஈச்வரன் என்று ஞானம் ஏற்படுமானால், அது ப்ராந்தி ஞானமேயாகும். (ஈச்வரனிடம் தாதாத்ம்ய அத்யாஸத்தினால் ஈச்வரோஹம் என்று ஏற்படுகிறது) அதனால் தான், சித், அசித், ஈச்வரன் என்ற மூன்றும் பரஸ்பரம் விலக்ஷண ஸ்வரூபம் என்று சொல்கிறோம். அதனால் ஜீவன் ஈச்வரனைக் காட்டிலும் வேறு, தேஹமான அசித்தைக்காட்டிலும் வேறு. இரண்டிலும் அஹம் என்ற ஞானம் ஏற்படுமானால், அதை தாதாத்ம்ய அத்யாஸமென்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜீவன் ஸச்சிதானந்தலக்ஷணம். ஈச்வரன் ஸச்சிதானந்த லக்ஷணம். லக்ஷண ஐக்யாத் வஸ்து ஐக்யம். அதனால் ஜீவேச்வரர்களுக்குள் வைலக்ஷண்யம் இல்லை. அசித் என்பதுடன் வைலக்ஷண்யம் என்பது சரியே. தேஹத்தில் ஸ்தூலோஹம் என்பது அதஸ்மின் தத்புத்தி. ஸச்சிதானந்தோஹம் என்பது தஸ்மின் தத்புத்தி. அதனால் அஹம் ஈச்வரன் என்பது அத்யாஸம்

என்று சொல்வது சரியல்ல. ஜீவனும் ஈச்வரனும் ஒன்றே. ஸச்சிதானந்தஸ்வரூபமான ஈச்வரனே நான் என்று அறிவதே தத்வஞானம். ஜீவனுக்கு அத்யாஸம் என்பதே தத்வஞானம் ஏற்படுவதற்கு முன்பு இருப்பதாகச் சொல்லவேண்டும். தத்வஞானம் என்றாலே, முன்னால் இருந்த ப்ராந்தி ஞானத்தை நாசம் செய்து ஏற்படுவது எதுவோ அதுவே தத்வஞானம் என்று சொல்லப்படும். அதனால், ஜீவனுக்கு தத்வஞானம் ஏற்படுவதற்கு முன், ஈச்வர தாதாத்ம்ய அத்யாஸத்தினால் 'அஹம் ஈச்வர:' என்று எப்படி ஞானம் ஏற்படமுடியும்? ஆகவே ஈச்வர தாதாத்ம்ய ஞானம் பரமார்த்தமான யதார்த்த ஞானமே அன்றி அந்த ஞானம் ப்ராந்தி ஞானம் என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- ஜீவப்ரஹ்ம ஐக்ய ஞானமே தத்வஞானம் என்று சொல்லப்படுமானால் அன்னத்தை, ப்ரஹ்மமென்று உபாஸிக்க வேண்டுமென்று '*அன்னம் ப்ரஹ்மேத்யுபாஸீத*' என்று விதிவாக்யம் தெரிவிக்கின்றது. இதேபோல் '*ஆத்மா இத்யேவ உபாஸீத*' என்றும், '*அஹம் ப்ரஹ்மாஸ்மி*' என்றும் தெரிவிக்கின்ற ச்ருதி வாக்யங்களும் ஆத்மாவே, ப்ரஹ்மம் என்று உபாஸிக்க வேண்டும் என்றே தெரிவிக்கின்றது. அதனால் ஜீவேச்வர பேதத்தை தெரிவிக்கின்ற இந்த ச்ருதி வாக்யம் ஆத்மாவே ப்ரஹ்மம் என்று உபாஸனை செய்யவேண்டுமென்றே தெரிவிக்கின்றதால், ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்று என்று ஐக்யத்தை போதிக்குமானால், உபாஸனையை விதிக்க வேண்டிய அவச்யம் என்ன?

ஸித்தா:- ஸம்வாதி ப்ரமம் என்றும் விஸம்வாதி ப்ரமம் என்றும் இரண்டுவிதம். இதில் 'அன்னம் ப்ரஹ்மம்' என்ற உபாஸனையை தெரிவிக்கின்ற வாக்யம் விஸம்வாதிப்ரமம் போல் சொல்லப்படுகிறது. அதாவது ஏதோ ஓரிடத்தில் இருக்கின்ற தீபப்ரபையின் ப்ரகாசத்தைப் பார்த்து அதில் ரத்னம் என்று ஞானம் ஏற்படுமானால் அதை விஸம்வாதிப்ரமம் என்று சொல்லப்படுகிறது. (அந்த இடத்தில் ப்ரபை என்பது ரத்னம் அல்ல. மணி அல்ல.) இரண்டிற்கும் பேதம் இருக்கின்றது. ஆனாலும் அது ரத்னம் என்றே ஞானம் ஏற்படுவதால் அது விஸம்வாதி ப்ரமம். அதுபோல் அன்னமே ப்ரஹ்மமல்ல, ஆனாலும் அதுவே ப்ரஹ்மம் என்று உபாஸிக்கின்றபோது ப்ரஹ்மமென்றே ஞானம் ஏற்படும் என்று உபாஸனாபலமாக சொல்லப்படுகிறது. ஆனால் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற உபாஸனையை விதிக்கின்ற வாக்யம் ஸம்வாதி ப்ரமம். அதாவது ரத்னத்தில், ரத்னம் என்று ஞானம் ஏற்படுமானால் அது ஸம்வாதி ப்ரமம். இந்த உபாஸனை அபேதத்தையே தெரிவிக்கின்றது. அதாவது அனாதிகாலமாக 'நான் ப்ரஹ்மமல்ல' என்ற ப்ராந்தி ஞானம் இருக்கின்றதால், த்ருடமான அந்த வாசனையை, நிர்மூலம் செய்வதற்காகவே அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற உபாஸனை விதிக்கப்படுகிறது. அதாவது அனாதிகாலமாக 'நாஹம் ப்ரஹ்ம' என்ற வாசனை இருக்கின்றதால் த்ருடதரமான அந்த வாசனையே ப்ரதிபந்தகமாக இருப்பதால் எத்தனை முறை 'தத் த்வமஸி' போன்ற மஹாவாக்யங்களை கேட்டும், நானே ப்ரஹ்மம் என்ற ஸ்வரூப ஞானம் ஏற்படாததால், அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற உபாஸனையை சாஸ்திரம் விதிக்கின்றது. இந்த உபாஸனை ஆத்மாவே ப்ரஹ்மம் என்று தெரிவிக்கின்றதால் ஸம்வாதி ப்ரமம் போல் ஆத்ம அபேதமான ப்ரஹ்ம ஞானமே ஏற்படும் என்று தெரிவிக்கின்றது. இதுவும் உபாஸனை தான் என்றாலும் உண்மையான வஸ்து ஸ்வரூப உபாஸனையாக இருப்பதால் அதை ஸம்வாதி

ப்ரமம் போல் மிகச்சிறந்த பலத்தை கொடுக்ககூடியது என்று தெரிவிக்கின்றது. ஆகவே 'அன்னம் ப்ரஹ்ம' என்ற உபாஸனை போல் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற உபாஸனம் இல்லை என்பதால் தன் ஸ்வரூபத்தையே ப்ரஹ்மமென்று உபாஸிக்க வேண்டும். தன்னைக்காட்டிலும் வேறான ஸ்வரூபத்தையே உபாஸிக்கவேண்டுமென்று சொல்லப்படவில்லை.

பூர்வ:- தைத்ரீய உபநிஷத்தில் ஆனந்தவல்லியில் '*ஸ ஏகோ ப்ரஹ்மண ஆனந்த:*' என்று தெரிவித்தபிறகு ''*யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ*'' என்று ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது. இதனால் பரிச்சின்ன ஆனந்தமுள்ளவன் ஜீவன். அபரிச்சின்ன ஆனந்தம் உள்ளவன் பரமாத்மா என்று தெரிவிக்கின்றதால், இந்த வாக்யத்தினாலும் ஜீவன் வேறு, பரமாத்மா வேறு என்றுதானே சொல்லப்படுகிறது?

ஸித்தா:- அந்த ச்ருதியிலேயே, '*ச்ரோத்ரியஸ்ய ச அகாமஹதஸ்ய*' என்று ச்ரோத்ரியன் அகாமஹதனாக இருக்கின்றவனின் ஆனந்தமும், தத்வவித்தான ஜீவனுடைய் ஆனந்தமும், அபரிச்சின்னமான பரமாத்மாவின் ஆனந்தமும் ஒன்று என்றே தெரிவிக்கின்றதால் இந்த காரணத்தினாலும் ஜீவ பரமாத்மா பேதம் சொல்லமுடியாது. தத்வவித்தின் ஆனந்தமும், அபரிச்சின்ன ஆனந்தம் தான்.

பூர்வ:- பஞ்ச கோசங்களில், நான்காவது கோசம் விஞ்ஞானமயன், ஐந்தாவது கோசம் ஆனந்தமயன். இந்தவிதம், நாலாவது கோசத்திலுள்ள விஞ்ஞானமயனான ஜீவனையும், ஐந்தாவது கோசத்திலுள்ள ஆனந்தமயனான ஈச்வரனையும் ஒன்று என்று எப்படிச்சொல்வது?

ஸித்தா:- விஞ்ஞானமயம் என்பதும், ஆனந்தமயம் என்பதும் கோசமேயன்றி - அவைகளை ஜீவனென்றும், ஈச்வரனென்றும் சொல்வது சரியல்ல. ஐந்து கோசங்களுக்குள் நான்காவது கோசம், ஐந்தாவது கோசம் என்று சொல்லப்படுகிறதே, தவிர, அதில் ஜீவனென்றும், ஈச்வரனென்றும் வித்யாஸம் சொல்வதற்கே இடமில்லை. '*ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்ட்டா*' என்று தெரிவிக்கின்ற போதுதான் ஆத்ம ஸ்வரூபத்தை நிரூபணம் செய்யப்படுகிறது. ஜீவனென்பதும், ஈச்வரனென்பதும் ஞானஸ்வரூபம் ஆனந்த ஸ்வரூபம் என்பதால், லக்ஷண ஐக்யாத் வஸ்து ஐக்யம் சொல்லப்படுகிறது. ஆகவே, ஜீவேச்வர பேதம் என்று எந்த வாக்யங்களைக் கொண்டும் நிரூபணம் செய்யமுடியாது.

பூர்வ:- மாயயை தன் வசப்படுத்துபவன் ஈச்வரன், மாயையின் வசப்படுபவன் ஜீவன், என்ற வித்யாஸம் இருப்பதால் ஜீவேச்வர அபேதம் எப்படி பொருந்தும்?

ஸித்தா:- தத்வவித்தான ஜீவன் மாயாபரவசனாக ஆவதில்லை. அதனால், ப்ரஹ்ம வித்தான ஜீவனை ஈச்வரன் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- பகவானே கீதையில் என்னை சரணடைந்தவன்தான் மாயாதரணம் செய்கிறான் என்று தெரிவிப்பதால், ப்ரபத்தி செய்பவன் ஜீவன். ப்ரபத்தி செய்வதற்குரியவன் பகவான் என்று சொல்லப்பட்டிருப்பதால் ஜீவேச்வர ஐக்யம் சொல்வது பொருந்தாது.

ஸித்தா:- அவித்யா நிலையில் ஜீவேச்வர பேதம் உண்டு என்பதை முன்னமே சொல்லப் பட்டிருக்கிறது. பாரமார்த்திக பேதம் இல்லை என்பதைதான் உபநிஷத்துக்கள் தெரிவிக்கிறது.

உண்மையில் மாயை என்பதுமில்லை, அதை தரணம் செய்ய வேண்டுமென்பதுமில்லை, அதற்காக, ஈச்வரன் என்ற தத்வம் வேறாக இருப்பதாகவும் அதை ப்ரபத்தி செய்ய வேண்டுமென்பதும் பரமார்த்தமாக கிடையாது.

பூர்வ:- ஈச்வரன் நித்யமுக்தன். ஜீவன் பந்த முக்தன் என்பதால் அபேதம் எவ்விதம் ஸித்திக்கும்.

ஸித்தா:- ஈச்வரனுக்கும் நித்யமுக்தத்வம் பாரமார்த்திகமில்லை. அதேபோல் ஜீவனுக்கும் பந்த முக்தத்வம் என்பதும் பாரமார்த்திகமில்லை. ஆகவே, இதனாலும் ஜீவேச்வர பேதம் பாரமார்த்திகமென்று சொல்லமுடியாது. பந்தம், மோக்ஷம் இரண்டுமே வ்யாவஹாரிகமானதால் அபரமார்த்தம் என்றே சொல்லப்படுகிறது. மேன்மேலும் வெகுவிதமாகச் சொல்வதில் என்ன ப்ரயோஜனம்? இன்னும் எந்தவிதமாக ஜீவேச்வரபேதம் சொல்லலாம் என்று கல்பிக்கப்படுகிறதோ அவையெல்லலாமே வ்யாவஹாரிகம், அவித்யாகார்யம். உண்மை நிலையில், உபாதிஸம்பந்தம் இல்லாமல் ஜீவேச்வர பேதம் சொல்வதற்கு முடியாது. பரமார்த்தமாக ஜீவேச்வரர்களுக்குள் பேதம் ஸித்திக்கிறது என்பதற்கு எந்தவிதமான ப்ரமாணமும் கிடையாது. வ்யாவஹாரிகமான பேதம் ஸித்திக்கிறதே என்றால், வ்யவஹார தசையில் பேதம் இருக்கிறது என்பது ஒத்துக்கொள்ளப்பட்ட விஷயம். ஆகவே, பேதம் என்பது உண்மையல்ல. அபாரமார்த்திகம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஜீவேச்வர பேதம் பரமார்த்தமாக ஸித்திக்கவில்லை என்றாலும், ஜீவனுக்குள் பரஸ்பரபேதம் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். ஏனெனில் ஜீவன் எவ்விதம் தன்னை ஈச்வரன் என்று சொல்வதில்லையோ, அதேபோல் ஜீவர்கள், நான் சைத்ரன், நான் மைத்ரன் அல்ல என்று தெரிவிக்கிறானே அன்றி சைத்ரன், நானே மைத்ரன் என்று சொல்வதில்லை. அதனால் பேதம் ப்ரத்யக்ஷயமாகவே அறியப்படுகிறது. அதனால் ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதம் இருப்பதாகவே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் எவ்விதம் பேதம் சொல்லமுடியாதோ அதேபோல், ஜீவாத்மாக்களில் பரஸ்பரம் பேதம் சொல்வதற்கும் முடியாது. ஜீவர்களுக்குள் பேதம் என்பதும் பரமார்த்தமில்லை. அதாவது சைத்ரன் 'நாஹம் மைத்ரன்' என்று சொல்கிறானே, இவர்களுக்குள் பேதம் ப்ரத்யக்ஷமாக ஸித்திக்கிறதே என்று சொல்வது சரியல்ல. சைத்ரத்வம், மைத்ரத்வம் என்பது தேஹதர்மமே அன்றி ஆத்மதர்மமல்ல. இரண்டு பேர்களின் தேஹமும் வெவ்வேறு என்பதற்குத் தான் ப்ரத்யக்ஷம் ப்ரமாணமாகுமேயன்றி, சைத்ர ஆத்மாவும், மைத்ர ஆத்மாவும் வேறு என்பதில் ப்ரத்யக்ஷம் ப்ரமாணமாகாது: எவ்விதம் ஜீவேச்வரபேதம் இல்லை என்று சொல்லப்பட்டதோ அதேபோல், ஆத்மாவிற்கும் பரஸ்பர பேதம் சொல்லமுடியாது. ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதம் என்பதும் பரமார்த்தமல்ல.

ரூபவத்தான தேஹத்திற்குத்தான் சைத்ரன் என்றும், மைத்ரன் என்றும் பெயர் வைக்கப் பட்டிருக்கின்றது. சைத்ர, மைத்ர, தேஹத்துடன் ஆத்ம தாதாத்ம்ய அத்யாஸம் இருப்பதால், அஹம் சைத்ரன், அஹம் மைத்ரன் என்று சொல்கிறான். அஹம் மனுஷ்ய: என்று எப்படி ப்ராந்தியினால் வ்யவஹாரம் செய்யப்படுகிறதோ, அதுபோல் சைத்ரன், மைத்ரன் என்று

வ்யவஹாரம் செய்கின்றான். மேலும், சைத்ரன் மரணமடைந்தான் என்றும், சைத்ரன் எரிக்கப்பட்டான் என்று சொல்லும்போது, சரீரத்தையே குறிப்பிடப்படுகின்றதே அன்றி, ஆத்மாவைக் குறிப்பிட்டுச் சொல்லப்படுவதில்லை. ஆகையால், சைத்ரன், மைத்ரன், என்ற நாமரூபங்களுடன் ஆத்மாவிற்கு ஸம்பந்தமில்லை. நீலம், பீதம் முதலான நிறங்களும் ஆத்மாவில் ஸம்பந்தமில்லை. இவையெல்லாம் அனாத்மாவான தேஹதர்மம் என்பதால் தான், ஆத்மா, எந்தவிதமான தர்மமும் அற்றது என்று தெரிவிப்பதுடன், ஆத்மா, அசப்தம், அஸ்பர்சம், அரூபம், அனாமகம் என்று ச்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

பூர்வ:- சைத்ரனுக்கு நான் கண்ணில்லாதவனென்றும், மைத்ரனுக்கு, அஹம் படுத்ருஷ்டி: என்று எனக்கு கண் அதிப்ரகாசமாக ஸூக்ஷ்மமான வஸ்துவையும் க்ரஹிக்கக்கூடிய தன்மையில் இருக்கிறதென்றும் சொல்கிறான். இதனாலும் இரண்டு பேருக்கும் பேதம் இருக்கிறதென்றே சொல்லவேண்டும். அதனால் ஆத்ம அபேதம் சொல்வது சரியல்ல.

ஸித்தா:- காணத்வம், படுத்வம் என்பதெல்லாம் இந்த்ரிய தர்மங்களே தவிர ஆத்ம தர்மமில்லை. அதனாலும் ஆத்மபேதம் ஸித்திப்பதாகச் சொல்லமுடியாது. இந்த்ரிய தர்மங்களை ஆத்மதர்மம் என்று சொல்வது பொருந்தாது. ஆத்மாவிற்கு அன்யமான அனாத்மாவின் தர்மங்களை ஆத்மதர்மம் என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- மைத்ரன் தன்னை 'ஸுகீ' என்றும் தன்யன் என்று சொல்கிறான், சைத்ரன் தன்னை துக்கீ என்றும், தான் ஒன்றுக்கும் ப்ரயோஜனமற்றவன் என்றும் சொல்கிறான். இப்படியாக, மைத்ரனைக்காட்டிலும், தான் வேறு என்று தன்னை பேதப்படுத்தி அறிகின்றானே? பேதமில்லை என்று எப்படி சொல்வது?

ஸித்தா:- ஸுகம், துக்கம் என்பது அந்த:கரண தர்மம். அந்த:கரண தாதாத்ம்ய அத்யாஸத்தினால் அஹம் ஸுகீ, அஹம் துக்கீ என்று ப்ராந்தி ஞானம் ஏற்படுகிறதே தவிர, ஆத்மபேதம் ஸித்திப்பதாகச் சொல்லமுடியாது.

பூர்வ:- ஆத்மா ஏகம், ஸர்வவ்யாபி, நிரவயவம், என்று சொல்லப்படுமானால், அந்த ஆத்மாவிற்கு ஸர்வ அந்த:கரணங்களிலும் தாதாத்ம்ய அத்யாஸம் ஏற்படுவதால், எல்லோருடைய ஸுகதுக்கங்களும் அனுபவிக்க நேரிடுமே? ஆத்மா ஏகமாக இருக்குமானால், ஸர்வசரீரங்களிலும் ஏற்படுகின்ற ஸுகதுக்கங்களின் அனுபவம் ஒவ்வொரு சரீரத்திலிருக்கும் ஆத்மாவினிடமும் ஏற்படவேண்டுமே? அவ்விதம் ஏற்படாததால், ஆத்மா ஏகம் என்பது பொருந்தாது.

ஸித்தா:- ஸர்வ வ்யாபியாகவும், ஸச்சிதானந்த லக்ஷணமாகவும் கூடஸ்தமாகவும் இருக்கின்ற ஆத்மாவிற்கு, அனாத்மாவில் தாதாத்ம்ய அத்யாஸம் என்றும், அதனால் ஸுகதுக்காதி அனுபவங்களும் ஏற்படுகிறது என்று சொல்வது சரியல்ல. அத்யாஸம் ஸுகதுக்கமென்பதெல்லாம் பரமார்த்தமில்லை. அந்த:கரணங்களில் சைதன்யம் ப்ரதிபலிக்கின்றதால், ப்ரதிபலன சைதன்யமான சிதாபாஸனிடத்தில் ஒரு ஸமயம் தாதாத்ம்ய அத்யாஸம் இருக்கின்றது என்று சொல்லப்பட்ட போதிலும் கூடஸ்த்த சைதன்யத்தினிடம் வ்யாவஹாரிக நிலையிலும் அத்யாஸம் சொல்லமுடியாது.

ஸாபாஸ அஹங்காரமான ப்ரமாதாவே, அஹம் ஸுகீ, துக்கீ என்று தெரிவிக்கின்றான். சிதாபாஸனையும் ஈச்வரனையும் ஒன்று என்று சொல்லப்படவில்லை. கூடஸ்த சைதன்யத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் சொல்லமுடியாது என்றே சொல்லப்படுகிறது. ஒவ்வொரு அந்த:கரணத்திலும் ப்ரதிபலனம் இருப்பதால், ப்ரதிபலித சிதாபாஸன் அனேகம் என்று சொல்வதில் ஹானி ஏதுமில்லை. (ஆக்ஷேபத்திற்கிடமில்லை.) சிதாபாஸனை ஈச்வரன் என்று சொல்லவில்லை. சிதாபாஸன் என்ற ஜீவனுக்குத்தான் ஸம்ஸாரகதியும் சொல்லப்படுகிறது. இதுவும் வ்யாவஹாரிகம் என்றே சொல்லப்படுகிறது. சிதாபாஸனிடமும் இந்த தர்மங்கள் கிடையாது என்பதே உண்மை நிலை. தர்ப்பணத்திலுள்ள தர்மம் ப்ரதிபிம்பத்தில் தோன்றினாலும், பிம்பத்திலோ, ப்ரதிபிம்பத்திலோ எந்தவிதமான தர்மமும் கிடையாது. இதேபோல், அந்த:கரண தர்மமான ஸுகதுக்காதிகள் சிதாபாஸனுக்கும் பரமார்த்தமாக கிடையாது. சிதாபாஸனுக்கே இந்த தர்மங்கள் ஸம்பந்தமில்லையென்றால், பிம்பபூதமான கூடஸ்த்தசைதன்யத்தில், எந்தவித தர்மங்களின் ஸம்பந்தமும் இருக்க முடியாது. ஆகவே கூடஸ்த்த சைதன்யத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் என்பதே கிடையாது. ஈச்வரனுக்கும் சிதாபாஸன் என்ற ஜீவர்களுக்குள் பரஸ்பரம் ஆவித்யக பேதம் உண்டு என்றுதான் சொல்லப்படுகிறது. அவித்யாப்ரதிபலித சைதன்யம் ஜீவன், மாயா ப்ரதிபலித சைதன்யம் ஈச்வரன். அந்த:கரண ப்ரதிபலனத்திறகு ஸாக்ஷி கூடஸ்த்தன். மாயாப்ரதிபலினத்திற்கு ஸாக்ஷி சுத்த சைதன்யம் என்று சொல்லப்பட்டாலும், கூடஸ்த்த சைதன்யமென்பதும், சுத்த சைதன்யமென்பதும் ஒன்றே. ஸாக்ஷி என்பது ஒன்றே. அதனால், ஆத்ம ஆபாஸ பேதம் என்று சொல்லலாமே தவிர ஆத்ம பேதம் என்று சொல்லமுடியாது. பிம்பத்தில் பேதமே சொல்லமுடியாது. ப்ரதிபிம்பத்தில் பேதம் ஒத்துக்கொள்ளக் கூடியதே. அதுவும் விஜாரிக்கப்படுமானால், அநிர்வாச்யம் என்றே சொல்ல நேரிடும். ஆகவே ஸாக்ஷி, கூடஸ்த்தன், ஈச்வரன் என்பதெல்லாம் ஒரே தத்வம் என்பதால் ஆத்ம பேதம் சொல்லமுடியாது. இவ்விதம், ப்ரதிபிம்ப வாதத்தினாலும், ஆத்ம நானாத்வம் சொல்லமுடியாது.

இதே போல், அவச்சேத வாதத்தினாலும் ஆத்ம நானாத்வம் ஸித்திக்கவில்லை. எப்படியெனில், அந்த:கரணம் என்பது அநேகமாக இருப்பதால், அதில் அவச்சின்னமான சைதன்யமானது குறிப்பிட்ட அந்தந்த அந்த:கரணத்திலுள்ள ஸுகதுக்கத்தை ப்ரகாசப்படுத்துகின்றதே அன்றி வேறு ஒரு அந்த:கரணத்திலுள்ள ஸுகதுக்காதிகளை ப்ரகாசப்படுத்துவதில்லை. (அந்த:கரணங்களின் மத்தியில் இருக்கின்ற சைதன்யம் எதையும் ப்ரகாசப்படுத்துவதில்லை.) அவச்சேதகமான உபாதியில்தான், அதிலுள்ள தர்மங்களை சைதன்யம் ப்ரகாசப்படுத்துகின்றது. அந்தந்த, அந்த:கரணங்களின் ஸுக துக்கம், அந்தந்த அந்த:கரண அவச்சின்ன சைதன்யத்தினால் ப்ரகாசப்படுத்தப்படுகிறது. ஆகவே அவச்சின்ன சைதன்யம் ஏகரூபமாக இருந்தாலும், அந்த:கரணம் அனேகமாக இருப்பதால் அந்தந்த அவச்சேதக சைதன்யம் அந்தந்த ஸுக துக்கங்களைத்தான் ப்ரகாசப்படுத்துகின்றது. அதனால் ஸுகதுக்க ஸாங்கர்யம் ஆத்மாவிற்கு ஏற்படுமே என்று சொல்வதற்கு இடமில்லை.

ஸுகதுக்க ஸாங்கர்யம் இல்லாததற்கு காரணம் உபாதி நானாத்வமே தவிர, ஆத்ம நானாத்வம் சொல்ல தேவையில்லை. சைத்ரன், மைத்ரன் என்ற பேதம் சரீரத்தைச் சேர்ந்தது. அதனால் சைத்ரன் என்பவனே அனேக சரீரங்களில் இருப்பதாகச் சொல்லப்படாததால், மற்றவர்கள் ஸுகாதிகளை சைத்ரன் அறிய வேண்டுமே என்று ஆக்ஷேபிப்பது பொருந்தாது. ஆத்மா ஏகம். அதுவே ஸர்வசரீரங்களிலும் ஸ்திதி பெற்று இருக்கின்றது என்று சொல்லப்படுவதால் எவ்வித கேள்விக்கும் இடமில்லை. உபாதியுடன் கூடிய சைதன்யம் (ஸோபாதிகம்) அந்தந்த உபாதியில் தான் இருக்கமுடியும். நிருபாதிக சைதன்யம் எங்கும் வியாபித்து எல்லாவற்றிலும் இருகின்றது. ஆகவே சைத்ரோஹம் என்று அனாத்மதேஹாபிமானமுள்ள அஞ்ஞனுக்கு ஸர்வதேஹாத்ம பாவம் ஏற்படாது. கூடஸ்த்த சைதன்யமே ஸர்வ அவபாஸகம் என்றும் ஸர்வஞ்ஞம் என்றும் சொல்லப்படுகிறது. இதில் ஸர்வ விஷயக பாஸகத்வம் என்பது எல்லா சரீரங்களிலும் வித்யாஸமின்றி ஏற்படும். ஸர்வ விஷயக ஞாத்ருத்வம் என்பது ஸர்வசரீரங்களிலும் வித்யாஸமின்றி ஏற்பட முடியாது. ஆகவே ஜீவேச்வர பேதம் என்பதோ, ஜீவானாம் பரஸ்பரபேதம் என்பதோ ஸித்திக்க முடியாது. அத்வைதமே தத்வம் என்று ஸித்திக்கின்றது.

பூர்வ:- சேதனனான ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் பேதமில்லையென்பதும், ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதமும் இல்லை என்பது இருக்கட்டும். ஆனாலும், சேதனத்திற்கும் அசேதனத்திற்கும் பேதம் இருப்பதாகத்தானே சொல்லவேண்டும்? அதனால் அத்வைதம் ஸித்திகின்றதென்று சொல்ல முடியாது?

ஸித்தா:- ஆத்மாவிற்கும், அனாத்மாவிற்கும் பரமார்த்தமாக பேதம் இருப்பதாகச் சொல்ல முடியாது. ஏனெனில், அனாத்மா என்பது பரமார்த்தமாக இருக்கின்ற வஸ்துவல்ல. அனாத்மா அபரமார்த்தமாக இருக்கிறதென்று சொல்லப்படுமானால், அதனால் ஏற்படும் பேதமும் அபரமார்த்தமாக வியாவஹாரிகமாக இருக்கின்றதென்றால் அது ஆக்ஷேபத்திற்கு இடமில்லை. அது இஷ்ட்டமே. ஆனால் உண்மையில், அனாத்மா, என்பதும் ஆத்மாவையன்றி வேறாக இருக்கிறது என்று சொல்லமுடியாது. ஏனெனில், அனாத்மா என்பது ஆத்மாவில் கல்பிதமாகையால், ஆரோபிதங்களெல்லாம், அதிஷ்ட்டானத்தையன்றி வேறாக இருக்க முடியாது, அதனால், அதிஷ்ட்டான ஸ்வரூபமே, ஆரோபிதஸ்வரூபமானதால் ஆத்ம அனாத்ம பேதமும் சொல்லமுடியாது. கிளிஞ்சலில் கல்பிதமான ரஜதம் எவ்விதம் கிளிஞ்சலையன்றி வேறாக இல்லையோ அதுபோல் அதிஷ்ட்டானம்தான் ஆரோபிதங்களுக்கு ஸ்வரூபம்.

ஆகவே, அத்வைதமே தத்வம், அதுவே மோக்ஷ பலகம், ஸத்யம். த்வைதம் மித்யை. அத்வைத போதகமான சாஸ்திரம்தான் ப்ரமாணம். த்வைதம் அதத்வம். அது மோக்ஷத்தைக் கொடுக்காது. அதை ஒரு சாஸ்திரம் போதிப்பதாக சொல்லப்படுமானால் அந்த சாஸ்திரம் அப்ரமாணமே.

ऐक्यश्रुतेरुपासनापरत्वनिराकरणम् ।

ஐக்யச்ருதே: உபாஸனாபரத்வ நிராகரணம்

பூர்வ:- 'தத் த்வமஸி' போன்ற மஹாவாக்யங்களுக்கு, ஜீவபரமாத்ம அபேதத்தை போதிப்பதில் தாத்பர்யம் இல்லை. உண்மையில் ஜீவபரமாத்ம பேதம் இருந்தபோதிலும், ஜீவனை பரமாத்மா என்று உபாஸனை செய்யப்படுமானால், ஐக்யம் ஸித்திக்கும் என்பதற்காக, உபாஸனையை தெரிவிக்கின்றது என்றே சொல்லவேண்டும். அபேதத்தை போதிக்கின்றது என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- இது சரியல்ல. உபாஸ்யம், உபாஸகன் என்ற இரண்டு இருக்குமானால் இரண்டிற்கும் ஐக்யம் சொல்வது பொருந்தாது. உபாஸனை என்றாலே, உபாஸ்யம், உபாஸகன் என்ற பேதம் இருக்க வேண்டும். இரண்டும் ஒன்று என்றால் உபாஸனையே ஸித்திக்காது. அதனால் ஒன்றுக்கொன்று வேறுபட்டது என்றுதான் சொல்லவேண்டும். உபாஸ்யங்கள், இரண்டு இருக்குமானால் உபாஸனைக்காக அபேதம் சொல்லலாம். உதாரணமாக 'அன்னம் ப்ரஹ்மேத்யுபாஸீத' என்ற வாக்யத்தில், அன்னம், ப்ரஹ்மம் என்ற இரண்டுமே உபாஸ்யம். அன்னம் வேறு, ப்ரஹ்மம் வேறு என்றாலும், அன்னமே ப்ரஹ்மமென்று உபாஸனை செய்ய வேண்டுமென்று அபேதமே சொல்லப்படுகிறது. இதேபோல், சாளக்கிராமத்தில், விஷ்ணு என்று உபாஸனை செய்ய வேண்டும் என்று அபேதமே தெரிவிக்கப்படுகிறது. சாளக்கிராமத்தில் விஷ்ணு என்று உபாஸனை செய்ய வேண்டும் என்றால், இரண்டுமே உபாஸ்யம் என்றே சொல்லவேண்டும். அதனால் உபாஸகனையும் உபாஸ்யத்தையும் ஒன்று என்று சொல்லப்படவில்லை அவ்விதம் சொல்லப்படுமானால் லோக அனுபவத்திற்கு விருத்தமாகும். அதனால் உபாஸனைக்கு எது இரண்டும் விஷயமோ அது இரண்டும் வெவ்வேறாக இருந்தால் தான், அதில் அபேத உபாஸனை விதிக்க முடியும். ஆனால் உபாஸ்யம், உபாஸகன் என்ற இரண்டிற்கும் அபேதம் சொல்லப்படுமானால் உபாஸனமே ஸித்திக்காது. அதனால் 'தத் த்வமஸி' போன்ற மஹாவாக்யங்கள் உபாஸனைக்காக ஜீவப்ரஹ்ம அபேதத்தை தெரிவிப்பதாகச் சொல்லமுடியாது. மேலும் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற வாக்யம் உபாஸனாவாக்யம் என்று சொல்லப்படுமானால் அதுவும் பொருந்தாது. அளவிடற்கரிய மஹத்வமுள்ள ப்ரஹ்மமே நான் என்று அல்பனான ஜீவன் உபாஸனை செய்ய வேண்டுமென்பது பொருந்தாத விஷயம். ஏனெனில் லோகத்தில், ராஜாவை உபாஸிக்கின்ற சேவகன், தன்னை, ராஜாவென்று நினைக்கமாட்டான். 'ஹே! ராஜன், ராஜாஹம்' என்று சொல்லமுடியுமா? நீங்கள் மஹாப்ரபு, மஹாராஜன், நானோ மிக அல்பன், ஆனால் நீங்களே நான், நானே நீங்கள் என்று சொல்லமுடியுமா? ஆனால் லோகத்தில் ராஜானமுபாஸ்தே, குருமுபாஸ்தே என்று சொல்வது வழக்கம். அதன் தாத்பர்யம் என்னவென்றால், குரு, மிக உயர்ந்தவர், பூஜிக்கத்தக்கவரென்றும் நான் மிகவும் தாழ்ந்தவன் என்ற பாவத்துடன் மிகுந்த

பணிவுடன் தனக்கு மேற்பட்ட மஹிமை வாய்ந்தவர்களுக்கு ஸேவை செய்ய வேண்டும் என்று தான் அர்த்தம். அதேபோல் ராஜஸேவையும் செய்யவேண்டும் என்பதையே உபாஸனம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே நீதான் நான், நானே நீ என்று ஐக்யோபாஸனை சொல்லப்படவில்லை. அவ்விதம் ராஜாவினிடம் ஐக்யோபாஸனம் என்ற அபேதபுத்தி சேவகனுக்கு இருக்க முடியாது, அவ்விதமிருந்தால் அது அனர்த்தகரமாக ஆகும். அது போல் உபாஸகனான ஜீவனுக்கு, உபாஸ்யமான ப்ரஹ்மத்துடன் உபாஸனைக்காக அபேதம் சொல்லப்படுமானால் அது லோகவிருத்தம். அதனால் ஜீவ ஈச்வர பேதம் வாஸ்தவமாக இருக்குமானால் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற உபாஸனம் வ்யர்த்தமாகவும், அனர்த்தகரமாகவும் ஆகும். ஆகையால் மஹாவாக்யம் வாஸ்தவமான அபேதத்தை தான் போதிக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

பூர்வ:- அஹம் ஈச்வரன் என்று உபாஸிப்பானாகில் ஈச்வர ஸாம்யம் (ஸமானதன்மை) ஜீவனுக்கு ஏற்படுகிறது என்று சொல்லலாமே. அதை வ்யர்த்தம் என்று எவ்விதம் சொல்ல முடியும்? '*நிரஞ்ஜன: பரமம் ஸாம்யம் உபைதி*' (निरञ्जनः परमं साम्यमुपैति) என்று உபநிஷத்வாக்யமே தெரிவிக்கின்றதால், அஹம் ஈச்வரன் என்று உபாஸிப்பானாகில் பரமம் ஸாம்யம் பலம் என்றே தெரிவிக்கின்றதால், உபாஸனம் வ்யர்த்தம் என்றே சொல்ல முடியாது.

ஸித்தா:- '*நத்வத்ஸமச்சாப்யதிக: குதோன்ய:*' ('न त्वत्समश्चाभ्यधिकः कुतोन्यः') என்ற கீதாவசனம் ஈச்வரனுக்கு ஈடானவனோ, அவருக்கு மேலானவனோ லோகத்திலேயே கிடையாது என்று தெரிவிக்கின்றது. அதனால் ஈச்வர உபாஸனையினால் ஜீவன் ஈச்வரஸமானமாகிறான் என்று சொல்வது சரியல்ல. அவ்விதம் சொல்லப்படுமானால், முக்தர்களான அனேக ஜீவர்களையும் ஈச்வர ஸமம் என்று சொல்ல நேரிடும். அதனால் 'பரமம் ஸாம்யம்' என்று வாக்யத்திற்கு அபேதம் என்று அர்த்தம். ஸாம்யமென்பதற்கு ஸர்வத்ர ஸமம் என்றாலும், பரமம் ஸாம்யம் என்று 'பரமம்' என்ற பதம் உபயோகிக்கப்படுவதால் அபேதம் என்றே அர்த்தம் சொல்ல வேண்டும்.வேறொரு உபநிஷத்தில் ப்ரஹ்மத்தை ஸாம்யம் என்றே சொல்லப்படுகிறது. '*நிர்விசேஷாய ஸாம்யாய நமோ ஞானகனாய ச*' (निर्विशेषाय साम्याय नमो ज्ञानघनाय च) என்ற வாக்யத்திற்கு அபேதம் என்றே அர்த்தம். பாகவத்தில் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்று தெரிவிப்பதற்கு பதிலாக 'ஸாம்யாய' என்ற பதமே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் ஸாம்யம் என்று ப்ரஹ்மத்தையே தெரிவிக்கின்றது. ஈச்வரஸமானம் என்று அர்த்தம் சொல்லப்படுமானால், பரமம் என்ற பதப்ரயோகம் செய்வதற்கு என்ன காரணம்?

ஸமஸ்யபாவ: ஸாம்யம் (ஸாமான்யதன்மை) என்று ஸாதாரணமாக ப்ரத்யயார்த்தம் சொல்லப் படுகிறது. அது இந்த இடத்தில் சரியல்ல. இந்த இடத்தில் பரமம் ஸாம்யம் என்று 'பரமம்' என்ற பதம் உபயோகிக்கப்படுவதால் ஸர்வத்ரஸமம் என்ற அர்த்தத்தையே தெரிவிக்கின்றது. அதனால் ஸமஸ்ய பாவம் ஸாம்யம் என்ற ப்ரத்யயார்த்தம் சொல்வது சரியல்ல. ஆகவே ஸர்வத்ர ஸமம் ஸாம்யம் என்றால் ப்ரஹ்மம் என்றே அர்த்தம். பரமம் ஸாம்யம் என்பதால் பரப்ரஹ்மம் என்றே அர்த்தம். அதேபோல் வேறு ஒரு இடத்திலும் '*தத்ஸாம்யம் அஜமத்வயம்*' என்று அத்வயமான ப்ரஹ்மம் அஜம் என்று ஸாம்யபதம் ப்ரஹ்மத்தையே தெரிவிக்கின்றது.

ப்ரஹ்மம் ஸாம்யபதத்தினால் குறிப்பிடப்பட்டிருப்பதால் '*நிரஞ்ஜன: பரமம் ஸாம்யம் உபைதி*' என்ற வாக்யமும் ப்ரஹ்மத்தை அடைகிறான் என்றே தெரிவிக்கின்றது.

ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்ற ச்ருதி வாக்யமே இதற்கு ப்ரமாணம். ப்ரஹ்ம ஞானத்திற்கு ப்ரஹ்மபாவமே பலம் '*ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*' (ब्रह्मविद्ब्रह्मैव भवति) என்று தெரிவிப்பதால் இந்தச் ச்ருதி வாக்யத்தை அனுசரித்து ஸாம்யம் என்ற பதத்திற்கு அர்த்தம் செய்ய வேண்டும்.

பூர்வ:- '*ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*' என்ற வாக்யத்தில் 'பவதி' என்றும், 'பரமம் ஸாம்யம் உபைதி' என்ற வாக்யத்தில் உபைதி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 'பவதி' என்றால் 'ஆகிறான்' என்று அர்த்தம். 'உபைதி' என்றால் அடைகிறான் என்று அர்த்தம், இவ்விதம் இரண்டும் வேறுபட்ட அர்த்தத்தை தெரிவிக்கின்றதால், விரோதம் இருக்கின்றது. 'ப்ரஹ்மபாவம்' என்பதே பலம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- அடைகிறான் என்றாலும், ஆகிறான் என்றாலும், வாக்யத்தின் தாத்பர்யம் ஒன்றுதான். ஏனெனில் நித்யப்ராப்தமான ஸ்வரூபத்தில் அடைவது என்பது ஸம்பவிக்க முடியாது அவித்யை இருக்கின்ற பர்யந்தமே பேததரிசனம். உபாஸ்யம், உபாஸகன், உபாஸனை என்ற த்ரிபுடிபேதம் இருக்கின்றதால், அவைகளில் அபேதம் சொல்லமுடியாது. அபேதம் என்பதே தத்வம். பேதம் பரமார்த்ததசையில் கிடையாது. பேதம், உபாஸனைக்காக கல்பிக்கப்பட்டிருக்கிறது. பேதம் மித்யை என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- முக்தி நிலையிலும் பேதம் இருக்கின்றதே?

ஸித்தா:- வைகுண்டப்ராப்தியே மோக்ஷம் என்று சொல்லப்படும் உன் ஸித்தாந்தத்தில் பேதம் இருக்கலாம். ஆனால், அத்வைத ஸித்தாந்தத்தில் '*யத்ர ந அன்யத் பச்யதி, ந அன்யத் ச்ருணோதி, ந அன்யத் விஜானாதி ஸ பூமா*' என்று பேதமற்ற நிலை எதுவோ அதுவே முக்தி என்று தெரிவிக்கின்றதால், முக்தி நிலையிலும் பேதம் இருக்கின்றதே என்ற கேள்வி சரியல்ல. நிர்விசேஷ ப்ரஹ்ம பாவத்தை அடைவதே முக்தி என்பது அத்வைதஸித்தாந்தம்.

பூர்வ:- ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று ஸித்தித்தால் தான், அந்த ப்ரஹ்மபாவம் மோக்ஷம் என்று சொல்லலாம். ஆனால் நிர்விசேஷப்ரஹ்மம் என்பதே இருக்க முடியாதே?

ஸித்தா:- '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யங்கள் எல்லாமே, எந்த ஒரு விசேஷமும் ப்ரஹ்மத்தினிடம் கிடையாது என்றே பலவிதமான முறைகளில் விஜாரிக்கப்பட்டு ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் இதில் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை. '*அதாத ஆதேசோ நேதி நேதி*' என்றும் '*அஸ்தூலம் அனணு அஹ்ரஸ்வம்*' போன்ற ச்ருதி வாக்யங்கள் எல்லாமே ஸர்வ விசேஷங்களையும் ப்ரஹ்மத்தினிடம் இல்லை என்றே ப்ரதிஷேதம் செய்து தெரிவிக்கின்றது.

பூர்வ:- '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் ப்ரஹ்மத்தில் யாதொருவிதமான விசேஷங்களும் இல்லை என்ற தாத்பர்யத்தில் நிஷேதம் செய்யவில்லை. ஒரு சிலர் கார்யம், காரணம், என்ற இரண்டிற்கும் பேதம் இருப்பதாக தெரிவிக்கிறார்கள். அதற்காக,

கார்ய காரண பேதமில்லை என்றும், ஸ்வகதபேதம் இல்லை என்றும் இந்த இரண்டுவித பேதங்கள்தான் இல்லை என்று அந்தச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றதே அன்றி, கார்யங்களில் பரஸ்பர பேதம் இல்லை என்று தெரிவிப்பதற்காகவோ அல்லது கார்யம் இல்லை என்று தெரிவிப்பதற்காகவோ '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற ச்ருதி வாக்யம் தெரிவிக்கவில்லை. அதனால் அனேகவிசித்ரமான ப்ரபஞ்சம் இருக்கின்றதால், (அதற்கு காரணமான) ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று சொல்லமுடியாது. ஆகவே கார்ய காரண பேதம் இல்லாததால் ஈச்வரன் ஒருவரே என்பதால், ஸ்வகத பேதம் இல்லை என்றே இந்த வாக்யம் நிஷேதம் செய்கிறது என்றே சொல்லவேண்டும். மேலும் பேத நிஷேதம் ஐக்ய விதி சேஷ பரமாக இருக்கிறது.

ஸித்தா:- '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் எந்த விதமான பேதமும் கிடையாது என்றே நிஷேதம் செய்கின்றது. அதனால் குறிப்பிட்ட இரண்டு பேதங்கள் இல்லை என்று நிஷேதம் செய்கின்றது என்றும், மற்ற பேதங்களை நிஷேதம் செய்யவில்லை என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- ஸாமானாதிகரண்யவாக்யங்கள் எல்லாம், விசேஷ்யமான ஒரே வஸ்துவில், அனேக விசேஷணங்கள் இருப்பதாக தெரிவித்து அவை எல்லாமே விசேஷ்யத்தை அன்றி வேறாக இல்லை என்று ஐக்யத்தை போதிக்கின்றது. உதாரணமாக, நீலம், மஹத், ஸுகந்தி என்ற விசேஷணங்கள் ஸமான அதிகரணமான விசேஷ்யமான உத்பலத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டு அவைகள் உத்பலம் என்ற விசேஷ்யத்தைக்காட்டிலும் வேறல்ல என்றே தெரிவிக்கின்றது. இதேபோல் '*ஸத்யம், ஞானம், அனந்தம், ப்ரஹ்ம*' என்ற பதங்களால் தெரிவிக்கப்படும் வாக்யம் ஸாமானாதிகரண்ய வாக்யம். இந்த வாக்யத்தில் 'ஸத்யம், ஞானம், அனந்தம்' என்ற பதங்களினால் தெரிவிக்கப்படும் தர்மங்கள் வேறு. ஆனால் இந்த தர்மங்கள் எல்லாமே ப்ரஹ்மம் என்ற ஒரே வஸ்துவில் இருக்கின்றது. இவ்விதம் ஒரே விசேஷ்யத்தில் பலதன்மைகள் இருப்பதாக போதிக்கின்ற வாக்யமே ஸாமானாதிகரண்ய வாக்யம் என்று சொல்லப்படுகிறது. ஸாமானாதிகரண்ய வாக்யத்தின் தாத்பர்யமும் அதுவே. அதனால் ப்ரஹ்மம் ஏகம்தான், அதில் பல தன்மைகள் இருப்பதாக ஸாமானாதிகரண்ய வாக்யம் தெரிவிக்கிறது. ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றால், அதில் பல தன்மைகள் இருப்பதாக எவ்விதம் சொல்ல முடியும்? பல தன்மைகள் இருக்குமானால் நிர்விசேஷமாக இருக்க முடியாதே?

ஸித்தா:- ஸாமானாதிகரண்ய வாக்யத்தினால், ப்ரஹ்மம் லக்ஷணையைக்கொண்டு போதிக்கப்படுகிறது. விசேஷண, விசேஷ்யத்துடன் ப்ரஹ்மம் போதிக்கப்படவில்லை. ப்ரஹ்மம் ஸத்யம் என்றோ, ஞானம் என்றோ, அனந்தம் என்றோ எந்த சப்தத்தினாலும் நிர்வசனம் செய்யமுடியாது என்று முன்பே விஜாரித்து ஸித்தம் செய்யப்பட்டிருக்கிறது.

பூர்வ:- '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் எந்த விதமான பேதமும் கிடையாது என்று நிஷேதம் செய்கின்றது என்று சொல்வது சரியல்ல. ப்ரஹ்மத்தை அன்றி வேறாக, ஸ்வதந்தரமாக எந்த ஒரு வஸ்துவும் இல்லை என்றே நிஷேதம் செய்கின்றது. அதனால் பொதுவாக எந்தவிதமான பேதமும் இல்லை என்று நிஷேதம் செய்யவில்லை. இந்தவிதம் இந்த வாக்யத்தினால் ஸாமான்யமாக (பொதுவாக) பேத நிஷேதம் செய்யப்பட்டிருந்தாலும் கூட 'ச்சாக பசு' (छाग पशु) ந்யாயேன விசேஷ நிஷேதத்தையே தெரிவிக்கின்றது என்றே

ப்ரஹ்மம் ஸாம்யபதத்தினால் குறிப்பிடப்பட்டிருப்பதால் *'நிரஞ்ஜன: பரமம் ஸாம்யம் உபைதி'* என்ற வாக்யமும் ப்ரஹ்மத்தை அடைகிறான் என்றே தெரிவிக்கின்றது.

ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்ற ச்ருதி வாக்யமே இதற்கு ப்ரமாணம். ப்ரஹ்ம ஞானத்திற்கு ப்ரஹ்மபாவமே பலம் *'ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி'* (ब्रह्मविद्ब्रह्मैव भवति) என்று தெரிவிப்பதால் இந்தச் ச்ருதி வாக்யத்தை அனுசரித்து ஸாம்யம் என்ற பதத்திற்கு அர்த்தம் செய்ய வேண்டும்.

பூர்வ:- *'ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி'* என்ற வாக்யத்தில் 'பவதி' என்றும், 'பரமம் ஸாம்யம் உபைதி' என்ற வாக்யத்தில் உபைதி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 'பவதி' என்றால் 'ஆகிறான்' என்று அர்த்தம். 'உபைதி' என்றால் அடைகிறான் என்று அர்த்தம், இவ்விதம் இரண்டும் வேறுபட்ட அர்த்தத்தை தெரிவிக்கின்றதால், விரோதம் இருக்கின்றது. 'ப்ரஹ்மபாவம்' என்பதே பலம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- அடைகிறான் என்றாலும், ஆகிறான் என்றாலும், வாக்யத்தின் தாத்பர்யம் ஒன்றுதான். ஏனெனில் நித்யப்ராப்தமான ஸ்வரூபத்தில் அடைவது என்பது ஸம்பவிக்க முடியாது அவித்யை இருக்கின்ற பர்யந்தமே பேததரிசனம். உபாஸ்யம், உபாஸகன், உபாஸனை என்ற த்ரிபுடிபேதம் இருக்கின்றதால், அவைகளில் அபேதம் சொல்லமுடியாது. அபேதம் என்பதே தத்வம். பேதம் பரமார்த்ததசையில் கிடையாது. பேதம், உபாஸனைக்காக கல்பிக்கப்பட்டிருக்கிறது. பேதம் மித்யை என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- முக்தி நிலையிலும் பேதம் இருக்கின்றதே?

ஸித்தா:- வைகுண்டப்ராப்தியே மோக்ஷம் என்று சொல்லப்படும் உன் ஸித்தாந்தத்தில் பேதம் இருக்கலாம். ஆனால், அத்வைத ஸித்தாந்தத்தில் *'யத்ர ந அன்யத் பச்யதி, ந அன்யத் ச்ருணோதி, ந அன்யத் விஜானாதி ஸ பூமா'* என்று பேதமற்ற நிலை எதுவோ அதுவே முக்தி என்று தெரிவிக்கின்றதால், முக்தி நிலையிலும் பேதம் இருக்கின்றதே என்ற கேள்வி சரியல்ல. நிர்விசேஷ ப்ரஹ்ம பாவத்தை அடைவதே முக்தி என்பது அத்வைதஸித்தாந்தம்.

பூர்வ:- ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று ஸித்தித்தால் தான், அந்த ப்ரஹ்மபாவம் மோக்ஷம் என்று சொல்லலாம். ஆனால் நிர்விசேஷப்ரஹ்மம் என்பதே இருக்க முடியாதே?

ஸித்தா:- *'நேஹ நானாஸ்தி கிஞ்சன'* என்ற வாக்யங்கள் எல்லாமே, எந்த ஒரு விசேஷமும் ப்ரஹ்மத்தினிடம் கிடையாது என்றே பலவிதமான முறைகளில் விஜாரிக்கப்பட்டு ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் இதில் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை. *'அதாத ஆதேசோ நேதி நேதி'* என்றும் *'அஸ்தூலம் அனணு அஹ்ரஸ்வம்'* போன்ற ச்ருதி வாக்யங்கள் எல்லாமே ஸர்வ விசேஷங்களையும் ப்ரஹ்மத்தினிடம் இல்லை என்றே ப்ரதிஷேதம் செய்து தெரிவிக்கின்றது.

பூர்வ:- *'நேஹ நானாஸ்தி கிஞ்சன'* என்ற வாக்யம் ப்ரஹ்மத்தில் யாதொருவிதமான விசேஷங்களும் இல்லை என்ற தாத்பர்யத்தில் நிஷேதம் செய்யவில்லை. ஒரு சிலர் கார்யம், காரணம், என்ற இரண்டிற்கும் பேதம் இருப்பதாக தெரிவிக்கிறார்கள். அதற்காக,

கார்ய காரண பேதமில்லை என்றும், ஸ்வகதபேதம் இல்லை என்றும் இந்த இரண்டுவித பேதங்கள்தான் இல்லை என்று அந்தச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றதே அன்றி, கார்யங்களில் பரஸ்பர பேதம் இல்லை என்று தெரிவிப்பதற்காகவோ அல்லது கார்யம் இல்லை என்று தெரிவிப்பதற்காகவோ '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற ச்ருதி வாக்யம் தெரிவிக்கவில்லை. அதனால் அனேகவிசித்ரமான ப்ரபஞ்சம் இருக்கின்றதால், (அதற்கு காரணமான) ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று சொல்லமுடியாது. ஆகவே கார்ய காரண பேதம் இல்லாததால் ஈச்வரன் ஒருவரே என்பதால், ஸ்வகத பேதம் இல்லை என்றே இந்த வாக்யம் நிஷேதம் செய்கிறது என்றே சொல்லவேண்டும். மேலும் பேத நிஷேதம் ஐக்ய விதி சேஷ பரமாக இருக்கிறது.

ஸித்தா:- '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் எந்த விதமான பேதமும் கிடையாது என்றே நிஷேதம் செய்கின்றது. அதனால் குறிப்பிட்ட இரண்டு பேதங்கள் இல்லை என்று நிஷேதம் செய்கின்றது என்றும், மற்ற பேதங்களை நிஷேதம் செய்யவில்லை என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- ஸாமானாதிகரண்யவாக்யங்கள் எல்லாம், விசேஷ்யமான ஒரே வஸ்துவில், அனேக விசேஷணங்கள் இருப்பதாக தெரிவித்து அவை எல்லாமே விசேஷ்யத்தை அன்றி வேறாக இல்லை என்று ஐக்யத்தை போதிக்கின்றது. உதாரணமாக, நீலம், மஹத், ஸுகந்தி என்ற விசேஷணங்கள் ஸமான அதிகரணமான விசேஷ்யமான உத்பலத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டு அவைகள் உத்பலம் என்ற விசேஷ்யத்தைக்காட்டிலும் வேறல்ல என்றே தெரிவிக்கின்றது. இதேபோல் '*ஸத்யம், ஞானம், அனந்தம், ப்ரஹ்ம*' என்ற பதங்களால் தெரிவிக்கப்படும் வாக்யம் ஸாமானாதிகரண்ய வாக்யம். இந்த வாக்யத்தில் 'ஸத்யம், ஞானம், அனந்தம்' என்ற பதங்களினால் தெரிவிக்கப்படும் தர்மங்கள் வேறு. ஆனால் இந்த தர்மங்கள் எல்லாமே ப்ரஹ்மம் என்ற ஒரே வஸ்துவில் இருக்கின்றது. இவ்விதம் ஒரே விசேஷ்யத்தில் பலதன்மைகள் இருப்பதாக போதிக்கின்ற வாக்யமே ஸாமானாதிகரண்ய வாக்யம் என்று சொல்லப்படுகிறது. ஸாமானாதிகரண்ய வாக்யத்தின் தாத்பர்யமும் அதுவே. அதனால் ப்ரஹ்மம் ஏகம்தான், அதில் பல தன்மைகள் இருப்பதாக ஸாமானாதிகரண்ய வாக்யம் தெரிவிக்கிறது. ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றால், அதில் பல தன்மைகள் இருப்பதாக எவ்விதம் சொல்ல முடியும்? பல தன்மைகள் இருக்குமானால் நிர்விசேஷமாக இருக்க முடியாதே?

ஸித்தா:- ஸாமானாதிகரண்ய வாக்யத்தினால், ப்ரஹ்மம் லக்ஷணையைக்கொண்டு போதிக்கப்படுகிறது. விசேஷண, விசேஷ்யத்துடன் ப்ரஹ்மம் போதிக்கப்படவில்லை. ப்ரஹ்மம் ஸத்யம் என்றோ, ஞானம் என்றோ, அனந்தம் என்றோ எந்த சப்தத்தினாலும் நிர்வசனம் செய்யமுடியாது என்று முன்பே விஜாரித்து ஸித்தம் செய்யப்பட்டிருக்கிறது.

பூர்வ:- '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் எந்த விதமான பேதமும் கிடையாது என்று நிஷேதம் செய்கின்றது என்று சொல்வது சரியல்ல. ப்ரஹ்மத்தை அன்றி வேறாக, ஸ்வதந்தரமாக எந்த ஒரு வஸ்துவும் இல்லை என்றே நிஷேதம் செய்கின்றது. அதனால் பொதுவாக எந்தவிதமான பேதமும் இல்லை என்று நிஷேதம் செய்யவில்லை. இந்தவிதம் இந்த வாக்யத்தினால் ஸாமான்யமாக (பொதுவாக) பேத நிஷேதம் செய்யப்பட்டிருந்தாலும் கூட 'ச்சாக பசு' (छाग पशु) ந்யாயேன விசேஷ நிஷேதத்தையே தெரிவிக்கின்றது என்றே

சொல்ல வேண்டும். ச்சாக பசு ந்யாயம் என்றால் என்ன என்ற ஆகாங்க்ஷை ஏற்படலாம் என்பதற்காக விளக்கப்படுகிறது. '*அக்னிஷ்டோமீயம் பசும் ஆலபேத*' என்ற விதி வாக்யத்தில், அக்னி, ஸோமம் இரண்டும் சேர்ந்த தேவதையாகக்கொண்ட, பசு யாகம் விதிக்கப்படுகிறது. இந்த விதி வாக்யத்தில் தெரிவிக்கின்ற 'பசு' என்ற பதம் பொதுவாக ஆடு, மாடு போன்ற நான்குகால் ப்ராணிகளைத் தெரிவிக்கின்றது. ஆனால் இதற்கு பின் வரும் '*ச்சாகஸ்ய வபாயாம்*' 'छागस्य वपायाम्' என்கிற வாக்யத்தில் இருக்கின்ற 'ச்சாக' என்ற பதம் 'ஆடு' என்ற அர்த்தத்தை தெரிவிக்கின்றது. ஆகையால் விதிவாக்யமான இந்த மந்திரத்தில் 'ச்சாக' என்ற பதம் 'ஆடு' என்ற அர்த்தத்தை தெரிவிக்கின்றது. ஆகையால் விதி வாக்யத்தில் உள்ள பசு என்ற பதம் மந்த்ரத்தை அனுசரித்து சாகம் (ஆடு) என்ற அர்த்தத்தையே மந்த்ரத்தின் விசேஷார்த்தமாக சொல்லப்படுகின்றது என்று பூர்வமீமாம்ஸையில், ஆறாவது அத்யாயத்தில் கடைசி அதிகரணத்தில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இதையே, 'ச்சாக பசு' ந்யாயம் என்று சொல்லப்படுகிறது. அதாவது, ஸாமான்யமாக மந்த்ரம் முதலானவைகளின் அர்த்தம் அறியப்படுகின்ற போது, அந்த மந்த்ரத்திலுள்ள விசேஷார்த்தத்தை தெரிவிக்கப்படுமானால், அதுவே 'ச்சாக பசு ந்யாயம்' என்று சொல்லப்படுகிறது. '*யூபே பசும் பத்னாதி*' என்ற வாக்யத்தில் யூபஸ்தம்பத்தில் பசுவை கட்ட வேண்டுமென்ற அர்த்தம்தான் ஸாமான்யமாக (பொதுவாக) கிடைக்கின்றது. ஆனால் பொதுவாக பசு என்பது நான்கு கால்களையுடைய ப்ராணியை குறிக்கலாம். அதனால் பசு என்று 'கோ' என்பதைக் குறிக்கின்றது என்று சொல்லலாம். ஆனால் யாக காலத்தில் 'யூபே பசும் பத்னாதி' என்று தெரிவிக்கின்றபோது, 'பசு' என்ற பொதுவான சப்தம் விசேஷார்த்தத்தில் பர்யவஸானத்தை அடைகின்றது என்பதே 'ச்சாக பசு ந்யாயம்' என்று சொல்லப்படுவது வழக்கம். இந்தவிதம் ப்ரஹ்மத்தில் பேதமில்லை என்று பொதுவாக சொல்லப்பட்டபோதிலும், விசேஷமான பேதம் இல்லை என்றே '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம் தெரிவிக்கின்றது என்றே (ஸ்வதந்தரமாக ப்ரஹ்மத்தை அன்றி வேறான வஸ்துவே இல்லை என்றே) சொல்லவேண்டும்.

ஸித்தா:- இது சரியல்ல. பொதுவாக சொல்லப்படும் வாக்யங்களில், விசேஷமாக ஒரு அர்த்தம் சொல்லப்படவேண்டுமானால், ஸாமான்ய அர்த்தத்தை எடுத்துக்கொள்வதில், ஏதாவது பாதகம் ஏற்படுமானால் தான், ஸாமான்யார்த்தத்தை விட்டு, விசேஷார்த்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். பேத ஸாமான்யத்தை நிஷேதம் செய்யும் '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம், ஏதாவது பாதகம் இருந்தால்தான் தான், விசேஷபேத நிஷேதத்தை தெரிவிக்கின்றது என்று சொல்லலாம். அவ்விதம் பாதகம் ஏதும் இல்லாததால் 'ச்சாக பசு ந்யாயம்' போல் அர்த்தம் செய்வது சரியல்ல (செய்ய முடியாது).

பூர்வ:- ஜீவேச்வர பேதம், ஜீவபரஸ்பர பேதம், ஜீவஜகத்பேதம், ஈச்வரஜகத் பேதம், சேதன அசேதன பேதம் என்று ஐந்து விதமான பேதங்களும் ப்ரத்யக்ஷத்தினால் அறியப்படுவதே ஸாமான்யார்த்தத்திற்கு பாதகம். ஆதலால் '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யத்திற்கு விசேஷார்த்தம் சொல்வது சரியே. அதனால் குறிப்பிட்ட சில பேதங்கள் இல்லை என்றே அந்த வாக்யத்திற்கு அர்த்தம் சொல்லவேண்டும் அன்றி ஸர்வபேத நிஷேதவாக்யம் என்று சொல்ல முடியாது.

ஸித்தா:- ப்ரத்யக்ஷம் ப்ரமாணமாக இருந்தால்தான், சாஸ்திர வாக்யம் பாதிதம் என்று சொல்லலாம். ரஜ்ஜுஞானத்திற்கு ஸர்ப்ப ஞானம் பாதிதம் என்று சொல்வதில்லை. (ரஜ்ஜுவை ஸர்ப்பம் என்று ப்ரத்யக்ஷம் தெரிவிக்கின்றது என்பதற்காக, ரஜ்ஜுஞானம் பாதிக்கப்படுகிறது என்று சொல்வதில்லை.) ப்ராந்தி ப்ரத்யக்ஷத்தினால் சாஸ்திரம் பாதிக்கப்படமுடியாது.

பூர்வ:- கர்ம காண்டம், ஜீவன் செய்யவேண்டிய பல யாகங்களை தெரிவித்து அதனால் ஈச்வரனை திருப்தி செய்ய வேண்டும் என்றும் சொல்கிறது. அதனால் ஜீவன் வேறு, ஈச்வரன் வேறு, என்றும் ஜீவனால் செய்யப்படும் கர்மா வேறு, அதன் பலன்கள் வேறு என்று இவ்விதம் சாஸ்திர ஸம்மதமாக பேதங்கள் இருப்பதாக ஒத்துக்கொள்ளப்பட்டிருப்பதால் இதுவே பாதகம் என்று சொல்லலாமே.

ஸித்தா:- இதுவரையில் அறியப்படாத பேதத்தை தெரிவிப்பதற்காக கர்மகாண்ட வாக்யங்கள் தெரிவிக்கவில்லை. ஏற்கனவே லோகத்தில் உள்ள பேதங்களை அனுவாதம் செய்து கர்மாக்களை விதிக்கின்றதே அன்றி ஞான காண்டத்திற்கு விரோதமாக பேதத்தை நிர்ணயம் செய்யவில்லை. அதனால் கர்மகாண்டம் பாதகம் இல்லை, அபேதமே தத்வம் என்றே சொல்ல வேண்டும். பேதம் வ்யாவஹாரிகம் என்றே அறிய வேண்டும்.

பூர்வ:- ஜீவேச்வர அபேதம் இருக்கட்டும். ஆனால் ஜகத் அசேதனம், ப்ரஹ்மம் சேதனம். இவ்விதம் பரஸ்பர விலக்ஷணமாக இருக்கின்ற இரண்டிற்கு அபேதம் எவ்விதம் சொல்ல முடியும்?

ஸித்தா:- ஜகத் என்றும் ப்ரஹ்மம் என்றும் இரண்டும் பரமார்த்தம் என்று சொன்னால்தான் இரண்டும் விலக்ஷணமாக இருக்கின்றதால், அபேதம் எவ்விதம் ஸித்திக்க முடியும் என்று கேட்கலாம். ப்ரஹ்மம் பரமார்த்தம், ஜகத் அபரமார்த்தம் என்பதால் அதன் பேதமும் அபரமார்த்தம் என்றே சொல்லவேண்டும். அதனால் அபேதம் சொல்வதால் எவ்வித ஹானியும் இல்லை.

பூர்வ:- ஜகத் மித்யை என்று ஸித்தித்தால் தானே அபரமார்த்தம் என்று சொல்லலாம்?

ஸித்தா:- 'யத் க்ருதகம் தத் அநித்யம்' என்ற ந்யாயத்தினால் உற்பத்தி இருக்கின்றதால் அது அநித்யம், மித்யை என்றே ஸித்திக்கின்றது. மூன்று காலத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பது எதுவோ அதுவே தத்வம். அதனால் ஜகத் அதத்வம் என்பதில் ஸந்தேகத்திற்கே இடமில்லை.

பூர்வ:- ஜகத்திற்கு ப்ரளயகாலத்தில் நாசம் இல்லை, ஸூக்ஷ்மரூபேண ஜகத் இருக்கின்றதால், ஜகத் நித்யம் என்றே சொல்ல வேண்டும்.

ஸித்தா:- ச்ருஷ்டிக்கு, பூர்வ அவஸ்தை ப்ரளயம், ப்ரளயத்திற்கு பூர்வஅவஸ்த்தை ச்ருஷ்டி. அதனால் ப்ரளயத்திலும் ஜகத் இருப்பதாகச் சொல்லப்படுமானால், இருக்கின்ற ஜகத்திற்கு, ச்ருஷ்டி ஏற்பட வேண்டிய அவச்யம் என்ன? ச்ருஷ்டியே இல்லை என்று சொல்லப்படுமானால் '*தத் தேஜோஸ்ருஜத*' என்ற ச்ருஷ்டி வாக்யங்களெல்லாம் அப்ரமாணம் என்றாகும். ச்ருதி வாக்யத்திற்கு விரோதம் ஏற்படும்.

பூர்வ:- ச்ருஷ்டி என்றால் புதிதாக உற்பத்தி என்று சொல்லத் தேவையில்லை. பீஜத்தில் அனபிவ்யக்தமாக (வெளிப்படாமல்) இருக்கின்ற வ்ருக்ஷமானது, அங்குரமாக

அபிவ்யக்தமாவதுபோல் (வெளிப்படுவது போல்) ச்ருஷ்டிக்குமுன் அவ்யக்தமாக இருக்கின்ற ஜகத், ஈச்வரனால் மறுபடியும் வ்யக்தமாகிறது என்று சொல்லலாமே? இவ்விதம் சொல்லப்படுவதால், ச்ருதிக்கும் விரோதமில்லை.

ஸித்தா:- அப்படியானால் '*அவ்யக்தாத் வ்யக்தயஸ்ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே, ராத்ரியாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஞ்ஞகே*' ('अव्यक्ताद् व्यक्तयस्सर्वाः प्रभवन्त्यहरागमे रात्र्यागमे प्रलीयन्ते तत्रैवाव्यक्तसंज्ञके) என்ற கீதாவசனம் தெரிவிக்கின்ற முறையில், ப்ரஹ்மாவின் பகல் காலத்தில் ஜகத் உண்டாகி, இரவு காலத்தில் லயத்தை அடைகிறது. ஜன்ம நாசம் உள்ள ஜகத் எவ்வாறு நித்யம் என்று சொல்வது.

பூர்வ:- கார்யம் என்பது காரணத்தில் அனபிவ்யக்தமாக இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். 'ப்ரபவந்தி' என்ற பதம் கார்யம் ஸ்தூலரூபமாக ஆகின்றது என்றே தெரிவிக்கின்றது. நாசம் என்பது ஸூக்ஷ்மாவஸ்தை என்பதையே தெரிவிக்கின்றது. உண்டாகிறது என்பது ஸ்தூலாவஸ்தையை தெரிவிக்கின்றது என்றே சொல்லவேண்டுமே அன்றி உற்பத்தி, நாசம் உள்ளது ஜகத் என்று கீதாவசனம் தெரிவிக்கவில்லை.

ஸித்தா:- ஜகத் 'நித்யம்' என்று சொல்லப்படுமானால் ஸ்தூல ஜகத் நித்யமா? அல்லது ஸூக்ஷ்ம ஜகத் நித்யமா? ஸூக்ஷ்ம ஜகத் நித்யம் என்று சொல்லப்படுமானால், அந்த ஜகத் எப்போதும் ஸூக்ஷ்மமாகவே இருக்க வேண்டும். ஆனால் ஸூக்ஷ்மாவஸ்தையை விட்டு வேறு ஒரு அவஸ்தையாக மாறுபடுமானால், அதை நித்யம் என்று எவ்விதம் சொல்ல முடியும்? அதேபோல் ஸ்தூல ஜகத் நித்யம் என்றால், அதுவும் எப்போதுமே ஸ்தூலமாக இருக்க வேண்டும். அவ்விதமின்றி ஜகத் வேறு அவஸ்தைக்கு மாறுமானால் அதை நித்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஆகவே ஒரு ஸமயம் ஸ்தூலமாக இருக்கின்ற ஜகத், மற்றொரு ஸமயம் இல்லை. அதேபோல் ஒருஸமயம் ஸூக்ஷ்மமாக இருக்கின்ற ஜகத் வேறொரு ஸமயம் இல்லை. இவ்விதம் ஒருகாலத்தில் இருப்பது மற்றொரு காலத்தில் இல்லாமல் இருக்குமானால் அந்த வஸ்துவை 'நித்யம்' என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ஒரு ஸமயம் ஸூக்ஷ்மமாகவும், மற்றொரு ஸமயம் ஸ்தூலமாகவும் இருப்பது ஜகத் என்ற ஒரே வஸ்துதானே? அதனால் தர்மியான ஒரே ஜகத் - ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் இரண்டுவித தர்மங்கள் உடையதாக இருக்கலாமே? அதனால் ஜகத் நித்யமென்றே சொல்லலாம்.

ஸித்தா:- ஒரே வஸ்துவில் ஸ்தூலத்வம், ஸூக்ஷ்மத்வம், அபிவ்யக்தத்வம் அனபிவ்யக்தத்வம் என்ற விருத்தமான இரண்டு தர்மங்கள் இருக்க முடியாது.

பூர்வ:- ஒரு வஸ்துவில் இரண்டுவிதமான விருத்த தன்மைகள், ஒரே காலத்தில் இருக்க முடியாது ஆனால் கால பேதேன இருக்கலாமே? ஏனெனில் விசேஷணங்கள் அநித்யம். விசேஷ்யமான ஜகத் நித்யம் என்றே சொல்ல வேண்டும். அதனால் விசேஷணங்கள் அநித்யம் என்பதற்காக விசேஷ்யம் அநித்யம் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- விசேஷணங்களை விட்டு, விசேஷ்யாம்சம் என்று சொல்லப்படும் அந்த விசேஷ்யாம்சம் என்பது என்ன?

பூர்வ:- ஜகத் ஸ்தூலமாகவோ, அல்லது ஸூக்ஷ்மமாகவோ எவ்விதம் இருந்தாலும் அந்த வஸ்து 'அசித்' (ஜடம்) என்றே சொல்லப்படுகிறது. அதனால் அசித் என்ற அம்சம் விசேஷ்யம், அது நித்யம் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- அசித் வஸ்துவே விசேஷ்யம், அதுவே அஜம், நித்யம், அனந்தம் என்று சொல்லப் படுமானால், பரமாத்மா ஜகத்காரணம் என்று சொல்லப்படுவதால் அந்த பரமாத்மா 'சித்' என்பதற்கு காரணமா? அல்லது 'அசித்' என்பதற்கு காரணமா? எதற்கு பரமாத்மா காரணம்? அசித் நித்யம் என்றால் அதற்கு உற்பத்தி விநாசம் சொல்ல முடியாது. அதுமட்டுமல்ல, அசித் நித்யம் என்று சொல்லப்படுமானால், அதற்கு பரமாத்மா காரணம் என்று சொல்ல முடியாது.

பூர்வ:- ப்ரஹ்மம் அசித்திற்கு காரணமல்ல என்றாலும் அசித்தின் பரிணாமமாக உண்டாகின்ற பஞ்ச பூதங்களுக்கு காரணம் என்று சொல்லலாம்.

ஸித்தா:- பஞ்ச பூதங்களுக்கு அசித் காரணமில்லை என்றும் ப்ரஹ்மம் காரணம் என்றும் சொல்லப்படுமானால், ம்ருத்திலிருந்து கடம் உண்டாவதற்கு குலாலன் எவ்விதம் நிமித்த காரணமோ, அதுபோல் ப்ரஹ்மம் நிமித்த காரணம் என்று சொல்லப்பட்டதாகவே ஆகுமே அன்றி பரிணாமிகாரணம் ஆகமுடியாது.

பூர்வ:- உபாதான காரணம் என்று சொல்லாவிடில் என்ன ஹானி?

ஸித்தா:- *'ப்ரக்ருதிச்ச ப்ரதிஞ்ஞாத்ருஷ்ட்டாந்த அனுபரோதாத்'* (प्रकृतिश्च प्रतिज्ञादृष्टान्तानुपरोधात् १.४.२३) என்ற ப்ரஹ்மஸூத்ர விரோதம் ஏற்படும். ப்ரஹ்மம் நிமித்த காரணமாகவும் உபாதனகாரணமாகவும் இருக்கின்றது என்று வ்யாஸராலேயே சொல்லப் படுகிறது.

பூர்வ:- கேவல ப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்த காரணம் என்றும், அசித் விசிஷ்ட்டமான ப்ரஹ்மம் ஜகத் உபாதான காரணம் என்றும் சொல்லலாமே?

ஸித்தா:- அசித்விசிஷ்ட்ட ப்ரஹ்மமே ஜகத் உபாதான காரணம் என்று அசித் விசிஷ்ட்டம் என்று ப்ரஹ்மபதத்திற்கு விசேஷணம் சொல்லப்படுவதாலேயே, அசித் என்பதே உபாதானம் என்று சொல்லப்பட்டதாக ஆகுமே அன்றி சித்ஸ்வரூபத்திற்கு உபாதானத்வம் சொல்லப்பட்டதாக ஆகாது. மேலும், பரிணாமி உபாதான, உபாதேய பாவம் சொல்லப் படுமானால், அவை இரண்டிற்கும் அவச்யம் ஸாலக்ஷண்யம் இருக்க வேண்டும். அதனால் ப்ரஹ்மம் பரிணாமி உபாதானம் என்று சொல்ல முடியாது. அசித் என்பதே பரிணாமி உபாதானம் என்று சொல்ல வேண்டும். மேலும், *'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்'* என்ற ச்ருதி வாக்யம் காரணம் ஸத்யம் என்று தெரிவிக்கின்றது. ஜகத் என்பது பஞ்ச பூத கார்யம். ஜகத்திற்கு அசித் என்பது காரணம் என்று சொல்லப்படுவதால் 'ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' என்ற வாக்யத்தினால் ஜகத் அஸத் என்றும் சொல்ல வேண்டும். ஆகவே காரணத்தில் ஸத்யத்வமும், கார்யத்தில் நித்யத்வம் இருப்பதாக சொல்ல முடியாது. ஏனெனில், ஸத்யத்வம், நித்யத்வம் என்ற இரண்டும் ஒன்றேயானதால் அதிகரண பேதம் சொல்ல முடியாது.

பூர்வ:- ஜகத் அநித்யம் என்றாலும் அசித்வஸ்து ஸத்யம் என்பதால் அசித்திற்கும், ப்ரஹ்மத்திற்கும் பேதம் இருக்கின்றதென்று சொல்லலாமே? அதனால் 'நேஹ நானாஸ்தி' என்ற வாக்யம் ஸர்வ நிஷேதவாக்யம் என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- 'அசித்' என்று எந்த வஸ்து சொல்லப்படுகின்றதோ, அது த்ருச்யமாக (அறியப் படுவதாக) இருப்பதால் அது மித்யா என்றே சொல்லவேண்டும். அதாவது ரஜ்ஜு ஸர்ப்பம்போல் மித்யை என்றே சொல்ல வேண்டும். கார்யத்வம் மட்டும் மித்யாத்வ ப்ரயோஜகமல்ல, த்ருச்யத்வம் என்பதும் மித்யாத்வப்ரயோஜகம்தான். அதனால் அசித் வஸ்துவோ, அதன் பேதமோ, எதுவுமே பரமார்த்தமல்ல. நித்யம் என்றால் அது அஸத்யமாக இருக்காது. அஸத்யமாக இருக்குமானால் அது நித்யமாக இருக்க முடியாது.

பூர்வ:- வல்மீக ஸர்ப்பம் த்ருச்யம்தான். அதற்காக ரஜ்ஜு ஸர்ப்பம் போல் வல்மீக ஸர்ப்பம் மித்யை என்று சொல்ல முடியுமா? அதனால் த்ருச்யத்வம் மித்யாத்வப்ரயோஜகம் என்று சொல்ல முடியாது.

ஸித்தா:- வல்மீக ஸர்ப்பமும் த்ருச்யமாக (அறியப்படுவதால்) இருப்பதால் மித்யாத்வம் ஸம்பவிகின்றது. அதனால் அதையும் ஸத்யமென்று சொல்ல முடியாது. மித்யை என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- அப்படியானால், ப்ரஹ்மம் என்பதும் அனுபவத்திற்கு விஷயமாகின்றதால், ப்ரஹ்மமும் த்ருச்யம் என்றே சொல்ல வேண்டும். த்ருச்யமாக இருந்த போதிலும் ப்ரஹ்மம் ஸத்யமாக இருக்கின்றதே? அதேபோல் அசித் என்பதும் த்ருச்யமாக இருந்தாலும் ஸத்யமாக இருக்கலாமே?

ஸித்தா:- ப்ரஹ்மம் த்ருச்யம் என்று யாராலும் சொல்லமுடியாது. அத்ரேச்யம், அக்ராஹ்யம் ப்ரஹ்மம் என்று, ச்ருதிவாக்யமே ப்ரஹ்மம் த்ருச்யமில்லை என்று தெரிவிகின்றதே?

பூர்வ:- அசித், மித்யை என்றே இருக்கட்டும். ஆனால் ஜீவன் என்ற சித்வஸ்து ஸத்யம் என்பதால், ப்ரஹ்மமும் ஜீவனும் வேறு என்று தானே சொல்ல வேண்டும்?

ஸித்தா:- ப்ரஹ்மம் ஒன்றே சித்வஸ்து, ப்ரஹ்மத்தை அன்றி வேறாக ஜீவன் என்ற சித்வஸ்து இருப்பதாகச் சொல்லப்படவில்லை. ஜீவனே ப்ரஹ்மம்.

பூர்வ:- ஈச்வரன், சித், அசித் என்ற மூன்று பதார்த்தங்கள் இருக்கின்றது என்று சொல்லப்படுவதால், ஈச்வரனை சித் வஸ்து என்று சொல்ல முடியாது. சித், அசித் விலக்ஷணன் ஈச்வரன் என்றே சொல்ல வேண்டும்.

ஸித்தா:- ஞானஸ்வரூபமே ப்ரஹ்மம் என்பதால், ப்ரஹ்மம் சித் விலக்ஷணம் என்று எவ்விதம் சொல்ல முடியும்?

பூர்வ:- ப்ரஹ்மம் ஞானஸ்வரூபமென்றும் சொல்லமுடியாது என்று முன்னால் உங்களால் சொல்லப்பட்டதே? அதற்கு மாறாக (விருத்தமாக) ப்ரஹ்மம் சைதன்ய ஸ்வரூபம் என்று எவ்விதம் சொல்வது?

ஸித்தா:- ப்ரஹ்மம் ஞானஸ்வரூபம் என்று சொல்வது சரியல்ல என்றால் ஜீவனை மட்டும் சித்ஸ்வரூபம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ப்ரஹ்மத்திற்கு என்ன லக்ஷணம் சொல்லப்படுகிறதோ அதுவே ஜீவனுக்கும் லக்ஷணம் என்றே சொல்ல வேண்டும்.

பூர்வ:- ஜீவனும் ப்ரஹ்மமும் ஸச்சிதானந்த லக்ஷணத்தினால் அபேதம் இருக்கட்டும் அசித், சித் என்ற இரண்டும் விலக்ஷணமாக இருக்கின்றதால், இரண்டும் ஒன்று என்று சொல்ல முடியாது. பேதம் இருக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

ஸித்தா:- விலக்ஷணமாக இருந்தாலும் ப்ரஹ்மம் அதிஷ்டானம், அசித் ஆரோபம். ஆரோபிதங்களுக்கெல்லாம் அதிஷ்ட்டானமே ஸ்வரூபமானதால், இரண்டிற்கும் பேதம் என்று சொல்ல முடியாது. விலக்ஷணமாக இருந்தாலும் இந்த முறையில் அபேதம் சொல்லலாம்.

பூர்வ:- ப்ரஹ்மம் ஜகத்திற்கு அதிஷ்ட்டானம் என்று சொன்னால்தான் இரண்டிற்கும் அபேதம் சொல்லலாம். ஆனால் ப்ரஹ்மமும் ஜகத்தும் விலக்ஷணஸ்வரூபமானதால், ஜகத் அதிஷ்ட்டானம் ப்ரஹ்மம் என்று சொல்ல முடியாது.

ஸித்தா:- ப்ரஹ்மம் ஜகத் காரணம் என்றும் அவ்யக்தம் என்று உன்னாலேயே சொல்லப் படுகிறதே? மேலும், ''தஜ்ஜலான்'' என்ற ச்ருதி வாக்யமும் ஜகத் ப்ரஹ்மத்திலிருந்தே உண்டாகி அதிலேயே ஸ்திதிபெற்று அதிலேயே லயத்தை அடைகிறது என்றும், கார்யங்கள் எல்லாம் காரணத்தில்தான் ஸ்திதி பெற்றிருக்கின்றது என்று கடம் ஸராவம் முதலான, த்ருஷ்டாந்தங்களை கொண்டு விளக்கப்பட்டிருக்கின்றது.

பூர்வ:- மாயா பரிணாமம் ஜகத் என்று உங்களால் சொல்லப்படுவதால் அவ்யக்தம் என்ற மாயையில்தான் ஜகத் இருக்கின்றதென்று சொல்ல வேண்டுமே அன்றி ப்ரஹ்மத்தில் இருப்பதாக சொல்ல முடியாது.

ஸித்தா:- கார்யமான ஜகத், அதற்கு காரணமான அவ்யக்தத்தில் தான் இருக்கின்றது என்று சொல்லப்பட்டாலும், அவ்யக்தம் என்பது ப்ரஹ்மத்தில்தான் அத்யஸ்த்தமாக இருக்கின்றது. அதனால் ப்ரஹ்மம் ஜகத் காரணம் என்று சொல்லப்படுகிறது.

பூர்வ:- அவ்யக்தம் ப்ரஹ்மகார்யமல்ல. அதனால் ப்ரஹ்மத்தில் அவ்யக்தம் இருக்கிறது என்று எவ்விதம் சொல்ல முடியும்?

ஸித்தா:- உன் ஸித்தாந்தத்தில், ப்ரக்ருதி, புருஷன், ஈச்வரன், என்ற எல்லாமே வெவ்வேறாக இருக்கின்றது என்றும் அவைகள் நித்யம் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அத்வைத ஸித்தாந்தத்தில் அவ்யக்தம் ப்ரஹ்மகார்யம் என்றே சொல்லப்படுகிறது என்று முன்பே தெரிவிக்கப்பட்டது.

பூர்வ:- ஜகத் என்பது ஸாவயவம். அதனால் அதற்கு அதிஷ்ட்டானம் என்பதும் ஸாவயமாகத்தானே இருக்க வேண்டும்? நிரவயவமான ப்ரஹ்மம் ஸாவயவமான ஜகத்திற்கு அதிஷ்ட்டானம் என்று எவ்விதம் சொல்வது?

ஸித்தா:- ஸர்ப்பம் என்பது வல்மீகம் என்ற பொந்தில் தான் இருக்க வேண்டும். ஆனால் கயிற்றில் ஸர்ப்பம் எவ்விதம் இருக்க முடியும்? கயிற்றில் பொந்து (த்வாரம்) இருக்கின்றதா?

அவ்விதம் த்வாரம் இல்லாவிட்டாலும், ஸர்ப்பத்திற்கு அதிஷ்ட்டானம் ரஜ்ஜு என்று சொல்வது போல், ப்ரஹ்மம் ஜகத்திற்கு அதிஷ்ட்டானம் என்று சொல்வதால் ஆக்ஷேபத்திற்கு இடமில்லை.

பூர்வ:- கயிற்றில் ஸர்ப்பம் உண்மையில் இருந்தால் தானே, கயிற்றில் த்வாரம் இருக்கிறதா என்ற கேள்விக்கு இடம் உண்டு. கயிற்றில் ஸர்ப்பம் தோன்றுகிறதே அன்றி உண்மையில் ஸர்ப்பம் இல்லை என்பதால் இந்த கேள்வி பொருந்தாது.

ஸித்தா:- அதேபோல், ப்ரஹ்மத்தில் ஜகத் என்பது தோன்றுகிறதே அன்றி உண்மையாக ஜகத் என்பது வஸ்துவல்ல. அதனால்தான் ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பஞானம் போல், ஜகத் என்ற ஞானமும் ப்ராந்தி ஞானம் என்றே சொல்லப்படுகிறது.

பூர்வ:- கயிறு என்பதற்கும் ஸர்ப்பம் என்பதற்கும் ஸாத்ருச்யம் இருக்கின்றதால் கயிறு என்பதில் ஸர்ப்பம் என்ற ப்ராந்தி ஞானம் ஏற்படலாம். ஆனால் அதுபோல் ப்ரஹ்மத்திற்கும், ஜகத்திற்கும் ஸாத்ருச்யம் இல்லையே? கிளிஞ்சலில், ஸர்ப்பம் என்ற ப்ராந்தி ஏற்படுவதில்லையே?

ஸித்தா:- அதிஷ்ட்டான ஸ்வரூபத்திற்கும் ஆரோபித வஸ்துவிற்கும் ஸாம்யம் இருந்தால்தான் ப்ராந்தி ஏற்படும் என்று சொல்ல முடியாது. ஆகாசம் என்ற த்ரவ்யம் அதிஷ்ட்டானம். அதில் நீலம் என்ற நிறம் குணம் ஆரோபிதமாக தோன்றுகின்றதே? அதில் ஸாம்யம் என்ன இருக்கின்றது? ஸாம்யம் இல்லாவிட்டாலும் ஆரோபிதம் ஏற்படலாம். அதனால் ப்ரஹ்மத்தில் ஜகத் அத்யஸ்த்தம் என்று சொல்லப்படுவதில் பொருந்தாத விஷயம் ஏதுமில்லை.

பூர்வ:- ஒரு வஸ்து, வேறொரு வஸ்துவாக தோன்றும் இடத்தில், அதிஷ்ட்டானமான வஸ்துவின் ஸாமான்ய அம்சம் மட்டும் அறியப்பட்டு, விசேஷாம்சம் அறியப்படாததால் அத்யாஸம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் நிர்விசேஷமான ப்ரஹ்மத்தினிடம் ஸாமான்யாம்சம் என்றும், விசேஷாம்சம் என்றும் விசேஷணங்கள் சொல்ல முடியாது. அதனால் ப்ரஹ்மத்தினிடம் ஜகத் அத்யஸ்தம் என்று சொல்வதற்கு முடியாது.

ஸித்தா:- நிர்விசேஷமான சுத்த ப்ரஹ்மத்தில் ஜகத் அத்யஸ்த்தம் என்று சொல்லப்படவில்லை. ப்ரஹ்மத்தினிடம் மாயை என்பதே முதலில் அத்யஸ்த்தம் என்றும் அதன் பிறகே ஜகத் அத்யஸ்த்தம் என்று சொல்லப்படுவதால், ஸவிசேஷப்ரஹ்மத்தில்தான் ஜகத் அத்யஸ்த்தம் என்று சொல்லப்படுகிறது. மாயை, ப்ரஹ்மத்தில் அத்யஸ்த்தமாகின்ற போது, ப்ரஹ்மஸ்வரூபம் பூராவும் மறைக்கப்படாமல், ஓரளவு மறைக்கப்படுகிறது என்றே சொல்லப்படுகிறது. ஆகையால் ஸோபாதிக (மாயா உபாதியுடன் கூடிய) ப்ரஹ்மத்தில் தான் ஜகத் அத்யஸ்த்தம் என்று சொல்லப்படுவதால், உபாதியினால் ஸாமான்ய, விசேஷபாவங்கள் ப்ரஹ்மத்தினிடம் வ்யவஹாரதசையில் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மத்தில் அத்யஸ்த்தமான மாயை என்பதே ஸவிசேஷம். அதனால் ப்ரஹ்மம் நிர்விசேஷமாக இருந்தாலும் ஸோபாதிகஸ்வரூபம் ஸவிசேஷம் என்பதால் அதில் ஸாமான்ய, விசேஷம் என்ற அம்சம் இருப்பதாகச் சொல்லப்படுமானால் அதில் ஹானி ஏதுமில்லை. ஸவிசேஷ ப்ரஹ்மத்தில், விசேஷஸ்வரூபம் மறைபட்டு, ஸாமான்யம்சம் மட்டும் அறியப்படுவதால், ஜகத் அத்யஸ்த்தம் என்று சொல்லலாம்.

பூர்வ:- நிர்விசேஷ ப்ரஹ்மத்தில் மாயையினால் ஜகத் அத்யஸ்த்தம் என்றால், அந்த மாயை எதனால் ப்ரஹ்மத்தில் அத்யஸ்த்தம் ஆகிறது ?

ஸித்தா:- மாயை என்பது அனாதி. மாயா நிவர்த்தி ஏற்படுகின்ற போது ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று சொல்லப்படுகிறது. ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று அறியப்பட்டபிறகு மாயை அத்யஸ்த்தம் என்று சொல்லப்பட்டால்தான், மாயை எவ்விதம் அத்யஸ்த்தமாகிறது, மாயை எப்போது ப்ரஹ்மத்தில் அத்யஸ்த்தம் என்றெல்லாம் கேள்விக்கு இடமுண்டாகும். ஆனால் மாயை அனாதி என்றே சொல்லப்படுவதால், ஆதி அறியப்படாமல் அனாதி காலமாகவே ப்ரஹ்மத்தில் அத்யஸ்த்தமாக இருக்கின்றதால் தான், ஸவிசேஷமாக அறியப்படுகிறது என்பது சொல்லாமலேயே அறியப்படுகிறது. அதனால் தான் மாயா ரஹிதம் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று அறிய வேண்டும். அதனால், மாயை எவ்விதம் ப்ரஹ்மத்தில் அத்யஸ்த்தம் என்ற கேள்வியே சரியல்ல. சித் என்பது சைதன்யஸ்வரூபம். அதனால் சைதன்யஸ்வரூபத்தில் பேதமே இருக்க முடியாது. அசித் என்பதே சைதன்யத்தில் அத்யஸ்த்தம் என்று சொல்லப்பட்டதால், அசித் என்பதற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் இருப்பதாக சொல்லமுடியாது. அதனால் சித்வஸ்துவினாலோ, அசித்வஸ்துவினாலோ ப்ரஹ்மத்திற்கு பேதம் என்பதே ஸம்பவிக்க முடியாது. (ஏற்பட முடியாது)

பூர்வ:- இதுவரை விஜாரிக்கப்பட்டதிலிருந்து ப்ரஹ்மம் சித்ஸ்வரூபமானதால் சித்ஸ்வரூபத்திலிருந்து வேறுபட்டது என்று சொல்ல முடியாததால், ஸஜாதீய பேதம் இல்லை என்று ஸித்திக்கின்றது. அதேபோல் அசித் என்பதும் ப்ரஹ்மத்தில் ஆரோபிதம் என்று சொல்லப்பட்டதால் அசித் ஸ்வரூபத்தினாலும் பேதமில்லை என்பதால் விஜாதீய பேதமும் இல்லை என்று ஸித்திக்கின்றது. ஆனால் ப்ரஹ்மத்தில் ஸ்வகத பேதம் இருப்பதாகவே சொல்ல வேண்டும் ஏனெனில், ப்ரஹ்மம், ஜகத்தை ச்ருஷ்டித்து, அதை ரக்ஷித்து, லயத்தை அடையச்செய்கின்றது என்பதால் இந்த மூன்று தன்மைகளும் ப்ரஹ்மத்தினிடம் இருப்பதாகவே சொல்ல வேண்டும். அதனால் ஸ்வகத பேதம் இருக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

ஸித்தா:- ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற தன்மைகள் எல்லாம் எந்த வஸ்துவிற்கு சொல்லப்படுகிறதோ, அந்த வஸ்து உண்மையில் இருந்தால்தான், அந்த தன்மைகள் ப்ரஹ்மத்தில் இருப்பதாகச் சொல்ல முடியும். ப்ரஹ்மத்தில் ஜகத் ஆரோபிதம் என்பதால், ப்ரஹ்மத்திற்கு ஸ்வகத பேதம் என்பதும் சொல்ல முடியாது. அதனால் பேதம் பரமார்த்தமில்லை என்றும், ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றும் ஸித்திக்கின்றது.

78

‘एकमेवेति’ श्रुतेः रामानुजाभिमतार्थनिराकरणम् ।

‘ஏகமேவா.....’ என்ற ச்ருதி வாக்யத்திற்கு ராமானுஜரால் தெரிவிக்கப்படும் அர்த்தம் சரியல்ல என்று நிராகரணம் செய்யப்படுகிறது

ராமானுஜர்-பூர்வ:- *‘பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி’* वहु स्यां प्रजायेयेति என்ற ச்ருதிவாக்யம் ப்ரஹ்மம்,’ நானே இந்த ஜகத்தாக ஆகப்போகிறேன் என்று தெரிவிக்கின்றதால், கார்யம் அனேகம் என்றே தெரிவிக்கின்றது. ‘ஸத்யம், ஞானம், அனந்தம், ப்ரஹ்ம’ என்று ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் இந்த விசேஷணங்கள் எல்லாமே ப்ரஹ்மத்தினிடம் இருப்பதாகச் சொல்லப்படுவதால், கார்ய நானாத்வம் (அனேகத்வம்) என்பதும் ப்ரஹ்மத்தில் இருப்பதாக சொல்லவேண்டும். இவ்விதம் கார்யங்கள் அனேகம் என்றாலும், காரணம் ஒன்றுதான். எவ்விதம், ம்ருத்கார்யமான கடம், ஸராவம் முதலானவைகள் அனேகமாக இருந்தாலும் எல்லாவற்றிர்க்கும் ம்ருத் என்ற ஒன்றே காரணம். அதேபோல் ஜகத் என்ற கார்யம் அனேக விசித்ரமாக இருந்தாலும் ப்ரஹ்மம் என்ற காரணம் ஏகம் தான். ‘நீலம், மஹத், ஸுகந்தம், உத்பலம்’ என்று ஸாமானாதிகரண்யப்ரயோகத்தினால், நீலம், முதலான விசேஷணங்கள் அனேகமாக இருந்தாலும் உத்பலம் என்ற விசேஷ்யம் ஒன்றே என்பது போல், ‘ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம’ என்ற ஸாமானாதிகரண்ய வாக்யம், ஸத்யம் முதலான அனேக விசேஷணங்கள் இருப்பதாக தெரிவித்தாலும் விசேஷ்யமான ப்ரஹ்மம் ஏகம் தான். அதனால், ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று சொல்வது சரியல்ல. *‘ஏகமேவ அத்விதீயம்’* (एकमेव अद्वितीयं ब्रह्म) என்ற ச்ருதி வாக்யம், ப்ரஹ்மம் ஏகம் என்று தெரிவிகின்றதே அன்றி, ப்ரஹ்மத்தில் எந்த விசேஷங்களும் இல்லை என்று அர்த்தம் செய்வது சரியல்ல.

ஸித்தா:- இதற்கு முன் உன்னால், கார்யத்திற்கும், காரணத்திற்கும் பேதம் இருப்பதாகச் சொல்வது குதர்க்க ஸித்தம் என்று சொல்லப்பட்டதே? கார்ய நானாத்வம் (அனேகத்வம்) இருப்பதாகச் சொல்லப்படுமானால் காரண நானாத்வம் சொல்லவேண்டுமே? அதற்கு மாறாக இப்போது கார்யம் அனேகம் காரணம் ஏகம் என்று எவ்விதம் சொல்ல முடியும்? காரணத்தில் விசித்ரம் இல்லாமல், கார்யத்தில் மட்டும் வைசித்ரியம் எவ்விதம் இருக்க முடியும்? கடம் ஸராவம் முதலானவைகளுக்கு ம்ருத்காரணம். வஸ்த்ரத்திற்கு நூல் காரணம் என்று அந்தந்த கார்யத்திற்கு எது காரணமோ அதுவும் வெவ்வேறாகத்தானே இருக்கின்றது? அதனால் கார்யங்கள் எல்லாவற்றிர்க்கும் காரணம் ஒன்றே என்று எவ்விதம் சொல்ல முடியும்?

பூர்வ:- ம்ருத்கார்யமான கடம் முதலானவைகள் அனேகமாக இருந்தாலும் அதன் காரணம் ம்ருத் என்ற ஒன்றே என்று உதாரணம் சொல்லப்பட்டது. அதேபோல் ஜகத் என்ற கார்யம் அனேகமாக இருந்தாலும், அதற்கு காரணமான ப்ரஹ்மம் ஒன்றே என்று சொல்லப்பட்டது.

ஸித்தா:- இந்த உதாரணம், ப்ரஹ்மத்தில் ஸ்வகதபேதம் இருக்கின்றது என்று தெரிவிப்பதற்காக உன்னால் சொல்லப்பட்டது. அதுசரியல்ல. ஏனெனில் ம்ருத்கார்யம் என்ற கடம் ஸராவம் முதலானவை ம்ருத்விகாரம் (பரிணாமம்) என்று தெரிவிப்பதன் மூலம் கடம் முதலானவை அனேகமாக இருந்தாலும் ம்ருத் என்ற ஒன்றே எல்லாவற்றிலும் இருக்கின்றதால், ம்ருத் அனேகமாக ஆகவில்லை என்பதையே இந்த உதாரணம் தெரிவிக்கின்றது அதேபோல் ப்ரஹ்மம் என்ற காரணத்தை அன்றி வேறாக ஜகத் என்ற கார்ய நானாத்வமில்லை என்று தான் அர்த்தம் ஸித்திக்கின்றதே அன்றி, ப்ரஹ்மத்தில் ஸ்வகத பேதம் இருப்பதாக ஸித்திக்கவில்லை. அதனால் இந்த உதாரணத்தைக் கொண்டு எந்த விஷயத்தை ஸாதிக்க வேண்டுமோ அதை ஸாதிக்க முடியவில்லை என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ம்ருத் என்ற காரணத்தில் கடம் முதலான கார்யங்கள் இருப்பது போல், ப்ரஹ்மம் என்ற காரணத்தில் ஜகத் என்ற கார்யம் இருக்கின்றதால், 'ப்ரஹ்மம் ஸவிசேஷம்' என்றே சொல்ல வேண்டும். 'நிர்விசேஷம் ப்ரஹ்மம்' என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- எவ்விதம் ம்ருத் என்பதைத் தவிர கடம் முதலான பதார்த்தங்களோ அல்லது ரஜ்ஜுவை அன்றி வேறான ஸர்ப்பம் என்பதோ இருப்பதாக சொல்ல முடியாதோ, அதேபோல், ப்ரஹ்மத்தை அன்றி வேறாக ஜகத் என்ற பதார்த்தமே கிடையாது என்று சொல்லப்படுகிறது. அதனால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது என்பதில் ஆக்ஷேபத்திற்கு இடமே கிடையாது. இவ்விதம் ப்ரஹ்மத்தை அன்றி வேறாக ஜகத் என்பது பரமார்த்தமாக இருக்க முடியாது என்பதால், 'ஸர்வம்' என்பதே இல்லை என்றாகிறது. அதனால் ஸர்வஞ்ஞத்வம் முதலான குணவிசேஷங்களான கார்யங்கள் (ப்ரகாரம்) ப்ரஹ்மத்தில் பரமார்த்தமாக இருப்பதாக சொல்ல முடியாது. ஆகையால் கார்ய (ப்ரகார) நானாத்வமும் ப்ரஹ்மத்தில் கிடையாது என்றே சொல்ல வேண்டும். அதாவது, கார்யம் அனேகம் இருந்தாலும் காரணமான ப்ரஹமம் ஏகம் என்றும் கார்ய விசேஷங்கள் அனேகம் இருந்தாலும் ப்ரகாரியான விசேஷ்யம் ஒன்றே என்று காரணம் ப்ரஹ்மம் ஏகம், ப்ரகாரிப்ரஹ்மம் ஏகம் என்று சொல்வதெல்லாமே பொருந்தாது. ஆகவே, அகார்யம், அகாரணம், நிஷ்ப்ரகாரம் என்று சொல்லப்படுவதால் ப்ரஹ்மம் ஏகம் என்றும் நிர்விசேஷம் என்றும் ஸித்திக்கின்றது.

79

'नेह नानास्ति किंचने'ति श्रुत्यर्थविचारः ।

'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' இதி ஶ்ருத்யர்த்த விசார:

பூர்வ:- ஜீவன் வேறு ஈச்வரன் வேறு என்றும், ஜீவன் கிஞ்சிஞ்ஞத்வம், அல்பசக்தித்வம் முதலான குணங்கள் உள்ளவன் என்றும், ஈச்வரன் ஸர்வஞ்ஞன், ஸர்வ சக்தன், ஸர்வாந்தர்யாமி போன்ற தன்மைகள் உடைய மஹிமை வாய்ந்தவன் என்பது எல்லாம் ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களினால் அறியக்கூடியதல்ல. இவையெல்லாம் சாஸ்திரத்தினால் தான் அறியவேண்டும். சாஸ்திரம் ஈச்வரனைப்பற்றி ஸர்வஞ்ஞத்வம் முதலான குணங்கள் உடையவர் என்று, விசேஷங்கள் உள்ளவராகவே தெரிவிக்கின்ற போது, அந்த சாஸ்திரமே ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று தெரிவிக்கின்றது என்று சொல்லப்படுவது பரிகசிக்கத்தக்கதாகும். ஆகவே வேதமே ஈச்வர குணங்களை தெரிவிக்கின்ற போது ச்ருதி வாக்யங்கள் ஸர்வ விசேஷங்களையும் நிஷேதம் செய்கின்றது என்று '*நேஹ நானாஸ்தி*' (नेह नानास्ति) என்ற ச்ருதிக்கு அர்த்தம் செய்வது சரியல்ல.

ஸித்தா:- நான் வேறு, ஈச்வரன் வேறு, என்று ஏற்படும் ஞானம் ப்ராந்தியினால் ஏற்படும் ப்ரத்யக்ஷ ஞானம். ஜீவேச்வர பேதமே இல்லாத போது பேதம் இருப்பதாக ஞானம் ஏற்படுமானால் அது ப்ரமம் (ப்ராந்திப்ரத்யக்ஷம்) என்றே சொல்ல வேண்டும். ஈச்வரனிடம் ஸர்வஞ்ஞத்வம் முதலான குணங்கள் இருப்பதாக தர்க்கத்தைக்கொண்டு நையாயிகனால் ஸாதிக்கப்படுகிறது. அதாவது, (விமதம் ஸகர்த்ருகம், கார்யத்வாத், கடவத் என்று) ஜகத்திற்கு ஈச்வரன் கர்த்தாவென்றும், கர்த்தா என்றால் '*தத் உபாதான கோசர அபரோக்ஷஞான சிகீர்ஷா க்ருதிமத்வம்*' என்று 'கர்த்ருத்வம்' என்பதற்கு வ்யாக்யானம் செய்கின்றான். அதாவது எந்த கார்யத்திற்கு எவன் கர்த்தாவோ அவன் அந்த கார்யத்தை எவ்விதம் செய்ய வேண்டும், எதைகொண்டு செய்ய வேண்டும் என்பது போன்ற ஞானமும், அதை செய்யக்கூடிய சக்தி, பொருள்கள் போன்ற எல்லாம் அறிந்து செய்பவன் எவனோ அவனே கர்த்தா என்று சொல்லப்படும். இப்பேர்ப்பட்ட அறிவுடையவனே அந்த கார்யத்தை ஒழுங்காகச்செய்ய முடியும். ஆகவே இந்த ப்ரமாண்டமான ஜகத்தை ச்ருஷ்டிக்க வேண்டுமானால் ஈச்வரன் ஸர்வஞ்ஞனாகவும், ஸர்வசக்தனாகவும், ஸர்வாந்தர்யாமியாகவும் இருக்க வேண்டும் என்று யுக்தியைக் கொண்டு ஈச்வரனிடம் இவ்வளவு விசேஷணங்களையும் கற்பிக்கின்றான். இவ்விதம் தெரிவிக்கின்ற அஸத் சாஸ்திரத்தை அனுவாதம் செய்து, வேதாந்த சாஸ்திரம் இந்த விஷயம் தர்க்கத்தினால் ஸாதிக்ககூடியது அல்ல என்று தெரிவிப்பதற்காக, ஸர்வஞ்ஞத்வம் முதலான குணவிசேஷங்கள் பற்றி தெரிவித்து, உண்மையில் ஈச்வர ஸ்வரூபம் என்ன என்பதை போதிப்பதற்காகவே, முயற்சிக்கின்றதே அன்றி, ஈச்வரனிடம் குணவிசேஷங்கள் இருக்கிறது என்று தாத்பர்யேண தெரிவிக்கவில்லை. அதனால், ப்ரத்யக்ஷத்தினால் ஜீவேச்வர பேதம் ப்ராந்தி ஸித்தம் என்றும், அஸத் (தர்க) சாஸ்திரத்தினால் தெரிவிக்கப்படும்

ஸர்வஞ்ஞுத்வம் முதலான விசேஷங்களும் உண்மையில் கிடையாது என்றே '*நேஹ நானாஸ்தி*' என்று ச்ருதி வாக்யம் நிஷேதம் செய்கின்றது.

பூர்வ:- '*தஜ்ஜலானிதி ஶாந்த உபாஸீத*' 'तज्जलानिति शान्त उपासीत' என்ற வாக்யம் '*தஜ்ஜத்வாத், தல்லத்வாத், ததனத்வாத்*' ப்ரஹ்மத்திலிருந்தே இந்த ஜகத் உற்பத்தி, ஸ்திதி, லயம் எல்லாம் ஏற்படுகிறது என்றும், ப்ரஹ்மம் ஏகரூபம் என்றும் ஜகத் என்பதே அனேக ரூபமாக இருக்கின்றதென்றும் தெரிவிக்கின்றது. இவ்விதம் ப்ரஹ்மமே அனேக ரூபமான இந்த ஜகத்தாக இருக்கின்றது என்று உபாஸிப்பானாகில் அவனுக்கே சாந்தி நிலைக்கும் என்று '*தஜ்ஜலானிதி சாந்த உபாஸீத*' என்ற வாக்யம், தெரிவிக்கின்றது. ஆகையால் இந்த வாக்யம், 'ப்ரஹ்மம் ஏகம்' என்று தெரிவிப்பதாக சொல்வது சரியல்ல.

ஸித்தா:- '*தஜ்ஜத்வாத், தல்லத்வாத், ததனத்வாத் தஜ்ஜலானிதி சாந்த உபாஸீத*' என்ற வாக்யம் பேததர்சனத்தினால் தான் சாந்தி ஏற்படவில்லை, எந்த ப்ரஹ்மத்திலிருந்து இவையெல்லாம், உண்டாகி, எதில் ஸ்திதி பெற்று, எதில் லயத்தை அடைகின்றதோ அந்த ப்ரஹ்மம் ஒன்றே பரமார்த்த வஸ்து. அதனால், 'ஸர்வம் ப்ரஹ்மமயம்' என்று உபாஸனை செய்யப்படுமானால் சாந்தி ஏற்படும் என்றே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது. இதே கருத்தையே, ஈசாவாஸ்ய உபநிஷத்தும் '*ஈசாவாஸ்யம் இதகும் ஸர்வம்*' என்று தெரிவிக்கின்றது. ஆகவே, இந்த ஜகத்தையே ஈச்வரன் என்று அனுஸந்தானம் செய்யவேண்டும் என்று தெரிவிக்கின்றதே அன்றி, ப்ரஹ்ம நாநாத்வ அனுஸந்தானம் பண்ணவேண்டும் என்று தெரிவிக்கவில்லை. ஸர்வ ஜகத்தும் ப்ரஹ்மமே, ப்ரஹ்மத்தை அன்றி வேறாக எதுவுமில்லை என்று அறிவதே சாந்தி. அதுவே சாந்திக்கு காரணம் (ஹேது). உதாரணமாக, கயிறு என்ற ஒரே வஸ்துதான் அங்கு இருக்கின்றது. ஆனால் கயிற்றை கயிறு என்று அறியாமல் ஸர்ப்பம் என்று அறியப்படுவதால் தான் பயம், நடுக்கம் முதலான அனர்த்தங்கள் ஏற்படுகிறது. அதன் பிறகு அது ஸர்ப்பமல்ல, கயிறுதான் என்று உண்மையான வஸ்து ஞானம் ஏற்படுமானால், பயம் முதலானவை நிவர்த்திப்பதால் சாந்தி ஏற்படுகிறது. அதே போல் ப்ரஹ்மத்திலேயே தோன்றி, அதிலேயே ஸ்திதி பெற்று அதிலேயே லயத்தை அடைகின்ற போது இந்த ஜகத் ஸத்யம் என்று ப்ராந்தி ஞானத்தினால் ஏற்பட்ட ஸம்ஸாரம், நிவர்த்திக்கிறது. எல்லாவற்றிர்க்கும் காரணமான ப்ரஹ்மம், ஒன்றே என்று, ஸர்வம் ப்ரஹ்மமயம் என்று அறியப்படுமானால் அதனால் ஏற்படும் ஸம்ஸார நிவர்த்தியினால்தான் சாந்தி ஏற்படும். அதனால் இதுவே சாந்தி ஹேது என்று '*தஜ்ஜத்வாத், தல்லத்வாத், ததனத்வாத் தத்ஜலான் இதி சாந்த உபாஸீத*' என்ற வாக்யம் போதிக்கின்றது.

பூர்வ:- ம்ருத் த்ரவ்யம் என்பது ஏகம் தான், அதன் கார்யமான கடம் ஸராவம் முதலானவைகளாக அனேகமாக ஆகிறது. (அனேகத்வத்தை அடைகிறது) அதேபோல் ப்ரஹ்மம் ஏகமாக இருந்தாலும் ஜகத் ரூபமாக அனேகமாக (நானாத்வத்தை) ஆகிறது என்று நாநாத்வ அனுஸந்தானம் ஏன் பண்ணக்கூடாது?

ஸித்தா:- கூடஸ்த்தமான ப்ரஹ்மம், அனேக ரூபமான இந்த ஜகத்தாக பரிணாமத்தை அடைவதாகச் சொல்வது பொருந்தாது என்று ஏற்கெனவே சொல்லப்பட்டதே.

பூர்வ:- ப்ரஹ்மம், மாயையினால் ஜகத்தாக பரிணாமத்தை அடைந்தது என்று அனுஸந்தானம் பண்ணலாமே.

ஸித்தா:- ப்ரஹ்மமே ஜகத்தாக பரிணாமத்தை அடைகின்றது என்பது உன்னுடைய ஸித்தாந்தம். அதனால் மாயையினால் ஜகத்தாக பரிணாமத்தை அடைவதாக இப்போது அனுஸந்தானம் செய்யலாம் என்றால் உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படும் என்பதே உனக்கு பதில். ஆனால், என்னுடைய ஸித்தாந்தத்தை ஏற்பவர்களோ, அல்லது சிஷ்யர்களோ ஜிஞ்ஞாஸுவாக இருந்து தத்வத்தை அறிய வேண்டுமென்று விரும்பி இந்த கேள்வியை கேட்பார்களானால், அவர்களுக்கு மேலே பதில் சொல்கிறேன். அதாவது, மாயையினால் இந்த ஜகத், தோன்றுகிறது என்று சொல்லப்படுவதால், இந்த ஜகத் ப்ராந்தியே அன்றி பரமார்த்தமல்ல என்றே அறிய வேண்டும். இவை எல்லாம் பரமார்த்தம் என்று அறியப்படுமானால், அதுவே அனர்த்தகரம். அதனால் அனிஷ்ட்டகரமான நானாத்வ தர்சனம் நிவர்த்திக்கப்படவேண்டும். இதே கருத்தை '*ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப்னோதி*' என்ற ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது. அவ்விதமின்றி பிறந்தது முதலே நானாத்வ தர்சனம் (அனுஸந்தானம்) எல்லோரும் செய்து கொண்டிருக்கிறார்கள். இதையே சாஸ்திரம் விதிக்கின்றது என்று சொல்வது மிகவும் அபத்தம். ஆகையால் ஸ்வயம், நானாவாக இல்லாத ப்ரஹ்மம், மாயையினால் அனேக விசித்ர ரூபமாக தோன்றுகிறதே என்று சொல்லவேண்டுமே அன்றி ப்ரஹ்மத்திற்கு அனேகாத்மத்வம் சொல்வது சரியல்ல, அது வாஸ்தவமல்ல. உண்மையில் 'ப்ரஹ்மம் ஏகம்' என்று அறிவதே அபயஹேது. இவ்விதம் ஏகத்வ தரிசனமே அபயஹேது என்பதையே சாஸ்திரம் போதிக்கின்றது என்று சொல்லாமல், பய ஹேதுவான நானாத்வ தர்சனத்தை ச்ருதி தெரிவிக்கின்றது என்று சொல்லப்படுமானால் அனிஷ்ட்ட ஸாதனத்தை சாஸ்திரம் தெரிவிக்கின்றது என்று சொல்ல நேரிடும். '*ஏகம் ஸமம் ஸத்யம் ப்ரஹ்மாஹமஸ்மி*' என்று எந்த ப்ராஹ்மணன் அறிகின்றானோ, அந்த ஞானத்திற்கு ஈடான வித்தம் (தனம்) என்பதே கிடையாது என்றே தெரிவிக்கின்றது. ஸுகஸாதனமான இந்த ஞானமே வித்தம். இதைத்தவிர வேறு வித்தங்கள் எதுவும் ஸுகஸாதனமல்ல என்றே '*நைதாத்ருசம், ப்ராஹ்மணஸ்யாஸ்தி வித்தம், யதைகதா ஸமதா ஸத்யதா ச*' ('नैतादृशं ब्राह्मणस्यास्ति वित्तं यथैकता समता सत्यता च') என்று தெரிவிக்கின்றது. ஆகையால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்பதே ஸத்யம், அதில் த்வைதம் என்பது கல்பிதம். அதனால் முமுக்ஷுக்கள் '*ஏகமேவ அத்விதீயம்*' என்று அனுஸந்தானம் செய்வதே கர்த்தவ்யம்.

பூர்வ:- ப்ரஹ்மத்தில் நானாத்வம் உண்மை என்றே சொல்லவேண்டும். மாயையினால் கல்பிக்கப்பட்டது என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- ப்ரஹ்மம் ஸச்சிதானந்த ஸ்வரூபம். அந்த ப்ரஹ்மம் அஸத், அசித், துக்கம் என்ற லக்ஷணமுடைய ஜகத் ரூபம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ஜகத்தும் ப்ரஹ்ம கார்யம் என்பதால் ஸச்சிதானந்த லக்ஷணம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- '*விஞ்ஞானம் ஆனந்தம் ப்ரஹ்ம*' '*ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம*' என்று ப்ரஹ்மத்திற்கு லக்ஷணம் சொல்லப்படுகிறது. அதேலக்ஷணம் ஜகத்திற்கு சொல்லப்

படுமானால், ப்ரஹ்ம லக்ஷணத்திற்கு அதிவ்யாப்தி தோஷம் ஸம்பவிக்கும். அதுமட்டுமல்ல ஜகத் அசித் என்றே உன்னால் சொல்லப்படுவதால், ஜகத் ஸச்சிதானந்த லக்ஷணம் என்று சொல்லப்படுமானால் உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படும்.

பூர்வ:- ப்ரஹ்மத்தில், விசித்ர சக்தி இருக்கின்றதால், ப்ரஹ்மம் ஸச்சிதானந்த ரூபமாக இருந்தாலும், அந்த சக்தி விசேஷத்தினால், பின்ன ரூபமான ஜகத்ரூபமாக ப்ரஹ்மமே பரிணாமத்தை அடைவதாகச்சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரஹ்மம், மாயா சக்தியினால் ஜகத் ரூபமாக தோன்றுகிறது என்பது எங்களுடைய ஸித்தாந்தம். அதையே நீயும் தெரிவிப்பதால் எங்கள் ஸித்தாந்தத்தை ஒத்துக்கொண்டதாக ஆகும். மாயை, ப்ரஹ்மத்தின் விசித்ரசக்தி என்பதே எங்கள் ஸித்தாந்தம்.

பூர்வ:- ப்ரஹ்மம் ஜகத்ரூபமாக வாஸ்தவமாக பரிணாமிக்கின்றது என்று சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரஹ்மம் நிர்விகாரம். ப்ரஹ்மத்தினிடம் பரிணாமம் (விகாரம்) என்பதே ஏற்பட முடியாது. லோகத்தில் நிரவயவம் ஸாவயவமாக மாறுவதில்லை. லோகத்தில் எது த்ருஷ்டமாக இருக்கின்றதோ, (எது அறியப்படுகிறதோ) அதைக்கொண்டு அத்ருஷ்டத்தை (அறியப்படாததை) கல்பனை செய்யலாமே அன்றி அதற்கு விபரீதமாக எதையும் கல்பனை செய்வது சரியல்ல. எந்த வஸ்து பரிணாமத்தை அடையக்கூடியதோ அந்த வஸ்து அவிகாரி என்று சொல்வதில்லை. விகாரத்தை அடையாது என்று சொல்லமுடியாது. அவ்விதம் பரிணாமத்தை அடையுமானால் அதன் காரணத்திற்கும், அந்த கார்யத்திற்கும் லக்ஷணம் ஒன்றாகவே இருக்கவேண்டுமே அன்றி வேறுபட்ட லக்ஷணமாக இருக்க முடியாது.

பூர்வ:- கேவல ப்ரஹ்மத்திற்கு அனேகத்வம் ஸம்பவிக்காது என்றாலும், சிதசித் விசிஷ்டத்திற்கு வாஸ்தவ நானாத்வம் ஸம்பவிக்கலாமே?

ஸித்தா:- சிதசித் விசிஷ்டமான ப்ரஹ்மத்திற்கு நானாத்வம் என்று தெரிவிக்கின்றபோது, சிதசித் என்பதைத்தவிர நானாத்வம் என்று வேறு எதுவுமில்லை. சிதசித் விசிட்ட ப்ரம்மம் அதாத்விகம், நாநாத்வம் இருப்பதால்.

பூர்வ:- ஸுக்ஷ்ம சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மமாக இருக்கின்றபோது ஏகத்வம் என்றும், ஸ்தூல சித்சித் விசிஷ்ட ப்ரஹ்மமாக இருக்கின்ற போது நானாத்வம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- விசிஷ்டம் என்றால் ‘ஏகத்வம்’ என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டம் என்று தெரிவிக்கின்ற போதே சித்அசித் என்று இரண்டும் இருந்தால்தான் விசிஷ்டம் என்று சொல்லலாம். அதனால் ஏகத்வம் என்றும், அது விசிஷ்டம் என்று சொல்வது வ்யாஹதம் (பொருத்தமற்றது).

பூர்வ:- ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்ட ப்ரஹ்மம் என்பதும், ஸ்தூல சிதசித்விசிஷ்ட ப்ரஹ்மம் என்பதும் ஒன்றே என்பதால், ஏகத்வத்திற்கு ஹானி ஏதுமில்லை. சிதசித்விசிஷ்ட ப்ரஹ்மம் இரண்டு என்று சொன்னால்தான் ஏகத்வம் பாதிக்கப்படும். ஆகவே சிதசித்விசிஷ்டமாக இருந்த போதிலும் ப்ரஹ்மம் ஏகம் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- ப்ரஹ்மம் சிதசித்விசிஷ்ட்டம் என்று (வைசிஷ்ட்யம்) சொல்லப்படுமானால், ப்ரஹ்ம பாவம் க்லேசகரமாக ஆகும். ஒரு அசித் வைசிஷ்ட்யத்தினாலேயே (சரீர ஸம்பந்தத்தினாலேயே) ஜீவன் ஸம்ஸாரத்தை அடைந்து, அனுபவிக்கின்ற துக்கமே அளவிட முடியாது என்றால் ப்ரஹ்ம பாவத்தை அடைவானாகில், ப்ரஹ்மத்திற்கும் சிதசித்வைசிஷ்ட்யம் சொல்லப்படுமானால், எவ்வளவு க்லேசகரம் என்பதை நினைக்கவே முடியாது. ஆகவே இதுவரை சிதசித்விசிஷ்ட்டம் ப்ரஹ்மம் என்று உன்னால் சொல்லப்படுவதை ஒத்துக்கொண்டு பதில் சொல்லப்பட்டது. ஆனால் ப்ரஹ்மம் அசித் விசிஷ்ட்டம் என்று சொல்வதற்கே முடியாது. ஏனெனில் ஏற்கனவே பந்தனாக இருந்த ஜீவன், சாஸ்திர ஞானத்தினால் முக்தனாகிறான் என்பதால், அந்த முக்த ஜீவனிடம் ப்ரக்ருதி (மாயை) என்பது இருக்க முடியாது. ப்ரஹ்மம் நித்யமுக்தஸ்வரூபம். அதனால் அந்த ப்ரஹ்மத்துடன் ப்ரக்ருதி ஸம்பந்தம் எவ்விதம் ஏற்படமுடியும்? நிர்க்குணம், நிஷ்க்ரியம், சாந்தம் நிரவத்யம், நிரஞ்ஜனம் ப்ரஹ்மம் என்று, எதனாலும் ஸம்பந்தமற்றதான நிரஞ்ஜனமான ஸ்வரூபம் என்று தெரிவிப்பதால் ப்ரஹ்மத்திற்கு அசித் என்பதுடன் ஸம்பந்தம் எவ்விதம் சொல்லமுடியும்? சிதசித்விசிஷ்ட்டம் என்ற வாக்யமேபொருந்தாது. நிரஞ்ஜனம் சுத்தம் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுவதால் 'சுத்தம்' என்றால் விசிஷ்ட்டம் என்று சொல்வது பொருந்தாது. உண்மையில் ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம என்ற அனுஸந்தானமே முமுக்ஷுக்கள் செய்ய வேண்டும். மேலும் விசிஷ்ட்டம் என்றாலே ஒரு வஸ்துவில் மற்றொரு வஸ்துவின் ஸம்பந்தம் ஏற்பட்டால்தான் விசிஷ்ட்டம் என்று சொல்லமுடியும். இவ்விதம் ஸம்யோகம் இருக்குமானால் அதற்கு பிரிவு ஏற்பட்டே ஆகவேண்டும். அதனால் விசிஷ்ட்டம் என்றால் அதை நித்யம் என்று சொல்லமுடியாது. அதுமட்டுமல்ல, எந்த வஸ்து விசிஷ்ட்டம் என்று சொல்லப்படுகிறதோ, அந்த வஸ்து விசிஷ்ட்டமாக ஆவதற்குமுன் விசிஷ்ட்டமாக இல்லாமல் இருக்கவேண்டும். மேலும் ச்ருதியானது *'அஸங்கோ நஹி ஸஜ்ஜதே'* என்று ப்ரஹ்மம் அஸங்கம் என்றுதெரிவிக்கின்றதால், ப்ரஹ்மம் விசிஷ்ட்டம் என்று (வைசிஷ்ட்யம்) எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- *'அஸங்கோ ஹ்யயம் புருஷ:'* ('असङ्गो ह्ययं पुरुषः') என்ற வாக்யத்தில் உள்ள 'அயம்' சப்தம் ஜீவனை குறிப்பிட்டு சொல்லப்படுகிறது. அதனால் ஜீவனுக்கே அஸங்கத்வம் சொல்லப்படுகிறதே அன்றி ப்ரஹ்மத்திற்கு அஸங்கத்வம் சொல்லப்படவில்லை.

ஸித்தா:- ஸம்ஸாரியான ஜீவனுக்கு அஸங்கத்வம் எவ்விதம் ஸம்பவிக்கமுடியும்?

பூர்வ:- முக்தனான ஜீவனுக்கே அஸங்கத்வம் சொல்லப்படுவதாகச்சொல்லலாமே?

ஸித்தா:- நித்ய முக்தமான ப்ரஹ்மத்திற்கே அஸங்கத்வம் ஸம்பவிக்காது என்றால், முக்த ஜீவனுக்கு எவ்விதம் அஸங்கத்வம் ஸம்பவிக்கமுடியும்? ப்ரஹ்மமே ஸஸங்கம் என்று உன்னால் சொல்லப்படுகிறதே?

பூர்வ:- ப்ரஹ்மம் நித்ய முக்தம் என்று என்னால் சொல்லப்படவில்லை.

ஸித்தா:- அப்படியானால் பத்தமுக்தம் என்று சொல்கிறாயா?

பூர்வ:- ப்ரஹ்மம் பத்தம் என்றும் சொல்லமுடியாது. முக்தம் என்றும் சொல்லமுடியாது.

ஸித்தா:- முக்த ஜீவன், எவ்விதம் ப்ரக்ருதியிலிருந்து விடுபடுகிறானோ, அதே போல் ப்ரஹ்மம் ப்ரக்ருதி ஸம்பந்தமின்றி அதிலிருந்து விடுபடவில்லை என்றால் ப்ரஹ்மத்திற்கு பத்தஜீவன் மாதிரி எப்போதும் ப்ரக்ருதி ஸம்பந்தம் இருக்கின்றதால் ப்ரஹ்மம் பத்தன் என்று சொல்லவேண்டுமே அன்றி, பத்தனுமில்லை, முக்தனுமில்லை என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- ப்ரஹ்மத்திற்கு ப்ரக்ருதி ஸம்பந்தம் இருப்பதற்காக மட்டும் ப்ரஹ்மம் பத்தம் என்று சொல்லமுடியாது. ப்ரக்ருதி ஸம்பந்தம் இருந்தாலும் அதன் வசப்பட்டால்தான் பத்தம், ப்ரஹ்மம் ப்ரக்ருதி வசப்பட்டது அல்ல. பாரவச்யம் இல்லாததால் ப்ரஹ்மம் பத்தம் என்று சொல்லமுடியாது. அதனால்தான் நித்யமுக்த ஸ்வரூபம் ப்ரஹ்மம் என்றே சொல்லப்படுகிறது.

ஸித்தா:- அப்படியானால் இதேபோல் முக்த ஜீவனுக்கும், ப்ரக்ருதி ஸம்ஸர்க்கம் இருந்தாலும், அதன் வசப்படாததால் முக்தன் என்று சொல்லப்படுகிறது. ஆகவே பாரவச்யம் என்பதே பந்த ஹேது. ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் பந்தம் என்று சொல்வது சரியல்ல என்பது முக்தனுக்கும் பொருந்தும். அதனால் முக்தனுக்கு ப்ரக்ருதிஸம்பந்தம் இல்லை என்கமுடியாது.

பூர்வ:- முக்தனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தமே கிடையாது. அதிலிருந்து விடுபட்டவனே முக்தன் என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- முக்தனுக்கு ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தம் இருக்கிறதா? இல்லையா? இருந்தால் ப்ரக்ருதியுடன் ப்ரஹ்மத்திற்கு ஸம்பந்தம் இருப்பதால், ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து முக்தன் விடுபட்டான் என்க முடியாது. முக்தனுக்கு ப்ரம்மத்துடன் ஸம்பந்தம் இல்லை என்றால் சித்விசிஷ்ட்டம் ப்ரஹ்மம் என்று (வைசிஷ்ட்யம்) சொல்லமுடியாது. அதனால் உன்னால் செய்யப்பட்ட ஆக்ஷேபம் எதுவும் சரியல்ல, பொருத்தமற்றது.

பூர்வ:- அப்படியானால் வேறொரு முறையில் தெரிவிக்கிறேன். பந்தனாக இருக்கின்ற வரையில் அசுத்த ப்ரக்ருதி ஸம்பந்தம் இருக்கின்றது. முக்தனாக உள்ளவனுக்கு சுத்த ப்ரக்ருதி ஸம்பந்தம் இருக்கிறது என்று சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரஹ்மம் சுத்தப்ரக்ருதி விசிஷ்ட்டமா? அசுத்தப்ரக்ருதி விசிஷ்ட்டமா? அல்லது சுத்தாசுத்த ப்ரக்ருதி விசிஷ்ட்டமா? சுத்தப்ரக்ருதி விசிஷ்ட்டம் என்றால், ப்ரஹ்மம் நித்ய முக்தம் என்று சொல்லவேண்டும். அசுத்தப்ரக்ருதி விசிஷ்ட்டம் என்றால் ப்ரஹ்மம், பத்தம் என்றே சொல்லவேண்டும். ஆதலால், ப்ரஹ்மம் பத்தம் என்றும் சொல்லமுடியாது முக்தம் என்றும் சொல்லமுடியாது என்று நீங்கள் சொன்னது சரியல்ல. இதைத்தவிர சுத்தா சுத்தப்ரக்ருதி என்று ஒன்று இருக்கவே முடியாது. ஏனெனில் ப்ரஹ்மத்தில் பந்தம் முக்தம் என்ற ஒன்றுக்கொன்று விருத்தமான தர்மங்கள் இருப்பதாகச் சொல்லமுடியாது. மேலும், ப்ரக்ருதி சுத்தமென்றோ, அசுத்தமென்றோ எந்தவிதம் சொல்லப்பட்டாலும், ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தப்படவில்லை என்றால், ப்ரஹ்மம் ஸர்வ வ்யாபி என்றோ, ஸர்வாந்தரம் என்றோ சொல்லமுடியாது. (கார்யமான ப்ரக்ருதியில் காரணமான ப்ரஹ்மம் ஸம்பந்தமில்லை என்றால், அந்தர்யாமியத்வமும் சொல்லமுடியாது). ப்ரஹ்மத்தில் சுத்தாசுத்த ப்ரக்ருதி ஸம்பந்தம் அஸம்பாவிதம் என்பதால், அஸம்பவம் என்ற தோஷம் ஏற்படும்.

பூர்வ:- ப்ரஹ்மம் ஏகம் என்று சொல்லப்பட்டாலும்கூட, ப்ரஹ்மத்தில் ஒரு அம்சத்தில் சுத்த ப்ரக்ருதி ஸம்பந்தமும், மற்றொரு அம்சத்தில் அசுத்த ப்ரக்ருதி ஸம்பந்தமும் இருக்கலாமே?

ஸித்தா:- இந்த கல்பனையும் பொருந்தாது. ஏனெனில் ப்ரஹ்மம் நிரம்சம் என்பதால் அம்ச கல்பனைக்கு இடமில்லை. அது மட்டுமல்ல, ஒரே ப்ரஹ்மம் சுத்தமாகவோ, அசுத்தமாகவோ இருப்பதாகச் சொல்லமுடியாது. அதற்காக சுத்த ப்ரஹ்மம் ஒன்று அசுத்த ப்ரஹ்மம் ஒன்று என்று இரண்டு ப்ரஹ்மம் இருப்பதாக சொல்ல நேரிடும். அதேபோல்சிதசித் விசிஷ்ட்டம் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுவதும் சரியல்ல. சித்-அசித் என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதன்மை என்பதால் விருத்தமான தன்மைகள் இரண்டும் ஒரே வஸ்துவில் இருக்கமுடியாது. அதற்காக சித்விசிஷ்ட்ட ப்ரஹ்மம் அசித்விசிஷ்ட்ட ப்ரஹ்மம் என்று இரண்டு ப்ரஹ்மம் இருப்பதாகவும் சொல்லமுடியாது.

இதே போல் 'சித் ஸ்வரூபம்' அனேகம் என்று நானாத்வம் சொல்லப்படுமானால் சைத்ர சித்விசிஷ்ட்ட ப்ரஹ்மம் என்றும், மைத்ர சித்விசிஷ்ட்ட ப்ரஹ்மம் என்றும் சொல்ல நேரிடும், அப்படியானால் அனந்தமான ப்ரஹ்மங்கள் இருப்பதாகச் சொல்ல நேரிடும். 'ப்ரஹ்மம் ஏகம்' என்றே சொல்லவேண்டுமானால் ப்ரஹ்மம் விசிஷ்ட்டமில்லை என்றே சொல்லவேண்டும். 'ப்ரஹ்மம் ஏகம்' என்ற நிச்சயம் இருக்குமானால், ப்ரஹ்மத்திற்கு எந்த விதமாகவும் நானாத்வம் ஸம்பவிக்க முடியாது. அனேகமாக அறியப்படுகிறதே என்றால், அந்த ஞானம் ப்ராந்தி என்றே சொல்லவேண்டுமே அன்றி, நானாத்வம் தத்வம் என்று சொல்லமுடியாது. மாயா உபாதியினால் நானாத்வம் இருப்பதாக அறியப்பட்டாலும்கூட உண்மையில் ப்ரஹ்மம் ஏகம் என்று அறிந்து அதையே அனுஸந்தானம் செய்யவேண்டும். அதுவே மோக்ஷஹேது. அதுவே அபயஹேது. அதனால்தான் '*உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' ('उदरमन्तरं कुरुते अथ तस्य भयं भवति') என்று தெரிவிக்கின்ற ச்ருதி வாக்யம் ஸர்வம் ப்ரஹ்ம மயம் என்று அனுஸந்தானம் செய்யவேண்டும் என்றும், சிறிதளவு பேதம் இருப்பதாக அறியப்பட்டாலும்கூட அது பயத்திற்கு காரணமாகும் என்று தெரிவிக்கின்றது. அதனால் த்வைதம் பேததர்சனம் என்பதால் அது தள்ளத்தக்கது (ஹேயம்) என்றே தெரிவிக்கின்றது. அத்வைதம் என்பதே உபாதேயம் (எடுத்துக்கொள்ளத்தக்கது) என்றும் அதுவே அபயஹேது என்றே இந்த ச்ருதிவாக்யம் தெரிவிக்கின்றது.

பூர்வ:- '*உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யத்திற்கு உங்களால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல. இந்த வாக்யம், முமுக்ஷுவாக இருப்பவன் இடைவிடாமல் நிரந்தரமாக ப்ரஹ்மத்யானம் செய்யவேண்டுமென்றே தெரிவிக்கின்றது. 'அந்தரம்' என்றால் இடைவெளி என்றே அர்த்தம். அதனால் ஒரு முகூர்த்தகாலமோ அல்லது ஒரு க்ஷணகாலமோ, வாஸுதேவனை ஸ்மரிக்காமல் இருப்பானாகில் அது மிகவும் ஆபத்கரம், மஹத்தான கஷ்ட்டம் ஏற்படும் என்றே சொல்லப்படுவதால், பகவத்சிந்தனையை அன்றி வேறு விஷயங்களில் ஈடுபடுவானாகில் அதுவே பயஹேது என்றே தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இந்தவிதம் '*உதரமந்தரம் குருதே*' என்ற மந்த்ரத்திற்கு அர்த்தம் செய்வது சரியல்ல. ஏனெனில், '*யன்மனஸா ந மனுதே யேனாஹுர்மனோமதம், ததேவ ப்ரஹ்மத்வம்*

வித்தி நேதம் யதிதமுபாஸதே' ('यन्मनसा न मनुते येनाहुर्मनो मतं तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते') என்ற ச்ருதி வாக்யம் எந்த ஆத்ம ஸ்வரூபம் மனஸிற்கு விஷயமாக ஆகாததோ, மனஸ் முதலான ஸர்வமும் எதனால் ப்ரகாசப்படுத்தப்படுகிறதோ அதுவே ப்ரஹ்மம் என்று தெரிவிக்கின்றது. ப்ரஹ்மம் உபாஸிக்கத்தகுந்தது அல்ல. உபாஸ்யம் அல்ல. எது உபாஸிக்கப்படுகிறதோ அது ப்ரஹ்மம் அல்ல என்று ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றதால், '*உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' என்ற வாக்யம் இடைவிடாமல் ப்ரஹ்ம த்யானம் செய்யவேண்டுமென்று, ப்ரஹ்மம் உபாஸ்யம் என்று தெரிவிப்பதாகச்சொல்வது சரியல்ல. உபாஸ்யமாக இருக்குமானால் அது மோக்ஷ புருஷார்த்தத்திற்கு உரிய ஸ்வரூபம் என்று சொல்லமுடியாது. அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற ஞானத்தை அடைவதே மோக்ஷம். அதனால் 'ப்ரஹ்மோபாஸனம்' என்று தெரிவிப்பதாகச் சொல்வது சரியல்ல

பூர்வ:- அப்படியானால் '*யன்முகூர்த்தம் க்ஷணமபி வாஸுதேவோ ந சிந்த்யதே*' ('यन्मुहूर्तं क्षणमपि वासुदेवो न चिन्त्यते') என்ற ஸ்ம்ருதி வாக்யத்திற்கு என்ன தாத்பர்யம்?

ஸித்தா:- ச்ருதி வாக்யத்திற்கும், ஸ்ம்ருதி வாக்யத்திற்கும் விரோதம் இருக்குமானால், ச்ருதி வாக்யத்தின் தாத்பர்யார்த்தத்திற்கு விரோதம் ஏற்படாத முறையில் ஸ்ம்ருதி வாக்யத்திற்கு அர்த்தம் செய்யவேண்டுமென்று, ஸ்ம்ருத்யதிகரணம் என்ற விரோத அதிகரண ந்யாயேன தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, இந்த ஸ்ம்ருதி வாக்யத்தின் தாத்பர்யம் என்னவென்றால், எவருக்கு தத்வ விசாரத்தில் அதிகாரம் இல்லையோ, அவ்வித அதிகாரிக்கே இவ்வித உபாஸனம் கர்த்தவ்யம் என்றே சொல்லப்படுகிறது. இதேபோல் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற அஹம்க்ரஹோபாஸனமும் சொல்லப்படுகிறது. அதனால் பேத உபாஸனம் கர்த்தவ்யம் என்று தெரிவிக்கவில்லை. ஸ்ம்ருதியில் சொல்லப்படும் 'வாஸுதேவன்' என்ற பதத்திற்கு பரிபூரணன் என்றே அர்த்தம் (வாஸயதீதி வாஸு: த்யோதயதீதி தேவ:) என்று ஸ்வப்ரகாச ஸ்வரூபமான ஸர்வ வ்யாபகமான பரமாத்மா என்பதே வாஸுதேவன் என்பதற்கு அர்த்தம். ஆகையால் ஆத்ம விசாரத்தில் அதிகாரமில்லாத மந்த அதிகாரிகளுக்கு அஹம்க்ரஹ உபாஸனம் செய்யவேண்டுமென்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. இவ்விதம் அஹம்க்ரஹோபாஸனம் செய்கின்றபோது இடையில் நழுவுவானாகில் அபேத அனுஸந்தானத்தின் தார்ட்யம் நீங்கிவிடும். அதனால் இடைவிடாமல் அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற த்யானம் செய்ய வேண்டுமென்பதே இந்த ஸ்ம்ருதி வாக்யத்தின் தாத்பர்யம். நடுவில் மனுஷ்யோஹம் என்ற அனாத்ம தாதாத்ம்யம் ஏற்படும் என்பதால் இடைவிடாமல் த்யானிக்கவேண்டுமென்றே தெரிவிக்கின்றது. விபரீத வாஸனைகள் ஏற்படுமானால் அபேத அனுஸந்தானத்தினால் நிவர்த்திக்கவேண்டும். ஆகவே ப்ரஹ்மத்யானமே கர்த்தவ்யம் என்பதையே '*உதரமந்தரம் குருதே*' என்ற மந்தரம் தெரிவிக்கின்றது என்று அர்த்தம் சொன்னாலும் அத்வைத ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படாது. மற்ற உபாஸனைகளைக் காட்டிலும் அபேத உபாஸனம் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு மிகவும் நெருங்கிய அந்தரங்க ஸாதனம். ஆகவே இந்தவிதம் ச்ருதி வாக்யத்திற்கு ஸ்ம்ருதி வாக்யத்தின் தாத்பர்யத்தைக்கொண்டு இரண்டிற்கும் விரோதமில்லாமல் அர்த்தம் சொல்லப்பட்டபோதிலும் உண்மையான ச்ருதி வாக்யத்திற்கு இப்போது சொல்லப்பட்ட அர்த்தம் பொருந்தாது. ச்ருதியில் முன்பின் சொல்லப்பட்ட

வாக்யங்களைக்கொண்டு தாத்பர்யம் சொல்லவேண்டும். ஆகவே பேததர்சனமே பயஹேது என்பதுதான் சரியான அர்த்தமாகுமேயன்றி வேறு எந்த அர்த்தமும் பொருந்தாது.

பூர்வ:- கேவல ப்ரஹ்ம ஞானமாத்ரம் அபயஹேது என்று எப்படி சொல்வது? ப்ரஹ்ம த்யானம்தான் புருஷார்த்த ஸாதகமாகும்.

ஸித்தா:- மந்த மத்யமாதிகாரியாக இருப்பானாகில், விசாரத்தினால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படவில்லையானால், அவனுக்கு அஹம்ப்ரஹ்மாஸ்மி என்ற த்யானம்தான் மிகச்சிறந்தது. இந்த த்யானம்தான் அவனுக்கு அபயஹேது என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால், விசாரத்தினால் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட ஞானிக்கு த்யானம் எதற்கு? த்யானத்தின் பலமான ஸாக்ஷாத்காரம் விசாரத்தினாலேயே கிடைத்துவிட்டால் அவனுக்கு த்யானம் தேவையில்லை.

பூர்வ:- ஞானியாக இருப்பினும் அஹம் மனுஷ்ய: என்று விபரீதவாஸனை அடிக்கடி வரலாமானதால் உபாஸனை தேவைதான்.

ஸித்தா:- ஞானபரிபாகம் இல்லாதவனுக்கு விபரீதவாஸனை ஏற்படலாம். ஞானியானவன் விபரீதவாஸனைகளை நாசம் செய்து ஆத்மானுபவத்தில் இருப்பதனால் உபாஸனாதிகள் தேவையில்லை.

பூர்வ:- ஞானியாக இருப்பினும், ப்ரஹ்மம் என்பது ஞானியைவிட உத்கிருஷ்ட்டமானதால், ப்ரஹ்மத்தை த்யானிப்பதால் என்ன தவறு?

ஸித்தா:- '*ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*' என்று ச்ருதி வாக்யத்தின்படி ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருக்கின்றான் என்பதால், தனக்கு வேறான வஸ்துவை எவ்விதம் த்யானிக்கமுடியும்? தானே ஸர்வமாக இருக்கின்றதால் தன்னைத்தானே எவ்விதம் த்யானிக்க முடியும்?

பூர்வ:- ப்ரஹ்மம் பரமானந்த ஸ்வரூபமானதால், அந்த ப்ரஹ்மத்யானத்தினால் பரமானந்தத்தை அனுபவிக்கலாமே?

ஸித்தா:- '*விஷ்ணும் த்யாயது தீர்யத்வா ப்ரஹ்மானந்தே விலீயதாம்। ஸாக்ஷ்யஹம் கிஞ்சிதபி அத்ர ந குர்வே நாபி காரயே*' (विष्णुं ध्यायतु धीर्यद्वा ब्रह्मानन्दे विलीयताम्। साक्ष्यहं किञ्चिदप्यत्र न कुर्वे नापि कारये॥) என்று ஞானியானவன், மனதானது ப்ரஹ்மத்தை த்யானம் செய்யட்டும் அல்லது ப்ரஹ்மானந்தத்தில் லயத்தை அடையட்டும். நான் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியானதால் நான் எதையும் செய்யவில்லை என்று தெரிவிக்கின்றான். ஆகையால் ஆனந்த ஸ்வரூபமாகவே ஆனபிறகு தான்வேறு, ப்ரஹ்மம் வேறு என்ற எண்ணமே ஏற்படாது. அதனால் தனக்கு வேறாக ஒரு ஸ்வரூபத்தை த்யானிக்க வேண்டும் என்ற ஒரு புத்தி வ்ருத்தியே அவருக்கு ஏற்படமுடியாது. புத்தி வ்ருத்திக்கு ஸாக்ஷியாக இருக்கின்ற ப்ரஹ்மாத்மபாவத்தை அடைந்தவனுக்கு உபாஸனை போன்ற வ்யவஹாரங்கள் எப்படி ஏற்படமுடியும்? கூடஸ்தமான ப்ரஹ்மாத்மபாவத்தை அடைந்தவனுக்கு, சிந்தனம் என்ற, சித்தத்தில் ஏற்படக்கூடிய விகாரமே ஸம்பவிக்கமுடியாது. ''*த்யாயதீவ லேலாயதீவ*''

(ध्यायतीव लेलायतीव) என்று த்யானிப்பதுபோலவும், லீலையினால் அனுபவிப்பது போலவும் அறியப்பட்டாலும் உண்மையில் நிஷ்க்ரியமான சைதன்யஸ்வரூபமே நானென்று அறிந்த ஆத்மவித்தான ஞானிகளிடம் த்யானம் ஸம்பவிக்கமுடியாது. ஸர்வவித வ்யவஹாரங்களும் உபாதி தாதாத்ம்ய அத்யாஸத்தினால் ஏற்படுவதால், உபாதிதாதாத்ம்ய அத்யாஸம் நீங்கிய ஞானிக்கு இவ்வித வ்யவஹாரங்கள் இருக்கமுடியாது. இவ்விதம், ப்ரஹ்மவித் என்பவனின் நிலையை அறிந்தே சாஸ்திரங்கள் அவனை க்ருதக்ருத்யன் என்றே தெரிவிக்கின்றன. இதையே பகவானும் '*ஏதத்புத்வா புத்திமான் ஸ்யாத் க்ருதக்ருத்யச்ச பாரத*' (एतद् बुद्ध्वा बुद्धिमान् स्यात्कृतकृत्यश्च भारत ।) என்று தெரிவிக்கின்றார். மேலும், நிரந்தரம் ப்ரஹ்ம சிந்தனம் செய்வதே அபயப்ராப்தி என்றும் க்ஷணகாலம்கூட வேறு சிந்தனமே இருக்கக்கூடாது என்றும் '*உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யத்திற்கு உன்னால் அர்த்தம் சொல்லப்பட்டது. இவ்விதம் அர்த்தம் செய்யப்படுவதிலிருந்தே, ப்ரஹ்மசிந்தனத்தை அன்றி வேறான நானாத்வ சிந்தனம் பயஹேது *என்று* சொல்லப்பட்டதாகவே ஆகின்றது. அதனால் நானாத்வ சிந்தனம் கர்த்தவ்யமில்லை என்றே அறியப்படுகிறது. ஆகையால் இந்த ஸ்ம்ருதி வாக்யத்தைக்கொண்டு, ப்ரஹ்ம நானாத்வ சிந்தனம் செய்யவேண்டும் என்று ஸாதிப்பதற்காக ராமானுஜர் முயற்சிப்பது அவருடைய புத்தி தௌர்பல்யத்தையே தெரிவிக்கின்றது. (அதாவது அவருடைய கொள்கைக்கு ப்ரதிகூலமான ஸ்ம்ருதி வாக்யத்தையே மேற்கோளாக எடுத்துக்காட்டி இருப்பது அவருடைய புத்தி குறைவையே தெரிவிக்கின்றது.)

பூர்வ:- ப்ரஹ்மமே, ஸர்வஜகத்ரூபமாக இருக்கின்றது என்று அறிந்த ஞானத்தையே அடிக்கடி த்யானிப்பதே த்யானம்.

ஸித்தா:- அவ்விதம் த்யானிக்கவேண்டும் என்று சாஸ்த்ரங்களில் கர்த்தவ்யமாக சொல்லப் படவில்லையே?

பூர்வ:- '*ஸர்வம் ப்ரஹ்மேத்யுபாஸீத*' என்ற வாக்யம் த்யானத்தையே தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இவ்வாறு சொன்னாலும் ஸர்வம் ப்ரஹ்மாத்மகம் என்று த்யானம் செய்யவேண்டும். பிரஹ்மம் ஸர்வம் என்றல்ல. '*ஈசாவாஸ்யம் இதகும் ஸர்வம் யத்கிம் ச ஜகத்யாம் ஜகத்*' என்றே உபநிஷத்வாக்யம் தெரிவிக்கின்றது. அனேகமாக தோன்றுகின்ற இந்த ஜகத் ப்ரஹ்மாத்மகம் என்றே தெரிவிக்கின்ற இந்த வாக்யம், நானாத்வத்தை விலக்கவேண்டும் என்றே தெரிவிக்கின்றது. இதற்கு நேர் விருத்தமாக அர்த்தம் செய்வது சரியல்ல. அதனால் இந்த ஸ்ம்ருதிவாக்யத்திற்கு அஹம் ப்ரஹ்மாஸ்மி என்றோ அல்லது ஸர்வம் ப்ரஹ்மாத்மகம் என்றோ ப்ரம்மப்ரதானமாக உபாஸிக்கவேண்டுமே அன்றி வேறு எந்த உபாஸனையையும் தெரிவிப்பதாக சொல்லமுடியாது. மேலும் ஸவிகல்கஸமாதியில்தான் அஹம் ப்ரஹ்மாஸ்மி என்றும், ஸர்வம் ப்ரஹ்மாத்மகம் என்றும், ப்ரஞ்ஞானம் ப்ரஹ்மம் என்றெல்லாம் மனோவ்ருத்தி இருக்கமுடியும். நிர்விகல்பக ஸமாதியில் அகண்ட ப்ரஹ்மாகார வ்ருத்தி ஒன்றே இருக்குமே அன்றி ஞாதா, ஞானம் ஞேயம் என்ற த்ரிபுடி இருக்கமுடியாது. ஏனெனில் நிர்விகல்பக ஸமாதியில் சித்தம் த்யேயாகாரமாகவே ஆகின்றது. இவ்விதம் த்ரிபுடி அற்ற நிலையில் த்யானம் த்யாதா என்பதெல்லாம் இருக்கமுடியாது என்று யோகசாஸ்த்ரமே தெரிவிக்கின்றது. இதையே யோகசாஸ்த்ரத்தில் விஷ்ணு மூர்த்தியை த்யானிப்பவன் க்ரமமாக பரிபக்வம்

அடைவானாகில் ப்ரமர கீட ந்யாயேன விஷ்ணுஸ்வரூபமாகவே ஆகிறான் என்று த்யேய வஸ்துவாக ஆகிறான் என்று தெரிவிக்கின்றது. '*யதாயதா உபாஸதே ததேவ பவதி*' என்று நிர்விகல்ப ஸமாதியிலுள்ளவன் த்யேயாகாரமாகவே ஆகின்றான் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- அகண்டப்ரஹ்மாகாரவ்ருத்திமாத்ரமாக ஆகிறான் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ப்ரஹ்மம் நிராகாரம் என்பதால் ததாகாரவ்ருத்தி ஏற்படுவதாகச் சொல்லமுடியாது.

ஸித்தா:- ககனம் (ஆகாசம்) நிராகாரம்தான். ஆனால் ஆகாசம் என்ற சப்தத்தை கேட்டவுடன் சித்தத்தில் அதன் ஆகாரம் ஏற்படுகிறது. இவ்விதம் சித்தத்தில் நிராகாரமான ஆகாச வ்ருத்தி, ஏற்படுவதால்தான், ஆகாசமென்ற சப்தத்தினால், நிராகாரமான ஆகாசம் க்ரஹிக்கப்படுகிறது. அதனால் நிரவயவமாக நிராகாரமாக, ககனாகாரமான விருத்தி ஏற்படுவது போல், ப்ரஹ்மாகாரவிருத்தி ஏற்படலாம். சித்தம் ஒரு ஸமயம் விக்ஷேபமாக இருக்கலாம் அல்லது சில ஸமயம் லயமாகிவிடும். இந்த இரண்டு நிலையை விட்டு சித்தம் இருக்கின்றதென்பது மிகவும் துர்லபம். அதனால் இவ்வித நிலை இரண்டையும் விட்டு, நடுநிலையில் சித்தத்தை நிறுத்துவதே ப்ரஹ்மாகாரம். அதுவே நிராகாரம். அதுவே ப்ரஹ்மாகாரம். அதனால் சித்தத்தை லயவிக்ஷேபமின்றி செய்யவேண்டும். ஜாக்ரத்தில் அனாத்மாகார சிந்தனையே அப்ரஹ்மாகாரநிலை, இவ்விதநிலை அற்று லயம் ஏற்படுமானால் அது ஸுஷுப்தி நிலை. இந்தவிதமான இரண்டு நிலையும் ஏற்படாமல் தடுத்து நிறுத்தப்படுமானால் அதுவே நிராகாரநிலை. இவ்விதம் நிராகாரமான சித்தத்தில், மறுபடி விக்ஷேபாகாரம் ஏற்படாமல், வாஸனாக்ஷயம் ஏற்படுமானால் அவ்வித நிலையே நிராகாரம் என்றும் அதுவே மனஸின் ஸ்வாபாவிக நிலை என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் தத்வபோதம் ஏற்பட்டவனுக்குத்தான் சித்தம் நிராகாரமாக ஆகமுடியும். ஹடயோகத்தினால் மனதை பலாத்காரமாக நிரோதம் செய்வானாகில் அவனுக்கு வாஸனாக்ஷயம் ஏற்படாது. ஞான பலத்தினால்தான் விஷயவாஸனை நிவர்த்திக்க முடியும். அதனால்தான் ஞான பலத்தினால்தான் ஞானிக்கு ஸர்வவாஸனாக்ஷயம் ஏற்படுகிறது. புதிதாக சித்தத்தில் எந்தவித வாஸனையும் ஏற்படுவதில்லை. ஆகவே நிர்விகல்பக ஸமாதியில் உள்ள யோகியின் சித்தம் எவ்விதம் நிராகாரமாக இருக்கின்றதோ அதேபோல் ஞானிகளின் சித்தம் ஸர்வதா நிராகாரமாகவே இருக்கின்றது. அஞ்ஞனுக்கு ஸுஷுப்தியில் சித்தம் லயமடைந்தாலும், வாஸனாக்ஷயம் ஏற்படாது. அதேபோல் யோகிக்கு பலாத்காரத்தினால் சித்தத்தில் எவ்வித ஆகாரமும் ஏற்படாமல் கட்டுப்படுத்தினாலும் கூட யோகிக்கும் வாஸனாக்ஷயம் ஏற்படுவதில்லை. ஆகவே ஞானியானாலும், யோகியானாலும், சித்தம் நிராகாரமாக ஆகுமானால் அதுவே ப்ரஹ்மாகாரம். இவ்விதம் விக்ஷேபமோ லயமோ இல்லாமல் சித்தத்தை நிலை நிறுத்துவது துர்லபம். இந்தவிதம் சித்தத்தை ப்ரஹ்மாகாரமாகச்செய்வதில் ச்ரமம் ஏதுமில்லை. அப்ரஹ்மாகாரம் ஏற்படுவதை தடுப்பதே ச்ரமம்.

யோகியானவன் அப்யாஸத்தினால் சித்தத்தை நிராகாரமாகச்செய்கின்றான். ஞானிக்கு ஞான பலத்தினால் வாஸனாக்ஷயம் ஏற்படுவதால் நிராகாரம் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. யோகிக்கு நிராகாரநிலை ஸமாதியில் மட்டுமே ஏற்படுகிறது என்றாலும் அந்த நிலையில் அவனுக்கும் ஆனந்த அனுபவம் இருக்கின்றது.

ஞானிகளுக்கு, தர்ப்பணம் (கண்ணாடி) இருக்கின்றபோது ப்ரதிபிம்பம் இருப்பதுபோல், விஷயஸன்னிதானத்தில், விஷயக்ரஹணம் இருந்தாலும், விஷயதோஷதர்சனத்தினால் விஷயாகாரம் ஏற்படுவதில்லை. அதனால் ஏற்படும் க்லேசங்களும் சித்தத்தில் ஏற்படுவதில்லை. ஞானியானவன் சுத்தமான தன் ஸ்வஸ்வரூபத்திலேயே நிலைத்திருப்பதால், நாமரூப ஆகாரங்களோ, அதன் அனுபவமோ, அல்லது ஏற்கனவே அனுபவித்த ஸ்ம்ருதிரூபமோ சித்தத்தில் இருப்பதில்லை. ஆகவே, முமுக்ஷுவானவன் அனாத்ம சிந்தனைகளை அப்யாஸத்தினால் ச்ரவணமனனாதிகளால் தடுத்து நிறுத்தி - ப்ரஹ்மாகாரமாக நிலைத்திருக்கும்படிச் செய்யவேண்டும். அதாவது, யோகாப்யாஸத்தினால் சித்தம், லயவிக்ஷேபம் ஏற்படாமல் செய்யப்படுமானால் சித்தம் நிராகாரமாக ஆகலாம். ஆத்மானாத்ம விசாரம் என்ற ஞானவிசாரமே ஸாங்க்யம் என்று சொல்லப்படும். ஸாங்க்யமார்க்கமான ஞானவிசாரத்தினால் விஷயாதிகளில் ஏற்படும் தோஷதர்சனத்தினால் சித்தம் நிராகாரமாக ஆகின்றது. அதுவே ப்ரஹ்மாகாரம். இவ்விதம் ஸாங்க்யமார்க்கம் என்பது ஆத்மானாத்ம விசாரத்தினால் ஏற்பட வேண்டும். அதனால் மிகவும் ஸூக்ஷ்ம புத்தியுடைவர்களுக்கே இந்த மார்க்கம் மிக சுலபமான மார்க்கம். அவ்விதமின்றி புத்தி சக்தி குறைவாக இருக்குமானால் அவர்கள் யோக மார்க்கத்தை அனுசரித்து அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற அபேத அனுஸந்தானம் செய்ய வேண்டும் என்றே தெரிவிக்கப்படுகிறது. இதைத்தவிர வேறு எந்தவித உபாஸனமும் சொல்லப்படவில்லை. யோகியானவன் ச்ரமப்பட்டு சித்தத்தை அடக்கி அதன் பலனாக ஞானத்தை அடைந்து, மோக்ஷபுருஷார்த்தத்தை அடைகிறான். ஞானியானவன் ச்ரமம் ஏதுமின்றி விசாரத்தினாலேயே மோக்ஷபுருஷார்த்தத்தை அடைகிறான். இவ்விதம் ஸாங்க்யம், யோகம் என்ற இரண்டுமே ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு காரணமாக ஆகிறது. அதனால் இரண்டு பேருக்கும் பலன் ஒன்றே. '*யத் ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்தானம், தத்யோகைரபி கம்யதே*' (यत्साङ्ख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते) என்று எந்த ப்ரஹ்மாத்மபாவம் ஸாங்க்யர்களுக்கு ஏற்படுகிறதோ - அதுவே யோகிகளுக்கும் ஸித்திக்கின்றது என்று கீதாவசனம் தெரிவிக்கின்றது. அஹம் ப்ரஹ்மாஸ்மி என்று அனவரதம் அப்யாஸம் செய்து பலனை அடைந்த யோகியைப் பற்றி இவ்விதம் தெரிவிக்கின்றது.

80

'यत्र हि द्वैतमिव भवति' इति श्रुत्यर्थविचारः।

'யத்ர ஹி த்வைதமிவ பவதி' இதி ச்ருத்யர்த்தவிசார:

இந்த ச்ருதி வாக்யத்திற்கு ஸுதர்சனரால் தெரிவிக்கின்ற கருத்து பொருந்துகிறதா என்று விசாரிக்கப்படுகிறது

ஸுதர்சனர்:- ஞாதா, ஞானம், ஜ்ஞேயம், ஞானஸாதனம் என்ற எல்லாமே பரமார்த்தமாக ஜீவனிடம் கிடையாது. ஆனால் அறியப்படும் த்வைதங்கள் பரமாத்மாவினிடம்தான் இருக்கின்றது. லோக வ்யவஹாரங்களிலேயே ஈடுபட்டிருக்கின்ற பாமரனுக்கு பரமாத்மா யார் என்றே அறியப்படவில்லை. இந்த விசித்ரமான ஜகத், பரமாத்மாவினிடம் இருக்கின்றதென்று ஞானம் ஏற்படாததால் எல்லாமே தன்னிடம்தான் இருப்பதாக நினைக்கின்றான் (அறிகின்றான்). இவ்விதம் இருக்கின்ற ஜீவனானவன் விஷ்ணுவை உபாஸிப்பானாகில், அதன் பலனாக பரமாத்ம ஸ்வரூபம் ப்ரகாசிக்கின்றது. அதனால் இந்த ஜகத் தன்னிடத்தில் இல்லை, அஹம் சப்த வாச்யமான தன்னை சரீரமாகக்கொண்ட பரமாத்மாவினிடம்தான் இந்த ஜகத் இருக்கின்றதென்று அறிகின்றான். அதனால் அறிகின்றவனோ, அறியப்படும் பொருள் என்பதோ (த்ரஷ்ட்ருத்ருச்யாதி) எந்த விதமான பேதங்களும் இல்லை என்று இந்த ச்ருதிவாக்யம் தெரிவிக்கவில்லை. ஆகையால் பரமாத்ம ஞானம் ஏற்பட்டவனுக்கும் த்வைத ஞானம் (ஜகத் ஞானம்) இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். இவ்விதம் *'யத்ர ஹி த்வைதமிவபவதி'* (यत्र हि द्वैतमिव भवति) என்ற வாக்யத்திற்கு அர்த்தம் சொல்லப்படவில்லை என்றால், வாமதேவர் போன்றவர்களின் வாக்யங்களுக்கு அர்த்த விரோதம் ஏற்படும். அவர்கள் ப்ராந்தி தர்சனத்தினால் இவ்விதம் தெரிவிக்கிறார்கள் என்று சொல்லநேரிடும். வாமதேவருக்கு பரமாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டவுடன் ''*அஹம் மனுரபவம் ஸூர்யச்சேதி*'' என்று நானே மனு, நானே *ஸூர்*யன் என்று தெரிவிக்கின்றார் என்பதால் த்வைத தர்சனமே இல்லை என்று எப்படிச்சொல்லமுடியும்? த்வைத தர்சனம் இல்லாவிடில், என்னை அன்றி, ஒன்றுமே இல்லை என்றல்லவா சொல்லவேண்டும். ஸர்வாத்மாவாக நான் இருக்கிறேன் என்றே தெரிவிக்கின்றார். ஆகவே, இவ்விதம் பரமாத்ம ஞானம் ஏற்பட்டதாலேயே, வாமதேவ சரீரத்தை சரீரமாகக்கொண்ட பரமாத்மா என்று 'அஹம்' சப்தத்தினால் தெரிவிக்கின்றார். இவ்விதம் ப்ரகாரமான(சேஷமான) ஸர்வ ஜகத்திற்கும் ப்ரகாரியான(சேஷியான) பரமாத்மஞானம் ஏற்படுவதையே, 'ஏதத் பச்யன்'' என்று சொல்லப்படுகிறது. '*அஹம் மனுரபவம் ஸூர்யச்ச*'' என்று தெரிவிப்பதால் பரமாத்ம ஞானம் ஏற்பட்ட பிறகும் த்வைத தர்சனம் இருப்பதாகவே சொல்லவேண்டும் என்பதால், த்வைதம் பரமார்த்தமில்லை என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- இது வரை ''*யத்ர ஹி த்வைதமிவ பவதி*'' என்ற வாக்யத்திற்கு அர்த்தம் சொல்லப்பட்டது எதுவுமே சரியல்ல. ''*அஹமஸ்மி வாஸுதேவ:*'' என்று பரமாத்ம ஞானம்

ஏற்படுகிறதா? அல்லது நான் வேறு, பரமாத்மா வேறு என்று ஞானம் ஏற்படுகின்றதா? '*அஹமஸ்மி வாஸுதேவ:*'' என்ற ஞானம் ஏற்படுமானால் அதுவே அத்வைத ஸித்தாந்தம்.

அவ்விதம் இன்றி பரமாத்மா, தனக்கு வேறானவன் என்று உபாஸிப்பானாகில் அதனால் பரமாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டாலும், 'அஹம் மனுரபவம்' என்று அஹம் சப்தப்ரயோகம் எவ்விதம் ஏற்படமுடியும்? ஜீவனும் பரமாத்மாவும் ஒன்று என்று சொல்லபட்டால்தான் அஹம் சப்தார்த்தமாக பரமாத்மா சொல்லப்படலாம். (கடஸாக்ஷாத்காரம் ஏற்படுமானால் அஹம் கடம் பச்யாமி என்று சொல்வானாகில் கடமும் ஜீவனும் ஒன்று என்று சொல்லமுடியுமா?) பரமாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட வாமதேவர் 'அஹம் மனுரபவம்' என்று தெரிவிக்கின்றாரே அன்றி, 'வாஸுதேவ: மனுரபவத்' என்று தெரிவிக்கவில்லை. அதனால் வாமதேவரால் சொல்லப்படும் அஹம் சப்தார்த்தம் விஷ்ணுவை குறிக்கின்றது என்று எவ்விதம் சொல்லமுடியும்? உன்னுடைய ஸித்தாந்தத்தின்படி வாமதேவர், பரமாத்ம ஸாக்ஷாத்காரமுடையவர் என்றாலும், அவர் ஜீவபாவத்தில்தானே இருக்கின்றார்? அவர் 'அஹம் மனுரபவம்' என்று சொல்வாரானால், அந்த அஹம் சப்தம் வாமதேவரை குறிக்கின்றதா? அல்லது பரமாத்மாவை குறிக்கின்றதா? தன்னையே குறிப்பிடுவதாகத்தான் சொல்லவேண்டும். அதனால் அஹம் சப்தம் பரமாத்ம வாசக சப்தமாக ஆகமுடியாது. அதுமட்டுமல்ல பரமாத்ம ஸாக்ஷாத்கார நிலையில் வாக்ய ப்ரயோகம் என்பதே ஸம்பவிக்க முடியாது.

பூர்வ:- வாமதேவர் அஹம் மனுரபவம் என்று வாக்கினால் தெரிவிக்கவில்லை. ஆனால் அவருக்கு அவ்வித ஞானம் ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லலாமே? ஜீவன் முக்தர்கள் தன்னுடைய அனுபவத்தை கானம் செய்வதாகச்சொல்லப்படுகிறது. அதுபோல் வாமதேவரும் தெரிவிக்கலாமே?

ஸித்தா:- வாமதேவர் தனக்கு ஏற்பட்ட ஞானத்தையே தெரிவித்த போதிலும், 'அஹம் மனுரபவம்' என்ற வாக்யத்திலுள்ள 'அஹம்' சப்த வாச்யம் ஜீவனான தன்னையே குறிப்பிடுவதாக சொல்லவேண்டுமே அன்றி, பரமாத்ம வாசக சப்தம் என்று சொல்லமுடியாது. அவ்விதம் பரமாத்ம வாசக சப்தமாக சொன்னால்தான், ப்ரபஞ்சம் தன்னிடமில்லை. பரமாத்மாவினிடம்தான் இருக்கின்றது என்று வாமதேவர் அறிந்ததாக சொல்லமுடியும்.

மேலும், பரமாத்ம ஸாக்ஷாத்காரம் என்பது நிர்விகல்பக ஸமாதியா? அல்லது ஸவிகல்பக ஸமாதியா? நிர்விகல்பக ஸமாதியே பரமாத்ம ஸாக்ஷாத்காரம் என்று சொல்லப்படுமானால், பரமாத்ம ஸ்வரூப ஞானத்தை அன்றி வேறு எந்த ஆகாரமும் அறியமுடியாதே? புத்தியில் எந்த வஸ்துவின் ஞானம் ஏற்படுகிறதோ அந்த வஸ்து ஸ்வரூபாகாரத்தை அன்றி வேறு எந்த ஆகாரமும் ஏற்படமுடியாது. புத்தி த்யேயாகாரமாக ஆகின்றதையே நிர்விகல்பக ஸமாதி என்று சொல்லப்படுகிறது. அதனால், வாமதேவர் தன் ஸ்வரூபமே பரமாத்ம ஸ்வரூபம் என்று ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட நிலையில், 'அஹம் மனுரபவம்' என்று மனுஸூர்யதேவ ஸாக்ஷாத்கார நிலையில் தான் இருந்தார் என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- பரமாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட பிறகு பீதாம்பரதாரியாக சங்கு சக்ர கதா பாணியாக இருக்கின்ற பரமாத்மா மனு முதலான ஸர்வ சரீரத்துடன் ஸாக்ஷாத்கரிக்கப்படுவதாகச் சொல்லலாமே?

ஸித்தா:- பரமாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட நிலையிலும் மனு முதலானவர்களுடன் ஸாக்ஷாத்கரிக்கப்படுவதாகச் சொல்லப்படுமானால், மனு, ஸூர்யன் முதலானவர்களின் சரீர ஸாக்ஷாத்காரம் என்றுதான் சொல்லவேண்டுமே அன்றி, பரமாத்ம ஸாக்ஷாத்காரம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் உபாஸனைக்கு முன் மனு முதலானவர்களின் சரீரங்கள் அறியப்படவில்லை என்றும், உபாஸனைக்குப்பிறகுதான் அவர்கள் சரீரங்கள் அறியப்படுவதாக சொல்லப்படவேண்டும். அதனால் இதுவரை அறியப்படாத சரீரங்கள் அறியப்படுவதாகவே சொல்லவேண்டும். இந்த சரீரஸாக்ஷாத்காரம், யோகம் இல்லாமலேயே ஸித்திக்கின்றதால் யோகம் வ்யர்த்தமென்றாகும்.

பூர்வ:- யோகத்தினால், மனு முதலானவர்களின் சரீரத்தை, சரீரமாகக்கொண்ட பரமாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும். இவ்விதம் யோகம் செய்யாவிடில் மனு முதலானவர்களின் சரீர ஸாக்ஷாத்காரம் மட்டும் ஏற்படும் என்று சொல்லலாமே?

ஸித்தா:- எந்தவிதமாக சொல்லப்பட்ட போதிலும், மன்வாதி ஜீவ ஸாக்ஷாத்காரம் என்பது யோகிக்கும் கிடையாது, அயோகிக்கும் ஏற்படமுடியாது. ஏனெனில் ஜீவன் த்ருக்ஸ்வரூபமே அன்றி த்ருச்யம் அல்ல (அறிபவரே அன்றி அறியப்படுபவர் அல்ல). அதனால் ஜீவன் ஸாக்ஷாத்கரிக்கப்படுகிறது என்ற வாக்யமே பொருந்தாது. யோகிக்கும் அயோகிக்கும் உள்ள வித்யாஸம் என்னவென்றால், யோகியானவன், ப்ரத்யக்ஷமாக இப்போது அறியப்படும் சரீரத்தையும் (வர்த்தமான சரீரத்தையும்,) இதற்கு முன் இருந்த சரீரத்தையும், இனி வரப்போகின்ற சரீரத்தையும் அறிவானே அன்றி ஜீவனையோ பரமாத்மா ஸ்வரூபத்தையோ யோகி அறிகிறான் என்று சொல்லமுடியாது. ஆகவே, யோகியானாலும், அதீத, அனாகத, வர்த்தமான சரீரங்களை அறியக்கூடிய சக்தி உடையவனாக இருந்தாலும் சைதன்ய ஸ்வரூபமான ஆத்ம தத்வத்தை அறிகிறான் என்று சொல்லமுடியாது. ஆத்மதத்வம் அறியக்கூடியது அல்ல. ஸர்வத்தையும் அறிவிக்கின்ற அறிவே (அறிவு ஸ்வரூபமே) ஆத்ம தத்வம், ஆகையால் மனு முதலானவர்களின் சரீர ஸாக்ஷாத்காரம் ஏற்படுமே அன்றி, அவர்களின் ஜீவாத்ம ஸாக்ஷாத்காரம் யோகிகளுக்கும் ஏற்படாது, அயோகிகளுக்கும் ஏற்படாது. மனு முதலான ஜீவர்களை அதிஷ்டானமாக கொண்ட பாஞ்சபௌதிக சரீரத்தையே ஸாக்ஷாத்கரிக்கலாமே அன்றி ஆத்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்க முடியாது. ஈச்வரனே ஆனாலும் ஆத்மாவை பார்க்கமுடியாது. தேவதத்தனை பார்க்கிறேனே என்றால், அவன் சரீரத்தை பார்க்க முடியுமே அன்றி சைதன்ய ஸ்வரூபமான அந்த ஜீவனை அறிவதாக சொல்லமுடியாது. ஒரு ஜீவனை மற்றொரு ஜீவன் பார்க்கிறான் என்று சொல்லமுடியாது என்பதை தெரிவிப்பதற்காகவே, சாஸ்திரங்களில் ஜீவனை 'த்ரஷ்ட்டா' என்றே தெரிவிக்கின்றது. ஜீவன் த்ருச்யமென்று சொல்லப்படவில்லை. இவ்விதம், தன்னுடைய சரீரத்தைக்காட்டிலும் வேறுபட்டவனான ஜீவனையே ஸாக்ஷாத்கரிக்க முடியவில்லை

என்றால், தன் சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்ட அன்ய சரீரத்தை சரீரமாகக்கொண்ட பரமாத்ம ஸாக்ஷாத்காரம் எவ்விதம் ஏற்படமுடியும்?

பூர்வ:- யோகிக்கு பரமாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுவதாக ச்ருதிவாக்யங்கள் தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- ச்ருதி வாக்யத்தின் தாத்பர்யம் என்ன என்று அறிய வேண்டுமே அன்றி ச்ருதிக்கு விரோதமாக அர்த்தம் செய்வது சரியல்ல. ச்ருதியின் தாத்பர்யார்த்தம் என்ன என்பதை மேலே தெரிவிக்கப்போகிறேன்.

பூர்வ:- வித்வானாக இருக்கின்றவன், கடத்தைப் பார்க்கின்ற போது, கடசரீரக பரமாத்மா என்று பார்க்கின்றான். அவித்வானாக இருக்கின்றவன் கடத்தை, கடம் என்று (மட்டும்) பார்க்கின்றான். அதனால் பாமர ஜனங்களின் ஞானத்தைக்காட்டிலும், யோகிகளின் ஞானம் வேறுபட்டது என்றே சொல்லவேண்டும். அதனால் வாமதேவரால் சொல்லப்பட்ட வாக்யத்திற்கு, மனு முதலானவர்களின் சரீரங்களை யோகியானவன் பார்க்கின்றபோது மனு முதலான சரீரக பரமாத்மா என்றே அறிகின்றார் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- இது சரியல்ல, வித்வான் கடத்தை பார்த்தாலும், இது கடம் அல்ல. ப்ரஹ்மமே என்று பார்க்கிறான், ப்ரஹ்மத்தில் கட நாமரூபம் கல்பிக்கப்பட்டு இருப்பதால் வித்வான்களின் அனுபவம் ஸர்வம் ப்ரஹ்ம என்றே ஏற்படுகின்றதே அன்றி, ஸர்வம் ப்ரஹமசரீரம் என்றோ ஸர்வத்தையும் சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மம் என்றோ யாருக்கும் அனுபவம் ஏற்பட்டதாக சொல்லப்படவில்லை. ஸர்வ வஸ்துக்களும் ப்ரஹ்ம ஸ்வரூபமே என்றே '*அஸ்தி பாதி ப்ரியம், ரூபம், நாம சேதி அம்ச பஞ்சகம், ஆத்யத்ரயம் ப்ரஹ்மரூபம், ஜகத்ரூபம் ததோ த்வயம்* (अस्ति भाति प्रियं रूपं नामचेत्यंशपञ्चकम्। आद्यत्रयं ब्रह्मरूपं जगद्रूपं ततो द्वयम्) என்கிற வாக்யம் தெரிவிக்கின்றது. ஆகவே நாம ரூபம் இரண்டும் ப்ரஹ்மத்தில் ஆரோபிதம் என்பதால், அதிஷ்ட்டான ஸ்வரூபத்தை அன்றி வேறாக அவைகளுக்கு தனித்த ஸ்வரூபம் ஏதுமில்லை. (கல்பித வஸ்துக்கள் எல்லாமே ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக்காட்டிலும் பின்னமா அபின்னமா என்று சொல்லமுடியாது என்பதாலேயே துர்வசம் என்றே சொல்லப்படுகிறது). தத்வ ஞானிக்கு ஸர்வமும் அதிஷ்ட்டான ஸ்வரூபமே என்ற ஞானம்தான் ஏற்படும். ஆகையால், கடம், படம் என்று அஞ்ஞானிகளால் அறியப்படும் வஸ்துக்கள் எல்லாமே ப்ரஹ்ம ஸ்வரூபமே என்றுதான் வித்வான்கள் அறிகின்றார்கள். ஸர்வம் ப்ரஹ்ம சரீரம் என்றோ ப்ரஹ்மம் சரீரி என்றோ அறியப்படவில்லை. அதிஷ்ட்டான ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தினால், ஆரோபிதங்கள் மறைகின்றதால் ஸர்வம் ப்ரஹ்மமயம் என்றே அறிகிறான். மேலும் யோகி கடத்தை பார்க்கின்ற போது கடசரீரக பரமாத்மா என்று அறிகின்றான் என்றும், பாமரன் கடத்தை கடம் என்றே அறிகிறான் என்றும் உன்னால் யோகிக்கும் பாமரனுக்கும் வித்யாஸம் சொல்லப்படுகிறது. இந்தவிதம் தெரிவிப்பதால், நீ எதை ஸாதிக்க வேண்டுமென்று நினைக்கின்றாயோ, அதை உன்னால் ஸாதிக்க முடியாது. ஏனெனில் யோகியானவன் கடத்தைப் பார்க்கின்ற போதுதான், இந்த கடம் பரமாத்ம சரீரம் என்றும், பரமாத்மா இந்த கடத்திற்கு சரீரி என்றும் ஞானம் ஏற்பட முடியும். யோக நிலையில் இவ்வித ஞானம் ஏற்பட முடியாது. பாஹ்ய வஸ்துக்களின் மறைவு ஏற்பட்டால்தான் யோகநிலை என்றே சொல்லலாம். அவ்விதமின்றி

யோக நிலையிலும் இவ்விதம் பாஹ்ய வஸ்துக்களின் தர்சனம் இருப்பதாகச் சொல்லப் படுமானால், வ்யவஹார நிலையில் யோகிக்கு ஏற்படும் ஞானத்திற்கும், யோக நிலையில் ஏற்படும் ஞானத்திற்கும் என்ன வித்யாஸம் சொல்லமுடியும்? யோகம் என்பது வ்யர்த்தம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- வ்யவஹார நிலையில், குறிப்பிட்ட சில வஸ்துக்களைப்பார்க்கின்றபோது, அந்த வஸ்துவை சரீரமாகக்கொண்ட பரமாத்மா என்ற ஞானம் ஏற்படும். யோக நிலையில் ஸர்வ ஜகத் ஞானமும் ஸர்வ ஜகத் சரீரக பரமாத்மா என்றும் ஞானம் ஏற்படும். இதுவே இரண்டு நிலைக்கும் உள்ள வித்யாஸம்.

ஸித்தா:- யோகிக்கு ஏற்படும் ஸாக்ஷாத்காரம், பரமாத்ம சரீரமான ஸர்வ ஜகத் ஸாக்ஷாத்காரமா? அல்லது, ஸர்வ ஜகத் சரீரியான அந்தர்யாமியான பரமாத்ம ஸாக்ஷாத்காரமா? சரீரமான ஸர்வ ஜகத் ஸாக்ஷாத்காரம் என்றால் அது பரமாத்மஸாக்ஷாத்காரம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் சரீரஸாக்ஷாத்காரம், என்பதை சரீரிஸாக்ஷாத்காரம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- அப்படியானால் பரமாத்மசரீரஸாக்ஷாத்காரம் என்று சொல்லவில்லை. ஸர்வ ஜகத்திலும் அந்தர்யாமியான பரமாத்மஸாக்ஷாத்காரம் என்றே சொல்லலாமே?

ஸித்தா:- அவ்விதம் சொல்வதற்கும் முடியாது. ஏனெனில் அந்தர்யாமி என்பது ஸாக்ஷாத்கரிப்பதற்கு உரிய வஸ்துவல்ல. ஸர்வத்திற்கும் ப்ரத்யக் ஸ்வரூபமாக இருப்பது எதுவோ அதுவே அந்தர்யாமி என்று சொல்லவேண்டும். அதனால் தனக்கு வேறுபட்ட அனாத்ம வஸ்துக்களின் ஸாக்ஷாத்காரம் ஏற்படமுடியுமே அன்றி பரமாத்ம ஸாக்ஷாத்காரம் என்பதே ஸம்பவிக்காது. அந்தர்யாமி ஞான ஸ்வரூபமே அன்றி ஜ்ஞேயமல்ல. '*நான்யோதோஸ்தி த்ரஷ்ட்டா*' (नान्योऽतोऽस्तिद्रष्टा) என்ற வாக்யம், அந்தர்யாமி, த்ரஷ்ட்டாவே அன்றி த்ருச்யமல்ல. என்றே தெரிவிக்கின்றது. தன்னை, தானே க்ரஹிக்கப்படுவதாக (ஸாக்ஷாத்கரிப்பதாக) சொல்வதற்கே முடியாது. '*நான்யோதோஸ்தி த்ரஷ்ட்டா*' (नान्योऽतोऽस्तिद्रष्टा) என்ற வாக்யத்திற்கு, அந்தர்யாமிக்கு த்ரஷ்ட்டாவே கிடையாது என்று ராமானுஜர் தெரிவித்திருக்கிறார். வித்வான், அந்தர்யாமியை ஸாக்ஷாத்கரிப்பதாக சொல்லப்படுமானால், அந்தர்யாமிக்கு வித்வான் 'த்ரஷ்ட்டா' என்று சொல்லப்பட்டதாக ஆகும். அதனால், தர்மாதர்மம் என்பது எவ்விதம் யாருடைய ஞானத்திற்கும் விஷயமாவதில்லையோ, அதுபோல் அந்தர்யாமி என்பதும் ஞானத்திற்கு விஷயமல்ல. அத்ருஷ்ட்டம் என்ற பலனைக்கொண்டு தர்மாதர்மம் அனுமானம் செய்யப்படுகிறதே அன்றி ஞானத்திற்கு விஷயமல்ல. (கடபடாதிகள் போல் ப்ரத்யக்ஷமாக அறியப்படுவதல்ல) தர்மாதர்மம் அதிஸூக்ஷ்மத்வாத் பார்க்க முடியவில்லை. அந்தர்யாமியான பரமாத்மா ஞான ஸ்வரூபமானதால், அறியப்படும் வஸ்துவல்ல (த்ருச்யமல்ல). எவ்விதம் தர்மாதர்மம், அதன் பலனான ஸுகதுக்காதிகளைக்கொண்டு அனுமானத்தினால் அறியப்படுகிறதோ, அதேபோல் ஆஸ்திகனாக இருக்கின்றவன், யாரோ ஒருவன் தனக்குள் இருந்து ஸர்வகார்யங்களிலும் ப்ரவ்ருத்திக்கச்செய்கிறான் என்றும் அதன் பலனை அனுபவிக்கச்செய்கிறான் என்று தன் அனுபவத்தைக்கொண்டு அனுமானத்தினால் அந்தர்யாமியை அறிகின்றானே அன்றி, கடபடாதிகள்போல் அந்தர்யாமியை ஸாக்ஷாத்கரிக்கிறான் என்று சொல்லமுடியாது. பகவானாலேயே ஸர்வமும்

அறியப்படுகிறதே அன்றி பகவான் அறியப்படுவதாக சொல்லமுடியாது. *'ஸர்வம் புமான் வேத குணாம்ஸ்ச தத்ஞ்ஞோ ந வேத ஸர்வஞ்ஞம் அனந்தமீடே'* ('सर्वं पुमान् वेद गुणांश्च तद्ज्ञो न वेद सर्वज्ञम् अनन्तमीडे') என்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ருத்யன் தனக்கு ப்ரேரகனான யஜமானனை பார்ப்பதுபோல் தனக்கு ப்ரேரகனான ஈச்வரனை யாரும் பார்க்கமுடியாது.

பூர்வ:- பக்தர்களுக்கெல்லாம் வாஸுதேவ ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டதாக சொல்லப்படுகிறதே?

ஸித்தா:- பக்தர்களுக்கு வாஸுதேவனின் சரீர ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறதே அன்றி சைதன்ய ஸாக்ஷாத்காரம் ஏற்படுவதாகச் சொல்லப்படவில்லை. வ்யவஹார தசையில் ஜீவனுக்கும், பரமாத்மாவிற்கும் உபாதி வித்யாஸம் இருப்பதால்தான், ஈச்வரன் நித்ய பரோக்ஷம் என்றும், ஜீவன் நித்ய அபரோக்ஷம் என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் உபாதி பேதத்தை விலக்கி பரமார்த்த தத்வத்தை அறிவிப்பதற்காகவே, ஜீவ உபாதி - ஈச்வர உபாதி என்ற இரண்டு உபாதிகளையும் பாகத்யாக லக்ஷணயைக்கொண்டு விலக்கி அறியப்படுகின்றபோது இரண்டுமே சைதன்ய ஸ்வரூபம் என்று ஏகம் என்றே அறியப்படுகிறது. இதையே 'தத் த்வமஸி' (तत्वमसि) போன்ற மஹாவாக்யங்கள் போதிக்கின்றன.

பூர்வ:- ஜீவனுக்கு மற்றொரு ஜீவனின் ஸாக்ஷாத்காரமோ, அல்லது ஈச்வர ஸாக்ஷாத்காரமோ ஏற்பட வேண்டாம். ஆனால் யோகியாக இல்லாதவன் ஸர்வமும் தன்னிடம் இருப்பதாக பார்க்கிறான் என்றும் யோகியானவன் ஸர்வமும் பரமாத்மாவினிடம் இருப்பதாக பார்க்கிறான் என்றும் சொல்லலாமே?

ஸித்தா:- ஸத்யமே. ஆனால் எல்லா யோகிகளும் ஒரே விதமாக பார்க்கிறார்கள் என்று சொல்லமுடியாது. ஒரு யோகி ப்ரஹ்மத்தில் ஜகத் இருப்பதாக பார்க்கலாம், மற்றொரு யோகி ஜகத்தில் ப்ரஹ்மம் இருப்பதாகப்பார்க்கலாம். அதாவது *'யோ மாம் பச்யதி ஸர்வத்ர'* (यो मां पश्यति सर्वत्र) என்றும் *'ஸர்வஞ்ச மயி பச்யதி'* (सर्वं च मयि पश्यति) என்றும் 'எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன் என்றோ' அல்லது 'ஸர்வமும் என்னிடம் இருக்கின்றது' என்றோ அறிய வேண்டும் என்று பகவான் தெரிவிக்கின்றார். இதன் தாத்பர்யம் என்னவென்றால், அதிஷ்டான ஸ்வரூபத்தை அன்றி ஆரோபிதங்கள் வேறாக இருக்கமுடியாது என்று சில யோகிகளின் தர்சனம் இருக்கலாம். இந்த யோகிகளுக்கும் மேலான யோகிகள் ஜகத் என்ற விசேஷண ரூபத்தை பாதித்து ஸர்வம் ப்ரஹ்மமயம் என்று அறிகிறார்கள். இதற்கும் மேலான யோகிகள், யோகவித்தம: என்பவர்கள் ஜகத் என்ற எதுவுமே இல்லையே என்ற அனுபவத்தைக்கொண்டு ப்ரஹ்மமாகவே ஆகிறார்கள். ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவபவதி என்ற நிலையை அடைகிறார்கள். ஆகவே, யோகவித், யோகவித்தரன், யோகவித்தமன் என்று பலவிதமாக இருக்கின்றார்கள். ஆகையால் யோகிகள் எல்லோருமே ஜகத் பரமாத்மாவில் இருப்பதாக பார்க்கிறார்கள் என்று எவ்விதம் சொல்லமுடியும்? பரமாத்ம ஸ்வரூபமாகவே ஆகிறான் என்பதால், இவ்வித ஆக்ஷேபங்கள் எல்லாம் பொருந்தாது.

பூர்வ:- ப்ரஹ்ம ஸ்வரூபத்தை எவன் ஸாக்ஷாத்கரிக்கின்றானோ, அவனைத்தானே யோக வித்தமன் என்று சொல்லவேண்டும்?

ஸித்தா:- *'ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி'* (ब्रह्मवित् ब्रह्मैव भवति) என்றே சாஸ்திரம் தெரிவிக்கின்றதே அன்றி, *'ப்ரஹ்மவித், ப்ரஹ்ம பச்யதி'* (ब्रह्मवित् ब्रह्म पश्यति) என்று தெரிவிக்கவில்லை. ப்ரஹ்ம ஞானம் ஏற்பட்டவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று ச்ருதிவாக்யம் தெரிவிக்கின்றது. ப்ரஹ்மத்தை பார்க்கிறான் என்று சொல்லப்படவில்லை.

பூர்வ:- *'அஹம் மனுரபவம் ஸூர்யச்ச'* (अहं मनुरभवं सूर्यश्च) என்ற வாக்யத்தில் உள்ள 'அஹம் சப்தம், வாமதேவரைக்குறிப்பிடுகிறதே அன்றி பரமாத்ம வாசக சப்தம் என்று சொல்லமுடியாது என்றும் அது ஜீவனையே குறிப்பதாக முன்னால் உங்களால் சொல்லப்பட்டது. அது சரியல்ல. (ஏனெனில் சரீரவாசக சப்தம் சரீரி பர்யந்தம் குறிப்பதாகவே சொல்லவேண்டும்) தேவதத்தன், யஞ்ஞதத்தன் என்ற பெயர்கள் சரீரத்தைச்சேர்ந்தது என்றாலும், தேவதத்தன் என்ற சப்தம் சரீரி பர்யந்தம் பர்யவஸானத்தை அடைகின்றது என்றே சொல்லவேண்டும். சில வஸ்துக்களில் பிரிக்க முடியாத சில விசேஷணங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இதுவே 'அப்ருதக் ஸித்த விசேஷணம்' என்று (நையாயிகனால் அயுதஸித்தம் என்று) தெரிவிக்கப்படுகிறது. உதாரணமாக வஸ்திரமும், நூலும் என்றுதெரிவிக்கின்றபோது, வஸ்த்ரம் அவயவி என்றும் நூல் அவயவம் என்றும், அதேபோல் குணம், குணீ என்றும் இது போன்ற வஸ்துக்கள் அப்ருதக் ஸித்த விசேஷணம் என்று சொல்லப்படுகிறது. அதுபோல் சித், அசித் என்ற இரண்டும் பரமாத்மாவிற்கு அப்ருதக் ஸித்த விசேஷணம் என்பதால், விசேஷண சப்தங்கள் எல்லாம் விசேஷ்ய பர்யந்தம், தன் அர்த்தத்தை தெரிவிக்கும். அதனால், அஹம் சப்தமும், ஜீவனை தெரிவித்தாலும், பரமாத்ம பர்யந்தம் பர்யவஸானத்தை (முடிவை) அடைகிறது என்றே சொல்லவேண்டும். அதனால் அஹம் சப்தம் ஜீவனை குறிக்கின்றதென்றும் பரமாத்மாவை குறிப்பிடவில்லை என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- அஹம் மனுரபவம் என்ற வாக்யத்தில் உள்ள, அஹம் சப்தம் என்பதும், மனு என்ற சப்தமும், இரண்டுமே பரமாத்மாவிற்கு அப்ருதக் ஸித்த விசேஷணம் என்றே சொல்லவேண்டும். அதனால் இந்த இரண்டு சப்தங்களும் ஒரே பரமாத்மாவை தெரிவிப்பதாகச் சொல்லவேண்டும். இவ்விதம் சொல்லப்படுமானால், பரமாத்மா, என் சரீரமாகவும், மனு சரீரமாகவும் இருக்கிறார் என்று சொல்லப்பட்டதாக ஆகும். 'அஹம்' என்பதற்கு ஜீவனான 'நான்' என்று அர்த்தம் செய்யப்படுமானால் 'அஹம் மனுரபவம்' என்ற வாக்யம், நான் மனுவாக ஆகிவிட்டேன் என்றே அர்த்தம் செய்யவேண்டும். 'அபவம்' என்ற பதம் உத்தமபுருஷனையே குறிப்பிடுவதால், 'நான்' என்றே அர்த்தம் செய்யவேண்டும். அவ்விதமின்றி அஹம் சப்தம், என் சரீரக பரமாத்மா என்றும், மனு சரீரக பரமாத்மா என்றும் அர்த்தம் செய்யப்படுமானால் 'அபவம்' என்று உத்தமபுருஷனை குறிக்கின்ற வாக்யத்தில் அன்வயம் ஏற்படமுடியாது. உன்னால் சொல்லப்படுவதுபோல் 'அஹம்' சப்தம் பரமாத்ம பர்யந்தம் அர்த்தம் என்று சொல்லப்படுமானால், அந்த வாக்யம் 'அஹம் மனுரபவத்' என்றே இருக்கவேண்டும். 'அஹம் மனுரபவம்' என்பது மட்டுமல்ல. என் சரீரக பரமாத்மா என்று முன்பு உன்னால் தெரிவிக்கப்பட்டது. இப்போது 'பரமாத்மாவிற்கு சரீரமாக இருக்கின்ற நான்' என்பதே 'அஹம் சப்தார்த்தம்' என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் அர்த்தம்

செய்யப்படுமானால் அஹம் மனு என்ற வாக்யத்தில் உள்ள பதங்களுக்கு ஸாமானாதிகரண்யம் எவ்விதம் சொல்லமுடியும்? பரமாத்மா ஒன்றே என்றாலும், பரமாத்மாவிற்கு சரீரமான அஹம் என்பதும் (வாமதேவ சரீரம்) பரமாத்மாவிற்கு சரீரமான மனு என்பதும் எவ்விதம் ஒன்று என்று சொல்லமுடியும்? அதனால் அஹம் மனு என்ற ஸாமானாதிகரண்யம் பொருந்தாது. அதனால் சரீரி ஒன்று என்றாலும் சரீரம் அனேகம் என்று நீயும் ஒத்துக்கொள்வதாகவே ஆகிறது.

பூர்வ:- 'அஹம் மனுரபவம்' என்று உத்தம புருஷனையேகுறிப்பிடுவதாகச் சொல்லப்பட்ட போதிலும், 'அஹம் மனுரபவத்' என்ற அர்த்தம்தான் இருக்கவேண்டும் என்று சொல்லலாமே?

ஸித்தா:- இது சரியல்ல. 'அஹம் கச்சாமி' என்ற வாக்யத்திற்கு 'நான் போகிறேன்' என்றே அர்த்தம் சொல்லவேண்டுமே அன்றி, என்னை சரீரமாகக்கொண்ட பரமாத்மா போகிறார் என்று அர்த்தம் செய்யப்படுமானால் பரிஹாஸாஸ்பதமாக ஆகும். மேலும் இவ்விதம் 'அஹம் கச்சாமி' என்ற வாக்ய ப்ரயோகம் செய்கின்றபோது, ஸர்வ வ்யாபகமாக இருக்கின்ற சைதன்யமே சரீர உபாதிகமாக இருக்கின்றதால், சரீரத்தின் கமனாகமனங்களை, ஜீவனானவன், 'அஹம் கச்சாமி' என்று ஆத்ம அனாத்ம தாதாத்ம்ய அத்யாஸத்தினால் தெரிவிக்கிறான் என்று சொன்னால் பொருந்தும். இதை நிராகரித்து 'அஹம்' சப்தார்த்தம் பரமாத்மா என்று அர்த்தம் செய்யப்படுமானால், ஸர்வவ்யாபியான பரமாத்மாவிற்கு கமனாகமனம் எவ்விதம் ஸம்பவிக்க முடியும்? 'அஹம்' சப்தத்திற்கு பரமாத்மா என்று அர்த்தம் இருக்குமானால் கதி ஆகதி (போகிறது, வருகிறது) என்பதே ஸம்பவிக்கமுடியாது. ஆகவே இந்தவிதம் வாக்யங்களுக்கு அபூர்வமாக அர்த்தம் கல்பிக்கப்படுவது பரிஹஸிக்கத்தக்கதாக ஆகும். பொருந்தாத விஷயம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- பரமாத்மாவிற்கு கமனாகமனம் ஸம்பவிக்க முடியாது என்பது சரியே. ஆனால் பரமாத்மாவை சரீரியாகக்கொண்ட நான் போகிறேன் என்று 'அஹம் கச்சாமி' என்பதற்கு அர்த்தம் செய்யலாமே?

ஸித்தா:- பரமாத்மாவிற்கு எவ்விதம் கமனம் ஸம்பவிக்காது என்று சொல்லப்பட்டதோ, அதேபோல் ஜீவனுக்கும் சரீரம் என்ற உபாதி இல்லாமல் கதி ஸம்பவிக்க முடியாது.

பூர்வ:- அப்படியானால் பரமாத்மாவை சரீரியாகக்கொண்ட ஜீவனின் சரீரம் போகிறது என்று 'அஹம் கச்சாமி' என்ற சப்தத்திற்கு அர்த்தம் செய்யலாமே?

ஸித்தா:- அஹம் கச்சாமி என்ற இரண்டு பதங்களுக்குள் இவ்வளவு அர்த்தம் எவ்விதம் கிடைக்கின்றது?

பூர்வ:- 'அஹம் கச்சாமி' என்பதில் இவ்வளவு அர்த்தம் கிடைக்கின்றதோ இல்லையோ, ஆனால் இவ்வித அர்த்தம் தான் செய்யவேண்டுமே அன்றி வேறு எந்த அர்த்தமும் (பொருந்தாது) சொல்லமுடியாது.

ஸித்தா:- 'அஹம் கச்சாமி' என்பதில் இவ்விதம் அர்த்தம் செய்யக்கூடிய யோக்யதை இருப்பதாகவே ஒத்துக்கொண்டபோதிலும், அனுபவத்திற்கு விரோதமாக வேறு எந்த அர்த்தமும் சொல்லமுடியாது.

பூர்வ:- பரமாத்மாவின் சரீரம் ஜீவன், ஜீவனுடைய சரீரம், இந்த தேஹம். இந்த தேஹம் போகின்றபோது, ஜீவனுக்கு தாதாத்ம்ய அத்யாஸத்தினால் அஹம் கச்சாமி என்ற வ்யவஹாரம் ஏற்படுவதாக சொல்லலாமே? இதுவே எல்லோருடைய அனுபவமாக இருக்கின்றதால் அனுபவ விரோதம் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- அப்படியானால், ஜீவனுக்கு தேஹ தாதாத்ம்ய அத்யாஸத்தினால் சரீரம் போகின்றது என்று அறியாமல், தானே போகின்றதாக அத்யாஸத்தினால் அஹம் கச்சாமி என்று சொல்கிறான் என்றே சொல்லலாமே? அவ்விதமின்றி பரமாத்ம சரீரகனான ஜீவனுடைய சரீர அத்யாஸத்தினால் அஹம் கச்சாமி என்று தெரிவிப்பதாக இவ்வளவு விசேஷணம் சொல்லவேண்டிய அவச்யம் என்ன?

பூர்வ:- உண்மையாகவே ஜீவன், பரமாத்மாவிற்கு சரீரமாக இருக்கின்றதனால் இவ்விதம் விசேஷணங்கள் சொல்லவேண்டியதாக இருக்கிறது. அதாவது பரமாத்மா, அப்ருதக்ஸித்த விசேஷணமான ஜீவனை சரீரமாகக்கொண்டிருப்பதால், பரமாத்ம ஸ்வரூபபேதம் ஜீவனுக்கு இருக்கின்றது என்று உண்மை நிலை அறியப்பட வேண்டுமென்பதற்காகவே, இந்த விசேஷணங்களுடன் தெரிவிக்கப்பட்டது.

ஸித்தா:- சித், அசித், என்ற இரண்டுமே பரமாத்மாவிற்கு அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று உன்னால் சொல்லப்படுகிறது. ஆனால் ஈச்வரன்தான், சித், அசித் என்ற இரண்டிற்கும் அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று சொல்லவேண்டும். ஏனெனில் ஜீவன் எவ்விதம் ஈச்வரனுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணமோ, அதேபோல் ஈச்வரன் இல்லாவிடில் ஜீவன் என்பவனும் இருக்கமாட்டான் என்பதால் ஜீவனுக்கு ஈச்வரன் அப்ருதக்ஸித்த விசேஷணம் என்றே சொல்லலாம். மேலும் உன் ஸித்தாந்தப்படி சித் அசித் என்ற இரண்டும் இல்லாவிடில் ஈச்வரனே இருக்கமுடியாதே? ஏனெனில், சித், அசித் என்ற சரீரமே இல்லாவிடில் சரீரியான பரமாத்மா எவ்விதம் இருக்கமுடியும்? சரீரமின்றி சரீரி இருக்க முடியாதாகையால், ஈச்வரனை, சித், அசித் என்ற இரண்டிற்கும் அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று சொல்லலாமே?

பூர்வ:- ஜீவன், ஈச்வரனுக்கு சரீரமாக இருக்கின்றதால் ஜீவனைத்தான் ஈச்வரனுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜீவனுக்கு ஈச்வரன் சரீரி என்று சொல்லப்படுமானால், ஈச்வரன்தான் ஜீவனுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று சொல்லவேண்டும். சரீரம் இல்லையென்றால் சரீரியும் இல்லை, சரீரி இல்லையானால் சரீரமும் இல்லை.

பூர்வ:- சரீரம் இல்லை என்றால் சரீரி மட்டும் ப்ருதக்காக ஸித்திக்கமுடியும். ஆனால் சரீரி இல்லாமல் சரீரம் ப்ருதக்காக ஸித்திக்க முடியாது.

ஸித்தா:- சரீரத்தைவிட்டு, ஆத்மா வேறுபடுத்தப்படுமானால், அதன் பிறகு ஆத்மாவை, சரீரி என்று சொல்லமுடியாது. அதனால் சரீரத்தை விட்டு சரீரி இருக்கலாம் என்று சொல்வதே மிகவும் அபத்தம். அது மட்டுமல்ல, சரீரம் என்பது சரீரியைக்காட்டிலும் வேறாக இருக்கமுடியும். ஆதலால் சரீரம் ஜீவனுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று சொல்லப்படுவதும் சரியல்ல

என்று இதன் மூலம் ஸித்திக்கின்றது. மரணம் ஏற்படுமானால், ஜீவன் என்ற சரீரியைவிட்டு சரீரத்தை மட்டுமே பார்க்க முடியும். ஆனால் சரீரம் இல்லாமல் சரீரியை பார்க்கின்றான் என்று சொல்லமுடியாது.ஆகவே, சரீரம் இல்லாமல் சரீரியை ப்ருதக்ஸித்தமாக பார்க்கமுடியாது என்றாலும், சரீரி இல்லாமல் ப்ருதக்ஸித்தமாக சரீரத்தை பார்க்கமுடியும். அதனால், சரீரம் என்ற விசேஷணத்தை விட்டு, விசேஷ்யம் என்பது ப்ருதக்காக ஸித்திக்கமுடியாது. விசேஷணமின்றி விசிஷ்ட்ட ஞானமும் ஏற்படமுடியாது.

பூர்வ:- ஜீவன் சரீரி. அவனுடைய தேஹம், ஜீவன் இல்லாவிட்டாலும் ப்ருதக்காக ஸித்திக்கின்றதால் சரீரம் அப்ருதக் ஸித்த விசேஷணம் என்று சொல்லப்படுவது சரியல்ல என்பது ஒப்புக்கொள்ளபட்டாலும் சித் என்ற ஜீவனும், அசித் என்ற தேஹமும், ஈச்வரனை அன்றி வேறாக ஸித்திக்கமுடியாது. அதனால் சித், அசித், என்ற இரண்டு சரீரமும், ஈச்வரனுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று சொல்லலாம். ஏனெனில் ஈச்வரன் இல்லாமல் சித் என்ற ஜீவனோ, அசித் என்ற தேஹமோ தனித்து அறிய முடியாது.

ஸித்தா:- உன் ஸித்தாந்தப்படி சிதசித் சரீரகன் ஈச்வரன் என்று சொல்லப்படுகிறது. ஈச்வரன், சிதசித் விசிஷ்ட்டம் என்றால், சிதசித் என்ற இரண்டு விசேஷணங்களும் இல்லாமல் ஈச்வரன் ஸித்திக்க முடியாதே?

பூர்வ:- விசேஷ்யம், விசேஷணம் என்ற இரண்டில், விசேஷணம் என்பது பரதந்த்ரம். விசேஷ்யம் என்பது ஸ்வதந்த்ரம். அதனால் பரதந்த்ரமான விசேஷணம் ஈச்வரனை விட்டு தனித்து ஸ்வதந்த்ரமாக இருக்கமுடியாது. ஆனால் ஈச்வரன் விசேஷ்யமாக இருக்கின்றதால், சித் அசித் என்ற விசேஷணங்களை விட்டு வேறாக ஸ்வதந்த்ரமாக இருக்கலாமே?

ஸித்தா:- ஒரு வஸ்து விசேஷணமாக, பரதந்த்ரமாக இருக்கின்றதற்காக, அந்த வஸ்து அப்ருதக்ஸித்த விசேஷணமாக இருக்கின்றது என்று சொல்லமுடியாது. குணம் என்பது விசேஷணம். குணி என்பது விசேஷ்யம். எந்த குணமும் இல்லாமல் வஸ்து இருக்கலாமே? எஜமானன் விசேஷ்யன் ஸ்வதந்த்ரன் ப்ருத்யன் விசேஷணம் அஸ்வதந்த்ரன். ஆனாலும், ப்ருத்யனும் எஜமானனும் ஒன்றாக இருப்பதாக சொல்லமுடியுமா? இதேபோல் அசேதனமான வஸ்துக்களில், தச்சன் விசேஷ்யம், அவன் உபகரணங்கள் விசேஷணம். தச்சன் இல்லாமல், உபகரணங்கள் வேலை செய்யாது. ஆனாலும் தச்சனை அன்றி உபகரணங்கள் வேறாக இருக்கின்றதே? இவ்விதம் விசேஷணம் அஸ்வதந்த்ரமாக இருந்தாலும், விசேஷ்யத்தைவிட்டு வேறாகத்தானே ஸித்திக்கின்றது? மேலும் விசேஷணமாக இருந்தால் அஸ்வதந்த்ரமாகத்தான் இருக்கவேண்டும் என்ற நியமம் சொல்லமுடியாது. ஸ்வதந்த்ரமாகவும் இருக்கலாம். அஸ்வதந்த்ரமாகவும் இருக்கலாம். உதாரணமாக ராஜாவிற்கு, மந்திரியாக இருக்கின்றவன் விசேஷணமாகவும் பரதந்த்ரனாகவும் இருக்கலாம். ஆனால் அந்த மந்திரியே, தன் பத்னி புத்ரன் இவர்களை அபேக்ஷித்து ஸ்வதந்த்ரனாகத்தானே இருக்கின்றான். ஆகவே, விசேஷணமாக இருப்பதற்காக அஸ்வதந்த்ரமாகத்தான் இருக்கவேண்டுமென்ற நியமம் சொல்லமுடியாது.

பூர்வ:- ராஜாவிற்கு மந்திரி விசேஷணம். அதனால் ராஜாவிற்கு மட்டுமே பரதந்திரன் என்று சொல்லமுடியும். எந்த வஸ்துவிற்கு எது விசேஷணமோ அந்த வஸ்துவிற்கே அது பரதந்திரமாக இருக்கும் என்று சொல்கிறேன்.

ஸித்தா:- பூதலத்தில் கடமில்லை என்று தெரிவிக்கின்றபோது, சாஸ்திரங்களில் இரண்டு விதமாகச்சொல்லப்படுகிறது. கட அபாவவத் பூதலம் (பூதலம் கட அபாவத்துடன் கூடியது) என்று தெரிவிக்கின்றபோது, பூதலம் விசேஷ்யம், கட அபாவம் விசேஷணம் என்றாகிறது. இவ்விதம் கட அபாவவத் பூதலம் என்று தெரிவிக்கின்றபோது, கட அபாவம் என்பது (பூதலம் இல்லாவிடில் கடமோ, கட அபாவமோ இருக்கமுடியாது என்பதால்) விசேஷணமாகவும், பரதந்த்ரமாகவும் இருக்கின்றது. அதற்கு ஆதாரமாக இருக்கின்ற பூதலம் ஸ்வதந்த்ரம். பூதலே கடாபாவ: என்று தெரிவிக்கின்றபோது கட அபாவம் விசேஷ்யம். பூதலம் விசேஷணமாக இருந்தாலும்கூட, கட அபாவத்திற்கு அதீனமாக பூதலம் இல்லை. அதனால் விசேஷணமாக இருப்பதெல்லாமே பரதந்திரமாகத்தான் இருக்கவேண்டும் என்ற நியமமில்லை மேலும், குண குணீபாவம், க்ரியை, க்ரியாவத்பாவம் என்று சொல்லப்படுவதிலும், குணம் என்பது விசேஷணம், குணீ விசேஷ்யம், க்ரியை விசேஷணம், க்ரியாவத் விசேஷ்யம். இவ்விதம் குணமுள்ள குணீ என்ற த்ரவ்யமோ, க்ரியை உள்ள க்ரியாவத் வஸ்துவோ எதுவானாலும், விசேஷ்யமான வஸ்துவைவிட்டு விசேஷணம் என்ற குணமோ, க்ரியையோ வேறாக இருக்கமுடியாது. எப்போதுமே இவை இரண்டும் பரதந்த்ரம்தான். ஆனாலும் ஒரு த்ரவ்யத்திற்கு, வேறொரு த்ரவ்யம் விசேஷணமாக இருந்தாலும், அப்ருதக் ஸித்தம் என்று சொல்லமுடியாது. அசேதனமான த்ரவ்யங்களில் ஒரு த்ரவ்யம், மற்றொரு த்ரவ்யத்திற்கு வேறாக ஸித்திக்கலாம். அதற்கு ஸ்வாதந்தர்யம் கிடையாது. (ஏனெனில் அசேதனமானதால் ஸ்வதந்த்ரம் இல்லை. அஸ்வதந்த்ரம்) ஆனால் சித் த்ரவ்யம் என்று சொல்லப்படும் ஆத்மா, அசேதன த்ரவ்யத்தைக் காட்டிலும் வேறாக (ப்ருதக்காக) ஸித்திக்கின்றது. ஸ்வதந்த்ரமாகவும் இருக்கின்றது ஆகையால் அசித் த்ரவ்யம் ஸர்வதா அஸ்வதந்த்ரம் என்றே சொல்லவேண்டும். சித் த்ரவ்யம் என்பது அஸ்வதந்த்ரமாகவும் இருக்கலாம், ஸ்வதந்த்ரமாகவும் இருக்கலாம். ஆகவே சித் அசித் என்ற இரண்டு த்ரவ்யமும் ஈச்வரனுக்கு விசேஷணம் என்று சொல்லப்பட்டபோதிலும் அப்ருதக் ஸித்தம் என்று சொல்லமுடியாது. ப்ருதக் ஸித்தமாகவே இருக்கின்றது. மேலும், ஸர்வ ஜகத்தும் ஈச்வரனிடம் இருப்பதாகவும் சொல்லலாம், ஸர்வ ஜகத்திலும் ஈச்வரன் இருக்கிறார் என்றும் சொல்லலாம். இவ்விதம், ஈச்வரனிடம் ஜகத் இருக்கின்றதென்று தெரிவிக்கின்றபோது, இந்த வாக்யம் ஜகத்தையே ப்ரதானமாக விசேஷ்யமாக தெரிவிக்கின்றது. அதனால் ஈச்வரன் விசேஷணம். ஜகத்தில் ஈச்வரன் இருக்கிறார் என்று தெரிவிக்கின்றபோது ஈச்வரன் ப்ரதானமாக தெரிவிக்கப்படுகிறார். அதனால் ஈச்வரன் விசேஷ்யம். ஜகத் விசேஷணம் என்று இந்த வாக்யம் தெரிவிக்கின்றது. அதனால் ஈச்வரன், விசேஷ்யமாகத்தான் இருக்கின்றார் என்று நியமமாக சொல்லமுடியாது.

பூர்வ:- சித், அசித் என்பவைகளின் ஸ்திதி ஈச்வராதீனம் என்பதால், ஈச்வரனுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- அசித் பதார்த்தங்களுக்கு ஈச்வராதீன ஸ்திதி இருக்கிறது என்றாலும், சித் த்ரவ்யம், ஈச்வர அதீனமல்ல. சித் என்ற ஜீவன் நித்யமாகவும், ஸ்வதந்த்ரனாகவும் இருக்கின்றதால் ஈச்வர அதீனம் என்று சொல்லமுடியாது. மேலும், உன் ஸித்தாந்தப்படி அசித் த்ரவ்யமும் நித்யம் என்று சொல்லப்படுவதால் அசித் என்பது ஈச்வராதீனம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் ஈச்வரன், ப்ரக்ருதி, புருஷன், என்ற மூன்றுமே நித்யம் என்று சொல்லப்படுவதால், அசித் த்ரவ்யம் என்பதை எந்த காரணத்தைக்கொண்டு ஈச்வராதீனம் என்று சொல்லமுடியும். அசித் ஈஸ்வர அதீனம் என்றால் என்ன பொருள்? ஈச்வரனிடம் அசித் த்ரவ்யம் இருக்கின்றது என்று சொல்லப்படுமானால், அதாவது ஈச்வரன் அந்தர்யாமி என்று சொல்லப்படுவதால், அசித் த்ரவ்யத்தில் அந்தர்யாமியாக இருக்கின்ற ஈச்வரனும், அசித் த்ரவ்யாதீனம் என்று சொல்ல நேரிடும். அசித் த்ரவ்யங்கள் எல்லாம் ஈச்வரனால் ச்ருஷ்டிக்கப்படுவதால், ஈச்வராதீனம் என்று சொல்லப்படுமானால், அசித் த்ரவ்யம் நித்யம் என்று உன்னால் சொல்லப்படுவதால் அஜம் என்று சொல்ல நேரிடும். அதனால் (அஜத்வாத்) ஈச்வர ச்ருஷ்ட்டம் என்று சொல்லமுடியாது. அசித் த்ரவ்யம் நித்யம் என்றாலும், ஈச்வரனால்தான் ரக்ஷிக்கப்படவேண்டியதாக இருக்கின்றதால், ஈச்வராதீனம் என்று சொல்லலாமே என்றால் சேதன வஸ்துவிற்கே ரக்ஷணபலன் ஸம்பவிக்க முடியுமே அன்றி அசேதனத்திற்கு ரக்ஷணபலன் ஸம்பவிக்காது. சித் த்ரவ்யமே ரக்ஷணத்திற்கு உரியதாக ஆகும். அதாவது ரக்ஷணபலமான ஸுகானுபவம் சேதனனுக்குத்தான் ஸம்பவிக்க முடியும். அசித் த்ரவ்யம் ரக்ஷிக்கப்படுவதாக சொல்வது சரியல்ல. உதாரணமாக பசு என்ற சேதனவர்க்கத்தை, த்ருணாதிகளைக்கொடுத்து அதன் எஜமானன் ரக்ஷிக்கின்றான். அதேபோல் புத்ரன் முதலானவர்களை அன்னபானாதிகளை கொடுத்து பிதா ரக்ஷிக்கின்றான். அதனால் சேதனனுக்கே ரக்ஷிதம் என்பது ஸம்பவிக்க முடியும். அசேதனத்திற்கு ஸம்பவிக்காது.

பூர்வ:- சேதனனை, சேதனன் ரக்ஷிக்கின்றான் என்று சொல்வது சரியல்ல. த்ருணாதிகளினாலோ, அன்னபானாதிகளினாலோ சேதனனுடைய சரீரமே போஷிக்கப்படுகின்றதே அன்றி சேதனன் ரக்ஷிக்கப்படவில்லை. அதனால் ரக்ஷிதத்வம் என்பது அசேதனத்தில்தான் ஸம்பவிக்க முடியும்.

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால் ஈச்வரன் ரக்ஷகன் என்றே சொல்லமுடியாது. ஏனெனில் ஈச்வரனுடைய சரீரமே, சேதனனையோ, அசேதனத்தையோ ரக்ஷிக்கின்றது என்று சொல்லவேண்டுமே அன்றி சைதன்ய ஸ்வரூபமான ஈச்வரன் ரக்ஷகன் என்று சொல்லமுடியாது. ப்ருதிவ்யாதி பூதங்கள் தன்னிடம் இருந்து உற்பத்தியாகின்ற தான்யம் முதலானவைகளைக்கொண்டு பஞ்சபௌதிகமான சரீரங்களை காப்பாற்றுகின்றது. ஆகவே ரக்ஷகம், ரக்ஷிதமென்ற இரண்டுமே அசேதனம் என்றே சொல்லவேண்டும். அதனால் சேதனன், அசேதனத்தை ரக்ஷிப்பதாக சொல்வது சரியல்ல. கூர்மம், மந்த்ரபர்வதத்தை தாரணம் செய்ததைபோல், ஈச்வரன், அசித் த்ரவ்யமான இந்த ஜகத்தை தாரணம் செய்கின்றதால் ஈச்வராதீனம் என்று சொல்லப்படுமானால் அதுவும் சரியல்ல. ஏனெனில் அசித் த்ரவ்யம் ஈச்வரனால் தாரணம் செய்யப்படவில்லை என்றால் என்ன நஷ்ட்டம்? அசித்த்ரவ்யம் நாசம் ஆகும் என்று சொல்லப்படுமானால், அசித்த்ரவ்யம் நித்யம் என்று

உன்னால் சொல்லப்படுவதால், அதற்கு நாசம் எவ்விதம் ஏற்படமுடியும்? எந்த ஒரு க்ஷணத்திலும், நாசம் ஏற்படாதது எதுவோ, அதுவே நித்யம். அதனால் ஈச்வரன் தரிக்கவில்லை என்றாலும் அசித்த்ரவ்யத்திற்கு எந்த ஹானியும் ஏற்படாது.

பூர்வ:- ப்ரக்ருதி என்ற அசித், நித்யம்தான். ஆனால் ஈச்வரன் தாரணம் (தாங்குவது) செய்யவில்லை என்றால், அதன் கார்யமான ஜகத்திற்கு ப்ரளயம் ஏற்படலாமே?

ஸித்தா:- அப்படியானால், ஜகத்தை ஈச்வரன் தாரணம் செய்கின்றார் என்று சொல்லலாமே அன்றி ப்ரக்ருதியை தாங்குகிறார் என்று சொல்லவேண்டிய அவச்யம் ஏதுமில்லை. அசித் த்ரவ்யம் ப்ரக்ருதி. இந்த ப்ரக்ருதிக்கு ஈச்வரனை தாரகனாக சொல்லப்படவில்லை என்றால் அதனால் ஹானி ஏதுமில்லை. கார்யமான ஜகத்திற்கே ஈச்வரனை தாரகனாக சொல்லவேண்டும். அதனால் ப்ரயோஜனமும் இருக்கின்றது. அதாவது கார்யமான இந்த ஜகத்தை ஈச்வரன் தாரணம் செய்யாவிடில், கார்ய ஜகத்திற்கு ப்ரளயம் ஏற்படும் என்று சொல்லலாம். இவ்விதம் கார்யமான ஜகத்திற்கு ப்ரளயம் ஏற்படுவதால், காரணமான ப்ரக்ருதிக்கு எந்தவித ஹானியும் கிடையாது. ஆகையால் கார்ய ஜகத்திற்கு, ஈச்வரன் தாரகர் என்று சொல்லலாம். ப்ரக்ருதி என்ற அசித் த்ரவ்யத்திற்கு தாரகர் என்று சொல்ல முடியாது. ஆனால் உன்னுடைய ஸித்தாந்தத்தின்படி காரணமான ப்ரக்ருதி ஈச்வரனால் தரிக்கப்படுவதால் ஈச்வராதீனம் என்று உன்னால் முன்பு சொல்லப்பட்டது. ஆனால் உன் ஸித்தாந்தத்தில் ப்ரக்ருதி நித்யம் என்று சொல்வதால், அதை ஈச்வரன் தரிக்கவில்லை என்றாலும் ப்ரக்ருதிக்கு ஹானி ஏதுமில்லை. அதனால் ப்ரக்ருதியை ஈச்வராதீனம் என்று சொல்லமுடியாது. உதாரணமாக ம்ருத்தினுடைய பரிணாமம் கடம் முதலானவை. இவையெல்லாம் ம்ருத்திலிருந்து உண்டாகின்றபோதும், ம்ருத்திலேயே இருக்கின்றபோதும் அவைகள் நசிக்கின்றபோதும் ம்ருத்திற்கு அதனால் லாபம் என்ன? நஷ்டம் என்ன? கடம் உண்டாகின்றபோதும் ம்ருத் உண்டாகின்றது என்றோ அவை நசிக்கின்றபோது ம்ருத் நசிக்கின்றதென்றோ சொல்வதில்லை. ஆகவே, அசித் என்ற ப்ரக்ருதியின் பரிணாமமான இந்த ஜகத் உற்பத்தி, விநாசத்தினால் அசித் த்ரவ்யத்திற்கு உற்பத்தி விநாசம் சொல்லமுடியாது. ஆகையால் ஈச்வரனால் தாரணம் செய்யப்படுவதால் ஈச்வராதீனம் என்று சொல்வதற்கும் முடியாது.

பூர்வ:- அசித், ஈச்வர பரதந்த்ரமாக இருக்கின்றதால் ஈச்வராதீனம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஒரு வஸ்து, மற்றொரு வஸ்துவிற்கு பரதந்த்ரம் என்று சொல்லவேண்டுமானால், எவருக்கு அந்த வஸ்துவை ஆக்கவும், மாற்றவும், அழிக்கவும் முடியுமோ, அவ்விதம் சக்தி உடையவருக்கே அந்த வஸ்து பரதந்த்ரம் என்று சொல்லலாம். ஆனால், அசித் என்பது நித்யம் என்று உன்னால் சொல்லப்படுவதால், ஈச்வரனுக்கு பரதந்த்ரம் என்று சொல்லமுடியாது. உதாரணமாக, குலாலன், கடத்தை உண்டு பண்ணலாம், வேண்டாம் என்றால் கடத்தை உண்டு பண்ணாமலும் இருக்கலாம். அல்லது கடத்தை மாற்றி வேறான ஒன்றைச்செய்யலாம். ஆகவே கர்த்தும் சக்யம், அகர்த்தும் சக்யம் அன்யதாவா கர்த்தும் சக்யம், என்ற இவ்வித சக்தியுடையவருக்கே ஒரு வஸ்து பரதந்த்ரமாக இருக்கமுடியும். ஆகவே அந்த வஸ்து

நித்யம் என்றால், கர்த்தும் அகர்த்தும், அன்யதாவா கர்த்தும் சக்யம், என்ற சொல்வதற்குரிய யோக்யமாக இருக்காது. குலாலனுக்கு கடம்தான் பரதந்த்ரமாக இருக்கலாமே அன்றி - ம்ருத் பரதந்த்ரமாக இருக்க முடியாது.

பூர்வ:- ம்ருத் என்பதும் அநித்யம் என்றுதானே உங்களால் சொல்லப்படுகிறது?

ஸித்தா:- குலாலனை அபேக்ஷித்து ம்ருத் நித்யம் என்று சொல்லலாம். குலாலன், இருந்தாலும், இல்லாவிட்டாலும் ம்ருத் இருக்கின்றது. அசித் த்ரவ்யம் நித்யம் என்று உன்னால் சொல்லப்பட்டதால், அது ஈச்வர பரதந்த்ரமாக இருக்க முடியாது.

பூர்வ:- அசித் த்ரவ்யம் ஸூக்ஷ்மமாக இருந்தால், அதை ஸ்தூலமாகவும், ஸ்தூலமாக இருந்தால் அதை ஸூக்ஷ்மமாகவும் செய்யக்கூடிய சக்தி ஈச்வரனிடம் இருக்கின்றதால் ஈச்வராதீனம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஈச்வரன், ஸ்தூலமான வஸ்துவை ஸூக்ஷ்மமாகவும், ஸூக்ஷ்மமாக இருப்பதை ஸ்தூலமாகவும் செய்கிறார் என்று சொல்லப்படுமானால், ஸ்தூலாவஸ்த்தை, ஸூக்ஷ்மாவஸ்த்தை என்ற இரண்டு அவஸ்த்தைகளே பரதந்த்ரம் என்று சொல்லலாமே அன்றி அசித் த்ரவ்யம் பரதந்த்ரம் என்று சொல்லமுடியாது. எவ்விதம் ம்ருத்தில் ஏற்படும் கடாவஸ்த்தை, சராவ அவஸ்த்தை, கபால அவஸ்த்தை என்ற அந்த அவஸ்த்தைகள்தான் குலால பரதந்த்ரமே அன்றி ம்ருத் என்பது குலால பரதந்த்ரமில்லை. அதுபோல் அசித் த்ரவ்யம் நித்யம் என்று சொல்லப்படுமானால் அதை பரதந்த்ரம் என்று சொல்லமுடியாது. ஆனால், எங்கள் ஸித்தாந்தத்தில், ப்ரக்ருதி அநித்யம் என்று சொல்லப்படுவதால் ஈச்வர பரதந்த்ரம் என்று சொல்வதால் ஹானி ஏதுமில்லை. ஆகவே இதுபற்றி மேலும் விஜாரிக்கவேண்டிய அவச்யம் ஏதும் இல்லை. இதுவரை விசாரிக்கப்பட்டதிலிருந்து, ஈச்வரன், சித், அசித் என்ற மூன்றுமே நித்யம் என்று உன்னால் சொல்லப்படுவதால் இந்த மூன்று தத்வங்களில், ஒன்றைக்கூட அப்ருதக் ஸித்த விசேஷணம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் மூன்றும் நித்யம் ஸ்வதந்த்ரம் என்பதால் பரஸ்பரம் அப்ருதக் ஸித்த விசேஷணம் என்று சொல்லமுடியாது. அதனால் சரீரவாசக சப்தம் சரீரி பர்யந்தம் பர்யவஸானம் என்று சொல்லப்படுவதும் சரியல்ல. சித் ஸ்வரூபத்தை குறிக்கின்ற சப்தமோ, அசித்தை குறிக்கின்ற சப்தமோ விசேஷ்யமான ஈச்வரனிடம் பர்யவஸானத்தை அடைகின்றது என்று சொல்வது சரியல்ல. ஆகவே, 'அஹம் மனுரபவம்' என்ற வாக்யத்திலுள்ள அஹம் சப்தம் பரமாத்மாவை குறிப்பிடுவதாகச் சொல்லப்பட்டது சரியல்ல. வாமதேவரால் சொல்லப்பட்ட 'அஹம்' சப்தம் ப்ரத்யகாத்மாவையே குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது வாமதேவருக்கு ப்ரத்யகபின்ன ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டதால் ஸர்வமாக இருக்கும் பிரஹ்மம் நானே, ஆதலால் ஸர்வமும் நானே என்ற இந்த ஞானத்தால் 'அஹம் மனுரபவம் ஸூர்யச்ச' என்று தெரிவிக்கின்றார் என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ப்ரஹ்மம் ஸர்வமாக எவ்விதம் ஆகமுடியும்? ப்ரஹ்மம் ஸர்வமாக பரிணாமத்தை அடைகின்றது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வதில்லையே?

ஸித்தா:- த்ரஷ்ட்டா, த்ருச்யம், தர்சனம் என்ற ஸர்வ ஜகத்தும் மாயையினால் கல்பிதம் என்பதால் உண்மையில் த்ரஷ்ட்டா, த்ருச்யம் தர்சனம் என்ற ஜகத் பிரஹ்மத்தில் இல்லை என்பதால் ஸர்வம் பிரஹ்மம் என்றே சொல்லப்படுகிறது. அதனால் ஸர்வம் என்பது பரமார்த்தமில்லை என்பதால் அத்விதீயம் ப்ரஹ்மம் ஏகம் என்ற ஸித்தாந்தமே ஸித்திக்கின்றது. இவ்விதம் ச்ருதியினால் தெரிவிக்கப்படும் உண்மையான அர்த்தத்தை விட்டுவிட்டு பொருத்தமற்ற லாக்ஷணீகமான அர்த்தத்தை கல்பிப்பது சரியல்ல. ச்ருதி வாக்யத்தின் நேரிடையான அர்த்தம் பொருந்தவில்லை என்றால்தான் லக்ஷணையாக அர்த்தம் சொல்லலாம். ஸத்யமான அர்த்தம் நேரிடையாகவே கிடைக்கின்றபோது பொருந்தாத அர்த்தத்தை லக்ஷணையாக கல்பிக்கப்படுவது வ்யர்த்தம். ஆகவே, இவ்விதம் விஜாரிக்கப்பட்ட முறையில், '*நேஹ நானாஸ்தி கிஞ்சன*' என்ற வாக்யம், ஸஜாதீய விஜாதீய ஸ்வகத பேதம் என்ற ஸர்வபேதங்களையும் நிஷேதம் செய்கின்றது என்றே ஸித்திக்கின்றது. அவ்விதமின்றி, சில பேதங்களை நிஷேதம் செய்வதாக சொல்வது பொருந்தாது. ப்ரஹ்மம் ஸர்வமாக இருக்கின்றது என்று சொல்லப்படுவதால் ஸர்வம் - ப்ரஹ்மம் என்ற பேதம் நிஷேதம் செய்யப்படவில்லை என்று சொல்வது சரியல்ல. ஆகவே ஜீவபரமாத்ம ஐக்யமே வேதாந்த சாஸ்திரதாத்பர்யம் என்றே ஸித்திக்கின்றது.

81 - 82

तैत्तिरीयश्रुत्यन्तर्गत 'अदृश्ये अनात्म्ये' इति पदार्थविचारः।
'अनिरुक्त अनिलयन' पदार्थविचारः

தைத்ரீய ச்ருத்யந்தர்கத 'அத்ருச்யே, அனாத்ம்யே' இதி பதார்த்த விசார:
'அனிருக்த, அனிலயன' பதார்த்த விசார:

'யதாஹ்யேவைஷ ஏதஸ்மின் அத்ருச்யே, அனாத்ம்யே, அநிருக்தே, அநிலயனே, அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே, அதஸோ அபயம்கதோபவதி' என்ற தைத்ரீய ச்ருதி வாக்யத்தில் உள்ள, அத்ருச்யே, அனாத்ம்யே, முதலானபதங்களின் அர்த்தம் என்னவென்று விசாரிக்கப்படுகிறது.''

பூர்வ:- 'அத்ருச்யே' என்ற பதம் ஈச்வரனுக்கு விசேஷணமாக தெரிவிக்கின்றதால் பரமாத்மா, அசித் வஸ்து அல்ல என்று அசித்திலிருந்து வ்யாவ்ருத்தி செய்து தெரிவிக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- சித், அசித், ஈச்வரன் என்ற எல்லாமே த்ருச்யம் என்றே உன்னால் சொல்லப் படுவதால், உன்னால் சொல்லப்படும் அர்த்தம் உன் ஸித்தாந்தத்திற்கு பொருந்தாது. ஏனெனில் அசித் என்பது மட்டுமே த்ருச்யமென்று சொல்லப்பட்டால்தான், சித், ஈச்வரன் என்ற இரண்டும், அசித்திலிருந்து வ்யாவ்ருத்தி செய்வதாக சொல்லமுடியும். ஆனால் மூன்றுமே த்ருச்யம் என்று சொல்லப்படுவதால், ஈச்வரனிடமிருந்து அசித் வ்யாவ்ருத்தி செய்து 'அத்ருச்யே' என்றபதம் தெரிவிப்பதாகச் சொல்லமுடியாது. அதனால் உன்னால் சொல்லப்பட்ட அர்த்தம் சரியல்ல. அதுமட்டுமல்ல, 'அனாத்ம்யே' என்ற பதம், பந்த ஜீவனிடமிருந்து வேறுபடுத்தி ஈச்வரனை தெரிவிப்பதாகச்சொல்லப்படுகிறது. இதுவும் சரியல்ல. 'ஆத்ம்யே' என்றால், பரமாத்மாவினால், வ்யாபிக்கப்படும் பந்த ஜீவன், அனாத்ம்யே என்றால், பந்தஜீவனிலிருந்து வேறுபடுத்தி பந்தமற்ற ஈச்வரனை, தெரிவிக்கின்றது என்று உன்னால் சொல்லப்படுகிறது. இதுவும் சரியல்ல. ஏனெனில், பரமாத்மா ஸர்வ வ்யாபி என்றும் பந்த ஜீவனையும் வ்யாபித்திருப்பவர் பரமாத்மா என்றும் உன்னால் சொல்லப்படுகிறது. இவ்விதம் சொல்லப்படுமானால், முக்தனென்றும், நித்ய முக்தன் என்றும் சொல்லப்படுபவர்கள் பரமாத்மாவினால் வ்யாபிக்கப்படுகிறாரா? இல்லையா? இல்லை என்று சொல்லப்படுமானால், '*அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தித:*' (अन्तर्बहिश्च तत् सर्वं व्याप्य नारायणस्थितः) என்ற ச்ருதியின் தாத்பர்யம் என்ன? பரமாத்மா ஸர்வ வ்யாபகர் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் பந்தஜீவன் பரமாத்ம வ்யாப்யன் என்று சொல்வது சரியல்ல. விசிஷ்ட்டாத்வைதத்தில் கதாசித் (ஏதோ ஒரு ஸமயம்) முக்தன் என்றும், நித்ய முக்தன் என்றும் இரண்டுவிதம் சொல்லப்படுகிறது. அதாவது வைகுண்டத்தில் அனந்தர், விஷ்வக்ஸேனர், என்ற இவர்கள் நித்ய ஸூரிகள், நித்ய முக்தர்கள் என்றும்,

உபாஸனையினால் வைகுண்ட பதவியை அடைபவர்கள் கதாசித்முக்தர்கள் (முக்தி) என்றும் சொல்லப்படுகிறது. இவர்களும் பரமாத்மாவினால் வ்யாபிக்கப்படுபவர்கள் என்றே சொல்லவேண்டும்.

மேலும், 'அனாத்ம்யே' என்ற பதத்திற்கு வேறொரு முறையில் அர்த்தம் சொல்லப்படுகிறது. அதுவும் சரியல்ல. 'ஆத்ம்யன்' என்றால் சரீரமுள்ளவன் என்றும், அனாத்ம்யன் என்றால் கர்மக்ருதமான சரீரமற்றவன் (கர்மாதீனமான சரீரம் இல்லாதவன்) ஈச்வரன் என்றும் அர்த்தம் செய்யப்படுகிறது. இவ்விதம் கர்மாதீனமான சரீரமற்றவன் என்று விசேஷணம் சொல்லவேண்டிய அவச்யம் என்ன? அசரீரி என்றே அர்த்தம் சொல்லவேண்டும். எனெனில் அவித்யா நிலையில் ஜீவன் சரீர அபிமானமுடையவனாக இருக்கின்றான் என்பதால் ஸசரீரன் என்று (சரீரத்துடன் கூடினவன் என்று) சொல்லப்படுகிறதே அன்றி வித்யாதசையில் சரீர அபிமானமின்றி இருக்கின்றதால் அவனே அசரீரியாக ஆகிறான் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ஈச்வரனுக்கு கர்மக்ருதமான சரீரம் கிடையாது என்று சொல்லப்படுமானால், அகர்மக்ருதமான சரீரம் இருப்பதாக சொல்லநேரிடும். அதனால், ஜீவனுக்கே சரீரம் இல்லை என்றால் ஈச்வரனுக்கு சரீரம் இருப்பதாக எவ்விதம் சொல்லமுடியும்? '*அசரீரம் வாவ ஸந்தம் ந ப்ரியாப்ரியே ஸ்ப்ருசத:*' என்று ச்ருதி தெரிவிக்கின்றது. அதனால் இவ்விதம் அர்த்தம் செய்வது பொருந்தாது. மேலும், ஸர்வ ஜகத்தும் பரமாத்மாவிற்கு சரீரம் என்றே உன்னால் சொல்லப்படுவதால், பரமாத்மாவிற்கு கர்மக்ருத சரீரம் இல்லை என்று எவ்விதம் சொல்ல முடியும்? சிதசித் சரீரக ஈச்வரன் என்றே உன்னால் சொல்லப்படுவதால், ஸர்வ ஜீவர்களின் சரீரமும் கர்ம க்ருதம் என்பதால் ஸர்வ சரீரமும் ஈச்வரனுக்கு சரீரம் என்று தெரிவிக்கின்ற உன் ஸித்தாந்தப்படி ஈச்வரனுக்கு கர்மக்ருதசரீரம் இல்லை என்று எவ்விதம் உன்னால் சொல்லமுடியும்? ஆகவே, அனாத்ம்யன் என்ற பதத்திற்கு கர்மக்ருத சரீரமற்றவன் ஈச்வரன் என்று உன்னால் சொல்லப்படும் அர்த்தம் முற்றிலும் பொருந்தாது.

மேலும், 'அநிருக்தே' 'அநிலயனே' என்று தெரிவிக்கின்ற பதங்களில் 'அநிருக்தம்' என்ற பதம், முக்த ஜீவனிடமிருந்து ஈச்வரனை வ்யாவ்ருத்தி செய்து தெரிவிக்கின்றது என்று உன்னால் சொல்லப்படுகிறது. இதுவும் சரியல்ல. ஏனெனில், உன் ஸித்தாந்தத்தில் முக்தன் அமுக்தன் என்ற இரண்டு பேருமே ஸசரீரன் என்று சொல்லப்படுகிறது. அதாவது அப்ராக்ருத சரீரமுடையவன் ஈச்வரன் என்றும், முக்தனுக்கும் திவ்ய சரீரம் இருக்கின்றதென்றும், தேவசரீரம், மனுஷ்யசரீரம் அப்ராக்ருத சரீரம், வைஷ்ணவ சரீரம் என்றும் நிர்வசனம் செய்யக்கூடிய சரீராதிகள் இருப்பதாகச் சொல்லப்படுவதால் 'அநிருக்தன்' என்ற பதம், முக்த வ்யாவ்ருத்தி என்று விசேஷணம் சொல்வது பொருந்தாது. ஈச்வரனிடமிருந்து பொதுவாக ஜீவ வ்யாவ்ருத்தி என்று ஒரு ஸமயம் சொன்னாலும் சொல்லலாமே அன்றி முக்த வ்யாவ்ருத்தி என்று சொல்வது பொருந்தாது.

இதேபோல் 'அநிலயனே' என்று, நித்ய முக்த வ்யாவ்ருத்தி என்று சொல்லப்படுகிறது. அதுவும் சரியல்ல. நித்ய முக்தர்கள், பகவானை தனக்கு இருப்பிடமாக கொண்டவர்கள். அதனால் அநிலயனர்கள் அல்ல. பகவானுக்கு யாதொரு விதமான ஆதாரமும் கிடையாது என்று அநிலயனே என்ற பதம் நித்ய முக்த வ்யாவ்ருத்தி செய்து தெரிவிக்கின்றது என்று

சொல்வதும் சரியல்ல. ஏனெனில் ஈச்வரனை அன்றி வேறாக நித்ய முக்தர்கள் என்று யாரும் கிடையாது.

பூர்வ:- அனாதி காலமாக வைகுண்டத்திலேயே வாஸம் செய்பவர்களான ஆதிசேஷன், அனந்தர், கருடர், விஷ்வக்ஸேனர் என்பவர்கள் எல்லாம் நித்யமுக்தர்களாக, ஸர்வதா வைகுண்டத்திலேயே இருக்கின்றவர்கள். அதனால் ஈச்வரனை அன்றி நித்ய முக்தர்கள் யாருமே இல்லை என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- நித்ய முக்தர்கள் என்று உன்னால் சொல்லப்படுவர்கள் சரீரமுடையவர்களா? அல்லது அசரீரியா? சரீரமுடையவர்கள் என்றால் அவர்கள் ப்ரியாப்ரிய ஸ்பர்சம் இல்லாமல் இருக்கமுடியாது. அதனால் ப்ரியாப்ரிய ஸ்பர்சம் உடையவர்கள் என்றால் அவர்களை முக்தர்கள் என்று சொல்லமுடியாது. அசரீரன் என்று சொல்லப்படுமானால் நித்ய முக்தர்கள் என்ற அனந்தர், கருடர் என்பது போன்ற நாமரூபங்கள் இருப்பதாக எவ்விதம் சொல்லமுடியும்? இவர்கள் அசரீரி என்றால், இவர்களில் அனந்தன் யார், கருடன் யார், விஷ்வக்ஸேனர் யார், என்று எவ்விதம் அறியமுடியும்?

பூர்வ:- அனந்தர் முதலானவர்களுக்கு ப்ராக்ருத சரீரமல்ல. அப்ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹம் இருப்பதாக சொல்வதால் அசரீரி என்றே சொல்லலாம்.

ஸித்தா:- ப்ரஹ்ம பின்னமான ஸர்வமும் ப்ராக்ருதம் என்பதால், அப்ராக்ருதமாக எந்த ஒரு வஸ்துவும் இருக்கமுடியாது. மேலும், அனந்தன், ஸர்ப்ப ஜாதி, கருடன் பக்ஷி ஜாதி, இவை எல்லாமே ப்ராக்ருத சரீரம் உடையதாகவே இருக்கின்றது. அதேபோல் மனுஷ்ய சரீரமோ, தேவசரீரமோ எல்லாமே ப்ராக்ருதம்தான். மனுஷ்ய சரீரம் நூறு வருடங்கள் இருந்தால், அதைவிட அதிக காலம் தேவ சரீரம் இருக்கலாம். ஆனால் அப்ராக்ருத சரீரம் என்பதே கிடையாது. எல்லாமே ப்ரக்ருதியைச் சேர்ந்த ஜீவராசிகள்தான். வைகுண்டலோகத்தில் இருப்பவர்கள் நித்யமுக்தர்கள் என்றால், அதேபோல் ப்ரஹ்மலோகம், சிவலோகத்தில் இருப்பவர்களும் நித்யமுக்தர்கள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் வைகுண்டம் போலவே, மற்ற இரண்டு லோகங்களும் லோகங்கள்தான் என்பதால், வைகுண்டத்திற்கு மட்டும் தனித்த விசேஷம் என்ன இருக்கின்றது? பூலோகத்தில் இருப்பவர்களும் அப்ராக்ருதன் என்றும் நித்ய முக்தர்கள் என்றும் சொல்லலாமே? எல்லோருமே லோகத்தில் வசிப்பவர்கள்தானே? அதனால் வைகுண்டத்திற்கு மட்டும் தனிப்பட்ட விசேஷம் என்ன சொல்லமுடியும்? அதனால் லோகத்திற்கு உட்படாமல் லோகாதீதமான வஸ்து எதுவோ அதுவே நித்ய முக்த ஸ்வரூபம் என்று சொல்லவேண்டும். மேலும், உன்னால் தெரிவிக்கப்படும் நித்ய முக்தர்கள், பகவானிடம் இருக்கின்றார்களா? அல்லது பகவான் இருக்கின்ற லோகத்தில் இருக்கின்றார்களா? பகவானிடம் இருப்பதாகச் சொல்லப்படுமானால், ஸர்வ ஜீவர்களும் பகவானிடத்தில்தான் இருக்கின்றார்கள். அதனால் அவர்களில் நித்ய முக்தர்கள் மட்டும் பகவானிடம் இருப்பதாக விசேஷணம் சொல்வது சரியல்ல. அதற்காக பகவான் இருக்கின்ற லோகத்தில் இருப்பதாகச் சொல்லப்படுமானால், நித்ய முக்தர்களுக்கு பகவான் ஆதாரமில்லை, அந்த லோகமே ஆதாரம் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அதுமட்டுமல்ல

சங்கு சக்ரதாரியான அந்த பகவானுக்கும் அந்த லோகமே ஆதாரம் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. இவ்விதம் சொல்லப்படுமானால் சங்கு சக்ரதாரியான விஷ்ணுவானவர் எங்கும் வ்யாபகமாக இருக்கமாட்டார், வைகுண்டலோகத்தில் மட்டும்தான் இருப்பார் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அதனால் நித்ய முக்தர்களுக்கு பகவான் ஆதாரம் என்று சொல்வதும் பொருந்தாது. அதுமட்டுமல்ல, நித்ய முக்தர்களுக்கு பகவான் ஆதாரம் என்றால், நித்ய முக்தர்கள் ஆதேயம் என்றாகும். அவ்விதம் சொல்லப்படுமானால், பகவான் வ்யாப்யமென்றும், நித்ய முக்தர்களால் பகவான் வ்யாபிக்கப்படுவதாக சொல்லநேரிடும். (ஆதேயமான நித்ய முக்தர்களால் ஆதாரமான பகவான் வ்யாபிக்கப்படுகிறார் என்று சொல்ல நேரிடும்.) ஆகையால் இவை எதுவுமே பொருந்தாது.

பூர்வ:- நித்ய முக்தர்கள் பகவானை ஆதாரமாகக்கொண்டவர்கள் என்பதானது ராஜாவானவர் எவ்விதம் ப்ரஜைகளுக்கு ஆதாரம் என்று சொல்லப்படுகிறதோ அதுபோல் ஆதாரத்வம் சொல்லப்படுகிறது. அதாவது, நித்யமுக்தர்கள் பகவானால் போஷிக்கப்படுவதால் (பகவததீனஸ்திதிகத்வம்) பகவான் ஆதாரம் என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- எவர்கள் பசி, தாகம், ஜனனம், மரணம், ஸுகம், துக்கம் முதலான ஸம்ஸாரம் அற்றவர்களோ அவர்களையே நித்ய முக்தர்கள் என்று சொல்லவேண்டும். இப்பேர்ப்பட்ட நித்ய முக்தர்கள் பகவானால் போஷிக்கப்படுகிறார்கள் என்று சொல்வது எவ்விதம் பொருந்தும்?

பூர்வ:- பகவானான பரமானந்த ஸாகரத்தில் நித்ய முக்தர்கள் மூழ்கி இருக்கின்றார்கள். அதனால் நித்ய முக்தர்களுக்கு பகவான் ஆதாரம் என்று சொல்லப்பட்டது.

ஸித்தா:- பகவானான பரமானந்த ஸாகரத்தில் எவ்விதம் நித்ய முக்தர்கள் மூழ்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறதோ, அதேபோல் ஆனந்தக்கடலான முக்த ஆத்ம ஸ்வரூபத்தில் பகவான் மூழ்கி இருப்பதாகச்சொல்லலாமே? அதனால் நித்ய முக்தர்கள் பகவானுக்கு ஆதாரம் என்று சொல்லலாமே?

பூர்வ:- பகவான் தன்னுடைய ஆனந்த ஸ்வரூபத்தில் மூழ்கி இருக்கின்றார் என்று சொல்லலாமே அன்றி, முக்த ஆத்மாவில் மூழ்கி இருப்பதாகச் சொல்வது சரியல்ல.

ஸித்தா:- அப்படியானால், முக்தனும் ஸ்வானந்தத்தில்தான் மூழ்கி இருக்கிறான் என்றே சொல்லவேண்டுமேயன்றி பகவானுடைய ஆனந்தத்தில் மூழ்கி இருப்பதாகச்சொல்வது சரியல்ல. ஸ்வஸ்வரூபானந்தத்தில் திளைத்திருப்பதே மோக்ஷம். அதனால் பகவான் ஆதாரம் என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- முக்தனுக்கு தன்னைவிட பரமாத்மாவிடம்தான் ப்ரேமை அதிகம். அதனால்தான் அவருக்கு ஸேவை செய்கின்றான். ஆகையால் பரம ப்ரேமாஸ்பதமான பகவத் ஸ்வரூபத்தில் திளைத்திருக்கின்றானே அன்றி, ஸ்வானுபவத்தில் மூழ்கி இருப்பதாகச்சொல்வது சரியல்ல.

ஸித்தா:- முக்தனுக்கு எவ்விதம் பகவான் பரம ப்ரேமாஸ்பதமோ, அதேபோல் பகவானுக்கும் முக்தன் பரமப்ரேமாஸ்பதம். இதையே பகவானும், ''*ப்ரியோ ஹி ஞானிநோத்யர்த்தமஹம்*

ஸ ச மம ப்ரிய:" (प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः) என்று, எனக்கு ஞானியே பரமப்ரேமாஸ்பதம் என்று பகவானே தெரிவிக்கின்றார்.

பூர்வ:- கீதாவசனம் ஞானியைப்பற்றி தெரிவிக்கின்றதே அன்றி முக்தனைப்பற்றி தெரிவிக்க வில்லை.

ஸித்தா:- முக்தன் அஞ்ஞானி அல்ல, முக்தன்தான் ஞானி, ஞானியே முக்தன். ஆகையால், ஞானியே பகவானுக்கு பரம ப்ரேமாஸ்பதம் என்று சொல்லப்படுமானால், ஞான பலமான மோக்ஷத்தை (முக்தியை) அடைந்தவன் பகவானுக்கு அப்ரியன் என்று சொல்லமுடியுமா? ஆகவே, கைமுதிக ந்யாயேன ஞானியே பரம ப்ரேமாஸ்பதமாக இருப்பானாகில், ஞானபலகமான முக்தியை அடைந்தவன் பகவானுக்கு ப்ரேமாஸ்பதகமாக இருக்கின்றான் என்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை. ஞானிக்கும் முக்தனுக்கும் வித்யாஸமே கிடையாது. வித்யாஸம் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் கூட முக்தன் பகவானுக்கு பரம ப்ரேமாஸ்பதம் என்றே சொல்லவேண்டும். அதனால் நித்யமுக்தன் என்பவன் ஈச்வரனே அன்றி வேறல்ல. ஈச்வரனே நித்ய முக்தன். நித்ய முக்தனே ஈச்வரன். அதனால் யாருக்கு யார் ஆதாரம் என்ற ப்ரச்னைக்கே இடமில்லை.

பூர்வ:- நித்ய முக்தன் ஈச்வரன் என்றால், முக்தன் ஈச்வரனா? இல்லையா?

ஸித்தா:- பகவானே மாயையினால் பந்தன்போல் இருக்கின்றான், வித்யையினால் முக்தன் போல் ஆகிறான் என்று சொல்லவேண்டுமே அன்றி பகவான் வேறு முக்தன் வேறு என்று ஆதார ஆதேய பாவம் சொல்லமுடியாது. நித்ய முக்தனுக்கு ஆதாரம் நித்யமுக்தன்தான். ஈச்வரனுக்கு ஆதாரம் ஈச்வரனே என்றே சொல்லவேண்டும். ஒரே ஈச்வரன், மாயாவசாத் பந்தனாகவும், முக்தனாகவும் இருக்கின்றான் என்று சொல்லப்படுவதால், ஒருவருக்கொருவர் வேறுபட்டவர் என்று விபாகம் செய்வது சரியல்ல. இதையே ச்ருதிவாக்யமும் *'ஸ்வே மஹிம்னி ப்ரதிஷ்டித:'* (स्वे महिम्नि प्रतिष्ठितः) என்று தன்னுடைய ஸ்வரூபத்திலேயே ஆச்ரயித்திருப்பதாகவே, தெரிவிக்கின்றது.

பூர்வ:- பந்த ஜீவனையும், முக்த ஜீவனையும் ஈச்வரன் என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் ப்ரஹ்ம பின்னம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜீவன் நித்யன், அவன், பந்தனாகவோ, முக்தனாகவோ இருப்பதற்காக, ஜீவஸ்வரூபத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படாது. பத்தஇவ, முக்தஇவ என்று (பந்தன்போல், முக்தன்போல்) என்று சொல்லப்படுவதால் இந்த அவஸ்தைகள் இரண்டும் ஆவித்யகம் (அவித்யாகாலமாத்ரம்) என்று *'அதோன்யதார்த்தம்'* (अतोन्यदार्तम्) என்றே ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது. ஜீவன் ஒன்றே ஸத்யம். மற்ற எல்லாமே ஆர்த்தம் (அஸத்யம்) என்றே தெரிவிக்கின்றது. அதனால் ஸத்யமான ஜீவனை ப்ரஹ்ம பின்னம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? *'தத்ஸத்யம் ஸ ஆத்மா'* (तत्सत्यं स आत्मा) *'அதோன்யதார்த்தம்'* (अतोन्यदार्तम्) என்று தெரிவிக்கின்றதால், ஜீவன் ப்ரஹ்ம பின்னம் என்று சொல்வது சரியல்ல. (ப்ரஹ்ம பின்னமாக இருந்தாலும் ஸத்யமாக இருக்கலாமே என்ற கேள்வி சரியல்ல)

பூர்வ:- ஸர்வம் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுவதால், ப்ரஹ்ம பின்னமான வஸ்துவே இருக்க முடியாதே? அதனால் 'அதோன்யதார்த்தம்' என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ப்ரஹ்மம் ஸச்சிதானந்த ஸ்வரூபம். இப்பேர்ப்பட்ட ப்ரஹ்மம் ஸச்சிதானந்தமாக இல்லாத ஸர்வ ஜட வஸ்துக்களாக எவ்விதம் இருக்கமுடியும்? ப்ரஹ்ம பின்னமான அனைத்தும் அஸத் ஜடம், துக்காத்மகம் என்று நேர் விருத்தமான தன்மையில் இருக்கின்றதால், அவைகளை ப்ரஹ்ம பின்னம் என்றே சொல்லவேண்டும். அதனால் அவையெல்லாம் அஸத் என்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை.

பூர்வ:- ஸர்வம் ஸச்சிதானந்த ஸ்வரூபம் என்று சொல்லமுடியவில்லை என்றாலும், ஸர்வம் சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- 'சிதசித் விசிஷ்ட்டம் ப்ரஹ்ம' என்று சொல்லப்படுவதில் 'அசித்' என்பதும் சேர்ந்திருப்பதால், சிதசித் விசிஷ்ட்டாத்மகமாக ஸர்வம் இருக்கின்றது என்று சொல்லமுடியாது. சித், அசித், ப்ரஹ்மம் என்ற மூன்றையும் அன்றி, 'ஸர்வம்' என்று சொல்வதற்கு என்ன வஸ்து இருக்கிறது? அதனால் இவ்விதம் ஆக்ஷேபிப்பது சரியல்ல.

பூர்வ:- ஸ்தூல சிதசித்விசிஷ்ட்ட ப்ரஹ்மமே ஸர்வ பதவாச்யம் என்றும் அதற்கு ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்ட்ட பிரஹ்மத்துடன் அபேதம் சொல்லப்படுகிறது என்று சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுவதால், ஸ்தூல சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மம், ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறல்ல, அபின்னம் என்று சொல்லப் பட்டதாகவே ஆகிறது. அதனால் ப்ரஹ்மம், ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்ற இரண்டுடன் ஸம்பந்தமுடையது என்றுதான் அர்த்தமாகின்றது. அதனால், ப்ரஹ்மம், ப்ரஹ்ம அபின்னம் என்று சொல்வது வ்யர்த்தம். ஏனெனில், இரண்டிலும் ப்ரஹ்மம் என்பது ஒன்றே. அதனால் ப்ரஹ்ம அபின்னம் என்ற வாக்யமே பொருந்தாது. ப்ரஹ்மம், ப்ரஹ்ம பின்னமோ என்ற சந்தேகம்கூட ஏற்படமுடியாது. (கடம், கடபின்னம் என்ற சந்தேகமே ஏற்படாது).

பூர்வ:- ப்ரஹ்மம், சித், அசித் என்ற இரண்டிற்கும் அந்தர்யாமியாக இருக்கின்றதால், சித், அசித் இரண்டுமே ப்ரஹ்மம் என்றே சொல்லவேண்டும். இதையே ஸர்வம் ப்ரஹ்மம் என்ற வாக்யம் தெரிவிக்கின்றது. (சித் + அசித் = ஸர்வம்).

ஸித்தா:- சித், அசித் இரண்டுமே ப்ரஹ்மம்தான் என்று (ஸர்வத்திலும் அந்தர்யாமியாக இருக்கின்றதால் இரண்டுமே ப்ரஹ்மம் என்று) சொல்லப்படுமானால், ப்ரஹ்மம்தான் ஸத்யம் என்றும் சித், அசித் இரண்டுமே அஸத்யம் என்றே சொல்ல நேரிடும். ஏனெனில் (''*ஏஷ த ஆத்மா, அந்தர்யாமி அம்ருத:*'') என்று, அந்தர்யாமியாக இருப்பவரையே 'அம்ருதன்' என்று உபநிஷத் வாக்யம் தெரிவிக்கின்றது. அதனால் 'அந்தர்யாமி' என்ற ஒன்றே அம்ருதன், அதுவே ப்ரஹ்மம் என்று சொல்லவேண்டுமே அன்றி, சிதசித் என்பது ப்ரஹ்மம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- ப்ரஹ்மம் ஸத்யம், சிதசித் அஸத்யம் என்றே சொல்லலாமே? அதனால் என்ன நஷ்டம்?

ஸித்தா:- ஈச்வரன், சித், அசித் மூன்றும் ஸத்யம் என்று சொல்லப்படும் உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படுகிறதே? அதுமட்டுமல்ல சித், அசித், என்ற இரண்டில், சித் என்பது ஜீவனை குறிக்கின்றதால், ஜீவன் அஸத்யம் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. ஆனால் ச்ருதியானது ஜீவனை '*அஜோ நித்ய: சாஸ்வதோயம் புராண:*' என்று தெரிவிக்கின்றதால், ஜீவனை அஸத்யம் (ஆர்த்தம்) என்று சொல்வது சரியல்ல. ஜீவன் ப்ரஹ்மம்போல் ஸத்யம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஜீவனுக்கு அந்தர்யாமி ப்ரஹ்மம், அதனால் ஜீவன் ப்ரஹ்மம்போல் ஸத்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அந்தர்யாமியான ப்ரஹ்மமே ஸத்யம். ஜீவன் ஸத்யமென்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ஜீவ ப்ராணதாரணே என்று உபாதியுடன் கூடிய ப்ரஹ்மமே, ஆத்மா என்றும் ஜீவன் என்றும் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மமே ஆத்மா, அதனால் ஆத்மாவே அந்தர்யாமி என்பதால், ஜீவனுக்கு ஸ்வரூபமே ஆத்மா என்று அறியவேண்டும். எங்கள் ஸித்தாந்தத்தில் அந்த:கரண ப்ரதி பலன சைதன்யமே ஜீவன் என்று சொல்லப்படுவதால் ஸோபாதிகன் ஜீவன். ஆகையால் '*ஏஷ த ஆத்மா, அந்தர்யாமி*' என்று ச்ருதி வாக்யமும் ஆத்மாவே அந்தர்யாமி என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- பரமாத்மாவிற்கு ஜீவன் சரீரம் என்று சொல்லப்படுவதால், ஜீவனுக்கு ஆத்மா, பரமாத்மா என்றே சொல்லவேண்டும். அதனால் ஜீவனுக்கு அன்யமாகத்தான் ஆத்மா இருக்கவேண்டும் என்பதால், ஜீவஸ்ய ஆத்மா அந்தர்யாமி என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜீவ ஸ்வரூபமே ஆத்மா, அந்த ஆத்ம ஸ்வரூபமே ஸச்சிதானந்த லக்ஷண ப்ரஹ்மம். (ஜீவனுக்கு ஆத்மா அந்தர்யாமி என்றாலே ஜீவன், ஆத்ம ஸ்வரூபம் என்றே அறிய வேண்டும்). ஸர்வத்திலும் அந்தர்யாமியாக இருப்பது ப்ரஹ்மம் என்று சொல்லப்பட்டபோதிலும், ப்ரம்மா முதல் ஸ்தம்ப பர்யந்தம் (க்ருமி) ஸர்வத்திற்கும் அந்தர்யாமியாக இருப்பது ப்ரத்யக் ஸ்வரூபம் ஒன்றே. ப்ரஹ்மம் அந்தர்யாமி என்றாலும் ப்ரத்யகாத்மா அந்தர்யாமி என்றாலும் ஒன்றேதான். ப்ரத்யக் ஸ்வரூபமான ஆத்மாவிற்கும், அந்தர்யாமிக்கும் ஸ்வரூபம் ஸச்சிதானந்தமே என்பதால் இரண்டிற்கும் லக்ஷணம் ஒன்றே என்று ஸித்திக்கின்றது. அதனால் ஆத்மாவிற்கும் அந்தர்யாமிக்கும் வித்யாஸம் ஏதுமில்லை. அவ்விதமின்றி இரண்டும் வேறு என்று சொல்லப்படுமானால், அந்தர்யாமியை அன்றி வேறான எந்த வஸ்துவானாலும், அவை எல்லாமே அஸத்யம் (ஆர்த்தம்) என்றே சொல்லவேண்டும். இவ்விதம் சொல்லப்படுமானால் ப்ரத்யக் சைதன்யம் அஸத்யம் (ஆர்த்தம்) என்று சொல்லப்பட்டதாக ஆகும். ஆகவே, அந்தர்யாமியான ப்ரஹ்மமே ஸத்யம். விசிஷ்ட்ட ப்ரஹ்மம் அஸத்யம் என்றே சொல்ல வேண்டும். ஆத்மாவே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே ஆத்மா. ஆத்மாவை அன்றி ப்ரஹ்மம் வேறு என்று சொல்லப்படுமானால், ஆத்மாவிற்கு அன்யம் அனாத்மா என்றே சொல்லவேண்டும் என்பதால் ப்ரஹ்மம் அனாத்மா என்று சொல்ல நேரிடும். ஆகவே ஆத்மாவே ப்ரஹ்மம் என்றே சொல்லவேண்டும். மேலும், மஹாகாசம் என்பதே கடாகாசம் என்று சொல்லப்பட்ட போதிலும், கட விசிஷ்ட்ட ஆகாசமாக இருக்கின்றபோது கடாகாசம் அநித்யம் என்றே

சொல்லவேண்டும். அதேபோல் ப்ரஹ்மமே சிதசித்விசிஷ்ட்டமாக இருந்த போதிலும், விசிஷ்ட்டம் என்பது அநித்யமாக ஆகிறது. ஆகவே ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம், மற்ற எல்லாமே அநித்யம் என்றே அறியவேண்டும்.

இதுவரை விசாரிக்கப்பட்ட முறையில், சாரம் என்னவென்றால், ப்ரஹ்மம் விசிஷ்ட்டம் என்று சொல்லப்படுமானால் ப்ரஹ்மம் அஸத்யம் என்று சொல்லநேரிடும். அதேபோல் ஜீவன், ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக கொண்டவன் என்றால் ஜீவன் அஸத்யம் என்று சொல்லநேரிடும். அதனால், சிதசித் விசிஷ்ட்டம் ப்ரஹ்மம் என்றோ, ப்ரஹ்ம அந்தர்யாமிகன் ஜீவன் என்றோ சொல்லப்படுமானால், ஜீவன், ப்ரஹ்மம் என்ற இரண்டுமே, அஸத்யம், அநித்யம் என்று சொல்லநேரிடும். ஆகையால் இந்த வாதங்கள் எல்லாம் ப்ரயோஜனமற்றது. விடத்தக்கது. அதனால் ஜீவனே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே ஜீவன் என்றும் அறியப்படும் அபேத ஞானமே அபய ஹேது, பேததர்சனம் பயஹேது என்றே இந்த ச்ருதிவாக்யங்கள் தெரிவிக்கின்றன. '*யதா ஹ்யேவைஷ.....*' என்ற வாக்யத்தின்படி அத்ருச்யமான ப்ரஹ்ம ப்ரதிஷ்டையை அடைவானாகில் அதுவே அபயப்ராப்தி, என்று இந்த ச்ருதி வாக்யங்கள் தாத்பர்யேண போதிக்கின்றன.

83

‘अभयं प्रतिष्ठां विन्दते’ इत्यादिश्रुत्यर्थविचारः

‘அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே’ இத்யாதி ச்ருத்யர்த்த விசார:

‘ரஸோ வை ஸ:, ரஸகும்ஹ்யேவாயம் லப்த்வானந்தீ பவதி, கோஹ்யேவான்யாத்க: ப்ராண்யாத் யதேஷ ஆகாச ஆனந்தோ நஸ்யாத், ஏஷ ஹ்யேவானந்தயாதி’ (रसो वै सः। रसꣳह्येवायं लब्ध्वाऽऽनन्दी भवति। को ह्येवान्यात् कः प्राण्यात्। यदेष आकाश आनन्दो न स्यात्। एष ह्येवानन्दयाति) என்றும், *‘பீஷாஸ்மாத் வாத: பவதே, பீஷோதேதி ஸூர்ய:, பீஷாஸ்மாதக்னிஸ்சேந்த்ரச்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம இதி’* (भीषाऽस्माद्वातः पवते भीषोदेति सूर्यः भीषास्मादग्निश्चेन्द्रश्च मृत्युर्धावति पञ्चम इति) என்று பூர்வ உத்தரவாக்யங்களில் பேதம் அறியப்படுகிறது. அதனால் மத்தியில் இருக்கின்ற வாக்யம், பேத நிஷேதம் செய்வதாகச் சொல்வது பொருந்தாது என்று ராமானுஜரால் ஆக்ஷேபிக்கப்படுகிறது.

பூர்வ:- *‘யதேஷ ஆகாச: ஆனந்தோ ந ஸ்யாத் ஏஷ ஹ்யேவ ஆனந்தயாதி’* என்ற வாக்யம், *‘யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின் அத்ருச்யே, அனாத்ம்யே’* என்ற வாக்யத்திற்கு முன்னால் சொல்லப்பட்ட வாக்யம். *‘பீஷாஸ்மாத் வாத:பவதே பீஷோதேதி ஸூர்ய:, பீஷாஸ்மாதக்னிச்சேந்த்ரச்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம’* என்ற வாக்யம் *‘யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின்’* என்ற வாக்யத்திற்கு பின்னால் சொல்லப்பட்ட வாக்யம். இந்தவிதம் பூர்வவாக்யம், உத்தரவாக்யம் என்ற இரண்டுமே பேதத்தை தெரிவிக்கின்றது.

அதாவது பூர்வ வாக்யம் *‘ரஸோவை ஸ:’* என்று ஜீவன் ஆத்மரஸத்தை அனுபவிக்கின்றான், ஆத்மா, ரஸத்தை அனுபவிக்கச்செய்கிறார் என்று தெரிவிக்கின்றது. அதேபோல், உத்தரவாக்யமும், பரமாத்மா, பயத்தை உண்டு பண்ணுகின்றார் என்றும் ஜீவன் பயத்தை அடைகிறான் என்றும் தெரிவிக்கின்றதால், இவ்விதம் பூர்வோத்தர வாக்யங்களினால் ஜீவபரமாத்ம பேதமே அறியப்படுகிறது. மத்தியிலுள்ள ‘உதரமந்தரம் குருதே’ வாக்யம் பேதநிஷேதம் செய்வதாகச் சொல்வது சரியல்ல.

ஸித்தா:- இது சரியல்ல. ஜீவன், ப்ரத்யகாத்மாவே பரமாத்மா (ஈச்வரன்) என்று அறிவானாகில் அந்த விஞ்ஞானம் ஏற்பட்டவன் ஸ்வரூபானந்தத்தை அடைகிறான் என்றே பூர்வோத்தர வாக்யங்கள் தெரிவிக்கின்றது. ரஸஸ்வரூபமான பரமாத்மாவே தன்ஸ்வரூபம் என்று அபேதஞானம் ஏற்பட்டவன்தான் ஆனந்தானுபவத்தில் இருக்கின்றான். அதனால், அபேத தர்சனமே ஆனந்தம் என்பதால் முன்னால் சொல்லப்பட்ட வாக்யம் பேதத்தை ப்ரதி பாதனம் செய்கின்றது என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் இதுவரை பரமாத்மாவான தன்னிடம் பேததர்சனம் உடையவனாக இருந்ததால், அந்த அறியாமையில் பரமாத்மா அவனுக்கு ஆனந்தத்தை கொடுக்கவில்லை. இப்போது அபயப்ரதிஷ்ட்டிதனாக தன்னை அடைந்ததால் (அறிந்ததால்) பரமாத்மா ஆனந்தத்தைக் கொடுக்கின்றார் என்று ஆனந்தத்தைக்

கொடுப்பதற்கு காரணம் என்ன என்று அடுத்தவாக்யத்தில் '*யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின், அத்ருச்யே, அனாத்ம்யே, அநிருக்தே, அநிலயனே, அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே, அத ஸோபயம் கதோ பவதி*' என்றும் '*ஏதஸ்மின் உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' ("एतस्मिन् उदरमन्तरं कुरुते अथ तस्य भयं भवति") என்றும், காரணத்தை தெரிவிக்கின்றது. நிர்விசேஷமான ப்ரஹ்மத்தினிடம் அதுவே தன் ஸ்வரூபம் என்று அறியப்படுமானால், அந்த ஸ்வரூபமே அபய ஹேது என்றே தெரிவிக்கின்றது.

நிர்விகல்பக ஸமாதி என்பது பேதமற்ற ஸமாதியாக இருந்தும்கூட அதிலும் ஒரு சிலர் பயத்தை அடைகிறார் என்று '*அபயே பயதர்சின:*' (अभये भयदर्शिनः) என்று கௌடபாதர் தெரிவிக்கின்றார். இவ்விதம் அபய ஸ்வரூபத்தில் நிலை பெற்றவன்தான் ஆனந்தத்தை அடைகிறான். ஆகவே ப்ரஹ்மாத்ம பாவமே அபயப்ராப்திக்கு காரணம் என்பதால், ப்ரஹ்மம் ஆனந்தயிதா என்று தெரிவிக்கின்றது.

பூர்வ:- '*யதா ஹ்யேவைஷ...*' என்ற வாக்யத்தில், ஜீவன், அத்ருச்யமான ப்ரஹ்மத்தில் ப்ரதிஷ்ட்டிதன் என்று ஸப்தமி ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதால், ஆதார ஆதேய பாவம் அறியப்படுகிறது. அதனால் ஜீவ, ப்ரஹ்ம பேதம் இருப்பதாகவே தெரிவிக்கின்றது.

ஸித்தா:- '*ஸ்வே மஹிம்னி*' என்ற வாக்யத்தில் சப்தமி ப்ரயோகம் செய்யப்பட்டிருந்தாலும் ஆதாரமே தேவையில்லை என்று தான் அர்த்தம். அதனால் ஆதார ஆதேய பாவம் சொல்லமுடியாது. (மேலும் ப்ரஹ்மம் ஸர்வாதாரம் என்பதால் ப்ரஹ்மத்திற்கு வேறு ஆதாரம் கிடையாது என்பதையே தெரிவிக்கின்றது) இதேபோல் ஸப்தமிப்ரயோகம் செய்யப்பட்டிருந்தாலும், பேதம் இருப்பதாகச் சொல்லமுடியாது. தன்னை ப்ரஹ்மமென்று அறிந்தவனுக்கு அபய ப்ராப்தியும் ஆனந்தமும் ஏற்படுகிறது என்று முதலில் அன்வயத்தை தெரிவித்து, அடுத்த வாக்யத்தில் வ்யதிரேகமாக, எவன் ஒருவன் ஜீவப்ரஹ்ம அபேதஞானத்தை அடையவில்லையோ அவன் பயத்தை அடைகிறான் என்றே தெரிவிக்கின்றது. அதாவது அத்ருச்யம் முதலான அபய ஸ்வரூபமான ப்ரஹ்மத்தினிடம், சிறிதளவு பேதம் கூட அறியக்கூடாது. அவ்விதம் பேதம் அறிவானாகில் அவன் பயத்தை அடைகிறான் என்றே '*உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' என்ற மந்த்ரம் தெரிவிக்கின்றது. அரம் = அல்பம், உத் = அபி, அந்தரம் = பேதம் குருதே = அறிவானாகில் சிறிதளவு பேதம்இருப்பதாக அறிவானாகில் அவன் பயத்தை அடைகிறான் என்றே தெரிவிக்கின்றது.

ஆகவே '*யதா ஹ்யேவைஷ...*' என்ற முதல் மந்த்ரம் அன்வயத்தினால் எந்த விஷயத்தை தெரிவிக்கின்றதோ அதே கருத்தை '*உதரமந்தரம் குருதே*' என்ற மந்த்ரம் வ்யதிரேகத்தினால் தெரிவிக்கின்றது. ஆகவே, '*அஹம் ப்ரஹ்மாஸ்மி*' என்ற ப்ரஹ்மாத்ம ஐக்ய ஞானமே அபயப்ராப்தி என்ற விஷயத்தை, த்ருடமாக தெரிவிப்பதற்காகவே, பேத தர்சனம் பயப்ராப்திக்கு காரணம் (ஹேது) என்று '*உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' என்ற மந்த்ரம் தெரிவிக்கின்றது.

உதாரணமாக, ம்ருத் இருந்தால் தான் கடம் இருக்கும், ம்ருத் இல்லாமல் கடம் இருக்கமுடியாது என்று அன்வய, வ்யதிரேகேண விஷயம் த்ருடமாக தெரிவிக்கப்படுகிறது. இதேபோல்

அபேத தர்சனமே அபயப்ராப்தி என்று அன்வயமாக தெரிவித்தாலே போதுமானது என்றாலும், பேததர்சனம் பயஹேது என்பதை த்ருடமாக தெரிவிப்பதற்காகவே '*பீஷாஸ்மாத் வாத: பவதே*' என்ற உத்தரவாக்யம் தெரிவிக்கின்றது. எதுவரை தனக்கு வேறாக ஈச்வரன் ஒருவர் இருக்கிறார் என்று அறிகிறானோ, அதுவரை ஈச்வரன் என்ன செய்வாரோ என்ற பயம் இல்லாமல் இருக்கமுடியாது. அதனால் அபேத தர்சனமே அபய ஹேது என்பதால், அபயப்ரதிஷ்ட்டை ஏற்படுமானால் ஈச்வரன் ஆனந்தத்தை கொடுக்கின்றார் என்று அறியப்படுகிறது.

பூர்வ:- '*பீஷாஸ்மாத் வாத: பவதே, பீஷோதேதி ஸூர்ய:*' என்று ஸூர்யன், வாயு, அக்னி முதலானவர்களுக்கு ஈச்வரன் பயஹேது ஆகிறார் என்று தெரிவிக்கின்றது. இவ்விதம் பயஹேதுவான ஈச்வரனை தன்னைக்காட்டிலும் வேறானவர் அல்ல என்று அறிவதனால் அபயம் ஏற்படும் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- உண்மையில் ஈச்வரன், ப்ரத்யகாத்மாவை அன்றி வேறுபட்டவர் அல்ல. அஞ்ஞானத்தினால், தன்னைக்காட்டிலும் வேறானவர் என்று அறியப்படுவதால், அதுவே பயத்திற்கு காரணம் ஆகின்றது. தன்னுடைய ஸ்வரூபமே ஈச்வரன் என்று அறியப்படுமானால் தனக்கு தானே பயஹேதுவாக ஆகமுடியாது. தனக்கு அன்யமான வஸ்துவினிடமிருந்தே பயம் ஏற்படும். தன் நிழலைப்பார்த்து தானே பயப்படுவதில்லை. ஆகவே பகவான், ஆத்மாவாகவே இருப்பதால்தான் பயஹேது இல்லை (அபயஹேது) என்று சொல்லப் படுகிறது. ஆத்மாவே ஸர்வஸ்ய அபயஹேது. ஆத்மாவை அன்றி வேறான ஸர்வமும் அனாத்மா என்பதால் அதுவே பயஹேது. அதனால் ஈச்வரன் பயஹேது என்றால் ஈச்வரன் அனாத்மா என்று சொல்லநேரிடும். ஆகவே, '*யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின்...*' என்ற வாக்யம் எப்போது ஆத்மாவே ஈச்வரன் என்று அறியப்படுகிறதோ, அதுவரை ப்ரத்யகாத்மாவிற்கும் ஈச்வரனுக்கும் சிறிதளவு பேதம் இருப்பதாக அறியப்பட்டாலும், அதுவே பயத்திற்கு காரணம். அதனால் அபய ப்ராப்தி வேண்டுமென்ற இச்சை இருக்குமானால், ஈச்வரனே ஆத்மா என்று அபேததர்சனம் ஏற்படவேண்டும் என்று '*உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' என்று தெரிவிக்கின்றது.

பூர்வ:- '*யதா ஹ்யேவைஷ...*' என்ற வாக்யம் பேததர்சனம் பயஹேது என்று தெரிவிக்கவில்லை. 'அந்தரம்' என்றால் விச்சேதம் என்றே அர்த்தம். அதனால் '*அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே*' என்ற வாக்யம், ஜீவனானவன், 'அஹம் ஈச்வர:' என்று நிரந்தரமாக த்யானிக்கவேண்டும். இவ்விதம் ஈச்வரபாவனைக்கு (ப்ரதிஷ்ட்டைக்கு) விச்சேதம் ஏற்படுமானால் அதுவே பயஹேது என்பதையே '*உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இது சரியல்ல. 'அஹம் ஈச்வர:' என்ற உபாஸனையை அவித்வான் செய்யவேண்டுமா? அல்லது வித்வான் செய்யவேண்டுமா? அவித்வான், அஹம் ஈச்வர: என்று உபாஸனை செய்கிறான் என்று சொல்லமுடியாது. ஏனெனில் நான் தான் ஈச்வரன் என்று அறியக்கூடிய சக்தி அவனுக்குகிடையாது. வித்வான், 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற ஞானம் ஏற்பட்டவனாக இருக்கின்றதால், அவன் ஈச்வர ப்ரதிஷ்டிதனாக இருப்பதால், நாஹம் ஈச்வர: என்ற

எண்ணமே ஏற்படமுடியாது. அதனால் வித்வானுக்கும் விச்சேதம் ஏற்படமுடியாது. ஆகவே, ஜீவ, ஈச்வர பேதம் உள்ளவனுக்கே பயம் ஏற்படும் என்று 'உதரமந்தரம்' என்ற வாக்யம் தெரிவிக்கின்றதே அன்றி உபாஸனைக்கு விச்சேதம் ஏற்படுவதால் பயம் என்று அர்த்தம் செய்வது சரியல்ல.

பூர்வ:- 'உதரமந்தரம் குருதே' என்ற வாக்யத்தில் உள்ள 'குருதே' என்ற பதம் க்ரியையைத் தெரிவிக்கின்றது. அதனால் 'அந்தரம்' என்ற பதம் 'விச்சேதம்' என்ற அர்த்தத்தையே தெரிவிக்கிறது. 'அந்தரம் குருதே' என்றால் பேதத்தைச் செய்கிறான் என்கிற அர்த்தம் பொருந்தாது. அதனால் 'குருதே' என்ற பதத்திற்கு விச்சேதம் என்ற க்ரியைதான் அர்த்தமாக இருக்கமுடியும். 'உதரமந்தரம் பச்யதி' என்ற பதம் இருந்தால்தான் பேதத்தை பார்க்கிறான் என்று அர்த்தம் செய்யலாம். அதனால் உங்களால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல.

ஸித்தா:- விச்சேதம் என்று அர்த்தம் செய்யப்படுமானால் எதற்கு விச்சேதம் என்று சொல்கிறாய்?

பூர்வ:- ஈச்வரப்ரதிஷ்ட்டையில் நிரந்தரமாக இல்லாமல், அதன் தொடர்ச்சிக்கு விச்சேதம் ஏற்படுமானால் அவனுக்கு பயம் ஏற்படுகிறது என்றே அர்த்தம் சொல்லவேண்டும். அதாவது '*அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே*' என்ற வாக்யம், '*உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யத்திற்கு ஸன்னிஹிதமாக, இருக்கின்றதால் '*அந்தரம்*' என்பதற்கு விச்சேதம் என்று அர்த்தம் செய்யப்பட்டால்தான் ப்ரதிஷ்ட்டைக்கு விச்சேதம் என்ற அர்த்தம் கிடைக்கும். அதனால் பயம் ஏற்படுகிறது என்று சொல்வதே பொருந்தும்.

ஸித்தா:- '*உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' என்று தான் வாக்யம் இருக்கின்றது. அல்பமான பேதம் அறியப்பட்டாலும் பயம் ஏற்படுகிறது என்றே தெரிவிக்கின்றது. 'ப்ரதிஷ்ட்டாயா: அந்தரம்' என்ற பதப்ரயோகமே இல்லாதபோது 'ப்ரதிஷ்ட்டை' என்ற பதத்தை அத்யாஹாரம் செய்து அர்த்தம் செய்வது பொருந்தாது. '*உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யத்திற்கு 'ப்ரதிஷ்ட்டாயா:' என்ற பதம் அத்யாஹாரம் செய்யாமலேயே வாக்யத்திற்கு அன்வயம் ஸம்பவிக்கின்றதால், ப்ரதிஷ்ட்டை என்ற கல்பனம் யுக்தமில்லை. மேலும், த்வைதீபாவம் என்றாலே பேதப்படுத்துவது என்றே அர்த்தம். இரண்டாகச்செய்வதே பேதம். அதனால் பேதம் அறியப்படுவதே அன்றி செய்யப்படுவதல்ல என்று சொல்வதும் சரியல்ல. ஜீவேச்வரபேதவாதிகளும், ஏகஸ்வரூபமான பரமாத்மாவை, ஜீவனென்றும் ஈச்வரனென்றும் விபாகம் செய்து பேதத்தை உண்டுபண்ணுகின்றார்கள் என்றே சொல்லவேண்டும். விபாகம் செய்கிறார்கள் என்றாலே வேறு படுத்துகிறார்கள் என்றே அர்த்தம். மேலும், '*உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யத்திலுள்ள 'குருதே' என்ற பதத்திற்கு பச்யதி என்றே அர்த்தம் செய்யலாம். '*தாதூனாம் அனேகார்த்தத்வாத்*' என்று பாணினியானவர் தாதுவிற்கு ஸந்தர்ப்பத்தை பொறுத்து மாறுபட்ட பல அர்த்தங்கள் சொல்லலாம் என்று தெரிவிக்கின்றார்.

'கடம் பச்யதி' என்றால் கட ஞானம் ஸம்பாதயதி என்று அர்த்தம். அதேபோல் பேதம் குருதே என்றால் பேதஞானம் என்று அர்த்தம் சொல்லலாம். இது சரியல்ல என்றால் 'அந்தரம் குருதே' என்றால், பேத ஞானம் குருதே என்று அர்த்தம் செய்யலாம். ஏனெனில்

ஞானம் என்றால் அந்த:கரண பரிணாம விசேஷ வ்ருத்தி. இந்த வ்ருத்தியை 'குருதே' என்று சொல்லலாம்.

பூர்வ:- '*உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யத்தில் 'ப்ரதிஷ்ட்டை' என்ற பதம் அத்யாஹாரம் செய்து அர்த்தம் செய்வது சரியல்ல என்று உங்களால் ஆக்ஷேபம் செய்யப்படுகிறது. அதனால் வேறொரு முறையில் அர்த்தம் செய்யலாம். அதாவது, '*யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின்*' என்ற வாக்யத்தில் உள்ள, 'ஏதஸ்மின்' என்ற பதம் ஸப்தமிவிபக்தியில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. 'ஆத்மனி' என்ற பதம் புல்லிங்கமாக இருக்கின்றது. அதனால் லிங்கத்தையும், விபக்தியையும் மாற்றி 'ஏதஸ்யா:' என்று ஸ்தீரிலிங்கமாக சொல்லப்படுமானால், முன்னால் ப்ரதிஷ்ட்டா என்று ஸ்த்ரீலிங்கத்தில் எதை குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறதோ, அதை குறிக்கும். அதனால், 'ஏதஸ்மின்' என்பதை மாற்றி, 'ஏதஸ்யா:' என்று சொல்லப்படுமானால், 'ப்ரதிஷ்ட்டாயா:' என்ற அர்த்தம் கிடைக்கும். அதனால் முன்னால் சொல்லப்பட்டதையே இந்த வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதால், ப்ரதிஷ்ட்டை என்ற பதம் அத்யாஹாரம் செய்து அர்த்தம் செய்யவேண்டிய அவச்யமில்லை. 'ஏதத்' சப்தத்தில் லிங்கம், விபக்தி இரண்டையும் மாற்றி, ஏதஸ்யா: என்று அர்த்தம் சொல்லப்படுமானால், முன்னால் ஸ்த்ரீலிங்கமாக எதைச்சொல்லப்பட்டதோ அதை பராமர்சம் செய்வதாக அர்த்தம் கிடைக்கின்றதால், 'ப்ரதிஷ்ட்டாம் விந்ததே' என்ற வாக்யத்திலுள்ள 'ப்ரதிஷ்ட்டாம்' என்ற பதத்திற்கு ப்ரதிஷ்ட்டாயா: என்ற பதத்தை பராமர்சம் செய்து, இந்த வாக்யத்தில் அர்த்தம் செய்யப்படுகிறது என்றே சொல்லலாம்.

ஸித்தா:- 'ஏதஸ்மின்' என்ற பதத்தில் விபக்தி, லிங்கம் இரண்டையும் மாற்றி, எவனொருவன் ப்ரதிஷ்ட்டைக்கு விச்சேதம் செய்கின்றானோ அவனுக்கு பயம் ஏற்படுகிறது என்று இந்த வாக்யத்திற்கு அர்த்தம் செய்யப்படுமானால், எதில் இந்த விச்சேதம் செய்யப்படுகிறது? ஆத்மஸ்வரூபத்தில் ப்ரதிஷ்ட்டைக்கு விச்சேதம் செய்கிறான் என்று தானே அர்த்தம் சொல்லவேண்டும்?

அத்ருச்யே, அனாத்ம்யே என்று சொல்லப்பட்ட ஆத்மஸ்வரூபத்தில் ப்ரதிஷ்ட்டைக்கு எவன் விச்சேதம் செய்கின்றானோ என்றுதான் அர்த்தம் செய்யவேண்டும். 'ஏதஸ்மின்' என்று ஆத்மாவை குறிக்கின்ற பதத்திற்கு, விபக்தி, லிங்கம் இரண்டையும் மாற்றி ஏதஸ்யா :' என்றும், அதற்கு ப்ரதிஷ்ட்டை என்றும் அர்த்தம் செய்யப்படுமானால், ஆத்மாவைக் குறிக்கின்ற சப்தம் வேறு என்ன அந்த வாக்யத்தில் இருக்கின்றது? அவ்விதம் ஆத்மாவைக்குறிக்கின்ற பதம் வேறு எதுவும் இல்லாததால், ஆத்மாவை தெரிவிக்கக்கூடிய வேறொரு பதம் அத்யாஹாரம் செய்யவேண்டியதாக இருக்கும். அதனால் ஆத்மாவை குறிப்பிடுவதற்காகவே சொல்லப்பட்டிருக்கின்ற பதத்தை விட்டு விட்டு அந்த பதத்திற்கு வேறு அர்த்தம் கல்பனை செய்வது பொருந்தாது.

பூர்வ:- '*யதா ஹ்யேவைஷ.. அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே*' என்ற வாக்யம், ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் ப்ரதிஷ்ட்டை ஏற்பட்டால் அபய ப்ராப்தி என்று தெரிவிக்கின்றதால், அதற்கு அடுத்த வாக்யம், அவ்விதம் ப்ரதிஷ்ட்டை இல்லை என்றால் பயப்ராப்தி என்று

வ்யதிரேகேண அர்த்தம் செய்யப்படவேண்டும். அதனால் ப்ரதிஷ்ட்டைக்கு விச்சேதம் செய்வானாகில் அவனுக்கு பயம் ஏற்படும் என்று சொல்வதில் தவறு ஏதுமில்லை. 'பயம்' என்ற பதத்திற்கு அபயமில்லை என்று அர்த்தம். அதனால் ப்ரதிஷ்ட்டை இருந்தால் அபயம், ப்ரதிஷ்ட்டை இல்லாவிடில் அபயமில்லை என்று தெரிவிப்பதால் ப்ரதிஷ்ட்டைக்கு விச்சேதம் என்றே அர்த்தம். அதனால், ஸ்திதி விச்சேதம் என்றே அந்தரம் என்ற பதத்திற்கு அர்த்தம் செய்யவேண்டும். இதனால் பாதகம் ஏதுமில்லை.

ஸித்தா:- இவ்விதம் இந்த ச்ருதிக்கு அர்த்தம் செய்வது சரியல்ல. ஸர்வதா ஜீவன் ப்ரஹ்மத்தில் ப்ரதிஷ்ட்டிதமாகத்தான் இருக்கின்றான். அதனால் ப்ரதிஷ்ட்டை இருந்தால் அபயம், ப்ரதிஷ்ட்டை இல்லாவிடில் பயம் என்று அர்த்தம் செய்வது முற்றிலும் பொருந்தாது. ஜீவனுக்கு ப்ரஹ்மத்தினிடம் ப்ரதிஷ்ட்டை ஸ்வபாவ ஸித்தம். ப்ரஹ்மத்தினிடம் ப்ரதிஷ்ட்டை இல்லை என்ற ப்ராந்தி ஞானம் ஜீவனுக்கு இருக்கலாம். ஆனால் உண்மையில் ப்ரதிஷ்ட்டை இல்லை என்று சொல்லமுடியாது. ப்ரஹ்மம் ஸர்வாதாரம். ஸர்வமும் ப்ரஹ்மத்தில் ப்ரதிஷ்ட்டிதம் என்பதால் ஜீவன் ப்ரதிஷ்ட்டிதமாக இல்லை என்று சொல்வது சரியல்ல. எப்போது 'ஜீவன் ப்ரஹ்மத்தினிடம் ப்ரதிஷ்ட்டையை அடைகின்றானோ' என்ற வாக்யமே பொருந்தாது. '*யதா ப்ரஹ்மணி ப்ரதிஷ்ட்டாம் விந்ததே*' என்ற வாக்யம் வ்யர்த்தம் என்று சொல்லநேரிடும். மேலும், 'ப்ரதிஷ்ட்டாம்' என்ற பதத்திற்கு கேவல ஸ்திதி என்று அர்த்தமில்லை. 'ப்ர' என்று ப்ரக்ருஷ்ட்டமான ஸ்திதி என்று, ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே நிலைத்திருப்பது என்றே அர்த்தம். அதாவது, 'பரமம் சாந்தம் உபைதி திவ்யம்' என்று ப்ரஹ்மத்தில் அபேதேன நிலைத்திருப்பது என்பதே ப்ரதிஷ்ட்டை என்பதற்கு சரியான அர்த்தம். உண்மையில் ப்ரஹ்மத்தில், ஜீவனுக்கு அபேத ஸ்திதிதான் இருக்கின்றது. இவ்விதம் அறிவானாகில் அபயப்ராப்தி. இவ்விதம் அபேதம் இருந்தும் அதை அறியாமல், பேதம் இருப்பதாக அறியப்படுவதால், பயப்ராப்தி என்றே அர்த்தம் செய்யவேண்டும். பேததர்சனமே பயஹேது என்பதால் அபேத தர்சனம் உடையவனுக்கு பயம் இல்லை என்றே இந்த மந்தரம் தெரிவிக்கின்றது.

பூர்வ:- ப்ரக்ருஷ்ட்டாம் ஸ்திதி என்பதற்கு அபேதம் என்ற அர்த்தமில்லை. ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் த்ருட ஸம்பந்தம் இருக்கின்றது என்பதையே ப்ரதிஷ்ட்டை என்ற பதம் தெரிவிப்பதாகச் சொல்லலாமே? உதாரணமாக, ராஜாவானவன், அவனுடைய ராஜ்யத்தில் ப்ரதிஷ்ட்டிதனாக இருக்கின்றான் என்று சொல்லப்படுமானால் அவன் ராஜ்யமாகவே ஆகிவிட்டான் என்று அர்த்தம் சொல்வது பொருந்தாது. ராஜ்யத்துடன் ஸம்பந்தப்பட்டிருக்கின்றான் என்றே சொல்லவேண்டும். அதேபோல், ப்ரதிஷ்ட்டை என்றால் ஆத்மாவுடன் ஸம்பந்தப்பட்டிருக்கின்றான் என்றே அர்த்தம் சொல்லவேண்டும். ப்ரஹ்மமாகவே ஆகிவிட்டான் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- எந்த ஒரு வஸ்து இல்லாவிடில், ஒரு வஸ்து இருக்கமுடியாதோ, அதையே, அந்த வஸ்துவில் ப்ரதிஷ்ட்டை என்று சொல்லப்படுகிறது. ம்ருத் இல்லை என்றால் கடம் என்பதே இருக்கமுடியாது. அதனால் ம்ருத் என்பதில் கடம் ப்ரதிஷ்டிதம் என்று சொல்லப்படுமானால், கார்யம் எல்லாம் காரணத்தில் ப்ரதிஷ்ட்டிதம் என்று அறியப்படுகிறது. எவ்விதம், ப்ருதிவி, அப்புவிலும், அப்பு அக்னியிலும் ப்ரதிஷ்ட்டிதமோ அதுபோல் அறியப்படவேண்டும்.

இந்த நியாயத்தைக்கொண்டே ஸர்வமும் ப்ரஹ்மகார்யம் என்பதால், எந்த வஸ்துவாக இருந்தாலும், அந்த வஸ்து ப்ரஹ்மத்தில் ஸாக்ஷாத்தாகவோ (நேரிடையாகவோ) அல்லது பரம்பரையாகவோ ப்ரதிஷ்ட்டிதம் என்றே சொல்லவேண்டும். இவ்விதம் கார்யங்கள், காரணத்தில் ப்ரதிஷ்ட்டிதம் என்று சொல்லலாமே அன்றி காரணம் எதில் ப்ரதிஷ்ட்டிதம் என்ற கேள்விக்கே இடமில்லை. ப்ரஹ்மம் ஸ்வே மஹிம்னி ப்ரதிஷ்ட்டிதம் என்று ச்ருதிவாக்யமே தெரிவிக்கின்றது. ஜீவன், ப்ரஹ்மத்தை அன்றி வேறானவன் என்று சொல்லமுடியாது. அதனால் ப்ரஹ்மண்யேவ ப்ரதிஷ்டிதம் என்றே (ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:) தெரிவிக்கின்றது.

பூர்வ:- ஜீவன் ப்ரஹ்மகார்யமல்ல. அதனால் கார்யமென்பதே காரணத்தில் ப்ரதிஷ்ட்டிதம் என்று சொல்லலாமே தவிர, கார்யமாக இல்லாத ஜீவன் ப்ரஹ்மத்தில் ப்ரதிஷ்ட்டிதன் என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ஜீவனுடைய ஸ்வரூபமே ப்ரஹ்மம் என்று சொல்லப்படுவதால், ப்ரஹ்மத்தில் ப்ரதிஷ்ட்டிதன் என்று சொல்வதால் பாதகம் ஏதுமில்லை. ஒரு ராஜ்யத்தில் ராஜா ப்ரதிஷ்ட்டிதன் என்றால் ராஜாவாக இருப்பவன் ப்ரதிஷ்ட்டிதனா? அல்லது ராஜாவாக இல்லாதவன் ப்ரதிஷ்ட்டிதனா? என்று கேட்கப்படுமானால், ராஜ்யத்தில் ப்ரதிஷ்ட்டிதனாக இல்லாவிடில் அவனை ராஜா என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் ராஜா என்று சொல்லப்படுமானால், ராஜ்யத்தில் ப்ரதிஷ்ட்டை உடையவன் என்றே அறியப்படுகிறது. ஆகவே ராஜா, ராஜ்யத்தில் ப்ரதிஷ்ட்டிதன் என்ற வாக்யமே பொருந்தாது.

சக்ரவர்மா என்ற ராஜா, ஏதோ ஒரு காரணத்தால் ராஜ்யத்தைவிட்டு விலகி இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருந்து அதன் பிறகு மறுபடி ராஜ்யத்தை அடைவானாகில், ராஜா ப்ரதிஷ்ட்டிதன் என்று சொல்லப்படுவதுபோல், அர்த்தம் செய்யலாமே அன்றி ப்ரதிஷ்ட்டிதன் என்பதற்கு வேறு எந்த விதமாகவும் அர்த்தம் செய்யமுடியாது. ப்ரதிஷ்ட்டை என்றால் த்ருட ஸம்பந்தம் என்று அர்த்தம் சொல்லப்பட்டாலும், அதனால் பாதகம் ஏதுமில்லை. ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் த்ருட ஸம்பந்தம் இருக்கின்றதென்றே சொல்லலாம். ப்ரஹ்மம் ஸ்வே மஹிம்னி ப்ரதிஷ்ட்டிதம் என்று சொல்வது போல கார்யம், காரணத்தில் ப்ரதிஷ்ட்டிதம் என்ற முறையில் பிரிக்கமுடியாத த்ருட ஸம்பந்தம் இருப்பதாகவே சொல்லலாம். அதனால் ஹானி ஏதுமில்லை. ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதமில்லை என்று அபேதமே சொல்லப்பட்டபோதிலும், அவித்யையினால் ப்ரஹ்ம பின்னம் ஜீவன் என்ற ப்ராந்தி ஞானம் ஏற்பட்டபோதிலும், வித்யையினால் ஜீவனுக்கு ஏற்பட்ட ப்ராந்தி நீங்கி அபேத அனுஸந்தானத்தினால் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற ஞானம் ஏற்படுவதையே, ஜீவன், ப்ரஹ்மத்தில் ப்ரதிஷ்ட்டிதம் என்பதையே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது என்றே அர்த்தம் செய்யவேண்டும். தன்னைத்தவிர வேறான வஸ்துவில் சித்தத்தை நிலை நிறுத்துவது என்று அர்த்தம் செய்வது பொருந்தாது. ஸ்வஸ்வரூபமான ப்ரஹ்மமே நான் என்று தன் ஸ்வரூபத்தை அனுஸந்தானம் செய்வதே 'ப்ரதிஷ்ட்டா' என்ற சப்தத்திற்கு அர்த்தம். ஆகையால் அஹம் ப்ரஹ்மாஸ்மி என்று, எப்போது ஐக்யத்தை அடைகிறானோ என்று, ப்ரதிஷ்ட்டா என்ற சப்தத்திற்கு ஐக்யார்த்தம் சொல்லப்படுகிறது.

பூர்வ:- 'ப்ரதிஷ்ட்டாம்' என்பதற்கு ஐக்யம் என்று லக்ஷ்யார்த்தமாக சொல்லலாமே அன்றி வாச்யார்த்தம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் 'ப்ரதி' என்றால் உபஸர்க்கம், 'ஸ்தா' என்றால் ஆழ்ந்த ஸ்திதி என்று தாத்வர்த்தமாகின்றது. அதனால் 'ப்ரதிஷ்ட்டாம்' என்பதற்கு 'ஐக்யம்' என்று வாச்யார்த்தம் சொல்லமுடியாது.

ஸித்தா:- 'ப்ரதிஷ்ட்டாம்' என்ற பதத்திற்கு ஐக்யம் என்ற அர்த்தம்தான் சொல்லவேண்டும் என்ற அவச்யமில்லை. '*ஏகத்வேன அவஸ்த்தானம்*' என்று ப்ரதிஷ்ட்டை என்ற பதத்திற்கு அர்த்தம் சொல்லலாம். இது தாது அர்த்தததை அனுசரித்து முக்யார்த்தம் ஆகும். '*யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின் அத்ருச்யே, அனாத்ம்யே... அநிலயனே அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே*' என்ற வாக்யம் ஐக்யார்த்தத்தை தெரிவிக்க வேண்டுமானால் 'ஏதஸ்மின்' என்ற ஸப்தமி பிரயோகம் பொருந்தாது என்றும் த்ருதீயா விபக்தியோ, பஞ்சமி விபக்தியோ, ஷஷ்டிவிபக்தியோ இருந்தால்தான் ஐக்யார்த்தம் பொருந்தும் என்று உன்னால் சொல்லப்பட்டது. ப்ரஹ்மத்துடன் ஐக்யம் என்று சொல்லலாமே அன்றி ப்ரஹ்மத்தில் ஐக்யம் என்று சொல்வது பொருந்தாது என்று சொல்லப்பட்டது. ஸ்திதி என்று, ப்ரஹ்மாத்மனா ஏகத்வேன அவஸ்த்தானம் சொல்லப்படுவதால் எந்த விததோஷத்திற்கும் இடமில்லை. இவ்விதம் ப்ரஹ்மத்தில் ஏகத்வேன அவஸ்த்தானம் என்று சொல்லப்படுவதால் ஸப்தமி விபக்தி பொருத்தமானதாகவே இருக்கின்றது.

இந்தவிதம், முதல் வாக்யம், '*யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின்.. அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே*' என்ற வாக்யத்திலுள்ள 'ப்ரதிஷ்ட்டை' என்ற பதத்திற்கு 'அபேதேன ஸ்திதி' என்று அர்த்தம். ஆகையால், அடுத்தவாக்யத்திற்கு, இந்த வாக்யத்திற்கு மாறுபட்ட முறையில் அர்த்தம் செய்யவேண்டும். அதனால் '*உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யத்திலுள்ள அந்தரம் என்ற பதத்திற்கு பேதஸ்திதி என்றே அர்த்தம் செய்யவேண்டும். ஜீவன், எதுவரை ப்ரஹ்மத்தினிடம் பேதேன ஸ்திதி பெற்றிருக்கின்றானோ அதுவரை பயம் இருக்கின்றது என்றே சொல்லப்படுகிறது. 'அந்தரம் குருதே' என்பதற்கு பேதேன ஸ்திதி என்ற அர்த்தம் சொல்லாமலேயே கிடைக்கின்றது. இதுவரை உன்னால் சொல்லப்பட்ட விஷயத்தை அனுசரித்து அர்த்தம் செய்யப்பட்டது. ஆனால் உண்மையான அர்த்தம் என்னவென்றால்; 'ஏதஸ்மின்' என்ற பதம் அதிகரண ஸப்தமியும் அல்ல, த்ருதீய, பஞ்சமி முதலானவைகளும் தேவை இல்லை. 'ஏதஸ்மின்' என்பது விஷயஸப்தமி. 'ஆத்ம விஷயத்தில்' என்று அர்த்தம் செய்யவேண்டுமே அன்றி, பேத அதிகரணம் என்று சொல்லவேண்டியதில்லை. பூர்வவாக்யத்தில் ஏதஸ்மின் (அத்ருச்யே) என்பதற்கு அதிகரண ஸப்தமி என்று அர்த்தம் செய்யவேண்டும். உத்தரவாக்யத்தில் ஏதஸ்மின் என்பதற்கு விஷயஸப்தமி என்று அர்த்தம் செய்யவேண்டும். பூர்வ வாக்யத்தில் அதிகரண ஸப்தமி என்றும், உத்தரவாக்யத்தில் விஷய சப்தமி என்றும் இரண்டையும் வெவ்வேறாக பிரித்து, லோக வ்யவஹாரத்தில் சொல்லப்படுகிறது. ஆனால் வ்யாகரண சாஸ்த்திரத்தின்படி விஷய ஸப்தமி என்பதும் அதிகரண ஸப்தமி என்றே சொல்லப்படுகிறது. ப்ரஹ்மத்தில் அபேதேன ஸ்திதி என்பது அதிகரணார்த்தே ஸப்தமி. (ப்ரஹ்மத்தில் பேதேனஸ்திதி என்பது பொருந்தாது) உத்தரவாக்யம் ப்ரஹ்மவிஷயத்தில் எவன் பேததர்சனம் செய்கிறானோ அவனுக்கு பயம்

ஏற்படுகிறது என்று விஷய ஸப்தமியில் சொல்லப்படுகிறது. ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவைக்காட்டிலும் வேறானது என்று தெரிவிக்கின்றபோது ஒரு வஸ்துவின் பேத ப்ரதியோகியை குறிப்பிடும்போது, த்ருதீயயோ, ஷஷ்டியோ, பஞ்சமியோ இருக்கவேண்டும் என்ற நிர்பந்தம் இருந்தபோதிலும் பேதஅதிகரணத்தை குறிப்பிடும் போது ஸப்தமியில்தான் சொல்லப்படவேண்டும். அதாவது பேதம் எதில் இருக்கிறது என்று கடத்தில், படத்தில் என்று அதிகரணத்தையே குறிப்பிடவேண்டும். அதனால் அதிகரணத்தை குறிப்படுவதற்கு வேறு எந்த விபக்தியும் சொல்லமுடியாது. ஆகவே 'ப்ரஹ்மத்தினிடம் பேததர்சனம் செய்வானாகில்' என்று தெரிவிக்கின்றபோது அதிகரண ஸப்தமியில்தான் சொல்லப்படவேண்டும். இதனால் எவ்வித தோஷத்திற்கும் இடமில்லை.

பூர்வ:- பேத தர்சனம் இல்லையென்றால் அபயஹேது என்று சொல்வது சரியல்ல. குண விசிஷ்ட்ட ப்ரஹ்மத்தை அறிவதே அபயஹேது என்பதால் குணவிசிஷ்ட்டப்ரஹ்ம ஞானமே அபயஹேது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- நிர்விசேஷப்ரஹ்ம ஞானம்தான் அபயஹேது என்பதையே ச்ருதி வாக்யங்கள் தெரிவிக்கின்றன. அத்ருச்யே, அனாத்ம்யே, அநிருக்தே, அநிலயனே என்று நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது. ஸவிசேஷமாக இருக்குமானால், த்ருச்யமாக இருக்கலாம் நிருக்தமாகவும் இருக்கலாம். அதனால் நிர்விசேஷப்ரஹ்ம ஞானமே அபயஹேது என்பதில் ஆக்ஷேபத்திற்கே இடமில்லை.

பூர்வ:- '*ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான்*' என்று ச்ருதி தெரிவிக்கின்றதால், ப்ரஹ்மம் ஸவிசேஷம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ப்ரஹ்ம ஸ்வரூபமே ஆனந்தம். ஆனந்தமே ப்ரஹ்மம், ராஹோ:சிர: என்பது போல் ப்ரயோகம் இருந்தாலும் ஆனந்த குணமுள்ளது ப்ரஹ்மம் என்று சொல்வது சரியல்ல என்பதை முன்பே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பூர்வ:- '*ப்ரஹ்மவித் ஆப்னோதி பரம்*' (ब्रह्मवित् आप्नोति परम्) என்று தெரிவிக்கின்ற வாக்யத்தில் ப்ரஹ்மவித் என்றால் ப்ரஹ்ம உபாஸகன், ப்ரஹ்மத்தை அடைகிறான் என்று ஆப்னோதி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் உபாஸகன் வேறு உபாஸ்யம் வேறு என்றே சொல்லவேண்டும். அதனால் அனவரதம் இடைவிடாமல் ப்ரஹ்ம உபாஸனம் செய்ய வேண்டுமென்பதையே, ப்ரதிஷ்ட்டை என்பதற்கு அர்த்தமாக சொல்ல வேண்டுமேயன்றி ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று சொல்வது சரியல்ல. ஆகவே ப்ரஹ்மத்யானத்திற்கு விச்சின்னம் ஏற்படுமானால் பயஹேது என்றும் விச்சின்னம் இல்லையென்றால் அபயஹேது என்றே அர்த்தம் சொல்லவேண்டும். இதுவே இந்த ச்ருதிவாக்யத்தின் தாத்பர்யம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- 'ப்ரஹ்மவித்' என்றால், அவனுக்கு ஏற்பட்டிருக்கும் ஞானம் பரோக்ஷமா? அபரோக்ஷமா? பரோக்ஷஞானம் என்றால் ப்ரஹ்ம ப்ராப்தி ஏற்படமுடியாது. உபாஸனம் என்பது பரோக்ஷஞானமே அன்றி அபரோக்ஷஞானம் என்று சொல்லமுடியாது. ஆகவே அபரோக்ஷ ஞானம் உடையவனே ப்ரஹ்மவித் என்று சொல்லப்படுமானால், ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தினால்

ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்றே அர்த்தம். அதனால் ஸ்வஸ்வரூபத்தில் அபேதேன ஸ்திதி ரூபமான ப்ரதிஷ்ட்டை ஏற்படுகிறது என்றே சொல்லவேண்டும். அதனால் ஏகத்வேன ஸ்திதி பெற்றிருப்பதே 'ப்ரதிஷ்ட்டை' என்பதற்கு அர்த்தம்.

பூர்வ:- ப்ரஹ்மத்தில் ஏகத்வேன ஸ்திதி என்றால், அது ஐக்யம் என்று தானே அர்த்தம்? அது எவ்விதம் பொருந்தும்?

ஸித்தா:- ஐக்யம் என்றாலே, ப்ரஹ்மம் என்றே அர்த்தம். ப்ரஹ்ம வித்யையினால் (ஞானத்தினால்) ஸாக்ஷாத்காரம் ஏற்படுமானால் அவன் ப்ரஹ்மத்தில் ஸ்திதி பெற்றிருக்கிறான் என்று சொல்வதே சரியல்ல (தவறு). பேத ஞானம் இருந்தால்தான், ப்ரஹ்மத்தில் ஜீவன் ஸ்திதி பெற்றிருக்கிறான் என்று சொல்லலாம். ப்ரஹ்மம் வேறு, ஜீவன்வேறு என்று இருக்குமானால்தான், இரண்டிற்கும் ஐக்யம் என்று சொல்லலாம். '*ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*' என்று ப்ரஹ்ம ஞானம் ஏற்பட்டவன் என்றாலே அவன் ப்ரஹ்மமென்றே ச்ருதிவாக்யமும் தெரிவிக்கின்றது.

மேலும் ப்ரதிஷ்ட்டை என்பது உபாஸனம் என்றும், அந்தரம் என்பது விச்சேதம் என்றும் உன்னால் சொல்லப்பட்டது. இப்போது ப்ரதிஷ்ட்டை என்றால் த்ருடஸம்பந்தம் என்று அர்த்தம் சொல்லப்படுகிறது. இவ்விதம் முன்னுக்குபின்முரணாக சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல. ப்ரதிஷ்ட்டை என்ற பதத்திற்கு 'ஐக்யம்' என்று சொல்லப்படுவது லக்ஷ்யார்த்தம் என்றும், அது வாச்யார்த்தம் அல்லவென்றும் சொல்லப்படுகிறது. ஆனால், ப்ரதிஷ்ட்டை என்பதற்கு உபாஸனம் என்று அர்த்தம் சொல்லப்படுகிறதே? அது வாச்யார்த்தமா? லக்ஷ்யார்த்தமா? ஆகவே, எந்த முறையில், உன்னால் ஆக்ஷேபிக்கப்பட்ட போதிலும், '*யதா ஹ்யேவைஷ. . . உதரமந்தரம் குருதே*' என்ற வாக்யத்திற்கு ராமானுஜரால் தெரிவிக்கப்படும் அர்த்தம் பொருந்தாது. மேலும் ப்ரஹ்ம உபாஸனத்திற்கு விச்சேதம் ஏற்படுகின்றபோது பயம் ஏற்படுகின்றது என்று இந்த வாக்யத்திற்கு அர்த்தம் செய்வது சரியல்ல. ஏனெனில் '*உதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி*' என்ற இந்த வாக்யத்திற்கு 'ப்ரஹ்ம உபாஸனைக்கு விச்சேதம் ஏற்படுகின்றபோது பயம் ஏற்படும்' என்று அர்த்தம் செய்யப்படுமானால், அந்த வாக்யத்தை அனுசரித்து, அதற்கு முன் சொல்லப்பட்ட யதா ஹ்யேவைஷ என்ற வாக்யத்தில், விச்சேதமின்றி ஸர்வதா ப்ரஹ்மோபாஸனையில் இருக்கின்றவன் அபயத்தை அடைகிறான் என்றே அந்த வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்க வேண்டும். அவ்விதம் முன் வாக்யம் தெரிவித்திருந்தால் தான் உன்னால் தெரிவிக்கப்படும் அர்த்தம் உத்தரவாக்யத்தில் பொருந்தும். ஆனால் பூர்வ வாக்யம் அவ்விதம் இல்லை. ஏனெனில் பூர்வ வாக்யத்தில் 'யதா' என்ற பதம் எப்போது ப்ரஹ்மத்தில் ப்ரதிஷ்ட்டை ஏற்படுகிறதோ அப்போதே அபயப்ராப்தி ஏற்படுகிறது என்று 'யதா.... அத ஸோ அபயம்' என்றே அந்த வாக்யம் தெரிவிக்கின்றது.

மேலும் உன்னால் சொல்லப்படும் அர்த்தம் ச்ருதிக்கு விவக்ஷிதமாக இருந்தால், ஸர்வதா ப்ரஹ்மோபாஸனம் செய்பவனுக்கே அபயப்ராப்தி என்றே தெரிவித்திருக்கவேண்டும். அவ்விதமின்றி 'யதா' என்று தெரிவிக்கின்றதால், ப்ரஹ்ம உபாஸனையை, விச்சேதமின்றி,

நிரந்தரமாக செய்யப்படுமானால் அவனுக்கே அபயப்ராப்தி என்று சொல்லப்படவில்லை. ஆகவே ப்ரஹ்ம உபாஸனத்தை, (அவிச்சேதமோ, நைரந்தர்யமோ), அபயப்ராப்திக்கு காரணமில்லை என்றே அர்த்தம் செய்யவேண்டும். அதனால் ப்ரஹ்ம ஞானம் ஏற்படுமானால், அப்போதே அபயப்ராப்தி என்றே ச்ருதி தெரிவிக்கின்றது. ஆகவே அபயப்ராப்திக்கு ப்ரஹ்ம ஞானம் ஒன்றே காரணம். பேத ஞானம் (பேததர்சனம்) பயஹேது என்றே தெரிவிக்கின்றது.

ப்ரஹ்மம் மாயையினால் ஸவிசேஷம், வாஸ்தவத்தில் நிர்விசேஷம். ஆதலால் ராமானுஜரால் ஸ்மிருதிகளில் இருந்தும் புராணங்களிலிருந்தும் ஸவிசேஷபரமாக எடுத்து காண்பிக்கப்பட்ட வாக்யங்களால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்கிற அத்வைத ஸித்தாந்தத்திற்கு ஹானம் ஏற்படவில்லை.

இப்பொழுது, நிர்விசேஷபரமான வாக்யங்களை ஸவிசேஷபரமாக அர்த்தம் செய்கின்ற ராமானுஜரின் கொள்கையை நன்கு விசாரித்து அத்வைதத்தை ஸித்தம் செய்யப்பட வேண்டியதற்காக, மேலும் விசாரிக்கப்படுகிறது.

84

गीतास्मृतेः निर्विशेषब्रह्मपरत्वोपपत्तिः ।

கீதா ஸ்ம்ருதே: நிர்விசேஷப்ரஹ்மபரத்வ உபபத்தி:

ஸ்ரீராமனுஜரால், ஸ்ரீபாஷ்யத்தில், முதல் அதிகரணம் முதல் ஸூத்ரத்தில் விசாரிக்கப்பட்ட கீதாச்லோகங்கள் இங்கே விவரிக்கப்படுகிறது. ஸ்ரீராமனுஜர் இந்த ச்லோகங்கள் ஸவிசேஷப்ரஹ்மபரம் என்று கூறுகிறார். அது இங்கே நிராகரிக்கப்படுகிறது

விசாரம் - கீதா 10.3 ச்லோகம்:

பூர்வ:- '*யோ மாமஜமனாதிம் ச வேத்தி லோக மஹேச்வரம்*' (यो मामजमनादिं च वेत्ति लोकमहेश्वरम्) என்ற கீதாவாக்யத்தில் அஜம் அனாதி லோக மஹேச்வரம் என்ற விசேஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தவித விசேஷணங்கள், பகவானால் சொல்லப்படுவதற்கு என்ன காரணம் என்றால், ஜீவனான சேதன வர்க்கம் மூன்று விதம். அதாவது பத்தன், முக்தன், நித்யமுக்தன் என்று மூன்றுவிதம் சொல்லப்படுகிறது. இந்த மூன்று ஜீவர்களைக்காட்டிலும் பகவான் வேறு என்றும், பகவான் பந்தனும் அல்ல, முக்தனும் அல்ல, நித்ய முக்தனும் அல்ல என்றும், அதேபோல் அசேதனத்தைக் காட்டிலும் பகவான் வேறுபட்டவன் என்றும் இந்த கீதாவாக்யம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இது சரியல்ல. ஜீவர்கள் மூன்று விதம் என்று சொல்வது அபத்தம். ஏனெனில், ஈச்வரன் தான் நித்யமுக்தன், ஜீவன் நித்ய முக்தனல்ல. பத்த ஜீவனை ஞானம் ஏற்பட்டபிறகு முக்தன் என்று சொல்லப்படுகிறது. அதனால் பத்த ஜீவனைக்காட்டிலும் ஈச்வரன் வேறு என்று சொன்னாலும் ஒருவாறு பொருந்தலாம். ஆனால் முக்த ஜீவனைக்காட்டிலும் ஈச்வரன் வேறு என்று சொல்வது தவறு. ஈச்வரபாவத்தை அடைந்தவனே முக்தன். அதனால் முக்தனுக்கும் ஈச்வரனுக்கும் பேதம் என்று முக்தாத் வைலக்ஷண்யம் சொல்லமுடியாது. அதனால் ஜீவர்கள் மூன்றுவிதம் என்று சொல்வதே சரியல்ல.

பூர்வ:- முக்தன், ஜகத்வ்யாபாரவர்ஜிதன் என்று வ்யாஸ ஸூத்ரமே தெரிவிக்கின்றது. ஜகத் ச்ருஷ்டிகர்த்தா ஜீவனென்று சொல்லமுடியாது. ஈச்வரனே ஜகத் கர்த்தா என்று தெரிவிக்கின்றதால் முக்தனுக்கும் ஈச்வரனுக்கும் பேதமில்லை என்று எவ்விதம் சொல்ல முடியும்?

ஸித்தா:- உங்கள் ஸித்தாந்தத்தில் சொல்லப்படும் ஸாலோகம், ஸாரூப்யம், ஸாமீப்யம், ஸாயுஜ்யம் என்ற முக்தியில்தான் இந்த விசேஷணங்கள் பொருந்தும். ஆனால் ஈச்வரனாகவே ஆகிறான் என்று ஈச்வரபாவம் ஏற்படுவதே முக்தி என்று சொல்லப்படுவதால் இந்த வாக்யங்கள் முக்தனுக்கும் ஈச்வரனுக்கும், பேதத்தை தெரிவிக்கவில்லை. ஈச்வரனையும், முக்தனையும்

வேறுபடுத்தி சொல்லவேண்டுமானால், வைலக்ஷண்யம் உண்மையாக இருக்கவேண்டும். மேலும் ஜகத் வ்யாபாரம் என்பதே ஈச்வரனுக்கும் கிடையாது. மாயையினால் தான் ஜகத்காரணத்வம் ஈச்வரனுக்கு கல்பிக்கப்படுகிறது. ஆகையால் மாயிகமான ஜகத் வ்யாபரத்தைக்கொண்டு, முக்தனுக்கும் ஈச்வரனுக்கும் வைலக்ஷண்யம் சொல்வது சரியல்ல. முக்தனும், ஈச்வரனும் ப்ரஹ்மமே என்பதால் ப்ரஹ்மத்தைஅன்றி, வேறாக சொல்வது சரியல்ல. ஜகத்வ்யாபாரம் என்ற வ்யாஸஸூத்ரம், ஹிரண்யகர்ப்ப லோகத்தை அடைந்த உபாஸகனைப்பற்றி தெரிவிக்கின்றதே அன்றி முக்தனைப்பற்றி தெரிவிக்கவில்லை.

பூர்வ:- முக்தனுக்கு ப்ரஹ்ம ஸாயுஜ்யம் என்பதே சொல்லமுடியாதே? அதனால் ப்ரஹ்மவித் (முக்தன்) ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- சுத்த ஜலத்தில் சேர்க்கப்பட்ட (கலக்கப்பட்ட) சுத்த ஜலம் சுத்த ஜலமாகவே ஆகிறது என்று, ப்ரஹ்மமாகவே இருக்கின்ற ஜீவன், ப்ரஹ்மமென்று தன்னை அறிந்து ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று உபநிஷத்துக்கள் தாத்பர்யத்துடன் தெரிவிக்கின்றன.

மேலும், பத்த ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் (ப்ரஹ்மத்திற்கும்) வைலக்ஷண்யம் என்றே சொல்லமுடியாது. ஏனெனில் ஜீவன் உண்மையில் ப்ரஹ்மமாகவே இருக்கிறான். அஞ்ஞான வசாத் தன்னை பத்தன் என்று ஜீவன் நினைக்கின்றானே அன்றி உண்மையில் பத்தனல்ல. அதனால் பத்தனுக்கும், ப்ரஹ்மத்திற்கும் வைலக்ஷண்யம் சொல்வது பொருந்தாது.

பூர்வ:- பத்தனான ஸம்ஸாரியை ஈச்வரனென்று, எவ்விதம், என்ன ப்ரமாணத்தைக் கொண்டு சொல்லமுடியும்?

ஸித்தா:- மாயையினால்தான், ஈச்வரன் ஜீவரூபேண பத்தனாகிறானே அன்றி உண்மையில் பத்தனல்ல என்றே '*ப்ரஹ்மைவ ஸன் ப்ரஹ்மாப்யேதி*' (ब्रह्मैव सन्ब्रह्माप्येति) என்ற ச்ருதி வாக்யமே தெரிவிக்கின்றதால் அதுவே ப்ரமாணம். அதுமட்டுமல்ல. ப்ரஹ்மமே, கார்யகரண ஸங்காதமான இந்த சரீரத்தில் ஜீவரூபேண ப்ரவேசித்தது என்றே '*ததேவானுப்ராவிசத்*' (तदेवानुप्राविशत्) என்று ப்ரவேசச்ருதி வாக்யமே தெரிவிக்கின்றது. மேலும், ப்ரஹ்மம் சித்ரூபமா? இல்லையா? ஜீவன் சித்ஸ்வரூபமா அல்லது சித்ஸ்வரூப விலக்ஷணமான ஜடஸ்வரூபமா? ப்ரஹ்மம் சித் ஸ்வரூபம் இல்லை என்று சித் விலக்ஷணம் என்று சொல்லப்படுமானால் 'ஸத்யம் ஞானம்' என்று ப்ரஹ்ம லக்ஷணத்தை தெரிவிக்கின்ற ச்ருதி வாக்யம் பொருந்தாது. அதேபோல் ஜீவன் சித்ஸ்வரூபம் இல்லை என்றால் சித்விலக்ஷணம் ஜடம் என்றே சொல்லநேரிடும். ஆகையால் ஈச்வரன், ஜீவன் என்று சொல்லப்படும் இரண்டுமே அசித்விலக்ஷணமான சித்ஸ்வரூபம் என்றே சொல்லவேண்டும். அதனால் ஈச்வரன் என்றும் ஜீவனென்றும் சொல்லப்படுவதெல்லாமே சித்ரூபமான ப்ரஹ்மம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- '*யோ மாமஜம் அனாதிம் ச வேத்தி லோக மஹேச்வரம்*' என்ற கீதாச்லோகத்திற்கு ஸுதர்சனர், வேறு முறையில் அர்த்தம் தெரிவிக்கின்றார். அதாவது இந்த ச்லோகத்தில் 'அஜம்' என்ற பதம் சேர்க்கப்பட்டிருப்பதின் காரணம் என்னவென்றால், பத்த ஜீவனிலிருந்து, ஈச்வரன் வேறு என்று தெரிவிப்பதற்காகவே சொல்லப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கின்றார்.

ஸித்தா:- இதுவும் சரியல்ல. ஏனெனில் ஜீவன் பத்தனாக இருக்கலாம், ஆனால் அவனும் அஜம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- தேஹ ஸம்பந்தம் இருப்பதால் பத்தஜீவனுக்கு ஜன்மம் உண்டு.

ஸித்தா:- ஈச்வரனுக்கும் அப்ராக்ருத சரீரம் இருப்பதாக உன்னால் சொல்லப்படுவதால், ஈச்வரனையும் அஜம் என்று சொல்லமுடியாது ஏனெனில் அவருக்கும், சரீர ஸம்பந்தம் இருப்பதாக உன்னால் சொல்லப்படுவதால் பிறவி இருப்பதாகவே சொல்லவேண்டும்.

பூர்வ:-ஈச்வரன் அஜம், அனாதி, என்று சொல்லப்படுவதால் முக்த ஜீவனைக்காட்டிலும் ஈச்வரன் வேறு என்றே சொல்லவேண்டும். ஏனெனில் அனாதி என்ற விசேஷணம் ஈச்வரனை, முக்தனிலிருந்து வ்யாவ்ருத்தி செய்து தெரிவிக்கின்றது. எப்படியெனில் முக்தனின் அஜத்வம் ஆதி உள்ளதாக இருக்கின்றதால், முக்தனை அனாதி என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- முக்த ஜீவனும் அனாதிதான். ஆனால் நீங்கள் அவன் அஜம் என்றும் அந்த அஜத்வம் ஆதிமத் என்றும் சொல்கிறீர்கள். முக்த ஜீவனுக்கு அஜத்வம் என்பது உற்பத்தி உடையது என்று அவ்விதம் சொல்லப்படும் உற்பத்தி அனாதியா? ஸாதியா? ஸாதி என்றால் மேன்மேலும் அதற்கு எவ்விதம் உற்பத்தி என்று கேள்வி மேல் கேள்விக்கு இடம் ஏற்படும், என்பதால் அனவஸ்தாதி தோஷங்கள் ஸம்பவிக்கும். அதற்காக அனாதி என்றால், அஜம் என்றே அர்த்தமாகும். ஆகவே அஜம் என்றால் அதற்கு உற்பத்தி என்பதே பொருந்தாது. உற்பத்தி உடையது என்றால் அது அஜம் என்று சொல்லமுடியாது. ஆகையால், அனாதி என்ற விசேஷணத்தைக்கொண்டு முக்தவ்யாவ்ருத்தியை இந்த வாக்யம் தெரிவிக்கின்றது என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- நித்ய முக்தனிடமிருந்து வ்யாவ்ருத்தி செய்து ஈச்வரனை தெரிவிப்பதற்காகவே லோக மஹேச்வரம் என்ற பதம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதாவது நித்ய முக்தனுக்கு ஜகத் ச்ருஷ்டி முதலான கார்யங்களைச் செய்யக்கூடிய சக்தி கிடையாது என்பதாலேயே லோக மஹேச்வரம் என்று ஈச்வரனிடமிருந்து நித்ய முக்தனை வேறுபடுத்தி தெரிவிக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- நித்ய முக்தன் அநீச்வரன் என்று சொல்வதே பொருந்தாது. ஈச்வரனே நித்யமுக்தன், நித்யமுக்தனே ஈச்வரன் என்றே சொல்லவேண்டும். அவ்விதமின்றி பத்தனைப் போல், முக்தனும் ஈச்வரனைக்காட்டிலும் வேறானவன் என்று, ஈச்வர பரதந்திரன் என்றும் சொல்லப்படுமானால் முக்தனுக்கும் பத்தனுக்கும் வித்யாஸமே சொல்லமுடியாது. வித்யாஸம் இல்லையென்றால் பத்தன் என்றும் முக்தன் என்றும் வேறு படுத்தி சொல்லப்படுவதன் அர்த்தம் என்ன? ஈச்வரனுக்கு பரதந்த்ரம் என்றால் பாரதந்த்ரியமே துக்கத்திற்கு காரணம். ஸ்வதந்த்ரம் இல்லை என்றாலே துக்கம், அதனால் பந்தம் பாரதந்த்ரியம் இரண்டுமே துக்க ஹேது என்பதால், பத்தன் முக்தன் என்ற பேதமே சொல்லமுடியாது.

பூர்வ:- ஸார்வபௌமன் ஸ்வதந்த்ரன் தான். ஆனால் அவனும் பத்தனாக இருக்கின்றானே? அதனால் இரண்டும் ஒன்று என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ஸார்வபௌமனுக்கு தன்னுடைய ராஜ்ய கார்யங்களிலும் ராஜ்யத்திலும் மட்டும் ஸ்வதந்த்ரம் இருக்கலாம். ஆனால் அவனுக்கு ஏற்படும் ரோகம், ஜரை, மரணம் போன்ற துக்கங்களிலிருந்து விடுபட முடியாததால் அந்த விஷயங்களில் பாரதந்த்ரியனாக இருக்கின்றதால் தான் அவனுக்கும் பந்தம் இருக்கின்றது. அதனால் ஸார்வபௌமனும் ஸ்வதந்த்ரனில்லை. அவைகளிலிருந்து விடுபட்டால்தான் ஸ்வதந்தரன் என்று சொல்லலாம். உண்மையில், நித்யமாகவும், நிரவயவமாகவும் இருக்கின்ற ஆத்மஸ்வரூபம், அனாதி காலமாக தேஹம் முதலானவைகளில் ஏற்பட்ட தாதாத்ம்ய அத்யாஸத்தினால், மாயா வசப்பட்ட ஜீவனாக, பரதந்த்ரன் என்று தன்னை நினைக்கின்றான். அதனால் பரதந்த்ரனாக ஆகிறான். உண்மையில் ஜீவன் ஸ்வதந்த்ரன் தான், ஆகையால் ஆத்ம ஸ்வரூப ஞானம் ஏற்படுமானால், பாரதந்த்ரியம் நீங்கி ஸ்வாபாவிகமான ஸ்வதந்த்ரனாக ஆகிறான். அவனையே முக்தன் என்று சொல்லப்படுகிறது. அதனால் முக்தனை ஈச்வரனுக்கு பரதந்த்ரன் என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் முக்தன் என்பவன் ஈச்வர பாவத்தையே அடைகின்றான். அதனால் முக்தனுக்கும் ஈச்வரனுக்கு சொல்லப்படும் ஸர்வ லோகமஹேச்வரத்வம் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். அதனால் இந்த விசேஷணத்தைக்கொண்டு முக்தனைக்காட்டிலும் வேறு பட்டவன் பரமேச்வரன் என்று இந்த வாக்யம் முக்தனை வ்யாவ்ருத்தி செய்து தெரிவிப்பதாகச்சொல்வது சரியல்ல.

பூர்வ:- ஈச்வரன் முக்தர்களுக்கு ஈச்வரன் அல்ல, ஆனால் லோகத்திற்கெல்லாம் ஈச்வரன். முக்தன் லோகத்திற்கெல்லாம் ஈச்வரன் அல்ல. அதனால் ஸ்வதந்த்ரனாக இருந்தாலும் முக்தன் ஈச்வரனைப்போல் லோகேச்வரனாக இல்லாததால் முக்தனுக்கும் ஈச்வரனுக்கும் வைலக்ஷண்யம் இருக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

ஸித்தா:- இவ்விதம், லோகமஹேச்வரம் என்றபதத்தினால், ஈச்வரன் லோகத்திற்கு மட்டுமே ஈச்வரனென்றும், முக்தர்களுக்கு ஈச்வரன் இல்லை என்று சொல்லப்படுமானால் ஸர்வேச்வரன் என்று ஈச்வரனை எவ்விதம் சொல்லமுடியும்? மேலும் ஸ்வதந்த்ரமான முக்தர்களுக்கு, பரமாத்மா, ஈச்வரன் என்று சொல்லமுடியாது. அதனால் ஈச்வரபாவமுள்ளவனே முக்தன் என்று '*மத்தஸ்ஸர்வம் அஹம் ஸர்வம், மயிஸர்வம் ஸனாதன*' என்கிற வாக்யம் ஜீவன் முக்தனின் அனுபவம் பற்றி தெரிவிக்கின்றது. அதாவது முக்தன் தன்னை ஈச்வரன் என்று அறிந்து, லோகம் எல்லாம் என்னுடைய ஸ்வரூபம்தான், ஸர்வமும் என் ஸ்வரூபமே, என்னையன்றி வேறாக எதுவுமே இல்லை என்று, தான் சரீரத்தில் இருக்கின்றபோதே தன் அனுபவத்தை தெரிவிக்கின்றான் என்றால், சரீரத்திலிருந்து விடுபட்டவனான முக்தனை ஈச்வரனல்ல என்று எந்த விதம் வைலக்ஷண்யம் சொல்லமுடியும்? மேலும் ஸ்வதந்த்ரம் என்பது லோகத்தில் இரண்டு விதமாகச் சொல்லலாம். அதாவது ஆபேக்ஷிகமான ஸ்வதந்த்ரம் என்றும், நிரங்குசமான ஸ்வதந்த்ரம் என்றும் இரண்டுவிதம் சொல்லலாம். உதாரணமாக குடும்ப தலைவன் ஸ்வதந்த்ரந்தான். ஆனால் அவன் வேறு ஒருவனுக்கு பரதந்த்ரனாகத்தான் இருப்பான். அதனால் எவருக்குமே அடிபணியாமல் எவன் ஸ்வதந்தரனாக இருக்கின்றானோ அவனே ஸ்வதந்த்ரன் என்று சொல்லவேண்டும். இதுவே முக்யஸ்வாதந்த்ர்யம் என்பதால், இதுவே, ஸ்வதந்த்ரம் என்ற பதத்திற்கு முக்யார்த்தம். அதனால் இந்தவிதமான

முக்யஸ்வதந்த்ரனாக லோகத்தில் பகவான் ஒருவன் தான் இருக்கமுடியும் என்றும் மற்ற எல்லோருமே பரதந்த்ரன் தான் என்று உங்கள் ஸித்தாந்தத்தில் சொல்லப்படுகின்றதால், முக்தன் ஸ்வதந்த்ரனாக இருந்தாலும் அவன் ஸர்வேச்வரன் அல்ல என்று எவ்விதம் சொல்லமுடியும்? முக்தன் ஸ்வதந்த்ரன் என்றால் அவனே ஸர்வேச்வரன் என்றே சொல்லத்தான் வேண்டும். அதனால் லோகமஹேச்வரம் என்ற கீதாவாக்யத்திற்கு உன்னால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல. அதனால் '*யோ மாமஜமனாதிம்*' என்ற கீதாவசனத்திற்கு தோஷமற்ற பொருத்தமுள்ள அர்த்தத்தை மேலே தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாக்யத்தில் உள்ள லோகம் என்ற பதத்திற்கு லோக்யதே, த்ருச்யதே அனுபூயதே இதி லோக: என்று அர்த்தம். லோக்யதே இதி லோக: என்றால் லோகம் என்ற பதம் த்ருச்யமான ப்ரபஞ்சத்தை தெரிவிக்கின்றது. ஸர்வப்ரபஞ்சத்திற்கும் ஈச்வரன் என்பதால் ஸர்வலோகமஹேசவரன் என்று தெரிவிக்கின்றது. அனாதி என்ற பதம் எவருக்கு காரணம் என்பதே கிடையாதோ அவரை தெரிவிக்கின்றது. இவ்விதம் அனாதி என்று சொல்லப்படுவதாலேயே அஜம் என்று ஜன்ம ரஹிதம் என்று கிடைக்கின்றது. இவ்விதம் எவன், பரமாத்மாவான என்னை ப்ரத்யகபின்ன ஸ்வரூபமாக ஸாக்ஷாத்கரிக்கின்றானோ என்பதே தாத்பர்யார்த்தம். ப்ரத்யக் அபேதம் என்ற அர்த்தம் இந்த வாக்யத்தினால் எவ்விதம் கிடைக்கின்றது என்றால், ஈச்வரன், ப்ரத்யகாத்மாவிற்கு வேறாக (பின்னமாக) இருப்பாரேயானால் ஈச்வரன் பரோக்ஷமாகத்தான் அறியப்படுவாரே அன்றி, ஈச்வர அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் என்பதே ஏற்படமுடியாது. அதனால் ஸாக்ஷாத்காரம் ஏற்படுவதாகச் சொல்லப்படுவதனாலேயே ப்ரத்யக் அபின்னம் பரமாத்மா என்றே தெரிவிக்கின்றது. இதுவே இந்த கீதாவாக்யத்தின் உண்மையான அர்த்தம். எவனொருவன் அஜம், அனாதி, ஸர்வலோகமஹேச்வரனான என்னை ப்ரத்யகாத்மா என்று அறிகின்றானோ, அவனே ஸர்வஞ்ஞன், ஸர்வாத்மாவான என்னை அறிந்தவனாகிறான். என்று இந்த ச்லோகார்த்தம்.

பூர்வ:- 'யோ மாம் வேத்தி' என்ற வாக்யத்திற்கு 'எவன் என்னை அறிகின்றானோ' என்றே அர்த்தம். அதனால் ஜீவன், அறிபவன் என்றும் பரமாத்மா அறியப்படுபவன் என்பதால், ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதம் இருப்பதாகத்தானே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது? அதனால் கடம் வேறு, கடத்தை அறிபவன் வேறு என்பதுபோல், ஜீவபரமாத்ம பேதம் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- அறிபவன் ஜீவாத்மாவென்றும், அறியப்படுபவன் பரமாத்மா என்றும், ஜீவனைக்காட்டிலும் அறியப்படும் பரமாத்மா வேறு என்றும் சொல்லப்படுமானால், கடத்தைப்போல் பரமாத்மா ஜடம் என்று சொல்லநேரிடும். '*வேதாஹம் ஸமதீதானி வர்த்தமானானி சார்ஜுன, பவிஷ்யாணி ச பூதானி மாம் து வேத ந கச்சன*' (वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन। भविष्याणि च भूतानि मां तु वेद न कश्चन) என்ற கீதாவசனம் (7. 26), அதீதம், வர்த்தமானம், பவிஷ்யம், என்ற ஸர்வப்ரபஞ்சத்தையும் நான் அறிகிறேன், ஆனால் பகவானான என்னை எவரும் அறிவதில்லை என்று தெரிவிக்கின்றார். அதனால் பகவான் ஸர்வத்தையும் அறிகின்றவரே அன்றி, அறியப்படுபவர் அல்ல. (அறியப்படும் வஸ்துவல்ல) த்ரஷ்ட்டாவே அன்றி த்ருச்யமல்ல. அதனால் அறிபவனான ஜீவனுக்கும், அறியப்பட வேண்டிய

பரமாத்மாவிற்கும் பேதம் இருப்பதாக, 'யோ மாம் வேத்தி' என்ற வாக்யம் தெரிவிப்பதாகச் சொல்வது சரியல்ல. ப்ரத்யக் அபின்னமாக பரமாத்மா அறியப்படுகிறது என்றே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது.

பூர்வ:- 'வேதாஹம்...' என்ற வசனத்தினால் பரமாத்மாவே ஸர்வத்திற்கும் த்ரஷ்ட்டா என்று சொல்லப்படுவதால், அந்த பரமாத்மாவிற்கு த்ருச்யமான ஜீவன், பரமாத்மாவைக்காட்டிலும் வேறு என்றுதானே சொல்லவேண்டும்? அதனால் ஜீவபரமாத்ம அபேதம் சொல்வது சரியல்ல.

ஸித்தா:- த்ரஷ்ட்டாவான பரமாத்மாவிற்கு ஜீவன் த்ருச்யம் என்றால், கடம் போல் ஜீவன், ஜடம் என்று சொல்லநேரிடும். அவ்விதம் ஜீவனை ஜடம் என்று சொல்லமுடியாது. 'அஹம் பச்யாமி' என்பது போன்ற த்ரஷ்ட்ருத்வம் ஜீவனுக்கு அனுபவஸித்தமாக இருக்கின்றது. அதனால் ஜீவன் ஜடம் என்று சொல்லப்படுமானால் ஜீவனுக்கு இவ்வித அனுபவம் இருப்பதாக சொல்லமுடியாது. அதனால் த்ரஷ்ட்டாவான பரமாத்மாவிற்கும், த்ரஷ்ட்டாவான ஜீவாத்மாவிற்கும் அபேதம் சொல்லவேண்டும். இதையே ச்ருதிவாக்யமும் 'ஹ்யேக *ஏவ த்ரஷ்ட்டா, நான்யோதோஸ்தி த்ரஷ்ட்டா*' (हि एक एव द्रष्टा नान्योतोस्ति द्रष्टेति) என்று த்ரஷ்ட்டா ஒருவனே என்று தெரிவிக்கின்றதால் பரமாத்மாவே உபாதிவசாத் ஜீவாத்மா என்று சொல்லப்பட்ட போதிலும் த்ரஷ்ட்டா ஒருவனே என்பதால் ஜீவபரமாத்ம அபேதம் ஸித்திக்கின்றது.

பூர்வ:- ஜீவபரமாத்ம பேதமில்லை என்று சொல்லப்படுமானால், 'யோமாம் வேத்தி..' என்ற வாக்யத்திற்கு 'எவன் தன்னையே அறிகின்றானோ' என்று அர்த்தம் சொல்லவேண்டும். அவ்விதம் சொல்லப்படுமானால் தன்னை தானே அறிவது என்ற க்ரியை ஸம்பவிக்கமுடியாது. ஏனெனில் ஒரேவஸ்து கர்மாவாகவும் அதுவே கர்த்தாவாகவும் எப்படி இருக்கமுடியும்? அது பொருந்தாது.

ஸித்தா:- ஆத்மா, தன்னை தானே அறிகின்றது என்று சொல்லப்படுவதால் தோஷம் ஏதும் ஸம்பவிக்கமுடியாது. ஏனெனில் தன்னுடைய உண்மையான ஸ்வரூபம் மறைக்கப்பட்ட காரணத்தினாலேயே ஜீவபாவம் ஏற்படுகிறது. அந்த ஜீவபாவம் உண்மையல்ல என்று அறிந்து உண்மையான தன் ஸ்வரூபத்தை அறிவதால் ஜீவபாவம் நிவர்த்திக்கின்றது, அவ்விதம், ஸ்வஸ்வரூபத்தை அறிவதற்கு அந்த:கரணவ்ருத்தி ஒன்றே போதும். அவ்விதம் ஏற்படும் ப்ரஹ்மாகார வ்ருத்தியினால், ஆத்மஸ்வரூப அஞ்ஞானம் நிவர்த்திக்கின்றதே அன்றி, ஆத்ம ஸ்வரூபப்ரகாசம், வ்ருத்தியினால் ஏற்படவில்லை. ஏனெனில் ஸ்வப்ரகாசமான ஆத்மா ஸ்வயமே ப்ரகாசிக்கின்றதால் அதன் ப்ரகாசத்திற்கு வேறு எவ்வித அபேக்ஷையும் கிடையாது. அதனால் தன்னை அறிகின்றது என்று தெரிவிக்கின்றபோது ஆத்மாகார அந்த:கரணவ்ருத்திக்கு ஆத்மா விஷயமாகின்றது. ஆத்மா, வ்ருத்தி என்ற இரண்டுமே வெவ்வேறாக இருப்பதால் க்ரியாகாரக விரோதம் ஏற்படாது. ஆத்ம ப்ரகாசத்திற்கு, ஆத்மா விஷயம் என்று சொன்னால்தான், க்ரியாகர்ம பாவ விரோதம் என்று சொல்லலாம், ஆனால் ஆத்மா ஸ்வப்ரகாச ஸ்வரூபமாக இருக்கின்றதால், வ்ருத்தியினால் அஞ்ஞானநிவர்த்தி ஏற்பட்டவுடன், ஸ்வயமே ப்ரகாச ஸ்வரூபமான ஆத்மா ஸ்வஸ்வரூபேண ப்ரகாசிக்கின்றது. அதனால் வ்ருத்தி வ்யாப்யத்வம் மட்டுமே தேவை, ஸ்வப்ரகாசமான

ஆத்மா ஸ்வயமே ப்ரகாசிக்கின்றது. அதனால் பலவ்யாப்தி என்ற ப்ரகாசம் கிடையாது என்பதால், தன்னைதானே அறிகின்றது என்ற க்ரியை ஸம்பவிக்க முடியாது. அதனால் கர்த்ரு, கர்ம பாவமோ, க்ரியா கர்ம பாவமோ ஸம்பவிக்கமுடியாது. ஆத்மாவே ஸர்வப்ரகாசகம். அந்த:கரணம் என்பதே ஸ்வாகாரவ்ருத்தியினால் 'தன்னை அஹம்' என்று விஷயீகரிக்கின்றது. அதேபோல் ஆத்மாவிற்கு வ்ருத்தி வ்யாப்தமான த்ருச்யத்வம் ஸம்பவிக்கலாம். ஆத்மாவிற்கு, ஆத்மாவினால் ப்ரகாசம் ஏற்படுகிறது என்று சொன்னால் தான் கர்ம கர்த்ரு விரோதம். அவ்விதம் சொல்லப்படவில்லை. ஆகவே, ஆத்மாகாரமான அந்த:கரணவ்ருத்திக்கு ஆத்மா விஷயமாகுமானால்தான் ஆத்மா விசேஷ ரூபேண அறியமுடியும். அதற்காக, வ்ருத்தி வ்யாப்யத்வ அவபாஸகம் தேவை என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் ஆத்ம ஸ்வரூப ஞானம் ஏற்படுகிறது என்று சொல்லவேண்டுமே அன்றி வேறு எந்தவிதமான அர்த்தமும் சொல்லமுடியாது. ஏனெனில் '*ஸர்வபூதஸ்த்தமாத்மானம், ஸர்வபூதானி சாத்மனி ஈக்ஷதே யோக யுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்சன:*' (सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि । ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः) என்ற கீதாவசனத்திற்கு (6.29) வேறு எந்த அர்த்தம் சொன்னாலும் பொருந்தாது. அதாவது யோக நிலையிலுள்ள எவனொருவன் ஸர்வ பூதங்களிலும், தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தையே பார்க்கின்றவனாகவும், தானே ஸர்வ பூதங்களிலும் இருப்பதாகவும் அறிகிறானோ அவனையே ஸமதர்சி என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் தன்னை தானே அறிகிறான் என்பதால் கர்ம கர்த்ரு பாவ விரோதம் என்ற தோஷம் ஸம்பவிக்க முடியாது. இந்த ச்லோகத்தினால், யோக யுக்தன் தன்னை ஸர்வபூதங்களிலும் இருப்பதாக அறிகின்றான் என்பதால், ஆத்மா வ்யாபகம் என்றும் அறியப்படுகிறது. இதனால் ஆத்மா அணு என்ற வாதமும் சரியல்ல என்று ஸித்திக்கின்றதால், இந்த வாக்யத்தினால் மற்றொரு லாபமும் கிடைக்கின்றது. ஸர்வபூதஸ்த்தம் என்பதாலும், ஸர்வபூதானி ச ஆத்மனி, என்று சொல்லப்படுவதாலும், ஸர்வவ்யாபகம் என்றும், ஸர்வத்திற்கும் ஆதாரம் என்றும் தெரிவிக்கின்றது. அதனால் ஸர்வ வ்யாபகமாக ஸர்வ ஆதாரமாக இருக்கின்ற ஆத்மாவே பரமாத்மா என்று ஸித்திக்கின்றது. ஆகவே, பரமாத்மாவே அந்தந்த உபாதிபேதத்தினால், வெவ்வேறாக அறியப்பட்ட போதிலும் ஸ்வரூபத்தில் பேதம் கிடையாது என்று ஜீவபரமாத்ம அபேதம் சொல்லப்படுவதால், அத்வைதம் என்றே ஸித்திக்கின்றது.

விசாரம் - கீதா 9.4, 9.5 ச்லோகங்கள்:

மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்தினா ।
மத்ஸ்தானி ஸர்வபூதானி ந சாஹம் தேஷ்வவஸ்தித: ॥ 4

मया ततमिदं सर्वं जगदव्यक्तमूर्तिना ।
मत्स्थानि सर्वभूतानि न चाहं तेष्ववस्थितः ॥ ४ ॥

ந ச மத்ஸ்தானி பூதானி பச்ய மே யோகமைஶ்வரம் ।
பூதப்ருந்ந ச பூதஸ்தோ மமாத்மாபூதபாவன: ॥ 5

न च मत्स्थानि भूतानि पश्य मे योगमैश्वरम् ।
भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ॥ ५ ॥

பூர்வ:- '*மத்ஸ்த்தானி ஸர்வபூதானி*' (मत्स्थानि सर्वभूतानि கீதா : 9-4) என்று ஸர்வபூத ஆதாரமாகத் தெரிவிக்கப்படும் ஈச்வரன், ஜீவனைக்காட்டிலும் விலக்ஷணம் என்றே சொல்ல வேண்டும்.

ஸித்தா:- இது சரியல்ல. '*மத்ஸ்த்தானி ஸர்வபூதானி, ந சாஹம் தேஷு அவஸ்தித:*' (मत्स्थानि सर्वभूतानि न चाहं तेष्ववस्थितः) என்று தெரிவிக்கின்ற வாக்யத்தினால் ஸர்வ பூதங்களும் தன்னிடம் இருக்கின்றதென்றும், நான் அவைகளில் இல்லை என்று தெரிவிக்கப் படுகிறது. '*ஸர்வபூதஸ்த்தமாத்மானம், ஸர்வபூதானி ச ஆத்மனி, ஈக்ஷதே யோகயுக்தாத்மா.*' (கீதா : 6-29) என்று யோகத்தில் நிலைத்திருக்கின்ற யோகியினிடம் இந்த ஸர்வ ஜகத்தும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் எவரிடத்தில் ஸர்வ ஜகத்தும் இருக்கின்றதோ அவர் பரமாத்மா என்று யோகியை பற்றியே இந்த வாக்யம் தெரிவிக்கின்றதால் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றே என்று அறியப்படுகிறது. ஜீவனே, ஸ்வஸ்வரூபேண ஸர்வபூதத்திற்கும் ஸ்வரூபம் என்றே தெரிவிக்கின்றது.

'*மத்ஸ்த்தானி ஸர்வபூதானி...*' என்ற வாக்யம் ஸர்வபூதங்களும் என்னிடம் இருக்கின்றது, நான் அவைகளிடத்தில் இல்லை என்று தெரிவிக்கின்றதால் ஸர்வ ஜகத்தும் ஆரோபிதம் என்பதால், ஆரோபித ஜகத்திற்கும் அதிஷ்ட்டானமாக இருப்பது பரமாத்மா என்றே தெரிவிக்கின்றது. அதனால் தான் ஆரோபிதங்கள் அதிஷ்ட்டானத்தில் இருக்கலாம், ஆனால் ஆரோபிதத்தில் அதிஷ்ட்டானம் இல்லை என்பதையே இவ்விதம் தெரிவிக்கின்றது. உண்மையில் ஸர்வம் மாயிகம் என்பதால், ஆதார ஆதேய பாவம் என்பதும் கிடையாது. அதனால் ஆதாரத்வம் என்பதும் பரமாத்மாவினிடம் கிடையாது. ஒரு வாக்யத்தில் ஸர்வ ஜகத்திற்கும் பரமாத்மாவே ஆதாரம் (9:4) என்றும், மற்றொரு வாக்யத்தில் ஜீவனே ஸர்வாதாரம் (6:29) என்று தெரிவிப்பதால், ப்ரத்யக் ஸ்வரூபமே பரமாத்மா என்றே ஸித்திக்கின்றது. இவ்விதம் அர்த்தம் செய்யப்படவில்லை என்றால் இந்த வாக்யங்கள் ஒன்றுக்கொன்று விருத்தமாக இருக்கின்றது என்ற தோஷம் ஏற்படும்.

பூர்வ:- '*பச்ய மே யோகமைச்வரம்*' (9:5) என்று என்னிடத்தில் இருக்கின்ற அஸாதாரண சக்தியினால் இவை எல்லாவற்றையும் ச்ருஷ்டிக்கின்றேன் என்று தான் அந்த வாக்யம் தெரிவிக்கின்றதே அன்றி இவை எல்லாம் மாயிகம் என்றோ, ப்ராந்தி என்றோ சொல்லப் படவில்லை. அதனால் ஸர்வாதாரத்வம் ஈச்வரனுக்கு பாரமார்த்திகம் என்றே சொல்ல வேண்டுமே அன்றி மாயிகம் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- அஸாதாரண சக்தி என்று சொல்லப்படுவதிலிருந்தே மாயிகம் என்றே ஸித்திக்கின்றது. இவ்விதம் ஸர்வபூத ஆதாரத்வம் என்பது மாயிகம் என்றே சொல்லப்பட வேண்டுமானதால், பரமாத்மஸ்வரூபத்தில் எந்த வஸ்துவும் பரமார்த்தமாக இருக்கின்றது என்று சொல்லமுடியாது.

பூர்வ:- *'பூதப்ருந்ந ச பூதஸ்தோ மமாத்மா பூதபாவன:'* (9.5) (भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ॥) என்ற வாக்யத்தில் இருக்கின்ற ஆத்ம சப்தம் ஸங்கல்பாத்மகமான புத்தி என்பதையே தெரிவிக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஆத்ம சப்தம் புத்தியை குறிக்கின்றது என்று சொல்லப்படுவதற்கு என்ன காரணம்? ஆத்ம சப்தம் புத்திவாசகமா? அல்லது புத்தி வ்ருத்தியான ஸங்கல்ப வாசகமா? புத்தி குணமான ஸங்கல்பவாசித்வம் என்று சொல்லமுடியாது.

விசாரம் - கீதா 7.6,7.7 ச்லோகங்கள்:

ஏதத்யோனீனி பூதானி ஸர்வாணீத்யுபதாரய ।
அஹம் க்ருத்ஸ்னஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா ॥
மத்த: பரதரம் நான்யத்கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய ।
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ ॥

एतद्योनीनि भूतानि सर्वाणीत्युपधारय ।
अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा ॥ ६ ॥
मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनञ्जय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ॥ ७ ॥

'அஹம் க்ருத்ஸ்னஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா மத்த: பரதரம் நான்யத் கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய' (अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा। मत्तः परतरं नान्यत् किञ्चिदस्ति धनञ्जय கீதா 7.6,7.7) என்ற வாக்யம் ஜீவேச்வர பேதவாதிகளுக்கு தூக்கு கயிறாக இருக்கின்றது. அதாவது இந்த வாக்யம் ஸர்வஜகத்தும் என்னிடத்திலேயே தோன்றி என்னிடமே ஸ்திதி பெற்று என்னிடமே லயத்தை அடைகின்றது என்று என்னை அன்றி வேறாக எந்த வஸ்துவும் சிறிதளவும் இல்லை என்றே தெரிவிக்கின்றதால், ஜீவனும் பரமாத்மாவும் வேறு என்றுதெரிவிக்கின்ற உன் ஸித்தாந்தத்திற்கு (பக்ஷத்திற்கு) தூக்கு கயிறாகவே இருக்கின்றது.

ஆகாசாதி பஞ்சபூதங்களும் மனுஷ்யர் முதலான பௌதிகங்களும் சேர்ந்தே ஜகத் சப்த வாச்யமாகின்றது. இந்த ஜகத் பரமாத்மாவின் கார்யம் என்றே *'அஹம் க்ருத்ஸ்னஸ்ய ஜகத: ப்ரபவ:'* என்ற வாக்யத்தினாலேயே அறியப்படுகிறது. காரணத்தை அன்றி கார்யம் வேறாக இருக்க முடியாது. அதனால், பரமாத்மாவைக்காட்டிலும் ஜகத் வேறல்ல என்றே சொல்ல வேண்டும். ஆனாலும் ஜீவன் பரமாத்ம கார்யம் அல்ல என்பதால் பரமாத்மாவைக் காட்டிலும் வேறு என்று சொல்லப்படுமானால் *'மத்த: பரதரம் நான்யத் கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய'*. என்ற வசனம் என்னை அன்றி வேறாக எந்த ஒரு வஸ்துவும் கிடையாது என்றே ஜீவன் பரமாத்மாவைக்காட்டிலும் வேறல்ல என்றே தெரிவிக்கின்றது. எங்கள் ஸித்தாந்தத்தில், *'ப்ரஹ்ம ஸத்யம், ஜகத் மித்யா ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:'* என்ற வாக்யத்தின்படி ஜீவன்

பரமாத்மாவைக்காட்டிலும் வேறல்ல. ஜகத் மித்யை என்பதால், ப்ரஹ்மத்தை அன்றி வேறாக இருக்கமுடியாது. ஜீவனும் ப்ரஹ்மத்தை அன்றி வேறானவன் அல்ல என்பதால் '*மத்த: பரதரம் ந அன்யத் கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய*' என்று தெரிவிக்கின்றது. அவ்விதம் இல்லாவிடில், ஜகத் இல்லை என்றாலும் ஜீவன் இருக்கிறான் என்று சொல்லப்படுமானால் '*மத்த: பரதரம் ந அன்யதஸ்தி*' என்று சொல்லமுடியாது. இந்த வாக்யம் பொருந்த வேண்டுமானால் ஜீவபரமாத்ம அபேதம்தான் சொல்லப்படவேண்டும், வேறு எந்த அர்த்தமும் சொல்லமுடியாது.

மேலும் '*ந கிஞ்சிதஸ்தி*' என்ற வாக்யத்தினாலேயே ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே தெரிவிக்கின்றது. ஸர்வ ஜகத்தும் ஈச்வரனிடம் ஆரோபிதம் என்பதால், கல்பிதமான வஸ்து எதுவும் ப்ரஹ்மத்தை அன்றி (ஈச்வரனை அன்றி) வேறாக இருக்கமுடியாது என்ற காரணத்தினாலும் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது. ப்ரஹ்மத்தை அன்றி வேறாக ஏதாவது ஒரு வஸ்து இருக்குமானால் தான் அது ப்ரஹ்மத்திற்கு விசேஷம் என்று சொல்லலாம். அவ்விதம் வேறாக எதுவுமே இல்லை என்பதால் ப்ரஹ்மத்தில் விசேஷம் இருப்பதாகவே சொல்லமுடியாது. ப்ரஹ்மத்தை அன்றி வேறாக அறியப்படும் வஸ்து எல்லாமே ஜடம். ஜடவஸ்துக்கள் எல்லாமே ப்ரஹ்மத்தில் ஆரோபிதம். ஆரோபிதமான ஜடம் ப்ரஹ்மத்திற்கு விசேஷமாக இருக்கமுடியாது. லோகத்தில் ஜடம் என்றும் சேதனம் என்றும் இரண்டே வஸ்துக்கள்தான் இருப்பதாக அறியப்படுகிறது. சேதனம் என்பதும் ப்ரஹ்மமே என்பதாலும், ஜடம் ஆரோபிதம் என்பதாலும் வேறு எதை ப்ரஹ்மத்திற்கு விசேஷமாகச் சொல்லமுடியும்? ஆகையால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- '*மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ*' என்ற வாக்யம், (मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव கீதா 7.7) ஸர்வ ஜகத்தும் கயிற்றில் கோர்க்கப்பட்ட மணிபோல் என்னிடம் இருக்கின்றது என்று தெரிவிக்கின்றதே? அதனால், கயிறு வேறு மணி வேறு என்று சொல்வதால் ஈச்வரனும் ஜகத்தும் வேறு என்று தானே சொல்லவேண்டும்?

ஸித்தா:- மாயையினால் பரமாத்மாவினிடம் கல்பிதமான இந்த ஜகத், பரமாத்மாவை அன்றி வேறாக இல்லை என்ற கருத்தையே தெரிவிக்கின்றது. எவ்விதம் வஸ்திரத்தில், குறுக்கும் நெடுக்குமாக இருக்கின்ற நூலையே (ஓதப்ரோதபாவேன) வஸ்த்ரம் என்று சொல்லப்பட்டாலும் கூட அந்த நூலைத்தவிர வஸ்திரம் என்பது தனிப்பட்ட ஒரு வஸ்து அல்ல என்பது போல், இந்த வாக்யத்திலும் ஸர்வம் ஓதம் ப்ரோதம் என்று சொல்லப்படுவதால் தன்னை அன்றி வேறாக எந்த வஸ்துவும் கிடையாது என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- 'ஸூத்ரே மணிகணா' என்று சப்தமியில் சொல்லப்படுவதால், ஈச்வரன் வேறு ஜகத் வேறு என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- த்ருஷ்டாந்தம் என்றால் ஸர்வாம்சமும் பொருந்தாது. ஸர்வாம்சத்தையும் பொருத்தி அர்த்தம் செய்யப்படுமானால் ஸூத்ரம்போல் ஈச்வரனும் ஜகத்திற்குள் இருப்பதாகச் சொல்லவேண்டுமே அன்றி ஈச்வரன் ஸர்வவ்யாபி என்றே சொல்லமுடியாது. அதனால் ஜகத்திற்குள் ஈச்வரன் இருக்கின்றார் என்றால் ஜகத்திற்கு வெளியே (பாஹ்யமாக) இருப்பதாகச் சொல்லமுடியாது. '*அந்தர் பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:*'

என்று ஈச்வரன் உள்ளும் புறமும் எங்கும் வ்யாபித்திருக்கின்றார் என்றே சொல்லமுடியாது. அதனால் *ஸூத்ரே மணிகணா இவ* (सूत्रे मणिगणा इव) என்ற வாக்யத்திற்கு, ஈச்வரனை அன்றி வேறாக இந்த ஜகத் இல்லை என்றே அர்த்தம் சொல்லவேண்டும்.

விசாரம் - கீதா 10.42 ச்லோகம்:

பூர்வ:- '*விஷ்ட்டப்யாஹமிதம் க்ருத்ஸ்னம் ஏகாம்சேன ஸ்திதோ ஜகத்* (विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगद्) என்ற வாக்யம் பரமாத்மா நிரவயவமாகவும் நிரவகாசமாகவும் நிரம்சமாகவும் இருக்கின்றதால், ஏகாம்சம் என்பதற்கு ப்ரஹ்மத்தில் ஒரு அம்சத்தில் ஜகத் இருப்பதாக கல்பனை செய்வது சரியல்ல' என்று உங்களால் சொல்லப்பட்டது சரியல்ல. '*விஷ்ட்டப்யாஹமிதம் க்ருத்ஸ்னம் ஏகாம்சேன ஸ்தித: ஜகத்*' என்ற கீதா வசனத்தினால், பகவான், தான் வேறு, ஜகத் வேறு என்றே தெரிவிக்கின்றார். தன்னுடைய ஒரு அம்சத்தில் ஜகத் ஸ்திதி பெற்றிருப்பதாகவே தெரிவிக்கின்றார்.

ஸித்தா:- ப்ரஹ்மத்தில் இருக்கின்ற மாயையினால் ஏகதேசத்தில் இந்த ஜகத் தோன்றுகிறது என்பதே இந்த ச்லோகத்தின் கருத்து. ஏனெனில், நிரவயவம், நிரவகாசம், நிரம்சம் பரமாத்ம ஸ்வரூபம் என்பதால் மாயையினால் ஏகதேசத்தில், ஜகத் தோன்றுகின்றது என்றே சொல்ல வேண்டும்.

பூர்வ:- ஏகாம்சம் என்ற பதம், ப்ரஹ்மத்தின் ஒரு அம்சம் என்று தெரிவிக்கவில்லை என்றாலும், ப்ரஹ்மத்தின் ஸங்கல்பத்தின் ஏகாம்சத்தினால் இந்த ஜகத் ச்ருஷ்டி ஏற்படலாமே?

ஸித்தா:- 'ஏகாம்சம்' என்ற பதம் தான் இந்த வாக்யத்தில் இருக்கின்றது. ஸங்கல்ப ஏகதேசம் என்ற பதமே அந்த வாக்யத்தில் இல்லை. '*அஹமிதம் அவஷ்டப்ய திஷ்ட்டேயம்*' என்றுதான் இந்த வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வ ஜகத்தையும் நான் தாங்குகிறேன் என்று ஸங்கல்பம் இருக்கலாமே என்றால், அதுவும் பொருந்தாது. இவ்விதம் சொல்லப்படுமானால் ஸங்கல்பம்தான் இந்த ஜகத்தை தாங்குகிறதே அன்றி, பகவான் இந்த ஜகத்தை தாங்கவில்லை என்ற அர்த்தம் தான் கிடைக்கின்றது. ஆத்மா அணு என்றும், ஆத்மாவில் இருக்கின்ற தர்மபூத ஞானம்தான் சரீரம் முழுவதும் வ்யாபிக்கின்றது என்று இதற்கு முன், உன்னால் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல் ஸங்கல்பமே ஜகத்தை தாங்குகிறது என்றும் பகவான் தாங்கவில்லை என்றும் சொல்லப்பட்டதாகவே ஆகும். ஆகையால் இவ்விதம் வாக்யத்தில் இல்லாத அர்த்தத்தை கல்பிப்பது பொருந்தாது.

விசாரம் - கீதா 15.16,15.17 ச்லோகங்கள்:

பூர்வ:- '*க்ஷரஸ்ஸர்வாணி பூதானி கூடஸ்த்தோக்ஷர உச்யதே. உத்தம: புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:*' (क्षरस्सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते। उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः) என்ற கீதாவசனம் (15.16,15.17) ப்ரக்ருதியைத்தவிர மற்றுமுள்ள ஸர்வ பூதங்களும் நசிக்கக்கூடியது. கூடஸ்த்தன் ஜீவன் அக்ஷரம், நாசம் இல்லாதவன். க்ஷரம், அக்ஷரம் என்ற இந்த இரண்டைக்காட்டிலும் வேறுபட்டவன் பரமாத்மா, என்று மிக ஸ்பஷ்ட்டமாகவே (தெளிவாகவே) தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- இந்தவாக்யமும் ஜீவபரமாத்ம அபேதத்தையே போதிக்கின்றது. கார்யமான இந்த ஜகத்தையே 'க்ஷரம்' என்று தெரிவிக்கின்றது. இந்த ஜகத்திற்கு காரணமான அவ்யக்தத்தையே 'அக்ஷரம்' என்று தெரிவிக்கின்றது. ஆகவே, காரணமான அவ்யக்தம், கார்யமான இந்த ஜகத் என்ற இரண்டைக்காட்டிலும் வேறுபட்டது (அன்யம்) 'பரமாத்மா' என்றே தெரிவிக்கின்றது.

'*அன்யத்ர தர்மாத், அன்யத்ர அதர்மாத், அன்யத்ராஸ்மாத் க்ருதாக்ருதாத்*' என்ற கட உபநிஷத் வாக்யத்தின் கருத்தையே இந்த வாக்யமும் தெரிவிக்கின்றது. அதாவது க்ஷரம், அக்ஷரம் என்ற கார்யம், காரணம் என்ற இரண்டுமே பரமாத்மாவினிடம் ஆரோபிதம் என்றும், க்ஷரம், அக்ஷரம் என்ற இந்த இரண்டிற்கும் வேறுபட்ட ஸ்வரூபம் ப்ரத்யகபின்ன பரமாத்ம ஸ்வரூபம் என்றே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது. ஆகையால், க்ஷரம் என்றால் ஜகத் என்றும், அக்ஷரம் என்றால் ஜீவன் என்றும், இந்த இரண்டிற்கும் வேறுபட்டது (அன்யம்) பரமாத்மா என்று அர்த்தம் செய்வது முற்றிலும் பொருந்தாது. ஜீவனே, பரமாத்மா என்று '*உபத்ரஷ்ட்டா அனுமந்தா ச, பர்த்தா, போக்தா மஹேச்வர: பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேஸ்மின் புருஷ: பர:*' (उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः। परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन् पुरुषः परः॥) (13.22) என்று தேஹத்தில் இருக்கின்ற புருஷனையே பரமாத்மா என்ற பெயரால் சொல்லப்படுகிறது. அதனால் ஜீவபரமாத்ம பேதமே சொல்லமுடியாது. தேஹாதிகள் ஆத்மா இல்லை. ஆத்ம ஆபாஸம் என்றே அறியவேண்டும். ஜீவனை ஆத்ம ஆபாஸம் என்று சொல்வதில்லை. ஜீவனே ஆத்மா. அவனே பரமாத்மா. அதேபோல் ஈச்வரனையும் ஆத்மா என்றே சொல்லப்படுகிறது. '*ஐததாத்ம்யம் இதம் ஸர்வம், தத்ஸத்யம் ஸ ஆத்மா*' என்று சாந்தோக்ய ச்ருதிவாக்யமும், அதேபோல் '*அஹமாத்மா குடாகேச*' என்று '*அஹம் ஆத்மா*' (கீதா 10.20) என்றே பகவானும் தெரிவிக்கின்றாரே அன்றி பரமாத்மா என்று தெரிவிக்கவில்லை.

பூர்வ:- 'க்ஷரம்' என்பது பத்த ஜீவனையும், 'அக்ஷரம்' என்பது முக்த ஜீவனையும் குறிப்பிடுவதாக சொல்லலாமே?

ஸித்தா:- பத்தன், முக்தன் என்ற இரண்டு பேர்களை மட்டும் குறிப்பிடுவதாக சொல்லப் படுமானால், உன்னால், நித்ய முக்தன் என்று ஒருவனை சொல்லப்படுகிறதே? அவன் கதி என்ன? க்ஷரம், அக்ஷரம் என்ற இரண்டு பதங்கள் மட்டுமே இருக்கின்றதால், கல்பித அர்த்தங்கள் எல்லாம் பொருந்தாது.

பூர்வ:- நாராயண அனுவாகம் என்ற வேதபாகத்தில், ஜீவ, பரமாத்ம பேதம் பற்றி தெரிவிக்கின்றது. அதாவது, நாராயண ஸூக்தத்தில், '*தஸ்யாச்சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்த்தித:, ஸ ப்ரஹ்ம, ஸ சிவ: ஸ ஹரிஸ்ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம: ஸ்வராட்*' (तस्याः शिखाया मध्ये परमात्मा व्यवस्थितः । स ब्रह्म स शिवः स हरिस्सेन्द्रः सोक्षरः परमः स्वराट्) என்று சொல்லப்படுகிறது. அதாவது பரமாத்மா, ஜ்யோதிஸ்வரூபமான அந்த தத்வத்தின் மத்தியில் இருக்கின்றார். அந்த பரமாத்மாவே, ப்ரஹ்மாவாகவும், விஷ்ணுவாகவும், சிவரூபமாகவும் இருக்கின்றார் என்று தெரிவிக்கின்றது. அதனால் இந்த வாக்யம் ஜீவ பரமாத்ம பேதம் இருக்கின்றது என்றே தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இந்த வாக்யமும், ஜீவ பரமாத்ம அபேதத்தையே தெரிவிக்கின்றது. பரமாத்மாவினிடம் இருக்கின்ற மாயாசக்திவிசேஷத்தினால், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களைக்கொண்டு ப்ரஹ்மா என்றும், விஷ்ணு என்றும், ருத்ரன் என்றும் நாமரூபங்களால் அந்த பரமாத்ம ஸ்வரூபமே சொல்லப்படுகிறது. அதனால் ஏகமான பரமாத்ம ஸ்வரூபத்தில் எந்த விதமான பேதமும் கிடையாது என்றே ச்ருதிகள் தெரிவிக்கின்றன. மேலும் இவ்விதம் ப்ரஹ்மா என்றும், விஷ்ணு என்றும், ருத்ரன் என்று சொல்லப்படும் மூன்று மூர்த்திகளில், மத்தியில் இருக்கின்ற 'விஷ்ணு' என்ற ஒருவரைமட்டும் ஈச்வரன் என்றும், ப்ரஹ்மா, ருத்ரன் என்ற இருவரும் ஜீவர்கள் என்று என்ன காரணத்தினால் உன்னால் வித்யாஸம் சொல்லப்படுகிறது? விஷ்ணு புராணத்திலேயே '*அஹம், ப்ரஹ்மா ச, சர்வச்ச ஜகத: காரணம் பரம்*' (अहं ब्रह्मा च शर्वश्च जगतः कारणं परं) என்று நாங்கள் மூவரும் ஜகத் காரணம் என்றே தெரிவிக்கின்றதால், விஷ்ணு மட்டுமே ஈச்வரன் என்று எவ்விதம் சொல்லப்படுகிறது? ஆகவே இந்த வாக்யம் ஜீவபரமாத்ம பேதத்தை தெரிவிப்பதாகச்சொல்ல முடியாது.

பூர்வ:- '*விச்வமேவ இதம் புருஷ:*' (विश्वमेवेदं पुरुषः) [நாராயண ஸூக்தம்] என்று ஐக்யே ஸாமானாதிகரண்யமாக சொல்லப்படுவதாகச் சொல்வது சரியல்ல. '*பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்*' (पतिं विश्वस्यात्मेश्वरं) என்றும், '*வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித:*' (व्याप्य नारायणस्स्थितः) என்றும் தெரிவிக்கின்ற வாக்யம், ஈச்வரன் இந்த ஜகத்திற்கு பதி என்று தெரிவிக்கின்றது, அதனால் பதி நியாமகம், விச்வம் நியம்யம் என்று நியம்யநியாமக பாவமாக சொல்லப்பட்டிருப்பதால், பரமாத்மாவே இந்த ஜகத் என்று ஸாமானாதிகரண்யம் சொல்லப்படவில்லை. நியம்ய, நியாமக பாவத்தையே ஸாமானாதிகரண்யமாக சொல்லப் படுகிறது. அதேபோல் '*அந்தர் பஹிச்ச தத்ஸர்வம், வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித:*' என்ற வாக்யமும் விச்வம் வ்யாப்யம், பகவான் வ்யாபகன் என்று தெரிவிப்பதற்காகவே ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் ஐக்யே ஸாமானாதிகரண்யம் சொல்வது சரியல்ல.

ஸித்தா:- '*விச்வமேவேதம் புருஷ:...*' என்ற வாக்யத்திற்கு உன்னால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல. விச்வமேவ இதம் புருஷ: என்று ஐக்யே ஸாமானாதிகரண்யம் தான் சொல்லப்படுகிறது. பரமாத்மா காரணம், ஜகத் கார்யம் என்று கார்யகாரணபாவேன, இரண்டும் வேறல்ல என்றே தெரிவிக்கின்றது. பரமாத்மாவே இந்த ஜகத் என்று கார்யகாரண அனன்யத்தை கொண்டு, ஐக்யே ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் தான் செய்யப்பட்டிருக்கின்றது. விச்வம் என்பது ஜகத், புருஷன் என்பது ஈச்வரன் என்று தெரிவிக்கின்றது. பரமாத்மாவே ஜகத் காரணம் என்று உன்னாலும் ஒத்துக் கொள்ளப்படுகிறது (ஆனால் பரமாத்மாவிவர்த்தோபாதானம் என்பது அத்வைத ஸித்தாந்தம். பரிணாமி உபாதானம் என்பது உன்னுடைய ஸித்தாந்தம்) ஆகவே கார்யகாரணங்களுக்கு அபேதம் தான் சொல்லவேண்டுமென்று உன்னாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் விச்வம் என்பதற்கும், புருஷனான பரமாத்மாவிற்கும் கார்யகாரண பாவம் இல்லை என்றால், நியம்ய, நியாமகபாவமோ, வ்யாப்ய, வ்யாபக பாவமோ சொல்லமுடியாது (ஸித்திக்காது) ஐக்யே ஸாமானாதிகரண்யம் இல்லை என்றால் '*அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித:*' என்ற வாக்யமே பொருந்தாது.

காரணவஸ்து எதுவோ 'அதுவே' உள்ளும் புறமும் இரண்டிலும் வ்யாபித்திருக்கமுடியும். காரண வஸ்துவை அன்றி வேறு எதுவும் உள்ளும் புறமும் வ்யாபித்திருக்கமுடியாது. காரண வஸ்துவை அன்றி வேறாக, கார்யம் என்று தனித்த வஸ்து எதுவுமே கிடையாது. காரணமே கார்யமாக தோன்றுகிறது. ம்ருத் கடம் போல் உள்ளும் புறமும் வ்யாபித்திருப்பது காரண வஸ்து ஒன்றே என்பதால் இந்த வாக்யம் ஐக்யே ஸாமானாதிகரண்யம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- பரமாத்ம ஸ்வரூபம் சைதன்யஸ்வரூபம், ஜகத் ஸ்வரூபம் ஜடம், இவ்விதம் ஒன்றுக்கொன்று வேறு பட்ட லக்ஷணமான (விலக்ஷணமான) இரண்டிற்கும் ஐக்யம் எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- பரமாத்மாவிற்கும் ஜகத்திற்கும், வைலக்ஷண்யம் இருந்தாலும் கார்யகாரணபாவம் இருக்கலாம் என்றால், அதேபோல் விலக்ஷணமாக இருந்தாலும் ஐக்யம் சொல்வதில் தவறு ஏதுமில்லை.

பூர்வ:- '*பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம்....*' (पतिं विश्वस्यात्मेश्वरं) என்ற வாக்யத்தில் உள்ள ஆத்மேச்வரம் என்ற பதம் ஜீவாத்மாக்களுக்கு ஈச்வரன் என்று அர்த்தம் சொல்லலாம். ஜீவன் நியம்யன், ஈச்வரன் நியாமகன். ஆத்மேச்வரம் என்பது ஸமஸ்தபதம். ஆத்மனாம் ஜீவானாம் ஈச்வர: ஆத்மேச்வர: என்று தத்புருஷஸமாஸத்தினால் சொல்லப்படுகிறது. அதனால் ஜீவன் வேறு, ஈச்வரன் வேறு என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- 'ஆத்மேச்வர:' என்ற பதத்திற்கு ஸர்வ ஜகத்திற்கும் ஆத்மாவாக இருக்கின்ற ஈச்வரன் என்றே அர்த்தம். ஆத்மாவிற்கு ஈச்வரன் என்று அர்த்தம் செய்வது சரியல்ல. '*ஆத்மா சாஸௌ, ஈச்வரச்ச ஆத்மேச்வர:*' என்று ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

பூர்வ:- விச்வனுக்கு, ஈச்வரன் ஆத்மா என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஜீவன்தானே இந்த சரீரங்களில் ஆத்மாவாக இருக்கின்றான்?

ஸித்தா:- 'ஐததாத்ம்யம் இதம் ஸர்வம், தத் ஸத்யம் ஸ ஆத்மா' என்று ச்ருதியே தெரிவிக்கின்றதே? ஸர்வத்திற்கும் பரமாத்மாவே ஆத்மா என்றே தெரிவிக்கின்றது. '*ஆத்மா சாஸௌ ஈச்வரஸ்ச ஆத்மேச்வர:*' என்று ஸாமானாதிகரண்யேன கர்மதாரயஸமாஸமே சொல்லலாம். ஆத்மனாம் ஈச்வர: என்று தத்புருஷ ஸமாஸத்தில் சொல்லவேண்டிய அவச்யமே இல்லை. ஆத்மாவே ஈச்வரன் என்றே சொல்லலாம். ஏனெனில் ஆத்மா என்பது நித்ய வஸ்து. ஆத்மா பரதந்த்ரம் அல்ல. பரதந்திரமாக இருந்தால்தான் நித்யம் என்று சொல்லமுடியாது. நித்ய வஸ்து என்றால் பரதந்த்ரமாக இருக்காது. ஆத்மா நித்யன் என்பதால், ஆத்மாவிற்கு ஈச்வரன் என்று சொல்லமுடியாது. ஆத்மாவிற்கு ஈச்வரன் என்றால் ஆத்மா பரதந்த்ரம் என்று சொல்ல நேரிடும். அதனால் இவ்விதம் ஆத்மேச்வரன் என்பதற்கு த்வைதபரமாக அர்த்தம் செய்வது சரியல்ல. நாராயண ஸூக்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற வாக்யங்கள் எல்லாம் அத்வைத பரம் என்றே சொல்லவேண்டும் (அறிய வேண்டும்).

பூர்வ:- '*யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர:*' (यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः கீதா 15.17) என்ற வாக்யம், எந்த பரமாத்மா மூன்று லோகங்களிலும் ப்ரவேசித்து

தாங்குகின்றாரோ அவர் நாமரஹிதர். அவரே ஈச்வரன் என்று தெரிவிக்கின்றது. அதனால் சிதசித் விலக்ஷணம் பரமாத்மா என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- '*லோகத்ரயமாவிச்ய*' என்ற வாக்யத்திற்கு சிதசித் விலக்ஷணன் ஈச்வரன் என்று அர்த்தம் சொல்வது சரியல்ல. லோகம் என்றால் ஜடமான ஜகத் என்பதே அர்த்தம். அதனால் ஜீவனை லோக சப்தார்த்தமாக சொல்வது சரியல்ல. அதேபோல் அசித்விலக்ஷணம் ஈச்வரன் என்று சொல்வதும் சரியல்ல. ஜீவரூபேண, பகவான் அந்த: ப்ரவிச்ய லோகத்ரயம் பிபர்த்தி என்றே சொல்லப்படுகிறது. அதனால் கார்யகரணஸங்காதமான இந்த சரீரத்திற்குள் ப்ரவேசித்து எல்லாவற்றையும் தாங்குகிறார் என்றே அர்த்தம் சொல்லவேண்டும். கார்யகரணஸங்காதம் என்றாலே, ஸ்தாவரம், ஜங்கமம் என்ற இரண்டுவிதமான கார்யகரணஸங்காதத்தையும், ஜீவன் தான் சரீரத்திற்குள் இருந்து தாங்குகிறான் என்பது அனுபவத்தில் அறியப்படும் உண்மை. வ்ருக்ஷம் முதலானவைகளிலும் ஜீவன் இருக்கின்றான். இவ்விதம் கார்யகரண ஸங்காதத்திலிருந்து ஜீவன் வெளிப்படுகின்றபோதுதான் சரீரத்திற்கு மரணம் ஏற்படுகிறது என்பதும் அறியப்படுகிறது. இவ்விதம் தேஹத்தை தாரணம் செய்கின்றவன் (தரிப்பவன்) ஜீவன் என்ற காரணத்தினால்தான் 'தேஹி' என்று வ்யவஹாரம் இருக்கின்றது. இந்தவிதம் ஸர்வவ்யாபகமாகவும். ஸர்வேச்வரனாகவும் இருக்கின்ற ஈச்வரன் ஒன்றே என்றாலும், அந்த:கரணம் என்ற உபாதி அனேகமாக இருக்கின்றதால், அனேக ஜீவபாவம் ஏற்படுகிறது. அதன் காரணமாகவே ஜீவன் என்ற நாமாவினால் லோகத்ரயத்தையும் தாங்குகிறான் என்று சொல்லப்படுகிறது. அதனால் ஜீவேச்வர பேதம் சொல்லப்படவில்லை. இந்த கருத்தை கீதாவசனமும் '*க்ஷேத்ரஞ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத*' (क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत கீதா 13.2) என்று தெரிவிக்கின்றது. இந்த சரீரத்திற்குள் இருந்து எவன் சரீரம் முதலான எல்லாவற்றையும் ப்ரகாசப்படுத்துகின்றானோ அவனே க்ஷேத்ரஞ்ஞன் என்று தெரிவிக்கின்றது. அதனால் தேஹாதிகள் ஆத்மா அல்ல, தேஹாதிகளைக்காட்டிலும் வேறானவன் ஆத்மா என்று தெரிவிக்கின்றது. இதன் மூலம் தேஹாதிகள் ஆத்மா என்று தெரிவிக்கின்ற மதத்தினரின் கொள்கை நிராகரிக்கப்படுகிறது. ஆத்மா தேஹாதிகளுக்கு வேறானவன் என்பது போல், பரமாத்மாவைக்காட்டிலும் வேறாக இருக்கலாமே என்ற சந்தேகத்திற்கு இடமின்றி '*க்ஷேத்ரஞ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத*' என்று அந்த க்ஷேத்ரத்தில் இருக்கின்ற ஆத்மஸ்வரூபமான 'நானே' ஸர்வ க்ஷேத்ரங்களிலும் இருக்கின்றேன் என்று அறியவேண்டும் என்று பகவானே தெரிவிக்கின்றார்.

'*பகவான் ஏக ஏவ ஏஷ ஸர்வக்ஷேத்ரேஷு அவஸ்த்தித:*' என்று பாகவதத்தில் பகவான் வ்யாஸரால் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் ஜீவபரமாத்ம பேதமே சொல்லமுடியாது.

பூர்வ:- ஜீவனை, ஈச்வரன் என்று சொல்வது சரியல்ல. எந்த வாக்யமும் ஜீவனே ஈச்வரன் என்று தெரிவிக்கவில்லை.

ஸித்தா:- '*சரீரம் யதவாப்னோதி யச்சாபி உத்க்ராமதி ஈச்வர:*' (शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वर:) என்ற கீதாவாக்யம் 15.8, கர்மவசாத் ஜீவன் அவ்வப்போது சரீரத்திற்குள் ப்ரவேசிக்கின்றான். அதன் பிறகு ப்ராரப்த க்ஷயம் ஏற்பட்டவுடன் இந்த சரீரத்தை விட்டு

விடுகிறான். இவ்விதம் இந்த சரீரத்தை விட்டு போகின்றபோது ஸூக்ஷ்ம சரீரத்துடன் போகின்றான் என்று தெரிவிக்கின்றபோது, ஜீவனை, 'ஈச்வரன்' என்ற பதத்தினாலேயே கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் ஈச்வரனே மாயையினால் ப்ராணதாரணம் செய்கின்றதால், ஜீவன் என்ற நாமா ஏற்படுகிறது. அதனால் ஈச்வரனைக் காட்டிலும் ஜீவன் வேறானவன் அல்ல என்றே அறியப்படுகிறது. அதுமட்டுமல்ல, '*ந ததஸ்தி வினா யத்ஸ்யாத் மயா பூதம் சராசரம்*' (न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम् கீதாவாக்யம் 10.39) என்ற வாக்யம் பகவானுக்கு வேறான வஸ்து எதுவுமே இல்லை என்றே தெரிவிக்கின்றது. இதே அர்த்தத்தில், '*மத்த: பரதரம் நான்யத் கிஞ்சித் அஸ்தி தனஞ்ஜய*' என்ற கீதாவசனமும் தெரிவிக்கின்றது. என்னைகாட்டிலும் வேறாக எந்த வஸ்துவுமில்லை என்றே தெரிவிக்கின்றார்.

பூர்வ:- '*ந ததஸ்தி வினா*' என்ற வாக்யத்தில் உள்ள 'வினா' என்ற பதம் பகவத்ஸம்பந்தம் இல்லாத வஸ்து எதுவும் இந்த சராசரத்தில் இல்லையென்றே தெரிவிக்கின்றது. அதனால் பகவானை அன்றி வேறாக எந்த வஸ்துவும் இல்லை என்ற அர்த்தம் சரியல்ல.

ஸித்தா:- '*அஸங்கோ நஹி ஸஜ்ஜதே*' (असङ्गो न हि सज्जते) என்ற ச்ருதி பகவான் அஸங்கம் என்றே தெரிவிக்கின்றது. பகவானுக்கு எந்த வஸ்துவுடனும் ஸம்பந்தமே கிடையாது என்று தெரிவிக்கின்றதால், ஸர்வ வஸ்துக்களும் பகவானுடன் ஸம்பந்தம் உடையது என்று அர்த்தம் செய்வது ச்ருதிக்கு விரோதமாக ஆகும்.

பூர்வ:- இதில் ச்ருதி விரோதம் ஏற்படாது. ஏனெனில், '*அஸங்கோ நஹி ஸஜ்ஜதே*' என்ற வாக்யத்திற்கு பகவத் அஸங்கதமான வஸ்து என்பதே கிடையாது என்றுதான் அர்த்தம். அதாவது பகவத் அஸங்கதம் என்றால் பகவானால் வ்யாபிக்கப்படாத வஸ்து எதுவுமே கிடையாது என்பதே அர்த்தம். இவ்விதம் பகவான் அஸங்கம் என்று சொல்வதால் தோஷம் ஏதுமில்லை.

ஸித்தா:- உன்னால் சொல்லப்படுவதுபோல் அர்த்தம் இருக்குமானால். ப்ரபஞ்சம் வ்யாப்யம், பகவான் வ்யாபகம் என்று சொல்லவேண்டும். இவ்விதம் வ்யாப்ய, வ்யாபக பாவ ஸம்பந்தம் இருக்குமானால், பகவான் அஸங்கம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- கடத்தில் ஆகாசம் வ்யாபிக்கின்றது. அவ்விதம் வ்யாபித்திருந்தாலும் ஆகாசம் அஸங்கம் என்றே சொல்லப்படுகிறது. அதேபோல் பரமாத்மா, ப்ரபஞ்சத்தில் வ்யாபித்திருந்தாலும் அஸங்கம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஆகாசம் கடத்துடன் ஸம்பந்தப்பட்டிருந்தாலும், கடத்தின் உற்பத்தி, விநாசம் போன்ற எந்த தர்மங்களிலும் ஸம்பந்தப்படுவதில்லை என்ற காரணத்தினால் அஸங்கம் என்று சொல்லப்படுகிறதே அன்றி, கடத்துடன் ஆகாசத்திற்கு ஸம்பந்தம் இல்லை என்று சொல்லப்படவில்லை. அதனால் ஆத்மஸ்வரூபம் பற்றிய விசாரத்தில் ஆகாச த்ருஷ்ட்டாந்தம் பொருந்தாது.

பூர்வ:- ம்ருத்திற்கும், கடத்திற்கும் எவ்விதம் ஸம்பந்தம் சொல்லப்படுகிறதோ அதுபோல், ஆத்மாவிற்கும் ப்ரபஞ்சத்திற்கும் ஸம்பந்தம் சொல்லலாமே? அதாவது ம்ருத் என்பது

அதன் கார்யமான கடாதிகளால் எவ்விதம் வ்யாபிக்கின்றதோ அதுபோல் பரமாத்மா, தன் கார்யமான ப்ரபஞ்சத்தை வ்யாபித்திருக்கின்றார் என்று வ்யாப்யத்வ, வ்யாபகத்வ பாவம் சொல்லலாமே?

ஸித்தா:- ம்ருத் என்ற வஸ்துவை அன்றி கடம் என்று வேறாக தனித்த ஒரு வஸ்துவாக இல்லை. அதனால் ம்ருத்திற்கும், கடத்திற்கும் ஸம்பந்தம் என்பதே கிடையாது. இரண்டு வஸ்துகள் வேறாக இருந்தால்தான் ஸம்பந்தம் என்பது ஏற்படும். கடம் வேறு ம்ருத்வேறு என்று இரண்டு வஸ்துக்கள் இல்லை. அதனால் ஸம்பந்தம் ஏற்படமுடியாது.

பூர்வ:- ம்ருத்திற்கு கடம் என்ற நாம ரூபங்களோடு எவ்விதம் ஸம்பந்தம் ஏற்படுகிறதோ அதே போல் பரமாத்மாவிற்கு நாமரூப ஸம்பந்தம் ஏற்படுவதாகச்சொல்லலாமே? கடம் என்ற நாமாவும் அதன் ஆகாரமும் ம்ருத்தைக்காட்டிலும் வேறானது. அதனால் ம்ருத்திற்கு கடம் என்ற நாம ரூபத்துடன் ஸம்பந்தம் இருப்பதாகச் சொல்லப்படலாம். அதேபோல் பரமாத்மாவிற்கு ஜகத் என்ற நாம ரூபத்துடன் ஸம்பந்தம் சொல்லலாமே?

ஸித்தா:- ம்ருத் என்றும் கடம் என்றும் நாமம் ரூபம் என்ற இரண்டுமே அஸத்யம். அதேபோல் நாமரூபாத்மகமான இந்த ஜகத் என்பதும் அஸத்யம் என்பதனாலேயே '*வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகா இத்யேவ ஸத்யம்*' என்று தெரிவிக்கின்ற ச்ருதி வாக்யத்தினால் 'ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம்' என்று தெரிவிக்கின்றது. அது மட்டுமல்ல நாம ரூபமான இந்த ஜகத் ப்ரஹ்மத்தில் ஆரோபிதம் என்றே தெரிவிக்கின்றது. ஆகவே ஸத்ய வஸ்துவான ப்ரஹ்மத்திற்கும், மித்யா வஸ்துவான இந்த ஜகத்திற்கும் ஸம்பந்தம் என்பதே இருக்கமுடியாது. ஆகவே, ம்ருத்திற்கு கடத்துடன் ஸம்பந்தம் இல்லையென்றாலும் அதன் நாமரூபத்துடன் ஸம்பந்தம் இருக்கலாமே என்ற கேள்வியும் சரியல்ல. நாமரூபம் மித்யை. ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம்.

ஆகவே, பகவான் சித் அசித் விலக்ஷணன் என்று சொல்லப்படுவது சரியல்ல என்று தெரிவிப்பதற்காக முதலில் சித்விலக்ஷணம் இல்லை என்று ஜீவபரமாத்ம அபேதம் சொல்லப்பட்டது. அதேபோல் அசித் விலக்ஷணம் இல்லை என்று, ப்ரஹ்மத்தை அன்றி ஜகத்வேறல்ல என்று தெரிவித்ததன் மூலமாக, ஜகத் மித்யை என்று அறியப்படுகிறது. இதுவரை, உபநிஷத்வாக்யங்களும், கீதா வாக்யங்களும் அத்வைத பரம் என்று விசாரித்து ஸித்தம் செய்யப்பட்டது. இதற்கு மேல் புராண வாக்யங்கள் பற்றி விசாரிக்கப்படுகிறது.

पुराणवचनानां निर्विशेषब्रह्मपरत्वोपपत्तिः।

புராணவசனானாம் நிர்விசேஷப்ரஹ்மபரத்வ உபபத்தி:

ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீராமானுஜர், முதல் அத்யாயம், முதல் அதிகரணம் முதல் ஸூத்ரத்தில் சில விஷ்ணு புராண ச்லோகங்களை ஸவிசேஷ பரமாக விளக்குகிறார். அது இங்கே நிராகரிக்கப்படுகிறது

விஷ்ணு புராணம் - ச்லோகம் 6.5.83

பூர்வ:-

ஸ ஸர்வபூதப்ரக்ருதிம் விகாரான் குணாதிதோஷாம்ச்ச முனே வ்யதீத:
அபேதஸர்வாவரணோகிலாத்மா தேனாஸ்த்ருதம் யத்புவனாந்தராலே

(स सर्वभूतप्रकृतिं विकारान् गुणादिदोषांश्च मुने व्यतीतः।
अपेतसर्वावरणोऽखिलात्मा तेनास्तृतं यद्भुवनान्तराले)

என்ற இந்த ச்லோகம், விஷ்ணு புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ச்லோகம் ஸவிசேஷ ப்ரஹ்மத்திற்கே ப்ரமாணமாகின்றது. நிர்விசேஷப்ரஹ்மத்தை தெரிவிக்கவில்லை.

ஸித்தா:- இந்த ச்லோகம் நிர்விசேஷ ப்ரஹ்ம பரம் என்றே சொல்லவேண்டும். ஸவிசேஷபரம் என்று சொல்வது சரியல்ல. அதாவது பரமாத்மா, ஸர்வ பூதங்களுக்கும் ப்ரக்ருதியான, மாயை முதலான ஸர்வ ஆவரணங்களும் அற்றவர் என்ற காரணத்தினாலேயே ப்ரக்ருதியினால், பகவான் ஆவரணம் செய்யப்படமுடியாது. ஏனெனில் காரணஸ்வரூபமே கார்யத்தில் உள்ளும் புறமும் வ்யாபித்து இருக்கின்றதால் காரண ஸ்வரூபமான பகவானை ஆவரணம் செய்ய முடியாது. ஸர்வ பூதத்திற்கும் பரிணாமி உபாதானம் ப்ரக்ருதி. பரமாத்மா, ஸர்வ பூத உபாதானமான ப்ரக்ருதிக்கும் அதீதர். ப்ரக்ருதியின் விகாரமான மஹத் முதலானவைகளுக்கும் அதீதர். குண தோஷங்களுக்கும் அப்பாற்பட்டவர் (அதீதர்). காரணம் கார்யத்தைக்காட்டிலும் வேறுபட்டது என்பதால் அதீதம் என்று சொல்லப்படுகிறது. குணங்கள் என்றால் தயை, தாக்ஷண்யம் முதலானவைகளையும் சொல்லலாம், அல்லது நீலம், பீதம் போன்ற நிறங்களையும் குணம் என்று சொல்லலாம். அல்லது ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற குணங்களையும் சொல்லலாம் என்பதால் குணங்களுக்கெல்லாம் அதீதர் என்று சொல்லலாம். அது மட்டுமல்ல குணாதிகள் (குணம் முதலானவைகள்) என்று ஆதி சப்தப்ரயோகம் செய்திருப்பதால் ஸர்வகர்மாக்களுக்கும் அதீதர் என்றும், அதேபோல் தோஷம் முதலானவைகளுக்கும் அதீதர் என்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதம் ஸர்வ ஸம்பந்தமும் அற்றவராக, ஸர்வாதீதராக இருக்கின்ற பரமாத்மஸ்வரூபம் நிர்விசேஷம் என்றே தெரிவிக்கின்றது. இப்பேர்ப்பட்ட நிர்விசேஷமான பரமாத்மா,

மாயையினால் ஸர்வாத்மாவாக இருக்கின்றார் என்று அகிலாத்மா என்ற பதம் தெரிவிக்கின்றது எப்படியெனில் முன்னால், ஸர்வத்திற்கும் அதீதர் என்று சொல்லப்பட்டதனால் மாயையினால் தான் அகிலாத்மாவாக ஆகமுடியும் என்று, அகிலாத்மா என்ற பதத்தினால் அறியப்படுகிறது. லோகத்திலுள்ள வஸ்துக்கள் எதுவும் பரமாத்மாவை அன்றி வேறாக இருக்கமுடியாது. அதனால் பரமாத்மாவினால் ஸர்வ வஸ்துக்களும் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது. ஆஸமந்தாத் ஸர்வதிக்குகளும் எங்கும் பரமாத்மா ஆச்ரிதம் என்று ஸர்வமும் பரமாத்மாவினால் வ்யாப்தம் என்று தெரிவிக்கின்றதால், பரமாத்மாவை அன்றி வேறாக எந்த வஸ்துவும் இருக்க முடியாது. ஆகவே, ஸர்வமும் பரமாத்மகார்யமாக இருந்தால்தான் காரணமான பரமாத்மாவினால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லமுடியும். இதனாலேயே ஸர்வ ஜகத்தும் மித்யை என்றே ஸித்திக்கின்றதால் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

விஷ்ணுபுராணம் 6. 5. 84 ச்லோகம்.

ஸமஸ்தகல்யாணகுணாத்மகோஸௌ ஸ்வசக்திலேசாவ்ருதபூதவர்க: ।
இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ: ஸம்ஸாதிதாசேஷஜகத்ஹிதோ ய: ॥

समस्तकल्याणगुणात्मकोऽसौ स्वशक्तिलेशावृतभूतवर्गः ।
इच्छागृहीताभिमतोरुदेहः संसाधिताशेषजगद्धितो यः ॥

என்று இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. இதன் அர்த்தம் என்னவென்றால், ''இந்த பரமாத்மா தன்னுடைய மாயா சக்தியினால் ஸர்வபூதங்களிலும் வ்யாபித்திருக்கின்றவராகவும், ஸமஸ்த்தகல்யாண குணாத்மகராகவும், தன் ஸங்கல்பமாத்ரத்தினாலேயே அனேகவிதமான சரீரத்தை எடுக்கக்கூடியவராகவும், ஸர்வ ஜகத்திற்கும் ஹிதத்தையே செய்கின்றவராகவும் இருக்கின்றார்'' என்று முன் ச்லோகத்தில் தெரிவிக்கப்பட்ட பரமேச்வரனை இந்த ச்லோகத்தில் ஸ்துதிக்கப்படுகின்றது.

இவ்விதம், இந்தச்லோகமும், பரமாத்மாவினிடம் மாயிகமான ஸமஸ்த்த கல்யாண குணங்களும் இருக்கலாம் என்று தெரிவிப்பதால், இந்த ச்லோகத்தினாலும் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கப்படுகின்றது.

விஷ்ணுபுராணம் 6. 5. 86 ச்லோகம்.

ஸ ஈச்வரோ வ்யஷ்டிஸமஷ்டிரூப: அவ்யக்தஸ்வரூபோ ப்ரகடஸ்வரூப:
ஸர்வேச்வர: ஸர்வத்ருக் ஸர்வவிச்ச, ஸமஸ்தசக்தி: பரமேச்வராக்ய:

स ईश्वरो व्यष्टिसमष्टिरूपः अव्यक्तस्वरूपः प्रकटस्वरूपः ।
सर्वेश्वरः सर्वदृक् सर्वविच्च समस्तशक्तिः परमेश्वराख्यः ॥

என்று தெரிவிக்கின்றது.

இந்த ச்லோகமும் ஸவிசேஷபரம் அல்ல, நிர்விசேஷ ப்ரஹ்மமே வ்யஷ்டிரூபமாகவும், ஸமஷ்டிரூபமாகவும் இருக்கின்றார் என்றே தெரிவிக்கின்றது. அதாவது, வ்யஷ்டிரூபம் ஜீவன், ஸமஷ்டிரூபம் ஹிரண்யகர்ப்பர் இவ்விதம் இரண்டுவிதமாக இருப்பவர், ஈச்வரனே என்று தெரிவிக்கின்றதால் அத்வைதமே தத்வம் என்று ஸித்திக்கின்றது.

பூர்வ:- இந்த ச்லோகத்தில் ரூப சப்தம் சரீரத்தையும் குறிக்கின்றதால் வ்யஷ்டி ஸமஷ்டி தேஹங்களை சரீரமாகக்கொண்டவர் பரமாத்மா என்றே அர்த்தம் செய்யவேண்டும்.

ஸித்தா:- ரூபசப்தத்திற்கு சரீரம் என்ற அர்த்தம் சொல்லப்பட்டபோதிலும், வ்யஷ்டி சரீரமான, மனுஷ்யன், பசு முதலானவைகளும், ஸமஷ்டி சரீரமான ப்ரஹ்மாண்டமும், பகவானுக்கு சரீரம் என்று சொல்லப்படுமானால், வ்யஷ்டி சரீர அபிமானியான ஜீவர்களாகவும், ஸமஷ்டிசரீர அபிமானியான ஹிரண்யகர்ப்பராகவும், ஒரே ஈச்வரன் இருக்கின்றார் என்று சொல்லப்படுவதாகவே ஆகும். அதனால் இந்த ச்லோகத்திற்கும் அத்வைதம் தான் தாத்பர்யம் என்றே சொல்லவேண்டும்.

மனுஷ்யர், பசு, முதலான வ்யஷ்டி சரீரங்களுக்கு தனித்தனியே ஜீவாத்மாக்கள் இருக்கின்றார்கள். அதேபோல் ஸமஷ்டி சரீர அபிமானியாக ஹிரண்யகர்ப்பர் இருக்கின்றார். ஸமஷ்டி சரீரம் ஹிரண்யகர்ப்பரின் சரீரம், வ்யஷ்டி சரீரம் அந்தந்த ஜீவாத்மாக்களின் சரீரமாக இருக்கின்றது. இந்த ச்லோகத்தில் வ்யஷ்டி ஸமஷ்டி என்று சொல்லப்படும் சரீரங்கள் எல்லாமே ஈச்வரனுக்கு சரீரம் என்று வர்ணிக்கப்படுகிறது. அதனால் ஈச்வரன் வ்யஷ்டி சரீர அபிமானியான ஜீவாத்ம ரூபத்திலும், ஸமஷ்டி சரீர அபிமானியான ஹிரண்யகர்ப்பர் ரூபத்திலும் இருக்கின்றார் என்று தெரிவிக்கின்றதால், இந்த ச்லோகத்தினாலும் அத்வைதமே ஸித்திக்கின்றது.

பூர்வ:- வ்யஷ்டிரூபமான பசு, மனுஷ்யன் முதலான சரீரங்களை உடைய ஜீவர்களையும், ஸமஷ்டி என்று சொல்லப்படும் ப்ரஹ்மாண்டத்தை சரீரமாகக்கொண்ட ஹிரண்யகர்ப்பரையும் சரீரமாகக்கொண்டவர் என்றே இந்த ச்லோகத்திற்கு அர்த்தம் செய்யவேண்டும்.

ஸித்தா:- ஜீவன் ஈச்வரனுடைய சரீரம் அல்ல. அதனால் சரீர சரீரகபாவம் சொல்ல முடியாது என்றும், ஜீவனுடைய ஸ்வரூபமே ஈச்வரன் என்றும் முன்பே விசாரித்து தீர்மானிக்கப்பட்டிருப்பதால் இது பற்றி மேலும் விளக்கத்தேவை இல்லை. ஈச்வரன், ஏன் அவ்யக்தம் என்ற சப்தத்தினால் சொல்லப்படுகிறார் என்றால், அதி ஸூக்ஷ்மமாக இருக்கின்றதாலும், ஈச்வர ஸ்வரூபம் அறியப்படவேண்டிய தத்வமாக இருக்கின்றதாலும், இந்திரிய கோசரமாகாததாலும், அவ்யக்தம் என்று சொல்லப்படுகிறார். ஆனால், அவ்யக்தமாக இருந்தபோதிலும், ஸர்வப்ரகாரகமாக (ப்ரகடஸ்வரூபமாக) இருக்கின்றார் என்று தெரிவிக்கின்றதால் சூன்யம் இல்லை என்று ஸித்திக்கின்றது.

ஏனெனில், எந்த வஸ்துவாக இருந்தாலும், அந்த வஸ்து இருந்தால் தெரிய வேண்டும், தெரியவில்லை என்றால் அந்த வஸ்து இல்லை என்றே சொல்லவேண்டும் என்பதால் சூன்யம் என்றே ஸித்திக்கின்றது என்ற (உன்) ஆக்ஷேபத்திற்கு இடமின்றி அவ்யக்தமாகவும்,

ப்ரகடஸ்வரூபமாகவும் பரமாத்மா இருக்கின்றார். அதனால் சூன்யம் இல்லை என்றே ஸித்திக்கின்றது. அஞ்ஞானிகளுக்கு அவ்யக்தமாகவும், ஞானிகளுக்கு வ்யக்தமாகவும் (ப்ரகடஸ்வரூபம்) ஸர்வத்திற்குமே ஸ்வரூபமாக இருப்பது பரமாத்ம ஸ்வரூபம் என்றே இந்த ச்லோகத்தினாலும் அத்வைதம் என்றே ஸித்திக்கின்றது.

விஷ்ணுபுராணம் 6. 5. 87ச்லோகம்.

'ஸம்ஞாயதே யேன ததஸ்த்ததோஷம், சுத்தம் பரம் நிர்மலம் ஏகரூபம்.
ஸம்த்ருச்யதே வாப்யவகம்யதே வா தஜ்ஞானம் அஞ்ஞானமதோன்யதுக்தம்'

संज्ञायते येन तदस्तदोषं शुद्धं परं निर्मलमेकरूपम् ।
संदृश्यते वाऽप्यवगम्यते वा तज्ज्ञानमज्ञानमतोऽन्यदुक्तम् ॥

என்ற இந்த ச்லோகமும் இதே கருத்தை தெரிவிக்கின்றது. அதாவது - நிர்த்தோஷமாக, சுத்தமாக, நிர்மலமாக, ஏகரூபமாக இருக்கின்ற ஆத்ம ஸ்வரூபம் அபரோக்ஷமாகவோ, பரோக்ஷமாகவோ எதனால் அறியப்படுகிறதோ அதுவே ஞானம் என்று சொல்லப்படுகிறது. அதற்கு விபரீதமாக அறியப்படுமானால் அதுவே அஞ்ஞானம் என்று அறியவேண்டும்.

இந்த ச்லோகமும் நிர்விசேஷபரமான ச்லோகமாக இருக்கின்றதால், எனக்கு அனுகூலமாகவே இருக்கின்றது. அதாவது ''அஸ்த தோஷம், சுத்தம், பரம், நிர்மலம், ஏகரூபம்'' என்ற பல விசேஷணங்களினால் தோஷமற்றது, நிர்மலம் ஏகரூபம் என்று தெரிவிக்கின்றதால், நிர்விசேஷம் என்றும் சுத்தம் என்றும் தெரிவிக்கின்றது. ஸவிசேஷமாக இருக்குமானால், ஏகரூபம் என்றே சொல்லமுடியாது. அவித்யாமலமுள்ளது ஸோபாதிக ஸ்வரூபம், நிர்மலம் என்பதால் நிருபாதிகம் என்றே அறியப்படுகிறது. மாயா ஸஹிதமான ஸோபாதிகஸ்வரூபமாக இருக்குமானால், ப்ரஹ்மம், சுத்தம், பரம், நிர்மலம், ஏகரூபம் அஸ்த தோஷம் என்ற விசேஷணங்கள் பொருந்தாது. மாயையினால் தோஷம் என்று சொல்லப்படவில்லை. மாயையே முதல் தோஷம். மற்ற எல்லாமே மாயா ஜன்யமான தோஷங்கள். இவ்விதமான தோஷங்கள் அற்றது என்றே 'அஸ்ததோஷம்' என்றபதம் தெரிவிக்கின்றது. சுத்தம் என்பதால் ஸகுணமில்லை என்று ஸித்திக்கின்றது. ஆகவே நிர்விசேஷம் என்றே இந்தச்லோகமும் தெரிவிக்கின்றது.

பூர்வ:- ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றால், அதை எவ்விதம் அறியமுடியும்? அதுமட்டுமல்ல, ப்ரஹ்மம் அறியப்படும் வஸ்து என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ப்ரஹ்மத்திற்கு அஞ்ஞாதத்வம் (அறியப்படாத தன்மை) என்பதும் அஞ்ஞானத்தினால்தான் ஏற்படுகிறது. அதனால் ஜ்ஞேயத்வமும் கல்பிதம் தான். அஞ்ஞாதத்வ ப்ராந்தி இருக்கின்றதால் ஜ்ஞேயத்வமும் ஆரோபிதமாகவே சொல்லப்படுகிறது. அதாவது நான் ப்ரஹ்மமென்று அறியப்படவில்லை என்று சொல்வதே ப்ராந்தி. ஸர்வதா அஹமஹம் என்று ஸ்வப்ரகாசமாக ப்ரகாசித்துக் கொண்டிருக்கின்றபோது, என்னால் அறியப்படவில்லை என்று சொல்வதே ப்ராந்தி. ஆகவே, அந்த அஞ்ஞான நிவர்த்திக்காகவே, ப்ரஹ்மம்

அறியப்படவேண்டிய விஷயம் என்று ஜ்ஞேயத்வமும் கல்பிக்கப்படுகிறது என்றாலும், அகண்டாகார வ்ருத்தியின் அபேக்ஷையின்றி அஞ்ஞானம் நிவர்த்திக்காது என்பதால் வ்ருத்தி வ்யாப்யம் என்பதை ஒத்துக்கொள்ளப்படுகிறது. வ்ருத்தியினால் அறியப்படவேண்டும். இவ்விதம் ஜ்ஞேயத்வ கல்பனை இருந்தபோதிலும், அஞ்ஞான நிவர்த்திக்காகவே வ்ருத்தி அபேக்ஷை இருந்தாலும், ஸ்வரூப ப்ரகாசத்திற்கு எதுவும் தேவையில்லை. ஏனெனில் அஞ்ஞானம் நிவர்த்திக்குமானால் ஸ்வரூபம், ஸ்வஸ்வரூபேண ப்ரகாசிக்கின்றதால் பலவ்யாப்தி (சைதன்ய வ்யாப்தி) இல்லாததால் ஜ்ஞேயத்வம் ஸம்பவிக்கமுடியாது. அதனால் ப்ரஹ்மம் ஜ்ஞேயம் என்று சொல்வதால் ஹானி ஏதுமில்லை.

பூர்வ:- ப்ரஹ்மம் சுத்தம் என்று சொல்லப்படுவதால், சேதனவர்க்கத்திலிருந்து வ்யாவ்ருத்தி செய்யப்படுகிறது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஸர்வ சேதனவர்க்கத்திலிருந்தும் வ்யாவ்ருத்தி என்று உன்னால் எவ்விதம் சொல்லமுடியும்? நித்ய முக்தன் என்று ஒருவன் உன்னால் சொல்லப்படுகிறதே? நித்ய முக்தனும் சுத்தன் என்று தானே சொல்லவேண்டும்? ஆகையால், பத்தன், முக்தன் என்று சொல்பவர்களைக்காட்டிலும் சுத்தனான பரமாத்மா வேறு என்று சொல்லப்பட்டாலும் கூட நித்ய முக்தனும் சுத்தன் என்பதால் அவனைக்காட்டிலும் பரமாத்மா வேறு என்று சொல்லமுடியாது. அதனால் சேதனவர்க்கத்திலிருந்து வ்யாவ்ருத்தி செய்து பரமாத்மாவை சுத்தம் என்று தெரிவிக்கின்றது என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- நித்ய முக்தனும் சுத்தம்தான். ஆனால் பகவத் இச்சையினால் அவன் சுத்தனாகின்றான். ஸ்வதந்த்ரனான ஈச்வரனைப்போல் சுத்தனல்ல என்பதால் ஸகல ஜீவவ்யாவ்ருத்தி என்று சொல்லப்பட்டது.

ஸித்தா:- நித்ய முக்தனுக்கு ஈச்வர இச்சையினால் சுத்தத்வம் ஏற்படுவதாக சொல்லப் படுமானால், யத் ஜன்யம் தத் அநித்யம் என்றாகுமே? சுத்தத்வம் அநித்யம் என்றால், நித்ய சுத்தத்வம் இல்லையென்றால் நித்ய முக்தத்வமும் இருக்கமுடியாதே? ஏனெனில் நித்யத்வம், சுத்தத்வம் இரண்டுமே ஸாமானாதிகரண்ய ப்ரயோகம். ஒன்றைவிட்டு மற்றொன்று இருக்கமுடியாது. ஸ்வதந்த்ரமாக இருந்தால்தான் நித்யம். எது ஜன்யமோ அது பரதந்த்ரம் அநித்யம் என்றே சொல்லவேண்டும். அதனால் ஈச்வர இச்சையினால் சுத்தத்வம் ஏற்படுவதாகச்சொல்லப்படுமானால் சுத்தத்வம் நித்யம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- ஈச்வர இச்சை நித்யம் என்பதால் நித்ய இச்சையினால் ஏற்படும் சுத்தத்வம் நித்யமாக இருக்கலாமே?

ஸித்தா:- ஈச்வரனுடைய இச்சை நித்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஈச்வர இச்சை ஜன்யமா? அல்லது அஜன்யமா? ஜன்யம் என்று சொல்லப்படுமானால், அநித்யம் என்று சொல்லவேண்டும். அஜன்யமான இச்சையே இருக்கமுடியாது. அதனால் ஜன்யமென்றே சொல்லவேண்டும். ஜன்யம் என்றால் நித்யமாக எவ்விதம் இருக்கமுடியும்? ஜன்யம் என்றும், நித்யம் என்றும் சொல்லப்படுமோனால் பரிகஸிக்கதக்கதாக ஆகும். மேலும், ஈச்வரனுடைய இச்சை எல்லாமே நித்யம் என்று சொல்லப்படுமானால், ஸர்வ லோக ரக்ஷணம்

செய்யவேண்டுமென்ற இச்சை, துஷ்ட்டர்களை சிக்ஷணம் செய்யவேண்டுமென்ற இச்சை முதலானவைகள் இருக்கவேண்டும். துஷ்ட்டர்களும் லோகத்தை சேர்ந்தவர்கள் என்பதால், துஷ்ட்டர்களை ரக்ஷிக்கவேண்டுமென்ற இச்சையும், துஷ்ட்டர்களை சிக்ஷிக்கவேண்டும் என்ற இச்சையும், ஒரேசமயத்தில் இருப்பதாக சொல்லவேண்டும். அவ்விதம் ஒன்றுக்கொன்று விருத்தமான இச்சை ஒரே சமயத்தில் இருக்கமுடியாது. ஸர்வவிதமான இச்சைகளும் பகவானுக்கு மாறி மாறி ஏற்படுகிறது என்று சொன்னால்தான் லோக வ்யவஹாரம் நியமமாக இருக்கமுடியும். எல்லா இச்சைகளும் ஒரே காலத்தில் இருந்தால் தான் நித்யம் என்று சொல்லமுடியும். ஆதலால் பரஸ்பரம் விருத்தமான அனேக இச்சைகள் ஒரே காலத்தில் ஏற்படமுடியாது. அதனால் இச்சை அநித்யம் என்றே சொல்லவேண்டுமே அன்றி, நித்யம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- ஈச்வரனுடைய இச்சை அநித்யமாக இருக்கலாம். ஆனால் அனந்தன், கருடன் போன்ற சிலரை நித்ய முக்தனாகவே இருக்கவேண்டுமென்ற இச்சை பகவானுக்கு ஏற்பட்டதால் அந்த இச்சையின் பலனாக நித்ய முக்தர்களாக இருக்கின்றார்கள் என்று சொல்லலாமே?

ஸித்தா:- பகவானுக்கு இவ்விதம் இச்சை ஏற்படுவதற்கு முன், அனந்தன் முதலானவர்கள் முக்தர்களா இல்லையா? ஒரு ஸமயம் பத்தனாக இருந்தவர்கள்தான் என்று சொல்லப் படுமானால், அவர்களை நித்ய முக்தர்கள் என்று எப்படிச் சொல்லமுடியும்? ஆகையால் ஏற்கனவே பத்தனாக இருந்தவர்களே, ஈச்வர இச்சையினால்தான், முக்தர்களாகிறார்கள் என்று சொல்லப்படுமானால் அவனை முக்தன் என்று சொல்லலாமே அன்றி நித்ய முக்தன் என்று சொல்லமுடியாது, அதனால் முக்தன் என்றும் நித்ய முக்தன் என்றும் வேறுபடுத்தி சொல்லமுடியாது. மேலும் ஈச்வர அனுக்ரஹத்தினால் ஏற்படும் அத்வைத வாஸனையினால்தான் முக்தி கிடைக்கவேண்டும். ஈச்வரானுக்ரஹம் இல்லாமல் யாருக்கும் முக்தி ஏற்படமுடியாது என்பதால் ஈச்வர இச்சையினால் நித்ய முக்தர்களாக ஆகிறார்கள் (இருக்கிறார்கள்) என்று சொல்வது மிகவும் அபத்தம்.

பூர்வ:- நித்ய முக்தர்கள், முக்தர்கள் என்ற இரண்டிற்கும் வித்யாஸம் இருக்கின்றது. அதாவது இரண்டுபேருமே ஈச்வர இச்சையினால்தான் முக்தர்களாக ஆகிறார்கள். ஆனால் ஸாதாரண முக்தர்களுக்கு புனராவ்ருத்தி ஏற்படலாம். ஏனெனில், ஏதோ ஒரு ஸமயம் பகவானுடைய கோபத்திற்கு ஆளாகின்ற முக்தர்களை மறுபடி ஜன்மாவை அடையும்படி செய்கின்றார். அதுபோல் நித்ய முக்தர்களுக்கு புனராவ்ருத்தி கிடையாது என்றே சொல்லலாம்.

ஸித்தா:- பகவான் நித்யாப்தஸ்வரூபன். அதனால் பகவானுக்கு ப்ரியமானவன், அப்ரியமானவன் என்பதே கிடையாது. பத்தனான ஜீவர்களை எல்லாம் முக்தி அடையச் செய்ய வேண்டுமென்பதே அவருடைய வ்ரதம். முக்தனையும் மறுபடி ஜனன மரணம் முதலானவைகளுக்குரியவர்களாக செய்வார் என்றால் அவரை பகவான் என்றே சொல்ல முடியாது. மேலும் அனந்தன், கருடன் முதலானவர்கள் நித்ய முக்தர்கள் என்று சொல்வதே சரியல்ல. வினதா என்பவரின் புத்ரன் கருடன் என்றும் மறுபடி அவர் ஜனனம் பற்றி புராணத்தில் சொல்லப்படுவதால், நித்ய முக்தர்கள் என்று சொல்லப்படுவது சரியல்ல.

பூர்வ:- பகவான் நித்ய முக்தராக இருந்தாலும், தன் இச்சையினால் ராமர், க்ருஷ்ணர் முதலான அவதாரங்களை எடுத்திருக்கின்றார். அதுபோல் அனந்தன், கருடன் முதலானவர்கள் நித்ய முக்தராக இருந்தாலும் அவர்களும் அவதாரம் எடுத்ததாகச் சொல்லலாமே?

ஸித்தா:- பகவான் அவதாரம் எடுக்கலாம். ஆனால் முக்தன் மறுபடி ஜன்மாவை அடைகின்றார் என்று சொல்லமுடியாது. பகவான் அவதாரம் எடுப்பதுபோல் நித்யமுக்தர்களும் அவதரிப்பதாகச் சொல்லமுடியாது. புனர் ஜன்மம் இருக்குமானால் அவர்களை முக்தர்கள் என்று சொல்லமுடியாது. இதே விஷயம் பற்றி 'ந ச புனராவர்த்ததே' என்று ச்ருதியும், '*அனாவ்ருத்தி: சப்தாத் அனாவ்ருத்தி: சப்தாத்*' (अनावृत्तिः शब्दाद् अनावृत्तिः शब्दाद्) என்று இரண்டுமுறை ஸூத்ரகாரரான வ்யாஸரும் த்ருடமாக தெரிவிக்கின்றார். புனராவ்ருத்தி இருக்குமானால் அதை முக்தி என்றே சொல்லமுடியாது.

பூர்வ:- அவதாரம் என்பது பகவானுடைய லீலை என்று சொல்லப்படுவதால் எவ்வித தோஷங்களும் ஸம்பவிக்கமுடியாது.

ஸித்தா:- லீலையாக அவதாரம் என்று சொல்லப்படுமானால், அவதாரம் உண்மையல்ல என்றே அர்த்தம். ஈச்வரனுக்கு அநீச்வரத்வம் என்பதும் ஜீவனுக்கு பத்தத்வம் என்பதும் லீலையினாலும் ஏற்படமுடியாது, உண்மையல்ல என்றே சொல்லவேண்டும். மேலும், ஒருபக்தன், பகவானை ஒரு கேள்வி கேட்பதாக ஒரு விஷ்ணுபுராண ச்லோகம் இருக்கின்றது. அதாவது 'ஹே! ப்ரஹ்மன்! உன் ஸ்வரூபமோ சின்மாத்ரம், அவிகாரி, நிர்க்குணம் என்று சொல்லப்படுகிறதே? அதனால் லீலையினால் கூட குணமோ, க்ரியையோ, விகாரமோ ஸம்பவிக்கமுடியாதே? அஸங்கமான உன் ஸ்வரூபத்தில் லீலையாக கூட எவ்விதம் குணாதி முதலான ஸம்பந்தம் ஏற்படமுடியும்?' என்று கேட்பதாக இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

ப்ரஹ்மன் கதம் பகவத: சின்மாத்ரஸ்ய அவிகாரிண:
லீலயா வாபி யுஜ்யேரன் நிர்குணஸ்ய குணா: க்ரியா:,
க்ரீடாயாமுத்யமோர்பகஸ்ய காமச்சிக்ரீடிஷான்யத:
ஸ்வதஸ்த்ருப்தஸ்ய ச கதம் நிவ்ருத்தஸ்ய ஸதான்யத:

ब्रह्मन् कथं भगवतश्चिन्मात्रस्याविकारिणः ।
लीलया वापि युज्येरन्निर्गुणस्य गुणाः क्रियाः ॥
क्रीडायामुद्यमोर्भकस्य कामश्चिक्रीडिषाऽन्यतः ।
स्वतस्तृप्तस्य च कथं निवृत्तस्य सदाऽन्यतः

க்ரீடை என்பது குழந்தைகளுக்கே உண்டு. விளையாட்டில் இச்சை என்பதே பாலர்களுக்குத்தான் ஏற்படும். தன்னை அன்றி வேறான வஸ்துவைக்கொண்டே விளையாட முடியும். ஆகவே பகவானுக்கு க்ரீடை என்றால், அந்த லீலையில் பகவானுக்கு இச்சை ஏற்படவேண்டும். தன்னை அன்றி வேறான வஸ்துக்களைக்கொண்டே விளையாடவேண்டும். ஆனால் ஹே!

பகவன்! நீரோ ஸ்வயமே நித்யத்ருப்தன், ஆப்தகாமன் என்றெல்லாம் ச்ருதி தெரிவிக்கின்றது. விளையாட்டினால் ஆனந்தம் என்றால், அதற்கு முன் உனக்கு ஆனந்தம் இல்லையென்று சொல்ல நேரிடும். ஆப்தகாமன் என்றால் இச்சையே, ஏற்படமுடியாதே? ஆகையால் நித்ய த்ருப்தன், நிஷ்காமன் என்ற உன் ஸ்வரூபம் லீலையாகக் கூட இவ்வித வ்யவஹாரங்களில் ஈடுபடமுடியாது. அதனால் லீலை என்று சொல்வதற்காக தோஷமில்லை என்று சொல்வதற்கு முடியாது. இதையே கௌடபாத காரிகையில்,

போகார்த்தம் ச்ருஷ்டிரித்யன்யே, க்ரீடார்த்தமிதி சாபரே
தேவஸ்யைஷ ஸ்வபாவோயமாப்தகாமஸ்ய கா ஸ்ப்ருஹா

भोगार्थं सृष्टिरित्यन्ये क्रीडार्थमिति चापरे ।
देवस्यैष स्वभावोऽयमाप्तकामस्य का स्पृहा ॥

பகவான், லோக போகங்களை அனுபவிப்பதற்காக ஜகத்தை ச்ருஷ்டித்தார் என்று ஒரு சிலரும், க்ரீடார்த்தம் ச்ருஷ்டித்தார் என்று வேறு சிலராலும் சொல்லப்படுகிறது. ஆப்தகாமனான பகவானுக்கு இவ்வித இச்சை எவ்விதம் ஏற்படமுடியும் என்று தெரிவிக்கின்றார்.

பூர்வ:- உங்கள் ஸித்தாந்தத்திலும் ஈச்வரன் இருக்கின்றார், அவரே ச்ருஷ்டிகர்த்தா என்றெல்லாம் சொல்லப்படுகிறதே? பகவத் அவதாரங்கள் இருப்பதாகத்தானே சொல்லப்படுகிறது?

ஸித்தா:- ஈச்வரனிடம் எந்த விதமான விகாரங்களும் ஏற்படாது. மாயை என்ற உபாதியினால் ச்ருஷ்டி முதலானவை ஏற்படலாம் என்று சொல்லப்படுவதால், உண்மையில் ஈச்வரனிடம் எவ்விதவிகாரமும் ஏற்படமுடியாது. நித்ய சுத்த புத்த முக்த ஸ்வபாவமாக இருக்கின்ற பரமாத்மா, மாயையினால் ராமர், க்ருஷ்ணர் என்ற அவதாரம் எடுத்தார் என்று தோன்றுகிறது. அதேபோல் அனேக ஜீவர்கள் இருப்பதாக தோன்றுகிறது. அது மட்டுமல்ல, ஜீவர்கள் எல்லோருமே ஸுகதுக்க ஸம்ஸாரத்தை அனுபவிப்பது போலவும், ராமர், க்ருஷ்ணர் போன்ற அவதார புருஷர்களும் ஸுகதுக்கமென்ற ஸம்ஸாரத்தை அடைவது போலவும் தோன்றுகிறதே அன்றி, உண்மையில் ஈச்வரனுக்கு ஜன்மாதிகளும் கிடையாது. இதனால் ஜீவேச்வரபேதம் என்பதும் பரமார்த்தமாக கிடையாது.

வஸ்து அபரிச்சேதம் (वस्तु अपरिच्छेदम्) என்பதற்கு சுதர்சனர் சொல்லும் அர்த்தத்திற்கு கண்டனம் :-

பூர்வ:- பரமாத்மா, மூன்று விதமான பரிச்சேதங்களும் அற்றவர் என்றும் சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல, ந த்வத்ஸமோஸ்த்யப்யதிக: (न त्वत्समोऽस्त्यभ्यधिकः) என்று அவருக்கு ஸமானமாகவோ அல்லது அதிகமாகவோ (மேலாகவோ) எந்த ஒரு வஸ்துவும் கிடையாது என்றும் சொல்லப்படுகிறது. இதனால் பரமாத்மாவிற்கு வஸ்து அபரிச்சேதம் சொல்லப்படுகிறது. இவ்விதம் சொல்வது சரியல்ல என்று ஸுதர்சனர் தெரிவிக்கின்றார். அதாவது நித்யத்வம், விபுத்வம், என்ற குணங்களைத்தவிர மற்ற தன்மைகளில்

பரமாத்மாவிற்கு அதிகமாகவோ ஸமானமாகவோ எந்த வஸ்துவும் இல்லை என்றே அபரிச்சேதம் என்பதற்கு அர்த்தம்.

ஸித்தா:- அபரிச்சேதம் என்பதற்கு இவ்விதம் அர்த்தம் செய்வது சரியல்ல. ஏனெனில் நித்யத்வ, விபுத்வ குணங்களைத்தவிர மற்ற தன்மைகளில், பரமாத்மாவின் தன்மைக்கு குறைவான தன்மையுடைய நித்யத்வ, விபுத்வ வஸ்துக்கள் இருப்பதாக அர்த்தம் கிடைக்கின்றது. இவ்விதம் ஒரு வஸ்துஇருப்பதாகச்சொல்லப்பட்டாலும் வஸ்து பரிச்சேதம் இருப்பதாகவே சொல்லவேண்டும். பரமாத்மாவை அன்றி எந்த ஒரு வஸ்துவும் இல்லையென்று சொன்னால்தான் வஸ்து அபரிச்சேதம் ஈச்வரனுக்கு சொல்லமுடியும்.

மேலும் உன் ஸித்தாந்தப்படி ப்ரக்ருதி, புருஷன் ஈச்வரன் என்ற மூன்றும் நித்யம் என்றும், இதில் காலம், ப்ரக்ருதி முதலான சில பதார்த்தங்கள் நித்யமாகவும், விபுவாகவும், இருக்கின்றதென்றும், இவைகளும் பரமாத்மாவிற்கு ஸமானமான (துல்யமான) தன்மையில் இருப்பதாகவும், இதைத்தவிர மற்ற தன்மைகளில் பரமாத்மாவிற்கு துல்யமாகவோ, அதிகமாகவோ எந்த வஸ்துவும் இல்லை என்றும் சொல்வது உன்னுடைய கபோல கல்பிதமே அன்றி உண்மையல்ல. உன்னால் சொல்லப்படும் விஷயங்களுக்கு ப்ரமாணம் ஏதுமில்லை. பரமாத்மாவை அன்றி வேறு எந்த ஒரு வஸ்து இருப்பதாகச்சொல்லப்பட்டாலும் வஸ்து பரிச்சேதம் இருப்பதாகவே சொல்லவேண்டுமே அன்றி, பரமாத்மா வஸ்து பரிச்சேதம் அற்றவர் என்று சொல்லமுடியாது. அது மட்டுமல்ல பரமாத்மாவை அன்றி வேறாக நித்யமாகவோ விபுவாகவோ வஸ்துக்கள் இருப்பதாகச்சொல்வதே பொருந்தாது

பூர்வ:- ஆகாசம் நித்யமாகவும், விபுவாகவும் இருக்கின்றதே?

ஸித்தா:- ஆகாசம் வ்யாபகமாக இருக்கலாம். ஆனால் ஆகாசம் அநித்யம்.

பூர்வ:- ஜீவன், நித்யமாகவும், விபுவாகவும் இருக்கின்றானே?

ஸித்தா:- உன் ஸித்தாந்தத்தில் ஜீவன் அணு என்று சொல்லப்படுவதால் வ்யாபகம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- காலம் நித்யம் என்றும் மஹாகாலம் ஈச்வரன் என்றும் சொல்லப்படுகிறதே? அதாவது மஹாகாலம் ஈச்வர ஸ்வரூபம் என்றும், கண்டகாலம் ஜன்யம் என்றும் சொல்லப்படுகிறது. காலம் என்பது ஒரு தத்வம், அது ஒன்றே விபு நித்யம் என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- காலம் என்பதே அநித்யம்தான். அதில் மஹாகாலம் என்றும் ஜன்யகாலம் என்றும் விபாகம் ஏதுமில்லை. மஹாகாலம் ஈச்வர ஸ்வரூபம் என்றால், அது ஈச்வரனைக்காட்டிலும் வேறு என்று சொல்லமுடியாது. ஜன்ய காலம் என்றால் அது அநித்யம் என்றே சொல்ல வேண்டும்.

பூர்வ:- ப்ரக்ருதி என்பது நித்யமாகவும் விபுவாகவும் இருக்கின்றதே?

ஸித்தா:- எது காரணவஸ்துவோ அதுவே விபுவாக இருக்கமுடியும். காரணவஸ்துவே ஸர்வ வ்யாபகமாக இருக்கமுடியும் என்பதால், ஸர்வத்திற்கும் காரணம் ஈச்வரன் என்று

உன்னாலேயே சொல்லப்படுவதால், ஸர்வகாரணமான ஈச்வரனைத்தான் விபு என்று சொல்லலாம். கார்யமான ப்ரக்ருதியை வ்யாபகம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- பகவான் நிமித்தகாரணம், ப்ரக்ருதியே உபாதான காரணம். அதனால் ப்ரக்ருதியும் வ்யாபகம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால் *'ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்ட்டாந்த அனுபரோதாத்'* என்ற ஸூத்ர (ப்.ஸூ 1.4.23) விரோதம் ஏற்படும். ஏனெனில் ப்ரஹ்மமே, நிமித்த காரணமாகவும், உபாதான காரணமாகவும் இருக்கின்றது என்று விசாரித்து நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, உன் ஸித்தாந்தத்தில், ப்ரஹ்மமே ஜகத்தாக பரிணாமத்தை அடைந்திருப்பதாகச் சொல்லப்படுகின்றதால் இப்போது ப்ரக்ருதியே உபாதான காரணம் என்று முன்னுக்குப்பின் முரணாகச் சொல்வது எவ்விதம் பொருந்தும்?

பூர்வ:- கேவல ப்ரக்ருதி உபாதானமில்லை என்றும், சைதன்ய அதிஷ்ட்டிதமான ப்ரக்ருதியே, ஜகத் உபாதானகாரணம் என்று உங்களால் சொல்லப்படுகிறதே? அதனால் ப்ரக்ருதியே உபாதானம் என்று சொல்வதில் என்ன தவறு?

ஸித்தா:- ஈச்வர அதிஷ்ட்டித ப்ரக்ருதியே உபாதான காரணம் என்று சொல்லப்படுவதால், ப்ரக்ருதி ஈச்வரகார்யம் என்றே சொல்லவேண்டும். அதனால் ஈச்வர கார்யமான ப்ரக்ருதி அதன் கார்யமான ஜகத்திற்கு உபாதானமாக இருக்கலாம். ஆகவே, ப்ரக்ருதிக்கும் காரணமான ஈச்வரனே வ்யாபகம் என்றும், ப்ரக்ருதி வ்யாப்யம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஸர்வ வ்யாபகன் ஈச்வரன், ஈச்வரனைத்தவிர மற்றுமுள்ள எல்லாவற்றையும் ப்ரக்ருதி வ்யாபிக்கின்றதால் ப்ரக்ருதியை வ்யாபகம் என்று சொல்லலாமே.

ஸித்தா:- ப்ரக்ருதி என்பது ஈச்வரனை அன்றி வேறான ஸர்வத்தையும் வ்யாபிக்கின்றது என்று சொல்வது சரியல்ல. ப்ரக்ருதி அதன் கார்யமான ஜட வஸ்துவை வ்யாபிக்கலாமே அன்றி, ப்ரக்ருதி கார்யமாக இல்லாத சேதனனான ஜீவனை ப்ரக்ருதி எவ்விதம் வ்யாபிக்கின்றது என்று சொல்லமுடியும்? ஈச்வரனைக்காட்டிலும் ஜீவன் வேறானவன் என்று ஜீவனையே ப்ரக்ருதி வ்யாபிக்க முடியவில்லை என்றால், ஈச்வர அதிரிக்தமான ஸர்வத்தையும் ப்ரக்ருதி வ்யாபிக்கின்றது என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- ஜீவன், ஈச்வரன் இரண்டு பேர்களைத்தவிர மற்ற எல்லாவற்றையும் ப்ரக்ருதி வ்யாபிக்கின்றது என்று சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் ப்ரக்ருதி அதற்கு தக்க விதம் அதன் கார்யத்தில் வ்யாபகம் என்று சொல்லப்படுமானால், அதேபோல் ம்ருத் எனபதும் அதன் கார்யமான கடம் ஸராவம் போன்ற எல்லாவற்றிலும் வ்யாபிக்கின்றதால் ம்ருத் என்பதும் வ்யாபகம் (விபு) என்று சொல்லலாமே? ஏனெனில் ப்ரக்ருதி எவ்விதம் சில பதார்த்தங்களில் வ்யாபிக்கின்றது என்பதற்காக ப்ரக்ருதி விபு என்று சொல்லப்படுமானால், ம்ருத் என்பதும் அதன் கார்யமான சில பதார்த்தங்களில் வ்யாபிக்கின்றதால், ம்ருத் என்பதும் விபு என்று சொல்லலாம். ஆகவே, ஸர்வத்திலும் வ்யாபித்திருக்கின்ற ஈச்வரனே ஜீவ அபின்னமாக இருக்கின்றதால் அந்த ஈச்வரனே விபு

என்றும், அவரே நித்யம் என்றும் சொல்லவேண்டும். அதனால் நித்யத்வம், விபுத்வம் என்ற தன்மைகள் எல்லாம் ஈச்வரனை அன்றி வேறு எந்த வஸ்துவிற்கும் இருக்கமுடியாது என்றே ஸித்திக்கின்றது. அதனால் நித்யத்வ, விபுத்வ குணமுடைய ஸமான வஸ்துக்கள் இருக்கின்றதென்றும், அதைத்தவிர மற்ற தன்மைகளில் விசேஷ குணங்கள் உள்ள ஸமமான வஸ்துவோ மேற்பட்ட வஸ்துவோ கிடையாது என்பதால் வஸ்து பரிச்சேதம் அற்றது என்றும் அதுவே அபரிச்சேத்யம் என்று அர்த்தம் செய்வது முற்றிலும் பொருத்தமற்றது.

பூர்வ:- அப்படியானால், அபரிச்சேத்யம் என்பதற்கு வேறொரு முறையில் அர்த்தம் சொல்லலாம். எப்படியெனில் கடம், படமல்ல என்று சொன்னால்தான் வஸ்து பரிச்சேதம் இருக்கிறது என்றாகும். ஆனால் இதம் இதம் பவதி என்று இது-இது வாக இருக்கிறது என்றால் அதுவே அபரிச்சேத்யம் என்று சொல்லலாம். அதாவது ஈச்வரன் இவை எல்லாமாக இருக்கின்றார் என்பதே வஸ்து அபரிச்சேத்யம் என்று சொல்லலாம்.

ஸித்தா:- இதம் இதம் பவதி என்று ஈச்வரனே எல்லாமாக இருக்கிறார் என்று சொன்னால் வஸ்து அபரிச்சேத்யம் (வஸ்துபரிச்சேதம் இல்லை) என்று சொல்லலாம். ஆனால் உன் ஸித்தாந்தத்தில் அவ்விதம் சொல்லமுடியாது. ஏனெனில் ஈச்வரனுக்கு வேறாக ப்ரக்ருதியும், புருஷனும் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே? ப்ரக்ருதியே ஈச்வரன், ஈச்வரனே ப்ரக்ருதி என்றோ ஈச்வரன் தான் ஜீவன், ஜீவனே ஈச்வரன் என்றோ சொல்லமுடியாததால் இதம் இதம் பவதி என்பதே அபரிச்சேதம் என்று அர்த்தம் செய்வது உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படுகிறதே அன்றி லாபம் ஏதுமில்லை.

பூர்வ:- ப்ரக்ருதியும், புருஷனும் இரண்டுமே ஈச்வரனுக்கு சரீரம் என்று சொல்லப்படுவதால், ப்ரக்ருதி புருஷன் இரண்டுமே ஈச்வரன் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஈச்வர சரீரமே ஈச்வரன் என்று சொல்லப்படுமானால், ஜீவ சரீரமான மனுஷ்ய சரீரத்தையும் ஜீவன் என்று சொல்லலாமே?

பூர்வ:- ஸ்வநிஷ்ட்ட வஸ்த்வந்தரபாவம் என்பதே அபரிச்சேத்யம் என்று சொல்லலாம். அதாவது தன்னைக்காட்டிலும் வேறான வஸ்துக்கள் தன்னிடம் இருக்குமானால் அதுவே அபரிச்சேதம் என்று சொல்லவேண்டும். அதனால் வஸ்து ஒன்றுதான். அதுவே ஈச்வரன் என்றும் அதைத்தவிர வேறு வஸ்துக்களே இல்லை என்று சொல்லவேண்டிய அவச்யம் ஏதுமில்லை.

ஸித்தா:- ஒரு வஸ்துவில், மற்றொரு வஸ்து இருக்குமானால், அது வஸ்து பரிச்சேதம் உள்ளது என்றே சொல்லவேண்டும். நேர்விபரீதமாக அர்த்தம் செய்வது சரியல்ல. உதாரணமாக, க்ருஹத்தில் கடம் இருக்கின்றது என்றால், க்ருஹம் வேறு, கடம் வேறு என்றே சொல்லவேண்டும். அதனால், க்ருஹம் ஒன்று, கடம் ஒன்று என்று வஸ்து பரிச்சேதம் இருக்கின்றபோது வஸ்து அபரிச்சேதம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஆகவே உங்கள் விளக்கப்படி ப்ரஹ்மத்திற்கு வஸ்து அபரிச்சேதம் சொல்லவேண்டுமானால் ஜகத் பரமாத்மாவினிடம் இருப்பதாகச்சொல்லவேண்டும். ஏனெனில் ஸ்வநிஷ்ட்ட வஸ்த்வந்த்ர பாவம் அபரிச்சேத்யம் என்று உன்னால் சொல்லப்படுகிறது. இவ்விதம் தள்ளத்தக்கதான

(ஹேயமான) பல வஸ்துக்கள் பரமாத்மாவினிடம் இருப்பதாகச் சொல்லப்படுமானால் ப்ரஹ்மம் சுத்தம் என்று தெரிவிக்கின்ற ச்ருதிவாக்யம் பொருந்தாது. ஆகையால் ப்ரஹ்மத்தை அன்றி வேறாக எந்த வஸ்துவும் கிடையாது என்று சொன்னால்தான் வஸ்து பரிச்சேதமில்லாத ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று சொல்லப்படுவது சரி என்றாகும். அதுவே பொருந்தும்.

அதனால்தான் நிர்விசேஷமான ப்ரஹ்மத்தில் மாயையினால் ஸர்வவிசேஷங்களும் கல்பிக்கப்படுகிறது. கல்பிதங்களுக்கெல்லாம் அதிஷ்ட்டான ஸத்வமே ஸத்வம் என்பதால் உண்மையில் அவைகள் (பரமார்த்த) வஸ்து என்றே சொல்லமுடியாது. அதனால் ப்ரஹ்மம் ஒன்றே வஸ்து என்பதால் வஸ்து அபரிச்சேத்யம் என்பதே அத்வைத ஸித்தாந்தம்.

விஷ்ணுபுராணம் 1.2.10

பூர்வ:- விஷ்ணு புராணத்தில்

பர: பராணாம் பரம: பரமாத்மாத்மஸம்ஸ்தித: ।
ரூப வர்ணாதி நிர்தேச விசேஷண விவர்ஜித: ॥

परः पराणां परमः परमात्मात्मसंस्थितः ।
रूपवर्णादिनिर्देशविशेषणविवर्जितः ॥

என்கிற ச்லோகத்தில் ப்ரஹ்மம் ஸவிசேஷம் என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- ரூபவர்ணாதி நிர்த்தேச விசேஷண விவர்ஜிதம் என்று தெரிவிக்கின்றதால், நிர்விசேஷ ப்ரஹ்மத்தையே ஸ்பஷ்ட்டமாக இந்தச்லோகம் தெரிவிக்கின்றதே? புத்திசாலியான உனக்கு இதுதெரிய வேண்டுமே? இன்ன ரூபம், இன்ன வர்ணம் என்று எந்தவிதமான விசேஷணங்களும் சொல்லமுடியாது என்றல்லவா தெரிவிக்கின்றது?

பூர்வ:- ரூபவர்ணாதி விவர்ஜிதம் என்றால் ப்ராக்ருத ரூப, வர்ணங்கள் இல்லை என்று தெரிவிக்கின்றதே அன்றி அப்ராக்ருத ரூபவர்ணாதிகள் இல்லை என்று தெரிவிக்கவில்லை. அதனால் ஸவிசேஷம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ரூபவர்ணாதி நிர்த்தேச விசேஷண விவர்ஜிதம் என்றே அந்தச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அன்றி, ப்ராக்ருதம் என்றோ அப்ராக்ருதம் என்றோ விபாகம் செய்து சொல்லப்படவில்லை.

பூர்வ:- இதற்கு அடுத்த ச்லோகத்தில்

அபக்ஷயவினாசாப்யாம் பரிணாமர்த்திஜன்மபி: ।
வர்ஜித: சக்யதே வக்தும் ய: ஸதாஸ்தி இதிகேவலம். ॥

अपक्षयविनाशाभ्यां परिणामर्द्धिजन्मभिः ।
वर्जितः शक्यते वक्तुं यः सदास्ति इति केवलम् ॥

எப்போதும் எந்த வஸ்து இருக்கின்றதோ அதுவே ப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிறது. அஸ்தித்வம் என்பதே எப்போதும் இருக்கின்றது. அதனால் அஸ்தித்வம் என்ற தன்மை ப்ரஹ்மத்தில் இருப்பதாகத்தானே சொல்லவேண்டும்? அதனால் ப்ரஹ்மம் ஸவிசேஷம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- '*அஸ்தி இத்யேவ உபலப்தவ்ய:*' (अस्तीत्येवोपलब्धव्यः) என்று உபநிஷத்தில் ஓரிடத்தில் சொல்லப்படுகிறது. இதன் தாத்பர்யம் என்னவென்றால் ப்ரஹ்மத்தில் 'ஸத்' என்ற அஸ்தித்வம் (ஸத்தை) என்ற தன்மையைத்தவிர வேறு எந்தவிதமான விசேஷமும் (தர்மமும்) இல்லை என்பதையே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது. அதன் பிறகு, '*நஸத்தன்னாஸதுச்யதே*' என்ற கீதாவசனமும் ப்ரஹ்மம் ஸன்மாத்ரம் என்று தெரிவிக்கின்றதால், ஸத்தை என்று ஒரு தர்மம் இருப்பதாகச்சொல்லப்படவில்லை. அதுமட்டுமல்ல ப்ரஹ்மம் ஸத் என்றும் சொல்லமுடியாது என்று தெரிவிக்கின்றது. இதற்கு முன், ஓரிடத்தில் ப்ரஹ்மம் ஞானமென்றும் சொல்லமுடியாது என்று எவ்விதம் சொல்லப்பட்டதோ அதேபோல் இந்த இடத்தில் ப்ரஹ்மம் ஸத் என்றும் சொல்லமுடியாது என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- ப்ரஹ்மம் ஸத் என்றும் சொல்லமுடியாது என்றால், அஸத் என்றுதானே சொல்ல நேரிடும்? 'ப்ரஹ்மம் அஸத்' என்று சொல்வானாகில் அவனே அஸத்தாக ஆகிறான் என்று, '*அஸத் ப்ரஹ்மேதி வேத சேத் அஸன்னேவ ஸ பவேத்*' (असद्ब्रह्मेति वेदचेदसन्नेव स भवेत्) என்ற வாக்யம் தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- எவன், ப்ரஹ்மம் ஸத் என்றோ, அஸத் என்றோ சொல்லமுடியாது என்று அறிகின்றானோ, அவனே ப்ரஹ்மத்தை அறிந்தவன். அவனே ஞானி. என்று இதையே பகவான் '*ந ஸத்தன்னாஸதுச்யதே*' என்று தெரிவிக்கின்றார்

பூர்வ:- '*அஸ்தி ப்ரஹ்மேதி வேத சேத்। ஸந்தமேனம் ததோ விதுரிதி*' (अस्ति ब्रह्मेति चेद्वेद। सन्तमेनं ततो विदुरिति।) என்று ப்ரஹ்மம் ஸத் என்று அறிபவனே வித்வான் என்று சொல்லப்படுவதால், ப்ரஹ்மம் ஸத் என்றும் அறியப்படவில்லை என்றால் அவன் ஸத்தாக எப்படி இருக்கமுடியும்?

ஸித்தா:- இந்தவாக்யம் ப்ரஹ்ம ஸ்வரூபம் இன்னதென்று அறியவேண்டுமென்று தெரிவிப்பதற்காக சொல்லப்பட்டவாக்யம். ப்ரஹ்மத்தை அறிந்தவன் (ப்ரஹ்மவித்) ப்ரஹ்மமாகவே ஆகின்றான். அதனால் அவன் ப்ரஹ்மம் ஸத் என்றோ அஸத் என்றோ சொல்லவேண்டிய அவச்யமில்லை என்பதையே '*நஸத்தன்னாஸதுச்யதே*' (न सत्तन्नासदुच्यते) என்று சொல்லப்படுகிறது.

பூர்வ:- ஈச்வரனுக்கு ரூபவர்ணாதி விசேஷங்கள் இல்லை என்று ரூபவர்ணாதி விசேஷணவிவர்ஜிதம் என்று சொல்வது சரியல்ல. ஈச்வரனுக்கு கர்மக்ருதமான ரூபாதிகள் இல்லை என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதனால் ஈச்வரனுக்கு அகர்மக்ருதமான ரூபாதிகளில்லை என்று நிஷேதம் செய்யப்படவில்லை. ஈச்வரனுக்கு கர்ம க்ருதமான ரூபாதிகள் இருக்கின்றது என்றால் ஈச்வரன் அநித்யம் என்ற தோஷம் ஏற்படும். அதனால்,

ஈச்வரனிடம் கர்மக்ருதமான ரூபாதிகளையே நிஷேதம் செய்கின்றது. அவைகள் ப்ரஹ்மத்தில் இருக்கவேண்டாம். ஆனால் அகர்ம க்ருதமான அப்ராக்ருதமான ரூபாதிகள் இருப்பதாகச் சொல்லலாமே?

ஸித்தா:- ரூபவர்ணாதிகள் என்றாலே கர்மக்ருதம் தான் என்பதால் ப்ராக்ருதம் என்றே முன்பே சொல்லப்பட்டது. அப்ராக்ருதம் என்று சொல்வதற்கு ப்ரமாணமே கிடையாது. மேலும் ஈச்வரனுக்கு கர்மக்ருதமான ரூபாதிகள் இருப்பதாக சொல்லலாம். அதற்காக ஈச்வரனுக்கு அநித்யத்வம் என்றதோஷம் ஸம்பவிக்காது. ஏனெனில் ஜீவனுடைய ரூபாதிகள் கர்மக்ருதம்தான் என்றாலும் ஜீவன் நித்யம் என்பதால் கர்மக்ருதமான ரூபாதிகளை உடைய வஸ்து எல்லாம் அநித்யமாகத்தான் இருக்கவேண்டுமென்ற வ்யாப்தி (நியமம்) சொல்ல முடியாது. ஆகையால் கர்மக்ருதமான ரூபாதிகள் ஈச்வரனுக்கு இருக்குமானால் அநித்யத்வம்தான் ஸம்பவிக்கும் என்ற நியமம் இல்லை. ஆகவே இந்த ச்லோகத்தில் கர்மக்ருதம் அகர்மக்ருதமென்றோ, ப்ராக்ருதம், அப்ராக்ருதம் என்றோ எந்தவிதமான விபாகமும் செய்யாமல், பொதுவாக ரூபவர்ணாதி நிர்தேச விசேஷண விவர்ஜிதம் என்று தெரிவிக்கின்றது. அதனால் நிர்விசேஷமென்றே தெரிவிக்கின்றது (கர்மக்ருதமான ரூபவர்ணாதிகள் இருப்பதற்காக ஜீவனுக்கோ ஈச்வரனுக்கோ அநித்யத்வம் ஸம்பவிக்க முடியாது என்று சொல்லப்பட்டதால் அநித்யத்வம் என்ற வ்யாப்தி பங்கம் ஏற்படுகின்றது.)

பூர்வ:- அப்படியானால் ஜீவன் அநித்யம் என்றே சொல்லலாமே?

ஸித்தா:- கர்மாக்கள் எல்லாம் ப்ரவாஹ அனாதி என்று சொல்லப்படுகிறது. அதாவது எப்போது கர்மா ஆரம்பிக்கப்பட்டது அதன் தன்மை என்ன என்று யாராலும் சொல்லமுடியாது. கங்கா நதியின் ப்ரவாஹம் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்தபோதிலும் மேன்மேலும் உற்பத்தி ஆகிக்கொண்டே இருப்பதுபோல் கர்மாவின் கதியை யாராலும் சொல்லமுடியாது. ஆகவே இவ்விதம் ப்ரவாஹ அனாதியாக இருக்கின்ற கர்மாவிற்கு ஆச்ரயமாக ஜீவன் இருப்பதாகவே சொல்லவேண்டும். அதனால் ஜீவன் அநித்யன் என்று சொல்லமுடியாது. ஆகையால்,

'ந ஜாயதே ம்ரியதே வா கதாசித் நாயம் பூத்வா பவிதா வா ந பூய:
அஜோ நித்ய: சாச்வதோயம் புராண: ந ஹன்யதே ஹன்யமானே சரீரே'

न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥

என்று பகவானே தெரிவிக்கின்றார். இந்த வாக்யம் ஜீவன், அஜம், நித்யம், சாச்வதம் என்றே தெரிவிக்கின்றது. அதுமட்டுமல்ல, ஜீவன் அநித்யன் என்று சொல்லப்படுமானால், ஒருவனைப்போல் மற்றொருவனின் வாழ்க்கை இல்லாமல், ஸுகம் துக்கம் போன்ற அனுபவங்களில் வித்யாஸம் இருப்பதற்கு என்ன காரணம் சொல்லமுடியும்?

அவரவர் பிறக்கின்றபோதே ஒருவன் ஸ்ரீமானாகவும், ஒருவன் தரித்ரனாகவும் ஒருவன் ஆரோக்யமாகவும் ஒருவன் ரோகாதிகளை உடையவனாகவும் இருப்பதற்கெல்லாம் என்ன காரணம் சொல்லமுடியும். ஆகையால் அவரவர் முன்பிறவிகளில் செய்த புண்ய, பாப கர்மாக்களினால்தான், அவரவர்க்கு சுகம் துக்கம் போன்ற அனுபவங்கள் ஏற்படுகிறது என்றே சொல்லவேண்டுமே அன்றி வேறு எதுவும் காரணமாகச் சொல்லமுடியாது. ஆகவே, ஜீவனுக்கு கர்மக்ருதமான ரூபங்கள் இருந்தாலும் அநித்யத்வம் சொல்லமுடியாது.

பூர்வ:- ஜீவனுடைய கர்மக்ருதமான சரீரம் அநித்யம் என்பதால் ஜீவனையும் அநித்யம் என்றே சொல்லலாமே?

ஸித்தா:- ஈச்வர அவதாரம் என்று சொல்லப்படும் ராமர் க்ருஷ்ணர் முதலானவர்களும் சரீரத்துடன் இருந்ததால் அந்த சரீரம் அநித்யம் என்பதால் ஈசுவரனான அவர்களும் அநித்யம் என்று சொல்லநேரிடும். ஆகையால் எந்த விதமாகவும் ஜீவன் அநித்யம் என்று சொல்ல முடியாததால் சரீரம் அநித்யம் என்றாலும் ஆத்மா நித்யம் என்றே ஸித்திக்கின்றது.

விஷ்ணுபுராணம் 6.4.39

ப்ரக்ருதிர்யா மயாக்யாதா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ
புருஷச்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மனி

प्रकृतिर्या मयाख्याता व्यक्ताव्यक्तस्वरूपिणी ।
पुरुषश्चाप्युभावेतौ लीयेते परमात्मनि ॥

என்கிற ச்லோக விசார:

பூர்வ:- ப்ரக்ருதி என்று என்னால் சொல்லப்படுவது எதுவோ, அது வ்யக்தாவ்யக்தஸ்வரூபம் என்றே சொல்லவேண்டும். அதாவது ச்ருஷ்டிக்கு முன் அவ்யக்தமாகவும் ச்ருஷ்டியினால் வ்யக்தமாகவும் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். இந்த ப்ரக்ருதியும், புருஷனும் பரமாத்ம ஸ்வரூபத்தில் லயத்தை அடைவதாகவே சொல்லவேண்டும். இந்த கருத்தையே, '*ப்ரக்ருதிர்யா மயாக்யாதா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ, புருஷச்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மனி*' என்ற வசனம் தெரிவிக்கின்றது. அதனால், ப்ரக்ருதி, புருஷன் என்ற இரண்டு தத்வம் இருக்கின்றதென்றே சொல்லப்படுகிறது. இவ்விதம் இரண்டும் பரமாத்மாவில் லயமடைவதாகச்சொல்லப்படுமானால், ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று எவ்விதம் சொல்ல முடியும்?

ஸித்தா:- உன்னுடைய ஸித்தாந்தத்தில் ப்ரக்ருதி புருஷன் இரண்டும் நித்யம் என்று சொல்வதால் பரமாத்மாவினிடம் லயம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? இந்த வசனமும் உன் பக்ஷத்திற்கு தூக்கு கயிறாகத்தான் இருக்கின்றதேயன்றி ஸாதகம் இல்லை. அதுமட்டுமல்ல. எந்த வஸ்து எதில் லயமடைவதாகச்சொல்லப்படுகிறதோ அந்த வஸ்து அதற்கு காரணம் என்றால்தான் காரணத்தில் கார்யம் லயமடைவதாகச்சொல்லலாம். ஆனால் ப்ரக்ருதியும் புருஷனும் அஜம், நித்யம் என்றால், அவை இரண்டும் கார்யம் என்று சொல்லமுடியாததால்

பரமாத்மாவில் லயம் என்று சொல்வதற்கும் முடியாது. எங்கள் ஸித்தாந்தத்தில், ப்ரக்ருதி அநித்யம் என்றும் பரமாத்ம ஸ்வரூபத்தில் ஆரோபிதம் என்பதால், பரமாத்மாவில் லயம் ஏற்படலாம். (*பூய: சாந்தே விச்வமாயா நிவ்ருத்தி:*) புருஷனுக்கு லயம் சொல்வதற்கு காரணம் என்னவென்றால், பரமாத்மாவே புருஷன் என்றும் பரமாத்மாவையன்றி வேறானவன் அல்ல என்று ஜீவபரமாத்ம அபேதம் சொல்லப்படுகிறது. உபாதி பேதத்தினால் பேதம் தோன்றுகிறது என்று சொல்லப்படுவதால் உபாதி அற்ற நிலையில் பரமாத்ம அபேதம் என்றே சொல்லப்படுகிறது. லயம் என்றால் நாசம் என்று அர்த்தம் இல்லை. புருஷன் நித்யம் என்றே ஸித்திக்கின்றது. அஞ்ஞானத்தினால் ஒரே சைதன்ய ஸ்வரூபமே ஜீவன் என்றும் ஈச்வரன் என்றும் விபாகம் ஏற்படுகிறது. ஞானத்தினால் அஞ்ஞான நாசம் ஏற்படுமானால் ஜீவனே பரமாத்மா என்றுதான் சொல்லப்படுகிறதே அன்றி ஜீவனென்று ஒருவன் வேறாக இருந்து பரமாத்மாவினிடம் லயத்தை அடைவதாகச்சொல்லப்படவில்லை. மேலும், *ப்ரக்ருதிர்யா மயாக்யாதா வ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணி, புருஷச்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மனி* என்ற ச்லோகம் முக்தி பரமான ச்லோகம் அல்ல. மஹாப்ரளயத்தைப்பற்றி தெரிவிக்கின்றது என்று சொல்லப்பட்டாலும் கூட இப்போது தெரிவிக்கப்பட்ட தாத்பர்யார்த்தத்திற்கு எந்தவித ஹானியும் கிடையாது. ஏனெனில் கார்யங்கள், காரணரூபத்தில் இருக்கின்றபோதுதான் ப்ரளயம் என்று சொல்லப்படுகிறது. புருஷனுடைய உபாதி ரூபமான அந்த:கரணம், ஸ்தூலரூபத்தைவிட்டு அதன் காரணமான ப்ரக்ருதியில் லயத்தை அடைகின்றது. இந்தவிதம் ப்ரக்ருதியும், புருஷ உபாதியான அந்த:கரணமும் லயத்தை அடைகிறது என்பதையே இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. இவ்விதமின்றி வேறு எந்த விதமாகவும் புருஷனுக்கு லயம் சொல்லமுடியாது.

பரமாத்மாவினிடம் லயம் என்று தெரிவிக்கின்றபோது, த்ரிமூர்த்திகளான ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் என்பவர்களை குறிப்பிடவில்லை, மும்மூர்த்திகளின் ஸ்வரூபத்திற்கும் காரணமான பரமாத்மாவையே தெரிவிக்கின்றது. ஏனெனில் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்பவர்கள் எல்லாம் கார்யோபாதி ஜீவர்கள். அவரவர்களுக்கும் அஸாதாரணமான சரீரங்கள் இருக்கின்றன. அதனால் மாயாசபலப்ரஹ்மமே அவ்யாக்ருதம் என்ற பரமாத்ம சப்தத்தினால் சொல்லப்படுகிறது. ஆகவே, காரணமான மாயோபாதிக தத்வத்தையே ஈச்வரன் என்றும் பரமாத்மா என்றும் சொல்லப்படுகிறது.

பூர்வ:- பரமாத்ம சப்தத்தினால் விஷ்ணுவே சொல்லப்படுகிறார். இதற்கு அடுத்த ஸ்லோகத்தில்

''பரமாத்மா ச ஸர்வேஷாமாதார: பரமேச்வர:
விஷ்ணுநாம ஸ தேவேஷு வேதாந்தேஷு ச கீயதே''

परमात्मा च सर्वेषामाधारः परमेश्वरः ।
विष्णुनाम स देवेषु वेदान्तेषु च गीयते ॥

என்று பரமாத்மாவிற்கு விஷ்ணு என்று பெயர் சொல்லப்படுகிறதே.

ஸித்தா:- பரமாத்ம சப்தத்தினால்மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவை குறிப்பிடுவதாகச் சொல்வது சரியல்ல. கார்யோபாதி ஜீவன், காரணோபாதி ஈச்வரன் என்று ச்ருதிவாக்யமும் தெரிவிக்கின்றது. ஆகவே, கார்ய உபாதி என்ற சரீரத்தைக்கொண்டவர் ஈச்வரனல்ல. அதற்கும் காரணமான மாயையை உபாதியாக கொண்டவரே ஈச்வரன். இந்த ஈச்வரனை ப்ரஹ்ம சப்தத்தினால் (நாமாவினால்) சொல்லப்படுகிறது. ஏனெனில் ப்ரஹத் சப்தம் வ்யாபகம் என்று தெரிவிக்கின்றது. ஸூக்ஷ்மரூபமான மாயை ஸ்தூல ரூபமாக ஆவதற்கு சைதன்யமே காரணம் என்பதால், ஆத்ம சைதன்யமே ஸர்வவளர்ச்சிக்கும் காரணமாக இருக்கின்றது என்ற காரணத்தினால் ஈச்வரனையே ப்ரஹ்மம் என்று சில இடங்களில் சொல்லப்படுகிறது. ஆனந்த ரூபமாக இருக்கின்றதால் சிவன் என்றும், வ்யாபகமாக இருப்பதால் விஷ்ணுவென்றும் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மணத்வாத் ப்ரஹ்ம என்று ஜகத் ச்ருஷ்டிக்கு காரணமாக இருக்கின்றதால் ப்ரஹ்ம என்றும் ஒரே பரமேச்வரன் தான் குறிக்கப்படுகிறது. ஸர்வத்திற்கும் ஈசிதா என்பதால் இந்திரன் என்ற பரோக்ஷ நாமாவினால் பரமேச்வரனே சொல்லப்படுகிறார். ஆகையால் காரணோபாதிகமான ஈச்வரனையே, ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற நாமாவினால் சொல்லப்படுவதாகச்சொல்லலாமே அன்றி கார்யோபாதிகமான மும்மூர்த்திகளை காரணம் என்று சொல்வது சரியல்ல. ஆகவே, இந்தச்லோகத்தில் விஷ்ணு என்ற நாம பதமும் காரணமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே தெரிவிக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

86

'सत्यं ज्ञानमनन्तं ब्रह्म' इति श्रुतौ अनन्तपदस्य अर्थविचारः।

'ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம' என்ற வாக்யத்தில் உள்ள அனந்தபத அர்த்த விசார:

ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம, யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் ... என்ற தைத்ரீய உபநிஷத் ஆனந்தவல்லியில் உள்ள வாக்யத்தில் காணப்படும் 'ப்ரஹ்ம' என்ற பதம் விசேஷ்யம் என்றும், 'ஸத்யம் ஞானம் அனந்தம்' என்ற பதங்கள் விசேஷணம் என்பது ஸித்தாந்தம். இது சரியல்ல என்று ஆக்ஷேபம் செய்யப்படுகிறது.

பூர்வ:- *'ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம, யோ வேத நிஹிதம் குஹாயாம்'* என்ற வாக்யத்தில் காணப்படும், 'அனந்த' பதம் புல்லிங்க சப்தப்ரயோகம். த்வீதீயாவிபக்தியில் சொல்லப்படுகிறது. 'யோ வேத' என்று எவன் அறிகின்றானோ என்று தெரிவிக்கின்றதால், யாரை அறிகின்றான் என்று தெரிவிக்கவேண்டும். அதனால் 'அனந்தம்' என்ற பதம், 'எவன் அனந்தனை விஷ்ணுவை, ஸத்யமாகவும், ஞானமாகவும் ப்ரஹ்மமாகவும் அறிகின்றானோ' என்றுதான் இந்த வாக்யம் தெரிவிக்கின்றது. 'எவன் அறிகிறானோ' என்று 'யோ வேத' என்ற பதம் யாரை என்று தெரிவிக்கக்கூடிய த்விதீயாந்த பதத்தை அபேக்ஷிக்கின்றது என்று சொல்லப்படவேண்டும். அதனால் அனந்த பதம் புல்லிங்க சப்தம் த்விதீயாவிபக்தியில் தெரிவிக்கின்றதால் ஸோபாதிக ஸ்வரூபமான விஷ்ணுஸ்வரூபத்தையே அனந்த பதம் தெரிவிக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- இது சரியல்ல. ப்ரஹ்மபதம்தான் விசேஷ்யபதம். அதைத்தவிர மற்ற பதங்கள் எல்லாம் விசேஷணம் என்றே சொல்லவேண்டும். நித்ய நபும்ஸகலிங்கம் ப்ரஹ்ம சப்தம். அதனால் விசேஷ்யமான ப்ரஹ்ம என்ற பதத்திற்கு, ஸத்யம் ஞானம் என்ற பதங்கள் எவ்விதம் விசேஷணமாகச் சொல்லப்படுகிறதோ அதுபோல் 'அனந்தம்' என்ற பதமும் விசேஷணமாகத்தான் சொல்லப்படுகிறது. விசேஷ்யம் எந்த லிங்கத்தில் சொல்லப்படுகிறதோ அதே லிங்கத்தில்தான் விசேஷண பதமும் இருக்கவேண்டும் என்பதால், அனந்த பதமும் நபும்ஸகலிங்கத்தில் ப்ரயோகம் செய்யபட்டிருக்கின்றது என்றே சொல்லவேண்டும். மேலும் ஒருவாக்யத்தில் விசேஷண விசேஷ்யவாசக பதங்கள் ப்ரயோகிக்கின்றபோது, விசேஷணவாசக பதங்கள் முன்னாலும், விசேஷ்யவாசக பதம் கடைசியிலும் ப்ரயோகம் செய்யவேண்டுமென்பது ஸாமான்ய நியமம். அதன்படி 'ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம' என்ற வாக்யத்தில் ப்ரஹ்ம பதமே கடைசியில் சொல்லப்பட்டிருப்பதால் அதுவே விசேஷ்யபதம் என்றே சொல்லவேண்டும். அதனால் அனந்தபதம் புல்லிங்கம், விஷ்ணு வாசகமானதால், த்விதீயாவிபக்தியில் சொல்லப்பட்டிருப்பதால் விஷ்ணு வாசகம் என்று ஆக்ஷேபம் செய்வது சரியல்ல.

பூர்வ:- அனந்த பதம் விசேஷ்யம் என்றும் ப்ரஹ்ம பதம் விசேஷணம் என்று ஏன் சொல்லக்கூடாது?

ஸித்தா:- அனந்த பதம் விசேஷ்யமாக இருக்குமானால், வேதமே (ச்ருதியே) 'ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்மாணம் (ப்ரஹ்மாவை) என்று தெரிவித்திருக்கவேண்டுமே அன்றி 'ப்ரஹ்ம' என்ற பதப்ரயோகம் செய்திருக்கமுடியாது. ப்ரஹ்மா என்பது புல்லிங்கம், சதுர்முக ப்ரஹ்மா என்று அர்த்தம் செய்யவேண்டும். (ப்ரஹ்மாவாக இருக்கின்ற விஷ்ணுவை என்று அர்த்தமாகும்)

பூர்வ:- சதுர்முகப்ரஹ்மாவை தெரிவிக்கவேண்டுமென்றால்தான், ப்ரஹ்மாணம் என்று தெரிவித்திருக்கும். 'ப்ரஹ்மா' என்பவர் அபர ப்ரஹ்மமே அன்றி பரப்ரஹ்மம் அல்ல. விஷ்ணுவே பரப்ரஹ்மம் என்பதால் பரப்ரஹ்மத்தைக் குறிக்கின்ற ப்ரஹ்ம சப்தம் நபும்ஸகலிங்கம்தான், அதனால் பரப்ரஹ்மமான விஷ்ணு என்றே அர்த்தம் செய்யவேண்டும். வேதா: ப்ரமாணம் என்பதில் புல்லிங்கமான வேத சப்தத்திற்கு நபும்ஸகலிங்கமான ப்ரமாணம் என்ற பதம் விசேஷணம் என்று சொல்லவேண்டும். அதேபோல் 'அனந்த' பதத்திற்கு 'ப்ரஹ்ம'பதம் விசேஷணம் என்று சொல்லப்படுவதால் பாதகம் ஏதுமில்லை.

ஸித்தா:- ப்ரஹ்ம என்ற பதத்திற்கு ப்ரஹ்மபூதம் ப்ரஹ்மமாக இருக்கின்ற என்று அர்த்தம் உன்னால் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மபூதம் என்பது ஸமஸ்தபதம். ப்ரஹ்ம பதத்திற்கு ப்ரஹ்மபூதமான அனந்தர் என்று அர்த்தம் சொல்லப்படுமானால் ப்ரஹ்மபூதம் என்கிற பதத்தில் இருக்கும் ப்ரஹ்மபதம் விசேஷ்யமா? விசேஷணமா? விசேஷ்யம் என்றால் அனந்தபதம் விசேஷணம் என்று சொல்லவேண்டும். அதற்காக ப்ரஹ்மபதம் விசேஷணம் என்று சொல்லலாமே என்றால், அவ்விதம் சொல்ல முடியாது. ஏனெனில் உதாரணமாக 'ம்ருத்யுஞ்ஜய:' என்று ஒரே பதம் மட்டும் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்குமானால் அந்த பதம் விசேஷ்யம் என்று சொல்லவேண்டும். 'ம்ருத்யுஞ்ஜய: சிவ:' என்று ஒருபதத்துடன் மற்றொருபதம் சேர்த்து ப்ரயோகம் செய்யப்பட்டிருக்குமானால் 'சிவ:' என்பது விசேஷ்யம், ம்ருத்யுஞ்ஜய என்பது விசேஷணம் என்று சொல்லவேண்டும். ம்ருத்யுவை ஜயித்த சிவன் என்று சிவனுடைய பெருமையை தெரிவிப்பதால் அது விசேஷணம் என்றாகும். 'சிவன்' என்ற பதப்ரயோகமில்லை என்றால் 'ம்ருத்யுஞ்ஜய' என்ற பதமே விசேஷ்யம் என்றே சொல்லவேண்டும். இந்தமுறையை அனுசரித்து 'ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம' என்ற வாக்யத்தில் உள்ள அனந்த பதத்திற்கு ஸமீபத்தில் ப்ரஹ்மபதம் இருக்கின்றதால், ப்ரஹ்மபதம் விசேஷ்யம் என்றே சொல்லவேண்டும். அவ்விதமின்றி ப்ரஹ்ம பதம் இல்லாமல் அனந்த பதம் மட்டும் இருக்குமானால் அந்தமில்லாத (அந்த ரஹிதமான) விஷ்ணு என்று அர்த்தம் செய்யலாம். அவ்விதமில்லாததால், அனந்த பதம் விஷ்ணுவை குறிப்பதாகச்சொல்வது சரியல்ல. ஆகவே, ஸத்யம் ஞானம் அனந்தம் என்ற பதங்கள் விசேஷணம் என்றும் ப்ரஹ்ம பதம் விசேஷ்யம் என்றே சொல்லவேண்டும்.

விஷ்ணுபுராணம் ச்லோகம் 1.22.55

ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீராமானுஜர், (முதல் அத்யாயம், முதல் அதிகரணம் முதல் ஸூத்ரம்) கீழ்கண்ட ச்லோகத்தை ஸவிசேஷ பரமாக விளக்குகிறார். அது இங்கே நிராகரிக்கப்படுகிறது.

த்வே ரூபே ப்ரஹ்மணஸ்தஸ்ய மூர்தம் சாமூர்தமேவ ச
க்ஷராக்ஷரஸ்வரூபே தே ஸர்வ பூதேஷ்வவஸ்திதே
அக்ஷரம் தத் பரம் பிரஹ்ம க்ஷரம் ஸர்வமிதம் ஜகத் (1.2.55)

என்கிற ஸ்லோகத்தில் '*அக்ஷரம் தத் பரம்ப்ரஹ்ம, க்ஷரம் ஸர்வம் இதம் ஜகத்*' (अक्षरं तत्परं ब्रह्म क्षरं सर्वमिदं जगत्) என்ற வாக்யத்தில், 'அக்ஷரம்' என்ற பதத்தினால் முக்தனையும், க்ஷரம் என்ற பதத்தினால், பத்தனையும் குறிப்பிடுவதாக சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல. '*அக்ஷரம் தத் பரம் ப்ரஹ்ம*' என்று தெரிவிக்கின்றதால், ப்ரஹ்மத்தை அன்றி வேறான ஸர்வ ஜகத்தும் க்ஷரம் என்றே அந்த வாக்யத்தின் அர்த்தம். அதாவது ப்ரஹ்மம் ஒன்றே நாசம் அற்றது (நாசமில்லாதது) ஸர்வ ஜகத்தும் நாசம் உள்ளது என்றே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது. அதனால் அக்ஷரம் முக்தனின் ஸ்வரூபத்தையும், க்ஷரம் பத்தனின் ஸ்வரூபத்தையும் தெரிவிக்கின்றது என்று அர்த்தம் செய்வது சரியல்ல. ஏனெனில் முக்தனுக்கு எது ஸ்வரூபமோ அதுவே பத்தனுக்கும் ஸ்வரூபம். இரண்டுமே சைதன்யஸ்வரூபம், சைதன்யமே அக்ஷரம் என்பதால் க்ஷரம் என்று சொல்வது சரியல்ல. இரண்டு பேருக்கும் ஸ்வரூபம் ப்ரஹ்மமே. ஆனால் ஒருவன் தன்னை ப்ரஹ்மமென்று அறிவதால் முக்தனாகிறான். ஒருவன் தன்னை ப்ரஹ்மமென்று அறியாததால் பத்தனாகிறான். ஒருகாலத்தில் எவன் பத்தனாக இருந்தானோ அவனே ஒரு காலத்தில் முக்தனாகின்றான். பத்தன், க்ஷரன் என்று சொல்லப்படுமானால் முக்தி யாருக்கு ஏற்படுகிறது? ஆகவே பத்தனாக இருப்பவனும் ஜீவனே, முக்தனாக இருப்பவனும் ஜீவனே. ஜீவன், ஸ்வரூபத: நித்யன் (ந ஜாயதே ம்ரியதே), ஆகவே பத்தனாக இருக்கின்ற ஜீவனுடைய ஸ்வரூபமும் அக்ஷரம், அதேபோல் முக்தனுடைய ஸ்வரூபமும் அக்ஷரம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஜீவனுக்கு பந்தம் என்பது க்ஷரம், அதனால் உபசாராத் ஜீவனையே க்ஷரம் என்றும், அதேபோல் முக்தி என்பது ஜீவனுக்கு அக்ஷரம் என்பதால் ஜீவனையே உபசாராத் அக்ஷரம் என்று சொல்லப்பட்டது.

ஸித்தா:- அப்படியானால் பத்தனுடைய ஸ்வரூபம் க்ஷரம் என்றும், முக்தனுடைய ஸ்வரூபம் அக்ஷரம் என்று சொல்லப்படுவது சரியல்ல. பத்தனுடைய ஸ்வபாவம் (தர்மம்) க்ஷரமென்று சொல்லலாமே அன்றி ஸ்வரூபம் க்ஷரம் என்று சொல்வது சரியல்ல. பத்தனுடைய ஸ்வபாவம் (தர்மம்) அநித்யம், ஸ்வரூபம் நித்யம் என்று சொல்லவேண்டும். அதனால் அக்ஷரம் தத் பரம் ப்ரஹ்ம, க்ஷரம் ஸர்வமிதம் ஜகத் என்ற வாக்யம், ப்ரத்யகபின்னமாகவும், நித்யமாகவும், ஏகஸ்வரூபமான ப்ரஹ்மம் ஒன்றுதான் அக்ஷரம், அதைத்தவிர மற்றுமுள்ள ஸர்வ ஜகத்தும் க்ஷரம் என்று அதோன்யதார்த்தம் என்ற கருத்தில் தெரிவிக்கின்றது. ஆகவே

ப்ரஹ்மம் ஒன்றே நித்யம், ஸத்யம், ஏகம், அக்ஷரம். அதை அன்றி ஸர்வமும் க்ஷரம், அநித்யம், அஸத்யம், மித்யை என்பதால், அத்வைதம்தான் தத்வம் என்பதையே இந்த வாக்யங்கள் தெரிவிக்கின்றது. ஆகவே, நித்யம் பரம்ப்ரஹ்ம ப்ரத்யகபின்னம் ஏகமேவ அக்ஷரம், அதற்கு பின்னமான ஸர்வமும் ஜகத். ப்ரக்ருதி, மஹாகாலம் முதலான ரூபங்கள் எல்லாமே அநித்யம் க்ஷரம் என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. ஆகவே ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் என்பதால் அத்வைதமே ஸித்திக்கின்றது.

87

'एकदेशस्थितस्याग्नेः' इति श्लोकार्थविचारः।

'ஏகதேசஸ்திதஸ்யாக்னே:' என்ற ச்லோகார்த்தவிசார:

விஷ்ணுபுராணம் ச்லோகம் 1.22.56

ஏகதேசஸ்திதஸ்யாக்னே: ஜ்யோத்ஸ்னா விஸ்தாரிணீ யதா ।
பரஸ்ய ப்ரஹ்மணச்சக்தி: ததேதமகிலம் ஜகத் ।

एकदेशस्थितस्याग्नेर्ज्योत्स्ना विस्तारिणी यथा ।
परस्य ब्रह्मणश्शक्तिस्तथेदमखिलं जगत् ।

இந்த ச்லோகத்தில் அக்னி ஜ்யோத்ஸ்னா என்று இரண்டு பதங்கள் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. சந்த்ரிகா, கௌமுதி, ஜ்யோத்ஸ்னா (நிலா) என்று அமரகோசத்தில் தெரிவிக்கப்படுகிறது. அதில் ஜ்யோத்ஸ்னா என்ற பதத்திற்கு சந்தரனுடைய ப்ரகாசம் என்பது வாச்யார்த்தம். ஆனால் இந்தச்லோகத்தில், அக்னியினுடைய ஜ்யோத்ஸ்னா என்று ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஜ்யோத்ஸ்னா சப்தவாச்யார்த்தம் சந்த்ரனுக்கு மட்டுமேபொருந்தும். அதனால் அக்னி சப்தத்திற்கு சந்த்ரன் என்றே அர்த்தம் செய்யவேண்டும். அவ்விதமின்றி அக்னிசப்தவாச்யார்த்தம் எடுத்துக் கொள்ளப்படுமானால் ஜ்யோத்ஸ்னா சப்தத்திற்கு ப்ரபை (ப்ரகாசம்) என்று அர்த்தம் சொல்லவேண்டும். ஆகவே ஜ்யோத்ஸ்னா என்ற பதத்திற்கு சந்த்ரிகை என்று அர்த்தம் செய்யப்படுமானால் அக்னி என்ற பதத்திற்கு சந்த்ரன் என்று அர்த்தம் செய்யவேண்டும், அல்லது, அக்னி என்ற பதத்திற்கு அக்னி என்றே முக்யார்த்தம் சொல்லப்படுமானால், ஜ்யோத்ஸ்னா என்ற பதத்திற்கு ப்ரபை என்று அர்த்தம் சொல்ல வேண்டும். அக்னியானது, ஓரிடத்தில், ஏகதேசத்தில் இருந்தாலும், அதன் ப்ரபை எவ்விதம் வ்யாபிக்கின்றதோ அதுபோல் ப்ரஹ்மத்தினிடம் உள்ள மாயாசக்தியானது அகில ஜகத்திலும் வ்யாபித்திருக்கின்றது என்றே இந்த ச்லோகத்தின் தாத்பர்யம். அக்னிஎன்று உபலக்ஷணமாக சொல்லப்படுகிறது. இதேபோல், ப்ரபையுடன்கூடிய ஸூர்யன், சந்த்ரன் முதலானவைகள் ஓர் இடத்தில் இருந்தபோதிலும் அதன் ப்ரபை எங்கும் வ்யாபித்திருப்பதுபோல் ப்ரஹ்மத்தினிடம் இருக்கின்ற மாயா சக்தி வ்யாபித்திருக்கின்றது என்று இந்தச்லோகம் தெரிவிக்கின்றது.

அக்னி, ஸூர்யன், சந்த்ரன், அதன் ப்ரபைபோல் மாயசக்தி எங்கும் வ்யாபித்திருப்பதாகச் சொல்லப்படும் இந்த ஒரு அம்சத்தில் மட்டுமே, த்ருஷ்டாந்தம் தார்ஷ்ட்டாந்தத்தில் பொருந்தும். மற்ற அம்சம் எதுவும் பொருந்தாது. ஏனெனில் ஓரிடத்தில் இருக்கின்ற அக்னியைப்போல் ப்ரஹ்மம் ஏகதேசத்தில் இல்லை. இதேபோல், ஸூர்யன், சந்த்ரன் முதலானவைகளும் பரிச்சின்னம் என்பதால், அபரிச்சின்னமான ப்ரஹ்மத்திற்கு இவைகள்

எதுவும் த்ருஷ்ட்டாந்தமாக ஆகாது. அதனால், அக்னியுடன் கூடிய ப்ரபை எவ்விதம் ஸர்வத்திலும் வ்யாபிக்கின்றதோ அதுபோல் ப்ரஹ்மத்துடன் கூடிய சக்தி ஸர்வத்திலும் வ்யாபித்திருக்கிறது என்ற ஒரு அம்சத்தில் மட்டுமே த்ருஷ்ட்டாந்தம் பொருந்தும். அது மட்டுமல்ல, மாயையானது ஸர்வ ஜகத்திற்கும் உபாதானமாக இருக்கின்றது. அதுபோல் அக்னி ப்ரபையில் உபாதானத்வம் கிடையாது. மேலும் மாயை என்பது ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமல்ல, மாயாசக்தி ப்ரஹ்மத்தின்கல்பித தர்மம். ஆனால் அக்னி முதலானவைகளுக்கு ப்ரபை என்பது ஸ்வரூபமே அன்றி, தர்மமல்ல. அதனால் இந்த அம்சத்திலும் த்ருஷ்ட்டாந்தம், தார்ஷ்ட்டாந்தத்தில் பொருந்தவில்லை. மேலும் அக்னி சக்தி வ்யாபகம் என்றாலும், ப்ரஹ்ம சக்திபோல் வ்யாபகம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமென்று சொல்லமுடியாததால், தர்மமென்று சொல்லப்படும் மாயசக்தியைபோலவே, ஜ்யோத்ஸ்னா சப்தம் அக்னியில் எதை சக்தி என்று சொல்லப்படுகிறதோ, அதையே குறிப்பிடுவதாகச்சொல்லலாமே, அன்றி ஸ்வரூபமான ப்ரபையை குறிக்கின்றது என்று சொல்லவேண்டியதில்லை. இவ்விதம் சொல்லப்படுமானால், த்ருஷ்ட்டாந்தம் பூர்ணமாக பொருந்துகிறது

ஸித்தா:- ஜ்யோத்ஸ்னா, (ப்ரபை) என்ற பதத்திற்கு அக்னியின் ஸ்வரூபம் என்று அர்த்தம் சொல்லலாம், அவ்விதமின்றி அக்னியின் சக்தி என்று அர்த்தம் சொல்லப்படுமானால், அக்னியிலுள்ள தாஹகசக்தி ப்ரஹ்மசக்திபோல், ஸர்வத்திலும் வ்யாபிக்கின்றது என்று சொல்லநேரிடும். அதனால் அக்னியின் ஸ்வரூபம் என்று சொல்லப்படும் ப்ரபையைத்தான் வ்யாபகம் என்று தெரிவிக்கலாம் என்பதால் அந்த அம்சத்தில் மட்டும் த்ருஷ்ட்டாந்தமாக சொல்லலாம். தார்ஷ்டாந்தத்தில் சக்தியாக இருக்கின்றது, த்ருஷ்ட்டாந்தத்தில் ஸ்வரூபமாக இருக்கின்றது. அதனால் இந்த த்ருஷ்ட்டாந்தமும், தார்ஷ்ட்டாந்தமும் பொருந்தாது.

பூர்வ:- அக்னியின் ஸ்வரூபமான ப்ரபையிலும், தஹிக்கக்கூடிய சக்தி இருக்கின்றது என்று சொல்லலாமே? இவ்விதம் சொல்லப்படுமானால் சக்தியும் வ்யாபகம் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- அக்னியில் இருக்கின்ற தாஹக சக்தி, அக்னி ஜ்வாலை எதுவரை வ்யாபிக்கின்றதோ அதுவரையில்தான் வ்யாபிக்கமுடியும். ப்ரபை எதுவரை வ்யாபிக்கின்றதோ, அதுவரை ஜ்வாலையோ, தாஹகசக்தியோ வ்யாபிக்கமுடியாது. அவ்விதம் ப்ரபையையும் வ்யாபிக்குமானால் தீபம் ஏற்றப்படுமானால், அனர்த்தகரமாக ஆகும். ஆகவே, தஹிக்கின்ற சக்தியோ, கொப்பளிக்கும் சக்தியோ ஜ்வாலையில் தான் இருக்குமே அன்றி ப்ரபையில் இருப்பதில்லை.

பூர்வ:- த்ருஷ்ட்டாந்தம் பொருந்தவில்லை என்றால், தார்ஷ்ட்டாந்தமாகச் சொல்லப்படும் ப்ரஹ்மத்தின் சக்தி என்று சொல்லப்படும் மாயையை ப்ரஹ்ம ஸ்வரூபம் என்றே சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரஹ்மணச்சக்தி: ப்ரஹ்மத்தின் சக்தி என்று என்று இந்தச்லோகம் தெரிவிக்கின்றது, ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? வாக்யமே பொருந்தாது.

பூர்வ:- சந்த்ரனை உதாரணமாக எடுத்துக்கொண்டால், ஜ்யோத்ஸ்னா (ப்ரகாசம்) என்ற பதம் சந்த்ரனுடைய ஸ்வரூபம் என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் சந்த்ரனுடைய பார்யை சந்திரிகை. அதனால் சந்தரனுடைய சக்தி என்றும் சொல்லமுடியாது. இவ்விதம் சந்த்ரனுடைய சக்தியுமல்ல, ஸ்வரூபமும் அல்ல என்பது போல், ப்ரஹ்மத்தின் சக்தியுமல்ல, ஸ்வரூபமுமல்ல என்றும் ப்ரஹ்மத்தின் பார்யை என்றே ப்ரஹ்ம சக்தியை சொல்லலாமே? ஏனெனில் ப்ரஹ்மத்திற்கு ஹ்ரீ என்றும் லக்ஷ்மீ '*ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ன்யௌ*' (ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ) என்றும் இரண்டு பார்யைகள் இருப்பதாக உபநிஷத்தில் (ச்ருதியில்) சொல்லப்படுகிறது. அதில் லக்ஷ்மீ என்பவளே மாயா சக்தி என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- இவ்விதம் பர்த்தாவென்றும், பார்யை என்றும் சொல்லப்படும் வ்யவஹாரம் எல்லாமே தேஹதர்மமே அன்றி ஆத்ம தர்மம் அல்ல. இவையெல்லாம், ஸ்தீரிலிங்கம், புல்லிங்கம் என்ற வேறுபாடுகளை அனுசரித்து செய்யப்படும் வ்யவஹாரங்கள். ஆத்மாவிற்கு எந்தவித லிங்கமும் கிடையாது என்றே '*ந ஸ்த்ரீ, ந ஷண்டோ, ந புமான் ந ஜந்து*' என்று, ஆணுமல்ல, பெண்ணுமல்ல. அலியுமல்ல, என்றே இந்த வாக்யங்கள் தெரிவிக்கின்றன, இவையெல்லாம் தேஹம் என்ற உபாதி தாதாத்ம்ய அத்யாஸத்தைக் கொண்டு, பர்த்தா, பார்யை என்ற வ்யவஹாரம் இருக்கின்றதால், ஆத்ம ஸ்வரூபவிசாரம் செய்கின்ற இந்த இடத்தில், இவ்வித வ்யவஹாரத்திற்கே இடமில்லை. சங்குசக்ர தாரியான விஷ்ணுவின் சரீரம் என்ற உபாதியைக் கொண்டு அவருடைய பார்யை 'ஹ்ரீ' என்றும் 'லக்ஷ்மீ' என்றும் தெரிவிக்கப்படுகின்றதே அன்றி, பர்த்தா என்றும் பார்யை என்றும் உபநிஷத்வாக்யங்கள் தெரிவிப்பதாகச்சொல்வது சரியல்ல. உபநிஷத்வாக்யங்கள் எல்லாம் நிர்விசேஷமான சுத்த சைதன்ய ஸ்வரூபத்தையே போதிக்கின்றது. மேலும், கவிகளால் இயற்றப்பட்ட காவ்யங்களில், சந்த்ரிகை என்ற நிலாவை, சந்த்ரனின் பார்யை என்றும், சந்த்ரன் பர்த்தா என்றும் வர்ணிக்கின்றார்கள். அதாவது சந்த்ரசப்தம் புல்லிங்கமாகவும், சந்த்ரிகை (நிலா) என்ற சப்தம் ஸ்தீரிலிங்கமாகவும் இருக்கின்றதால், கவிகளின் கல்பனையினால் பர்த்தா, பார்யை என்று வர்ணிக்கப்படுகிறது. இதேபோல் ஸமுத்ரம் புல்லிங்க சப்தத்தினாலும், நதியை ஸ்தீரிலிங்க சப்தத்தினாலும் சொல்லப்படுவதால் ஸமுத்ரத்தின் பார்யை நதி என்று சொல்லப்படுகிறது. இவை எல்லாம் உண்மையில் புருஷன் என்றோ, ஸ்திரீ என்றோ சொல்லவில்லை. இவ்விதம் இருந்தபோதிலும் ஸமுத்ரத்திற்கு அதிஷ்ட்டான தேவதை புல்லிங்கமாக இருக்கின்றதாலும், கங்கை முதலான நதிகளின் அதிஷ்ட்டான தேவதை ஸ்தீரிலிங்கமாக இருக்கின்றதாலும், இவ்விதம் சொல்லப்படுகிறது. இதேபோல் சந்த்ரமண்டலத்திற்கு அதிஷ்ட்டான தேவதையை புல்லிங்க சப்தத்தினால் சந்த்ரன் என்ற நாமாவை உடைய புருஷசரீரம் என்றும், சந்திரிகை என்று அதிஷ்ட்டான தேவதை ஸ்தீரி சரீரத்தை உடைய சந்திரிகை என்றும் சொல்லலாமே அன்றி, பர்த்தா, பார்யை என்ற வ்யவஹாரம் சரியல்ல என்பதால் இந்த த்ருஷ்ட்டாந்தம், ஆத்ம ஸ்வரூப விசாரத்தில் பொருந்தாது. ஆத்ம ஸ்வரூபம் புருஷனுமல்ல, ஸ்தீரியுமல்ல என்று உபநிஷத்வாக்யங்கள் தெரிவிக்கின்றது.

பூர்வ:- சந்த்ரிகை என்பது சந்த்ரனுடைய ஸ்வரூபமல்ல, தர்மம் என்றே சொல்லலாம். அதேபோல் ப்ரஹ்மத்தில், மாயா சக்தி ஸ்வரூபமல்ல, தர்மம் என்றே சொல்லலாம். இதனால் த்ருஷ்ட்டாந்தம் தார்ஷ்ட்டாந்தம் என்ற இரண்டுமே பொருந்துகிறது என்றே சொல்லலாம்.

ஸித்தா:- சந்த்ரனுக்கு, சந்த்ரிகை ஸ்வரூபம் என்றே சொல்லவேண்டும். தர்மம் அல்ல. அதேபோல் ஸூர்யன், சந்த்ரன் அக்னி முதலானவைகளுக்கு அதன் ப்ரபையே ஸ்வரூபம். தர்மம் ஸ்வரூபமல்ல. ப்ரஹ்மத்திற்கு மாயை தர்மம் என்று சொல்வது சரியேஎன்று ஒப்புக்கொள்ளப்பட்டாலும், சந்த்ரனுக்கு சந்த்ரிகை தர்மமென்றுசொல்லமுடியாது. அதனால் த்ருஷ்ட்டாந்தம் பொருந்தாது. தர்மம் என்று எதை சொல்லமுடியும் என்றால், உதாரணமாக அக்னிக்கு ஔஷ்ண்யம் தர்மம் என்று கண்களால் அறியமுடியாது. ஆனால் ஸ்பர்ச த்தினால் ஔஷ்ண்யம் அறியப்படுகின்றது, அதனால் ஏற்படும் கொப்புளங்கள், எரிச்சல் முதலான கார்யங்களைக்கொண்டு அதன் சக்தி அறியப்படுகிறது. அதனால் ஸ்போடாதிகள் கார்யகம்ய சக்தி. ஆனால் அதுபோல் சந்த்ரனிடத்தில் சந்த்ரிகை என்ற நிலா இருக்கிறதா இல்லையா என்று தொட்டு பார்க்க (ஸ்பர்சத்தினால்) வேண்டிய அவச்யமில்லை. கார்யகம்யம் இல்லை. 'நிலா' கண்களினாலேயே அறியப்படுகிறது. அதனால் நிலா என்பது சந்த்ரனுடைய ஸ்வரூபமே அன்றி கார்யகம்யமான தர்மமல்ல. மாயாசக்தி என்பது ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமல்ல. ப்ரபஞ்சம் என்ற கார்யத்தைக்கொண்டு அறியப்படுகிறதே அன்றி, கண்களால் அறியக்கூடியது அல்ல. மாயாசக்தி கார்யகம்யம் என்றே சொல்லவேண்டும். அதனால் 'வ்யாபகம்' என்ற ஒரு அம்சத்தில் மட்டும் த்ருஷ்ட்டாந்தம் சொல்லலாமே அன்றி ப்ரஹ்ம சக்தியான மாயைக்கு பொருத்தமாக வேறு எந்த அம்சத்திலும் த்ருஷ்ட்டாந்தம் பொருந்தாது.

பூர்வ:- அகில ஜகத்துமே ப்ரஹ்மத்தின் சக்தி என்று சொல்லலாமே? இவ்விதம் சொல்லப்படுமானால், ப்ரஹ்மசக்தி கண்களினாலேயே அறியப்படுவதாகச்சொல்லலாம். கார்யகம்யம் என்று சொல்ல வேண்டிய அவச்யம் இல்லை.

ஸித்தா:- ஜகத் ப்ரஹ்ம சக்தியான மாயையின் கார்யமாக இருப்பதால் ஜகத் என்பதையே ப்ரஹ்மசக்தி என்று உபசாராத் சொல்லலாமே அன்றி உண்மையாக சக்தி என்று சொல்லமுடியாது. சக்தி என்பது, கண்ணினால் அறியப்படுகிறது என்று சொல்லப்படுமானால், இப்போது சொல்லப்பட்ட தோஷங்களைக்காட்டிலும் அதிக தோஷங்கள் ஸம்பவிக்கும். சக்தி என்பது கார்யகம்யம். அக்னியானது ஏகதேசத்தில் இருப்பதுபோல் ப்ரஹ்மம் ஏகதேசத்தில் இல்லை. அதனால் சக்தி வ்யாபித்திருப்பதுபோல் அக்னி ப்ரபை வ்யாபிக்கின்றது என்ற ஒரு அம்சத்தில்தான் அக்னி த்ருஷ்ட்டாந்தம் பொருந்துமே அன்றி மற்ற எந்த அம்சத்திலும் பொருந்தாது.

பூர்வ:- ஜகத் என்பதும் ப்ரஹ்மகார்யம். அக்னியிலுள்ள ப்ரபையும் அக்னிகார்யம். இவ்விதம் இரண்டும் கார்யம் என்ற அம்சத்தில், த்ருஷ்ட்டாந்த தார்ஷ்ட்டாந்தம் பொருந்துகிறது. கார்யம், வ்யாபகம் என்ற இரண்டு அம்சத்திலும் த்ருஷ்ட்டாந்த தார்ஷ்ட்டாந்தம் பொருந்துகிறது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:-அக்னிக்கும் அதன் ப்ரபைக்கும் கார்யகாரணபாவம் எவ்விதம் சொல்லமுடியும்? ஒரே தேஜஸ், நிமிடாவயவமாக (நெருக்கமாக) இருந்தால் அக்னி என்றும், விரளாவயவமாக இருந்தால் (எங்கும் பரவி இருக்கின்ற ப்ரகாசம்) அதை ப்ரபை என்றும் சொல்லப்படும்.

அக்னியின் கார்யம் ப்ரபை என்று சொல்வது சரியல்ல. அதனால் ஜகதெவ்விதம் ப்ரஹ்மகார்யமோ அதுபோல் பிரஹ்ம சக்தி ப்ரஹ்மத்தின் கார்யம் இல்லை.

பூர்வ:- ப்ரஹ்மசக்தி, சக்திமாத்ரமாக இருக்கின்றபோது ப்ரஹ்மகார்யம் என்று சொல்ல முடியாது. ஆனால் இந்த சக்தியே ஜகத்தாக பரிணாமத்தை அடைகின்றதால், சக்தியை ப்ரஹ்மகார்யம் என்று சொல்லலமே?

ஸித்தா:- ஜகதாகாரேண பரிணாமத்தை அடைகின்ற சக்தியே ப்ரஹ்மகார்யம் என்று விசேஷணம் சொல்லப்படுவதிலிருந்தே, கேவலசக்தி ப்ரஹ்மகார்யம் என்று சொல்ல முடியவில்லை. அதனால் விசேஷணமாகச் சொல்லப்படும் ஜகத் என்பதே கார்யம் என்றாகுமே தவிர, சக்தி கார்யமாக ஆகமுடியாது.

பூர்வ:- சக்தி என்பதும் சக்தம் (சக்தி உடையது) என்பதும் இரண்டும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கமுடியாது. ஆனால், ப்ரஹ்மத்தில், ஜகத் என்ற கார்யம் தோன்றுவதற்கு உபயோகமாக இந்த சக்தி இருக்கின்றது. அதனால் சக்தமான ப்ரஹ்மத்திற்கு சக்தி, விசேஷணமாக இருக்கின்றது. இவ்விதம் ப்ரஹ்மமும் அதன் சக்தியும், வெவ்வேறாக இருக்கின்றதென்று சொல்லமுடியவில்லை. அதேபோல் சந்த்ரனும், அதன் ப்ரபையும், அக்னியும் அதன் சக்தியும் வெவ்வேறாக பிரிக்கமுடியாது. அதனால் அப்ருதக்ஸித்த விசேஷணமாக த்ருஷ்ட்டாந்தம், தார்ஷ்ட்டாந்தம் இரண்டிற்கும் பொருந்துகின்றது.

ஸித்தா:- சக்தி, சக்தமான ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறாக இல்லை என்றால் என்ன அர்த்தம்? சக்தமான ப்ரஹ்மத்தை அன்றி வேறாக தனித்து அறிய முடியாது. அதனால் அப்ருதக்ஸித்தம் என்று சொல்லப்படுகிறது. கடம் என்பது ம்ருத்தைக் காட்டிலும் வேறாக இல்லை என்றால், ம்ருத்தை அன்றி வேறாக கடம் என்று தனியாக ஒரு வஸ்து நம் அறிவிற்கு விஷயமாகவில்லை. ம்ருத்துடன் சேர்ந்தே கடம் விஷயமாகின்றது. அதனால் ம்ருத் என்பது கடத்திற்கு அப்ருதக்ஸித்தம் என்று சொல்லலாம். இதேபோல் அக்னியும், அதில் உள்ள உஷ்ண சக்தியும் (தாஹக சக்தியை) அக்னிக்கு அப்ருதக்ஸித்தம் என்று சொல்லலாம். ஆனால் அதுபோல் அக்னியின் ப்ரபை என்பதை அப்ருதக்ஸித்தம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் அக்னியையும் அதன் உஷ்ண சக்தியையும் பிரித்து அறியமுடியாது. ஆனால் அக்னியையும் அதன் ப்ரபை என்பதையும் வேறாக பிரித்து பார்க்கமுடியும். அக்னி ஏதோ ஓரிடத்தில் இருந்தாலும் வேறு இடத்தில் அதன் ப்ரபையைமட்டும் காணமுடியும். (அக்னியை பார்க்காவிட்டாலும் ப்ரபையை மட்டும் பார்க்கமுடியும்). அதனால் அக்னியும் ப்ரபையும் அப்ருதக்ஸித்தம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- அக்னி இல்லாமல் ப்ரபை இருக்கமுடியாது என்பதால், அப்ருதக்ஸித்தம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஆகாசத்தைவிட்டு, எந்த வஸ்துவும் தனித்து இருக்கமுடியாது. ஸர்வ வஸ்துக்களும் ஆகாச ஸம்பந்தத்துடன்தான் இருக்கவேண்டும். அதற்காக ஸர்வ வஸ்துக்களும் ஆகாசத்திற்கு அப்ருதக்ஸித்தவிசேஷணம் என்று சொல்லமுடியுமா? அதனால் ப்ரஹ்மத்தில்

இருக்கின்ற மாயா சக்தியானது, அக்னியும் அதிலுள்ள ப்ரபையும்போல் என்ற த்ருஷ்ட்டாந்தம் பொருந்தாது.

ஸுதர்சனர் பூர்வ:- கார்யம் என்பது காரணத்திற்கு அப்ருதக்ஸித்தவிசேஷணம் என்று சொல்வதே தவறு. ஏனெனில் காரணத்தை அன்றி கார்யம் என்று தனியாக என்ன வஸ்து இருக்கின்றது? தனியாக இரண்டு வஸ்து வேறுபட்டதாக இருந்தால்தான் ஒன்று விசேஷ்யம், மற்றொன்று விசேஷணம் என்று சொல்லலாம். காரணமே, கார்ய ரூபமாக இருக்கின்றதால், அப்ருதக்ஸித்த விசேஷணம் என்று கார்யகாரண ரூபத்தில் இருக்கின்ற வஸ்துவிற்கு சொல்லமுடியாது.

ஸித்தா:- இதுவும் சரியல்ல. ஏனெனில் கார்யம், காரணம் என்ற இரண்டிற்கும் அத்யந்தம் அபேதம் இருக்குமானால், ஒன்றை கார்யம் என்றும், ஒன்றை காரணம் என்றும் வ்யவஹாரம் இருக்கமுடியாது. உதாரணமாக ம்ருத் காரணம், கடம் கார்யம் என்ற வ்யவஹாரத்தில் ம்ருத்கடம் என்றுதான் சொல்லப்படுகிறதே அன்றி, ம்ருத், ம்ருத் என்ற வ்யவஹாரம் இல்லை. அதனால் கார்யத்திற்கு, காரணத்துடன் அபேதம் சொல்லமுடியாது. சிறிது பேதம் இருக்கின்றதால்தான் ஒன்றை காரணம் என்றும், ஒன்றை கார்யம் என்றும் சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல. காரணத்தைக்காட்டிலும் கார்யம் வேறாக அறியப்படவில்லை என்றாலும், கார்யத்தைக் காட்டிலும் காரணம் வேறாகத்தான் அறியப்படுகிறது. அதனால் கார்யம், காரணத்தைக்காட்டிலும் வேறல்ல என்று அப்ருதக்ஸித்தவிசேஷணம் சொல்லப்படுவதால் எந்த விதமான ஹானியும் இல்லை.

பூர்வ:- அதன் பிறகு

'விஷ்ணுசக்தி: பரா ப்ரோக்தா க்ஷேத்ரஞ்ஞாக்யா ததா அபரா
அவித்யா கர்மஸம்ஞான்யா த்ருதீயா சக்திரிஷ்யதே'

विष्णुशक्तिः परा प्रोक्ता क्षेत्रज्ञाख्या तथाऽपरा ।
अविद्या कर्मसंज्ञान्या तृतीया शक्तिरिष्यते

என்ற இந்த ச்லோகம் (விஷ்ணு புராணம் 6.7.61) அத்வைத ஸித்திக்கு விரோதமாக இருக்கின்றது. விஷ்ணுசக்தி என்பது பராசக்தி என்றும், க்ஷேத்ரஞ்ஞசக்தி என்பது அபரா சக்தி என்றும், அவித்யாசக்தி கர்மா என்றும் மூன்று சக்திகள் சொல்லப்படுகிறது. (இதில் அவித்யாசக்தி என்பதே கர்மா என்று சொல்லப்படுகிறது.) இவ்விதம் மூன்று சக்திகளையுடைய ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- அத்வைத ஸித்தாந்தத்திற்கு ஸாதகமாக இருக்கின்ற இந்த ச்லோகத்தை, அத்வைதத்திற்கு பாதகமாக இருக்கின்றது என்றும் அதனால் அத்வைதம் ஸித்திக்கவில்லை என்று பரபக்ஷத்தை நிராகரணம் செய்வதற்காக, பரபக்ஷ ஸாதகமான ச்லோகத்தையே எடுத்து தெரிவிக்கின்ற, உன் வித்வத் பாண்டித்யம் மிகவும் போற்றதக்கதுதான்.. ஆஹா! என்ன வித்வத்வம் என்னே உன் பாண்டித்யம்!

சுத்தப்ரஹ்மத்தில், பராசக்தி விஷ்ணு, அபராசக்தி ஜீவன், மூன்றாவதாக கர்மா என்ற அவித்யா சக்தி என்று, மூன்று சக்திகள் ப்ரஹ்மத்தினிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் விஷ்ணுவை ப்ரஹ்மத்தின் சக்தியாகத்தான் சொல்லப்படுகிறதே அன்றி, விஷ்ணுவே பரப்ரஹ்மம் என்று சொல்லப்படவில்லை. சக்தி என்றாலே, சக்திமத் (சக்தி உடையது) ஒன்று இருக்கவேண்டும். ஆகவே, விஷ்ணு சக்தி பரா என்றும், ஜீவனென்ற க்ஷேத்ரஞ்ஞ சக்தி அபராசக்தி என்றும், இதற்கு அன்யமான சக்தி அவித்யை என்றும் சொல்லப்படுகிறது. அதனால் விஷ்ணு பரப்ரஹ்மம் என்று சொல்லப்படவில்லை. பரப்ரஹ்மத்தின் சக்தி என்றே தெரிவிக்கின்றது. ஆகையால் பரபக்ஷஸாதகமாகவும், ஸ்வபக்ஷ நிர்மூலமாகச் செய்கின்ற ச்லோகத்தை எடுத்துக்காட்டுவது உன் ஸித்தாந்தத்திற்கே ஹானியாக இருக்கின்றது.

பூர்வ:- விஷ்ணுவை சக்தி என்று சொல்லப்படுவதால் பாதகம் ஏதுமில்லை. சக்தி என்பது சக்தி மத்தான ப்ரஹ்மத்தை அன்றி வேறானது அல்ல. அதனால் விஷ்ணுவே பரப்ரஹ்மம் என்றுதெரிவிப்பதாகச்சொல்லலாம். அதனால் பாதகம் ஏதுமில்லை.

ஸித்தா:- இவ்விதம் ப்ரஹ்மத்தை அன்றி வேறாக இல்லை என்ற முறையில் விஷ்ணுவே ப்ரஹ்மமென்று மூன்று சக்திகளையும் ப்ரஹ்மமென்றே சொல்லப்படுமானால், விஷ்ணு ஒருவரே பரப்ரஹ்மம் என்றும், ப்ரஹ்மா, ருத்ரன் (சிவன்) என்ற இருவரும் ஜீவர்கள் என்று எவ்விதம் சொல்லமுடியும்? இவர்களும் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் அன்யம் என்று சொல்லமுடியாது. ஆகவே, இவையெல்லாம் உன் ஸித்தாந்தத்திற்கே விரோதமாகின்றது. அதனால் மூன்று சக்திகளும் ப்ரஹ்மம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- இந்த ச்லோகம் என் ஸித்தாந்தத்திற்கு விரோதம் என்ற தோஷம் இருக்கட்டும். இதற்கு உங்கள் ஸித்தாந்தப்படி ச்லோகத்தின் தாத்பர்யம் என்ன?

ஸித்தா:- மாயா ஸம்பந்தமுள்ள, (மாயா அவச்சின்ன) சைதன்யமே ஈச்வரன் என்று சொல்லப்படுகிறது. மாயாஸம்பந்தம் இல்லை என்றால், ப்ரஹ்மத்திற்கு ஈச்வரன் என்ற பெயரும் ஸம்பவிக்கமுடியாது. ஆகவே மாயா அவச்சின்ன சைதன்யமான ஈச்வரனே விஷ்ணு என்று சொல்லப்படுகிறது. அதனால் விஷ்ணுவை ப்ரஹ்மத்தின் சக்தி என்றே சொல்லலாம். இதேபோல் அவித்யா அவச்சின்ன சைதன்யமே ஜீவன் என்று சொல்லப்படுவதால், அவனையே க்ஷேத்ரஞ்ஞன் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அவித்யா அவச்சின்ன சைதன்யமான க்ஷேத்ரஞ்ஞ சக்தி என்ற ஜீவனையும் பரப்ரஹ்ம சக்தி என்றே சொல்லலாம். சுத்த ஸத்வப்ரதானமாக இருக்கின்ற ப்ரக்ருதியே மாயை என்றும், மலினஸத்வ ப்ரதானமாக இருக்கின்ற ப்ரக்ருதியை அவித்யை என்றும் சொல்லப்படுகிறது. இந்த ச்லோகத்தில், அவித்யா கர்ம ஸம்ஞான்யா' என்ற வாக்யத்திலுள்ள கர்ம சப்தம் ஜகத்தை குறிப்பிடுகிறது. கார்யமாக பரிணாமத்தை அடைந்த ஜகத் என்பதை, அவித்யை என்ற சப்தத்தினால் சொல்லப்படுகிறது. அதனால் ஜகத் என்பதும் அவித்யை என்ற பெயரால் சொல்லப்படுவதால் அவித்யை என்பதும் ப்ரஹ்மத்தின் சக்தி என்றே ஸித்திக்கின்றது.

க்ரியத இதி கர்மா என்ற வ்யுத்பத்தியைக்கொண்டு இந்த இடத்தில் 'கர்ம' பதம் ஜகத்தையே குறிக்கின்றது. செயலை கர்மா என்று இந்த இடத்தில் குறிப்பிடவில்லை.

செயலாலேற்படும் கார்யமான வஸ்துவை கர்மா என்று தெரிவிக்கின்றது. ஆகவே ப்ரக்ருதி தமோகுணப்ரதானமாகின்றபோது ஜகதாகாரேண பரிணாமத்தை அடைகின்றது. அதனால் ஜகத்தை கர்மா என்று சொல்லப்படுகிறது. ஜகத்திற்கு அவித்யையே காரணம் என்பதால் ஜகத்தை உபசாராத் அவித்யை என்றே சொல்லப்படுகிறது.

பூர்வ:- ஜீவ அத்ருஷ்ட்டம் கர்மா என்று, புண்ய பாப ரூபமான அத்ருஷ்ட்டத்தையே 'கர்மா' என்று குறிக்கப்படுகின்றதால், அவித்யை என்ற ஜகத்தை கர்ம என்று எவ்விதம் சொல்லப்படுகிறது?

ஸித்தா:- புண்ய பாபங்கள் என்ற அத்ருஷ்ட்டமும் அவித்யையில் அடங்கியதுதான். அதனால் அவித்யையை கர்மா என்று சொல்வதால் பாதகம் ஏதுமில்லை. ஸர்வத்திற்கும் காரணம் அவித்யை. அவித்யையை அன்றி எதுவுமே இல்லை. வ்யவஹாரதசையில் பரப்ரஹ்மத்தினிடம் மூன்று சக்திகள் இருப்பதாகச் சொல்லப்பட்டபோதிலும் பரமார்த்த தசையில் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- விஷ்ணுபுராணம் 2.7.31 ச்லோகத்தில் (*யதா ஸக்தம் ஜலே வாத: பிபர்தி கணிகாசதம் | சக்தி: ஸாபி ததா விஷ்ணோ: ப்ரதானபுருஷாத்மன:*) '*சக்திஸ்ஸாபி ததா விஷ்ணோ:*' (शक्तिस्सापि तथा विष्णोः) என்ற உத்தரவாக்யத்தில் ப்ரஹ்மத்தின் சக்தி விஷ்ணு என்று சொல்லப்படவில்லை. விஷ்ணுவே பரப்ரஹ்மம் என்று ஷஷ்டிஸமாஸத்தினால் விஷ்ணு சப்தப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. விஷ்ணு பதம் ஷஷ்டி ஸமாஸத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றதால், பரப்ரஹ்மமான விஷ்ணுவின் சக்தி என்றே அர்த்தம் சொல்லப்படுவதால் விஷ்ணு புராணம் 6.7.61 ச்லோகத்தில் எங்கள் ஸித்தாந்தத்திற்கு ஹானி எதுவும் இன்றியே அர்த்தம் கிடைக்கின்றது

ஸித்தா:- விஷ்ணுவை சக்தி என்று சொல்லப்படவில்லை என்றும், பரப்ரஹ்மமே விஷ்ணுவென்றும், அதனுடைய சக்தி என்று ஷஷ்டி அர்த்தத்தில் சொல்லப்படுகிறது என்று உன்னால் சொல்லப்படுகிறது. அதுசரியல்ல அவ்விதம் சொல்லப்படுமானால் பராசக்தி என்பது என்ன? அபராசக்தி என்பது என்ன? ஜீவனையும் அவித்யையும் விஷ்ணுவின் சக்தி என்று சொல்லப்படுமானால், மூன்றாவது சக்தி என்ன? மூன்று சக்திகள் என்று தெரிவிக்கின்ற ச்லோகத்திற்கு அர்த்தம் என்ன? க்ஷேத்ரஞ்ஞன் என்று ஜீவனை சக்தியாக தெரிவிக்கின்றதுபோல் விஷ்ணுவையும் சக்தி என்று தெரிவிக்கின்றது என்று சொன்னால்தான் ச்லோகார்த்தம் பொருந்தும். அவ்விதம் சொல்லாவிடில் விஷ்ணு சக்தியை, விஷ்ணுவின் சக்தி என்று அர்த்தம் செய்வதுபோல் க்ஷேத்ரஞ்ஞசக்தியை, க்ஷேத்ரஞ்ஞனுடைய சக்தி என்றும் அர்த்தம் சொல்லநேரிடும். அதனால் சேதனனான க்ஷேத்ரஞ்ஞனை சக்தி என்று எவ்விதம் சொல்லப்படுகிறதோ, அதேபோல், சேதனனான விஷ்ணுவையும் சக்தி என்றே அர்த்தம் சொல்லவேண்டும். அதனால் இந்த ச்லோகத்தின் உண்மையான தாத்பர்யம் என்னவென்றால், பராசக்தி என்றும் அபராசக்தி என்றும் இரண்டு சக்திகள்தான் சொல்லப்பட்டிருக்கின்றது. மூன்று சக்திகள் சொல்லப்படவில்லை. பராசக்தி என்று க்ஷேத்ரஞ்ஞனை சொல்லப்படுகிறது. அபராசக்தி என்று மாயை என்ற ப்ரக்ருதியை தெரிவிக்கின்றது. இந்த இரண்டும் விஷ்ணு

என்ற பரப்ரஹ்மத்தின் சக்திகள். வ்யாபக ஸ்வரூபமான விஷ்ணுவின் சக்திகளில் பராசக்தி க்ஷேத்ரஞ்ஞன். அபராசக்தி அவித்யா என்று சொல்லப்படுகிறது (அபரா சக்தி ப்ரக்ருதி) இதுவே கர்ம ஸம்ஞான்யா என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டும் பரப்ரஹ்மமான விஷ்ணுவின் சக்தி என்றேகீதையிலும்தெரிவிக்கின்றார். அதாவது

'மஹா பூதான்யஹங்காரோ புத்திரவ்யக்தமேவ ச

பூமிராபோனலோ வாயு: கம் மனோ புத்திரேவ ச
அஹம்கார இதீயம் மே பின்னா ப்ரகருதிரஷ்டதா

அபரேயமிதஸ்த்வன்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்'

महाभूतान्यहङ्कारो बुद्धिरव्यक्तमेव च ।

भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।
अहंकार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥

अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम्
जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत् ॥

என்று தெரிவிக்கின்றது.

இதில் ப்ரக்ருதியையே, (ப்ரதானம்) அவ்யக்தம் என்று சொல்லப்படுகிறது. மஹத்தத்வம் என்று புத்தியையும் தெரிவிக்கின்றது. அதன்பின் அஹங்காரம் என்றும் தெரிவிக்கின்றது. அதன்பிறகு பஞ்சபூதம் என்று ஸாங்க்ய சாஸ்திரம் தெரிவிக்கின்றது. அதையே '*மஹாபூதானி அஹங்காரோ புத்திரவ்யக்தமேவச*'' என்று பகவான் க்ரமத்தை மாற்றி (திருப்பி)த் தெரிவிக்கின்றார். ஆகையால் புத்தி என்ற பதத்திற்கு மஹத்தத்வம் என்றே அர்த்தம் என்று ஆசார்யரே கீதாபாஷ்யத்தில் தெரிவிக்கின்றார்.

இவ்விதம், ப்ரக்ருதி, மஹத்தத்வம் அஹங்காரம், பஞ்சமஹா பூதங்கள் எல்லாமே அபரா சக்தி என்று சொல்லப்படுகிறது. இதைக்காட்டிலும் அன்யமான ப்ரக்ருதி என்று ஒன்று இருக்கிறது. அதையே பராப்ரக்ருதி என்று கீதா வசனம் தெரிவிக்கின்றது. அதுவே ஜீவபூதம் என்றும் க்ஷேத்ரஞ்ஞன் என்றும் அதை அறிந்துகொள்ளவேண்டுமென்று கீதையில் சொல்லப்படுகிறது. அதனால் இதையே, ஜீவன் என்றும் க்ஷேத்ரஞ்ஞன் என்றும் சொல்லப் படுகிறது. சேதனனான க்ஷேத்ரஞ்ஞனால்தான் ஜடமான இந்த ஜகத் தரிக்கப்படுகிறது. ஆகவே, பரப்ரஹ்மத்தினிடம் பராசக்தி, அபரா சக்தி என்று இரண்டு சக்திகள் இருப்பதாகவே இந்த ச்லோகத்தின் தாத்பர்யார்த்தம்.

பூர்வ:- அப்படியானால், ச்லோகத்தில் மூன்றாவது சக்தி என்று த்ருதியா என்ற பதப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்?

ஸித்தா:- அவித்யை என்றும் கர்ம ஸம்ஞ்ஞா என்றும் அவாந்தர பேதத்தைக்கொண்டு இரண்டாக பிரித்து சொல்லப்படுகிறது. அதனால் மூன்று என்று சொல்லப்பட்டபோதிலும் அபராசக்தி என்பதில் இரண்டும் சேர்ந்து ஒரே சக்தியான ப்ரக்ருதியே சொல்லப்படுகிறதே அன்றி அவாந்தரபேதம் இருப்பதற்காக இரண்டு என்று தனித்தனி சக்தியாக சொல்லவேண்டிய அவச்யமில்லை.

பூர்வ:- ‘விஷ்ணுசக்தி’ என்றே ச்லோகத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், விஷ்ணுவை பரப்ரஹ்மம் என்றே சொல்லப்படுகிறது. அதேபோல் ஜீவனை பரப்பரஹ்மமென்று அர்த்தம் செய்யப்படவில்லை. ஈச்வரனுடைய சக்தி ஜீவன் என்றும், அதுவே பராசக்தி என்றும் தெரிவித்து, ப்ரக்ருதி என்பதே அபராசக்தி என்று சொல்லப்படுவதால், ஜீவேச்வரபேதம் என்பதே ஸித்திக்கின்றது. அதனால் எங்கள் ஸித்தாந்தமான த்வைதமே ஸித்திக்கின்றதே அன்றி அத்வைதம் ஸித்திக்கவில்லை.

ஸித்தா:- சக்தி என்று சித்சக்தி, ஜடசக்தி என்று இரண்டைத்தான் தெரிவிக்கின்றது. ஜீவனும் ஈச்வரனும் சித்சக்தி, அவித்யை ஜடசக்தி. அதனால் ஜடசக்திக்கும், சித்சக்திக்கும்தான் பேதம் சொல்லலாம். சித்சக்தியான ஜீவன், ஈச்வரன் என்ற இரண்டிற்கும் பேதம் என்பதே கிடையாது. ஆகவே பெயரளவில் சித்சக்தி என்று ஜீவனை சொல்லப்படுகிறதே அன்றி ஜட சக்தியைப்போல் பேதம் சொல்லப்படவில்லை. விஷ்ணுவைக்காட்டிலும் ஜீவன் வேறல்ல. இரண்டுமே சித்ஸ்வரூபம் என்றே சொல்லப்படுகிறது.

பூர்வ:- இவ்விதம் சொல்லப்படுமானால் ப்ரதானபுருஷாத்மன: வாக்யத்தில் உள்ள புருஷ சப்தம் எதைக்குறிக்கின்றது? ப்ரதானம் என்பதே அவித்யை என்றும் புருஷன் என்பது ஜீவன் என்றுதானே சொல்லவேண்டும். இரண்டுபேரும் விஷ்ணுவினால் வ்யாபிக்கப்படுவதாக சொல்லப்படுகிறதே? அதனால் விஷ்ணு சக்தியே ஜீவன் என்று சொன்னால் அதனால் ப்ரதானம் வ்யாபிக்கப்படுவதாக சொல்லலாம். அவ்விதமின்றி புருஷன் வ்யாபிக்கப்படுவதாக சொல்ல முடியாது. அதனால் ப்ரதானம் வேறு புருஷன் வேறு என்றும், இந்த இரண்டும் விஷ்ணுவினால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது என்றே சொல்லவேண்டும். விஷ்ணுவே ஜீவன் என்று அபேதம் சொல்வது சரியல்ல (பொருந்தாது).

ஸித்தா:- இந்த ச்லோகம் பற்றி மேலும் விசாரிக்கப்படுவதால், இங்கு மேலும் விஸ்தரிக்க வில்லை, அதனால் அந்த ஸமயம் இதைப்பற்றி விசாரிக்கலாம்.

88

'यया क्षेत्रज्ञशक्तिस्सा वेष्टिता नृप सर्वगे'तिश्लोकार्थविचारः

'யயா க்ஷேத்ரஞ்ஞ சக்திஸ்ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா' என்கிற ச்லோகார்த்த விசார:

விஷ்ணு புராணம் 6.7.62

'யயா க்ஷேத்ரஞ்ஞ சக்திஸ்ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா'
ஸம்ஸாரதாபானகிலான் அவாப்னோத்யதிஸந்ததான்

यया क्षेत्रज्ञशक्तिस्सा वेष्टिता नृप सर्वगा
संसारतापानखिलानवाप्नोत्यतिसंततान्

என்ற ச்லோகமும் அத்வைத ஸித்தாந்தத்திற்கு ஸாதகமாகவும், த்வைத ஸித்தாந்தத்திற்கு தூக்கு கயிறாகவும் இருக்கின்றது. இந்த ச்லோகம் பரபக்ஷஸாதகம் என்பதால் த்வைத ஸித்தாந்தத்திற்கு ஹானி என்றே சொல்லவேண்டும்.

அதாவது, இந்தச்லோகத்தின் கருத்து என்னவென்றால், ஹே! ராஜாவே க்ஷேத்ரஞ்ஞசக்தி என்று சொல்லப்பட்ட அந்த சக்தி எங்கும் நிறைந்திருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. ஆனால் உன் ஸித்தாந்தத்தில் க்ஷேத்ரஞ்ஞன் என்ற ஜீவனை அணு என்று சொல்லப்படுகிறது. இந்தச்லோகத்தினால் ஜீவன் அணு என்று சொல்லப்படுவது பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல க்ஷேத்ரஞ்ஞசக்தி, என்று ஏகத்வ வசனம் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றதால், ஜீவர்கள் அனேகம் என்று சொல்லப்படும் உன் ஸித்தாந்தத்திற்கு பாதகமாக இருக்கின்றது. அதனால் இந்தச்லோகமும் அத்வைதபரம் என்பதில் ஸந்தேஹத்திற்கே இடமில்லை.

'तया तिरोहितत्वा'दित्यादिश्लोकार्थविचारः ॥

'தயா திரோஹிதத்வாத்' இத்யாதி ச்லோகார்த்த விசார:

விஷ்ணுபுராணம் 6.7.63

ஸித்தா:-

'தயா திரோஹிதத்வாச்ச சக்தே: க்ஷேத்ரஞ்ஞஸம்ஞிதா
ஸர்வபூதேஷு பூபால தாரதம்யேன வர்த்ததே'

तया तिरोहितत्वाच्च शक्तेः क्षेत्रज्ञसंज्ञिता ।
सर्वभूतेषु भूपाल तारतम्येन वर्तते

என்ற ச்லோகமும் அத்வைதத்திற்கு ஸாதகமாகவே இருக்கின்றது

அதாவது க்ஷேத்ரஞ்ஞசக்தி என்பது ஸர்வ பூதங்களிலும் தாரதம்யமாக இருக்கின்றது, இதற்கு என்ன காரணம் என்றால் ஜீவசைதன்யம் அவித்யா சக்தி என்ற உபாதியினால் மறைக்கப்பட்டிருப்பதால், ஸர்வபூதங்களிலும் தாரதம்யேன ஜீவன் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆனால், ஸ்வயமாக ஜீவசைதன்யத்தில் தாரதம்யம் கிடையாது உபாதியினால் தான் அனேகத்வம், தாரதம்யம் எல்லாம் ஏற்படுகிறது. அதையே 'திரோஹிதத்வாத் தாரதம்யேன வர்த்ததே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் இல்லையென்றால், அனேக க்ஷேத்ரஞ்ஞர்கள் இருப்பார்களேயானால் 'க்ஷேத்ரஞ்ஞாஸ்தாரதம்யேன ஸ்வஸ்வநியத தேஹேஷு வர்தந்தே' என்றே சொல்லப்பட்டிருக்க வேண்டும். அதனால் உபாதிவசாத் நானாத்வம் என்றே இந்தச்லோகத்தில் ஸ்பஷ்ட்டமாகவே சொல்லப்பட்டிருக்கின்றது.

90

अथ 'प्रधान'मित्यादिश्लोकार्थविचारः ।

அத'ப்ரதான'மித்யாதி ச்லோகார்த்தவிசார:

விஷ்ணுபுராணம் 2.7.29 to 32

'ப்ரதானம் ச புமாம்ச்சைவ ஸர்வபூதாத்மபூதயா.
விஷ்ணுசக்த்யா மஹாபுத்தே வ்ருதௌ ஸம்ச்ரயதர்மிணௌ.
தயோ:ஸைவ ப்ருதக்பாவகாரணம் ஸம்ச்ரயஸ்ய ச.
யதாஸக்தம் ஜலே வாதோ பிபர்தி கணிகாசதம்.
சக்திஸ்ஸாபி ததாவிஷ்ணோ: ப்ரதானபுருஷாத்மன:'

प्रधानं च पुमांश्चैव सर्वभूतात्मभूतया ।
विष्णुशक्त्या महाबुद्धे वृतौ संश्रयधर्मिणौ ॥
तयोस्सैव पृथग्भावकारणं संश्रयस्य च ।
यथासक्तं जले वातो बिभर्ति कणिकाशतम् ॥
शक्तिस्सापि तथा विष्णोः प्रधानपुरुषात्मनः ॥

என்ற ச்லோகார்த்த விசாரம்.

ஸித்தா:- ஸர்வ சரீரங்களிலும் விஷ்ணு சக்தி என்பதே ஸ்வரூபபூதமாக இருக்கின்றது. விஷ்ணு சக்தியாக இருந்தால்தான் ஸர்வசரீரங்களிலும் வ்யாபித்திருக்கின்றது என்று சொல்லமுடியும். அவ்விதமின்றி விஷ்ணுவினுடைய சக்தி என்று சொல்லப்படுமானால், அது ஸர்வ சரீரங்களிலும் ஸ்வரூபபூதமாக வ்யாபித்திருக்கின்றது என்று சொல்லமுடியாது. ஏனெனில் விஷ்ணுவினுடைய சக்தி என்றால், அதுமாயை என்றோ, அவித்யை என்றோ சொல்லவேண்டும். அது ஜடம் என்பதால் ஸர்வசரீரங்களுக்கும் ஸ்வரூபபூதம் என்று சொல்வது பொருந்தாது. அதனால் விஷ்ணுரூபமானசக்தி என்றே அர்த்தம் சொல்லப்படவேண்டும். அதாவது வ்யாபகமான சைதன்யஸ்வரூபமே ஸர்வபூதங்களுக்கும் பூதாத்மா என்று சொல்லப்படுகிறது. கார்யகம்யமான நிஸ்தத்வமான மாயையை ஸர்வபூதங்களுக்கும் ஸ்வரூபம் என்று சொல்வது பொருந்தாது. ஆகவே ப்ரஹ்மம்தான் ஸர்வத்திற்கும் ஆத்மா என்று *'ஸ ஆத்மேதி'* என்ற ச்ருதியும்' *'ஆத்மத்வாத் ஸர்வபூதானாம்'* (आत्मत्वात्सर्वभूतानाम्) என்று பாகவதத்திலும் தெரிவிக்கப்படுகிறது. விஷ்ணுவையே ஸர்வத்திற்கும் ஆத்மா என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் சொல்லப்படுமானால், ப்ரஹ்மமே விஷ்ணு சக்தி என்று சொல்லமுடியுமா என்றால், ப்ரஹ்மமே விஷ்ணு என்றுதான் அர்த்தம். விஷ்ணுசக்தி என்று

சொல்லப்படுவதன் காரணம் என்ன என்றால் ஸர்வவ்யாபியாக இருக்கின்ற சித்சக்தி என்றே அர்த்தம்.

இந்த ச்லோகத்தில் சொல்லப்படும் ப்ரதானம் என்பது ஜடதத்வம் என்றும், புமான் என்பது ஜீவனென்றும், விஷ்ணு ரூபமான சக்தியினால் இவை எல்லாம் ஆவ்ருதமாக மறைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இதன் தாத்பர்யம் என்னவென்றால் ஜடதத்வமானது விஷ்ணு ரூபசக்தியில் ஆரோபிதம் என்றும், ஜீவன் விஷ்ணுவின் ப்ரதி பிம்பம் என்றும் இவை இரண்டுமே விஷ்ணுரூப சக்தியினால் சூழப்பட்டிருக்கின்றது என்றே சொல்லப்பட்டிருக்கின்றது. விஷ்ணுசக்தி என்று கர்மதாரயஸமாஸத்தினால், விஷ்ணுச்சாஸௌ சக்திச்ச விஷ்ணுசக்தி என்று, விஷ்ணுவான சக்தி (விஷ்ணுசக்தி:) என்று தெரிவிக்கின்றது. விஷ்ணோ: சக்தி: என்று தத் புருஷ ஸமாஸத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் விஷ்ணுவின் ஸ்வரூபசக்தி என்றே அர்த்தம் சொல்லவேண்டுமே அன்றி, ஜடசக்தியை அர்த்தமாக சொல்வது சரியல்ல. இவ்விதம், விஷ்ணுசக்தியான பரமாத்மாவே அவித்யையில் ப்ரதிபிம்பமாக இருந்து, ப்ரதானம் என்றும் புருஷனென்றும் பேதத்திற்கு காரணமாகின்றது. ஜடமான ப்ரதானம் ப்ரஹ்மத்தில் ஆரோபிதம். புருஷன் ப்ரஹ்மத்தின் ப்ரதிபிம்பம். ஸமானஸ்வபாவமான புருஷன், உபாதியினால் வேறாக அறியப்படுகிறான். அதனால்தான் ப்ரதிபிம்பம் புருஷன் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் ப்ரதானம், புருஷன் இரண்டும் உபாதியினால் ப்ரஹ்மத்தை அன்றி வேறாக அறியப்படுவதால், இரண்டுமே ஆரோபிதம் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் இரண்டு வஸ்துவின் தோற்றத்திற்கு, அவித்யாஉபாதிகனான பரமாத்மாவே காரணம். அவித்யையே ஆரோபிதமென்பதால் அதன் காரணமாகத் தோன்றுவதும் ஆரோபிதம்தான். அதனால், ப்ரதானத்திற்கு அதிஷ்ட்டானமாகவும், புருஷனுக்கு பிம்பஸ்தானீயமாகவுமிருப்பது இந்த விஷ்ணு சக்தியே என்பதால் அதிஷ்ட்டானமாகவும், பிம்பஸ்தானீயமாகவும் இருந்து பேதமான இரண்டு வஸ்து தோற்றத்திற்கு காரணமாக இருக்கின்றது. மேலும், இந்த க்ஷேத்ரஞ்ஞன் ஜடமான ப்ரதானத்தை, இது என்னுடைய போக்யவஸ்து என்று ஆச்ரயிக்கிறான். அதாவது புருஷன் சைதன்ய ஸ்வரூபமாக இருக்கின்றதால் தன்னுடைய சித்சக்தியினால் ப்ரதானம் எனக்கு போக்யம் என்று அறிந்து அதை ஆச்ரயிக்கிறான். இதற்கு விஷ்ணுசக்தி என்ற சக்தியே காரணம். சேதனஸ்வரூபனான க்ஷேத்ரஞ்ஞன் ஜடவஸ்துக்களை ப்ரகாசப்படுத்துவதுடன் இது எனது போக்யம் என்று அத்யாஸம் ஏற்படச்செய்கின்றது. அதனால் ஜடசக்தியான ப்ரதானம், சித்சக்தியை ஆச்ரயித்து இருக்கின்றது என்றும் அர்த்தம் செய்யலாம்.

அல்லது வேறொரு முறையிலும் அர்த்தம் செய்யலாம். அதாவது, ஸர்வபூதாத்மாவான ப்ரஹ்மத்தில் உண்டான விஷ்ணு சக்தி என்ற மாயை, ப்ரதானம் புருஷன் என்ற இரண்டையும் ஆவ்ருதம் செய்வதால், அதனால் ஏற்பட்ட வ்யாமோஹத்தினால், புருஷன் ப்ரதானத்தை ஆச்ரயித்து இருக்கின்றான். இதனால் புருஷனுக்கும், ப்ரதானத்திற்கும் அவிவேகத்தினால் அன்யோன்ய தாதாத்ம்ய அத்யாஸம் ஏற்படுகிறது. இவ்வித அத்யாஸம் விவேகத்தினால் நிவர்த்திக்கின்றபோது பரமாத்ம ஸ்வரூபத்தில் ஏகமாகிறான். இவ்விதம் ஏற்படும் அன்யோன்ய அத்யாஸம், ஜலத்துடன் கலந்த பால்போல் ஒன்றாகவே அறியப்படுவதால்,

ப்ரதானத்தையும், புருஷனையும் பிரித்து அறிவதற்கும் அந்த மாயைதான் காரணமாகிறது. எப்படியெனில், வித்யை என்பதும் மாயாகார்யம்தான். அதனால் வித்யையினால் ஏற்படும் அகண்டாகாரவ்ருத்தியினால்தான் ஜீவபரமாத்ம ஐக்யம் ஏற்படுகிறது. அதனால் மாயை காரணம் என்று சொல்லப்படுகிறது. அனேக திவலைகள் ஒன்றாகச் சேர்ந்தது ஜலம். காற்று வீசுகின்றபோது, ஜலத்தில் உள்ள திவலைகளை காற்று எவ்விதம் தாங்கி நிற்கின்றதோ, அதுபோல் ஜடாம்சம், சைதன்யாம்சமென்ற இரண்டுஅம்சங்களுடன் கூடிய விஷ்ணுசக்தியான சித்சக்தி என்ற சைதன்யாம்சம் இந்த ஜகத்தை தாங்கி நிற்கிறது என்று சொல்லப்படுகிறது. அல்லது சைதன்ய விசிஷ்ட்ட மாயா சக்தியோ அல்லது மாயாஉபஹிதசைதன்ய சக்தியோ தாங்குகிறது என்றும் சொல்லலாம். ஆகவே ப்ரதானம் புருஷன் முதலான ஸர்வத்திற்கும் ஸ்வரூபபூதமாக இருக்கின்ற விஷ்ணுவின்சக்தி, ஜலத்தின் திவிலைகளை காற்றானது தாங்கி நிற்பதுபோல் ஜகத்தை தாங்குகிறது என்று சொல்லப்படுகிறது. (சித்சக்தியோ, மாயாசக்தியோ தாங்குகிறது என்றே சொல்லப்படுகிறது).

பூர்வ:- மாயை என்றும் ப்ரதானம் என்றும் சொல்லப்படும் இரண்டும் ஒன்றா அல்லது வேறா? மாயை என்று அத்வைதிகளால் சொல்லப்படுகிறது. ப்ரதானம் என்று ஸாங்க்யர்களால் சொல்லப்படுகிறது என்று சொல்லப்படுமானால், அதுசரியல்ல. ஏனெனில் ஸாங்க்யனால் சொல்லப்படும் ப்ரதானம் உபநிஷத் ப்ரதிபாத்யம் அல்ல என்று ஈக்ஷத்யதிகரணத்தில் வ்யாஸரால் சொல்லப்பட்டிருக்கின்றது. அதனால் ப்ரதானம் என்றால் அர்த்தம் என்ன?

ஸித்தா:- மாயை, த்ரிகுணாத்மகம். இதில் ஸத்வகுணப்ரதானம் என்றும் தமோகுணப்ரதானம் என்றும் இரண்டுவிதம். இதில் ஸத்வகுணப்ரதானமென்று சொல்லப்படுவதிலும், சுத்தஸத்வம், மலின ஸத்வம் என்று இரண்டுவிதம் சொல்லப்படுகிறது. இதில் சுத்தஸத்வப்ரதானமாக இருக்குமானால் அதை மாயை என்றும், மலின ஸத்வகுணப்ரதானமாக இருக்குமானால் அதை அவித்யை என்றும், தமோகுணப்ரதானமாக இருக்குமானால் அதை ப்ரதானம் என்றும் சொல்லப்படுகிறது. இந்த ப்ரதானத்திலிருந்தே ஜகத் உற்பத்தி சொல்லப்படுகிறது.

பஞ்ச பூதங்களின் ச்ருஷ்டிக்கு உபாதானகாரணம் தமோமயமான மாயை என்றும், இதையே ப்ரதானம் என்றும் சொல்லப்படுகிறது. மலினஸத்வப்ரதானமான மாயையே அவித்யை என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் மலினஸத்வப்ரதானமான மாயை (அவித்யை) என்பதே ஜீவ உபாதி என்றும், சுத்த ஸத்வப்ரதானமாயை ஈச்வர உபாதி என்றும் சொல்லப்படுகிறது. அதனால் இவ்விதம் சொல்லப்படும் ப்ரதானம், ஸாங்க்யர்களால் சொல்லப்படும் ப்ரதானம் அல்ல. தமப்ரதானமாக இருக்கின்ற மாயையே ப்ரதானம் என்று சொல்லப்படுவதை வ்யாஸர் நிராகரணம் செய்யவில்லை. சைதன்ய அபேக்ஷை இல்லாமலேயே ஸ்வதந்த்ரமாகவே ப்ரதானம் இருக்கின்றதென்றும், அதுவும் ஒரு தத்வம் என்றும், அதுவே ஜகத் காரணம் என்று சொல்லப்படும் ப்ரதானத்தையே வ்யாஸர் நிராகரணம் செய்திருக்கின்றார்.

91

'तदेतदक्षय'मित्यादिश्लोकार्थविचारः ।

'ததேததக்ஷயம்' என்பது முதலான ச்லோகார்த்தவிசார:

விஷ்ணுபுராணம் 1.22.59

இதன்பிறகு '*ததேததக்ஷயம் நித்யம் ஜகன்முனிவராகிலம். ஆவிர்பாவதிரோபாவஜன்ம நாசவிகல்பவத்*' (तदेतदक्षयं नित्यं जगन्मुनिवराखिलं। आविर्भावतिरोभावजन्मनाशविकल्पवत्) என்ற ச்லோகம் ஜகத்ஸத்யம் என்று தெரிவிக்கின்றதால் ஜகத் ஸத்யம் என்று ஸித்திக்கின்றது என்று சொல்லப்படுகிறது. இது சரியல்ல என்று நிராகரணம் செய்யப்படுகிறது.

ஸித்தா:- ஆவிர்பாவம், திரோபாவம், ஜன்மம், நாசம் என்ற தன்மைகளையுடைய ஜகத்தை அக்ஷயம் என்றும் நித்யம் என்றும் எவ்விதம் சொல்லமுடியும்? ததேததக்ஷயம் என்ற பதம் ப்ரத்யகபின்னபரப்ரஹ்மம் அக்ஷயம் என்று, ஷட்பாவவிகாரங்கள் அற்ற ஸ்வரூபம் என்று தெரிவிப்பதற்காக உபலக்ஷணமாக தெரிவிக்கின்றது. நித்யம் என்றாலே அதில் எந்த விதமான விகாரங்களும் இருக்கமுடியாது. நித்யமான ப்ரத்யகபின்னபரப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறான, இந்த ப்ரபஞ்சம், ஆவிர்பாவ, திரோபாவமுள்ளதாகவும் ஜன்ம நாசம் உள்ளதாக இருப்பதாலும் அநித்யம் அஸத்யம் என்றே இந்த ச்லோகார்த்தம் தெரிவிக்கின்றது. இவ்விதம் இந்த ச்லோகத்தில், ஒரு வாக்யம் ப்ரஹ்ம ப்ரதிபாதனமாகவும், மற்றொரு வாக்யம் ஜகத் ப்ரதிபாதனமாகவும் இருக்கிறது.

இவ்விதம் அந்த ச்லோகத்திற்கு வெவ்வேறு வாக்யமாக அர்த்தம் செய்யக்கூடாது என்றும் '*ததேதத் அக்ஷயம் நித்யம் ஜகத்*' என்று எல்லா பதங்களையும் ஒன்று சேர்த்து அர்த்தம் செய்யப்படவேண்டும் என்று உன்னால் சொல்லப்படுமானால், ஒரே வாக்யமாகவே அர்த்தம் சொல்லலாம். எப்படியெனில், ஸ்வரூபத: ஜகத் என்பது ஆவிர்பாவம் திரோபாவம் அநித்யத்வம் உடையதாக இருந்தபோதிலும், காரணாத்மனா அக்ஷயம், நித்யம் என்று சொல்லலாம். ஸதாத்மனா நித்யம் என்றாலும் ஸ்வத: நித்யம் என்று ஒத்துக்கொள்ளக் கூடியதல்ல. லோகத்தில் மித்யாபூதமான, ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பம் முதலானவைகளை அநித்யம் என்று சொல்லலாம். ஆனால் ரஜ்ஜு ஸர்ப்பம் போல் ஜகத் பாதிக்கப்படாததால் ஜகத் அநித்யம் என்று சொல்வது சரியல்ல என்றும் நித்யம் என்று சொல்லவேண்டும் என்றும் ஸுதர்சனரால் சொல்லப்படுகிறது. அதுவும் சரியல்ல. முன்னால் சொல்லப்பட்ட காரணங்களினால் ஜன்ம நாசம் உடைய ஜகத், ஸத்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஜன்ம நாசம் என்றாலே பாத்யம் என்று தான் சொல்லவேண்டும்.

பூர்வ:- ஜகத்திற்கு ஜன்மாவும் கிடையாது நாசமும் கிடையாது என்று சொல்லலாமே?

ஸித்தா:- '*யதோவா இமானி பூதானி ஜாயந்தே, யேன ஜாதானி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தீதி*' என்று எதிலிருந்து இவையெல்லாம் உண்டாயிற்றோ,

எதில் ஸ்திதி பெற்றிருக்கிறதோ எதில் லயத்தை அடைகிறதோ அதுவே ப்ரஹ்மம் என்று ஜகத் உற்பத்தி விநாசம் உள்ளது என்றே ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது. அதேபோல் '*ஆத்மன: ஆகாச: ஸம்பூத...*' என்ற ச்ருதிவாக்யம் ஜகத் உற்பத்தி விநாசமுடையது என்று தெரிவிக்கின்றதால், உற்பத்தி விநாசம் இல்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- எங்கள் ஸித்தாந்தம் ஸத்கார்யவாதம். இல்லாதது உண்டாகிறது என்றோ, இருக்கிறது நாசம் ஆகின்றதென்றோ சொல்லமுடியாது. வஸ்து என்றால் அது எப்போதும் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். ஆனால் அந்த வஸ்து ஒரு ஸமயம் அவஸ்த்தா விசேஷத்தை அடையும், ஒரு ஸமயம் அவஸ்த்தாவிசேஷம் இல்லாமல் இருக்கலாம். இவ்விதம் அவஸ்த்தாந்தர ஸ்வீகாரத்தையே ஜன்மா என்றும், அவஸ்த்தாவிசேஷம் இல்லை என்றால் நாசம் என்றும் சொல்லப்படுகிறது. அதனால் இல்லாத வஸ்து உண்டாகிறது என்றோ, அதன் பிறகு நாசத்தை அடைகிறது என்றோ சொல்லமுடியாது. ஆகவே உண்டாகி இருக்கின்ற ஜகத் நசிக்கிறது என்று எங்களால் சொல்லப்படாததால் ஜகத் நித்யம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜகத் என்றாலே நாமம், ரூபம் என்ற இரண்டை அன்றி வேறு எதுவுமே இல்லை. அவஸ்த்தாவிசேஷம் என்றால் அதுவும் ஒரு ரூபம் ஒரு நாமா உடையது என்றே சொல்ல வேண்டும். அதனால் ஜகத் என்று ஒன்று இருப்பதாகவும் அதில் ஏற்படும் அவஸ்த்தா விசேஷமே உற்பத்தி விநாசம் உடையது என்று சொல்வது மிகவும் அபத்தம். ஜகத் என்பதே அவஸ்த்தைதான். ம்ருத் என்பது அவஸ்த்தாவிசேஷம் உடையது என்று சொல்லலாமே அன்றி ம்ருத் கார்யமான கடம் அவஸ்த்தாவிசேஷத்தை எடுத்துக்கொள்வதாக சொல்லமுடியாது. அவஸ்த்தாவிசேஷமே கடம் என்கிற கார்யம். ஈச்வரன் ஜகத்தை ச்ருஷ்டிக்கின்றார் என்றால் நாமம், ரூபம் இரண்டையும் ச்ருஷ்டிக்கின்றார் என்பதே தாத்பர்யம். இதையே, '*அஸ்தி பாதி ப்ரியம் ரூபம் நாம சேத்யம்சபஞ்சகம், ஆத்யத்ரயம் ப்ரஹ்மரூபம், ஜகத்ரூபம் ததோத்வயம்*' என்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றது. அதாவது ஜகத் என்பதில் ஐந்து அம்சங்கள் இருக்கின்றது. அதில் அஸ்தி, பாதி, ப்ரியம் என்ற மூன்று அம்சங்களும் ப்ரஹ்ம ஸ்வரூபம். நாமம் ரூபம் என்ற இரண்டுமே ஜகத் ரூபம் என்று தெரிவிக்கின்றது. இதன் அர்த்தம் என்னவென்றால் ஜகத் இருக்கிறது, ப்ரகாசிக்கின்றது. ப்ரியமாக இருக்கிறது என்ற மூன்றும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைச்சேர்ந்தது. நாமம் ரூபம் என்பதற்கு அஸ்தித்வமோ, ப்ரகாசகத்வமோ, ப்ரியத்வம் என்பதோ கிடையாது. ஆனால் நாமரூபம் இரண்டும் எந்த சைதன்ய ஸ்வரூபத்தில் ஆரோபிதமோ அந்த அதிஷ்ட்டான சைதன்யத்தின் ஸ்வரூபமான அஸ்தி, பாதி, ப்ரியம் என்ற மூன்று தன்மைகளும் ஆரோபிதத்திலும் ப்ரகாசிக்கின்றது. அதனால் நாமம் ரூபம் என்ற இந்த ஜகத்திற்கு தனித்த ஸத்வமோ, ப்ரகாசிக்கின்ற தன்மையோ கிடையாது. அதனாலேயே ஜகத் அநித்யம் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக, குலாலன் ம்ருத் என்ற ஒரு வஸ்துவைக் கொண்டு அதில் ஒருவிதமான அவஸ்த்தையை உண்டாக்குகின்றபோது அதற்கு ஒரு விதமான ரூபம் ஏற்படுகிறது, அந்த ரூபத்திற்கு ஒரு நாமா சொல்லப்படுகிறது. இதையே கட உற்பத்தி என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் கடம் உற்பத்தி ஆவதற்கு முன், அந்த அவஸ்த்தா விசேஷம் இல்லாததால் அதையே இதற்கு முன் நாசம் இருந்தது என்று சொல்லப்படுகிறது.

ம்ருத் என்பது பிண்டாவஸ்த்தையில் இருக்கின்றபோது கடாவஸ்த்தையில் இல்லை. பிண்டாவஸ்த்தை மாறி கடாவஸ்த்தை ஏற்படுகிறது. கடம் உடைந்த பிறகு கடம் என்ற நாமாவஸ்த்தை இல்லை. அதன் பிறகு அதுவே கபாலம் என்ற நாமாவஸ்த்தையாக மாறுகிறது. இவ்விதம் அவஸ்த்தாவிசேஷங்களையுடைய ஜகத், ஸத் என்று சொல்வது சரியல்ல. ஆகவே, பிண்டாவஸ்த்தையில் கடாவஸ்த்தை கிடையாது. அதனால் பிண்டாவஸ்த்தையில் கடாவஸ்த்தை இருந்தது என்று சொல்லமுடியாது. ஏனெனில் பிண்டாவஸ்த்தை என்பதும் கடாவஸ்த்தை என்பதும் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட அவஸ்த்தைகள். ஒன்று இருக்கின்ற போது மற்றொன்று இருக்கமுடியாது. இரண்டும் விருத்தமான ரூபம். ஆகையால் ஸத்கார்யவாதம் என்பதே ஸித்திக்கமுடியாது.

பூர்வ:- கடம் படம் போன்றவைகள் போல, பூத பௌதிகமான இந்த ஜகத் அநித்யம் என்றே சொல்லலாம். ஆனால் இந்த ஜகத்திற்கு மூலகாரணமான அசித் த்ரவ்யம் ஸத்யம் என்று சொல்லலாமே? எவ்விதம் ம்ருத் கார்யமான கடாதிகள் என்ற அவஸ்த்தாவிசேஷங்கள் அநித்யமாக இருந்தாலும், காரணமான ம்ருத் ஸத்யம் என்று சொல்லப்படுகிறதோ, அதுபோல் ப்ரக்ருதியின் அவஸ்த்தாவிசேஷமான ஜகத் மித்யையாகஇருந்தாலும், அதற்கு காரணமான ப்ரக்ருதி ஸத்யமாக இருக்கலாமே, அதனால் ப்ரக்ருதி என்ற அசித் வஸ்து நித்யம் என்றே சொல்லவேண்டும். கடம் எவ்விதம் ஸ்வரூபேண ம்ருத் என்று சொல்லப்படுகிறதோ அதேபோல் ஜகத் என்பதும் வஸ்து ஸ்வரூபேண சித் ஸ்வரூபம் தான் என்ற தாத்பர்யத்தில், ஜகத் நித்யம் என்று அக்ஷயம் என்று பராசரர் இந்த ச்லோகத்தில் தெரிவிக்கின்றார்.

ஸித்தா:- இதுவும் சரியல்ல. அசித் வஸ்து, சித் பரதந்த்ரமாக இருக்கின்றதால், சைதன்ய அதீனமாகவே அசித் வஸ்து ஸித்திக்கின்றது. எது நித்யமோ அதுவே ஸ்வதந்த்ரம். லோகத்திலும் பரதந்த்ரமாக இருக்கின்ற வஸ்துக்கள் எல்லாமே அநித்யம் என்று அறியப்பட்ட உண்மை. ஞானம் ஒன்றே ஸ்வதந்த்ரம். அதுவே நித்யம், மற்ற ஸர்வமும் அநித்யம். சைதன்யம் ஒன்றே அன்யாதீனம் என்று சொல்லமுடியாது. சைதன்யம் என்பதும் பரதந்த்ரம் என்று சொல்லப்படுமானால் அனவஸ்த்தை முதலான தோஷங்கள் ஸம்பவிக்கும். அதனால் 'ஞானம் யதா ஸத்யமஸத்யமன்யத்' என்று பராசரரே தெரிவிக்கின்றார். அதாவது ஞானம் ஒன்றே ஸத்யம், மற்ற ஸர்வமும் அஸத்யம் என்றே தெரிவிக்கின்றார்.

பூர்வ:- 'ஞானம்' என்பதும் பரதந்த்ரம்தானே? ஞாதா இல்லையானால் ஞானம் எவ்விதம் ஏற்படமுடியும்? அதனால் ஞானமும் ஞாத்ருதந்த்ரம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- வ்ருத்தி ஞானம் என்பதே ஞாதாவிற்கு பரதந்த்ரம் என்று சொல்லலாம், ஆனால் ஞாதாவிற்கு ஸ்வரூபபூதமான ஞானம் பரதந்த்ரம் அல்ல. உபாதியினால் ஞானமே ஞாதாவாக ஆகிறது. அதனால் ஞாத்ருதந்த்ரம் ஞானம் என்று சொல்வது சரியல்ல. ஞாத்ருத்வம் ஞானத்தில் ஆரோபிதம், ஆரோபிதங்களுக்கு அதிஷ்ட்டானமே ஸ்வரூபம். அதனால் ஸ்வரூபபூத ஞானம் பரதந்த்ரமல்ல. அதுவே நித்யம்.

ம்ருத் கட த்ருஷ்ட்டாந்தத்தில், கடம் என்ற அவஸ்த்தாவிசேஷம் அநித்யம், ம்ருத் என்பதே ஸத்யம். அதேபோல் ஜகத் அநித்யமானாலும், ப்ரதானம் ஸத்யம் என்று தானே

சொல்லவேண்டும் என்று உன்னால் ஆக்ஷேபிக்கப்பட்டது. அதுவும் சரியல்ல. ஏனெனில் எது விகாரத்தை அடைகிறதோ அது ஸத்யமல்ல. அது அநித்யம். அதேபோல் ம்ருத் என்பதும் விகாரத்தை அடைவதால் அநித்யமே, அதேபோல் ப்ரதானமும் விகாரத்தை அடைவதால் அநித்யமே. 'யத் விகாரி தத் அநித்யம்' என்ற முறைப்படி ம்ருத்தும் ஸத்யமல்ல, ப்ரதானமும் ஸத்யமல்ல. இரண்டும் அநித்யம் என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- காலத்ரயத்திலும் எது பாதிக்கப்படுகிறதோ அதுவே அநித்யம். காலத்ரய பாத்யத்வம் அசித் வஸ்துவிற்கு சொல்லமுடியாது. ஏனெனில் ப்ரளயத்தில் அசித் வஸ்துவின் கார்ய ரூபம்தான் காரணமாக ஆகின்றதே அன்றி காரண ரூபம் மாறுதல் இன்றி இருந்தபடியே இருக்கின்றது. அதனால் அசித் வஸ்து நித்யம் என்று சொல்லலாம்.

ஸித்தா:- அசித் வஸ்து, ப்ரளய காலத்தில் காரணரூபேண இருக்கின்றது என்பதற்காக அதை ஸத்யம் என்று சொல்லப்படுமானால், ஞானோற்பத்தி காலத்தில் அசித் வஸ்து பாதிக்கப்படுவதால் அதை ஸத்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஞானம் ஏற்பட்ட பிறகும், அசித் வஸ்து உண்மையில் இருப்பதாக அறியப்படுமானால், ஜீவனுக்கு மோக்ஷம் என்பதே ஏற்படமுடியாது. ஏனெனில் அசித் ஸம்பந்தத்திலிருந்து விடுபட்டவனையே ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டவன் என்று சொல்லமுடியும். முக்தி நிலையிலும் அசித் வஸ்து ஸம்பந்தம் இருக்குமானால் அவனை முக்தன் என்று எவ்விதம் சொல்லமுடியும்? இந்த விஷயமும் முன்பு உன்னால் ஒத்துக்கொள்ளப்பட்டதுதான்.

பூர்வ:- முக்திகாலத்தில் அசித் வஸ்து இருந்தாலும் அந்த வஸ்துக்களுடன் ஜீவனுக்கு ஸம்பந்தம் இல்லை என்று சொல்லலாமே?

ஸித்தா:- சித் ஸம்பந்தம் இருந்தால்தான் அசித் வஸ்து இருக்கின்றதென்றே அறிய முடியும். சித் ஸம்பந்தம் இல்லை என்றால் எந்த வஸ்துவும் இருப்பதாகவே அறிவிற்கு விஷயமாகாது. அசித் அறியப்படுவதாலேயே சித்ஸம்பந்தம் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். ஜடமான அசித், தானே ப்ரகசிக்காது என்பதால் ஜீவ ஸம்பந்தம் இல்லாமல் அசித் வஸ்து இருக்கின்றதென்றே சொல்லமுடியாது. ஜீவ ஸம்பந்தமின்றி அசித் இருக்கமுடியாதாகையால் முக்தி நிலையில் ஜகத் பாதிக்கப்படுவதால் மித்யை என்றே அறியவேண்டும். ஜகத் பாதிக்கப்படுவதால் ஜகத் மித்யை என்று உன் மதஸ்த்தரான ரெங்கராமானுஜர் என்பவர் அவருடைய பாஷ்யத்தில் தெரிவிக்கின்றார் (ராமானுஜர் காலத்திற்கு பிற்பட்டவர் ரெங்க ராமானுஜர். உபநிஷத்துக்களுக்கு பாஷ்யம் எழுதி இருக்கின்றார்) அதனால் இந்த விஷயத்தில் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை.

92

रामानुजाभिमतक्षेत्रज्ञस्वरूपनिर्वचननिराकरणम्

ராமானுஜாபிமத க்ஷேத்ரஞ்ஞஸ்வரூப நிர்வசன நிராகரணம்

பூர்வ:- (ராமானுஜர்)—சித்வஸ்து, அசித்வஸ்து என்ற இரண்டினுடைய சேர்க்கையினால் க்ஷேத்ரஞ்ஞன் என்ற ஸ்வரூபம் உண்டாகிறது என்று சொல்லவேண்டும்.

ஸித்தா:- இதுவும் சரியல்ல. சித்வஸ்துவிற்கும் அசித் வஸ்துவிற்கும் சேர்க்கை என்பதே ஸம்பவிக்கமுடியாது. சித்வஸ்து ஞானம், அசித்வஸ்து ஞேயம். இந்த இரண்டும் எவ்விதம் ஒன்றாக சேரமுடியும்?

பூர்வ:- சித்வஸ்து ஞானமல்ல, ஞாதா என்றே சொல்லவேண்டும். அதனால் இரண்டும் ஒன்றாக சேரலாமே?

ஸித்தா:- ஞாதா என்று சொன்னாலும் ஞேயத்துடன் எவ்விதம் சேரமுடியும்? ஞாதாவான தேவதத்தனும் ஞேயமானகடமும் ஒன்றாக சேரமுடியாது.

பூர்வ:- க்ஷேத்ரத்தில், க்ஷேத்ரஞ்ஞன் ஸம்பந்தப்பட்டு அந்த சரீரத்தை ப்ரகாசப்படுத்துகிறான் என்பதால் அவனே க்ஷேத்ரஞ்ஞன் என்று சொல்லப்படுகிறதே? அதனால் அசித்துடன் ஸம்பந்தப்படவில்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்? 'இதம் சரீரம் கௌந்தேய *க்ஷேத்ரமித்யபிதீயதே ஏதத் யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஞ்ஞ இதி தத்வித:*' (इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते । एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः ।.) என்று தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- க்ஷேத்ரத்தில் க்ஷேத்ரஞ்ஞன் இருக்கிறான் என்று சொல்வது சரி. ஆனால் க்ஷேத்ரஞ்ஞன், க்ஷேத்ரத்தைக்காட்டிலும் வேறாக இருந்து, இந்த க்ஷேத்ரத்தை ப்ரகாசப் படுத்துகிறான் என்பதற்காக, க்ஷேத்ரஞ்ஞனும் க்ஷேத்ரமும் ஒன்றாக கலந்துவிடுகிறான் என்று சொல்லப்படவில்லை.

பூர்வ:- க்ஷேத்ரத்தில் இருக்கின்றவன், க்ஷேத்ரத்துடன் ஸம்பந்தப்படாமல் (கலக்காமல்) எவ்விதம் இருக்கமுடியும்?

ஸித்தா:- கடத்திற்குள் ஆகாசம் இருக்கின்றது என்றால் கடத்துடன் ஆகாசம் கலந்து விடுகிறது என்று சொல்லமுடியுமா? உபநிஷத்களெல்லாம் ஜீவன் அஸங்கம் என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- முக்த ஜீவன் அஸங்கன் என்று சொல்லலாம், பத்த ஜீவன் அஸங்கன் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- பத்தனாக இருந்த ஜீவனே, முக்தனாக ஆகிறான். இரண்டுபேரும் வெவ்வேறு ஜீவர்கள் அல்ல. எந்த வஸ்துவாக இருந்தாலும் அது அஸங்கமாக இருக்கவேண்டும், அல்லது ஸஸங்கமாக இருக்கவேண்டும். அஸங்கமாக இருந்து ஸஸங்கமாக ஆகிறது என்றோ, அல்லது

ஸஸங்கமாக இருந்து அஸங்கமாக ஆகிறது என்றோ சொல்லமுடியாது. அது மட்டுமல்ல ஜீவன் நிரவயவம் என்பதால் எதனுடனும் ஸம்பந்தம் ஏற்படமுடியாது.

பூர்வ:- *'க்ஷேத்ரக்ஷேத்ரஞ்ஞஸம்யோகாத் தத் வித்தி பரதர்ஷப'* (क्षेत्रक्षेत्रज्ञसंयोगात् तद्विद्धि भरतर्षभ) என்று பகவானே கீதையில் தெரிவிக்கின்றாரே? அதனால் ஜீவனுக்கு அசித் ஸம்யோகம் இருப்பதாகத்தான் சொல்லவேண்டும்.

ஸித்தா:- கீதை ஆத்யாஸிக ஸம்பந்தத்தை (ஆரோபிதஸம்பந்தத்தை) தெரிவிக்கின்றதே அன்றி வாஸ்தவ ஸம்பந்தம் இருப்பதாக தெரிவிக்கவில்லை. ச்ருதி வாக்யத்திற்கு விருத்தமாக வாஸ்தவமான ஸம்பந்தம் இருப்பதாக சொல்லப்பட்டிருக்குமானால், கீதையும் அப்ரமாணம் என்று சொல்லநேரிடும். அதனால் ச்ருதிவிருத்தமாக பகவான் கீதையில் சித் அசித் ஸம்பந்தம் இருப்பதாக தெரிவிக்கிறார் என்று சொல்வது சரியல்ல. சைதன்யம் ஒருபோதும் அசித்துடன் ஸம்பந்தப்படமுடியாது. அதனால்தான் சித்வஸ்து நித்ய சுத்தம் என்று ச்ருதி தெரிவிக்கின்றது. மத்தியில் ஸம்பந்தம் இருப்பதாக தோன்றுமானால் அது ப்ராந்தி ஞானமே அன்றி யதார்த்த ஞானம் இல்லை.

பூர்வ:- சித்வஸ்து, க்ஷேத்ரஞ்ஞன் என்ற அவஸ்த்தையில், புண்யபாபரூபமாக பரிணமிக்கின்ற கர்மாவாக மாறக்கூடிய அவித்யையினால் மறைக்கப்பட்டிருக்கிறான் என்று ராமானுஜர் க்ரந்தத்தில் தெரிவிக்கின்றாரே?

ஸித்தா:- இதுவும் சரியல்ல. உன் ஸித்தாந்தத்தில் முக்தன் ஸர்வஞ்ஞன் என்று சொல்லப் படுகிறது. ஸர்வஞ்ஞத்வம் இருக்கின்றது என்றால் க்ஷேத்ரஞ்ஞத்வமும் இருப்பதாகவே சொல்லவேண்டும். ஏனெனில் சைதன்யத்தை அன்றி வேறாக இருப்பதெல்லாம் சேர்த்து ஸர்வம் என்று சொல்லப்படுகின்றது. இதையே க்ஷேத்ரம் என்று சொல்லப்படுகிறது. ஸர்வஞ்ஞன் என்றால் ஸர்வத்தையும் ப்ரகாசப்படுத்துபவன் என்று அர்த்தம். ஸர்வமும் க்ஷேத்ரம் என்றால் க்ஷேத்ரத்தை ப்ரகாசப்படுத்துபவன் க்ஷேத்ரஞ்ஞன். ஆகையால் க்ஷேத்ரஞ்ஞனுக்கு பாபபுண்யாதிகள் பீடிக்கின்றது என்றால், முக்தனும் பாபபுண்யங்கள் உள்ளவன் என்று சொல்லநேரிடும். கர்மஸம்பந்தம் இருக்குமானால் அவனை முக்தன் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- க்ஷேத்ரஞ்ஞ அவஸ்த்தை என்றால், க்ஷேத்ரத்தை ப்ரகாசப்படுத்துவது என்று அர்த்தம் செய்யவேண்டாம். பத்தாவஸ்த்தை என்பதே க்ஷேத்ரஞ்ஞ அவஸ்த்தை என்று சொல்கிறேன்.

ஸித்தா:- 'க்ஷேத்ரஞ்ஞன்' என்ற பதத்திற்கு பத்தாவஸ்த்தை என்று உன் இஷ்டப்படி எவ்விதம் அர்த்தம் செய்யமுடியும்? *'க்ஷேத்ரம் ஜானாதீதி க்ஷேத்ரஞ்ஞ:'* என்று க்ஷேத்ரத்தை ப்ரகாசப்படுத்துபவன் க்ஷேத்ரஞ்ஞன் என்றே அர்த்தம் சொல்லப்படவேண்டும்.

பூர்வ:- சரீரமான இந்த க்ஷேத்ரத்தை மட்டும் அறிபவன் க்ஷேத்ரஞ்ஞன் என்றும் தன் சரீரத்தையும், மற்றுமுள்ள வஸ்துக்களையும் அறிபவன் முக்தன் என்றும் ஸர்வஞ்ஞன் என்றும் சொல்லலாமே?

ஸித்தா:- ஸர்வ ஜடவஸ்துக்களும் க்ஷேத்ரம் என்றே பகவான் கீதையில் தெரிவிக்கின்றார். ஸர்வம் என்றால் க்ஷேத்ரம். ஸர்வஞ்ஞன் என்றால் க்ஷேத்ரஞ்ஞன் என்றே அர்த்தம்.

பூர்வ:- க்ஷேத்ரத்தை அறிபவன் க்ஷேத்ரஜ்ஞன் என்று சொல்லவில்லை. க்ஷேத்ரமான இந்த சரீரத்தையே நான் என்று சரீரத்தில் ஆத்மத்வபுத்தி உள்ளவனே க்ஷேத்ரஜ்ஞன் என்று சொல்கிறேன். அவனே பத்தன்.

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால் மீமாம்ஸகரும் முக்தர் என்று சொல்லநேரிடும், ஏனெனில் அவர்கள் கொள்கையில், ஸ்தூல சரீரமே க்ஷேத்ரம் என்றும், இந்த க்ஷேத்ரத்தைக் காட்டிலும் வேறுபட்டவனான ஜீவன் தன்னை கர்த்தா போக்தா ஸம்ஸாரி நான் என்று நினைக்கின்றான். அதனால் சரீரமான க்ஷேத்ரத்தைக்காட்டிலும் வேறுபட்டவன் நான் என்ற ஞானம் இருக்கின்றதால் மீமாம்ஸகர்களும் முக்தர்கள் என்று சொல்லநேரிடும்.

பூர்வ:- மீமாம்ஸகர்கள் க்ஷேத்ரமான சரீரம் நானல்ல என்று அறிந்த போதிலும், இந்த க்ஷேத்ரம் என்னுடையது (ஆத்மீயம்) என்று அறிவதால் அவர்கள் முக்தர்கள் அல்ல.

ஸித்தா:- ஸர்வ ஜகத்தும் க்ஷேத்ரம். க்ஷேத்ரங்கள் எல்லாம் என்னுடையது என்று ஈச்வரனுக்கு எண்ணமில்லை என்றால் ஈச்வரனால் க்ஷேத்ரம் ரக்ஷிக்ககூடியதல்ல. ஈச்வரனால் பரிபாலனம் செய்யப்படவில்லை என்றால் இந்த ஜகத்திற்கு அவரை ஈச்வரன் என்று சொல்லமுடியாது. இந்த ஜகத்தை ச்ருஷ்டித்தேன் நானே ரக்ஷிக்கின்றேன் என்னால் ரக்ஷிக்கத்தகுந்தது என்று நினைத்தால்தான் இந்த ஜகத் ஆத்மீயம் என்று ஈச்வரன் நினைக்கின்றார் என்று சொல்லவேண்டும். இவ்விதம் சொல்லப்படுமானால் ஈச்வரனும் பத்தன் என்று சொல்ல வேண்டும்.

பூர்வ:- ஈச்வரன் ஸமஷ்டி சரீரகன், ஸமஷ்டி அபிமானி. அதனால் ஈச்வரன் க்ஷேத்ரஜ்ஞன் என்றோ பத்தன் என்றோ சொல்வது சரியல்ல. வ்யஷ்டி சரீரத்தை நான் என்றும், என்னுடையது என்றும் நினைப்பவனே பத்தன். அதனால் ஈச்வரன் பத்தனல்ல.

ஸித்தா:- வ்யஷ்டிசரீர அபிமானியான ஜீவன், சுஷுப்தி நிலையில் இந்த சரீரத்தை ஆத்மா என்றோ ஆத்மீயம் என்றோ நினைப்பதில்லை. அதற்காக அவனை முக்தன் என்று சொல்லமுடியுமா? இதேபோல் ப்ரளயகாலத்திலும், ஜீவன் நான் என்றோ, என்னுடையது என்றோ அறிவதில்லை. அதனால் ப்ரளயகாலத்தில் உள்ள ஜீவர்களை முக்தன் என்று சொல்லவேண்டும். அதனால் த்ருச்யமாக, ஜடமாக இருக்கின்ற வஸ்துக்களை எவன் ப்ரகாசப்படுத்துகின்றானோ அவனே க்ஷேத்ரஜ்ஞன். இதே கருத்தை பகவானும் '*யதா ப்ரகாசயத்யேக: க்ருத்ஸ்னம் லோகமிமம் ரவி: க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்னம் ப்ரகாசயதி பாரத*' (यथा प्रकाशयत्येकः कृत्स्नं लोकमिमं रविः। क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत) என்று கீதையில் தெரிவிக்கின்றார். அதாவது ஒரே ஸூர்யன் எவ்விதம் ஸர்வலோகத்தையும் ப்ரகாசிக்கச்செய்கின்றானோ அதேபோல் ஸர்வக்ஷேத்ரங்களையும் ப்ரகாசிக்கச் செய்கின்றவன் க்ஷேத்ரஜ்ஞன் என்று தெரிவிக்கின்றார். இந்த க்ஷேத்ரஜ்ஞனே ஈச்வரன் என்று '*க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி, ஸர்வ க்ஷேத்ரேஷு பாரத*' (क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत) என்று நான் க்ஷேத்ரஜ்ஞன் என்று பகவானே தெரிவிக்கின்றார். அதனால் ஈச்வரன் க்ஷேத்ரஜ்ஞன் அல்ல என்று சொல்வது சரியல்ல. வ்யவஹாரதசையில் ஈச்வரனும் க்ஷேத்ரஜ்ஞன்தான், பரமார்த்த நிலையில் க்ஷேத்ரம் என்பதே இல்லை என்பதால் க்ஷேத்ரஜ்ஞன் என்பதும் கிடையாது. ஆகையால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ப்ரத்யஸ்தமிதபேதம் என்ற ச்லோகத்தில், (இதற்கு பிறகு வரும் 94-வது பகுதியில் இந்த ச்லோக விவரணம் உள்ளது) உள்ள ப்ரத்யஸ்த்தமிதம் என்ற பதத்திற்கு, சரீரபேதத்தைக்கொண்டு, ஜீவபேதமிருக்கின்றது என்று அர்த்தம் சொல்லப்படுகிறது. அதுசரியல்ல. சரீரபேதத்தினால் ஜீவபேதமிருப்பதாகச் சொல்லமுடியாது. ஸ்வயமே ஜீவபேதம் இருக்கின்றது என்றே ப்ரத்யஸ்தமிதம் என்ற ச்லோகம் தெரிவிக்கின்றது. சரீரகதபேதம் ஜீவனில் இல்லை என்றுதான் சொல்லுகிறதே அன்றி ஸ்வயமாக ஜீவபேதம் இல்லை என்று கூறவில்லை

ஸித்தா:- இது சரியல்ல. இவ்விதம் சொல்லப்படுமானால் சரீரமும் பேதமற்றது என்று சொல்ல நேரிடும். ஏனெனில் கடபடாதியில் உள்ள பேதம் சரீரத்திற்கு கிடையாது. அதனால் சரீரம் ப்ரத்யஸ்த்தமித பேதம் என்று சொல்ல நேரிடும். சரீரத்திற்கு ஸ்வத: பேதம் இருந்தாலும், கடபடாதி பேதம் சரீரத்திற்கு இல்லை. அதனால் பேதரஹிதம் சரீரம் என்று சொல்ல நேரிடும்.

இதனால் ஆத்மாவை ப்ரத்யஸ்த்தமித பேதம் என்று சொல்ல வேண்டுமானால் ப்ரத்யஸ்த்தமித பேதம் என்பதற்கு எந்த விதமான பேதமும் இல்லை என்று தான் ஸாமான்யமான அர்த்தம் சொல்லப்பட வேண்டும். விசேஷமாக ஒரு பேதத்தை குறிப்பிட்டு இந்த பேதம் இல்லை என்று ப்ரத்யஸ்த்தமித பேதம் என்பதற்கு சுருக்கி அர்த்தம் செய்வதற்கு எந்த வித ந்யாயமும் இல்லை, ப்ரமாணமும் இல்லை. ஆத்மதத்வம் நிர்பேதம் என்று தான் அந்த வாக்யத்தின் தாத்பர்யம்.

அதனால் அஸ்தூலம், அனணு, அஹ்ரஸ்வம், என்று ஸர்வ விசேஷங்களையும் நிஷேதம் செய்து நிஷேத அவதி ஸ்வரூபமாக ப்ரஹ்மம் போதிக்கப்படுகிறது. அதனால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது. எந்த நிஷேதமானாலும் ப்ரதியோகி, அனுயோகி சொல்லப்பட வேண்டும். எந்த வஸ்துக்கள், இல்லை என்று சொல்லப்படுகிறதோ, அந்த வஸ்துக்கள் எதில் இல்லை என்று சொல்லப்படுகிறதோ அந்த ஆச்ரயமான வஸ்துவே ஆத்ம ஸ்வரூபமாக எஞ்சி இருக்கின்றது.

93

आत्मनः स्वसंवेद्यतानिराकरणम् ।

ஆத்மன: ஸ்வஸம்வேத்யதா நிராகரணம்

பூர்வ:- ஆத்ம ஸ்வரூபம் ஞானஸ்வரூபமான ஸத்ஸ்வரூபமாகவும் தானே ப்ரகாசிக்கக்கூடிய தன்மை உடையதாகவும் இருக்கிறது. தன்னாலேயே தன்னை அறியக்கூடியதாக இருக்கின்றதால் அது ஞான ஸ்வரூபமாகத்தான் இருக்கவேண்டுமே அன்றி வேறு ஸ்வரூபத்தில் இருக்கமுடியாது ஞானாத்மனா ஸத் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் ஞானஸ்வரூபம் என்று தன்னாலேயே அறியப்படுகிறது.

ஸித்தா:- ஆத்மா ஸ்வஸம்வேத்யம் என்று சொல்லப்படுவது சரியல்ல. அறிபவனும், அறியப்படுவதும் இரண்டும் ஒன்றாக இருக்கமுடியாது. கர்ம கர்த்ரு பாவ விரோதம் ஏற்படும். மேலும், ஞான ஸ்வரூபம் என்று தெரிவித்தபிறகு, ஞானம், தன்னாலே தன்னை அறிகிறது என்றால், ஞானமே, ஜ்ஞேயமாக எப்படி ஆகமுடியும்? இவ்விதம் சொல்லப்படுமானால் எது ஞானம்? எது ஜ்ஞேயம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஒரு ஞானம், மற்றொரு ஞானத்திற்கு ஜ்ஞேயம் என்று சொல்லப்படுமானால், அனவஸ்த்தை முதலான தோஷங்கள் ஸம்பவிக்கும். மேலும், தன்னைத்தானே ஆத்மா அறிகின்றது என்று ஆத்மாவிற்கு லக்ஷணம் சொல்லப்படுமானால், பரமாத்மாவினால், ஸர்வ ஆத்மாவும் அறியப்படுகிறது என்று தெரிவிக்கின்ற உன் ஸித்தாந்தத்திற்கு விருத்தமாக, தானே தன்னை அறிவதாக எவ்விதம் சொல்லப்படுகிறது? அது மட்டுமல்ல, உன் ஸித்தாந்தத்தில் ஆத்மா, ஞான ஸ்வரூபமாகவும் ஞாத்ரு ஸ்வரூபமாகவும் இருக்கிறது என்று தானே இதுவரை ஆக்ஷேபம் செய்யப்பட்டது? அவ்விதம் சொல்லப்படுமானால் ஆத்மா, ஞானஸத்தைகலக்ஷணம் என்று எப்படி உன்னால் சொல்லமுடியும்? அதுமட்டுமல்ல, ஆத்மா ஞானமாத்ர ஸ்வரூபம் என்று சொல்லப்படுமானால், ஆத்மாவில் தர்மபூதஞானம் என்று உன்னால் சொல்லப்படுகிறதே அந்த தர்மபூத ஞானம் என்பதும் ஞானமாத்ரம் என்றுதானே சொல்லவேண்டும்? அவ்விதம் சொல்லப்படுமானால் அதுவே ஆத்மா என்று சொல்லவேண்டுமே அன்றி ஆத்மாவின் தர்மம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் ஞானமாத்ரம் ஆத்மா என்று ஆத்மாவிற்கு லக்ஷணம் சொல்லப்படுமானால் அதுவே ஆத்மா. தர்மபூத ஞானம் என்று சொல்வது பொருந்தாது. ஆத்மாவிற்கு சொல்லப்படும் லக்ஷணம் தர்மபூத ஞானத்திற்கு சொல்லப்படுமானால் அதிவ்யாப்தி தோஷம் ஏற்படும். 'ஆத்மஸம்வேத்யம்' என்று உபநிஷத்துக்களில் தெரிவிக்கப்படுவதன் தாத்பர்யம் என்னவென்றால், ஆத்ம ப்ரகாசத்திற்கு அன்ய அபேக்ஷைகிடையாது என்றே அர்த்தம், ஸ்வயம் ப்ரகாசகம் என்பதே தாத்பர்யம்.

'प्रत्यस्तमितभेद'मिति पुराणवचनस्य प्रपञ्चनिषेधपरत्वप्रतिपादनम् ।

'ப்ரத்யஸ்த்தமிதபேதம்' இதி புராணவசனஸ்ய ப்ரபஞ்ச நிஷேதபரத்வப்ரதிபாதனம்

(விஷ்ணுபுராணம் 6.7.53)

ப்ரத்யஸ்தமிதபேதம் யத் ஸத்தாமாத்ரமகோசரம்
வசஸாம் ஆத்மஸம்வேத்யம் தத் ஞானம் ப்ரஹ்ம ஸம்ஞிதம்

प्रत्यस्तमितभेदं यत् सत्तामात्रमगोचरम् ।
वचसामात्मसंवेद्यं तत् ज्ञानं ब्रह्मसंज्ञितम्

பூர்வ:- *'ப்ரத்யஸ்தமிதம் பேதம்'* என்ற புராண வசனம், ப்ரபஞ்சம் இல்லை என்று தெரிவிக்கவில்லை

ஸித்தா:- ச்ருதிவாக்யம், *'ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவம் அத்வைதம்'* (प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतम्) என்று தெரிவிக்கின்றது. அதனால் எந்த விதமான பேதமும் இல்லை என்றே தெரிவிக்கின்ற ச்ருதி வாக்யத்திற்கு விரோதம் இன்றி புராண வசனம் இருக்குமானால்தான், அதை ப்ரமாணம் என்று சொல்லலாம். இவ்விதம் இல்லையென்றால் அந்த வசனம் புராண வசனமாக இருந்தாலும் அப்ரமாணம் என்று தள்ளத்தக்கதாக ஆகும்.

பூர்வ:- ஸத்யமாக இருக்கின்ற இந்த ப்ரபஞ்சத்தை, முற்றிலும் நிஷேதம் செய்து ஒன்றுமே இல்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்? அவ்விதம் நிஷேதம் செய்வது யுக்தமல்ல.

ஸித்தா:- *'தத்ஸத்யம் அதோ அன்யதார்த்தம்'* (तत्सत्यमतोन्यदार्तम्) என்று ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது. அதனால், ப்ரபஞ்சம் ஸத்யம் என்று சொல்வது பொருந்தாது. ப்ரஹ்மபின்னமாக இருக்கின்ற ஸர்வமும் ஆர்த்தம் (அஸத்யம்) என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- ப்ரஹ்ம பின்னம் ஸர்வம் அஸத்யம் என்றாலும், ப்ரஹ்மாத்மனா ஜகத் ஸத்யம் என்று சொல்லவேண்டும். அதிஷ்ட்டான ஸ்வரூபாத்மனா ஸத்யம் என்று ஸத்யத்வம் சொல்லலாமே?

ஸித்தா:- இந்தவிதம் ப்ரபஞ்சம் ஸத்யம் என்று சொல்லப்படுமானால், ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பமும் ரஜ்ஜுவாத்மனா ஸத்யமென்று சொல்லலாம். அதேபோல் கடம் என்பதும் ம்ருதாத்மனா ஸத்யம் என்றே சொல்லலாம். இவ்விதம் ரஜ்ஜு ஸர்ப்பம் ஸத்யம் என்று சொல்லப்படுமானால் லோக வ்யவஹாரத்திற்கு பொருந்தாது. அதேபோல் *'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகா இத்யேவ ஸத்யம்'* என்ற ச்ருதி வாக்யத்தில்

தெரிவிக்கப்படும் கட த்ருஷ்ட்டாந்தமும் வ்யர்த்தம் என்றாகும். லோக அனுபவத்திற்கும் விருத்தம். அதனால் உன்னால் சொல்லப்படுவது போல் அர்த்தம் செய்தால் ரஜ்ஜு ஸர்ப்பம் ப்ராந்தி என்ற லோகவ்யவஹாரத்திற்கும் வாசாரம்பணம் என்ற ச்ருதி வாக்யத்திற்கும் எள்ளும் தண்ணீரும் விட்டு தர்ப்பணம் செய்யவேண்டியதுதான். (தத்த ஜலாஞ்ஜலித்வ ஆபத்தே:). ஆகவே காரணாத்மனா கார்யம் ஸத்யம் என்று அடைமொழியுடன் ஸத்யம் என்று சொல்லப்படும் காரணத்தினாலேயே, கார்யம் ஸத்யமில்லை ஸ்வரூபேண கார்யம் மித்யை என்றே ஸித்திக்கின்றது. அதனால் காரணாத்மனா ப்ரபஞ்சத்திற்கு ஸத்யத்வம் சொல்வது பொருந்தாது.

95

मूर्तामूर्तपदार्थविचारः ।

மூர்த்தாமூர்த்த பதார்த்த விசார:

பூர்வ:- விஷ்ணுவினிடம் மூன்று சக்திகள் இருக்கின்றன. அதாவது மூர்த்தம், அமூர்த்தம், அவித்யை என்று சொல்லப்படும் இந்த மூன்று சக்திகளில், மூர்த்தம் என்பது க்ஷரம், பத்த ஜீவன். அமூர்த்தம் என்பது முக்தஜீவன், அக்ஷரம். அவித்யை என்ற கர்மா ஒரு சக்தி: இந்த மூன்று சக்திகளும் விஷ்ணு சக்தி என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- இந்த மூன்று சக்திகளில் ஒன்றை பத்த ஜீவனென்றும், மற்றொன்றை முக்த ஜீவனென்றும் சொல்லப்படுமானால், உன்னால் நித்ய முக்தன் என்று ஒருவன் சொல்லப் படுகிறதே? அவனை விஷ்ணுவென்றே சொல்லலாமா? அல்லது விஷ்ணு சக்தி என்று சொல்லலாமா? நித்ய முக்தனாக இருந்தாலும், அவன் ஜீவன் என்றும் ஈச்வரனைக்காட்டிலும் வேறுபட்டவன் என்று உன்னால் சொல்லப்படுவதால், நித்ய முக்தனே விஷ்ணு என்று சொல்லமுடியாது. அதற்காக விஷ்ணு சக்தியே நித்யமுக்தன் என்று சொல்லப்படுமானால் பத்த ஜீவன், முக்த ஜீவன், அவித்யை என்ற இந்த மூன்றுமே விஷ்ணு சக்தி என்று மூன்று சக்திகள்தானே உன்னால் சொல்லப்படுகிறது?

பத்த ஜீவனும், முக்த ஜீவனும் இரண்டுமே சைதன்ய ஸ்வரூபம் என்பதால், அந்த இரண்டும் ஒரே சக்தி என்றும், அவித்யை என்பதே அசித் சக்தி என்றும் சொல்லப்படுமானால், அசித் சக்தி என்றால் அது கர்மாதான் என்று எவ்விதம் சொல்லமுடியும்? கர்மாவைத்தவிர, மற்றும் எவ்வளவோ கார்யங்கள் அசித்தாக இருக்கின்றதே? அவைகளை எதனுடைய சக்தி என்று சொல்வது? அவைகள் விஷ்ணுவே என்று சொல்லப்படுகிறதா? அல்லது விஷ்ணு சக்தி என்று சொல்லப்படுகிறதா? விஷ்ணுவே என்றால் விஷ்ணு ஜடம் என்றாகும். விஷ்ணு சக்தி மூன்று என்றே உன்னால் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளை விஷ்ணு சக்தி என்றும் சொல்லமுடியாது.

பூர்வ:- நித்யமுக்தர்கள், விஷ்ணுவும் அல்ல, விஷ்ணு சக்தியுமல்ல, இரண்டிற்கும் வேறுபட்ட ஒரு வஸ்து என்று சொல்லலாமே? அதேபோல் கர்மாவைக்காட்டிலும் வேறான அசித் வஸ்துக்களும் விஷ்ணுவுமல்ல விஷ்ணுசக்தியுமல்ல. இரண்டைக் காட்டிலும் வேறு என்று சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால், விஷ்ணு என்றும், விஷ்ணு சக்தி என்றும் இவைகளில் சேராத அசித் வஸ்து என்றும், நித்ய முக்தர் என்றும் சொல்லப்படுபவைகள் ஸ்வதந்த்ரமாக இருப்பதாகச்சொல்லவேண்டும். ஸர்வமும் விஷ்ண்வாத்மகம் என்று சொல்லப்பட்டால்தான், அவை பரதந்த்ரம் என்று சொல்லலாம். ஆகவே, விஷ்ணுவும் இல்லை, விஷ்ணு சக்தியுமில்லை. இதை அன்றி வேறாக ஒரு வஸ்து இருக்குமானால்

அது ஸ்வதந்த்ரம் என்று சொல்லவேண்டும். இவ்விதம் சொல்லப்படுமானால் உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படும்.

அது மட்டுமல்ல மூர்த்தம் என்ற பத்தன் க்ஷரம், அமூர்த்தமான முக்த ஜீவன் அக்ஷரம் என்று உன்னால் சொல்லப்படுகிறது. முக்தன் அக்ஷரம் என்று சொல்லப்படுமானால், பத்தனும் அக்ஷரம் என்று சொல்லவேண்டும். பத்த ஜீவன்தானே முக்தனாக ஆகிறான்? பத்தன், முக்தன் என்பவன் ஒருவனே என்பதால், பத்தன் மூர்த்தம் க்ஷரம் என்றும், முக்தன் அமூர்த்தம் அக்ஷரன் என்றும் பிரித்து சொல்வதே சரியல்ல. பத்த ஜீவன் க்ஷரம் என்றால் அவன் நாசமடைவானாகில் முக்தி யாருக்கு?

பூர்வ:-

'த்வேரூபே ப்ரஹ்மணஸ்தஸ்ய மூர்த்தம் ச அமூர்த்தமேவச
க்ஷராக்ஷரஸ்வரூபே தே ஸர்வபூதேஷு ச ஸ்திதே'

(द्वे रूपे ब्रह्मणस्तस्य मूर्तं चामूर्तमेव च ।
क्षराक्षरस्वरूपे ते सर्वभूतेषु च स्थिते)

என்று புராண வசனம் தெரிவிக்கின்றது. அதாவது மூர்த்தம் க்ஷரம் பத்த ஜீவன் என்றும் அமூர்த்தம் அக்ஷரம் முக்த ஜீவன் என்றும் வசனமே இருக்கின்றதே? அதாவது ப்ரஹ்மத்திற்கு இரண்டு ரூபம் என்றும் ஒன்று மூர்த்தம், க்ஷரம் என்றும், மற்றொன்று அமூர்த்தம் அக்ஷரம் என்றும், இவ்விதம் மூர்த்தாமூர்த்தஸ்வரூபம் ஸர்வபூதங்களிலும் இருக்கின்றதாக தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- ரூபம், மூர்த்தம், அமூர்த்தம், க்ஷரம், அக்ஷரம் என்ற பதங்கள்தான் இந்த வசனத்தில் இருக்கின்றது. இதில் பத்தஜீவனென்றோ, முக்தஜீவன் என்றோ சொல்லப்படவில்லை. அதுமட்டுமல்ல க்ஷரம், அக்ஷரம், என்று தெரிவிக்கின்ற ச்லோகத்திற்கு அடுத்தச்லோகத்தில் இந்த ச்லோகத்தின் கருத்து நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. அதாவது '*அக்ஷரம் தத் பரம் ப்ரஹ்ம, க்ஷரம் ஸர்வமிதம் ஜகத்*' (अक्षरं तत्परं ब्रह्म क्षरं सर्वमिदं जगत्) என்று மூலகர்த்தாவான பராசரரால் க்ஷரம் அக்ஷரம் என்ற பதங்களுக்கு வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றது.

பூர்வ:- பரம் ப்ரஹ்ம என்று முக்த ஜீவனையே தெரிவிக்கின்றார்.

ஸித்தா:- ஜீவ பரமாத்ம பேதம் என்று சொல்லப்படும் உன் ஸித்தாந்தத்தில் பரப்ரஹ்ம சப்தம் முக்தனை குறிப்பதாக எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- இந்த இடத்தில், பரப்ரஹ்ம சப்தம் முக்தனை குறிப்பிடுவதாகச்சொல்கிறேன்.

ஸித்தா:- 'பரப்ரஹ்மம்' என்ற சப்தத்திற்கு முக்தன் என்று அர்த்தம் செய்யப்படுமானால், அந்த அர்த்தம் வாச்யார்த்தமா? அல்லது லக்ஷ்யார்த்தமா? லக்ஷ்யார்த்தம் என்று சொல்லப் படுமானால், பரப்ரஹ்மம் என்பதற்கு முக்யார்த்தமே ஸம்பவிக்கின்றதால் லக்ஷ்யார்த்தமாக சொல்லவேண்டிய அவச்யம் என்ன? முக்யார்த்த பாதம் ஏற்படுமானால்தான் லக்ஷணையைக்

கொண்டு அர்த்தம் செய்யவேண்டும். அதனால் முக்யார்த்தம் ஸம்பவிக்கின்றதால் லக்ஷ்யார்த்தம் சொல்லதேவை இல்லை. ஆகவே பரப்ரஹ்மம் என்பதற்கு அபிதையினால் (நேரிடையான அர்த்தம்) அர்த்தம் தெரிவிக்கவில்லை என்றும், முக்த ஜீவன் என்றே அர்த்தம் சொல்லவேண்டும் என்றால் வ்யாகாதம் (பொருத்தமற்றது), கடம் என்ற பதத்திற்கு கடம் அர்த்தமில்லை என்றும் படம் என்று அர்த்தம் என்று சொல்வது போலாகும்.

அதைத்தவிர, ப்ரஹ்மத்திற்கு மூர்த்தம், அமூர்த்தம் என்றும் அக்ஷரம் க்ஷரம் என்றும் இரண்டு ரூபம் என்று சொல்வது உன் ஸித்தாந்தத்திற்கு பொருந்தாது. ஏனெனில் பத்த ஜீவன் என்றும் முக்த ஜீவன் என்றும் சொல்லப்படும் இரண்டுபேர்களும், ப்ரஹ்மத்தை அன்றி வேறானவர்கள் என்று உன்னால் சொல்லப்படுகிறது. அப்படியானால் இந்த இரண்டு ரூபமும் ப்ரஹ்மத்தின் ரூபம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ம்ருத்ரூபம் கடம் என்றால் ம்ருத்தை அன்றி வேறு என்று எவ்விதம் சொல்லமுடியும்? ம்ருத்தை அன்றி கடம் வேறல்ல என்று சொன்னால்தான் கடம் ம்ருத் ரூபம் என்று சொல்லலாம். ஆனால் உன் ஸித்தாந்தத்தில் இவ்விதம் சொல்லமுடியாது.

பூர்வ:- ரூபம் என்பதற்கு சரீரம் என்று அர்த்தம். அதனால் பத்த ஜீவனும், முக்த ஜீவனும் பரமாத்மாவிற்கு சரீரம் என்றே சொல்லப்படுகிறது.

ஸித்தா:- ரூபம் என்றால் சரீரம் என்ற அர்த்தம் எவ்விதம் கிடைக்கின்றது? ப்ரஹ்மம் சித்ரூபம் என்று சொல்லப்படுகிறது. ரூபம் என்பதற்கு சரீரம் என்று அர்த்தம் இருக்கும் பக்ஷத்தில், சித் என்பதை சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மம் என்று சொல்லவேண்டுமே? சித் ஸ்வரூபம் ப்ரஹ்மம் என்பதால் சித் ப்ரஹ்மம் என்றே சொல்லவேண்டும். அதனால் ரூபசப்தத்திற்கு சரீரம் என்று அர்த்தம் சொல்லப்படுவது ஒப்புக்கொள்ளகூடியதல்ல. அவ்விதம் ஒரு ஸமயம் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரஹ்மத்திற்கு மூன்று சரீரங்கள் இருக்கின்றதென்று சொல்லநேரிடும். அதாவது பத்த ஜீவன், முக்த ஜீவன், நித்ய முக்தன் என்று மூன்று சரீரங்கள் இருப்பதாக சொல்லவேண்டும். அத்துடன் த்வே ரூபே ப்ரஹ்மணி என்று ப்ரக்ருதி (ஜடம்,) சித் இரண்டும் விஷ்ணுவிற்கு சரீரம் என்று சிதசித் சரீரகன் பரமாத்மா என்று சொல்லப்படுவதால், பரமாத்மாவிற்கு நான்கு சரீரங்கள் இருப்பதாக சொல்லவேண்டும்?

அவ்விதம் சொல்லப்படுமானால், நான்கு சரீரமுள்ள பரமாத்மாவை, த்வே ரூபே ப்ரஹ்மம் என்று இந்த ச்லோகத்தில் அந்த முனிபுங்கவர், எவ்விதம் தெரிவிக்கின்றார்? (இயற்றி இருக்கின்றார்?) அதுமட்டுமல்ல, 'ஆத்மா அணு' என்று தெரிவிக்கின்ற உன் ஸித்தாந்தத்தில் மூர்த்தாமூர்த்தமாக, க்ஷராக்ஷரமாக ஸர்வபூதங்களிலும் பரமாத்மா வ்யாபித்திருக்கிறார் என்று சொல்வது எவ்விதம் பொருந்தும்?

அணு என்பது ஒரிடத்தில் தான் இருக்கமுடியுமே அன்றி வ்யாபிக்கமுடியாது. ஆகையால் இந்த ச்லோகத்தின் அர்த்தம் என்னவென்றால், ப்ரஹ்மம் மூர்த்தாமூர்த்த ஸ்வரூபமாக ஸர்வ ஜகத்திலும் வ்யாபித்திருக்கின்றது. அதில் ஒன்று மாயிகமான ஜகத் ரூபம் அது க்ஷரம். மற்றொன்று சைதன்யம், அது அக்ஷரம், அதுவே தாத்விகம். பரப்ரஹ்மமே, மாயாவசாத் ஜகத்ரூபேண பரிணமிக்கின்றது. கடம் என்பது எவ்விதம் ம்ருத் ரூபம் என்று

சொல்லப்படுகின்றதோ, அதேபோல் ஜகத் என்பது ப்ரஹ்மரூபம். ப்ரஹ்மத்தை அன்றி தனித்த ஒரு வஸ்துவல்ல. சைதன்யம் ப்ரஹ்ம ஸ்வரூபம். ஆகையால் இதையே த்வே ரூபே என்று ச்ருதி தெரிவிக்கிறது. அதுவே ச்லோகார்த்தம்.

பூர்வ:- ப்ரஹ்மமே அக்ஷரம் என்றும், அக்ஷரம் என்றாலே ப்ரஹ்மம் என்று அர்த்தம் சொல்வது சரியல்ல. அக்ஷரம் என்றால் நாசமடையாத தன்மை என்றே அர்த்தம். ப்ரஹ்மம் வேறு, அக்ஷரம் வேறு என்றே சொல்ல வேண்டும். ப்ரஹ்மத்தின் தன்மையான அக்ஷரம் என்பதை ப்ரஹ்மஸ்வரூபம் என்று சொல்வது பொருந்தாது. ஷஷ்டி அர்த்தத்தில் சொல்லப்படுவதும் ப்ரதமாந்தத்தில் சொல்லப்படுவதும் இரண்டும் வேறு என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் என்றாலும் ப்ரஹ்மந்தான். அதனால் ப்ரஹ்மம் அக்ஷரம் என்றாலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் அக்ஷரம் என்றாலும், இரண்டும் ஒன்றுதான். இதில் பொருந்தாத விஷயம் ஏதுமில்லை.

பூர்வ:- ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் என்று சொல்லப்படுவதால் ஷஷ்டி அர்த்தம் வேறு, ப்ரதமாந்தம் வேறாகத்தானே இருக்கவேண்டும்?

ஸித்தா:- கடத்திற்கு ஸ்வரூபம் கம்புக்ரீவாதிரூபம். கம்புக்ரீவாதிரூபம் உடையது கடம் என்று சொல்லப்படுமானால், கம்புக்ரீவாதிரூபம் வேறு, கடம் வேறு என்று சொல்லமுடியுமா? கடத்ினுடைய ஸ்வரூபம் என்று சொல்வதற்காக இரண்டும் வேறு என்று சொல்லமுடியுமா? ஸ்வரூபம் என்றாலே வஸ்துவேதான். வஸ்துவைக்காட்டிலும் அதன் ஸ்வரூபம் வேறல்ல. வேறாக இருக்குமானால் அது அந்த வஸ்து ஸ்வரூபம் என்று சொல்வதற்கே முடியாது. ஆகவே, நாம ரூபமுள்ள வஸ்து எதுவோ அதையே மூர்த்தம் என்றும், க்ஷரம் என்றும் சொல்லப்படுகிறது. நாமரூபங்கள் அற்ற ஸ்வரூபம் எதுவோ அதுவே அக்ஷரம் என்றும் அமூர்த்தம் என்றும் சொல்லப்படுகிறது. நாமரூபமுள்ள ஜகத் ஜன்ம, நாசம் உடையது என்பதால் க்ஷரம், நாம ரூபங்கள் அற்றதாக, ஜன்ம நாசங்கள் அற்றதான பரப்ரஹ்மமே அக்ஷரம். ஆகவே, ப்ரஹ்மத்தை அன்றி வேறான மற்ற வஸ்துக்கள் எல்லாமே க்ஷரம். இவை எல்லாமே த்ருச்ய பதார்த்தங்கள், இதற்கு அன்யமாக த்ருக்ஸ்வரூபமான அக்ஷரம் என்ற பதார்த்தம் ஒன்று. இதையே ப்ரஹ்மத்திற்கு இரண்டு ரூபம் என்று '*த்வேரூபே ப்ரஹ்மணஸ்தஸ்ய*' என்று த்ருக், த்ருச்யம் என்ற இரண்டு ரூபங்கள் ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் த்ருக்ஸ்வரூபமான ப்ரஹ்மமே மாயையினால் த்ருச்யம்போல் தோன்றுகிறது. உண்மையில் த்ருக்ஸ்வரூபம் ஒன்றே ப்ரஹ்மம் என்பதால் அத்வைதமே தத்வம் என்று ஸித்திக்கின்றது.

பூர்வ:- ஸர்வமும் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுமானால் '*ஸர்வபூதேஷு ஸ்திதே*' என்று ஸர்வபூதங்களிலும் ப்ரஹ்மமே இருக்கின்றது என்று சொல்வது பொருந்தாது. ஸர்வம் வேறு, ப்ரஹ்மம் வேறு என்று சொன்னால்தான், ஸர்வத்திலும் ப்ரஹ்மம் இருக்கின்றது என்று சொல்லலாம். (பூதலத்தில் கடம் இருக்கின்றது என்றால் பூதலம் வேறு கடம் வேறு என்பது போல் வெவ்வேறாக இருந்தால்தானே ஒன்றில் மற்றொன்று இருப்பதாகச் சொல்லமுடியும்)

ஸித்தா:- த்ருக்ஸ்வரூபமான பரமாத்ம ஸ்வரூபத்தில்தான் ஸர்வமும் ஆரோபிதம், என்பதால் ஆரோபிதமான, மாயாமயமான இந்த ஜகத்தில் சைதன்யம் வ்யாபித்திருக்கின்ற

காரணத்தினால், ஸர்வத்திலும் ப்ரஹ்மம் இருக்கின்றதென்று சொல்லப்படுகிறது. மாயாகார்யமான இந்த ஜகத் என்ற எல்லாமே க்ஷரம் என்றாலும், மாயை என்றும், மாயாகார்யம் என்றும் இரண்டு விபாகம் இருக்கின்றது. ஒன்று வ்யக்தம் (ஸ்தூலரூபமாக அறியப்படுகிறது) ஒன்று அவ்யக்தம் (ஸூக்ஷ்மரூபம்). அவ்யக்தமான மாயை என்பதே ஜகத்திற்கு உபாதான காரணம், வ்யக்தம் என்ற மாயா கார்யமான நாமரூபாத்மகமான ஜகத் அவ்யக்தமான மாயையினால் வ்யாபிக்கப்பட்டு இருக்கிறது. இந்த முறையில் க்ஷரமான மாயை எல்லா பூதங்களிலும் இருக்கிறது. ப்ரஹ்மத்திற்கு இரண்டு ரூபம். மித்யா மாயா ரூபத்தில் க்ஷர ஜகத்திலும் ஸத்ய சைதன்ய ரூபத்தில் மாயைக்கும் அதிஷ்டானமான அக்ஷரமாகவும் இரண்டு ரூபம் சொல்லப்படுகிறது. இவ்விதம் வ்யக்தாவ்யக்தஸ்வரூபமாக இருப்பதும் பரப்ரஹ்மந்தான். ப்ரஹ்மம் அக்ஷரம், ஸர்வஜகத்தும் க்ஷரம் என்று இந்த ச்லோகத்தில் உத்தரவாக்யம் இந்த கருத்தையே தெரிவிக்கின்றது. ஆகையால் ப்ரஹ்மத்தின் பாரமார்த்திக ஸ்வரூபம் அக்ஷரம். ப்ரஹ்மத்தின் மாயிகமான ஸ்வரூபம் க்ஷரம் என்ற கருத்தையே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. ச்ருதிவாக்யமும், '*க்ஷரம் ப்ரதானமம்ருதாக்ஷரம் ஹர*' (क्षरं प्रधानममृताक्षरं हर) என்று தெரிவிக்கின்றது. ப்ரஹ்மம் நாமரூபம் அற்ற ஸ்வரூபம் என்பதே உண்மையான ஸ்வரூபம் (பாரமார்த்திக ஸ்வரூபம்). மாயையினால் ஏற்படும் நாம ரூபங்கள் ஸத்யமல்ல. மித்யாரூபம் என்பதால், நாமரூபமற்ற ஸ்வரூபம் ஒன்று, நாமரூபத்துடன் கூடிய ஸ்வரூபம் ஒன்று. நாமரூபமற்ற பாரமார்த்திக ஸ்வரூபம் சைதன்யம் என்பது அமூர்த்தம் அதுவே அக்ஷரம். நாமரூபத்துடன் கூடிய மாயிகமான ஸ்வரூபம் மூர்த்தம், அதுவே க்ஷரம் என்றும் இதையே ப்ரஹ்மண: த்வேரூபே என்று ச்லோகத்தில் தெரிவிக்கின்றது.

பூர்வ:- ஜகத் என்ற சப்தம் கார்யம். காரணம் என்ற ரூபமாக இருக்கின்ற ப்ரக்ருதி பரமாக இருக்கின்றதால் அதை க்ஷரம் என்று சொல்லமுடியாது. வ்யக்தமான கார்யத்திற்கு நாசம் ஏற்படலாம். ஆனால் அவ்யக்தமான காரணத்தை க்ஷரம் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- '*அவ்யக்தமக்ஷரே லீயதே*' (अव्यक्तमक्षरे लीयते) என்று ச்ருதிவாக்யமே தெரிவிக்கின்றது. அதனால் அவ்யக்தமும் க்ஷரம் என்பதில் ஸந்தேகத்திற்கே இடமில்லை. மேலும், '*ஏததம்ருதமேததபயம்*' (एतदमृतमेतदभयम्) என்ற ச்ருதி ப்ரஹ்மம் ஒன்றே அம்ருதமாக இருக்கின்றதால் அபயஸ்வரூபம் அக்ஷரம் என்று தெரிவிக்கின்றது.

பூர்வ:- அக்ஷரம் என்ற பதம் முக்த ஜீவனையே குறிக்கின்றதே அன்றி ப்ரஹ்மத்தை குறிப்பிடவில்லை.

ஸித்தா:- முக்த ஜீவன் மட்டும் அக்ஷரமில்லை, பத்த ஜீவனும் அக்ஷரம்தான். ப்ரஹ்ம ஸ்வரூபம் அவித்யையினால் அறியப்படாமல் மறைபட்டிருக்கின்றதால் பத்தன் போலவும், வித்யையினால் அவித்யை நிவர்த்திக்கின்றபோது முக்தன்போல் தோன்றுகிறது. அதனால் ப்ரஹ்மம் ஒன்றே அக்ஷரம் என்பதே ஸித்தாந்தம்.

96

योगस्य सगुणब्रह्मैकविषयत्वेन तत्प्रकरणस्थश्लोकानां न निर्विशेषपरत्वमिति रामानुजशङ्का - तन्निरासश्च ।

யோகஸ்ய ஸகுண ப்ரஹ்மைக விஷயத்வேன
தத்ப்ரகரணஸ்த்த ச்லோகானாம்
ந நிர்விசேஷபரத்வம் இதி ராமானுஜ சங்கா–தந்நிராஸஸ்ச

யோகம் என்பதே ஸகுணப்ரஹ்மவிஷயமாக இருக்கின்றதால் அந்த ப்ரகரண (விஷ்ணு புராணம் 6.7) ச்லோகங்கள் எல்லாமே ஸவிசேஷ பரமாகத்தான் இருக்கவேண்டுமே அன்றி நிர்விசேஷபரமாக இருக்கமுடியாது. ஏனெனில் நிர்விசேஷமாக இருக்குமானால் உபாஸனமாக இருக்கமுடியாது. உபாஸனமாக இருந்தால் நிர்விசேஷமாக இருக்கமுடியாது என்பதால் ஸம்ஸாரம் என்ற வியாதிக்கு ஒரே ஔஷதம் யோகம் என்ற உபாஸனம்தான். இயம, நியம, ஆஸன, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, த்யான, தாரண, ஸமாதி என்று சொல்லப்படும் யோகம் என்பதில், தாரணை என்று சொல்லப்படுவது உபாஸனத்தில் (யோகத்தில்) ஒரு அவயவம். ஸர்வ சுபங்களுக்கும் ஆச்ரயமாக இருக்கின்ற பகவத் ஸ்வரூபத்தில் (மனதை நிலைநிறுத்துவதே தாரணை) மனதை தாரணை செய்யவேண்டும். சுபாச்ரயம் என்று சொல்லப்படுவதால் ஸவிசேஷமான பகவத்ஸ்வரூபம் என்று அர்த்தம். பத்த ஆத்மாவின் ஸ்வரூபம் அசுப ஆச்ரயம், முக்தாத்மாவின் ஸ்வரூபம் ஸ்வயமாக சுத்தமல்ல. ஏனெனில் முன்னால் அசுப ஆச்ரயமாக இருந்து பிறகு முக்தாத்மாவாக ஆகின்றதால் ஸ்வயம் சுபாச்ரயம் என்று சொல்லமுடியாது. அதனால் பகவானுடைய ஸ்வரூபம் மட்டுமே ஸ்வயமே சுபாச்ரயமாக இருக்கின்றதால் அதையே மனதில் தாரணம் செய்யவேண்டும் என்று விஷ்ணு புராணம் 6.7.76 ச்லோகம் தெரிவிப்பதாக, ராமானுஜருடைய பாஷ்யத்தில் தெரிவிக்கின்றார்.

'சுபாச்ரயஸ்ய சித்தஸ்ய சர்வகஸ்ய அசலாத்மன:
த்ரிபாவபாவனாதீத: முக்தயே யோகினோ ந்ருப'

ஸித்தா:- உபாஸனம், ஸம்ஸாரத்திற்கு ஔஷதம் என்று சொல்லப்படுவது சரியல்ல. ஞானம் ஒன்றே ஸம்ஸாரபேஷஜம் (ஔஷதம்). உபாஸனம் என்ற யோகம், ஞானத்வாரா ஸம்ஸார நிவர்த்திக்கு ஔஷதமாக இருக்கலாம். அதனால் இந்த வித தாத்பர்யத்தில் உபாஸனம் ஸம்ஸாரபேஷஜம் என்று சொல்லலாமே அன்றி உபாஸனம் ஒன்றே ஸம்ஸாரபேஷஜம் என்று சொல்வது சரியல்ல. தத்வஞானம் ஒன்றே ஸம்ஸாரம் என்ற வியாதிக்கு ஔஷதம். தத்வஞானமே மோக்ஷ ஸாதனம். அதற்கு உபகாரகமாக (ஸாதனமாக) யோகம் இருக்கிறது என்று சொல்லலாமே அன்றி நேரிடையான ஸாதனம் என்று சொல்லமுடியாது. ஞானம் ஒன்றே ஸாக்ஷாத்காரம் ஏற்பட ஸாதனம். மேலும், பகவத் ஸ்வரூபம் சுபத்திற்கு ஆச்ரயம்

என்று சொல்லப்படுவதும் சரியல்ல. பகவத் ஸ்வரூபமே சுபம் என்றே அறியவேண்டும். அவ்விதமின்றி பகவத்ஸ்வரூபம் சுபத்திற்கு ஆச்ரயம் என்று சொல்லப்படுமானால், பகவத்ஸ்வரூபம் அசுபம் என்றும், பகவத்ஸ்வரூபம் சுபமல்ல சுபத்திற்கு ஆச்ரயம் என்று சொல்வது போல் ஆகும். ஆகையால் பகவத் ஸ்வரூபமே சுபம்.

பூர்வ:- பகவத்ஸ்வரூபம் சுபம்தான். ஆனால் பகவத்சரீரம் சுபாச்ரயம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- '*அசரீரம் சரீரேஷு அனவஸ்த்தேஷ்வவஸ்த்திதம்*' என்று சாஸ்திரம் தெரிவிக்கின்றது. ஸர்வசரீரத்திலும் அந்தர்யாமியாக இருப்பது ஆத்ம தத்வம் என்று ச்ருதி வாக்யங்கள் தெரிவிக்கின்றனவே?

பூர்வ:- ஸர்வசரீரத்திற்குள் அந்தர்யாமியாக இருக்கின்றதால் ஸசரீரன் என்று சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால், ஸர்வஜகத்தும் பரமாத்மாவின் சரீரம் என்றே சொல்லப்படவேண்டும். அதனால் அசுப ஆச்ரயமான நாயின் சரீரமும் பகவானுடைய சரீரம் என்று சொல்லவேண்டும். அவ்விதம் சொல்லப்படுமானால் பகவானுடைய விக்ரஹம் சுபாச்ரயம் என்று எப்படிச்சொல்லமுடியும்?

பூர்வ:- விராட்புருஷன் என்ற பகவானுக்கே ஸர்வ ஜகத்தும் சரீரம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவரே தன் லீலையினால் ராமர், க்ருஷ்ணர் போன்ற அவதாரங்களில் சுபாச்ரயமாகத்தான் இருக்கின்றார். அதனால் அசுபாச்ரயமாக விக்ரஹங்களில் இருந்தாலும், சுபாச்ரயமான விக்ரஹங்களில் தாரணம் செய்யலாம்.

ஸித்தா:- சரீரம் என்றாலே, எந்த சரீரமாக இருந்தாலும் அது அனாத்மாதான். அதனால் த்யானிக்கப்படவேண்டிய வஸ்து ஆத்மாதான். ஆத்மாதான் த்யேய வஸ்துவாக இருக்க முடியுமேயன்றி அனாத்மா த்யேயமாக ஆகமுடியாது. ஸர்வாத்மகனான ஈச்வரனை சித்தத்தில் நிலை நிறுத்தி யோகம் (உபாஸனை) செய்யவேண்டுமே அன்றி ஈச்வர சரீரத்தை த்யானம் செய்வது சரியல்ல. ராமர், க்ருஷ்ணர்களின் சரீரங்கள் ஆத்மா அல்ல. அனாத்மாவான விக்ரஹங்களில் ஈச்வரத்யானம் செய்வதற்கு யோகம் என்று பெயர் சொல்லமுடியாது.

பூர்வ:- யோகாப்யாஸம் செய்ய ஆரம்பிக்கின்ற ஒருவனுக்கு ஆத்மசைதன்யத்தில் மனதை நிலை நிறுத்த முடியாது. அதனால், யோகாப்யாஸம் செய்யவிரும்புகின்றவன், ஸர்வமும் ஈச்வர ஸ்வரூபம் என்று ஸ்தூலமான இந்த ப்ரபஞ்சத்தில் ஈச்வர த்யானம் செய்யவேண்டும். அதன் பிறகு, வ்யஷ்டி சரீரமான ராமர், க்ருஷ்ணர் போன்ற ஸ்வரூபங்களில் மனதை நிலை நிறுத்தவேண்டும். அதன் பிறகே ஆத்மாவில் மனதை நிலை நிறுத்தவேண்டும்.

ஸித்தா:- ஆத்மா, அனாத்மா என்ற விவேகமில்லாத விதுரனான மந்தமதியுடையவன், யோகாப்யாஸம் என்று நினைத்து எந்த விதம் வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். ஆனால் தேஹம் ஆத்மா அல்ல, தேஹத்திற்கு வேறுபட்டவன் ஆத்மா என்று அறிந்தவன் எவனோ, அவன் ராமர், க்ருஷ்ணர் முதலானவர்களின் சரீரங்களில் யோகாப்யாஸம் செய்யமாட்டான். ஆத்மா ஒன்றே த்யானிக்கவேண்டியவஸ்து என்பதால், '*ஆத்மா வா அரே*

த்ரஷ்ட்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:' (आत्मा वाऽरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः) என்று ச்ருதிவாக்யம் தெரிவிக்கின்றது, ஆகவே, ஆத்ம ஸ்வரூபத்யானமே யோகம். ஈச்வரப்ரணிதானமே யோகம் என்பதால் ஆத்மாவே ஈச்வரன் என்று ஆத்மாவில் மனதை நிலை நிறுத்துவதே யோகாப்யாஸம். அதனால் யோகாப்யாஸம் செய்கின்றவன் சாந்தம் சிவம் அத்வைதம் என்ற ஆத்ம ஸ்வரூபத்தையே த்யானிக்க வேண்டும். அவ்விதம் இன்றி, ஆரோபிதமான ரூபங்கள் த்யானம் செய்யப்படுமானால் அதிலேயே மனஸ் நிலைக்குமே அன்றி, ஆத்மஸ்வரூபத்யானம் செய்யமுடியாது.

பூர்வ:- ஆரம்ப நிலையில் ஆத்மாவில் மனதை நிலை நிறுத்துவது என்பது மிகவும் சிரமம் (துஷ்கரம் என்றே சொல்லவேண்டும்)

ஸித்தா:- ஆத்மஸ்வரூபத்தில் மனதை நிலை நிறுத்துவது துஷ்கரம் இல்லை. மிகவும் சுலபமே. எப்படியெனில், சித்தம் லயமாகாமல், விக்ஷேபம் ஏற்படாமல் நிலை நிறுத்தப் படுமானால், ஆத்மஸ்வரூபம் ஸ்வயமே ஸ்பஷ்ட்டமாக ப்ரகாசிக்கும். அதனால் சித்தம் லயமாகாமலும், விக்ஷேபம் ஏற்படாமலும் நிரோதம் செய்தாலே போதும். இதுவே யோகம். இவ்விதம் ஆத்ம த்யானத்தை செய்யமுடியாதவன் அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற வ்ருத்தியை ஆவ்ருத்தி செய்யவேண்டும். ஈச்வர ப்ரணிதானம் என்றாலும், சித்தவ்ருத்தி நிரோதம் என்றாலும் அர்த்தம் ஒன்றே. அதனால் த்யானம் துஷ்கரம் என்று நினைப்பவர்கள் அனாத்மாவில் சித்தத்தை நிறுத்தக்கூடாது. '*அஹம் ப்ரஹ்மாஸ்மி*' என்று அடிக்கடி ஆவ்ருத்தி செய்வதனால் ஆத்மாவில் மனஸ் நிலைத்திருக்கும். இதுவே சரியான உபாயம். '*அஹம் ப்ரஹ்மாஸ்மி இதி உபாஸீத*' என்ற ச்ருதி வாக்யமும் இதையே தெரிவிக்கின்றது. இவ்விதம் த்யானிப்பதைவிட்டு விக்ரஹ த்யானம், விக்ரஹ அர்ச்சனம்தான் சரி என்று சொல்வாயாகில் நீ அதைக்கொண்டே ஸந்தோஷத்தை அடையலாம். ஆனால் அதுவே சாஸ்த்ரார்த்தம் என்று சொல்வாயாகில் அது சரியல்ல, அது தவறு.

அது மட்டுமல்ல, சுபாச்ரயம் பகவத் ஸ்வரூபம் என்றும் அசுபாச்ரயம் பத்தஜீவஸ்வரூபம் என்று சொல்லப்படுவதும் சரியல்ல. பத்தாத்மாவை அசுபதேஹ ஆச்ரயத்தால் அசுபாச்ரயம் என்று சொல்லப்படுமானால், ஸர்வத்திற்கும் ஆச்ரயமாக இருக்கின்ற பகவானையும் சுபம், அசுபம் என்ற இரண்டிற்கும் ஆச்ரயம் என்று சொல்லநேரிடும். ஏனெனில் பகவான் ஸர்வவ்யாபி.

பூர்வ:- அசுபசரீர ஆச்ரயமாக இருப்பதற்காக பத்தாத்மா என்று சொல்லவில்லை. அசுப தேஹத்தில் (சரீரத்தில்) அஹம் என்ற அபிமானம் உள்ளவனையே அசுபாச்ரயன் என்று சொல்கிறேன்.

ஸித்தா:- அசுப சரீரத்தில் தாதாத்ம்ய அத்யாஸமுடையவன் அசுபாச்ரயனாக இருக்கலாம். ஆனால் ஆத்மஸ்வரூபத்திற்கு அத்யாஸமே ஏற்படாது. அந்த:கரணத்திற்கே அத்யாஸம் ஏற்படும். அதனால் ஸத்யம், ஞானம், அனந்தம், ஆனந்தம், ப்ரஹ்மம் என்பதே ப்ரத்யகாத்மா என்பதால் அசுபாச்ரயத்வம் என்பதே ஸம்பவிக்கமுடியாது.

மேலும் முக்தனுடைய ஸ்வரூபம் ஸ்வத: சுத்தமில்லை என்று சொல்லப்பட்டதும் சரியல்ல. ஆத்ம ஸ்வரூபம் ஸர்வதா சுத்தம்தான். ஆனால் அவித்யா நிலையில், பத்தனானவன், அசுத்தோஹம் என்று தன்னை ப்ராந்தியினால் நினைக்கின்றானேயன்றி ஸர்வதா ஆத்மா சுத்தஸ்வரூபம்தான். ஆனால் அவித்யாநிலையில் நான் பாபி, பாபகர்மாவைச் செய்து பாபத்தினால் பீடிக்கப்பட்டவன் என்று நினைக்கின்றான். ஆனால் வித்வானானவன், ஸ்வத: சித்த, நித்ய, சுத்த, புத்த, முக்த, பரிபூரண ஞானானந்த ப்ரஹ்ம அபின்னோஹம் என்று தன்னை அறிகின்றான். அதனால் வித்வானே ஆத்மா. ஆத்மாவே ஸ்வத: சுத்தம்.

பூர்வ:- வித்வான், அவித்யா நிலையில் உபாதிவசாத் அசுத்தனாக இருந்து, அதன் பிறகு உபாதி பரித்யாகத்தினால் அதன் பிறகு சுத்தனாகிறான்.

ஸித்தா:- ஆத்மாவினிடம் எந்த உபாதியும் கிடையாது. ஏனெனில், ஆத்மா என்றும் பரிபூர்ணம், நிஷ்க்ரியம். அதனால் இதற்கு முன் உபாதியை எடுத்துக்கொண்டவன் என்றோ மறுபடி அதை விடுகிறான் என்பதோ கிடையாது. உன்னுடைய ஸித்தாந்தத்தில் கருடன், சேஷன் முதலானவர்கள் நித்யமுக்தர்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கும் கருடாதி சரீரம் இருப்பதாகச்சொல்லப்படுவதால் உபாதியை பரித்யாகம் செய்தவன் முக்தன் என்று உன்னால் எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் உபாதி பரித்யாகத்தினால் சுத்தன் என்று உன்னால் சொல்லப்படுவதும் சரியல்ல.

பூர்வ:- பத்தன் உபாதி பரித்யாகம் செய்கிறான் என்றால் என்ன அர்த்தம் என்றால், பத்தனுக்கு மலினஉபாதி இருக்கின்றது. அவ்விதம் மலின உபாதி பரித்யாகத்தையே உபாதி பரித்யாகம் என்று சொல்லப்படுகிறது. முக்தனுக்கு சுத்த உபாதி ஏற்படுகிறது என்று சொல்கிறேன்.

ஸித்தா:- பகவானுக்கு, சுபம், அசுபம் என்ற ஸர்வசரீரங்களின் ஸம்பந்தம் இருக்கின்றது. அதனால் அசுப சரீரத்தை ஈச்வரன் விடமுடியாது என்பதால் ஈச்வரனும் முக்தன் என்று சொல்லமுடியாது. உன் ஸித்தாந்தத்தில் சிதசித் விசிஷ்டம், ஈச்வரன் என்றே சொல்லப் படுவதால் ஈச்வரன் முக்தனென்றே சொல்லமுடியாது. அதனால் பத்தனுடைய ஸ்வரூபம் வேறு, முக்தனுடைய ஸ்வரூபம் வேறு என்று ஆத்ம ஸ்வரூபத்தில் பேதமே சொல்லமுடியாது. ஸர்வத்திற்கும் ஆந்தரமாக, ஸர்வத்திற்கும் ஸ்வரூபமாக இருக்கின்ற ஆத்மாவே ஈச்வரன். இந்தவிதம் ஈச்வர ஸ்வரூபத்தின் த்யானத்தையே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதனால் நிர்விசேஷ ஆத்ம ஸ்வரூப த்யானமே இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸவிசேஷமாக ஸகுணத்யானம்தான் சொல்லப்படுகிறது என்று சொல்வது சரியல்ல. சுத்தமான ஈச்வரனிடம் மனதை நிலைபெறச் செய்யவேண்டும் என்று நிர்விசேஷ ப்ரஹ்ம த்யானம்தான் சொல்லப்படுகிறது. சுத்தமான ஆத்மஸ்வரூபத்தில் எந்தவிதமான குணங்களைச் சேர்த்தாலும் அது அசுத்தம்தான்.

பூர்வ:- ப்ரஹ்மம் என்பதே நிர்விசேஷம். ஈச்வரன் நிர்விசேஷமல்ல. அதனால் ஈச்வரத்யானம் என்றால் நிர்விசேஷம் என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ஈச்வரனுடைய ஸ்வரூபமே ப்ரஹ்மம். ஈச்வரன் வேறு, ப்ரஹ்மம் வேறு என்று சொல்லமுடியாது. இரண்டும் சைதன்யஸ்வரூபமே.

பூர்வ:- நிர்விசேஷ ப்ரஹ்ம த்யானம் என்பது யோகஸித்தி அடைந்தவனால்தான் செய்யமுடியும். அவனுக்கே ப்ரஹ்மம் த்யேயமாக ஆகும். ஆனால் யோகாப்யாஸ ஆரம்பத்தில் அவனுக்கு ப்ரஹ்மம் த்யேயமாக ஆகமுடியாது.

ஸித்தா:- நிர்விசேஷ ப்ரஹ்மத்யானம் செய்ய சக்தி அற்றவன், அனாத்மத்யானம் செய்வது சரியல்ல என்றும், அஹம்ப்ரஹ்மாஸ்மி என்ற ஆத்மத்யானமே செய்யவேண்டும் என்று முன்பே சொல்லப்பட்டிருக்கின்றது. அதுவும் செய்ய சக்தி அற்றவன் ப்ரணவத்தையே ப்ரஹ்மமென்று த்யானம் செய்யலாம் என்று '*ஓமித்யாத்மானம் யுஞ்ஜீத*' என்ற ச்ருதியே, நிர்க்குண ப்ரஹ்ம த்யானத்திற்கு ஓங்காரம் ஆலம்பனம் என்றே தெரிவிக்கின்றது. '*ஏதத்வை ஸத்யகாம பரஞ்ச அபரஞ்ச ப்ரஹ்ம யதோங்கார:*' என்று ப்ரணவத்தையே ப்ரஹ்மமென்று த்யானம் செய்யலாமே அன்றி அனாத்மாவான சரீரத்தை த்யானம் செய்வது சரியல்ல.

மேலும், ஈச்வர ஸ்வரூபம்தான் சுபாச்ரயம் என்றும் பரிசுத்த ஆத்மஸ்ரூவபம் சுபாச்ரயத்திற்கு அர்ஹதை இல்லை என்று தெரிவிப்பதற்காகவே இந்த ச்லோகத்தில் 'ப்ரத்யஸ்த்தமிதபேதம்' என்று தெரிவிக்கின்றதாக உன்னால் சொல்லப்பட்டதும் சரியல்ல. ஏனெனில் ஆத்மாவும் பரிசுத்தன், ஈச்வரனும் பரிசுத்தன். ஆனால் ஈச்வரன்தான் சுபாச்ரயன் என்றும் சுத்தாத்ம ஸ்வரூபத்திற்கு சுபாச்ரயத்வம் இல்லை என்றும் எவ்விதம் சொல்லமுடியும்? ஈச்வரன் பரிசுத்தன் என்பதால் கல்யாண குணங்களான சுபாச்ரயத்வம் இருப்பதாகச் சொல்லப்படுமானால், ஆத்மாவும் பரிசுத்தமானதால் சுபாச்ரயத்வம் சொல்லலாமே? அதனால் ஆத்மா வேறு, ஈச்வரன் வேறு என்றே பிரித்துச் சொல்லமுடியாது.

பூர்வ:- ஈச்வரன் கல்யாண குணங்களுடையவர். ஆத்மா நிர்க்குணம். அதனால் ஆத்மா சுபாச்ரயம் என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ஆத்மா, ஸத்யம் ஞானம் அனந்த ஸ்வரூபம் என்பதால் நிர்க்குணம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஆகவே, ஆத்மா பரிசுத்தன் என்று சொல்வதற்கு அர்த்தம் என்னவென்றால், எந்த வஸ்துவுடனும் ஸம்பந்தப்படாதவர் என்றே அர்த்தம். விசிஷ்ட்டமாக இருந்தால் அசுத்தம். அதனால் சிதசித் விசிஷ்ட்டம் பரமாத்மா என்று சொல்லப்படுமானால், பரமாத்மா பரிசுத்தம் என்று சொல்லமுடியாது. அசுத்தர் என்றே சொல்லவேண்டும். இவ்விதம் பரமாத்மாவே அசுத்தர் என்றால் அவரை உபாஸனை செய்கின்ற ஜீவாத்மா எவ்விதம் பரிசுத்தனாக ஆகமுடியும்? உன் ஸித்தாந்தப்படி ஈச்வரன் சிதசித் சரீரகன் என்று எவ்விதம் சொல்லப்படுகிறதோ அதேபோல் ஜீவனும் சிதசித் விசிஷ்ட்டம்தான், ஜீவனுக்கும் ஆந்தரமான சித் வஸ்து பாஹ்யமான அசித் வஸ்து இந்த இரண்டுடன் ஸம்பந்தம் இருக்கின்றதே? அதனால் ஜீவன் அசித் சரீரகன் என்றால், ஜீவனுக்கு சுத்தி என்பதே எந்தவிதமாகவும் ஏற்படமுடியாது?

பூர்வ:- ஜீவனுக்குள் சித் வஸ்து இருப்பதாக சொல்லவில்லை, ஈச்வரன்தான் ஜீவனுக்குள் இருக்கிறான் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஈச்வரன் ஞானஸ்வரூபம் அதனால் சித்வஸ்து தான். ஈச்வரன் சித் வஸ்து இல்லை என்றால், ஈச்வரன் ஞானஸ்வரூபமில்லை என்று அர்த்தமாகும். ஈச்வரனே ஜீவனுக்குள்

இருப்பதாகச் சொல்லப்பட்ட போதிலும், ஈச்வரன் விசிஷ்ட்டன் என்பதால் அசுத்தன். அதனால் ஜீவனும் அசுத்தன் என்றே சொல்லவேண்டும். ஈச்வரன் சுத்தன் என்றால் ஜீவனும் சுத்தன் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- விசிஷ்ட்டத்வம் என்றாலே அசுத்தத்வம் என்று சொல்வது சரியல்ல. அசுத்தமான வஸ்துவுடன் எது விசிஷ்ட்டமாக இருக்கின்றதோ அந்த வஸ்துவே அசுத்தமாகுமே அன்றி சுத்த வஸ்துவுடன் கூடியது எவ்விதம் அசுத்தமாகும்? சுத்த வஸ்துவுடன் கூடியது அசுத்தமாகாது. ஈச்வரன் பரிசுத்தன். பரிசுத்த அந்தர்யாமி விசிஷ்ட்டமான ஜீவனும் சுத்தம். ஆனால் பத்த ஜீவனுக்குள் இருக்கின்ற பரிசுத்த விசிஷ்ட்ட ஜீவன் சுத்தமாக இருந்தபோதிலும், ஜீவசரீரம் அசுத்தமாக இருக்கின்றதால், பத்தஜீவனை அசுத்தன் என்று சொல்லப்பட்ட போதிலும் முக்தனுக்கு அசித்வைசிஷ்ட்யம் கிடையாது. அவனுக்கு தேவர்கள் முதலானவர்கள் போன்ற சரீரமும் கிடையாது. அதனால் சுத்தன் என்று சொல்லலாம். ஏனெனில் முக்தனுக்கு உள்ளே இருக்கின்ற அந்தர்யாமி சுத்தம். அசுத்ததேஹமும் இல்லை. அதனால் பாஹ்யசரீரமுடைய பத்த ஜீவனுக்கே சித் வைசிஷ்ட்யமும், அசித் வைசிஷ்ட்யமும் இருக்கிறது. முக்தனுக்கு சித் வைசிஷ்ட்யம் மட்டுமே இருக்கிறது. அந்தர்யாமியாக இருக்கின்ற ஈச்வரன் அசித்விசிஷ்ட்டம் என்று சொல்லமுடியாது. முக்தஜீவன் சுத்தன் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால் ஈச்வரன், பரிசுத்தம் என்றே சொல்லமுடியாது. ஏனெனில், ஸம்ஸாரியான ஜீவனும் அசுத்தம். அசித்தும் அசுத்தம். அதனால், சிதசித் விசிஷ்ட்ட ஈச்வரன் அசுத்தம் என்றாகிறது. அதனால் பரிசுத்தம் என்று சொல்லமுடியாது. உன் மதத்தில் முக்தனுக்கும் சரீரம் இந்த்ரியங்கள் இருக்கின்றதால் அசித் வைசிஷ்ட்யம் இருக்கின்றது. அதனால் முக்தனும் சுத்தம் என்றுசொல்லமுடியாது.

பூர்வ:- முக்தனுக்கு தேவனென்றும், மனுஷ்யனென்றும் தேஹபேதம் கிடையாது என்று சொல்லப்படுகிறதே?

ஸித்தா:- மனுஷ்யர்கள் தேவர்கள் என்பது போன்ற தேஹபேதம் இல்லையென்றாலும், திவ்ய தேஹ பேதங்கள் இருக்கின்றது என்று சொல்லப்படுகிறதே? அதாவது பசுபக்ஷி - மனுஷ்யன் என்பது போன்ற தேஹபேதம் உடையவன் பத்தன். முக்தனாக இருப்பவனும் சுகர் வாமதேவர் என்பவர்களும் வைகுண்ட வாஸியாக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் வெவ்வேறு என்றுதானே உன்னால் சொல்லப்படுகிறது?

பூர்வ:- தேவர், மனுஷ்யர், என்று தேஹாதிகளின் பேதத்தைக்கொண்டே நாமபேதம் இருந்தபோதிலும், தேஹத்தினால் பரஸ்பரபேதம் இருந்தாலும் ஆத்ம ஸ்வரூபத்தில் பேதம் இருக்கமுடியாது. இதைத்தான் 'ப்ரத்யஸ்தமிதபேதம்' என்று தெரிவிக்கிறது என்கலாமே.

ஸித்தா:- ஆத்மா ஏகம் என்று உன் ஸித்தாந்தம் தெரிவிக்கவில்லை. அதனால் நீ இவ்விதம் சொல்லமுடியாது. தேஹங்கள் ஆத்மாவிற்கு பேதகமாக இல்லை என்றால், வேறு எதனாலும் ஆத்மபேதம் ஸித்திக்க முடியாது. ஆத்ம அபேதம்தான் ஸித்திக்கின்றது.

பூர்வ:- தேஹாதிபேதத்தைக்கொண்டு ஆத்மபேதம் சொல்லப்படவில்லை. ஸுகதுக்கங்கள் ஒருவனைப்போல் மற்றவனுக்கு ஏற்படுவதில்லை. ஆத்மா ஏகம் என்றால் எல்லோருடைய ஸுகதுக்கங்களும் எல்லோருக்கும் அறியப்பட வேண்டும். அவ்விதம் அறியப்படாததால் ஆத்மா அனேகம் என்று (ஆத்மநானாத்வம்) சொல்லப்படுகிறது.

ஸித்தா:- ஸுகம், துக்கம் போன்ற எல்லாமே அந்த:கரண தர்மம். அந்த:கரணத்தில் ஏற்படும் அந்தந்த விஷயாகார வ்ருத்தியினால் அந்தந்த வ்ருத்திபேதம் ஏற்படுகிறது. அதனால் அந்த:கரண வ்ருத்தி பேதத்தினால் ஏற்படும் ஸுகாதிகளுக்கும் ஆத்மாவிற்கும் எவ்வித ஸம்பந்தமும் கிடையாது. ஆகவே அந்த:கரண பேதத்தினால் அவரவர் ஸுகதுக்கம் அவரவர்களே அறியமுடியும். மற்றவர்கள் அறியமுடியாது.

பூர்வ:- தேஹ பேதத்தினால் ஆத்மபேதம் இல்லையென்றாலும், ஆகார பேதத்தினால் ஆத்மபேதம் இருக்கலாமே? உதாரணமாக பல கடங்கள் இருந்தாலும் கடம் என்பது ஒன்றே. ஆனால் ஒரு கடத்தைப்போல் மற்ற கடங்கள் இருக்காது. அதுபோல் ஆத்ம பேதம் இருக்கலாமே?

ஸித்தா:- ஞானம் என்பது ஒரே ஆகாரம்தான். ஞானத்தில் பலவித ஆகாரம் இருக்கமுடியாது. அதனால் ஆத்மா, பரமாத்மா என்று சொல்லப்பட்டாலும் அவைகள் இரண்டுமே ஞானாகாரம் என்பதால் ஸ்வரூபபேதம் இல்லை. அதனாலேயே ஜீவபரமாத்ம பேதமில்லை என்று சொல்லப்படுகிறது.

பூர்வ:- ஆத்மா, பரமாத்மா என்ற இரண்டுமே ஞானாகாரமாக இருக்கின்றது என்பதற்காக பேதமில்லை என்று சொல்லமுடியாது. ஏனெனில் ப்ரதீபம் என்பது ஏகாகாரமாக ப்ரகாச ஸ்வரூபமாக இருந்தாலும், அந்த ப்ரதீபமும் பரஸ்பரம் பேதம் உள்ளதாகத்தானே இருக்கின்றது? ஒன்று மிகுந்த ப்ரகாசமாகவும், மற்றொன்று குறைந்த ப்ரகாசம் உடையதாகத்தானே இருக்கின்றது? இதுபோல் ஆத்மா பரமாத்மா என்ற இரண்டும் ஞானகாரமாக இருந்தாலும் பேதம் இருக்கலாமே?

ஸித்தா:- ப்ரதீப ப்ரகாசத்தில் பரஸ்பரபேதம் கிடையாது. ப்ரதீபத்தில் உள்ள திரி போன்ற உபாதிகளின் பேதத்தினால்தான் ப்ரகாசத்தில் பேதம் ஏற்படுகிறதே அன்றி ஸ்வயம்ப்ரகாசகமான ப்ரதீபத்தில் பேதம் கிடையாது.

பூர்வ:- ஞானம் என்பது ஸ்வத: பேதம் உள்ளது என்றே சொல்லலாமே? எதனால் பேதம் என்று சொல்லவேண்டிய அவச்யம் இல்லை. கடம், படம் என்பவைகள் ஸ்வயமே பேதம் என்று சொல்லப்படுகிறதே அன்றி வேறு ஒரு உபாதியினால் பேதம் என்று சொல்வதில்லை. அதனதன் ஆகாரபேதத்தைக்கொண்டே பேதம் சொல்லப்படுகிறது. அதேபோல் ஞானமும் ஸ்வத: வெவ்வேறு ஆகாரபேதம் உள்ளது என்று சொல்லலாமே?

ஸித்தா:- கடஞானம் படஞானம் என்பதெல்லாம் அந்தந்த ஆகாரவ்ருத்திஜன்யஞானம். ஜன்யமான வ்ருத்தி அந்தந்த வஸ்து ஆகாரமாக ஏற்படலாம் என்பதால் வ்ருத்தி ஞானம்

பேதம் என்று சொல்லலாம். ஆனால் அஜன்யமான நித்யஞான ஸ்வரூபத்தில் பேதம் என்பதே சொல்லமுடியாது.

பூர்வ:- நித்யமாகவும், அஜன்யமாகவும் ஞானம் என்பதே இருக்கமுடியாதே? அவ்விதம் அஜன்யமாக, நித்யமாக ஞானம் இருப்பதாக ஒருவராலும் அறியப்படவில்லை.

ஸித்தா:- ஆத்மஸ்வரூபமே நித்ய ஞானஸ்வரூபம்தான். ஞானஸ்வரூபமே ஆத்மா. ஸ்வரூபஞானம் ஜன்யமில்லை. உன்னுடைய ஸித்தாந்தத்திலும், ஜீவனிடம் தர்மபூத ஞானம் இருக்கின்றது என்றும், அது ஜன்யமானாலும், நித்யம் என்று சொல்லப்படுகிறதே? அதனால் நித்யஞானம் என்பதே கிடையாது என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- நித்யஞானமாக இருந்தாலும் அது அனேகமாக இருக்கலாமே? நித்யஞானம் ஏகம் என்று சொல்லவேண்டிய அவச்யமில்லை.

ஸித்தா:- நித்யஞானம் என்றால் அதில் பேதம் இருக்கமுடியாது. ஆகாசத்தில் பேதம் என்றால் ஆகாசத்தை வேறுபடுத்துவது போலாகும். அவ்விதம் பேதம் இருப்பதாக ஸாதிக்கமுடியாது. அதனால் நித்யஞானம் பேதம் உள்ளது என்று ஸாதிக்கப்படுமானால்தான் ஞானம் அனேகம் என்று சொல்லமுடியும். தேசம், காலம், வஸ்து என்ற பரிச்சேதம் உள்ள வஸ்துவிற்கே பேதம் சொல்லமுடியும். அவ்விதம் பேதமுள்ள வஸ்துக்கள் நித்யம் என்று ஸாதிக்கமுடியாது. எந்த வஸ்து மூன்றுவித பரிச்சேதங்களும் அற்றதோ அந்த வஸ்துவே நித்யம் என்று சொல்லமுடியும். அதனால்தான் ஞானம் அனந்தம் என்று சொல்லப்படுகிறது. (அனந்தம் என்றாலே அந்தம் அற்றது நித்யம் என்று அர்த்தம்) அதனால் ஞானம், அனந்தம் என்பதனாலேயே ஞானத்தை அன்றி வேறு வஸ்துவே இல்லை என்று சொல்லப்படுகிறது. வேறு வஸ்துவே இல்லை என்றால் எதைக்கொண்டு ஞானபேதம் சொல்லமுடியும். ஞானம் என்பதை எதனாலும் வேறுபடுத்தமுடியாது. அதனால் ஞானம் நிர்பேதம், அதுவே ஆத்மா என்று சொல்லப்படுவதால் அத்வைதம் என்பதே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ஞானம் என்றாலே ஜ்ஞேயம் என்பதும் இருக்கவேண்டும். ஜ்ஞேயமில்லை என்றால் ஞானம் எதை ப்ரகாசப்படுத்த முடியும்? ஆகவே (ஞானம் என்றாலே விஷயஸாகாங்க்ஷையுடையது என்றே சொல்லவேண்டும்) ஞானம், தேசபரிச்சேதம், காலபரிச்சேதம் அற்றது என்று சொல்லப்பட்டாலும், வஸ்து பரிச்சேதமில்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- அறியப்படும் வஸ்துக்கள் எல்லாமே (ஜ்ஞேயம் என்பதெல்லாம்) கல்பிதம் என்றே சொல்லப்படுவதால், ஜ்ஞேயவஸ்துக்களால் ஞானத்திற்கு பரிச்சேதம் சொல்லமுடியாது. கானல் நீரினால் பூமி சேராக ஆகிறதில்லை.

பூர்வ:- ஜ்ஞேயம் மித்யை என்று சொல்வது சரியல்ல. ஸத்யம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- *'ஞானம் யதா ஸத்யமஸத்யம் அன்யத்'* (ज्ञानं यथा सत्यमसत्यमन्यत्) என்று விஷ்ணு புராணவசனம் தெரிவிக்கின்றதால், ஜ்ஞேயம் அஸத்யம் என்றே தெரிவிக்கின்றது. அதாவது ஞானம் ஒன்றே ஸத்யம், அதுபோல் மற்ற எதுவும் ஸத்யமல்ல, ஞானத்தை அன்றி வேறான ஸர்வமும் க்ஷயம் என்றே (நாசத்தை அடையக்கூடியது) சொல்லவேண்டும். அதனால்

ஜ்ஞேயங்கள் எல்லாமே அஸத்யமாக இருப்பதனாலேயே அஸத்யம் என்று சொல்லப்படுகிறது. அறியப்படும் ஸர்வ வஸ்துக்களுக்கெல்லாம் எது அதிஷ்ட்டானமோ அதுவே ஸத்யம். அந்த அதிஷ்ட்டானஸத்யமே ஸர்வத்திலும் தோன்றுகிறது. அதனால் ஜ்ஞேயங்களின் ஸத்வம் ஸ்வயமே இருப்பதாக அறியப்படுமானால் அது ப்ராந்தி ஞானமே அன்றி யதார்த்த ஞானமில்லை.

'*தஸ்மாத் ந விஞ்ஞானம்ருதேஸ்தி கிஞ்சித் க்வசித் கதாசித் த்விஜ வஸ்துஜாதம்*' (तस्मान्न विज्ञानमृतेस्ति किंचित् क्वचित् कदाचित् द्विज वस्तुजातम्) என்று விஷ்ணு புராணத்தில் உள்ள மற்றொரு வசனம் தெரிவிக்கின்றது. ஆகையினால் விஞ்ஞானத்தை அன்றி வேறாக கொஞ்சங்கூட சிறிதும் 'ஸத்வம்' என்பது எந்த வஸ்துவிற்கும் ஒருபோதும் கிடையாது என்று காலத்ரயத்திலும் ஜ்ஞேயத்திற்கு ஸத்வம் கிடையாது என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. இதுவே ப்ரமாணம். இதற்கு மாறுபட்ட முறையில் அர்த்தம் செய்யப்படுமானால் அதை அப்ரமாணம் என்றே தள்ளவேண்டும். ஆகவே - ஞானஸ்வரூபம் ஆத்மா, அதனாலேயே நித்யம், அனந்தம் என்று சொல்லப்படுகின்றதால், ஆத்மா நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது. இதையே 'ப்ரத்யஸ்த்தமிதபேதம்' (प्रत्यस्तमितभेदं) என்ற விஷ்ணுபுராண (6.7.53) வாக்யமும் தெரிவிக்கின்றது.

97

'ज्ञानस्वरूपमखिलम्' इत्यादिश्लोकस्यापि प्रपञ्चमिथ्यात्वपरत्वप्रतिपादनम्।

'ஞானஸ்வரூபம் அகிலம்' இத்யாதி ச்லோகஸ்யாபி ப்ரபஞ்சமித்யாத்வபரத்வ ப்ரதிபாதனம்

(விஷ்ணுபுராணம் 1.4.40)

'ஞானஸ்வரூபமகிலம் ஜகதேதத் அபுத்தய:,
அர்த்த ஸ்வரூபம் பச்யந்தோ ப்ராம்யந்தே மோஹஸம்ப்லவே'

ज्ञानस्वरूपमखिलं जगदेतत् अबुद्धयः।
अर्थस्वरूपं पश्यन्तो भ्राम्यन्ते मोहसंप्लवे

பூர்வ:- அவரவர் ஆத்மா, ஸ்வயமே வெவ்வேறாக இருந்தபோதிலும், ஞானாகாரத்தில் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக இருந்தபோதிலும், ஞானஸ்வரூபமான தன்னை, தேவன், மனுஷ்யன் முதலான சரீரங்களை உடையவன் என்று தன்னை ஜடஸ்வரூபமாக நினைக்கின்றான். அதுவே ப்ராந்தி என்றுதான் இந்த ச்லோகத்திற்கு அர்த்தம். அதனால் ஞானஸ்வரூபமான ஆத்மாவும் இருக்கின்றது. ஜ்ஞேயமான தேஹாதிகளும் இருக்கின்றன என்றே சொல்லவேண்டும். அதனால் ஜடமான தேஹாதிகளையே நான் என்று அறிவதுதான் ப்ராந்தி என்று தெரிவிக்கின்றதே அன்றி தேஹாதிகள் மித்யை என்று தெரிவிக்கவில்லை.

ஸித்தா:- *'ஞானஸ்வரூபம் அகிலம் ஜகத்'* என்றுதானே, இந்த ச்லோகத்தில் பதங்கள் இருக்கின்றது? ஞானஸ்வரூபம் ஆத்மா என்றோ, தேவ மனுஷ்யாதி சரீரகன் என்றோ பதங்கள் எதுவும் இந்த ச்லோகத்தில் சொல்லப்படவில்லையே? அதனால் 'அகிலம் ஜகத்' என்ற பதம் ஆத்மாவை குறிக்கின்றதாக சொல்வது சரியல்ல. ஏனெனில் அனாத்மாவான ஜகத்சப்தம் ஆத்மாவை குறிக்கின்றது என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ஜகத் என்பதே சேதன அசேதனாத்மகமாக இருக்கின்றது. அதனால் ஜகத் என்பதில் சித் என்பதும் சேர்ந்திருக்கின்றதால் ஆத்மாவை தெரிவிப்பதாகச்சொல்லலாம். அதனால் சித் அசிதாத்மகம் ஜகத் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- அகிலம் ஜகத் என்று சொல்லப்படுவதால் சித், அசித் என்ற இரண்டையும் ஜகத் சப்தம் குறிப்பிடவேண்டும். ஆத்மாவை மட்டும் குறிப்பதாகச் சொல்லப்படுமானால், 'அகிலம் ஜகத்' என்ற பதம் பொருந்தாது. சித்ரூபமான ஞானஸ்வரூபத்தில், அசித் அத்யஸ்த்தம் என்பதால் ஞானஸ்வரூபம் அகிலம் ஜகத் என்று சொல்லலாம். ஏனெனில், அத்யஸ்த்தங்களுக்கெல்லாம் அதிஷ்ட்டானமே ஸ்வரூபம் என்பதால், உபசாராத் அகில

ஜகத்தும் ஞானஸ்வரூபம் என்று சொல்லலாம். ஆனால் ஜகத்தின் ஸ்வபாவம் அசித் ஸ்வரூபம்தான்.

மேலும், சேதனம், அசேதனம் என்று சொல்லப்படுவதில், சேதனம் என்று சைதன்யத்தை சொல்லப்படவில்லை. ப்ரஹ்மா முதல் ஸ்தம்ப பர்யந்தம் (க்ருமி கீடாதிகள்) உள்ள சரீரத்தையே சேதனம் என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் சைதன்யம் எங்கும் வ்யாபகமக இருந்தபோதிலும், சேதன வர்க்கமான இந்த சரீரம் முதலானவைகளில் தான் ஸ்பஷ்ட்டமாக ப்ரகாசிக்கின்றது. இவ்விதம் சரீராதிகளில் சைதன்யம் ஸ்புடமாக அபிவ்யக்தமாகின்றதால், இந்த சரீரத்தை சேதனம் என்று சொல்லப்படுகிறது.

இவ்விதம் வ்ருக்ஷம் முதலானவைகளில் சைதன்யம் ஸ்புடமாக அபிவ்யக்தமாகாததால் அவைகளை அசேதனம் என்று சொல்லப்படுகிறது. அதனால் சேதனம், அசேதனம் என்ற இரண்டுமே அசேதனம்தான். இவ்விதம் சைதன்யம் ஜகத்தில் சேர்ந்ததல்ல என்பதால் சேதனாசேதனாத்மகம் ஜகத் என்றால், ஸர்வமும் ஜடம் என்றே சொல்லவேண்டும். ஆகவே சைதன்யம், ஜடத்தில் விசேஷமாக ப்ரகாசிக்காததால் அசரமாக இருக்கின்றதால், அவைகளை அசேதனம் என்று வ்யவஹாரம் செய்யப்படுகிறது. ஆனால் சரீரம் போன்ற உபாதிகளில் சைதன்யம் அஹம் அஹம் என்று ப்ரகாசிக்கின்றதாலும், அதனாலேயே அசையும் தன்மையில் இருப்பதாலும் சரம் என்றும் வ்யவஹாரம் செய்யப்படுகிறது. ஆனாலும் சேதனம், அசேதனம் என்ற வ்யவஹாரத்திற்கு விஷயம் ஜடமான அசித் என்றே சொல்லவேண்டும். அவைகள் சைதன்யமில்லை. ஆகவே, ஜகத் அந்த:பாதி (ஜகத்திற்குள் சேர்ந்த ஒரு அம்சம்) ஆத்மா என்று சொல்லமுடியாது. ஆகையால், ஆத்மா சேதனன் என்றும், சேதனஅசேதனாத்மகம் ஜகத் என்று சொல்வது சரியல்ல. சேதனஅசேதனாத்மகம் ஜகத் என்பதில், 'சேதனம்' என்ற பதத்திற்கு ப்ராணி என்று அர்த்தம். ப்ராணனக்ரியை உடைய வஸ்து எதுவோ அதற்கே ப்ராணி என்று அர்த்தம். ஆகவே, சேதனன் என்ற பதத்திற்கு அனாத்மா என்றே அர்த்தம். 'ஆத்மா' என்று அர்த்தமல்ல.

பூர்வ:- ப்ராணி என்றாலும் ஆத்மாதானே?

ஸித்தா:- ப்ராணன் உள்ளது ப்ராணி. ப்ராணனக்ரியை இந்த சரீரத்தைச்சேர்ந்தது. அதனால் சரீரமே ப்ராணி. (அதனால்தான் மற்ற அசேதன வர்க்கத்தை ப்ராணி என்று சொல்வதில்லை) அசேதனமான ப்ராணனக்ரியையுடைய சரீரம் ஆத்மா அல்ல. இதையே '*அப்ராணோ ஹ்யமனாச்சுப்ர:*' (अप्राणो ह्यमनाश्शुभ्रः) என்று ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது.

அகிலம் ஜகத் ஆத்மபின்னம். ஸர்வம் அனாத்ம வஸ்து என்பதால் மித்யை என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதனால் உன்னால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல.

பூர்வ:- ப்ரஹ்மம் ஞானஸ்வரூபம். அகில ஜகத்தும் அவித்யையினால் ப்ரஹ்மத்தில் அத்யஸ்த்தம் என்பதால் ஜகத் மித்யை என்று சொல்வது சரியல்ல. ஏனெனில், ஞான ஸ்வரூபம் ப்ரஹ்மம் என்றால், அதில் அவித்யை எவ்விதம் இருக்கமுடியும்? ப்ரஹ்மம் நிர்தோஷம். (தோஷமற்றது) அவித்யை என்பது தோஷம். அதனால் தோஷமற்ற ஸ்வரூபத்தில் அவித்யை

என்ற தோஷம் இருக்கமுடியாது. அகில ஜகத்தும் ப்ரஹ்மத்திலிருந்தே உண்டாகிறது என்று சாஸ்திரம் தெரிவிக்கின்றது. அதனால் ஜகத் மித்யை என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- பட்டபகலில் ஸூர்யன் மிகுந்த ப்ரகாசத்துடன் ப்ரகாசிக்கின்றபோது, கோட்டானுக்கு, பட்ட பகல் இருள் என்று தோன்றுகிறது. கோட்டானுடைய த்ருஷ்டியில், ஸூர்யனிடம் இருள் ஆரோபிதம் என்றே சொல்லவேண்டும். உண்மையில் ஸூர்யன் ஜகஜ்யோதியாக ப்ரகாசித்தும், கோட்டானுக்கு இருள் தோன்றுமானால், ஸூர்யனிடம் இருள் ஆரோபிதம் என்றே சொல்லவேண்டும். அதேபோல் ப்ரஹ்மத்தினிடம் உண்மையில் அவித்யை கிடையாது. ஆனால் ப்ரஹ்மஸ்வரூபம் அறியப்படாததால், அவித்யையினால் மறைக்கப்படுகிறது என்று ஆரோபிதம் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் அவித்யை என்பதும் ப்ரஹ்மத்தினிடம் கல்பிதமே அன்றி வாஸ்தவமல்ல. ஆகவே இவ்விதம் கல்பிதமான அஞ்ஞானம் ப்ரஹ்மத்தில் இருப்பதாகச் சொல்லப்படுவதால் ஹானி ஏதுமில்லை. இவ்விதம் எவருக்கு ப்ரஹ்மஸ்வரூபம் அறியபடவில்லையோ அவரையே ப்ராந்தன் என்று சொல்லப்படுகிறது. அவ்விதம் ப்ராந்தி இல்லாதவன் ப்ரஹ்மஸ்வரூபத்தை அறிந்தவனாக இருக்கின்றதால், '*ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*' என்று அவனே ப்ரஹ்மம் என்று சாஸ்திரம் தெரிவிக்கின்றது. ஆகவே உண்மையில் ப்ரஹ்மத்தில் அவித்யை இல்லை என்பதனாலேயே, ப்ரஹ்மம் ப்ராந்தன் என்று சொல்லப்படுவதில்லை என்று ச்லோகத்தில் தெரிவிக்கப்படுகிறது.

பூர்வ:- '*ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:*' என்று சொல்லப்படுவதால், ஜீவன் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறல்ல என்றால், ஜந்துக்களே ப்ரமிக்கிறார்கள், ப்ரஹ்மம் ப்ராந்தன் அல்ல என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ப்ராந்தனை ப்ரஹ்மம் என்று சொல்லப்படவில்லை. ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி என்று, அப்ராந்தனான 'ப்ரஹ்மவித்' என்பவனையே ப்ரஹ்மம் என்று தெரிவிக்கின்றது. அதனால் அஞ்ஞனான ஜந்துக்கள் ப்ரமிக்கின்றார்கள் என்பதற்காக ப்ரஹ்மம் ப்ரமிக்கின்றது என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- ப்ராந்தனான ஜீவனுக்கும் உண்மையான ஸ்வரூபம் ப்ரஹ்மம்தானே?

ஸித்தா:- உண்மையில் ஜீவனும் ப்ரஹ்மம்தான். அதனால் ஜீவனுக்கு ப்ராந்தி என்பதும் உண்மையல்ல (பரமார்த்தம் இல்லை). ப்ரஹ்ம ஸ்வரூப ஞானம் ஏற்படுகின்றபோது ப்ராந்தியும் நிவர்த்திக்கின்றதால், உண்மையில் ப்ராந்தி என்பதும் கிடையாது என்றே சொல்லவேண்டும். எதுவரை 'நான் ப்ரஹ்மம் இல்லை' என்று ப்ராந்திஞானம் இருக்கின்றதோ அதுவரையில்தான் அவித்யா ஸம்பந்தம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நானே ப்ரஹ்மம் என்று தன் உண்மையான ஸ்வரூபம் அறியப்படுமானால், அவித்யா ஸம்பந்தம் என்பதும் கிடையாது. அதனால் ப்ரஹ்மத்திற்கும் அவித்யாஸம்பந்தம் என்பது உண்மையில் கிடையாது. அதனால்தான் ப்ரஹ்மம் நிர்த்தோஷம் என்று சொல்லப்படுகிறது.

மேலும், ஜகத் பகவானிடமிருந்து உண்டாகிறது என்று சாஸ்த்ரவிஹிதத்வாத், ஜகத் பரமார்த்த பூதம் என்று (அபரமார்த்த அயோகாத்) என்று உன்னால் சொல்லப்பட்டது. அதுவும் சரியல்ல. ஜகத்தானது ப்ரத்யக்ஷமாகவே அறியப்படுகின்றதால் அதை சாஸ்திரம் தெரிவிப்பதாகச்

சொல்வது (விதிக்கிறது) பொருந்தாது. ஏனெனில் அஞ்ஞாதஞாபனம் என்பதே ப்ரமாணம் என்பதால் அஞ்ஞாத ஞாபனமாக இல்லாத ஜகத்தை சாஸ்திரம் தெரிவிக்குமானால் சாஸ்திரம் அப்ரமாணம் என்றே சொல்லநேரிடும்.

பூர்வ:- ஜகத், ப்ரத்யக்ஷமாக அறியப்பட்டபோதிலும், இவையெல்லாம் பகவத் விபூதி (மஹிமை) என்று அறியப்படவில்லை. அதனால் சாஸ்திர விஹிதம் என்று சொல்லலாமே? இவை எல்லாமே பகவானிடமிருந்து உண்டாகிறது என்பதை ப்ரத்யக்ஷம் தெரிவிக்க முடியாது. அதனால் சாஸ்திரம் தெரிவிக்கின்றது (விஹிதம்) என்று சொல்லலாமே? அதனால் ஜகத் அபரமார்த்தம் என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ஜகத் பரமாத்மாவினிடமிருந்து உண்டாயிற்று என்று பரமாத்மாவின் விபூதி என்று தெரிவிக்கின்றது என்பதற்காக ஜகத் பரமார்த்தம் என்று எப்படிச்சொல்லமுடியும்? அபரமார்த்தமாக இருந்தாலும் பகவானுடைய விபூதி என்று சொல்லலாம். அதில் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை. ஆனால் பகவத் விபூதி என்பது விவர்த்தோபாதானமாக இருந்தாலும், அது பரமார்த்தம் என்று சொல்லவேண்டிய அவச்யம் ஏதுமில்லை. இதனாலேயே பகவான் மாயையினால் ஸர்வஜகத்தாகவும் பரிணமிக்கின்றார் என்பதையே பகவத் விபூதி என்று சொல்லப்படுகிறது. ஆசார்யன் மூலமே இதை அறியவேண்டும். ஆகவே பகவத் விபூதி என்பதை சாஸ்திரம்தான் தெரிவிக்கவேண்டும். ஆகவே பகவத் விபூதி பரமார்த்தம் என்று தெரிவிக்கவில்லை. ஜகத் அபரமார்த்தம் என்றே சொல்லப்படுகிறது.

ஏனெனில் ஸர்வமும் ப்ரஹ்மகார்யம் என்றே சாஸ்திரம் தெரிவிக்கின்றதால் (ப்ரஹ்ம விபூதிதான் என்பதால்) ஜகத் மித்யை என்று தெரிவிப்பதற்காகவே ப்ரஹ்மவிபூதியை காரணமாக தெரிவிக்கின்றது. இதையே ச்ருதிகளும் '*யதோவா இமானி பூதானி ஜாயந்தே...*' என்று இவையெல்லாம் எதிலிருந்து உண்டாயிற்றோ... என்று ஜகத் மித்யை என்று தெரிவிப்பதற்காகவே 'ப்ரஹ்மவிபூதி'யான ஜகத்திற்கு ப்ரஹ்மத்தை காரணமாக தெரிவிக்கின்றது. லோகத்திலும் காரணம் ஸத்யம், கார்யம் மித்யை என்றே சொல்லப்படுகிறது. இந்த கருத்தில்தான் விஷ்ணுபுராணத்திலும், ஜகத், ப்ரஹ்மத்தின் விபூதி என்றே வர்ணிக்கின்றதால் ஜகத்மித்யை என்றே ஸித்திக்கின்றது.

ஒரு சிஷ்யன், தன் குருவினிடம் ஜகத் எதனுடைய கார்யம் என்று ப்ரச்னம் செய்கிறான். அதற்கு பதில் தெரிவிக்கின்ற குருவானவர், மாயையினால் ஜகத்ரூபேண ப்ரஹ்மமே ப்ரகாசிக்கின்றது என்றும் உண்மையில் ஜகத் என்பதும் ப்ரஹ்மமே என்று தெரிவிக்கின்றார். அதற்கு உதாரணமாக 'ரஜ்ஜு ஸர்ப்பம்' போல் என்று தெரிவிப்பதன் மூலம் ரஜ்ஜு ஒன்றே ஸத்யம் என்று தெரிவிக்கின்றார். அதேபோல் ஜகத் என்பது ப்ரஹ்மமயம் என்று பதில் தெரிவிக்கின்றதால் பரமாத்ம கார்யம் ஜகத் என்று அர்த்தம். ம்ருண்மயம் கடம் என்றால், ம்ருத்கார்யம் கடம் என்றே அர்த்தம். இவ்விதம் ஸாமானாதிகரண்ய நிர்த்தேசத்தினால் பரமாத்மாவே பரமார்த்தம் என்று, ஜகத்தை பாதித்து, ப்ரஹ்மத்தை போதிக்கின்றது.

'सोह' मित्यादिविष्णुपुराणवचनानां जगन्मिथ्यात्वपरत्वोपपत्तिः।

'ஸோஹ'மித்யாதி விஷ்ணுபுராண வசனானாம் ஜகன் மித்யாத்வபரத்வஉபபத்தி:

'ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம' என்று ஸர்வ ஜகத்தும் ப்ரஹ்மம் என்று பாதாயாம் ஸாமானாதிகரண்யேன, ஜகத்தை பாதித்து ப்ரஹ்மம் போதிக்கப்படுகிறது.

பூர்வ:- ப்ரஹ்மத்தின் கார்யம் ஜகத் என்றால், ஜகத்தை பாதித்து ப்ரஹ்மம் போதிக்கப்படுவதாக அத்வைதிகளால் சொல்லப்படுவது சரியல்ல. உதாரணமாக, ம்ருத்தின் கார்யம் கடம் என்பதற்காக, கடத்தை பாதித்து ம்ருத் அறியப்படுவதில்லை. ஏனெனில் ஒன்றுக்கொன்று விருத்தமாக இருந்தால்தான் பாதாயாம் ஸாமானாதிகரண்யம் சொல்லலாம். *'ய: சோர:' 'தத்ஸ்தாணு:'* என்ற இடத்தில்தான் (சோரனை பாதித்து ஸ்தாணுவை தெரிவிப்பதாகச் சொல்லலாம்) பாதாயாம் ஸாமானாதிகரண்யம் பொருந்தும். ம்ருத், அதன் கார்யமான கடம் என்று இரண்டுமே அறியப்படுகிறதால் விரோதம் ஏதுமில்லை. அதேபோல் ப்ரஹ்மம் அதன் கார்யமான ஜகத் இரண்டுமே இருக்கலாம். ப்ரஹ்மகார்யம் என்பதற்காக பாதாயாம் ஸாமானாதிகரண்யேன கார்யமான ஜகத் பாதிக்கப்படுவதாக சொல்லமுடியாது.

(விஷ்ணுபுராணம் 1.1.4)

ஸோஹமிச்சாமி தர்மஞ்ஞ ச்ரோதும் த்வத்தோ யதோ ஜகத்
பபூவ பூயச்ச யதோ மஹாபாக பவிஷ்யதி

(விஷ்ணுபுராணம் 1.1.5)

யன்மயம் ச ஜகத் ப்ரஹ்மன் யதச்சைதச்சராசரம்
லீனமாஸீத்யதா யத்ர லயமேஷ்யதி யத்ரச

सोहमिच्छामि धर्मज्ञ श्रोतुं त्वत्तो यतो जगत्।
बभूव भूयश्च यतो महाभाग भविष्यति॥
यन्मयं च जगद्ब्रह्मन् यतश्चैतच्चराचरम्।
लीनमासीद्यथा यत्र लयमेष्यति यत्र च।

ஆசார்யனிடம் (பராசரர்) ஒரு சிஷ்யன் (மைத்ரேயர்) ப்ரச்னம் செய்வதாக இந்த ச்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஜகத் இதற்கு முன்னால் எவ்விதம் இருந்தது? பிறகு இந்த ஜகத் எவ்விதம் உண்டாயிற்று? இந்த ஜகத் யத் ரூபம்? எதிலிருந்து சராசரமான இந்த ஜகத் உண்டாயிற்று.

இவ்விதம் உண்டாவதற்கு முன் எதில் லயத்தை அடைந்திருந்தது? மறுபடி லயம் அடைவது எப்படி என்று கேட்கப்பட்டிருக்கிறது.

பூர்வ:- இந்த ச்லோகத்தில், ப்ரஹ்மத்தின் அசாதாரண ஸ்வரூப விசேஷம் என்ன? ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் விபூதிகள் என்ன? ப்ரஹ்ம ஆராதனம் செய்வது எப்படி? இதன் பலன் என்ன? என்று கேட்பதாக ராமானுஜ பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரஹ்மஸ்வரூபம் என்ன? என்று கேட்கப்படுவதால், இந்த ஜகத்திற்கு நிமித்தோபாதானம் என்னவென்றும், '*யன்மயம் ஜகத்*' என்று கேட்கப்படுவதில் அர்த்தம் என்னவென்றால் ச்ருஷ்டி, ஸ்திதி, லயம் என்ற அவஸ்த்தைகளையுடைய ஜகத்தின் ஸ்வரூபம் என்ன என்றே கிமாத்மகம் என்று கேட்கப்பட்டிருக்கின்றது. சிஷ்யனுடைய கேள்விக்கு உத்தரமாக - '*ஜகச்ச ஸ:*' என்று ஆசார்யரால் பதில் சொல்லப்படுகிறது.

(விஷ்ணு புராணம் 1.1.31)

விஷ்ணோ: ஸகாசாத் உத்பூதம் ஜகத் தத்ரைவ ச ஸ்திதம்
ஸ்திதிஸம்யமகர்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்சஸ:

विष्णोः सकाशात् उद्भूतं जगत् तत्रैव च स्थितम् ।
स्थितिसंयमकर्तासौ जगतोस्य जगच्च सः ॥

இந்த ஜகத் விஷ்ணு ரூபம்தான் என்று ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் ஜகத்தே விஷ்ணு, விஷ்ணுவே ஜகத் என்று அபேதஸாமானாதிகரண்யம் சொல்லமுடியாது.

ஆகவே, அந்தர்யாமியான விஷ்ணு, ஸர்வ ஜகத்திலும் வ்யாபித்திருக்கின்றதால் விஷ்ணு வ்யாபகம், ஜகத் வ்யாப்யம் என்று வ்யாப்ய, வ்யாபக பாவத்தினால் ஸாமானாதிகரண்யம் சொல்லப்படுகிறது. அதனால் ஜகத்தும் ப்ரஹ்மமும் ஒன்றே என்று ஐக்யே ஸாமானாதிகரண்யம் சொல்லப்படவில்லை. மேலும், '*யன்மயம் ஜகத்*' என்று ப்ரச்னம் செய்யப்பட்டிருக்கிறது. ஜகத் பூராவும் பகவானே வ்யாபித்திருக்கின்றதால், மயட் சப்த ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. யாரால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்கப்பட்டதற்கு '*ஜகச்ச ஸ:*' என்று விஷ்ணுவால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது என்றே பதில் சொல்லப்படுகிறது. அதனால், எதனால் வ்யாபிக்கபடுகிறதோ வ்யாபகமான அந்த வஸ்துவே அதிகமாக இருக்கின்றதால் மயட் சப்தம் ப்ராசுர்யார்த்தத்தில்தான் தெரிவிக்கப்படுகிறதே அன்றி விகாரார்த்தத்தில் சொல்லப் படவில்லை. ஏனெனில் '*யதச்ச ஏதத்சராசரம்*' என்று சராசரமான இந்த ஜகத் எதனுடைய கார்யம் என்று எதிலிருந்து உண்டாயிற்று என்றே கேட்கப்படுகிறது. அதனால் '*யன்மயம்*' என்பதில் மயட் சப்தம் ப்ராசுர்யார்த்தம் என்றே சொல்லவேண்டும்.

ப்ராணமயம் என்பதுபோல், ஸ்வார்த்தே மயட் என்றும் சொல்லமுடியாது. ஏனெனில் அவ்விதம் இருந்தால் '*ஜகச்ச ஸ:*' என்று பதில் தெரிவித்திருக்கமுடியாது. '*விஷ்ணுரேவ*'

என்று பதில் தெரிவித்திருந்தால்தான் ஸ்வார்த்தேமயட் என்று சொல்லலாம். விஷ்ணுதான் என்று பதில் சொல்லப்படவில்லை. '*ஜகச்ச ஸ:*' (जगच्च स:) என்று விஷ்ணுவினால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது என்றே சொல்லப்படுகிறது. அதனால் ப்ராசுர்யார்த்தே மயட் (சப்தார்த்தம்) என்றே சொல்ல வேண்டும்.

ஸர்வ ஜகத்தும் பகவானுடைய சரீரம் என்பதால், சரீரம் முழுவதும் பகவான் வ்யாபித்திருக்கின்றதால் ப்ரசுரம் என்று ப்ராசுர்யார்த்தத்தில் சொல்லலாம். அதனால் '*ஜகச்ச ஸ:*' என்ற ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இதில் எதுவும் பாதிக்கப்படாததால் பாதாயாம் ஸாமானாதிகரண்யம் பொருந்தாது. அதனால் சரீரசரீரி பாவத்தைக் கொண்டே ஸாமானாதிகரண்யம் சொல்லவேண்டும்.

ஸித்தா:- இது சரியல்ல. '*யன்மயம் ஜகத்*' என்பதில் யன்மயம் என்ற பதத்திலுள்ள 'யத்' சப்தார்த்தம் விஷ்ணுவை குறிக்கின்றது. ஜகத் விஷ்ணுரூபம் என்று பதில் சொல்லப்படுவதால், விஷ்ணுவினுடைய ஒரு தோற்றம் ஜகத் என்றே அர்த்தம். அதனால் விஷ்ணு வேறு, ஜகத் வேறு, அந்த ஜகத்திற்கும் விஷ்ணு அந்தர்யாமியாக இருக்கிறார் என்றெல்லாம் அர்த்தம் செய்வது சரியல்ல. '*ஜகச்ச ஸ:*' என்று ஸாமானாதிகரண்ய ப்ரயோகத்தினால், தெரிவிக்கின்றது. அதாவது '*ஜகச்ச ஸ:*' என்ற பதத்திலுள்ள 'ச' என்ற அக்ஷரம் 'விஷ்ணுவே' என்று (விஷ்ணுதான்) ஏவகாரத்தினாலேயே தெரிவிக்கின்றது. அதனால் '*யன்மயம்*' என்ற பதத்தில் உள்ள மயட் சப்தம் ஸ்வார்த்தே மயட் என்றே சொல்லவேண்டும். இவ்விதமே அர்த்தம் செய்யவேண்டுமென்ற அவச்யமில்லை. அவ்விதம் ஒத்துக்கொள்ளாவிட்டாலும்கூட விகாரார்த்தே மயட் என்றே அர்த்தம் செய்யலாம்.

இந்த ஜகத் எதனுடைய கார்யம் என்று எதனுடைய விகாரம் என்றே கேட்கலாம். விஷ்ணுமயம் ஜகத் என்று விஷ்ணுவின் கார்யம் இந்த ஜகத் என்றே சொல்லலாம். அதனால் கேள்விக்கு, பதில் பொருத்தமானது என்றே சொல்லலாம்.

உதாரணமாக யன்மயம் கடம் என்று கேட்டால் ம்ருண்மயம் கடம் என்று விகாரார்த்தே மயட் சப்தார்த்தம் என்றே சொல்லலாம். இந்த கருத்தையே, '*ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்*' என்று ஸ்ம்ருதி வாக்யமே தெரிவிக்கின்றது. ஆகவே கடம், ம்ருத்ரூபமே என்று சொல்வதுபோல், விஷ்ணு கார்யமான இந்த 'ஜகத் விஷ்ணுவேதான்' என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- மேலே '*யதச்ச ஏதத்சராசரம்*' என்று இந்த ஜகத்திற்கு எது நிமித்தோபாதானம் என்று ப்ரச்னம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் '*யன்மயம் ஜகத்*' என்ற ப்ரச்னம் காரணப்ரச்னம் என்று சொல்லப்படுமானால், புனருக்தி தோஷம் ஸம்பவிக்கும். அதனால் 'யதச்ச ஏதத் சராசரம்' என்று மறுபடி கேள்வி எவ்விதம் ஏற்படும்? அதனால் இவ்விதம் அர்த்தம் செய்வது சரியல்ல.

ஸித்தா:- இதை புனருக்தி தோஷம் என்று சொல்லப்படுமானால், அந்த ச்லோகத்தில் - '*யதோ பபூவ பூய: யதோ பவிஷ்யதி*' என்று கேட்கப்படுகிறது. அதன்பிறகு '*லீனமாஸீத் யதா யத்ர லயமேஷ்யதி*' என்று கேட்க்கப்படுகிறது. அதாவது எந்த வஸ்து எதிலிருந்து

உண்டாகின்றதோ அதில்தானே லயமடையவேண்டும்? ம்ருத்திலிருந்து உண்டாகும் கடம், கடநாசத்திற்குபின் ம்ருதாத்மனா ம்ருத்திலேயே லயம் அடைவதுபோல் ஸர்வமும் தன்மயமாகவே லயத்தை அடைகிறது என்றுதானே சொல்லவேண்டும்.

பூர்வ:- எந்த வஸ்து எதிலிருந்து உண்டாகிறதோ, அந்த வஸ்துவில்தான் அது லயமடைய வேண்டும் என்ற நியதி இருந்தபோதிலும், இந்த உண்மையை அறியாத அவித்வான் ப்ரச்னம் செய்யலாமே? அஞ்ஞனுக்கு எதிலிருந்து உண்டாகிறதோ அதில்தான் லயமடையவேண்டும் என்று எவ்விதம் அறிந்துகொள்ளமுடியும்?

ஸித்தா:- '*யதச்ச ஏதத் சராசரம்*' என்று ஜகத்திற்கு உபாதான காரணம் என்ன என்று ப்ரச்னம் செய்யப்படுகிறது. ஜகத்திற்கு எது உபாதான காரணமோ அதுவே அதற்கு ஸ்வரூபம் என்று ப்ரச்னம் செய்பவனுக்கு தெரியவில்லை. அதனால் '*யன்மயம்*' என்று எது ஸ்வரூபம் என்று கேட்க்கிறான் என்று சொல்லலாமே? உன்னால் சொல்லப்படுவது போல் இந்த சிஷ்யணும் அவிதுஷனாக இருக்கலாமே? கடத்திற்கு எவ்விதம் ம்ருத் என்பது உபாதான காரணமோ அதுபோல் விஷ்ணு ஜகத்திற்கு உபாதான காரணம் என்று பதில் சொல்லப்படுகிறது. '*யதச்ச ஏதத் சராசரம்*' என்று உபாதானம் என்ன? நிமித்தம் என்ன? என்றே ப்ரச்னம் செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் நிமித்தமும் விஷ்ணுவே என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படியானால் இந்த ஜகத்தின் ஸ்வரூபம் என்ன என்ற ஸந்தேகம் ஏற்படுவது ந்யாயம்தான். அதனால் '*யன்மயம்*' என்று ஜகத்தின் ஸ்வரூபம் என்ன என்ற ப்ரச்னம் செய்யப்பட்டிருக்கிறது.

லோகத்தில் கட உற்பத்திக்கு நிமித்தமான குலாலன்வேறு, உபாதானமான ம்ருத் வேறு என்பதால், நிமித்தோபாதானமாக ஒரே வஸ்து இருக்கமுடியாது. அதனால் ஜகத்திற்கு விஷ்ணு நிமித்தமாக இருக்கின்றதால், ஜகத் ஸ்வரூபமாக எவ்விதம் இருக்கமுடியும் என்ற ஸந்தேகம் ஏற்படுவது ந்யாயமே. ஆகவே '*யன்மயம் ஜகத்*' என்ற ப்ரச்னம் புனருக்தி என்று சொல்லவேண்டிய அவச்யமில்லை.

அபின்ன நிமித்தோபாதானம் விஷ்ணு என்று அறியப்படாததால் உபாதானமாகவும், நிமித்தமாகவும் ஒரு வஸ்து இருக்குமானால், அதுவே அந்த வஸ்துவிற்கு ஸ்வரூபமா? அல்லது வேறாக இருக்கலாமோ என்ற ஸந்தேகம் ஏற்படலாம். ஏனெனில் உபாதானம் என்று மட்டும் சொல்லப்பட்டிருக்குமானால் அதுவே ஸ்வரூபம் என்று அறியப்படுவதால் ஸந்தேகம் ஏற்படாது. ஆனால் அதுவே நிமித்தம் என்று சொல்லப்படுவதால் ஸந்தேகம் ஏற்படலாம்.

ஆகவே, ஜகத்தின் ஜன்ம, ஸ்திதி, லயத்திற்கு காரணம் என்ன என்று ஒரு ப்ரச்னம், அதன்பிறகு இந்த ஜகத்திற்கு ஸ்வரூபம் என்ன என்று ஒரு ப்ரச்னம். இதற்கு உத்தரமாகவே '*ஜகச்ச ஸ:*' என்று ஜகத்தின் ஸ்வரூபம் விஷ்ணுவே என்று அபின்ன நிமித்தோபாதானம் விஷ்ணுவே என்று கேள்விக்கு சரியான பதில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த விதம் பதில் தெரிவிக்கப்பட்டதன்மூலம் ஜகத் மித்யாத்வமும் ஸித்தம் செய்யப்பட்டிருக்கிறது.

எவ்விதம் கடம் என்ற கார்யம், காரணமான ம்ருத்தைக்காட்டிலும் வேறாக இல்லையோ அதேபோல், கார்யமான இந்த ஜகத் காரணமான விஷ்ணுவைக் காட்டிலும் வேறாக இல்லை

என்ற கருத்தையே, 'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' (वाचारम्भणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम्) என்று ச்ருதி வாக்யமும் காரணம் ஒன்றே ஸத்யம் என்று தெரிவிக்கின்றது. மேலும், ஜகத் உற்பத்திற்கு முன்பும், ஜகத் லயத்தை அடைந்த பிறகும் ஜகத் என்ன ரூபம் என்று கேட்டால், 'விஷ்ணு ரூபமே' என்று தானாகவே அர்த்தம் கிடைக்கும். 'ஸதேவ ஸௌம்ய இதமக்ரே ஆஸீத்' என்ற அர்த்தமே கிடைக்கும். (ஸன்மாத்ரம் என்றே அறியப்படுகிறது). ஆனால் ஸ்திதிகாலத்தில் ஜகத்ரூபம் என்ன என்ற ஸந்தேஹம் ஏற்படலாம். அதனால் '*யன்மயம்*' என்று ப்ரச்னம் செய்யப்படுகிறது. ஏனெனில் கடமாக தோன்றும் காலத்தில் ம்ருத் ஸ்வரூபமா? என்ற ஸந்தேஹம் ஏற்படலாம். அதனால் அதற்கு பதில் தெரிவிப்பதற்காகவே ஸ்திதி காலத்திலும் விஷ்ணுவே ஸ்வரூபம் என்று '*ஜகச்ச ஸ:*' என்று பதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. '*யன்மயம்*' ஜகத் என்ற ப்ரச்னம், ஜகத் உற்பத்திக்கு முன்போ, அல்லது லயமடைந்த பிறகோ கேட்க்கப்படும் கேள்வி அல்ல. கடம் தோன்றும் காலத்திலும் (ம்ருண்மயம்) ம்ருண்மாத்ரமே என்று பதில் தெரிவிப்பதுபோல் ஜகத் ஸ்திதி காலத்திலும் விஷ்ணுவே (விஷ்ணுமாத்ரமே) என்று காலத்ரயத்திலும் விஷ்ணு ஸ்வரூபமே ஜகத் என்றே தெரிவிக்கின்றதால் ஜகத் மித்யாத்வமே ஸித்திக்கின்றது. அதனால் மயட் ப்ரத்யயம் - ஸ்வார்த்தே மயட் என்றும் சொல்லலாம். விகாரார்த்தே மயட் என்றும் சப்தார்த்தம் சொல்லலாம். ஆனால் ப்ராசுர்யார்த்தே மயட் சப்தார்த்தம் பொருந்தாது. ஏனெனில், 'அன்னமயோ யஞ:' என்ற வாக்யத்தில் உள்ள மயட் சப்தம் ப்ராசுர்யார்த்தத்தை குறிக்கின்றது. அதாவது யஞ்ஞத்தில் அன்னம் அதிக அளவில் இருக்கின்றதால் அன்னமயம் என்று சொல்லப்படுகிறது. அதுபோல் விஷ்ணுமயம் ஜகத் என்று விஷ்ணு என்பவர் அதிக அளவில் ஜகத்தில் வ்யாபித்திருக்கிறார் என்று யாராலும் அறியப்படவில்லை.

பூர்வ:- விஷ்ணுவானவர் ஜகத்தில் அதிக அளவில் வ்யாபித்திருக்கின்றார் என்று அறியப்படாததால், ப்ராசுர்யார்த்தம் இல்லை என்று சொல்வது சரியல்ல. சாஸ்திரம் வ்யாபகம் என்றே தெரிவிக்கின்றதால் ப்ராசுர்யார்த்தம் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- ஒரு வஸ்து ப்ரசுரமாக இருக்கின்றது என்று தெரிவிக்கின்றபோது, அதில் வேறு சில வஸ்துக்களும் அப்ரசுரமாக (ப்ரசுரம் இன்றி) இருக்கவேண்டும். உதாரணமாக, '*ப்ராஹ்மண ப்ரசுரோ க்ராம:*' என்ற வாக்யப்ரயோகத்தினால், அந்த க்ராமத்தில் ப்ராஹ்மணர்கள் அதிகம் என்று அர்த்தம் கிடைக்கின்றது. அதனால் ப்ராஹ்மணர்களாக இல்லாத மற்றவர்களும் இருக்கின்றதால்தான், மற்றவர்கள் குறைவு என்றுதான் அர்த்தம் கிடைக்கும். ஆகவே, கேவலம் ப்ராஹ்மணர்கள் மட்டுமே இருப்பார்களேயானால், ப்ராஹ்மணமயம் என்ற ப்ரயோகம் இருக்கமுடியாது. அதனால் ப்ரசுரம் என்றாலே அதிகம் என்ற அர்த்தம் கிடைப்பதால் வேறொன்றின் ஸாபேக்ஷமாகத்தான் இருக்கவேண்டும். ஆகையால் இதுபோல் விஷ்ணு இந்த ஜகத்தில் ப்ரசுரம் என்று சொல்லப்படுமானால், ஜகத்தில் விஷ்ணு ப்ரசுரமாக இல்லாத வஸ்து இருக்குமானால்தான் விஷ்ணு ப்ரசுரம் என்று சொல்லலாம். விஷ்ணுவை அன்றி எந்த ஒரு வஸ்துவும் வேறாக இல்லை என்று சொல்லப்படுவதால் ப்ராசுர்யார்த்தே மயட் சப்தம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- ப்ரக்ருதி, ஈச்வரன், ஜீவன் என்ற மூன்று தத்வங்கள் நித்யம் என்று எங்களால் சொல்லப்படுவதால், ப்ரக்ருதி என்ற ஜகத்தை ஈச்வரன் வ்யாபித்திருக்கின்றார் என்றும் சேதனனான ஜீவன் அப்ரசுரம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- சேதன அசேதனாத்மகம் ஜகத் என்று உன்னால் சொல்லப்படுவதால் சேதனனான ஜீவனையும் ஜகத்தில் சேர்த்தே தெரிவித்த பிறகு, ஜகத்தை அன்றி வேறாக ஜீவன் அப்ரசுரமாக இருக்கின்றான் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஜகத் அந்த:பாதி ஜீவன், சேதனஅசேதனாத்மகம் ஜகத் என்று உன்னால் தெரிவிக்கப்பட்டதற்கு மாறாக ஜீவன் அப்ரசுரம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ப்ரக்ருதி என்பதே அப்ரசுரம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரக்ருதி என்பதே ஜகத் என்று உன்னால் சொல்லப்படுவதால் அப்ரசுரம் ப்ரக்ருதி என்று எப்படிச்சொல்லமுடியும்?

பூர்வ:- 'காலம்' என்பதை அப்ரசுரம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- காலம் என்பதும் ஜகத்தை சேர்ந்ததுதான். உன் ஸித்தாந்தத்தில், சித், அசித், ஈச்வரன் மூன்றும் தத்வம் என்றும், இதில் சிதசித் என்ற இரண்டும் ஜகத்தைச்சேர்ந்தது என்றும், ஈச்வரன், சிதசித்தான ஸர்வத்தையும் வ்யாபித்திருப்பதாக சொல்லப்படுகிறது. இவ்விதம் ஸர்வத்திலும் வ்யாபித்திருக்கின்ற ஈச்வரனை (ஒரு தத்வத்தை) ப்ராசுர்யார்த்தே மயட் என்று அர்த்தம் செய்வது சரியல்ல பொருந்தாது. ஏனெனில் எங்கும் வ்யாபகமாக இருக்கின்ற ஈச்வரன் அதிக அளவில் ஜகத்தில் வ்யாபித்திருக்கிறார் என்று சொல்லப்படுமானால், ஈச்வரன் வ்யாபிக்காத இடமும் இருக்கின்றதென்றே அர்த்தம் கிடைக்கும். ஸர்வ வ்யாபகத்வம் ஈச்வரனுக்கு சொல்லமுடியாது. ஸர்வ வ்யாபகத்வம் இல்லை என்றால், '*அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:*' (अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणस्स्थितः) என்ற வாக்யமும் பொருந்தாது. மேலும் '*யன்மயம் ஜகத்*' என்ற ப்ரச்னத்திற்கு ப்ராசுர்யார்த்தத்தில் மயட் சப்தப்ரயோகம் செய்யப்பட்டிருக்குமானால், அதற்கு உத்தரமாக தன்மயம், தத்ப்ரசுரம் என்று பதில் சொல்லப்பட்டிருக்கவேண்டும். அவ்விதம் இன்றி 'ஜகச்ச ஸ:' என்று ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதால் ப்ராசுர்யார்த்தம் என்று சொல்ல முடியாது. 'அன்னப்ரசுரம் யஞ்ஞம்' என்று சொல்லலாமே அன்றி அன்னமே யஞ்ஞம் என்று சொல்லமுடியாது. ஆகவே, ஸ்வார்த்தே மயட் என்றோ, அல்லது விகாரார்த்தே மயட் என்றோ சொல்லலாமே அன்றி ப்ராசுர்யார்த்தம் என்று சொல்லமுடியாது. ஒரு வஸ்து அந்த வஸ்துவாக மட்டுமே இருந்தாலோ, அல்லது ஒரு வஸ்துவின் கார்யமாகவோ இருந்தால்தான் 'ததேவ பவதி' என்று சொல்லமுடியும்.

பூர்வ:- அந்தர்யாமியாக இருக்கின்றதால் வ்யாப்யவ்யாபகபாவேன ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யப்படுவதாக சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால், ஜீவன், தன் சரீரத்தில் முழுவதும் வ்யாபித்திருக்கின்றதால், அந்த சரீரத்தையே ஜீவன் என்று சொல்லலாமா? அவ்விதம்

சொல்லப்படுமானால் உன்னையும் புத்தன் என்றே சொல்லவேண்டும். சரீரமே ஆத்மா என்று பௌத்தன் தெரிவிக்கின்றதால் அதை நீயும் ஒத்துக்கொண்டதாக ஆகும்.

பூர்வ:- ஜகத்திற்கும் ஈச்வரனுக்கும் கார்யகாரணபாவம் சொல்லாமல் சரீரிசரீரபாவத்தைக் கொண்டு ஐக்யம்சொல்லலாமே?

ஸித்தா:- ஜகத் சரீரம் என்றும் ஈச்வரன் சரீரி என்றும் உன்னால் சொல்லப்படுவதால், சரீரம் சரீரி இரண்டும் ஒன்றே என்று சொல்லப்படுமானால் அது ப்ராந்திஞானமென்றே சொல்லவேண்டுமே அன்றி யதார்த்தஞானம் என்று சொல்லமுடியாது. இது தத்வோபதேசமாக இருக்கமுடியாது. அஹம் மனுஷ்ய: என்பதுபோல் ப்ராந்திஞானம் என்றே சொல்லவேண்டும். மேலும் எந்த ஒரு வஸ்து எதனால் வ்யாபிக்கப்படுகிறதோ அந்தவஸ்து சரீரிசரீர பாவத்தில் ப்ரசுரம் என்றும் சொல்லமுடியாது. இவை எல்லாமே உன் கபோல கல்பிதம் என்பதால் அதற்கு ப்ரமாணமும் கிடையாது. அதனால் அப்ரமாணம் என்றே தள்ளவேண்டும்.லோக அனுபவத்திலும் கார்யகாரணபாவம் சொல்லக்கூடிய இடத்தில்தான் ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்யப்படுகிறது. சரீரசரீரிபாவத்தில் ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யப்படுவதில்லை. ஆகவே ப்ரஸித்தமாக இல்லாத ஒன்றை எந்தவித ப்ரமாணமும் இன்றி ஸித்தம் செய்வதென்பது முடியாதகார்யம்.

பூர்வ:- அஹம் மனுஷ்ய: என்று சரீரசரீரிபாவத்திலும் ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யப்படுகிறதே?

ஸித்தா:- அஹம் மனுஷ்ய: என்று ஆத்ம அனாத்ம அத்யாஸத்தினால் சொல்லப்படுகிறதே அன்றி அது தத்வோபதேசம் அல்ல; அதனால் ப்ராந்திவிஷயம் உதாரணமாக ஆகாது. சரீரம் என்றும் சரீரி என்றும் விபாகம் இருக்கின்றபோது மம சரீரம் என்றே வ்யவஹாரம் இருக்கின்றது. இவ்விதம் இந்தசரீரத்தில் அஹம் என்றும் மம என்றும் சரீரிக்குத்தான் ஞானம் ஏற்படுகிறது, ஆனால் அது ப்ராந்திஞானம். அதிமூடனுக்கே சரீரமே நான் என்றும் என்னுடைய சரீரம் என்றும் மமதை ஏற்படுகிறது. இவ்விதம் சரீரமும் சரீரியும் ஒன்று என்று சொல்லப்படுமானால், க்ருஹம் என்பதும் க்ருஹத்தில் உள்ள எஜமானனும் ஒன்று என்றே சொல்லலாம். ஏனெனில் ஸ்வஸ்வாமிபாவம் இருப்பதால் ஸாமானாதிகரண்யம் சொல்லலாமே? வீட்டுக்குரியவனை வீடு என்றே சொல்லலாம். ஜகத் விஷ்ணுவின் சரீரம், சரீரமான இந்த ஜகத்திற்கு விஷ்ணு ஆத்மாவாக இருக்கின்றாரென்றால் அதுவும் ஸாமானாதிகரண்யம்தான், அதனால் இது ப்ரமம் (ப்ராந்தி) அல்ல என்றும் வாஸ்த்தவஞானம் என்று சொல்லப்படுமானால், ஜகத்திற்கு விஷ்ணு அபேதம் சொல்வதுபோல் விஷ்ணுவிற்கும் ஜகத் அபேதம் சொல்ல நேரிடும். மேலும், ம்ருத்கடம் போல் கார்யகாரணபாவத்தினால் ஸாமானாதிகரண்யமே *'ஜகச்ச ஸ:'* என்று சொல்வதுதான் பொருந்தும். கடம்படம் என்பதுபோல் சரீரம், சரீரி வேறாக இருப்பதால் ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யமுடியாது. வையதிகரண்யம் என்றே சொல்லவேண்டும். 'அஹம் மனுஷ்ய:' என்பது ப்ராந்தி ஞானம். அதனால்தான் ஸம்ஸாரம் என்ற துக்கம் ஏற்படுகிறது - முமுக்ஷுவிற்கு இவ்வித ப்ராந்தி ஞானம் நாசம் ஆகுமானால்தான், மோக்ஷமென்ற புருஷார்த்தம் ஸித்திக்கும்.

ஆகவே அனர்த்த ஹேதுவான, சரீரசரீரி அபேதப்ராந்தி ஞானத்தை ஸாமானாதிகரண்யேன சாஸ்திரம் தெரிவிக்கின்றது என்று சொல்வது மிக அபத்தம். ஆத்ம, அனாத்ம விவேசனமே மோக்ஷத்திற்கு ஸாதனம். மோக்ஷஸித்திக்கு அதுவே ஹேது.

பூர்வ:- ஜீவனும் தேஹமும் ஒன்று என்று அபேதஉபதேசஞானம் ஏற்பட்டால்தான் அனர்த்தகரம், வ்யர்த்தம். ஆனால் ஈச்வரனுக்கும் ஜகத்திற்கும் அபேதம் என்று உபதேசிக்கப்படுமானால் அது அனர்த்தகரம் இல்லை வ்யர்த்தமும் இல்லை.

ஸித்தா:- சரீரவிலக்ஷண ஆத்மஸ்வரூப ஞானம்தான் பலப்ரதம். அதுபோல் ஜகத்திற்கு வேறான பரமாத்ம ஞானம்தான் பலப்ரதம், பரமபதம், அதுவே மோக்ஷபலம்.

பூர்வ:- ஜகத் விஷ்ணுவின் சரீரம் என்று அறியப்படுமானால், அதனாலேயே ஜகத்தை அன்றி வேறானவர் விஷ்ணு என்று அறியப்படுகிறதே?

ஸித்தா:- '*ஜகச்ச ஸ:*' என்று ஸாமானாதிகரண்ய ப்ரயோகத்தினால் பரமாத்மாவை அன்றி ஜகத் வேறல்ல என்று தெரிவிக்கின்றது. அதனால் ஸாமானாதிகரண்ய ப்ரயோகத்தினால் ஜகத் வைலக்ஷண்யத்தை தெரிவிக்கின்றது என்று எவ்விதம் சொல்லமுடியும்?

விஷ்ணுவின் சரீரமாக ஜகத் இருக்கின்றதால், சரீரமான ஜகத்தே விஷ்ணு என்று உபதேசம் செய்யப்படுவதால் புருஷார்த்தம் ஏதுமில்லை. அதுமட்டுமல்ல, அதுவே ப்ராந்தி ஞானமாக இருக்கின்றதால் அனர்த்தகரமாகும்.

பூர்வ:- உண்மையில் 'ஜகத்' விஷ்ணு அல்ல. ஆனால் ஜகத்தே விஷ்ணு என்று உபாஸிக்கப் படுமானால், அதனால் ஏற்படும் ஞானத்தை ஆவ்ருத்தி செய்வதனால் மோக்ஷபுருஷார்த்தம் ஸித்திக்கலாமே?

ஸித்தா:- உபாஸனம் என்பதே அதஸ்மின் தத்புத்தி என்பதால் உபாஸனமே ப்ராந்தி ஞானம். ப்ராந்தி ஞானம் முக்திக்கு ஸாதனமில்லை. தத்வ ஞானமே முக்திக்கு ஸாதனம். ஸர்வ ஜகத்தும் விஷ்ணுவின் சரீரம் என்ற ஞானம் ப்ரமை (யதார்த்த ஞானம்) யாக இருந்தாலும் ஸர்வ ஜகத்தும் விஷ்ணுவே என்று ஞானம் ஏற்படுமானால் அந்த ஞானமே அயதார்த்த ஞானம் (ப்ரமம்) என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- 'அன்னம் ப்ரஹ்மேதி வ்யஜானாத்' என்ற வாக்யம், இவ்விதம் உபாஸிக்கப்படுமானால் அன்னப்ராப்தி ஏற்படுவதாக தெரிவிக்கின்றது. அதேபோல் ஜகத்தே விஷ்ணு என்று உபாஸிப்பதனால் விஷ்ணு ப்ராப்தி ஏற்படலாமே?

ஸித்தா:- 'தத்வ ஞானம்' பற்றி நிர்ணயம் செய்யப்படுகின்றபோது, உபாஸனா ப்ரகரணத்தில் சொல்லப்படும் விஷயங்களை உதாரணமாக சொல்லப்படுவது சரியல்ல. தத்வம் என்னவென்று அறிந்துகொள்ள வேண்டுமென்றுதான் சிஷ்யன் ப்ரச்னம் செய்கின்றான். இந்த ப்ரச்னம் மூலம் தத்வத்தை உபதேசிக்கவேண்டுமென்றே கேட்க்கின்றான். அதனால்தான் '*யன் மயம் ஜகத்*' என்று கேட்க்கின்ற சிஷ்யனுக்கு, குருவானவர் '*ஜகச்ச ஸ:*' என்று தத்வோபதேசம் செய்கின்றார். அதனால் உபாஸனத்தைப்பற்றி விசாரிக்கப்படவில்லை. '*ஜகச்ச ஸ:*' என்று கார்யகாரணபாவேன ஸாமானாதிகரண்ய ப்ரயோகத்தினால் 'விஷ்ணுவே

ஜகத்' என்று சொல்லப்படுகிறது. கார்யகாரண ஸ்தலத்தில்தான் வ்யாப்ய, வ்யாபகபாவேன வஸ்து ஐக்யம் சொல்லமுடியும். ஆகவே, சரீரமான ஜகத்தே விஷ்ணு என்று அர்த்தம் சொல்லப்படுமானால் பாலர்களே பரிகசிப்பார்கள். அதுமட்டுமல்ல. சரீரசரீரிபாவே ஸாமானாதிகரண்யம் சொல்லப்படுவது சரியல்ல (ஸம்பவிக்க முடியாது). இவ்விதம் அறிவதால் ப்ரயோஜனமும் இல்லை.

பூர்வ:- சாஸ்திரம் நிர்விசேஷ வஸ்துவையே தெரிவிக்கின்றது என்று சொல்லப்படுமானால், நிர்விசேஷமான தத்வத்தைப்பற்றி என்ன கேள்வி கேட்க்க முடியும்? அதற்கு பதில் என்ன சொல்லமுடியும்? ஸவிசேஷமாக இருக்கின்ற வஸ்துவாக இருந்தால்தான், அதில் என்ன விசேஷங்கள் இருக்கின்றதென்று கேட்கலாம். அதற்கு பதிலாக அந்த வஸ்துவின் தன்மைகளை தெரிவித்து, கேள்விக்கு ஸமாதானம் சொல்லமுடியும். அதனால் நிர்விசேஷம் தத்வம் என்றால், பல கேள்விகளும் அதற்குரிய ஸமாதானங்களும் தெரிவிக்கின்ற சாஸ்திரம், சரியான சாஸ்திரம் என்றே சொல்லமுடியாது. நிர்விசேஷப்ரதிபாதன சாஸ்திரம் இருக்குமானால் ஒரே கேள்வியும், ஒரே ஸமாதானமும்தான் சொல்லப்பட்டிருக்க வேண்டும். அதாவது, இந்த ஜகத்திற்கு அதிஷ்ட்டானம் என்ன என்ற கேள்விக்கு ஸத்ய ஞானானந்த நிர்விசேஷ ப்ரஹ்மம்தான் அதிஷ்ட்டானம் என்று பதில் தெரிவித்திருக்க வேண்டும். அவ்விதம் இன்றி பலவிதமான கேள்விகளும், பலவிதமான பதில்களும் தெரிவிக்கவேண்டிய அவச்யம் என்ன? அதுமட்டுமல்ல, ஜகத்தும், ப்ரஹ்மமும் வேறல்ல என்று ஸாமானாதிகரண்ய ப்ரயோகத்தினால் அறியப்படுகிறது என்று சொல்லப்படுமானால், அதுவும் பொருந்தாது. ஏனெனில் ஸத்ய ஸங்கல்பங்கள் முதலான ஸகல கல்யாண குணங்களுக்கு ஆச்ரயமான ப்ரஹ்மத்திற்கு, நேர் விருத்தமான ஜடமான ஜகத் தள்ளத்தக்கதாக (ஹேயமாக) இருக்கின்றதால், ப்ரஹ்மத்தைக்காட்டிலும் ஜகத் வேறல்ல, ஒன்றுதான் என்று சொல்வது பொருந்தாது.

ஸித்தா:- அதி ஸூக்ஷ்மமாக இருக்கின்ற ஒரு தத்வத்தை போதிப்பது சுலபமல்ல. அதனால், அத்யாரோப, அபவாத ந்யாயத்தைக்கொண்டு '*அத்யாரோபாபவாதாப்யாம் நிஷ்ப்ரபஞ்சம் ப்ரபஞ்ச்யதே*' (अध्यारोपापवादाभ्यां निष्प्रपञ्चं प्रपंच्यते) என்று சாஸ்திரம் தத்வத்தை போதிக்கின்றது. இந்த முறையை அனுசரித்து நிர்விசேஷ ப்ரஹ்ம தத்வத்தை போதிப்பதற்காக சாஸ்திரம், அறியப்படும் வஸ்துக்கள் சிலவற்றை ப்ரஹ்மத்தினிடம் ஆரோபம் செய்து தெரிவிக்கின்றது. ஆகவே நிர்விசேஷ ஸ்வரூபத்தை போதிப்பதற்காக ஸவிசேஷமாக இருப்பதை ஆரோபம் செய்து, அதன்பிறகு அவைகளை நிஷேதம் செய்து தெரிவிப்பதன் மூலமாக, நிர்விசேஷ ப்ரஹ்மமே தத்வம் என்று போதிக்கின்றது. இவ்விதம் நிர்விசேஷ வஸ்துவை தெரிவிப்பதற்காகவே, சாஸ்திரம் ஸவிசேஷத்தை தெரிவிக்க வேண்டிய அவசயம் ஏற்படுகிறது.

ஆகவே, ஜகத்திற்கு அதிஷ்ட்டானம் என்ன என்ற ஒரே கேள்விதான் கேட்க முடியும் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ப்ரபஞ்சம் ப்ராந்தி ஸித்தம் என்று எவன் அறிந்திருக்கின்றானோ, அவன்தான் ப்ரபஞ்சத்திற்கு அதிஷ்ட்டானம் என்ன என்று கேட்கமுடியும். எல்லோருக்கும் ப்ரபஞ்சம் ஸத்யம் என்றுதானே அனுபவம் இருக்கின்றது? அதனால் அவர்கள் எவ்வளவோ கேள்விகளை கேட்கலாமே? ப்ரபஞ்சம் ப்ராந்தி ஸித்தம் என்று அறியாததால் அவரவர்

கேட்கின்ற கேள்விக்களுக்கு தகுந்த விதம் பலவிதமாக பதில் சொல்லநேரிடும். ஒரே கேள்விக்குகூட பலவிதமான பதில் தெரிவிக்கவேண்டியதாக இருக்கும். அதனால் ஒரே கேள்வி, ஒரே பதில்தான் இருக்கவேண்டுமென்று சொல்லப்படுவது சரியல்ல.

ஸர்வஜகத்தும் ப்ரஹ்ம விவர்த்தம். ஆரோபிதங்களுக்கு அதிஷ்ட்டானமே ஸ்வரூபம். அதிஷ்ட்டானத்தை அன்றி வேறாக அவைகள் இருக்கமுடியாது என்றே சொல்லப்படுகிறது. அதனால் ஜகத்தும் ப்ரஹ்மமும் ஒரே த்ரவ்யம் என்றோ அல்லது ப்ரஹ்மமே ஜகத், ஜகத்தே ப்ரஹ்மம் என்று சொல்லப்படவில்லை. எங்கள் ஸித்தாந்தத்தில் ஜகத் என்பது ப்ரஹ்ம விவர்த்தம் என்றே சொல்லப்படுகின்றதால் ஜகத்தும் ப்ரஹ்மமும் ஏகத்ரவ்யம் என்று சொல்லப் படவில்லை. ஆனால் ஜகத்திற்கு ப்ரஹ்மம் பரிணாமி உபாதானம் என்று சொல்லப்படும் உன் பக்ஷத்தில்தான் ப்ரஹ்மமும் ஜகத்தும் ஏகத்ரவ்யம் என்று ப்ரஹ்மமே ஜகத்தாக மாறுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் உன்னால் சொல்லப்பட்ட ஸர்வதோஷங்களும் உன்னுடைய மதத்தில்தான் இருக்கின்றது என்பதால் உன்னையே பாதிக்கின்றது. தன் கையில் உள்ள குச்சியே தன் கண்ணை குத்துவதுபோல் உன்னால் சொல்லப்பட்ட தோஷங்கள் அனைத்தும் உனக்கே ஏற்படுகிறது. ஆகவே, இதைப்பற்றிய விசாரம் முன்பே அதிகமாக செய்யப்பட்டிருப்பதால் மேலும் விசாரிக்க வேண்டிய அவச்யம் இல்லை.

ப்ரஹ்மமே ஜகத்தாக பரிணாமத்தை அடைவதாக உன்னால்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது ப்ரஹ்மமே ஜகத்தாக ஆகுமானால் ஸகல கல்யாண குணமுள்ள ப்ரஹ்மமும் ஜடமான ஜகத்தும் எவ்விதம் ஒன்று என்று சொல்லமுடியும் என்று முன்னுக்குப்பின் முரணாக சொல்லப்படுவது சரியல்ல. இந்த விதம் ஒன்றுக்கொன்று பொருந்தாத விதம் தெரிவிக்கின்ற ராமானுஜருடைய ஸ்ரீ பாஷ்யம் தோஷமுள்ளது (துஷ்ட்டமே) என்றே அறியவேண்டும். ஸர்வ தோஷங்களுக்கும் இருப்பிடமான ராமானுஜரின் பாஷ்யத்திற்கு ஸ்ரீபாஷ்யம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'ஸ்ரீ' என்ற பதத்திற்கு அனேக அர்த்தங்கள் உண்டு. அதில் ஸ்ரீ என்றால் 'விஷம்' என்று ஒரு அர்த்தம் உண்டு. பரமேச்வரனுக்கு 'ஸ்ரீகண்டன்' என்று பெயர். ஸ்ரீயை கண்டத்தில் உடையவர் ஸ்ரீகண்டன் என்று விஷத்தை கண்டத்தில் தரித்தவர் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீ என்றால் விஷம் என்று அர்த்தம் என்பது ப்ரஸித்தம். விஷம் என்றாலே மிகவும் கொடியது. ஏனெனில் விஷம் மயக்கத்தையும் தாபம் என்ற எரிச்சலையும் உண்டுபண்ணுவதுடன் கடைசியில் மரணத்தையும் உண்டுபண்ணும். அதேபோல் ராமானுஜர் ஸ்ரீபாஷ்யமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட முறையில் சொல்லப்படுவதால் குழப்பம் ஏற்படுவதால் மயக்கம் ஏற்படுகிறது. உண்மையான அர்த்தத்தை மறைத்து பொருந்தாத அர்த்தத்தை சொல்வதால் தாபம் ஏற்படுகிறது. இவ்விதம் விஷம் போலவே இருப்பதால் '*ஸ்ரீ இவ பாஷ்யம்*' (श्री इव भाष्यम्) ஸ்ரீபாஷ்யம் என்பதற்கு இந்த விதம் ஸமாஸம் செய்யப்பட்டது. வேறு ஒரு முறையிலும் ஸமாஸம் செய்யலாம். அதாவது ஸ்ரீப்ரதம் பாஷ்யம் ஸ்ரீபாஷ்யம் என்று விஷத்தைக்கொடுக்கின்ற பாஷ்யமானதால் ஸ்ரீபாஷ்யம். விஷப்ரதம் என்று சொல்லப்படுவதாலேயே அம்ருதப்ரதம் இல்லை, அம்ருதத்தை கொடுக்கக்கூடியதல்ல என்றே அறியப்படுகிறது. ஏனெனில் ஜீவபரமாத்மபேதத்தை தெரிவிக்கின்ற (உண்டுபண்ணுகின்ற) சாஸ்திரம், ஸர்வ பேதஞானத்திற்கும் மூலமாக

இருக்கின்றதால் அம்ருதத்வத்தை கொடுக்கமுடியாது. அதற்கு மாறான விஷத்தைத்தான் கொடுக்கமுடியும். பேதஞானம், ஸம்ஸாரம் என்ற தாபத்ரயத்தைக் கொடுக்கின்றது. விஷத்தைப்போலவே ஸம்ஸாரம் என்பது தாபத்திற்கு காரணமாகிறது (ஹேது) அதனால் அர்த்தத்தை அனர்த்தமாகச் செய்கின்ற சாஸ்திரம் தள்ளத்தக்கதே அன்றி கொள்ளத்தக்கதல்ல.

மேலும், முன்னால் சொல்லப்பட்ட ப்ரச்ன, உத்தரரூபமான ச்லோகம் 'அத்வைதம் ப்ரஹ்ம' என்றே தெரிவிக்கின்றது. எப்படி எனில், இந்த ஜகத், நிமித்தோபாதானகாரணமாக இருக்கின்ற விஷ்ணுவினிடமிருந்தே உண்டாகி அதிலேயே, ஸ்திதி பெற்று, அதிலேயே லயத்தை அடைகின்றது என்று தெரிவிக்கின்றதால், ச்ருஷ்டி ஸ்திதி லயத்திற்கு எது காரணமோ அந்த காரண வஸ்துவான விஷ்ணுவை அன்றி ஜகத் என்பது வேறாக இருக்கமுடியாது. விஷ்ணுவின் ஸ்வரூபம் நிர்விசேஷமாக இருந்தால்தான், ஸர்வ விசேஷங்களுடன் கூடிய ஜகத், விஷ்ணுவிலிருந்தே உண்டாகி அதிலேயே ஸ்திதி பெற்று அதிலேயே லயத்தை அடைவதாகச்சொல்லமுடியும். விஷ்ணுவும் ஸவிசேஷமாக இருக்குமானால் இன்னும் அதிக விசேஷங்களை உடையதும், விஷ்ணுவின் விசேஷங்களுக்கு விருத்த ஸ்வபாவ முடையதாக இருக்கின்ற இந்த ஜகத் விஷ்ணுவினிடம் லயமடைவதாகச்சொல்வது பொருத்தமற்றதாக ஆகும். ஆகவே, நிர்விசேஷ ஸ்வரூபத்தில்தான், ஜகத் என்பது விசேஷங்களை விட்டு லயத்தை அடைவதாகச் சொல்வதுதான் பொருந்தும். ஆகவே மாயையினால் ஸவிசேஷமாக ஜகத் தோன்றுகிறது என்பதால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே அறியவேண்டும். அதனால்தான் *'ஜகச்ச ஸ:'* என்று ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

பூர்வ:- விஷ்ணுவே ஜகத் என்று சொல்லவில்லை. விஷ்ணுவினால் வ்யாபிக்கப்பட்ட ஜகத் என்றே சொல்கிறேன். அதனால் விஷ்ணு ப்ரசுரம் இந்த ஜகத் என்றே அர்த்தம் சொல்லலாம். விஷ்ணு ப்ரசுரம் ஜகத் என்பது விஷ்ணுவை வ்யாபகமாக கொண்டது.

ஸித்தா:- *'ஜகச்ச ஸ:'* என்று ஸாமானாதிகரண்யமாக ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதால் விஷ்ணு ப்ரசுரம் என்று அர்த்தம் சொல்லப்படவில்லை.

பூர்வ:- *'யன்மயம் ஜகத்'* என்ற கேள்விக்கு விஷ்ணுமயம் என்றே பதில் சொல்லவேண்டும். விஷ்ணுவே ஜகத் என்ற அர்த்தம் சரியல்ல. வ்யாபிக்கின்றதால் *'ஜகச்ச ஸ:'* என்று தெரிவிக்கின்றது.

ஸித்தா:- ப்ரச்னமே ப்ராசுர்யார்த்தமல்ல, ஸ்வார்த்தே மயட் என்று முன்பே விசாரித்து சொல்லப்பட்டிருக்கிறது. 'யன்மயம்' என்றால் 'யத்ரூபம்' என்றே அர்த்தம். ஸ்வார்த்தே மயட் என்று சொல்லப்பட்டதால் ஜகத்தின் ஸ்வரூபம் என்ன என்பதே கேள்வி. அதனால் 'விஷ்ணுவே' என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

பூர்வ:- 'ஜகத் யத்ரூபம்' என்றுதான் ப்ரச்னம் செய்யவேண்டும். அவ்விதம் கேட்க்கப்படாமல் 'யன்மயம்' என்று மயட் சப்தப்ரயோகம் செய்யவேண்டிய காரணம் என்ன? மயட் ப்ரத்யயம் சேர்க்கப்பட்டிருப்பதால், அதற்கு விசேஷார்த்தம் இருக்கவேண்டும். 'யத்' என்பதற்கு என்ன அர்த்தமோ, அதுவேதான் மயட் சப்தார்த்தமாக இருக்கும் பக்ஷத்தில் மயட் ப்ரத்யயம் சேர்க்கவேண்டிய காரணம் என்ன?

ஸித்தா:- லோகத்தில் இதுபோல் பலபதங்களில் ப்ரத்யயங்கள் தேவை இன்றியே சேர்க்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ‘வயஸ்’ என்பதும் பக்ஷி ‘வாயஸம்’ என்றாலும் பக்ஷிதான். இவ்விதம் வயஸ் என்பதே ‘அண்’ ப்ரத்யயம் சேர்த்து வாயஸம் என்று சொல்லப்படுகிறது. இதேபோல் ரக்ஷஸ் என்றாலே ராக்ஷஸ: என்றே அர்த்தம். ஆனால் ராக்ஷஸ: என்ற ப்ரயோகம் இருக்கின்றது. இந்த விதம் ஸ்வார்த்தே ப்ரத்யயம் சேர்த்து அனேக பதங்கள் ப்ரயோகம் செய்யப்படுகிறது. இந்த விதம் ப்ரத்யயங்கள் ப்ரயோகிக்கலாம் என்று பாணினியே தெரிவிக்கின்றதால் ஸ்வார்த்தே மயட் ப்ரயோகம் செய்வது வ்யர்த்தம் என்று சொல்வது சரியல்ல. ஆகவே யன்மயம் என்ற பதத்தில் மயட் சப்த ப்ரயோகம் செய்யப்பட்டிருந்தாலும் கூட ‘ய ஏவ’ என்று அர்த்தம் செய்யலாம். இந்த ஜகத்தின் ச்ருஷ்டி ஸ்திதி லயம் என்பதெல்லாம் எதிலிருந்து ஏற்படுகிறதோ அந்த தத்வம் யாரோ அவரே பரமாத்மா என்று பாகவதத்தில் ‘யஸ்மின் இதம், யதச்ச இதம், யேன இதம், ய இதம் ஸ்வயம்’ என்று ஒரு ச்லோகம் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ‘*ய இதம்*’ என்று இந்த ஜகத் உற்பத்தி முதலானவைகளுக்கு காரணம் யாரோ அவரே பரமாத்ம ஸ்வரூபம் என்று சொல்லப்படுகிறது. ‘*ய இதம்*’ என்று கேட்கப்படுகிறதே அன்றி ‘*யன்மயம்*’ என்று கேட்கப்படவில்லை. ஆகவே பாகவத ச்லோகமே இதற்கு ப்ரமாணம். அதனால் யத்ரூபம் ஜகத் என்றே ப்ரச்னம் செய்யப்படுகிறதென்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- இந்த ஜகத், ப்ரத்யக்ஷமாக எல்லோராலும் அறியப்படுவதால் ஜகத் ரூபம் என்ன என்ற கேள்விக்கே இடமில்லையே? கடத்தைப் பார்த்துக்கொண்டே கடத்தின் ரூபம் என்ன என்று கேட்ப்பதில்லை. ஆகையால் ‘யத்ரூபம்’ என்ற ப்ரச்னமே சரியல்ல, வ்யர்த்தம் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- ஜகத் என்பது நாமரூபமே அன்றி, அதைத்தவிர வேறான பதார்த்தம் எதுவுமில்லை. நாமம், ரூபம் என்பதே ஜகத் என்ற சப்தத்தினால் சொல்லப்படுகிறது. அதனால் ஜகத் ரூபம் என்ன என்ற ப்ரச்னம், நாம ரூபாத்மகமான இந்த ஜகத்தின் அதிஷ்ட்டான ஸ்வரூபம் என்ன என்றே கேட்கப்படுகிறது. அதனால் இந்த கேள்வி வ்யர்த்தம் என்று சொல்வது சரியல்ல. நாம ரூபம் இல்லையென்றால், இந்த ‘ஜகத்’ என்ற சப்தார்த்தம் என்னவென்றே சொல்லமுடியாது. ஆகவே, நாமரூபாத்மகமான இந்த ஜகத் ப்ரஹ்மத்தில் கல்பிதம் என்பதால் கல்பிதங்களுக்கெல்லாம் அதிஷ்ட்டானத்தை அன்றி வேறு ஸ்வரூபமே இருக்கமுடியாது. அதனால் ப்ரஹ்மமே ஸர்வத்திற்கும் ஸ்வரூபம் என்று எல்லோருக்கும் அறியப்படவில்லை என்பதனாலேயே, ‘ஜகத்தின் ஸ்வரூபம் என்ன? என்றே கேட்கப்படுகிறது. அதாவது எது அறியப்படுகிறதோ அது ஜகத்தின் அதிஷ்ட்டான ஸ்வரூபமல்ல. எது அதிஷ்ட்டானமோ அது அறியப்படவில்லை என்பதனாலேயே இந்த ப்ரச்னம் செய்யப்படுகிறது. அதனால் ‘ஜகத்ரூபம் என்ன’ என்ற ப்ரச்னம் வ்யர்த்தமில்லை. சரியான ப்ரச்னம் என்றே சொல்லவேண்டும். நீலம், பீதம் முதலான நிறங்களும் ஜகத்ரூபமல்ல. நீலபீதாதிரூபம் என்பதெல்லாம் ஜகத்தின் தர்மமே அன்றி ஜகத்தின் ஸ்வரூபம் அல்ல. ரூப சப்தத்தினால் ஸ்வரூபமே சொல்லப்படுகிறது. ஜகத் கார்யமாக இருக்கின்றதால், அதற்கு காரணம் என்ன என்றே கேட்க்கப்படுகிறது. கார்யம்

என்பதெல்லாம் காரணஸ்வரூபமே என்பதால் நீலபீதாதிகள் அல்ல என்றே தெரிவிக்கின்றது. ஆகவே, அஞ்ஞாதமான (அறியப்படாத) ஜகத் ஸ்வரூப ஞானத்திற்காகவே ப்ரச்னம் செய்யப்படுவதால் ஜகத்தின் மூலகாரணம் என்ன என்ற ப்ரச்னம் ந்யாயமானதே. ஏனெனில் ஜகத் காரணம் பரமாணுவா, ப்ரதானமா, ப்ரஹ்மமா என்று மூலகாரணம் அஞ்ஞாதமாக இருக்கின்றதால் ஸந்தேஹம் ஏற்படுகிறது. அதனால் ப்ரச்ன வையர்த்யம் இல்லை. அதனால் 'யன்மயம் ஜகத்' என்ற ப்ரச்னமும், '*ஜகச்ச ஸ:*' என்ற உத்தரமும் சரியே. இவ்விதம் 'விஷ்ணுவே ஜகத்' என்று சொல்லப்பட்டதனாலேயே பரமாத்மாவின் தோற்றமே ஜகத் என்று ஸ்பஷ்ட்டமாகவே அறியப்படுகிறது. அதனால் ப்ராசுர்யார்த்தே மயட் சப்தம் என்று சொல்லப்படுமானால் மூல வசனமே அப்ரமாணம் என்று சொல்ல நேரிடும். அதனால் யன்மயம் என்பது ஸ்வார்த்திகம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- இந்த ச்லோகத்திற்கு ஸுதர்சனர் வேறு ஒரு அர்த்தம் செய்கிறார். அதாவது சுக்லகுணம், வஸ்த்ரம் என்ற குணியை ஆச்ரயித்து இருக்கின்றது. சுக்ல குணத்திற்கு ஆச்ரயம் என்ன என்றால் சுக்ல வஸ்த்ரம் என்று பதில் சொல்லப்படுகிறது. சுக்லகுணத்துடன் கூடிய வஸ்திரத்தையே சுக்லபடம் என்று ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்யப்படுகிறது. சுக்ல குணம் வேறு, வஸ்த்ரம் வேறு என்றாலும், ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்யப்படலாம் என்பதால், '*ஜகச்ச ஸ:*' என்று ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்வதனால் ஜகத்தே விஷ்ணு என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- இந்த ஆக்ஷேபம் சரியல்ல. ஏனெனில் குண, குணிஸம்பந்தமுள்ள வஸ்துவை இந்த விஷயத்தில் த்ருஷ்ட்டாந்தமாகச்சொல்வது பொருந்தாது. ஜகத் என்பது ஈச்வர (பரமாத்மா) சரீரம் என்றும், பரமாத்மா சரீரி என்றும் உன்னால் சொல்லப்படுகிறது. ஜகத் குணமுமல்ல, குணியுமல்ல. அதனால் குணகுணிபாவம் சொல்லமுடியாது. குணகுணிபாவம் சொல்லப்படுமானால், சரீர, சரீரிபாவம் சொல்லமுடியாது. அவ்விதம் சொல்லப்படுமானால், குணகுணிபாவம்போல் சரீர சரீரிபாவம் பிரிக்கமுடியாமல் இருக்கவேண்டும். சரீரம் மரணகாலத்தில் ஜீவனை விட்டு பிரிந்த பிறகும், சரீரத்தை மட்டும் பார்க்கமுடியும். சரீரத்திற்கும் சரீரிக்கும் தாதாத்ம்யம் இல்லாததனாலேயே சரீரம் தனியாக அறியப்படுகிறது. அதனால்தான் 'அஹம் மனுஷ்ய:' என்று அறியப்படுவதும் அதஸ்மின் தத்புத்தி (அத்யாஸம்) என்றே சொல்லப்படுகிறது. தாதாத்ம்ய அத்யாஸத்தினால்தான் அஹம் மனுஷ்ய: என்று சொல்லப்பட்டாலும்கூட தாதாத்ம்யம் ஏற்பட முடியாத இடத்தில் தாதாத்ம்யம் இருப்பதாக அறியப்படுமானால் அதுவே ப்ராந்தி ஞானம்.

ஜகத்திற்கு அந்தர்யாமி பரமாத்மா என்று சொல்லப்படுவதாலேயே சரீர சரீரிபாவம் சொல்லப்பட்டதாகவே ஆகின்றது என்று, '*ஜகச்ச ஸ:*' என்ற பதத்திற்கு ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்வது சரியல்ல. ஜகத் அந்தர்யாமி பரமாத்மா என்றால் ஜகத்திற்கு அபின்னம் பரமாத்மா என்று சொல்லமுடியாது. அந்தர்யாமியாக இருந்தாலும் ஜகத்தாகவும் இருக்கலாம் என்று அர்த்தம் செய்யமுடியுமானால்தான் '*ஜகச்ச ஸ:*' என்பதற்கு இந்தவிதம் அர்த்தம் செய்யலாம். அவ்விதம் சொல்லமுடியாது.

மேலும் '*ஜகச்ச ஸ:*' என்ற வாக்யத்திற்கு ஸாமானாதிகரண்ய ப்ரயோகத்தினால் முக்யார்த்தம் பொருந்தவில்லை என்றால் அர்த்தாந்தரம் கல்பிக்கலாம். முக்யார்த்தமே பொருந்துவதால் வேறு அர்த்தம் செய்யவேண்டிய அவச்யம் ஏதுமில்லை.

பூர்வ:- ஜகத்தே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே ஜகத் என்று இருக்குமானால்தான் ஸாமானாதிகரண்யம் பொருந்தும். இவ்விதம் சொல்லமுடியாததால் ஸாமானாதிகரண்யம் பொருந்தாது.

ஸித்தா:- ஸாமானாதிகரண்யம் பொருந்தவில்லை என்று சொல்லமுடியாது. கிளிஞ்சலில் வெள்ளி என்ற ப்ராந்தி ஞானம் ஏற்படும் இடத்தில், ப்ராந்தி நீங்கி, யதார்த்த வஸ்துவான கிளிஞ்சலின் ஞானம் ஏற்படுகின்றபோது எதை வெள்ளி என்று நினைத்தேனோ, அதுவே கிளிஞ்சல் என்று, ரஜதம் கிளிஞ்சல் (சுக்தி) இரண்டிற்கும் ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் இருக்கின்றதே? அதேபோல் எதை ஜகத் என்று நினைத்தேனோ அதுவே ப்ரஹ்மம் என்று ஜகத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸாமானாதிகரண்ய ப்ரயோகம் செய்யலாம். இதில் அஸம்பாவிதம் ஏதுமில்லை. அதனால் பாதாயாம் ஸாமானாதிகரண்யேன '*ஜகச்ச ஸ:*' என்று சொல்லப்படுகிறது.

பூர்வ:- அவ்விதம் இருந்தாலும், ஜகத் அதிஷ்ட்டானம் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிறதே அன்றி, ஜகத்தே ப்ரஹ்மம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ரஜத அதிஷ்ட்டானமே சுக்தி, ரஜதமே சுக்தி அல்ல. இந்த உதாகரணத்தின் மூலம் அதிஷ்ட்டானம் ப்ரஹ்மம் என்று சொல்லலாமே அன்றி ஸாமானாதிகரண்யத்தினால் ஜகத்தே ப்ரஹ்மம் என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- ப்ரஹ்மம் ஜகத்தைக்காட்டிலும் வேறாக இருந்தாலும், ஜகத் என்பது ப்ரஹ்மத்தை அன்றி வேறானது அல்ல. ஆரோபிதங்களுக்கெல்லாம் அதிஷ்ட்டானமே ஸ்வரூபம். அதனால் ப்ரஹ்மத்தை அன்றி ஜகத் வேறல்ல என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஜகத்தே ப்ரஹ்மம் என்றால், ஜகத், மித்யை என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ஜகத் என்பது ஜகத்வேன மித்யை. ப்ரஹ்மத்வேன ஸத்யம். கார்யாத்மனா ஜகத் மித்யை, காரணாத்மனா ஸத்யம். (காரணமான ப்ரஹ்மத்வேன ஸத்யம்) என்று சொல்வதால் பாதகம் ஏதுமில்லை. சுக்தியில் தோன்றும் ரஜதமும் ரஜதத்வேன மித்யை, சுக்தித்வேன ஸத்யம் என்பதுபோல், காரணாத்மனா ஸத்யம்.

பூர்வ:- கயிற்றில் தோன்றும் ஸர்ப்பம் மித்யை என்றாலும், புற்றில் இருக்கின்ற ஸர்ப்பம் எவ்விதம் ஸர்ப்பத்வேன ஸத்யமோ அதுபோல், ஜகத் என்பதும், ஜகத்வேன ஸத்யம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- நிஜ ஸர்ப்பத்திற்கும் ஸர்ப்பத்வேன ஸத்யத்வம் சொல்லப்படவில்லை. நிஜ ஸர்ப்பமும் ப்ரஹ்மத்வேன ஸத்யத்வம் சொல்லப்படுகிறது. ஆகவே, ப்ரஹ்மத்தை அன்றி வேறு எந்த ஒரு வஸ்துவும் ஸத்யமில்லை. வ்யவஹாரதசையில் ஸத்தாத்ரைவித்யக வாதத்தில் வன்மீக ஸர்ப்பம் ஸத்யம் என்று சொல்லப்படுகின்றதே அன்றி ஏகஸத்தா வாதத்தில் இவ்விதம் சொல்லப்படவில்லை. அதனால் வன்மீக ஸர்ப்பம் போல் ஜகத்திற்கு ஸத்யத்வம் சொல்வது பொருந்தாது.

பூர்வ:- இவ்விதம் சொல்லப்படுமானால் ரஜ்ஜு ஸர்ப்பத்திற்கும், வன்மீக ஸர்ப்பத்திற்கும் வித்யாஸம் சொல்லமுடியாதே?

ஸித்தா:- இரண்டிற்கும் வித்யாஸமில்லை என்பதே உண்மை. ஆனாலும், வ்யவஹாரதசையில், வ்யவஹாரம் செய்வதற்காக வித்யாஸம் இருக்கின்றது என்று சொல்வது சரியே. அதனால் ஹானி ஏதுமில்லை. அவித்யாமாத்ரதோஷ ஜன்யத்வம் வ்யாவஹாரிகத்வம். அவித்யா அதிரிக்த தோஷ ஜன்யத்வம் ப்ராதிபாஸிகத்வம் என்ற வித்யாஸம் இருக்கின்றது. இந்தவிதம் வ்யவஹாரத்திற்காக, வ்யாவஹாரிக ஸத்யத்தை ஒத்துக்கொள்வதால் பாதகம் ஏதுமில்லை.

பூர்வ:- ஜகத்தை - ஜகத்ரூபேண (ஜகத்வேன) மித்யை என்று சொல்வதுபோல் ப்ரஹ்மத்தையும் ப்ரஹ்ம ரூபேண (ப்ரஹ்மத்வேன) மித்யை என்று சொல்லலாமே?

ஸித்தா:- அவ்விதம் சொல்லமுடியாது. ஏனெனில் ஜகத் என்பது, அதிஷ்ட்டானமான ப்ரஹ்மத்தில் ஆரோபிதமாக தோன்றுவதால் மித்யை என்று சொல்லப்படுகிறது. இதுபோல் ப்ரஹ்மம் எதில் தோன்றுகிறது? நிரதிஷ்ட்டான ப்ரமம் ஸம்பவிக்கமுடியாதே? ப்ரஹ்மம், வேறு ஏதோ ஒன்றில் கல்பிதம் என்றால் அனவஸ்த்தை முதலான தோஷங்கள் ஸம்பவிக்கும். ப்ரஹ்மம் மித்யை என்றால் அதற்கு அதிஷ்ட்டானமாக ஸத்யமான ஒன்றை சொல்லத்தான் வேண்டும். ஆகையால் ப்ரஹ்மம் மித்யை என்று சொல்வற்கு முடியாது.

பூர்வ:- ஒன்று ஸத்யம், ஒன்று மித்யை என்றால் இரண்டிற்கும் ஸாமானாதிகரண்யம் எவ்விதம் பொருந்தும்?

ஸித்தா:- ம்ருத்ஸத்யம், கடம் மித்யை ஆனாலும் ம்ருத்கடம் என்று இரண்டிற்கும் ஸாமானாதிகரண்யம் சொல்லப்படுகிறதே?

பூர்வ:- கடம் ஸத்யம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- வேதமே கடத்திற்கு ஸத்யத்வம் கிடையாது என்று தெரிவிக்கின்றது. அதனால், ம்ருத் கடம் என்று ஸாமானாதிகரண்ய ப்ரயோகத்தினால் ம்ருத் என்பதே ஸத்யம் என்று எவ்விதம் சொல்லப்படுகிறதோ அதுபோல் கடமும் ஸத்யம் என்று சொல்லலாமே என்று சொல்வது சரியல்ல. ஸத்யாந்ருதே மிதுனீக்ருத்ய என்று சொல்லப்படுவதால், ஒன்று ஸத்யம், ஒன்று மித்யையாக இருக்கின்ற இடத்தில்தான் ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்யப்படுகிறது. ம்ருத்கடம், தந்துபடம், கனககடகம் என்று சொல்லப்படுகிறதே அன்றி, ஸத்யமாகஇருக்கின்ற இரண்டிற்கும் ம்ருத்தந்து:, ம்ருத்கனகம் தந்து:கனகம் என்று ஸாமானாதிகரண்யம் சொல்லப் படுவதில்லை. கார்ய காரணபாவேன ஸமான அதிகரணம் இருக்கின்ற இடத்தில்தான், ஸாமானாதிகரண்யமாக *'ஜகச்ச ஸ:'* என்று முக்யப்ரயோகம் செய்யப்படுகின்றது என்றே சொல்லவேண்டும்.

மேலும், பரமாத்மா, தன் ஸ்வய ஸ்வரூபத்துடன்தான் இருக்கின்றார் என்றும், ப்ரக்ருதி முதலானவைகளில் ஸம்பந்தம் பரமாத்மாவிற்கு கிடையாது என்று 'ஸோஹம் இச்சாமி' என்ற ச்லோகத்திற்கு (விஷ்ணுபுராணம் 1.1.4) உன்னால் வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றது. அது சரியல்ல. விசிஷ்டாத்வைதியான உன் ஸித்தாந்தத்தில் ப்ரக்ருதி, புருஷன் என்ற

இரண்டும், எப்போதும் விசிஷ்ட்டமாக இருப்பதால், விசிஷ்ட்டம் என்றும், ஆனால் ஈச்வரன் ஒருவரே என்பதால் அத்வைதம் என்றும், அதனால் விசிஷ்ட்ட அத்வைதம் (விசிஷ்ட்டாத்வைதம்) என்று உங்கள் சித்தாந்தத்திற்கு பெயர் சொல்லப்படுகிறது. ஆகையால், ப்ரக்ருதி ஸம்பந்தமற்ற கேவல ஈச்வரன் ஸ்வஸ்வரூபேண இருக்கின்றார் என்று உங்கள் சித்தாந்தத்திற்கு விரோதமாக எவ்விதம் சொல்லமுடியும்? ச்ருஷ்டி காலத்திலும் ப்ரளய காலத்திலும் முக்தி நிலையிலும் இந்த மூன்று காலத்திலும், ஈச்வரன் சிதசித் விசிஷ்ட்டாராகவே இருக்கின்றார் என்றால் கேவல ஈச்வரன் இருக்கின்றார் என்று உன்னால் சொல்லமுடியாது. ஆனால் எங்கள் ஸித்தாந்தத்தில், பரமாத்மாவிற்கு, மாயா ஸம்பந்தத்தினால் ப்ரக்ருதி ஸம்பந்தம் ஏற்படுவதாகச்சொல்லப்படுவதால், முக்தி நிலையில் ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்ற பரமாத்மா ஸ்வஸ்வரூபேண இருக்கின்றார் என்று சொல்வது பொருந்தும்.

அதுமட்டுமல்ல. உங்கள் ஸித்தாந்தத்தில், விசிஷ்ட்ட அத்வைதம் என்பதற்கு என்ன அர்த்தம் என்றால், ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட்டம், ஸ்தூல சிதசித் விசிஷ்ட்டம் என்ற இரண்டு தன்மைகளையுடைய பரமாத்மா ஒருவரே என்று அர்த்தம் சொல்லப்படுகின்றது. இவ்விதம் இரண்டு நிலையிலும் விசிஷ்ட்டம் என்றால் ஸ்வேனைவ ரூபேண இருக்கின்றார் என்று உன்னால் சொல்லமுடியாது. அதற்காக, சரீர சரீரிபாவ விசிஷ்ட்ட ஸம்பந்தத்துடன் கூடின ஸ்வரூபம் விசிஷ்ட்டாத்வைதம் என்று சொல்லப்படுமானால், சரீர சரீரிபாவ ஸம்பந்தம் அப்ருதக்ஸித்தம் என்று (பிரிக்க முடியாத ஸம்பந்தம்) சொல்லப்படுவதால், ஈச்வரனுக்கு சரீர ஸம்பந்தம் ஒருபோதும் இல்லாமல் இருக்கமுடியாது.

அதனால் ஸர்வதா சரீர ஸம்பந்தம் உடையவராகவே இருக்கின்றதால் ப்ரக்ருதி முதலானவைகளுடன் ஸம்பந்தம் அற்ற (அவிசிஷ்ட்டமான) ஈச்வரன் ஸ்வேனைவ ரூபேண இருக்கின்றார் என்று உங்களால் சொல்லமுடியாது. ஆனால் அத்வைத ஸித்தாந்தத்தில்தான், எந்தவிதமான ஸம்பந்தமும் அற்ற ஸ்வரூபமாக, பரமாத்மா கேவல சைதன்யமாத்ரமாகவே ஸர்வதா ப்ரகாசிக்கின்றார் என்றே சொல்லப்படுகிறது. அதுவே பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபம்.

ஆகையால் உபாதியினால் விசிஷ்ட்டம் என்று சொல்லப்படுமானால் அது அத்வைத ஸித்தாந்தம் என்றே ஸித்திக்கின்றது. மேலும் இவ்விதம் ஒத்துக்கொள்ளாமல், ஒரே ஈச்வரன், ப்ரக்ருதி முதலானவைகளுடன் ஒரு ஸமயம் ஸம்பந்தப்பட்டவராகவும், மற்றொரு ஸமயம் ஸம்பந்தம் அற்றவராக இருக்கின்றார் என்று சொல்கிறாயா? அல்லது, ஈச்வரன் இரண்டு என்றும் அதில் ஒருவர் விசிஷ்ட்டர், மற்றொருவர் அவிசிஷ்ட்டர் என்று சொல்கிறாயா? முதல் பக்ஷத்தில் தெரிவித்தது போல் ஒரே ஈச்வரன் ஒரு ஸமயம் விசிஷ்ட்டம், மற்றொரு ஸமயம் அவிசிஷ்ட்டம் என்று சொல்லப்படுமானால், ஸர்வதா விசிஷ்ட்டர் என்று சொல்லமுடியாது.

அதற்காக ஒரே ஸமயத்தில் விசிஷ்ட்டராகவும், அவிசிஷ்ட்டராகவும் இருப்பதாகச் சொல்லமுடியாது. ஏனெனில் இரண்டும் விருத்தம். அதாவது ஸம்பந்தம் உள்ளவராகவும் ஸம்பந்தம் அற்றவராகவும் ஒரே காலத்தில் எவ்விதம் இருக்கமுடியும்? ஆகவே ஸர்வதா விசிஷ்ட்டம் என்றால், ஸ்வேனைவ ரூபேண இருக்கின்றார் என்பது பொருந்தாது.

ஆகையால், எங்கள் அத்வைத ஸித்தாந்தத்தில், அவித்யா தசையில், வ்யவஹார காலத்தில் விசிஷ்ட்டர் என்றும், வித்யா தசையில், முக்தி நிலையில், அவிசிஷ்ட்டர் என்றும் சொல்ல முடியும். ஆனால் உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படும். அதனால் அத்வைத ஸித்தாந்தமே சரி என்று ஒத்துக்கொள்ளப்படவேண்டும். இரண்டாவது பக்ஷமாக தெரிவித்த, ஈச்வரன் இரண்டு என்று சொல்லப்படுமானால், அனேக ஈச்வரனை ஒத்துக்கொள்வது சரியல்ல. ஏனெனில் ச்ருஷ்டி முதலான கார்யங்கள் நியமமாக நடைபெற வேண்டுமானால், ஈச்வரன் ஒருவரே என்று ஒத்துக்கொள்ள வேண்டும். ஈச்வரத்வம் ஒருவரிடம்தான் இருக்கமுடியும். ஆகவே, ச்ருஷ்டி முதலான கார்யங்கள் நியமமாக நடைபெறுவதால் ஈச்வரன் ஒருவரே என்று அறியப்படுகிறது. அதுமட்டுமல்ல, 'நாராயணன் ஒருவரே ஈச்வரன்' என்று தெரிவிக்கின்ற உங்கள் ஸித்தாந்தத்திற்கும் பங்கம் ஏற்படும், 'ஸ்வதந்த்ரோ பகவான் விஷ்ணு:' என்ற உங்கள் ஸித்தாந்தத்திற்கு, ப்ரக்ருதி முதலான வைசிஷ்ட்யம் இருப்பதாக நிரூபணம் செய்யமுடியாது. அதனால் ப்ரக்ருதி முதலானவைகள் மித்யாபூதம் என்றே சொல்லவேண்டும் என்பதால் அத்வைதமே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ப்ரக்ருதி முதலானவை எப்போதும் ஸத்யமே. அதனால் மித்யை என்று சொல்ல வேண்டிய அவச்யமில்லை. ஈச்வரன் ஒரு ஸமயம் ப்ரக்ருதியுடன் கூடி இருக்கின்றார். ஒரு ஸமயம் ஸம்பந்தமற்று தனித்து இருப்பதாகச்சொல்லலாமே?

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால், பரமாத்மா விகாரி என்று சொல்லநேரிடும். எது விகாரத்தை அடைகின்றதோ அது அநித்யம் (யத் விகாரி தத் அநித்யம்) என்ற ந்யாயப்படி பரமாத்மாவிற்கு அநித்யத்வம் ஸம்பவிக்கும். உதாரணமாக, ம்ருத் என்பது, கடமாக ஆவதற்கு முன் ஸ்வஸ்வரூபேண (ம்ருத்தாகவே) இருக்கின்றது. கடமாக ஆனபிறகு கடரூபேண (பரரூபத்தில் அதாவது அன்யரூபத்தில்) இருப்பதுபோல், ம்ருத் என்பது எவ்விதம் விகாரத்தை அடைகிறதோ அதுபோல் ப்ரஹ்மமும் விகாரி என்ற சொல்லநேரிடும். அவ்விதம் விகாரத்தை அடைகின்ற ஈச்வரன், நித்யம் என்று சொல்லமுடியாது. ஆகவே ஈச்வரன் நித்யம் என்பதால் உண்மையில் ஒருபோதும் ப்ரக்ருதியுடன் கூடினவராக இருக்கமுடியாது. ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பம் போல் (பரரூபம்) ப்ராந்தி ஞானம் என்றே சொல்லவேண்டும். ஆகவே பரமாத்மா, பரரூபேண ஸ்திதி என்றால் அது மித்யை என்றே சொல்லவேண்டுமே அன்றி அது ஸத்யம் என்று சொல்லமுடியாது. ஸர்வதா ஸ்வஸ்வரூபேண பரமாத்மா இருக்கின்றார் என்பதே ஸத்யம்.

ஆகவே, ப்ரக்ருதி முதலானவைகளுடன் விசிஷ்ட்டமான பரமாத்மா ஸத்யமாக இருக்கமுடியாது. ஸத்யமாக இருக்கிறார் என்றால் அவர் விசிஷ்ட்டமாக இருப்பதாகச் சொல்லமுடியாது.

'அஸங்கோ ஹ்யயம் புருஷ:' என்று பரமாத்மாவிற்கு எதனுடனும் ஒருபோதும் ஸம்பந்தமே கிடையாது என்றே ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது. ஆகையால் பரமாத்மாவிற்கு, ப்ரக்ருதி முதலானவைகளுடன் ஸம்பந்தம் கிடையாது என்று சொல்லப்பட்டபோதிலும், ப்ரக்ருதி முதலானவை பரமாத்ம ஸம்பந்தமில்லாமல் இருக்க முடியாது என்பதால், ஈச்வரனுக்கு

அப்ருதக்ஸித்த விசேஷணம் இருக்கின்றது என்று உன்னால் சொல்லப்படுகிறது. அதனால், ப்ரக்ருதி முதலான அவிசிஷ்ட்டமான ப்ரஹ்மம், ஸ்வ ஸ்வரூபேண அவஸ்த்திதம் என்று உன்னால் எவ்விதம் சொல்லமுடியும்? இவ்விதம் முன்னுக்குப்பின் முரணாக பேசுவது பொருந்தாது (வ்யாகாதம்). ஆகவே ஈச்வரன் ஸ்வஸ்வரூபேண அவஸ்திதம் என்று உன்னால் சொல்லமுடியாது. ஆகவே, அத்வைதமே ஸித்திக்கின்றது.

99

'अविकाराय शुद्धाय' इत्यादिश्लोकस्यापि निर्विशेषब्रह्मपरत्वोपपत्तिः।

'அவிகாராய சுத்தாய' இத்யாதி ச்லோகஸ்யாபி நிர்விசேஷ ப்ரஹ்ம பரத்வ உபபத்தி:

(விஷ்ணு புராணம் 1.2.1)

'அவிகாராய சுத்தாய நித்யாய பரமாத்மனே
ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே'

अविकाराय शुद्धाय नित्याय परमात्मने।
सदैकरूपरूपाय विष्णवे सर्वजिष्णवे

என்ற ச்லோகார்த்த விசாரம்.

பூர்வ:- 'அவிகாராய' என்றால் பரமாத்மா வேறு எதற்கும் கார்யமல்ல என்று அர்த்தம் செய்ய வேண்டும்.

ஸித்தா:- பரமாத்மா, கார்யமாக இல்லை என்றால், காரணமாக இருக்கிறார் என்று அர்த்தம் கிடைக்கும். பரமாத்மா எதற்கும் கார்யமும் இல்லை, காரணமும் இல்லை, அவிகார்யம் என்றே 'அவிகாராய' என்று தெரிவிக்கின்றது. '*ந தஸ்ய கார்யம் கரணம் ச வித்யதே*' (न तस्य कार्यं करणं च विद्यते) என்று ச்ருதி வாக்யமே தெரிவிக்கின்றது.

பூர்வ:- '*யதோ வா இமானி பூதானி*' - என்ற ச்ருதி வாக்யம் ஜகத், ப்ரஹ்மகார்யம் என்றே தெரிவிக்கின்றதால், ப்ரஹ்மம் காரணம் என்றே தெரிவிக்கின்றது.

ஸித்தா:- ப்ரளய காலத்தில் ஜகத் அவ்யக்தமாக இருக்கின்றது. ச்ருஷ்டி காலத்தில் வ்யக்தமாக இருக்கின்றது. இதில் வ்யக்தம் ஜகத் ப்ரஹ்மகார்யமா? அல்லது அவ்யக்தம் ஜகத் ப்ரஹ்ம கார்யமா? ப்ரளயகாலத்தில் இருக்கின்ற அவ்யக்தம், கார்யம் என்று சொல்லமுடியாது. அந்த நிலையில் அவ்யக்தம் காரணம் என்றே (காரண ஸ்வரூபமாக இருக்கின்றதால்) சொல்லவேண்டுமே அன்றி கார்யமென்று சொல்லமுடியாது. இதையே ஸாங்க்யனும், மூலப்ரக்ருதி: அவிக்ருதி: என்று அவ்யக்தம் கார்யமில்லை, காரணம் என்றே தெரிவிக்கின்றான். அதனால் அவ்யக்தம் ப்ரஹ்மகார்யம் என்று சொல்லமுடியாது.

அதற்காக வ்யக்தமான ஜகத் ப்ரஹ்மகார்யம் என்று சொல்லப்படுமானால் அதுவும் சரியல்ல. ஏனெனில் வ்யக்தம் என்று சொல்லப்படும் மஹத், அஹங்காரம் என்ற எல்லாமே காரணமான அவ்யக்தத்தின் கார்யம் என்பதால் ப்ரஹ்ம கார்யம் என்று சொல்லமுடியாது. அதுமட்டுமல்ல, அசித் வஸ்துவிலிருந்து வேறுபடுத்தி பரமாத்மாவை தெரிவிப்பதற்காக

'அவிகாராய' என்று சொல்லப்படுகிறது என்று முன்பே உன்னால் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது கார்யம், காரணம் என்ற இரண்டு அவஸ்த்தையும் அசித் வஸ்துவிற்குத்தான் ஸம்பவிக்கும் என்றும், சித் வஸ்துவிற்கு இவ்வித அவஸ்த்தைகள் இல்லாததால் 'அவிகாராய' என்று சொல்லப்படுவதாக உன்னாலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் காரணாவஸ்த்தை என்பதும் அசித் வஸ்துவான ப்ரக்ருதியே என்பதால் ப்ரஹ்மம் காரணமென்று சொல்லமுடியாது.

பூர்வ:- 'விகாரம்' என்றால் கார்யம். 'எது கார்யமாக இல்லையோ, அது ப்ரஹ்மம்' என்று 'அவிகாராய' என்ற பதத்திற்கு, தத் புருஷஸமாஸத்தினால் அர்த்தம் சொல்லப்பட்டது. பஹுவ்ரீஹி ஸமாஸத்தினால் 'ந வித்யதே விகாரம் யஸ்ய' என்று எந்த ஒரு வஸ்துவிற்கு கார்யமே கிடையாதோ, அது ப்ரஹ்மம் என்று சொல்லப்படுவதால், கார்யம் இல்லை என்றால் காரணமும் இல்லை என்றே சொல்லப்பட்டதாகவே ஆகின்றது.

ஸித்தா:- இவ்விதம், தத்புருஷஸமாஸத்தினால் ப்ரஹ்மம் கார்யம் இல்லை என்றும், பஹுவ்ரீஹி ஸமாஸத்தினால் ப்ரஹ்மம் காரணமும் இல்லை என்று, ச்லோகத்தில் உள்ள 'அவிகாராய' என்ற பதம் தெரிவிக்கின்றது, அதனால், 'அவிகாராய' என்ற பதம், அசித்திலிருந்து ப்ரஹ்மத்தை வேறுபடுத்தி (வ்யாவ்ருத்தி) தெரிவிக்கின்றது என்று உன்னால் அர்த்தம் சொல்லப்படுமானால், இதற்குமுன் 'ஏகமேவாத்விதீயம்' (சா.6) என்ற வாக்யத்தில் ஏகமேவ பதத்திற்கு அவிபக்தமான, நாமரூபம் ப்ரஹ்மத்தின் காரணாவஸ்த்தை என்று சொல்லப்பட்டிருக்கின்றதே?

அதனால், இப்போது ப்ரஹ்மம் காரணமும் அல்ல, கார்யமும் அல்ல என்று எவ்விதம் சொல்லமுடியும்? இவ்வாறு கூறினால் 'ஏக'பதம் காரணாவஸ்த்தம் ப்ரஹ்மம் என்று தெரிவிப்பதாகச் சொல்வது சரியல்ல. அதுமட்டுமல்ல, ப்ரஹ்மம், ஜகத்திற்கு நிமித்த காரணமாகவும், உபாதான காரணமாகவும் இருக்கின்றது என்று ராமானுஜரே அவருடைய க்ரந்தத்தில் தெரிவிக்கின்றாரே? அதுமட்டுமல்ல, 'பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி' என்று பகவானே ஸங்கல்பித்து ஜகத்தாக பரிணாமத்தை அடைவதாக சொல்லப்படுகிறதே? இதனால் ப்ரஹ்மம் கார்யாவஸ்த்தை உடையது என்று உங்களால் சொல்லப்படுவதால், இந்த இடத்தில் 'அவிகாராய' என்ற பதத்திற்கு ப்ரஹ்மம், கார்யமுமல்ல, காரணமுமல்ல என்று அசித்திலிருந்து ப்ரஹ்மத்தை வேறுபடுத்தி தெரிவிக்கின்றது என்று முன்னுக்குப்பின் முரணாக தெரிவிப்பது சரியல்ல. பொருந்தாது.

பூர்வ:- கேவல ப்ரஹ்மம், கார்யமுமல்ல. காரணமும் அல்ல. சிதசித் விசிஷ்ட்ட ப்ரஹ்மமே கார்ய காரண, உபயாவஸ்த்தம் என்றே சொல்கிறேன். அசித்விசிஷ்ட்ட ஸம்பந்தம் அற்ற சுத்தப்ரஹ்மம் கார்யமுமில்லை, காரணமும் இல்லை.

ஸித்தா:- உன் ஸித்தாந்தத்தில், சுத்தப்ரஹ்மம் என்று ஒன்று இருப்பதாகவே ஒத்துக் கொள்ளப்படவில்லையே? ப்ரக்ருதி, புருஷன் என்ற எல்லாமே நித்யம் என்றும், அசித் வஸ்துக்கள் பரமாத்ம ஸம்பந்தம் இன்றியே இருக்கமுடியாது என்றெல்லாம் சொல்லப்படுவதால், கேவலப்ரஹ்மம் என்று உன்னால் சொல்லமுடியாது. எப்போதுமே

சிதசித் விசிஷ்டடமாகத்தான் இருக்கும் என்று சொல்லப்படுவதால், ஸர்வதா கார்யகாரணபாவத்துடன்தான் ப்ரஹ்மம் இருக்கமுடியும். ஆகவே, அசித்திலிருந்து வ்யாவ்ருத்தியைத்தான் ‘அவிகாராய’ என்ற பதம் தெரிவிக்கிறது என்று உன்னால் சொல்லப்படுவது பொருந்தாது.

பூர்வ:- சித், அசித் எல்லாமே நித்யம்தான். அவ்வாறு இருந்தாலும் ஒரு ஸமயம் இவைகள் ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தப்பட்டிருக்கும், மற்றொரு ஸமயம் ஸம்பந்தம் இருக்காது என்று சொல்லலாமே?

ஸித்தா:- நித்யம் என்றால் வ்யாபகமாகத்தான் இருக்கமுடியும். பரிச்சின்னமாக இருந்தால்தான் ஒரு ஸமயம் ஸம்பந்தம் இருக்கிறது என்றும் மற்றொரு ஸமயம் ஸம்பந்தம் இல்லை என்றும் சொல்லமுடியும். வ்யாபகமான பரமாத்ம ஸ்வரூபம் ஒரு ஸமயம் அவிசிஷ்டடமாக இருக்கின்றதென்று சொல்லமுடியாது. அவிசிஷ்டடமாக இருக்குமானால் வ்யாபகம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- ஆகாசம் எங்கும் வ்யாபகம்தான். ஆனால் கடத்துடன் ஸம்பந்தம் கிடையாது. அதுபோல் ஈச்வரனுக்கு ப்ரக்ருதி முதலானவைகளுடன் ஸம்பந்தம் இல்லை என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஆகாசம் வ்யாபகமாக இருந்தாலும் எந்த வஸ்துவுடனும் ஸம்பந்தமில்லை என்பது போல் ஈச்வரனும் வ்யாபகமாக இருந்தாலும் எதனுடனும் ஸம்பந்தம் கிடையாது என்று சொன்னால் பொருந்தும். ஆனால் ஒரு ஸமயம் ஸம்பந்தம் என்றும், மற்றொரு ஸமயம் ஸம்பந்தமில்லை என்று சொல்வது பொருந்தாது. ஆகாசத்திற்கும் கடத்துடன் ஒரு ஸமயம் ஸம்பந்தம் இருக்கிறது மற்றொரு ஸமயம் இல்லை என்று சொல்வதும் பொருந்தாது. ஆகாசத்திற்கும் ஒருபோதும் எதனுடனும் ஸம்பந்தம் கிடையாது என்றே சொல்லவேண்டும். இந்தவிதம் பரமாத்மாவிற்கு ஒருபோதும் எதனுடனும் ஸம்பந்தமில்லை என்றால், விசிஷ்டாத்வைதம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ‘யதோ வா இமானி’ என்ற ச்ருதி வாக்யமும், ப்ரஹ்மம் ஸர்வஜகத் காரணம் என்று நேரிடையாக தெரிவிக்கவில்லை. மாயாத்வாரா ஜகத் அதிஷ்டானம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றதே அன்றி ப்ரஹ்மம் காரணம் என்று தெரிவிக்கவில்லை. ப்ரஹ்மம் விகாரமில்லை என்று தத்புருஷஸமாஸத்தினால் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மத்திற்கு யாதொருவிதமான விகாரமும் கிடையாது என்றே பஹுவ்ரீஹி ஸமாஸத்தினால் அறியப்படுகிறது. அதனால் ‘அவிகாராய’ என்ற பதம், ஸர்வவிதமான விகாரங்களும் அற்றது ப்ரஹ்ம ஸ்வரூபம் என்று போதிப்பதற்காகவே இந்த பதம் தெரிவிக்கின்றது. அதனால் சில விகாரங்கள் இருக்கின்றது, சில விகாரங்கள் இல்லை என்று சொல்லப்படவில்லை. எந்தவிதமான கார்யமும், ப்ரஹ்மத்தினிடம் அணுமாத்ரம்கூட கிடையாது என்றே தெரிவிக்கின்றது. அவ்விதம் ஏதாவது இருப்பதாக தோன்றுமானால் அவை எல்லாமே மித்யை என்றே பஹுவ்ரீஹி ஸமாஸத்தினால் ‘அவிகாராய’ என்ற பதம் தெரிவிக்கின்றது. இதுவே உண்மையான அர்த்தம். இவ்விதம் அர்த்தம் சொல்லப்படாமல், ஞாத்ருத்வம் முதலான விகாரங்களான கார்யங்கள்தான் இல்லை என்று தெரிவிக்கின்றதே அன்றி, மற்ற கார்யங்கள் எதுவும் இல்லை என்று நிஷேதம் செய்யவில்லை என்று, அர்த்தத்தை

சுருக்கித்தெரிவிப்பவதற்குரிய ப்ரமாணம் ஏதுமில்லை. அதனால் எந்தவிதமான விகாரமும் அற்ற ஸ்வரூபம் என்றே 'அவிகாராய' என்ற பதம் தெரிவிப்பதாகச்சொன்னால்தான், அர்த்தம் பொருந்தும். அதுவே உண்மையான அர்த்தம்.

பூர்வ:- 'சுத்தாய' என்ற பதம் ஈச்வரன் பந்தனல்ல, என்று பந்தனிலிருந்து ஈச்வரனை வேறுபடுத்தி தெரிவிக்கின்றது. அதனால் பந்த வ்யாவ்ருத்தி என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- இதுவும் சரியல்ல. பந்தன் என்பவனும் சுத்தம்தான். ஏனெனில் உண்மையில் அவன் அசுத்தனாக இருப்பானாகில் அவன் ஒருபோதும் சுத்தனாக ஆகமுடியாது. முக்த நிலையில் சுத்தானாக இருக்கின்றான் என்று சொல்லப்படுமானால் பந்தாவஸ்த்தையில் அறியப்படும் அசுத்தி மித்யாபூதம் என்றே சொல்லவேண்டும். அசுத்தனாக இருப்பவன் சுத்தனாக ஆகிறான் என்றால் ஜீவன் விகாரி என்று சொல்லநேரிடும். ஆனால் 'அவிகார்யோயமுச்யதே' (अविकार्योयमुच्यते) என்று பகவானே கீதையில் தெரிவிக்கின்றதால், ஜீவன் அவிகாரி என்றே அறியவேண்டும். அதனால் எப்போதும் சுத்தன் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- எப்போதும் சுத்தன் என்றால் அவனை பந்தன் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- அவித்யாநிலையில் அனாத்ம வஸ்துக்களின் தாதாத்ம்ய அத்யாஸத்தினால் தன்னை, ப்ராந்தியினால், பந்தன் என்று நினைக்கின்றான். வித்யா நிலையில் தன்னை சுத்தன் என்று அறிகின்றான்.

பூர்வ:- கண்ணாடியில் தூசி முதலான அசுத்தி ஏற்படுவது போல் ஜீவனிடத்தில் ப்ரக்ருதி என்ற அசுத்தி இருக்கின்றது. அதனால் ஜீவன் அசுத்தன் என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- கண்ணாடி அவயவமுள்ள வஸ்து. அதனால் அவயவம் உடைய வஸ்துவில் அசுத்தி ஏற்படலாம். ஆனால் ஜீவன் நிரவயவம், அஸங்கன் என்பதால், ப்ரக்ருதியின் ஸம்பந்தமே ஏற்படமுடியாது. அதனால் ப்ரக்ருதி என்ற அசுத்தியும் ஏற்படமுடியாது. ஸாவயவமான கண்ணாடியில் அசுத்தி ஸம்பந்தம் ஏற்பட முடியும் என்பதால் த்ருஷ்ட்டாந்தம் பொருந்தாது.

பூர்வ:- அத்யாஸத்தினால் ஏற்படும் அசுத்தி இல்லாதவர் சுத்தன் என்று 'சுத்தன்' என்ற பதத்திற்கு அர்த்தம் செய்யலாம். அதனால் ஜீவன் ஆத்யாஸிக அசுத்தி உள்ளவன் என்றும், ப்ரஹ்மம், அவ்விதம் ஆத்யாஸிக அசுத்தி இல்லாதவர் என்பதால் 'சுத்தன்' என்று பந்தனிலிருந்து வ்யாவ்ருத்தி செய்து ப்ரஹ்மத்தை தெரிவிப்பதாகச்சொல்லலாமே?

ஸித்தா:- ஆத்யாஸிக அசுத்தி ஜீவனுக்கு இருக்கின்றது என்று சொல்வது சரியே. அதனால் ஆத்யாஸிக பந்த வ்யாவ்ருத்தி சொல்லலாம். அதனால் 'அவிகாராய சுத்தாய' என்று இந்த முறையில் பந்தவ்யாவ்ருத்தி சொல்லப்படுமானால் அது சரியே.

பூர்வ:- 'நித்யாய' என்ற பதம், முக்தவ்யாவ்ருதி என்று சொல்லலாமே?

ஸித்தா:- அது சரியல்ல. பரமாத்மா நித்யன் என்றால், முக்தன் அநித்யன் என்று எவ்விதம் சொல்லமுடியும்? முக்தனும் நித்யன்தான். அதனால் முக்த வ்யாவ்ருத்தி என்று சொல்ல முடியாது. 'நித்யாய' என்ற பதம் எப்போதும் சுத்தன் என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- 'முக்தன்' முக்திக்குமுன் அசுத்தனாக இருந்ததால் முக்த வ்யாவ்ருத்தி என்று சொல்லலாமே?

ஸித்தா:- முக்தனும் நித்யமுக்தன்தான். முக்திக்கு முன்பும் அசுத்தன் அல்ல. பந்தனாக இருந்தபோதும் சுத்தம்தான். அதனால் முக்தவ்யாவ்ருத்தி என்று சொல்லமுடியாது. உன்னுடைய த்ருஷ்டியில் முக்திக்கு முன் அவன் அசுத்தன் என்று தோன்றினாலும், முக்தனுடைய த்ருஷ்டியில் ஆத்ம ஞானம் ஏற்பட்ட காரணத்தினால், காலத்ரயத்திலும் நான் சுத்தன் என்றும் 'நித்ய முக்த, புத்த ஸ்வபாவோஹம்' என்றே தன்னை அறிகின்றான். அதனால் 'நித்யாய,' 'சுத்தாய' என்ற பதங்களுக்கு உன்னால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல.

பூர்வ:- 'பரமாத்மனே' என்ற பதம் நித்யமுக்தனிலிருந்து வ்யாவ்ருத்தி செய்வதாகச் சொல்லலாமே?

ஸித்தா:- பரமாத்மாவே நித்யமுக்தர். அதனால் பரமாத்மா நித்ய முக்தனிலிருந்து வ்யாவ்ருத்தி என்று எவ்விதம் சொல்லமுடியும்? அவ்விதம் சொல்லப்படுமானால் பரமாத்மா அநித்ய முக்தர் என்று சொல்ல நேரிடும்.

பூர்வ:- எந்த ஒரு ஆத்மாவிற்கு மேற்பட்ட ஆத்மாவே கிடையாதோ அவரே பரமாத்மா என்று சொல்லப்படுவதால், நித்யமுக்தனை பரமாத்மா என்று சொல்லமுடியாது. அதனால் ஈச்வரன் நித்யமுக்தனை விட மேலானவன் என்றே அர்த்தம் செய்யவேண்டும்.

ஸித்தா:- ஈச்வரனே நித்யமுக்தன். ஈச்வரனை அன்றி வேறாக, நித்ய முக்தன் என்று எவருமே கிடையாது. அனந்தன் கருடன் முதலானவர்கள் நித்ய முக்தர்கள் அல்ல. அசரீரனாக இருப்பவனே நித்யமுக்தன். சரீரத்துடன் கூடினவனை முக்தன் என்றே சொல்லமுடியாது. '*ந ஹ வை ஸ சரீரஸ்ய ஸத: ப்ரியாப்ரியயோரபஹதி: அஸ்தி*' (न ह वै सशरीरस्य सतः प्रियाप्रिययोरपहतिरस्ति) என்று ச்ருதி வாக்யமே தெரிவிக்கின்றது. சரீரத்துடன் கூடினவன் முக்தனல்ல என்ற காரணத்தினால், விஷ்ணு சரீரத்துடன் கூடினவர் என்று சொல்லப்படுமானால், அவர் முக்தன் என்றே சொல்லமுடியாது. (ஈச்வரத்வமே ஸம்பவிக்க முடியாது.) 'அசரீரம் சரீரேஷுஅனவஸ்த்தேஷ்வவஸ்திதம்' என்று ச்ருதி தெரிவிக்கின்றது.

மேலும், ப்ரஹ்மா, முதலியவர்கள் போல் 'விஷ்ணு' தேவதை என்றே உன்னால் சொல்லப்படுவதால், தேவத்வமும், மனுஷ்யத்வம் என்பதுபோல் ஜாதி என்றே சொல்லவேண்டும். ஜாதி என்றால் அது சரீரதர்மமே அன்றி ஆத்மதர்மம் அல்ல. அஜமான ஆத்மாவிற்கு ஜாதி முதலான எந்த விதமான ஸம்பந்தமும் கிடையாது. ஆகையால் இந்த ச்லோகத்தில் சொல்லப்படும் 'விஷ்ணு' என்ற பதம், ஸர்வவ்யாபகமான பரமாத்மாவையே தெரிவிக்கின்றது. 'வ்யாபகத்வாத் விஷ்ணு:' என்ற வ்யுத்பத்தியினால் விஷ்ணு பதத்திற்கு அர்த்தம் சொல்லப்படுகிறது. ஆகையால் வைகுண்ட லோகத்தில் இருப்பவர் விஷ்ணு என்று ஏகஸ்தலத்தில் இருப்பதாக சொல்லப்படுமானால், விஷ்ணு தேவதை என்றே சொல்லவேண்டுமே அன்றி பரமாத்மா என்று சொல்லமுடியாது.

பூர்வ:- 'ஸதைகரூபரூபாய' என்று விஷ்ணு ஸதா ஏகரூபர் என்றும், விலக்ஷணமான விக்ரஹம் இருப்பதால் பரமாத்மாவானவர், விக்ரஹமுள்ள மற்ற ஸர்வ பதார்த்தங்களுக்கும் வேறுபட்டவர் என்று, இந்த ச்லோகத்தில் 'ஸதைகரூபம்' என்ற விசேஷணம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இதுவும் சரியல்ல. பரமாத்மாவிற்கு விக்ரஹமே கிடையாது என்றே அசரீரம் என்று சொல்லப்படுகிறது. மாயா கார்யங்களே பரமாத்மாவிற்கு விக்ரஹம். அசரீரியான பரமாத்மாவிற்கு விலக்ஷணவிக்ரஹம் இருப்பதாகச் சொல்வது சரியல்ல. அவ்விதம் சரீரம் இருக்குமானால், பரமாத்மாவிற்கு பரிச்சின்னத்வம் சொல்லநேரிடும். அபரிச்சின்னமான பரமாத்மாவிற்கு பரிச்சின்னத்வம் சொல்லப்படுமானால் அவர் பரமாத்மாவாக இருக்க முடியாது. மாயாகார்யமான இந்த ப்ரபஞ்சமே பரமாத்மாவிற்கு சரீரமாக சொல்லப்படுகிறது. அதனால் இதையன்றி வேறாக விலக்ஷணமான விக்ரஹம் இருப்பதாகச் சொல்ல முடியாது.

பூர்வ:- மனுஷ்யர், பசு, பக்ஷிகள் முதலான சரீரமே பரமாத்ம சரீரம் என்று சொல்லமுடியாது. அதற்காகவே, விலக்ஷண விக்ரஹம் என்று சொல்லப்பட்டது.

ஸித்தா:- ஸர்வப்ரபஞ்சமும் விஷ்ணுவிற்கு சரீரம் என்று சொல்லப்படுவதால், மனுஷ்யாதி சரீரங்களும் பரமாத்மாவிற்கு சரீரம்தான். அதனால் விலக்ஷண சரீரம் (விக்ரஹம்) என்று சொல்லமுடியாது.

பூர்வ:- மனுஷ்யாதி சரீரங்கள், ஈச்வர சரீரமாகவும், ஜீவசரீரமாகவும் இருக்கின்றது. ஆனால் விஷ்ணுவின் சரீரம் ஈச்வர சரீரமாத்ரமாக இருக்கின்றது. அதனால்தான் விலக்ஷண விக்ரஹம் என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- விஷ்ணு சரீரம் என்றால், அது ப்ராணனுடன் கூடியதா, அல்லது ப்ராணன் அற்ற சரீரமா? ப்ராணனுடன் கூடியது என்றால் '*ஜீவத்வம் ப்ராணதாரணாத்*' (जीवत्वं प्राणधारणात्) என்ற வாக்யப்படி சைதன்யம் என்பதே, ப்ராணதாரணத்தைக்கொண்டு ஜீவன் என்று (பெயர்) சொல்லப்படுகிறது.

அதனால் விஷ்ணு சரீரத்திலும் ப்ராணதாரணம் இருக்குமானால், ஜீவன் என்றே சொல்ல வேண்டும். விஷ்ணு சரீரத்தில் ப்ராணதாரணம் இல்லை என்றால், ம்ருத சரீரம் என்று சொல்லநேரிடும். ப்ரஹ்மா, ருத்ரன், விஷ்ணு என்று சொல்லப்படும் மும்மூர்த்திகளில் ப்ரஹ்மா, ருத்ரன் என்ற இருவருக்கும் சரீரத்தில் அஹம் என்ற அபிமானம் இருக்கின்றதென்று எவ்விதம் உன்னால் சொல்லப்படுகிறதோ அதேபோல் விஷ்ணுவிற்கும் தன் சரீரத்தில் அஹம் என்ற அபிமானம் இருக்கின்றதால் அவரையும் ஜீவன் என்றே சொல்லவேண்டும். கார்யோபாதிகன் ஜீவன் என்றும், காரணோபாதிகன் ஈச்வரன் என்றும் சொல்லப்படுவதால், இந்த முறைப்படி விலக்ஷண விக்ரஹம் என்று சொல்லப்படுவதனாலேயே கார்யவர்க்கத்தில் சேர்ந்து விடுகின்றது. கார்யோபாதிகன் என்று ஜீவனைத்தான் சொல்லமுடியுமே அன்றி ஈச்வரனை சொல்லமுடியாது. சரீரங்கள், இந்த்ரியங்கள் கார்யம். மாயை என்பதே காரணம். ஆகவே விஷ்ணு விலக்ஷண விக்ரஹம் என்றால் அவரை ஜீவனென்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஈச்வர சரீரம் மாயாமயம். ஜீவசரீரம் கர்மஜன்யம் என்பதால் ஈச்வரனான விஷ்ணுவை ஜீவன் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- மாயாமயம் ஈச்வர சரீரம் என்றால், அதன் அர்த்தம் என்ன? மாயா ஜன்ய சரீரமா? அல்லது மாயையே சரீரமா? மாயாமயம் என்றால் - விகாரார்த்தத்தில் மயட் சப்தப்ரயோகமா? அல்லது ஸ்வார்த்தே மயட் சப்தார்த்தமா? மாயாஜன்ய சரீரம் என்றால், ஜீவ சரீரமும் மாயா ஜன்ய சரீரம்தான். மாயையே சரீரம் என்றால், அது இஷ்ட்டமே. அது பொருத்தமே. ஏனெனில் மாயையினால்தான் ஈச்வரன் சரீரம் உள்ளவர்போல் தோன்றுகிறார் (ப்ரகாசிக்கின்றார்) என்று சொல்லப்படுகிறது. அதனால் உண்மையில் ஈச்வரனுக்கு சரீரம் இல்லை. அதனால் ஈச்வர விக்ரஹம் விலக்ஷணம் என்று சொல்வதில் அர்த்தமே கிடையாது. அவ்விதம் ஈச்வரனுக்கு விக்ரஹம் இருப்பதாக ஒப்புக்கொண்டாலும்கூட, அந்த விக்ரஹம் ஏகரூபம் '*ஸதைகரூப:*' (सदैकरूप:) என்று சொல்வது முற்றிலும் பொருத்தமற்றது. ஏனெனில் மத்ஸ்யம், கூர்மம், வராகம், நரஸிம்ஹம், என்று அனேகவித விக்ரஹங்கள் இருக்கின்றதால் ஏகரூபம் என்று சொல்வது எவ்விதம் பொருந்தும்?

பூர்வ:- மத்ஸ்யம் முதலான அவதார சரீரத்தை விஷ்ணு சரீரம் என்று சொல்லவில்லை. விஷ்ணுவிற்கே ஸ்வாபாவிகமான ரூபத்தையே ஏகரூபம் என்று சொல்லப்பட்டது.

ஸித்தா:- விஷ்ணு சரீரம் என்றால் அதுவும் அநித்யம் என்பதால் ஏகரூபம் என்று சொல்ல முடியாது. விஷ்ணு சரீரமாக இருப்பதால் அது நித்யம்தான் என்று சொல்லப்படுமானால் பாகவதத்தில் சொல்லப்படும்

'காலேன பஞ்சத்வமிதேஷு க்ருத்ஸ்னசோ லோகேஷு பாலேஷு ச ஸர்வஹேதுஷு
தமஸ்ததாஸீத்கஹனம் கபீரம் யஸ்தஸ்ய பாரே அபிவிராஜதே விபு:'

என்கிற இந்த ச்லோகத்திற்கு விருத்தமாகும்.

कालेन पञ्चत्वमितेषु कृत्स्नशो लोकेषु पालेषु च सर्वहेतुषु ।
तमस्तदासीद्गहनं गभीरं यस्तस्य पारेऽभिविराजते विभुः

இதன் அர்த்தம் என்னவென்றால், ஒரு ஸமயத்தில் லோகங்கள் எல்லாம் நாசம் அடைகின்றது, லோக பாலகர்களும் நாசமடைகின்றார்கள். அந்த காலத்தில் அஞ்ஞானம் (மாயை) என்ற ஒன்றே எஞ்சி இருக்கின்றது. அதன் ஸ்வரூபம் மட்டும் இருக்கின்றது என்று சொல்லப்படுவதால், உன்னால் சொல்லப்படும் விஷயங்களுக்கு ப்ரமாணமே கிடையாது.

பூர்வ:- ச்லோகத்தில் 'விபு:' என்று சொல்லப்படுவதால் விஷ்ணு என்றுதானே அர்த்தம் சொல்லவேண்டும்.

ஸித்தா:- விக்ரஹம் என்றால் பௌதிகமாகத்தான் இருக்கவேண்டும். தமஸ:பரம் என்று சொல்லப்படுவதால் தமஸுக்கும் அதீதமாக ப்ரகாசிப்பவர் (விராஜமானம்) என்று சொல்லப் படுவதால் பௌதிகமான விக்ரஹம் உடையவர் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- அபௌதிக சரீரம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ரூபாதிகளுடைய சரீரம் என்றால் அவயவங்கள் உடையது என்றே சொல்ல வேண்டும். அதனால் ரூபமுள்ள சரீரம் அபௌதிகம் என்று சொல்லமுடியாது. மாயையே சரீரம் என்றால் ரூபாதிகள் இல்லை என்று சொல்லலாம்.

பூர்வ:- ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் என்று விஷ்ணுவை தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- விஷ்ணு நீலவர்ணம் என்று உன் ஸித்தாந்தத்தில் சொல்லப்படுகிறது. அதனால் விஷ்ணு ஆதித்ய வர்ணம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ஆதித்யவர்ணம் என்றால் சிகப்பு நிறம் என்றே சொல்லவேண்டும். வெள்ளை நிறம் அல்ல.

ஸித்தா:- ரக்த வர்ணம், தேஜஸ் என்ற பூதத்தை சேர்ந்தது. அதனால் பௌதிகம் என்றே சொல்லவேண்டும். (தேஜஸின் கார்யம் ரக்தவர்ணம்.)

பூர்வ:- அக்னி முதலானவைகளுக்கு தேஜஸை கொடுக்கின்றவர் என்பதால் தைஜஸம் என்று சொல்வது சரியல்ல. அதனால், அக்னி முதலானவைகளில் உள்ள தேஜஸ் பௌதிகம் என்று சொல்லலாமே அன்றி, தேஜஸை கொடுக்கின்ற ஈச்வர சரீரம் பௌதிகம் என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- அக்னியாதிகளுக்கு, தேஜஸைக் கொடுக்க வேண்டுமென்றால், ஈச்வரனிடம் தேஜஸ் இருக்கவேண்டுமே? தேஜோரூபமான ரக்தரூபம் அவரிடம் இருக்குமானால் அது பௌதிகமாகத்தான் இருக்கவேண்டும். அபௌதிகமாக இருக்கமுடியாது. பூதத்தின் கார்யமான (பௌதிகமான) ரக்தவர்ணம் அவரிடம் இல்லை என்றாலும், தேஜோ மயமான பூதரூபமாக இருக்கின்றார் என்றுதானே சொல்லவேண்டும். பௌதிகம் என்று சொல்லாவிட்டாலும் பூதரூபம் என்று சொல்லநேரிடும். மேலும், இந்த ச்லோகத்தில் தமஸ்மாத்ரமாக எஞ்சி இருப்பதாகச்சொல்லப்படுகிறது. விஷ்ணு என்பவர் தேஜோ பூதமாக இருப்பாராகில் தமஸ் இருக்கமுடியுமா? தமஸ் மட்டுமே எஞ்சி இருக்கின்றது என்பதால் தேஜோ பூதங்களும் நாசம் அடைகின்றது என்றே சொல்லவேண்டும். விஷ்ணு தேஜோமயமாக இருந்தால், 'தமஸ:பாரே விராஜமானத்வம்' என்று தெரிவிக்க முடியாது. தமஸ் இருந்தால் தேஜஸ் இருக்கமுடியாது, தேஜஸ் இருந்தால் தமஸ் இருக்கமுடியாது. ஆகவே பரமாத்மா, ஞானஸ்வரூபமே அன்றி தேஜஸ் ஸ்வரூபமல்ல. ப்ரளயகாலத்தில், ஸூக்ஷ்மமான ஆகாசம் முதலான பூதங்களே இல்லை என்றால், ரூபவத்தான விஷ்ணு விக்ரஹம் இருக்கின்றது என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதுமட்டுமல்ல, விஷ்ணுவின் ரூபம் ஏகம் என்று சொல்வதும் பொருந்தாது. ஏனெனில், விஷ்ணுவின் நாபியிலிருந்து ஒரு ஸமயம் தாமரை உண்டாகிறது, ஒருஸமயம் ப்ரஹ்மா உண்டாகிறார், ஒருஸமயம் ஜகத் உண்டாகிறது, என்று சொல்லப்படுவதால் விஷ்ணு விக்ரஹம் ஏகரூபம் என்று சொல்லமுடியாது. அதனால் பரமாத்ம ஸ்வரூபம்தான் ஏகரூபமே அன்றி, விஷ்ணு என்றும், விக்ரஹம் என்றும் சொல்லப்படுவதெல்லாம் ஏகரூபம் என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- 'விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே' (विष्णवे सर्वजिष्णवे) என்ற வாக்யம், ராஜாவையும், ஆகாசத்தையும், வேறுபடுத்தி (வ்யாவ்ருத்தி செய்து) தெரிவிப்பதன் மூலம், பரமாத்மாவை தெரிவிக்கின்றது. அதாவது 'விஷ்ணவே' என்பது ஸர்வ வ்யாபகம் என்று தெரிவிக்கின்றதால், ஆகாசமும் ஸர்வ வ்யாபகம் என்பதால் ஜடமான ஆகாசத்திலிருந்து வேறுபடுத்தி 'ஆகாசம் அல்ல' என்பதை தெரிவிப்பதற்காக 'ஸர்வஜிஷ்ணவே' என்ற பதம் சேர்க்கப்பட்டிருக்கிறது. 'ஸர்வஜிஷ்ணவே' என்றால் ஸர்வத்தையும் ஜயிப்பவர் என்று அர்த்தம். ஸர்வத்தையும் ஜயிக்கக்கூடியவர் ராஜா என்ற அர்த்தம் கிடைக்கின்றதால், ராஜாவை வ்யாவ்ருத்தி செய்து ஸர்வத்தையும் ஜயிப்பவர், வ்யாபகர் என்று தெரிவிப்பதற்காகவே, 'விஷ்ணவே' என்று பதம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, 'விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே' என்ற வாக்யம், 'ராஜா, ஆகாசம், என்ற இரண்டிற்கும் வேறுபட்டவர் பரமாத்மா' என்றே தெரிவிக்கின்றது.

ஸித்தா:- 'ராஜா' என்றால் ந்ருப: என்று அர்த்தம். ந்ரூன் பாதி இதி ந்ருப: என்ற அந்த தேசத்தில் உள்ள ப்ரஜைகளை காப்பாற்றுபவனை ந்ருப: என்று பெயர் சொல்லப்படுமானால், ஸர்வஜீவரக்ஷகனான ஈச்வரனை ந்ருபன் என்று சொல்லப்படுவதால் என்ன ஹானி ஏற்படும்? அதனால் ராஜாவினிடமிருந்து ஈச்வரனுக்கு வ்யாவ்ருத்தி சொல்வது பொருந்தாது. ந்ருபன் என்ற தன்மை ஈச்வரனிடம் இல்லை என்றால்தான், ந்ருபனிடமிருந்து, ஈச்வரனுக்கு வ்யாவ்ருத்தி சொல்லலாம். அதனால் 'விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே' என்ற வாக்யம் வ்யாவ்ருத்தியை தெரிவிக்கின்றது என்று அர்த்தம் செய்வது சரியல்ல. மேலும், இந்த ச்லோகத்தில் 'அவிகாராய சுத்தாய, நித்யாய பரமாத்மனே, ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே என்று தெரிவிக்கின்றது. இதில் 'நித்யாய' என்ற பதத்தினாலேயே, ஆகாச வ்யாவ்ருத்தி ஏற்படுகின்றதால், மறுபடி 'ஸர்வஜிஷ்ணவே' என்பதால் ஆகாச வ்யாவ்ருத்தி செய்யப்படுகிறது என்று சொல்லவேண்டிய அவச்யம் என்ன? அதனால் உன்னால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல.

இந்த ச்லோகத்திலுள்ள ஒவ்வொரு பதமும், பரமாத்மாவையே தெரிவிக்கின்றது. முதலில் 'அவிகாராய' என்ற பதம் ஆத்மா ஒன்றே அவிக்ரியன், ஆத்மாவை அன்றி அதற்கு அன்யமான ஸர்வமும் விக்ரியை உள்ளது என்றே ஸர்வ வஸ்துக்களிலிருந்தும் வ்யாவ்ருத்தி செய்து ஆத்மா ஒன்றே அவிகாரி என்று தெரிவிக்கின்றது. ப்ரக்ருதி என்பது மஹத்தாக மாறுகின்றது என்றும் மஹத் என்பதே அஹங்காரமாக மாறுகின்றது என்றும், தெரிவித்து அதிலிருந்தே ஸர்வமும் பரிணாமத்தை அடைகின்றதால், ப்ரக்ருதி முதல் ஸர்வமும் விகாரி என்றும் பரமாத்ம தத்வம் ஒன்றே அவிகாரி என்று அவிகாராய என்ற பதம் தெரிவிக்கின்றது.

பூர்வ:- பரமாத்மாவைப்போல் ஜீவனும் அவிகாரிதானே? பரமாத்மாவைப் போல் ஜீவனையும் வ்யாவ்ருத்தி செய்யவில்லையே?

ஸித்தா:- பரமாத்மாவும் ஜீவனும் ஒன்றே என்பதால் ஜீவனை அவிகாரி என்று சொல்வது எங்களுக்கும் இஷ்டடமே அன்றி அனிஷ்ட்டமல்ல. ஆகவே, பரமாத்மாவை குறிப்பிடும் சப்தம் ஜீவனையும் குறிக்கின்றதால், ஜீவனும் பரமாத்மாவும் ஒன்றே என்பதால் ஜீவனை வ்யாவ்ருத்தி செய்து தெரிவிக்கவில்லை.

மேலும், 'சுத்தாய' என்ற பதம் ஆத்மா ஒன்றே சுத்தம் என்று தெரிவிக்கின்றது. ஏனெனில் ஆத்மா ஒன்றே குணங்கள் முதலான எவ்வித தோஷங்களும் அற்ற ஸ்வரூபம். மற்றுமுள்ள ஸர்வ அனாத்ம வஸ்துக்கள் அனைத்தும் குணமோ, தோஷமோ இல்லாமல் இருக்கமுடியாது. அதனால் குணங்களோ, தோஷங்களோ உள்ள ஸர்வ அனாத்ம வஸ்துக்களிலிருந்தும் ஆத்மாவை வ்யாவ்ருத்தி செய்து (வேறுபடுத்தி) தெரிவிப்பதற்காகவே, 'சுத்தாய' என்ற பதம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதேபோல் 'நித்யாய' என்ற பதமும் ஆத்மா ஒன்றே நித்யம் என்றும் ஆத்மாவை அன்றி வேறான ஸர்வ வஸ்துக்களும் அநித்யம் மித்யை என்றே 'அதோன்யதார்த்தம்' என்ற கருத்தை தெரிவிக்கின்றது. அதனால் 'நித்யாய' என்ற பதம் அநித்ய வஸ்துக்களிலிருந்து வேறுபடுத்தி ஆத்ம ஸ்வரூபத்தை போதிக்கின்றது.

அதேபோல் 'பரம்' என்ற பதம் ஆத்மா ஒன்றே பரம் என்றும், மற்ற எல்லாமே ஆத்ம ஸ்வரூபத்தில் கல்பிதம் (ஆரோபிதம்) என்பதால் அவைகள் அபரமார்த்தம் என்றே (அபரம் என்றே) தெரிவிக்கின்றது. அனாத்மாவே ஆத்மா என்று அனாத்மாவில்ஆத்மபுத்தி ப்ராந்தியினால் ஏற்படுவதால் 'பரம்' என்ற பதம் அபரமான அனாத்மாவை வ்யாவ்ருத்தி செய்து ஆத்மாவே பரம் என்று தெரிவிக்கின்றது..

'ஸதைகரூப ரூபாய' என்ற பதம் ஸச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மா ஒன்றே ஏகரூபம், அனாத்மாவான ஸர்வமும் அனேகரூபம் என்று தெரிவிக்கின்றது. இவ்விதம் அனாத்ம வ்யாவ்ருத்தியினால் ஆத்மா ஏகரூபம் என்று போதிக்கின்றது.

இதேபோல் 'விஷ்ணவே, ஸர்வஜிஷ்ணவே என்றவாக்யத்தில் உள்ள விஷ்ணவே என்ற பதம், ஆத்மா ஒன்றே பரிபூரணம், ஸர்வவ்யாபி என்று பரிச்சின்னமான ஸர்வ அனாத்ம வஸ்துக்களிலிருந்தும் வ்யாவ்ருத்தி செய்து ஆத்ம ஸ்வரூபத்தை போதிக்கின்றது. இதேபோல், ஸர்வஜிஷ்ணவே என்ற பதம், ஆத்மா ஒன்றே நித்ய நிரவயவ ஸ்வரூபத்வாத், ஸ்வதந்த்ரம் என்று, பரதந்த்ரமான ஸர்வ அனாத்ம வஸ்துக்களிலிருந்து வ்யாவ்ருத்தி செய்து ஆத்மஸ்வரூபத்தை போதிக்கின்றது. இந்தவிதம், விகார அபாவ, அசுத்த அபாவ, அநித்யத்வ அபாவ, அபரமார்த்தத்வ அபாவ அனேக ரூபத்வ அபாவ, அவிஷ்ணுத்வ அபாவ அஸர்வஜிஷ்ணுத்வ அபாவ என்று, நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்பதே லக்ஷிதம் என்று இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

100

ब्रह्मरुद्रविष्णुपदानामर्थविचारः।

ப்ரஹ்மருத்ரவிஷ்ணுபதானாம் அர்த்தவிசார:
ப்ரஹ்மா, ருத்ரன், விஷ்ணு என்ற பதங்களின் அர்த்தம் என்ன என்று விசாரிக்கப்படுகிறது

பூர்வ:- ப்ரஹ்மா, ருத்ரன், விஷ்ணு என்ற மூன்று பதங்களும், மும்மூர்த்திகளை குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் விஷ்ணு என்ற பதம் சங்கு சக்ரதாரியாக இருக்கின்ற அவதார விக்ரஹம் என்ற சரீரத்தையே தெரிவிக்கின்றது. 'ஹரி' என்ற சப்தம் விஷ்ணு ஸ்வரூபமான பகவானையே தாத்பர்யேண தெரிவிக்கின்றது.

ஹிரண்யகர்ப்பர் என்பவரையே ப்ரஹ்மா என்ற சப்தத்தினால் சொல்லப்படுகிறது. இதேபோல் சங்கரன் என்ற ஈச்வரனை ருத்ரன் என்ற சப்தத்தினால் குறிப்பிடப்படுகிறது. இவ்விதம் குறிப்பிடப்படும் ஹிரண்யகர்ப்பர், சங்கரன் என்ற இரண்டுபேர்களும் ஜீவன், என்பதால், இந்த இரண்டு சப்தங்களும், ஜீவத்வாரா அதில் அந்தர்யாமியாக இருக்கின்ற பகவானை (பரமாத்மாவை) தெரிவிக்கின்றது. விஷ்ணு சப்தம் (ஹரிசப்தம்) சங்கசக்ர கதாதாரியான விஷ்ணு விக்ரஹத்வாரா அதே பரமாத்மாவை தெரிவிக்கின்றது.

ஆகவே, இந்தவிதம் ஹிரண்யகர்ப்பர், சங்கரர் என்ற சப்தம் இரண்டும் ஜீவனை த்வாரமாகக்கொண்டு பரமாத்மாவை தெரிவிக்கின்றதே அன்றி நேரிடையாக தெரிவிக்கவில்லை. ஆனால் விஷ்ணு, ஹரி முதலான சப்தங்கள் விஷ்ணுவின் அவதார விக்ரஹத்தையே போதிக்கின்றதால் நேரிடையாகவே பரமாத்மஸ்வரூபத்தை போதிக்கின்றது. (அதனால் ப்ரஹ்மா, ருத்ரனைப்போல் ஜீவத்வாரா பரமாத்மாவை, விஷ்ணு சப்தம் தெரிவிக்கவில்லை).

ஸித்தா:- இவ்விதம் அர்த்தம் செய்வது சரியல்ல. 'விஷ்ணு' என்ற நாமாவினால், சரீரமான விக்ரஹத்தை குறிப்பிடுவதாகச் சொல்லப்படுமானால், லோகத்தில், 'டித்தன்' என்றும் டபித்தன் என்று இதுபோல் எவ்வளவோ நாமாக்களினால் இந்த சரீரமே குறிப்பிடப்படுகிறது. அதுபோல் 'விஷ்ணு' என்ற சப்தம் ஒரு சரீரத்தின் நாமா என்று சொல்லவேண்டுமே அன்றி 'வ்யாபகத்வாத் விஷ்ணு' என்று வ்யுத்பத்தியினால் சொல்லப்படும் அர்த்தம் சரீரத்திற்கு பொருந்தாது. ஏனெனில் வைகுண்டம் என்ற ஒரு லோகத்தில் மட்டுமே விஷ்ணுவின் சரீரம் (விக்ரஹம்) இருக்கின்றது. அதனால் விஷ்ணு சப்தார்த்தமான 'வ்யாபகத்வம்' என்ற அர்த்தம் வைகுண்டலோகாதிபதியான விக்ரஹமுடைய விஷ்ணுவிற்கு ஸம்பவிக்கமுடியாது. அதற்காக, 'ஹரி' என்ற சப்தம், எவ்விதம் விக்ரஹ வாச்யார்த்தமாக இல்லையோ அதுபோல் விஷ்ணு சப்தமும் வாச்யர்த்தம் இல்லை என்று சொல்லப்படுமானால், ஹரி சப்தமும், விஷ்ணு சப்தமும் பகவானை (பரமாத்மாவை) தெரிவிக்கின்றதே அன்றி பகவத் சரீரத்தை

தெரிவிக்கின்றது என்று சொல்லமுடியாது. அதாவது 'ஹரி' என்ற சப்தம் ஹரதீதி ஹரி: என்று, அஞ்ஞானத்தை நாசம் செய்பவர் என்றும், ஸர்வ பாபங்களையும் நாசம் செய்கின்றவர் என்றும் காரணபெயராக பகவானை தெரிவிப்பதாகச்சொல்லவேண்டும். அதனால் சங்கு சக்ரதாரியான சரீரத்தை ஹரி சப்தம் தெரிவிக்கவில்லை என்றே சொல்லவேண்டும்.

இவ்விதம் ஒத்துக்கொள்ளப்படவில்லை என்றால் விஷ்ணு சப்தம் எவ்விதம் விசேஷரூபம் உடைய விக்ரஹத்தை (சரீரத்தை) தெரிவிக்கின்றதோ அதேபோல் சதுர்முகப்ரஹ்மா என்பவரும், விசேஷரூபம் உடைய சதுர்முக விக்ரஹவாசி சப்தத்தினால் குறிப்பிடுவதாகவும், ருத்ரனை த்ரிலோசனன் என்று (முக்கண்ணன்) விசேஷரூபம் உடைய விக்ரஹவாசி சப்தத்தினால் சொல்லநேரிடும். ஆகையால் விஷ்ணு சப்த வாச்யார்த்தம் 'பரமாத்மா' என்று சொல்லப்படுமானால் ப்ரஹ்மா, ருத்ரன் என்ற சப்த வாச்யார்த்தமும் அதே பரமாத்மா என்றே சொல்லவேண்டும். அவ்விதமின்றி ப்ரஹ்மா ருத்ரன் சப்தம் ஜீவனை தெரிவிக்கின்றது என்றால், அதேபோல் விஷ்ணு ஜீவன் என்று சொல்லவேண்டும்.

மேலும் அசரீரமாக இருந்தால்தான் பரமாத்மா என்று சொல்லமுடியும். ஸசரீரன் என்றால், 'விஷ்ணு'வானாலும் ஜீவன் என்றே சொல்லவேண்டும். ஸசரீரனாக (சரீரத்துடன் கூடினவனாக) இருந்தாலும் விஷ்ணு, 'பரமாத்மாவே' என்று சொல்லப்படுமானால் ப்ரஹ்மா, ருத்ரன் என்ற இரண்டு பேர்களும் பரமாத்மா என்றே சொல்லவேண்டும். இந்தவிதம் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்பவர்களில் காரணம் இன்றி வித்யாஸம் சொல்லப்படுவது பொருந்தாது. அதனால் மும்மூர்த்திகளையும் ஸமமாகவே சொல்லவேண்டும். இதனால்தான் '*ப்ரஹ்மவிஷ்ணுசிவா ப்ரஹ்மன் ப்ரதானா ப்ரஹ்மசக்தய:*' (ब्रह्मविष्णुशिवा ब्रह्मन् प्रधाना ब्रह्मशक्तयः) என்று தெரிவிக்கின்றது. அதாவது மும்மூர்த்திகளும் ப்ரஹ்மத்தின் மூன்று சக்திகள் என்றே தெரிவிக்கின்றது. ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலான மூன்று விதமான கார்யங்களுக்காக மூன்று வித சக்திகள் தேவைப்படுகின்றது. அதனால் மூன்று சக்திகளில் ஒன்று பரமாத்மா என்றும், மற்ற இரண்டும் ஜீவன் என்று சொல்வது சரியல்ல. மூன்று சக்திகளும் ஈச்வர சக்தி என்றே சொல்லவேண்டும். மாயா அவச்சின்ன சக்தி என்பது ஏகம். இதையே அவ்யாக்ருதம், அவ்யக்தம் என்று சொல்லப்படுகிறது. இது ஏகரூபம். அதன்பிறகு, மாயையில் உள்ள ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற மூன்று குணங்களினால், ரஜோகுண சக்தியான ச்ருஷ்டிக்கின்ற சக்தியை ச்ருஷ்டிகர்த்தாவான ப்ரஹ்மா என்றும், ஸத்வ குணசக்தியான ரக்ஷிக்கின்ற சக்தியை ரக்ஷணகர்த்தாவான விஷ்ணுவென்றும், தமோ குணசக்தியான ஸம்ஹரிக்கின்ற சக்தியை ஸம்ஹாரகர்த்தாவான ருத்ரன் என்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதம் தெரிவிக்கப்பட்ட ப்ரஹ்மத்தின் சக்திகள் மூன்றையும் உபாஸனம் செய்வதற்காக, விக்ரஹம் (சரீரம்) கல்பிக்கப்படுகிறது. இவ்விதம் கல்பிதமான சரீரத்தை பரமார்த்தம் என்று சொல்லப்படுமானால், மும்மூர்த்திகளின் சரீரம், பரமாத்மாவின் சரீரம் என்று சொல்லநேரிடும். இந்த மூன்றில் ஒன்றை மட்டும் பரமாத்ம சரீரம் என்றும், மற்ற இரண்டும் ஜீவாத்ம சரீரம் என்று சொல்வது பொருந்தாது. ஆகவே கல்பிதம் என்றால் மூன்றும் கல்பிதம் என்றே சொல்லவேண்டும். அவ்விதமில்லை என்றால், அகல்பிதம் என்று பரமார்த்தமாகவே

மூன்று மூர்த்திகளும் முன்னால் தெரிவித்தபடி ப்ரஹ்மசக்தியின் விக்ரஹம் என்றே சொல்ல வேண்டும். அதாவது ச்ருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரம் என்ற மூன்று ப்ரஹ்மசக்திகள், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்று விக்ரஹங்களை எடுத்துக்கொண்டு மூன்றுவிதமான தொழில்களை செய்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். அல்லது ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற சரீரங்களைக்கொண்ட மூன்று ஜீவர்களும், ப்ரஹ்மத்தின் சக்திகள் என்றே சொல்லவேண்டும். ஜீவன் என்பவனும் ஈச்வரனின் (ப்ரஹ்மத்தின்) சைதன்ய சக்தியேதான். ஸர்வ ஜீவர்களும் சைதன்ய சக்தியே என்றாலும் ப்ரதானமாக இருக்கின்ற மும்மூர்த்திகளை ப்ரஹ்ம சக்திகள் என்று இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

அதனால் விஷ்ணுதான் ஈச்வரன் என்றும் அவரே உத்க்ருஷ்ட்டர் என்றும், ப்ரஹ்மா, ருத்ரன் இரண்டு பேர்களும் ஜீவர்கள் என்று ஸ்வப்னத்தில்கூட ஸம்பவிக்கமுடியாது.

பூர்வ:- விஷ்ணுவின் புத்ரன் ப்ரஹ்மா, ப்ரஹ்மாவின் புத்ரன் சிவன். அதனால் பித்ரு, புத்ராதி பாவேன விஷ்ணு உத்க்ருஷ்ட்டர் (மேலானவர்) என்று தானே சொல்லவேண்டும்?

ஸித்தா:- மும்மூர்த்திகளும் அஜன்யம். பிறப்பற்றவர்கள் - விஷ்ணு புராணத்தில் இவ்விதம் சொல்லப்படுவதுபோலவே, சிவபுராணத்தில், சிவனுடைய புத்ரன் ப்ரஹ்மா, ப்ரஹ்மாவின் புத்ரன் விஷ்ணு என்றே சொல்லப்படுகிறது. அதேபோல் ப்ரஹ்மாவை ஸ்துதி செய்கின்ற ப்ரஹ்ம புராணத்திலும் சொல்லப்படுகின்றது. அதனால் ஒவ்வொரு புராணங்களும் அந்தந்த தேவதாத்ம விக்ரஹங்களை ஸ்துதி செய்து தெரிவிக்கின்றதால் அவை ப்ரமாணமாக ஆகாது. ஆகவே இவ்விதம் தெரிவிக்கின்ற வாக்யங்கள் எல்லாம் அர்த்தவாத வாக்யங்களே அன்றி தத்வ நிர்ணய வாக்யங்கள் அல்ல. அது மட்டுமல்ல ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மூவருடைய சரீரங்களைக்காட்டிலும் பிதாவின் சரீரம் உத்க்ருஷ்ட்டம் என்றோ அல்லது நிக்ருஷ்ட்டம் என்றோ சொல்வதற்கு என்ன வித்யாஸம் சொல்லமுடியும்? ஸர்வ சரீரங்களிலும் சைதன்ய ஸ்வரூபம் ஏகம் (ஒன்றே) என்பதால் உத்க்ருஷ்ட்டம் நிக்ருஷ்ட்டம் என்ற தாரதம்யத்திற்கே இடமில்லை. அதனால் இது பற்றி மேலும் விசாரிக்கவேண்டிய தேவை இல்லை.

'ஞானஸ்வரூபம் அகிலம்' என்ற ச்லோகம் க்ஷேத்ரஞ்ஞாத்மனாக இருக்கின்ற பரமாத்ம ஸ்வரூபத்தையே 'ஞானஸ்வரூபம் அகிலம்' என்று தெரிவிக்கின்றது என்று சொல்வது பொருந்தாது. உன் ஸித்தாந்தத்தில் க்ஷேத்ரஞ்ஞன் வேறு பரமாத்மா வேறு என்று சொல்லப்படுகின்றதால், க்ஷேத்ரஞ்ஞனாக பரமாத்மாவே இருக்கின்றார் என்று உன்னால் சொல்லமுடியாது. ஏனெனில் ம்ருத்கடம் என்ற வஸ்துவை, ம்ருத் என்பதே கடாத்மனா ஸ்திதி பெற்றிருக்கின்றது என்று சொல்லலாம். ஆனால் அதுபோல் நூல், கடாத்மனா இருக்கின்றது என்று சொல்லமுடியாது. இவ்விதம் நூலுக்கும் கடத்திற்கும் எவ்விதம் பேதம் இருக்கின்றதோ அதுபோல் பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் பேதம் இருக்கின்றதென்று தெரிவிக்கின்ற உன் பக்ஷத்தில் க்ஷேத்ரஞ்ஞாத்மனா பரமாத்மா இருக்கின்றார் என்று சொல்வது மிக அபத்தம்.

101

शास्त्रस्य निर्विशेषब्रह्मपरत्वे 'निर्गुणस्याप्रमेयस्य' इत्यादिश्लोकोक्तप्रश्नप्रतिवचनानुपपत्तिशङ्का तन्निरासश्च ।

சாஸ்த்ரஸ்ய நிர்விசேஷ ப்ரஹ்ம பரத்வே 'நிர்குணஸ்ய அப்ரமேயஸ்ய' என்கிற ச்லோகங்களில் காணப்படும் ப்ரச்னம், ப்ரதிவசனம் என்பவைகள் பொருந்தவில்லையே என்கிற சங்கா நிராஸ:

பூர்வ:- ப்ராந்தி ஸித்தமான இந்த ஜகத்திற்கு அதிஷ்ட்டானமாக, நிர்விசேஷ ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே சாஸ்திரம் போதிக்கின்றது என்று சொல்வது சரியல்ல. ஏனெனில், இவ்விதம் ஆசார்யன் உபதேசிக்கின்ற போது சிஷ்யனுக்கு ஸந்தேஹம் ஏற்படுகிறது என்றும், அதனால் சிஷ்யன் ப்ரச்னம் செய்வதாக விஷ்ணு புராணம் 1.3.1 ச்லோகம் தெரிவிக்கின்றது.

நிர்குணஸ்ய அப்ரமேயஸ்ய சுத்தஸ்யாபி அமலாத்மன:
கதம் ஸர்காதி கர்த்ருத்வம் ப்ரஹ்மண: அப்யுபகம்யதே

निर्गुणस्याप्रमेयस्य शुद्धस्याप्यमलात्मनः ।
कथं सर्गादिकर्तृत्वं ब्रह्मणोऽभ्युपगम्यते ॥

அதாவது ப்ரஹ்மம் நிர்குணமாகவும், அப்ரமேயமாகவும், சுத்தமாகவும், தோஷமற்றதாகவும், இருக்குமானால், இப்பேர்பட்ட ப்ரஹ்மத்திற்கு ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலான கர்த்ருத்வம் எவ்விதம் இருக்க முடியும்? என்று ப்ரச்னம் செய்கின்றான் என்றும் அதற்கு பதில் தெரிவிக்கின்ற ச்லோகத்தில், ப்ரஹ்மத்தினிடம் அனேக விசித்ர சக்திகள் இருக்கின்றன். இந்த சக்திகளின் விசேஷ தன்மைகளை சிந்திப்பதற்கே முடியாது. இந்த சக்தி மூலமாகவே பகவானுக்கு ச்ருஷ்டி ஸ்திதி முதலான கர்த்ருத்வங்கள் ஏற்படுகின்றது. ஹே! தபஸ்ரேஷ்ட்டனே அக்னிக்கு எவ்விதம் ப்ரகாச சக்தி, தஹிக்கின்ற சக்தி, என்பது போன்ற அனேக சக்திகள் இருக்கின்றதோ, அதுபோல் ப்ரஹ்மத்தினிடம் உள்ள சக்திகள் அனேகமாகவும் அசிந்த்யமாகவும் இருக்கின்றது.

(விஷ்ணு புராணம் 1.3.2)

சக்தய: ஸர்வபாவானாம் அசிந்த்யஞானகோசரா:
யதோதோ ப்ரஹ்மணஸ்தாஸ்து ஸர்காத்யா பாவசக்தய:
பவந்தி தபதாம் ச்ரேஷ்ட பாவகஸ்ய யதோஷ்ணதா

शक्तयस्सर्वभावानामचिन्त्यज्ञानगोचराः ।
यतोतो ब्रह्मणस्तास्तु सर्गाद्या भावशक्तयः ॥
भवन्ति तपतां श्रेष्ठ पावकस्य यथोष्णता ॥

ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றால் அதில் இவ்வித சக்திகள் இருப்பதாக எவ்விதம் சொல்ல முடியும் என்று முதல் ச்லோகத்தில் செய்யப்பட்ட ப்ரச்னத்திற்கு பதில் தெரிவிக்கின்ற அடுத்த ச்லோகத்தில் ப்ரஹ்மம் ஸவிசேஷம் என்றே தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இவ்விதம் ப்ரச்ன, உத்தர ரூபமாக தெரிவிக்கின்ற இரண்டு ச்லோகங்களும் நிர்விசேஷ ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே தெரிவிக்கின்றது. ப்ராந்தி ஸித்தமான இந்த ஜகத்திற்கு, அதிஷ்ட்டானமான ப்ரஹ்மம், 'நிர்விசேஷம்' என்றே சாஸ்திரம் போதிக்கின்றது என்று, இந்த ச்லோகங்களில் கேள்வி பதில் ரூபமாக சொல்லப்பட்டிருக்கின்றது. முதலில் கேள்வியின் (ப்ரச்னத்தின்) ஸாராம்சம் என்னவென்று விசாரிக்கலாம்.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற செயல்கள் எல்லாமே, ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற குணங்களையுடைய வஸ்துவிற்கே ஸம்பவிக்க முடியும். ப்ரஹ்மம் நிர்குணம், நிர்விசேஷம் என்றால், ஸ்ருஷ்டி முதலான கர்த்ருத்வம் எவ்விதம் ஏற்பட முடியும்? மேலும் ப்ரஹ்மம் எந்த ப்ரமாணங்களினாலும் அறியப்படும் வஸ்து அல்ல என்று அப்ரமேயம் என்று சொல்லப்படுகிறது. ப்ரமாணங்களினால் அறியக்கூடியதாக இருப்பது எதுவோ அதில்தானே கர்த்ருத்வாதிகள் இருக்க முடியும்? அதுமட்டுமல்ல. ப்ரஹ்மம் அவிகாரி என்றும் சுத்தம் என்றும் நிர்மலம் என்றும் சொல்லப்படுமானால், விகாரத்தை அடையக்கூடிய ஸ்ரஷ்ட்ருத்வம் முதலான கர்த்ருத்வம் எவ்விதம் ஸம்பவிக்க முடியும்? இவ்வித கர்த்ருத்வாதிகள் இருக்குமானால் நிர்மலம் என்றோ சுத்தம் என்றோ எவ்விதம் சொல்ல முடியும்? என்று சிஷ்யனுக்கு ஸந்தேஹம் ஏற்படுவதால் ப்ரச்னம் செய்கின்றான் என்றே சொல்ல வேண்டும்.

பூர்வ:- ப்ரஹ்மம் நிர்குணம் நிர்விசேஷம் என்று தெரிவிப்பதனாலேயே ஸ்ருஷ்டியாதிகள் ஸம்பவிக்க முடியாது என்று அறியப்படுகிறதே? அதனால் நிர்குணம் என்று சொன்னாலே போறுமானது. அதன் பிறகு அப்ரமேயம், அவிகாரி சுத்தம் என்றெல்லாம் மேன்மேலும் தெரிவிக்கின்ற வேண்டிய அவச்யம் என்ன? அந்த பதங்களெல்லாம் வ்யர்த்தம் தானே?

ஸித்தா:- 'ப்ரஹ்மம் நிர்குணம்' என்ற காரணத்தினாலேயே, எந்த விதமான கர்த்ருத்வமும் ஸம்பவிக்க முடியாது என்றே சொல்லலாம். ஆனால் நிர்குணம் மட்டுமன்றி, அப்ரமேயம், அவிகாரி, சுத்தம் என்று மேன்மேலும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் தன்மைகளை தெரிவிக்கின்ற போது, எந்த விதமாகவும், கர்த்ருத்வம் முதலான எதுவுமே ஸம்பவிக்க முடியாது என்பதை த்ருடமாக அறிவதற்காகவே தெரிவிக்கின்றது.

அதாவது 'ப்ரஹ்மம் நிர்குணம்' என்று சொல்லப்படுவதற்கு என்ன காரணம் (என்ன ப்ரமாணம்) என்றால், ஸகுணமாக இருந்தால் விசேஷத்துடன் இருப்பதால், இன்ன குணம் உள்ளது ப்ரஹ்மம் என்று அறியப்பட முடியும். ஆனால் அப்ரமேயமாக இருப்பதால், 'நிர்குணம்' என்று தெரிவிக்கின்றது.

அதற்கு மேல் 'சுத்தம்' என்று தெரிவிப்பதால் எந்த தர்மங்களும் அற்ற ஸ்வரூபம் என்றும், அசுத்தமாக ஏதாவது ஒரு தர்மம் இருந்தாலும் அது ப்ரமேயமாக ஆகலாம். அவ்விதமின்றி நிர்தர்மகமானதால் 'அப்ரமேயம்' என்று தெரிவிக்கின்றது. 'சுத்தம்' என்பதால் எந்தவிதமான தோஷங்களும் அற்றது என்றே தெரிவிக்கின்றது. இதற்கு வேறு ஒரு முறையிலும் அர்த்தம் சொல்லலாம். ப்ரஹ்மம் நிர்க்குணம், நிர்க்குணத்வாத் அப்ரமேயம், அப்ரமேயத்வாத் சுத்தம், சுத்தத்வாத் அமலம் என்று மேன்மேலும் ஒன்றுக்கொன்று காரண கார்யமாக தெரிவிக்கின்றது என்றே சொல்லலாம். ஆகையால் 'ப்ரஹ்மம் நிர்விசேஷம்' என்று சொல்லப்படுமானல் ச்ருஷ்ட்டி முதலான கர்த்ருத்வம் ஸம்பவிக்க முடியாதே என்ற ப்ரச்னத்திற்கு தக்க உத்தரம் (பதில்) இந்த ச்லோகங்களில் தெரிவிக்கப்படுகிறது என்றே சொல்லவேண்டும்.

இதே கேள்வியை மைத்ரேயர் என்ற மஹரிஷியினிடம், விதுரர் கேட்டதாகவும், அதற்கு அந்த ஆசார்யரால் சொல்லப்படும் உத்தரத்தையும் '*ப்ரஹ்மன் கதம் பகவதஸ்சின்மாத்ரஸ்யாவிகாரிண: । லீலயா வாபி யுஜ்யேரந்நிர்குணஸ்ய குணா: க்ரியா: ॥*' ('ब्रह्मन् कथं भगवतश्चिन्मात्रस्याविकारिणः। लीलया वापि युज्येरन्निर्गुणस्य गुणाः क्रियाः') என்று பாகவத ச்லோகம் தெரிவிக்கின்றது. அதாவது சின்மாத்ரம் அவிகாரி என்று பகவத் ஸ்வரூபம் என்று தெரிவிக்கப்படுவதால், நிர்க்குணமான ப்ரஹ்மத்தினிடமிருந்து லீலையினால் கூட ச்ருஷ்ட்டியாதிகள் எவ்விதம் ஸம்பவிக்கமுடியும்? என்று கேட்க்கப்படுகிறது. அதனால் உன் ஸித்தாந்தத்தின்படி ப்ரஹ்மம் ஸகுணம் என்றும் ப்ரமேயம் என்றும் சாஸ்திரம் தெரிவிக்குமானால், 'ஸர்க்காதி கர்த்ருத்வம் எவ்விதம் ஸம்பவிக்க முடியும்' என்ற ஸந்தேகமே ஏற்படமுடியாதே? கேள்விக்கும் இடமிருக்காது. அதனால் ப்ரஹ்மம் நிர்க்குணம் என்றால் ப்ரச்னமே தேவை இல்லையே என்ற உன்னுடைய ஆக்ஷேபம் சரியல்ல.

அதேபோல் இந்த ப்ரச்னத்திற்கு தெரிவிக்கப்படும் உத்தரம் என்ன தாத்பர்யத்தில் தெரிவிக்கப்படுகிறது என்பதை அறியவேண்டியதும் அவச்யம். அதனால் அதை மேலே விளக்கப்படுகிறது. ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்த ப்ரபஞ்சத்தில் உள்ள வஸ்துக்களில் ஒவ்வொன்றிலும் விசித்ரமான பல சக்திகள் இருக்கின்றன. ஒரு வஸ்துவில் உள்ள சக்தி மற்றொரு வஸ்துவில் இருப்பதில்லை. ஒரே வஸ்துவில் பல சக்திகள் இருக்கின்றன. இந்த விதம் அந்தந்த வஸ்துக்களில் எந்தவிதமான சக்திகள் இருக்கின்றது என்பதை, அந்த சக்தியினால் ஏற்படும் கார்யங்களைக்கொண்டே அறியப்படுகிறதே அன்றி, அந்த சக்திகள் ப்ரத்யக்ஷமாக அறியப்படுவதில்லை. சிந்தனைக்கும் எட்டாதது. கேவல அனுமானத்தினாலேயே அறியப்படுகிறது என்றே சொல்லவேண்டும். அதாவது அக்னியில் உஷ்ண சக்தியும், ஜலத்தில் குளிர்ச்சி (சீதள) சக்தியும், ம்ருத்தில் கட உற்பத்தி சக்தியும், நூல்களில், வஸ்த்ர உற்பத்தி சக்தியும், ஔஷதங்களில் ரோகநிவர்த்தி சக்தியும், அன்னத்தில் பசியை நிவர்த்திக்கின்ற சக்தியும் இது போன்று ஸர்வ வஸ்துக்களிலும் பலவித சக்திகள் இருக்கின்றதென்று அதன் கார்யங்களைக் கொண்டே அனுமானிக்கப்படுகிறது. இதேபோல், ஜகத் நிர்மாண சக்தியும், அதை ரக்ஷிக்கின்ற சக்தியும், ஸம்ஹரிக்கின்ற சக்தியும் இருக்கின்றன என்றே ''பராஸ்ய சக்தி: விவிதைச்ச ச்ரூயதே'' என்றே சாஸ்திரமும் தெரிவிக்கின்றது. வேதத்தில் ப்ரஹ்மத்தினிடம் மாயை என்ற ஒரே சக்திதானே இருப்பதாகச் சொல்லப்படுகிறது? என்று கேட்கப்படுமானால், அதுவும் சரியே. மாயை என்ற ஒரே சக்திதான் அனேக விசித்ர

சக்தி உடையதாக இருக்கின்றது. அதனால் 'அஜாம் ஏகாம்' என்று ப்ரஹ்மசக்தி 'ஏகம்' என்றே ச்ருதி தெரிவிக்கின்றது. உண்மையில் மாயை என்ற சக்தி ஒன்றுதான் என்றாலும், ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களே மாயை என்பதால், உற்பத்தி, ஸ்திதி, லயம் என்ற கார்யங்கள் ஏற்படுகிறது. அதனால் குணபேதத்தைக்கொண்டு சக்தி பேதம் சொல்லப்படுகிறது. '*மாயாம் து ப்ரக்ருதிம் வித்யான்மாயினம் து மஹேஶ்வரம்*' 'मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम्' என்று மாயாசக்தி ஒன்றே என்று ஏகவசன ப்ரயோகம் ஓரிடத்தில் சொல்லப்படுகிறது. (இதன்மூலம் ப்ரஹ்மத்தை அன்றி அதன் சக்தி வேறாக இல்லை என்று ஐக்யத்தையே தெரிவிக்கின்றது.) மற்றோர் இடத்தில் '*இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே*' 'इन्द्रो मायाभिः पुरुरूप ईयते' என்று மாயாபி: என்ற பஹுவசன ப்ரயோகம் செய்யப்பட்டிக்கின்றது. 'சக்தி ஸமஷ்டி' என்ற ஒன்றில், அனேக விசித்ர சக்தி இருக்கின்றதால் பஹுவசனம் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, ஆசார்யனால் சொல்லப்பட்ட பதில் என்னவென்றால், நிர்விசேஷமான ப்ரஹ்மம் ஸ்வரூபத: ஜகத் கர்த்ருகமாக ஆகவில்லை. மாயா விசிஷ்டமான (மாயாஸபள) ப்ரஹ்மத்திற்கே கர்த்ருத்வம் ஸம்பவிக்கின்றது. ஆகவே மாயாஸபள ப்ரஹ்மம் ஸவிசேஷம் என்றே சொல்லப்படுவதால், நிர்விசேஷ ப்ரஹ்மத்தில் கர்த்ருத்வாதிகள் ஸம்பவிக்கமுடியாது என்று மிக ஸ்பஷ்டமாக விளக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே ஸவிசேஷ ப்ரஹ்மத்திற்கு கர்த்ருத்வம் சொல்லப்படுவதால் 'நிர்விசேஷம் ப்ரஹ்ம' என்பதற்கு எவ்வித ஹானியும் இல்லை என்பதால் கேள்வியும் சரியே. அதற்கு பதிலும் சரியாகவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பூர்வ:- மாயை என்ற சக்தி ப்ரஹ்மத்தில் இருப்பதாகச்சொல்லப்படுமானால், அந்த சக்தி நிர்விசேஷ ப்ரஹ்மத்தில் இருக்கின்றதா? அல்லது ஸவிசேஷ ப்ரஹ்மத்தில் இருக்கின்றதா?

மாயை ஸவிசேஷ ப்ரஹ்மத்தில் இருப்பதாகச்சொல்லப்படுமானால், முதலில் நிர்விசேஷ ப்ரஹ்மத்தில் மாயையின் ஸம்பந்தம் ஏற்பட்டால்தானே அதை ஸவிசேஷம் என்று சொல்லலாம்? அதனால் நிர்விசேஷ ப்ரஹ்மத்தில் மாயை என்பதே இருக்கமுடியாதே? ஆகவே நிர்விசேஷத்தில் மாயை இருப்பதாகச்சொல்லப்படுமானால் அதை நிர்விசேஷம் என்று சொல்லமுடியாதே?

அதற்காக ஸவிசேஷ ப்ரஹ்மத்தில் மாயை இருப்பதாகச் சொல்லப்படுமானால் அதுவும் பொருந்தாது. ஏனெனில் மாயா ஸம்பந்தம் ஏற்பட்ட பிறகுதானே ஸவிசேஷமாக ஆகமுடியும்?

ஸித்தா:- '*மாயாம் து ப்ரக்ருதிம் வித்யான்மாயினம் து மஹேஶ்வரம்*' 'मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम् என்று மாயை உள்ளது எதுவோ அது மாயி என்று தெரிவிக்கின்றது. இந்த மாயை, மாயை உள்ளவரிடம் இருக்கின்றதா? மாயை இல்லாதவரிடம் இருக்கின்றதா? என்றால், இந்த கேள்விக்கு நீ என்ன பதில் தெரிவிக்கிறாய்? மாயையே இல்லாத ஒன்றில் மாயை உண்டாகிறது என்று பதில் சொல்லப்படுமானால் அது பொருந்தாது. அதனால் இந்த கேள்விக்கு உன் பதில் என்ன என்று ஆசார்யனால் கேட்கப்பட்ட சிஷ்யனானவன் ஹே! ப்ரபோ! இவ்விதம் கடினமான (முரட்டுத்தனமான) கேள்விக்கு பதில் தெரிவிப்பது மிகக் கடினம். நான் சிஷ்யன். அதனால் தத்வம் என்னவென்று அறிந்துகொள்ள வேண்டுமென்று

விரும்புகின்றேன். அதனால் தயை செய்து இந்த விஷயம் பற்றி ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (என்று தெரிவிக்கின்றான்)

ஆசார்யன் சொல்கிறார். ஹே! ஸௌம்ய! அப்படியானால் தெரிவிக்கின்றேன். உதாரணமாக 'ப்ருதிவி' என்றால் என்ன என்று கேட்கின்றபோது கந்தம் உள்ளது எதுவோ அதுவே ப்ருதிவி என்று பதில் சொல்லப்படுகிறது. இவ்விதம் கந்தவதீ ப்ருதிவி என்று சொல்வதுபோலவே, உன் கேள்விக்கு பதில் தெரிவிக்கவேண்டும். ஆகவே, ப்ரஹ்மத்தில் மாயை இருக்கின்றது என்று சொல்லப்படவில்லை. மாயை எதில் (எங்கு) இருக்கின்றதோ அது ப்ரஹ்மம் என்று 'யத்ர மாயா தத் ப்ரஹ்ம' என்றே சொல்லப்படுகிறது. அதனால் ப்ரஹ்மம் மாயி என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ப்ரஹ்மம் ஸவிசேஷமா? நிர்விசேஷமா? என்ற கேள்விக்கே இடமில்லை. ப்ரஹ்மத்தில் மாயை இருக்கிறது என்று சொன்னால்தான் ப்ரஹ்மம் ஸவிசேஷமா? நிர்விசேஷமா? என்ற கேள்வி ஏற்படும். அதனால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது. (ஸவிசேஷம் மித்யை என்றே ஸித்திக்கின்றது)

பூர்வ:- இந்த இடத்தில் 'மாயை' என்பதற்கு அர்த்தம் என்ன?

ஸித்தா:- இந்த இடத்தில், 'ப்ரஹ்மம்' பரமார்த்தமாக ச்ருஷ்டி முதலான வ்யவஹாரகர்த்ருத்வம் உள்ளதாக இருக்கின்றதா இல்லையா என்று விசாரிக்கப்படுகின்றதால் இந்த ஸந்தர்ப்பத்தில், பரமார்த்தமாக இல்லாதது எதுவோ அதுவே 'மாயை' (வ்யாவஹாரிகம்) என்று சொல்லப் படுகிறது. அதாவது மாயை என்றாலே அதன் கார்யமான வ்யவஹாரத்தைக் கொண்டு அறியப்படுகின்றதால், கார்யம் என்றாலே வ்யவஹாரம் என்பதால், வ்யவஹாரம் என்பதையே மாயை என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் வ்யவஹார காலத்தில்தான் ப்ரஹ்ம ஸ்வரூபம் பற்றி வ்யவஹரிக்கப்படுகின்றதே அன்றி பரமார்த்த நிலையில் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே அறியப்படுகிறது. அதனால் லீலையினால் கூட ஜகத் கர்த்ருத்வம் முதலானவைகள் நிர்விசேஷமான ப்ரஹ்மத்தில் எவ்விதம் ஸம்பவிக்கமுடியும் என்ற கேள்விக்கு பதில் தெரிவிக்கின்றபோது 'அத்ர மாயயா' என்று தெரிவிக்கின்றது. அதனால் மாயாசப்தார்த்தம் இந்த இடத்தில் வ்யாவஹாரிகம் என்ற அர்த்தத்தில் தெரிவிக்கப்படுகிறது. 'மாயினந்து மஹேச்வரம்' என்று தெரிவிக்கின்ற இடத்தில், மாயா சப்தம் 'சக்தி' என்ற அர்த்தத்தில் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, நிர்குணமான ப்ரஹ்மத்திற்கு உண்மையில் ஜகத் கர்த்ருத்வம் கிடையாது என்றும் ஆனால் மாயா ஸம்பந்தம் ஏற்படுகின்றபோது பரமாத்மா (ஈச்வரன்) ஸவிசேஷம் என்றும், மாயா ஸம்பந்தத்தினாலேயே கர்த்ருத்வம் சொல்லப்படுகிறதே அன்றி நிர்க்குண ப்ரஹ்மத்திற்கு கர்த்ருத்வமே ஸம்பவிக்கமுடியாது என்றே சொல்லப்படுகிறது. இந்தவிதம் மாயையினால் சொல்லப்படும் கர்த்ருத்வம் என்பதும் உண்மையில் கிடையாது. ஆனாலும் அனிர்வசனீயமான மாயையினால் கர்த்ருத்வம் ப்ரஹ்மத்தினிடம் இருப்பதாக தோன்றுகின்றதால், மித்யாபூதமான கர்த்ருத்வாதிகள் ப்ரஹ்மத்தினிடம் இருப்பதாக 'தோன்றுகிறது' என்றே சொல்லப்படுகிறது. ஆகவே, ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது.

102

मायाया ब्रह्मशक्तित्वोपपत्तिः।

மாயாயா: ப்ரஹ்மசக்தித்வ உபபத்தி:

பூர்வ:- ப்ரஹ்மசக்தி என்பது, ப்ரஹ்மத்தில் இருக்கின்ற சக்தியா? அல்லது இல்லாததா? சக்தி இருக்கின்றது என்றால் எப்போதுமே சக்தியுடன் கூடியதாக இருக்கின்றதா? அல்லது ஒரு ஸமயம் இருக்கின்றது, ஒரு ஸமயம் இல்லை என்று சொல்லப்படுகிறதா? அவ்விதம் சொல்லப்படுவது பொருந்தாது. ஏனெனில், உதாரணமாக அக்னியில் ஸ்வபாவமாகவே உஷ்ணசக்தி, தஹிக்கின்ற சக்தி என்பதெல்லாம் இருக்கின்றதால் சில ஸமயம் அந்த சக்தி இருக்கின்றதென்றும், சில ஸமயம் இல்லை என்று சொல்லமுடியாது. எப்போதுமே அக்னி சக்தி அக்னியுடன் கூடினதாகவே இருக்கின்றது. அதேபோல் ப்ரஹ்ம சக்தி என்பதும் எப்போதுமே இருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- இது சரியல்ல - அக்னியில் இருக்கின்ற சக்தியும், ஒரு ஸமயம் மணி மந்த்ர ஔஷதாதிகளால் கட்டுப்படுத்தப்படுமானால், அதில் உள்ள தஹிக்கின்ற சக்தியோ - உஷ்ண சக்தியோ, எரிக்கின்ற சக்தியோ இருப்பதில்லை. அதேபோல் ப்ரஹ்மசக்தியும் ஒரு ஸமயம் இருக்கின்றது, மற்றொரு ஸமயம் இல்லை என்றே சொல்லலாமே?

பூர்வ:- அக்னி ஸ்வபாவமாகவே, சக்தியுடன் கூடியதாக இருக்கின்றது. அந்த சக்தி மணி மந்த்ர ஔஷதாதிகளால் ப்ரதிபந்தமாகின்றபோது அந்த சக்தி அதன் கார்யமான உஷ்ணம் முதலானவைகள் வெளிப்படாமல் கட்டுப்படுவதால் (சக்தி அற்றதாக) அசக்தமாக இருக்கலாம். ஆனால், 'நிர்விசேஷம் ப்ரஹ்மம்' என்று சொல்லப்படும் உங்கள் ஸித்தாந்தத்தில், ஒரு ஸமயம் சக்தி ஸம்பந்தம் இருக்கின்றது என்றும் வேறொரு ஸமயம் சக்தி ஸம்பந்தம் இல்லையென்று, எவ்விதம் சொல்லமுடியும்? சக்தியுள்ள பதார்த்தம் சிலஸமயம் ப்ரதிபந்தமாக இருக்குமானால் அசக்தமாக இருக்கலாம். ஆனால் சக்தியே இல்லாத பதார்த்தம் எந்த காலத்திலும் சக்திஉள்ளதாக இருக்கமுடியாது. அதனால் நிர்விசேஷமான ப்ரஹ்மத்தினிடம் சக்தி இருப்பதாக ஒருபோதும் சொல்லமுடியாது. ஸ்வபாவமாக சக்தி உள்ள அக்னியானது, ப்ரதிபந்தகத்தினால் ஒரு ஸமயம் அசக்தமாக ஆகலாம். ஆனால் சக்தியே இல்லாத வஸ்துவாக, ஸ்வபாவமாகவே நிர்விசேஷமாக இருக்கின்ற ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் ஏதோ ஒரு ஸமயம் மாயாசக்தி ஸம்பந்தம் இருப்பதாகச் சொல்வது சரியல்ல.

ஸித்தா:- லோகத்திலுள்ள வஸ்துக்களில், பலவிதமான சக்திகள் இருக்கின்றது. அந்த சக்தி, அந்தந்த வஸ்துவில் இருக்கின்றதென்பதை, அந்த சக்தியின் கார்யத்தைக் கொண்டே அறியப்படுகிறது. அதாவது அக்னியில் உள்ள சக்தி, உஷ்ணசக்தி, தஹிக்கின்ற சக்தி, எரிக்கின்ற சக்தி என்பதெல்லாம், அதன் கார்யத்தைக்கொண்டே அறியப்படுகிறது. அதனால் கார்யம் இல்லாதபோது அறியப்படவில்லை. இதேபோல் வன்னி வ்ருக்ஷத்தில், அக்னி

சக்தி இருப்பதாக முன்னால் அறியப்படவில்லை. அந்த வ்ருக்ஷத்தின் ஒரு கிளையை வெட்டி எடுத்து அதை மற்றொரு வன்னி (அரணி) கட்டையைக்கொண்டு கடைகின்றபோதுதான் அதிலுள்ள அக்னி வெளிப்படுகிறது. அதனால் அக்னி சக்தி அந்த வ்ருக்ஷத்தில் இருக்கிறது என்று அதன் கார்யத்தைக் கொண்டே அந்த சக்தி அனுமானிக்கப்படுகிறது. அதனால் கார்யகம்யம் சக்தி என்றே சொல்லவேண்டும். இந்த சக்தி எப்போதுமே அந்த வ்ருக்ஷத்தில் இருக்கின்றதா என்றால், அவ்விதம் இருப்பதாகச் சொல்லமுடியாது. ஏனெனில் எப்போதும் அக்னி சக்தி அந்த வ்ருக்ஷத்தில் இருக்குமானால் அந்த வ்ருக்ஷத்தையே எரித்திருக்கவேண்டும். அவ்விதம் ஏற்படாததால் அந்த சக்தி அப்போது இல்லையென்றே சொல்லவேண்டும். ஆனால் அதன் கட்டையை கடைகின்றபோது அந்தசக்தியான அக்னி வெளிப்பட்டு அதன் கார்யத்தைச்செய்கின்றதால் அதில் அந்தசக்தி இருக்கின்றதாக அறியப்படுகிறது. ஆகையால் சக்தி அபிவ்யக்தமாகின்ற போதுதான் அந்த சக்தி இருப்பதாகச் சொல்லவேண்டுமே அன்றி, அபிவ்யக்தமாக இல்லாத போதும் அதில் சக்தி இருக்கின்றது என்று சொல்ல முடியாது. ஆகவே, இதேபோல் 'நிர்விசேஷம் ப்ரஹ்மம்' என்று தெரிவிக்கின்றபோது, அதில் உண்மையில் எந்தவிதமான விசேஷமும் இல்லை என்றே சொல்லப்படுகின்றது. அதனால்தான் கேவலப்ரஹ்மம் ஜகத் காரணம் என்று சொல்லப்படவில்லை. ஆகவே, கேவலப்ரஹ்மம் ஜகத் காரணமாக ஆக முடியாது என்ற காரணத்தினாலேயே ப்ரஹ்மத்தினிடம் சக்தியை ஒத்துக்கொள்ளவேண்டிய அவச்யம் ஏற்படுகிறது (நேரிடுகிறது). ஏனெனில் ஜகத், ஸ்ருஷ்டி, ஸ்திதி லயம் முதலான கார்யங்கள் இருப்பதாக அறியப்படுவதனாலேயே ஸ்ருஷ்டி சக்தி, லயசக்தி முதலானவைகள் இருப்பதாக ஒத்துக்கொள்ளப்படுகிறது. இவ்விதம் ஜகத் என்ற கார்யம் இருப்பதாக அறியப்படுகின்ற போதுதான் இவ்வித சக்தி ப்ரஹ்மத்தில் இருக்கின்றதென்று அறியப்படுகிறது. அதனால் சக்தி அபிவ்யக்தமாகின்றபோது மட்டுமே சக்தி இருக்கின்றதென்று சொல்லமுடியுமே அன்றி, அபிவ்யக்தமாக ஆகாதபோதும் அந்த சக்தி இருக்கின்றதென்று சொல்லமுடியாது. அபிவ்யக்தமாகவில்லை என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். அதனால் ப்ரஹ்மத்தினிடம் சக்தி எப்போதும் இருக்கின்றதென்று சொல்லமுடியாது. அவ்விதம் எப்போதுமே இருக்குமானால் ஸ்ருஷ்டி என்பதும் எப்போதும் இருக்கவேண்டும். எப்போதுமே ஸ்ருஷ்டி சக்தி இருந்தால் லயம் என்பதே ஏற்படமுடியாது. அதனால் அந்தந்த சக்தியின் கார்யத்தைக்கொண்டே அந்த சக்தியை அனுமானிக்க வேண்டிய அவச்யம் இருக்கின்றது.. ஆகவே கார்யகம்யமான இந்த சக்தி எப்போதும் ப்ரஹ்மத்தில் இருப்பதாக சொல்லமுடியாது.

பூர்வ:- ஸ்ருஷ்டி இருக்கின்றபோது 'லயம்' என்பது ச்ருஷ்டியினால் ப்ரதிபந்தமாகின்றது என்றும், அதேபோல் லயம் ஏற்படுகின்றபோது லயத்தினால், ஸ்ருஷ்டி சக்தி ப்ரதிபந்தமாகிறது என்று சொல்லலாம். அதனால் இவ்விதம் சக்தி இருந்தும், சக்தியின் கார்யம் ப்ரதிபந்தகமாகின்ற போது சக்தி இருப்பதாக அறியப்படவில்லை என்ற சொல்லலாமே?

ஸித்தா:- கார்யத்திற்கு ப்ரதிபந்தகம் இருக்கின்றதென்றும், அதனால் சக்தி இருந்தும் இருப்பதாக அறியப்படவில்லை என்று சொல்வது சரியல்ல. கார்யம் ஏற்படவில்லை என்றால் அந்த ஸமயம் அதில் அந்த சக்தி இல்லை என்றே சொல்லவேண்டும். அவ்விதமின்றி சக்தி

ப்ரதிபந்தகமாக இருக்கின்றது என்று சொல்வதற்கு எந்தவித ப்ரமாணமும் கிடையாது. கார்யம் இருக்கின்றபோதுதான் அந்த சக்தி அதில் இருக்கின்றதென்று சொல்லவேண்டுமேயன்றி கார்யம் இல்லாவிட்டாலும் சக்தி இருக்கின்றதென்று சொல்வதற்குரிய ப்ரமாணமே கிடையாது.

பூர்வ:- அக்னியில் எப்போதும் இருக்கின்ற சக்தி, மணிமந்த்ர ஔஷதங்களால் ப்ரதிபந்தகமாகின்றபோது அதன் கார்யமான, உஷ்ணம், தாஹக சக்தி முதலான எந்த சக்தியின் கார்யமும் வெளிப்படாமல் தடை ஏற்படுகிறது. அதனால் அக்னியில் அவ்வித சக்திகள் இல்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- எந்த சக்தியாக இருந்தாலும், அந்த சக்தி இருக்கின்றதென்பதை அதன் கார்யத்தைக் கொண்டே அனுமானத்தினால் அறியப்படுகிறது என்று, சக்தி என்பது கார்யகம்யம் என்றே முன்பே சொல்லப்பட்டது. அதனால் ப்ரஹ்மத்தினிடம் சக்தி இருக்கின்றதா? இல்லையா? என்ற கேள்வியே தேவை இல்லை. ஜகத் ச்ருஷ்டி முதலானவைகளைக்கொண்டே மாயா சக்தியை ஒத்துக்கொள்ளவேண்டிய அவச்யம் ஏற்படுகிறது. ப்ரஹ்மத்தில் எப்போதும் சக்தி இருப்பதாக ஒப்புக்கொள்ளப்படுமானால், அதன் கார்யங்களும் எப்போதும் இருக்கவேண்டும். அவ்விதம் இல்லாததால், ப்ரஹ்மத்திற்கு மாயாஸம்பந்தம் ஏற்படுகின்றபோதுதான் அந்த சக்தி ஒத்துக்கொள்ளப்படுகிறது. மாயாஸம்பந்தம் என்றாலே வ்யவஹாரமாத்ரம் என்றே அறியவேண்டும். வ்யவஹாரம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்று ஆதி சொல்ல முடியவில்லை என்பதால், மாயாசக்தியை அனாதி என்று சொல்லப்படுகிறது. ஆனால் 'வ்யவஹாரம்' என்பதற்கு முடிவு இருக்கின்றதால் (அந்தம் இருப்பதால்) ஸாந்தம் சொல்லப்படுகிறது. இந்தக்காரணத்தினாலேயே மாயை என்பது மித்யை என்றே ஸித்திக்கின்றது. அக்னியிலும், உஷ்ணம் முதலான சக்திகள் அவ்வப்போது உண்டாகின்றது என்றே சொல்லவேண்டும். மணிமந்த்ர ஔஷதங்களின் ஸம்பந்தம் அக்னிக்கு ஏற்படுகின்ற போது அந்த சக்தி அக்னியில் இல்லை என்று சொல்லவேண்டுமே அன்றி தடைபடுகிறது என்று சொல்வது சரியல்ல. கார்யத்தை உண்டுபண்ணக்கூடிய ஸாமர்த்யம் என்பதையே சக்தி என்று சொல்லப்படுகிறது. அதனால் கார்யத்தைக்கொண்டே அந்த ஸாமர்த்யம் அறியப்படுவதால், அந்த ஸாமர்த்யம் இல்லையென்றால் அந்த சக்தி இல்லை என்றே சொல்லவேண்டும். லோகத்தில் இருக்கின்றதாக அறியப்படும் வஸ்துக்களிலேயே ஒரு ஸமயம் இல்லாத சக்தி மற்றொரு ஸமயம் உண்டாகின்றது. ஆகையால் ஸர்வதா சக்தியே இல்லாத ப்ரஹ்மத்தினிடம் ஒரு ஸமயம் சக்தி உண்டாகிறது என்று சொல்லப்படுவதில் என்ன ஆக்ஷேபம் இருக்கமுடியும்?

ஆகையால் '*மாயாச அவித்யா ச ஸ்வயமேவ பவதி*' (माया चाविद्या च स्वयमेव भवति) என்று 'பவதி' என்றே சொல்லப்படுகிறது. இல்லாமல் இருப்பதே உண்டாக முடியும் என்பதால் ப்ரஹ்மத்தில் எப்போதும் சக்தி இருக்கின்றது என்று சொல்லமுடியாது. மேலும் இந்த சக்திக்கு உற்பத்தி சொல்லப்படுவதனாலேயே, அதற்கு நாசமும் இருக்கின்றது. ஜன்ம, நாசம் இருப்பதனாலேயே மாயை அநித்யம் என்று சொல்லப்படுகிறது. இதையே '*ஜாதஸ்ய*

ஹி த்ருவோ ம்ருத்ய:' (जातस्य हि ध्रुवो मृत्युः) என்று கீதா வசனமும் தெரிவிக்கின்றது. அநித்யம் என்பதால் ஸத்யமல்ல என்று தெரிவிக்கின்றதால் மாயை மித்யை என்றே ஸித்திக்கின்றது. இவ்விதம் மித்யாபூதமான காரண, கார்யங்களைக்கொண்டு ப்ரஹ்மம் பரமார்த்தமாக ஸவிசேஷம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால், 'ப்ரஹ்மம் நிர்விசேஷம்' என்பதே பரமார்த்தம் என்று ஸித்திக்கின்றது. ஆகவே, நிர்க்குணமான, நிர்விசேஷமான ப்ரஹ்மத்திற்கு ச்ருஷ்டி முதலான கர்த்ருத்வம் எவ்விதம் ஏற்படமுடியும் என்று சிஷ்யனால் கேட்கப்பட்ட கேள்விக்கு, மாயையினால் ஏற்பட்ட ப்ராந்தியினால், ஸர்க்காதி கர்த்ருத்வம் இருப்பதாக அறியப்படுகிறதே அன்றி (சொல்லப்படுகிறதே அன்றி) உண்மையில் எந்தவிதமான கர்த்ருத்வமும் ஸம்பவிக்க முடியாது என்று ஆசார்யனால் பதில் தெரிவிக்கப்படுகிறது.

பூர்வ:- உண்மையில் கர்த்ருத்வம் இல்லை என்றும் ப்ராந்தியினால்தான் கர்த்ருத்வம் என்று ஆசார்யனால் சொல்லப்படவில்லையே?

ஸித்தா:- ஸோபாதிக ப்ரஹ்மத்திற்கு வ்யாவஹாரிக கர்த்ருத்வம் இருப்பதாக சொல்லப்பட்ட போதிலும், நிருபாதிக ப்ரஹ்மத்திற்கு பாரமார்த்திகமாகவோ, வ்யாவஹாரிகமாகவோ எந்த விதமான கர்த்ருத்வமும் கிடையாது. இதேபோல் ஸவிசேஷப்ரஹ்மத்திற்கும் பாரமார்த்திக கர்த்ருத்வம் சொல்லமுடியாது. ஸர்கம் வ்யாவஹாரிகம் என்பதால் கர்த்ருத்வம் என்பதே வ்யாவஹாரிகம்தான். அதனால் ஸவிசேஷத்தில் வ்யாவஹாரிக கர்த்ருத்வம் ஸம்பவிக்கலாமே தவிர, நிர்விசேஷம் என்பதில் எந்தவித கர்த்ருத்வமும் ஸம்பவிக்க முடியாது. அதனால் நிர்விசேஷத்தில் கர்த்ருத்வம் சொல்லப்படுமானால் அது வ்யாகாதம். (பொருந்தாது.) இந்த காரணத்தைக்கொண்டே ஆசார்யன் மாயையினால் ஸோபாதிக ஸ்வரூபத்திற்கே கர்த்ருத்வம் என்று தெரிவிக்கின்றார்.

பூர்வ:- லோகத்தில், ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களை உடைய, கர்மவசப்பட்டவனான குலாலன் போன்ற பரிச்சின்னனான புருஷனிடம் இருந்தே கார்யங்கள் உற்பத்தியாகிறது என்று அறியப்படுகிறது. பரமாத்மா குணங்கள் அற்றவர், குணாதீதர். கர்மவசப்பட்டவர் அல்ல. பரிபூரணர் என்பதால் இப்பேர்ப்பட்ட பரமாத்மாவினிடம், கர்த்ருத்வம் இருப்பதாக எவ்விதம் சொல்லமுடியும்? என்ற சிஷ்யனின் ப்ரச்னத்திற்கு, ஸத்வம் முதலான குணங்கள் அற்றவராக இருந்தாலும், ஸர்வ சக்திமான் என்பதால் ச்ருஷ்டி முதலானவை ஏற்படலாம் என்றும் லோகத்தில் உள்ள வஸ்துக்களைக்காட்டிலும் மாறுபட்டவர் பரமாத்மா என்று சொல்லப்படுகிறது. அதாவது, அக்னியில் உள்ள உஷ்ணம் முதலான சக்திகள் அக்னியைத்தவிர வேறான எந்த வஸ்துக்களிலும் இல்லை. அதனால் ஜலம் முதலானவைகளில் உஷ்ணத்வம் போன்ற அக்னி சக்தி இருப்பதாக அறியப்படவில்லை என்பதற்காக அக்னியில் மட்டும் எவ்விதம் அந்த சக்தி இருக்க முடியும் என்று கேட்கமுடியுமா? அதேபோல், பகவானிடம், ஸத்வம் முதலான குணங்கள் இல்லை என்றாலும், ச்ருஷ்டி முதலான கர்த்ருத்வம் இருக்கலாமே? குலாலனிடத்திலும் ஏதோ சில சக்திகள்தான் இருக்கமுடியும். பகவானிடத்தில் ஸர்வசக்திகளும் இருப்பதால் ச்ருஷ்டி முதலானவைகள் ஸம்பவிக்கலாமே?

ஸித்தா:- இதுவும் சரியல்ல. பகவான் ஸத்வம் முதலான குணங்கள் அற்றவர் என்பது பொருந்தாது. ஸத்வம் முதலான குணங்களே சக்தி. குணங்களைத்தவிர சக்தி என்பது வேறல்ல. குணத்ரயங்களே சக்தி என்று சொல்லப்படுகிறது. அதனால் ச்ருஷ்டி முதலான எல்லாமே சக்தியின் கார்யம்தான், குணத்ரயம் இல்லாமல் சக்தி த்ரயம் சொல்லமுடியாது.

பூர்வ:- குணத்ரயம் ப்ரக்ருதியின் குணங்கள். சக்தனான பரமாத்மாவின் குணங்கள் என்று சொல்லமுடியாது. அதனால் பரமாத்மா குணத்ரய ரஹிதனாக, சக்தி உடையவராக இருக்கலாம். அதனால் குணங்கள் வேறு சக்தி வேறு என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஸத்வம் முதலான குணங்களே 'சக்தி' என்று சொல்லவேண்டும். 'குணம்' என்று சொல்வது சரியல்ல. உன் பரிபாஷையில்தான் நீலம், பீதம் போல் ஸத்வம் முதலானவை குணங்கள் என்று சொல்லப்படுகின்றது. ப்ரக்ருதி பரிணாமம் என்பதற்காக குணம் என்று சொல்லப்படுமானால் அது சரியல்ல. பரிணாம சக்தி என்றே சொல்லவேண்டும். '*தேவாத்ம சக்திம் ஸ்வகுணைர்நிகூடாம்*' என்று பரமாத்ம சக்தி என்றே ச்ருதியும் தெரிவிக்கின்றது. மேலும் ப்ரக்ருதி என்பதே குணம் என்று சொல்லப்பட்டாலும் ப்ரக்ருதியே பரமாத்மாவின் ச க்தி என்றே உன்னால் சொல்லப்படுகிறது. அதனால் ப்ரக்ருதியின் குணங்கள் பரமாத்மாவின் குணங்கள் அல்ல என்று எவ்விதம் சொல்லமுடியும்?

பூர்வ:- ப்ரக்ருதி ஈச்வரசக்தி என்று சொல்லவில்லை. அதனால் அதன் குணங்களும் ஈச்வரனிடம் இருக்கமுடியாது என்றே சொல்லலாம்.

ஸித்தா:- ப்ரதானம், புருஷன் என்ற எல்லாமே ஈச்வர சக்தி என்றே உன்னால் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்போது ப்ரக்ருதி ஈச்வர சக்தி இல்லை என்று முன்னுக்குப்பின் முரணாக (விரோதமாக) சொல்வது சரியல்ல. இவ்விதம் சொல்லப்படுமானால், ச்ருஷ்டி முதலான கார்யங்களுக்கு ஈச்வரனோ ஜீவனோ கர்த்தா இல்லை என்று சொல்லப்பட்டதாக ஆகும்.

பூர்வ:- ஜீவன், ஈச்வரன் எல்லாம் ஸ்வயம் ஸத்வம் முதலான குணரஹிதமாக இருந்தபோதிலும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் ஜீவனுக்கு ஸத்வம் முதலான குணங்கள் இருக்கின்றதால் ஜீவனுக்கே ச்ருஷ்டி முதலான கர்த்ருத்வம் இருப்பதாகச் சொல்லலாமே?

ஸித்தா:- ஜீவனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் ச்ருஷ்டி முதலான கர்த்ருத்வம் ஸம்பவிக்கலாம் என்றால், அதேபோல் ஈச்வரனுக்கும் ஸம்பவிக்கலாமே? பகவானுக்கும் ப்ரக்ருதி ஸம்பந்தம் இருப்பதாக '*யத்ர்ச்சயைவோபகதாமப்யபத்யத லீலயா*' (यदृच्छयैवोपगतामभ्यपद्यत लीलया) பாகவதம் முதலான புராணங்கள் தெரிவிக்கின்றதே? ப்ரக்ருதி ஸம்பந்தம் யத்ருச்சையாக ஏற்படுகின்றபோது, பகவான், அதை லீலையாக ஏற்றுக்கொண்டார் என்று பாகவத ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல. உன் ஸித்தாந்தத்திலும், சிதசித் விசிஷ்டம் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுவதால், ஜீவனுக்கு மட்டுமே ப்ரக்ருதி ஸம்பந்தம் இருக்கின்றதென்றும், ஈச்வரனுக்கு இல்லை என்றும் எவ்விதம் சொல்லமுடியும்? ப்ரக்ருதி என்பதே 'அசித்' என்பதால் அசித்துடன் ஈச்வரனுக்கு ஸம்பந்தம் இருப்பதாகத்தானே உன்னால் சொல்லப்படுகிறது?

பூர்வ:- ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்ற ஈச்வரனை நிர்க்குணம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- அதேபோல் ப்ரக்ருதி ஸம்பந்தம் இல்லாத ஞானியான ஜீவனையும் நிர்க்குணம் என்று சொல்லலாமே?

பூர்வ:- ப்ரக்ருதியிலிருந்து ஈச்வரனை விவேகம் செய்து வேறுபடுத்தி தெரிவிக்கலாமே அன்றி, ஜீவனை ப்ரக்ருதியிலிருந்து வேறுபடுத்த முடியாது.

ஸித்தா:- ஜீவனுக்கே அஞ்ஞானத்தினால் ப்ரக்ருதி ஸம்பந்தம் ஏற்படுகின்றதே அன்றி ஈச்வரனுக்கு அஞ்ஞானம் ஏற்படமுடியாது. அதனால் அஞ்ஞானத்தினால் ப்ரக்ருதி ஸம்பந்தம் உடைய அவிவேகியான ஜீவனே, விவேகத்தினால் ஏற்பட்ட ஞானத்தினால் ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்றவனாக ஆகவேண்டும். ஈச்வரனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தம் இருந்தாலும் அவிவேகம் கிடையாது. ஜீவனுக்கு ப்ரக்ருதி விவேகம் ஏற்பட்டால்தான் முக்தி என்பதே ஸித்திக்கும். முக்தி என்பது ப்ரக்ருதி விநிர்முக்தமான ஆத்ம ஸ்வரூபம் என்று உன்னாலேயே சொல்லப்படுகிறது. அதனால் முன்னுக்குப்பின் முரணாக பேசுவது சரியல்ல. ஜீவனுக்கு மூலப்ரக்ருதியுடன் ஸம்பந்தப்படுவதனாலேயே அவிவேகம் இருக்கின்றதென்று அறியப்படவில்லை. ஆனால் ப்ரக்ருதி கார்யமான சரீராதிகளில் அஹம் என்ற அபிமானம் ஸ்பஷ்ட்டமாக அறியப்படுகிறது. அதனால்தான் நான் ஊமை, நான் செவிடன், நான் பொட்டை, நான் நொண்டி, என்று சரீரத்தில் உள்ள தர்மங்களை தன்னிடம் இருப்பதாக அத்யாஸம் ஏற்படுகிறது. அதனால் சாஸ்திர ஞானத்தினால் ஏற்படும் விவேகத்தினால் தேஹம் முதலானவைகளைக்காட்டிலும் வேறுபட்டவன் நான் என்றும், ஸச்சிதானந்தோஹம் என்றும் தன்னை அறிகின்றான். இவ்விதம் ஈச்வரனுக்கு அவிவேகம் இல்லாததால், விவேசனம் தேவை இல்லை. ஈச்வரனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தம் இருந்தபோதிலும், ஸர்வஞ்ஞனாக இருக்கின்ற ஈச்வரனுக்கு ஸம்ஸர்க்கத்தினால் (ஸம்பந்தம்) அவிவேகம் கிடையாது. ஆகவே நிர்க்குணமான பரப்ரஹ்ம ஸ்வரூபத்தில், விஷ்ணுவின் குணம் 'ஸத்வம்' என்றும், ப்ரஹ்மாவின் குணம் ரஜஸ் என்றும், ருத்ரனின் குணம் தமஸ் என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் முக்குணங்களில் ஸர்வோத்க்ருஷ்ட்டமான ஸத்வகுணமுள்ளவராக விஷ்ணு இருக்கின்றார் என்று உன்னால் சொல்லப்படுவதால், ஈச்வரன் குணங்கள் அற்றவர் என்று உன்னால் சொல்ல முடியாது.

பூர்வ:- விஷ்ணுவின் ஸத்வகுணம் அப்ராக்ருதம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரக்ருதியின் குணங்களில் ஒன்று ஸத்வகுணம். முக்குணங்களில் ஒன்றாக ஸத்வகுணம் மட்டும் அப்ராக்ருதம் என்று சொல்லப்படுமானால் ஆகாசத்தில் தாமரை இருக்கின்றது என்று சொல்வது போலாகும்.

பூர்வ:- விஷ்ணுவின் ஸத்வகுணம் ப்ராக்ருதம் என்று சொல்லப்பட்டாலும்கூட, மற்ற ஜீவர்களிடம் இருக்கின்றதுபோல், ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணத்துடன் கலந்த ஸத்வகுணம் அல்ல. அவ்விதம் கலந்திருக்கின்ற ஸத்வகுணம் அசுத்தம் என்பதால் விஷ்ணுவின் ஸத்வகுணம் சுத்த ஸத்வம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- விஷ்ணு, கேவல சுத்த ஸத்வகுணம் என்றும், ரஜஸ், தமோகுணங்கள் அற்றவர் என்றும் சொல்லப்படுவது சரியல்ல. ஏனெனில், அவ்வப்போது ஏற்படும் அவதாரங்களில், துஷ்ட்ட நிக்ரஹம், சிஷ்ட்ட பரிபாலனம் என்ற கார்யங்கள் இருக்கின்றதால் அவையெல்லாம் ரஜோ குண, தமோகுண கார்யங்கள் என்றே சொல்லவேண்டும். விஷ்ணுவின் நாபியிலிருந்து ஹிரண்யகர்ப்பர் (ப்ரஹ்மா) உற்பத்தி புராணங்களில் சொல்லப்படுகின்றது. கேவல ஸத்வகுணத்தினால் ச்ருஷ்டியோ, ஸம்ஹாரமோ, ஏற்படமுடியாது. ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற மூன்று தொழில்களும், மூன்று குணத்தினால்தான் நடைபெறுகிறது. மேலும், உங்களால் பூஜிக்கப்படும், பூஜனீயரான பராசரரே, ஸர்வ, ஸர்க்காதி கர்த்ருத்வம் விஷ்ணுவிற்கே இருக்கின்றது *'ஸ்திதிஸம்யமகர்தாஸௌ ஜகதோஸ்ய'* (स्थितिसंयमकर्तासौ जगतोस्य) என்று தெரிவிக்கின்றார். அதனால், மூன்று குணங்களுடன் கூடிய ப்ரக்ருதி ஸம்பந்தம் விஷ்ணுவிற்கு இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். அதுமட்டுமல்ல, அப்ரமேயமாகவும், பரிபூரணமாகவும், இருக்கின்ற ஈச்வரனுக்கே, ஸர்வ சக்திகளும் இருக்கமுடியும். அவ்விதம் இல்லாத ஜீவர்களுக்கு ஸர்வ சக்தி ஸம்பந்தம் கிடையாது என்றே ஒரு ச்லோகத்தில் சொல்லப்படுகிறது என்று சொல்வது சரியல்ல. ஜீவன் ப்ரமேயம் என்றும், பரிச்சின்னன் என்றும் அதனால் ஜீவனுக்கு ஸர்வசக்தி ஸம்பந்தம் இல்லை என்று உன்னால் சொல்லப்படுகிறது. அவ்விதம் சொல்வது முற்றிலும் தவறு. ஏனெனில் ஜீவன் த்ருச்யம் என்றால், எது த்ருச்யமோ (அறியப்படுகிறதோ) அது அநித்யம் என்றாகும், அதேபோல் எது பரிச்சின்னமோ அது அநித்யம் என்றே ஆகும். அதனால் ஜீவனுக்கு அநித்யத்வம் ஸம்பவிக்கும்.

பூர்வ:- ஜீவன், ஸ்வயம் அபரிச்சின்னன் என்றாலும் அந்த:கரணம் பரிச்சின்னம் என்பதால் அந்த:கரண அவச்சின்ன ஜீவனும் பரிச்சின்னன் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- அந்த:கரணம் பரிச்சின்னம் என்பதற்காக ஜீவனுக்கு பரிச்சின்னத்வம் சொல்லப் படுமானால், அந்த:கரணம் போலவே ஜீவனும் அநித்யம் என்று சொல்லநேரிடும். மேலும், அப்ரமேயமாகவும், பரிபூரணமாகவும் இருப்பதனாலேயே ஸர்வ சக்தியோகம் என்று சொல்லப்படுமானால், அது வ்யாகாதம் (பொருந்தாது) ஏனெனில், பரமாத்மா வேறு அதன் சக்திகள் வேறு என்று சொல்லமுடியுமானால்தான், பரமாத்மாவிற்கு ஸர்வ சக்தி யோகம் சொல்லமுடியும். அவ்விதம் பரமாத்மாவை அன்றி வேறாக இருக்கின்ற சக்தியுடன் ஸம்பந்தம் (யோகம்) சொல்லப்படுமானால் பரமாத்மாவை பரிபூரணம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? வேறாக இருக்கும் சக்தி பரமாத்மாவினால் வ்யாப்தம் என்று சொல்லமுடியாது என்பதால் பரமாத்மா பரிபூரணம் என்று சொல்லமுடியாது. அதனால் ஸவிசேஷப்ரஹ்மம் பரிபூரணம் என்று சொல்வது, ஆகாசம் வ்யாபகம் என்பதுபோல் உபசாரமாக சொல்லலாமே அன்றி முக்யார்த்தம் என்று சொல்லமுடியாது. ஆகவே, எந்த சக்தியும் அற்ற நிர்விசேஷ ப்ரஹ்மமே பரிபூரணம் என்று ஸித்திக்கின்றது.

103

'परमार्थस्त्वमेवैक' इत्यनेनापि जगतः अपारमार्थ्यत्वोपपत्तिः ।

'பரமார்த்தஸ்த்வமேவைக' இத்யனேனாபி ஜகத: அபாரமார்த்யத்வ உபபத்தி:

(விஷ்ணுபுராணம் 1.4.38)

'பரமார்த்தஸ்த்வமேவைக: நான்யோஸ்தி ஜகத: பதே'
தவைஷ மஹிமா யேன வ்யாப்தமேதத் சராசரம்

परमार्थस्त्वमेवैको नान्योऽस्ति जगतःपते ।
तवैष महिमा येन व्याप्तमेतच्चराचरम् ॥

பூர்வ:- 'பரமார்த்தஸ்த்வமேவைக:' என்ற ச்லோகம், 'ஜகத்பதியான நீ ஒருவனே பரமார்த்தம்' என்றும், 'உன்னை அன்றி வேறாக எதுவும் சிறிதும் இல்லை' என்றே தெரிவிக்கின்றது. அதனால் ஜகத் மித்யை என்று அத்வைதிகளான உங்களால் தெரிவிக்கப்படுகிறது. அது சரியல்ல. ஏனெனில், ஸர்வஜகத்தும் பரமாத்ம ஸ்வரூபமாகவே இருக்கின்றதால், அவைகளை அபரமார்த்தம் என்று சொல்லப்படவில்லை. ப்ரஹ்மத்தை அன்றி வேறாக, ஸ்வதந்த்ரமாக இருக்கின்ற வஸ்துக்களே இல்லை. அதனால் ஸ்வத்ந்த்ரமாக ஏதாவது வஸ்துக்கள் இருக்குமானால், அந்த வஸ்துக்களே மித்யை என்று தெரிவிக்கின்றது.

ஸித்தா:- 'பரமாத்மா' என்ற நீ ஒருவனே பரமார்த்தம் என்று 'ஏவ'காரத்தினால் தெரிவிக்கின்றதே அன்றி, உன் சரீரமான ஜகத்தும் பரமார்த்தம் என்று சொல்லப்படவில்லை. 'ஏக ஏவ' என்று தீர்மானமாக த்ருடமாக தெரிவிக்கின்றது. அதனால் ஜகத் பரமார்த்தம் என்று சொல்வது சரியல்ல. (ஒன்றுதான் பரமார்த்தம் என்று தெரிவிப்பதனாலேயே மற்ற ஸர்வமும் அபரமார்த்தம் என்றே ஸித்திக்கின்றது)

பூர்வ:- பரமாத்ம ஆத்மகமான ஜகத் பரமார்த்தம் என்று சொல்லப்பட்டாலும், பரமாத்மாவை அன்றி வேறாக இருக்கின்ற ஜகத் அபரமார்த்தம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- பரமாத்ம ஆத்மக ஜகத் என்றும், பரமாத்ம அனாத்மக ஜகத் என்றும் இரண்டு ஜகத் இருப்பதாக சொல்வதற்குரிய ப்ரமேயமே இல்லை.

பூர்வ:- அப்படியானால், இந்த ச்லோகத்திற்கு பரமாத்மாத்மகமாக (பரமாத்மாவை ஆத்மாவாக கொண்ட) இருக்கின்ற ஜகத்தை அன்றி, பரமாத்மாத்மகமாக இல்லாத ஜகத்தே கிடையாது என்று தெரிவிப்பதாக அர்த்தம் சொல்லலாமே?

ஸித்தா:- ச்லோகத்தில், '*பரமார்த்தஸ்த்வமேவைக நான்யோஸ்தி ஜகத: பதே*' என்றே வாக்யம் இருக்கின்றது. 'நீயே பரமார்த்தம்' என்று தெரிவிக்கின்றதே அன்றி பரமாத்ம ஆத்மகமான ஜகத் பரமார்த்தம் என்று தெரிவிக்கவில்லை. அவ்விதம் சொல்லப்பட்டிருக்குமானால் பரமாத்மஆத்மகமாக இல்லாத ஜகத் அபரமார்த்தம் என்ற அர்த்தம் கிடைக்கும். அவ்வித வாக்யம் எதுவும் இந்த ச்லோகத்தில் சொல்லப்படவில்லை.

பூர்வ:- 'பரமாத்மாவே' பரமார்த்தம் என்று தெரிவிப்பதால், பரமாத்மாத்மகமான ஜகத் என்பதும் பரமாத்ம ஸ்வரூபமே என்பதால், ஜகத் என்பதும் பரமார்த்தம் என்ற அர்த்தம், சொல்லாமலேயே கிடைக்கின்றதே?

ஸித்தா:- ஜகத் என்பதும் பரமாத்மாத்மக ஸ்வரூபம் என்றால், ஜகத்தும் ஸச்சிதானந்த ஸ்வரூபமாக இருக்கவேண்டுமே? அதுமட்டுமல்ல. இந்த ஜகத் பரமாத்மாவின் சரீரம் என்றும், ஜகத்தும் பரமாத்மாவின் ஸ்வரூபமே என்று சொல்லப்படுமானால், அதேபோல் ஜீவனுடைய சரீரமும், ஜீவனுடைய ஸ்வரூபம் என்றால், ஜீவசரீரமும் ஜீவனாகவே ஆகவேண்டும். (ஜீவன் என்றே சொல்லவேண்டும்.) இவ்விதம் சொல்லப்படுமானால், ஜீவன், எவ்விதம் நித்யமோ, அதுபோல், ஜீவாத்மகமான, ஸ்தூலமான பாஞ்சபௌதிக சரீரமும் நித்யம் என்றே சொல்ல நேரிடும். அதனால் ஜீவன் நித்யம் என்றாலும் அவன் சரீரம் அநித்யம் என்று சொல்வதுபோல், பரமாத்மா, பரமார்த்தமாக இருந்தாலும் பரமாத்மாவின் சரீரம் என்று சொல்லப்படும் இந்த ஜகத் அநித்யம் என்று எல்லோராலும் அறியப்பட்ட விஷயமே. அதனால் உற்பத்தி உடையது என்றாலே, அதற்கு விநாசம் உண்டு என்பதால் ஜகத் அநித்யம் என்றே ஸித்திக்கின்றது. நீ ஒருவனே பரமார்த்தம், உன்னை அன்றி, மற்ற அனைத்தும் அபரமார்த்தம் என்பதால், இந்த இரண்டை அன்றி வேறாக தள்ளத்தக்கதான வஸ்து வேறு என்ன இருக்கின்றது? ஈச்வரன், சித், அசித் என்ற மூன்று வஸ்துக்களை அன்றி வேறு எதுவுமே கிடையாது என்றே உன்னாலேயே சொல்லப்படுகிறதே? ஆகவே, 'த்வமேவ ஏகம் பரமார்த்தம்' என்ற வாக்யத்திற்கு, ஜகத் பரமார்த்தம் என்று புத்தி நிதானமாக இருப்பவன் அர்த்தம் சொல்லமாட்டான்.

பூர்வ:- 'சிதசித் சரீரகனான நீயே பரமார்த்தம்' என்று அந்த வாக்யம் தெரிவிக்கின்றது என்று சொல்லலாமே?

ஸித்தா:- 'த்வமேவ ஏகம் பரமார்த்தம்' என்ற வசனம்தான் இருக்கின்றது. அதில் இல்லாத பதங்களைச்சேர்த்து அர்த்தம் செய்வது சரியல்ல. பரமாத்மாத்மகமாக இல்லாத ஜகத் என்பதே இல்லை என்று சொல்லப்படுமானால், ஒன்றுக்கொன்று விலக்ஷணமான ஸ்வரூபமாக இருக்கின்ற ஜகத்தும், பரமாத்மாவும் ஒரே ஸ்வரூபமாக எவ்விதம் இருக்கமுடியும்? அது மட்டுமல்ல, சரீரமும், சரீரியும் ஒன்றே என்று அஞ்ஞானத்தினால் அவிவேகிகள்தான் சொல்லமுடியும். விவேகிகள் ஆத்மா வேறு அனாத்மா வேறு என்றே பிரித்து அறிகின்றார்கள். அதுவே விவேகம். ஆகையால் உன்னால் சொல்லப்படும் அர்த்தம் எதுவுமே பொருந்தாது.

104

'तवैष महिमा' इत्यादिविष्णुपुराणान्तर्गतश्लोकानां जगन्मिथ्यात्वपरत्ववर्णनम् ।

''*தவைஷ மஹிமா*'' இத்யாதி விஷ்ணுபுராணாந்தர்கதஸ்லோகானாம் ஜகன்மித்யாத்வபரத்வவர்ணனம்

பூர்வ:- '*பரமார்த்தஸ்த்வமேவைகோ...*' என்ற ச்லோகத்தில், (இதற்கு முற்பட்ட பகுதியில்) ஹே! ஜகத்பதியான நாராயணனே! நீ ஒருவனே பரமார்த்தம் உன்னை அன்றி வேறாக எதுவுமே இல்லை, நீயே இந்த ஸர்வ சராசரத்தையும் வ்யாபிக்கின்றாய். இதுவே உன்னுடைய மஹிமை என்று தெரிவிக்கின்றது. அதனால் ஜகத் மித்யை என்று அத்வைதிகளான உங்களால் சொல்லப்படுகிறது அது சரியல்ல. பரமாத்மா ஸர்வத்திலும் வ்யாபித்திருக்கின்றதால், பரமாத்மாவிற்கு அன்யமாக எதுவுமே கிடையாது என்றே இந்தச்லோகம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- பரமாத்மா வ்யாபித்திருக்கின்றார் என்றால், வ்யாப்யமான வஸ்து ஒன்று இருந்தால்தானே அதை வ்யாபிக்கின்றார் என்று சொல்லமுடியும்? பரமாத்மா, தன்னையே வ்யாபிக்கின்றாரா? அல்லது தனக்கு வேறான வஸ்துவை வ்யாபிக்கின்றாரா? தன்னையே வ்யாபிக்கின்றார் என்று சொல்வது பொருந்தாது. ஆகாசம் ஆகாசத்தையே வ்யாபிக்கின்றது என்று சொல்லமுடியாது. அதனால் பரமாத்மாவிற்கு அன்யமான வஸ்துவையே வ்யாபிக்க வேண்டும். அதனால் பரமாத்மாவிற்கு அன்யமான வஸ்து எதுவுமே இல்லையென்று சொல்லமுடியாது. அதுமட்டுமல்ல, பரமாத்மாவே ஸர்வத்திற்கும் ஆத்மாவாக (ஸ்வரூபமாக) இருப்பதால், பரமாத்மாவை அன்றி வேறல்ல என்று சொல்லப்படுமானால், ஜீவாத்மாவும் அந்தந்த சரீரம் பூரா வ்யாபித்திருக்கின்றதாகவே சொல்லவேண்டும். அதனால் இவ்விதம் ஜீவனால் வ்யாபிக்கப்பட்ட இந்த சரீரம் ஜீவாத்மாவை அன்றி வேறல்ல என்று சொல்ல முடியுமா? இவ்விதம் சொல்லமுடியுமானால்தான், இதேபோல் பரமாத்மாவும் ஆத்மத்வேன ஜகத்தை வ்யாபிக்கின்றதால், பரமாத்மாவை அன்றி இந்த ஜகத் வேறல்ல என்ற சொல்லலாம். ஆகையால், இந்த ச்லோகத்தில் 'பரமாத்மாவான நீதான் பரமார்த்தம்,' 'உன்னால் வ்யாபிக்கப்படுவது அனைத்தும் அபரமார்த்தம்' என்றே சொல்லப்படுகிறது.

பூர்வ:- ஜகத் உபாதிகன் பரமாத்மா என்றும், பரமாத்மாவினால் ஜகத் வ்யாபிக்கப்படுகிறது என்பதால், ஜகத் வ்யாபகத்வம் பரமாத்மாவிற்கு இருக்கின்றது என்றே உங்களாலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. அதனால் ஜகத் மித்யை என்று சொல்லப்படுமானால், மித்யா ஜகத்தை வ்யாபிக்கின்ற பரமாத்மாவும், பரமார்த்தம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் அநித்யமான ஜகத்தை சரீரமாகக்கொண்டு அதை வ்யாபித்திருக்கின்ற பரமாத்மா ஸத்யமாக இருக்கமுடியாது.

ஸித்தா:- ஜகத்தை பரமாத்மாவிற்கு சரீரம் என்று சொல்லப்பட்டாலோ அல்லது ஜகத்திற்கு வ்யாபகர் என்று பரமாத்மாவை சொல்லப்படுவதாலோ, பரமாத்மாவிற்கு ஸத்யத்வம்

சொல்லப்படுவதில் ஹானி ஏதுமில்லை. ஜகத் அநித்யம், அதனால் அஸத்யம். பரமாத்மா நித்யன். அதனால் ஸத்யம். ஜகத் சரீரமாக இருப்பதாலும் வ்யாபிக்கப்படுவதாக (வ்யாப்யமாக) இருப்பதாலும் அநித்யம். சரீரம் அநித்யமென்பது லோகப்ரஸித்தம். அதேபோல் வ்யாப்யமான கடாதிகளும் அநித்யம். எதுபரிச்சின்னமோ அது அநித்யம் என்பது லோகப்ரஸித்தம். மேலும் பரமாத்மாவிற்கு சரீரம் இருப்பதாகச்சொல்லவேண்டுமானால் அநித்யமான ஒரு வஸ்துவை பரமாத்மாவிற்கு சரீரம் என்று சொன்னால் பொருந்தும். ஆனால் நித்யமான ஜீவனை, பரமாத்மாவிற்கு சரீரம் என்று சொல்வது பொருந்தாது. அதனால் ஜீவன் பரமாத்மாவினால் வ்யாபிக்கப்படுவதாகச் சொல்லமுடியாது. அவ்விதம் சொல்லப்படுமானால் ஜீவன் அநித்யனென்று சொல்லநேரிடும். ஆகாசத்தினால் வ்யாபிக்கபடும் கடாதிகள் அநித்யம் என்பது லோகப்ரசித்தம். ஆனால் சரீரத்திற்குள் இருக்கின்ற ஜீவனும் கடாதிகளில் வ்யாபிக்கின்ற ஆகாசமும் நித்யம் என்றே சொல்லப்படுகிறது. அதனால் அஸத்யமான ஜகத்தை சரீரமாகக்கொண்ட பரமாத்மாவிற்கு அஸத்யத்வம் ஸம்பவிக்கமுடியாது. ஜீவனும் பரமாத்மாவும் வேறல்ல, ஒன்றே. ஜகத் என்றும் பரமாத்மா என்றும் சொல்லப்படுவதில் பரமாத்மா ஒன்றே ஸத்யம். அதற்கு அன்யமான ஜகத், மித்யை என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. இவ்விதம் ஸர்வஜகத்தும் பரமாத்மாவினால் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றது என்ற காரணத்தினாலேயே பரமாத்மா நித்யம் என்று சொல்லப்படுகிறது. அதுபோல் ஸர்வஜகத்தும் நித்யம் என்று சொல்லமுடியாது. மேலும் பரமாத்மாவின் சரீரம் ஜகத் என்று சொல்லப்படுமானால், இந்த ஜகத் பரமாத்மாவிற்கு அன்யம் என்றே சொல்லவேண்டும். இவ்விதம் அன்யமாக ஜகத் இருக்கிறது என்றால், பரமாத்மாவிற்கு அன்யமாக வேறு எதுவுமே கிடையாது என்று எவ்விதம் உன்னால் சொல்லமுடியும்? ஆனால் எங்கள் ஸித்தாந்தத்தில், ஜகத்பரமாத்மாவினிடம் கல்பிதம் என்று சொல்லப்படுவதால், ஸர்வ ஜகத்தும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அன்றி அன்யமாக இல்லை என்றே சொல்லப்படுகின்றதால் எங்கள் பக்ஷத்தில் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை. அதனால் எங்கள் ஸித்தாந்தமே சரி என்று ஸித்திக்கின்றது.

பூர்வ:- ஸர்வஜகத்திற்கும் அந்தராத்மாவாக, பரமாத்மாவே இருக்கின்றார் என்பதால் த்வமேவ பரமார்த்தம் என்று அர்த்தம் சொல்லலாமே?

ஸித்தா:- அதனால்தான் எங்கள் ஸித்தாந்தத்தில் 'பரமாத்மா' ஒன்றே பரமார்த்தம், மற்ற எல்லாமே அபரமார்த்தம் என்றே சொல்லப்படுகிறது. *'ஏஷ த ஆத்மா அந்தர்யாமீ அம்ருத:'* (एष त आत्मान्तर्याम्यमृतः) என்றும் *'அதோ அன்யத் ஆர்த்தம்'* (अतोन्यदार्तम्) என்ற ச்ருதி வாக்யங்கள் அந்தர்யாமியே அம்ருதன் என்றும் மற்றுமுள்ள அனைத்தும் மித்யை என்றே தெரிவிக்கின்றது. 'அம்ருதம்' என்பதே நித்யம், அதனாலேயே ஸத்யம் என்றும், அதற்கு அன்யமான ஸர்வமும் 'அநித்யம்' என்பதால் 'ஆர்த்தம்' என்று அஸத்யம் என்றே அறியப்படுகிறது. ஆகையால் ஸர்வத்திலும் ஸ்வரூபேண வ்யாபித்திருக்கின்ற பரமாத்மதத்வம் ஒன்றே பரமார்த்தம் என்றும் அதற்கு அன்யமான எல்லாமே அபரமார்த்தம் என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றதால் உன்னால் சொல்லப்படும் இந்த ச்லோகார்த்தம் பொருந்தாது.

பூர்வ:- 'பரமாத்மாவான நீ ஒருவனே இருக்கின்றாய்' என்று தெரிவிப்பதற்காக ஜகத்தே இல்லை என்று அர்த்தம் செய்வது சரியல்ல. உதாரணமாக, ஒரு தேசத்தின் ராஜாவைப்பார்த்து ஹே! ராஜன்! நீ ஒருவனே ராஜா, உன்னையன்றி வேறு யாருமே இல்லை என்று சொல்வானாகில், அதற்காக ராஜவைத்தவிர, வேறு ப்ரஜைகள் கூட இல்லை என்றோ அல்லது ராஜாவை அன்றி ப்ரபஞ்சமே இல்லை என்றோ அர்த்தமில்லை. உனக்கு ஸமானமாக யாருமே இல்லை என்றுதான் அர்த்தம் சொல்லவேண்டும். அதேபோல் 'பரமாத்மா நீ ஒருவனே' என்பதால் உனக்கு ஸமானமானவன் வேறு யாருமில்லை என்றுதான் அர்த்தம் செய்யவேண்டும். அதனால் பரமாத்மா ஒருவர்தான் இருக்கின்றார் என்பதற்காக மற்ற எல்லாமே மித்யை என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- ''நீ ஒருவனே ராஜா, உன்னையன்றி வேறு யாருமே இல்லை'' என்று த்ருஷ்ட்டாந்தமாக தெரிவிக்கப்பட்ட வாக்யத்திலுள்ள அன்யசப்தத்திற்கு ஸமானம் என்றே அர்த்தம் சொல்லவேண்டும் அவ்விதம் சொல்லாவிடில், அந்த வாக்யமே அப்ரமாணமாகும். ஆனால் தார்ஷ்ட்டாந்தத்தில் அன்யசப்தத்திற்கு முக்யார்த்தம் சொல்வதில் ஹானி ஏதும் இல்லை.

பூர்வ:- 'ஜகத:பதே' என்று ச்லோகத்தில் தெரிவிகின்றது அதனால் ஜகத் என்பதே இல்லை என்றால் பரமாத்மா யாருக்கு பதி? அதனால் த்வமேவ ஏகம் பரமார்த்தம் என்ற வாக்யத்திற்கு ஜகத் அபரமார்த்தமென்று அர்த்தம் செய்வது சரியல்ல.

ஸித்தா:- இந்த ஜகத் மனுஷ்ய கொம்பு போல் அத்யந்த அஸத் அல்ல, வ்யவஹாரதசையில் வ்யவஹார யோக்யமாக இருக்கின்றது என்றே சொல்லப்படுகின்றது. வ்யவஹாரதசையில்தான் ஹே! ஜகத்பதே! என்று ஸம்போதனம் செய்யப்படுகிறது. பரமார்த்த நிலையில் ஜகத் என்பதே கிடையாது என்றே '*த்வமேவ ஏக: பரமார்த்த:*' என்று ச்லோகம் தெரிவிக்கிறது. '*ந அன்யோதோஸ்தி த்ரஷ்ட்டா*' என்று ச்ருதியும் இதை தெரிவிக்கின்றது.

பூர்வ:- இந்த ச்லோகத்தில் 'த்வமேவ ஏக:' என்ற வாக்யம் நீ ஒருவனே என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. 'ஏக:' என்ற பதம் எல்லாவற்றிலும் 'நீயே முக்யம்' என்று முக்யம் என்ற அர்த்தத்தில்தான் தெரிவிக்கின்றது. அதனால் உன்னைதவிர மற்ற எல்லாமே அப்ரதானம் என்று அர்த்தம் செய்யவேண்டுமே அன்றி வேறு எதுவுமே இல்லை என்று அர்த்தம் செய்வது சரியல்ல. ஆகவே பரமாத்மா ப்ராதான்யேன அஸ்தி என்றும் ஜகத் அப்ரதான்யேன அஸ்தி என்றும் சொல்லலாம்.

ஸித்தா:- '*த்வமேவ ஏக: பரமார்த்த:*' என்ற வாக்யத்திற்கு 'நீயே முக்ய பரமார்த்தம் என்றும், ஜகத் அமுக்ய பரமார்த்தம்' என்று உன்னால் சொல்லப்படுவதுபோல் அர்த்தம் செய்யப்பட்ட போதிலும் ஜகத் மித்யை என்றுதான் அர்த்தம் கிடைக்கின்றது. அதனால் ஜகத் வ்யாவஹாரிகம் என்றே ஸித்திக்கின்றது. அதாவது ப்ரதானமான நீயே பரமார்த்தம் என்றால் மற்ற ஸர்வஜகத்தும் அபரமார்த்தம் என்றே ஸித்திக்கின்றது.

பூர்வ:- இந்த ஜகத்மித்யா பூதமாக இருக்குமானால் '*தவைஷ மஹிமா யேந வ்யாப்தமேதச்சராசரம்*' (तवैष महिमा येन व्याप्तमेतच्चराचरम्) என்று சொல்லப்பட்டிருக்க முடியாது. ஏனெனில் பரமாத்மாவான உன்னுடைய மஹிமையினால் சராசரமான ஸர்வ

ஜகத்தும் வ்யாபிக்கப்படுகின்றது என்று சொல்லப்படுவதால் ஜகத் மித்யை என்று சொல்லமுடியாது. ஜகத் மித்யை என்றால் 'தவைஷ ப்ராந்தி:' என்றே சொல்லப்பட வேண்டுமே அன்றி 'தவைஷ மஹிமா' என்று தெரிவித்திருக்கமுடியாது.

ஸித்தா:- இதுவும் சரியல்ல. ஏனெனில் 'தவைஷ *ப்ராந்தி:' என்று தெரிவித்திருக்குமானால் ஈச்வரனுக்கே ப்ராந்தி* என்று சொல்லப்பட்டதாக ஆகும். ஜீவர்கள் அறியாமையினால் ஈச்வரனுக்கு வேறான இந்த ஜகத் (சராசரங்கள்) பகவானால் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றது என்று நினைக்கின்றார்களென்று சொல்லலாமே அன்றி, ஈச்வரனுக்கே ப்ராந்தி இருக்கின்றது என்று சொல்லமுடியாது. மேலும், உண்மையில் ஈச்வரனைக்காட்டிலும் வேறாக இந்த ஜகத் இல்லை என்றாலும் இந்த ஜகத் ஈச்வர மஹிமை என்பதால் ஜீவனுக்கு இந்த ஜகத் ஸத்யமென்று ஸத்யத்வ புத்தி ஏற்படுகிறது என்றே 'தவைஷ மஹிமா' என்ற வாக்யம் தெரிவிக்கின்றது. அவிவேகத்தினால் ஜகத் பரமார்த்தம் என்று நினைக்கின்றார்களே அன்றி உண்மையில் பரமாத்மாவை அன்றி வேறு எதுவும் தத்வம் அல்ல. ஸர்வஜகத்தும் பரமாத்மாவின் விபூதி என்றே தெரிவிக்கின்றதால் வ்யவஹாரம் உள்ள பர்யந்தம் அறியப்படும் பேதத்தை அனுவாதம் செய்து வித்வான்கள் தத்வத்தை போதிக்கின்றார்கள் என்றே சொல்லவேண்டும். ஈச்வரன் சராசரங்களை வ்யாபித்திருக்கின்றார் என்று இந்த ச்லோகத்தில் தெரிவிப்பது போலவே பகவானும், 'யத்யத் விபூதிமத் ஸர்வம்' என்று கீதையில் தெரிவிக்கின்றார்.

பூர்வ:- இந்த ப்ரபஞ்சம் மித்யை என்று இந்த ச்லோகத்திற்கு அர்த்தம் சொல்லமுடியாது. ஏனெனில் பகவான் வராக அவதாரம் எடுத்து அசுரனை ஜெயித்து ப்ரபஞ்சத்தை காப்பாற்றினார் என்று பகவானை ஸ்துதிக்கின்ற ப்ரகரணத்தில் இந்த ச்லோகம் சொல்லப்படுகிறது. அதனால் பகவானை அன்றி மற்ற எல்லாமே மித்யை என்று சொல்லப்படுமானால் பகவானை ஸ்துதிப்பதாக சொல்லமுடியாது. அதனால் ப்ரகரண விரோதம் ஏற்படுகிறது.

ஸித்தா:- நிர்குணமான பரப்ரஹ்மம் ஒன்றே பரமார்த்தம். ஆனால் மாயையினால் அறியப்படும் ஸகுணஸ்வரூபத்தை இவ்விதம் ஸ்துதிக்கப்படுகிறது. இதனால் அத்வைதமான தத்வத்திற்கு எவ்விதமான ஹானியும் கிடையாது. ஸகுணம் நிர்குணம் என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டது அல்ல. ஸகுண ஸ்வரூபத்தை ஸ்துதி செய்தாலும் நிர்குண ஸ்வரூபத்தை ஸ்துதிசெய்தாலும் இரண்டுமே நிர்குண ஸ்துதிதான். நிர்குணபரமாத்ம ஸ்வரூபத்தையே ஸ்தோத்ரம் செய்ததாகவே ஆகும். பக்தர்கள் பகவானை ஸ்துதி செய்வார்களானால் ஸகுணஸ்வரூபம் நிர்குண ஸ்வரூபம் இரண்டையுமே ஸ்தோத்ரம் செய்வார்கள். '*விசுத்தம் பரம் ஸச்சிதானந்த ரூபம், குணாதாரம் ஆதாரஹீனம் வரேண்யம், மஹாந்தம் விபாந்தம் குணாந்தம் குஹாந்தம், ஸுகாந்தம் ஸ்வயம் தாம ராமம் ப்ரபத்யே*' என்று ராம புஜங்க ஸ்தோத்ரம் தெரிவிக்கின்றது. ஆகவே வராஹ அவதாரத்திலும் அவருடைய ஸ்வாபாவிக ஸ்வரூபத்தை தெரிவித்து உன் மஹிமையினாலேயே இந்த ஜகத் தோன்றுகிறது (மித்யாபூதம்) என்றே ஸ்தோத்ரம் செய்யலாம். அதனால் ஸகுணமான மூர்த்தியை ஸ்துதிக்கின்றது என்றே சொல்லப்படவேண்டும். இவ்வாறு சொல்வதால் அது நிந்தை அல்ல. பாகவதத்திலும் '*ஸ வை மம அசேஷ விசேஷ மாயா நிஷேத நிர்வாண ஸுகானுபூதி: ஸ ஸர்வநாமா ஸ ச*

விச்வரூப: ப்ரஸீததாம் அனிருக்தாத்ம சக்தி:' என்றும் இந்த கருத்தையே தெரிவிக்கின்றது. இதேபோல் கஜேந்த்ரனும் *'ந வித்யதே யஸ்ய ச ஜன்ம கர்ம வா, ந நாமரூபே குணதோஷ ஏவ வா, ததாபி லோகாப்யயஸம்பவாய, ஸ்வமாயயா தான்யனுகூலம் ருச்சதி'* (न विद्यते यस्य च जन्म कर्म वा न नामरूपे गुणदोष एव वा ॥ तथापि लोकाप्ययसम्भवाय स्वमायया तान्यनुकूलमृच्छति ॥) என்று ஸ்துதிக்கின்றது. அதாவது எந்த பகவானுக்கு ஜன்மாவோ கர்மாவோ கிடையாதோ, நாமரூபமென்ற தோஷங்களும் கிடையாதோ அந்த நித்ய முக்த ஸ்வரூபம், லோக ச்ருஷ்ட்டி ஸம்ஹாராதிகளை செய்வதற்காக ஸ்வமாயையினால் ஜன்மா எடுத்து கர்மாக்களைச்செய்து அதற்குரிய நாம ரூபங்களையும் குணதோஷங்களையும் உடையவராக ஆகின்றார் என்று பூர்வார்த்தம் நிர்குணமாகவும், உத்தரார்த்தம் ஸகுணமாகவும் ஸ்துதிக்கப்படுகிறது இதனால் அத்வைத ஹானி ஏதும் இல்லை. இப்பொழுது மற்றும் ஒரு விஷ்ணு புராண ஸ்லோகம் விசாரிக்கப்படுகிறது.

'யதேதத்த்ருச்யதே' இத்யாதி விஷ்ணுபுராணாந்தர்கத ச்லோகானாம் ஜகன்மித்யாத்வ பரத்வ வர்ணனம்.

பூர்வ:- விஷ்ணு புராணத்தில் *'யதேதத் த்ருச்யதே மூர்த்தமேதத் ஞானாத்மனஸ்தவ ப்ராந்திஞானேன பச்யந்தி ஜகத்ரூபமயோகின:'* (यदेतद्दृश्यते मूर्तमेतद् ज्ञानात्मनस्तव । भ्रान्तिज्ञानेन पश्यन्ति जगद्रूपमयोगिनः) என்று விஷ்ணுபுராணம் 1.4.39 தெரிவிக்கின்றது. இதன் கருத்து என்னவென்றால் ஸர்வலோகத்திலும் அந்தர்யாமியாக வ்யாபித்து பரமாத்மா இருக்கின்றதால் ஸர்வஜகத்தும் பரமாத்மாவின் மூர்த்தஸ்வரூபம். ஆனால் இவ்விதம் ஜகத்ஸ்வரூபத்தை அறியாதவர்கள் கேவல ஜடஸ்வரூபமான தேவ, மனுஷ்யர் முதலான சரீரம் இந்த ஜகத் என்று ப்ராந்தியினால் நினைக்கின்றார்கள். இது சரியல்ல. ஸர்வம் பகவத்ஸ்வரூபம் என்று அறியவேண்டுமேன்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இது சரியல்ல. ச்லோகத்திற்கு நேரிடையாக அறியப்படும் அர்த்தத்தை விட்டு அதில் சொல்லப்படாத அர்த்தத்தை கல்பனை செய்வது சரியல்ல. பூதபௌதிகமான ஜடமான ஸர்வ ஜகத்தும் நம்மால் அறியப்படுகின்றது. இவை எல்லாமே பரமாத்ம ஸ்வரூபத்தில் ஆரோபிதம். அவித்யையினால் தோன்றுகிறது. ஆரோபிதமான ஸர்வ ஜகத்திற்கும் அதிஷ்ட்டானமான பரமாத்மாவே ஸ்வரூபம் என்று அறியாமல் அஞ்ஞர்கள், பரமாத்ம ஸ்வரூபத்தை அன்றி வேறாக இந்த ஜகத் பரமார்த்தமாக (ஸத்யமாக) இருக்கின்றதென்று ப்ராந்தியினால் அறிகின்றார்கள் என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. இதையே ச்ருதி வாக்யங்களும் *'இதம் ஸர்வம் யதயமாத்மா'* (इदं सर्वं यदयमात्मा) என்றும் *'ஐததாத்ம்யம் இதம் ஸர்வம்'* (ऐतदात्म्यमिदं सर्वम्) என்றும் *'ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம'* (सर्वं खल्विदं ब्रह्म) என்றும் தெரிவிக்கின்றது. இதேபோல் *'வாஸுதேவ: ஸர்வம் இதம்'* वासुदेवस्सर्वमिति என்று ஸ்ம்ருதி வாக்யமும் 'த்ருச்யமானஸர்வமும் த்வமேவ' என்றும் 'இதம் என்று அறியப்படும் ஸர்வமும் நீயே' 'நீயே ஞான ஸ்வருபம்' என்று தெரிவிக்கின்றது. இவ்விதம் ஆரோபிதங்களுக்கு அதிஷ்ட்டானமான பரமாத்ம ஸ்வருபத்தை அன்றி வேறாக தனித்த ஸ்வரூபம் எதுவுமே கிடையாது என்றே தெரிவிக்கின்றது. நீதான் ஜகத், நீயே ஞானஸ்வரூபம் என்று அறியாத அஞ்ஞானிகள் இந்த ஜகத் உன்னை அன்றி வேறாக

இருப்பதாக அறிகின்றார்கள். ஆனால் ஞானிகள் ஸர்வம் ப்ரஹ்மஸ்வரூபமே என்று அறிகின்றார்களே அன்றி ப்ரஹ்மத்தின் ரூபம் ஜகத் என்று அறிவதில்லை. இவ்விதம் அறியாமல் ஜகத் ப்ரஹ்மத்தை அன்றி வேறாக இருப்பதாக அறியப்படுமானால், ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பம் போல், அந்த ஞானம் ப்ராந்திஞானம் என்றே சொல்லவேண்டுமே அன்றி அது தத்வஞானமல்ல.

ज्ञानस्वरूपमखिलम् என்று தொடங்கும் ச்லோகம் இந்த ஸமயத்தில் விசாரிக்கப்படுகிறது.

ஞானஸ்வரூபமகிலம் ஜகதேததபுத்தய: ।
அர்த்தஸ்வரூபம் பஶ்யந்தோ ப்ராம்யந்தே மோஹவிப்லவே ॥

'ज्ञानस्वरूपमखिलं जगदेतदबुद्धयः ।
अर्थस्वरूपं पश्यन्तो भ्राम्यन्ते मोहविप्लवे'

(விஷ்ணுபுராணம் 1.4.40)

பூர்வ:- ஸர்வ ஜீவர்களும் ஞானஸ்வரூபமே. ஆனால் அஞ்ஞானிகள் ஜீவனை தேவன் மனுஷ்யன் முதலான சரீரங்களாக அறிகின்றார்கள். தேஹாதிகள் ஆத்மஸ்வரூபம் அல்ல அதனால் ஞானஸ்வரூபமான ஜீவர்களை ஜடஸ்வரூபமான சரீரங்களாக அறிவதே ப்ராந்தி ஞானம். அதாவது பரமாத்மாவின் ஸ்வரூபவிஷயத்தில் ஜீவர்களுக்கு இரண்டுவிதமான ப்ராந்திஞானம் ஏற்படுகிறது. அதில் பரமாத்மாவின் ஸ்வரூபமே ஜகத் என்று அறியாமல், அதற்கு அன்யமாக தேவமனுஷ்யாத்மகமாக அதத்ரூபமாக அறிவது ஒரு ப்ராந்திஞானம். இதேபோல் ஞானஸ்வரூபமான ஜீவர்களை மனுஷ்யன், தேவன் என்ற சரீரங்களாக அறியப்படுவது மற்றொரு ப்ராந்திஞானம். ஸர்வஜகத்திலும் ஞானஸ்வரூபமான பரமாத்மா, ஆத்மாவாக வ்யாபித்திருக்கின்றதால் ஸர்வஜகத்தும் பரமாத்மாவிற்கு சரீரம் (மூர்த்தம்). இவ்விதம் ஞானாகாரமான ஜீவர்களை அர்த்தாகராமான தேவமனுஷ்யாதி சரீரங்களாக ப்ராந்திஞானத்தினால் ப்ரமிக்கின்றார்கள். இவ்விதம் தத்வத்தை அறிந்துகொள்ளக்கூடிய சக்தி அற்றவர்கள் கேவலஜகத்தையே ப்ராந்தி ஞானத்தினால், தேவமனுஷ்யாதி ரூபமாக அறிகின்றார்கள், என்பதே இந்த ச்லோகார்த்தம் என்று சொல்லவேண்டும்.

ஸித்தா:- பரமாத்மாவிற்கு சரீரமான இந்த ஜகத்தை 'பரமாத்மா' என்று எவ்விதம் உன்னால் சொல்லப்படுகிறதோ அதேபோல் தேவ மனுஷ்யாதி சரீரங்களை ஜீவன் என்று அறியப்படுமானால் அதில் என்ன தவறு? அதை ப்ராந்தி ஞானம் என்று சொல்லவேண்டிய அவச்யம் இல்லை, யதார்த்தஞானம் என்றே சொல்லலாமே?

பூர்வ:- தேவ மனுஷ்யாதி சரீரங்களும் பகவத் சரீரம் என்பதால் அதை ஜீவ சரீரம் என்று அறியப்படுமானால் அது ப்ராந்தி ஞானம்தானே?

ஸித்தா:- தேவமனுஷ்யாதி சரீரங்களை ஜீவ சரீரம் என்றே சொல்லவேண்டும். ஜீவ சரீரத்தை ஜீவ சரீரம் என்று அறியப்படுமானால் அதை ப்ராந்திஞானம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதுமட்டுமல்ல, ச்லோகத்தில் உள்ள ஜகத் என்ற பதத்திற்கு ஜீவர்கள் என்று அர்த்தம் சொல்வதும், ஞானாகாரமான ஆத்மா ஜகத் என்றும் அர்த்தம் செய்வது சரியல்ல.

பூர்வ:- ஜகத் சப்தம் அனாத்மாவைத்தான் குறிக்கும் என்றும் ஆத்மாவை குறிக்காது என்றும் சொல்வதுசரியல்ல. ஏனெனில் '*த்ரிபிர்குணமயைர்பாவை: ஏபிஸ்ஸர்வமிதம் ஜகத், மோஹிதம் நாபிஜானாதி மாமேப்ய: பரம் அவ்யயம்*' (त्रिभिर्गुणमयैर्भावैरेभिस्सर्वमिदं जगत्। मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम्) என்று, கீதாவசனமே ஜகத் சப்தம் சேதனவாசி என்று சிதசிதாத்மகம் ஜகத் என்றே தெரிவிக்கின்றது. இந்த ப்ரபஞ்சம் முக்குணத்தினால் மோஹத்தை அடைந்து, பரமாத்மாவான நானே உண்மையான தத்வம் என்று அறியவில்லை என்று கீதாவசனம் தெரிவிக்கின்றதே அன்றி ஜடமான ஜகத்தைப்பற்றி தெரிவிக்கவில்லை. ஏனெனில், ஜடத்திற்கு மோஹம் என்பதே ஸம்பவிக்காது, அதனால் கீதாவசனமும் ஜகத் என்ற பதத்தினால் சேதனனான ஜீவனையே ஆத்ம தத்வத்தையே குறிக்கின்றது. அதேபோல் இந்த இடத்திலும் ஜகத்சப்தம் ஜீவனை குறிக்கின்றது என்றே சொல்லலாமே? சிதசிதாத்மகம் ஜகத்தென்று ஜகத்சப்தம் சேதனவாசகமாக ஜீவனையே குறிக்கின்றது. அதனால் கேவல ஜடம் மட்டும் ஜகத் சப்தார்த்தம் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- கீதாவசனத்தில் சொல்லப்படும் ஜகத் சப்தார்த்தம் முக்யார்த்தம் அல்ல அதனால் முக்யார்த்தத்திற்கு பாதம் ஏற்படுவதால், லக்ஷ்யார்த்தமே சொல்லவேண்டும் '*த்ரிபிர்குணமயைர்பாவைரேபிஸ்ஸர்வமிதம் ஜகத், மோஹிதம் நாபிஜானாதி மாமேப்ய: பரம் அவ்யயம்*' என்ற கீதாவசனத்தில் உள்ள '*மோஹிதம் நாபி ஜானாதி*' என்ற பதம் ஜகத்தை குறிக்கின்றது என்று சொல்லமுடியாது. அதனால் லக்ஷ்யார்த்தமான சேதனனையே குறிக்கின்றது என்றே சொல்லவேண்டும். ஏனெனில் அசேதனத்திற்கு ஞான ப்ரஸக்தியே இல்லாததால் '*ப்ரஸக்தம் ஹி நிஷித்யதே*' என்ற (प्रसक्तं हि निषिध्यते) ந்யாயத்தின்படி, அசேதனத்திற்கு ஞான நிஷேத யோக்யத்வமே கிடையாது என்பதால் முக்யார்த்தம் ஸம்பவிக்காது. அதனால் கீதாவசனத்தில் உள்ள ஜகத்சப்தம் சேதனனையே தெரிவிக்கின்றது. ஆனால், இந்த விஷ்ணு புராண ச்லோகத்தில் ஜகத் சப்தத்திற்கு லோகம் (ஜடம்) என்றே அர்த்தமென்பதால் இந்த இடத்தில் முக்யார்த்தமே ஸம்பவிக்கின்றது அதுவே பொருந்துகின்றது. ஆகையால் இந்த இடத்தில் ஜீவன் என்று அர்த்தம் செய்வது பொருந்தாது.

பூர்வ:- ஞானஸ்வரூபம் அகிலம் ஜகத் என்ற ச்லோகத்தில் ஜடமான ஸர்வஜகத்தையும் ஞானஸ்வரூபம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் இந்த இடத்தில் முக்யார்த்தபாதம் ஏற்படுவதால் லக்ஷ்யார்த்தமான ஜீவனை குறிப்பதாகவே சொல்லவேண்டும்.

ஸித்தா:- 'அகிலம் ஜகத் ஞானஸ்வரூபம்' என்று தெரிவிப்பதில் பொருந்தாத விஷயம் ஏதுமில்லை. ஜகத்தின் உண்மையான ஸ்வரூபம் ஞானம்தான். ஞானஸ்வரூபத்தில்தான் ஸர்வஜகத்தும் கல்பிதம். கல்பிதங்களுக்கெல்லாம் அதிஷ்ட்டானமே ஸ்வரூபம் என்பதால், அதை அன்றி வேறு ஸ்வரூபமே கிடையாது என்றே 'ஞானஸ்வரூபம் அகிலம்' என்று தெரிவிக்கின்றது. அதனால் ஜகத் மித்யாத்வத்தையே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. இந்த உண்மையை அறியாத அஞ்ஞானிகள் பரமாத்மா வேறு ஜகத் வேறு என்று ப்ரமிக்கின்றார்கள் என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதனால் இந்தச்லோகத்தில் ஜகத் சப்தம் பொருத்தமாகவே இருக்கின்றது.(பொருந்தாமல் இல்லை)

பூர்வ:- தேஹத்திற்கும், தேஹியான ஆத்மாவிற்கும் ஸம்ஸர்க்கம் இருக்கின்றதால் ப்ராந்தி ஏற்படுகிறது என்று சொல்லவேண்டும். இவ்விதம் ஸம்ஸர்கத்தினால் ப்ராந்தி ஏற்படுகிறதே அன்றி தாதாத்ம்ய அத்யாஸத்தினால் ப்ராந்திஞானம் ஏற்படுகிறது என்று சொல்வது சரியல்ல. ஜலம் அக்னியினால் சூடாகிறது என்று அறியாமல் ஜலமே உஷ்ண சக்தி உடையது என்று எவரும் சொல்லமாட்டார்கள். அக்னி ஸம்பந்தத்தினாலேயே ஜலம் சூடாக இருக்கின்றதென்றே, அறிகின்றார்கள். அதேபோல் தேஹம் ஆத்மா இரண்டிற்கும் ஸம்பந்தமிருப்பதனாலேயே தேஹமே நான் என்று நினைக்கின்றார்களே அன்றி அத்யாஸத்தினால் ப்ராந்திஞானம் ஏற்படுகிறது என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- இது சரியல்ல. இரண்டு வஸ்துக்களின் ஸம்பந்தமே ஸம்ஸர்க்கம் என்று சொல்லப்படும். ஆத்மாவிற்கு எந்த வஸ்துவுடனும் ஸம்பந்தமே ஏற்படமுடியாது என்றே அஸங்கஸ்வரூபம் ஆத்மா என்று ச்ருதி தெரிவிக்கின்றது. அதனால் தேஹத்திற்கும் ஆத்மாவிற்கும் தாதாத்ம்ய அத்யாஸம் இருக்கின்றதாலேயே ப்ராந்தி ஞானம் என்று சொல்லப்படுகிறது. ஸம்ஸர்க்கத்தினால் ப்ராந்தி என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- *'யே து ஞானவிதச்சுத்தசேதஸஸ்தே அகிலம் ஜகத், ஞானாத்மகம் ப்ரபச்யந்தி த்வத்ரூபம் பரமேச்வர'* (ये तु ज्ञानविदश्शुद्धचेतसस्तेऽखिलं जगत् । ज्ञानात्मकं प्रपश्यन्ति त्वद्रूपं परमेश्वर) என்ற விஷ்ணு புராணச்லோகத்தில் (1.4.41) எவர்கள் ஆத்மஞானத்தை அடைந்தவர்களோ, அவர்கள் சுத்தசித்தமுடையவர்கள் (சுத்தமனசை உடையவர்கள்). இந்த ஸர்வஜகத்தும் ஞானஸ்வரூபம் என்றும் இந்த ஜகத் உன்னை அன்றி வேறல்ல உன் ஸ்வரூபமே என்றும் அறிவாளிகள் அறிகின்றார்கள். இவ்விதம் தேவ மனுஷ்யர் முதலான சரீரங்கள் எல்லாம், ப்ரக்ருதி பரிணாமமாக, பகவானுடைய சரீரமாக, பரிணாமத்தை அடைந்திருக்கும் இந்த ஜகத் உன் ஸ்வரூபமே என்றும் அறிவாளிகள் அறிகின்றார்கள் என்றே சொல்லப்படுகிறது.

ஸித்தா:- இது சரியல்ல. *'ஞானஸ்வரூபம் அகிலம் ஜகத் ஏதத் அபுத்தய:, அர்த்தஸ்வரூபம் பச்யந்தோ ப்ராம்யந்தே மோஹவிப்லவே'* (ज्ञानस्वरूपमखिलं जगदेतदबुद्धयः । अर्थस्वरूपं पश्यन्तो भ्राम्यन्ते मोहविप्लवे ॥) என்று முன்னால் சொல்லப்பட்ட ச்லோகத்தில், (வி.பு.1.4.40) ஞானஸ்வரூபமான பரமாத்மாவினிடம் ஸர்வ ஜகத்தும் ஆரோபிதமென்றும் ஆரோபிதங்களுக்கெல்லாம் அதிஷ்ட்டான ஸ்வரூபமே தத்வம் என்ற விவேகமில்லாதவர்கள் ஜகத் என்று ஒரு வஸ்து தனியாக பரமார்த்தமாக இருக்கின்றதென்று தெரிவிக்கின்றார்கள் என்று சொல்லப்பட்டது. அடுத்த ச்லோகத்தில் (1.4.41) அதற்கு வ்யதிரேகமாக ஜகத் மித்யை அபரமார்த்தம் என்றே ஞானிகள் அறிகின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் இரண்டு ச்லோகங்களிலும் 'அகிலம் ஜகத்' என்றே சொல்லப்பட்டிருக்கின்றதால், முதல் ச்லோகத்திலுள்ள அகிலம் ஜகத் என்ற பதத்திற்கு 'ஜீவன்' என்று அர்த்தம் என்றும், இரண்டாவதாக சொல்லப்படும் 'அகிலம் ஜகத்' என்ற பதத்தில் ஜகத் என்ற பதம், தேவன், மனுஷ்யர் முதலான சரீரங்களான, ப்ரக்ருதி பரிணாம விசேஷத்தையே ஜகத் சப்தார்த்தம் தெரிவிக்கின்றது என்றும் சொல்லப்படுவது முன்னுக்குப்பின் முரணாக பேசுவது வ்யாகாதம் (பொருந்தாது). ஏனெனில் இரண்டு ச்லோகத்திலும் 'அகிலம் ஜகத்' என்றே பதப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் ஸர்வ ஜகத்தையும் அஞ்ஞானிகள்

பரமார்த்தம் என்று அறிகின்றார்கள் (நினைக்கின்றார்கள்), ஞானிகள் ஸர்வஜகத்தும் மித்யை அபரமார்த்தம் என்றே அறிகின்றார்கள் என்றே இந்த ச்லோகங்களில் 'அகிலம் ஜகத்' என்று சொல்லப்படுகிறது. அதுவே அதன் தாத்பர்யம்.

ஜகத் என்பது ஞானஸ்வரூபம் என்று சொல்லப்படுவதால் பரமாத்ம ஸ்வரூபமே ஜகத் என்று எவ்விதம் சொல்லமுடியும் என்றால், ஞானஸ்வரூபமே பரமாத்மா. பரமாத்மாவே ஞானஸ்வரூபம். அதனால், பரமாத்ம ஸ்வரூபமே ஜகத் என்றும் பரமாத்மாவைக்காட்டிலும் ஜகத் வேறுபட்டதல்ல என்று அறிவதே ஞானம். ஞான ஸ்வரூபமான ஜகத், பரமாத்மஸ்வரூபம் என்று அறிவதே தத்வஞானம். வஸ்துவின் உண்மையான ஞானம். அதனால் இந்த ஞானம் ப்ராந்தி ஞானம் என்று சொல்வது சரியல்ல. ஆகவே அகிலம் ஜகத் என்ற பதம் இரண்டு ச்லோகத்திலும் ஜகத்தையே குறிப்பிடுகின்றது என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- 'ஞானஸ்வரூபம் அகிலம் ஜகத்' என்ற ச்லோகத்தில், ஜகத் சப்தம் ஜீவர்களை குறிப்பிடுகின்றது என்று சொல்லப்படுவதுபோல், 'யேது ஞானவித: சுத்த சேதஸ:' என்ற ச்லோகத்திலும் ஜகத் சப்தார்த்தம் ஜீவர்கள் என்று சொல்லலாமே? ஜீவர்கள் அனேகம் என்றாலும், அவர்கள் எல்லோருமே ஞானாகாரம் என்றே சொல்லலாம். அதனால் பரமாத்மாவின் சரீரம் ஜீவர்கள் என்றே அறியலாம். இந்தவித ஞானம் ப்ராந்தி அல்ல. இதுவே தத்வம் ஞானம் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- முதல் ச்லோகத்தில், ஞானஸ்வரூபமான பரமாத்மாவில் ஆரோபிதமான அர்த்தஸ்வரூபம் ஜகத் நாமரூபாத்மகவஸ்து ஸ்வரூபம் என்று அறியாமல் அனாத்மாவான ஜகத், ஞானஸ்வரூபத்தை அன்றி வேறாக இருக்கின்றது என்று அறியப்படுகின்றது. இதுவே ப்ராந்தி ஞானம் என்று தெரிவிக்கின்றது. அதற்கு அடுத்த '*யேது ஞானவித:....*' ச்லோகத்தில் முன்னால் சொல்லப்பட்ட ச்லோகத்திற்கு எந்த முறையில் அர்த்தம் சொல்லப்பட்டதோ அதே கருத்தை தெரிவிக்கின்றது. அதாவது, ஞானஸ்வரூபத்தை அன்றி இந்த ஜகத் வேறு என்று அறியப்படுவது சரியல்ல என்றும் உன் ஸ்வரூபமே ஜகத் என்று அறியவேண்டும் என்றே தெரிவிக்கின்றது. அதனால் இரண்டு ச்லோகங்களிலும், 'ஜகத்', என்ற பதம், இந்த ப்ரபஞ்சத்தையே குறிக்கின்றது. பூர்வச்லோகத்தில் 'ஞானஸ்வரூபம்' என்ற பதத்திற்கும், இரண்டாவது ச்லோகத்தில் ஞானாத்மகம் என்ற பதத்திற்கும் அர்த்தம் ஒன்றே என்று சொல்லவேண்டும். அதனால் ஞானஸ்வரூபமான இந்த ஜகத்தை பரமாத்ம ஸ்வரூபமே என்று அறியாமல் அஞ்ஞானிகள் பரமாத்மாவைக் காட்டிலும் வேறாக (தனித்த ஒரு வஸ்துவாக) அர்த்தஸ்வரூபமாக ப்ராந்தியினால் அறிகின்றார்கள். ஆனால் தத்வஞானிகள் ஞானஸ்வரூபம் என்றே அறிகின்றார்கள் என்றே இந்த ச்லோகங்களுக்கு அர்த்தம் சொல்லவேண்டும். அதுவே சரியான அர்த்தம் என்பதால், ஞானஸ்வரூபமான ஜீவனை சரீரமாகக்கொண்ட பரமாத்மா என்று அர்த்தம் செய்வது பொருந்தாது. ஆகவே, த்வத்ரூபம் என்ற பதத்திற்கு உன் சரீரமான ஜீவர்கள் என்று ஞானஸ்வரூப ஜீவசரீரகம் என்று இல்லாத பதங்களை சேர்த்து கல்பனையினால் ராமானுஜரால் செய்யப்படும் அர்த்தம் சரியல்ல என்று நிராகரணம் செய்யப்பட்டது.

105

विशिष्टाद्वैतापेक्षयाऽद्वैतस्य दुष्टत्वशङ्का - तन्निरासश्च ।

விசிஷ்ட்டாத்வைத அபேக்ஷயா அத்வைதஸ்ய துஷ்ட்டத்வ சங்கா—தந்நிராஸஸ்ச

பூர்வ:- '*ஞானஸ்வரூபம் அகிலம்*' (1.4.40) என்றும், '*ஞானஸ்வரூபம் அத்யந்தம்*' (1.2.6) என்றும், '*யதேதத் த்ருச்யதே*' (1.4.39) என்றும் சொல்லப்படும் இந்த மூன்று ச்லோகங்களும், ப்ரஹ்மஸ்வரூபத்தை அன்றி வேறாக அறியப்படும் ஸர்வஜகத்தும் அபரமார்த்தம் என்று தாத்பர்யேண தெரிவிக்கின்றன என்று அத்வைதிகளான உங்களால் ஸித்தம் செய்யப்படுகிறது.

ஞானஸ்வரூபமத்யந்தநிர்மலம் பரமார்த்தத: ।
தமேவார்த்தஸ்வரூபேண ப்ராந்திதர்சனத: ஸ்திதம் ॥ (1.2.6)

ज्ञानस्वरूपमत्यन्तनिर्मलं परमार्थतः ।
तमेवार्थस्वरूपेण भ्रान्तिदर्शनतः स्थितम् ॥ (1.2.6)

யதேதத் த்ருஶ்யதே மூர்தமேதத்ஜ்ஞாநாத்மநஸ்தவ ।
ப்ராந்திஜ்ஞாநேந பஶ்யந்தி ஜகத்ரூபமயோகிந: ॥ (1.4.39)

यदेतद् दृश्यते मूर्तमेतद्ज्ञानात्मनस्तव ।
भ्रान्तिज्ञानेन पश्यन्ति जगद्रूपमयोगिनः ॥ (1.4.39)

ஞானஸ்வரூபமகிலம் ஜகதேததபுத்தய: ।
அர்த்தஸ்வரூபம் பஶ்யந்தோ ப்ராம்யந்தே மோஹவிப்லவே ॥ (1.4.40)

ज्ञानस्वरूपमखिलं जगदेतदबुद्धयः ।
अर्थस्वरूपं पश्यन्तो भ्राम्यन्ते मोहसंप्लवे ॥ (1.4.40)

இது சரியல்ல. ஏனெனில், மூன்று ச்லோகங்களும் ஒரே அர்த்தத்தை தெரிவிக்குமானால் முதலில், புனருக்தி என்ற தோஷம் ஸம்பவிக்கின்றது. இரண்டாவதாக, ச்லோகத்தில் உள்ள பதங்களுக்கு நேரிடையாக கிடைக்கின்ற அர்த்தத்தைவிட்டு, லக்ஷ்யார்த்தம் சொல்லப்படுவதால் லக்ஷணை என்ற தோஷம் ஸம்பவிக்கின்றது. மூன்றாவதாக, முன்னுக்குப்பின் முரண்பாடாக அர்த்தம் செய்வதால் வ்யாகாதம் என்ற தோஷம் ஸம்பவிக்கின்றது. நான்காவதாக, இந்த ச்லோகம் எந்த ப்ரகரணத்தில் இருக்கின்றதோ, அந்த ப்ரகரணத்தை அனுசரித்து அர்த்தம் செய்யப்படாமல், வேறு விதமாக அர்த்தம்

செய்யப்படுவதால், ப்ரகரணவிரோதம் ஏற்படுகிறது. சாஸ்த்ரம் எதை தெரிவிப்பதற்காக ஏற்பட்டதோ (ப்ரவ்ருத்திக்கின்றதோ) அதை விட்டு அதற்கு விருத்தமாக அர்த்தம் சொல்லப்படுவதால், சாஸ்த்ரதாத்பர்ய விரோதம் ஏற்படுகிறது. ஆகவே, இவ்வளவு தோஷங்கள் ஸம்பவிக்கின்றதால் உங்களால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல.

'ஞானஸ்வரூபம் அகிலம்' என்றும், 'ஞானஸ்வரூபம் அத்யந்தம்' என்றும், 'யதேதத் த்ருச்யதே' என்ற மூன்று ச்லோகங்களும், ஞானஸ்வரூபமான இந்த ஜகத்தை, அர்த்தஸ்வரூபம் என்றும் அதுவே பரமார்த்தம் என்றும் நினைக்கின்றார்கள் (அறிகின்றார்கள்), இது ப்ராந்தி ஞானம் என்று ஒரே அர்த்தத்தை தெரிவிக்கின்றது என்று சொல்லப்படுமானால், ஒரே அர்த்தத்தை தெரிவிப்பதற்கு மூன்று ச்லோகங்கள் எதற்கு? அதனால் புனருக்திதோஷம் ஏற்படுகிறது. அதனால் யதேதத் என்கிற ச்லோகத்தில், பரமாத்மாவிற்கு சரீரமாக இருக்கின்ற ஜீவன், தன்னை பரதந்த்ரன் என்று அறியாமல் ஸ்வதந்த்ரன் என்று ப்ராந்தியினால் நினைக்கின்றான் என்றும், ஞான ஸ்வரூபம் அகிலம் ச்லோகத்தில், ஞானாகாரமான ஆத்மஸ்வரூபத்தை, தேஹம் என்று ப்ராந்தியினால் நினைக்கின்றான் என்றும், ப்ராந்திஞானம் இரண்டையும், மூன்று ச்லோகங்களில் தெரிவிக்கின்றது என்று சொல்லப்படுமானால் புனருக்தி தோஷம் ஸம்பவிக்காது. மேலும் 'பரமேச்வர:' 'ஜகத:பதே' 'தவ மஹிமா' 'த்வம்' என்ற சப்தங்கள் லக்ஷணையாக பரமாத்ம ஸ்வரூபத்தையே தெரிவிக்கின்றது என்ற உங்களால் சொல்லப்படுவதும் சரியல்ல. ஏனெனில், ஈசிதவ்யமான இந்த ஜகத் இருந்தால்தானே, 'பரமேச்வரன் என்று சொல்லலாம்' அதனால் 'பரமேச்வரன்' என்ற பதத்திற்கு முக்யார்த்தம் எதுவோ, அதைவிட்டு, லக்ஷ்யார்த்தமாக 'பரமாத்மா' என்று அர்த்தம் செய்யப்படுவதும் சரியல்ல.. இதேபோல் 'ஜகத:பதே' என்ற சொல்லப்படுமானால், 'ஜகத் ஸத்யம்' என்றுதானே சொல்லவேண்டும்? இவ்விதம் சொன்னால்தான் முக்யார்த்தம் பொருந்தும். இதேபோல் ஜகத் என்பது மித்யா பூதமாக இருக்குமானால் 'தவ மஹிமா' என்பதும் பொருந்தாது. 'த்வம்' என்று ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதால், ஸோபாதிக ஸ்வரூபத்தையே சொல்லலாமே அன்றி நிருபாதிக ஸ்வரூபத்தை 'த்வம்' என்று சொல்லமுடியாது. அதனால் உங்கள் ஸித்தாந்தத்தின்படி இந்த பதங்களுக்கு அர்த்தம் செய்யப்படுமானால், அந்த அர்த்தம் முக்யார்த்தம் என்று சொல்லமுடியாது.

மேலும், ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்கள், ஜகத்திலுள்ள ஸர்வ வஸ்துக்களும், பரமார்த்தமாக இருக்கின்றதென்றே க்ரஹிக்கின்றது. அதாவது கட: ஸன், பட: ஸன் என்று ஸத் என்றே க்ரஹிக்கின்றது. அதனால் இந்த ஜகத் மித்யை என்று சொல்லப்படுமானால், ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களுக்கு விரோதம் ஏற்படும். அதுமட்டுமல்ல. ஸ்வஸ்வரூப ஞானம் ஏற்படுமானால், தோன்றும் ஜகத் மறைந்துவிடுகிறது என்றால், ஸத்யமான இந்த ஜகத் எவ்விதம் மறையமுடியும்? ஸத்யமான வஸ்துவிற்கு, 'நிவர்த்தி' என்றோ, 'பாதம்' என்றோ சொல்லமுடியாது. ஸத்யம், பாதிக்கப்படுகிறது என்றால் யுக்திக்கே பொருந்தாது. தர்க்க விரோதம் ஏற்படும். அதனால் அர்த்த விரோதம் ஏற்படும்

அதுமட்டுமல்ல, வராஹாவதாரம் பற்றி ஸ்துதிக்கப்படும் ப்ரகரணமாக இருக்கின்றதால், ஸவிசேஷ விஷயம் பற்றி தெரிவிக்கின்ற ப்ரகரணத்தில் இருக்கின்ற ச்லோகத்திற்கு நிர்விசேஷ வஸ்துவை அர்த்தமாக சொல்வது சரியல்ல. இதனால் ப்ரகரண விரோதமும் ஏற்படும். பகவானுடைய பெருமைகளை (விசேஷங்களை) சொல்வதே ஸ்துதி என்று சொல்லலாம். உன்னிடம் எந்த விசேஷமும் இல்லை என்று சொல்வது ஸ்துதி ஆகாது. பகவானுடைய சரீரத்தில் உள்ள ரோமக்கால்களில் அனேகம் ரிஷிகள் இருப்பதாகவும் அவர்கள், பகவானை ஸ்தோத்ரம் செய்கின்றார்கள் என்றே சொல்லப்படுகிறது. இவ்விதம் 'ரோமாந்தரஸ்தா முனய:' என்று தெரிவிக்கின்றதால் ஸகுணஸ்வரூப ஸ்துதி என்றே அறியப்படுகிறது. மேலும் பகவானுடைய குணவிசேஷங்களைக்கொண்டு 'கீர்த்தி' என்று சொல்லப்படுகின்றதால் பகவான் குணம் உள்ளவர் என்றே சொல்லவேண்டும். இவ்விதம் ஸ்துதி செய்கின்றவர்களும் ரிஷிகள் என்பதால், அவர்களுக்கு அத்வைத ஞானம் இருக்கின்றதா? இல்லையா? இருக்கின்றது என்றால், அவர்களால், பகவான் ஸ்துதிக்கப்படுவதாக எவ்விதம் சொல்லமுடியும்? அதற்காக அத்வைத ஞானம் இல்லை என்றால், அவர்களால், அத்வைத ஸ்வரூப ஸ்துதி எவ்விதம் செய்யமுடியும்? ஏனெனில் அவர்களுக்கு அத்வைதஸ்வரூப ஞானமே இல்லை என்றால் அந்த ஸ்வரூபத்தை எவ்விதம் ஸ்துதி செய்யமுடியும்? அதனால் அத்வைதம் என்ற தத்வமே பரமார்த்தமில்லை என்றே சொல்லவேண்டும். அதற்காக இந்த ப்ரகரணத்தில் அவ்விதம் ஸ்துதிக்கவில்லை என்றால் ப்ரகரண விரோதம் இருப்பதாகச் சொல்லவேண்டும். மேலும், உபக்ரம, உபஸம்ஹாரங்களைக் கொண்டு விசாரிக்கின்ற போதும் விஷ்ணுபுராணத்தின் தாத்பர்ய விரோதம் ஏற்படுகிறது. இவ்வளவு தோஷங்கள் ஸம்பவிக்கின்றதால் 'அத்வைதமே தத்வம்' என்ற உங்கள் ஸித்தாந்தம் துஷ்ட்டம் (சரியல்ல) என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- இதுவரை உன்னால் தெரிவிக்கப்பட்ட தோஷங்கள் எதுவுமே அத்வைத ஸித்தாந்தத்தில் ஸம்பவிக்கமுடியாது. முன்னால் தெரிவிக்கப்பட்ட மூன்று ச்லோகங்களிலும் 'ப்ராந்தி ஞானம்' என்ற ஒரே அர்த்தத்தையே தெரிவிக்கின்றது என்று சொல்லப்பட்டதற்காக, புன்ருக்தி தோஷம் ஸம்பவிக்கின்றது என்று உன்னால் சொல்லப்பட்டது. ஆனால் அந்த ச்லோகங்களில் இரண்டு ச்லோகங்கள் மட்டுமே 'ப்ராந்திஞானம்' என்று தெரிவிப்பதாக, உன்னால் சொல்லப்படுவதால், ஒரே ப்ராந்தி ஞானம் இரண்டு ச்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது என்றால், உன் பக்ஷத்திலும் புனருக்தி ஸம்பவிக்கின்றதே? மேலும், புனருக்தி என்பது தோஷம் என்றும் சொல்வது சரியல்ல. அறியப்படாத ஒரு விஷயத்தைப்பற்றி தெரிவிக்கின்றபோது அதை ஸ்திரப்படுத்துவதற்காக அடிக்கடி சொல்லப்படுமானால், அது புனருக்தி என்று சொன்னால், கீதா ச்லோகங்கள் அனைத்தும் புனருக்தி என்று சொல்ல நேரிடும். அவ்விதம் திரும்பச் சொல்லப்படவில்லை என்றால் உபநிஷத் ப்ரதிபாத்யமான அர்த்தம், எல்லோராலும் ஸுலபமாக புரிந்துகொள்ள முடியாது. அதனால் அனேக விஷயங்களைப்பற்றி பலமுறைகளில், திரும்பத்திரும்ப போதிக்க வேண்டியதாக இருக்கின்றது. அதனால்தான் ஆத்ம தத்வஞானிகள் ஒரே விஷயத்தை பலவிதமாக போதிக்கின்றார்கள் என்பதை கீதாச்லோகங்களைக் கொண்டே ஸ்பஷ்ட்டமாக

அறியலாம். ஆகவே, மூன்று ச்லோகங்களிலும் ப்ராந்தி ஞானத்தை தெரிவிக்கின்றது என்று சொல்லப்படுவதில் எவ்வித தோஷமும் கிடையாது.

பூர்வ:- மூன்று ச்லோகங்களும் ப்ராந்தி ஞானத்தை தெரிவிக்கவில்லை. இரண்டு ச்லோகங்களில் இரண்டுவிதமான ப்ராந்தி சொல்லப்படுகிறது என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- அவ்விதம் இரண்டுவிதமான ப்ராந்தி சொல்லப்பட்டிருக்குமானால், அதற்கு பதில் தெரிவிக்கின்றபோது இரண்டுவித ஸமாதானம் சொல்லப்பட்டிருக்க வேண்டுமே? அவ்விதம் இன்றி ஒரே யதார்த்த ஞானத்தையே பதிலாக தெரிவிக்கின்றதால் ப்ராந்தி ஞானம் ஒன்றே என்றுதான் சொல்லவேண்டும். ஞானஸ்வரூபமான ஜகத்தை, அர்த்த ஸ்வரூபமாக பார்க்கிறான் என்றே மூன்று ச்லோகங்களிலும் தெரிவிக்கின்றது. அதற்கு வேறுபட்ட முறையில் (வ்யதிரேகமாக) ஜகத் பரமார்த்தம் என்று அறிவது சரியல்ல, ஸர்வம் ஞானஸ்வரூபம் என்றே அறியவேண்டும் என்று நான்காவது ச்லோகம் (1.4.41) தெரிவிக்கின்றது. ஆகவே, நான்கு ச்லோகங்களிலும், ஞானஸ்வரூபமான இந்த ஜகத் அர்த்த ஸ்வரூபம் என்று பார்ப்பது (அறியப்படுவது) ப்ராந்தி ஞானம் என்றும், ஞானஸ்ரூபத்தை, ஞானஸ்வரூபம் என்று அறிவதே யதார்த்த ஞானம் என்றே இந்த ச்லோகங்களின் தாத்பர்யம். அதனால் எந்தவித தோஷமும் கிடையாது.

ச்லோகத்தில் உள்ள பதங்களுக்கு முக்யார்த்தம் சொல்லப்படவில்லை என்று தோஷம் சொல்லப்பட்டது. வ்யவஹார தசையில், மித்யாபூதமான இந்த ஜகத்திற்கு ப்ரஹ்மம் பதியாக இருக்கலாம். அதனால் 'ஜகத்பதே' என்று சொல்லலாம். வ்யவஹாரதசையில் ஸவிசேஷ ப்ரஹ்மத்தை ஒத்துக்கொள்ளப்படுவதால், பகவானிடம் அனேக குணவிசேஷங்களை சொல்வதால் பாதகமில்லை. ஆகவே ஸவிசேஷப்ரஹ்மத்தை தெரிவிக்கின்றபோது லக்ஷணையாக தெரிவிக்கவேண்டிய அவச்யம் இல்லாததால், வ்யவஹார தசையில் பரமேச்வரத்வம், ஜகத் பதித்வம் என்பது போன்ற குணவிசிஷ்ட்டம் என்று ப்ரஹ்மத்தை தெரிவிப்பதில் ஹானி ஏதுமில்லை.

ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களுக்கு விரோதம் என்று சொல்லப்படுவதும் சரியல்ல. ஏனெனில், ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்கள் வ்யாவஹாரிக ஸத்யமான விஷயத்தையே (வஸ்துவையே) தெரிவிக்கின்றது. த்ரிகால அபாத்யமான (முக்காலத்திலும் பாதிக்கப்படாத) வஸ்துவை போதிக்கின்ற ஸாமர்த்யம் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களுக்கு கிடையாது. சக்ஷுஸ் முதலான ப்ரமாணங்கள், பார்க்கின்றபோது எது தோன்றுகிறதோ அதைத்தான் தெரிவிக்கும். வர்த்தமான க்ராஹி. ஆனால் முக்காலத்திலும் பாதிக்கப்படாத வஸ்துவை ப்ரத்யக்ஷாதிகள் தெரிவிக்கமுடியாது. சக்ஷுராதிகளே வ்யாவஹாரிகஸத்யம் என்று சொல்லப்படுவதால், அபாரமார்த்திகமான அந்தப்ரமாணங்களினால், பாரமார்த்திக வஸ்து க்ரஹிக்கப்படுவதாக எவ்விதம் சொல்லமுடியும். அதனால் ப்ரத்யக்ஷாதி விரோதம் என்று சொல்லப்படுவதும் சரியல்ல.

அஸத்யமான ஜகத்திற்கு மறைவு (திரோதானம்) எவ்விதம் ஏற்படும் என்று கேட்க்கப்பட்டது. ஜகத் அஸத் அல்ல. மித்யாபூதமான ஜகத் தத்வ ஞானத்தினால் மறைந்து விடும் என்று

சொல்லப்படுவதில் விரோதம் ஏதுமில்லை. அத்யந்த அஸத்தான சசச்ருங்காதிகளுக்கே திரோதானம் என்று சொல்லமுடியாது. ஜகத் அவ்விதம் அத்யந்த அஸத் அல்ல. ஜகத் ஸத்யம் என்று ஏற்படும் ஞானம் ப்ராந்தி ஞானம். உன் ஸித்தாந்தத்தில் ஜகத் ஸத்யம் என்பதால் நித்யம் என்றே சொல்லப்படுகிறது. அதனால் நித்யமான ஜகத்திற்கு ஞானத்தினால் திரோதானம் என்றோ, உற்பத்தி என்றோ சொல்லமுடியாது. ஆகவே ஜகத்திற்கும் நித்யத்வம் என்பதும், உற்பத்தி இல்லை என்றும் சொல்லப்படுவது சரியல்ல என்று இதன்மூலம் கண்டிக்கப்படுகிறது. ஆகவே ப்ரகரண விரோதம் என்று சொல்லப்படுவதும் சரியல்ல.

அத்வைதமே தத்வம் என்றால், மஹரிஷிகள் (ஞானிகள்) பரமாத்மாவே நான் என்ற ஞானம் உடையவர்கள் எவ்விதம் ஸ்துதிகள் செய்திருக்க முடியும் என்ற கேள்வியும் சரியல்ல. பரமார்த்த தசையில் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்று அறியப்பட்ட போதிலும் வ்யவஹார தசையில் ஸ்துதிசெய்யலாம். உதாரணமாக உன் பக்ஷத்திலும், தேஹவ்யதிரிக்தம் ஆத்மா என்று சொல்லப்படுகிறது. ஆனால் தேவதத்தன் நடக்கின்றான், படிக்கின்றான் என்று ஸர்வகார்யங்களும் தேவதத்தன் செய்கிறான் என்றுதானே சொல்லப்படுகிறது? ஆகவே தத்வம் என்ன என்று அறிந்திருந்திருந்த போதிலும், வ்யவஹாரதசையில் ஸர்வ வ்யவஹாரமும் இருக்கின்றதால், ஹானி ஏதுமில்லை. ஆகையால் தத்வதர்சிகள் நிர்விசேஷ ப்ரஹ்மத்தை ஸ்துதி செய்வதால் தோஷம் ஏதுமில்லை.

விஷ்ணு புராணம் முதலானவைகளில் உபக்ரம உபஸம்ஹாராதிகளை விசாரிக்கின்றபோது, அத்வைதம்தான் தத்வம் என்று விஷ்ணு புராணம் போதிக்கின்றது என்பதால் சாஸ்த்ர தாத்பர்ய விரோதம் ஏற்படுவதாக ஆக்ஷேபிக்கப்பட்டதும் சரியல்ல. ஏனெனில் விஷ்ணு புராணத்தில் உள்ள முதல் ச்லோகமே நிர்விசேஷ ப்ரஹ்மபரம்.

106

विष्णुपुराणस्य षड्विधतात्पर्यलिङ्गैर्निर्विशेषब्रह्मपरत्वप्रतिपादनम् ।

விஷ்ணுபுராணஸ்ய ஷட்விததாத்பர்யலிங்கை: நிர்விசேஷப்ரஹ்மபரத்வப்ரதிபாதனம்

விஷ்ணு புராணத்திற்கு, நிர்விசேஷ ப்ரஹ்மமே தாத்பர்ய விஷயம் என்று, உபக்ரம, உபஸம்ஹாரம் முதலான ஷட்வித தாத்பர்ய லிங்கங்களைக்கொண்டு நிரூபணம் செய்யப்படுகிறது

1. பர: பராணாம் பரம: பரமாத்மா ஆத்மஸம்ஸ்தித: ।
ரூபவர்ணாதிநிர்தேசவிசேஷணவிவர்ஜித: ॥

१ ॥ परः पराणां परमः परमात्माऽऽत्मसंस्थितः ।
रूपवर्णादिनिर्देशविशेषणविवर्जितः ॥ 1.2.10

1. விஷ்ணு புராண ஆரம்பத்தில், முதலாவது அம்சம், இரண்டாவது அத்யாயம் பத்தாவது ச்லோகம். இந்த ச்லோகத்திற்கு விஷ்ணுசித்தர் என்பவர் வ்யாக்யானம் செய்திருக்கின்றார். 'ஜாதி, குணம், க்ரியை, த்ரவ்யம், நாமா என்ற ஐந்து விதமான கல்பனைகளுக்கு ஹேதுவான விசேஷணங்கள் இல்லாதவர் பரமாத்மா' என்று வ்யாக்யானம் செய்திருக்கின்றார்.

அதனால் இந்த ச்லோகம் நிர்விசேஷ ப்ரஹ்மத்தையே போதிக்கின்றது. இவ்விதம் விஷ்ணு புராண உபக்ரமத்தில் 'நிர்விசேஷம் ப்ரஹ்மம்' என்றே தெரிவிக்கின்றது. இதேபோல் ஆறாவது அம்சத்தில் உபஸம்ஹாரத்தில், ஏழாவது அத்யாயத்தில் நூறாவது ச்லோகம்—

2. அஹம் மமேத்யவித்யேயம் வ்யவஹாரஸ்ததானயோ: ।
பரமார்த்தஸ்த்வஸம்லாப்யோ கோசரோ வசஸாம் ந ய: ॥

२ ॥ अहं ममेत्यविद्येयं व्यवहारस्तथाऽनयोः ।
परमार्थस्त्वसंलाप्यो गोचरो वचसां न यः ॥ 6.7.100

2. இந்த ச்லோகமும், வாக்கிற்கு விஷயமாகாத நிர்விசேஷ ப்ரஹ்மத்தையே போதிக்கின்றது. அதனால் உபக்ரமம் உபஸம்ஹாரம் என்ற இரண்டிலும் நிர்விசேஷ ப்ரஹ்மமே தாத்பர்ய விஷயம் என்றே அறியப்படுகிறது. அதேபோல் 'விஷ்ணோ:ஸகாசாத்' என்ற ச்லோகத்திலும், இந்த புராணத்தில் உள்ள விஷயங்களை சுருக்கமாக, உபக்ரமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

3. விஷ்ணோஸ்ஸகாசாதுத்பூதம் ஜகத்தத்ரைவ ச ஸ்திதம் ।
ஸ்திதிஸம்யமகர்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்ச ஸ: ॥

३ ॥ विष्णोस्सकाशादुद्भूतं जगत्तत्रैव च स्थितम् ।
स्थितिसंयमकर्तासौ जगतोस्य जगच्च सः ॥ 1.1.31

3. இந்த ஜகத், விஷ்ணுவினிடமிருந்தே உண்டாகி அவரிடமே ஸ்திதி பெற்று அவரிடமே லயத்தை அடைகின்றது. அதனால் '*ஜகச்ச ஸ:*' இந்த ப்ரபஞ்சம் 'விஷ்ணுவே' என்று (விஷ்ணு ஸ்வரூபமே என்று) தெரிவிக்கின்றது. இதேபோல்

4. இதி விவிதமஜஸ்ய யஸ்ய ரூபம் ப்ரக்ருதிபராத்மமயம் ஸனாதனஸ்ய ।
ப்ரதிசது பகவானசேஷபும்ஸாம் ஹரிரபஜன்மஜராதிகாம் ஸ ஸித்திம் ॥

४ ॥ इति विविधमजस्य यस्य रूपं प्रकृतिपरात्ममयं सनातनस्य ।
प्रदिशतु भगवानशेषपुंसां हरिरपजन्मजरादिकां स सिद्धिम् ॥ 6.8.64

4. '*இதி விவிதம் அஜஸ்ய*' என்ற ச்லோகம் க்ரந்த முடிவில் இதே அர்த்தத்தை இதுவரை தெரிவிக்கப்பட்ட புராணார்த்தத்தின் ஸாராம்சமாக சொல்கின்றது. அதாவது ப்ரக்ருதி, புருஷன், ஈச்வராத்மகமான ஸர்வஜகத்தும், பரமாத்மாவே என்று தெரிவிக்கின்றது. ஸர்வம் பரமாத்மாவில் அத்யஸ்தம். அவைகளுக்கெல்லாம் உண்மையான ஸ்வரூபம் பரமாத்மாவே என்பதால் பரமாத்மாவை அன்றி வேறாக எந்த ஒரு வஸ்தும் கிடையாது. அதனால் '*ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம*' என்று ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகதபேத ரஹிதம் என்று தெரிவிக்கின்றதால் 'ப்ரஹ்மம் நிர்விசேஷம்' என்றே ஸித்திக்கின்றது ஆகவே முன்னால் தெரிவித்தபடி, உபக்ரமத்திலும், உபஸம்ஹாரத்திலும், நிர்விசேஷப்ரஹ்மமே, விஷ்ணுபுராணத்தின் தாத்பர்யவிஷயம் என்றே சொல்லவேண்டும். இவ்விதம் உபக்ரம, உபஸம்ஹார ஏகத்வம் (ஐகரூப்யம்) என்ற தாத்பர்யலிங்கம் நிரூபணம் செய்யப்பட்டது. இதற்குமேல் மற்றுமுள்ள தாத்பர்யலிங்கங்களைக் கொண்டு, நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றும் அத்வைதமே தத்வம் என்றும் ஸித்தம் செய்யப்படுகிறது.

5. பரமார்தஸ்த்வமேவைகோ நாந்யோஸ்தி ஜகத:பதே ।
தவைஷ மஹிமா யேந வ்யாப்தமேதச்சராசரம் ॥

५ ॥ परमार्थस्त्वमेवैको नान्योस्ति जगतःपते ।
तवैष महिमा येन व्याप्तमेतच्चराचरम् ॥

6. யதேதத் த்ருஶ்யதே மூர்தமேதத்ஜ்ஞாநாத்மநஸ்தவ ।
ப்ராந்திஜ்ஞாநேந பஶ்யந்தி ஜகத்ரூபமயோகிந: ॥

६ ॥ यदेतद् दृश्यते मूर्तमेतद्ज्ञानात्मनस्तव ।
भ्रान्तिज्ञानेन पश्यन्ति जगद्रूपमयोगिनः ॥

7. ஞானஸ்வரூபமகிலம் ஜகதேததபுத்தய: ।
அர்த்தஸ்வரூபம் பஶ்யந்தோ ப்ராம்யந்தே மோஹஸம்ப்லவே ॥

७ ॥ ज्ञानस्वरूपमखिलं जगदेतदबुद्धयः ।
अर्थस्वरूपं पश्यन्तो भ्राम्यन्ते मोहसंप्लवे ॥

8. யேது ஜ்ஞாநவித: ஶுத்தசேதஸஸ்தேऽகிலம் ஜகத் ।
ஜ்ஞாநாத்மகம் ப்ரபஶ்யந்தி த்வத்ரூபம் பரமேஶ்வர ॥

८ ॥ येतु ज्ञानविदः शुद्धचेतसस्तेऽखिलं जगत् ।
ज्ञानात्मकं प्रपश्यन्ति त्वद्रूपं परमेश्वर ॥ 1.4.38,39,40–41

இந்த நான்கு ச்லோகங்களுக்கும் முன்பே (பகுதி 104) வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றது.

9. ந ஸ்தூலம் ந ச ஸூக்ஷ்மம் யந்ந விசேஷணகோசரம் ।
தத்பதம் பரமம் விஷ்ணோ: ப்ரணமாம ஸதா அமலம் ॥

९ ॥ न स्थूलं न च सूक्ष्मं यन्न विशेषणगोचरम् ।
तत्पदं परमं विष्णोः प्रणमाम सदाऽमलम् ॥ 1.9.52

9. விஷ்ணுவின் பரமபதம் என்ற ஸ்வரூபம், ஸ்தூலமுமல்ல, ஸூக்ஷ்மமும் அல்ல எந்த விதமான விசேஷணத்திற்கும் கோசரமாகாதது. மாயையினால் த்ரஷ்ட்ருத்வம் முதலான விசேஷங்கள் விஷ்ணுவிற்கு சொல்லப்பட்டபோதிலும் (ஏற்பட்டபோதிலும்) உண்மையில் நிர்விசேஷமாகவே இருக்கின்றது. இப்பேர்ப்பட்ட நிர்மலமான அந்த ஸ்வரூபத்திற்கு நமஸ்காரம்.

10. ஆத்யோ யஞ்ஞ: புமானிஜ்யோ ய: பூர்வேஷாம் ச பூர்வஜ: ।
தம் நதாஸ்ஸ்ம ஜகத்ஸ்ரஷ்டு: ஸ்ரஷ்டாரமவிசேஷணம் ॥

१० ॥ आद्यो यज्ञः पुमानिज्यो यः पूर्वेषां च पूर्वजः ।
तं नतास्स्म जगत्स्रष्टुः स्रष्टारमविशेषणम् ॥ 1.9.61

10. ஆதி புருஷனாகவும், யஞ்ஞஸ்வரூபமாகவும், யஞ்ஞங்களினால் ஆராதிக்கப்படுபவரும், முன்னோர்களுக்கெல்லாம் முன்னோரான ஆதிபுருஷராக, ஜகத் ச்ரஷ்ட்டாவான ப்ரஹ்மாவிற்கும் ச்ரஷ்ட்டாவாக இருப்பவருமான, ஸர்வவிசேஷங்களுக்கும் ஆச்ரயமாக இருந்தாலும், ஸ்வயம் நிர்விசேஷ ஸ்வரூபமான, அந்த விஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்.

இவ்விதம், இந்த ச்லோகங்களும் நிர்விசேஷ பரமாத்ம ஸ்வரூபத்தையே தெரிவிக்கின்றது.

11. நமோ நமோऽவிசேஷஸ்த்வம் த்வம் ப்ரஹ்மா த்வம் பினாகத்ருத் ।
இந்த்ரஸ்த்வமக்னி: பவநோ வருணஸ்ஸவிதா யம: ॥

११ ॥ नमो नमोऽविशेषस्त्वं त्वं ब्रह्मा त्वं पिनाकधृत् ।
इन्द्रस्त्वमग्निः पवनो वरुणस्सविता यमः ॥ 1.9.69

11. மாயையினால், ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன், அக்னி, வாயு, வருணன், ஸூர்யன், யமன், என்ற ரூபங்களை உடையவராக இருந்தாலும் ஸ்வயம் எந்த விசேஷமும் அற்றதான ஆத்ம ஸ்வரூபத்திற்கு நமஸ்காரம்.

12. சுத்தஸ்ஸம்லக்ஷ்யதே ப்ராந்த்யா குணவானிவ யோऽகுண: ।
தமாத்மரூபிணம் தேவம் நதாஸ்ஸ்ம புருஷோத்தமம் ॥

१२ ॥ शुद्धस्संलक्ष्यते भ्रान्त्या गुणवानिव योऽगुणः ।
तमात्मरूपिणं देवं नतास्स्म पुरुषोत्तमम् ॥ 1.14.37

12. சுத்தமாகவும் நிர்க்குணமாகவும் இருக்கின்ற ஆத்ம ஸ்வரூபம், ப்ராந்தியினால் குணங்களோடு கூடினதாக தோன்றுகிறது. ஸ்வப்ரகாசமாகவும் ஆத்மஸ்வரூபமாகவும் இருக்கின்ற அந்த புருஷோத்தமனுக்கு நமஸ்காரம்.

13. அவிகாரமஜம் சுத்தம் நிர்குணம் யந்நிரஞ்சனம் ।
நதாஸ்ஸ்ம தத்பதம் ப்ரஹ்ம விஷ்ணோர்யத்பரமம் பதம் ॥

१३ ॥ अविकारमजं शुद्धं निर्गुणं यन्निरञ्जनम् ।
नतास्म तत्पदं ब्रह्म विष्णोर्यत्परमं पदम् ॥ 1.14.38

13. நிர்விகாரமாக, ஜன்மரஹிதமாக, சுத்தமாக, நிர்க்குணமாக நிரஞ்சனமாக (நிர்மலமாக) இருக்கின்ற விஷ்ணுவின் பரமபதம் என்ற ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு நமஸ்காரம். இவ்வாறே அடுத்த நான்கு ச்லோகங்களும் (14,15,16,17) கூறுகின்றன.

14. அதீர்கமஹ்ரஸ்வமஸ்தூலமனண்வச்யாமலோஹிதம் ।
அஸ்னேஹச்சாயமதனுமஸக்தமசரீரிணம் ॥

१४ ॥ अदीर्घमह्रस्वमस्थूलमनण्वश्यामलोहितम् ।
अस्नेहच्छायमतनुमसक्तमशरीरिणम् ॥ 1.14.39

14. நீளமும் அல்ல, குட்டையும் அல்ல. ஸ்தூலமல்ல, ஸூக்ஷ்மமல்ல, கருப்புமல்ல, சிகப்புமல்ல, ஸ்நேஹமல்ல, இருள் அல்ல. தனுவல்ல (சரீரமல்ல) அஸக்தம், அசரீரி.

15. அனாகாஶமஸம்ஸ்பர்ஶமகந்தமரஸம் ச யத் ।
அசக்ஷுவஶ்ரோத்ரமசலமவாக்பாணிமமானஸம் ॥

१५ ॥ अनाकाशमसंस्पर्शमगन्धमरसं च यत् ।
अचक्ष्वश्रोत्रमचलमवाक्पाणिममानसम् ॥ 1.14.40

15. அனாகாசம், அஸம்ஸ்பர்சம், அகந்தம், அரஸம், அசக்ஷு, அச்ரோத்ரம், அசலம் அவாக், அபாணி, அமனஸம். - அதாவது இந்திரியங்களுக்கு கிட்டாதது இந்திரியங்கள் இல்லாதது. எந்தவித விசேஷமும் இல்லை என்று அர்த்தம்.

16. அநாமகோத்ரமஸுகமதேஜஸ்கமஹேதுகம் ।
அபயம் ப்ராந்திரஹிதமநித்ரமஜராமரம் ॥

१६ ॥ अनामगोत्रमसुखमतेजस्कमहेतुकम् ।
अभयं भ्रान्तिरहितमनिद्रमजरामरम् ॥ 1.14.41

17. அரஜோऽஶப்தமம்ருதம் அப்லவம் யதஸம்வ்ருதம் ।
பூர்வாபரே ந வை யஸ்மிந் தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥

१७ ॥ अरजोऽशब्दममृतमप्लवं यदसंवृतम् ।
पूर्वापरे न वै यस्मिन् तद्विष्णोः परमं पदम् ॥ 1.14.42

16, 17 நாமம், கோத்ரம் அற்றது, அஸுகம், தேஜஸ் அல்ல, காரணமல்ல (அஹேதுகம்) அபயம், ப்ராந்தி ரஹிதம், நித்ரை இல்லாதது, ஜராமரணமற்றது, அரஜம், அசப்தம், அம்ருதம், அப்லவம், அஸம்வ்ருதம் (ஆவரணமற்றவர்) பூர்வமென்பதோ அபரம் என்பதோ இல்லாதவரான இப்பேர்ப்பட்ட ஆத்மஸ்வரூபத்திற்கு நமஸ்காரம். இதுவரை சொல்லப்பட்ட ச்லோகங்களில் ஸர்வசேஷங்களும் அற்ற ப்ரஹ்மம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

18. தஸ்மாச்ச ஸூக்ஷ்மாதிவிசேஷணானாம் அகோசரே யத்பரமார்த்தரூபம் ।
கிமப்யசிந்த்யம் தவ ரூபமஸ்தி தஸ்மை நமஸ்தே புருஷோத்தமாய ॥

१८ ॥ तस्माच्च सूक्ष्मादिविशेषणानामगोचरे यत्परमार्थरूपम् ।
किमप्यचिन्त्यं तव रूपमस्ति तस्मै नमस्ते पुरुषोत्तमाय ॥ 1.19.75

18. ஸூக்ஷ்மம், ஸ்தூலம் முதலான விசேஷணங்களுக்கு கோசரமாகாததும். சிந்தனைக்கு எட்டாததுமான புருஷோத்தமனான பரமார்த்தஸ்வரூபமான உனக்கு நமஸ்காரம்.

19. யாऽதீதகோசரா வாசாம் மனஸாம் சாவிசேஷணா ।
ஞானிஞானபரிச்சேத்யா தாம் வந்தே சேஸ்வரீம் பராம் ॥

१९ ॥ याऽतीतगोचरा वाचां मनसां चाविशेषणा ।
ज्ञानिज्ञानपरिच्छेद्या तां वन्दे चेश्वरीं पराम् ॥ 1.19.77

19. வாக்கிற்கும் மனஸிற்கும் விஷயமாகாத நிர்விசேஷமான ஞானியான ஜீவனையும், ஞானம் என்ற புத்தியையும் ப்ரகாசப்படுத்துகின்ற பரமேச்வரஸ்வரூபமான சைதன்ய ஸ்வரூபத்திற்கு நமஸ்காரம்.

20. ஓம் நமோ வாஸுதேவாய தஸ்மை பகவதே ஸதா ।
வ்யதிரிக்தம் ந யஸ்யாஸ்தி வ்யதிரிக்தோऽகிலஸ்ய ய: ॥

२० ॥ ओं नमो वासुदेवाय तस्मै भगवते सदा ।
व्यतिरिक्तं न यस्यास्ति व्यतिरिक्तोऽखिलस्य यः ॥ 1.19.78

20. வாஸுதேவனைக்காட்டிலும் வேறான வஸ்து எதுவுமில்லை. ஸர்வப்ரபஞ்சத்திற்கும் வேறான வாஸுதேவனுக்கு நமஸ்காரம்.

21. நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை மஹாத்மனே ।
நாமரூபம் ந யஸ்யாஸ்தி யோऽஸ்தித்வேனோபலப்யதே ॥

२१ ॥ नमस्तस्मै नमस्तस्मै नमस्तस्मै महात्मने ।
नामरूपं न यस्यास्ति योऽस्तित्वेनोपलभ्यते ॥ 1.19.79

21. நாமரூப ஸம்பந்தமற்றவர் எவரோ, எவரால் ப்ரபஞ்சம் அஸ்தி என்ற ப்ரதீதிக்கு விஷயமாகின்றதோ அந்த மஹத்தான ஆத்மஸ்வரூபத்திற்கு புன: புன: நமஸ்காரம்.

இந்த ச்லோகத்தில் ப்ரஹ்மத்திற்கு அஸ்தித்வம் என்ற விசேஷணம் சொல்லப்படுகிறதே என்று ப்ரமிக்க வேண்டாம். ஏனெனில் நிர்விசேஷ ஸத்ஸாமான்யமே, அஸ்தித்வம் என்று ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதே அன்றி ப்ரஹ்மத்திற்கு விசேஷணமாக சொல்லப் படவில்லை.

22. நித்யாநித்யப்ரபஞ்சாத்மன் நிஷ்ப்ரபஞ்சாமலாஶ்ரித ।
ஏகாநேக நமஸ்துப்யம் வாஸுதேவாதிகாரணம் ॥

२२ ॥ नित्यानित्यप्रपञ्चात्मन्निष्प्रपञ्चामलाश्रित ।
एकानेक नमस्तुभ्यं वासुदेवादिकारणम् ॥ 1.20.12

22. நித்யமாகவும், அநித்யமாகவும் இருக்கின்ற அனேக விதமான ப்ரபஞ்சத்திற்கு ஆத்மஸ்வரூபமாக இருந்தபோதிலும், அவரிடத்தில் ப்ரபஞ்சம் இல்லை. மாயையினால் ஆத்மஸ்வரூபத்தில் ஆரோபிதமாக இருக்கின்ற ப்ரபஞ்சம், உண்மையில் அவரிடம் இல்லாததால் நிஷ்ப்ரபஞ்சமாகவும் ஏகமாகவும் அனேகமாகவும், ஆதி காரணமாகவும் இருக்கின்ற அந்த வாஸுதேவனுக்கு நமஸ்காரம்.

உண்மையில் நிஷ்ப்ரபஞ்சமாக இருந்தபோதிலும் மாயையினால் ப்ரபஞ்சரூபம் என்று தோன்றுகிறது.

23. நிர்வ்யாபாரமநாக்யேயம் வ்யாப்திமாத்ரமனூபமம் ।
ஆத்மஸம்போதவிஷயம் ஸத்தாமாத்ரமலக்ஷணம் ॥

२३ ॥ निर्व्यापारमनाख्येयं व्याप्तिमात्रमनूपमम् ।
आत्मसम्बोधविषयं सत्तामात्रमलक्षणम् ॥ 1.22.50

24. ப்ரசாந்தமபயம் சுத்தம் துர்விபாவ்யமஸம்ச்ரயம் ।
விஷ்ணோர்ஞானமயஸ்யோக்தம் தத்ஞானம் ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம் ॥

२४ ॥ प्रशान्तमभयं शुद्धं दुर्विभाव्यमसंश्रयम् ।
विष्णोर्ज्ञानमयस्योक्तं तद्ज्ञानं ब्रह्मसंज्ञितम् ॥ 1.22.51

25. ஏவம்ப்ரகாரமமலம் நித்யம் வ்யாபகமக்ஷயம் ।
ஸமஸ்தபேதரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம் ॥

२५ ॥ एवंप्रकारममलं नित्यं व्यापकमक्षयम् ।
समस्तभेदरहितं विष्णवाख्यं परमं पदम् ॥ 1.22.53

23,24,25. விஷ்ணு ஸ்வரூபம் நிர்வ்யாபாரமாகவும் (ச்ருஷ்டிமுதலான கர்த்ருத்வம் இல்லாதது) வாக்கிற்கு அகோசரமாக, (வாக்கினால் தெரிவிக்கமுடியாததாக) எங்கும் வ்யாபகமாக இருப்பதும், உபமானம் இல்லாததான ஆத்ம சைதன்யஸ்வரூபம். ஸத்தாமாத்ரமாக லக்ஷணங்களுக்கு அப்பாற்பட்ட அலக்ஷண ஸ்வரூபமாக, சாந்த ஸ்வரூபமாக, அபயஸ்வரூபமாக, சுத்தமாக, மனஸிற்கு விஷயமாகாததும், ஆச்ரயம் அற்றதுமான ஞானஸ்வரூபமாக இருக்கின்ற இதுவே ப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிறது. நித்யமாகவும் வ்யாபகமாகவும், அக்ஷயமாகவும், மூன்று விதபேதங்களும் அற்றதான விஷ்ணு என்ற இந்த ஸ்வரூபமே பரப்ரஹ்மஸ்வரூபம்.

26. அஹம் ஹரிஸ்ஸர்வமிதம் ஜனார்தன: நான்யத்தத: காரணகார்யஜாதம் ।
ஈத்ருங்மன: யஸ்ய ந தஸ்ய பூய: பவோத்பவா: த்வந்த்வகதா பவந்தி ॥

२६ ॥ अहं हरिस्सर्वमिदं जनार्दनो नान्यत्ततः कारणकार्यजातम् ।
ईदृङ्मनो यस्य न तस्य भूयो भवोद्भवा द्वन्द्वगदा भवन्ति ॥ 1.22.87

26. அஹம் என்ற நான், ஸர்வ ஜகத் என்ற எல்லாமே ஶ்ரீஹரியே. அந்த ஜனார்த்தனனைக் காட்டிலும் வேறான கார்யமோ, காரணமோ, எதுவுமில்லை என்று எவருடைய சித்தத்தில் த்ருடஞானம் ஏற்படுகிறதோ அவனுக்கு மறுபடி ஜன்மாவின் ஸம்பந்தத்தினால் ஏற்படும் ராகத்வேஷங்கள் முதலான த்வந்தங்கள் என்ற வ்யாதிகள் ஏற்படாது. இந்த ச்லோகம் விஷ்ணு

புராணத்தின் ப்ரதம அம்சத்தில் உபஸம்ஹார ச்லோகமாக இருக்கின்றது. இந்த ச்லோகத்தில் அத்விதீய ப்ரஹ்மாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட ஞானிக்கு ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்ட மோக்ஷம் என்ற பலன் ஸித்திக்கின்றது என்றும் அதனால் இந்த ச்லோகத்தில் ஜன்ம ஸம்பந்தமான ராகத்வேஷாதிகள் என்ற வ்யாதி ஏற்படாது என்று சொல்லப்படுகிறது. இதற்கு காரணம் என்னவென்றால், ஞானம் ஏற்பட்ட பிறகு மறுபடி ஜன்மமே கிடையாது என்று தெரிவிப்பதற்காக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் ப்ரதம அம்சத்தில் அப்யாஸம் என்ற தாத்பர்யலிங்கமும், பலம் என்ற தாத்பர்யலிங்கமும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு மேல் த்விதீய அம்சத்திலும் அப்யாஸம், பலம், என்ற இந்த இரண்டு தாத்பர்யலிங்கங்களைக்கொண்டு ஸித்தம் செய்யப்படுகிறது.

இரண்டாவது அம்சத்தில்,

27. தஸ்மாத்துக்காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம் ।
மனஸ: பரிணாமோயம் ஸுகதுக்காதிலக்ஷண: ॥

२७ ॥ तस्माद्दुःखात्मकं नास्ति न च किञ्चित्सुखात्मकम् ।
मनसः परिणामोयं सुखदुःखादिलक्षणः ॥ 2.6.49

28. ஞானமேவ பரம் ப்ரஹ்ம ஞானம் பந்தாய சேஷ்யதே ।
ஞானாத்மகமிதம் ஸர்வம் ந ஞானாத் பித்யதே பரம் ॥

२८ ॥ ज्ञानमेव परं ब्रह्म ज्ञानं बन्धाय चेष्यते ।
ज्ञानात्मकमिदं सर्वं न ज्ञानाद्भिद्यते परम् ॥ 2.6.50

27, 28. லோகத்தில் ஒரே வஸ்து சில ஸமயம் துக்கத்திற்கும், சில ஸமயம் சுகத்திற்கும் காரணமாகின்றது. அதனால் எந்த வஸ்துவும் இது சுகம், இது துக்கம் என்று சொல்ல முடியாது. சுகம், துக்கம் எல்லாமே அந்த:கரண பரிணாமம் என்பதால், வஸ்துவின் தர்மமல்ல. ஞானாத்மகமான பரப்ரஹ்மம் ஒன்றே அவித்யை என்ற உபாதியினால் பந்தத்திற்கு காரணமாகின்றது. ஸம்பூர்ணமான இந்த ப்ரபஞ்சம் ஞான ஸ்வரூபமான ப்ரஹ்மத்தை அன்றி வேறானதல்ல. அதனால் விச்வமெல்லாம் ஞானாத்மகம் என்றே அறியவேண்டும்.

இந்த ச்லோகங்களும், ஞானத்தை அன்றி வேறாக எதுவுமில்லை என்று தெரிவிக்கின்றதால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது. ப்ரஹ்ம ஸ்வரூபமே, ஞானம் என்றும் இதேபோல் சுகம், துக்கம் என்பதெல்லாம் அனாத்மதர்மம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இந்தவிதம் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றும் சுகதுக்காதிகள் அனாத்மதர்மம் என்று சொல்லப்பட்ட விஷயம் ராமானுஜர் மதத்திற்கு விருத்தம். ஏனெனில் ராமானுஜர் மதத்தில் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்று ஒத்துக்கொள்வதில்லை. சுகம், துக்கம் என்பதெல்லாம் ஆத்ம தர்மம் என்று அவரால் சொல்லப்படுகிறது.)

29. தத்ப்ரஹ்ம பரமம் தாம ஸதஸத்பரமம் பதம் ।
யஸ்ய ஸர்வமபேதேன யத: ச ஏதத் சராசரம் ॥

२९ ॥ तद्ब्रह्म परमं धाम सदसत्परमं पदम् ।
यस्य सर्वमभेदेन यतश्चैतच्चराचरम् ॥ 2.7.41

30. ஸ ஏவ மூலப்ரக்ருதி: வ்யக்தரூபீ ஜகச்ச ஸ: ।
தஸ்மின்னேவ லயம் ஸர்வம் யாதி தத்ர ச திஷ்டதி ॥

३० ॥ स एव मूलप्रकृतिर्व्यक्तरूपी जगच्च सः ।
तस्मिन्नेव लयं सर्वं याति तत्र च तिष्ठति ॥ 2.7.42

31. கர்தா க்ரியாணாம் ஸ ச இஜ்யதே க்ரது: ஸ ஏவ தத்கர்மபலம் ச தஸ்ய ।
ஸ்ருகாதியத்ஸாதனமப்யசேஷம் ஹரேர்ந கிஞ்சித் வ்யதிரிக்தமஸ்தி ॥

३१ ॥ कर्ता क्रियाणां स च इज्यते क्रतुः स एव तत्कर्मफलं च तस्य ।
स्रुगादियत्साधनमप्यशेषं हरेर्न किञ्चिद्व्यतिरिक्तमस्ति ॥ 2.7.43

29,30,31. அந்த ப்ரஹ்மமே பரமம்தாம. ஸத் அஸத் என்ற இரண்டைக்காட்டிலும் வேறுபட்டது. (விலக்ஷணம்) ஸமஸ்த்த சராசரங்களும் அதிலிருந்தே உண்டாகி, அதிலேயே ஸ்திதி பெற்று, அதிலேயே லயத்தை அடைகின்றது. அதுவே மூலப்ரக்ருதி (மூலகாரணம்).

அவரே வ்யக்தரூபமான ப்ரபஞ்சமாகவும் ஸர்வக்ரியைகளுக்கு கர்த்தாவாகவும், யாகயஞ்ஞாதிகளால் ஆராதிக்கப்படுபவராகவும், யஞ்ஞம் முதலான கர்மபல ஸ்வரூபமாகவும், யஞ்ஞ ஸாதனமான ஜுஹு முதலான வஸ்து ஸ்வரூபமாகவும் இருக்கின்றதால், இப்பேர்ப்பட்ட அந்த ஹரியின் ஸ்வரூபத்திற்கு வேறான ஸ்வரூபம் எதுவுமே இல்லை. இந்த ச்லோகங்களில் ஸர்வம் ப்ரஹ்மம் என்று தெரிவிக்கின்றதால் ப்ரஹ்மத்திற்கு வேறாக எதுவுமில்லை என்று ப்ரஹ்மம் அத்விதீயம் என்று தெரிவிக்கின்றது. மாயையினால் ஸத்விதீயம் என்று (ஸவிசேஷம்) என்று தோன்றுகிறது என்றே சொல்லப்படுகிறது.

32. ஜ்யோதீம்ஷி விஷ்ணுர்புவநாநி விஷ்ணுர்வநாநி விஷ்ணுர்கிரயோ திஶஶ்ச ।
நத்யாஸ்ஸமுத்ராஶ்ச ஸ ஏவ ஸர்வம் யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய ॥

३२ ॥ ज्योतींषि विष्णुर्भुवनानि विष्णुर्वनानि विष्णुर्गिरयो दिशश्च ।
नद्यस्समुद्राश्च स एव सर्वं यदस्ति यन्नास्ति च विप्रवर्य ॥ 2.12.38

33. ஜ்ஞாநஸ்வரூபோ பகவாந்யதோऽஸாவஶேஷமூர்திர்ந து வஸ்துபூத: ।
ததோ ஹி ஶைலாப்திதராதிபேதாந் ஜாநீஹி விஜ்ஞாநவிஜ்ரும்பிதாநி ॥

३३ ॥ ज्ञानस्वरूपो भगवान्यतोऽसावशेषमूर्तिर्न तु वस्तुभूतः ।
ततो हि शैलाब्धिधरादिभेदान् जानीहि विज्ञानविजृम्भितानि ॥ 2.12.39

34. யதா து ஶுத்தம் நிஜரூபி ஸர்வம் கர்மக்ஷயே ஜ்ஞாநமபாஸ்ததோஷம் ।
ததா ஹி ஸங்கல்பதரோ: பலாநி பவந்தி நோ வஸ்துஷு வஸ்துபேதா: ॥

३४ ॥ यदा तु शुद्धं निजरूपि सर्वं कर्मक्षये ज्ञानमपास्तदोषम् ।
तदा हि सङ्कल्पतरोः फलानि भवन्ति नो वस्तुषु वस्तुभेदाः ॥ 2.12.40

35. வஸ்த்வஸ்தி கிம் குத்ரசிதாதிமத்யபர்யந்தஹீநம் ச ஸதைகரூபம் ।
யச்சாந்யதா த்வம் த்விஜ யாதி பூயோ ந தத்ததா தத்ர குதோ ஹி தத்த்வம் ॥

३५ ॥ वस्त्वस्ति किं कुत्रचिदादिमध्यपर्यन्तहीनं च सदैकरूपम् ।
यच्चान्यथा त्वं द्विज याति भूयो न तत्तथा तत्र कुतो हि तत्त्वम् ॥ 2.12.41

36. மஹீ கடத்வம் கடத: கபாலிகா கபாலிகாச்சூர்ணரஜஸ்ததோऽணு: ।
ஜநைஸ்ஸ்வகர்மஸ்திமிதாத்மநிஶ்சயைராலக்ஷ்யதே ப்ரூஹி கிமத்ர வஸ்து ॥

३६ ॥ मही घटत्वं घटतः कपालिका कपालिकाच्चूर्णरजस्ततोऽणुः ।
जनैस्स्वकर्मस्तिमितात्मनिश्चयैरालक्ष्यते ब्रूहि किमत्र वस्तु ॥ 2.12.42

37. தஸ்மாந்ந விஜ்ஞாநம்ருதேஸ்தி கிஞ்சித் க்கசித் கதம்சித் த்விஜ வஸ்துஜாதம் ।
விஜ்ஞாநமேகம் நிஜகர்மபேதவிபிந்நசித்தைர்பஹுதாऽப்யுபேதம் ॥

३७ ॥ तस्मान्न विज्ञानमृतेऽस्ति किञ्चित् क्वचित् कथंचिद् द्विज वस्तुजातम् ।
विज्ञानमेकं निजकर्मभेदविभिन्नचित्तैर्बहुधाऽभ्युपेतम् ॥ 2.12.43

38. ஜ்ஞாநம் விஶுத்தம் விமலம் ச நித்யமஶேஷஶோகாதிநிரஸ்தஸங்கம் ।
ஏகஸ்ஸதைகம் பரம: பரேஶஸ்ஸ வாஸுதேவோ ந யதோऽந்யதஸ்தி ॥

३८ ॥ ज्ञानं विशुद्धं विमलं च नित्यमशेषशोकादिनिरस्तसङ्गम् ।
एकस्सदैकं परमः परेशस्स वासुदेवो न यतोऽन्यदस्ति ॥ 2.12.44

39. ஸத்பாவ ஏஷோ பவதோ மயோக்தோ ஜ்ஞாநம் யதா ஸத்யமஸத்யமந்யத் ।
ஏதத்து யத்ஸம்வ்யவஹாரபூதம் தத்ராபி சோக்தம் புவநாஶ்ரிதம் தே ॥

३९ ॥ सद्भाव एषो भवतो मयोक्तो ज्ञानं यथा सत्यमसत्यमन्यत् ।
एतत्तु यत्संव्यवहारभूतं तत्रापि चोक्तं भुवनाश्रितं ते ॥ 2.12.45

32 - 39 ஹே! ப்ராஹ்மணனே! நக்ஷத்ரங்களும், மூன்று புவனங்களும், வனம், பர்வதம், திசைகள், நதிகள், ஸமுத்ரங்கள் முதலான எல்லாமே விஷ்ணுவின் ஸ்வரூபமே. ஏனெனில் ஞானஸ்வரூபமான அந்த பகவானே ஸர்வப்ரபஞ்சரூபமாக தோன்றினாலும், உண்மையில், ஸமுத்ரம், ப்ருதிவி முதலான ஸர்வப்ரபஞ்சமும் இருப்பதாக (தோன்றுவதாக) ஞானம் ஏற்பட்டபோதிலும், அவை எல்லாம் பரமார்த்தமில்லை.

எப்போது எவ்விததோஷமும் அற்ற சுத்தமான ஆத்மஸ்வரூபத்தை அறிகின்றானோ, அந்த தத்வ ஞானிக்கு ஸர்வகர்ம க்ஷயம் ஏற்படுகின்றதால், ஆத்மஸ்வரூபத்தில் ஸங்கல்ப வ்ருக்ஷத்தின் பலமாக இருக்கின்ற பேதங்கள் எதுவும் அறியப்படுவதில்லை. இந்த லோகத்தில் இருக்கின்ற வஸ்துக்களில், ஆதி அற்றதாகவோ, மத்யம் அற்றதாகவோ, அந்தம் அற்றதாகவோ, எப்போதும் ஏக ரூபமாகவோ இருக்கின்ற வஸ்து ஏதாவது இருக்கின்றதா? எது மாறுதலை அடைகின்றதோ அதை வஸ்து என்றோ, தத்வம் என்றோ எவ்விதம் சொல்லமுடியும்?

ம்ருத் என்பதே கடமாக ஆகின்றது. கடம் உடைந்து கபாலம் ஆகிறது. கபாலம் உடைந்து சூர்ணம் ஆகின்றது. அந்த சூர்ணம் அணு ஆகிறது என்று லோகத்தில் அறியப்படுகிறது.

இந்தவிதம் அறியப்படுவதெல்லாம் உண்மை என்றே ஜனங்கள் நினைக்கின்றார்கள். இதற்கு என்ன காரணம் என்றால், மனுஷ்யர்கள் அவரவர்களின் கர்மவசத்தினால் (தன்னுடைய) ஆத்மஸ்வரூப ஞானம் இல்லாமல், அனாத்மாவான சரீராதிகளையே ஆத்மா என்று நினைக்கின்றதால், ஸர்வ பேதங்களும் உண்மையில் இருப்பதாகவே நினைக்கின்றார்கள். உண்மையில் பேதமென்பதே கிடையாது. ஞானம் ஒன்றே ஸத்யம். ஞானத்தை அன்றி வேறானது எதுவும் எந்த தேசத்திலும் இல்லை எந்த காலத்திலும் இல்லை. இருப்பது ஞானம் ஒன்றே. ஆனால் அவித்யை, அதனால் ஏற்பட்ட கர்மா அதன் பலனாக ஏற்பட்ட பலவிதபேதம் முதலானவை உண்மையில் இருப்பதாக அறியப்படுகிறது. ஆனால் ஞான ஸ்வரூபம், சுத்தம், நிர்மலம் சோகமற்றது. ஸமஸ்த்த தோஷங்கள் அற்றது. அது ஒன்றே ஸதா ஏகரூபமாக இருக்கின்றது. அந்த ஸ்வரூபமே பரமேச்வரன், வாசுதேவன், அவரை அன்றி வேறாக எதுவுமே இல்லை.

இந்தவிதம் ஞான ஸ்வரூபமான ப்ரஹ்மம் ஒன்றே பரமார்த்த ஸத்யம். ஸர்வப்ரபஞ்சம் எல்லாம் மாயா கல்பிதமானதால் அபரமார்த்தம் என்றே அறியவேண்டும். விசுத்த ஞானிக்கு ப்ரபஞ்சபேதம் என்பதே கிடையாது. எது ஸத்ஸ்வரூபமோ அதுவே வஸ்து. எந்த வஸ்து பரிணாமத்தை அடைகிறதோ அவையெல்லாமே அவஸ்து (வஸ்து அல்ல). சித் வஸ்து எதுவோ அந்த வஸ்துவே விஞ்ஞானம். அதற்கு அன்யமான ஸர்வமும் அவஸ்து. ப்ராந்தியினால் வஸ்துவென்று தோன்றுகிறது. ஏகமான வஸ்து எதுவோ அதுவே அனேகமாக க்ரஹிக்கப்படுகிறது. இப்பேர்ப்பட்ட ப்ரஹ்மம் வாக் மனஸ் அகோசரம் என்பதால் வ்யவஹாரத்திற்கு உட்பட்டதல்ல (அவ்யவஹார்யம்). ப்ரஹ்மம் மாயாமயமான இந்த ப்ரபஞ்சத்துடன் கூடியதாக, மாயையினால் அந்த ப்ரஹ்மமே ஸவிசேஷம் என்று வ்யவஹாரம் இருக்கின்றதென்றாலும், ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்பதே பரமார்த்த ஸத்யம் என்று ஸித்திக்கின்றது.

40. விஷ்ண்வாதாரம் யதா சைதத்த்ரைலோக்யம் ஸமவஸ்திதம் ।
பரமார்த்தஸ்ச மே ப்ரோக்தோ யதாஞ்ஞானம் ப்ரதானத: ॥

४० ॥ विष्णवाधारं यथा चैतत्त्रैलोक्यं समवस्थितम् ।
परमार्थश्च मे प्रोक्तो यथाज्ञानं प्रधानतः ॥ 2.13.2

40. இந்த மூன்று லோகங்களும், விஷ்ணுவை ஆதாரமாகக்கொண்டே இருக்கின்றது. எனக்கு உபதேசிக்கப்பட்ட ஞானம் ஒன்றே பரமார்த்தம் அதுவே விஷ்ணுஸ்வரூபம். அதுவே ஸத்யம். மற்றவை மித்யா.

இந்த ச்லோகத்தில் ஞானம் ஒன்றே பரமார்த்த ஸத்யம் அதைத்தவிர வேறான எல்லாமே மித்யை என்று ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

41. ஏவம் ந பரமார்த்தோஸ்தி ஜகத்யஸ்மின் சராசரே ॥

४१ ॥ एवं न परमार्थोऽस्ति जगत्यस्मिन् चराचरे । 2.14.19

42. பரமார்த்தஸ்து பூபால ஸம்க்ஷேபாத் ச்ரூயதாம் மம ॥

४२ ॥ परमार्थस्तु भूपाल संक्षेपाच्छ्रूयतां मम ॥ 2.14.28

43. ஏகோ வ்யாபீ ஸமச்சுத்த: நிர்குண: ப்ரக்ருதே: பர: ।
ஜன்மவ்ருத்யாதிரஹித: ஆத்மா ஸர்வகதோவ்யய: ॥

४३ ॥ एको व्यापी समश्शुद्धो निर्गुणः प्रकृतेः परः ।
जन्मवृद्ध्यादिरहित आत्मा सर्वगतोऽव्ययः ॥ 2.14.29

44. பரஞானமய: அஸத்பி: நாமஜாத்யாதிபி: விபு: ।
ந யோகவான் ந யுக்த: அபூத் நைவ பார்த்திவ யோக்ஷ்யதே ॥

४४ ॥ परज्ञानमयोऽसद्भिर्नामजात्यादिभिर्विभुः ।
न योगवान्न युक्तोऽभून्नैव पार्थिव योक्ष्यते ॥ 2.14.30

45. தஸ்யாத்மபரதேஹேஷு ஸதோப்யேகமயம் ஹி யத் ।
விஞ்ஞானம் பரமார்த்தோஸௌ த்வைதின: அதத்யதர்சின: ॥

४५ ॥ तस्यात्मपरदेहेषु सतोप्येकमयं हि यत् ।
विज्ञानं परमार्थोऽसौ द्वैतिनोऽतथ्यदर्शिनः ॥ 2.14.31

46. வேணுரந்த்ரவிபேதேன பேதஷ்ஷட்ஜாதிஸம்ஞ்ஞித: ।
அபேதவ்யாபின: வாயோ: ததாஸ்ய பரமாத்மன: ॥

४६ ॥ वेणुरन्ध्रविभेदेन भेदष्षड्जादिसंज्ञितः ।
अभेदव्यापिनो वायोस्तथास्य परमात्मनः ॥ 2.14.32

47. ஏகத்வரூபபேதஸ்து பாஹ்யகர்மப்ரவ்ருத்திஜ: ।
தேவாதிபேதே அபத்வஸ்தே நாஸ்த்யேவாவரணே ஹி ஸ: ॥

४७ ॥ एकत्वरूपभेदस्तु बाह्यकर्मप्रवृत्तिजः ।
देवादिभेदेऽपध्वस्ते नास्त्येवावरणे हि सः ॥ 2.14.33

41-47. இந்த ஜகத்தில் எந்த வஸ்துவும் பரமார்த்தமாக இல்லை. ஹே! ராஜனே! பரமார்த்தவஸ்து இந்த ஜகத்தில் சேர்ந்ததல்ல. அந்த பரமார்த்த வஸ்துவைப்பற்றி சுருக்கமாக (ஸம்க்ஷேபமாக) தெரிவிக்கின்றேன்.

அந்த வஸ்து ஒன்றே, ஸர்வவ்யாபகம், ஸமம், சுத்தம், நிர்க்குணம். ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டது. ஜனனம் முதலான ஷட்பாவ விகாரங்கள் அற்றது. ஆத்ம ஸ்வரூபம் ஸர்வகதம், அவ்யயம், சைதன்ய ஸ்வரூபம், முக்காலத்திலும் நாமம், ரூபம், ஜாதி முதலான மித்யா பூதங்களுடைய ஸம்பந்தம் அற்றது. தன் தேஹம் பரனுடையதேஹம் முதலான ஸர்வ சரீரங்களிலும் இருக்கின்றவர் ஒருவரே. அவரை அறிவதே விஞ்ஞானம். அதுவே பரமார்த்தம். இதற்கு மாறாக த்வைதத்தில் ஸத்யபுத்தி உடையவர்கள் தத்வதர்சிகள் அல்ல. அதத்வதர்சி கள் என்றே அறியவேண்டும்.

புல்லாங்குழலில், அனேக த்வாரங்கள் உள்ளன. அதன் மூலம் அனேக சப்தங்கள் வெளிப்பட்ட போதிலும், அந்த குழலில் உள்ள வாயு ஸ்வரூபம் ஒன்றே. ஆனால் உபாதியினால் ஏழுவிதமான சப்தபேதங்கள் ஏற்படுகிறது என்றாலும் அந்த வாயுவில் எவ்வித பேதமும் கிடையாது. இதேபோல், ஆத்ம ஸ்வரூபம் ஒன்றே. உபாதிபேதத்தினால் தேவன் என்றும், மனுஷ்யன் என்றும், பசு, பக்ஷ்யாதிகள் என்றும் ரூபபேதங்கள் தோன்றுகின்றது. இவ்விதம் ஆத்மஸ்வரூபம் பற்றி அறியப்படாமல் அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்டிருந்தாலும், ஆவரண ரூபமான அஞ்ஞானம் ஆத்மஞானத்தினால் நிவர்த்திக்கின்றபோது பேதம் எதுவும் அறியப்படுவதில்லை.

ப்ரஹ்மம் ஒன்றே பரமார்த்தம். அந்த ப்ரஹ்மம் ஏகம், நிர்க்குணம், ஞானஸ்வரூபம். ஆத்ம ஸ்வரூபம் நாமம், ஜாதி, முதலான பேதங்கள் அற்றது. இவ்விதம் இருக்கின்ற ஸ்வரூபத்தில் பேதங்கள் இருப்பதாக பார்க்கின்றவர்கள் (அறிகின்றவர்கள்) எல்லோரும் ப்ராந்தர்கள் என்றே இந்த ச்லோகங்கள் தெரிவிக்கின்றது.

48. புமான் ஸர்வகதோ வ்யாபீ ஆகாசவதயம் யத: ।
குத: குத்ர க்வ கந்தாஸி இத்யேதத் அஸ்ய அர்த்தவத் கதம் ॥

४८ ॥ पुमान् सर्वगतो व्यापी आकाशवदयं यतः ।
कुतः कुत्र क्व गन्तासीत्येतदस्यार्थवत्कथम् ॥ 2.15.24

49. ஸோஹம் ந கந்தா நாகந்தா நைகதேசநிகேதன: ।
த்வம் சான்யே ச ந ச த்வம் ச நான்யேநாஹமப்யஹம் ॥

४९ ॥ सोहं न गन्ता नागन्ता नैकदेशनिकेतनः ।
त्वं चान्ये च न च त्वं च नान्येनाहमप्यहम् ॥ 2.15.25

48,49 இந்த ச்லோகங்களில் ஆத்ம ஸ்வரூபம், ஆகாசம் போல் ஸர்வகதமாகவும், வ்யாபகமாகவும், இருக்கின்றது. அதனால் அந்த ஆத்ம ஸ்வரூபம் எங்கிருந்து எங்கு அசையமுடியும்? எவ்விதம் போகமுடியும்? அதனால் நீ எங்கிருந்து வந்தாய், எங்கு செல்கிறாய் என்ற கேள்விக்கு அர்த்தமே கிடையாது. அதனால் நான் எங்கிருந்தும் வரவில்லை, எங்கும் போவதுமில்லை, ஏதோ ஒரு ப்ரதேசத்தில் வாஸம் (வஸிப்பவன்) செய்பவனும் அல்ல. இந்தவிதமே நீயும், நானும், இன்னும் மற்றுமுள்ள எல்லோருமே ஸர்வகதம், ஸர்வவ்யாபியாக இருக்கின்றோம். அதனால் நான் வருகிறேன், போகிறேன் என்று பரிச்சின்னமான 'நான்' என்று சொல்வதெல்லாமே, உண்மையில் ஆத்ம ஸ்வரூபம் அல்ல.

ஆத்மா 'ஸர்வகதம்' என்று சொல்லப்படுவதால் வாயுவைப்போல் ஸஞ்சரிப்பவன் என்ற ஸந்தேஹம் ஏற்படலாம். அந்த ஸந்தேஹத்திற்கு இடமின்றி ஸர்வவ்யாபி என்ற பதம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனால் ஸர்வகதம் என்றும், ஸர்வவ்யாபி என்பதும் புனருக்தி என்று சொல்லமுடியாது. மேலும், ஆத்மா அணுபரிமாணம் என்பது ராமானுஜர் ஸித்தாந்தம். அந்த ஸித்தாந்தம் சரியல்ல என்று ஸர்வ வ்யாபி என்ற பதத்தைக்கொண்டு நிராகரணம் செய்யப்படுகிறது.

அதேபோல் நீ என்றும், நான் என்றும் அவன் என்றும் லோகத்தில் இருக்கின்ற வ்யவஹாரத்திற்கு விஷயமாகின்ற அஹம் பதார்த்த வ்யவஹாரம் உபாதியைக்கொண்டே ஏற்படுகிறது. உண்மையில் ஆத்மபேதம் கிடையாது. 'ஆத்மா ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம' என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

50. ஏகமேவமிதம் வித்தி ந பேதி ஸகலம் ஜகத் ।
வாஸுதேவாபிதேயஸ்ய ஸ்வரூபம் பரமாத்மன: ॥

५० ॥ एकमेवमिदं विद्धि न भेदि सकलं जगत् ।
वासुदेवाभिधेयस्य स्वरूपं परमात्मनः ॥ 2.15.35

50, ஸர்வ ஜகத்தும் ஒரே வாஸுதேவ பரமாத்ம ஸ்வரூபம் என்றே அறியவேண்டும். பேதம் (பின்னம்) என்று அறியக்கூடாது. அத்வைதமே தத்வம் என்று அறியவேண்டும்.

51. ததேதத் உபதிஷ்டம் தே ஸம்க்ஷேபேண மஹாமதே ।
பரார்த்தஸாரபூதம் யத் தத் அத்வைதமசேஷத: ॥

५१ ॥ तदेतदुपदिष्टं ते संक्षेपेण महामते ।
परार्थसारभूतं यत्तदद्वैतमशेषतः ॥ 2.16.18

52. ஏவமுக்த்வா யயௌ வித்வான் நிதாகம் ஸ ரிபுர்குரு: ।
நிதாகோபி உபதேசேன தேன அத்வைதபர: அபவத் ॥

५२ ॥ एवमुक्त्वा ययौ विद्वान्निदाघं स ऋभुर्गुरुः ।
निदाघोप्युपदेशेन तेनाद्वैतपरोऽभवत् ॥ 2.16.19

53. ஸர்வபூதான்யபேதேன தத்ருஶே ஸ ததா ஆத்மன: ।
யதா ப்ரஹ்மபர: முக்திமவாப பரமாம் த்விஜ: ॥

५३ ॥ सर्वभूतान्यभेदेन ददृशे स तदाऽऽत्मनः ।
यथा ब्रह्मपरो मुक्तिमवाप परमां द्विजः ॥ 2.16.20

51, 52, 53, இவ்விதம் தெரிவிக்கின்ற ச்லோகங்களில் ஸாரபூதமான பரமார்த்த தத்வம் அத்வைதம் என்று சுருக்கமாக ரிபு முனிவர், நிதாகன் என்ற சிஷ்யருக்கு உபதேசித்தார். அதனால் நிதாகரும், ஸர்வ பூதங்களிலும் தன் ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்து ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்தார். இவ்விதம் பரம புருஷார்த்தமான ஸாக்ஷாத்காரத்தை அடைந்ததால் மோக்ஷத்தை அடைந்தார் என்று சொல்லப்படுகிறது.

ஆகவே இந்த ச்லோகங்களிலும் அத்வைதம் ஒன்றே பரமார்த்தம் என்றும், அத்வைதமே தத்வம் என்று அறிந்து ஸ்வஸ்வரூப ஸாக்ஷாத்காரம் (அஹம் ப்ரஹ்மாஸ்மி) ஏற்பட்ட காரணத்தினாலேயே மோக்ஷ ஸித்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அப்யாஸம், பலம் என்ற இரண்டு தாத்பர்ய லிங்கங்களினால் இந்த விஷயம் ஸித்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று அறியலாம்.

54. ஸிதநீலாதிபேதேன யதைகம் த்ருச்யதே நப: ।
ப்ராந்தத்ருஷ்டிபிராத்மாபி ததைகஸ்ஸன் பருதக் க்ருத: ॥

५४ ॥ सितनीलादिभेदेन यथैकं दृश्यते नभः ।
भ्रान्तदृष्टिभिरात्मापि तथैकस्सन् पृथक्कृतः ॥ 2.16.22

55. ஏகஸ்ஸமஸ்தம் யதிஹாஸ்தி கிஞ்சித் தத் அச்யுதோ நாஸ்தி பரம் ததோன்யத் ।
ஸோஹம் ஸ ச த்வம் ஸ ச ஸர்வமேதத் ஆத்மஸ்வரூபம் த்யஜ பேதமோஹம் ॥

५५ ॥ एकस्समस्तं यदिहास्ति किञ्चित्तदच्युतो नास्ति परं ततोन्यत् ।
सोहं स च त्वं स च सर्वमेतदात्मस्वरूपं त्यज भेदमोहम् ॥ 2.16.23

56. இதீரித: தேன ஸ ராஜவர்ய: தத்யாஜ பேதம் பரமார்த்தத்ருஷ்டி: ।
ஸ சாபி ஜாதிஸ்மரணாப்தபோத: தத்ரைவ ஜன்மன்யபவர்கமாப ॥

५६ ॥ इतीरितस्तेन स राजवर्यस्तत्याज भेदं परमार्थदृष्टिः ।
स चापि जातिस्मरणाप्तबोधस्तत्रैव जन्मन्यपवर्गमाप ॥ 2.16.24

54-56 வெள்ளை, நீலம் முதலான பலவிதமான பேதங்களுடன் கூடியதாக ஆகாசம் அறியப்பட்டபோதிலும், ஆகாசம் என்பது ஒன்றே. அதேபோல் ஒரே ஆத்மஸ்வரூபம், ப்ராந்தியினால் பலவிதமாக அறியப்படுகிறது. உண்மையில் லோகத்தில் உள்ள வஸ்துக்கள் எல்லாமே அச்யுதன் என்ற ஸ்திரமாக இருக்கின்ற ஆத்ம ஸ்வரூபந்தான். நான், நீ என்ற

எல்லோருமே ஒரே ஆத்ம ஸ்வரூபந்தான். அதனால் பேதம் ஏதும் கிடையாது. அறியப்படும் பேதம் உண்மை அல்ல என்று அறிந்து பேதத்தை விட்டுவிடு என்று இவ்விதம் ஒரு ப்ராஹ்மணனால் உபதேசம் பெற்ற ராஜா, தன் உண்மையான ஸ்வரூபமான ஆத்மாவே ப்ரஹ்மம் என்று அறிந்தவுடன் அந்த ராஜாவிற்கு முன் ஜன்ம ஞாபகம் ஏற்பட்டு, 'நான் ஜடபரதர்' என்ற ஞானம் ஏற்பட்டது. இவ்விதம் ரிஷபதேவரால் உபதேசம் பெற்றதால் ஞானம் ஏற்பட்டவுடன் இந்த ஜன்மாவிலேயே மோக்ஷத்தை அடைந்தார்.

ஆத்ம நானாத்வம் என்பதும் ஜீவாத்மா, பரமாத்மா என்ற பேதமும் ப்ராந்தியினால் ஏற்பட்டது. ஆத்மா ஒன்றே உண்மை. ஜகத் என்பதும் ப்ரஹ்மத்தை அன்றி வேறானது அல்ல. அறியப்படும் பேதம் ப்ராந்தி ஞானம் என்பதால் தத்வஞானத்தினால் நிவர்த்திக்கின்றது. இந்த ஞானத்தினால் மோக்ஷம் என்ற பலன் ஸித்திக்கின்றது. இவ்விதம் விஷ்ணு புராணத்தின் இரண்டாவது அம்சமும் நிர்விசேஷ ப்ரஹ்மபரம்தான் என்று தாத்பர்ய நிர்ணாயக லிங்கங்களைக்கொண்டு நிரூபணம் செய்யப்பட்டது.

மூன்றாவது அம்சத்தில்,

57. ஏவமேஷ ஜகத்ஸர்வம் கரோதி பரிபாதி ச ।
ஹந்தி சாந்தேஷு அனந்தாத்மா நாஸ்த்யஸ்மாத்வயதிரேகி யத் ॥

५७ ॥ एवमेष जगत्सर्वं करोति परिपाति च ।
हन्ति चान्तेष्वनन्तात्मा नास्त्यस्माद्यतिरेकि यत् ॥ 3.2.60

58. ஞாதமேதந்மயா த்வத்தோ யதா ஸர்வமிதம் ஜகத் ।
விஷ்ணுர்விஷ்ணௌ விஷ்ணுதச்ச ந பரம் வித்யதே தத: ॥

५८ ॥ ज्ञातमेतन्मया त्वत्तो यथा सर्वमिदं जगत् ।
विष्णुर्विष्णौ विष्णुतश्च न परं विद्यते ततः ॥ 3.3.1

57, 58 பரமாத்மாவே இந்த ஜகத்தை ச்ருஷ்டித்து அதை பரிபாலனம் செய்பவராகவும், ஸம்ஹாரம் செய்கின்றவராகவும் இருக்கின்றார் என்று சொல்லப்படுவதால் பரமாத்மாவை அன்றி வேறாக எதுவுமே இல்லை. அதாவது இந்த ஜகத் விஷ்ணுவினிடமிருந்தே தோன்றி, விஷ்ணுவில் ஸ்திதி பெற்று, விஷ்ணுவிலேயே லயத்தை அடைகின்றதால் விஷ்ணுவை அன்றி வேறாக எதுவுமே இல்லை என்று ஸித்திக்கின்றது. ஆதலால் அத்விதீயம் பிரஹ்ம.

59. ஏதத்ப்ரஹ்ம த்ரிதா பேதமபேதமபி ஸ ப்ரபு: ।
ஸர்வபூதேஷ்வபேதோஸௌ பித்யதே பின்னபுத்திபி: ॥

५९ ॥ एतद्ब्रह्म त्रिधा भेदमभेदमपि स प्रभुः ।
सर्वभूतेष्वभेदोसौ भिद्यते भिन्नबुद्धिभिः ॥ 3.3.29

59. ஒரே ப்ரஹ்மம், மூன்று உபாதியினால் பூ: புவ: ஸுவ: என்ற மூன்று வ்யாக்ருதி ரூபமாகவும் மூன்று லோகரூபமாகவும் ரிக், யஜுர், ஸாமம் என்ற மூன்று வேதரூபமாகவும் பலவித பேதங்கள் இருப்பதாக ப்ராந்தர்களால் அறியப்படுகிறது. ஆனால் உண்மையில் ஸர்வபூதங்களிலும் அபேத ஸ்வரூபமான ப்ரஹ்மம் ஒன்றே இருக்கின்றது என்று ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

60. கடகமகுடகர்ணிகாதிபேதை: கனகமபேதமபீஷ்யதே யதைகம் ।
ஸுரபசுமநுஜாதிகல்பனாபிர்ஹரிரகிலாபிருதீர்யதே ததைக: ॥

६० ॥ कटकमकुटकर्णिकादिभेदैः कनकमभेदमपीष्यते यथैकम् ।
सुरपशुमनुजादिकल्पनाभिर्हरिरखिलाभिरुदीर्यते तथैकः ॥ 3.7.16

60. கடகம் என்றும் மகுடம் என்றும் பலவிதமான ஆகாரங்களில் உள்ள ஆபரணங்கள் வெவ்வேறாக அறியப்பட்டபோதிலும், அவை எல்லாமே ஸ்வர்ணம் என்ற ஒரே வஸ்துதான். ஸ்வர்ணத்தை அன்றி வேறாக ஆபரணம் என்று ஒருவஸ்து இல்லை. அதேபோல் தேவர்கள், மனுஷ்யர்கள், பசு பக்ஷயாதிகள் என்பது போன்ற பலவித கல்பனைகளுக்கெல்லாம் பரமாத்மஸ்வரூபமே விஷயமாகின்றது. ஆகவே, ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம். கல்பிதமான த்வைதம் அஸத்யம் என்றே தெரிவிக்கின்றது.

61. ஸகலமிதமஹம் ச வாஸுதேவ: பரமபுமான் பரமேஸ்வரஸ்ஸ ஏக: ।
இதி மதிரசலா பவத்யனந்தே ஹ்ருதயகதே வ்ரஜ தான்விஹாய தூராத் ॥

६१ ॥ सकलमिदमहं च वासुदेवः परमपुमान् परमेश्वरस्स एकः ।
इति मतिरचला भवत्यनन्ते हृदयगते व्रज तान्विहाय दूरात् ॥ 3.7.32

61. எவர்கள், தன் ஹ்ருதயத்தில் ப்ரகாசிக்கின்ற பரமாத்மஸ்வரூபமே ஸர்வமாக இருக்கின்றதென்று, த்ருடமாக (ஸ்திரமாக) நிச்சல புத்தி உடையவர்களாக இருக்கின்றாகளோ, அப்பேர்ப்பட்ட ஞானிகளை விட்டு நீங்கள் போய்விடுங்கள் என்று யமதர்ம ராஜன் தன் ஸேவகர்களான யமதூதர்களுக்கு உபதேசிக்கின்றார். இந்த ச்லோகத்தின் மூலம் ஞானிகள், யமதூதர்களால் இழுத்துக்கொண்டு போகப்படுவதில்லை என்று அறியப்படுகிறது. இதுவே ஞானபலம்.

62. பூதானி ஸர்வாணி ததா அன்னமேதத் அஹம் ச விஷ்ணுர்ந ததோன்யதஸ்தி ।
தஸ்மாதஹம் பூதநிகாயபூதமன்னம் ப்ரயச்சாமி பவாய தேஷாம் ॥

६२ ॥ भूतानि सर्वाणि तथाऽन्नमेतदहं च विष्णुर्न ततोन्यदस्ति ।
तस्मादहं भूतनिकायभूतमन्नं प्रयच्छामि भवाय तेषाम् ॥ 3.11.54

62. ஸர்வபூதங்களும், அன்னமும், நானும் எல்லாமே விஷ்ணுதான், விஷ்ணுவைத்தவிர வேறு எதுவுமில்லை. அதனால் நானே ஸர்வ பூதங்களின் சரீரத்தை போஷிப்பதற்காக, அன்னதானம்

செய்கின்றேன். இந்த ச்லோகத்தில், 'அத்விதீயம் ப்ரஹ்ம' என்று ஸ்பஷ்ட்டமாகவே தெரிவிக்கின்றது.

63. சுக்லாதிதீர்காதிகனாதி ஹீனம் அகோசரம் யச்ச விசேஷணானாம் ।
சுத்தாதிசுத்தம் பரமர்ஷித்ருச்யம் ரூபாய தஸ்மை பகவன்னதா: ஸ்ம: ॥

६३ ॥ शुक्लादिदीर्घादिघनादि हीनमगोचरं यच्च विशेषणानाम् ।
शुद्धातिशुद्धं परमर्षिदृश्यं रूपाय तस्मै भगवन्नताः स्मः ॥ 3.17.32

64. யந்நச்சரீரேஷு யதந்யதேஹேஷு அசேஷவஸ்துஷு அஜமவ்யயம் யத் ।
தஸ்மாச்ச நான்யத் வ்யதிரிக்தமஸ்தி ப்ரஹ்மஸ்வரூபாய நதா: ஸ்ம தஸ்மை ॥

६४ ॥ यन्नश्शरीरेषु यदन्यदेहेष्वशेषवस्तुष्वजमव्ययं यत् ।
तस्माच्च नान्यद्व्यतिरिक्तमस्ति ब्रह्मस्वरूपाय नताः स्म तस्मै ॥ 3.17.33

63, 64 ஹே பகவன்! சுக்ல நீலாதி ரூபங்களும், ஹ்ரஸ்வ, தீர்க்கம் முதலான பரிமாணங்களும், த்ரவம், கனம், முதலான குணங்கள் அற்ற, ஸமஸ்த்த விசேஷணங்களுக்கும் விஷயமாக இல்லாத, பரமரிஷிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்ற சுத்தத்தில் அதிசுத்தமான பகவத் ஸ்வரூபமான உனக்கு நமஸ்காரம்.

எங்கள் சரீரங்களிலும், மற்றுமுள்ள ப்ராணிகளின் சரீரங்களிலும், மற்ற வஸ்துக்களிலும், உற்பத்தி, விநாசம் முதலான ஸம்பந்தம் எதுவுமின்றி இருந்து கொண்டு தன்னையன்றி வேறான வஸ்துக்களே இல்லாத ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு நமஸ்காரம்.

இந்த ச்லோகங்களிலும் நிர்விசேஷம், ஏகம், அத்விதீயம் ப்ரஹ்ம என்று மிகத் தெளிவாகவே சொல்லப்பட்டிருக்கின்றது.

நான்காவது அம்சத்தில்

65. யஸ்ஸ்ருஜ்யதே ஸர்கக்ருதாத்மனைவ ய: பால்யதே பாலயிதா ச தேவ: ।
விச்வாத்மகஸ்ஸம்ஹ்ரியதேந்தகாரி பருதக்த்ரயஸ்யாஸ்ய ச யோவ்யயாத்மா ॥

६५ ॥ यस्सृज्यते सर्गकृदात्मनैव यः पाल्यते पालयिता च देवः ।
विश्वात्मकस्संह्रियतेन्तकारी पृथक्त्रयस्यास्य च योऽव्ययात्मा ॥ 4.1.89

66. யஸ்மின் ஜகத்யோ ஜகதேததாத்யோ யச்சாச்ரிதோஸ்மின் ஜகதி ஸ்வயம்பூ: ॥

६६ ॥ यस्मिन् जगद्यो जगदेतदाद्यो यच्चाश्रितोस्मिन् जगति स्वयम्भूः ॥ 4.1.90

65, 66 எவர் ச்ருஷ்டிகர்த்தாவாக இருந்து கொண்டு, தன்னையே ஜகத் ரூபமாக தோன்றும்படிச் செய்கின்றாரோ, அதேபோல் எவர் தன் ஸ்வரூபமான ஜகத்தையே பாலனம் செய்பவராகவும், பாலனம் செய்யப்படும் வஸ்துவாகவும், இருக்கின்றாரோ, எவர்

ஸம்ஹாரம் செய்பவராகவும், ஸ்மஹாரத்திற்குரிய வஸ்துவாகவும் இருக்கின்றாரோ, அவரே ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற எந்த வ்யவஹாரத்திலும் ஸம்பந்தப்படாத அத்வய ஸ்வரூபமானவர். அவரிடத்திலிருந்தே ஜகத் தோன்றி ஸ்திதிபெற்று, லயத்தை அடைகின்றது. ஸர்வ ஜகத்திற்கும் ஆச்ரயமாகவும், ஸர்வத்திற்கும் ஆச்ரிதமாக ஜகத் ரூபமாக இருப்பதும் அவரே. ஹே ராஜன்! ஸர்வ பூதங்களுக்கும் காரணமான அந்த விஷ்ணுவே, பூலோகத்தில் அவதரித்திருக்கின்றார்.

இந்த ச்லோகமும், ஸர்வம் ப்ரஹ்மம், ப்ரஹ்மபின்னம் ஸர்வம் மித்யை என்று தெரிவிக்கின்றதால் அத்விதீயம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது.

5 வது அம்சத்தில்

67. க்ரஹர்க்ஷதாரகாசித்ரககனாக்னிஜலானிலா: ।
அஹம் ச விஷயாச்சைவ ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத் ॥

६७ ॥ ग्रहर्क्षतारकाचित्रगगनाग्निजलानिलाः ।
अहं च विषयाश्चैव सर्वं विष्णुमयं जगत् ॥ 5.1.20

67. க்ரஹங்கள், நக்ஷத்ரங்கள், தாரகை முதலானவைகளினால் பூர்ணமான ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், நானும் மற்றுமுள்ள சப்தாதி விஷயங்கள் முதலானவைகள் நிறைந்த இந்த ஜகத், விஷ்ணுரூபமே. இவ்வாறு பூமாதேவி ஸ்துதிக்கின்றாள்.

68. த்வமவ்யக்தமநிர்தேச்யம் அசிந்த்யானாம் அவர்ணவத் ।
அபாணிபாதரூபம் ச சுத்தம் நித்யம் பராத்பரம் ॥

६८ ॥ त्वमव्यक्तमनिर्देश्यमचिन्त्यानामवर्णवत् ।
अपाणिपादरूपं च शुद्धं नित्यं परात्परम् ॥ 5.1.40

69. ஏகம் தவாக்ர்யம் பரமம் பதம் யத் பச்யந்தி த்வாம் ஸூரயோ ஞானத்ருச்யம் ।
த்வத்தோ நான்யத்கிஞ்சிதஸ்தி ஸ்வரூபம் யத்வா பூதம் யச்ச பவ்யம் பராத்மன் ॥

६९ ॥ एकं तवाग्र्यं परमं पदं यत् पश्यन्ति त्वां सूरयो ज्ञानदृश्यम् ।
त्वत्तो नान्यत्किञ्चिदस्ति स्वरूपं यद्वा भूतं यच्च भव्यं परात्मन् ॥ 5.1.46

68, 69 நீயே அவ்யக்தம், வாக்கிற்கும், மனஸிற்கும் விஷயமாகாதவன், நாமரூபரஹிதன், கரங்கள், பாதங்கள் முதலான அவயவங்கள் அற்றவன். சுத்தம், நித்யம், பராத்பரம், ஏகம், உத்தமமான பரமபதம், ஞானிகள் ஞான கண்ணினால் உன்னைக் காண்கின்றனர். பூதம், வர்த்தமானம், பவிஷ்யத் என்ற எல்லாமே உன் ஸ்வரூபம். உனக்கு வேறான வஸ்து எதுவுமே இல்லை. இந்த ச்லோகத்திலும், நிர்விசேஷம் ப்ரஹ்மம் அத்விதீயம் என்று ஸ்பஷ்ட்டமாக சொல்லப்பட்டிருக்கின்றது.

70. ஸன்மாத்ரரூபிணேऽசிந்த்யமஹிம்னே பரமாத்மனே ।
வ்யாபினே நைகரூபைகஸ்வரூபாய நமோ நம: ॥

७० ॥ सन्मात्ररूपिणेऽचिन्त्यमहिम्ने परमात्मने ।
व्यापिने नैकरूपैकस्वरूपाय नमो नमः ॥ 5.18.48

71. பூதாத்மா சேந்த்ரியாத்மா ச ப்ரதானாத்மா ததா பவான் ।
ஆத்மா ச பரமாத்மா ச த்வமேக: பஞ்சதா ஸ்தித: ॥

७१ ॥ भूतात्मा चेन्द्रियात्मा च प्रधानात्मा तथा भवान् ।
आत्मा च परमात्मा च त्वमेकः पञ्चधा स्थितः ॥ 5.18.50

70, 71 அக்ரூரர் இவ்விதம் ஸ்துதிக்கின்றார் -:

ஸன்மாத்ரஸ்வரூபம், சிந்தனைக்கெட்டாத மஹிமை உடையவர், ஸர்வவ்யாபகர், ஒன்றாகவே இருந்தாலும், அனேகமாக தோன்றுபவரான பரமாத்ம ஸ்வரூபத்திற்கு நமஸ்காரம்.

பூதாத்மா, இந்த்ரியாத்மா, ப்ரதானாத்மா, ஜீவாத்மா, பரமாத்மா என்று ஐந்து விதமாக இருப்பவனும் நீ ஒருவனே!

72. அனாக்யேயஸ்வரூபாத்மன் அனாக்யேயப்ரயோஜன ।
அனாக்யேயாபிதானம் த்வாம் நதோஸ்மி பரமேச்வர ॥

७२ ॥ अनाख्येयस्वरूपात्मन्ननाख्येयप्रयोजन ।
अनाख्येयाभिधानं त्वां नतोस्मि परमेश्वर ॥ 5.18.52

73. ந யத்ர நாத வித்யந்தே நாமஜாத்யாதிகல்பனா ।
தத்ப்ரஹ்ம பரமம் நித்யம் அவிகாரி பவானஜ: ॥

७३ ॥ न यत्र नाथ विद्यन्ते नामजात्यादिकल्पना ।
तद्ब्रह्म परमं नित्यमविकारि भवानजः ॥ 5.18.53

74. ந கல்பனாம்ருதேऽர்த்தஸ்ய ஸர்வஸ்யாதிகமோ யத: ।
தத: க்ருஷ்ணாச்யுதானந்தவிஷ்ணுஸம்ஞாபிரீட்யதே ॥

७४ ॥ न कल्पनामृतेऽर्थस्य सर्वस्याधिगमो यतः ।
ततः कृष्णाच्युतानन्तविष्णुसंज्ञाभिरीड्यते ॥ 5.18.54

75. ஸர்வார்த்தாஸ்த்வமஜ விகல்பனாபிரேதை:
தேவாத்யைர்பவதி ஹி யைரனந்தவிச்வம் ।
விச்வாத்மா த்வமிதி விகாரஹீனம் ஏதத்
ஸர்வஸ்மின்ன ஹி பவதோஸ்தி கிஞ்சிதன்யத் ॥

७५ ॥ सर्वार्थास्त्वमज विकल्पनाभिरेतैर्देवाद्यैर्भवति हि यैरनन्तविश्वम् ।
विश्वात्मा त्वमिति विकारहीनमेतत्सर्वस्मिन्न हि भवतोस्ति किञ्चिदन्यत् ॥ 5.18.55

76. த்வம் ப்ரஹ்மா பசுபதி: அர்யமா விதாதா
தாதா த்வம் த்ரிதசபதி: ஸமீரணோக்னி: ।
தோயேசோ தனபதிரந்தகஸ்த்வமேகோ
பின்னார்தை: ஜகதபி பாஸி சக்திபேதை: ॥

७६ त्वं ब्रह्मा पशुपतिरर्यमा विधाता धाता त्वं त्रिदशपतिस्समीरणोऽग्निः ।
तोयेशो धनपतिरन्तकस्त्वमेको भिन्नार्थैर्जगदपि पासि शक्तिभेदैः ॥

72, 73, 74, 75, 76 வாக்கினால் இன்னதென்று நிர்த்தேசம் செய்யமுடியாதவனே! ஆப்தகாமனான உனக்கு எவ்வித ப்ரயோஜனமும் சொல்லமுடியாத சீருஷ்டி முதலான கார்யங்களை செய்கின்றவனே! நாம ரஹிதனாகவும் ஸகுணமாக அனந்த நாமாக்களை உடையவனாக இருக்கின்ற உன்னை வாக்கினால் அளவிட்டு கூறமுடியாத நாமங்களையுடைய நிர்குணமான பரமேச்வரனான உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

ஹே நாதனே! நாமமோ, ஜாதியோ, முதலான எவ்வித கல்பனைகளும் அற்ற அவிகாரியான, அனாதி பரப்ரஹமம் நீயே! நாம கல்பனைகள் இல்லாத எந்த வஸ்துவும் லோகத்தில் அறியமுடியாது. அதனால் க்ருஷ்ணன், அச்யுதன், அனந்தன், விஷ்ணு, என்பது போன்ற அனந்த நாமங்கள் கல்பிக்கப்பட்டு நீ ஸ்துதிக்கப்படுகிறாய்.

ஹே அனாதி அனந்தனே! தேவாதி ஸர்வப்ரபஞ்சமும் உன்னிடம் கல்பனையினால் உண்டாகின்றது. நீயே இந்த ஜகத் ரூபமாக இருந்தாலும் விகாரம் (மாறுதலை) அடையாதவன். உன்னையன்றி வேறாக ஜகத் என்பதில் எதுவுமே இல்லை. ப்ரஹ்மா, ருத்ரன், அர்யமா, விதாதா, தாதா, இந்த்ரன், வாயு, அக்னி, வருணன், குபேரன், யமன் என்ற ஸர்வரூபங்களாகவும், பலவிதமான சக்திகளால், பலவிதமான கார்யங்களைச் செய்பவனாக, இந்த ஜகத்தை ரக்ஷிக்கின்றவன் நீயே.

இவ்விதம் சொல்லப்பட்ட இந்த ச்லோகங்களிலும், ஒரே ப்ரஹ்மஸ்வரூபம் மாயையால் ஐந்து விதமாக இருக்கிறது, அது ஸன்மாத்ரம் நாமஜாதி முதலிய கல்பனா இல்லாதது, அதனால் நிர்விசேஷம் வாக்கிற்கு எட்டாதது, ஜகத் கல்பிதம், ப்ரஹ்மத்தை தவிர எதுவும் இல்லை, ப்ரஹ்மம் ஏகம் ஏவ அத்விதீயம், நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்று ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டு இருக்கிறது.

77. மூர்தாமூர்தம் ததா சாபி ஸ்தூலம் ஸூக்ஷ்மதரம் ததா ।
தத்ஸர்வம் த்வம் ஜகத்கர்தா நாஸ்தி கிஞ்சித் த்வயா வினா ॥

७७ ॥ मूर्तामूर्तं तथा चापि स्थूलं सूक्ष्मतरं तथा ।
तत्सर्वं त्वं जगत्कर्ता नास्ति किञ्चित्त्वया विना ॥ 5.23.37

78. ஸிததீர்காதிநிச்சேஷகல்பனாபரிவர்ஜித ।
ஜன்மாதிபிரஸம்ஸ்ப்ருஷ்ட ஸ்வப்னாதிபரிவர்ஜித ॥

७८ ॥ सितदीर्घादिनिश्शेषकल्पनापरिवर्जित ।
जन्मादिभिरसंस्पृष्ट स्वप्नादिपरिवर्जित ॥ 5.30.8

77 - 78. இந்த ச்லோகங்கள் ப்ரஹ்மம் நிர்விகல்பம் என்றே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது. மூர்த்தமென்றும், அமூர்த்தமென்றும், ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்ற எல்லாமே ஜகத்கர்த்தாவான உன்னை அன்றி பின்னமாக (வேறாக) இல்லை.

ச்வேதம் முதலான ரூபங்களோ, தீர்க்கம் முதலான பரிமாணங்களோ இல்லாதவரும், இதுபோன்ற கல்பனை எதுவும் இல்லாதவரும் ஜன்மா முதலான பாவவிகாரங்கள் அற்றவராகவும், ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற அவஸ்த்தைகள் இல்லாதவரான உங்களை நமஸ்கரிக்கின்றேன்.

79. யோஹம் ஸ த்வம் ஜகச்சேதம் ஸதேவாஸுரமானுஷம் ।
மத்தோ நான்யதசேஷம் யத்தத்வம் ஞாதுமிஹார்ஹஸி ॥

७९ ॥ योहं स त्वं जगच्चेदं सदेवासुरमानुषम् ।
मत्तो नान्यदशेषं यत्तत्वं ज्ञातुमिहार्हसि ॥ 5.33.48

80. அவித்யாமோஹிதாத்மான: புருஷா பின்னதர்சின: ।
வதந்தி பேதம் பச்யந்தி சாவயோரந்தரம் ஹர ॥

८० ॥ अविद्यामोहितात्मानः पुरुषा भिन्नदर्शिनः ।
वदन्ति भेदं पश्यन्ति चावयोरन्तरं हर ॥ 5.33.49

79, 80, பகவான் க்ருஷ்ணர், சிவபெருமானிடம் இவ்விதம் தெரிவிக்கின்றார் -:

ஹே! ஹரனே! தேவர், அசுரர், மனுஷ்யர் முதலான ஸம்பூர்ண ஜகத் என்னை அன்றி வேறாக இல்லை. அத்விதீயஸ்வரூபமான நானும், நீயும் ஒன்றே என்ற தத்வமே அறியப்படவேண்டியது.

அவித்யையினால் மோஹத்தை அடைந்த புருஷர்கள் சிவன் வேறு விஷ்ணு வேறு என்று பேத தர்சனமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். மற்றவர்களுக்கும் இதை போதிக்கின்றார்கள் என்று பகவானே தெரிவிக்கின்றார். ஏகமேவ அத்விதீய ப்ரஹ்மமே அவித்யையினால், பேதமுள்ளதாக அனேகமாக தோன்றுகிறது என்று ஸ்பஷ்ட்டமாகவே சொல்லப்பட்டிருக்கின்றது.

81. நிஷ்ப்ரபஞ்சே மஹாபாக ஸம்யோஜ்யாத்மானமாத்மனி ।
துர்யாவஸ்தஸ்ஸலீலம் ச சேதே ஸ்ம புருஷோத்தம: ॥

८१ ॥ निष्प्रपञ्चे महाभाग संयोज्यात्मानमात्मनि ।
तुर्यावस्थस्सलीलं च शेते स्म पुरुषोत्तमः ॥ 5.37.66

81 இந்த ச்லோகம் மூலமாக ஆத்மா நிஷ்ப்ரபஞ்சம் என்பதால் நிர்விசேஷம் ப்ரஹ்ம என்பது ஸ்பஷ்ட்டமாக அறியப்படுகிறது. ஹே! மஹாபாக்யவானே! என்று மைத்ரேயன் என்ற சிஷ்யருக்கு பராசரர் உபதேசிக்கின்றார் - அதாவது, பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் நிஷ்ப்ரபஞ்சமான ஆத்மஸ்வரூபத்தில் தன்னை ஐக்யம் செய்து துரீயஸ்வரூபத்திலேயே லீலையாக சயனம் செய்து கொண்டிருந்தார் என்று பராசரரால் சொல்லப்பட்டிருக்கிறது.

82. கதே தஸ்மின் ஸ பகவான் ஸம்யோஜ்யாத்மானமாத்மனி ।
ப்ரஹ்மபூதே அவ்யயே அசிந்த்யே வாஸுதேவமயே அமலே ॥

८२ ॥ गते तस्मिन् स भगवान् संयोज्यात्मानमात्मनि ।
ब्रह्मभूतेऽव्ययेऽचिन्त्ये वासुदेवमयेऽमले ॥ 5.37.74

83. அஜன்மன்யமலே விஷ்ணௌ அப்ரமேயே அகிலாத்மனி ।
தத்யாஜ மானுஷம் தேஹம் அதீத்ய த்ரிவிதாம் கதிம் ॥

८३ ॥ अजन्मन्यमले विष्णावप्रमेयेऽखिलात्मनि ।
तत्याज मानुषं देहमतीत्य त्रिविधां गतिम् ॥ 5.37.75

82,83 கதே தஸ்மின் என்று ஆரம்பிக்கின்ற இரண்டு ச்லோகங்களிலும், வேடன் புறப்பட்டு சென்ற பிறகு பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அவ்யயம், அசிந்த்யம், வாஸுதேவ ஸ்வரூபம், அமலம், அஜன்யம், அமரம், அப்ரமேயம், ஸர்வாத்மகம் என்ற ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் தன்னை ஐக்யம் செய்து கொண்டு, த்ரிகுணாத்மகமான கதியை தாண்டி மனுஷ்ய சரீரத்தை த்யாகம் செய்தார் என்றே தெரிவிக்கப்பட்டது.

இந்த ச்லோகங்களும் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே தெரிவிக்கின்றது. இந்த விதம் விஷ்ணு புராணத்தில் ஐந்தாவது அம்சமும் நிர்விசேஷ ப்ரஹ்மத்தையே ப்ரதிபாதனம் செய்கின்றது. இதன் மூலம் அப்யாஸரூப தாத்பர்ய லிங்கத்தைக்கொண்டு தெரிவிக்கப்பட்டது.

ஆறாவது அம்சத்தில்:

84. ந ஸந்தி யத்ர ஸர்வேசே நாமஜாத்யாதிகல்பனா: ।
ஸத்தாமாத்ராத்மிகே ஞேயே ஞானாத்மன்யாத்மன: பரே ॥

८४ ॥ न सन्ति यत्र सर्वेशे नामजात्यादिकल्पनाः ।
सत्तामात्रात्मिके ज्ञेये ज्ञानात्मन्यात्मनः परे ॥ 6.4.37

84. சரீரம் முதலான ஸங்காதங்களைக்காட்டிலும் வேறான ஸன்மாத்ரஸ்வரூபமான, ஞானஸ்வரூபமான பரமேச்வரனிடத்தில், நாமம் ஜாதி முதலான கல்பனைகள் எதுவுமில்லை.

85. ஹ்ரஸ்வதீர்கப்லுதைர்யத்து கிஞ்சித்வஸ்த்வபிதீயதே ।
யச்ச வாசாமவிஷயம் தத்ஸர்வம் விஷ்ணுரவ்யய: ॥

८५ ॥ह्रस्वदीर्घप्लुतैर्यत्तु किञ्चिद्वस्त्वभिधीयते ।
यच्च वाचामविषयं तत्सर्वं विष्णुरव्ययः ॥ 6.4.44

85. ஹ்ரஸ்வ, தீர்க்கம், ப்லுதம் என்ற இந்த அக்ஷரங்களைக்கொண்ட சப்தங்களினால் எந்த வஸ்துக்கள் தெரிவிக்கப்படுகிறதோ அந்த வஸ்துக்கள் வாக்கிற்கு விஷயமாகின்ற வஸ்துக்கள். அவ்விதம் வாக்கிற்கு விஷயமாகிற வஸ்து, வாக்கிற்கு விஷயமாகாத வஸ்து எல்லாமே அவ்யயமான விஷ்ணுவே. இந்த ச்லோகமும் ஏகமேவ அத்விதீயமான ப்ரஹ்மத்தையே தெரிவிக்கின்றது.

86. யத்ததவ்யக்தமஜரம் அசிந்த்யமஜமவ்யயம் ।
அநிர்தேச்யமரூபம் ச பாணிபாதாத்யஸம்யுதம் ॥

८६ ॥ यत्तदव्यक्तमजरमचिन्त्यमजमव्ययम् ।
अनिर्देश्यमरूपं च पाणिपादाद्यसंयुतम् ॥ 6.5.66

87. விபும் ஸர்வகதம் நித்யம் பூதயோனிரகாரணம் ।
வ்யாப்யவ்யாப்தம் யதஸ்ஸர்வம் யத்வை பச்யந்தி ஸூரய: ॥

८७ ॥ विभुं सर्वगतं नित्यं भूतयोनिरकारणम् ।
व्याप्यव्याप्तं यतस्सर्वं यद्वै पश्यन्ति सूरयः ॥ 6.5.67

88. தத்ப்ரஹ்ம தத்பரம் தாம தத்த்யேயம் மோக்ஷகாங்க்ஷிபி: ।
ச்ருதிவாக்யோதிதம் ஸூக்ஷ்மம் தத்விஷ்ணோ:பரமம் பதம் ॥

८८ ॥ तद्ब्रह्म तत्परं धाम तद्ध्येयं मोक्षकांक्षिभिः ।
श्रुतिवाक्योदितं सूक्ष्मं तद्विष्णोः परमं पदम् ॥ 6.5.68

89. அசப்தகோசரஸ்யாபி தஸ்ய வை ப்ரஹ்மணோ த்விஜ ।
பூஜாயாம் பகவச்சப்த: க்ரியதே ஹ்யுபசாரத: ॥

८९ ॥ अशब्दगोचरस्यापि तस्य वै ब्रह्मणो द्विज ।
पूजायां भगवच्छब्दः क्रियते ह्युपचारतः ॥ 6.5.71

86, 87, 88, 89, அவ்யக்தம், அஜரம், அசிந்த்யம், அஜம், அவ்யயம், அநிர்தேச்யம், அரூபம், பாணிபாதாதிரஹிதம், விபு, ஸர்வகதம், நித்யம், பூதயோனி, அகாரணம், வ்யாப்யவ்யாப்தம் (வ்யாப்யவ்யாபகம்) என்ற ஸர்வத்திற்கும் காரணம். பரப்ரஹ்மஸ்வரூபம், தத்வஞானிக்கு அபரோக்ஷமான ஸ்வரூபமே. இதுவே முமுக்ஷுக்களால் த்யானிக்கப்படவேண்டிய ஸ்வரூபம். ''தத்விஷ்ணோ: பரமம் பதம்'' என்ற ச்ருதிவாக்யமும் இந்த ஸ்வரூபத்தையே தெரிவிக்கின்றது. பகவத் சப்தத்திற்கு நிர்க்குண ப்ரஹ்மமே அர்த்தம். அதுவே பரமாத்ம ஸ்வரூபம்.

பூர்வ:- பகவத் சப்தத்திற்கு நிர்க்குண ப்ரஹ்மமே அர்த்தம் என்று சொல்லப்படுமானால், வாக்கிறகு எட்டாதது (அகோசரம்) என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- சப்த அகோசரம் என்றாலும், பூஜிக்கத்தக்க மேன்மை (மஹிமை) உடையது என்ற தன்மையை தெரிவிப்பதற்காக, 'பகவத்' சப்தம் உபசாரமாகச் சொல்லப்படுகிறது.

இந்த ச்லோகங்களும், வாக்கிற்கும் மனஸிற்கும் எட்டாத நிர்விசேஷ ப்ரஹ்மத்தையே தெரிவிக்கின்றது.

90. ஸம்ஞாயதே யேன ததஸ்ததோஷம் சுத்தம் பரம் நிர்மலமேகரூபம் ।
ஸம்த்ருச்யதே வாப்யவகம்யதே வா தத் ஞானமஞானமதோன்யதுக்தம் ॥

९० ॥ संज्ञायते येन तदस्तदोषं शुद्धं परं निर्मलमेकरूपम् ।
संदृश्यते वाप्यवगम्यते वा तद् ज्ञानमज्ञानमतोन्यदुक्तम् ॥ 6.5.87

90, பரமாத்மா நிர்தோஷம், சுத்தம், நிர்மலம், ஏகரூபம் என்று தெரிவிக்கின்ற வ்ருத்தியே 'ஞானம்' என்று சொல்லப்படுகிறது. அந்த வ்ருத்தி, பரோக்ஷமாக இருந்தாலும், அல்லது அபரோக்ஷமாக இருந்தாலும் அதுவே ஞானம். இந்த ஸ்வரூபத்திற்கு மாறாக எதை தெரிவிக்கின்றதோ, அந்த வ்ருத்தி ஞானம் எல்லாமே அஞ்ஞானம் என்றே சொல்லப்படுகிறது.

இந்த ச்லோகத்தில், நிர்விசேஷ ப்ரஹ்ம ஞானமே தத்வஞானம் என்றும் அதற்கு மாறாக அறியப்படும் ஸவிசேஷ ஞானம் எல்லாமே அஞ்ஞானம் என்று தெரிவிக்கின்றது.

91. அக்ஷீணேஷு ஸமஸ்தேஷு விசேஷஞானகர்மஸு ।
விச்வமேதத்பரம் சான்யத்பேதபின்னத்ருசாம் ந்ருணாம் ॥

९१ ॥ अक्षीणेषु समस्तेषु विशेषज्ञानकर्मसु ।
विश्वमेतत्परं चान्यद्भेदभिन्नदृशां नृणाम् ॥ 6.7.52

92. ப்ரத்யஸ்தமிதபேதம் யத்ஸத்தாமாத்ரமகோசரம் ।
வசஸாமாத்மஸம்வேத்யம் தஞ்ஞானம் ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம் ॥

९२ ॥ प्रत्यस्तमितभेदं यत्सत्तामात्रमगोचरम् ।
वचसामात्मसंवेद्यं तज्ज्ञानं ब्रह्मसंज्ञितम् ॥ 6.7.53

93. தச்ச விஷ்ணோ: பரம் ரூபமரூபாக்யமனுத்தமம் ।
விச்வஸ்வரூபவைரூப்யலக்ஷணம் பரமாத்மன: ॥

९३ ॥ तच्च विष्णोः परं रूपमरूपाख्यमनुत्तमम् ।
विश्वस्वरूपवैरूप्यलक्षणं परमात्मनः ॥ 6.7.54

91, 92, 93 எதுவரை பேத ஞானமும், கர்மாக்களும் பூரணமாக க்ஷயம் ஆகவில்லையோ, அதுவரை மனுஷ்யர்கள் ஜகத் என்றும், ஆத்மா என்றும், ப்ரஹ்மம் என்றும் பேதத்ருஷ்டி

உடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் பரமாத்ம ஸ்வரூபம் என்ற ப்ரஹ்மம் பேதமற்றது, ஸன்மாத்ரம், வாக்கிற்கு எட்டாதது, ஸ்வப்ரகாசம், சைதன்ய ஸ்வரூபம் என்பதே, அரூபம் என்று சொல்லப்படும் விஷ்ணுவின் உண்மையான ஸ்வரூபம் இந்த ஸ்வரூபமே, ஜகத் என்ற விச்வ ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறானது (விலக்ஷணம்).

இந்த ச்லோகம், ப்ராந்தர்களுக்கே ப்ரஹ்மம் வேறு, ஜகத் வேறு என்ற பேதப்ரதீதி இருக்கின்றது என்று சொல்லுகிறது. ஆனால் ஞானிகள், நிர்பேதம், வாக் அகோசரம், ஸன்மாத்ரம், ஞான ஸ்வரூபம் ப்ரஹ்மம் என்றே அறிகின்றார்கள். அதுவே பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபம். அத்வைதமே தத்வம் என்று தெரிவிக்கின்றது. அதுமட்டுமல்ல, ப்ரஹ்மத்திற்கு மூன்று ரூபம் என்று தெரிவிக்கின்றது. அதாவது, ஒன்று ஜகத் ரூபம், மற்றொன்று ஞான ஸ்வரூபம், மூன்றாவது அரூபம் என்றே தெரிவிக்கின்றது.

இதையே ஞான வாசிஷ்ட்டத்தில்:

ஆத்யம் ஹி மாயாமயதிவ்யகாத்ரம் த்விதீயமானந்தசிதேகரூபம் ।
த்ருதீயமத்யந்தமரூபமேவம் க்ரமேண ஶம்பும் த்ரிவிதம் ப்ரபத்யே ॥

आद्यं हि मायामयदिव्यगात्रं द्वितीयमानन्दचिदेकरूपम् ।
तृतीयमत्यन्तमरूपमेवं क्रमेण शंभुं त्रिविधं प्रपद्ये ॥

ஞான வாசிஷ்ட்டத்தில் இந்த ச்லோகத்தில், சிவன் (சம்பு) முதல் ரூபம், மாயாமயமான திவ்ய சரீரத்தைக்கொண்டது. இரண்டாவது, ஆனந்த சிதேகரூபம், மூன்றாவது அத்யந்தம் அரூபம் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் மூன்று ரூபங்களையுடைய சம்புவை நான் நமஸ்கரிக்கின்றேன், என்று தெரிவிக்கின்றது. இந்த ச்லோகத்தைக்கொண்டே ஸத்யம், ஞானம், ஆனந்தம் என்ற சப்தங்கள் நிர்விசேஷமான அரூப ப்ரஹ்மத்தை லக்ஷணையைக்கொண்டு போதிக்கின்றது என்று முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது.

பூர்வ:- மூன்றாவதாக ப்ரஹ்மம் அரூபம் என்று சொல்லப்படுமானால் அந்த ரூபம் ஸத் என்று (ஸத்தையுடன்கூடியது என்று) சொல்லமுடியாததால் முயல்கொம்பு போல் அஸத் என்றே சொல்லநேரிடும்.

ஸித்தா:- இது சரியல்ல. முயல் கொம்பு (சச ச்ருங்கம்) போல் அஸத்வம் என்று சொல்ல முடியாது. அரூபம் என்றால் ஸத் என்றோ, அஸத் என்றோ இரண்டு தன்மைகளும் அற்ற ஸ்வரூபம் என்றே சொல்லப்படுவதால் அஸ்தி என்றோ நாஸ்தி என்றோ வ்யவஹாரத்திற்கு விஷயமாகாது என்று சொல்லப்படுவதாலேயே அந்த ஸ்வரூபம் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

இவ்விதம் அரூபமானவஸ்து இருக்கின்றதென்றே ஞானவாசிஷ்ட்டத்தில் உள்ள ச்லோகம் தெரிவிக்கின்றது. மேலும் கீழ்க்கண்டவாறு சொல்லப்படுகிறது.

அதோஸ்யாலக்ஷணத்வேன ஸதஸத்பரதாஸ்த்யபி ।
சசஶ்ருங்கஸமானத்வம் நிதாகாசக்யமீரிதும் ॥

अतोस्यालक्षणत्वेन सदसत्परतास्त्यपि ।
शशश्रृङ्गसमानत्वं निदाघाशक्यमीरितुम् ॥

விசேஷஸத்தாபாவேபி ஸத்தாஸாமான்யதா யத: ।
நிர்த்வந்த்வத்வேன ஸம்ஸித்தா ததஸ்ஸத்தாதிகம் பவேத் ॥

विशेषसत्ताभावेपि सत्तासामान्यता यतः ।
निर्द्वन्द्वत्वेन संसिद्धा ततस्सत्तादिकं भवेत् ॥

பஹுச்ருத்யந்தகதிதம் ஸர்வாதீதமரூபகம் ।
தத்ப்ரஹ்மான்யத்கதம் நாஸ்தீத்யஹம் ப்ரூயாம் விதே வத ॥

बहुश्रुत्यन्तगदितं सर्वातीतमरूपकम् ।
तद्ब्रह्मान्यत्कथं नास्तीत्यहं ब्रूयां विधे वद ॥

(ஞானவாசிஷ்டம்)

இந்த ஸ்வரூபத்திற்கு லக்ஷணமாக வேறு எதையும் சொல்லமுடியாது. ஸத், அஸத், என்ற இரண்டைக்காட்டிலும் விலக்ஷணம் (வேறுபட்டது) ஏ நிதாகனே! இந்த ஸ்வரூபம் சச ச்ருங்கம் போல் அஸத் அல்ல. ஏனெனில் விசேஷமான ஸத்தை இல்லை என்றாலும் ஸத்ஸாமான்யம் இருக்கின்றது. இதற்கு பாஸகமான ஸ்வரூபம் வேறு எதுவுமில்லை. வேதாந்தங்களும் இந்தவிதமே போதிக்கின்றது. (ஸர்வ அவபாஸகமான) இந்த ஸ்வரூபம் நாஸ்தி என்று எவ்விதம் சொல்லமுடியும்?

94. தஸ்யைவ கல்பனாஹீனம் ஸ்வரூபக்ரஹணம் ஹி யத் ।
மனஸா த்யானநிஷ்பாத்யம் ஸமாதிஸ்ஸோபிதீயதே ॥

९४ ॥ तस्यैव कल्पनाहीनं स्वरूपग्रहणं हि यत् ।
मनसा ध्याननिष्पाद्यं समाधिस्सोभिधीयते ॥ 6.7.92

(விஷ்ணுபுராணம்)

விஷ்ணு புராணத்திலும் ஸத்தா மாத்ரமாக இருக்கும் இந்த ஸ்வரூபத்தை த்யானத்தினால் அறியும் நிலையை ஸமாதி என்று சொல்லப்படுகிறது.

இவ்விதம் 'ப்ரஹ்மஸ்வரூபம் நிர்விகல்பம்' என்று இந்த ச்லோகங்களில் சொல்லப்படுகிறது.

95. தத்பாவபாவமாபன்ன: ததோஸௌ பரமாத்மனா ।
பவத்யபேதீ பேதஸ்ச தஸ்யாஞ்ஞானக்ருதோ பவேத் ॥

९५ ॥ तद्भावभावमापन्नस्ततोऽसौ परमात्मना ।
भवत्यभेदी भेदश्च तस्याज्ञानकृतो भवेत् ॥ 6.7.95

96. விபேதஜனகே அஞ்ஞானே நாசமாத்யந்திகம் கதே ।
ஆத்மனோ ப்ரஹ்மணோ பேதம் அஸந்த: க: கரிஷ்யதி ॥

९६ ॥ विभेदजनकेऽज्ञाने नाशमात्यन्तिकं गते ।
आत्मनो ब्रह्मणो भेदमसन्तः कः करिष्यति ॥ 6.7.96

95, 96, இந்த ச்லோகங்களில், ஆத்ம ஞானம் ஏற்பட்டவன் பரமாத்மபாவத்தை அடைவதால், பரமாத்மாவுடன் ஐக்யமாகின்றான். ஜீவ பரமாத்ம பேதம் அஞ்ஞானத்தினால் ஏற்பட்டதால், அஞ்ஞானம் ஆத்யந்திக நாசத்தை அடைந்த பிறகு ஜீவ பரமாத்ம பேதம் எவ்விதம் இருக்கமுடியும்?

இவ்விதம், அஞ்ஞானத்தினால் ஏற்பட்டபேதம், ஆத்ம ஞானத்தினால் நிவர்த்திக்கின்றது என்று மிக தெளிவாக தெரிவிக்கின்றது. ஆகையால், அஞ்ஞான நாசத்திற்குப்பிறகு ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகத பேதம் எதுவுமே அற்ற ஸ்வரூபமாக ப்ரஹ்மம் நிர்விசேஷம், அத்வைதம் என்று ஸ்வஸ்வரூபேண ப்ரகாசிக்கின்றது என்று ஸித்திக்கின்றது.

97. விஷ்ண்வாக்யே நிர்மலே பரஹ்மண்யவாப நருபதிர்லயம் ॥

९७ ॥ विष्णवाख्ये निर्मले ब्रह्मण्यवाप नृपतिर्लयम् । 6.7.104

98. ஆத்யந்திகோ விமுக்திர்யோ லயோ ப்ரஹ்மணி ஶாஸ்வதே ॥

९८ ॥ आत्यन्तिको विमुक्तिर्यो लयो ब्रह्मणि शाश्वते । 6.8.1

97, 98, காண்டிக்யன் என்ற ராஜாவானவர், ஆத்ம ஞானம் ஏற்பட்டதால் விஷ்ணு என்ற சுத்தப்ரஹ்மத்தில் லயமானார். சாஸ்வதமான ப்ரஹ்மஸ்வரூபத்தில் ஆத்யந்திக லயம் அடைவதே விமுக்தி (விதேஹமுக்தி) என்று சொல்லப்படுகிறது.

இவ்விதம் ஜீவனுக்கு ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் லயம் ஏற்படுவதையே ஸாயுஜ்ய முக்தி என்று சொல்லப்படுகிறது. கார்யம் காரணத்தில் லயமடைவதே காரண ஸாயுஜ்யம். ஸாயுஜ்யம் என்பதை ராமானுஜர் ஒத்துக்கொள்வதில்லை என்பதால் அவருடைய மதம், முன்னால் தெரிவிக்கப்பட்ட 'ப்ரமாண வசனத்திற்கு' விரோதமாக இருக்கின்றதால், அவருடைய மதம் துஷ்ட்டம் (தோஷமுள்ளது).

பூர்வ:- ஜீவன் ப்ரஹ்ம கார்யம் என்று சொல்லமுடியாது. அதனால், கார்யம் காரணத்தில் லயமடைவதே ஸாயுஜ்யம் என்று எவ்விதம் ஜீவபரமாத்ம ஐக்யம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ஜீவஸ்வரூபமே ப்ரஹ்மம்தான். ப்ரஹ்மகார்யம் என்று சொல்லப்படவில்லை. ஜீவனுடைய உபாதி ப்ரஹ்ம கார்யம். அதனால் உபாதியுடன் கூடிய ஜீவனை கார்யம் என்று சொல்வதால் ஹானி ஏதுமில்லை, எவ்விதம் கடம் நாசமாகின்றபோது கடாகாசம் மஹாகாசத்தில் லயத்தை அடைகின்றதோ அதேபோல் அஞ்ஞானம், அதன் கார்யமான அந்த:கரணம் என்ற உபாதி நாசத்தை அடைகின்றபோது ஜீவன் ப்ரஹ்மத்தில் லயமடைவதாகச்

சொல்லப்படுகிறது. அதாவது உபாதியினால் ஏற்பட்ட ஜீவபாவம் நிவர்த்திக்கின்றதையே லயம் என்று சொல்லப்படுகிறது. ஜீவஸ்வரூபமே ப்ரஹ்ம ஸ்வரூபம்தான்.

99. த்வத்ப்ரஸாதாத் மயா ஞாதம் ஞேயமன்யைரலம் த்விஜ ।
யதேததகிலம் விஷ்ணோர்ஜகன்ன வ்யதிரிச்யதே ॥

९९ ॥ त्वत्प्रसादान्मया ज्ञातं ज्ञेयमन्यैरलं द्विज ।
यदेतदखिलं विष्णोर्जगन्न व्यतिरिच्यते ॥ 6.8.4

99. ஹே! த்விஜனே! உன்னுடைய அனுக்ரஹத்தினால் அறியவேண்டிய தத்வத்தை நான் அறிந்து கொண்டேன். ஸர்வ ஜகத்தும் விஷ்ணுவை அன்றி வேறாக இல்லை என்று அறிந்ததால், இதற்கு மேல் அறியப்படவேண்டியது எதுவுமில்லை.

இந்த ச்லோகத்திலும் விஷ்ணுவிடமிருந்து இந்த ஜகத் வேறுபட்டது இல்லை என்பதால் அத்விதீயம் ப்ரஹ்மம் என்றே ஸித்திக்கின்றது.

100. ஸ ஸர்வஸ்ஸர்வவித்ஸர்வஸ்வரூபோ ரூபவர்ஜித: ॥

१०० ॥ स सर्वस्सर्ववित्सर्वस्वरूपो रूपवर्जितः । 6.8.27

100 ஸர்வமாகவும், ஸர்வஞ்ஞராகவும், ஸர்வத்திற்கும் ஸ்வரூபமாகவும் இருக்கின்ற அந்த பரமாத்ம ஸ்வரூபம் எந்த ரூபமும் அற்றவராக இருக்கின்றார். அதாவது உண்மையில் அரூபமாக இருக்கின்ற ப்ரஹ்மம் மாயையினால் ஸர்வரூபமாக இருக்கின்றார் என்று ஸ்புடமாகவே தெரிவிக்கின்றது. ஸர்வ ஸ்வரூபமாக இருப்பவர் அரூபம் என்று ஸாமானாதிகரண்யேன எவ்விதம் சொல்லமுடியும்?

101. யஞ்ஞைர்யஞ்ஞவிதோ யஜந்தி ஸததம் யஞ்ஞேஶ்வரம் கர்மிணோ
யம் வை ப்ரஹ்மமயம் பராவரமயம் த்யாயந்தி ச ஞானினை: ।
யம் ஸம்சிந்த்ய ந ஜாயதே ந ம்ரியதே நோ வர்ததே ஹீயதே
நைவாஸன்ன ச ஸத்பவத்யபி தத: கிம் வா ஹரே: ஶ்ரூயதாம் ॥

१०१ ॥ यज्ञैर्यज्ञविदो यजन्ति सततं यज्ञेश्वरं कर्मिणो
यं वै ब्रह्ममयं परावरमयं ध्यायन्ति च ज्ञानिनः ।
यं संचिन्त्य न जायते न म्रियते नो वर्धते हीयते
नैवासन्न च सद्भवत्यपि ततः किं वा हरेः श्रूयताम् ॥ 6.8.58

101 யஞ்ஞத்தை அறிந்து அனுஷ்ட்டிக்கின்ற கர்மிகள் யஞ்ஞேச்வரனான அந்த ஹரியை நிரந்தரமாக உபாஸிக்கின்றார்கள். ஞானிகள் பராவரம் ப்ரஹ்ம என்று அந்த ஹரியையே நிரந்தரமாக சிந்தித்து த்யானம் செய்கின்றதால் அந்த புருஷர்கள் ஜனனம், மரணம் வ்ருத்தி,

க்ஷயம் என்பது போன்ற ஷட்பாவ விகாரங்கள் அற்றவராகவும் ஆகின்றார்கள். இப்போப்பட்ட ஹரியை அன்றி வேறு எதை எவர் அறியவேண்டும்? அறிவதற்கு வேறு எதுவுமே கிடையாது.

102. இதி விவிதமஜஸ்ய யஸ்ய ரூபம் ப்ரக்ருதிபராத்மமயம் ஸனாதனஸ்ய ।
ப்ரதிஶது பகவானசேஷபும்ஸாம் ஹரிரபஜன்மஜராதிகாம் ஸ ஸித்திம் ॥

१०२ ॥ इति विविधमजस्य यस्य रूपं प्रकृतिपरात्ममयं सनातनस्य ।
प्रदिशतु भगवानशेषपुंसां हरिरपजन्मजरादिकां स सिद्धिम् ॥ 6.8.64

102 இவ்விதம் ஸனாதனரான எந்த பரமாத்மாவின் ஸ்வரூபம், ப்ரக்ருதி புருஷன் என்பது போன்ற பலவிதமாக இருக்கின்றதோ அந்த பகவான் ஹரி, எல்லோருக்கும் ஜன்மம், ஜரை முதலானவைகள் அற்ற மோக்ஷத்தைக்கொடுக்கட்டும்.

இந்தவிதம் விஷ்ணுபுராணத்தின் கடைசி ச்லோகம் ஆசீர்வாதமாக அமைந்திருக்கின்றது.

ஸச்சிதானந்தாத்மகமான ஏகமேவ அத்விதீய ப்ரஹ்மம் மாயையினால் ஜகத், என்றும் ஜீவன் என்றும் பலவிதமாக அறியப்படுகிறது. எவ்விதம் ரஜ்ஜு என்ற ஒரே வஸ்துவே, ஸர்ப்பம் என்றும், தண்டம் என்றும், பூமிவெடிப்பு என்றும் பலவிதமாக அறியப்படுகிறதோ அதேபோல் ஒரே ப்ரஹ்மஸ்வரூபமே, பலவிதமாக அறியப்படுகிறது. ப்ரக்ருதி முதலான ஸர்வத்திற்கும் அதீதமாக இருக்கின்ற ப்ரஹ்மம் உண்மையில் ப்ரக்ருதியாக இருக்கமுடியாது. நிர்விகாரமான ப்ரஹ்மம் ஜகத் ரூபமாக பரிணாமத்தை அடையமுடியாது. ப்ரஹ்மம் அவிகாரி என்றே பல முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றது. மாயையினால் பரிணாமத்தை அடைவது போல்தோன்றுகிறது. உண்மையில் ப்ரஹ்மம் எவ்வித விகாரத்தையும் அடைய முடியாது. ப்ரஹ்மம் ஒன்றே பரமார்த்ததத்வம்.

இந்தவிதம் விஷ்ணு புராணத்தில் ஆறாவது அம்சமும், நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது. இவ்விதம் விஷ்ணு புராணத்தின் தாத்பர்யம் பற்றி உபக்ரம் - உபஸம்ஹாரம், அப்யாஸம், பலம், என்ற மூன்று தாத்பர்யலிங்கங்களைக்கொண்டு நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்பதே தாத்பர்ய விஷயம் என்று ஸித்தம் செய்யப்பட்டது.

மேலே மற்றுமுள்ள தாத்பர்யலிங்கங்கள் பற்றி தெரிவிக்கப்படுகிறது. (அதாவது 'உபக்ரம உபஸம்ஹாரம், அப்யாஸம், அபூர்வதா, பலம், அர்த்தவாதோபபத்திச்ச லிங்கம் தாத்பர்ய நிர்ணயே' என்று ஆறு தாத்பர்யங்கள் ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.)

அத்வைதமே தத்வம் என்று தர்க்கம் முதலான சாஸ்திரங்களினால் நிரூபணம் செய்யப்படாததால், 'அபூர்வம்' என்கிற தாத்பர்யலிங்கம் ஸித்திக்கின்றது. நிதாகன், காண்டிக்யன், கேசித்வஜன், ஜடபரதர் முதலானவர்களின் சரித்ர வர்ணனைகள் இருக்கின்றது. அதுவே அர்த்தவாதம் என்கிற தாத்பர்யலிங்கம். ப்ரஹ்மத்திற்கு தேசம், காலம், வஸ்து, என்ற பரிச்சேதங்கள் இல்லை என்று நிரூபணம் செய்யப்பட்டதால் உபபத்தி என்ற தாத்பர்ய லிங்கமும் இருக்கின்றது.

அதனால் எல்லோராலும் ப்ரமாணம் என்று அங்கீகரிக்கப்பட்ட விஷ்ணு புராணம் 'நிர்விசேஷ ப்ரஹ்ம பரம்' என்றே ஸித்திக்கின்றது. இதேபோல் மற்றுமுள்ள புராணங்களும் நிர்விசேஷ ப்ரஹ்மத்தை தெரிவிப்பதில் தான் தாத்பர்யமுடையதாகவே இருக்கின்றது. அதனால் மற்ற புராணங்கள் ப்ரமாணமே இல்லை என்று சொல்வது தவறு. அஷ்ட்டாதச புராணங்களும் (18 புராணங்களும்) வ்யாஸராலேயே இயற்றப்பட்டிருக்கின்றது. அதனால் அவைகளை அப்ரமாணம் என்று சொல்லமுடியாது.

ஞானவாசிஷ்ட்டத்தில், வ்யாஸவாக்யமே ப்ரமாணங்களுக்கெல்லாம் ப்ரமாணம் என்று வ்யாஸரே மூன்று லோகத்திலும் ஸுதராம் பரம ப்ராமாணிகர் என்று சொல்லப்படுகிறது.

அஷ்டாதசபுராணானாம் கர்தா ஸத்யவதீஸுத: ।
ப்ரமாணானாம் ப்ரமாணம் ஸ்யாத் வ்யாஸவாக்யம் ஜகத்ரயே ॥

अष्टादशपुराणानां कर्ता सत्यवतीसुतः
प्रमाणानां प्रमाणं स्याद्व्यासवाक्यं जगत्त्रये ।

ப்ராமாணிகேஷு ஸர்வேஷு வ்யாஸஸ்யைவ மஹாமதே: ।
ப்ராமாணிகத்வம் ஸுதராம் ஸர்வதா நிஶ்சிதம் மயா ॥

प्रामाणिकेषु सर्वेषु व्यासस्यैव महामतेः
प्रामाणिकत्वं सुतरां सर्वदा निश्चितं मया ।

என்று ஞான வாஷிட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

பூர்வ:- விஷ்ணு புராணம் இயற்றியவர் பராசரர் என்றே அறியப்படுகிறது. வ்யாஸர் இயற்றாததால், அந்த புராணம் ப்ரமாணம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- பதினெட்டு புராணங்களையும் இயற்றியவர் வ்யாஸர். பதினெட்டு புராணங்களில் ஒன்று விஷ்ணு புராணம் என்பதால் விஷ்ணு புராணமும் வ்யாஸரால் இயற்றப்பட்டது என்றே சொல்லவேண்டும். ஆனால் விஷ்ணு புராணத்தில், பராசரர், மைத்ரேயர் ஸம்வாத ரூபமாக வ்யாஸரால் இயற்றப்பட்டிருக்கின்றால் இந்த புராணத்திற்கு பராசரஸம்ஹிதா என்ற பெயர் சொல்லப்படுகிறது. இதேபோல் ஸ்காந்த புராணத்தில் ஸூதஸம்ஹிதை என்ற பாகம் ஸூதர், ஸௌனகர் ஸம்வாத ரூபமாக வ்யாஸராலேயே இயற்றப்பட்டிருக்கின்றது. ஸூதஸம்ஹிதை பூராவும் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே நிர்விசேஷபரமாகவே இயற்றப்பட்டிருக்கின்றது என்று மேலே விளக்கப்படுகிறது.

இதுவரை விஷ்ணு புராண ச்லோகங்கள் நிர்விசேஷ பரம் என்று தெரிவிக்கப்பட்டது. விஷ்ணு புராணம் ஸம்பூர்ணம்.

இதற்கு மேல் ஸ்ரீபாஷ்யம் என்ற ராமானுஜர் பாஷ்யத்தில் செய்யப்படும் கோலாஹலத்திற்கு கண்டனம் செய்து அதுபற்றி விசாரிக்கப்படுகிறது.

107

श्रीभाष्ये अद्वैतमतविरुद्धांशखण्डनम् ।

ஸ்ரீபாஷ்யே, அத்வைதமத விருத்தாம்ச கண்டனம்

तस्यात्मपरदेहेषु सतोप्येकमयं हि यत् ।
विज्ञानं परमार्थो वा द्वैतिनोऽतथ्यदर्शिनः ॥

தஸ்யாத்ம பரதேஹேஷு ஸதோப்யேகமயம் ஹி யத் |
விஞ்ஞானம் பரமார்த்தோ வா த்வைதினோ அதத்யதர்சின: (வி.பு.2.14.31)

என்று, இதற்கு முன், ஆத்ம ஸ்வரூபம் பற்றி விசாரித்து நிரூபணம் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது, 'ஆத்ம ஸ்வரூபம், ஸ்வதேஹம் (தன் சரீரம்) பரதேஹம் (அன்ய சரீரம்) என்ற ஸர்வ சரீரங்களிலும் இருந்தபோதிலும், சரீரபேதம் தான் இருக்கின்றதே அன்றி ஆத்மபேதம் இல்லை என்று எவன் அறிகின்றானோ, அவனே தத்வதர்சி என்றும், இவ்விதம், உண்மையான ஸ்வரூபத்தை அறியாமல், தேஹ பேதம் போலவே, ஆத்மபேதமும் பரமார்த்தமாக இருப்பதாக எவன் அறிகின்றானோ, அவன் அதத்வதர்சி என்றும், அந்த ஞானம் மித்யா ஞானம்' என்பதே இந்த ச்லோகத்தின் தாத்பர்யம். ஆனால், இந்த ச்லோகத்திற்கு ராமானுஜர் வேறுவிதமாக அர்த்தம் தெரிவிக்கின்றார்.

பூர்வ:- ஒவ்வொரு சரீரத்திலும் ஞானாகாரமான ஆத்மா வெவ்வேறாகவே இருக்கின்றது. இவ்விதம் ஸர்வசரீரங்களிலும் ஞானாகாரமாக இருக்கின்ற ஆத்மாக்களில் பேதம் இருப்பதாகவே அறியவேண்டும். இதே போல் சரீரபேதங்களும் இருக்கின்றது. அதனால் இவ்வித பேதங்கள் இல்லை என்று இந்த ச்லோகம் தெரிவிக்கவில்லை. ஸர்வ சரீரங்களிலும் இருக்கின்ற ஆத்ம ஸ்வரூபம் ஞான ஸ்வரூபமாக ஸமானமாகவே இருக்கின்றது. இவ்விதம் இருக்கின்றதனாலேயே ஒரே ஆத்மாவிற்கு தேவன், மனுஷ்யன், என்பது போன்ற அனேக ஜன்மங்கள் ஏற்படுகின்றபோது, அந்தந்த சரீர ஸம்பந்தத்தினால், தேவன், மனுஷ்யன் போன்ற பேதம் இருக்கின்றதென்று அறியப்படுவதால் அதுவே அதத்வ தர்சனம் என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. எவ்விதம் கீதா ச்லோகத்தில் '*சுனி சைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சின:*' शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः என்று தெரிவிக்கின்றதோ அதுபோல், '*நிர்த்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம*' என்ற தாத்பர்யத்தையே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதாவது, நாய் முதலான ப்ராணிகளிடம் வெவ்வேறாக ஜீவாத்மாக்கள் இருந்தாலும், அந்த ஜீவாத்மாக்களின் ஸ்வரூபம் ஒரேவிதமாக, ஞானாகாரமாகவே இருக்கின்றது என்றே சொல்லப் படுகின்றது. அதனால் ஸர்வசரீரங்களிலும் ஒரே ஆத்மா இருப்பதாகச் சொல்லப்படுவது சரியல்ல. ஏனெனில், 'தஸ்ய ஆத்மாபரதேஹேஷு ஸதோப்யேகமயம்' என்று தன் சரீரம், பரசரீரம் என்று சொல்லப்படுகின்ற பேதம், 'தான்' என்றும் 'பரன்' என்றும் தெரிவிக்கின்றபோது

பரஸ்பரம் ஜீவாத்மபேதம் இருக்கின்றதால், ஆத்மாவிற்கே பேதம் இருக்கின்றது என்றும் அதனால் தேஹங்களைக்காட்டிலும் வேறான 'ஆத்மா' பேதம் உள்ளது என்றே அந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதனால் ஸர்வசரீரங்களிலும் உள்ள ஆத்மா ஒரேவிதமாக, ஞானாகாரமாக இருந்தபோதிலும், அந்தந்த சரீரங்களிலும் இருக்கின்ற ஆத்மா, 'ஞானாகாரமாக' வெவ்வேறாக இருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

ஆனால், ஒவ்வொரு ஜீவனும் அந்தந்த சரீரங்களைவிட்டு வேறு சரீரங்களை எடுக்கின்றபோது, அந்த ஜன்மாவில் இருக்கின்ற ஆத்மா வேறு என்று நினைக்கின்றார்கள். இதுவே ப்ராந்தி ஞானம் என்று இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

அதனால் அவரவர் கர்மவசாத் பல ஜன்மாக்களை எடுத்தாலும், அந்த ஜன்மாக்களில் ஏற்படும் சரீரங்களில் உள்ள ஆத்மா ஒன்றே என்பதால், பல ஜன்மாக்களிலும் ஏற்படும் அவரவர் சரீரங்களில் தொடர்ந்து இருக்கின்ற ஆத்மா ஒன்றே என்று தான் தெரிவிக்கின்றது. ஆகவே, இப்போது இருக்கின்ற தேவ, மனுஷ்யாதி சரீரங்களில் இருக்கின்ற ஆத்மாவில் வாஸ்த்தவமாகவே பேதம் இருக்கின்றது என்றே பகவானும் கீதையில் '*சுனி சைவ ச்வபாகேச பண்டிதா: ஸமதர்சின:*' என்றும் '*நிர்த்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம*' என்றும் தெரிவிக்கின்றார். அதாவது இந்த ஜன்மாவில் ப்ராஹ்மணனாக இருக்கின்றவன், மறுபிறவியில், நாயாக இருக்கலாம். ஆனால் முன் ஜன்மாவில் ப்ராஹ்மணனாக இருந்தவன் வேறு, மறு ஜன்மாவில் நாயாக இருப்பவன் வேறு என்று அறியக்கூடாது. ஸர்வ ஜன்மாக்களிலும் இருக்கின்றவன் ஒருவனே என்று அறியவேண்டும் என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதாவது, ஒருவன் உத்தமமான சரீரத்தையோ, அல்லது மத்தியமமான சரீரத்தையோ, அல்லது அதமமான சரீரத்தையோ எடுக்கலாம். இவ்விதம் சரீரம் அவ்வப்போது மாறினாலும், தன் ஆத்மா ஒன்றே என்று அறியவேண்டும். அவ்விதம் இன்றி ஒவ்வொரு ஜன்மாவிலும் ஆத்மா மாறுபடுகிறது என்று ஆத்மபேதம் இருப்பதாக அறியக்கூடாது. ஆனால் ஒரு ஜன்மாவில் உள்ள ஆத்மா, அந்த ஜன்மாவில் மற்றுமுள்ள சரீராதிகளில் உள்ள ஆத்மாக்களைக் காட்டிலும் வேறுபட்டது என்றும், ஆனால் அவ்விதம் அனேக சரீரங்களில் இருக்கின்ற ஆத்மாக்களும் ஞானாகாரம் என்பதால் ஸமானாகாரமாக இருக்கின்ற ஆத்மா ஒரே விதமாக இருக்கின்றது என்று தெரிவிக்கின்றதே அன்றி ஆத்மா ஏகம் என்று சொல்லப்படவில்லை.

இந்த ச்லோகத்திலும், 'தான்' என்றும், 'பரன்' என்றும், தன்னை அன்றி வேறானவன் என்றே அறிகின்றான். ஸர்வசரீரத்திலும் இருப்பவன் ஒருவனே என்றால், தான் வேறு, அவன் வேறு என்று சொல்லமாட்டான். அதனால் ஆத்மபேதம் இருந்தாலும், எல்லா ஆத்மாக்களும் ஞானாகாரம் என்று அறிவதே தத்வஞானம்.

ஸித்தா:- ''*ஏகோ வ்யாபீ ஸமச்சுத்தோ நிர்க்குண: ப்ரக்ருதே: பர:*'' என்று தெரிவிக்கின்றதே? एको व्यापी समश्शुद्धो निर्गुणः प्रकृतेः परः என்று இந்த பரமாத்மாவே, ஸர்வவ்யாபி, ஸமம், சுத்தம் நிர்க்குணம், ப்ரக்ருதிக்கும் பரம் (மேலானது) என்றும் ஜன்மம் முதலான ஆறு விதமான விகாரங்கள் அற்ற ஸ்வரூபம் என்றும், ஸர்வ வ்யாபகமான அந்த ஸ்வரூபமே அவ்யயம் என்றும் (அழிவற்றது என்றும்) ஏகம் என்றும், இதற்கு முன் சொல்லப்பட்ட ச்லோகத்தில்

தெரிவிக்கின்றது. இவ்விதம் ஏகமான அந்த ஸ்வரூபமே ஸர்வத்திலும் ஸமம், சுத்தம், நிர்க்குணம், ப்ரக்ருதிக்கும் மேற்பட்ட தத்வம் ஆத்மா என்றே தெரிவிக்கின்றது.

அதனால் ஸர்வசரீரங்களிலுமுள்ள ஆத்மா அனேகம் என்றும், ஒன்றுக்கொன்று வேறுபட்டது என்றும் ஆனால் எல்லாம் ஞானாகாரம் என்பதால் ஏகம் என்று சொல்வது முற்றிலும் பொருத்தமற்றது. ஆத்மா ஏகம் என்றே சப்தப்ரயோகம் இருக்கின்றது. விஷ்ணு புராண ச்லோகங்களும், உபாதி பேதத்தினால் ஆத்மா அனேகம் என்று தோன்றினாலும் உண்மையில் ஆத்மா ஏகம் என்றே தெரிவிக்கின்றது. அதுமட்டுமல்ல, அத்வைதமான ஆத்மஸ்வரூபத்தில் அனாத்ம அத்யாஸத்தினால் அனாத்மாவில் ஆத்மா என்று ப்ராந்தி ஞானம் ஏற்படுகின்றது. அதனால் தான் ஆத்மாவில், அனாத்மாவான த்வைதபாவம் இருக்கின்றதென்று ப்ராந்தி ஞானம் ஏற்படுகின்றது என்றும் ஆத்மா ஏகம் என்பதே உண்மை என்றும் உபநிஷத் வாக்யங்கள் தெரிவிக்கின்றது. இந்த விஷயம் பற்றி ஆசார்யன் மூலமாகவே ச்ரவணம், மனனம் முதலானவைகளைக் கொண்டு விசாரித்து ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை அறியவேண்டும். இவ்விதம் ஸ்வரூப ஞானம் ஏற்படும்வரை அவன் ப்ரமாதாவாக இருக்கின்றான். இவ்விதம் தன்னை அன்றி வேறான ஸர்வத்தையும் அறிகின்றவனாக ப்ரமாத்ருத்வம் இருக்கின்ற பர்யந்தம் தன் தேஹம் என்றும், பர தேஹம் என்றும் வ்யவஹாரம் இருக்கின்றதால் ஆத்மபேதம் இருப்பதாக தோன்றுகிறது. ஆனால் அது யதார்த்த ஞானம் என்று சொல்லமுடியாது.

ஒரே சைதன்ய ஸ்வரூபமான ஆத்மாவே, அந்த:கரண அவச்சின்னாக ஆகின்றபோது (அந்த:கரண ஸம்பந்தம் ஏற்படுகின்றபோது,) ப்ரமாத்ருத்வம் ஏற்படுகின்றது. அதனால் 'நான்' என்றும், அவன் என்றும் வ்யவஹாரம் இருக்கின்றது.

இந்த ச்லோகத்திலும், '*தஸ்யாத்ம பரதேஹேஷு ஸதோப்யேகமயம் ஹி யத்*' என்று உபக்ரமத்திலும், உபஸம்ஹாரத்திலும் 'ஆத்மா ஏகம்' என்றே தெரிவிக்கின்றது. ச்லோகத்தில் ஏகம் என்ற பதம்தான் இருக்கின்றது, அனேகம் என்ற பதமே கிடையாது. அதுமட்டுமல்ல, ஸர்வ சரீரத்தில் இருக்கின்ற ஆத்மா வெவ்வேறாக இருக்கின்றது என்று ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. மேலும் இந்த ச்லோகத்தை இயற்றியவர் 'ஆத்மா அனேகம் என்று தெரிவிக்க நினைத்திருப்பாரேயானால், 'தேஷாம் ஆத்மான்யதேஹேஷு ஸதாம் ஏகமயம் ஹி யத்' என்று பஹுவசனமாக இயற்றி இருக்கவேண்டும். அவ்விதம் சொல்லப்படவில்லை. பகவானும் கீதையில் ஸர்வசரீரங்களிலும் இருக்கின்ற ஆத்மா ஒன்றே என்றும், ஸர்வ ஜீவர்களையும் ஸமமாகவே அறியவேண்டும் என்றும் தெரிவிக்கின்றதால், ஆத்மா ஏகம் என்றே அறியவேண்டும்.

அவித்யா நிலையில் அனேக சரீரங்களை (பிண்டாதிகளை) கொண்டு அறியப்படும் பேதத்தினால் ஆத்மா அனேகம் என்ற ப்ராந்தி ஞானம் ஏற்படுகிறது. அது சரியல்ல என்று நிஷேதம் செய்து ஆத்மா ஏகம் என்றே ஸர்வ சாஸ்திரங்களும் போதிக்கின்றன.

பூர்வ:- ஒவ்வொரு சரீரமும் வெவ்வேறாக அறியப்படுவதால் சரீரங்கள் அனேகம் என்று சொல்லப்படுவது போல், ஆத்மாவும் சரீரபேதத்தினால் அனேகமாக இருந்தபோதிலும்,

ஸர்வ ஆத்மாக்களும் ஞானாகாரம் என்பதால், ஞானாகாரத்வேன ஆத்மா ஏகம் என்று சொல்லலாமே? அதனால் சரீரபேதத்தினால் ஆத்மபேதம் இருப்பதாகவே சொல்லவேண்டும். ஆகவே ஞானாகாரம் என்பது விசேஷணம் என்றே சொல்லலாம்.

ஸித்தா:- ஆத்மா ஸர்வத்திற்கும் சேஷி என்பதால் ஆத்மாவில் விசேஷணம், விசேஷ்யம் என்று சொல்வதற்குரிய அவகாசமே கிடையாது.

பூர்வ:- ப்ரஹ்மம் சேஷி, மற்ற எல்லாமே சேஷம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ப்ரகாரம் (சேஷம்) ப்ரகாரி (சேஷி) என்ற எல்லாமே விசேஷண விசேஷ்யம் உள்ள வஸ்துவில் தான் ஸம்பவிக்கும். நிர்க்குணமான ப்ரஹ்மத்தினிடம் இவை எதுவுமே கிடையாது. மேலும், ப்ரஹ்மம் ப்ரகாரி, ஆத்மா ப்ரகாரம் என்று சொல்வதற்கே முடியாது. ஏனெனில் ப்ரஹ்மமே ஆத்மா, ஆத்மாவே ப்ரஹ்மம்.

பூர்வ:- '*ஸதேவ ஸோம்ய இதம் அக்ரே ஆஸீத் ஏகமேவ அத்விதீயம்*' என்றெல்லாம் ச்ருதிவாக்யம் தெரிவிக்கின்றதால், ஈச்வரன் ஒருவரே என்று தெரிவிக்கின்றதே அன்றி ஜீவர்கள் ஒன்று என்று தெரிவிக்கவில்லை.

ஸித்தா:- ஈச்வரனையும் எந்தவிதமான விசேஷமும் அற்றவர் என்றே சொல்லவேண்டும். ப்ரஹ்மமும் ஈச்வரனும் ஒன்றே என்பதால் ஈச்வரன் விசேஷம் உள்ளவர் என்று சொல்ல முடியாது. அதேபோல் ஜீவனும் ஈச்வரனும் ஒன்றே என்பதால், அதற்கு முரண்பாடாக அர்த்தம் செய்வது சரியல்ல. சாஸ்திரம் ஜீவபரமாத்மா அபேதத்தையே போதிக்கின்றது. அதனால் சாஸ்திரம் ஒன்றே ப்ரமாணம் என்று அறியவேண்டும்.

பூர்வ:- அனேகமாக இருக்கின்ற சரீரங்களில் அனேகமாக இருக்கின்ற ஆத்மா எவ்விதம் ஏகமான ப்ரஹ்மமாக இருக்கமுடியும்?

ஸித்தா:- ஆத்மாவிற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் இருந்தால்தான் இந்த கேள்விக்கே இடம் ஏற்படும். ஆத்மாவே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே ஆத்மா என்றே சொல்லப்படுவதால் ஆத்மா அனேகம் என்று சொல்வது சரியல்ல. '*ஏகோ வ்யாபீ*' என்று ச்ருதியே தெரிவிக்கின்றது.

பூர்வ:- 'ஆத்மா ஏகம்' என்ற வசனம், ஜாத்யேக வசனம் என்று சொல்லலாமே? 'ஜனம்' என்று வசனப்ரயோகத்தில், அனேகம் பேர்கள் இருந்தபோதிலும், 'ஜனம்' என்று ஏகவசனத்தில் ப்ரயோகம் செய்யப்படுகிறது. அதனால் 'ஜனம்' என்றால் 'ஒருவன் தான்' என்று சொல்ல முடியாது. அதுபோல் 'ஆத்மா ஏகம்' என்ற வசனமும் ஜாத்யேக வசனம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஸ்வயமாகவே அனேகமாக இருக்கின்ற வஸ்துக்களை, ஏதோ ஒரிடத்தில் ஒன்று என்று (ஜனம், வனம்) சொல்லலாம். அதேபோல் அனேக தேவர்கள் இருக்கின்ற இடத்தில் 'தேவ:' என்று ஜாத்யேக வசனத்தினால் குறிப்பிடலாம். இதேபோல் மனுஷ்யன், திர்யக் என்பதெல்லாம் ஜாத்யேக வசனம் என்று சொல்லலாம். ஆனால் இதேபோல் 'ஆத்மா அனேகம்' என்று ப்ரமாணமூலம் நிரூபிக்கப்பட்டிருக்குமானால் 'ஆத்மா ஏகம்' என்ற வசனம் ஜாத்யேக வசனம் என்று சொல்லலாம். அவ்விதம், ஆத்மா அனேகம் என்று ப்ரமாணத்தினால் ஸித்திக்கவில்லை. அதனால் 'ஆத்மா ஏகம்' என்பது ஜாத்யேக வசனம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- லோகத்தில் 'த்வம்' (நீ) என்றும், 'அஹம்' (நான்) என்றும், 'அயம்' (அவன்) என்றும் பேத வ்யவஹாரம் இருக்கின்றது என்று ப்ரத்யக்ஷமாகவே அறியப்படுகிறது. அதனால் ஆத்மா அனேகம் என்று ஸித்திக்கின்றதே?

ஸித்தா:- 'த்வம்' என்றும், 'அஹம்' என்றும், 'அயம்' என்றும் இருக்கின்ற பேத வ்யவஹாரங்கள் சரீர பேதத்தைக்கொண்டு ஏற்படுகிறது. அதற்காக ஆத்ம பேதம் சொல்லமுடியாது. இதே விஷயம் பற்றி விஷ்ணு புராணத்தில் (2.15.25), '*த்வம் சான்யே ச ந ச த்வம் ச நான்யே நைவாஹமப்யஹம்*' त्वं चान्ये च न च त्वं च नान्ये नैवाहमप्यहम् என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் அர்த்தம் என்னவென்றால், நான் அனேக அவதாரங்களை எடுத்தபோதிலும், அவதார பேதத்தினால் ஸ்வரூபபேதமில்லை. அதேபோல் நீயும் சரீரபேதமிருந்தாலும், என்னை அன்றி நீ வேறல்ல. அதேபோல் அவன் என்பதும் சரீரபேதமே அன்றி ஆத்மபேதம் இல்லை என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதாவது 'நீ நீயல்ல. அவன் அன்யன் அல்ல' (அன்யன் அன்யனல்ல) 'அஹம் என்ற நானும் நான் அல்ல' என்றே அறியவேண்டும் என்று பகவானே தெரிவிக்கின்றார். அதனால் நீ, நான், அவன், என்ற வ்யவஹாரங்கள் எதுவுமே ஆத்மாவில் கிடையாது.

லோகத்தில் கார்யகரண ஸங்காதமான இந்த சரீரத்தையே ஆத்மா என்று அனாத்மாவில் ஆத்ம அத்யாஸம் ஏற்படுகின்றதால் அனாத்மாவான சரீரமே ஆத்மா என்று வ்யவஹாரம் இருக்கின்றது. அதனால், தனக்கு வேறான கார்ய கரண ஸங்காதங்களிலேயே, அஹம் என்றும், நீ என்றும், அவன் என்றும் வ்யவஹாரம் இருக்கின்றது. ஆகவே, இவ்விதம் கார்யகரண ஸங்காதங்களே ப்ரத்யக்ஷமாக அறியப்படுகிறதே அன்றி ஆத்மா ப்ரத்யக்ஷமாக அறியப்படவில்லை.

பூர்வ:- ஸர்வ சரீரங்களிலும் இருக்கின்ற ஆத்மா ஒன்றே என்றால், எல்லோருடைய சுகம், துக்கம் என்ற எல்லாமே ஒரேவிதமாகத்தானே இருக்கவேண்டும்? அவ்விதமின்றி வெவ்வேறாக இருக்கின்றதால் ஆத்மா ஏகம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- கார்யகரண ஸங்காதமான சரீரங்கள் வெவ்வேறாக இருக்கின்ற காரணத்தினால், அந்தந்த சரீரத்தில் இருக்கின்ற அந்த:கரணம் வெவ்வேறாக இருக்கின்றது. சுகதுக்கங்கள் எல்லாம் அந்த:கரண பரிணாமம். அந்தந்த அந்த:கரணத்தின் தர்மங்கள் அனேக விதமாக இருக்கின்றது. இதையே விஷ்ணு புராணத்திலும் *மனஸ: பரிணாமோயம் ஸுகதுக்காதிலக்ஷண:* मनसः परिणामोयं सुखदुःखादिलक्षणः என்று தெரிவிக்கின்றது. ஆகவே, அந்தந்த சரீரத்திலுள்ள அந்த:கரணம் வெவ்வேறாக இருக்கின்றதால், அந்த:கரண தர்மமான சுகதுக்கங்களும் வ்யவஸ்த்திதமாக இருக்கின்றது. அதனால் ஆத்ம நானாத்வம் சொல்லமுடியாது.

அதுமட்டுமல்ல, தேஹாதிகள் அனேகம் என்பதால் ஆத்மாவும் அனேகம் என்றே எல்லோராலும் அறியப்படுகின்றதால், ஆத்ம நானாத்வத்தை சாஸ்திரம் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் லோக ஸித்தமான ஆத்ம நானாத்வத்தை சாஸ்திரம் போதிக்கின்றது என்றால் சாஸ்திரம் அப்ரமாணம் என்றே சொல்லவேண்டும். அஞ்ஞாதார்த்த போதகம் சாஸ்திரம் என்று சொல்லமுடியாது. அதனால் சாஸ்திரம் வ்யர்த்தம் என்று சொல்லநேரிடும்.

பூர்வ:- லோகத்தில் எல்லோரும், சரீரம் என்ற உபாதியினால் ஆத்மபேதம் இருப்பதாக நினைக்கின்றார்கள். ஆனால் உபாதியினால் ஆத்மபேதம் இல்லை, ஸ்வயமே ஆத்ம பேதம் இருக்கின்றது என்று சாஸ்திரம் தெரிவிக்கின்றது என்று சொல்லலாமே? இவ்விதம் சொல்லப்படுமானால் சாஸ்திரம் அப்ரமாணம் என்று சொல்லமுடியாது. ஆகவே, நிருபாதிகமான, பரிசுத்தமான, ஆத்ம நானாத்வம் என்று தெரிவிப்பதற்காக சாஸ்திரம் என்ற ப்ரமாணம் தேவை என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ச்ருதி, ஸ்ம்ருதி, புராணங்கள் அனைத்தும், ஆத்மா ஏகம் என்றே தெரிவிக்கின்றது என்று எத்தனையோ விதமாக (அனேக முறைகளைக்கொண்டு) விசாரித்து ஸித்தம் செய்யப் பட்டிருக்கின்றது. அவ்விதமிருந்தும் ஆத்ம நானாத்வம் என்பது சாஸ்த்ர ப்ரமாணத்தினால் ஸித்திக்கின்றது என்பதை யாராலும் ஒத்துக்கொள்ளமுடியாது. முற்றிலும் பொருத்தமற்றது.

பூர்வ:- '*நித்யோ நித்யானாம்*' என்ற ச்ருதிவாக்யமே உபாதி அற்ற ஆத்ம ஸ்வரூப நானாத்வத்தையே தெரிவிக்கின்றது. அதாவது, '*நித்யோ நித்யானாம்*' என்று பரமாத்மாவே நித்யம் என்றும் தேஹம் நித்யமல்ல என்றே தெரிவிக்கின்றது. அதனால் 'நித்யானாம்' என்று பஹுவசனத்தில் ஜீவர்களையே தெரிவிக்கின்றது. அதாவது, ஜீவர்கள் நித்யம், அவர்களைகாட்டிலும் பரமாத்மா நித்யம் என்றே தெரிவிக்கின்றது. அதனால் ஜீவர்கள் அனேகம் என்பது ஸித்திக்கின்றது. இதேபோல் '*சேதன: சேதனானாம், ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான்*' என்று உபாதி அற்ற ஆத்மஸ்வரூபம் அனேகம் என்றே தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இந்த வாக்யம், நித்யமாகவும், சேதனனாகவும், இருக்கின்ற அனேக ஜீவர்களின் விருப்பத்திற்கேற்ப (விரும்பிய) பலன்களை பரமாத்மா கொடுக்கின்றார் என்றே தெரிவிக்கின்றது. அதனால் ஸோபாதிக ஸ்வரூபத்தைப்பற்றி தெரிவிக்கின்றதே அன்றி நிருபாதிக ஸ்வரூபம் பற்றி சொல்லப்படவில்லை. நிருபாதிக ஆத்ம ஸ்வரூபத்திற்கு காமாதிகள் இருப்பதாகச் சொல்லப்படுவதே பொருந்தாது. '*ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான்*' என்றே தெரிவிக்கின்றது. அதனால் ஸோபாதிக ஸ்வரூபம் என்பது ஸ்பஷ்ட்டமாகவே அறியப்படுகிறது. அதனால் கேவல ஸ்வரூபமான சுத்த ஆத்மாவில் பஹுத்வம் சொல்ல முடியாது. அதுமட்டுமல்ல, காமம், ஸங்கல்பம் முதலான எல்லாமே 'ஸர்வம் மன ஏவ' என்று அவையெல்லாம் மனோதர்மங்கள் என்றே சாஸ்திரம் தெரிவிக்கின்றது.

பூர்வ:- 'நித்யோ நித்யானாம் ஏகோ பஹூனாம்' என்று சொல்லப்படுவதால், ஸோபாதிக ஸ்வரூபம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஸோபாதிகம் என்றால் நித்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- '*நித்யோநித்யானாம் சேதனச்சேதனானாம் ஏகோ பஹூனாம், யோ விததாதி காமான்*' नित्योऽनित्यानां चेतनश्चेतनानामेको बहूनां यो विदधाति कामान् என்ற ச்ருதி வாக்யத்திற்கு நித்யம், அநித்யம் என்று பதம் பிரித்து அர்த்தம் செய்யவேண்டும், அல்லது ஔபாதிகமான ஆத்மாவே சேதனன் என்று தெரிவிக்கின்றதால், தேஹத்தைக்காட்டிலும் சேதனன் நித்யம் என்று 'தேஹ அபேக்ஷயினால்' நித்யம் என்று சேதனனை தெரிவிக்கின்றது.

பூர்வ:- '*தஸ்ய ஆத்ம, பரதேஹேஷு ஸதோபி ஏகமயம் ஹி யத்*' என்ற வாக்யத்தில் ஏகமயம் என்று ப்ராசுர்யார்த்தத்தில் சொல்லப்படுகிறது. ஏகம் என்றால் ஏகத்வம், ஏகத்வம் என்றால் ஐக்யம், மயட் சப்தம் ப்ராசுர்யார்த்தம். அதனால் ஏகமயம் என்றால் ஐக்ய ப்ரசுரம் என்றும், ஐக்ய ப்ரசுரம் ஞானம், ஞான ஸ்வரூபத்வாத் ஐக்யம் என்று ஸுதர்சனர் தெரிவிக்கின்றாரே?

ஸித்தா:- இவ்விதம் அர்த்தம் செய்வது சரியல்ல. 'ஏகம்' என்ற பதம் எவ்விதம் ஏகத்வம் என்ற அர்த்தத்தை தெரிவிக்கமுடியும்? ஏகத்வம் என்ற தன்மையே பாவார்த்தம். இவ்விதம் பாவார்த்தத்தை தெரிவிக்கின்ற ப்ரத்யயமாக இருக்குமானால், ஏகத்வமயம் என்று, இருக்க வேண்டும். இவ்விதம் பாவார்த்தத்தை தெரிவிக்கக்கூடிய 'த்வம்' என்ற ப்ரத்யயமே இல்லாததால், எவ்விதம் ஏகத்வம் என்ற அர்த்தம் கிடைக்கின்றது? அதுமட்டுமல்ல, ஆத்மாவினிடம் ஐக்யம் ப்ரசுரமாக இருக்கின்றதென்று சொல்லப்படும் வாக்யமே பொருந்தவில்லையே? ப்ராசுர்யார்த்தத்தில் ஐக்யம் ப்ரசுரம் என்று சொல்லப்படுமானால், அனைக்யம் சிறிதளவு இருக்கின்றதென்று சொல்ல வேண்டும். ஐக்யம், அனைக்யம் என்ற இரண்டுமே ஒன்றுக்கொன்று விருத்தமான தன்மை என்பதால், 'ஏகம்' என்ற பதம் ஏகத்வம் என்ற அர்த்தத்தில் ஸித்திக்கமுடியாது. ஆகையால் 'நித்யோநித்யானாம்' என்ற வாக்யத்திற்கு ஐக்ய ப்ரசுரம் என்று அர்த்தம் செய்வது பொருந்தாது.

பூர்வ:- ஏகம் என்றால் ஒன்று என்று அர்த்தம் செய்யவேண்டுமென்ற அவச்யமில்லை. 'ஏகம்' என்றால் 'ஸமம்' என்ற அர்த்தமே சொல்லலாம். 'ஏகோ வ்யாபீ ஸமம்' என்று ஸாத்ருச்யத்தைக் கொண்டு ஒரேவிதம் என்று அர்த்தம் செய்யலாம். அதனால் ஒன்று என்று அர்த்தம் செய்யவேண்டிய அவச்யம் ஏதுமில்லை.

ஸித்தா:- 'ஏகோ வ்யாபீ ஸமம்' என்றே அந்த வாக்யத்திலேயே ஸமம் என்ற பதப்ரயோகம் இருக்கின்றதால், 'ஏகம்' என்ற பதத்திற்கு ஸமம் என்று அர்த்தம் செய்வது சரியல்ல.

பூர்வ:- '*த்வைதினோதத்யதர்சின:* (द्वैतिनोऽतथ्यदर्शिनः) என்ற வாக்யத்தில் 'த்வைதம்' என்ற பதம் ஸாமான்யமாக ப்ரயோகம் செய்யப்படுகின்றதால், எந்த த்வைதம் என்று குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. அதனால் ஆத்மாவில் பேதம் கிடையாது என்று ஆத்ம த்வைதத்தை நிஷேதம் செய்வதாக சொல்லமுடியாது.

ஸித்தா:- ஆத்ம ஸ்வரூபம் பற்றி விசாரிக்கின்ற ப்ரகரணத்தில் ஆத்மத்வைதம் இல்லை என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்கள் ஆத்மத்வைதத்தையே தெரிவிக்கின்றதால், ஆத்மத்வைதம் இல்லை என்று நிஷேதம் செய்வது சரியல்ல.

ஸித்தா:- ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களினால் தேஹத்வைதமே ஸித்திக்கின்றது. ஆத்மத்வைதம் ஸித்திக்கவில்லை. அவ்விதம் ஆத்மத்வைதம் ஸித்திப்பதாகச் சொல்லப் படுமானால் அது அப்ரமாணம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களுக்கு ஆத்மா விஷயமல்ல. அதனால் ப்ரத்யக்ஷ ப்ரமாணங்கள் ஆத்ம விஷயத்தில் ப்ரவ்ருத்திக்கமுடியாது என்று முன்பே விசாரித்து ஸித்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே,

ப்ரத்யக்ஷம் முதலானவைகளால் அறியப்படும் த்வைதம் எல்லாமே அனாத்மாவில்தான் ஸம்பவிக்கமுடியுமே அன்றி ஆத்ம விஷயத்தில் ஸம்பவிக்கமுடியாது. விஷ்ணு புராணத்திலும் ஆத்மா ஏகம் என்று ஆத்ம ப்ரஹ்ம ஐக்யமே சொல்லப்படுகிறது. அதனால் இந்த விஷயத்தில் எவ்வித ஸந்தேஹத்திற்கும் இடமில்லை.

பூர்வ:-

யத்யன்யோஸ்தி பர: கோபி மத்த: பார்த்திவஸத்தம ।
ததைஷோஹமயம் சான்யோ வக்துமேவமபீஷ்யதே ॥

यद्यन्योस्ति परः कोऽपि मत्तः पार्थिवसत्तम ।
तदैषोहमयं चान्यो वक्तुमेवमपीष्यते ॥

விஷ்ணுபுராணம் 2.13 60

யதா ஸமஸ்ததேஹேஷு புமானேகோ வ்யவஸ்தித: ।
ததா ஹி கோ பவான் ஸோஹமித்யேதத் விபலம் வச: ॥

यदा समस्तदेहेषु पुमानेको व्यवस्थितः ।
तदा हि को भवान् सोहमित्येतत् विफलं वचः ॥

விஷ்ணுபுராணம் 2.13 61

விஷ்ணுபுராணம் 2.13.60 ச்லோகத்தில் பர: என்றும், அன்ய: என்றும் சப்த ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தத்வம் ஒன்றாக இருக்குமானால் அன்யன் என்றும் பரன் என்றும் யாரை தெரிவிக்கின்றது? ஆத்ம நானாத்வம் இருந்தால்தான், அன்யன், பரன் என்று சொல்லலாம். அதனால் அத்வைதம் தத்வம் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- 'ப்ரஹ்மம் ஏகம்' என்று ச்ருதி தெரிவிக்கின்றது. அதாவது ப்ரஹ்மத்தை அன்றி வேறாக ஸஜாதீயமாகவும், விஜாதீயமாகவும் அனேக வஸ்துக்கள் இருக்கின்றதென்று எல்லோருக்கும் ப்ராந்தி ஞானம் இருக்கின்றது. அவ்விதம் ஏற்படும் ஞானம் யதார்த்த ஞானம் அல்ல என்று தெரிவிப்பதற்காக, பரன், என்றும், அன்யன் என்றும் ஒன்று ஸஜாதீயமாகவும், ஒன்று விஜாதீயமாகவும் இருக்கின்ற பதங்கள் இரண்டையும் அனுவாதம் செய்து இந்த ச்லோகத்தில் தெரிவிக்கின்றதே அன்றி அதுவே யதார்த்தம் என்று சொல்லப்படவில்லை. உதாரணமாக உபநிஷத்துக்களில் 'ஏகம், ஏவ, அத்விதீயம்' என்ற மூன்று பதங்கள் ப்ரயோகம் செய்யப்படுவதற்கு காரணம் என்னவென்றால், இந்த மூன்று பதங்களும், ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகதபேத ரஹிதம் ப்ரஹ்மம் என்று தெரிவிப்பதற்காகவே சொல்லப்பட்டிருக்கின்றது. அதனால் பரன், அன்யன் என்ற பதங்கள் ஸஜாதீயமும் இல்லை விஜாதீயமும் இல்லை என்று அவைகளை நிஷேதம் செய்து ப்ரஹ்மத்தை போதிக்கின்றது.

பூர்வ:- ப்ரஹ்மம் ஏகம் என்பதால் ஸஜாதீய பேதம் இல்லை என்று சொல்லலாம், ஆனால் அனாத்மாவான தேஹாதிகள் ஆத்மாவைக்காட்டிலும் வேறாக இருக்கின்றதால் விஜாதீய பேதம் இல்லை என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- விஜாதீயமான வஸ்துக்கள் எல்லாமே ஆத்மாவில் கல்பிதம் என்பதால், கல்பிதங்களுக்கெல்லாம் அதிஷ்ட்டான ஸ்வரூபத்தை அன்றி வேறு ஸ்வரூபமே கிடையாது என்பதால் விஜாதீய பேதமும் கிடையாது. ஆகையால் இவ்விதம் இரண்டுவித பேதமும் இல்லை என்பதால், அத்வைதமே தத்வம் என்று காரணகார்யங்களோடு எடுத்து தெரிவித்தும் ச்ரோதாவாக இருக்கின்றவனுக்கு இது எவ்விதம் ஸம்பவிக்கமுடியும் என்று ஸந்தேஹம் ஏற்படுகின்றதால், ஸஜாதீய பேதமும் இல்லை என்பதை மறுபடியும் தெரிவிப்பதற்காக அடுத்த விஷ்ணுபுராணம் 2.13 61 ச்லோகம் சொல்லப்படுகிறது.

'யதா ஸமஸ்ததேஹேஷு புமானேகோ வ்யவஸ்தித:' (यदा समस्तदेहेषु पुमानेको व्यवस्थितः) என்று சரீரம் அனேகமாக இருந்தபோதிலும், அதில் ஸ்திதி பெற்றிருக்கும் புருஷன் ஏகம் என்று தெரிவிக்கின்றதால், சரீரபேதத்தைக்கொண்டு ஆத்ம பேதம் இருப்பதாக சொல்லமுடியாது என்று தெரிவிக்கின்றது. அதுமட்டுமல்ல, புமான் ஏக: என்று மிகத்தெளிவாகவே தெரிவிக்கின்றதால் 'ஆத்ம ஐக்யத்தை' தெரிவிக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. இந்த ச்லோகத்திற்கு வேறொரு விதமாகவும் அர்த்தம் செய்யலாம். அதாவது அன்ய:, பர: என்று இரண்டு சப்தங்களுக்கும், அன்யம் என்று ஒரே அர்த்தம் செய்வது சரியல்ல. என்னை அன்றி வேறாக ப்ரக்ருதியைவிட மேலாக எவன் இருக்கின்றான், எந்த தத்வம் இருக்கின்றது என்று அர்த்தம் செய்யலாம். என்னை அன்றி வேறொருவன் ப்ரக்ருதிக்கு மேற்பட்டவனாக இருக்கிறான் என்று அர்த்தம் செய்யப்படுமானால் அன்ய:, பர: என்ற இரண்டு பதங்களுக்கும் அர்த்தம் செய்யப்பட்டதாக ஆகும். அதனால், இரண்டு பேத வ்யாவ்ருத்திகளை இரண்டு பதங்களும் தெரிவிக்கின்றது என்று அர்த்தம் செய்யவேண்டிய அவச்யம் இல்லை என்றே அர்த்தம் செய்யலாம். அல்லது வேறு ஒரு விதமாகவும் அர்த்தம் செய்யலாம். அதாவது, *'அவ்யக்தாத் புருஷ: பர: புருஷாத் ந பரம் கிஞ்சித்'* (अव्यक्तात्पुरुषः परः पुरुषात् न परं किञ्चित्) என்று உபநிஷத் வாக்யம் தெரிவிக்கின்றது பரமாத்மாவிற்கு மேற்பட்ட தத்வம் எதுவும் இல்லாததால், பரமாத்மா அபரம் என்று (கீழ்பட்டவர் என்று) சொல்லமுடியாது. ஸர்வமும் பரமாத்மாவிற்கு அபரமாக இருக்கின்றதால் (கீழ்பட்டதாக இருக்கின்றதால்) பரமாத்மா, பரம் என்று சொல்லப்படுகிறது.

ஆகவே, என்னைக்காட்டிலும் வேறாக, மேலாக (பரமாக) இருக்கின்ற புருஷன் யாரும் இல்லை என்பதால் அன்ய: பர: என்பதால் வெவ்வேறு ஆத்மாக்களையே தெரிவிக்கின்றது என்றும், அதனால் ஆத்ம ஐக்யம் சொல்வது சரியல்ல என்ற ஆக்ஷேபம் சரியல்ல (பொருத்தமற்றது).

'யத்யன்யோஸ்தி பர: கோபி மத்த: பார்த்திவஸத்தம' (यद्यन्योस्ति परः कोऽपि मत्तः पार्थिवसत्तम) என்ற (விஷ்ணுபுராணத்தில்) பூர்வ ச்லோகத்திற்கும் *'யதா ஸமஸ்ததேஹேஷு புமானேகோ வ்யவஸ்தித:'* (यदा समस्तदेहेषु पुमानेको व्यवस्थितः) என்ற உத்தர ச்லோகத்திற்கும் சொல்லப்பட்ட அர்த்தமே பொருத்தமான அர்த்தம். ஸமஸ்த்த தேஹங்களிலும் நான் ஒருவனே இருக்கின்ற காரணத்தினாலேயே, என்னைத்தவிர வேறாக புருஷதத்வம் (சேதனன்) இல்லாததால், எவ்விதம் யாரை, நான் என்றும், அவன் என்றும், நீ என்றும், சொல்லமுடியும் என்று ஆசார்யனால், சிஷ்யனுக்கு பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நான் யார், அவன் யார், நீ யார் என்ற சிஷ்யனின் கேள்விக்கு, புருஷனான என்னை அன்றி வேறான பரமான தத்வம்

வேறு எதுவுமில்லை என்றே பதில் சொல்லப்பட்டது. அதனால் உன்னுடைய கேள்வி அர்த்தமற்றது என்பதால் சரியல்ல என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஸர்வதேஹங்களிலும், ஒவ்வொரு புருஷன் இருக்கின்றான் என்று '*ஸமஸ்ததேஹேஷு புமான் ஏக:*' என்ற வாக்யத்திற்கு அர்த்தம் செய்யலாமே?

ஸித்தா:- தேஹமே ஆத்மா என்று நினைக்காமல், தேஹத்திற்கு வேறானது ஆத்மா என்றும் அந்த ஆத்மா, ஒவ்வொரு தேஹத்திலும் வெவ்வேறாக இருக்கின்றது என்று அறிந்திருப்பார்களேயானால், அதை சாஸ்திரம் ஏன் தெரிவிக்கவேண்டும்? இவ்விதம் உண்மையில் புருஷபேதம் இருந்தால்தான் நான் யார், நீ யார், அவன் யார் என்ற கேள்வி பொருந்தும்.

''*ஸமஸ்ததேஹேஷு*'' என்ற பஹுவசனமும், 'புமான் ஏக:' என்ற ஏகவசனமாக தெரிவிக்கின்றதனாலேயே, தேஹபேதம் இருக்கின்றதே அன்றி ஆத்மபேதம் இல்லை என்ற கருத்தையே, இந்த ச்லோகத்தில், ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது. அதனால் ஆத்ம பேதம் இருப்பதாகச்சொல்வது தவறு. ஸர்வ தேஹங்களிலும் இருக்கின்ற புருஷன் ஒருவனே என்ற அர்த்தம் தான், மிக ஸ்பஷ்ட்டமாகவே சொல்லப்பட்டிருக்கின்றது. அதனால், உன்மத்தனாக இல்லாதவன், உன்னால் தெரிவிக்கப்படும் அர்த்தம் சரி என்று ஒத்துக்கொள்ளமாட்டான்.

பூர்வ:- ஸர்வ சரீரங்களிலும் புருஷன் ஒருவனே என்று சொல்லவேண்டிய அவச்யம் இல்லை. ஆத்மா வெவ்வேறாக இருந்த போதிலும், புனர் ஜன்மாக்களில், வெவ்வேறு சரீரங்களை எடுக்கின்றதால், அந்த ஜன்மாவில் எடுக்கின்ற சரீரங்களில் ஆத்மா வேறாக இருக்கலாமோ என்ற ஸந்தேஹம் ஏற்படும். அதனால் அவ்விதம் வேறு சரீரங்களை எடுத்தாலும், முன் ஜன்மாவில் இருந்த ஆத்மாவே இந்த சரீரத்திலும் இருக்கின்றது என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதாவது முன் ஜன்மாவில் மனுஷ்ய சரீரத்தில் இருக்கின்றபோது எந்த ஆத்மா இருக்கின்றதோ அந்த ஆத்மாவே (அவனேதான்) ஜன்மாந்த்ரங்களில், மஹிஷம், அச்வம் போன்ற சரீரங்களிலும் இருக்கின்றான் என்பதையே இந்த ச்லோகத்தில் உள்ள 'புமான் ஏக:' என்ற வாக்யம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- ஆஸ்திகர்கள் எல்லோருக்குமே இந்த உண்மை தெரியும். தேஹவ்யதிரிக்தம் ஆத்மா என்ற உண்மையை அறிந்திருப்பதால் தான் அவரவர் கர்மாக்களை அனுஷ்டித்து அந்தந்த கர்ம பலனை அனுபவிக்கின்றார்கள். இவ்விதம் அறியப்படவில்லை என்றால் யாருமே கர்மாக்களைச்செய்யமாட்டார்கள். இந்த கர்மாவைச்செய்தால் இன்ன பலன் கிடைக்கும் என்று அறிந்து அதற்குரிய ஸாதனங்களைச்செய்து ஸ்வர்க்கம் முதலான போகங்களை நான் அனுபவிக்கவேண்டும் என்றே எல்லோரும் கர்மாக்களைச் செய்கின்றார்கள். அதனால் அடுத்து வரும் ஜன்மாக்களில் அந்த பலன்களை அனுபவிப்பவன் நானே என்று அறிந்திருக்கிறான் என்றே சொல்லவேண்டும். அதனால் இந்த விஷயம் பற்றி சாஸ்திரம் தெரிவிக்கவேண்டிய அவச்யமும் இல்லை. மேலும், 'ஸமஸ்ததேஹேஷு புமான் ஏகோ வ்யவஸ்த்தித:' என்று இந்த ச்லோகத்தில் 'வ்யவஸ்த்திதம்' என்ற பதம், வர்த்தமான காலத்தையே குறிப்பிடுகின்றதே அன்றி, சென்ற ஜன்மாவையோ வரப்போகின்ற ஜன்மாவையோ குறிப்பிடவில்லை. ஆகவே,

வர்த்தமான காலத்தில் உள்ள சரீரங்கள் அனைத்திலும் உள்ள ஆத்மா ஏகம் (ஒன்றே) என்றே தெரிவிக்கின்றது. அதனால் சென்ற தேஹம் என்றோ, வரப்போகின்ற தேஹம் என்றோ ஸங்கோசம் செய்து அர்த்தம் செய்யப்படுமானால் ஸமஸ்தபதத்தினால் வர்த்தமான தேஹங்களை சேர்த்துச் சொல்லப்பட்டதாக ஆகாது. அதனால் வர்த்தமான காலத்தில் உள்ள மனுஷ்யர் முதலான ஸர்வ ப்ராணிகளின் சரீரங்களையும் சேர்த்தே ஸமஸ்த்தபதத்திற்கு அர்த்தம் சொல்லப்பட்டால்தான் ச்லோகார்த்தம் பொருந்தும். ஆகவே இந்த இரண்டு ச்லோகங்களின் தாத்பர்யம் (கருத்து) என்னவென்றால், தேஹபேதம் இருந்தாலும் ஆத்மபேதம் கிடையாது என்றே 'ஆத்மா ஏக:' என்று தெரிவிக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- ப்ரதிதேஹம் ஆத்மபேதம் இருந்தால்தான் சிஷ்யனின் ப்ரச்னமே (கேள்வி) பொருந்தும் என்று உங்களால் சொல்லப்பட்டது. ஆனால் புருஷபேதம் இருந்தாலும், இந்த ப்ரச்னமும், ப்ரதிவசனமும் தேவை இல்லை என்றே சொல்லலாம். ஏனெனில், ஆத்ம நானாத்வம் இருந்தபோதிலும், ஸர்வமும் ஆத்மாவாகவே (ஆத்ம ஸ்வரூபமாகவே) இருக்கின்றதால், நீ யார், நான் யார், அவன் யார், என்ற ப்ரச்னமே தேவை இல்லை. ஏனெனில் ஒன்று ஆத்மா, மற்றொன்று அனாத்மா என்றிருக்குமானால்தான் இந்த ப்ரச்னத்திற்கே இடம் ஏற்படும். ப்ரதிசரீரத்தில் இருக்கின்ற ஆத்மாவும் ஆத்மாவே என்பதால் இந்த கேள்வியே வ்யர்த்தம்.

ஸித்தா:- இவ்விதம் சொல்லப்படுமானால், தேஹமே ஆத்மா என்ற தேஹாத்மவாதியும், நீ யார், நான் யார் என்று கேட்பதும் சரியல்ல என்று சொல்லநேரிடும். அதாவது தேஹமே ஆத்மா என்று சொல்லப்படுமானால், நீயும் தேஹம், நானும் தேஹம் என்று அவன் அறிந்திருப்பதால் அவனும் இவ்வித ப்ரச்னம் செய்யத்தேவை இல்லை என்றாகும், இதேபோல் தேவலோகத்திலுள்ள தேவர்கள், மனுஷ்ய லோகத்திலுள்ள மனுஷ்யர்கள் எல்லோருமே நீ யார், நான் யார் என்ற கேள்வி கேட்கவேண்டிய அவச்யமே கிடையாது.

பூர்வ:- இது சரியல்ல. தேஹங்கள் எல்லாமே ஒன்றுதான் என்றாலும் ஒரு தேஹம் தேவதத்தன், ஒரு தேஹம் யஞ்ஞதத்தன் என்று நாமபேதம், ஜாதிபேதம் முதலானவை தேஹத்திற்கு இருக்கின்றதால், நீ யார், நான் யார், அவன் யார் என்ற ப்ரச்னம் செய்யப்படுவதால், ப்ரதிவசனமும் சொல்லப்படுகிறது. அதுபோல் ஆத்மாவில் நாமபேதமோ, ஜாதி பேதமோ கிடையாது என்பதால், ஆத்மாவில்தான், ப்ரச்னமோ, ப்ரதிவசனமோ செய்வது பொருந்தாது.

ஸித்தா:- தேஹத்தைக்காட்டிலும் வேறானது ஆத்மா என்று அறிந்தவனாக இருந்தாலும், நாமம், ஜாதி எல்லாமே ஆத்மாவில் இருப்பதாகவே, வ்யவஹாரம் செய்கிறானே அன்றி, தேஹத்தில் நாமம் ஜாதி போன்ற வ்யவஹாரங்கள் செய்யப்படவில்லை.

மீமாம்ஸகர் ஸித்தாந்தத்திலும், தேஹமும் வெவ்வேறு என்றும் அதேபோல் ஆத்மாவும் வெவ்வேறு என்றே சொல்லப்படுகிறது. அவரவர்கள் கர்மாவைச்செய்கின்றபோது ஸங்கல்பத்தில் நாமம் ஜாதி கோத்ரம் முதலானவைகளை தெரிவித்தே (சொல்லியே) ஸங்கல்பம் செய்கின்றார்கள். அந்தவிதம் ஸங்கல்பம் செய்கின்றபோது ஆத்மாவிலேயே நாம ப்ரயோகம் செய்து ஸங்கல்பம் செய்யப்படுவதனாலேயே, ஸ்வர்க்காதி பலங்களை அவரவர் கர்மாவிற்கு தக்கவிதம் அனுபவிக்கின்றார்கள். அதனால் தேஹாதிகளுடன்

ஆத்மாவைச் சேர்த்தே நாமம் முதலான வ்யவஹாரங்கள் செய்யப்படுகிறது. ஆகவே, மீமாம்ஸகமத கண்டனம் செய்கின்றபோது *'ப்ரஹ்ம தம் பராதாத், யோ அன்யத்ர ஆத்மன: ப்ரஹ்ம வேத.... க்ஷத்ரம் தம் பராதாத்'* என்று சொல்லப்படுகிறது. இந்தவிதம் தேஹவ்யதிரிக்த: ஆத்மா என்று தெரிவிக்கின்ற மீமாம்ஸகர்களும் நாமம், ஜாதி முதலானவைகள் ஆத்மபர்யந்தம் வ்யவஹாரம் இருப்பதாகவே தெரிவிக்கின்றார்கள். அதனால் ஆத்ம நானாத்வ வாதிகளுக்கும், தேஹ நானாத்வம் போல் ப்ரச்ன ப்ரதிவசனம் ஏற்படலாம் என்பதில் அஸம்பாவிதம் ஏதுமில்லை. தேவதத்தன் என்ற நாமா, தேஹத்தை மட்டும் குறிப்பிடுவதாகச்சொல்லமுடியாது. ஏனெனில் அவன் மரணமடைகின்றபோது சரீரம் அங்கு இருந்தாலும், தேவதத்தன் போய்விட்டான் என்றே சொல்லப்படுகிறது. அதனால், சரீரத்தைவிட்டு விலகினவன் (நீங்கினவன்) எவனோ அவனையே தேவதத்தன் என்ற பெயரால் சொல்லப்படுகிறது. அதனால் நாமம், ஜாதி முதலானவை, கேவல தேஹத்தையோ, அல்லது கேவல ஆத்மாவையோ சேர்ந்ததல்ல, அதனால், ஆத்ம நானாத்வ வாதிகளானாலும், நாமபேதம், ப்ராஹ்மணன், க்ஷத்ரியன் போன்ற ஜாதி பேதங்கள், ப்ரஹ்மசாரி, க்ரஹஸ்த்தன் போன்ற ஆச்ரம பேதங்கள் எல்லாமே தேஹாத்ம ஸங்காதத்தில் ஏற்படுகின்றதால், இவ்விதம் ப்ரச்ன ப்ரதி வசனங்கள் ஸம்பவிக்கலாம். அதனால் நான் யார்? நீ யார்? என்ற ப்ரச்னமும் 'ஸோஹம்' என்ற ப்ரதிவசனமும் ஸம்பவிக்கலாம். ஆத்மா ஏகம் என்று அறியப்படுமானால் ப்ரச்ன ப்ரதிவசனமே ஸம்பவிக்கமுடியாது. ஆகவே, ஆத்மா ஏகம் என்றே ப்ரச்ன ப்ரதிவசனம் மூலம் ஸித்தம் செய்யப்பட்டது.

பூர்வ:- ச்லோகத்தில் உள்ள 'புமான் ஏக:' என்ற வாக்யத்திற்கு, 'புருஷன் ஒன்று' என்று அர்த்தம் சொல்ல தேவையில்லை. புருஷன் ஞானாகாரம் என்பதால், ஞானாகாரம் ஒன்றாகவே இருப்பதால், புருஷாகாரம் ஒன்று என்றே 'புமான் ஏக:' என்று தெரிவிக்கின்றது. அதனால் ஆகார ஐக்யத்தைக்கொண்டு புமான் ஏகம் என்று தெரிவிக்கின்றதே அன்றி புருஷ ஐக்யம் சொல்லப்படவில்லை (ஆகார ஐக்யபரமே அன்றி புருஷ ஐக்யபரம் அல்ல).

ஸித்தா:- புருஷ ஆகாரம் ஏகம் என்று சொல்லவேண்டுமானால், 'புமாம்ஸ: ஏகாகாரா:' पुमांसः एकाकाराः என்றே சொல்லவேண்டும். அவ்விதமின்றி 'புமான் ஏக:' என்றே ஏகவசனத்தில் தெரிவிக்கின்றது. அதனால் ஆகார ஐக்யம் என்று சொல்வது சரியல்ல. ச்லோகத்தில் இருக்கின்ற பதங்களுக்கு என்ன அர்த்தமோ அதைவிட்டுவிட்டு கல்பனையாக அர்த்தம் செய்வது பொருத்தமற்றது. இவ்விதம் ஸர்வ வாக்யங்களுக்கும் குதர்க்கமான அர்த்தம் செய்யப்படுமானால், உன்னை யமன் தான் கேட்கவேண்டும். (தண்டிக்கவேண்டும்.)

மேலும் ஆத்ம நானாத்வம் இருந்தாலும், ஸர்வ ஆத்மாக்களும் ஞானாகாரம் என்பதால் ஒன்று என்று சொல்லப்படுமானால், தேஹபேதத்தினால் ஆத்ம ஆகாரபேதம் இல்லை என்றே அர்த்தம் கிடைக்கின்றது. இவ்விதம் ஆத்ம ஆகாரபேதம் இல்லை என்றால் இது யஞ்ஞதத்த ஆத்மா, அது தேவதத்த ஆத்மா என்று எதைக்கொண்டு வித்யாஸம் சொல்லமுடியும்?

பூர்வ:- வ்யக்தி பேதத்தைக்கொண்டு ஆத்மபேதம் சொல்லலாமே?

ஸித்தா:- ஆகாரபேதம் இருந்தால்தான் வ்யக்திபேதம் சொல்லலாம். ஆகார பேதமே இல்லை என்றால் வ்யக்திபேதம் எவ்விதம் சொல்லமுடியும்? வ்யக்தி பேதத்தினால் ஆத்மபேதம்

என்றும், ஆத்ம பேதத்தினால் வ்யக்திபேதமும் ஸித்திக்கின்றது என்றால், அன்யோன்ய ஆச்ரய தோஷம் ஸம்பவிக்கின்றது. அதனால் வ்யக்தி பேதத்தினால் ஆத்மபேதம் ஸித்திப்பதாக சொல்வது சரியல்ல.

பூர்வ:- ராமானுஜர் *'வேணுரந்த்ரவிபேதேன பேதஷ்ஷட்ஜாதிஸம்ஞ்ஞித: | அபேதவ்யாபின: வாயோ: ததாதஸ்ய பரமாத்மன:'* (वेणुरन्ध्रविभेदेन भेदष्षड्जातिसंज्ञितः अभेदव्यापिनो वायोस्तथा तस्य महात्मनः) என்ற ச்லோகத்தில் ஆத்ம ஆகார ஐக்யமே சொல்லப்படுகிறது ஆத்ம ஐக்யம் சொல்லப்படவில்லை என்கிறார். உதாரணமாக புல்லாங்குழலில் இருக்கின்ற த்வாரங்கள் அனேகம். அந்த த்வாரங்களிலிருந்து உண்டாகின்ற வாயு அம்சங்கள் வெவ்வேறு ஸ்வரங்களாக இருக்கின்றது. இவ்விதம் இருந்தபோதிலும், வாயுவின் ஆகாரம் ஒன்றாகவே இருக்கின்றது. அதேபோல், ஒவ்வொரு தேஹத்திலும் ஆத்மா வெவ்வேறாக இருந்தபோதிலும், அந்த ஆத்மாக்களில் எல்லாம் ஞானாகாரம் என்பது ஒன்றாகவே இருக்கின்றது என்று சொல்லலாமே ? அதாவது, வாயுவின் அம்சங்கள் ஒன்று என்று சொல்லவில்லை. வாயுவின் ஆகாரம்தான் ஒன்று என்று சொல்லப்படுகிறது. வாயுவில் ஸ்வரூப ஐக்யம் சொல்லப்படவில்லை. அதேபோல் ஆத்ம ஐக்யம் சொல்லப்படவில்லை என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ச்லோகத்தில் 'வாயோ:' वायोः என்று சொல்லப்படுகிறதே அன்றி 'வாயு அம்சம்' वाय्वम्शं என்ற பதமே சொல்லப்படவில்லை. அதனால் இல்லாத பதத்தைச்சேர்த்து அர்த்தம் செய்வது சரியல்ல. வேணுவில் இருக்கின்ற த்வாரங்கள் அனேகமாக (பேதமாக) இருந்தபோதிலும், அதில் தொடர்ந்து வ்யாபித்திருக்கின்ற வாயு ஒன்றே என்று அபேதமே சொல்லப்படுகிறது. அதேபோல் தேஹங்கள் அனேகமாக இருந்தபோதிலும் ஸர்வத்திலும் வ்யாபித்திருக்கின்ற ஆத்மா ஏகம் (ஒன்றே) என்ற கருத்தையே இந்த ச்லோகமும் தெரிவிக்கின்றது. ச்லோகத்தில் இருக்கின்ற பதங்களுக்கு சரியான முறையில் அர்த்தம் செய்ய வேண்டுமே அன்றி அதைவிட்டுவிட்டு இல்லாத பதங்களைச்சேர்த்து அர்த்தம் செய்வது பொருத்தமற்றது. வாயு என்பது ஸாவயவம் என்பதால் அம்சம் உடையது. அதைப்பற்றி இந்த ச்லோகம் தெரிவிக்கவில்லை. வாயு ஏகம் என்றாலும், புல்லாங்குழலில், உபாதி பேதத்தினால் அனேக பேதங்கள் ஏற்படுகின்றது. அதேபோல் ஆத்மா ஏகம் என்றாலும் ஸர்வதேஹங்களிலும் வ்யாபித்திருக்கின்றதால், தேஹபேதத்தினால் ஆத்மபேதம் இருப்பதாக தோன்றுகிறது. ஆகவே, ஆத்மா என்பது ஏகம் என்றே வாயு த்ருஷ்ட்டாந்தத்தைக்கொண்டு, ஆத்மா ஸர்வத்திலும் வ்யாபித்திருக்கின்றது என்றாலும் ஸர்வத்திலும் ஆத்ம ஸ்வரூபம் ஒன்றே என்று இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதனால் த்ருஷ்ட்டாந்தத்தில் வாயு ஸாவயவம் என்றும் வாயுவின் அம்சம் என்றும் தெரிவிப்பதற்காக, தார்ஷ்ட்டாந்திகத்திலும் ஆத்மா ஸாவயவம் என்றோ அம்சம் உடையது என்றோ சொல்லப்படவில்லை. த்ருஷ்ட்டாந்தம் என்றாலே ஸர்வாம்சமும் பொருந்த முடியாது ஏதோ சில அம்சம்தான் தார்ஷ்ட்டாந்தத்தில் பொருந்தி இருக்கவேண்டும். அத்யந்தம் இரண்டிற்கும் ஒற்றுமையோ, வேற்றுமையோ இருக்குமானால், அதை த்ருஷ்ட்டாந்தம் என்றே சொல்லமுடியாது. கீதா ச்லோகத்திலும் *'யதாகாசஸ்திதோ நித்யம் வாயு: ஸர்வத்ரக: மஹான்'* यथाकाशस्थितो नित्यं वायुः सर्वत्रगो महान् என்று 'வாயு:' என்று ஏகவசனத்தினால் அம்சி ஏகம் என்றும் 'ஸர்வத்ரக:' என்பதால் வ்யாபீ என்றும் தெரிவிக்கின்றது.

பூர்வ:- கீதையில் சொல்லப்படும் இந்த ச்லோகத்திற்கும், அனேகமாக இருக்கின்ற வாயுக்கள், எல்லாமே 'வாயு' என்ற தன்மையைக்கொண்டு வாயு ஏக ஆகாரமாக இருக்கின்றதால், உபாதி வசாத் அவாந்தர பேதம் இருக்கின்றது என்று தெரிவிப்பதற்காக வாயு த்ருஷ்ட்டாந்தம் சொல்லப்படுகிறதே அன்றி வாயு ஏகம் (ஒன்றே) என்று தெரிவிப்பதற்காக இந்த த்ருஷ்ட்டாந்தம் சொல்லப்படவில்லை. அதனால் ஆத்மா ஏகம் என்றாலும் உபாதி வசாத் அனேகம் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- ச்லோகத்தில் வாயு: என்று தான் ச்லோகம் தெரிவிக்கின்றது. அதனால் இவ்விதம் வாயு என்ற பதத்தை அன்றி அம்சம் என்ற பதமே இல்லாததால் கல்பனையாக அர்த்தம் செய்வது சரியல்ல.

ஸிதநீலாதிபேதேன யதைகம் த்ருச்யதே நப: । ப்ராந்தத்ருஷ்டிபிராத்மாபி ததைக: ஸன் ப்ருதக் ப்ருதக் ॥ सितनीलादिभेदेन यथैकं दृश्यते नभः। भ्रान्तदृष्टिभिरात्मापि तथैकस्सन् पृथक् पृथक् ॥ ஆகாசம் ஏகம், அதில் எந்த விதமான வர்ணங்களோ, பேதங்களோ கிடையாது. ஆனால், ஆகாசத்தில் வெளுப்பு, நீலம், முதலான வர்ணங்கள் இருப்பதாக ப்ராந்தியினால் பார்க்கின்றான். அதேபோல் ஆத்மஸ்வரூபம், ஸர்வத்திலும் ஏகமாகவே இருக்கின்றது. ஆனால் ப்ராந்த த்ருஷ்டியுடையவன் ஆத்மா வெவ்வேறாக இருக்கின்றதாக பார்க்கின்றான் என்பது அத்வைத ஸித்தாந்தம்.

ஸுதர்சனர் பூர்வ:- இதுசரியல்ல, ஆகாசத்தில் அனேக அவயவங்கள் இருக்கின்றது. அந்த அவயவங்கள் (ப்ரதேசங்கள்) எவ்விதம் வெவ்வேறாக இருக்கின்றனவோ, அதேபோல் ஆத்மாவும் ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறாகவே இருக்கின்றது. ஆனாலும், எவ்விதம் ஆகாசத்தின் ஆகாரம் ஒன்றாகவே இருக்கின்றதோ அதேபோல் ஆத்ம ஆகாரம் ஒன்றாகவே இருக்கின்றது. அதனால் ஆத்மா அனேகமாக இருந்தாலும் அதன் ஆகாரம் ஒன்றே என்றுதான் இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இது சரியல்ல. நையாயிகன், ஆகாசம் நிரவயவம், நித்யம், விபு, என்று தெரிவிக்கின்றான். அதுபோல் ஆத்மா நிரவயவம், நித்யம், ஏகம், விபு: என்ற கருத்தையே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. ச்லோகத்தில் 'நப:' என்ற பதம் தான் இருக்கின்றதே அன்றி 'நபோ அவயவம்' என்று சொல்லப்படவில்லை. த்ருஷ்ட்டாந்தத்தில் அவயவவிசேஷங்கள் இருப்பதாகச் சொல்லப்படுவது போல் தார்ஷ்ட்டாந்திகத்தில் ஆத்மாவில் அவயவவிசேஷங்கள் இருக்கின்றதென்று சொல்லமுடியுமா? அவ்விதம் சொல்லப்படுமானால் ஆத்மா அநித்யம் என்று சொல்லநேரிடும். ஆகவே, வாயு, ஆகாசம் என்ற த்ருஷ்ட்டாந்தத்தினால், உபாதியான அவயவங்கள் பல பேதங்கள் உடையதாக இருந்தாலும் அவயவி ஒன்றே என்ற கருத்தையே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதனால் நிரவயவமான ஆத்மாவிற்கு, அவயவம் முதலான அம்சங்களை த்ருஷ்ட்டாந்தமாகச் சொல்வது பொருந்தாது. ஒரே ஆகாசத்தில், கடாகாசம், மடாகாசம் என்பது போன்ற ஆரோபங்கள் இருப்பதுபோல் ஆத்மா ஏகமாக இருந்தாலும், ப்ராந்தியினால் அனேகம் என்று ஆரோபம் செய்யப்படுகிறது. ஆத்மா ஸாவயவமா நிரவயவமா என்ற சர்ச்சைக்கே

இங்கு இடமில்லை, ஆத்மா ஏகமா? அனேகமா என்ற ஸந்தேஹம் ஏற்படுவதால், அதை நிவர்த்திப்பதற்காகவே இவ்விதம் உபதேசிக்கப் பட்டிருக்கின்றது. அதனால் ஆகாசம் ஏகம் என்பது போல் ஆத்மா ஏகம் என்று அபேதமே போதிக்கப்படுகிறது.

'கடத்வம்ஸே கடாகாச: ந பின்னோ நபஸோ யதா । ப்ரஹ்மணா ஹேயவித்வம்சே விஷ்ண்வாக்யேன ததா புமான்' (घटध्वंसे घटाकाशो न भिन्नो नभसो यथा। ब्रह्मणा हेयविध्वंसे विष्णवाख्येन तथा पुमान्) என்று கடாகாசம் என்பது, கடத்வம்சத்தினால், ஆகாசத்தைக்காட்டிலும் வேறாக இல்லை. அதுபோல் தேஹம் இருக்கின்ற பர்யந்தம், ப்ரஹ்மம் வேறு ஆத்மா வேறு என்று அறியப்பட்டபோதிலும், தேஹம் நசித்த பிறகு, விஷ்ணுவைக்காட்டிலும் ஆத்மா வேறாக இருப்பதில்லை என்று சௌனகர் தெரிவிக்கின்றார்.

இந்த ச்லோகத்திற்கு ராமானுஜர் வேறு விதமாக அர்த்தம் செய்கின்றார்.

பூர்வ:- ஆகாசம் ஒன்றே என்றாலும், அதில் உள்ள அனேக அம்சங்கள் வெவ்வேறாக இருப்பது போல், ஜீவனுக்கும் தேவன், மனுஷ்யன் முதலான தேஹபேதம் மட்டும் அல்லாமல் ஸ்வத: வைஷம்யம் (வேறுபாடு) இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். ஆகாசம் அனேக அம்சங்கள் (ப்ரதேசங்கள்) உள்ளது. அதில் ஒரு ப்ரதேசம் கடத்திற்குள் இருக்கின்றது. அதுவே கடாகாசம், கடம் உடைந்த பிறகு அந்த ப்ரதேசம் ஆகாசமாகவே இருக்கின்றது ஆகாசத்தைவிட பின்னமாக ஆகிறதில்லை.

ஸித்தா:- கடம் உடைந்த பிறகு அந்த ப்ரதேசம் ஆகாசத்துடன் அபின்னமாக ஆகிறது என்று சொல்லப்படுவதின் அர்த்தம் என்ன? அந்த ப்ரதேசம் கடாகாசமான தன்னுடனேயே அபின்னமாகின்றதா? அல்லது தன்னை போன்ற மற்றுமுள்ள ஆகாச அம்சத்துடன் ஒன்றாக ஆகின்றதா? அல்லது அம்சியான ஆகாசத்துடன் ஒன்றாக ஆகின்றதா? கடாகாசமான தன்னுடனேயே அபின்னமாகிறது என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் கடத்வம்சத்திற்கு முன்பும் அந்த அம்சத்துடன் அபின்னமாக இருக்கின்றதால், கடத்வம்சத்திற்குப்பின் அபின்னமாகிறது என்று சொல்வது சரியல்ல. அதற்காக, மடாகாசத்தில் அபின்னம் என்று சொல்லமுடியாது. ஏனெனில் கடாகாசம், மடாகாசம் என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று பின்ன அவயவமாக இருக்கின்றதால் இரண்டிற்கும் ஐக்யம் ஸம்பவிக்கமுடியாது. மூன்றாவதாக, அவயவம், அவயவியுடன் ஐக்யம் (சேர்கின்றது) என்று சொல்லமுடியாது ஏனெனில் அவயவம் அவயவி இரண்டும் அபின்னமாகவே இருக்கின்றதால் பின்னமல்ல. அவ்விதம் இரண்டும் பின்னம் என்று சொல்லப்படுமானால், அது ஆகாசத்தின் ப்ரதேசம் (அவயவம்) என்றே சொல்லமுடியாது. ஆகவே ப்ரதேசி (அவயவி)யைக்காட்டிலும் ப்ரதேசம் வேறல்ல. எப்போதுமே அம்சம், அம்சி இரண்டும் அபின்னமாகவே இருக்கின்றது.

பூர்வ:- கடத்தின் முகத்தை மூடிவிட்டால், அதற்குள் இருக்கின்ற ஆகாசம், வெளியில் இருக்கின்ற ஆகாசத்தைக்காட்டிலும் வேறாகத்தானே இருக்கின்றது?

ஸித்தா:- கடத்தில் அந்தர்கதமான ஆகாசம், ப்ரதேசியான ஆகாசத்தைக்காட்டிலும் வேறல்ல. கடத்திற்குள் இருக்கின்ற ஆகாசம் ப்ரதேசி என்று சொல்லமுடியாது என்றால், கடத்திற்கு வெளியில் இருப்பது ப்ரதேசம் என்பதால், அதையும் ப்ரதேசி (அவயவி)

என்று சொல்லமுடியாது. ஆகவே, ப்ரதேசம், ப்ரதேசியாக ஆகாது என்று சொல்வது சரியல்ல. இவ்விதம் சொல்லப்படுமானால், கடத்வம்சத்திற்கு பிறகும் ப்ரதேசியாக ஆக முடியாது. அதனால் சௌனகரால் சொல்லப்பட்ட வாக்யத்திலும், அம்சம், அம்சி என்ற பேதமே சொல்லப்படவில்லை. ஆகாசம் எவ்விதம் அபரிச்சின்னமோ அதேபோல் ஆத்மா ஏகம் அபரிச்சின்னம் என்ற கருத்தையே அந்த வாக்யம் தெரிவிக்கின்றது. கடம் என்ற உபாதியினால் அவச்சின்னமான ஆகாசம் கடாகாசம் என்று வேறாக அறியப்பட்டபோதிலும், கடத்வம்சத்திற்குப்பின் மஹாகாசமாகவே ஆகின்றது. அதேபோல் ஆத்மா, அந்த:கரணம் என்ற உபாதி வசாத் 'ஜீவன்' என்று பரிச்சின்னமாக அறியப்பட்டபோதிலும், உபாதி த்வம்சத்தினால் ஜீவசைதன்யம் அபரிச்சின்னமான பரமாத்ம ஸ்வரூபமாகவே அறியப்படுகிறது என்ற தாத்பர்யம், ஆகாச த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு போதிக்கப்படுகிறது. இவ்விதம் முக்தி நிலையில் ஜீவப்ரஹ்ம ஐக்யமே தத்வம் என்று சௌனகர் தெரிவிக்கின்றார்.

பூர்வ:- முக்தி தசையில் அபேதம் இருந்தாலும், வ்யவஹார தசையில் பேதம் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- வ்யவஹார தசையிலும் ஜீவப்ரஹ்ம அபேதமே உண்மை நிலை. ஆனால் ப்ராந்தியினால் பேதம் இருப்பதாக தோன்றுகிறது. கடாகாசம், கடத்திற்குள் அவச்சின்னமாக இருக்கின்றது என்பதற்காக, மஹாகாசத்தை அன்றி வேறானது கடாகாசம் என்று சொல்ல முடியாது. மஹாகாசமே கடாகாசம். அதேபோல் அந்த:கரண அவச்சின்ன சைதன்யமும், பூர்ண சைதன்யத்திலிருந்து வேறுபட்டது அல்ல. வ்யவஹார தசையில் வேறுபட்டது போல் ப்ராந்தியினால் ஏற்பட்ட பேத தோற்றம், சாஸ்திர ஞானத்தினால் த்வம்சம் ஆகின்றதால் அஞ்ஞானம் அதன் கார்யமான அந்த:கரணம் என்பதெல்லாமே நாசம் ஆகின்றதால், சைதன்யம் பரிபூர்ண ஸ்வரூபத்தில் ப்ரகாசிக்கின்றது. ஆகவே ப்ராந்தி நீங்கி ப்ரஹ்ம பாவத்தை அடைய விரும்புவானாகில், ப்ரஹ்ம மீமாம்ஸா சாஸ்திர விசாரம் அவச்யம் செய்தே ஆகவேண்டும்.

பூர்வ:- '*யதாக்னிரக்னௌ ஸம்க்ஷிப்தஸ்ஸமானத்வமனுவ்ரஜேத்*' ॥ (यथाग्निरग्नौ संक्षिप्तस्समानत्वमनुव्रजेद्) என்று ஒரு அக்னியுடன், மற்றொரு அக்னியைச் சேர்த்தால் இரண்டும் ஸமானமாக ஆகின்றது. அதேபோல், பரமாத்மாவுடன் ஆத்மா சேர்கின்ற போது பரமாத்மாபோல் ஆத்மாவும் ஸமானமாக ஆகின்றது என்றே சொல்லவேண்டும். ஏனெனில், 'ஸமானத்வம் அனுவ்ரஜேத்' என்றே த்ருஷ்டாந்தத்தில் சொல்லப்படுகிறது. அதனால் அதுவாகவே ஆகிறது என்று அபேதம் சொல்லப்படவில்லை. அதனால் ஜீவப்ரஹ்ம அபேதம் சொல்வது சரியல்ல.

ஸித்தா:- இந்த ச்லோகத்தில் 'ஸமானம்' என்ற பதம் ஏகத்வத்தையே தெரிவிக்கின்றதே அன்றி ஸமத்வத்தை குறிப்பிடவில்லை. அதாவது இரண்டுமே அக்னி என்பதால் இரண்டும் ஒன்று சேர்கின்றபோது ஒரே அக்னியாகத்தான் ஆகின்றது. இரண்டும் சேர்வதற்கு முன்பும் அக்னிதான், சேர்ந்தபிறகும் அக்னிதான். அதனால் அக்னிபோல் இருக்கின்றது என்று ஸமத்வம் சொல்லப்படவில்லை.

பூர்வ:- அப்படியானால், அக்னிபோல் ஆகிறது என்று சொல்வது சரியல்ல என்றால் அக்னியுடன் சேர்ந்த அக்னி, அக்னியுடன் அபேதத்தை அடைவதாகச் சொல்லவேண்டும். ஆனால் ஸமானம் என்ற பதப்ரயோகத்திற்கு ஐக்யம் என்ற அர்த்தம் பொருந்தாது.

ஸித்தா:- *'தத்புருஷஸ்ஸமானாதிகரண: கர்மதாரய:'* (तत्पुरुषस्समानाधिकरणः कर्मधारयः) என்கிற பாணினி ஸூத்ரத்தில் (1.2.42) 'ஸமானம்' என்பதற்கு ஏகம் என்று அர்த்தம் செய்யவேண்டும். ஸமானம் என்பதற்கு இரண்டு அர்த்தம். ஸூத்ரத்தில் ஸமானபதம், ஏகம் என்ற அர்த்தத்தில்தான் ப்ரயோகம் செய்யப்படுகிறது. ஸமானபதத்திற்கு மற்றொரு அர்த்தம், 'ஸாத்ருச்யம்' அதாவது பித்ருஸமான: புத்ர: என்று, பிதாவிற்கு ஸமானமானவன் புத்ரன் என்ற ஒரு அர்த்தம். அந்தவிதம் இந்த இடத்தில் அர்த்தம் சொல்லப்படவில்லை. இந்த இடத்தில் ஸாத்ருச்ய ப்ரதியோகி பின்னமாக நிர்த்தேசம் செய்யவேண்டும். ஆகையால் ஸாத்ருச்யம் (அதுபோல்) என்ற அர்த்தம் இந்த இடத்தில் சொல்லப்படவில்லை. இரண்டிற்கும் அதிகரணம் ஒன்று என்பதனாலேயே ஸமான அதிகரணம் என்று சொல்லப்படுகிறது. 'அதுபோல்' (ஸாத்ருச்யம்) என்றால் இதற்கும் ஒரு அதிகரணம் என்று இருக்குமானால், அதை ஸமான அதிகரணம் என்று சொல்வதில்லை. இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகின்ற த்ருஷ்ட்டாந்தம் பல இடங்களில் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. சுத்தஜலத்தில் சுத்த ஜலம் சேர்த்தால் சுத்த ஜலமாகவே ஆகிவிடும் என்று இதுபோல் பல உதாஹரணங்கள் சொல்லப்படுகிறது. அதனால் ஸமானம் என்ற பதம் ஏகம் என்ற அர்த்தத்தையே தெரிவிக்கின்றது.

பூர்வ:- ராமானுஜர் *'ஸோஹம் ஸ ச த்வம் ஸர்வமேததாத்மஸ்வரூபம் த்யஜ பேதமோஹம்'* (सोहं स च त्वं सर्वमेतदात्मस्वरूपं त्यज भेदमोहम्) என்ற ச்லோகத்தில் நான், அவன், நீ, இது என்று நான்கு பதங்கள், நான்குவித பேதங்களை தெரிவிக்கின்றதால், ஆத்மா ஒன்றே என்றும் ஆத்மபேதம் இல்லை என்றும் எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- வ்யவஹாரதசையில் இருக்கின்ற நான்குவித பேதங்களை அனுவாதம் செய்து, இவ்வித பேதங்கள் எதுவுமே இல்லை என்றும் ஸர்வமும் ஏகமான ஆத்மஸ்வரூபமே என்று, தோன்றுகின்ற பேதங்கள் நிஷேதம் செய்யப்படுகிறது. 'ஸர்வம் ஏதத் ஆத்மஸ்வரூபம்' என்று அபேதத்தை தெரிவிக்கின்றதே அன்றி பேதத்தை தெரிவிப்பதற்காக இந்த ச்லோகம் சொல்லப்படவில்லை. 'எது வெள்ளி என்று பார்க்கப்படுகிறதோ அது வெள்ளி அல்ல, அது கிளிஞ்சலே' என்று தெரிவிக்கின்ற வாக்ய த்தில் 'வெள்ளி' என்ற பதப்ரயோகம் செய்யப்படுவதற்காக, வெள்ளி ஒன்று, கிளிஞ்சல் ஒன்று என்று இரண்டு வஸ்துக்கள், வெவ்வேறாக இருக்கிறது என்று சொல்வதுபோல் இருக்கிறது உன் வாதம். ஆகவே, அறியப்படும் பேதம் உண்மையல்ல என்று தெரிவிப்பதற்காக, 'பேதம்' என்பதை அனுவாதம் செய்து, தத்வத்தை நிரூபணம் செய்கின்றது.

பூர்வ:- பரமார்த்தமாக இருக்கின்ற தத்வத்தை உபதேசிக்கின்றபோது, அந்த வஸ்துவை மட்டும் தெரிவிக்காமல், வ்யாவஹாரிக பேதம் பற்றி தெரிவிக்கவேண்டிய அவச்யம் என்ன?

ஸித்தா:- எதை பேதம் என்று அறியப்படுகிறதோ, அந்த பேதத்தை தெரிவித்து அது பேதமல்ல, அபேதம் என்றே சொல்லவேண்டும், அவ்விதமின்றி அபேதம் என்று மட்டும்

சொல்லப்படுமானால், எதற்கு அபேதம் சொல்லப்படுகிறது என்பதை தெரிவிக்காமல் எவ்விதம் தத்வத்தை போதிக்கமுடியும்? அதனால் அறியப்படும் பேதம் உண்மையில் இல்லை என்று நிஷேதம் செய்து தெரிவிப்பதன் மூலமே அபேதம் தத்வம் என்று போதிக்கமுடியும். எந்த இடத்தில் பேதம் என்ற ப்ராந்திஞானம் ஏற்படுகின்றதோ அந்த இடத்தில் தான் அதை நிஷேதம் செய்து இரண்டும் ஒன்றே என்று சொல்லவேண்டும். உதாரணமாக, ஒன்றுமே அறியாத ஒருவன் கடம் வேறு, ம்ருத் வேறு என்று நினைக்கின்றான் என்றால், அந்த இடத்தில்தான் ம்ருத்தை அன்றி வேறாக கடம் என்ற ஒரு வஸ்து இல்லை என்று அவனுக்கு தெரிவிக்கவேண்டும். ம்ருத்பின்னம் கடம் என்ற பேதஞானம் முன்னால் ஏற்பட்டிருந்தால்தான், ம்ருத் அபின்னம் கடம் என்று அபேத ஞானம் உபதேசிக்கமுடியும். சிஷ்யனும் அதை அறிந்துகொள்ளமுடியும்.

பூர்வ:- இந்த ச்லோகத்தில் '*த்யஜ பேதமோஹம்*' (त्यज भेदमोहम्) என்று எந்தவித பேதமும் கிடையாது என்று உங்களால் அர்த்தம் செய்யப்படுகிறது. அது சரியல்ல. ஆத்மாவில் ஸ்வயமே பேதம் இருக்கின்றது. ஆனால் தேவன், மனுஷ்யன் போன்ற தேஹ உபாதிமூலம் அறியப்படும் பேதம் இல்லையென்றே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- ச்லோகத்தில் '*த்யஜ பேதமோஹம்*' என்று தான் வாக்யம் இருக்கின்றதே அன்றி இன்ன பேதம் என்று குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. அதுமட்டுமல்ல, '*ஐததாத்ம்யமிதம் ஸர்வம்*' (ऐतदात्म्यमिदं सर्वं) என்கிற ச்ருதி வாக்யம் மூலம் எவையெல்லாம், ஆத்மாவை அன்றி வேறாக அறியப்படுகிறதோ அவை எல்லாமே பரமாத்ம ஸ்வரூபமே என்றும், பரமாத்ம ஸ்வரூபத்தை அன்றி வேறாக எதுவும் இல்லை என்றே முன்பே விசாரித்து ஸித்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் 'த்யஜ பேத மோஹம்' என்ற வாக்யம், ஸர்வ பேதங்களையும் விடவேண்டும் என்றே தெரிவிக்கின்றது. இன்னபேதம் என்று ஸங்கோசம் செய்து தெரிவிக்கவில்லை. நான், நீ, அவன், இது என்ற எல்லாம் ஒன்றே என்றும், வெவ்வேறாக அறியப்படும் பேதங்களை எல்லாம் விடவேண்டும் என்பதே இதன் கருத்து. அதனால் ச்லோகத்தில் இல்லாத பதங்களைச்சேர்த்து அர்த்தம் செய்வது சரியல்ல. மேலும் நிதாகன் என்ற சிஷ்யன், குருவினிடம், தங்கள் உபதேசத்தினால் உண்மையான தத்வத்தை அறிந்து கொண்டேன், அதனால் ஸர்வபேதங்களையும் விட்டுவிட்டேன் என்றே தெரிவிக்கின்றான். குறிப்பிட்ட இன்ன பேதத்தை விட்டுவிட்டேன் என்று சொல்லவில்லை.

மேலும், '*பரமார்த்தஸ்த்வஸம்லாப்யோ கோசரோ வசஸாம் ந ய:*' (परमार्थस्त्वसंलाप्यो गोचरो वचसां न य:) என்றும், '*பரமார்த்தஸ்ச மே ப்ரோக்தோ யதாஞ்ஞானம் ப்ரதானத:*' (परमार्थश्च मे प्रोक्तो यथाज्ञानं प्रधानतः) – விஷ்ணுபுராணம் (2.13.2) என்றும், '*ஏகோ வ்யாபி ஸமச்சுத்த: நிர்குண: ப்ரக்ருதே: பர:*' (एको व्यापी समश्शुद्ध निर्गुण:प्रकृते:पर:) என்று இவ்வித விசேஷங்களுடைய ஆத்ம ஸ்வரூபமே பரமார்த்தம் என்றே தெரிவிக்கின்றது. இப்பேர்ப்பட்ட மஹிமைவாய்ந்த பரமார்த்த தத்வம் வாக்கினால் வசனிக்கக்கூடியதல்ல. வாக்கிற்கு எட்டாத இந்த தத்வத்தை குரு உபதேசத்தினால் அறிந்த சிஷ்யனும் எதை அறிய வேண்டுமோ அதை அறிந்து கொண்டேன் என்றே, தெரிவிக்கின்றான். அதாவது ஸச்சிதானந்த லக்ஷண ப்ரத்யகபின்ன ப்ரஹ்மமே பரமார்த்தம் என்ற ஞானமே, பரமார்த்த

தர்சனம். இதற்கு அன்யமான ஸர்வ பேத ஞானம் எல்லாமே, ப்ராந்தி ஞானம் என்று அறிந்து கொள்கிறான். அதனால் ஆத்மாவில் ஸ்வயமே இருக்கின்ற பேதத்தை நிஷேதம் செய்யவில்லை என்றும், தேவ மனுஷ்யர் முதலான சரீரபேதங்களையே விடவேண்டும் என்று தெரிவிப்பதாகச்சொல்வது பொருந்தாது. பேத ஸாமான்யமே பேத சப்தத்தினால் குறிப்பிடப்படுகிறது. அதனால் 'த்யஜ பேத மோஹம்' என்ற வாக்யம் ஸர்வபேதங்களையும் விடவேண்டும் என்றே தெரிவிக்கின்றது.

பூர்வ:- மற்றொரு ச்லோகத்தில் '*ரூபபேதஸ்து பாஹ்யகர்மப்ரவ்ருத்திஜ: । தேவாதிபேதே அபத்வஸ்தே நாஸ்த்யேவாவரணே ஹி ஸ:*' ॥ (रूपभेदस्तु बाह्यकर्मप्रवृत्तिजः। देवादिभेदेऽपध्वस्ते नास्त्येवावरणे हि सः॥) என்று தெரிவிக்கின்றது. அதாவது தேவ மனுஷ்யாதி தேஹத்தினால் ஆத்மபேதம் கிடையாது என்று விசேஷ பேதத்தை தெரிவிக்கின்ற வாக்யமே இருக்கின்றதே?

ஸித்தா:- தேவர்கள், மனுஷ்யர்கள் முதலான தேஹபேதத்திற்கு காரணமான அஞ்ஞானத்தினால் ஸ்வஸ்வரூபம் மறைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பேதத்திற்கு காரணமான அஞ்ஞான த்வம்சத்தினால் அஹங்கார நாசம் ஏற்படுகிறது. அஹங்காரம் அற்ற ஸுஷுப்தி நிலையில் நான், அவன், என்பது போன்ற எந்தவித பேதமும் இல்லை என்பது அனுபவ பூர்வமாக அறியப்படுகிறது. அதனால் அஹங்காரமூலமாக ஏற்படும் பேதங்கள் எல்லாமே அஹங்கார நாசத்தினால் நிவர்த்திக்கின்றது. அதன் பிறகு பாஹ்ய கர்ம ப்ரவ்ருத்தியினால் ரூபாதி பேதங்களும் இல்லை என்று தெரிவிக்கும் பொருட்டு, தேவ மனுஷ்யாதி பேதங்கள் இல்லை என்று உதாகரணமாக தெரிவிக்கின்றது. அதனால் ஆத்மா ஸ்வத: பேதம் என்றும் சொல்லமுடியாது. இந்த விதம், ஜாக்ரத், ஸ்வப்னம் என்ற இரண்டு அவஸ்த்தைகளில் அறியப்படும் பேதம், அந்த:கரணம் லயத்தை அடைந்த பிறகு ஏற்படும் ஸுஷுப்தி அவஸ்த்தையில் பேதங்கள் எதுவுமே இல்லை என்றே இந்த ச்லோகம் தாத்பர்யேண தெரிவிக்கின்றது. அதனால் அந்தந்த ஸந்தர்ப்பத்தை அனுசரித்து என்ன அர்த்தம் ஸம்பவிக்கமுடியுமோ, அதை அறிந்து அர்த்தம் செய்யவேண்டுமே அன்றி, எல்லா ச்லோகங்களுக்கும் ஒரேவிதமான அர்த்தம் செய்யமுடியாது. தேவன், மனுஷ்யன் முதலான தேஹபேதம் இல்லை என்று சொல்லப்படவில்லை. ஆத்மாவில் ஸ்வத:பேதம் இருப்பதாகச்சொல்வது சரியல்ல. ஆத்மாவில் எந்தவிதமான பேதமும் கிடையாது என்றே சொல்லவேண்டும். வேணு என்ற வாத்யத்தில், ஏகமாகவும், வ்யாபகமாகவும் இருக்கின்ற வாயுவிற்கு, அந்த வாத்யத்தில் உள்ள த்வாரங்களினால் எவ்விதம் பேதம் அறியப்படுகிறதோ, அதேபோல் உபாதி வசாத் ஆத்மாவில் பேதம் இருப்பதாகத்தோன்றுகிறது என்றும் ஸ்வத:பேதம் கிடையாது என்றே வேணுரந்த்ரம் என்ற ச்லோகம் தெரிவிக்கின்றது. ஆகவே இந்தவிதம் இந்த ச்லோகங்களில் அபேதமே பரமார்த்தம் என்பதால், ஔபாதிக பேதத்தினால், ஆத்மாவின் ஏகத்வத்திற்கு ஹானி ஏதுமில்லை. இதுவரை ஆத்மா ஏகம், வ்யாபகம் என்று தெரிவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த விஷயத்தை நிரூபணம் செய்வதற்காக, மத்தியில் பல ச்லோகங்கள் சொல்லப்பட்டது. இதேபோல் இந்தவிஷய விசாரமுடிவிலும் ஆத்மா ஏகம் வ்யாபி என்றே ஸித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் 'த்யஜ பேத மோஹம்' என்ற வாக்யம் பேதஸாமான்யத்தையே தெரிவிக்கின்றதால், பேத விசேஷத்தை தெரிவிப்பதாகச் சொல்லப்படுவது முற்றிலும் பொருந்தாது.

பரமார்த்தஸ்தவோதித: ஏகமேவமிதம் வித்தி ந பேதி ஸகலம் ஜகத் ॥
பரார்த்தஸாரபூதம் யத் தத் அத்வைதமசேஷத: ॥
நிதாகோபி உபதேசேன தேன அத்வைதபர: அபவத் ॥
ஸர்வபூதான்யபேதேன ததர்ச ஸ ததாத்மன:

परमार्थस्तवोदितः एकमेवमिदं विद्धि न भेदि सकलं जगत् ॥
परमार्थसारभूतं यत्तदद्वैतमशेषतः ॥
निदाघोप्युपदेशेन तेनाद्वैतपरोऽभवत् ।
सर्वभूतान्यभेदेन ददर्श स तदात्मनः ॥

என்று தெரிவிக்கின்றது. அதாவது உண்மை என்னவென்று இப்போது நான் உனக்கு உபதேசிக்கின்றேன். லோகத்தில் எந்த விதமான பேதமும் உண்மையில் கிடையாது. அத்வைதமே தத்வம் என்றும் அது ஒன்றே பரமார்த்தம் என்று அறிந்துகொள் என்று குருவினால் உபதேசிக்கப்பட்டவுடன், சிஷ்யன் நிதாகன் அத்வைதபரமாக ஆகிவிட்டான் என்றே தெரிவிக்கின்றது. ஆகவே 'அத்வைதமே தத்வம்' என்று ஸித்திக்கின்றதால், உன்னால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல என்றே சொல்லப்படுகிறது.

பூர்வ:- '*ஸர்வபூதான்யபேதேன ததர்ச ஸ ததாத்மன:*' (सर्वभूतान्यभेदेन ददर्श स तदात्मनः) என்ற வாக்யம், ஸர்வ ஆத்மாக்களையும் ஆத்மாகாரேண ஒரே ஆத்மா (ஏகம்) என்று அறிந்தான் என்றே சொல்லப்படுகிறது.

ஸித்தா:- 'ஸர்வபூதானி' என்ற பதம் பவந்தீதி பூதம் என்று, ப்ரஹ்மாதி ஸ்தம்ப பர்யந்தமுள்ள ஸர்வப்ராணிகளையும் (ஸர்வ ஜீவராசிகளையும்) குறிப்பிடுகின்றதே அன்றி சுத்த ஆத்ம ஸ்வரூபத்தை குறிப்பிடவில்லை. பூதசப்தம், ஆத்மாவை குறிக்காது. சுத்த ஆத்ம ஸ்வரூபம் 'அஜம், நித்யம், சாஸ்வதோயம்' என்று தெரிவிக்கின்றதால் பூத சப்தம் ஆத்மாவை குறிக்கமுடியாது. அதேபோல் '*யதோ வா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவந்தி*' என்ற வாக்யத்திலுள்ள பூத சப்தமும் ஸர்வப்ராணிகளையே தெரிவிக்கின்றது. அதனால் சுத்த ஆத்ம ஸ்வரூபத்தை குறிப்பிடவில்லை. ஸர்வபூதங்களும் மாயையினால், ஸச்சிதானந்த ரூபமான ப்ரஹ்மத்தினிடம் கல்பிதம். கல்பிதங்களுக்கு (ஆரோபிதங்களுக்கு) அதிஷ்ட்டானமே ஸ்வரூபம் என்பதால் அவைகளுக்கு தனித்த ஸ்வரூபம் எதுவுமில்லை. ஆகவே, ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான். அதனால் பரமாத்மாவிற்கு ஸமானமாக ஆகிறான் என்று சொல்வது சரியல்ல. ஸர்வமும் ஆத்ம ஸ்வரூபம் என்று அறிந்தான் என்றே அர்த்தம் சொல்லவேண்டும். ஸர்வபூதங்களும் ஆத்ம கார்யம் என்பதால் கார்யம் காரணத்தை அன்றி வேறாக இல்லாததால், அபேதம் என்றால் ஐக்யம் என்றே அர்த்தம் சொல்லவேண்டுமே அன்றி பரமாத்ம ஸமானமாக ஆகிறான் என்று அர்த்தம் சொல்வது சரியல்ல. அதனால் ஸமானம் என்பதற்கு ஸாத்ருச்யம் என்ற அர்த்தம் சொல்லமுடியாது.

பூர்வ:- ஸர்வம் ப்ரஹ்மத்தில் கல்பிதம் என்பதால் ஆத்மாவில் கல்பிதம் என்று எவ்விதம் சொல்ல முடியும்?

ஸித்தா:- ஆத்மாவே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே ஆத்மா என்றே சொல்லப்படுகிறது.

பூர்வ:- 'அபேதேன ததர்ச' என்ற வாக்யத்தில் உள்ள 'அபேதம்' என்ற பதத்திற்கு தாதாத்ம்யம் என்றே அர்த்தம் செய்யலாம். அதனால் ப்ரஹ்மத்திற்கும் ஆத்மாவிற்கும் இருக்கின்ற தாதாத்ம்யத்தை அறிந்து கொண்டான் என்று அர்த்தம் செய்யலாமே?

ஸித்தா:- இது சரியல்ல. இந்த ச்லோகத்தில் அபேதேன என்ற பதமே சொல்லப் பட்டிருக்கின்றது. அதனால் பேத அபாவம் என்றோ, அல்லது ஐக்யம் என்றோ அர்த்தம் செய்யவேண்டும். தாதாத்ம்யம் என்ற அர்த்தம் சொல்லமுடியாது. ஏனெனில் தாதாத்ம்யம் என்பது பேதஸஹிஷ்ணுஅபேதம் என்பதால் கேவல அபேதம் இல்லை. அதுமட்டுமல்ல, உன் ஸித்தாந்தத்தில், ஆத்மா ப்ரஹ்மம் என்ற இரண்டும் பின்னத்ரவ்யம் (வெவ்வேறு) என்றே சொல்லப்படுவதால், தாதாத்ம்யமே ஸம்பவிக்கமுடியாது. ஏனெனில், சித், அசித், ஈச்வரன் என்ற மூன்றும், பரஸ்பரம் பின்னத்ரவ்யம் என்று சொல்லப்படுவதால் ஒருத்ரவ்யம், மற்றொரு த்ரவ்யத்துடன் தாதாத்ம்யத்தை அடையமுடியாது. '*மித்யைதத் அன்யத்ரவ்யம் ஹி நைதி தத் த்ரவ்யதாம் யத:*' என்று நிரூபணம் செய்யப்பட்டிருக்கின்றது. அவ்விதம் பின்னத்ரவ்யமான இரண்டிற்கு தாதாத்ம்யம் இருப்பதாக அறியப்படுமானால் அது ப்ராந்தி ஞானம் என்றே தெரிவிக்கின்றது. ம்ருத் என்ற த்ரவ்யமே, கடம் ஆகின்றது. அதனால் ம்ருத், கடம், என்ற இரண்டிற்கும் தாதாத்ம்யம் ஸம்பவிக்கலாம். ஆனால் கடம் என்ற த்ரவ்யத்திற்கும், படம் என்ற த்ரவ்யத்திற்கும் தாதாத்ம்யம் ஏற்படமுடியாது.

பூர்வ:- இரண்டும் அன்யத்ரவ்யமாக இருந்தால்தான் தாதாத்ம்யம் ஸம்பவிக்கமுடியாது. ஆனால் ஆத்மா, ஈச்வரன் என்ற இரண்டுமே 'சித்' த்ரவ்யம் என்பதால் தாதாத்ம்யம் ஸம்பவிக்கலாமே?

ஸித்தா:- இவ்விதம் தாதாத்ம்யம் சொல்லப்படுமானால் உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படும். ஏனெனில், சித், அசித், ஈச்வரன் என்ற மூன்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட த்ரவ்யங்கள் என்று சொல்லப்படுகிறது. அதனால், ஈச்வரன் சித்தா? அல்லது அசித்தா? சித் என்றால் ஜீவன் என்றும், அசித் என்றால் ஜடம் என்றும் சொல்லவேண்டும். சித், அசித் என்ற இரண்டைக்காட்டிலும் வேறானவர் ஈச்வரன் என்று சொல்லப்படுவதால், ஈச்வரன், சித்தா அசித்தா என்று கேட்க்கப்படுமானால், உன்னால் என்ன பதில் சொல்லமுடியும்? அதுமட்டுமல்ல, சித், அசித் என்ற இரண்டிற்கும் வேறுபட்டவர் ஈச்வரன் என்று உன்னால் சொல்லப்படுவதால், இப்போது இரண்டும் சித் த்ரவ்யம் தானே, தாதாத்ம்யம் ஸம்பவிக்கலாமே என்று எவ்விதம் சொல்லமுடியும்? இவ்விதம் சொல்லப்படுமானால் உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படும். அதுமட்டுமல்ல, ஜீவனும் ஈச்வரனும் சித் த்ரவ்யம் என்றே ஸித்திக்கின்றதால், இரண்டிற்கும் அபேதமே ஸம்பவிக்கின்றது. அபேதம் என்பதே முக்யார்த்தம். முக்யார்த்தமே ஸம்பவிக்கின்றபோது அதைவிட்டுவிட்டு தாதாத்ம்யம் என்று அர்த்தம் செய்வது பொருந்தாது. ஜீவன், ஈச்வரன் இரண்டுமே சித்ரூபம் என்பதால் ஐக்யமே சொல்லவேண்டும். இதில் எந்தவித ஆக்ஷேபத்திற்கும் இடமே இல்லை. ஆகையால் ஜீவேச்வர அபேதமே ஸித்திக்கின்றது.

பூர்வ:- ஜீவனும், ப்ரஹ்மமும் பின்ன த்ரவ்யமாக இருந்தபோதிலும் கார்யகாரணபாவேன தாதாத்ம்யம் சொல்லலாமே?

ஸித்தா:- இது சரியல்ல. ஜீவன் அஜன், நித்யன் என்று உன்னாலேயே சொல்லப்படுகிறது. ஜீவன், அஜன் என்பதால், பரமாத்மாவின் கார்யம் என்று சொல்லமுடியாது. அதுமட்டுமல்ல, ஜீவனும் ப்ரஹ்மமும் பின்னத்ரவ்யம் என்றால், பரிணாமவாதியான உன் மதத்தில் கார்யகாரணபாவமே சொல்லமுடியாது. ஏனெனில் காரணத்ரவ்யமே கார்யத்ரவ்யமாக பரிணாமத்தை அடைவதாக சொல்லப்படுகிறது. ம்ருத், கடம் என்ற இரண்டும் வெவ்வேறு த்ரவ்யமல்ல. ம்ருத் என்ற த்ரவ்யமே கடரூபமாக பரிணமிக்கின்றது (அறியப்படுகிறது). ஆகவே, ஜீவன் ஈச்வரன் இரண்டும் பின்னத்ரவ்யம் என்றால் கார்யகாரணபாவமே ஸம்பவிக்க முடியாது. அதனால் தாதாத்ம்யம் என்பது ஸம்பவிக்கமுடியாது.

பூர்வ:- ஆகாசம், வாயு, என்பதெல்லாம் பின்னத்ரவ்யமாக இருந்தாலும் இரண்டிற்கும் கார்யகாரணபாவம் இருக்கின்றதே?

ஸித்தா:- ஆகாசம், வாயு, முதலானவைகள் அசித் த்ரவ்யம் என்பதால், அசித் த்ரவ்யங்கள் எல்லாம் ஒன்றே என்பதால், கார்யகாரணபாவம் ஸம்பவிக்கலாம். ஆனால் ஈச்வரன் என்ற த்ரவ்யத்தை, சித் என்றோ, அசித் என்றோ சொல்லமுடியாது என்றும், சித் அசித் என்ற இரண்டிற்கும் வேறுபட்டது என்றும் உன்னால் சொல்லப்படுவதால் கார்யகாரணபாவம் சொல்லமுடியாது. ஆகாசம் வாயு என்ற இரண்டும் அசித்த்ரவ்யம் என்று சொல்லப்படுவதில் உனக்கும் ஆக்ஷேபம் இல்லை. பின்னத்ரவ்யம் என்றால் பரிணாம வாதத்தில் கார்யகாரணபாவம் ஸம்பவிக்கமுடியாது. அதனால் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் தாதாத்ம்யம் சொல்வது சரியல்ல. நையாயிகர்கள் கொள்கையில் பதார்த்தங்கள் ஏழு என்றும், அதில் த்ரவ்யம் ஒன்பது என்று சொல்லப்படுகிறது. அதில் 'ஆகாசாத் வாயு:' என்று காரண கார்யபாவம் சொல்லப்படுவதை அவர்கள் ஒத்துக்கொள்வதில்லை. ஆகாசம், காலம், திக், மனஸ், ஆத்மா, என்ற இந்த ஐந்தும் நித்யம் என்று தெரிவிக்கின்றார்கள். ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, முதலான நான்கில் த்வ்யணுகாதிகள் அநித்யம் என்றும், பரமாணு நித்யம் என்று சொல்கிறார்கள். ஆகவே த்ரவ்யம் ஒன்பதும் அஜம், நித்யம் என்றும் சொல்கிறார்கள். அதனால் ஆகாசாத் வாயு: என்று காரணகார்யமாகச்சொல்லப்படுவதை அவர்கள் ஒத்துக்கொள்வதில்லை. ஆகவே சித் அசித் ஈச்வரன் என்ற மூன்றும் பின்ன த்ரவ்யம் என்றால் சித் என்ற ஜீவனுக்கும், ஈச்வரனுக்கும் தாதாத்ம்யம் என்றோ, சித் அசித் என்ற இரண்டிற்குமோ அல்லது அசித் ஈச்வரன் என்பதற்கோ எதனுடனும் அன்யோன்ய தாதாத்ம்யம் என்பதே ஸம்பவிக்கமுடியாது.

பூர்வ:- பின்னத்ரவ்யங்களுக்கு தாதாத்ம்யம் ஸம்பவிக்காது என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் மனுஷ்யோஹம் என்று தெரிவிக்கின்றபோது சித், அசித் இரண்டிற்கும் தாதாத்ம்யம் ஏற்படுகிறது என்று ப்ரத்யக்ஷமாக அறியப்படுகிறதே?

ஸித்தா:- தாதாத்ம்யம் ஸம்பவிக்கமுடியாத இடத்தில் தாதாம்யம் தோன்றுவதால்தான், அதை ப்ராந்தி ஞானம் என்று சொல்லப்படுகிறது. அனாத்மாவில் ஆத்மா என்ற ஞானம் ஏற்படுவதால்

அதுவே ப்ராந்தி ஞானம். சார்வாகனைத்தவிர மற்ற மதஸ்த்தர்கள் எல்லோருமே அனாத்மாவான தேஹத்தில் ஆத்மா என்று ஏற்படும் ஞானம் ப்ராந்தி என்றே ஒப்புக்கொள்கிறார்கள்.

பூர்வ:- இவ்விதம் சொல்லப்படுமானால் ஜீவனுக்கு 'ப்ரஹ்மாஸ்மி' என்று ஏற்படும் தாதாத்ம்ய ஞானமும் ப்ராந்தி என்றே சொல்லநேரிடும். ஏனெனில் ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் பேதம் இருக்கின்றபோது இரண்டும் ஒன்றே என்று தாதாத்ம்யம் ஏற்படுமானால், அது ப்ராந்தி ஞானம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற ஞானமே மோக்ஷ ஹேது. ப்ராந்திஞானமாக இருக்குமானால் அது மோக்ஷ ஹேதுவாக ஆகாது. ஸம்யக் ஞானம்தான் மோக்ஷஹேது. மஹரிஷி ரிபு முனிவரால் உபதேசிக்கப்பட்ட தத்வஞானத்தினால்தான் நிதாகன் என்பவன் முக்தனானான் என்று சாஸ்திரமே தெரிவிக்கின்றது. இவ்விதம் ரிபு முனிவரால் உபதேசிக்கப்பட்ட நிதாகன் 'அஹமேவ ஸர்வம் என்று அறிந்தான்' என்றே சொல்லப்படுவதால், அதுவே ஜீவப்ரஹ்ம ஐக்யஞானம், அதுவே பரமார்த்தம், அதுவே தத்வஞானம். ஆகவே ப்ராந்தி ஞானம் அல்ல. ஜீவனுக்கும், ஈச்வரனுக்கும் எந்த விதமான விசேஷணமும் சொல்லமுடியாது. கேவல சித்ரூபம் என்பதால் இரண்டும் ஏகத்ரவ்யம் என்றே ஸித்திக்கின்றது. ஆகவே இது வரை உபாதி தாதாத்ம்யத்தினால் பேதவ்யவஹாரம் இருந்தது. தத்வோபதேசத்தினால் உபாதி நாசம் ஏற்படுவதால் பேதம் என்பதும் பரமார்த்தமாக இல்லை என்று அறிகின்றான். ஆகையால் அவித்யையினால் ஏற்பட்ட பேதம், வித்யையினால் நாசத்தை அடைவதால், அதன் பிறகு யாராலும் எந்த விதமான பேதமும் உண்டாக்கமுடியாது. இந்த கருத்தையே ''*விபேதஜனகே அஞ்ஞானே நாசம் ஆத்யந்திகம் கதே, ஆத்மனோ ப்ரஹ்மணோ பேதம் அஸந்தம் க: கரிஷ்யதி*'' என்ற ச்லோகமும் தெரிவிக்கின்றது.

பூர்வ:- இந்த ப்ரகரணம், ஜீவபரமாத்ம ஐக்யத்தையோ, அல்லது ஜீவர்களுக்குள் பரஸ்பர ஐக்யத்தையோ தெரிவிப்பதற்காக ஏற்படவில்லை. பரமாத்ம ஸ்வரூபமும், கார்யகரண ஸங்காதமான சிரஸ் பாணி பாதங்களையுடைய தேஹம் என்ற பிண்டமும் வேறுபட்டது என்று தெரிவிப்பதற்காகவே ஏற்பட்டது. அதனால் ஜீவபரமாத்ம ஐக்யத்தை போதிப்பதற்காக ஏற்பட்டதல்ல. ஆகவே இந்த ப்ரகரணத்தின் உபக்ரமத்தில் தேஹத்தைக்காட்டிலும் வேறானவன் ஆத்மா என்று தெரிவிக்கின்றதே அன்றி ஜீவபரமாத்ம ஐக்யத்தையோ, ஜீவர்களுக்குள் பரஸ்பர ஐக்யத்தையோ தெரிவிக்கவில்லை.

ஸித்தா:- ஜீவபரமாத்ம ஐக்யமே இந்த ப்ரகரணத்தில் போதிக்கப்படுகிறது. தேஹத்தைக்காட்டிலும் வேறானவன் ஆத்மா என்றும், ஸர்வசரீரங்களிலும் இருக்கின்ற ஆத்மா ஒன்றே என்றும், உபாதி பேதத்தினால் ஆத்மபேதம் இருப்பதாக அறியப்படுகிறதே அன்றி உண்மையில் ஆத்ம பேதம் இல்லை என்றே தெரிவிக்கின்றது. சரீரம் என்ற பிண்ட ஸம்பந்தம் உள்ள பர்யந்தமே ஆத்ம பேதம் அறியப்படுகிறது. அதனால் பிண்டத்திலிருந்து வேறுபடுத்தி ஆத்மா ஏகம் என்றே தெரிவிக்கின்றது. இந்த கருத்தையே, 'யத்யன்யோஸ்தி', என்றும் 'யதா ஸமஸ்ததேஹேஷு' என்றும் தெரிவிக்கின்ற இரண்டு ச்லோகங்களிலும்

நிரூபிக்கப்படுகிறது. அதாவது பேதம் பரமார்த்தமாக இருக்குமானால், பேதம் உள்ள வஸ்துவும் பரமார்த்தம் என்றே சொல்லநேரிடும். அவ்விதம் சொல்லமுடியாது. அதனால் பேதமே பரமார்த்தமில்லை என்றால் அபேதமே பரமார்த்தம் என்றே ஸித்திக்கின்றது. இரண்டும் பரமார்த்தம் என்று சொல்லமுடியாது என்ற விஷயத்தையே ஹே! ராஜன்! இந்த ப்ரபஞ்சத்தில் உள்ள எந்த வஸ்துவும் பரமார்த்தமில்லை, அபரமார்த்தம் என்றே ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

பூர்வ:- ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் சொல்லப்படவில்லை என்பது மட்டுமல்ல, ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் இருக்கின்றதென்றே சொல்லப்படுகிறது. அதாவது, '*பரமாத்ம ஆத்மனோர் யோக: பரமார்த்த இதீஷ்யதே. மித்யைதத் அன்யத்ரவ்யம் ஹி நைதி தத்த்ரவ்யதாம் யத:*' என்று யோக: என்ற பதப்ரயோகமே செய்யப்பட்டிருக்கின்றது. परमात्मात्मनोर्योगः परमार्थ इतीष्यते। मित्यैतदन्यद् द्रव्यं हि नैति तद् द्रव्यतां यतः என்றே தெரிவிக்கின்றது. இந்த வாக்யத்தில் உள்ள யோக: என்ற பதப்ரயோகம், 'அபேதம்' என்ற அர்த்தத்தையே தெரிவிக்கின்றதால் ஆத்ம பரமாத்ம அபேதம் பரமார்த்தம் என்று சிலர் அர்த்தம் செய்கின்றார்கள். இது சரியல்ல. ஏனெனில் ஒன்றுக்கொன்று வேறுபட்ட த்ரவ்யங்கள் இரண்டும் எவ்விதம் ஒன்றாக இருக்கமுடியும்? அதனால் கடம், படம் போல் ஒன்றுக்கொன்று வேறுபட்ட த்ரவ்யமான ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் அபேதம் சொல்வது சரியல்ல. அவ்விதம் அபேதம் சொல்லப்படுவது மித்யை என்றே சொல்ல வேண்டும் என்று ச்லோகார்த்தம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- 'பூர்வபக்ஷிகளின் மதமானது:– யோக:' என்ற பதத்திற்கு அபேதம் என்று அர்த்தம் சொல்லமுடியாது. அதனால் இந்த ச்லோகத்தில் உள்ள 'யோக:' என்ற பதம் 'தாதாத்ம்யம்' என்ற அர்த்ததையே தெரிவிக்கின்றது. (யோக: என்றால் ஸம்பந்தம்). அதனால், ஜீவபரமாத்ம பேதமே தத்வம் என்று தெரிவிக்கின்ற த்வைதிகள், ஜீவனும் பரமாத்மாவும் ஒன்று என்று உபாஸனை செய்தால் ஜீவப்ரஹ்ம தாதாத்ம்யத்தினால் ஜீவனுக்கு ப்ரஹ்மபாவம் ஏற்படுகிறது என்றும் அதனால் ஜீவபரமார்த்த அபேதம் பரமார்த்தமல்ல என்றும், இந்த தாதாத்ம்யமே பரமார்த்தம் என்கிறார்கள்.

இது சரியல்ல என்று தெரிவிப்பதற்காகவே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. அதாவது, பசுவும், குதிரையும் எவ்விதம் அத்யந்த பின்னமோ, அதுபோல் ஜீவனும் ப்ரஹ்மமும் அத்யந்தம் பின்னம் என்றாலும் தாதாத்ம்யம் ஏற்படலாம் என்று சொல்லப்படுமானால் அது சரியல்ல.

ஜீவனென்றும், பரமாத்மா என்றும், அந்த:கரணம் என்ற உபாதியில் சைதன்யப்ரதிபலனம் ஏற்படுவதைக்கொண்டு ஜீவனை ப்ரதிபிம்பம் என்றும் பரமாத்மாவை பிம்பமென்றும், பேதவ்யவஹாரம் இருந்த போதிலும், அந்த:கரணம் என்ற உபாதியை விலக்கி ஜீவபரமாத்ம அபேதமே தத்வம் என்று அறியவேண்டும் என்று ஸ்ரீதரஸ்வாமிகள் வ்யாக்யானத்தில் தெரிவிக்கின்றார். ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் பேதம் இருந்தாலும் தாதாத்ம்யம் ஸம்பவிக்காது. அபேதம் என்றாலும் தாதாத்ம்யம் சொல்லமுடியாது. தாதாத்ம்யம் என்பதே

அஸம்பாவிதம் என்பதால், ஜீவ பரமாத்மாவிற்கு அபேதமே பரமார்த்தம் என்று இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது என்றே ஸ்ரீதரஸ்வாமிகள் வ்யாக்யானத்தில் தெரிவிக்கின்றார். ஆகவே, சித்ரூபமான ஜீவன், சித்ரூபமான பரமாத்மா என்று இரண்டும் சித்ரூபம் என்பதால் ஏகத்ரவ்யம் என்றே ஸித்திக்கின்றது. அதனால் அபேதமே பரமார்த்தம் என்று முன்பே விசாரிக்கப்பட்டிருக்கின்றதால் மேலும் இது பற்றி அதிகம் விசாரிக்க தேவை இல்லை.

அஞ்ஞானம் என்பது பேதஜனகம். அதனால் பேதத்திற்கு காரணமான அஞ்ஞானம் ஆத்யந்திக நாசம் அடையுமானால், ஆத்மாவிற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் யாரால் உண்டுபண்ணமுடியும் என்று முன்பே 'விபேதஜனகே' என்ற ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த அர்த்தம் சரியல்ல என்று ராமானுஜர் வேறு அர்த்தம் கல்பிக்கின்றார். அதாவது, ஒரே ஆத்மா, வேறு ஜன்மாக்களை எடுக்கின்றபோது, தேவன் என்றும், மனுஷ்யன் என்றும் திர்யக் என்றும் பல விதமான சரீரங்களில், எந்த ஒரு சரீரத்தை எடுத்தாலும் அந்த சரீர பேதத்தையே தன்னுடைய ஆத்மபேதம் என்று நினைக்கின்றார்கள். இவ்விதம் ஆத்மபேதம் இருப்பதாக அஞ்ஞானத்தினால் ஏற்படுகிறது. இந்த அஞ்ஞானம் நிவர்த்திக்குமானால் இந்த ஜன்மாவிலுள்ள ஆத்மாவின் பேதம் மறுபடியும் எவ்விதம் வரமுடியும் என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது என்று சொல்கிறார்.

ஆத்மா ஸ்வத: ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறாகவே இருக்கின்றது, ஆனாலும் ஒருவனே பலவித ஜன்மாக்களில் ஏற்படும் சரீரபேதத்தினால் ஆத்மபேதம் இருப்பதாக அஞ்ஞானத்தினால் நினைக்கின்றான் என்று சொல்வதே உங்களுக்கு இஷ்டம் என்றிருக்குமானால் ச்லோகத்தில் ஆத்மன: பேதம் என்று சொன்னால் போறுமே? ஆத்மன: ப்ரஹ்மண: பேதம் என்று ப்ரஹ்மபதம் சேர்த்து சொல்லப்படுவதன் காரணம் என்ன? ஆத்மாவிற்கும் ப்ரஹ்மத்திற்கும் யாரால் எவ்விதம் பேதம் சொல்லமுடியும் என்றல்லவா சொல்லப்படுகிறது? இவ்விதம் தெரிவிக்கின்ற அர்த்தத்தைவிட்டு, ஆத்மாவிற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் இருக்கின்றதென்றும், ஆத்மாவிலும் பரஸ்பரபேதம் இருப்பதாகவும் தெரிவிக்கின்ற உன் பக்ஷத்தில், தேவ மனுஷ்யாதி பேதங்கள் மட்டும் விலக்கப்படுவதாகச் சொல்லப்படுமானால், ப்ரஹ்மண: என்ற பதமே தேவை இல்லை என்றாகும். ஆத்மாவிற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதமே கிடையாது '*ஆத்மனோ ப்ரஹ்மண: பேதமஸந்தம்*' என்று ப்ரதியோகி, அனுயோகி இரண்டும் சொல்லப்படுகிறது. ஆத்மபேதம் ப்ரஹ்மத்திற்கு இல்லை என்று தெரிவிக்கின்றபோது, ஆத்மா ப்ரதியோகி, ப்ரஹ்மம் அனுயோகி. அதேபோல் ப்ரஹ்மபேதம் ஆத்மாவிற்கு இல்லை என்று தெரிவிக்கின்றபோது, ப்ரஹ்மம் ப்ரதியோகி, ஆத்மா அனுயோகி என்று சொல்லவேண்டும். அதனால் ஆத்மா, ப்ரஹ்மம் என்று இரண்டு பதங்கள் குறிப்பிட்டுச்சொல்லப்படுவதால், தேவ, மனுஷ்யாதி விஷய பேதம்தான் ஆத்மாவிற்கு இல்லை என்று தெரிவிப்பதாக அர்த்தம் சொல்வது சரியல்ல. இருக்கின்ற பதங்களின் அர்த்தத்தைவிட்டு, இல்லாத பதங்களைச்சேர்த்து அர்த்தம் செய்யப்படும் இவ்வித கல்பனைகளுக்கு இடமே இல்லை.

108

जीवब्रह्मभेदपरत्वेन रामानुजाभिमतानां श्रुतीनामर्थविचारः

ஜீவப்ரஹ்மபேதபரத்வேன ராமானுஜ அபிமதானாம்
ச்ருதீனாம் அர்த்தவிசார:

ஸர்வ உபநிஷத்துக்களுக்கும் ஜீவ பரமாத்ம அபேதத்தில்தான் தாத்பர்யம் என்று சொல்வது சரியல்ல. ஜீவப்ரஹ்ம அபேதம் அப்ரமாணம். ஏனெனில் சில ச்ருதிவாக்யங்களும், ஸ்ம்ருதி வாக்யங்களும், ஸூத்ரமும், இந்தகருத்துக்கு விரோதமாக இருக்கின்றதால், 'அபேதம்' என்று சொல்வது சரியல்ல என்று ராமானுஜர் தெரிவிக்கின்றார். இவ்விதம் சொல்லப்படும் அவர் அபிப்ராயம் சரியா இல்லையா என்று விசாரித்து நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஸித்தா:- '*த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா*', '*ரிதம் பிபந்தௌ*' (द्वा सुपर्णा सयुजा सखाया, ऋतं पिबन्तौ) முதலான உபநிஷத் மந்த்ரங்கள் எல்லாம், வ்யாவஹாரிக பேதத்தை அனுவாதம் செய்கிறதே அன்றி, பாரமார்த்திகமான ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை அப்ரமாணம் என்று தெரிவிப்பதற்காக ப்ரவர்த்திக்கின்றது என்று அர்த்தம் சொல்வது மிகவும் அபத்தம். உபநிஷத்மந்த்ரங்கள் எல்லாம், ப்ரத்யகாத்மாவே ப்ரஹ்மம் என்று ஐக்யத்தை போதிக்கவில்லை என்று யாராலும் நிரூபணம் செய்யமுடியாது. '*விபேதஜனகே அஞ்ஞானே, நாசமாத்யந்திகம் கதே, ஆத்மனோ ப்ரஹ்மணோ பேதமஸந்தம் க: கரிஷ்யதி*' (विभेदजनकेऽज्ञाने नाशमात्यन्तिकं गते। आत्मनो ब्रह्मणो भेदमसन्तं कः करिष्यति) என்ற ச்லோகம் 'அத்வைதம் பரமார்த்தம், அதுவே ஸத்யம்' என்று தெரிவிக்கின்றது. அது மட்டுமல்ல, அவித்யைக்கு அத்யந்த நாசம் ஏற்படுமானால், ஈச்வரன் என்றோ ஜீவனென்றோ எந்தவித பேதமும் அற்ற நிலை அத்வைத நிலை என்பதால் ஆத்மாவிற்கும், ப்ரஹ்மத்திற்கும் பேதம் எவ்விதம் ஏற்படமுடியும் என்று இந்தச்லோகம் தெரிவிக்கின்றது. '*அவித்யா அஸ்தமயோ மோக்ஷ:*' என்று தெரிவிப்பதால் அதுவே பாரமார்த்திக நிலை. ஸுஷுப்தி அவஸ்தையில் அஞ்ஞானம் காரணாத்மனா இருக்கின்றபோதே ஜீவேச்வரபேதமோ அல்லது வேறு எந்த விதமான பேதமும் அறியப்படவில்லை. இவ்விதம் அஞ்ஞானத்திற்கு அத்யந்த நாசம் இல்லாத போதே பேதம் இல்லை என்றால் அஞ்ஞானத்திற்கு அத்யந்தநாசம் ஏற்பட்டபிறகு எவ்விதம் பேதம் இருக்கமுடியும் என்றே இந்த ச்லோகத்தில் மிகத்தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றது.

மேலும், '*த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே, தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்யனச்னன்னன்யோ அபிசாகசீதி*' (द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते। तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्यो अभिचाकशीति॥) என்ற முண்டகோபநிஷத் மந்த்ரத்திற்கு ஜீவன் கர்மபலனை அனுபவிக்கின்றான் என்றும் ஈச்வரன் ஸாக்ஷிமாத்ரமாக இருக்கின்றான் என்றே (ஸாதாரணமாக) அர்த்தம் சொல்லப்படுகிறது.

ஆனால் இந்த மந்த்ரத்திற்கு வேறு ஒரு முறையிலும் அர்த்தம் செய்யலாம். அதாவது ப்ரமாதா கர்மபலத்தை அனுபவிக்கின்றான். ப்ரத்யகாத்மாவிற்கு கர்மபல அனுபவம் இல்லை, ஜாக்ரத் அவஸ்த்தையில் ஈடுபட்டிருப்பவனான ப்ரமாதாவிற்கே கர்மபலபோக்த்ருத்வம் இருக்கின்றது. ஸுஷுப்தி அவஸ்த்தையில் ப்ரமாத்ருத்வம் கிடையாது. பிம்பஸ்தானீயமான கூடஸ்த்த சைதன்யத்திற்கு, ப்ரதிபிம்பத்தில் உள்ள தர்மங்களிலோ, அதன் பலன்களிலோ ஸம்பந்தம் கிடையாது. ஸம்பந்தம் இருப்பதுபோல் தோன்றினாலும் உண்மையில் ஸம்பந்தமே கிடையாது. ஆகையால் ப்ரமாத்ருத்வம் இல்லாததால் கர்மபல ஸம்பந்தம் கூடஸ்த்தனுக்கு ஏற்படமுடியாது (கிடையாது). எந்த அவஸ்த்தையிலும் கூடஸ்த்தனுக்கு கர்மபல ஸம்பந்தம் கிடையாது என்றாலும், ஜாக்ரத், ஸ்வப்னங்களில் ஸம்பந்தமில்லை என்பதை ஸ்பஷ்ட்டமாக அறிந்து கொள்ளமுடியாது என்பதால் ஸுஷுப்தி நிலையில் உள்ள அனுபவத்தைக்கொண்டு இந்த விஷயம் விளக்கப்பட்டது. ஆகவே, 'த்வாஸுபர்ணா..' என்ற மந்த்ரம் ஜீவனுடைய ப்ரமாத்ருத்வதுடன் கூடிய ஸோபாதிக ஸ்வரூபத்தையும் நிருபாதிகமான ப்ரத்யகாத்மஸ்வரூபம் பற்றியும் தெரிவிக்கின்றதே அன்றி ஜீவ பரமாத்மபேதத்தைப்பற்றி அந்த வாக்யம் தெரிவிக்கவில்லை. சைதன்யத்துடன் கூடிய அந்த:கரணம், ப்ரமாதா என்று அந்த:கரண உபாதியுடன் கூடிய ஜீவனின் அவஸ்த்தை பற்றியும், உபாதி அற்ற ஸ்வரூபமான ப்ரத்யகாத்மாவைப்பற்றியும் இந்த மந்த்ரம் தெரிவிக்கின்றது. அந்த:கரண அவச்சின்ன சைதன்யத்தை ஸகுணம் என்றும் கர்த்தா, போக்தா, ப்ரமாதா என்றும் சொல்லப்படுகிறது. அதற்கு ஸாக்ஷியான உபாதிரஹித சைதன்யம், நிர்குணம், அகர்த்தா, அபோக்தா என்று ப்ரத்யகாத்மவையே தெரிவிக்கின்றது.

பைங்கிரஹஸ்ய ப்ராஹ்மணத்தில் '*தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி* என்பது ஸாபாஸ அந்தக்கரணத்தை அதாவது ஸத்வத்தை தெரிவிக்கின்றது என்றும், '*அனச்னன் அன்யோ அபிசாகசீதி*' என்பது ப்ரத்யகாத்மாவான நிருபாதிக சைதன்யத்தை தெரிவிக்கின்றது என்றும் வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தவிதம் கர்மபலம் ஜடத்தை சேர்ந்ததே அன்றி சைதன்யத்தை சேர்ந்தது அல்ல என்றே தெரிவிக்கின்றது. இவ்விதம் ப்ரதிபிம்பமான சிதாபாஸனுக்கே கர்மபல போக்த்ருத்வம் முதலானவை கிடையாது என்றால் பிம்பஸ்தானீயமான ப்ரத்யகாத்மாவிற்கு போக்த்ருத்வம் எப்படி ஏற்படமுடியும்?

பூர்வ:- கர்த்ருத்வம், போக்த்ருத்வம் என்பதெல்லாம் சைதன்யத்தை சேர்ந்தது அல்ல என்றால், அந்த:கரணம் என்ற புத்தியைச் சேர்ந்தது என்று எவ்விதம் சொல்லமுடியும்? புத்தி என்பது கரணம், அதனால் கர்த்தாவிற்குத்தான் போக்த்ருத்வம் சொல்லவேண்டுமே அன்றி கரணத்திற்கு போக்த்ருத்வம் ஸம்பவிக்கமுடியாது.

ஸித்தா:- அந்த:கரண அவச்சின்னமான சைதன்யத்தில்தான்– (ஸாபாஸ அந்த:கரணத்தில்தான்) அஹம் அஹம் என்று ஸ்புரிக்கின்றது. அவன் தான் கர்த்தா. அந்த:கரணம் என்ற உபாதியுடன் கூடினவனான அஹங்காராத்மகமான சைதன்யத்தையே கர்த்தா என்றும், ப்ரமாதா என்றும் சொல்லப்படுவதால் அந்த நிலையில் கரணம் என்று சொல்வதில்லை. கரணமான புத்தி என்ற உபாதிகனான ஜீவனையே கர்த்தா என்று சொல்லப்படுகிறது. அவனுக்கு இந்த்ரியங்களின் ஸம்பந்தம் ஏற்படுகின்றபோது அந்த இந்த்ரியங்களை கரணம் என்று சொல்லப்படுகிறது.

இவ்விதம் இந்த்ரியங்களின் மூலமாக விஷயங்கள் அறியப்படுகிறதால், அந்த இந்த்ரியங்கள் ப்ரமாணம் என்றும், ப்ரமாண ஸம்பந்தம் விஷயத்திற்கு ஏற்படுகிறபோது அறியப்படும் விஷயங்கள் ப்ரமேயம் என்றும் சொல்லப்படுகிறது.

பூர்வ:- '*அனச்னன்னன்யோபிசாகசீதி*' என்ற மந்த்ரம் க்ஷேத்ரஞ்ஞனை தெரிவிக்கின்றது என்று உங்களாலேயே சொல்லப்படுவதால், க்ஷேத்ரஞ்ஞன்தானே பரமாத்மா. அதனால் பரமாத்மாவை தெரிவிக்கவில்லை என்று எவ்விதம் சொல்வது?

ஸித்தா:- க்ஷேத்ரஞ்ஞனே பரமாத்மா என்று சொல்வது இஷ்ட்டம்தான். ஆனால் அந்த:கரண அவச்சின்னனாக இருக்கின்றதால் க்ஷேத்ரஞ்ஞன் என்ற பெயர் சொல்லப்படுகிறதே அன்றி பரமாத்மாவிற்கு வேறுபட்டவன் க்ஷேத்ரஞ்ஞன் என்று சொல்லப்படவில்லை. அபின்னன் என்றே சொல்லப்படுகிறது. க்ஷேத்ரஞ்ஞம் சாபி மாம் வித்தி என்ற கீதா வசனம், க்ஷேத்ரஞ்ஞன் என்றே என்னை அறியவேண்டும் என்று தெரிவிக்கின்றது.

பூர்வ:- பரிச்சின்னமான அந்த:கரண உபஹித சைதன்யம் ஜீவன் என்று சொல்லப்படுவதால், உபஹிதமான சைதன்யமும் பரிச்சின்னம் என்றே சொல்லவேண்டும். அதனால், அபரிச்சின்னமான பரமாத்மா, பரிச்சின்னமான க்ஷேத்ரஞ்ஞன் என்று எவ்விதம் சொல்ல முடியும்?

ஸித்தா:- க்ஷேத்ரஞ்ஞனுக்கு உபாதி வசாத் பரிச்சின்னத்வம் என்று உன்னாலேயே சொல்லப் படுகிறது. அதனால் ஸ்வயமாக க்ஷேத்ரஞ்ஞனுக்கு பரிச்சின்னத்வம் கிடையாது என்று ஸ்பஷ்ட்டமாகவே அறியப்படுகிறது. அதனால் அஞ்ஞானத்தினால்தான் ஜீவேச்வரபேதம் அறியப்படுவதால் அஞ்ஞானத்திற்கு ஆத்யந்திக நாசம் ஏற்படுகின்றபோது பேதமே கிடையாது என்று '*விபேதஜனகே அஞ்ஞானே நாசமாத்யந்திகம் கதே*' என்ற ச்லோகம் தெரிவிக்கின்றது.

பூர்வ:- விஷ்ணு புராணத்தில் '*ஸ ஸர்வபூதப்ரக்ருதிம் விகாரான் குணாதி தோஷாம்ச்ச முனே வ்யதீத:, அதீத ஸர்வாவரணோகிலாத்மா தேனாஸ்த்ருதம் யத் புவனாந்தராலே*' (स सर्वभूतप्रकृतिं विकारान् गुणादिदोषांश्च मुने व्यतीतः। अतीतसर्वावरणोऽखिलात्मा तेनास्तृतं यद्भुवनान्तराले ॥) என்று தெரிவிக்கின்றது. அதாவது, ஸர்வபூதங்களுக்கும் ப்ரக்ருதியாக (காரணமாக) இருக்கின்ற மாயை, அதன் கார்யங்கள், குணங்கள், தோஷங்கள் என்ற எல்லாவற்றையும் தாண்டி நிற்பவர் பரமாத்மா. பரமாத்மாவிற்கு எவ்வித ஆவரணமும் கிடையாது. அவரே, ப்ரபஞ்சத்திலுள்ள ஸர்வவஸ்துக்களிலும் வ்யாபித்திருக்கின்றார் என்றும், '*ஸமஸ்தகல்யாணகுணாத்மகோஸௌ,*' '*பர: பராணாம் ஸகலா ந யத்ர, க்லேசாதயஸ்ஸந்தி பராபரேசே,*' '*அவித்யா கர்ம ஸம்ஞான்யா த்ருதீயா சக்திரிஷ்யதே, யயா க்ஷேத்ரஞ்ஞசக்திஸ்ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா*' ('समस्तकल्याणगुणात्मकोसौ,' 'परः पराणां सकला न यत्र क्लेशादयस्सन्ति परापरेशे,' 'अविद्या कर्मसंज्ञाऽन्या तृतीया शक्तिरिष्यते ।यया क्षेत्रज्ञशक्तिस्सा वेष्टिता नृप सर्वगा') என்று ஸமஸ்த்த கல்யாண குணங்கள் உடையவர், ஸர்வத்திற்கும் மேலானவர். பரம், அபரம் என்று சொல்லப்படும், உத்க்ருஷ்ட்ட, நிக்ருஷ்ட்டங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஈச்வர ஸ்வரூபமாக இருப்பவரும், ஸர்வக்லேசங்கள் அற்றவராகவும்

இருப்பவர் எவரோ அவரே பரமாத்மா என்று சொல்லப்படுகிறது. விஷ்ணுவினிடம், விஷ்ணு சக்தி, க்ஷேத்ரஞ்ஞ சக்தி, அவித்யாசக்தி என்ற மூன்று சக்திகளில், மூன்றாவதான அவித்யா சக்தியினால், க்ஷேத்ரஞ்ஞ சக்தி இருக்கின்றதென்றும், இந்த அவித்யாசக்தி எங்கும் நிறைந்திருக்கின்றது என்று இந்தச்லோகத்தில் சொல்லப்படுகிறது. இதன் மூலம் பேதம் இருப்பதாக அறியப்படுகிறது. அதாவது, ஸர்வ ஆவரண அதீதர் பரமாத்மா என்று சொல்லப்படுவதால், க்ஷேத்ரஞ்ஞன் ஜீவசக்தி, ஜீவன் அவித்யையினால் சூழப்பட்டவன். அதனால் அவித்யைக்கு அதீதரான பரமாத்மா, அவித்யையினால் சூழப்பட்ட ஜீவாத்மா என்று வேறுபட்ட இரண்டு ஸ்வரூபமாக குறிப்பிட்டு தெரிவிக்கின்றதால் ஜீவ, பரமாத்ம பேதம் இல்லை என்று சொல்லமுடியாது.

ஸித்தா:- இது சரியல்ல. ஜீவனிடத்தில் அவித்யை உள்ள பர்யந்தம், பரமாத்மாவின் தன்மைகள் ஜீவனிடம் அறியப்படுவதில்லை. ஆனால் அவித்யாநாசம் ஏற்படுமானால் பரமாத்மாவின் தன்மைகள் அனைத்தும் ஜீவனிடம் அறியப்படுகின்ற காரணத்தினால், ஜீவபரமாத்ம அபேதம் சொல்லப்படுகிறது. அஞ்ஞானம் என்ற உபாதி நாசத்திற்குப் பிறகு எதைக்கொண்டு ஜீவ பரமாத்ம பேதம் சொல்லமுடியும்?

பூர்வ:- இதில் ஜீவனை அன்றி பரமாத்மா வேறுபட்டவர் என்று சில வ்யாஸ ஸூத்ரங்கள் தெரிவிக்கின்றனவே. அதாவது, '*பேதவ்யபதேசாச்ச அன்ய:*' (1.1.21) (भेदव्यपदेशाचान्यः) என்றும், '*அதிகம் து பேத நிர்த்தேசாத்*' (2.1.22) (अधिकं तु भेदनिर्देशात्) என்றும் இரண்டு ஸூத்ரங்களும் பேதம் இருப்பதாகத்தானே தெரிவிக்கின்றது?

ஸித்தா:- வ்யாஸஸூத்ரங்களில் எந்த ஸூத்ரத்தில் ஜீவ பரமாத்ம பேதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அங்கெல்லாம், வ்யவஹாரதசையில் அறியப்படும் பேதத்தை அனுவாதம் செய்து தெரிவிக்கின்றது என்றே சொல்லவேண்டும் என்று ஆசார்யர் ஸ்ரீ சங்கரரே தெரிவிக்கின்றார். வாஸ்த்தவமாக பேதம் இருப்பதாக சொல்லப் பட்டிருக்குமானால் ஸூத்ரம் தவறு என்றும் அப்ரமாணம் என்றும் சொல்ல நேரிடும். ஆகவே, வ்யாஸஸூத்ரம் பேதத்தை நிர்ணயம் செய்வதற்காக சொல்லவில்லை.

ஆகையால் இந்த ஸூத்ரங்களும் அத்வைதமே தத்வம் என்றே தெரிவிக்கின்றதால், இதில் எவ்வித ஹானியும் கிடையாது.

மேலும், '*ய ஆத்மனி திஷ்ட்டன், ய ஆத்மனோ அந்தர:, யம் ஆத்மா ந வேத, யஸ்ய ஆத்மா சரீரம், ய ஆத்மானமந்தரோ யமயதி, ஏஷ த ஆத்மா அந்தர்யாமி அம்ருத:*' ('यः आत्मनि तिष्ठन्, य आत्मनोऽन्तरः, यं आत्मा न वेद, यस्य आत्मा शरीरं, य आत्मानमन्तरो यमयति, एष त आत्मा अन्तर्यामी अमृतः') என்று பிருஹதாரண்யக அந்தர்யாமி பிராம்மண ச்ருதி வாக்யங்கள் பேதத்தை தெரிவிப்பதாக சொல்வது சரியல்ல. ஈச்வரன் நியாமகன் என்றும் ஜீவன் நியம்யன் என்றும் வ்யாவஹாரிக பேதத்தை அனுசரித்து போதிக்கப்படுகிறதே அன்றி உண்மையில் எந்த விதமான பேதமும் கிடையாது. ஜீவன், அஞ்ஞனாக இருக்கின்ற பர்யந்தமே நியம்ய, நியாமகபாவம் சொல்லப்படுகிறது. அஞ்ஞான நாசத்திற்குப்பிறகு நியம்யனான ஜீவனும் இல்லை, நியாமகனான ஈச்வரனும் கிடையாது. அதனால் ஜீவேச்வரபேதம் கிடையாது.

பூர்வ:- முக்தனையும், பரமாத்மாவையும் ஒன்று என்று சொல்லமுடியாது. ஏனெனில் முக்தன் ஏற்கனவே அவித்யைக்கு ஆச்ரயமாக இருந்தவன். ஈச்வரன் ஸர்வதா வித்யாஸ்வரூபன். (அவித்யாச்ரயன் அல்ல) ஆகையால் அவித்யாச்ரய யோக்யமுள்ளவனையும், அவித்யாச்ரய யோக்யம் இல்லாதவனையும், ஒன்று என்று சொல்வது பொருந்தாது.

ஸித்தா:- விஷ்ணு புராணத்தில், அவித்யை விஷ்ணுவின் சக்தி என்று சொல்லப்படுகிறது. சக்தி என்பது சக்தனிடம்தான் இருக்கவேண்டும். அதனால் விஷ்ணுவும் அவித்யைக்கு ஆச்ரயம் என்றே சொல்லவேண்டும் என்பதால் அவித்யாச்ரயயோக்யம் என்றே சொல்ல வேண்டுமே அன்றி அவித்யாச்ரய அர்ஹனல்ல என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- விஷ்ணு அவித்யைக்கு ஆச்ரயமாக இருந்தாலும், அவித்யையினால் விஷ்ணு மறைக்கப்படுவதில்லை. ஜீவனுக்கே அவித்யையினால் மறைவு ஏற்படுகிறது. அதனால், மறைவு ஏற்படாத ஈச்வரனையும், மறைவு ஏற்படும் ஜீவனையும் ஒன்று என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ஜீவன் முன்னால் அவித்யா வேஷ்டிதனாக (சூழப்பட்டவனாக) இருந்தான் என்றாலும் அவித்யை நாசமான பிறகே அவனை முக்தன் என்று சொல்லப்படுகிறது. அதனால் அவித்யா நிலையில் பந்தனாக இருக்கின்றபோது அவனை முக்தனென்று சொல்லப்படவில்லை. ஆகவே பந்தன் என்பவனே அவித்யாவேஷ்டித யோக்யத்வமுடையவன். முக்தனுக்கு அவித்யா வேஷ்டிதயோக்யத்வம் கிடையாது. முக்தனுக்கும் அவித்யா வேஷ்டிதயோக்யத்வம் இருப்பதாகச் சொல்லப்படுமானால் '*ந ச புனராவர்த்ததே*' (न च पुनरावर्तते) என்ற வாக்யம் அப்ரமாணம் என்று சொல்லநேரிடும். ஆகையால் முக்தனுக்கு பந்தமே கிடையாது என்று சாஸ்திரம் தெரிவிக்கின்றது. அவ்விதம் சொல்லப்படவில்லை என்றால் முக்தனுக்கும் அவித்யா ஆவரணம் இருப்பதாகச் சொல்லப்படுமானால், ஏதோ ஒரு ஸமயம் மறுபடி பிறவி இருப்பதாகவே சொல்லப்பட்டதாக ஆகும். அதனால் முக்தன், அவித்யாவேஷ்டிதயோக்யத்வம் உடையவன் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- முக்தனுக்கு அவித்யா வேஷ்ட்டனயோக்யத்வம் இருந்தாலும், அந்த அவித்யை முக்தனை ஆவரணம் செய்யாது என்று சொல்லலாமே?

ஸித்தா:- அவ்விதம் சொல்லப்படுமானால், பரமாத்மாவும், அவித்யாவேஷ்டிதயோக்யத்வம் உள்ளவரென்றே சொல்லலாம். ஏனெனில் முக்தனும் சைதன்ய ஸ்வரூபம், பரமாத்மாவும் சைதன்ய ஸ்வரூபம். அதனால் முக்தனிடம் அவித்யாவேஷ்ட்டனம் இல்லையென்றாலும் அவித்யாவேஷ்ட்டன யோக்யத்வம் இருப்பதாகச் சொல்லப்படுமானால், அதேபோல் பரமாத்மாவிற்கும் அவித்யாவேஷ்ட்டனயோக்யத்வம் இருக்கலாமே? அது மட்டுமல்ல, முக்தனுக்கு அவித்யாவேஷ்ட்டனம் என்பதே ஏற்படாது என்றால், அவித்யாவேஷ்டித யோக்யத்வம் இருப்பதாகச் சொல்லப்படுவதால் ஏற்படும் லாபம் என்ன? ஏதாவது ஒரு ஸமயம் அவித்யையினால் வேஷ்டிதனாக ஆகக்கூடிய யோக்யதை இருப்பதாக சொல்லமுடியுமானால் யோக்யதை இருப்பதாக ஒத்துக்கொள்ளலாம். அதனால் இந்தவித ஆக்ஷேபங்கள் எதுவும் பொருந்தாது. உண்மை நிலை என்னவென்றால், ஈச்வரன் அவித்யா வேஷ்டித அர்ஹதை

உடையவராக இருந்தாலும், எப்போதும் வித்யை இருக்கின்றதால் அவித்யாவேஷ்ட்டனம் ஏற்படமுடியாது. ஆகவே ஈச்வரனும் அவித்யா வேஷ்டித அர்ஹர் என்றாலும், அவித்யைக்கு விரோதியான வித்யை எப்போதுமே இருக்கின்றதால் ஈச்வரனை அவித்யை ஆவரணம் செய்வதில்லை. முக்தன், பந்த நிலையில் அவித்யா ஆவரணனாக இருந்தாலும், முக்தி நிலையில் அவித்யைக்கு விரோதியான வித்யை உடையவனாக இருக்கின்றதால், சித்ஸ்வரூபமான ஈச்வரனும், சித்ஸ்வரூபமான ஜீவனும் ஒன்றே என்று அறியப்படுவதால் முக்தன் அவித்யா ஆவ்ருதன் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- ஜீவன் சித்ஸ்வரூபம் என்று சொல்லலாம். ஆனால் ஈச்வரன் சித், அசித், விலக்ஷண ஸ்வரூபம். அவரிடம் ஈச்வரத்வம் இருக்கின்றதால் ஈச்வரன் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் சித், அசித், ஈச்வரன் என்று மூன்று பதார்த்தங்கள் என்று சொல்லப்படுவதால், அசித் என்பதைக்காட்டிலும் ஈச்வரன் வேறு என்று சொல்வதுபோல் 'சித்' என்பதைக்காட்டிலும் ஈச்வரன் வேறு என்றே சொல்லவேண்டும். அதனால் ஈச்வரனும் ஜீவனும் சித்ஸ்வரூபம் என்பதால் இரண்டிற்கும் வித்யாஸம் ஏதுமில்லை என்று ஜீவேச்வரபேதமில்லை என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- '*நித்யோ நித்யானாம், சேதன: சேதனானாம், ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான்*' (नित्योऽनित्यानां चेतनः चेतनानां एको बहूनां यो विदधाति कामान्) என்றும் '*தம் ஆத்மஸ்த்தம் யேனுபச்யந்தி தீரா: தேஷாம் சாந்தி: சாஸ்வதீ ந இதரேஷாம்*' (तम् आत्मस्थं येऽनुपश्यन्ति धीराः तेषां शान्तिः शाश्वती न इतरेषाम्) என்று ஜீவர்களையும் சேதனன் என்றே குறிப்பிடுகிறது. அதேபோல் ஈச்வரனையும் சேதனன் என்றே குறிப்பிட்டு உபநிஷத் வாக்யமே தெரிவிக்கின்றதால், ஈச்வரன் சேதனன் இல்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதாவது சேதனானாம் என்று ஜீவனுக்கு சேதனத்வம் சொல்லப்படுகிறது அதேபோல் சேதன: என்று ஈச்வரனுக்கும் சேதனத்வம் சொல்லப்படுகிறது.

பூர்வ:- ஈச்வரன் சேதனன் என்று சொல்லப்பட்டாலும்கூட ஜீவனையும் ஈச்வரனையும் ஒன்று என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- ஒவ்வொரு சரீரத்திலும் இருக்கின்ற சேதனனான ஜீவன், எவ்விதம் வெவ்வேறாக இருப்பதாகச்சொல்லப்படுகிறதோ அதுபோல் சேதனனான ஜீவனைக்காட்டிலும் சேதனனான ஈச்வரன் வேறாக இருக்கலாமே? அதனால் பாதம் ஏதுமில்லை. சேதனனான ஜீவர்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் வேறு என்று சொல்லப்பட்டபோதிலும் சேதனத்வேன எல்லா ஜீவர்களும் ஒன்றுதான் என்று சொல்வதுபோல், ஈச்வரனுக்கும் சேதனத்வேன ஒன்று என்று சொல்லலாமே? இவ்விதம் சேதனத்வேன ஏகத்வம் இருக்கின்றதால் இது ஜீவன், இது ஈச்வரன் என்று பிரிக்கமுடியாது. சேதனத்ரவ்யம் என்பதால் ஜீவன் ஈச்வரன் என்ற இரண்டும் ஒன்றே என்றுதான் சொல்லவேண்டும்.

பூர்வ:- இதற்கு முன் '*பரமாத்மாத்மனோ: யோக: பரமார்த்த: இதி இஷ்யதே, மித்யைதத் அன்யத்ரவ்யம் ஹி ந ஏதி தத் த்ரவ்யதாம் யத:* ('परमात्मात्मनोर्योगः परमार्थ इतीष्यते। मिथ्यैतदन्यद्द्रव्यं हि नैति तद्द्रव्यतां यतः') என்று சொல்லப்பட்ட ச்லோகத்தில், பரமாத்மாவிற்கும்,

ஆத்மாவிற்கும் பேதம் இருக்கின்றதென்று 'யோக:' என்ற பதத்தினால் சொல்லப்படுகிறது. அந்த ச்லோகத்தில் அன்யத் த்ரவ்யம் தத் த்ரவ்யமாக ஆகாது என்று சொல்லப்படுகின்றதால் ஜீவனையும், ஈச்வரனையும் ஒரே த்ரவ்யம் என்று சொல்லமுடியாது என்று சொல்லப்பட்டதே?

ஸித்தா:- 'யோக:' என்ற பதத்திற்கு தாதாத்ம்யமே அர்த்தம் என்று முன்பே சொல்லப் பட்டிருக்கின்றது. அதனால் மேலும் விவரிக்கவேண்டிய அவச்யமில்லை.

பூர்வ:- ''பரமாத்மாவிற்கும், ஜீவாத்மாவிற்கும் மத்தியில் உள்ள அபேதம், பரமார்த்தம் என்று சிலரால் சொல்லப்படுகிறது. அது தவறு. ஏனெனில் ஒரு த்ரவ்யம், மற்றொரு த்ரவ்யபாவத்தை அடையமுடியாது'' என்று ச்லோகத்தில் சொல்லப்படுகிறது.

இந்த ச்லோகத்திலுள்ள 'யோக' சப்தத்திற்கு ஸம்பந்தம் என்று அர்த்தம் செய்வதா அல்லது அபேதம் என்று அர்த்தம் செய்வதா என்றால் அபேதம் என்ற அர்த்தமே பொருந்தும். ஏனெனில், ச்லோகத்தின் உத்தரார்த்தத்தில் ஒரு த்ரவ்யம் மற்றொருத்ரவ்யபாவத்தை அடையமுடியாது என்ற வாக்யத்தில் உள்ள த்ரவ்யபாவம் என்பதற்கு த்ரவ்ய அபேதம் என்று அர்த்தம் செய்யவேண்டும், அவ்விதம் அர்த்தம் சொல்லப்படுமானால், அதை அனுசரித்து யோக சப்தத்திற்கும் அபேதம் என்றே அர்த்தம் சொல்லவேண்டும். பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் அபேதம் என்று சிலரால் (அத்வைதிகளால்) சொல்லப்படுகிறது. அது தவறு. ஏனெனில், ஒரு த்ரவ்யம் மற்றொரு த்ரவ்யத்துடன் அபேதத்தை அடையமுடியாது என்றே இந்த ச்லோகத்தின் தாத்பர்யம் என்றே சொல்லவேண்டும். ஆகையால் ஜீவன், ஈச்வரன் என்ற இரண்டும் பின்னத்ரவ்யம் என்றே ஸித்திக்கின்றது.

ஸித்தா:- யோக சப்தத்திற்கு ஸம்பந்தம் என்றே அர்த்தம். அபேதம் என்று அர்த்தம் செய்வது சரியல்ல. '*தேன யுக்தோ பவதி*' (तेन युक्तो भवति) என்ற வாக்யத்திற்கு அவனுடன் ஸம்பந்தப்படுகிறான் என்றுதான் லோகத்தில் அர்த்தம் சொல்லப்படுகிறது. அவனுடன் அபேதத்தை அடைகிறான் என்று எந்த வித்வான்களும் தெரிவிக்கவில்லை. அதனால் யோக: என்ற சப்தத்திற்கு ஸம்பந்தம் என்ற அர்த்தம்தான் சொல்லவேண்டும் என்றும் அந்த ஸம்பந்தம் தாதாத்ம்ய ஸம்பந்தம் என்றும் ஸ்ரீதரஸ்வாமிகளால் வ்யாக்யானம் செய்யப்பட்டது சரியானதே. தாதாத்ம்யம் என்றாலே பேத ஸஹித அபேதம் என்றே அர்த்தம். அதனால் கேவல அபேதம் இல்லை. ஆகவே, பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் பேத ஸஹித அபேதமான தாதாத்ம்யம் இருப்பதாக வேறு சிலரால் சொல்லப்படுகிறது. அது சரியல்ல, ஏனெனில் பேதம் இருக்கின்ற இடத்தில் அபேதம் இருக்கமுடியாது. ஜீவேச்வர பேதம் பரமார்த்தமாக இருக்குமானால் அபேதம் பரமார்த்தமாக இருக்கமுடியாது என்பதையே ச்லோகத்தின் உத்தரார்த்தம் தெரிவிக்கின்றது. அதனால் ஜீவன் ஈச்வரன் என்பது பின்னத்ரவ்யமல்ல. பின்னத்ரவ்யமாக இருந்தால்தான் அந்த த்ரவ்யம் மற்றொரு த்ரவ்யமாக ஆகமுடியாது. ஆனால் சித்ரூபேண ஜீவன், ஈச்வரன் என்ற இரண்டும் ஏகத்ரவ்யம் என்றே சொல்லவேண்டும் என்றே இந்த ச்லோகார்த்தம் தெரிவிக்கின்றது.

பூர்வ:- 'தத் த்ரவ்யதாம்' என்ற பதத்திற்கு, தத் த்ரவ்ய பாவம் என்றே அர்த்தம் செய்யவேண்டும். தத் த்ரவ்யதாதாத்ம்யம் என்று அர்த்தம் செய்வது சரியல்ல.

ஸித்தா:- '*தஸ்ய பாவ: த்வ தலௌ*' (तस्य भावः त्व तलौ) என்ற பாணினி ஸூத்ரத்தினால் (5.1.119) ஒரு வஸ்துவின் 'தன்மை' என்ற அர்த்தத்தில் த்வ என்றும் தல் என்றும் இரண்டு ப்ரத்யயங்கள் விதிக்கப்படுகின்றது. த்ரவ்யத்வம் என்றாலும், த்ரவ்யதா என்றாலும், த்ரவ்யமாக இருக்கும் தன்மை என்றே அர்த்தம். கடஸ்ய பாவ: கடதா என்றும் சொல்லலாம். ஆகவே, ஒரே அர்த்தத்தில் 'த்வ' என்று ஒரு ப்ரத்யயம், 'தல்' என்று ஒரு ப்ரத்யயம். 'தன்மை' என்பது ஒரு வஸ்துவின் தாதாத்ம்யமாகவும் இருக்கலாம் அல்லது ஒரு வஸ்துவின் அபேதமாகவும்கூட இருக்கலாம். அதனால் தத் தாதாத்ம்யம் என்ற அர்த்தத்திலும், தத் அபேதம் என்ற அர்த்தத்திலும் இந்த ப்ரத்யயங்களின் ப்ரயோகம் லோகத்தில் இருக்கின்றது என்றே சொல்லவேண்டும். உதாரணமாக, '*தேவதத்த: வ்ருத்தத்வம் ப்ராப்னோதி*' என்ற வாக்யத்தில் த்வ ப்ரத்யயம் இருக்கின்றது. இந்த இடத்தில் தேவதத்தனே வ்ருத்தன் என்பதால் அபேதம் அர்த்தம் என்றே சொல்லவேண்டும்.

இதேபோல், இரும்பு என்ற உலோகம் அக்னி ஸம்பந்தத்தினால் அக்னியைப் போன்றே அக்னி பாவத்தை அடைகின்றது. காரண வஸ்து கார்யபாவத்தை அடைகிறது என்றும் சொல்லலாம். இந்த இடத்தில் தாதாத்ம்யம் (ஆத்யாஸிகமாக) இருப்பதாகச்சொல்லலாம். அதனால் தத் த்ரவ்யதாம் என்ற பதத்திற்கு தத் த்ரவ்ய தாதாத்ம்யம் என்று அர்த்தம் சொல்லப்படுவது சரியே.

இதே ச்லோகத்திற்கு வேறு ஒரு முறையிலும் அர்த்தம் செய்யலாம். சிலபக்தர்கள், ஈச்வரன், ஜீவன் என்ற பேதம் இருந்தாலும், ப்ரமரகீட ந்யாயத்தின்படி, ஈச்வர த்யானத்தினால் ஈச்வர அபேதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அது சரியல்ல என்றே, ஒருத்ரவ்யம் மற்றொரு த்ரவ்யமாக ஆகமுடியாது என்றே இந்த ச்லோகத்தினால் கண்டிக்கப்படுகிறது என்றே சொல்லவேண்டும். பின்னத்ரவ்யத்திற்கு அபேதம் சொல்லப்படுமானால் அதை மித்யை என்றே சொல்லவேண்டும் என்று இந்த ச்லோகத்திற்கு அர்த்தம் செய்யவேண்டும்.

பூர்வ:- ஸ்ரீதரஸ்வாமிகள் வ்யாக்யானத்தின்படி, ப்ரமரகீட ந்யாயத்தைக்கொண்டு ஜீவேச்வர தாதாத்ம்யம் ஏற்படலாமே? தாதாத்ம்யம் ஏற்படாது என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் தாதாத்ம்யம் சொல்லப்படுமானால் அது மித்யை என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- ப்ரமரகீட ந்யாயத்தை உதாரணமாக சொல்லப்பட்டிருக்கிறதே. இந்த உதாரணத்தினால் ப்ரமரம் போல் கீடம் ஆகிறது என்றே சொல்லப்படுவதால், ப்ரமர ஸாரூப்யம் என்றே சொல்லவேண்டும். மேலும் உண்மையில் இரண்டு வஸ்து ஒன்றுக்கொன்று வேறாக இருக்குமானால், அவை இரண்டிற்கும் ஸாயுஜ்யம் (அபேதம்) என்பதே ஸம்பவிக்கமுடியாது. ஸாரூப்யம்தான் சொல்லமுடியும். மேலும் ப்ரமரம், கீடத்தை கொட்டுவதனால் ப்ரமரபாவத்தை கீடம் அடைவதாகச் சொல்லமுடியாது. ஏனெனில் எந்த கீடம், ப்ரமர பாவத்தை அடையமுடியுமோ அதைத்தான் கொட்டமுடியும். எல்லாகீடமும் (புழுவும்) அடையமுடியாது. ஏனெனில், ப்ரமரம் புழுவை கொட்டுகின்றபோது அந்த வலியை பொறுத்துக்கொள்ளக்கூடிய சக்தி உடைய கீடத்தையே கொட்டமுடியும். அவ்விதம் இல்லையானால் ஒரு முறை கொட்டுகின்றபோதே அது உயிருடன் இருக்கமுடியாது. அதனால் எந்த கீடமாக இருந்தாலும், ப்ரமரபாவத்தை அடைவதாகச் சொல்லமுடியாது.

மேலும், ப்ரமரம் கீடத்தை கொட்டினதும் அந்தவலியை பொறுக்கமுடியாமல், மறுபடியும் எப்போது கொட்டுமோஎன்ற பயத்தினால் ப்ரமரத்தையே த்யானிப்பதால் ப்ரமரபாவத்தை அடைகிறது என்று சொல்லப்படுவதை ஒருஸமயம் ஒத்துக்கொண்டபோதிலும், எந்த ப்ரமரத்தை த்யானித்ததால் கீடத்திற்கு ப்ரமரபாவம் ஏற்பட்டதோ அந்த கீடமும், அதற்கு காரணமான ப்ரமரமும் ஒன்றல்ல. இரண்டும் பரஸ்பரம் வேறுபட்டதாக இருக்கின்றதால் ப்ரமர ஸமானமாக ஆகிறது என்று சொல்லலாமே அன்றி அந்த ப்ரமரமாகவே ஆகிறது என்று அபேதம் சொல்லமுடியாது.

ஆனால் ஜீவனும் ப்ரஹ்மமும் பின்ன த்ரவ்யமல்ல. அதனால் ப்ரமரகீட ந்யாயப்படி தாதாத்ம்யம் சொல்வதற்கு உன்னுடைய பக்ஷத்தில் முடியாது. ஸாரூப்யம்தான் சொல்லமுடியும்.

பூர்வ:- தாதாத்ம்யம் என்றும், தாத்ரூப்யம் என்றும், அபேதம் என்றும் மூன்று பதங்களினால் சொல்லப்படுவதில் அர்த்தம் என்ன? ஒன்றுகொன்று என்ன வித்யாஸம்? மூன்றுக்கும் உள்ள விசேஷம் என்ன?

ஸித்தா:- தாதாத்ம்யம் என்று காரண கார்ய பாவமுள்ள ம்ருத்கடத்தை உதாரணமாகச் சொல்லலாம். அதாவது ம்ருத்திற்கும், கடத்திற்கும் ஸ்வரூபத்தில் எந்தவித வித்யாஸமும் கிடையாது ஏகத்ரவ்யம்தான். ஆனால் ம்ருத்தின் ஒரு அவஸ்த்தாவிசேஷமே கடம் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ம்ருத்கடம் என்பது வ்யவஹாரமாத்ர ஸித்தமே அன்றி வாஸ்த்தவத்தில் இரண்டிற்கும் பேதமில்லை. ம்ருத்திலிருந்து கடம் என்பதை பிரித்து எடுத்து, இது ம்ருத், இது கடம் என்று வேறுபடுத்திகாட்டமுடியாது. ம்ருத்வேறு, கடம் வேறு என்று சப்தத்தில்தான் பேதம் இருக்கின்றதே அன்றி வஸ்து பேதம் இல்லை. இந்தவிதம் வ்யவஹாரமாத்ர பேதம் இருக்கின்ற இடத்தில் தாதாத்ம்யம் என்று சொல்லப்படுகிறது. அதனால் கார்யகாரணபாவம் சொல்லப்படும் இரண்டிற்குத்தான் தாதாத்ம்யம் சொல்லலாம். கார்யம் காரணம் இரண்டிற்கும் உள்ள ஸம்பந்தமே தாதாத்ம்யம்.

தாத்ரூப்யம் என்பது என்னவென்றால், உதாரணமாக ஸ்வர்ணம் என்ற ஒரே வஸ்துவில் இரண்டுவித ஆபரணம் செய்யப்படுகிறது. ஒன்று வளையல், ஒன்று செயின். இரண்டு வஸ்து ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக க்ரஹிக்கப்படுகின்றது. அவ்விதமின்றி ஒரே ஸ்வர்ணத்தினால் ஆன ஒரே விதமான இரண்டு வளையல்கள் க்ரஹிக்கப்படுகின்றபோது ஒரே காரணத்திலிருந்து உண்டான இரண்டு கார்யங்களும் ஸமான ரூபமாக இருக்கின்றதால், தாத்ரூப்யம் என்றே சொல்லவேண்டும். காரணமான ஸ்வர்ணம் ஒன்றே என்பதால் இரண்டும் ஸமான ரூபம் என்று ஸாரூப்யம் என்று சொல்லப்படுகிறது. அதாவது தாத்ரூப்யம் என்றால் ஸமானமான இரண்டு கார்யங்களைச்சொல்லலாம். (இங்கு பேதப்ரதீதி இருக்கின்றது).

அபேதம் என்பது, மனஸினாலோ அல்லது வ்யவஹாரத்தினாலோ எந்த இரண்டு வஸ்துக்களுக்கு பேதமே அறியமுடியாதோ அதுவே அபேதம் என்று சொல்லப்படுகிறது. ஒன்று ஸோபாதிகமான வஸ்து, ஒன்று நிருபாதிகமான வஸ்து என்று வ்யவஹாரம் செய்யப்படுகின்றபோது உண்மையில் வஸ்து இரண்டு இல்லை. நிருபாதிகமான வஸ்துவே, உபாதி ஸம்பந்தத்தை அடைகின்றபோது அதை ஸோபாதிகம் என்றும், உபாதி

நாசமடையுமானால் உபாதி அற்ற ஸ்வரூபம் நிருபாதிகம் என்றும் சொல்லப்படுகிறது. ஸோபாதிகமாக அறிகின்றபோது, அதுவே நிருபாதிகம் என்று அறியமுடியவில்லை. உபாதி அற்ற நிலையில் நிருபாதிகம் என்று அறியப்படுகிறது. ஆகவே இரண்டையும் பிரித்து இது ஸோபாதிகம் இது நிருபாதிகம் என்று இரண்டு வஸ்து இருப்பதாக அறியமுடியாது (காண்பிக்கமுடியாது). எது ஸோபாதிகமோ, அதுவே நிருபாதிகம். இதுவே அபேதம் என்று அறியவேண்டும். ஆகவே, தாதாத்ம்யம், தாத்ரூப்யம், அபேதம், என்ற மூன்று பதங்களுக்கும் இந்தவிதம் ஸூக்ஷ்மமாக அர்த்த பேதம் இருக்கின்றது. ஆகையால் '*பரமாத்மாத்மனோர்யோக: பரமார்த்த இதி இஷ்யதே, மித்யைதத் அன்யத் த்ரவ்யம் ஹி ந ஏதி தத்த்ரவ்யதாம் யத:*' (परमात्मात्मनोर्योगः परमार्थ इति इष्यते। मिथ्यैतदन्यद् द्रव्यं हि नैति तद्द्रव्यतां यतः) என்ற ச்லோகத்தில் உள்ள 'யோக:' என்ற சப்தம் 'தாதாத்ம்யத்தையே' குறிப்பிடுகின்றது. 'அபேதம்' என்று குறிப்பிடவில்லை என்றே சொல்லவேண்டும். ச்லோக கர்த்தாவிற்கு 'யோக' என்ற பதம் அபேதம் என்ற அர்த்தத்தையே தெரிவிக்கின்றது என்று அபிப்ராயம் இருக்குமானால் '*பரமாத்மாத்மனோ: ஐக்யம் பரமார்த்த இதிஷ்யதே*' (परमात्मात्मनोरैक्यम् परमार्थ इति इष्यते) என்று சொல்லப்படவேண்டும். அதாவது ஜீவபரமாத்மாவிற்கு ஐக்யம் பரமார்த்தம் என்று சிலர் சொல்கிறார்கள். அவ்விதம் சொல்வது தவறு. ஏனெனில் ஒரு த்ரவ்யம் வேறொரு த்ரவ்யமாக எவ்விதம் ஆகமுடியும் என்று ஸ்பஷ்ட்டமாகவே தெரிவித்திருக்கலாமே? அவ்விதம் ச்லோகார்த்தம் தெரிவிக்கப்படவில்லை.

ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் தாதாத்ம்யம் என்று சொல்கிறார்கள். அது தவறு. ஏனெனில் ஜீவனும், ஈச்வரனும் ஒன்றுக்கொன்று பின்னத்ரவ்யம் என்று சொல்லப்படுமானால், ஒரு த்ரவ்யம் வேறொரு த்ரவ்யமாக எவ்விதம் ஆகமுடியும்? என்ற தாத்பர்யத்தைக்கொண்டே ச்லோகம் இயற்றப்பட்டிருக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- க்ரந்தக்காரர் அந்த அர்த்தத்தில் ச்லோகம் இயற்றவில்லை என்றாலும், இப்போது அதை திருத்தி அமைக்கலாமே?

ஸித்தா:- ''ஜீவபரமாத்மாவிற்கு ஐக்யம் சிலரால் சொல்லப்படுகிறது. அது தவறு, ஒரு த்ரவ்யம் அதற்கு அன்யமான மற்றொரு த்ரவ்யபாவத்தை எவ்விதம் அடையமுடியும்'' என்று ச்லோகம் இயற்றப்பட்டிருக்குமானால், வேத விருத்தமான கருத்தை தெரிவிக்கின்ற இந்த ச்லோகம் அப்ரமாணம் என்றே தள்ள வேண்டும். வேதம் முழுவதும் 'தத் த்வமஸி' போன்ற மஹாவாக்யங்களினால் ஜீவ பரமாத்ம ஐக்யத்தையே தாத்பர்யமாக போதிக்கின்றது. அதனால் தாதாத்ம்யம் சொல்வது சரியல்ல என்றும் ஐக்யம்தான் சொல்லவேண்டும் என்றே இந்த ச்லோகத்தில் தெரிவிக்கின்றார்.

பூர்வ:- ''*இதம் ஞானம் உபாச்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா:*''(इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः) என்ற கீதா ச்லோகத்தின் தாத்பர்யத்தைக்கொண்டே தத்வமஸ்யாதி வாக்யங்களுக்கு தாதாத்ம்யம் அர்த்தம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- இந்த விதம் கீதா ச்லோகத்திற்கும் உன்னால் சொல்லப்படும் அர்த்தம் பொருந்தாது. ஐக்யம்தான் சொல்லப்படுகிறது. மேலும் உன்னால் தெரிவிக்கின்றபடி தாதாத்ம்யம் என்று

அந்த கீதா ச்லோகத்திற்கு அர்த்தம் செய்யப்பட்டாலும்கூட ஸ்ம்ருதிவாக்யங்களுக்காக ச்ருதி வாக்யங்களை எப்படி மாற்ற முடியும்? ச்ருதி வாக்யத்திற்கு விரோதமாக ஸ்ம்ருதி வாக்யம் தெரிவிக்குமானால் அந்த வாக்யம் அப்ரமாணம் என்றே தள்ள வேண்டும் என்று சாஸ்திரமே தெரிவிக்கின்றதால் ச்ருதியை அனுசரித்தே ஸ்ம்ருதிவாக்யங்களுக்கு அர்த்தம் செய்யவேண்டும். அதுவே சரியானமுறை.

பூர்வ:- ஜீவனுக்கு ஈச்வரபாவம் சொல்லப்படுவதே அப்ரமாணமாகும். இதம் ஞானமுபாச்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: என்ற கீதாவசனத்தினால் எவருக்கு ஞானம் ஏற்படுகிறதோ அவர் எனக்கு ஸமானதர்மமுடையவனாக ஆகிறார் என்றே தெரிவிக்கின்றதே அன்றி நானாகவே ஆகிறார் என்று சொல்லப்படவில்லை. இதை ஞானத்திற்கு பலனாகவே தெரிவிக்கின்றார். அதனால் ஞானபலம் ஸமான தர்மமாக ஆகலாமேயன்றி பகவானாகவே ஆகமுடியாது. அதனால் ஜீவபரமாத்ம அபேதம் சொல்வது அப்ரமாணம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- 'மத்பாவமாகதா:' என்ற கீதாவசனம், என்னுடைய பாவத்தை அடைகின்றதாகவே சொல்லப்படுகிறது. ச்ருதிவாக்யமும் '*ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*' என்று ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்றே தெரிவிக்கின்றது. அதனால் ச்ருதி வாக்யங்களுக்கு விரோதம் இல்லாமல் ஸ்ம்ருதிவாக்யங்களுக்கு அர்த்தம் செய்வதே சரியான முறையாகும். கீதையில் ஓரிடத்தில் ஸாதர்ம்யம் என்ற பதத்திற்கு ஞானபலம் என்று அர்த்தம் சொல்லப்பட்டிருந்தாலும், அபேதமே ஞானபலம் என்று அனேக ச்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. உண்மையில், ஸாதர்ம்யம் என்ற பதத்திற்கும், ஸந்தர்ப்பத்தை அனுசரித்து அபேதம் என்ற அர்த்தம்தான் சொல்லப்படவேண்டும். அவ்விதமின்றி ஸமானதர்மம் என்று அர்த்தம் செய்வது சரியல்ல. ஏனெனில் '*மாமுபேத்ய து கௌந்தேய*' ('मामुपेत्य तु कौन्तेय') என்ற வாக்யத்திலும் 'என்னை அடையவேண்டும்' என்று ஐக்யம்தான் சொல்லப்படுகிறது. 'பகவத் பாவத்தையே அடைகிறான்' என்று பகவானாலேயே சொல்லப்படுவதால் ஏதோ ஓரிடத்தில் ஸாதர்ம்யம் என்று தெரிவிக்கின்ற பதத்திற்கும் 'அபேதம்' என்றே அர்த்தம் சொல்லப்படவேண்டும். அவ்விதம் சொல்லப்படவில்லையென்றால், மற்ற இடங்களில் சொல்லப்படும் ஸாயுஜ்யம் இல்லை என்றே சொல்ல நேரிடும். அதனால் ஸாயுஜ்யம் அப்ரமாணம் என்று உன்னால் சொல்லப்படுவது சரியல்ல.

பூர்வ:- 'மாமுபேத்ய' என்ற கீதாவாக்யத்திற்கு, மத்ஸாலோக்யம், மத்ஸாரூப்யம், மத்ஸாமீப்யம் என்று என்னுடைய லோகத்தை அடைகிறான் என்றும் என்னுடைய ரூபத்தை அடைகிறான் என்றும் என் ஸமீபத்தை அடைகிறான் என்றும் அர்த்தம் செய்யலாமே?

ஸித்தா:- 'மாமுபேத்ய' என்று என்னை அடைகிறான், நானாகவே ஆகிறான் என்ற பதப்ரயோகம் செய்திருப்பதால், அதற்கு கிடைக்கின்ற அர்த்தமான ஸாயுஜ்யம் என்ற அர்த்தத்தைவிட்டு, ச்ருதி விருத்தமான வேறு அர்த்தத்தை எவ்விதம் க்ரஹிக்கமுடியும்? அவ்விதம் அர்த்தம் செய்வது சரியல்ல.

பூர்வ:- '*ஆத்மபாவம் நயத்யேனம் தத்ப்ரஹ்ம த்யாயினம் முனிம், விகார்யமாத்மனச்சக்த்யா லோஹமாகர்ஷகோ யதா*' ('आत्मभावं नयत्येनं तद्ब्रह्म ध्यायिनं मुनिम्।विकार्यमात्मनश्शक्त्या

लोहमाकर्षको यथा) என்ற ச்லோகத்தில், ப்ரஹ்மம், அவரையே த்யானிக்கின்ற ஜீவனை தன்னிடம் கொண்டு வருகிறது, எவ்விதம் 'அயஸ்காந்தம்' என்ற கல், தன்னிடம் உள்ள சக்தியினால் இரும்பை இழுக்கின்றதோ அதுபோல். உபாஸகனை தன்னிடம் கொண்டு வருகிறார் என்று 'ஆகர்ஷக: நயதி' என்ற பதங்களினால் அர்த்தம் கிடைக்கின்றது. அதனால் ப்ரஹ்மமாக ஆகிறான் என்று சொல்லப்படவில்லை.

ஸித்தா:- இந்த ச்லோகத்தில் 'த்யாயினம் முனிம்' என்று சொல்லப்படுவதால், இந்தவாக்யம் உபாஸகனுக்கு சொல்லப்பட்ட வாக்யம். உபாஸகனுக்கு ப்ரஹ்மபாவம் சொல்லப்பட வில்லை. இந்த வாக்யம் ஞானியைப் பற்றி சொல்லப்படவில்லை. உபாஸகனுக்கு அபேதம் சொல்லமுடியாது. உதாரணமாக சொல்லப்பட்ட அயஸ்காந்தமணிக்கு இரும்பை இழுக்கக்கூடிய சக்திதான் இருக்கின்றது. அயஸ் என்ற இரும்பை அயஸ்காந்தமாகச் செய்கின்ற தன்மை கிடையாது. தூரத்தில் உள்ள இரும்பை ஸமீபத்தில் இழுக்கலாம். இதேபோல் உபாஸகனை லோகத்தை வந்தடையும்படிச் செய்கிறார் என்றோ தன் ஸமீபத்தில் இருக்கச்செய்கின்றார் என்றோ, தன்னுடன் ஸம்யோகம் அடையச்செய்கிறார் என்றோ இந்த த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு பரமாத்மா உபாஸகனுக்கு ஸாமீப்யம் அளிக்கின்றார் என்று சொன்னால் பொருந்தும். இதே கருத்து அடுத்தச்லோகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, '*ஆத்மப்ரயத்னஸாபேக்ஷா விசிஷ்டா யா மனோகதி: தஸ்யா ப்ரஹ்மணி ஸம்யோகோ யோக இத்யபிதீயதே*' ('आत्मप्रयत्नसापेक्षा विशिष्टा या मनोगतिः। तस्या ब्रह्मणि संयोगो योग इत्यभिधीयते') என்ற ச்லோகத்தில் ப்ரயத்னம் மூலமாக ஒரு விஷயத்தில் மனஸ் ஸ்திதி பெற்று, அந்த விஷயத்திலேயே லயித்திருக்குமானால் அதற்கு யோகம் என்று பெயர் சொல்லப்படுகிறது. இந்த ச்லோகத்தில் முக்யமாக, '*ப்ரஹ்மணி ஸம்யோக:*' என்று பரமாத்மாவுடன் மனஸ் லயித்திருப்பதையே யோகம் என்று தெரிவிக்கின்றது. ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தம் என்றே சொல்லப்படுகிறது.

பூர்வ:- மனஸிற்கே ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தம் என்று சொல்லப்படுகிறதே அன்றி ஜீவனுக்கு ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தம் என்று சொல்லப்படவில்லை.

ஸித்தா:- ஆத்மாவிற்கு ஒருபோதும் எந்த வஸ்துவுடனும் ஸம்யோகம் என்பதோ வியோகம் என்பதோ கிடையாது. உபாதி ஸம்யோக வியோகத்தையே ஆத்மாவிற்கு சொல்லப்படுகிறது. அதனால் ஆத்மாவிற்கு ஔபாதிக ஸம்பந்தம் சொல்லப்படலாம். ஆகவே உதாரணமாக தெரிவிக்கப்பட்ட ச்லோகம் உபாஸகனைப்பற்றி சொல்லப்பட்டது. ஆனால் '*மாமுபேத்ய கௌந்தேய*' என்று ச்லோகம் ப்ரஹ்மபாவத்தை அடைகின்ற முக்தனைப்பற்றி சொல்லப்பட்ட ச்லோகம். '*விஷ்ண்வாக்யே நிர்மலே ப்ரஹ்மண்யவாப ந்ருபதிர்லயம்*' ('विष्ण्वाख्ये निर्मले ब्रह्मण्यवाप नृपतिर्लयम्) என்ற ச்லோகத்தில் எங்கும் நிறைந்த நிர்மலமான ப்ரஹ்மவிஷயத்தில் தத்வோபதேசம் பெற்ற ராஜா, ப்ரஹ்மத்தில் சாஸ்வதமாக லயத்தை அடைந்தான் என்றே சொல்லப்படுகிறது.

'*ஆத்யந்திகோ விமுக்த்திர்யா லயோ ப்ரஹ்மணி சாச்வதே*' என்று சாஸ்வதமாக ப்ரஹ்மத்தில் ஸ்திதி பெற்றிருப்பதே ஆத்யந்திக முக்தி என்று சொல்லப்படுகிறது. ஆகவே ஸாலோக்யம்,

ஸாரூப்யம், ஸாமீப்யம் என்பதெல்லாம் உபாஸகனைப்பற்றி தெரிவிக்கின்றது. ஜீவன், ப்ரஹ்மத்தில் லயம் அடைகிறான் என்பதே ஸாயுஜ்யம் என்று சொல்லப்படும்.

பூர்வ:- இவ்விதம் சொல்லப்படுமானால் *'ஜகத்வ்யாபார வர்ஜம்'* ('जगद्व्यापारवर्जम्') என்ற வ்யாஸ ஸூத்ரத்திற்கு (4.4.17) விரோதம் ஏற்படுகிறது. எப்படியெனில், ப்ரஹ்மலோகத்திற்கு செல்கின்றவனுக்கு ஸாரூப்யம் ஏற்படுகின்றபோது ஸமானபோகம் ஏற்படுகிறது என்றும், ஆனால் ச்ருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரம் என்ற ஜகத் வ்யாபார வர்ஜிதம் என்று அந்த சக்தி மட்டும் அவனுக்கு ஏற்படாது என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் ஸமானயோகம் மட்டும் ஏற்படுவதாகச்சொல்லப்படுவதால், ஜீவனுக்கு ஸாயுஜ்யம் என்பதே ஏற்படமுடியாதே?

ஸித்தா:- இந்த ஸூத்ரமும் உபாஸகனைப்பற்றி சொல்லப்பட்டதே அன்றி முக்தனைப் பற்றி சொல்லப்பட்டதல்ல. ஹிரண்யகர்ப்பலோக ஸகுணரூபமான பலன்களைப்பற்றி தெரிவிக்கின்றது.

அதாவது உபாஸகனுக்கு தேவதா ஸாயுஜ்யம் ஏற்படுகின்றபோது, அவனுக்கு தனித்த சரீரம் எதுவுமில்லை என்பதால், அசரீரனாக இருந்தபோதிலும், எந்த தேவதா ஸாயுஜ்யம் ஏற்படுகிறதோ அந்த தேவதைக்குரிய ஸகல ஐச்வர்ய ஸித்தியும் ஏற்படுகிறது என்று த்ரவிடாச்சார்யரால் சொல்லப்பட்டிருக்கிறது. (த்ரவிட பாஷ்யகாரரால் சொல்லப்படுகிறது) அது ஸத்யமே. இந்தவிதம் அவரால் தெரிவிக்கப்பட்ட விஷயம், உபாஸனாபலமாக ஹிரண்ய கர்ப்பலோகத்தை அடைகின்றவனைப்பற்றி சொல்லப்பட்டதே அன்றி முக்தனைப்பற்றி சொல்லப்படவில்லை.

வ்யாஸ ஸூத்ரத்தில், உபாஸகனுக்கு, அந்தந்த உபாஸனா பலமாக தேவதாத்மபாவத்தை அடைகின்றபோது இவர்களுக்கு தனித்த சரீரம் இல்லை என்றாலும், சரீரம் வேண்டுமென்றால் தன் சக்தியினால் சரீரத்துடன் கூடிபோகத்தை அனுபவிக்கலாம். அல்லது ஸ்தூல சரீரம் இல்லாமலேயே லிங்க சரீரத்துடனேயே போகத்தை அனுபவிக்கலாம் என்று சில மஹரிஷிகளால் விசாரிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் உபாஸகன் அவன் இஷ்ட்டம் போல் போகத்தை அனுபவிக்கலாம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் இவை எல்லாம் உபாஸகனைப்பற்றி சொல்லப்படும் விஷயம். முக்தனைப்பற்றியது அல்ல.

பூர்வ:- சாந்தோக்ய உபநிஷத்தில் *'ய இஹ ஆத்மானம்'* ('य इहात्मानम्') என்ற வாக்யம் ஆத்மதத்வத்தை அறிந்து செல்கின்றவன், எல்லா லோகத்திலுமுள்ள போகங்களை அனுபவிக்கின்றான் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் அறிந்து கொண்டு என்றும், போகத்தை அனுபவிக்கின்றான் என்றும் தெரிவிக்கின்றபோது பேதம் இருப்பதாகத்தானே அறியப்படுகிறது?

ஸித்தா:- இந்த வாக்யமும் உபாஸகனைப்பற்றி தெரிவிக்கின்ற வாக்யம்தான், ஸகுணமுக்தி பற்றி சொல்லப்படுகிறது.

'ப்ரஹ்மவித் ஆப்னோதி பரம்' 'ब्रह्मविदाप्नोति परम्' என்ற வாக்யம் நிர்க்குணபரமான வாக்யம் என்று முன்பே நிரூபணம் செய்து தெரிவிக்கப்பட்டது. அதனால் இந்த வாக்யம் ஸகுணபரம் என்று சொல்வது தவறு.

'ஏதமானந்தமயம்' (एतमानन्दमयम्) என்றும் அதேபோல் ''ஸ தத்ர பர்யேதி'' (स तत्र पर्येति) என்ற வாக்யமும் ஞானியைப்பற்றி சொல்லப்படும் வாக்யமல்ல. எந்த வாக்யங்களில் பேதம் இருப்பதாக அறியப்படுகிறதோ அவை எல்லாமே உபாஸகனைப்பற்றி தெரிவிக்கின்ற வாக்யங்கள் என்றே அறிய வேண்டும். ரமணம், க்ரீடை முதலான போகங்களை அனுபவிப்பதாகச் சொல்லப்படுவதால், உபாஸகனைப்பற்றிய ஸகுணபரமான வாக்யம் என்றே சொல்லவேண்டும்.

'*ரஸகும்ஹ்யேவாயம் லப்த்வா ஆனந்தீபவதி*' (रसꣳह्येवायं लब्ध्वाऽऽनन्दी भवति) என்று ஸமாதியில் இருப்பவன் ஆனந்தத்தை அனுபவிக்கின்றான் என்று சொல்லப்படுமானால் அந்த வாக்யமும் ஸமாதியில் இருப்பவனைப்பற்றி தெரிவிக்கின்ற வாக்யம் என்றே சொல்லவேண்டுமே அன்றி முக்தனைப்பற்றி தெரிவிப்பதாகச் சொல்லமுடியாது. ஞானி என்பவன் ப்ரஹ்மமாகவே இருக்கின்றான் என்றே சொல்லவேண்டுமேயன்றி ப்ரஹ்மத்தை அனுபவிக்கின்றான் என்றோ ப்ரஹ்மானந்தத்தை அனுபவிக்கின்றான் என்றோ சொல்லமுடியாது '*யதா நத்ய..*' என்ற முண்டகோபநிஷத்தில் நதி த்ருஷ்ட்டாந்தத்தின் மூலம் நதிகள் ஸமுத்ரத்தைப்போய்ச் சேர்ந்தவுடன் ஸமுத்ரமாகவே ஆகிவிடுகிறது என்றே சொல்லப்படுகிறது. இதேபோல் '*த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா*' என்றும் சொல்லப்படுகிறது. இவை எல்லாமே முக்தபரமான வாக்யங்கள் (ஸாயுஜ்யபரம்) அபேதத்தையே தெரிவிக்கின்றது. '*பரமம் ஸாம்யம் உபைதி*' என்ற வாக்யமும் '*ஸாம்யம் உபைதி*' என்று மட்டும் தெரிவித்திருக்குமானால் ஸமானதர்மத்தை அடைகிறான் என்று சொல்லலாம். ஆனால் பரமம் ஸாம்யம் என்று சொல்லப்படுவதால் பரமம் என்று அபேதத்தையே தெரிவிக்கின்றதால் ஸாயுஜ்யம் என்றே தெரிவிக்கின்றது என்று முன்பே தெரிவிக்கப்பட்டது.

பூர்வ:- '*பராத்பரம் புருஷம் உபைதி திவ்யம்*' ('परात्परं पुरुषमुपैति दिव्यम्) என்ற வாக்யம் வித்வான் ப்ரஹ்மத்தை அடைகிறான் என்றே தெரிவிக்கின்றதால், அடைகின்றவன் வேறு அடையப்படுவது வேறு என்றே தெரிவிக்கின்றது. பரமாத்மா கர்மா என்று அடையப்படும் வஸ்துவாகவும் (object) ஜீவன் கர்த்தா அடைகின்றவன் என்றும் பேதம் இருப்பதாகவே தெரிவிக்கின்றது. இதற்காகவே நதி த்ருஷ்ட்டாந்தம் சொல்லப்படுகிறது.

ஸித்தா:- ஸமுத்ரத்தை அடைந்த நதி ஸமுத்ரமாகவே ஆகிவிடுகிறது என்று தெரிவிக்கின்றதே அன்றி இது அடையப்படும் நதி, இது அடையப்படாத நதி என்று பேதம் சொல்லமுடியாது. கேவல சப்த ப்ரயோகமே அன்றி அடைகிறது என்றும் அடையப்படுவது என்றும் அர்த்தபேதம் எதுவுமில்லை.

பூர்வ:- '*பரமம் ஸாம்யம்*' என்பதற்கு பரமாத்ம ஸாம்யம் என்று பரமாத்மா போல என்றே அர்த்தம் செய்யவேண்டும். பரமாத்மாவாக ஆகிறான் என்ற அர்த்தம் பொருந்தாது.

ஸித்தா:- இவ்விதம் பரமாத்மாவிற்கு ஸமானம் என்று சொல்லப்படுமானால் நதி த்ருஷ்ட்டாந்தம் எவ்விதம் பொருந்தும்? ஸமுத்ரத்தை அடைகின்ற நதிகள் ஸமுத்ரத்தைப்போல் ஆகிறது என்று சொல்லமுடியுமா? அதனால் ஸமுத்ரமாகவே ஆகிறது என்று சொல்வதுதான் பொருந்தும். ஆகையால் அபேதம் என்பதே ச்ருதி வாக்யத்தின் தாத்பர்யம் என்று சொல்லவேண்டும்.

பூர்வ:- மதுரமான நதி ஜலம், ஸமுத்ரத்தில் கலந்தவுடன் உப்பு ஜலமாக மாறிவிடுகிறது என்றுதான் சொல்லப்படுகிறதே அன்றி ஸமுத்ரமாகவே ஆகிவிடுகிறது என்று சொல்லப்படவில்லை.

ஸித்தா:- ஸமுத்ரத்தில் நதி கலந்த பிறகு இது ஸமுத்ரஜலம், இது நதிஜலம் என்று பிரித்துச்சொல்லமுடியுமானால், நதிஜலம் ஸமுத்ரத்தில் கலந்ததால் உப்பு ஜலமாகிவிட்டது என்று சொல்லமுடியும். ஸமுத்ரத்தில் கலந்த பிறகு நதிகள் தனித்தனியே இருக்கமுடியாது. வெவ்வேறாக அறியப்படும் இரண்டு வஸ்துக்களுக்கே ஸாம்யம் சொல்லலாம். தனித்தனியே அறியப்படாமல் ஒன்றாகவே அறியப்படும் வஸ்துவிற்கு ஸாம்யம் சொல்லப்படுவதில்லை. அவ்விதம் சொல்லப்படுவதும் பொருந்தாது. ஆகவே, 'லயம்' என்ற சப்தம் ஐக்யத்தை தெரிவிக்கமுடியாது என்று உன்னால் சொல்லப்பட்டதும் தவறு. லயசப்தத்திற்கு ஐக்யம் என்பதைத்தவிர வேறு எந்த விதமான அர்த்தமும் சொல்லமுடியாது. மேலும் '*யதா நத்ய: ஸ்யந்தமானா ஸமுத்ரே அஸ்த்தம் கச்சந்தி நாமரூபே விஹாய*' என்று ஸமுத்ரத்ருஷ்ட்டாந்தத்தில் நதியானது நாமரூபங்களை விட்டு ஸமுத்ரமாகவே ஆகின்றது என்று அபேதமே சொல்லப்படுகிறது.

பூர்வ:- லோகத்தில் நித்யப்ரளயம், நைமித்திகப்ரளயம், மஹாப்ரளயம், ப்ராக்ருதப்ரளயம் என்று அனேக ப்ரளயங்களை லயசப்தத்தினால் சொல்லப்படுகிறது. அதனால் ஆத்யந்த ப்ரளயம் ஒன்றே 'லயம்' என்று சொல்லமுடியும். மற்ற ப்ரளயங்கள் எல்லாம் அந்தந்த காரணத்தில் ஸூக்ஷ்மரூபேண இருக்கின்றதாகவே சொல்லப்படுகிறது. ஆத்யந்திக லயம் சொல்லப்படவில்லை. ஸ்வரூப ஐக்யமும் சொல்லமுடியாது. நித்ய, நைமித்திக ப்ரளயங்களும் ஐக்யம்தான் என்று சொல்லப்படுமானால், சாஸ்திர விசாரணை எதற்கு?

ஸித்தா:- 'லயம்' என்பதற்கு முக்யார்த்தம் ஐக்யம் என்றே சொல்லவேண்டும். நித்ய நைமித்திகம் முதலான ப்ரளயங்களில் லயசப்தம் லாக்ஷணிகப்ரயோகமே அன்றி லயசப்தம் முக்யார்த்தம் என்று சொல்வது சரியல்ல. ஆத்யந்திக லயம் எதுவோ அதுவே முக்தி நிலை. இதையே விஷ்ணு புராணத்திலும் '*ஆத்யந்திகோ விமுக்திர்யா லயோ ப்ரஹ்மணி சாச்வதே*' ('आत्यान्तिको विमुक्तिर्या लयो ब्रह्मणि शाश्वते') என்று சொல்லப்படுகிறது. லயம் என்பதில், நித்யம், நைமித்திகம், மஹாலயம், ஆத்யந்திகலயம் என்று நான்கு விதம் சொல்லப்படுகிறது. இந்த நான்கில் நித்யம் நைமித்திகம் மஹாப்ரளயம் என்ற மூன்றிலும் லய சப்தம் ஔபசாரிகமாகவே சொல்லப்படுவதால், முக்யப்ரயோகமில்லை. இதனாலேயே ஸுஷுப்தியில் ஏற்படும் லயம், ப்ரலீனம் போல் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. உதாரணமாக, ம்ருத்திலிருந்தே கடம் உண்டாகின்றது. கார்யமான கடம் சூர்ணமாக ஆகி காரணாத்மகமான ம்ருத் த்ரவ்யமாக ஐக்யமாகின்றபோது, கடோ நஷ்ட்ட: என்று சொல்லப்படுகிறது. அதனால் லயம் என்பது நாசம். கடம் ம்ருத்தில் லீனமாக இருந்த போதிலும், ம்ருத்தில் கடம் என்ற ஒரு த்ரவ்யம் இருக்கின்றதென்று சொல்வதில்லை. அதேபோல் நஷ்ட்டமான கடம் காரணமான ம்ருத்துடன் ஐக்யத்தை அடைகின்றபோது, ம்ருத்போல கடம் இருக்கின்றதென்று ஸாம்யம் சொல்வதில்லை. ஆகையால் ஞானத்தினால் ஏற்படும் ப்ரளயம் என்பதே, ஆத்யந்திகப்ரளயம் என்று சொல்லப்படும். ஆத்யந்திக ப்ரளயத்தில் ஸ்தூலஸூக்ஷ்மப்ரபஞ்சம் அதன் காரணமாக

அஞ்ஞானத்துடன் நாசத்தை அடைகின்றதால் பரமகாரணமான ப்ரஹ்மத்துடன் அபேதம் அடைகின்றதால் அதுவே முக்யமான லயம் என்று சொல்லப்படுகிறது. நித்ய நைமித்திகம் முதலான ப்ரளயங்களில் ஸ்தூலப்ரபஞ்ச நாசமே அன்றி ஸூஷ்மப்ரபஞ்ச நாசமில்லை. அதனால் இவைகளுக்கு ப்ரஹ்மத்தில் லயம் சொல்லமுடியாது.

பூர்வ:- ப்ரஹ்மத்தில் ஜீவனுக்கு லயம் ஏற்படுவதே ஆத்யந்திக லயம் என்று முன்னால் உங்களால் சொல்லப்பட்டது. இப்போது ஸ்தூல, ஸூஷ்ம ப்ரபஞ்சம் அதற்கு காரணமான அவித்யை இவைகளுக்கு ஆத்யந்திக நாசம் ஏற்படுவதே ஆத்யந்திக லயம் என்று சொல்லப் படுகிறதே?

ஸித்தா:- ஜீவன் நித்யம் என்பதால் ஜீவனுக்கு ஆத்யந்திக லயம் என்று ஒருபோதும் சொல்லப்படவில்லை. ஜீவனுடைய உபாதிலயத்தையே ஜீவனுக்கு லயம் என்று சொல்லப்படுகிறது. முக்தி நிலையில் ஜீவன், ஸ்தூல, ஸூக்ஷ்ம உபாதிகளை நாசம் செய்து கேவல ப்ரஹ்மாத்ம பாவத்தில் இருக்கின்றான். அதனால் ஜீவன் என்றாலும், அவனுடைய உபாதி என்று சொல்லப்பட்டாலும், முக்த நிலையில் ப்ரஹ்மம் போல் இருக்கிறான் என்று ஸாம்யம் சொல்வதற்கே முடியாது. ஜீவப்ரஹ்ம அபேதம்தான் சொல்லமுடியும்.

ஜீவனுடைய உபாதிக்கு த்வம்ஸம் ஏற்படுவதால் ஜீவனை ப்ரஹ்மத்திற்கு வேறாக பிரித்து அறிவிக்கக்கூடிய உபாதி இல்லாததால், ஜீவன் ப்ரஹ்மத்தை அன்றி வேறாக இருக்கமுடியாது என்ற கருத்தையே ''விபேத ஜனகே அஞானே நாசம் ஆத்யந்திகம் கதே ('विभेदजनकेऽज्ञाने नाशमात्यन्तिकं गते') என்ற ச்லோகம் தெரிவிக்கின்றது. நையாயிகரின் ஆரம்பவாதம், ஸாங்க்யரின் பரிணாம வாதம் என்பவைகளில், எவ்விதம் கார்யங்கள் எல்லாம் காரணத்தில் லயத்தை அடைகிறது என்று, காரண ஸ்வரூபமாத்ரமாக ஐக்யத்தை அடைகிறது என்று சொல்லப்படுகிறதோ அதுபோலவும், விவர்த்தவாதத்தில் ரஜ்ஜு அஞ்ஞானத்தினால் தோன்றும் ஸர்ப்பம், ரஜ்ஜு ஞானம் ஏற்பட்டவுடன் ரஜ்ஜுவைத்தவிர வேறு எதுவுமே தோன்றுவதில்லையோ அதுபோல், ஜீவன் அஞ்ஞானம் நிவர்த்தித்தவுடன் (நாசமடைந்தவுடன்) ப்ரஹ்மமாகவே ஆகின்றான். அதனால் ப்ரஹ்மம்போல் ஆகிறான் என்று சொல்வது சரியல்ல. உதாரணமாக ரஜ்ஜுவையே ஸர்ப்பம் என்று அஞ்ஞானத்தினால் ப்ராந்தி ஞானம் ஏற்படுகின்றபோது, ஆப்தனுடைய உபதேசத்தினால் இது ஸர்ப்பம் அல்ல, ரஜ்ஜுதான் என்று அறிகிறானே அன்றி ஸர்ப்பம் ரஜ்ஜுபோல் இருக்கின்றதென்று சொல்வதில்லை.

பூர்வ:- ரஜ்ஜுவே ஸர்ப்பமாக தோன்றுகிறது என்பது சரியல்ல. ஏனெனில் காலத்ரயத்திலும் ஸர்ப்பம் இல்லை என்றுதான் ஞானம் ஏற்படுகிறதே அன்றி, ஸர்ப்பம் ரஜ்ஜுவாகவே இருக்கின்றதென்று ஐக்யஞானம் ஏற்படுவதில்லை.

ஸித்தா:- இஷ்ட்டமே. காரணஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறாக கார்யத்திற்கு தனித்த ஸ்வரூபம் எதுவும் காலத்ரயத்திலும் கிடையாது என்பதே உண்மையான நிலை என்பதையே, ஆரம்பவாதம், பரிணாமவாதம், விவர்த்தவாதம் என்ற எல்லாமே தெரிவிக்கின்றது.

ஆகவே, கார்யங்கள் எல்லாம் மித்யை என்பதால், காரணகார்யங்களுக்கு ப்ரஹ்மத்தில் ஆத்யந்திக லயம் என்றாலே, ஞானத்தினால் ஏற்படும் லயமே ஆத்யந்திக லயம்.

மித்யாவஸ்து எதுவோ அதற்குத்தான் ஞானத்தினால் லயம் ஏற்படமுடியும். ஸத்ய வஸ்துவாக இருக்குமானால் அதற்கு லயம் என்பதே ஏற்படமுடியாது. அஸத்யமாக இருந்தால் லயம் ஏற்படலாமே என்று சொல்லமுடியாது. அஸத் என்றால் துச்சம். இல்லாத வஸ்துவிற்கு லயம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் இருக்கின்ற வஸ்துவிற்கும் லயம் சொல்லமுடியாது, இல்லாத வஸ்துவிற்கும் லயம் சொல்லமுடியாது. தோன்றுகின்ற காலத்தில் மட்டும் இருக்கின்றதாக அறியப்படும் வஸ்துவிற்கே லயம் சொல்லமுடியும். அதனால் மித்யையான இந்த ஜகத்திற்கே லயம் சொல்லவேண்டும்.

பூர்வ:- ரஜ்ஜுவில் தோன்றும் ஸர்ப்பத்திற்கு எவ்விதம் ரஜ்ஜுவில் லயம் சொல்லப்படுகிறதோ, அதுபோல் ஜீவனுக்கு ப்ரஹ்மத்தில் லயம் சொல்லலாமே?

ஸித்தா:- நீ சொல்வது சரியே. ஜீவன், ஈச்வரன், ஜகத் என்பவைகள் எல்லாமே ப்ரஹ்மத்தை அன்றி வேறாக தோன்றுவதால் மித்யை என்றே சொல்லவேண்டும். அதனால் ப்ரஹ்மத்தில் லயம் என்றே சொல்லலாம். ஆனால், ஜீவனென்றும், ஈச்வரனென்றும் உபாதியினால் தோன்றிய ஜீவேச்வரபாவம், ஞானம் ஏற்பட்ட பிறகு உபாதி நாசத்தினால் ப்ரஹ்மமாத்ரமாக இருக்கின்றது என்று சொல்வதால் ஹானி ஏதும் இல்லை. ஜீவஸ்வரூபம் ஸத்யம், ஜீவ உபாதி மித்யை, ஆகையால் ஜீவன் லயத்தை அடைகின்றான் என்றாலே, ஜீவ உபாதி லயம் அடைகின்றது என்றே அர்த்தம். கார்ய லயம் என்பதே காரணபாவத்தை அடைகிறது என்றே சொல்லவேண்டும். இதில் ஆக்ஷேபத்திற்கே இடமில்லை. ஆகவே, கார்யம் காரணத்தில் லயம் என்றாலே ஐக்யம் என்றுதான் அர்த்தம். அதனால் ஸாம்யம் என்று சொல்வது சரியல்ல. ஜீவ உபாதி பரித்யாகமே ஐக்யம் என்று சொல்லப்படுவதால் புதிதாக ஒரு தன்மை ஏற்படுவதாக சொல்லப்படவில்லை.

பூர்வ:- கார்யம், காரணத்தில் ஏகீபாவத்தை அடைவதை லயம் என்று சொல்லமுடியாது. ம்ருத்திலிருந்து கம்புக்ரீவாதி ஆகாரமான கடம் என்ற கார்யம் உண்டாகின்றபோது, ம்ருத்தில் அந்த ஆகாரம் ஏற்படுகிறது. இந்த ஆகாரம், கடம் உடைகின்றபோது நீங்கிவிடுகிறது. அவஸ்த்தாவிசேஷமான ஆகாரத்தைவிட்ட பிறகு கடம் ம்ருத்துடன் சேர்ந்து விடுகின்றது. இதையே லயம் என்று சொல்லவேண்டும்.

ஸித்தா:- காரணம், கார்யம் என்று தெரிவிக்கின்ற இடத்தில் உபாதான காரணம் என்றும், நிமித்தகாரணம் என்றும் இரண்டுவிதம் சொல்லப்படுகிறது. இதில் நிமித்த காரணத்துடந்தான் ஸம்யோகம் என்பதோ, வியோகம் என்பதோ ஏற்படமுடியும். உபாதான காரணத்திற்கு ஸம்யோகமோ, வியோகமோ ஏற்படமுடியாது. ம்ருத் என்பதைவிட்டு, தனியாக கடம் என்பதை பிரிப்பதற்கோ சேர்ப்பதற்கோ முடியாது. அவ்விதம் ம்ருத் என்பதில் ஸம்யோகமோ, வியோகமோ ஏற்படுமானால்தான், இதுவரை சேர்ந்து இருந்தது இப்போது பிரிந்துவிட்டது என்று சொல்லலாம். ஒரு வ்ருக்ஷத்தில் உள்ள பத்ரம், புஷ்பங்கள் கீழே விழுகின்றதுபோல் ம்ருத் வேறு, கடம் வேறு என்று பிரிக்கமுடியுமானால், உன்னால் சொல்லப்படுவது பொருந்தும். அது மட்டுமல்ல, வ்ருக்ஷத்தில், இது வ்ருக்ஷம், இது பத்ரம், இது புஷ்பம் என்று பேதம் அறியப்படுவது போல் இது ம்ருத், இது கடம் என்று பேதம் அறியப்படவில்லை.

பூர்வ:- ம்ருத்திலிருந்து கடம் ஏற்பட்டபிறகு, மீதம் இருக்கின்ற ம்ருத் என்பதும் கடம் என்பதும் வேறாக அறியப்படுகிறதே?

ஸித்தா:- கடத்திற்கு எந்த ம்ருத் காரணமோ, அந்த ம்ருத்தையும் கடத்தையும் தனியாக பிரித்துப்பார்க்கமுடியாது. எஞ்சியுள்ள ம்ருத் இந்த கடத்திற்கு காரணமில்லை. எது காரணமோ, அது அந்த கார்யத்தை விட்டு பிரிக்கமுடியாது. எது பிரித்து அறியப்படுகிறதோ அது இந்த கார்யத்திற்கு காரணமல்ல. ஆகவே ம்ருத்தில் ஏற்படும் கம்புக்ரீவாதி ஆகாரமான அவஸ்த்தை நீங்குமானால் அது ம்ருத்தாகவே இருக்குமே அன்றி கடம் என்பது ம்ருத்துடன் சேருகின்றது என்று சொல்வதற்கு ப்ரமாணம் ஏதும் இல்லை. ஆகார நாசமே கட நாசம். அதன்பின் எதனுடன் எதற்கு ஐக்யம் என்று எப்படிச்சொல்லமுடியும்? ம்ருதாகாரம் என்பதே இருக்கின்றது. ஒரு வ்ருக்ஷத்தில் குரங்கு இருக்கின்றது என்று இரண்டு வஸ்து வேறாக இருக்கின்ற இடத்தில்தான் சொல்லமுடியும். அதுபோல் ம்ருத் என்றும் கடம் என்றும் இரண்டு வஸ்து வேறாக இருந்தால்தான் ஸம்பந்தம் இருக்கின்றதென்றோ, ஸம்பந்தம் இல்லை என்றோ சொல்லமுடியும்.

மேலும், ஸத்கார்யவாதியான உன் மதத்தில் பிண்டாகாரமாக இருந்த ம்ருத், பூர்வ அவஸ்த்தையை த்யாகம் செய்து கடாகாரத்தை அடைகின்றது. இதுவே கடோற்பத்தி என்றும், மறுபடியும் கடாகாரத்தைவிட்டு வேறு ஒரு ஆகாரத்தை அடைகின்றபோது அதுவே கடத்தின் நாசம் என்றும் சொல்லப்படுகிறது. இந்த விதம் காரணமே கார்ய ரூபமான அவஸ்த்தைகளை அடைகின்றதால், காரணத்திற்கும் கார்யத்திற்கும் அபேதம் என்றே சொல்லப்படுகிறது. அதனால், காரணம், கார்யம் என்று இரண்டு பதார்த்தங்கள் இருக்கின்றதென்று சொல்லப் படுமானால், ஸம்பந்தம் என்றும், அதன் பிரிவு என்றும் சொல்லப்படவேண்டும். இவ்விதம் சொல்லப்படுமானால் முன்னால் சொல்லப்பட்டதற்கு விரோதம் ஏற்படும். ஒரே வஸ்து என்றால், அதற்கு ஸம்பந்தம் என்றோ ஸம்பந்தம் இல்லையென்றோ சொல்வதற்கே இடமில்லை.

பூர்வ:- ம்ருதாகாரமாக இருக்கின்ற ம்ருத்திலிருந்து சிறிதளவு ம்ருத்தை எடுத்தே குலாலன் கடாகாரமாகச் செய்கிறான். எஞ்சி இருக்கின்ற ம்ருத் வேறு, கடம் வேறாகத்தான் இருக்கின்றது. உலக்கையைக் கொண்டு கடத்தை உடைத்தால் அது ம்ருத்தாகவே ஆகின்றது. மீதம் இருக்கின்ற ம்ருத்தைப்போலவே, கடத்வம்ஸமான ம்ருத்தும் இருக்கின்றதால் ஸமானம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- குலாலன் எந்த ம்ருத்தை எடுத்து கடமாக செய்கின்றானோ அந்த ம்ருத்தே அந்த கடத்திற்கு காரணம் என்று முன்பே சொல்லப்பட்டது. மீதம் இருக்கின்ற ம்ருத் கடத்திற்கு காரணமல்ல. அதனால் உடைந்த கடத்தின் நாமம் ரூபம் என்ற இரண்டும் போகுமானால் அதன் பிறகு ம்ருதாகாரம் என்று சொல்லவேண்டுமே அன்றி ம்ருத் ஸமானம் என்று சொல்லமுடியாது. உடைந்த ம்ருத்தையும் எஞ்சி இருக்கின்ற ம்ருத்தையும் ஒன்றாக சேர்த்தாலும் கார்ய காரணபாவம் சொல்லமுடியாது.

பூர்வ:- ஆகாசம் என்பது ஸாவயவம் என்பதால் கடாகாசம், மடாகாசம், மஹாகாசம் என்று சொல்லப்படுகின்றபோது பேதம் அறியப்படுகிறது. இந்த த்ருஷ்ட்டாந்தத்தைக் கொண்டு,

ஆத்மா, பரமாத்மா, ப்ரஹ்மம் என்று விளக்கப்படுகிறது. கடாகாசம் என்பது கடம் உடைந்தால் மஹாகாசம் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. அது சரியல்ல மஹாகாசம்போல் ஆகின்றது என்றே சொல்லவேண்டும். ஏனெனில் உபாதி பேதம்தான் நிவர்த்திக்கின்றதே அன்றி வஸ்து பேதம் நீங்குவதாகச் சொல்லமுடியாது. இரண்டும் ஸாவயவமாக இருக்கின்றதால் ஒன்றாக ஆகமுடியாது. ஆத்மா என்பதும் ஒவ்வொன்றும் தனித்தனியே இருக்கின்றது என்றே சொல்லவேண்டும். ஆனால் தேவன் என்றும் மனுஷ்யன் என்றும் உபாதிபேதம் இருக்கின்றதே அன்றி ஆத்மபேதம் இல்லையென்று சொல்வது சரியல்ல. ஒரே ஆத்மா பல ஜன்மாக்களை எடுக்கின்றபோது வெவ்வேறு ஆத்மா என்று நினைக்கின்றான். அது சரியல்ல. ஆத்ம அபேதம் ஸ்வாபாவிகம் என்பதால் அது உபாதி நிவர்த்தியினால் ஒன்று என்று (அபேதம்) சொல்லப்படுவது சரியல்ல. அதனால் ஆத்மா ஏகம் என்று சொல்லமுடியாது. ஸாவயவமான ஆகாசத்திலும் ஔபாதிக பேதம்தான் உபாதி நீங்கும்போது நிவர்த்திக்கின்றதே அன்றி ஸ்வாபாவிகமான அவயவபேதம் நிவர்த்திப்பதில்லை.

ஸித்தா:- ஆகாசம் லோகத்ருஷ்டியில் நிரவயவம் என்று அறியப்படுகிறது. அதனால் இந்த த்ருஷ்ட்டாந்தத்தின் மூலம் ஆத்ம ஸ்வரூபம் விளக்கப்படுகிறது. ஆகாசம் ஸூக்ஷ்ம அவயவம் உள்ளது என்று சாஸ்திரம் தெரிவிக்கின்றது. ஏனெனில் ப்ரஹ்மத்தை அன்றி வேறான எதுவும் நிரவயவம் என்று சொல்லமுடியாது என்று '*அதோன்யதார்த்தம்*' என்று ச்ருதியே தெரிவிக்கின்றது. ஆகாசம் ஸூக்ஷ்ம அவயவம் என்பதற்கு சாஸ்திரம்தான் ப்ரமாணம். அதனால் த்ருஷ்ட்டாந்தமாகச்சொல்லப்படுவதெல்லாம் தார்ஷ்ட்டாந்தத்தில் முற்றிலும் பொருந்தமுடியாது. ஸமுத்ரத்தைப்போல் எல்லையற்றது என்று, சொல்லப்படுவதற்காக, ஸமுத்ரம் எல்லை அற்றது என்று சொல்லமுடியுமா? ஸமுத்ரத்தின் கரை என்பதே கண்ணிற்கு எட்டவில்லை என்ற காரணத்தினால் எல்லை அற்றது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கடாகாசம் என்பது கடம் உடைந்த பிறகு அந்த உபாதியினால் அறியப்பட்ட பேதம் நிவர்த்திக்கின்றதால் மஹாகாசமாகவே ஆகிறது. நதியானது ஸமுத்ரத்தை அடைந்த பிறகு இது நதி, இது ஸமுத்ரம் என்று பேதம் அறியப்படுவதில்லை. ஸமுத்ரத்தில் நதியானது ஏகீபாவத்தை அடைவதுபோல் அஞ்ஞானம் என்ற உபாதி நாசமாகுமானால் ஜீவன், ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்பதையே ஐக்யம் என்றும் ஸாயுஜ்யம் என்றும் சொல்லப்படுகிறது. அதனால் ஸாம்யம் என்று சொல்லமுடியாது. அதனால்தான் ச்ருதியானது பரமம் ஸாம்யம் என்று ஏகீ பாவத்தையே தெரிவிக்கின்றது.

'தத் த்வமஸி' முதலான வாக்யங்களில் ஸாமானாதிகரண்யப்ரயோகம் செய்யப் படுவதிலிருந்தே ஸ்பஷ்ட்டமாகவே அபேதம் ஸித்திக்கின்றது.

பூர்வ:- மோக்ஷம் என்பது, ஸாலோக்யம், ஸாரூப்யம், ஸாமீப்யம், ஸார்ஷ்டி, ஸாயுஜ்யம் என்று ஐந்து வித மோக்ஷம் சொல்லப்படுகிறது. ஒரு சிலர் ஸார்ஷ்ட்டி என்பதை விட்டு நான்கு என்று சொல்கிறார்கள். இதில் ஸயுக் என்பதிலிருந்து ஸாயுஜ்யம் என்ற பதம் சொல்லப்படுகிறது. ஸயுக் என்றால் ஸமானகுணயுக் என்றே அர்த்தம். அதனால் ஸாயுஜ்யம் என்றால் ஸமானகுணத்தை அடைகின்றான் என்றே சொல்லவேண்டுமென்பதால், இரண்டு வஸ்து இருந்தால்தான் ஸமானம் என்று சொல்லமுடியும். அதனால் பேதத்தை அடிப்படையாகக்

கொண்டதுதான் ஸாயுஜ்யம் என்பதால் அபேதம் அர்த்தம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் ஜீவனும் ஈச்வரனும் வேறு என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- மோக்ஷம் என்பது ஐந்து விதம் என்று சொல்வதே சரியல்ல.

1. ஸாலோக்யம் (ஸலோகம்) என்றால் எந்த தேவதாஸ்வரூபத்தை உபாஸிக்கின்றானோ ஸேவ்யனான பகவான் எந்த லோகத்தில் வஸிக்கின்றாரோ அந்த லோகத்திற்கு போய்ச் சேர்ந்து வஸிப்பதற்கு ஸாலோக்யம் என்று பெயர். (ஸமான லோக வாஸித்வம் ஸாலோக்யம்) விஷ்ணுவை உபாஸிப்பவர்கள் வைகுண்டத்தில் வாஸம் செய்கிறார்கள் என்று ஸமான லோகத்தையே ஸாலோக்யம் என்று அர்த்தம் செய்யவேண்டும். ஸமானசப்தத்திற்கு 'துல்யம்' என்பதே முக்யார்த்தம். சில இடத்தில் ஏகம் என்று அர்த்தம் செய்யப்படுகிறது. ஸமான சப்தம் ஏகம் என்ற அர்த்தத்தில் ஸாலோக்ய சப்தத்தில் சொல்லப்படுகிறது .

2. ஸாரூப்யம் - ஸமான ரூபத்வம், ஸேவ்யனான பகவானின் ரூபம் போன்ற துல்யமான ரூபம்.

3. ஸாமீப்யம் - ஸேவ்யஸமீபவர்த்தித்வம் ஸாமீப்யம். ஸேவ்யனான பகவான் ஸமீபத்தில் வஸிப்பது ஸாமீப்யம்.

4. ஸார்ஷ்டி - ஸேவ்யனான பகவானுக்கு ஸமானமான ஐச்வர்யத்வம் ஸார்ஷ்டித்வம்.

இந்த விதமான நான்கு முக்திகளும் ஸகுண உபாஸகனுக்கு ஏற்படும் பலம்.

5. ஸாயுஜ்யம் என்பது நிர்குண பரமான ஞானத்தினால் ஏற்படும் பலன். ஆகவே, உபாஸனத்தினால் அடையப்படும் பலம் நான்கு விதம். ஞானத்தினால் அடையப்படும் பலம் ஒரே விதம்தான். நிர்க்குண ஸ்வரூபமாகவே ஆகிறதே ஸாயுஜ்யம். அதனால் ஸாயுஜ்யம் என்பதே அபேதம் என்பதால் ஸமான குணம் என்று சொல்வது சரியல்ல. ஸாயுஜ்யம் என்பதற்கு 'ஸமானஸ்திதியுக், தஸ்யபாவ:' ஸாயுஜ்யம் என்று அர்த்தம் செய்யலாம். அல்லது ஸமானபாவயுக் ஸயுக் என்று அதேதன்மையை அடைகிறான் என்று சொல்லலாம். அல்லது ப்ரஹ்மணா ஸஹ அபேதேன யுங்க்தே திஷ்ட்டதி என்று ப்ரஹ்மத்துடன் அபேத ஸ்திதி பெற்றிருப்பது என்று (யுக்=திஷ்ட்டதி) அர்த்தம்.

'யுக்' என்றால் சேர்ப்பது என்றுதானே அர்த்தம்? திஷ்ட்டதி என்று ஸ்திதி பெற்றிருப்பது என்று எவ்விதம் அர்த்தம் செய்யமுடியும் என்றால், சில தாதுக்களுக்கு சில அர்த்தம் சொல்லப்பட்டபோதிலும், ஸந்தர்ப்பத்தை அனுசரித்து வேறு அர்த்தமும் செய்யலாம் என்று பாணினியே தெரிவிக்கின்றார். அதனால் யுக் என்பதற்கு திஷ்ட்டதி என்றே அர்த்தம் சொல்லலாம். மேலும் ஸாயுஜ்யம் என்றால் அபேதம்தான் அர்த்தம் என்று ஸூதஸம்ஹிதையில் ஸ்பஷ்ட்டமாகவே சொல்லப்படுகிறது. '*அன்யா ஸாயுஜ்யரூபோக்தா ஸத்யவிஞானரூபிணீ, கேவலம் ப்ரஹ்மரூபோக்தா ஸர்வதா ஸுகலக்ஷணா. ஸர்வேஷாம் ப்ராணினாம் ஸாக்ஷாத் ஆத்மபூதா ஸ்வயம்ப்ரபா ....*' ('अन्या सायुज्यरूपोक्ता सत्यविज्ञानरूपिणी । केवलं ब्रह्मरूपोक्ता सर्वदा सुखलक्षणा ॥ सर्वेषां प्राणिनां साक्षादात्मभूता स्वयंप्रभा') என்ற ச்லோகத்தில் '*அன்யா ஸாயுஜ்யரூபா*'

என்று சொல்லப்படுவதன் அர்த்தம் என்னவென்றால், இந்த ச்லோகத்திற்கு முன் ஸாலோகம் முதலானவைகளைப்பற்றி தெரிவிக்கப்பட்டிருக்கின்றதால் அதற்கு அன்யமாக ஸாயுஜ்ய ரூபமான முக்தி என்ற ஒன்று இருக்கின்றது, அதுவே பரமார்த்தமான முக்தி, இந்த முக்தி விஞ்ஞான ரூபமான முக்தி (விஞ்ஞான பலமான முக்தி) ப்ரஹ்மஸ்வரூபமாகவே, ப்ரஹ்மாத்ம பாவத்தை அடைவதையே ஸாயுஜ்ய முக்தி என்று சொல்லப்படுகிறது. '*ஸர்வதா ஸுகலக்ஷணா*' என்ற பதம் நித்யமான ஸுகரூபமான முக்தி, அதிலிருந்து புன்ராவ்ருத்தி கிடையாது. அதுவே ஸர்வ ப்ராணிகளுக்கும் ஸ்வரூபமாக இருக்கின்ற ப்ரஹ்மம், அதுவே ஸ்வப்ரகாசம் என்றும் தெரிவிக்கின்றது. ஆகையால் ஸாயுஜ்யம் என்பதே அபேத முக்தி என்று ஸூதஸம்ஹிதையிலேயே சொல்லப் பட்டிருப்பதால், வேறு எந்த அர்த்தமும் செய்யமுடியாது.

பூர்வ:- ஸூதஸம்ஹிதையில் ஸாலோக்யம் முதலானவைகள் தெரிவித்த பிறகு ஸார்ஷ்டி என்பதைப்பற்றி தெரிவிக்கவில்லை. அதனால் ஸார்ஷ்டி என்பதே ஸாயுஜ்யம் என்று சொல்ல வேண்டும்.

ஸித்தா:- ஸாயுஜ்யம் என்பதற்கு ஸார்ஷ்டி என்று அர்த்தம் செய்யமுடியாது. ஸாமீப்யம் என்று சொல்லப்பட்டதனாலேயே ஸார்ஷ்டி என்று சொல்லத்தேவை இல்லை. ஸாமீப்யம் என்பதே உபலக்ஷணமானதால் ஸார்ஷ்டி என்று தனியாக சொல்லப்பட வேண்டியதில்லை. விஷ்ணு முதலான ஸோபாதிக ஸ்வரூபத்துடன் ஸாயுஜ்யம் என்பது ஏற்படமுடியாது. நிருபாதிக வஸ்துவிற்கே ஸாயுஜ்யம் சொல்லமுடியும். மற்ற முக்திகளுக்கு அபேதம் ஸம்பவிக்கமுடியாது.

பூர்வ:- ஸோபாதிகஸ்வரூப உபாஸனையினால் ஏற்படும் பலனான முக்தியை தெரிவிக்கின்ற போது ஸாயுஜ்யம் என்பதை சேர்த்தே சொல்லப்படுகிறதே? அதாவது *ஏதாஸாமேவ தேவதானாம் ஸாயுஜ்யம், ஸார்ஷ்டிதாம் ஸமானலோகதாமாப்னோதி* என்று ச்ருதியில் ஸகுண தேவதா உபாஸன பலனாக ஸாயுஜ்யம் சொல்லப்படுகிறதே?

ஸித்தா:- இந்த இடத்தில் ஸாயுஜ்யம் என்பதற்கு ஸாமீப்யம் என்று அர்த்தம். மேலும் உபாஸகர்களுக்கு ஸாயுஜ்ய முக்தி கிடையாது என்பதையே '*காச்சித் சங்கர ஸாரூப்யரூபா: ப்ரோக்தா விமுக்தயே*' ('काश्चिच्छङ्कर सारूप्यरूपाः प्रोक्ता विमुक्तये) என்றே ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே, '*யதா நத்ய:...*' என்ற ச்ருதியானது பரமம் ஸாம்யம் -ஐக்யம்- அபேதத்தையே தெரிவிக்கின்றது என்பதில் ஆக்ஷேபத்திற்கே இடமில்லை.

பூர்வ:- '*த்வே வித்யே வேதிதவ்யே பரா சைவ அபரா ச*' என்ற முண்டகோபநிஷத் வாக்யம், வித்யை இரண்டுவிதம் என்றும், பரம் என்றும் அபரம் என்றும் சொல்கிறது. இந்த வாக்யம், விஷ்ணுவை உபாஸிப்பது பரவித்யை என்றும், மற்ற தேவதா உபாஸனைகள் அபராவித்யை என்றும்தெரிவிக்கின்றது. அதனால் நிர்க்குணவித்யைதான் பரம் என்று எந்த ஓரிடத்திலும் தெரிவிக்கவில்லை. அதனால் பரவித்யையான விஷ்ணு உபாஸனையினால் முக்தி ஏற்படவேண்டும். முக்தனுக்கு நிர்க்குணப்ரஹ்மப்ராப்தி என்பதே கிடையாது என்று ராமானுஜரால் சொல்லப்படுகிறதே?

ஸித்தா:- நிர்க்குணப்ரஹ்மப்ராப்தியே கிடையாது என்று எவ்விதம் சொல்லமுடியும்? '*அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே, யத்தத் அத்ரேச்யம், அக்ராஹ்யம், அகோத்ரம், அவர்ணம்*'

என்று ப்ரஹ்மத்தில் இருப்பதாக அறியப்படும் ஸர்வதர்மங்களையும் ப்ரதிஷேதம் செய்து நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்று அறிவிக்கின்றதே? ஆகவே நிர்க்குணபரமான வாக்யமே இல்லை என்று எப்படிச்சொல்லமுடியும்? இதுவே பரவித்யை என்பதால், ஸகுணவிஷயம் பரவித்யை என்று சொல்வது சரியல்ல.

பூர்வ:- '*ஸத்யம் ஞானம் அனந்தம் ஆனந்தம் ப்ரஹ்ம*' என்று குணங்கள் இருப்பதாகவே தெரிவிக்கின்றதால் நிர்க்குணம் என்று சொல்வது சரியல்ல.

ஸித்தா:- ஸத்யம் ஞானம் அனந்தம் ஆனந்தம் என்பதெல்லாம் ப்ரஹ்மத்தின் குணமல்ல, ப்ரஹ்மஸ்வரூபத்தையே இந்த பதங்கள் போதிக்கின்றது என்ற விஷயம் மிக விஸ்தாரமாக முன்பே விசாரிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் நிர்விசேஷம் நிர்க்குணம் என்றே ஸித்தம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், ஸகுணப்ரஹ்ம உபாஸகர்கள் அர்ச்சிராதிமார்க்கமாக ப்ரஹ்ம லோகத்தை அடைகின்றார்கள். உபாஸகர்களான அவர்களுக்கு ஸாயுஜ்ய முக்தி கிடையாது. ஆத்ம ஞானத்தை அடைந்த ஞானிகளுக்கே ஐக்ய முக்தி கிடைக்கும். ஸத்யம் ஞானம் முதலானவைகள் ப்ரஹ்மஸ்வரூபம் என்று சொல்லப்படுவதற்காக ப்ரஹ்மத்வத்திற்கு எவ்வித ஹானியும் கிடையாது. அதனால் நிர்க்குணம் ப்ரஹ்மம் என்று சொல்வதற்கு விரோதம் ஏதுமில்லை. ஆனால் ஸம்யத்வாமத்வம், ஸத்யகாமம், ஸத்யஸங்கல்பம் என்ற தன்மைகள் சொல்லப்படுமானால், ப்ரஹ்மம் நிர்க்குணம் என்று சொல்லமுடியாது.

ஸத்யம் ஞானம் அனந்தம் ஆனந்தம் என்பதெல்லாம் ஒரு உபாதியினால் ப்ரஹ்மத்திற்கு ஏற்படும் தன்மைகள் அல்ல. ஆனால் ஸம்யத்வாமத்வம் (கர்மபலதாத்ருத்வம்), ஸத்யகாமத்வம் முதலானவைகள் மாயை என்ற உபாதியைக்கொண்டே சொல்லவேண்டும். உபாதி ஆவிஷ்ட்டமான தர்மங்களை ப்ரஹ்மத்தினிடம் சொல்லப்படுமானால் அது ஸகுணப்ரஹ்மமாகவே ஆகின்றது. உபாதி அற்றதான ஸத்யம் முதலானவை ப்ரஹ்மஸ்வரூபமாகவே ஆகின்றது. உதாரணமாக தைத்ரீயத்தில் 'ஸத்யம் ஞானம் அனந்தம்' என்றும் ப்ருஹதாரண்யகத்தில் 'விஞ்ஞானம் ஆனந்தம் ப்ரஹ்ம' என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் ஓரிடத்தில் சொல்லப்படுவதை மற்றொரு இடத்தில் சொல்லப்படவில்லை என்றால் அந்த பதங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். தைத்ரீயத்தில் சொல்லப்படாத ஆனந்த பதத்தை சேர்த்து ஆனந்தம் ப்ரஹ்ம என்று சொல்லலாம். இதேபோல் ப்ருஹதாரண்யகத்தில் சொல்லப்படாத ஸத்யம் அனந்தம் என்ற பதங்களை சேர்த்து ஸத்யம் அனந்தம் ப்ரஹ்ம என்றும் சொல்லலாம். ஏனெனில் ப்ரஹ்மம் ஏக ரூபமாக இருக்கின்றதால் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை தெரிவிக்கின்ற பதங்களை சேர்த்துச் சொல்லலாம்.

உபாதிமூலமாகசொல்லப்படும்தன்மைகள்எல்லாம்கோசதர்மம். அதாவது ப்ரஹ்மத்தைத்தவிர, மற்ற ஜடமான உபாதிகளில் இருக்கின்ற தர்மங்களை எல்லாம் உபஹிதமான சைதன்ய ஸ்வரூபத்தில் இருப்பதாக அத்யாஸத்தினால் சொல்லப்படுகிறது. உபாதிகள் அனேகமாக இருப்பதால் அதன் தர்மங்களும் அனேகமாக இருக்கின்றது. இவ்விதம் ப்ரஹ்மத்தினிடம் இல்லாத குணங்கள் எல்லாம் ஆரோபம் செய்யப்படுவதால் ப்ரஹ்மம் ஸகுணம் என்று சொல்ல நேரிடுகிறது. ஆகவே ப்ரஹ்ம ஸ்வரூபம் என்று சொல்லப்படுவதெல்லாம் பேதத்தை தெரிவிப்பதில்லை.

'ஏகமேவ அத்விதீயம்' என்பதே இதுவரை சொல்லப்பட்டதின் சாரம். அந்த அத்விதீய ஸ்வரூபத்தை அறிந்து கொள்வதற்காகவே, அதற்குரிய உபாயமாக ஸத்யம் ஞானம் அனந்தம் ஆனந்தம் ப்ரஹ்ம என்று ப்ரஹ்ம ஸ்வரூபம் பற்றி தெரிவிக்கப்படுகிறது. உதாரணமாக சர்க்கரை என்பது என்ன என்றால், மதுரமாக இருப்பது (இனிப்பாக) சர்க்கரை என்று சர்க்கரையின் ஸ்வரூபம் என்னவென்று சொன்னால்தான் அறிந்து கொள்ள முடியும். 'ஸத்யம் ஞானம் அனந்தம் ஆனந்தம்' என்பதே ப்ரஹ்ம ஸ்வரூபலக்ஷணம். மற்ற எல்லாம் குணமாக இருக்கின்றதால் அவைகளை லக்ஷணம் என்று சொல்லமுடியாது.

கம்புக்ரீவாதி ஆகாரம் (ரூபம்) உள்ளது கடம் என்று சொல்லலாமே அன்றி சிகப்பாக இருப்பது கடம் என்று சொல்வதில்லை. குணம் குணியில் உள்ள தர்மம் என்பதால் ஸ்வரூபலக்ஷணம் என்று சொல்லப்படுவதில்லை.

ஆகவே, இதுவரை விசாரிக்கப்பட்ட விஷயங்களைக்கொண்டு உபாதி மூலமாக ப்ரஹ்மத்திற்கு சொல்லப்படுபவை எல்லாம் ஸகுணப்ரஹ்மத்தில் தான் ஏற்படும். உபாதி நிரபேக்ஷமாக சொல்லப்படுவதெல்லாம் ப்ரஹ்ம ஸ்வரூப ப்ரதிபாதகம் என்றே அறிய வேண்டும்.

பூர்வ:- *'ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி'*, *''நாம ரூபாத் விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்''*, *''நிரஞ்சன: பரமம் ஸாம்யம் உபைதி''*, *''பரம்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேன ரூபேண அபிநிஷ்பத்யதே''*, என்கிற வாக்யங்களை கவனிக்க வேண்டும். ('ब्रह्म वेद ब्रह्मैव भवति, नाम रूपाद्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यम् , निरञ्जनः परमं साम्यमुपैति, परंज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते) ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றது என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் *'நாமரூபாத் விமுக்த:' 'பராத் பரம் புருஷமுபைதி திவ்யம்'* என்றும் *'நிரஞ்சன: பரம் ஸாம்யம் உபைதி'* என்றும் *'பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யதே'* என்றும் தெரிவிக்கின்ற இந்த வாக்யங்கள் எல்லாம் எந்த அர்த்தத்தை தெரிவிக்கின்றதோ அதைத்தான் *'ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி'* என்ற வாக்யத்திற்கும் அர்த்தமாகச் சொல்லவேண்டும்.

வித்வானுக்கு ப்ராக்ருத நாம ரூபங்கள் நீங்கினவுடன். அப்ராக்ருத நாம ரூபமுடைய பகவானுக்கு ஸமானமாக ஆகிறான் என்றே சொல்லவேண்டும். அதனால் ப்ராக்ருத நாமரூபத்தினால் என்ன பேதம் அறியப்பட்டதோ அதுமட்டுமே அஞ்ஞான நாசத்தினால் நிவர்த்திக்கின்றது. அதனால் *'ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி'* என்ற வாக்யம், நாமரூபங்களிலிருந்து விடுபட்டவன், ப்ரக்ருதியினால் ஏற்பட்ட நாமரூபம் முதலான பேதங்கள் நீங்கி ஞானஸ்வரூபமாத்ரமாகவே இருக்கிறான் என்றே சொல்லப்படுகிறது. ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று சொல்லப்படவில்லை. ஆத்மாவில் ஸ்வாபாவிகமாக இருக்கின்ற பேதம் இருக்கின்றது. ஔபாதிக பேதம் மட்டுமே அவித்யா நாசத்தினால் நிவர்த்திக்கின்றது. அதனால் பகவானும் ஞானாகாரம். ஜீவனும் ஞானகாரம் என்று இரண்டிற்கும் ஸமான ஆகாரம் இருக்கின்றதால் ஜீவபரமாத்ம ஐக்யம் சொல்லப்படுகிறதே அன்றி உண்மையில் ஏகம் என்று சொல்வது சரியல்ல. உதாரணமாக, ஒரு தேசத்தில் ஏதோ ஒரு காலத்தில் பார்த்த ஒரு பசுவை, மற்றொரு தேசத்தில், மற்றொரு காலத்தில்

பார்க்கின்றபோது 'அதுவே இது' என்று ப்ரத்யபிஞ்ஞை ஏற்படுவதாகச்சொல்லப்படுகிறது. பசு என்ற வ்யக்தியும், அதன் ஆகாரமும் இரண்டுமே ஒன்றாக இருக்கின்றதால் அதுவே இது என்று ப்ரத்யபிஞ்ஞை ஏற்படலாம். ஆனால், தேசம், காலம் என்ற பேதமும் இருக்கின்றது. அதனால் ஆகாரத்தைக்கொண்டு அபேதமும், தேசம், காலம் இவைகளைக்கொண்டு பேதம் இருந்தாலும் கூட அதுவே இது என்று சொல்லப்படுகிறது. இதேபோல் ஈச்வரனும் ஞானாகாரம், ஜீவனும் ஞானாகாரம் என்பதைக்கொண்டு இரண்டும் ஒன்று என்று சொல்லப்பட்ட போதிலும் உண்மையில் ஜீவேச்வரபேதம் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- இது பொருந்தாது. '*புருஷமுபைதி திவ்யம்*' என்பதற்கு 'ஸாயுஜ்யம்' என்றே அர்த்தம் சொல்லப்படுகிறது. 'புருஷனாகவே ஆகிறான்' என்று தெரிவிக்கின்றதே அன்றி புருஷனைப்போல் ஆகிறான் என்று சொல்லப்படுவது சரியல்ல. புருஷமுபைதி என்ற வாக்யத்தில் உள்ள 'உபைதி' என்ற பதத்திற்கு ஸாமீப்யம் என்று அர்த்தம் செய்வதற்கே முடியாது. உபைதி என்ற பதத்திற்கு அடைகிறான் என்று அர்த்தம் சொல்லவேண்டுமே அன்றி, புருஷ சமீபத்தை அடைகிறான் என்று லக்ஷணையாக அர்த்தம் செய்வது சரியல்ல. புருஷனை அடைகிறான் என்றே அர்த்தம் சொல்லவேண்டும்.

பூர்வ:- புருஷனை அடைகிறான் என்றால், புருஷஸம்யோகம் ஏற்படுகிறது என்றே அர்த்தம் சொல்லவேண்டும். கிராமத்தை அடைகிறான் என்றால் க்ராமமாகவே ஆகிறான் என்று அர்த்தம் செய்யமுடியாது.

ஸித்தா:- புருஷன் க்ராமத்தை அடைகிறான் என்றால் புருஷனும் ஸாவயவம், க்ராமமும் ஸாவயவம். அத்துடன் க்ரியை என்பதும் இருக்கின்றது. அதனால் ஸம்யோகம் ஸம்பவிக்கலாம். ஆனால் ஆத்மாவும் நிரவயவம், நிஷ்க்ரியம், பரமாத்மாவும் நிரவயவம் நிஷ்க்ரியம். இவ்விதம் நிரவயவமாகவும் நிஷ்க்ரியமாகவும் இருக்கின்ற வஸ்துவிற்கு ஸம்யோக ஸம்பந்தம் எவ்விதம் ஏற்படமுடியும்? அதுமட்டுமல்ல, '*நிரஞ்சனம் ஸாம்யம் உபைதி திவ்யம்*' என்று நிரஞ்சனம் என்று உபாதி வர்ஜித ஸ்வரூபம் என்று சொல்லப்படுவதால் அபேதம்தான் அறியப்படுகிறது. '*பரம்ஜ்யோதி: உபஸம்பத்ய ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யதே*' (परंज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते) என்று வாஸ்தவத்தில் பரமாத்மாவான ஜீவனானவன் அவித்யாவசாத் இதுவரை பரஸ்வரூபத்தில் அதாவது ஜீவனாக தன்னை நினைத்து இருந்தவன், அவித்யா நாச த்திற்குப்பின் ஸச்சிதானந்த லக்ஷண ஸ்வஸ்வரூபத்தை அடைகிறான் என்றே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது. ப்ராந்தியினால் ஏற்பட்டது பரரூபம், (ஜீவபாவம்). ப்ராந்தி நாசத்தினால் ஸ்வஸ்வரூபத்தில் இருக்கின்றான் என்றே தெரிவிக்கின்றது. ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி என்ற வாக்யத்தைப்போலவே, இந்த வாக்யங்களும் அபேதத்தை போதிக்கின்றது என்றே சொல்லவேண்டும். அதனால் இதுவரை சொல்லப்பட்ட வாக்யங்களுக்கு விரோதம் ஏதுமில்லை. அதனால் ப்ரஹ்மம் போல ஆகிறான் என்று அர்த்தம் செய்வது தவறு.

மேலும், ப்ரத்யபிஞ்ஞை ஏற்படுமிடத்தில், பேதம், அபேதம் இரண்டுமே இருக்கின்றது என்று உதாரணம் சொல்லப்பட்டதும் சரியல்ல. ப்ரத்யபிஞ்ஞை ஏற்படும் இடங்களில் தத்தேசம் தத்காலம் என்பதையும், ஏதத்தேசம் ஏதத்காலம், என்பதையும் விலக்கப்பட்டதனாலேயே

'அதுவே இது' என்று ப்ரத்யபிஞ்ஞை ஏற்படுகிறது. இவ்விதம் விலக்கப்பட்ட கால தேசங்களினால்தான் 'கோ' என்ற வ்யக்திமாத்ர போதம் ஏற்படுகிறது. கௌ: என்று அகண்டஸ்வரூபம்தான் அறியப்படுகிறது. அதனால் அபேதம்தான் அறியப்படுகின்றதே அன்றி பேதம் அறியப்படவில்லை. மேலும், 'ப்ரஹ்மவித் (ப்ரஹ்மவேத) ப்ரஹ்மைவ பவதி' என்ற வாக்யத்திற்கு உன்னால் சொல்லப்பட்ட த்ருஷ்ட்டாந்தம் சரியல்ல. ஏனெனில் 'தத் த்வமஸி' என்ற வாக்யம், ஜீவனுக்கு ப்ரஹ்ம பாவத்தை போதிக்கின்ற வாக்யம், ப்ரத்யபிஞ்ஞை அல்ல. 'ஸோயம் கௌ:' என்ற வாக்யம் ப்ரத்யபிஞ்ஞை. ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு தேசத்தில் பார்த்த வஸ்துவை, மறுபடி வேறு ஒரு காலத்தில் வேறு ஒரு தேசத்தில் பார்க்கின்றபோது ப்ரத்யபிஞ்ஞை ஏற்படலாம். ஆனால் 'தத் த்வமஸி' என்ற வாக்ய ப்ரயோகம் செய்கின்றபோது, 'நீயே ப்ரஹ்மம்' என்று உபதேசம் செய்கின்றது. (அறிவிக்கின்றது) இது ப்ரத்யபிஞ்ஞை அல்ல. ப்ரத்யபிஞ்ஞையாக இல்லாத 'நேரிடையாகவே வாக்யத்தினால் ஏற்படும் ஞானத்திற்கு' ப்ரத்யபிஞ்ஞையை உதாரணமாகக்கொண்டு விளக்கப்படுவது முற்றிலும் பொருந்தாது. மேலும், ஜீவனும், ஈச்வரனும் ஞானாகாரம் என்பதால் ஆகார அபேதத்தைக்கொண்டு ஏகம் என்று அபேதம் சொல்லலாம் என்று சொல்லப்பட்டதும் சரியல்ல. இரட்டையர்களான தேவதத்தனும், யஞ்ஞதத்தனும் ஒன்று என்று ஆகார ஒற்றுமையைக்கொண்டு சொல்லமுடியாது. ஆகார ஸாம்யத்தைக்கொண்டு இரண்டும் ஒன்றுதான் என்று சொல்லப்படுமானால் அது ப்ராந்திஞானமே அன்றி தத்வஞானம் அல்ல. அதனால் ஈச்வரனைப்போல ஆகாரமுள்ளவன் ஜீவன் என்பதற்காக ஜீவேச்வர ஐக்யம் ச்ருதி தெரிவிப்பதாக சொல்லமுடியாது. ஆகவே, முக்தன் ப்ரஹ்மபாவத்தை அடைகின்றான் என்றே சொல்லவேண்டும. உபாதிபேதத்தினால் பேதம் அறியப்படுகிறதே அன்றி, உண்மையில் ஸ்வரூபபேதம் கிடையாது. உபாதி உள்ளவரையில்தான் பந்தன். உபாதி நாசத்திற்குப்பின் பந்தனே ப்ரஹ்மமாகிறான். அவனைத்தான் முக்தன் என்று சொல்லப்படுவதால் ஜீவபரமாத்ம பேதம் என்று சொல்வதற்கே முடியாது.

பூர்வ:- முக்தனாக இருந்தாலும், அப்ராக்ருத நாமரூப பேதம் இருப்பதாகத்தான் சொல்ல வேண்டும். அதனால் ஜீவ பரமாத்ம உபாதி பேதம் முக்தனுக்கும் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- நாமரூபம் என்றாலே ப்ராக்ருதம்தான். அப்ராக்ருத நாம ரூபம் என்பதே கிடையாது. எந்த ப்ரமாணத்தினாலும் ஸித்திக்கவில்லை. அதனால் ப்ரமாணமின்றி சொல்லப்படும் விஷயங்களை ஒத்துக்கொள்ள முடியாது.

பூர்வ:- வைகுண்டலோகம் அப்ராக்ருதம் என்பதால் அங்குள்ள நாமரூபாதிகளும் அப்ராக்ருதம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- வைகுண்டலோகமும் ப்ராக்ருதம் என்றே (மாயாமயம் என்றே) சொல்லவேண்டும். ஏனெனில் ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களினால் அறியப்படுகிறது. இவ்விதம் த்ருச்யமாக (அறியப்படும் வஸ்துவாக) இருப்பதெல்லாமே ப்ராக்ருதம் என்று சொல்லவேண்டுமே அன்றி அப்ராக்ருதம் என்று சொல்லமுடியாது.

பூர்வ:- மாயாமயமாக இருந்தாலும், வைகுண்டத்திலுள்ள உபாதிகள் சுத்தஸத்வமாக இருக்கின்றதால் அவைகளை அப்ராக்ருதம் என்றே சொல்லப்படுகிறது. முக்குண ஸம்பந்தமான உபாதியாக இருந்தால்தான் ப்ராக்ருதம் என்று சொல்லலாம். வைகுண்டத்தில் ரஜோ குணம், தமோகுணம் இல்லாமல் ஸத்வகுணமாத்ரமாக இருக்கின்றதால் அதை ப்ராக்ருதம் என்று சொல்லமுடியாது. அப்ராக்ருதம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- சுத்தஸத்வம் என்றோ, மலின ஸத்வம் என்பதோ எல்லாமே ப்ரக்ருதி குணபரிணாமம்தானே? சில இடத்தில் சுத்தமாகவும், சில இடத்தில் மலினமாகவும் இருப்பதற்காக அப்ராக்ருதம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? எல்லாமே ப்ரக்ருதி கார்யம் (பரிணாமம்) தான். மனுஷ்யலோகத்தைக்காட்டிலும் தேவலோகம் சிறந்தது, தேவலோகத்தைக்காட்டிலும் ப்ரஹ்மலோகம் சிறந்தது என்று ஸுகவிசேஷதாரதம்யத்தினால் ஏற்படும் வித்யாஸமே அன்றி, மனுஷ்யலோகம் ப்ராக்ருதம், தேவலோகம் அப்ராக்ருதம் என்று பேதம் இருப்பதற்காக சொல்லப்படவில்லை. ஸுக தாரதம்யத்தை அன்றி வேறு எந்த விதமான வித்யாஸமும் கிடையாது. ஸத்வகுணமும் ப்ரக்ருதியின் கார்யம்தான்.

பூர்வ:- விஷ்ணுவின் பரமம் பதம் அப்ராக்ருதம் என்று சொல்லப்படுகிறதே? '*தத்விஷ்ணோ: பரமம் பதம்*' என்று தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- 'பரமம் பதம்' அப்ராக்ருதம் என்று சொல்வது இஷ்டடந்தான். விஷ்ணுவின் ஸ்வரூபம் பரமம், விஷ்ணுவின் ஸ்வரூபம் ஞானம், '*ஞானஸ்வரூபம் அப்ராக்ருதம்*' என்று சொல்வது சரியே.

பூர்வ:- அப்ராக்ருதம் என்று சொல்லப்படுவது எதுவோ அது வைகுண்டலோகம் என்றே சொல்லவேண்டும். அதையே பரமம்பதம் என்றுதெரிவிக்கின்றது.

ஸித்தா:- 'பரமம் பதம்' என்ற வாக்யத்தில் உள்ள 'பதம்' என்பது ஸ்தானத்தை குறிக்கவில்லை. விஷ்ணுவின் ஸ்வரூபத்தையே தெரிவிக்கின்றது. '*விஷ்ணோ: பரமம் பதம்*' என்றால், '*ஸச்சிதானந்தஸ்வரூபமான உத்க்ருஷ்டடமான ஸ்வரூபம் விஷ்ணு*' என்றே இந்த வாக்யம் தெரிவிக்கின்றது. இதுவே அப்ராக்ருதம் என்று தெரிவிக்கின்றதே அன்றி வைகுண்டலோகம் அப்ராக்ருதம் என்று சொல்லப்படவில்லை. ஹ்ருதயத்திற்குள் இருப்பதே விஷ்ணுவின் பரமம் பதம் என்று உபநிஷத்துக்கள் தெரிவிக்கின்றன. '*இந்த்ரியேப்ய பரா ஹ்யர்த்தா:, அர்த்தேப்ய: ச பரம் மன: மனஸஸ்து பராபுத்தி: புத்தே: ஆத்மா மஹான்பர: மஹத: பரம் அவ்யக்தம், அவ்யக்தாத் புருஷ: பர:*' என்றல்லவோ உபநிஷத்துகள் எல்லாம் போதிக்கின்றன.

ஆகையால் உத்தராயணமார்க்கமாகச் சென்று வைகுண்டலோகத்தை அடைவதைப்பற்றி '*விஷ்ணோ: பரமம் பதம்*' என்ற வாக்யம் தெரிவிக்கவில்லை. அஞ்ஞானதசையில், ஜீவனுடைய உண்மையான ஸ்வரூபம் மறைபட்டிருக்கின்ற காரணத்தினால், தேஹாதிகளே ஆத்மா என்ற அத்யாஸத்தினால் ஸம்ஸாரத்தில் கட்டுண்டு இருக்கின்றான், ஆத்மஸ்வரூப ஞானத்தினால் அஞ்ஞானம் நாசமாகின்றதால், அஞ்ஞானத்தால் ஏற்பட்ட ஸம்ஸார பந்தம் நீங்கி, ஸ்வஸ்வரூபமான ப்ரஹ்மபாவத்தை அடைகிறான். அவ்விதம் ஸ்வஸ்வரூப ப்ரஹ்மாத்மபாவமே, விஷ்ணோ: பரமம் (உத்க்ருஷ்டடமான) பதம் என்றே ச்ருதி

வாக்யங்கள் தெரிவிக்கின்றன. அதனால் ஸாலோக்யம் போன்ற முக்திகள் உபாஸனாபலமான ஸகுணஸ்வரூபமுக்தி என்றே சொல்லப்படுகிறது. நிர்க்குண ப்ரஹ்மபாவத்தை அடைவதே அபேத முக்தி.

பூர்வ:- (ராமானுஜர்) *'விஞ்ஞானம் ப்ராபகம் ப்ராப்யே பரே ப்ரஹ்மணி பார்த்திவ, ப்ராபணீயஸ்ததைவாத்மா ப்ரக்ஷீணாசேஷபாவன:, க்ஷேத்ரஞ: கரணீ ஞானம் கரணம் தஸ்ய தேன தத், நிஷ்பாத்ய முக்திகார்யம் ஹி க்ருதக்ருத்யம் நிவர்த்ததே'* ('विज्ञानं प्रापकं प्राप्ये परे ब्रह्मणि पार्थिव। प्रापणीयस्तदैवात्मा प्रक्षीणाशेषभावनः॥क्षेत्रज्ञः करणी ज्ञानं करणं तस्य तेन तत्। निष्पाद्य मुक्तिकार्यं हि कृतकृत्यं निवर्तते ॥') என்ற ச்லோகம், ப்ரஹ்மம், ஜீவன், விஞ்ஞானம் என்ற இந்த மூன்றில், விஞ்ஞானம் ப்ராபகம் (அடைவிக்கின்றது, அழைத்துக்கொண்டு போகின்றது) என்று தெரிவிக்கின்றது. அதாவது, ப்ரக்ஷீண அசேஷபாவனனான (ஸர்வபாவனைகளையும் விட்டவனான) ஜீவனை, ப்ராப்யமான (அடையவேண்டிய) ப்ரஹ்மத்தினிடம் விஞ்ஞானம் அழைத்துக்கொண்டு போகின்றது (அடைவிக்கின்றது) என்று இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

ப்ரக்ஷீண அசேஷபாவனன் என்றால், கர்ம பாவனை, ப்ரஹ்மபாவனை, கர்ம, ப்ரஹ்ம உபய பாவனை என்ற மூன்று பாவனைகளையும் விட்டவனான ஆத்மாவே ப்ராபணீயன். ப்ரஹ்மம் ப்ராப்யம். ஞானம் ப்ராபகம். க்ஷேத்ரஞ்ஞசக்தியான ஜீவன், ஞானம் என்பதை கரணமாகக்கொண்டவன் . ஞான ரூபமான கரணமானது ஜீவனுக்கு முக்தி ரூபமான கார்யத்தை ஸம்பாதித்து கொடுத்தபிறகு (அடையச் செய்த பிறகு) அந்த ஞானம் நிவர்த்திக்கின்றது.

ஆகவே பரப்ரஹ்மத்யானம் என்பதே ஞானம் என்ற கரணம். இந்த கரணமே ஜீவனை ப்ரஹ்மத்தினிடம் அழைத்துச் செல்கின்றது. மோக்ஷம் அடையப்படவேண்டிய பலன். அதனால் அந்த பலனை அடைந்த பிறகு உபாஸகனான அவனுக்கு ஸர்வபாவனைகளும் நிவர்த்தி ஆகின்றதால் அவன் க்ருதக்ருத்யனாகிறான் என்பதால், அதன் பிறகு அந்த ஞானம் நிவர்த்திக்கின்றது. அதனால் பரப்ரஹ்ம த்யானத்தினால் (உபாஸனத்தினால்) ஏற்படும் இந்த ஞானத்தினால் க்ருதக்ருத்யத்வம் ஏற்படும் பர்யந்தம் ப்ரஹ்மத்யானம் அவச்யம் செய்யவேண்டுமென்று இந்தச்லோகம் தெரிவிக்கின்றது.

அதாவது, ஞானத்தினால் ப்ரஹ்மத்தினிடம் அழைத்துச்செல்லப்பட்ட ஜீவன் ப்ரஹ்மபாவத்தை அடைகிறான் என்றே (தத்பாவபாவம்) தெரிவிக்கின்றது. பரமாத்மாவிற்கு ஸமானமான பாவம் என்பதே அபின்னம் என்றும் சொல்லலாம். ஆனால் பரமாத்மாவாகவே ஆகாததால் பேதமும் இருப்பதாக சொல்லலாம் என்பதே *'தத்பாவபாவமாபன்னஸ்ததாஸௌ பரமாத்மனா, பவத்யபேதீ பேதச்ச தஸ்யாஞானக்ருதோ பவேத்'* ('तद्भावभावमापन्नस्तदासौ परमात्मना। भवत्यभेदी भेदश्च तस्याज्ञानकृतो भवेत्') என்கிற ச்லோகத்தின் அர்த்தம். அதனால் தத்பாவம் என்றே சொல்லப்படுவதால் ஐக்யம் என்று அர்த்தம் செய்வது சரியல்ல. ப்ரஹ்மத்தின் ஸ்வபாவம் என்றே அர்த்தம் சொல்லவேண்டும். ப்ரஹ்மம் நித்ய சுத்தம், ஆப்தகாமன், ஸர்வபாவனையும் க்ஷயம் அடைந்ததால் எந்த விதமான பாவனையும் இல்லாதவர். ப்ரஹ்மபாவனையோ, கர்மபாவனையோ எதுவுமே இல்லை என்பதால் ப்ரக்ஷீண அசேஷபாவனர். ஜீவன் என்பவன்

கர்மாவைச் செய்து ப்ரஹ்ம உபாஸனையின் பலனாக ப்ரஹ்மபாவனை ஏற்பட்டபிறகு ப்ரக்ஷீண அசேஷபாவனனாக ஆகின்றான். இந்த விதம் ப்ரஹ்மபாவம் ஏற்படுவதற்கு முன் அவித்யாநிலையில், தேவ, திர்யக், மனுஷ்யன் முதலான சரீரத்துடன் கூடிய ஆத்ம பேதம் இருப்பதாக ப்ராந்தி ஞானம் இருந்தது. இப்போது அந்தவிதம் பேதபாவம் இல்லை. அதனால் ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று இந்த ச்லோகார்த்தம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இதுவரையில் சொல்லப்பட்ட விஷயங்களில் விஞ்ஞானம் ஆத்மாவை ப்ரஹ்மத்தை அடையும்படிச் செய்கின்றது என்ற அர்த்தம் ஒன்றே சரியான அர்த்தம். மற்ற எல்லாமே அபத்தம். '*ஞானாதேவ து கைவல்யம்*' என்று ஞானம் ஒன்றே ஜீவனை முக்திரூபமான பலனை அடையச் செய்கின்றது. அதன் பிறகே அவன் க்ருதக்ருத்யன் ஆகிறான் என்று சொல்லப்படுவது முற்றிலும் சரியே. ஆனால் விஞ்ஞானம்தான் ப்ராபகம் (ஸாதனம்) என்று இந்த ச்லோகத்திற்கு அர்த்தம் செய்யப்படுமானால், உபாஸனமே ஸாதனம் என்று சொல்லப்படும் உன் ஸித்தாந்தத்திற்கு ஹானி ஏற்படுகிறது. எங்கள் ஸித்தாந்தத்தில் ஞானம் ஏற்படுமானால் அஞ்ஞானம், அதன் கார்யம் எல்லாமே நாசம் ஆகின்றது. அதன் பலனாக முக்தி ஸித்திக்கின்றது. அஞ்ஞான நாசத்தினாலேயே அகண்டாகாரவ்ருத்திக்கும் நாசம் ஏற்படுகிறது. அதனால் அத்வைதமே பரமார்த்தம் என்று ஸித்திக்கின்றது. அகண்டாகார வ்ருத்தியினால் ஜீவனுக்கு ப்ரஹ்மாத்ம பாவம் ஏற்படும் பர்யந்தம், ப்ராபகம், ப்ராபணீயன், ப்ராப்யம் என்ற த்வைதபாவம் இருக்கமுடியும். அதன் பிறகு அகண்டாகார வ்ருத்தியும் உபசாந்தமாகின்றதால் அந்த நிலையில் த்வைதபாவம் எவ்விதம் இருக்கமுடியும்?

பூர்வ:- ப்ராபகமான ஞானம், ப்ராபணீயனான ஜீவனை, ப்ராப்யமான ப்ரஹ்மத்தினிடம் கொண்டு சேர்த்தபிறகு, அந்த ஞானத்திற்கு நிவர்த்தி ஏற்பட்டாலும், ஜீவனும், ப்ரஹ்மமும் இருக்கலாமே? அழைத்துச் சென்ற ஞானமில்லை என்பதற்காக த்வைதமில்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்? உதாரணமாக ஒருவனை, மற்றொருவன் அழைத்துக் கொண்டுபோய், ஒருவனிடம் விட்டுவிட்ட பிறகு, அழைத்துச் சென்றவன் போய்விடுகிறான். எவனிடம் எவனொருவனை அழைத்துச் சென்றானோ அவர்கள் இருவரும், இருவராக இல்லை என்று எப்படிச் சொல்லமுடியும்?

ஸித்தா:- ஒருவனை அழைத்துக்கொண்டு போகின்றபோதுதான் (அந்த ஸமயம்தான்) அவனை ப்ராபணீயன் என்று சொல்லலாம். சேரவேண்டிய இடத்தில் சேர்ந்தபிறகு ப்ராபிதன் என்றே சொல்லவேண்டும். (ப்ராபணீயன் என்ற பெயர் இல்லை) அதேபோல் சேருகின்றவரையில்தான் ப்ராப்யம் என்று சொல்லலாம். அதன் பிறகு ப்ராப்தம் என்றே சொல்லவேண்டும். ப்ராபகமே இல்லை என்றால் ப்ராபணீயம், ப்ராப்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஆகவே, ப்ராபகம் இருக்கும்வரையில்தான் பேதம் சொல்லமுடியும். எதை அடைவிக்கின்றதோ அதற்கு ப்ராப்யம் என்றும், யாரை அடைவிக்கின்றதோ அது ப்ராபணீயம் என்றும், எதனால் அடையப்படுகிறதோ அது ப்ராபகம் என்றும் சொல்லப்படுவதால் ஒன்றுக்கொன்று ப்ரதியோகி ஸாகாங்க்ஷம் உடையதாகவே இருக்கின்றது. ப்ராபகம் ஞானம், ப்ராபணீயம் ஜீவன், ப்ராப்யம் ப்ரஹ்மம். ஞானம், ஜீவனை ப்ரஹ்மத்தினிடம் கொண்டு சேர்க்கின்றது என்றால், அஞ்ஞான நிவர்த்தித்வாரா ஞானம் ப்ரஹ்மத்தினிடம் சேர்க்க

வேண்டும். ஏனெனில் ஸ்வபாவத்தில் ப்ரஹ்மமாக இருந்த தன்னை அப்ரஹ்மம் என்றும், தனக்கு அடையப்படவேண்டிய வஸ்து ஒன்று இருப்பதாக அஞ்ஞானத்தினால் நினைத்திருந்தான். ஞானம் ஏற்பட்டவுடன் தத்பாவமாக ஆகிவிடுகிறான். அதனால் இரண்டு வஸ்துக்கள் ஒன்றாக சேர்கின்றது என்று சொல்லப்படவில்லை.

பூர்வ:- ப்ராப்யமான (ப்ரஹ்மம்) வஸ்துவுடன், ப்ராபணீயன் (ஜீவன்) ஐக்யத்தை அடைவதாகச் சொல்லமுடியாது. அதனால் ஸம்யோகம் என்று சொல்லலாமே?

ஸித்தா:- ஆத்மாவும் நிர்க்குணம் நிஷ்க்ரியம், ப்ரஹ்மமும் நிர்க்குணம் நிஷ்க்ரியம் என்பதால் இரண்டிற்கும் ஸம்யோகம் என்று எப்படிச் சொல்லமுடியும்? இவ்விதம் சொல்லப்படுவது சரியல்ல என்று முன்பே தெரிவிக்கப்பட்டது. அதனால் ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஐக்யம்தான் சொல்லவேண்டும்.

பூர்வ:- ஜீவன் வேறு பரமாத்மா வேறு என்பதால், ஜீவனுக்கு ஏற்படும் ஞானத்தினால் பரமாத்மாவுடன் ஐக்யம் எப்படி ஏற்படமுடியும்?

ஸித்தா:- அஞ்ஞானத்தினால் ஏற்பட்ட ஜீவபரமாத்மபேதம், ஞானத்தினால் அஞ்ஞானம் நாசமாகின்றபோது அஞ்ஞான க்ருதமானபேதமும் நிவர்த்திக்கின்றது என்று உன்னால் சொல்லப்பட்ட ச்லோகத்திலேயே பேதம் அஞ்ஞான க்ருதம் என்று சொல்லப் பட்டிருக்கின்றதே? *'விபேத ஜனகே அஞ்ஞானே நாசமாத்யந்திகம் கதே ஆத்மன: ப்ரஹ்மண: பேதம் அஸந்தம் க: கரிஷ்யதி'* ('विभेदजनकेऽज्ञाने नाशमात्यन्तिकं गते। आत्मनो ब्रह्मणो भेदमसन्तं कः करिष्यति') என்று சொல்லப்படுவதுபோல், அஞ்ஞானம், ஞானத்தினால் நாசம் அடைவதால் அபேதமே ஸித்திக்கின்றது.

ஜீவ பரமாத்மபேதம் அஞ்ஞானத்தினால் ஏற்பட்டது என்று சொல்லப்பட்டிருப்பதால், தேவ மனுஷ்யாதிபேதம் அஞ்ஞானத்தினால் ஏற்படுகிறது, அது ஞானத்தினால் நிவர்த்திக்கின்றது. அதனால், இல்லாத பதங்களை சேர்த்து கல்பனை செய்து அர்த்தம் செய்வது எப்படி பொருந்தும்? ஜீவனுக்கும், பரமாத்மாவிற்கும் அபேதம் தெரிவிக்கின்ற இந்த இடத்தில், ஜீவாத்மாவையும், பரமாத்மாவையும், ப்ரதியோகி, அனுயோகி என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் ப்ரதியோகி அனுயோகி பாவமாக சொல்லவேண்டுமானால், வெவ்வேறாக இருக்கின்றபோதுதான் சொல்லமுடியும். அந்த பேதத்தை அனுவாதம் செய்து பரமாத்மனா அபேதி என்ற வாக்யம் பேதத்தை நிஷேதம் செய்து தெரிவிக்கின்றது. ஆகையால் ஜீவபரமாத்ம பேதம் என்பதே நிஷேதத்திற்கு விஷயமாகின்றதே அன்றி, இந்த வாக்யத்திற்கு தேவ, மனுஷ்யாதி பேதங்கள் இல்லை என்று அர்த்தம் செய்யமுடியாது. அதனால் ஆத்மாவையும், பரமாத்மாவையும் ப்ரதியோகி அனுயோகி என்று பேதம் சொல்லப்படுமானால் அந்தபேதம் ஞானத்தினால் நிவர்த்திக்கின்றதால் இரண்டிற்கும் அபேதம் ஸித்திக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

பூர்வ:- தத்பாவ, பாவமாபன்ன: என்று இரண்டு பாவ பதங்கள் சொல்லவேண்டிய அவச்யம் என்ன? அபேதம் என்றே சொல்லப்படுமானால் தத்பாவமாபன்ன: என்று சொன்னாலே போறுமே?

ஸித்தா:- தத் பாவம் என்பதற்கு தத் ஸாத்ருச்யம் என்று உன் ஸித்தாந்தத்தில் அர்த்தம் செய்யப்படுகிறது. இந்தவிதம் ஸாத்ருச்யம்தான் சொல்லவேண்டுமென்றால் தத் பாவமாபன்ன: என்று சொன்னால் போதுமே? இரண்டாவது பாவ சப்தம் எதற்கு? இந்தக் கேள்வி உனக்கும் பொருந்துமே?

பூர்வ:- தத்பாவம் என்றால் பரமாத்ம தர்மம். தஸ்யபாவ: தத்ப்ராப்தி: என்றால் பரமாத்மஸமானமான, தர்மத்தை அடைகிறான் என்று அர்த்தம் சொல்லலாமே?

ஸித்தா:- பரமாத்மதர்மம் ஆபன்ன: என்றே சொல்லலாமே? தத்பாவம் என்றால் பரமாத்ம தர்மம் என்றும், பாவ: என்ற பதத்திற்கு ப்ராப்தி: (அடைகிறான்) என்று உன்னால் அர்த்தம் சொல்லப்படுகிறது. ஆபன்ன: என்றாலும் அடைகிறான் என்று அர்த்தம். அதனால் பரமாத்ம பாவ பாவமாபன்ன: என்று சொன்னால் புனருக்தி தோஷம் ஸம்பவிக்கின்றதே? (பாவ: என்றாலும் ஆபன்ன: என்றாலும் ப்ராப்தி என்றே அர்த்தம்)

பூர்வ:- தத்பாவம் என்றால் பரமாத்மாவின் தர்மம். பாவமாபன்ன: என்றால் அதன் ஸத்தையை அடைகின்றான் என்று அர்த்தம் செய்யலாமே? தர்மமான ஜீவாத்மா, தர்மத்தின் ஸத்தையை அடைகிறான் என்றால், ஜீவனுக்கு தர்மம் ஏற்படுகிறது என்று சொல்லலாம்.

ஸித்தா:- ஸத்தையை அடைகிறான் என்றாலும், அவனுக்கு ஸத்தை ஏற்படுகிறது என்று சொன்னாலும், இரண்டிற்கும் ப்ராப்யம் என்றே அர்த்தம் என்பதால் இது சரியல்ல.

பூர்வ:- என்னுடைய பக்ஷம் (மதம்) தவறு என்றால், இந்த தோஷம் உங்களுக்கும் ஏற்படுகிறதே? இரண்டு பாவபதம் சொல்லவேண்டிய அவச்யம் என்ன?

ஸித்தா:- என்னுடைய மதம் துஷ்ட்டம் என்றும் சொல்லமுடியாது. ஏனெனில் 'தத்பாவ, பாவமாபன்ன:' என்பதற்கு புனருக்தி ஏற்படாமல் அர்த்தம் செய்யமுடியும். எப்படியெனில், தத்பாவம் தஸ்ய பரமாத்மபாவ: பரமாத்மாவின் ஸத்யமான பாவம் எதுவோ அந்த பாவத்தை, பாவமாபன்ன: அடைகின்றான் என்று அர்த்தம் சொல்லலாம்.

'பரமாத்மாவிற்கு ஸச்சிதானந்த லக்ஷணம் ஸத்யமான பாவம், ஜகத் என்பது அஸத்யமான பாவம் என்பதால், ஒரு பாவசப்தத்திற்கு ஸத்யம் அர்த்தம், மற்றொரு பாவ சப்தத்திற்கு ஸ்வரூபம் அர்த்தம். அதனால் ஸச்சிதானந்த லக்ஷணமான ஸ்வரூபமே பரமாத்மாவின் ஸத்யமான பாவம். அந்த பாவத்தை அடைகிறான் என்று சொல்லப்படுவதால் புனருக்தி தோஷம் ஸம்பவிக்கமுடியாது. ஸத்ய ஸ்வரூபம் ஸச்சிதானந்தம், அஸத்ய ஸ்வரூபம் மாயாமயம். அதனால் ஸத்யமான ஸ்வரூபம், எதுவோ அந்த பாவத்தை அடைகிறான் என்பதையே தத்பாவ பாவமாபன்ன: என்று சொல்லப்படுவதால் புனருக்தி ஸம்பவிக்காது என்பது மட்டுமல்ல, ஆரோபிதமான அஸத்யஸ்வரூபத்தை விலக்கி ஸத்யமான ஸ்வரூபத்தை அடைகிறான் என்று இரண்டு பாவசப்தத்தினால் சொல்லப்படுகிறது. அதனால், ஐக்யத்தை தெரிவிக்கின்ற ருஜுவான அர்த்தத்தைவிட்டு அன்ய கல்பனம் செய்கின்ற ராமானுஜர் மதம் தோஷம் உள்ளது.

மேலும், முக்தனுக்கு தேவ மனுஷ்யர் முதலான சரீரபேதம் இல்லை என்றாலும், ஜீவபரமாத்ம ஸ்வரூபபேதம் இருக்கின்றதாகவே சொல்லவேண்டும் என்று சொல்வதும் சரியல்ல.

இவ்விதம் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் ஸ்வரூப பேதம் இருப்பதாகச் சொல்லப்படுவது போல், தேவ மனுஷ்யாதி சரீர பேதமும் முக்தனுக்கு கிடையாது என்று உன் சித்தாந்தப்படி சொல்லமுடியாது. ஏனெனில், முக்தனுக்கும் சரீரம் இருக்கின்றதென்று உன்னால் சொல்லப் படுவதால் தேவர்களுக்கும் முக்தனுக்கு பேதம் இல்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்? ஏனெனில் ஒரே ஸமயத்தில் தேவனாகவும் மனுஷ்யனாகவும் இருக்கமுடியாது. அதற்காக ஒரு ஸமயம் தேவ சரீரமும், ஒரு சமயம் மனுஷ்ய சரீரமும் மாறிமாறி வருகிறது என்று சொல்லப்படுமானால் தேவ சரீரத்திற்கும், மனுஷ்ய சரீரத்திற்கும் பேதமில்லை என்று எவ்விதம் சொல்லமுடியும்? அதனால் ஜீவபரமாத்ம ஸ்வரூப பேதத்துடன் கூட விக்ரஹரூபமான பேதமும் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். முக்தனுக்கு விக்ரஹரூபமான வேறு பேதம் எதுவும் இல்லை என்று சொன்னால்தான், ஸ்வரூப பேதம்தான் இருக்கின்றது வேறு பேதம் இல்லை என்று சொல்லலாம்.

பூர்வ:- தேவ சரீரம், திர்யக் சரீரம், மனுஷ்ய சரீரம், நாரக சரீரம் (நாக லோக சரீரம்) என்று நான்கு விதமான சரீரங்களினால் நான்கு பேதங்கள்தான் இருக்கின்றது. சௌனகர், ஒரு ராஜாவிற்கு உபதேசம் செய்வதாக ஒரு ச்லோகம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இந்த நான்கு வித பேதங்களும் அஞ்ஞான க்ருதமான மித்யா ஞானத்தினால் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ''*தேவ திர்யக் மனுஷ்யாக்யஸ்ததைவ ந்ருப நாரக:, சதுர்விதோபி பேதோயம் மித்யா ஞான நிபந்தன:*'' என்ற ச்லோகம் சொல்லப்படுகிறது. ஆகவே, முக்தனுக்கு இந்த நான்கு விதமும் இருக்கமுடியாது. ஏனெனில் முக்தனை தேவனென்றோ, திர்யக் என்றோ. மனுஷ்யன் என்றோ, நாரகன் என்றோ சொல்லமுடியாது. அதனால் இந்த நான்கு வித விக்ரஹமும் முக்தனுக்கு இல்லை என்றாலும், வேறு விதமான விக்ரஹம் முக்தனுக்கு இருக்கலாமே?

ஸித்தா:- ஒரு வஸ்து எவ்விதம் இருக்கின்றதோ அந்தவிதம் அறியப்படாமல், அந்த வஸ்துவின் தன்மைகளையும்விட்டு, வேறு தன்மைகளை ஆரோபம் செய்வதே அதஸ்மின் தத்புத்தி: ப்ராந்தி ஞானம் என்று சொல்லப்படும். முக்தனுக்கும் அனாத்மாவான விக்ரஹத்தில் ஆத்மத்வ புத்தி இருக்குமானால் அவனை முக்தன் என்று எவ்விதம் சொல்லமுடியும்? மேலும் எண்பத்தி நான்கு லக்ஷம் ஜீவராசிகளில் கணக்கிட முடியாத பேதங்கள் இருக்கின்றதால் மித்யா ஞானபநிபந்தன பேதம் நான்கு விதம்தான் இருப்பதாக எவ்விதம் சொல்லமுடியும்?

மேலும் முக்தர்கள் வைகுண்டம் போய்ச் சேருகிறார்கள் என்றும், அவர்களில் அனந்தன் (ஆதிசேஷன்) கருடன், விஷ்வக்ஸேனன் என்று சிலர் நித்ய ஸூரிகள் என்று சொல்லப்படுகிறது. இவர்களுக்கும் தனித்தனி சரீரம் இருக்கின்றது. அதனால், அனந்தன், ஸஹஸ்ரானனன் சேஷ: அஹம் என்று நான் ஆயிரம் தலைகளை உடைய சேஷன் என்று அஹம் எண்ணம் இருக்கின்றதால்தான் வ்யவஹாரம் ஏற்படுகிறது. அதேபோல் கனகபக்ஷோஹம் கருடோஹம் என்று ஸ்வர்ணமயமான இறக்கையையுடைய கருடன் தன்னுடைய சரீரத்தையே நான் என்று வ்யவஹாரம் செய்கின்றது. இவ்விதம் சரீர அபிமானம் இருக்கின்றதால்தான் நித்ய ஸூரிகளாக இருந்தாலும் ஆயிரம் சிரஸை உடையவன் என்றும் ஸ்வர்ணமயமான இறக்கையையுடையவன் என்று அவரவர்க்குள்ள

பேதத்தை தெரிவித்தே குறிப்பிடப்படுகிறார்கள். அதனால் முக்தர்களுக்கு வேறு பேதமே கிடையாது என்று எவ்விதம் சொல்லமுடியும்? முக்தர்களானாலும், தேவதத்தன் முக்தன், யஞ்ஞதத்தன் முக்தன் என்று எவ்விதம் வேறு படுத்தி தெரிவிக்கமுடியும்? மேலும் கைலாசம், வைகுண்டம், ப்ரஹ்மலோகம் முதலான லோகங்களில் உள்ளவர்கள் எல்லோரும் தேவர்கள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் சாஸ்திரங்களில் ப்ரஹ்மாவை ஸுரச்ரேஷ்ட்டர் என்று – தேவர்களுக்குள் சிறந்தவர் என்று – அவரையும் தேவர் என்றே சொல்லப்படுகிறது. விஷ்ணுவையும் வாஸுதேவன் என்றும், ருத்ரரை மஹாதேவன் என்றும் தேவசப்தத்தினால் சொல்லப்படுகிறது. இவ்விதம் எல்லோரையும் தேவர்கள் என்று சொல்லபட்ட போதிலும், அஷ்ட்டவஸுக்கள், த்வாதச ஆதித்யர்கள் என்று பலதேவர்கள் இருந்தாலும் கூட இவர்களைவிட இந்திரன் சிறந்தவன் என்றும், இந்திரனை அபேக்ஷித்து, ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்பவர்கள் சிறந்தவர்கள் என்றும் பலவிதமாக தாரதம்யம் இருந்த போதிலும் எல்லோரும் தேவர்கள் என்றே சொல்லப் படுகிறது. ஸுகதாரதம்யம் இருந்தாலும் தேவத்வம் என்பது எல்லோரிடமும் இருக்கின்றது. எந்த தேவர்களாக இருந்தாலும் கண்களை இமைக்கமாட்டார்கள், அஸ்வப்னா: என்று தேவர்களுக்கு நித்ரை என்பதும் கிடையாது. ப்ரஹ்ம லோகாதிபதி ப்ரஹ்மா, விஷ்ணு லோகாதிபதி விஷ்ணு, கைலாஸ லோகாதிபதி ருத்ரன் என்ற எல்லோருமே தேவர்கள்தான் என்றாலும், அவர்களுக்குள்ளும் பேதம் இருக்கின்றது.

பூர்வ:- ப்ரஹ்மா, விஷ்ணு ருத்ரன் முதலானவர்களை தேவ ஜாதி என்று சொல்வதில்லை, ப்ரஹ்மத்வம், வைஷ்ணவத்வம், சைவத்வமுடையவர்கள் என்று சொல்லலாம்.

ஸித்தா:- அவ்விதம் சொல்லப்பட்டபோதிலும் தேவ, மனுஷ்ய, திர்யக், நாரக என்ற நான்கு பேதங்களுடன் ப்ரஹ்மத்வ, வைஷ்ணவத்வ, சைவத்வ என்று பலபேதங்களும் இருப்பதாக உன்னாலேயே சொல்லப்படுவதால், நான்கு பேதங்கள்தான் இருக்கின்றதென்று எவ்விதம் சொல்லமுடியும்? மேலும் தேவோஹம், மனுஷ்யோஹம் என்பது போல், ப்ராஹ்மோஹம், வைஷ்ணவோஹம், சைவோஹம் என்று சரீர அபிமானம் எல்லோருக்கும் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். இவ்விதம் ஜடமான சரீரத்தையே அஹம் என்று அபிமானிப்பதாலேயே ப்ராஹ்மோஹம் போன்ற ஞானம், மித்யா ஞானம் என்றே சொல்லவேண்டும்.

பூர்வ:- தேவர்களுக்கு சரீரம் இருந்தாலும் அந்த சரீரத்தில் அஹம் என்று அபிமானம் இல்லை என்று சொல்லலாமே?

ஸித்தா:- தேவர்கள் அவ்விதம் நினைக்கமாட்டார்கள் என்று சொல்லப்பட்டாலும் மனுஷ்யர்களான நாம், அவர்களுக்குள் பேதம் இருக்கின்றதாகத்தானே அறிகின்றோம். மேலும் ப்ரஹ்ம லோகம், விஷ்ணு லோகம் போன்ற லோகங்களிலும் ஸ்திரீ என்றும் புருஷன் என்றும் பேதம் அறியப்படுகிறதே? நீ ஸ்திரீயா புருஷனா என்று கேட்டால், அந்தந்த சரீர அபிமானம் இருந்தால்தான், நான் ஸ்திரீ என்றோ, நான் புருஷனென்றோ சொல்லமுடியும். இவ்விதபேதமே இல்லை என்றால் விஷ்ணு பத்னி லக்ஷ்மி என்றும் ஸ்ரீ *'ஹ்ரீப்ச தே லக்ஷ்மீப்ச பத்ந்யெள'* ('ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ') என்றும் இரண்டு பத்னிகள் இருப்பதாக புராணங்கள் தெரிவிக்கின்றதே? அவர்களைத் தவிர மற்றுமுள்ளவர்கள் ஸ்திரீ புருஷர்கள் இல்லை என்று சொல்லப்படுமானால், அவர்கள் எல்லாம் நபும்ஸகர்கள் என்று சொல்லவேண்டும்.

விஷ்வக்ஸேனர் என்றும் அவர் பத்னி என்றும் சொல்லப்படுகிறதே? அவர் பத்னி ஸ்திரீ என்று தானே சொல்லவேண்டும்? இவ்விதம் இருக்கின்றபோது அவையெல்லாம் மித்யா ஞானம் என்றுதானே சொல்லவேண்டும்.

பூர்வ:- ஸ்திரீ என்றும் புருஷன் என்றும் பேதம் இருக்கின்றது என்பதற்காக மித்யா ஞானம் என்று சொல்லவேண்டிய அவச்யமில்லை.

ஸித்தா:- ஸ்திரீ என்பதும் புருஷன் என்பதும் தேஹ தர்மமாக இருக்கின்றதால் மித்யா ஞானம் இல்லை என்று சொல்லமுடியாது. தேஹத்தைவிட்டு பிரித்து விவேகத்தினால் ஆத்மா அறியப்படுமானால், அந்த ஆத்மாவை ஸ்திரீ என்றோ, புருஷனென்றோ, நபும்ஸகன் என்றோ சொல்வதில்லை. இதே கருத்தை சாஸ்திரங்களும் *'ந ஸ்திரீ, ந ஷண்டோ, ந புமான், ந ஜந்து'* ('न स्त्री न षण्डो न पुमान्न जन्तुः') என்று தெரிவிக்கின்றது. ஸ்திரீ, புருஷ சின்னங்கள் எல்லாம் தேஹ அவயவங்களைச் சேர்ந்தது. ஆத்மாவைச் சேர்ந்ததல்ல.

ஆகவே, உன்னுடைய ஸித்தாந்தத்தின்படி, முக்தன் விஷ்ணு லோகம் போய் சேர்கிறான் என்றாலும் தேவர் முதலான பேதம் இருக்கிறது. தேவர்களுக்குள்ளேயே வைஷ்ணவர்கள் சைவர்கள் என்ற பேதம் இருக்கின்றது. அதேபோல் ஸ்திரீ, புருஷபேதம் இருக்கின்றது. பர்த்தா, பார்யை, புத்ரர், மித்ரர் போன்ற எவ்வளவோ பேதங்கள் இருக்கின்றன. இவ்வளவு பேதங்களும் இருப்பதாக அறியப்படுகின்றபோது மித்யா ஞானம் நிவர்த்திக்கப்பட்டதாக எவ்விதம் சொல்லமுடியும்? இவ்விதம் எவ்வளவோ பேதங்கள் இருக்கின்ற வைகுண்டலோகத்தை அடைபவன் எவ்விதம் முக்தனாக இருக்கமுடியும்? மேலும் ஸ்வரூப பேதத்தை அன்றி வேறான தேவ மனுஷ்யாதி பேதங்களே முக்தனுக்கு கிடையாது என்று எவ்விதம் சொல்ல முடியும்?

பூர்வ:- *'ஏகஸ்வரூபபேதஸ்து பாஹ்யகர்மப்ரவிருத்திஜ:, தேவாதிபேதே அபத்வஸ்தே நாஸ்த்யேவாவரணேஹி ஸ:'* என்று விஷ்ணு புராணத்தில் சொல்லப்படுகிறது. அதாவது பரமாத்மாவும், ஜீவாத்மாவும் ஒரே ஸ்வரூபத்தில் இருக்கின்றார்கள். அஞ்ஞானத்தினால் ஆவரணம் செய்யப்படுகின்றதால், தேவர் முதலான பேதங்கள் மித்யா ஞானத்தினால் ஏற்படுகிறது. முக்தனான பிறகு மித்யா ஞானம் நாசமாகின்றது என்று சொல்லப்படுகிறது.

ஸித்தா:- ஜீவாத்மா, பரமாத்மா இரண்டும் ஒரே ஸ்வரூபம் என்று சொல்லப்படுவது சரியே. இரண்டும் ஞான ஸ்வரூபம் என்பதால் ஆக்ஷேபத்திற்கு இடமில்லை. *'ஸத்யம், ஞானம், அனந்தம் ப்ரஹ்ம'* என்றும் *'ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம'* என்றும் *'தத் ஸத்யம் ஸ ஆத்மா'* ('सत्यं ज्ञानमनन्तं ब्रह्म', 'एकमेवाद्वितीयं ब्रह्म', 'तत्सत्यं स आत्मा') என்றும் தெரிவிக்கின்ற ச்ருதி வாக்யங்கள் எல்லாமே ஆத்ம, பரமாத்ம அபேதத்தையே போதிக்கின்றது. ஆத்மா ஏக ரூபம் என்று சொல்லப்படுவதாலேயே பேதம் என்பதே ஸம்பவிக்கமுடியாது. எந்தவித பேதம் இருப்பதாக அறியப்பட்டாலும், அந்த பேதம் அஞ்ஞானத்தினால் ஏற்படுகிறது என்றே சொல்லவேண்டும். பாஹ்யகர்மா என்றால் அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்தினால் ஆவ்ருதமாகின்ற காரணத்தினாலேயே ஆத்ம பரமாத்ம பேதம் அறியப்படுகிறது. இதே கருத்தை பகவானும், *'அஞ்ஞானேன ஆவ்ருதம் ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ:'*

('अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः') என்று தெரிவிக்கின்றார். ப்ரத்யகபின்ன ப்ரஹ்ம ஞானத்தினால் தேவாதி பேதத்திற்கு காரணமான அஞ்ஞான நாசத்தினால், ஆவரண நாசம் ஏற்படுகிறது. அதன் பிறகு ஜீவபரமாத்மபேதம் என்பதே கிடையாது. '*தேவாதிபேதே அபத்வஸ்தே நாஸ்த்யேவாவரணே ஹி ஸ:*' என்ற ச்லோகத்தில் 'தேவாதி' என்று ஆதி சப்தத்தினால், தேவர்கள் மனுஷ்யர்கள் முதலான லக்ஷண:, ஸ்திரீ பும்ஸாதி லக்ஷண: ஜீவேச்வர லக்ஷண: சேதனாசேதன லக்ஷண: பூதபௌதிக லக்ஷண: கடபடாதி லக்ஷண: தேவதத்தயஞ்ஞதத்தாதி லக்ஷண: த்வம், அஹம் என்பது போன்ற லக்ஷண: நீலபீதாதி லக்ஷண: என்று ஸர்வபேதங்களையும் ஆதி பதத்தினால் சொல்லப்படுகிறது. பேதம் என்றாலே அஞ்ஞானக்ருதம் என்றே சொல்லவேண்டும். அதனால் அஞ்ஞானநிவர்த்திக்குப் பிறகு நான்கு பேதங்கள்தான் நிவர்த்திக்கின்றது என்றும் மற்ற பேதங்கள் நிவர்த்திக்கப்படவில்லை என்றும் எவ்விதம் சொல்லமுடியும்?

அதனால் ஸ்வரூபபேதம் அற்ற நிலையில் தான் முக்தன் என்றே சொல்லப்படுகிறது. ஆகவே முக்தனுக்கு ஸ்வரூபபேதம் இருக்கின்றது என்று தெரிவிக்கின்ற நீ, என்னால் கேட்கப்படும் கேள்விக்கு பதில் சொல்லவேண்டும்.

அதாவது, முக்தனுடைய ஸ்வரூபமே பேதம் என்று சொல்கிறாயா? அல்லது ஸ்வரூபம் வேறு, பேதம் வேறு என்று சொல்கிறாயா? முக்தனின் ஸ்வரூபத்தையே பேதம் என்ற சப்தத்தினால் சொல்கிறேன் என்றால், அதனால் ஹானி ஏதுமில்லை. அது எனக்கு இஷ்ட்டம் தான். ஏனெனில், முக்தனின் ஸ்வரூபம் ஸச்சித் ஆனந்த லக்ஷணம், ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம என்று எவ்வளவோ நாமாக்கள் ப்ரஹ்மத்திற்கு சொல்லப்படுவது போல் 'பேதம்' என்பதும் ஒரு நாமா என்றால் அதில் ஆக்ஷேபமில்லை. (ப்ரஹ்மத்திற்கு பர்யாய பதம் போல் சொல்லப் பட்டாலும் பாதகமில்லை). பேதம் என்பது ஸ்வரூபமல்ல, ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறு என்று சொல்லப்படுமானால், ஸ்வரூபத்தை அன்றி வேறாக இருக்கின்ற பேதம் என்பது என்னவென்றே நிர்வசனம் செய்யமுடியாது (இன்னது என்றே நிர்ணயம் செய்யமுடியாது) அதனால் முக்தனின் ஸ்வரூபத்தை அன்றி பேதம் என்று ஒரு வஸ்து இருப்பதாகவே சொல்லமுடியாது.

பூர்வ:- முக்தன் என்பவன் பந்தன் என்பவனைக்காட்டிலும் வேறானவனா? இல்லையா? முக்தனைக்காட்டிலும் பந்தன் வேறு என்று சொல்லப்படுமானால், பேதம் ஸித்திக்கின்றது. முக்தனுக்கும் பந்தனுக்கும் பேதம் இல்லை என்று சொல்லப்படுமானால், இவன் முக்தன், இவன் பந்தன் என்று எப்படி ஸித்திக்கமுடியும்? இவ்விதம் பந்த, முக்த பேதம் இல்லை என்றால் சாஸ்திரம் வ்யர்த்தம் என்றாகும்.

ஸித்தா:- பந்தன், முக்தன் என்று இரண்டுபேர்கள் இருந்தால்தான், ஒன்றா வேறா என்ற கேள்விக்கே இடம் ஏற்படும். முக்தனாக இருக்கின்ற போது பந்தனில்லை. பந்தனாக இருக்கின்றபோது முக்தனில்லை. அதனால் கேள்வியே சரியல்ல. சுகர் முக்தர், வாமதேவர் முக்தர், அஹம் பத்த: என்று நீயே சொல்கிறாய். ஆகவே அஞ்ஞானம் இருக்கின்றவரையில்தான் சிலரை முக்தர்கள் என்றும், சிலரை பத்தர்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் யார் முக்தன், யார் பத்தன் என்று முக்தனையே கேட்கப்படுமானால், அவர்கள் சிலரை பத்தர்கள்,

நான் முக்தன் என்று சொல்வாரா? ப்ரஹ்மாத்மபாவம் ஏற்பட்டவர், பத்தனென்றோ முக்தனென்றோ வ்யவஹாரம் செய்யமாட்டார்.

பூர்வ:- இப்போது ஒருவன் முக்தனாக இருக்கின்றான். இதற்கு முன் வேறு ஒருவன் முக்தனாக இருக்கலாம். இவர்கள் இரண்டுபேர்களும் ஒன்றா? வேறா? வேறு என்றால் பேதம் ஸித்திக்கும். ஒன்று என்றால் முன்னால் சொல்லப்பட்ட தோஷங்கள் ஸித்திக்கும். சாஸ்திரம் வ்யர்த்தம் என்றாகும்.

ஸித்தா:- அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்ட உன்னுடைய த்ருஷ்டியில் இப்போது முக்தனானவன் ஒருவன், ஏற்கனவே முக்தனானவன் ஒருவன் என்று காலம் முதலான பேதம் அறியப்படுகிறது. ஆனால் முக்தனுடைய த்ருஷ்டியில், பத்தனுமில்லை, முக்தனுமில்லை. இதையே கௌடபாதர் ''*ந நிரோதோ நசோத்பத்திர் ந பத்தோ ந ச ஸாதக:, ந முமுக்ஷு: ந வை முக்த: இத்யேஷா பரமார்த்ததா*'' என்று தெரிவிக்கின்றார். மோசகரான விஷ்ணுவானவர் பத்தனை விடுவிக்கின்றவர் என்றும், முக்தனை விடுவிக்கப்பட்டவன் என்றும் உன்னுடைய த்ருஷ்டியில் சொல்லப்படுகிறது. இவர்கள் இரண்டுபேரும் ஒன்றா வேறா என்ற கேள்விக்கும் இந்த ச்லோகத்தில் பதில் சொல்லப்பட்டதாக ஆகிறது. முக்தனுமில்லை. மோசகனும் இல்லை, ஸர்வம் ப்ராந்தி, அஞ்ஞான கல்பிதமே அன்றி உண்மையில் எந்தவிதமான பேதமும் கிடையாது. அஞ்ஞான நாசம் ஏற்படுமானால் 'ஆத்மா அத்வைதம்' என்றே முக்தி தசையில் ஸித்திக்கின்றது. '*விபேத ஜனகே அஞ்ஞானே நாசம் ஆத்யந்திகம் கதே! ஆத்மனோ ப்ரஹ்மணோ பேதம் அஸந்தம் க: கரிஷ்யதி*' என்ற ச்லோகம் இந்த கருத்தையே தெரிவிக்கின்றது. பேதத்திற்கு காரணமான அஞ்ஞானம் நாசமடைகின்றதால் அஞ்ஞானத்தினால் ஏற்பட்ட பேதம் மித்யை என்றே சொல்லப்படுகிறது.

ஸுதர்ஸனர் பூர்வ:- அஸந்தம் என்றால் மித்யை என்று அர்த்தமல்ல. அநித்யம் என்று அர்த்தம் சொல்லவேண்டும். காரண நாசத்தினால் மித்யா பூதமான பேதம் என்ற கார்ய நாசம் ஏற்படுவதாகச் சொல்லமுடியாது. பேதம் என்பது, நித்ய பேதம் என்றும் அநித்ய பேதம் என்றும் இரண்டுவிதம். அநித்ய பேதம் என்பது தேவர்கள் முதலான சரீரகதபேதம். அஞ்ஞான நிவர்த்தியினால் அந்த பேத நிவர்த்தி ஏற்படுகிறது. ஆனால் நித்ய பேதம் என்ற ஸ்வரூப பேதம் நிவர்த்திக்காது. அதனால் அநித்ய பேதம் அஞ்ஞான நாசத்தினால் நிவர்த்திக்கின்றது என்றே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

ஸித்தா:- இது சரியல்ல. நீ சொல்வது போல் அநித்யம், நித்யம் என்று இரண்டு பேதம் இருக்குமானால் அந்த ச்லோகத்தில் உள்ள வாக்யத்தின்படி க: கரிஷ்யதி என்று அநித்ய பேதத்தை யார் செய்யமுடியும் என்று அர்த்தமாகலாம். அவ்விதம் சொல்லப்படுமானால் நித்யமான பேதத்தை எல்லோரும் செய்யமுடியும் என்று சொல்லப்பட்டதாக ஆகும். பேதம் ஒருவரால் செய்யப்படுவதாக இருக்குமானால் அதை நித்யம் என்று எவ்விதம் சொல்லமுடியும்? யத்க்ருதகம் தத் அநித்யம் என்றே வ்யாப்தி சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல ச்லோகத்தில் '*விபேத ஜனகே அஞ்ஞானே*' என்று சொல்லப்பட்டிருக்கின்றதே அன்றி அநித்யபேத ஜனகே என்று சொல்லப்படவில்லை.

மேலும், மூலகர்த்தாவின் இஷ்ட்டமும் அவ்விதம் இருக்குமானால், அநித்யம் க: கரிஷ்யதி என்றே சொல்லி இருக்கவேண்டும். அஸந்தம் என்ற பதம் சேர்க்கவேண்டிய அவச்யமே கிடையாது. மேலும், நித்ய பேதம் என்று சொல்லப்படும், அந்த பேதம், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறா, ஒன்றா? வேறு என்று சொல்லப்படுமானால் 'அதோன்யதார்த்தம்' என்ற ச்ருதிவாக்ய விரோதம் ஏற்படும். அபின்னம் என்று சொல்லப்படுமானால், அது ப்ரஹ்மமே என்று சொல்லவேண்டும். சைதன்யத்தையே பேதம் என்ற சப்தத்தினால் சொல்லப்படுவதாக சொல்லவேண்டும். இவ்விதம் பேதம் என்பது ப்ரஹ்ம ஸ்வரூபமே என்று சொல்லப்படுமானால் அது இஷ்ட்டமே. ஆகவே, '*சைதன்யம் ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம*' அதுவே ஆத்மா என்றே ஸித்திக்கின்றதால், ஆத்மாவிற்கு நித்ய பேதம் ஸித்திப்பதாகச் சொல்வது சரியல்ல. '*ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம*' என்று ஸித்தமாகின்றதால், அத்வைதமே தத்வம் என்று ஸித்திக்கின்றது.

பூர்வ:- இந்த விதம் ப்ரபஞ்சம் மித்யை என்றும், அத்வைதமே தத்வம் என்று தெரிவிக்கின்ற உங்களுடைய ஸித்தாந்தம் 'விபேத ஜனகே' என்ற ச்லோகத்திற்கு விரோதமாக இருக்கின்றது. இந்த ச்லோகத்திலுள்ள 'அஞ்ஞானம்' என்பதற்கு, பேத அத்யாஸத்திற்கு காரணம் எதுவோ, அது அஞ்ஞானம் என்று, ஜனகம் என்றால் அத்யாஸ ஹேது என்று உங்களால் சொல்லப்படும் அர்த்தம் சரியல்ல. பேதம் என்ற கார்யத்தை எது உண்டுபண்ணுகின்றதோ அதையே ஜனகம் என்று சொல்லவேண்டும். அதுமட்டுமல்ல, அஞ்ஞானம் அநிர்வசனீயம் என்று சொல்வதும் சரியல்ல. 'ஞான அபாவம். அஞ்ஞானம்'. அஞ்ஞானம் அநிர்வசனீயம் என்பது லோக ஸித்தமாகவும் இல்லை, சாஸ்திர ஸித்தமுமில்லை. அதுமட்டுமல்ல அவித்யை என்று கர்மாவையே தெரிவிக்கின்றது. கர்மாவை அன்றி அவித்யை என்பது வேறல்ல என்று முன்பே சொல்லப்பட்டிருக்கிறது அதாவது, விஷ்ணு சக்தி, க்ஷேத்ரஞ்ஞசக்தி, கர்மா என்ற பெயருடைய அவித்யா சக்தி என்ற மூன்று சக்திகளும் விஷ்ணுவினிடம் இருப்பதாக முன்பே சொல்லப்பட்டிருக்கின்றது. இதைத்தவிர, '*விபேத ஜனகே அஞ்ஞானே நாசம் ஆத்யந்திகம் கதே*' என்ற வாக்யத்திலுள்ள 'நாசம்' என்ற சப்தம், பாதம் என்ற அர்த்தத்தில் சொல்லப்படுகிறது என்பது சரியல்ல. நாசம் என்ற சப்தத்திற்கு பாதம் என்ற அர்த்தம் முக்யார்த்தம் அல்ல. அமுக்யம் என்றே சொல்லவேண்டும்.

(குறிப்பு: – காரணம் இருந்தும் கார்யம் மட்டும் மறையுமானால் நாசம். கார்யம் காரணத்துடன் மறைந்தால் பாதம் என்று அர்த்தம்.)

'*ஆத்மனோ ப்ரஹ்மணோ பேதம் அஸந்தம் க: கரிஷ்யதி*' என்று ச்லோகத்தில் சொல்லப்படுவதால், அஸந்தம் என்ற பதம் உங்கள் ஸித்தாந்தத்தின் படி நிஷ்ப்ரயோஜனம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில், பேதம் என்பதில் 'ஸத் பேதம்' என்று ஒன்று இருக்குமானால்தான், அதை வேறு படுத்தி தெரிவிப்பதற்காக 'அஸந்தம்' என்ற பதம் ப்ரயோகம் செய்யவேண்டும். 'பேதம்' என்றாலே மித்யை என்று சொல்லப்படுவதால், அஸந்தம் என்ற பதம் வ்யர்த்தம். மேலும், 'க :கரிஷ்யதி' என்றால், செய்வது என்று அர்த்தமே அன்றி அத்யாஸம் எப்படி உண்டுபண்ணமுடியும் என்று அர்த்தம் செய்வது சரியல்ல. அதனால் அத்வைதிகளுக்கு இந்த ச்லோகம் விரோதம் என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- ஜனகம் என்றால் உத்பாதகம் என்றே அர்த்தம் என்றும் அத்யாஸ ஹேது என்ற அர்த்தம் சொல்லக்கூடாது என்று சொல்வது சரியல்ல. அஞ்ஞானம் என்பதே பேத அத்யாஸத்திற்கு மூலம் என்பதால் பேத அத்யாஸத்திற்கு உத்பாதகம் அஞ்ஞானம். அதனால் அத்யாஸம் என்பது அஞ்ஞான ஜன்யம், அதற்கு காரணம் அஞ்ஞானம், என்பதையே *'விபேத ஜனகே அஞ்ஞானே'* என்று சொல்லப்படுகிறது. இதில் பொருந்தாத விஷயம் ஏதுமில்லை.

மேலும் அஞ்ஞானம் அநிர்வசனீயம் என்று லோக ஸித்தமில்லை, சாஸ்திர ஸித்தமுமில்லை என்று சொல்லப்பட்டது. அதுவும் சரியல்ல. அஞ்ஞானம் என்பது ஸத்தா, அஸத்தா, பின்னமா அபின்னமா ஸாவயவமா, நிரவயவமா என்று எந்த விதமாகவும் நிர்வசனம் செய்யமுடியவில்லை என்பதற்காகவே சாஸ்திரம், அஞ்ஞானம் அநிர்வசனீயம் என்று தெரிவிக்கின்றது. அதனால் அஞ்ஞானம் அநிர்வசனீயம் என்று சாஸ்த்ர ஸித்தம் என்றே சொல்லவேண்டும்.

மேலும் அவித்யை என்பது கர்மா என்று அர்த்தம் செய்யப்படுவது சரியல்ல. கர்மாவிற்கு உபாதானம் அவித்யை. அவித்யா, காம, கர்ம என்று காரணகார்ய பாவமாக சொல்லப்படுகிறது. அதனால் கர்மா என்பது அவித்யை அல்ல. கர்மாவிற்கு ஆச்ரயமான அந்த:கரணத்திற்கு உபாதானம் எதுவோ அதுவே அவித்யை என்று சொல்லவேண்டும். *'அவித்யா கர்ம ஸம்ஞான்யே'* என்ற ச்லோகம் அவித்யையே கர்மா என்று தெரிவிக்கவில்லை. விஷ்ணு சக்தி என்று சொல்லப்படும் மூன்று சக்திகளில், அவித்யா சக்தி என்று சொல்லப்படும் மூன்றாவது சக்தி கார்ய ரூபேண கர்மாவாகவும், காரண ரூபேண அவித்யையாகவும் இருக்கின்றதென்றே சொல்லப்படுகிறது. அதனால் கர்மாவிற்கு அவித்யை என்று ஒரு பெயர் சொல்லப்படுவது சரியல்ல.

நாசம் என்றாலே அதர்சனம் என்று அர்த்தம் சொல்லவேண்டும். அதாவது 'நாச அதர்சனே' என்றே பாணினி சொல்லி இருக்கின்றார். எது பாதிதமோ அதற்கே நாசம் ஏற்படும். உதாரணமாக, ரஜ்ஜுவில் தோன்றிய ஸர்ப்பத்திற்கு நாசம் சொல்லப்படுகிறது. ஏனெனில், ரஜ்ஜு ஞானத்தினால், ஸர்ப்ப அதர்சனம் ஏற்படுகிறது. அதனால் ஞானத்தினால் பாதம் ஏற்படுமானால் நாசம் ஏற்படுகிறது என்றே சொல்லப்படுகிறது. அதனால் பாதம் என்றால் நாசம் என்று சொல்வது முக்யார்த்தம் என்று சொல்லப்பட்டது சரியே.

'அஸந்தம்' என்ற பதம் நிஷ்ப்ரயோஜனம் என்று சொல்லப்படுவது சரியல்ல. *'பேதம் அஸந்தம் க: கரிஷ்யதி'* என்பதின் அர்த்தம் என்னவென்றால் பேதம் ஸத்யமாக இருந்தால்தானே நிவர்த்திக்காது. மித்யை என்பதால் அஞ்ஞானம் நிவர்த்திக்கின்றபோது பேதம் நிவர்த்திக்கின்றது என்று, பேத நிவர்த்திக்கு காரணமாக 'அஸந்தம்' என்று சொல்லப் படுகிறது. அதனால் பேதம் இரண்டுவிதம் இருக்கின்றது என்று, ஒன்றை வ்யாவ்ருத்தி செய்வதற்காக 'அஸந்தம்' என்று சொல்லப்படவில்லை. மித்யாபூதமான அஞ்ஞானம் ஞானத்தினால் நாசம் அடைந்த பிறகு பேத அத்யாஸம் எவ்விதம் ஏற்படமுடியும்? அவ்விதம் செய்யமுடியாது என்பதற்கு காரணமாக 'அஸந்தம்' என்று சொல்லப்படுகிறது. அதனால் இந்த ச்லோகம் அத்வைத்திற்கு விரோதம் என்று சொல்லமுடியாது.

ராமானுஜர் பூர்வ:-

'த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரச்சாக்ஷர ஏவ ச,
க்ஷர: ஸர்வாணி பூதானி கூடஸ்த்தோக்ஷர உச்யதே,
உத்தம: புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:
யோ லோகத்ரயம் ஆவிச்ய பிபர்த்தி அவ்யய ஈஸ்வர:'

கீதாச்லோகம் (15.16,15.17)

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥ १६ ॥
उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ १७ ॥

இந்த ச்லோகத்தில் க்ஷரம் என்றால் ப்ரக்ருதி, அக்ஷரம் என்றால் ஜீவன், இந்த இரண்டைக்காட்டிலும் வேறுபட்டவன் பரமாத்மா' என்று உத்தம புருஷஸ்த்வன்ய: என்று த்வௌ புருஷௌ என்பதில் ஒன்று ஆத்மா, இந்த ஆத்மாவைக்காட்டிலும் உத்தம புருஷன் பரமாத்மா வேறு என்றே சொல்லப்படுகிறது. அதனால் புருஷன் என்ற ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்று சொல்வது சரியல்ல. க்ஷேத்ரஞ்ஞனுக்குள் அந்தர்யாமியாக இருப்பவரே பரமாத்மா என்று சொல்லவேண்டும். அதனால் ஐக்யம் சொல்வது சரியல்ல.

ஸித்தா:- க்ஷரம் என்றால் கார்ய ரூபமான அவித்யை. அக்ஷரம் என்பது காரண ரூபமான அவித்யை. ஜடமான இந்த மாயையே, கார்யரூபமாகவும், காரணரூபமாகவும் இருக்கின்ற இந்த ஜகத்தாக இருக்கின்றது. இதைக்காட்டிலும் வேறாக 'சைதன்ய ஸ்வரூபமாக இருப்பதே ஆத்மா' என்று இந்த ச்லோகத்தின் தாத்பர்யம்.

(புருஷௌ என்று க்ஷரம், அக்ஷரம் என்று இரண்டு தத்வம் என்று சொல்லப்படுகிறது. க்ஷர: ஸர்வாணி பூதானி, கார்யப்ரபஞ்சம், கூடஸ்த்தோ அக்ஷர: காரணமான ப்ரக்ருதி அல்லது மாயை. உத்தம: புருஷஸ்த்வன்ய: சைதன்ய ஸ்வரூபமான ஆத்மா, இவைகளுக்கெல்லாம் வேறுபட்டது என்பதே இந்த ச்லோகார்த்தம்)

'க்ஷேத்ரஞ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத. க்ஷேத்ரக்ஷேத்ரஞயோர்ஞானம் யத் தத்ஞானம் மதம் மம.' (क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रषु भारत। क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम।) என்ற ச்லோகம், க்ஷேத்ரஞ்ஞன் என்பவன் க்ஷேத்ரங்களுக்கெல்லாம் வேறுபட்டவன் என்று அறியவேண்டும். அதுமட்டுமல்ல அந்த க்ஷேத்ரஞ்ஞனே 'நான்' என்று அறியவேண்டும் என்றே தெரிவிக்கின்றது. அதனால் ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதமில்லை என்று அறிய வேண்டுமென்பதையே பகவான் தெரிவிக்கின்றார்.

மேலும், அந்தர்யாமி என்பது ஆத்மாவைக்காட்டிலும் அத்யந்தம் வேறுபட்ட தத்வமல்ல. ப்ரத்யகாத்மாவே அந்தர்யாமி என்று சொல்லப்படுகின்றதே அன்றி கூடஸ்த்தனை அன்றி

வேறுபட்ட தனித்த ஒரு வஸ்துவல்ல. அந்த:கரணத்தில் ஏற்படும் சைதன்ய ப்ரதிபலனம் க்ஷேத்ரஞ்ஞ சக்தி, சிதாபாஸன், ஸோபாதிகம். பிம்பம், ப்ரதிபிம்பம் என்பது இரண்டு வஸ்துக்கள் அல்ல. பிம்பஸ்தானீயமாக இருப்பது அந்தர்யாமி என்றும், ப்ரதிபிம்பத்தை க்ஷேத்ரஞ்ஞன் என்றும் சொல்லப்படுகிறது. சோதிததத்த்வம்பதார்த்தமே அந்தர்யாமி என்று சொல்லப்படுகிறது.

மேலும் முன்னால் சொல்லப்பட்டபடி க்ஷரம் என்ற கார்ய ப்ரபஞ்சம், அக்ஷரம் என்ற காரணமான மாயை அல்லது ப்ரக்ருதி, இந்த இரண்டைக்காட்டிலும் வேறுபட்டவர் சைதன்ய ஸ்வரூபமான ஆத்மாவே உத்தமபுருஷர் என்று கீதா வசனம் தெரிவிக்கின்றது (இதுவே உண்மையான அர்த்தம்)

பூர்வ:- பரமாத்மாவையே புருஷோத்தமன் என்று சொல்லவேண்டும். ஆத்மாவை புருஷோத்தமன் என்று எவ்விதம் சொல்லமுடியும்?

ஸித்தா:- *'உபத்ரஷ்டானுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர:, பரமாத்மேதி ச ாப்யுக்த: தேஹேஸ்மின் புருஷ: பர:'* (கீதா 13.22) என்று கீதா ச்லோகம் தெரிவிக்கின்றது. அதுமட்டுமல்ல *'ஐததாத்ம்யம் இதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா'* என்று ச்ருதிவாக்யமே தெரிவிக்கின்றது. ஆகவே அனேக ச்ருதிவாக்யம், ஸ்ம்ருதி வாக்யம் எல்லாமே ஜீவாத்மாவே பரமாத்மா என்று தெரிவிக்கின்றன.

பூர்வ:- *'ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்ட்டதி ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா'* (கீதா 18.61) என்று ஸர்வ பூதங்களுக்குள் ஈச்வரன் இருக்கின்றார் என்று தெரிவிக்கின்றதால், இரண்டும் வேறு என்றே சொல்லவேண்டும்.

ஸித்தா:- கார்ய காரண ஸங்காதமான ஸர்வத்திலும் ப்ரத்யக் ஸ்வரூபமாக சைதன்யம் இருக்கின்றது என்பதையே இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது. ப்ரத்யகாத்மாவையே ஈச்வர சப்தத்தால் சொல்லப்படுகிறது. சைதன்யத்திற்குள் சைதன்யம் இருப்பதாக அர்த்தம் சொல்லப்படவில்லை. ஆகவே, இவ்விதம் கீதா ச்லோகங்களுக்கு அர்த்தம் செய்யப்படுவதில் ஏதாவது ஸந்தேஹம் ஏற்படுமானால், பகவத் கீதைக்கு, என்னால் இயற்றப்பட்டிருக்கின்ற விரிவான வ்யாக்யானம் ஸ்ரீ சாங்கர பகவத்கீதா பாஷ்யார்க்கப்ரகாச: என்பதைக்கொண்டு கீதார்த்தம் அறிந்து கொள்ளலாம் என்பதால் மேலும் இதுபற்றி விஸ்த்தாரமாகச் சொல்லப் படவில்லை.

பூர்வ:- ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் *'ய ஆத்மனி திஷ்ட்டன்'* என்று ஆத்மாவிற்குள் இருப்பவர் எவரோ அவரே அந்தர்யாமி என்று சொல்லப்படுகிறதே? அந்த இடத்தில் ஆத்மா என்று ஜீவாத்மாவைத்தானே குறிப்பிடப்படுகிறது?

ஸித்தா:- இந்த வாக்யத்தில் உள்ள ஆத்ம சப்தம் சேதனனான ஜீவனை குறிப்பிடவில்லை. ஆத்ம சப்தத்தினால் புத்தியைக் குறிப்பிடுகின்றது. ப்ரஹதாரண்யகத்தில் உள்ள இரண்டு சாகைகளில், ஒரு சாகையில் இதைப் பற்றி தெரிவிக்கின்ற இடத்தில் *'யோ விஞ்ஞானே திஷ்ட்டன்'* என்று புத்தியை குறிப்பிட்டே தெரிவிக்கின்றது. இவ்விதம் விஞ்ஞானம் என்பதே

ஆத்ம சப்தத்தினால் குறிப்பிடப்படுகின்றதால், சேதனனான ஆத்மா என்றும் அதற்குள் பரமாத்மா அந்தர்யாமியாக இருக்கின்றார் என்றும் சொல்லப்படுவதெல்லாம் பொருந்தாது.

பூர்வ:- ராமானுஜர் 'ஈச்வர:ஸர்வபூதானாம்' என்ற வாக்யத்தில் உள்ள பூத சப்தத்திற்கு 'ஸர்வ ஆத்மாக்களுக்கும்' என்று அர்த்தம் தெரிவிக்கின்றார். மேலும் ஸுதர்சனர் 'பூதானாம்' என்ற பதத்திற்கு கார்யகரண ஸங்காதம் என்று அர்த்தம் என்றும் 'ஹ்ருத்தேசே' என்ற பதத்திற்கு ஹ்ருதயத்திலுள்ள ஆத்மாவில், ஈச்வரன் அந்தர்யாமியாக இருக்கின்றார் என்று அர்த்தம் செய்கின்றார். இதற்கு என்ன பதில்?

ஸித்தா:- இவர்கள் இரண்டு பேர்கள் செய்கின்ற அர்த்த கல்பனம் பொருத்தமற்றது. வாக்யத்திலுள்ள பதங்களுக்கு முக்யார்த்தம் சொல்லாமல் லாக்ஷணிக அர்த்தம் எவ்விதம் சொல்லமுடியும்? அதாவது, '*ஸர்வேஷு ஆத்மஸு திஷ்ட்டதி*' என்ற வாக்யத்தில் விவக்ஷிதமான அர்த்தபோதம் ஏற்படுகின்றது. அதைவிட்டுவிட்டு ஆத்மனாம் ஆத்மனி என்று ஸுதர்சனர் தெரிவிக்கின்ற அர்த்தத்தில் புனருக்திதோஷம் ஏற்படுகிறது. எப்படியெனில் ஸர்வபூதானாம் என்ற பதத்திற்கு ஆத்மா என்றே அர்த்தம் செய்யப்படுகிறது. இதேபோல் ஸர்வபூதானாம் 'ஹ்ருத்தேசே' என்ற பதத்திற்கு ஆத்மனி என்றே அர்த்தம் செய்யப்படுவதால் புனருக்தி தோஷம் ஸம்பவிக்கின்றது.

மேலும், ஜீவன் வேறு, பரமாத்மா வேறு என்று தெரிவிக்கின்ற உங்கள் ஸித்தாந்தத்தில், 'ஸர்வேஷாமபி ஆத்மனாம்' 'அயமாத்மா' என்று எவ்விதம் இருக்கமுடியும்? உங்கள் சாஸ்திரத்தில் ஜீவன் வேறு ஈச்வரன் வேறு என்று இருக்கின்ற பக்ஷத்தில் ஈச்வரனே ஸர்வ ஆத்மாக்களுக்கும் ஸ்வரூபமாக எவ்விதம் இருக்கமுடியும்? உங்கள் சித்தாந்தத்திற்கு பொருந்தாது. ஆனால் ஸர்வ ஜீவர்களின் ஸ்வரூபமும் சைதன்ய ஸ்வரூபமான பரமாத்மாவே என்ற எங்கள் ஸித்தாந்தத்தில்தான் சொல்லமுடியும்.

பூர்வ:- '*ந ததஸ்தி வினா யத்ஸ்யாத் மயா பூதம் சராசரம்*' (கீதா 10.39) என்ற ச்லோகம் ஸர்வம் என்னுடைய ஸ்வரூபம் என்று சொல்வது சரியல்ல. பகவானான என்னுடைய ஸம்பந்தம் இருக்கின்றதென்றே அர்த்தம் செய்யவேண்டும் என்று தெரிவிக்கின்றதே?

ஸித்தா:- '*அஸங்கோ ந ஹி ஸஜ்ஜதே*' (பி.2.4.2.4. 4.4.22) என்ற ச்ருதி வாக்யம் பகவான் அஸங்கம் என்றே தெரிவிக்கின்றதால் ஸர்வஸம்பந்தம் இருப்பதாகச்சொல்வது சரியல்ல. ஸர்வமும் பரமாத்மாவில் மாயையினால் கல்பிதம் என்பதால், ஜீவன் என்பதோ, ஈச்வரன் என்பதோ, ஜகத் என்பதோ எதுவுமே உண்மையில் இல்லை என்பதால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே ஸித்திக்கின்றது.

இதற்கு மேல் ஸூத ஸம்ஹிதை பூராவும் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே (நிர்விசேஷபரமாகவே இயற்றப்பட்டிருக்கின்றது என்று) மேலே விளக்கப்படுகிறது.

109

सूतसंहितायाः निर्विशेषब्रह्मपरत्वप्रतिपादनम्

ஸூதஸம்ஹிதாயா: நிர்விசேஷப்ரஹ்மபரத்வப்ரதிபாதனம்

உபநிஷத்துக்கள், விஷ்ணுபுராணங்கள்,எவ்விதம் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று நிரூபணம் செய்கின்றதோ அதேபோல், ஸ்காந்தபுராணத்தில் உள்ள ஸூதஸம்ஹிதையிலும் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றே நிரூபணம் செய்யப்பட்டிருக்கின்றது

1. *அஹமேகோ ஜகத்தாதுராஸம் ப்ரதமமீஸ்வர: ।*
வர்தாமி ச பவிஷ்யாமி ந மத்தோந்யோऽஸ்தி கஸ்சந ॥
மந்மாயாஸக்திஸம்க்லப்தம் ஜகத்ஸர்வம் சராசரம் ।
ஸாபி மத்த: ப்ருதக்விப்ரா: நாஸ்த்யேவ பரமார்தத: ॥ (1.2.8-9)

अहमेको जगद्धातुरासं प्रथममीश्वरः ।
वर्तामि च भविष्यामि न मत्तोन्योऽस्ति कश्चन ॥
मन्मायाशक्तिसंक्लृप्तं जगत्सर्वं चराचरम् ।
सापि मत्तः पृथग्विप्राः नास्त्येव परमार्थतः ॥ (1.2.8-9)

என்று முதல் காண்டம் இரண்டாவது அத்யாயத்தில் எட்டாவது ச்லோகமும் ஒன்பதாவது ச்லோகமும் தெரிவிக்கின்றது.

இந்த ச்லோகங்களின் அர்த்தம் என்னவென்றால், ஸமஸ்த்த ஜகத்திற்கும் காரணமான நான் ஒருவனே ஆதியிலும் இருந்தேன், இப்போதும் இருக்கின்றேன், இனிமேலும் இருக்கப் போகிறேன். என்னை அன்றி வேறான வஸ்துக்கள் எதுவுமே கிடையாது. என்னிடம் உள்ள மாயாசக்தியினால் சராசரங்களுடன் கூடிய ஸமஸ்த்த ஜகத்தும் கல்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாயாசக்தியும் என்னையன்றி வேறாக பரமார்த்தமாக இல்லை. இந்த ச்லோகம் மாயாமயமான ஸர்வ ஜகத்தும் மாயையும் ஈச்வரனைக்காட்டிலும் தனித்த ஸத்வம் உடையதல்ல என்பதால் அத்விதீயம் ஒன்றே பரமார்த்தம் என்று ஸித்திக்கின்றது.

2. *ஆத்மாயம் கேவலஸ்வச்சஸ்ஸாந்தஸ்ஸூக்ஷ்மஸ்ஸநாதந: ।*
அஸ்தி ஸர்வாந்தரஸ்ஸாக்ஷீ சிந்மாத்ரஸ்ஸுகவிக்ரஹ: ॥
அயம் ஸ பகவாநீஸ: ஸ்வயம்ஜ்யோதிஸ்ஸநாதந: । (2.10.36)

आत्मायं केवलस्वच्छश्शान्तस्सूक्ष्मस्सनातनः ।
अस्ति सर्वान्तरस्साक्षी चिन्मात्रस्सुखविग्रहः ॥
अयं स भगवानीशः स्वयंज्योतिस्सनातनः । (2.10.36)

ஆத்மஸ்வரூபம் அஸங்கம், அத்விதீயம், சாந்தம், ஸூக்ஷ்மம், (இந்திரியத்தினால் அறிய முடியாதது) ஸனாதன:, அனாதி, அனந்தம், ஸர்வாந்தரம், ஸர்வஸாக்ஷி, சைதன்ய ஸ்வரூபம், ஆனந்தஸ்வரூபம். ஸ்வப்ரகாசஸ்வரூபமான இந்த ஆத்மாவே, ஈச்வரரூபமாகவும், ஜீவரூபமாகவும் இருக்கின்றது என்று இந்த ச்லோகத்தில் ப்ரத்யகாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் அபேதம் மிக ஸ்பஷ்ட்டமாகவே தெரிவிக்கின்றது.

3. *அபூர்வமநபரம் ப்ரஹ்ம ஸ்வாத்மாநம் ஸத்யமத்வயம் ।*
ப்ரஜ்ஞாநகநமாநந்தம் ய: பஶ்யதி ஸ பஶ்யதி ॥ (2.11.64)

अपूर्वमनपरं ब्रह्म स्वात्मानं सत्यमद्वयम् ।
प्रज्ञानघनमानन्दं यः पश्यति स पश्यति ॥ (2.11.64)

அபூர்வம் காரணமற்றது, அனபரம் கார்யமற்றது. (அதாவது தனக்கு ஒரு காரணமோ, அல்லது கார்யமோ அற்ற ஸ்வரூபம்) இப்பேர்ப்பட்ட ப்ரஹ்மம் ஸத்யம் அத்வைதம், ப்ரஞ்ஞானகனம், ஆனந்த ஸ்வரூபம் ஸ்வாத்மஸ்த்தம் என்று எவன் அறிகின்றானோ அவனே உண்மையான தத்வஞானி (வித்வான்) என்று மிகத்தெளிவாக (ஸ்பஷ்ட்டமாக) அத்வைதமே தத்வம் என்று தெரிவிக்கின்றது.

4. *விபேதஜநகே஽ஜ்ஞாநே நஷ்டே ஜ்ஞாநபலாந்முநே ।*
ஆத்மநோ ப்ரஹ்மணோ பேதமஸந்தம் க: கரிஷ்யதி ॥ (2.11.69)

विभेदजनकेऽज्ञाने नष्टे ज्ञानबलान्मुने ।
आत्मनो ब्रह्मणो भेदमसन्तं कः करिष्यति ॥ (2.11.69)

பேதத்திற்கு காரணமான அஞ்ஞானம் ஞானபலத்தினால் நஷ்ட்டமான பிறகு ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் மித்யா பூதமான பேதத்தை யாரால் உண்டாக்க முடியும் என்று பேதமில்லை என்று ஸ்பஷ்ட்டமாகவே ஜீவபரமாத்ம அபேதத்தை போதிக்கின்றது

5. *ஆத்மைவேதம் ஜகத்ஸர்வமிதி ஜாநந்தி பண்டிதா: ।*
அஜ்ஞாநேநாவ்ருதா மர்த்யா ந விஜாநந்தி ஶங்கரம் ॥ (2.16.61)

आत्मैवेदं जगत्सर्वमिति जानन्ति पण्डिताः ।
अज्ञानेनावृता मर्त्या न विजानन्ति शङ्करम् ॥ (2.16.61)

வித்வான்கள் (பண்டிதர்கள்) ஆத்ம ஞானத்தினால் ஸர்வ ஜகத்தையும் ஆத்ம ஸ்வரூபமாகவே அறிகின்றார்கள். அஞ்ஞர்கள் அஞ்ஞான ஆவரணத்தினால் இவ்விதம் மங்களகரமான ஆத்ம ஸ்வரூபத்தை அறிவதில்லை. இந்த ச்லோகத்தில் ஐததாத்ம்யம் இதம் ஸர்வம் என்ற ச்ருதி வாக்யத்தில் தெரிவிக்கப்பட்ட 'அத்வைதமே தத்வம்' என்று தெரிவிக்கின்றது.

6. தேஹாத்யாத்மமதிம் வித்வாந்ஸமாக்ருஷ்ய ஸமாஹித: ।
ஆத்மநாऽऽத்மநி நிர்த்வந்த்வே நிர்விகல்பே நிரோதயேத் ॥ (2.17.16)

देहाद्यात्ममतिं विद्वान्समाकृष्य समाहितः ।
आत्मनाऽऽत्मनि निर्द्वन्द्वे निर्विकल्पे निरोधयेत् ॥ (2.17.16)

ஆத்மஞானியான வித்வான் தேஹாதிகளில் ஏற்படும் ஆத்மபுத்தியை அதிலிருந்து விலக்கி நிர்த்வந்த்வ, நிர்விகல்ப ஆத்ம ஸ்வரூபத்தில், ஆத்மபுத்தியை நிலை நிறுத்தவேண்டும். (இந்த ச்லோகம் நிர்விகல்பகம் அத்விதீயம் ப்ரஹ்மம் ப்ரத்யகபின்னம் என்று ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது).

7. இதம்தயா ந தேவேஶமபித்யாயேந்மநாகபி ।
ப்ரஹ்மணஸ்ஸாக்ஷிரூபத்வாந்நேதம் யதிதி ஹி ஶ்ருதி: ॥ (2.19.30)

इदंतया न देवेशमभिध्यायेन्मनागपि ।
ब्रह्मणस्साक्षिरूपत्वान्नेदं यदिति हि श्रुतिः ॥(2. 19.30)

ஈச்வரனை ப்ரத்யாகாத்மாவைக்காட்டிலும் வேறாக த்யானம் செய்யக்கூடாது. ஏனெனில், ப்ரஹ்மமே ஸாக்ஷி ரூபமாக, ப்ரத்யகாத்மவாக இருந்து கொண்டு ஸர்வத்தையும் ப்ரகாசப்படுத்துகின்றது. அதனால் 'நேதம் யதிதம் உபாஸதே' என்ற ச்ருதி வாக்யம் தெரிவிக்கின்றபடி ப்ரத்யகாத்ம அபின்னமாக ப்ருஹ்மத்யானம் செய்யவேண்டும். இந்த ச்லோகத்தில் ப்ரத்யக அபின்னம் ப்ருஹ்மம் (அபேதம்) என்றே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

8. யதி ஜீவ: பராத்பிந்ந: கார்யதாமேதி ஸுவ்ரத ।
அசித்த்வம் ச ப்ரஸஜ்யேத கடவத்பண்டிதோத்தம ।
விநாஶித்வம் பயம் ச ஸ்யாத் த்விதீயாத்வா இதி ஶ்ருதி: ।
நித்யஸ்ஸர்வகதோ ஹ்யாத்மா கூடஸ்தோ தோஷவர்ஜித: ॥
ஏக: ஸ பித்யதே ப்ராந்த்யா மாயயா ந ஸ்வபாவத: ।
தஸ்மாதத்வைதமேவாஸ்தி ந ப்ரபஞ்சோ ந ஸம்ஸ்ருதி: ॥
யதாऽऽகாஶோ கடாகாஶோ மடாகாஶ இதீரித: ।
ததா ப்ராந்த்யா த்விதா ப்ரோக்தோ ஹ்யாத்மா ஜீவேஶ்வராத்மநா ॥ (2.20.2-5)

यदि जीवः पराद्भिन्नः कार्यतामेति सुव्रत ।
अचित्त्वं च प्रसज्येत घटवत्पण्डितोत्तम ।
विनाशित्वं भयं च स्यात् द्वितीयाद्वा इति श्रुतिः ।
नित्यस्सर्वगतो ह्यात्मा कूटस्थो दोषवर्जितः ॥

एकः स भिद्यते भ्रान्त्या मायया न स्वभावतः।
तस्मादद्वैतमेवास्ति न प्रपञ्चो न संसृतिः॥
यथाऽऽकाशो घटाकाशो मठाकाश इतीरितः।
तथा भ्रान्त्या द्विधा प्रोक्तो ह्यात्मा जीवेश्वरात्मना॥ (2.20.2-5)

ஹே! பண்டித ச்ரேஷ்ட்டனே! ஜீவாத்மா, பரமாத்மாவைக்காட்டிலும் வேறாக இருந்தால், பரமாத்மாவின் கார்யமாகும். ம்ருத்கார்யமான கடத்தைப்போல் ஜீவாத்மா ஜடம் என்று சொல்லநேரிடும். அதுமட்டுமல்ல, ஜீவாத்மாவிற்கு நாசமும் ஏற்படும். மேலும், ஜீவபரமாத்ம பேதம் உண்மையானால், ஜீவாத்மாவிற்கு பய நிவர்த்தியே ஏற்படாது. ''*த்விதீயாத்வை பயம் பவதி*'' என்று ச்ருதிவாக்யம் தெரிவிக்கின்றது. அதனால், நித்யம், ஸர்வகதம், கூடஸ்த்தம், சோகரஹிதம் ஏகம் என்று சொல்லப்படும் அந்த ஒரே ஆத்மா, மாயையினால் ஏற்பட்ட ப்ராந்தியினால், பின்னமாக (பேதமாக) அறியப்படுகிறது. உண்மையான ஆத்மஸ்வரூபம் அத்வைதமே என்பதால், அந்த ஆத்மாவிற்கு ப்ரபஞ்சமோ, ஸம்ஸாரமோ எதுவுமே கிடையாது. எவ்விதம் ஒரே ஆகாசம், கடாகாசம் என்றும் மடாகாசம் என்றும் பலவிதமாக ப்ராந்தியினால் அறியப்படுகிறதோ, அதேபோல் ஒரே ஆத்மாவே, ஜீவாத்மா என்றும் ஈச்வராத்மா என்றும் பின்னமாக அறியப்படுகிறது.

இந்த ஐந்து ச்லோகங்களிலும், ஆத்மா ஸ்வாபாவிகமாக பேதமற்ற ஸ்வரூம் (பேதசூன்யம்) என்றும், த்வைதம் மித்யை அத்வைதமே ஸத்யம் என்று ஸ்பஷ்ட்டமாக அறியப்படுகிறது..

9. *யதா பேநதரங்காதி ஸமுத்ராதுத்திதம் புந: ।*
ஸமுத்ரே லீயதே தத்வஜ்ஜகந்மய்யேவ லீயதே ॥
தஸ்மாந்மத்த: ப்ருதங்நாஸ்தி ஜகந்மாயா ச ஸர்வதா ।
இதி புத்திஸ்ஸமாதிஸ்ஸ்யாத்ஸா ஸமாதிரிதி ஶ்ருதி: ॥
யஸ்யைவம் பரமாத்மாயம் ப்ரத்யக்பூத: ப்ரகாஶித: ।
ஸ யாதி பரமம் பாவம் ஸ்வகம் ஸாக்ஷாத்பராம்ருதம் ॥
யதா மநஸி சைதந்யம் பாதி ஸர்வத்ரகம் ஸதா ।
யோகிநோऽவ்யவதாநேந ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா ॥
யதா ஸர்வாணி பூதாநி ஸ்வாத்மந்யேவாபிபஶ்யதி ।
ஸர்வபூதேஷு சாத்மாநம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ஸ்வயம் ॥
யதா ஸர்வாணி பூதாநி ஸமாதிஸ்தோ ந பஶ்யதி ।
ஏகீபூத: பரேணாஸௌ ததா பவதி கேவல: ॥ (2.20.20-25)

यथा फेनतरङ्गादि समुद्रादुत्थितं पुनः।
समुद्रे लीयते तद्वज्जगन्मय्येव लीयते॥

तस्मान्मत्तः पृथङ्नास्ति जगन्माया च सर्वदा ।
इति बुद्धिस्समाधिस्स्यात्सा समाधिरिति श्रुतिः ॥
यस्यैवं परमात्मायं प्रत्यग्भूतः प्रकाशितः ।
स याति परमं भावं स्वकं साक्षात्परामृतम् ॥
यदा मनसि चैतन्यं भाति सर्वत्रगं सदा ।
योगिनोऽव्यवधानेन ब्रह्म सम्पद्यते तदा ॥
यदा सर्वाणि भूतानि स्वात्मन्येवाभिपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ब्रह्म सम्पद्यते स्वयम् ॥
यदा सर्वाणि भूतानि समाधिस्थो न पश्यति ।
एकीभूतः परेणासौ तदा भवति केवलः ॥ (2.20.20-25)

எவ்விதம் ஸமுத்ரத்தில் உள்ள அலைகள் நுரைகள் முதலானவை, ஸமுத்ரத்திலிருந்தே உண்டாகி அதிலேயே லயத்தை அடைகின்றதோ, அதேபோல் இந்த ஜகத், என்னிடத்திலிருந்தே உண்டாகி, என்னிடத்திலேயே லயத்தை அடைகின்றது. அதனால் என்னை அன்றி வேறாக இந்த ஜகத்திற்கு ஸத்வம் கிடையாது. ஜகத் என்பதும் மாயை என்பதும் என்னை அன்றி வேறாக தனித்த ஒரு வஸ்து ஒருபோதும் கிடையாது என்று ஏற்படும் ஞானமே ஸமாதி என்று ச்ருதி தெரிவிக்கின்றது. எவனொருவன், நிஷ்ப்ரபஞ்சமான பரமாத்மாவை ப்ரத்யக்பூதமாக (ஸ்வரூபமாக) அறிகின்றானோ அவனும் ஸாக்ஷாத் பராம்ருதமான பரமாத்மபாவத்தையே அடைகின்றான். எப்போது ஸர்வ வ்யாபகமான சைதன்யம் யோகியின் மனதில் ஸர்வதா ஸ்புரிக்கின்றதோ, அப்போதே அவன் ப்ரஹ்மபாவத்தை அடைகின்றான். ஸர்வ பூதங்களிலும் எவன் தன் ஆத்மஸ்வரூபத்தையே பார்க்கின்றானோ, அதேபோல் ஸர்வபூதங்களையும் தன் ஆத்ம ஸ்வரூபமாகவே எப்போது அறிகின்றானோ, அப்போதே அவனே ப்ரஹ்மமாகின்றான். ஸமாதியில் இருப்பவன் ஸர்வபூதங்களையும் பார்ப்பதில்லை (ந பச்யதி). ஏனெனில் அவன் பரமாத்மாவுடன் ஏகீபூதனாக கேவல அத்விதீயமாகவே இருக்கின்றான்.

இந்த ச்லோகங்களிலும், ஜீவேச்வர அபேதமே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

10. *யதா ஸர்பேதமம்ஶஸ்ய தத்வம் தண்டாதி கேவலம் ।*
அஸ்ய ஸம்ஸாரிணஸ்தத்வம் ததா ப்ரஹ்மைவ கேவலம் ॥ (3.3.10)

यथा सर्पेदमंशस्य तत्त्वं दण्डादि केवलम् ।
अस्य संसारिणस्तत्त्वं तथा ब्रह्मैव केवलम् ॥ (3-3-10)

ரஜ்ஜு, தண்டம் முதலானவைகளில் ஸர்ப்பம் என்ற ப்ரமம் ஏற்படுகின்றபோது ஆரோபிதமான அந்த ஸர்ப்பத்தின் உண்மையான ஸ்வரூபம் கேவல ரஜ்ஜு, தண்டம் என்ற இவைகளேதான். அதேபோல் ஸம்ஸாரியான இந்த ஜீவாத்மாவின் உண்மையான தத்வம் கேவல ப்ரஹ்மமேதான் என்று தெரிவிக்கின்றது.

இந்த ச்லோகத்தில் ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்மமே ஸத்யம் என்றும் ஜீவபாவம் அதில் கல்பிதம் என்பதால் மித்யை என்றும், அத்வைதமே தத்வம் என்று தெரிவிக்கின்றது.

11. *சண்டாலதேஹே பஶ்வாதிஶரீரே ப்ரஹ்மவிக்ரஹே ।*
அந்யேஷு தாரதம்யேந ஸ்திதேஷு புருஷோத்தம ॥
வ்யோமவத்ஸர்வதா வ்யாப்தஸ்ஸர்வஸம்பந்தவர்ஜித: ।
ஏகோ ரூபோ மஹாதேவ: ஸ்திதஸ்ஸோஹம் பராம்ருத: ॥
இதி யோ வேத வேதாந்தை: ஸோதிவர்ணாஶ்ரமீ பவேத் । (3.5.25-27)

चण्डालदेहे पश्वादिशरीरे ब्रह्मविग्रहे ।
अन्येषु तारतम्येन स्थितेषु पुरुषोत्तम ॥
व्योमवत्सर्वदा व्याप्तस्सर्वसम्बन्धवर्जितः ।
एको रूपो महादेवः स्थितस्सोहं परामृतः ॥
इति यो वेद वेदान्तैः सोतिवर्णाश्रमी भवेत् । (3.5.25-27)

ஹே! புருஷோத்தமனே! சண்டாள சரீரத்திலும், பசு முதலான சரீரங்களிலும், ப்ராஹ்மண சரீரத்திலும், அதேபோல் தாரதம்யமான மற்ற சரீரங்களிலும், ஆகாசம் போல் ஸர்வவ்யாபியாக அஸங்க ஏகரூபமாக, அம்ருத ஸ்வரூபமாக இருக்கின்ற மஹாதேவனான நானே ஸ்திதி பெற்றிருக்கின்றேன் என்று வேதாந்த விசாரத்தின் மூலம் எவன் அறிகின்றானோ அவனே அதிவர்ணாச்ரமி என்று சொல்லப்படுகின்றான். இந்த ச்லோகத்திலும் அத்விதீய ஆத்மஸ்வரூபமே ப்ரத்யகபின்னம் என்று நிரூபணம் செய்யப்படுகிறது.

12. *ந தேஹோ நேந்த்ரியப்ராணோ ந மநோபுத்யஹம்க்ருதி: ।*
ந சித்தம் நைவ மாயா ச ந ச வ்யோமாதிகம் ஜகத் ॥
ந கர்தா நைவ போக்தா ச நைவ போஜயிதா ததா ।
கேவலம் ஸச்சிதாநந்தப்ரஹ்மைவாத்மா யதார்த்த: ।
ஜலஸ்ய சலநாதேவ சஞ்சலத்வம் யதா ரவே: ।
ததாऽஹங்காரஸம்பந்தாதேவ ஸம்ஸார ஆத்மந: ॥ (33.35)

न देहो नेन्द्रियप्राणो न मनोबुध्यहंकृतिः ।
न चित्तं नैव माया च न च व्योमादिकं जगत् ॥

न कर्ता नैव भोक्ता च नैव भोजयिता तथा।
केवलं सच्चिदानन्दब्रह्मैवात्मा यथार्थतः।
जलस्य चलनादेव चञ्चलत्वं यथा रवेः।
तथाऽहङ्कारसम्बन्धादेव संसार आत्मनः॥ (33-35)

தேஹம், இந்த்ரியம், ப்ராணன், மனஸ், புத்தி, அஹங்காரம், சித்தம், மாயை, ஆகாசம் முதலான ஜகத், கர்த்தா, போக்தா, போஜயிதா என்ற எந்த ரூபமாகவும் நான் இல்லை. கேவல ஸச்சிதானந்த ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே பரமார்த்தமாக நான் இருக்கின்றேன். எவ்விதம் ஜலத்தில் ஏற்படும் சலனத்தினால் அதில் ப்ரதிபிம்பிக்கின்ற ஸூர்யனுக்கு சஞ்சலத்வம் இருப்பதாக அறியப்படுகிறதோ அதுபோல் அஹங்கார ஸம்பந்தத்தினாலேயே ஆத்மாவில் ஸம்ஸார ஸம்பந்தம் அறியப்படுகிறது.

இந்த ச்லோகங்களிலும் நிஷ்ப்ரபஞ்ச ப்ரஹ்மமே ப்ரத்யகாத்மா என்றே தெரிவிக்கின்றது.

13. *ஏவமாத்மாநமத்வந்த்வம் நிர்விகல்பம் நிரஞ்ஜநம்* ।
நித்யம் ஶுத்தம் நிராபாஸம் சிந்மாத்ரம் ச பராம்ருதம் ॥ (40)

एवमात्मानमद्वन्द्वं निर्विकल्पं निरञ्जनम्।
नित्यं शुद्धं निराभासं चिन्मात्रं च परामृतम्॥ (40)

ஆத்மஸ்வரூபம் அத்விதீய, நிர்விகல்ப, நிரஞ்சன, நித்ய சுத்த, நிராபாஸ சைதன்யமாத்ரம், அம்ருத ஸ்வரூபம் என்று தெரிவிக்கின்றது.

14. *ஸம்ஸாரித்வேந பாஸோஹம் ஸ ஏவ பரமேஶ்வர:* ।
ஸோஹமேவ ந ஸம்தேஹ: ஸ்வாநுபூதிப்ரமாணத: ॥ (4.7.12)
சிச்சேஷத்வம் ச நாஸ்த்யேவ சிதஶ்சிந்ந ஹி பித்யதே ।
பித்யதே சேதசிச்சித்ஸ்யாச்சிதோऽசித்த்வம் விருத்யதே ॥ (4.7.18)
பூர்ணோஹம் ஸர்வஸாக்ஷித்வாத்ஸர்வதா பரமார்தத: । (4.7.22)
ஸம்ஸாரவர்ஜிதஸ்ஸாக்ஷாத்ஸர்வதா பரமேஶ்வர: ॥
அஹம் ஸம்ஸாரஸாக்ஷித்வாத்ஸதா ஸம்ஸாரவர்ஜித: ॥ (4.7.23)

संसारित्वेन भासोहं स एव परमेश्वरः।
सोहमेव न संदेहः स्वानुभूतिप्रमाणतः॥ (4.7.12)
चिच्छेषत्वं च नास्त्येव चितश्चिन्न हि भिद्यते।
भिद्यते चेदचिच्चित्स्याच्चितोऽचित्त्वं विरुध्यते॥ (4.7.18)
पूर्णोहं सर्वसाक्षित्वात्सर्वदा परमार्थतः। (4.7.22)

संसारवर्जितस्साक्षात्सर्वदा परमेश्वरः ॥
अहं संसारसाक्षित्वात्सदा संसारवर्जितः ॥ (4.7.23)

நான் ஸம்ஸாரியாக ப்ரகாசித்துக்கொண்டிருந்தபோதிலும், நான், ஸந்தேஹமின்றி அந்த பரமேச்வரனாகவே இருக்கின்றேன் என்பதற்கு ஸ்வானுபவமே, (என் அனுபவமே) ப்ரமாணம். நான் சித்ரூபமான பரமேச்வரனுக்கு சேஷனாக இல்லை. சித்சேஷத்வம் என்னிடம் கிடையாது. ஏனெனில் நானும் சித்ரூபமே, சித்ரூபமான நான், சித்ரூபமான பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவனாக இருக்க முடியாது. அவ்விதம் பின்னமாக இருந்தால், இரண்டில் ஒன்று அசித் என்று சொல்ல நேரிடும். அவ்விதம் சொல்வது சரியல்ல. அதேபோல் நான் ஸர்வத்திற்கும் ஸாக்ஷியாக இருக்கின்றதால் பூர்ணனாகவே இருக்கின்றேன். பரமார்த்தமாக எப்போதுமே நான் அஸம்ஸாரியாகவே இருக்கின்றேன். பரமேச்வரன், அஸம்ஸாரியாகவும், ஸர்வஸாக்ஷியாகவும் இருக்கின்றதால், என்னிடமும் அதே லக்ஷணம் இருக்கின்றதால் இரண்டு பேருக்கும் பேதமே கிடையாது.

இந்த ச்லோகங்களிலும், ஆத்மா, சித்ரூபம், பூர்ணம், அஸம்ஸாரி, ப்ரத்யகபின்ன ப்ரஹ்ம ஸ்வரூபம் என்று அத்வைதம் என்றே தெரிவிக்கின்றது.

15. *தஸ்மாச்சிவஸ்ய பூர்ணஸ்ய ப்ரணவோ வாசக: ஸ்ம்ருத: ।*
வாச்யவாசகபாவாச்ச லக்ஷ்யலக்ஷணதாபி ச ॥
அந்யோந்யதாபி நாஸ்த்யேவ பரமார்தநிரூபணே ।
அபாவாதேவ ஸர்வஸ்ய ஶிவாதந்யஸ்ய ஸர்வதா ॥
அஸ்தி நாஸ்தி ம்ருஷா பாதி ந பாதீத்யாதி மாயயா ।
கல்பிதம் சித்ஸுகாநந்தே பரமார்தே ஶிவாத்மநி ॥
மாயா தத்கார்யமப்யஸ்மாச்சிவாத்ஸத்யாதிலக்ஷணாத் ।
ப்ரத்யக்ஷஸித்தாந்நாஸ்த்யேவ பரமார்தநிரூபணே ॥
அத கிம் பஹுநோக்தேந ஶிவாதந்யம் ந வித்யதே ।
ஶிவஸ்வரூபமேவாஹுர்ஜகதேதத்விசக்ஷணா: ॥
ஸர்வஸ்வரூபமஜ்ஞாநாத் த்ருஶ்யதே ந ச வஸ்துத: ।
ஏஷ ஏவ ஹி மந்த்ரார்தஸ்ஸத்யம் ஸத்யம் ந சாந்யதா ॥ (4.8.16-22)

तस्माच्छिवस्य पूर्णस्य प्रणवो वाचकः स्मृतः ।
वाच्यवाचकभावाच्च लक्ष्यलक्षणतापि च ॥
अन्योन्यतापि नास्त्येव परमार्थनिरूपणे ।
अभावादेव सर्वस्य शिवादन्यस्य सर्वदा ॥
अस्ति नास्ति मृषा भाति न भातीत्यादि मायया ।
कल्पितं चित्सुखानन्दे परमार्थे शिवात्मनि ॥

माया तत्कार्यमप्यस्माच्छिवात्सत्यादिलक्षणात् ।
प्रत्यक्षसिद्धान्नास्त्येव परमार्थनिरूपणे ॥
अथ किं बहुनोक्तेन शिवादन्यं न विद्यते ।
शिवस्वरूपमेवाहुर्जगदेतद्विचक्षणाः ॥
सर्वस्वरूपमज्ञानाद् दृश्यते न च वस्तुतः ।
एष एव हि मन्त्रार्थस्सत्यं सत्यं न चान्यथा ॥ (4.8.16-22)

பரிபூரணரான சிவனுக்கு வாசகமாக ப்ரணவம் சொல்லப்படுகிறது. பரமார்த்தத்தில் வாச்யவாசகபாவமோ, லக்ஷ்யலக்ஷணபாவமோ, அன்யோன்யத்வமோ (தாதாத்ம்யமோ) கிடையாது. ஏனெனில் சிவஸ்வரூபத்தை அன்றி வேறாக எதுவுமே ஒருபோதும் கிடையாது. அஸ்தி என்றும் நாஸ்தி என்றும், பாதி (ப்ரகாசிக்கின்றது) ந பாதி (ப்ரகாசிக்கவில்லை) என்ற வ்யவஹாரங்கள் எல்லாமே, சித்சுகானந்த சிவாத்ம ஸ்வரூபத்தில் மாயையினால் கல்பிக்கப்படுகிறது. மாயையோ, அதன் கார்யமோ, ஸ்வப்ரகாச ஸத்ய ஞானானந்த ஸ்வரூபமான சிவனை அன்றி வேறாக இல்லை என்று உண்மையை விசாரித்து அறிந்து கொள்ளவேண்டும். இதற்கு மேலும் விஸ்தாரமாக தெரிவிக்கவேண்டிய தேவை இல்லை. சிவனை அன்றி வேறு எதுவுமே இல்லை. ஜகத் சிவஸ்வரூபமே. அஞ்ஞானத்தினால் ஜகத்தாக தோன்றுகிறது. இதுவே மந்த்ரார்த்தம் இதுவே ஸத்யம், ஸத்யம், ஸத்யத்தை அன்றி வேறெதுவுமில்லை. இந்த ச்லோகங்களில் ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்மம் தத் ஸத்யம் என்று நிரூபணம் செய்யப்படுகிறது.

16. *வேதாஸ்ஸர்வே புராணாநி ஸ்ம்ருதயோ பாரதம் யதா ।*
அந்யாந்யபி ச ஶாஸ்த்ராணி ததா தர்காஶ்ச ஸர்வஶ: ।
ஶைவாகமாஶ்ச விவிதா ஆகமா வைஷ்ணவா அபி ।
அந்யாகமாஶ்ச விதுஷாமநுபூதிஸ்ததைவ ச ॥
அஸ்மிந்நர்தே ஸ்வஸம்வேத்யே பர்யவஸ்யந்தி நாந்யதா ॥ (4.8.22-24)

वेदास्सर्वे पुराणानि स्मृतयो भारतं यथा ।
अन्यान्यपि च शास्त्राणि तथा तर्काश्च सर्वशः ।
शैवागमाश्च विविधा आगमा वैष्णवा अपि ।
अन्यागमाश्च विदुषामनुभूतिस्तथैव च ॥
अस्मिन्नर्थे स्वसंवेद्ये पर्यवस्यन्ति नान्यथा ॥ (4.8.22-24)

ஸர்வவேதங்களும், புராணங்களும், ஸ்ம்ருதிகளும், மஹாபாரதமும், மற்றுமுள்ள ஸர்வ சாஸ்திரங்களும், தர்க்கங்களும், அனேக சைவ ஆகமங்கள், வைஷ்ணவ ஆகமங்களும்

இவைகளை அன்றி வேறான மற்றுமுள்ள ஆகமங்களும், தத்வ ஞானியின் அனுபவமும், ஸ்வப்ரகாச ஸ்வரூபமான இந்த ஆத்ம ஸ்வரூபத்தையே போதிக்கின்றது என்ற விஷயத்தில் வேறான அபிப்ராயம் எதுவுமே கிடையாது. இந்த ச்லோகங்களில், எல்லாவேதங்களும் புராணங்களும் நிர்விசேஷப்ரஹ்மபரமாகத்தான் போதிக்கின்றது என்ற விஷயம் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

17. *பேதாபாவாச்ச பேதஸ்ய ப்ரமத்வாதேவ வஸ்துத:* । (4.9.3)

भेदाभावाच्च भेदस्य भ्रमत्वादेव वस्तुतः। (4.9.3)

இந்த ச்லோகத்தில் பேதம் மித்யை, ப்ரமத்தினால் பேதம் தோன்றுகிறது, அபேதமே ஸத்யம் என்று தெரிவிக்கின்றது.

18. *ப்ரத்யக்பூதஶிவோ ஜ்ஞாதும் ந ஶக்யஸ்ஸர்வஜந்துபி:* ।
ப்ரத்யகாத்மா ஶிவஸ்ஸாக்ஷாந்ந பராகர்த ஆஸ்திகா: ॥ (4.10.34)

प्रत्यग्भूतश्शिवो ज्ञातुं न शक्यस्सर्वजन्तुभिः।
प्रत्यगात्मा शिवस्साक्षान्न परागर्थ आस्तिकाः॥ (4.10.34)

ப்ரத்யகாத்ம ஸ்வரூபமான சிவனை அறியப்படுவதாக யாராலும் சொல்லமுடியாது. ஏனெனில், ஹே ஆஸ்திகர்களே! சிவன் அறியப்படும் வஸ்துவல்ல (வெளியில் உள்ள (பராக்) வஸ்து அல்ல) எல்லாவற்றை அறிகின்ற ஆத்ம ஸ்வரூபமாகவே இருக்கின்றார். இந்த ச்லோகத்திலும் ப்ரத்யகபின்ன அபேதமே சொல்லப்படுகிறது.

19. *ஆத்மபேதஸ்ததைவாத்மப்ரஹ்மபேதஶ்ச ஸுவ்ரதா:* ।
உபாதிநைவ க்ரியதே ந ஸ்வதோ முநிபுங்கவா: ॥
கடாத்யுபாதிஸம்பர்காதாகாஶஸ்ய யதா பிதா । (4.10.42)

आत्मभेदस्तथैवात्मब्रह्मभेदश्च सुव्रताः।
उपाधिनैव क्रियते न स्वतो मुनिपुङ्गवाः॥
घटाद्युपाधिसम्पर्कादाकाशस्य यथा भिदा। (4.10.42)

ஜீவர்களுக்குள் பரஸ்பரபேதமும் ஜீவப்ரஹ்மபேதமும், உபாதியினால் தான் ஏற்படுகின்றதே அன்றி வாஸ்தவமாக இல்லை. தபஸ்ஸில் சிறந்த முனிச்ரேஷ்ட்டர்களே! கடாதி உபாதி ஸம்பந்தத்தினால் ஆகாசத்தில் எவ்விதம் பேதம் அறியப்படுகிறதோ அதேபோல் உபாதி ஸம்பந்தத்தினாலேயே, ஒரே ஆத்மாவே பேதம் உள்ளதாக அறியப்படுகிறது. இந்த ச்லோகத்தில் ஜீவப்ரஹ்ம அபேதமே பரமார்த்தம், ஆத்மபேதம் இல்லை என்று தெரிவிக்கின்றது.

20. ஆத்மநோபி ஸ்வதோ பேதமாஹு: கேசிந்முநீஶ்வரா: ।
தந்ந ஸங்கதமேவ ஸ்யாதாத்மபேதஸ்ய ஸாதக: ॥
பேதஸாக்ஷீ ஶிவோஹ்யாத்மா கதம் பிந்நோ பவேத் த்விஜா: ।
அத ஆத்மநி பேதஸ்து ப்ராந்திஸித்தோ ந வஸ்துத: ॥ (4.10.47)

आत्मनोपि स्वतो भेदमाहुः केचिन्मुनीश्वराः ।
तन्न सङ्गतमेव स्यादात्मभेदस्य साधकः ॥
भेदसाक्षी शिवोह्यात्मा कथं भिन्नो भवेद् द्विजाः ।
अत आत्मनि भेदस्तु भ्रान्तिसिद्धो न वस्तुतः ॥ (4.10.47)

ஆத்மாவிற்கு ஸ்வத:பேதம் இருப்பதாக சொல்கிறார்கள். அது தவறு. ஆத்மாவில் பேதத்தை ஸாதிப்பதற்கு உரியகாரணம் ஏதுமில்லை. அறியப்படும் பேதத்திற்கு ஸாக்ஷியான ஆத்மா, பேதத்திற்கு ப்ரகாசகமாக இருக்கின்ற ஆத்மா, பேதம் உடையதாக எவ்விதம் இருக்கமுடியும்? ஆத்ம பேதத்தை அறிகின்றவனே ஆத்மா என்று சொல்லவேண்டும். அதனால் அறியப்படும் பேதத்திற்கு ஆத்மா ஆச்ரயமாக இருக்கமுடியாது. அதனால் ஆத்மா பேதம் உடையது என்பது ப்ராந்தி ஸித்தமே அன்றி, ப்ரமாணஸித்தம் அல்ல.

இந்த ச்லோகங்களில் ஆத்ம பேதம் ப்ராந்தி ப்ரயுக்தம் என்று நிரூபணம் செய்யப்படுகிறது.

21. ஸ்வரூபத்வேந வா விப்ரா தர்மத்வேநைவ வா பிதா ।
அபி வர்ஷஶதேநாபி வஸ்துதோ ந நிரூப்யதே ॥
அந்யதோந்யஸ்ய பேதஸ்ஸ்யாந்நைகஸ்யைவ ஸதா கலு ।
அந்யத்வம் வஸ்துதோ பேதே ஸித்தே ஸித்த்யதி யௌக்திகம் ॥
ஏகமேவாத்விதீயம் ஸ்யாதித்யாஹ ஶ்ருதிராதராத் ।
மாயாமாத்ரமிதம் த்வைதமிதி சாऽஹாபரா ஶ்ருதி: ॥
ஏகத்வம் பஶ்யதோ மோஹ: கஶ்ஶோக இதி சாऽஹ ஹி ।
த்விதீயாத்வை பயம் நால்பே ஸுகமித்யபி சாऽஹ ஹி ।
அதஸ்தர்கப்ரமாணாப்யாம் வஸ்த்வேகத்வம் ஸுநிஶ்சிதம் ।
வஸ்த்வேகத்வம் மஹாவாக்யாதேவ ஜாநந்தி யே ஜநா: ॥
தே முச்யந்தே ஹி ஸம்ஸாராத்யதா ஸ்வநப்ரபோதநாத் ।
பேததர்ஶநமாஸ்தாய முக்திம் வாஞ்சந்தி யே நரா: ॥
தே மஹாகோரஸம்ஸாரே பதந்த்யேவ ந ஸம்ஶய: । (4.10.53-59)

स्वरूपत्वेन वा विप्रा धर्मत्वेनैव वा भिदा ।
अपि वर्षशतेनापि वस्तुतो न निरूप्यते ॥
अन्यतोन्यस्य भेदस्स्यान्नैकस्यैव सदा खलु ।
अन्यत्वं वस्तुतो भेदे सिद्धे सिद्ध्यति यौक्तिकम् ॥

एकमेवाद्वितीयं स्यादित्याह श्रुतिरादरात् ।
मायामात्रमिदं द्वैतमिति चाऽहापरा श्रुतिः ॥
एकत्वं पश्यतो मोहः कश्शोक इति चाऽह हि ।
द्वितीयाद्वै भयं नाल्पे सुखमित्यपि चाऽह हि ॥
अतस्तर्कप्रमाणाभ्यां वस्त्वेकत्वं सुनिश्चितम् ।
वस्त्वेकत्वं महावाक्यादेव जानन्ति ये जनाः ॥
ते मुच्यन्ते हि संसाराद्यथा स्वप्नप्रबोधनात् ।
भेददर्शनमास्थाय मुक्तिं वाञ्छन्ति ये नराः ॥
ते महाघोरसंसारे पतन्त्येव न संशयः । (4.10.53-59)

பேதம் என்பது ஆத்மஸ்வரூபம் என்றோ அல்லது ஆத்மதர்மமென்றோ நூறு வருடங்கள் வாதம் செய்தாலும் நிரூபிக்கமுடியாது. ஏனெனில் இரண்டு வஸ்துக்கள் உண்மையாக இருந்தால்தான், அந்த இரண்டிற்கும் பேதம் ஸித்திக்கும். இரண்டு வஸ்துக்கள் இருக்கின்றதாக சொல்ல வேண்டுமானால் இரண்டிற்கும் பேதம் ஸித்திக்கவேண்டும். அதனால், அன்யோன்ய ஆச்ரயம் ஸம்பவிக்கின்றது. ச்ருதியானது, '*ஏகமேவ அத்விதீயம்*' என்று அத்வைதமே பரமார்த்தம் என்றும், த்வைதம் மாயாமாத்ரம் என்றும் த்வைதம் மித்யை என்றே தெரிவிக்கின்றது. இதேபோல், 'ஏகத்வம்' என்று அறிந்தவனுக்கு சோகமோ, மோஹமோ இல்லை என்று '*தத்ர கோ மோஹ: க: சோக:*' என்றும், த்வைத ஞானம் உள்ளவனுக்கு பய நிவர்த்தி கிடையாது என்றும், சுகம் கிடையாது என்றும் ச்ருதிவாக்யம் '*த்விதீயாத்வை பயம் பவதி, ந அல்பே சுகமஸ்தி*' என்று தெரிவிக்கின்றது. அதனால் யுக்தியினாலும், சுருதி ப்ரமாணத்தினாலும் அத்வைதமே தத்வம் என்று நன்கு த்ருடமாக ஸித்திக்கின்றது.

வஸ்து அபேதத்தை (ஜீவபரமாத்ம ஐக்யத்தை) மஹாவாக்யங்களின் மூலம் எவர் அறிகின்றார்களோ, ஸ்வப்னத்திலிருந்து விழித்தெழுந்து ஜாக்ரத்திற்கு வருவது போல், ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு முக்தி நிலையை அடைகின்றார்கள். அவ்விதமின்றி பேத தர்சனத்தை விடாமல் முக்தியை விரும்புபவர்கள் மஹாகோரமான இந்த ஸம்ஸாரத்திலேயே வீழ்ந்து கஷ்ட்டப்படுகிறார்கள் என்பதில் எவ்வித ஸந்தேஹத்திற்கும் இடமில்லை.

இந்த ச்லோகங்களிலும் ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்மம் அதுவே ஸத்யம், ப்ரஹ்மஞானாத் முக்தியென்றும் பேத ஞானத்தினால் ஸம்ஸார பந்தம் என்றும் தெரிவிக்கின்றது.

22. *உக்தலக்ஷணமாத்மாநமுக்தலக்ஷணமீஶ்வரம்* ।
ஏகம் பஶ்யந்தி யே விப்ராஸ்தர்கதஶ்ச ப்ரமாணத: ॥
ததா ஸ்வாநுபவேநைவ குருக்த்யா ச ப்ரமாணத: ।
த ஏவ ஜ்ஞாநஸம்பந்நாஸ்த்ரிர்வ: ஶபதயாம்யஹம் ॥ (4.11.36-37)

उक्तलक्षणमात्मानमुक्तलक्षणमीश्वरम् ।
एकं पश्यन्ति ये विप्रास्तर्कतश्च प्रमाणतः ॥
तथा स्वानुभवेनैव गुरूक्त्या च प्रमाणतः ।
त एव ज्ञानसंपन्नास्त्रिर्वः शपथयाम्यहम् ॥ (4.11.36-37)

முன்னால் சொல்லப்பட்ட ஜீவாத்ம ஸ்வரூபமும், பரமாத்ம ஸ்வரூபமும் ஒன்று என்று, யுக்தியையும் ப்ரமாணத்தையும் ஸ்வானுபவத்தையும் கொண்டு எவர் அறிகின்றார்களோ, அவர்களுக்கே முக்தி என்று இந்த ச்லோகமும் ஜீவேச்வர அபேதத்தையே தெரிவிக்கின்றது.

23. *ப்ரஹ்மஸத்யபராநந்தப்ரகாஶாநந்தலக்ஷணம் ।*
அப்ரச்யுதாத்மபாவேந ஸம்ஸ்திதம் ஸர்வதைவ து ॥
ஆத்மஶக்திஸமாயோகாதநாத்யந்தாததர்கிதாத் ।
அப்ரதீதமிவாऽபாதி ஸ்வயம்பாதமபி த்விஜா: ॥
ஸதப்யஸதிவ ப்ராஜ்ஞோ ஸதைகமபி பிந்நவத் ।
தாத்ருஶாகாரமாபந்ந: ஸம்ஸாரீவாவபாஸதே ॥ (4.12.2-4)

ब्रह्मसत्यपरानन्दप्रकाशानन्दलक्षणम् ।
अप्रच्युतात्मभावेन संस्थितं सर्वदैव तु ॥
आत्मशक्तिसमायोगादनाद्यन्तादतर्कितात् ।
अप्रतीतमिवाऽभाति स्वयंभातमपि द्विजाः ॥
सदप्यसदिव प्राज्ञो सदैकमपि भिन्नवत् ।
तादृशाकारमापन्नः संसारीवावभासते ॥ (4.12.2-4)

ப்ரஹ்மம் ஸத்யபரமானந்த ஸ்வப்ரகாசானந்த லக்ஷணஸ்வரூபமாகவே இருக்கின்றது. தன் ஸ்வரூபத்திலிருந்து ஒரு போதும் நழுவுவதில்லை. இவ்விதம் ஸ்வப்ரகாசஸ்வரூபமாக இருந்தபோதிலும், அனாதியான, அனந்தமான (பலவிதமான) யுக்திகளுக்கும் பொருந்தாத மாயா சக்தி ஸம்பந்தத்தினால் ப்ரஹ்ம ஸ்வரூபம் (ஆத்ம ஸ்வரூபம்) அறியப்படாதது போல் அஞ்ஞாதமாக ப்ரகாசிக்கின்றது. ஹே! த்விஜர்களே! மாயா சக்தியினால், ஸத்யமாக இருந்தபோதிலும், அஸத்தை போன்றும், ஏகமாக இருந்தும், பின்னமாக இருப்பதுபோல், பலவித ஆகாரங்களை அடைந்து ஸம்ஸாரியைப்போல் அறியப்படுகிறது. இந்த ச்லோகங்களில் ப்ரஹ்மம், மாயையினால் ஜீவ பாவத்தை அடைந்திருப்பதுபோல் அறியப்படுகிறது என்று தெரிவிக்கின்றது. அதனால் ஜீவப்ரஹ்ம ஐக்யமே ஸித்திக்கின்றது.

24. *அதஶ்ச ஸம்க்ஷேபமிமம் ஶ்ருணுத்வம் ஜகத்ஸமஸ்தம் சிதசித்விபிந்நம் ।*
ஸ்வஶக்திக்லப்தம் ஶிவமாத்ரமேவ ந தேவதேவாத்ப்ருதகஸ்தி கிஞ்சித் ॥ (4.12.29)

अतश्च संक्षेपमिमं शृणुध्वं जगत्समस्तं चिदचिद्विभिन्नम् ।
स्वशक्तिक्लृप्तं शिवमात्रमेव न देवदेवात्पृथगस्ति किञ्चित् ॥ (4.12.29)

சுருக்கமாக தெரிவிக்கவேண்டுமானால், சித் அசித் என்று பலவிதமாக காணப்படுகின்ற இந்த ஸமஸ்த்த ஜகத்தும் சிவனுடைய மாயா சக்தியினால், கல்பிக்கப்பட்டது. உண்மையில் (பரமார்த்தமாக) தேவதேவரான, சிவனை அன்றி வேறாக எந்த ஒரு வஸ்துவும் சிறிதும் இல்லை. இந்த ச்லோகமும், அத்வைதம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது.

25. *ஸ்வபூர்ணாத்மஶிவாநந்தநிஷ்டாமாஸாத்ய மாநவ: ।*
ததைவ லபதே முக்திம் ஸ்வபூர்ணாத்மஶிவாத்மகம் ॥
ஸ்வபூர்ணாத்மாதிரேகேண ஜகஜ்ஜீவேஶ்வராதய: ।
ந ஸந்தி நாஸ்தி மாயா ச தத்தி ஶுத்தாத்மவேதநம் ॥ (4.13.45-46)

स्वपूर्णात्मशिवानन्दनिष्ठामासाद्य मानवः ।
तथैव लभते मुक्तिं स्वपूर्णात्मशिवात्मकम् ॥
स्वपूर्णात्मातिरेकेण जगज्जीवेश्वरादयः ।
न सन्ति नास्ति माया च तद्धि शुद्धात्मवेदनम् ॥(4.13.45-46)

தன் பரிபூரண ஆத்மஸ்வரூபத்தை அன்றி வேறாக ஜகத், ஜீவன், ஈச்வரன் முதலான எதுவுமே இல்லை, மாயை என்பதும் இல்லை என்று பரிபூர்ண ஆத்மஸ்வரூபத்தை அறிவதே சுத்த ஆத்ம ஞானம். இவ்விதம் ஆத்ம ஞானத்தை அடைந்த மனிதன் தான், பரிபூர்ண ஸ்வரூபமான முக்தியை அடைகின்றான்.

இந்த ச்லோகங்களில் அத்விதீயப்ரஹ்ம ஸாயுஜ்யமே முக்தி என்று ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

26. *வைதிகோ லௌகிகஶ்சாபி வ்யவஹாரஸ்து கல்பித: ।*
பேதவிஜ்ஞாநிநோ மோஹாத்பாஸதே ந து யோகிந: ॥ (4.13.53)

वैदिको लौकिकश्चापि व्यवहारस्तु कल्पितः ।
भेदविज्ञानिनो मोहाद्भासते न तु योगिनः ॥ (4.13.53)

வைதிக வ்யவஹாரங்களோ, லௌகிக வ்யவஹாரங்களோ, பேத ஞானம் உள்ளவனிடமே இருப்பதாக அறியப்படுகிறது. யோகிகளுக்கு (ஞானிகளுக்கு) கல்பிதமான இவ்வித

வ்யவஹாரங்கள் எதுவுமில்லை. இந்த ச்லோகத்தில் வ்யவஹாரிக பேத ஞானம், ப்ராந்தி ஞானம் என்றே தெரிவிக்கின்றது.

27. *நிர்பேதே நிர்மலே நித்யே நிராதாரே நிரஞ்ஜநே ।*
தாஸஸ்ஸோஹமஹம் ஸோபீத்யாத்மந்யேவ கதம் பவேத் ॥ (4.14.38)

निर्भेदे निर्मले नित्ये निराधारे निरञ्जने ।
दासस्सोहमहं सोपीत्यात्मन्येव कथं भवेत् ॥ (4.14.38)

பேதம் அற்றதாகவும், மலமற்றதாகவும், ஆதாரமற்றதாகவும் ஸங்கமற்றதாகவும், இருக்கின்ற நித்ய ஸ்வரூபமான ஆத்மாவில் தாஸன் என்றும், ஸ்வாமி என்றும் பேதம், எவ்விதம் வாஸ்த்தவமாக (பரமார்த்தமாக) இருக்கமுடியும்?

இந்த ச்லோகத்தில் ஜீவனுக்கும், ஈச்வரனுக்கும், ஸேவ்ய ஸேவகபாவம் என்பது ப்ராந்தி ஸித்தம், பரமார்த்தமில்லை என்றும், நிர்விசேஷப்ரஹ்மமே பரமார்த்தம் என்று தெரிவிக்கின்றது.

28. *ஶிவஸ்ஸமஸ்தம் பரமார்த்தஸ்ததா ஶிவஸ்ஸமஸ்தம் வ்யவஹாரதோபி ச* ।
இதி ப்ரஜாதம் யதி வேதநம் ந்ருணாம் தரந்தி ஸம்ஸாரமஹோததிம் து தே ॥ (4.14.61)

शिवस्समस्तं परमार्थतस्तथा शिवस्समस्तं व्यवहारतोपि च ।
इति प्रजातं यदि वेदनं नृणां तरन्ति संसारमहोदधिं तु ते ॥ (4.14.61)

பரமார்த்தமாக ஸர்வமும் சிவம்தான். வ்யவஹாரத்திலும் எல்லாமே சிவம்தான் என்று ஞானம் ஏற்பட்டபிறகு ஸம்ஸார ஸாகரத்தை தாண்டுகிறான்.

இந்த ச்லோகத்தில் அத்விதீயம் ப்ரஹ்மம் என்றும், ப்ரஹ்ம ஞானத்தினால் முக்தி என்றும் தெரிவிக்கின்றது.

29. *தஸ்மாத்ஸத்தாऽதிரேகேண விஶேஷார்தோ ந வித்யதே* ।
விஶேஷார்தப்ரதீதிஸ்து ப்ராந்திஸித்தா ந ஸம்ஶய: ॥ (4.15-7)

तस्मात्सत्ताऽतिरेकेण विशेषार्थो न विद्यते ।
विशेषार्थप्रतीतिस्तु भ्रान्तिसिद्धा न संशयः ॥ (4.15-7)

ஸத்ஸ்வரூபத்தை அன்றி வேறாக எந்த வஸ்துவும் விசேஷமாக இல்லை. விசேஷார்த்த ப்ரதீதி என்பது ப்ராந்தி ஸித்தம் என்பதில் ஸம்சயமே கிடையாது.

இந்த ச்லோகத்தில் '*நிர்விசேஷம் ஸத்தா மாத்ரம் ப்ரஹ்மம்*' என்றே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

30. *பூதாநி ஶம்புர்புவநாநி ஶம்புர்வநாநி ஶம்புர்கிரயஶ்ச ஶம்பு: ।*
ஸ ஏவ ஸர்வம் ந ததோதிரிக்தம் ததஸ்ஸ ஏக: பரமார்தமேதத் ॥ (4.15.18)
ஸர்பாதிபாவேந விபாஸமாநா ரஜ்ஜுர்ந ஸர்பாதி ஸதைவ ரஜ்ஜு: ।
தத்வத்ப்ரபஞ்சாத்மதயா விபாதி ஶிவோ ந வித்வம்ஸிந ஏவ ஸத்யம் ॥ (4.15.27)

भूतानि शम्भुर्भुवनानि शम्भुर्वनानि शम्भुर्गिरयश्च शम्भुः ।
स एव सर्वं न ततोतिरिक्तं ततस्स एकः परमार्थमेतत् ॥ (4.15.18)
सर्पादिभावेन विभासमाना रज्जुर्न सर्पादि सदैव रज्जुः ।
तद्वत्प्रपञ्चात्मतया विभाति शिवो न विध्वंसिन एव सत्यम् ॥ (4.15.27)

ஸர்வபூதங்களும், ஸர்வலோகங்களும், வனங்களும், பர்வதங்களும் எல்லாமே சம்புதான். ஸர்வமாக இருக்கின்ற அந்த சம்புவை அன்றி வேறாக தனித்த வஸ்து எதுவுமில்லை. அதனால் சம்பு ஒருவரே பரமார்த்தம். ரஜ்ஜு என்பதே, ஸர்ப்பம் முதலான ரூபமாக ப்ரகாசிக்கின்றபோதும், வாஸ்த்தவமாக இருக்கின்ற வஸ்து. ஸர்ப்பம் முதலானவை உண்மையில் இல்லை, மித்யை. அதேபோல், ப்ரபஞ்சரூபமாக ப்ரகாசித்த போதிலும், சிவ ஸ்வரூபமே ஸத்யம், விநாசியான ப்ரபஞ்சம் ஸத்யமல்ல. இந்த ச்லோகங்களில், ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம். அதில் கல்பிக்கப்படும் ஸர்வபேதங்களும் மித்யை என்றே தெரிவிக்கின்றது.

31. *தஸ்மாஜ்ஜ்ஞாதம் விஜாநாதி விமுக்தஶ்ச விமுச்யதே ।*
நிவர்ததே நிவ்ருத்திஶ்ச ஶ்ருத்யர்தஸ்யைஷ ஸம்க்ரஹ: ॥ (4.16.46)

तस्माज्ज्ञातं विजानाति विमुक्तश्च विमुच्यते ।
निवर्तते निवृत्तिश्च श्रुत्यर्थस्यैष संग्रहः ॥ (4.16.46)

ஆகையால், ஸர்வதா அஹம் அஹம் என்று அறியப்படும் (ப்ரகாசிக்கின்ற) ஆத்மாவையே சாஸ்திரத்தினால் அறிகின்றான். அதனால் ஸர்வதா அறியப்படும் ஆத்மாவையே புதிதாக சாஸ்திரத்தினால் அறியப்படுவதாக நினைக்கின்றான். இவ்விதம் ஏற்படும் ஆத்மஞானத்தினால் ஒரு போதும் இல்லாத அஞ்ஞானம் நிவர்த்திக்கின்றதென்றும், அதனால் ஸர்வதா முக்தனாக இருக்கின்றவனே, முக்தியை அடைவதாக நினைக்கின்றான் என்பதே ச்ருதிகளின் தாத்பர்ய விஷயம்.

இந்த ச்லோகத்தில் பந்தம், மோக்ஷம், என்ற எல்லாமே பரமார்த்தமில்லை என்றும் ப்ரத்யகபின்னம் ப்ரஹ்மம் என்றே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

32. *ப்ரத்யக்ப்ரஹ்மைகதாऽஜ்ஞாநாத்த்வைதவஸ்துஸமுத்கதம் ।*
ஆத்மநஸ்து ஸ்வரூபம் ஹி ஸுகம் நாந்யத்விசாரத: । (4.17.70)

प्रत्यग्ब्रह्मैकताऽज्ञानाद्द्वैतवस्तुसमुद्गतम्। (4.17-2)

आत्मनस्तु स्वरूपं हि सुखं नान्यद्विचारतः। (4.17.70)

ப்ரத்யகப்ரஹ்ம ஐக்யம் அறியப்படாமல் அஞ்ஞானத்தினால் த்வைதம் அறியப்படுகிறது. அதனால் அஞ்ஞான நிவர்த்தியினால் ப்ரத்யகபின்ன ஐக்யம் பரமார்த்தம் என்றே ஸித்திக்கின்றது.

சுகம் ஆத்மஸ்வரூபமே ஆத்மாவையன்றி வேறானதல்ல என்று விசாரத்தினால் ஸித்திக்கின்றது. அதனால், சுகம் ஆத்ம தர்மம் என்று ராமானுஜரால் சொல்லப்படுவது சரியல்ல என்று இந்த க்ரந்தகாரர் தெரிவிக்கின்றார்.

33. ஸாக்ஷிமாத்ரதயா பேதாபாவேऽப்யஸ்யைவ ஸாக்ஷிண: ॥
விஶேஷாகாரதோ பேதம் வதந்தி புவி மாநவா: ।
தே மஹாமோஹஸர்பேண தஷ்டா ஏவ ந ஸம்ஶய: ॥
விஶேஷரூபம் சித்ரூபம் ஜடரூபம் து வா பவேத் ।
ந ரூபாந்தரமேவ ஸ்யாத்தாத்ருஶஸ்யாநிரூபணாத் ॥
சித்ரூபம் ஸாக்ஷிமாத்ரம் ஸ்யாந்நசாந்யத்பரமார்தத: ॥
ஜடரூபம் து நாஸ்த்யேவ ஸாக்ஷிண: பரமார்தத: ।
சித்ரூபஸ்ய ஜடாகாரோ விரோதாந்நைவ ஸித்யதி ।
ப்ரகாஶஸ்ய தமோ ரூபம் யதா லோகே ந ஸித்யதி ॥
அதோ விஶேஷாகாரேண பேதம் யே ஸர்வஸாக்ஷிண: ।
வதந்தி தே மஹாப்ராந்தா நிமக்நாஶ்ச பவார்ணவே ॥
ஆத்மநஸ்ஸர்வஸாக்ஷித்வமேகத்வம் ச ததைவ ச ।
நித்யத்வம் சைவ ஶுத்தத்வம் பூமாநந்தத்வமேவ ச ।
ப்ரஹ்மத்வம் ச த்விஜா வேதா வதந்தி ஶ்ரத்தயா ஸஹ ॥
ஸ்ம்ருதயஶ்ச புராணாநி பாரதாதீநி சாஸ்திகா: । (4.19.19-26)

साक्षिमात्रतया भेदाभावेऽप्यस्यैव साक्षिणः॥
विशेषाकारतो भेदं वदन्ति भुवि मानवाः।
ते महामोहसर्पेण दष्टा एव न संशयः॥
विशेषरूपं चिद्रूपं जडरूपं तु वा भवेत्।
न रूपान्तरमेव स्यात्तादृशस्यानिरूपणात्॥
चिद्रूपं साक्षिमात्रं स्यान्नचान्यत्परमार्थतः॥
जडरूपं तु नास्त्येव साक्षिणः परमार्थतः।
चिद्रूपस्य जडाकारो विरोधान्नैव सिध्यति।

प्रकाशस्य तमो रूपं यथा लोके न सिध्यति ॥
अतो विशेषाकारेण भेदं ये सर्वसाक्षिणः ।
वदन्ति ते महाभ्रान्ता निमग्नाश्च भवार्णवे ॥
आत्मनस्सर्वसाक्षित्वमेकत्वं च तथैव च ।
नित्यत्वं चैव शुद्धत्वं भूमानन्दत्वमेव च ।
ब्रह्मत्वं च द्विजा वेदा वदन्ति श्रद्धया सह ॥
स्मृतयश्च पुराणानि भारतादीनि चास्तिकाः । (4.19.19-26)

ஆத்ம ஸ்வரூபம் ஸர்வத்திற்கும் ஸாக்ஷியாக இருக்கின்றது. அதில் எவ்வித பேதமும் கிடையாது. இவ்விதமிருந்தும் மஹாமோஹம் என்ற ஸர்ப்பத்தினால் கடிக்கப்பட்ட மனுஷ்யர்கள் ஆரோபிதமான விசேஷ ஆகாரங்களைக் கொண்டு ஆத்மபேதம் இருப்பதாக தெரிவிக்கின்றார்கள். இதற்கு காரணம் அஞ்ஞானமே என்பதில் ஸந்தேஹமே கிடையாது. ஏனெனில் ஆத்மபேதத்திற்கு ஸாதகமான விசேஷங்கள் சித்ரூபமாகவோ, ஜடரூபமாகவோ உண்டாகவில்லை. இதைத்தவிர மூன்றாவது ரூபம் இருப்பதாக சொல்லமுடியாது. அந்த விசேஷங்கள் சித்ரூபமே என்று சொல்லப் படுமானால் அது ஸாக்ஷிமாத்ரம் என்றே ஆகின்றது. அவ்விதம் ஸாக்ஷிமாத்ரம் என்றால், ஸாக்ஷி ஸ்வரூபம் எல்லாவற்றிலும் ஏகரூபமாகவே இருக்கின்றதால் பேதம் சொல்லமுடியாது. அதற்காக அந்த விசேஷங்கள் ஜடரூபம் என்று சொல்லப்படுமானால், அதைக்கொண்டு ஸாக்ஷி பேதம் ஸித்திக்கமுடியாது. ஏனெனில் சித்ரூபமான ஸாக்ஷிக்கு ஜடரூபமான ஆகாரங்கள் சொல்வது விருத்தம். ப்ரகாசத்திற்கு அந்தகாரம் ஸ்வரூபம் என்று சொல்வது எப்படி பொருந்தாதோ அது போலாகும். ஹே! ப்ராஹ்மணனே, அதனால் அறியப்படும் விசேஷங்களைக் கொண்டு ஸர்வஸாக்ஷியான ஆத்மாவை பேதம் உள்ளதாக தெரிவிக்கின்றவர்கள் மஹாப்ராந்தி உடையவர்கள், ஸம்ஸாரஸாகரத்தில் நிரந்தரமாக இருக்கின்றார்கள். ஆத்மா ஸர்வஸாக்ஷி, ஏகம், நித்யம், சுத்தம், பூமா, ஆனந்தம் ப்ரஹ்மம் என்று வேதங்கள் தெரிவிக்கின்றன. ஸ்ம்ருதி புராணம் இதிஹாஸம் முதலானவைகளும் இந்த விதமே ஆத்மஸ்வரூபத்தை போதிக்கின்றது.

இந்த ச்லோகங்கள் ஸர்வ புராணங்களுக்கும் தாத்பர்யம் நிர்விசேஷ அத்விதீய ஆத்ம ஸ்வரூபம் என்றே தெரிவிக்கின்றன.

34. *வேதாந்தாச்ஶங்கரம் ஸாக்ஷாந்நிர்விஶேஷாத்வயாத்மநா ।*
வக்தி மார்காந்தராந்நைவம் ததோ வித்யா து வேதஜா ॥
அதோ மார்காந்தராஜ்ஜாதா மதயோ முநிஸத்தமா: ।
அவித்யா நைவ வித்யா: ஸ்யுரிதி ஸம்யங்நிரூபணம் ॥ (4.22.17)

वेदान्ताश्शङ्करं साक्षान्निर्विशेषाद्वयात्मना ।
वक्ति मार्गान्तरान्नैवं ततो विद्या तु वेदजा ॥
अतो मार्गान्तराज्जाता मतयो मुनिसत्तमाः ।
अविद्या नैव विद्याः स्युरिति सम्यङ्निरूपणम् ॥ (4.22.17)

வேதாந்தங்கள் சங்கரனை நிர்விசேஷ அத்வய ஆத்ம ஸ்வரூபமாக நிரூபணம் செய்வதற்கு வேறு மார்க்கம் இல்லாததால் 'நேதி நேதி' என்று போதிக்கின்றன. அதனால் வித்யை என்பது வேதாந்தத்தினால்தான் அறியப்படுகிறது (ஏற்படுகிறது). இந்த மார்க்கத்தைவிட்டு வேறு மார்க்கங்களினால் ஏற்படும் ஞானம் எல்லாமே அவித்யை என்றே தெரிவிக்கின்றது. அவை எல்லாம் வித்யை என்றே சொல்லமுடியாது. இந்த ச்லோகம் நிர்விசேஷ ப்ரஹ்ம ஞானமே, வித்யை என்றும் மற்ற ஞானம் எல்லாமே அவித்யை என்றே தெரிவிக்கின்றது.

35. *ஏகரூபா பரா முக்திஸ்ததஸ்தத்விஷயா மதி:* ।
ஏகரூபா பவேந்நைவ நாநாரூபா பவிஷ்யதி ॥ (27)

एकरूपा परा मुक्तिस्ततस्तद्विषया मतिः ।
एकरूपा भवेन्नैव नानारूपा भविष्यति ॥ (27)

பரமமுக்தி என்பது ஏகரூபம். அதில் பேதம் இல்லை. அதனால் அதற்கு ஸாதனமான தத்வஞானமும் ஒரேவிதமாகவே இருக்கவேண்டும். அனேகவிதமாக ஸாதனம் இருக்குமானால், அதற்கு பலன் ஏகரூபமாக இருக்கமுடியாது. ஏகரூபமான ஞானம் நிர்விசேஷ ப்ரஹ்ம விஷயமாகவே இருக்கவேண்டும். ஸவிசேஷமாக இருக்குமானால் அந்த ஞானம் ஏகரூபமாக இருக்கமுடியாது.

36. *வ்யாவஹாரிகத்ருஷ்ட்யாயம் விபாக: பரிகீர்தித:* ।
ப்ரமாணத்ருஷ்ட்யா வஸ்த்வேகம் நித்யமேவ ந ஸம்ஶய: ॥ (4.27.18)

व्यावहारिकदृष्ट्यायं विभागः परिकीर्तितः ।
प्रमाणदृष्ट्या वस्त्वेकं नित्यमेव न संशयः ॥ (4.27.18)

வ்யாவஹாரிக த்ருஷ்டியில் பேதம் இருக்கின்றது. தத்வத்ருஷ்ட்டியில் (தாத்விக த்ருஷ்ட்டியில்) பேதமே கிடையாது. அத்விதீயமான ஒரே வஸ்துவே நித்யமாக இருக்கின்றது என்ற விஷயத்தில் ஸந்தேஹத்திற்கே இடமில்லை. இந்த ச்லோகம் நிர்விசேஷ ப்ரஹ்மமே பரமார்த்தம் என்று தெரிவிக்கின்றது.

37. *விகல்பரஹிதம் தத்த்வம் ஜ்ஞாநமாநந்தமத்வயம்* ।
யே பஶ்யந்தி விமுக்தாஸ்தே ஜீவந்தோபி ந ஸம்ஶய: ॥ (4.27.25)
ந ச நாமாநி ரூபாணி ஶிவஸ்ய பரமாத்மந: ।
ததாபி மாயயா தஸ்ய நாமரூபே ப்ரகல்பிதே ॥ (4.27.28)

विकल्परहितं तत्त्वं ज्ञानमानन्दमद्वयम् ।
ये पश्यन्ति विमुक्तास्ते जीवन्तोपि न संशयः ॥ (4.27.25)
न च नामानि रूपाणि शिवस्य परमात्मनः ।
तथापि मायया तस्य नामरूपे प्रकल्पिते ॥ (4.27.28)

நிர்விகல்ப, ஞான ஆனந்த அத்வைத தத்வத்தை அறிகின்றவர்கள் ஜீவித்திருக்கின்ற போதே முக்தர்கள். இதில் ஸந்தேஹமே கிடையாது. பரமாத்மாவான ஜீவனுக்கு நாம ரூபங்கள் இல்லை. ஆத்ம ஸ்வரூபம் நிர்விசேஷமாகவே இருக்கின்றது மாயையினால் அதற்கு நாம ரூபம் கல்பிக்கப்படுகிறது.

இந்த ச்லோகம், நாம ரூபாத்மகமான ஸர்வத்வைதமும் மாயாமயம் என்றும் நிர்விகல்பகமான ப்ரஹமம் ஒன்றே ஸத்யம் என்று தெரிவிக்கின்றது.

38. *சித்ரூபம் ஹி ஸதா ஸத்யம் நாசித்ரூபம் கதாசந ।*
அஸத்யத்வஸ்ய த்ருஷ்டத்வாதசித்ரூபஸ்ய வஸ்துந: ।
ஶுக்திகாரஜதாதீநாமஸத்யத்வம் ஹி ஸம்மதம் ।
அசேதநாநாமந்யேஷாமஸத்யத்வே நிதர்ஶநம் ॥
ஶுக்திகாரஜதம் விப்ராஸ்ஸத்ய ஏவ ததஶ்ஶிவ: ॥ (4.28-25)

चिद्रूपं हि सदा सत्यं नाचिद्रूपं कदाचन ।
असत्यत्वस्य दृष्टत्वादचिद्रूपस्य वस्तुनः ।
शुक्तिकारजतादीनामसत्यत्वं हि सम्मतम् ।
अचेतनानामन्येषामसत्यत्वे निदर्शनम् ॥
शुक्तिकारजतं विप्रास्सत्य एव ततश्शिवः ॥ (4.28-25)

சித்ரூபம் ஒன்றே ஸத்யம் அசித் ரூபம் ஒருபோதும் ஸத்யமாகாது. அசித்ரூபம் அஸத்யம் என்றே சுக்திகாரஜதம் முதலானவைகளில் காணப்படுகிறது. சுக்திகா ரஜத த்ருஷ்ட்டாந்தத்தினால் அசித் வஸ்துக்கள் எல்லாமே மித்யை என்று அறியலாம். அதனால் ஹே! விப்ரர்களே! சிவன் ஒருவனே ஸத்யம். இந்த ச்லோகம் ப்ரஹ்மத்திற்கு வேறான எல்லாமே மித்யை என்று தெரிவிக்கின்றது.

39. *ஜீவப்ரஹ்மைக்யவிஜ்ஞானம் விஶுத்தம் வேதஸம்பவம் ।*
தேவதேவஸ்ய விப்ரேந்த்ரா மஹாப்ரீதிகரம் ஸதா ॥ (4.31-2)

जीवब्रह्मैक्यविज्ञानं विशुद्धं वेदसम्भवम् ।
देवदेवस्य विप्रेन्द्रा महाप्रीतिकरं सदा ॥ (4.31-2)

ஹே! த்விஜச்ரேஷ்ட்டர்களே! மஹாவாக்யங்களினால் ஏற்படும் ஜீவப்ரஹ்ம ஐக்ய விஞ்ஞானம் ஒன்றே தேவதேவனான சிவனுக்கு மஹத்தான ப்ரீதியைக் கொடுக்கக்கூடியது. இந்த ச்லோகம் ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை மிக ஸ்பஷ்ட்டமாகவே தெரிவிக்கின்றது.

40. *யஸ்ய விஜ்ஞாநஸம்பந்நா: ப்ரத்யக்ஜ்யோதிஷி ஸம்ஸ்திதா: ।*
தமேவ ப்ரத்யகாத்மாநம் வந்தேऽஹந்தாவிவர்ஜிதம் ॥ (4.38.67)

यस्य विज्ञानसंपन्नाः प्रत्यग्ज्योतिषि संस्थिताः।
तमेव प्रत्यगात्मानं वन्देऽहन्ताविवर्जितम्॥ (4.38.67)

எந்த ஆத்மஸ்வரூப ஞானத்தை அறிந்தவர்கள் ஸ்வப்ரகாச ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தில் நன்கு நிஷ்ட்டை அடைகின்றார்களோ, அஹங்காரமற்ற அந்த ஆத்ம ஸ்வரூபத்தையே நான் நமஸ்கரிக்கின்றேன்.

41. *தஸ்மாதுக்தப்ரகாரேண முக்திஸ்ஸாயுஜ்யரூபிணீ ।*
ஜ்ஞாநலப்யா க்ரியாமாத்ராந்ந லப்யா ந ஸமுச்சயாத் ॥ (98)

तस्मादुक्तप्रकारेण मुक्तिस्सायुज्यरूपिणी।
ज्ञानलभ्या क्रियामात्रान्न लभ्या न समुच्चयात्॥ (98)

முன்னால் சொல்லப்பட்ட ஞானத்தினால்தான் ஸாயுஜ்யமுக்தி என்பது அடையப்படுகிறது. அதனால் கர்மாவினாலோ, அல்லது ஞானகர்மஸமுச்சயத்தினாலோ இந்த முக்தியை அடைய முடியாது.

இந்த ச்லோகம், ப்ரஹ்ம ஸாயுஜ்யமே முக்தி என்றும், ப்ரஹ்ம ஸாமீப்யம் முக்தி அல்ல என்றும், ஸாயுஜ்ய முக்திக்கு ஆத்ம ஞானம் ஒன்றே காரணமே அன்றி கர்மா முதலானவைகள் அல்ல என்று தெரிவிக்கின்றது.

42. *ஸத்யமேவ ஸதாऽத்வைதமஸத்யம் த்வைதமாஸ்திகா: ।*
த்வைதஸ்யாபி ச ஸத்யத்வம் வர்ணயந்தீஹ கேசந ॥
ததஸங்கதமத்யஸ்தம் த்வைதம் யஸ்மாத்பராத்மநி ।
அத்யஸ்தம் ஹி ஸதா த்வைதம் த்ருஶ்யத்வாச்சுக்திரூப்யவத் ॥
த்ருஶ்யத்வம் த்வைதஜாதஸ்ய ஸம்மதம் ஸர்வதேஹிநாம் । (4.39.3-5)

सत्यमेव सदाऽद्वैतमसत्यं द्वैतमास्तिकाः।
द्वैतस्यापि च सत्यत्वं वर्णयन्तीह केचन॥
तदसङ्गतमध्यस्तं द्वैतं यस्मात्परात्मनि।
अध्यस्तं हि सदा द्वैतं दृश्यत्वाच्छुक्तिरूप्यवत्॥
दृश्यत्वं द्वैतजातस्य सम्मतं सर्वदेहिनाम्। (4.39.3-5)

ஹே! ஆஸ்திகர்களே! எப்போதுமே அத்வைதம் ஸத்யம், த்வைதம் அஸத்யம், த்வைதம் ஸத்யம் என்று சில வாதிகள் தெரிவிக்கின்றார்கள். அது தவறு. ஏனெனில் த்வைதம் பரமாத்ம ஸ்வரூபத்தில் அத்யஸ்த்தம். த்வைதம் த்ருச்யமாக (அறியப்படுகின்றதால்) இருக்கின்றதால் சுக்தி ரூப்யம் போல், (கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளிபோல்) அத்யஸ்த்தம் என்றே அறியவேண்டும். த்வைதம் த்ருச்யம் என்பது எல்லோருக்கும் ஸம்மதம் தான். அதனால், 'த்ருச்யத்வாத், சுக்திரூப்யவத், மித்யை' என்றே அனுமானத்தினாலேயே அறியப்படுகிறது. இந்த ச்லோகம் அத்விதீய ப்ரஹ்மமே ஸத்யம், த்வைதம் மித்யை என்றே தெரிவிக்கின்றது.

43. *ப்ரத்யக்ஷாதேரகம்யத்வாதத்வைதஸ்ய து ஸர்வதா ।*
தத்ரைவார்தவதீ ஸாக்ஷாதத்வைதஶ்ஶ்ருதிராஸ்திகா: ॥
அந்தரேண ஶ்ருதிம் பேதோ லோகஸித்தஸ்ஸதைவ ஹி ।
தேந நார்தவதீ தத்ர ஶ்ருதிர்மாநாதிகாமிநீ ॥
ப்ரமாணாந்தரஸம்வாதாபேக்ஷா நாஸ்தி ஶ்ருதேஸ்ஸதா । (4.39.15-17)

प्रत्यक्षादेरगम्यत्वादद्वैतस्य तु सर्वदा ।
तत्रैवार्थवती साक्षादद्वैतश्श्रुतिरास्तिकाः ॥
अन्तरेण श्रुतिं भेदो लोकसिद्धस्सदैव हि ।
तेन नार्थवती तत्र श्रुतिर्मानातिगामिनी ॥
प्रमाणान्तरसंवादापेक्षा नास्ति श्रुतेस्सदा । (4.39.15-17)

ஹே! ஆஸ்திகர்களே! ப்ரத்யக்ஷ ப்ரமாணங்களினால், அத்வைதமான தத்வத்தை அறிய முடியாது. அதனால் அத்வைத ச்ருதி ஒன்றே இது பற்றி தெரிவிக்கின்றது. ப்ரமாணாந்த்ரங்களினால் அறியப்பட முடியாத வஸ்துவை தெரிவிப்பதே சாஸ்திரம். அதனால்தான் சாஸ்திரமே ப்ரயோஜனம் உள்ளதாக ஆகின்றது (ஸார்த்தகம்). லோகஸித்தமான பேதத்தை சாஸ்திரம் தெரிவிக்குமானால் சாஸ்திரம் ப்ரயோஜகத்வம் உள்ளதாக ஆகாது (ஸார்த்தகத்வமில்லை). அத்வைதம் சாஸ்த்ரைகவேத்யம் (சாஸ்திரம் ஒன்றினால்தான் அறியமுடியும்). இவ்விதம் வேறு எதனாலும் அறிவிக்கமுடியாத தத்வத்தை சாஸ்திரம் தெரிவிப்பதால்தான் சாஸ்த்ரம் ப்ரயோஜகமாக ஆகிறது (ஸார்த்தகம்). ச்ருதிக்கு ப்ரமாணாந்தர ஸம்வாதம் என்பது தேவை இல்லை. ச்ருதி தெரிவிக்கின்ற விஷயத்தில் வேறு ஒரு ப்ரமாணத்திற்கு தேவையே கிடையாது.

44. *அத: ப்ரயோஜநாபாவாத்த்வைதம் ந ப்ரதிபாத்யதே ।*
அநூத்ய த்வைதமத்வைதம் ப்ரதிபாதயதி ஶ்ருதி: ॥ (4.39-22)

अतः प्रयोजनाभावाद्द्वैतं न प्रतिपाद्यते ।
अनूद्य द्वैतमद्वैतं प्रतिपादयति श्रुतिः ॥ (4.39.22)

த்வைதம் ப்ரயோஜனமில்லாததால் ச்ருதியானது த்வைதத்தை ப்ரதிபாதனம் (தெரிவிக்க வேண்டிய) செய்யவேண்டிய அவச்யமில்லை. அதனால் லோக ஸித்தமான த்வைதத்தை அனுவாதம் செய்து, அத்வைதமே தத்வம் என்று போதிக்கின்றது. இந்த ச்லோகம் அத்வைதமே ச்ருதி தாத்பர்யம் என்று தெரிவிக்கின்றது.

45. ஸ்ம்ருதீநாம் ச புராணாநாம் பாரதாதேஸ்ததைவ ச ।
அத்வைதநிஷ்டதைவோக்தா ந த்வைதபரதா ஸதா ॥ (4.39.23)

स्मृतीनां च पुराणानां भारतादेस्तथैव च ।
अद्वैतनिष्ठतैवोक्ता न द्वैतपरता सदा ॥ (4.39.23)

ஸ்ம்ருதிகள், புராணங்கள் பாரதம் முதலான இதிஹாஸங்கள் எல்லாமே 'அத்வைதம்' என்பதையே தாத்பர்யேண போதிக்கின்றது. த்வைதத்தை தெரிவிக்கவில்லை. இந்த ச்லோகம், வேதத்திற்கு உபப்ரஹ்மணமான இதிஹாஸ புராணங்களும் அத்வைத பரம், என்றே தெரிவிக்கின்றது.

46. கேநசித்ஸாதநேநைவ முக்தௌ ஶிவஸமோ பவேத் ।
இத்யேவம் கேசிதிச்சந்தி வாதிநோ முநிபுங்கவா: ॥
வார்தாமாத்ரமிதம் ப்ரோக்தம் ஸர்வதா ந ததர்தவத் ।
ஏகதேஶேந வா ஜீவா: கிம் வா ஸர்வாத்மநா ஸம: ॥
ஏகதேஶேந சேத்ஸர்வே ஶிவாஸ்ஸம்ஸாரவர்திந: ।
ஏகதேஶேந ஸர்வேஷாமஸ்தி ஸாம்யம் ஶிவேந ஹி ॥
ஸர்வாத்மநா சேத்ஸாம்யம் தத்ஸர்வதா ஶிவ ஏவ ஸ: ।
பேதகாரணஶூந்யத்வாத்பேதாபாவாச்ச வஸ்துத: ॥
கிம் ச முக்தௌ ஶிவேநைவ ஸமோ ஜீவோ பவேத்யதி ।
கிஞ்சித்காலம் ஹி தத்ஸாம்யமாகதம் கலு கச்சதி ॥
தஸ்மாஜ்ஜீவ: ஸ்வதஸ்ஸாக்ஷாச்சிவஸ்ஸத்யாதிலக்ஷண: ।
அப்ரச்யுதாத்மபாவேந ஸ்திதஸ்ஸந் பரவித்யயா ॥
ஸ்வாஜ்ஞாநம் தத்ப்ரஸூதம் ச ஸம்ஸாரம் ஸ்வாத்மநா க்ரஸந் ।
ஸம்பூர்ணஶிவரூபேண ஸ்வயமேவாவஶிஷ்யதே ॥
ஶுக்திகாகலதௌதம் து ஶுக்திகாவேதநேந து ।
ஶுக்திகாமாத்ரரூபேண யதா லோகேऽவஶிஷ்யதே ॥ (4.39.45-52)

केनचित्साधनेनैव मुक्तौ शिवसमो भवेत् ।
इत्येवं केचिदिच्छन्ति वादिनो मुनिपुङ्गवाः ॥
वार्तामात्रमिदं प्रोक्तं सर्वदा न तदर्थवत् ।
एकदेशेन वा जीवाः किं वा सर्वात्मना समः ॥

एकदेशेन चेत्सर्वे शिवास्संसारवर्तिनः ।
एकदेशेन सर्वेषामस्ति साम्यं शिवेन हि ॥
सर्वात्मना चेत्साम्यं तत्सर्वदा शिव एव सः ।
भेदकारणशून्यत्वाद्भेदाभावाच्च वस्तुतः ॥
किं च मुक्तौ शिवेनैव समो जीवो भवेद्यदि ।
किञ्चित्कालं हि तत्साम्यमागतं खलु गच्छति ॥
तस्माज्जीवः स्वतस्साक्षाच्छिवस्सत्यादिलक्षणः ।
अप्रच्युतात्मभावेन स्थितस्सन् परविद्यया ॥
स्वाज्ञानं तत्प्रसूतं च संसारं स्वात्मना ग्रसन् ।
संपूर्णशिवरूपेण स्वयमेवावशिष्यते ॥
शुक्तिकाकलधौतं तु शुक्तिकावेदनेन तु ।
शुक्तिकामात्ररूपेण यथा लोकेऽवशिष्यते ॥ (4.39.45-52)

சிலவாதிகள், ஸாதனத்தை அனுஷ்டித்து முக்தன் சிவனுக்கு ஸமானமாகிறான் என்று தெரிவிக்கின்றார்கள். இது அர்த்தமற்ற பேச்சென்றே சொல்லவேண்டும். ஜீவன், சிவனுக்கு ஸமானமாகின்றான் என்று சொல்லப்படுமானால், சிவனின் ஏதோ ஒரு அம்சத்தில் ஸமானமாகின்றானா? அல்லது ஸர்வாத்மனா ஸமானமாகின்றானா? ஏதோ ஒரு அம்சத்தில் ஸமானமாகிறான் என்றால், ஸம்ஸாரத்தில் இருக்கின்ற ஸர்வ ஜீவர்களுக்கும் சிவனுடன் ஸாம்யம் இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். ஏனெனில், ஜீவர்கள் எல்லோருமே சைதன்ய ஸ்வரூபமே. அதேபோல் சிவனும் சைதன்ய ஸ்வரூபமே. அதனால் இவ்வித ஸாம்யம் ஏற்படுவதற்கு ஸாதன அனுஷ்ட்டானம் தேவை இல்லை. அதற்காக ஸர்வாத்மனா ஸாம்யம் என்று சொல்லப்படுமானால், அது ஐக்யம் என்றே சொல்லவேண்டும். ஜீவனுக்கும், சிவனுக்கும் ஸர்வாத்மனா ஸாம்யம் சொல்லும்பக்ஷத்தில், பேதத்திற்கு காரணமே இல்லாததால் பேதமே இருக்கமுடியாது (பேதத்திற்கு காரணம் வைலக்ஷண்யம்). மேலும் முக்தி காலத்தில் மட்டும் ஜீவனுக்கு சிவ ஸாம்யம் ஏற்படுகின்றது என்று சொல்லப்படுமானால், அந்த ஸாம்யம் அநித்யம் என்றே ஆகும். யத் க்ருதகம் தத் அநித்யம் என்று எது உற்பத்தியோ அதற்கு நாசம் உண்டு. அதனால் ஜீவஸ்வரூபம் எப்போதும் ஸத்ய ஞான ஆனந்த ரூபமான சிவஸ்வரூபம் தான். அஞ்ஞானத்தினால் ஸம்ஸாரம் என்ற பரரூபம், ஸ்வஸ்வரூபத்தை மறைக்கின்றது (க்ரஸனம்), தத்வஞானத்தினால் அஞ்ஞான நிவர்த்தி ஏற்படுகின்றபோது, ஸம்பூர்ண சிவரூபத்தில் ஸ்வயமாகவே எஞ்சி இருக்கின்றது. உதாரணமாக சுக்தியில் தோன்றும் ரஜதம், சுக்தி என்ற ஞானம் ஏற்பட்டவுடன், ரஜத ரூபம் மறைந்து, சுக்திகா மாத்ர ரூபமாகவே இருக்கின்றது. அதுபோல் ஆத்மஸ்வரூபம் அஞ்ஞானத்தினால் ஆரோபிதமான ஜீவரூப நிவர்த்தியினால், ஸ்வஸ்வரூபமாகவே ப்ரகாசிக்கின்றது.

இந்த ச்லோகங்களில் முக்தனுக்கு ப்ரஹ்ம ஸமானத்வம் என்ற பக்ஷத்தை நிராகரித்து, ஜீவனுக்கு ப்ரஹ்ம அபேதமே ஸாதிக்கப்படுகிறது.

47. *ஏகத்வபோதகஸ்யாஸ்ய வேதவாக்யஸ்ய ஸுவ்ரதா: ।*
வாக்யாந்தராணி ஸர்வாணி ஶேஷபூதாநி ஸந்ததம் ॥ (4.39.60)

एकत्वबोधकस्यास्य वेदवाक्यस्य सुव्रताः ।
वाक्यान्तराणि सर्वाणि शेषभूतानि सन्ततम् ॥ (4.39. 60)

ஹே! ஸத்கர்மானுஷ்ட்டானத்தை அனுஷ்ட்டிப்பவர்களே! ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை போதிக்கின்ற மஹாவாக்யத்திற்கு மற்றுமுள்ள ஸர்வவாக்யங்களும் ஸர்வதா (எப்போதும்) சேஷமாகவே (அப்ரதானமாகவே) இருக்கின்றது. இந்த ச்லோகத்தில் அத்வைத வாக்யமே ப்ரதானம் (சேஷி) என்றும், த்வைதவாக்யங்கள் எல்லாமே அதற்கு சேஷம் என்றே (அப்ரதானம்) என்றே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

48. *வேதாந்தவாக்யஜம் ஜ்ஞாநம் ப்ரஹ்மாத்மைகத்வகோசரம் ।*
புத்திபூர்வகதம் பாபம் க்ருத்ஸ்நம் தஹதி வஹ்நிவத் ॥
ஸர்வஸாக்ஷிணமாத்மாநம் ஸர்வஹீநம் து வஸ்துத: ॥
ஆத்மாநமீஶ்வரம் பஶ்யந் கதம் பத்யேத கர்மணா ॥ (4.42.20)

वेदान्तवाक्यजं ज्ञानं ब्रह्मात्मैकत्वगोचरम् ।
बुद्धिपूर्वकृतं पापं कृत्स्नं दहति वह्निवत् ॥
सर्वसाक्षिणमात्मानं सर्वहीनं तु वस्तुतः ।
आत्मानमीश्वरं पश्यन् कथं बध्येत कर्मणा ॥ (4.42.20)

ஜீவப்ரஹ்ம ஐக்ய கோசரமான வேதாந்த வாக்ய ஜன்ய ஞானம், புத்திபூர்வமாக செய்யப்பட்ட ஸமஸ்த்த பாபங்களையும் அக்னியைப்போல் எரித்து விடுகிறது. ஸர்வ ஸாக்ஷியான ஆத்மா, வாஸ்த்தவமாக ஸர்வ ஸம்பந்தமற்றது என்றும் அதுவே ஈச்வரன் என்றும் அறிகின்றவனை எவ்விதம் கர்மாக்கள் பந்தனம் செய்யமுடியும்? இந்த ச்லோகம் ப்ரஹ்மாத்ம ஐக்யத்தையும் நிர்விசேஷம் ப்ரஹ்ம என்றும் தெரிவிக்கின்றது.

49. *அதோ ஜீவேஶ்வரைகத்வஜ்ஞாநாதேவாத்மவஸ்துந: ।*
விஶுத்தி: பரமா ப்ரோக்தா கர்மணா ந கதஞ்சந ॥ (4.4.21)

अतो जीवेश्वरैकत्वज्ञानादेवात्मवस्तुनः ।
विशुद्धिः परमा प्रोक्ता कर्मणा न कथञ्चन ॥ (4.44.21)

ஆகவே ஜீவேச்வர ஏகத்வ ஞானத்தினால் ஆத்மா சுத்தத்வம் அறியப்படுகிறது. சுத்தம் என்று அறியப்படுகிறது. கர்மாவினால் இல்லை. கர்மாவினால் ஏற்படும் புண்ய, பாப பலன்கள், ஞானத்தினால் சிறிதும் மிச்சமின்றி அத்யந்தம் நிவர்த்திக்கின்றது இந்த ச்லோகமும் ஜீவப்ரஹ்ம ஐக்யத்தையே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

50. *சித்ரூபஸ்யாத்மநஸ்ஸாக்ஷாத்பரஹ்மதாமாஹ ஹி ஶ்ருதி: ।*
ஆத்மா து பரமாத்மாபி கர்மபிர்பத்யதேऽவஶ: ।
கர்மபிர்வ்யவஹாரே து பத்தோபி ஸ்வீயமாயயா ॥
வஸ்துத: பரமாத்மாயம் கலு தைர்ந ஹி பத்யதே । (4.47.53-54)

चिद्रूपस्यात्मनस्साक्षाद्ब्रह्मतामाह हि श्रुतिः । (4.47.50)
आत्मा तु परमात्मापि कर्मभिर्बध्यतेऽवशः ।
कर्मभिर्व्यवहारे तु बद्धोपि स्वीयमायया ॥
वस्तुतः परमात्मायं खलु तैर्न हि बध्यते । (4.47.53-54)

சித்ரூபமான ஆத்மாவே ப்ரஹ்மம் என்று ஸாக்ஷாத் ச்ருதியே தெரிவிக்கின்றது. உண்மையில் ஆத்மா, பரமாத்மாவாக இருந்த போதிலும், மாயையினால் அதன் வசப்பட்டு கர்மாக்களினால் பந்தப்படுகின்றான். இவ்விதம் பந்தப்படுவதனால், ஸர்வகர்மாக்களையும் வ்யவஹாரகாலத்தில் செய்து கொண்டிருந்தபோதிலும், ஆத்மாவிற்கு, எவ்வித கர்ம ஸம்பந்தமும் கிடையாது. இந்த ச்லோகங்களிலும் ஜீவப்ரஹ்ம ஐக்யமே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

51. *பரமார்தோ த்விதா ப்ரோக்தோ மயா ஹே ஸ்வர்கவாஸிந: ।*
ஏகஸ்ஸ்வபாவதஸ்ஸாக்ஷாத் பரமார்தஸ்ஸதைவ து ॥
ஸ ஶிவஸ்ஸத்யசைதந்யஸுகாநந்தஸ்வலக்ஷண: ।
அபர: கல்பிதஸ்ஸாக்ஷாத்பரஹ்மண்யத்யஸ்தமாயயா ॥
கல்பிதாநாமவஸ்தூநாம் மத்யே கேசந மாயயா ।
பரமார்ததயா க்லப்தா வ்யவஹாரே ஸுரர்ஷபா: ॥
வ்யவஹாரே து ஸம்க்லப்தா: கேசநாபரமார்தத: ।
ஆகாஶாதிஜகச்சுக்திரூப்யாத்யா: கதிதா மயா ॥ (பி.கீ.2.17-20)

परमार्थो द्विधा प्रोक्तो मया हे स्वर्गवासिनः ।
एकस्स्वभावतस्साक्षात् परमार्थस्सदैव तु ॥
स शिवस्सत्यचैतन्यसुखानन्तस्वलक्षणः ।
अपरः कल्पितस्साक्षाद्ब्रह्मण्यध्यस्तमायया ॥

कल्पितानामवस्तूनां मध्ये केचन मायया ।
परमार्थतया क्लृप्ता व्यवहारे सुरर्षभाः ॥
व्यवहारे तु संक्लृप्ताः केचनापरमार्थतः ।
आकाशादिजगच्छुक्तिरूप्याद्याः कथिता मया ॥

(ப்ரஹ்மகீதா 2-வது அத்தியாயம், ச்லோகம் 17-20)

ஹே! ஸ்வர்க்கவாசிகளே! பரமார்த்தம் என்பது இரண்டுவிதம் சொல்லப்படுகிறது. ஸ்வபாவமாகவே பரமார்த்தமாக எப்போதுமே இருக்கின்ற வஸ்து ஒன்று. அதுவே ஸத்ய ஞான ஆனந்த அனந்த ஸ்வரூபமான சிவன். மற்றொன்று கல்பிதமான பரமார்த்தம். ப்ரஹ்மத்தில் அத்யஸ்த்தமான மாயையினால் சிருஷ்ட்டிக்கப்பட்ட வஸ்துக்களில் சிலபதார்த்தங்களை, ஆகாசம் முதலான ஜகத் என்பதை, வ்யவஹாரத்தில் பரமார்த்தம் என்று (வ்யாவஹாரிகம்) சொல்லப்படுகிறது. இந்த விதம் வ்யவஹாரகாலத்திலேயே சுக்தியில் தோன்றும் ரூப்யம் முதலானவைகள் பாதிக்கப்படுவதால் அபரமார்த்தம் என்று சொல்லப்படுகிறது. இந்த ச்லோகங்களில், ப்ரஹ்மம் பாரமார்த்திகம் என்றும் ஜகத் வ்யாவஹாரிகம் என்றும், சுக்தி, ரூப்யம் போன்றவைகளை ப்ராதிபாஸிகம் என்றும் மூன்றுவித ஸத்தை சொல்லப்படுகிறது.

52. *சைதந்யாபேக்ஷயா சேத்யம் வ்யோமாதிஸகலம் ஜகத் ।*
அஸத்யம் ஸத்யரூபம் தத்கும்பகுட்யாத்யபேக்ஷயா ॥
கும்பகுட்யாதயோ பாவா அபி வ்யோமாத்யபேக்ஷயா ।
அஸத்யாஸ்ஸத்யரூப்யாஸ்தே ஶுக்திரூப்யாத்யபேக்ஷயா ॥ (பி.கீ.2.25)

चैतन्यापेक्षया चेत्यं व्योमादिसकलं जगत् ।
असत्यं सत्यरूपं तत्कुम्भकुड्याद्यपेक्षया ॥
कुम्भकुड्यादयो भावा अपि व्योमाद्यपेक्षया ।
असत्यास्सत्यरूप्यास्ते शुक्तिरूप्याद्यपेक्षया ॥ (2.25 பி.கீ)

ஆகாசம் முதலான ஜகத், சைதன்யத்தை அபேக்ஷித்து அஸத்யம். அதே ஆகாசம் முதலானவை, தன் கார்யமான கடம் முதலானவைகளை அபேக்ஷித்து ஸத்யம் என்றாகிறது. கடபடாதிகளும், ஆகாசம் முதலானவைகள் அபேக்ஷித்து அஸத்யம்தான். ஆனால் சுக்தியில் தோன்றும் வெள்ளியை அபேக்ஷித்து கடம் முதலானவை ஸத்யம் என்று வ்யவஹாரம் செய்யப்படுகிறது. இந்த ச்லோகங்களில் ப்ரஹ்மம் ஒன்றே பரமார்த்தம் என்றும், மற்ற எல்லாமே அநித்யம் என்றே தெரிவிக்கின்றது.

53. *யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருஶ்யத்வாதிலக்ஷணே ।*
நிர்பேதம் பரமேகத்வம் விந்ததே ஸுரஸத்தமா: ॥
ததைவாபயமத்யந்தம் கல்யாணம் பரமாம்ருதம் ।
ஸ்வாத்மபூதம் பரம் ப்ரஹ்ம ஸ யாதி ஸ்வர்கவாஸிந: ॥ (பி.கீ 3.50-51)

यदा ह्येवैष एतस्मिन्नदृश्यत्वादिलक्षणे ।
निर्भेदं परमेकत्वं विन्दते सुरसत्तमाः ॥
तदैवाभयमत्यन्तं कल्याणं परमामृतम् ।
स्वात्मभूतं परं ब्रह्म स याति स्वर्गवासिनः ॥ (பி.கீ 3.50 - 51)

ஹே! தேவச்ரேஷ்ட்டர்களே! அத்ருச்யத்வம் முதலான லக்ஷணங்களையுடைய, பேதரஹிதமான பரமாத்ம ஸ்வரூபமே ஜீவாத்மா என்று எப்போது ஏகத்வேன எவன் அறிகின்றானோ அப்போதே, அவன் ஆத்யந்திக அபயத்தையும், பரம அம்ருதத்தையும் பரம மங்கள ஸ்வரூபமான ஆத்மஸ்வரூப பரப்ரஹ்மத்தையும் அடைகின்றான். இந்த ச்லோகங்களில் ஜீவப்ரஹ்ம அபேதம் மிகத் தெளிவாக போதிக்கப்படுகிறது.

54. *யதோ வாசோ நிவர்தந்தே நிமித்தாநாமபாவத: ।*
நிர்விஶேஷே ஶிவே ஶப்த: கதம் தேவா: ப்ரவர்ததே ॥ (பி.கீ 3.64)

यतो वाचो निवर्तन्ते निमित्तानामभावतः ।
निर्विशेषे शिवे शब्दः कथं देवाः प्रवर्तते ॥ (பி.கீ 3.64)

சப்தப்ரவ்ருத்தி நிமித்த பேதம் எதுவும் இல்லாததால், எந்த நிர்விசேஷ ப்ரஹ்மத்தை போதிக்கமுடியாமல் வாக்குகள் (சப்தங்கள்) திரும்பிவிடுகின்றனவோ அந்த சிவ ஸ்வரூபத்தை சப்தத்தினால் எவ்விதம் போதிக்கமுடியும்? இந்த ச்லோகம் சப்த அகோசரம் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்று தெரிவிக்கின்றது.

55. *தத்ப்ரஹ்மாநந்தமத்வந்த்வம் நிர்குணம் ஸத்யசித்கநம் ।*
விதித்வா ஸ்வாத்மரூபேண ந பிபேதி குதஶ்சந ॥ (68)

तद्ब्रह्मानन्दमद्वन्द्वं निर्गुणं सत्यचिद्घनम् ।
विदित्वा स्वात्मरूपेण न बिभेति कुतश्चन ॥ (68)

ஸச்சிதானந்த கனஸ்வரூபமான அத்வைத நிர்குணப்ரஹ்மமே ஆத்மா என்று அறிந்தவனுக்கு பயத்திற்கு காரணம் எதுவுமே இல்லை. இந்த ச்லோகத்திலும் அத்வைதமே தத்வம் என்று ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

56. ஏவமாத்மாநமத்வைதமாத்மநா வேத ய: ஸ்திரம் । (பி.கீ 3.108)

एवमात्मानमद्वैतमात्मना वेद यः स्थिरम् । (பி.கீ 3.108)

இந்த ச்லோகமும் ஆத்மா அத்வைதம் என்று ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது

57. வேத்தாபி வித்யாஸம்பந்தாத்ஸவிஶேஷோ பவேத் த்ருவம் ।
நிர்விஶேஷம் பரம் ப்ரஹ்ம ததோ வித்வாந்ந சாத்மவித் ॥ (பி.கீ 4.24)

वेत्तापि विद्यासम्बन्धात्सविशेषो भवेद् ध्रुवम् ।
निर्विशेषं परं ब्रह्म ततो विद्वान्न चात्मवित् ॥ (பி.கீ 4.24)

நிர்விசேஷம் ப்ரஹ்ம என்று தெரிவிக்கின்றது

58. வ்யாவஹாரிகத்ருஷ்ட்யேயம் வித்யாऽவித்யா ச நாந்யதா ।
தத்த்வத்ருஷ்ட்யா து நாஸ்த்யேவ தத்த்வமேவாஸ்தி கேவலம் ॥ (பி.கீ 4.30)

व्यावहारिकदृष्ट्येयं विद्याऽविद्या च नान्यथा ।
तत्त्वदृष्ट्या तु नास्त्येव तत्त्वमेवास्ति केवलम् ॥

(பி.கீ 4.30) அத்விதீய ப்ரஹ்மமே பரமார்த்தம் என்று தெரிவிக்கின்றது

59. பத்தோ முக்தோ மஹாவித்வாநஜ்ஞ இத்யாதிபேதத: ।
ஏக ஏவ ஸதா பாதி நாநேவ ஸ்வப்நவத்ஸ்வயம் ॥ (பி.கீ 4.47)

बद्धो मुक्तो महाविद्वानज्ञ इत्यादिभेदतः ।
एक एव सदा भाति नानेव स्वप्नवत्स्वयम् ॥ (பி.கீ 4.47)

ஆத்ம ஐக்யம் ஸ்பஷ்ட்டம்.

60. ப்ரஹ்மணோந்யத்ஸதா நாஸ்தி வஸ்துதோऽவஸ்துதோபி ச । (பி.கீ 4.55)

ब्रह्मणोन्यत्सदा नास्ति वस्तुतोऽवस्तुतोपि च । (பி.கீ 4.55)

பிரஹ்மத்தை தவிர வேறு எதுவும் இல்லை.

61. பேதஸ்ஸர்வத்ர மித்யைவ தர்ம்யாதேரநிரூபணாத் ।
பேதாநிரூபணாதேவ தர்ம்யாதேரநிரூபணம் ॥
பேதே ஜ்ஞாதே ஹி தர்ம்யாதிவிபாகஸ்ய ச வேதநம் ।
விபேதேநைவ தர்ம்யாதௌ விஜ்ஞாதே பேதவேதநம் ॥ (பி.கீ 5.27-28)

भेदस्सर्वत्र मिथ्यैव धर्म्यादेरनिरूपणात् ।
भेदानिरूपणादेव धर्म्यादेरनिरूपणम् ॥
भेदे ज्ञाते हि धर्म्यादिविभागस्य च वेदनम् ।
विभेदेनैव धर्म्यादौ विज्ञाते भेदवेदनम् ॥ (பி.கீ 5.27- 28)

தர்மி நிரூபணம் ஆனால்தான் பேத நிரூபணம். பேத நிரூபணம் ஆனால் தான் தர்மி நிரூபணம். ஆகவே பேதம் மித்யா.

62. *சித்ரூபஸ்ய து ஸத்யத்வம் யுக்தமேவாஸ்திகாஸ்ஸதா ।*
அசித்ரூபா ஹி ரஜ்ஜ்வாதேர்ம்ருஷாத்வம் ஸம்மதம் கலு ॥ (பி.கீ 5.36)

चिद्रूपस्य तु सत्यत्वं युक्तमेवास्तिकास्सदा ।
अचिद्रूपा हि रज्ज्वादेर्मृषात्वं सम्मतं खलु ॥ (பி.கீ 5.36)

ஹே! ஆஸ்திகர்களே! சித்ரூபம் ஒன்றே எப்போதும் ஸத்யம். அசித்ரூபமான ரஜ்ஜு முதலானவை மித்யை என்று சொல்வதில் ஆக்ஷேபத்திற்கு இடமேதுமில்லை.

இந்த ச்லோகங்கள் ஜகத் மித்யை என்று தெரிவிக்கின்றது.

63. *தஸ்மாதஜ்ஞாநமஜ்ஞாநகார்யம் ச ஸுரபுங்கவா: ।*
ஏகம் ப்ரஹ்மைவ நைவாந்யதிதி மே நிஶ்சிதா மதி: ॥ (பி.கீ 5.99)

तस्मादज्ञानमज्ञानकार्यं च सुरपुङ्गवाः ।
एकं ब्रह्मैव नैवान्यदिति मे निश्चिता मतिः ॥ (பி.கீ 5.99)

பிரஹ்மத்தில் எல்லாம் அத்யஸ்தம். ப்ரம்மம் நிர்விசேஷமே.ஹே! சுரச்ரேஷ்ட்டர்களே! அஞ்ஞானமோ, அஞ்ஞான கார்யமோ ப்ரஹ்மத்தை அன்றி வேறாக இல்லை என்றே என் த்ருட நிச்சயம்.

64. *ஶிவ ஏவாஸ்தி நைவாந்யதிதி யோ நிஶ்சய: ஸ்திர:* ।
ஸதா ஸ ஏவ ஸித்தாந்த: பூர்வபக்ஷஸ்ததா பர: ॥ (பி.கீ 5.127)

शिव एवास्ति नैवान्यदिति यो निश्चयः स्थिरः ।
सदा स एव सिद्धान्तः पूर्वपक्षस्तथा परः ॥ (பி.கீ 5.127)

சிவன் ஒருவனே ஸத்யம். சிவனையன்றி வேறு எதுவுமே இல்லை என்ற ஸ்திரமான நிச்சயமே எப்போதும் ஸித்தாந்தமாக இருக்கின்றது. இதற்கு மாறான அபிப்ராயங்கள் எல்லாமே பூர்வபக்ஷமேதான்.

இந்த ச்லோகங்களிலும் ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் என்ற ஞானமே ஸித்தாந்தம் என்று தெரிவிக்கின்றது.

65. த்வௌ ஸுபர்ணௌ ஶரீரேऽஸ்மிந் ஜீவேஶாக்யௌ வ்யவஸ்திதௌ ।
தயோர்ஜீவ: பலம் புங்க்தே கர்மணோ ந மஹேஶ்வர: ॥
கேவலம் ஸாக்ஷிரூபேண விநா போகம் மஹேஶ்வர: ।
ப்ரகாஶதே ஸ்வயம் பேத: கல்பிதோ மாயயா தயோ: ॥
யதாऽऽகாஶோ கடாகாஶமஹாகாஶப்ரபேதத: ।
கல்பித: பரசிஜ்ஜீவ: ஶிவரூபேண கல்பித: ॥
தத்த்வதஶ்சிச்சிவஸ்ஸாக்ஷாச்சிஜ்ஜீவஶ்ச ஸ்வதஸ்ஸதா ।
சித் சிதாகாரதோऽபிந்நா ந பிந்நா சித்த்வஹாநித: ॥
சிதஶ்சிந்ந சிதாகாராத்பித்யதே ஜடரூபத: ॥
பித்யதே சேஜ்ஜடே பேதஶ்சிதேகா ஸர்வதா கலு ॥
தர்கதஶ்ச ப்ரமாணாச்ச சிதேகத்வே வ்யவஸ்திதே ।
அபி பாபவதாம் பும்ஸாம் விபரீதா மதிர்பவேத் ॥
ஶ்ரௌதஸ்மார்தஸதாசாரைர்விஶுத்தஸ்ய மஹாத்மந: ।
ப்ரஸாதாதேவ ருத்ரஸ்ய சிதேகத்வே மதிர்பவேத் ॥
சிதேகத்வபரிஜ்ஞாநாந்ந ஶோசதி ந முஹ்யதி ।
அத்வைதம் பரமாநந்தம் ஶிவம் யாதி து கேவலம் ॥ (பி.கீ 7.56)

द्वौ सुपर्णौ शरीरेऽस्मिन् जीवेशाख्यौ व्यवस्थितौ ।
तयोर्जीवः फलं भुङ्क्ते कर्मणो न महेश्वरः ॥
केवलं साक्षिरूपेण विना भोगं महेश्वरः ।
प्रकाशते स्वयं भेदः कल्पितो मायया तयोः ॥
यथाऽऽकाशो घटाकाशमहाकाशप्रभेदतः ।
कल्पितः परचिज्जीवः शिवरूपेण कल्पितः ॥
तत्त्वतश्चिच्छिवस्साक्षाच्चिज्जीवश्च स्वतस्सदा ।
चित् चिदाकारतोऽभिन्ना न भिन्ना चित्त्वहानितः ॥
चितश्चिन्न चिदाकाराद्भिद्यते जडरूपतः ॥
भिद्यते चेज्जडे भेदश्चिदेका सर्वदा खलु ॥
तर्कतश्च प्रमाणाच्च चिदेकत्वे व्यवस्थिते ।
अपि पापवतां पुंसां विपरीता मतिर्भवेत् ॥

श्रौतस्मार्तसदाचारैर्विशुद्धस्य महात्मनः ।
प्रसादादेव रुद्रस्य चिदेकत्वे मतिर्भवेत् ॥
चिदेकत्वपरिज्ञानान्न शोचति न मुह्यति ।
अद्वैतं परमानन्दं शिवं याति तु केवलम् ॥ (7.56)

இந்த சரீரத்தில், ஜீவன், ஈச்வரன் என்ற இரண்டு பக்ஷிகள் வசிக்கின்றன. அதில் 'ஜீவன்' என்ற பக்ஷி கர்மபலத்தை அனுபவிக்கின்றது (புஜிக்கின்றது). 'மஹேச்வரன்' என்ற பக்ஷி' கர்மபல ஸம்பந்தம் அற்ற கேவல ஸாக்ஷிரூபமாக ப்ரகாசிக்கின்றது. ஜீவன், ஈச்வரன் என்ற இரண்டிற்கும் மத்தியில், பேதம் மாயையினால் கல்பிக்கப்படுகிறது. எவ்விதம் ஆகாசம் என்பது ஒன்றே என்றாலும், கடாகாசம், மஹாகாசம் என்று உபாதியினால் பேதம் உள்ளதாக கல்பிக்கப்படுகிறதோ அதுபோல் ஒரே சைதன்யமே ஜீவனென்றும், ஈச்வரனென்றும் (சிவன்) கல்பிக்கப்படுகிறது. உண்மையில் ஜீவனும் ஈச்வரனும் ஒரே சைதன்ய ஸ்வரூபம்தான். இவ்விதம் இரண்டுமே சிதாகாரமாகவே இருக்கின்றதால் இரண்டிற்கும் பேதமே கிடையாது. அதனால் இரண்டும் சைதன்யமாக இருந்தாலும் பேதம் இருப்பதாகச் சொல்லப்படுமானால், ஒன்று ஜடம் என்று சொல்லநேரிடும். சித் ஸ்வரூபத்திற்கு ஹானி ஏற்படும். அதனால் இரண்டும் ஒன்றே என்று தர்க்கத்தினாலும் (யுக்தியினாலும்) ப்ரமாணத்தினாலும் நிர்ணயிக்கப்படுகிறது. வஸ்து ஸ்திதி இவ்விதம் இருந்தபோதிலும் அவரவர்கள் செய்த பாபங்களின் காரணமாக, இதற்கு விபரீதமாக பேத புத்தி ஏற்படுகிறது. ச்ரௌத ஸ்மார்த்த ஸதாசாரங்களினால் சுத்தமான மஹாத்மாவிற்கு ருத்ரனுடைய அனுக்ரஹத்தினாலேயே அத்வைதபுத்தி ஏற்படுகிறது. இவ்விதம் ஏற்படும் அத்வைத ஞானத்தினால் சோகம், மோஹம் என்ற எல்லாமே நிவர்த்திக்கின்றது. அத்வைதபரமான கேவல சிவஸ்வரூபம் அடையப்படுகிறது.

இந்த ச்லோகங்களில், ஒரே சைதன்யம் ஜீவனாகவும், ஈச்வரனாகவும் இருக்கின்றதால் அத்வைதமே தத்வம் என்று ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

66. *சிந்மாத்ரம் ஹி ஸதாரூபமுபயோஸ்ஸிவஜீவயோ: ।*
ததா ஸதி கதம் ஸாம்யம் சிந்மாத்ரே பேதவர்ஜிதே ।
அதஸ்ஸாம்யம் தயோஸ்ஸாக்ஷாதைக்யமேவ ந சேதரத் । (பி.கீ 7.65-73)

चिन्मात्रं हि सदारूपमुभयोश्शिवजीवयोः ।
तथा सति कथं साम्यं चिन्मात्रे भेदवर्जिते ।
अतस्साम्यं तयोस्साक्षादैक्यमेव न चेतरत् । (பி.கீ 7.65-73)

ஜீவன், சிவன் இருவருக்கும் ஸ்வரூபம் சின்மாத்ரமே. அதனால் இருவருக்கும் பேதமே இல்லாததால் ஸாம்யம் எவ்விதம் ஸம்பவிக்கமுடியும்? அதனால் ஐக்யம் என்றே சொல்ல வேண்டும்.

67. ஆகாஶமேகம்ஸம்பூர்ணம் குத்ரசிந்நைவ கச்சதி ।
தத்வத்ஸ்வாத்மவிபுத்வஜ்ஞ: குத்ரசிந்நைவ கச்சதி ॥ (பி.கீ 7.80)

आकाशमेकं संपूर्णं कुत्रचिन्नैव गच्छति ।
तद्वत्स्वात्मविभुत्वज्ञः कुत्रचिन्नैव गच्छति ॥ (பி.கீ 7-80)

ஸர்வவ்யாபகமான ஒரே ஆகாசம் எவ்விதம் ஓரிடத்திற்கும் செல்லமுடியாதோ அதே போல் ஆத்மஸ்வரூபத்தின் வ்யாபகத்தன்மையை அறிந்தவனுக்கு செல்வது என்பதே ஸம்பவிக்க முடியாது.

இந்த ச்லோகங்கள், ஆத்மாவே எங்கும் வ்யாபித்திருக்கின்றதால் அதற்கு கதி என்பதே கிடையாது (எங்கும் போகிறதென்றே சொல்லமுடியாது). அதனால் ப்ரஹ்மவித் ஸகுணப்ரஹ்ம பாவத்தை அடைவதில்லை என்றே தெரிவிக்கின்றது.

68. ஸ ந ஜீவஶ்ஶிவாதந்யோ யோ புங்க்தே கர்மணாம் பலம் ।
பேதாபாவாச்சிதஶ்சேத்யம் ந கர்மபலமர்ஹதி । (பி.கீ 8.27)

स न जीवश्शिवादन्यो यो भुङ्क्ते कर्मणां फलम् ।
भेदाभावाच्चितश्चेत्यं न कर्मफलमर्हति । (பி.கீ 8.27)

கர்மபலத்தை அனுபவிக்கின்ற ஜீவன், சிவனை அன்றி வேறானவன் அல்ல. அவனும் சித்ஸ்வரூபமே, அவனுக்கு ஜடமான கர்ம பல ஸம்பந்தம் ஸம்பவிக்கமுடியாது.

இந்த ச்லோகம் பந்தாவஸ்த்தையில் இருக்கின்ற ஜீவன், சிவ ஸ்வரூபமாகவே (சிவனாகவே) இருக்கின்றான் என்று அத்வைதம் தெரிவிக்கப்படுகிறது.

69. ஜீவரூப இவ ஸ்தித்வா ய: க்ரீடதி புரத்ரயே ।
ஸ ந ஜீவஸ்ஸதா ஶம்புஸ்ஸத்யமேவ மயோதிதம் । (பி.கீ 8.35)

जीवरूप इव स्थित्वा यः क्रीडति पुरत्रये ।
स न जीवस्सदा शम्भुस्सत्यमेव मयोदितम् । (பி.கீ 8.35)

ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற அவஸ்த்தாத்ரயத்தில் ஜீவரூபத்தை அடைந்ததுபோல் விளையாடுகின்ற ஜீவன், சம்புவே தான் என்று நான் ஸத்யமாக தெரிவிக்கின்றேன். உண்மையில் ஜீவன் ஸாக்ஷாத் ப்ரஹ்மமாகவே ப்ரகாசிக்கின்றான் என்றே சொல்லவேண்டும். ஜீவபாவம் ஸ்வாபாவிகம் அல்ல.

இந்த ச்லோகத்தில் மாயையினால் ஈச்வரனே ஜீவனாக ப்ரகாசிக்கின்றார் என்று தெரிவிக்கின்றது.

70. *ஸ ஜீவோ ஜீவவத்பாதி ஸாக்ஷாத்பரஹ்மைவ கேவலம் ।*
அஜ்ஞாநாஜ்ஜீவரூபேண பாஸதே ந ஸ்வபாவத: ॥ (பி.கீ 8.38)

स जीवो जीववद्भाति साक्षाद्ब्रह्मैव केवलम् ।
अज्ञानाज्जीवरूपेण भासते न स्वभावतः ॥ (பி.கீ 8.38)

71. *ஸ்வதஸ்ஸித்தைகதாऽஜ்ஞாநம் வ்யுதஸ்ய ஶ்ருதிராதராத் ।*
ஸ்வபாவஸித்தமேகத்வம் போதயத்யதிகாரிண: ॥ பி.கீ (8.43)

स्वतस्सिद्धैकताऽज्ञानं व्युदस्य श्रुतिरादरात् ।
स्वभावसिद्धमेकत्वं बोधयत्यधिकारिणः ॥ (பி.கீ 8.43)

ஜீவனுக்கும், சிவனுக்கும் ஸ்வயமே ஸித்தமான ஏகத்வம் அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்டிருக்கிறது. அந்த அஞ்ஞான நிவர்த்திக்காகவே சருதியானது அதிகாரிகளுக்கு ஸ்வபாவஸித்தமான ஏகத்வத்தை தாத்பர்யேண போதிக்கின்றது.

இந்த ச்லோகம் ஜீவப்ரஹ்ம அபேதம் ஸ்வாபாவிகம் என்றும், ராமானுஜர் முதலானவர்கள் வேதாந்தத்திற்கு அனதிகாரியாக இருக்கின்றதனாலேயே அவர்களுக்கு மஹாவாக்ய தாத்பர்யவிஷயமான அத்வைதபோதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கின்றது.

72. *ஏவம் விதித்வா பரமாத்மரூபம் குஹாஶயம் நிஷ்கலமத்விதீயம் ।*
ஸமஸ்தபாஸம் ஸதஸத்விஹீநம் ப்ரயாதி ஶுத்தம் பரமாத்மரூபம் ॥ (பி.கீ 8.53)

एवं विदित्वा परमात्मरूपं गुहाशयं निष्कलमद्वितीयम् ।
समस्तभासं सदसद्विहीनं प्रयाति शुद्धं परमात्मरूपम् ॥ (பி.கீ 8.53)

ஸர்வபூதங்களுக்கு குஹாசயமானதும், நிஷ்களமாகவும், அத்விதீயமாகவும், ஸர்வ ஸாக்ஷியாகவும், ஸதஸத்விலக்ஷணமாகவும், சுத்தமாகவும் இருக்கின்ற பரமாத்ம ஸ்வரூபத்தை அறிந்தவன் அந்த பரமாத்ம ஸ்வரூபமாகவே ஆகின்றான்.

இந்த ச்லோகம் ப்ரஹ்மவித் என்பவனுக்கு நிர்விசேஷ ப்ரஹ்ம ப்ராப்தி என்றே தெரிவிக்கின்றது.

73. *ப்ரத்யக்ரூபஶ்ஶிவஸ்ஸாக்ஷாத்பரமாநந்தலக்ஷண:* । (பி.கீ 9.1)

प्रत्यग्रूपश्शिवस्साक्षात्परमानन्दलक्षणः । (பி.கீ 9.1)

74. *பரமாத்வைதவிஜ்ஞாநாத்ஸம்ஸார: ப்ரவிநஶ்யதி ।*
ஸ்வதஸ்ஸித்தாத்வயாநந்தஸ்ஸ்வயமேவ விபாதி ச ॥ (பி.கீ 9.19)

परमाद्वैतविज्ञानात्संसारः प्रविनश्यति ।
स्वतस्सिद्धाद्वयानन्दस्स्वयमेव विभाति च ॥ (பி.கீ 9.19)

75. நிர்விகல்பே பரே தத்த்வே வித்யயா புத்திவிஶ்ரம: ।
ஸ ஹி ஸம்ஸாரவிச்சித்திர்நாபரா புருஷாதிகா: ॥ (பி.கீ 9.23)

निर्विकल्पे परे तत्त्वे विद्यया बुद्धिविश्रमः ।
स हि संसारविच्छित्तिर्नापरा पुरुषाधिकाः ॥ (பி.கீ 9.23)

76. ஶ்ருதிஸ்ம்ருதிபுராணாநி ப்ராஹுரேகத்வமாத்மந: ।
ததாபி பரமாத்வைதம் நைவ வாஞ்சந்தி மாநவா: ॥ (பி.கீ 9.39)

श्रुतिस्मृतिपुराणानि प्राहुरेकत्वमात्मनः ।
तथापि परमाद्वैतं नैव वाञ्छन्ति मानवाः ॥ (பி.கீ 9.39)

77. த்வைதமேவ ஹி ஸர்வத்ர ப்ரவதந்தி ஹி கேசந ।
இமே மநுஷ்யா: கீடாஶ்ச பதங்காஶ்ச கடா ஹி தே ॥ (பி.கீ 9.47)

द्वैतमेव हि सर्वत्र प्रवदन्ति हि केचन ।
इमे मनुष्याः कीटाश्च पतङ्गाश्च घटा हि ते ॥ (பி.கீ 9.47)

78. அஸ்தி ஸர்வாந்தரஸ்ஸாக்ஷீ ப்ரத்யகாத்மா ஸ்வயம்ப்ரப: ।
ததேவ ப்ரஹ்ம ஸம்பூர்ணமபரோக்ஷதமம் ஸுரா: ॥ (பி.கீ 10.1)

अस्ति सर्वान्तरस्साक्षी प्रत्यगात्मा स्वयम्प्रभः ।
तदेव ब्रह्म सम्पूर्णमपरोक्षतमं सुराः ॥ (பி.கீ 10.1)

79. யோயமாத்மா ஸ்வயம் பாதி ஸத்தயாऽந்யவிவர்ஜித: ।
ஸ ஏவ ஸாக்ஷாத்ஸர்வேஷாமந்தர்யாமீ ந சாபர: ॥ (பி.கீ 10.20)

योयमात्मा स्वयं भाति सत्तयाऽन्यविवर्जितः ।
स एव साक्षात्सर्वेषामन्तर्यामी न चापरः ॥ (பி.கீ 10.20)

73 -79 இதன் சுருக்கம்

ஹே! புருஷ ச்ரேஷ்ட்டர்களே! பரமானந்த ஸ்வரூபமான சிவன், சாக்ஷாத் ப்ரத்யகாத்மாவாகவே இருக்கின்றார். பரம அத்வைத விஞ்ஞானத்தினால் ஸம்ஸாரம் முற்றிலும் நிவர்த்திக்கின்றது. ஸ்வத: ஸித்தமான அத்வய ஸ்வரூபானந்தம், ஸ்வயமாகவே ப்ரகாசிக்கின்றது. நிர்விகல்பகமான பரமாத்ம தத்வத்தில் வித்யையினால் புத்தி விச்ராந்தத்தை அடைகின்றது. அதுவே ஸம்ஸார நிவர்த்தி என்று சொல்லப்படுகிறது. இதை அன்றி வேறுவிதமான ஸம்ஸார நிவர்த்தி என்பதே கிடையாது. ச்ருதி, ஸ்ம்ருதி, புராணங்கள் அனைத்துமே ஆத்மா ஏகம் என்றே போதிக்கின்றன. இவ்விதம் போதித்தும் கூட மனுஷ்யர்கள் அந்த பரம அத்வைத

ஸ்வரூபத்தை அடைய விரும்புவதில்லை. முயற்சிப்பதில்லை. சில மதஸ்த்தர்கள் ஸர்வம் த்வைதம் என்றே ப்ரசாரம் செய்கின்றார்கள். மனுஷ்யர்கள், கீடங்கள், பதங்கங்கள், கடம், படம், முதலானவைகள் போன்ற ஸர்வ த்வைதமும் இருக்கின்றது என்றே அறியப்படுகிறது. ஆனால் இவ்விதம் அஞ்ஞானத்தினால் அறியப்படுகிறதே அன்றி த்வைதம் உண்மை அல்ல. ஸர்வ த்வைதங்களுக்கும் ஆந்தரமாக, ஸ்வரூபமாக ப்ரத்யகாத்மாவே ஸர்வ ஸாக்ஷியாக ஸ்வப்ரகாசமாக ப்ரகாசிக்கின்றது. ஹே! சுரர்களே! அந்த ப்ரத்யகாத்ம ஸ்வரூபமே ஸாக்ஷாத் அபரோக்ஷ ப்ரஹ்ம ஸ்வரூபம். ஸ்வயமே ஸ்வப்ரகாச ஸ்வரூபமான அந்த ப்ரத்யகாத்மாவே ஸர்வத்திலும் அந்தர்யாமியாக இருக்கின்றது. அதைத்தவிர வேறு எதுவும் ஸத்வமல்ல (ஸத்யமல்ல).

இந்த ச்லோகங்களில் ப்ரத்யகபின்ன ப்ரஹ்ம அபேதமும், ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்றும், ஆத்மா ஏகம் என்றும், ப்ரஹ்ம ஞானத்தினால் முக்தியும், ஸகல ச்ருதி ஸ்ம்ருதி புராணங்கள் எல்லாமே அத்வைதமே தாத்பர்யம் என்றும், த்வைதம் ஸத்யம் என்ற வாதம் சரியல்ல என்றும், ப்ரத்யக் ஆத்மா அந்தர்யாமி என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

80. *தஸ்மாதத்யஸ்தமஜ்ஞாநம் தத்கார்யம் சாத்மரூபத:* ।
ஏகதைவ மஹாயாஸாத் த்ரஷ்டவ்யோ ஹி முமுக்ஷுபி: ॥ (பி.கீ 10.36)

तस्माद्ध्यस्तमज्ञानं तत्कार्यं चात्मरूपतः।
एकधैव महायासाद् द्रष्टव्यो हि मुमुक्षुभिः ॥ (பி.கீ 10.36)

ஆகவே, அஞ்ஞானமும், அதன் கார்யமும் ஒரே ஆத்ம ஸ்வரூபத்தில், அத்யஸ்த்தம் என்பதால், அதிஷ்ட்டானமான ஆத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை அடைவதற்கு முமுக்ஷுக்கள் மிகுந்த ப்ரயத்னம் செய்து அடையவேண்டும்.

இந்த ச்லோகம் ப்ரஹ்மத்தில் கல்பிதமான இந்த ப்ரபஞ்சம் அதிஷ்ட்டானமான ப்ரஹ்மத்திற்கு வேறாக இல்லை. அத்விதீய ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் என்று தெரிவிக்கின்றது.

81. *மரீரப்ருத்கர்மபலம் புங்க்தே போஜயிதா மிவ:* ।
ப்ரதீதிதோ விருத்தௌ தௌ பேதஸ்த்வௌபாதிகஸ்தயோ: ॥ (பி.கீ 11.15)

शरीरभृत्कर्मफलं भुङ्क्ते भोजयिता शिवः।
प्रतीतितो विरुद्धौ तौ भेदस्त्वौपाधिकस्तयोः ॥ (பி.கீ 11.15)

ஜீவன் கர்மபலத்தை அனுபவிக்கின்றான். சிவன் அதற்கு காரணமாகிறான் என்ற ப்ரதீதி (ஞானம்) ஏற்படுகிறது. அதனால் ஜீவன், ஈச்வரன் என்ற இரண்டிற்கும் பேதம் இருப்பதாக அறியப்படுகிறது. இவ்விதம் ஏற்படும் ஞானம் ஔபாதிகமே அன்றி வாஸ்தவமல்ல.

இந்த ச்லோகம் ஜீவனுக்கும், ஈச்வரனுக்கும் ஸ்வாபாவிகமாக பேதம் இல்லை என்றே நிரூபணம் செய்கிறது.

82. *க்ஷரம் மாயா சாக்ஷரம் ஜீவரூபம் க்ஷராத்மநா பித்யதே தேவ ஏக:* । (பி.கீ 11.61)

क्षरं माया चाक्षरं जीवरूपं क्षरात्मना भिद्यते देव एकः। (பி.கீ 11-61)

83. *அஸ்தி தாவதஹம்ஶப்தப்ரத்யயாலம்பநம் ஸுரா:* ।
ஸர்வேஷாம் ந: பரம் ஜ்ஞாநம் ஸ ஏவாத்மா ந ஸம்ஶய: ॥
ஸோயம் ஸ்வாவித்யயா ஸாக்ஷாச்சிவஸ்ஸந்நபி வஸ்துத: ।
ஸ்வஶிவத்வமவிஜ்ஞாய ஸம்ஸாரீவாவபாஸதே ॥ (பி.கீ 12.2)

अस्ति तावदहंशब्दप्रत्ययालंबनं सुराः।
सर्वेषां नः परं ज्ञानं स एवात्मा न संशयः॥
सोयं स्वाविद्यया साक्षाच्छिवस्सन्नपि वस्तुतः।
स्वशिवत्वमविज्ञाय संसारीवावभासते॥ (பி.கீ 12-2)

க்ஷரம் என்பது மாயை, அக்ஷரம் ஜீவஸ்வரூபம். மாயை என்ற உபாதியினால் ஏகமான ஜீவன் பேதமுடையவனாக அறியப்படுகிறான். லோகத்தில் அஹம் என்ற ப்ரதீதிக்கும், வ்யவஹாரத்திற்கும் விஷயமாகின்ற ஆத்மஸ்வரூபமே எல்லோருக்கும் ப்ரசித்தமாக ப்ரகாசிக்கின்றது. ஞானஸ்வரூபமான இந்த ஆத்மாவே சிவஸ்வரூபம். அவித்யயினால் தன் ஸ்வரூபம் சிவஸ்வரூபமே என்று அறியாமல் ஸம்ஸாரி போல் ப்ரகாசிக்கின்றது.

இந்த ச்லோகங்களினால் அத்வைதமே நிரூபணம் செய்யப்படுகிறது.

84. *ப்ரஹ்மைவ கேவலம் ஶுத்தம் வித்யதே தத்வதர்ஶநே* ।
ந ச வித்யா ந சாவித்யா ந ஜகச்ச ந சாபரம் ॥ (பி.கீ 12.19)

ब्रह्मैव केवलं शुद्धं विद्यते तत्वदर्शने।
न च विद्या न चाविद्या न जगच्च न चापरम्॥ (பி.கீ 12-19)

85. *வேதார்தம் பரமாத்வைதம் நேதரத்ஸுரபுங்கவா:* । (பி.கீ 12.52)

वेदार्थं परमाद्वैतं नेतरत्सुरपुङ्गवाः। (பி.கீ 12-52)

ஹே! சுரச்ரேஷ்ட்டர்களே! தத்வத்ருஷ்டியில், சுத்த ப்ரஹ்மம் ஒன்றே இருக்கின்றது. வித்யையோ, அவித்யையோ, ஜகத்தோ, அல்லது இதைத்தவிர வேறு எதுவுமே கிடையாது. பரம அத்வைதமே வேதார்த்தம். த்வைதம் வேதார்த்தம் அல்ல.

இந்த ச்லோகம், 'அத்வைதமே தத்வம்' என்று தெரிவிக்கின்றது.

86. *ஈஶ்வரம் பரமாநந்தமநந்தம் ஸத்யசித்கநம்* ।
ஆத்மத்வேநைவ பஶ்யந்தம் நிஸ்தரங்கஸமுத்ரவத் ॥
நிர்விகல்பம் ஸுஸம்பூர்ணம் । (ஸூத.கீ 1.1-2)

ऐश्वरं परमानन्दमनन्तं सत्यचिद्घनम् ।
आत्मत्वेनैव पश्यन्तं निस्तरङ्गसमुद्रवत् ॥
निर्विकल्पं सुसम्पूर्णम् । (ஸூத கீதா 1.1-2)

ஈச்வர ஸ்வரூபம், பரமானந்தம் அனந்தம், ஸத்யம், சித்கனம், நிர்விகல்பம் ஸம்பூர்ணம். தரங்கமில்லாத ஸமுத்ரம் போல் சாந்தம் ஆத்மஸ்வரூபம் என்று தத்வஞானி அறிகின்றான்.

இந்த ச்லோகம் ஸூதகீதையில் முதல் அத்யாயத்தில் முதல் ச்லோகம். நிர்விசேஷம் ப்ரஹ்ம ஆத்ம அபேதம் என்றே தெரிவிக்கின்றது.

87. *தேஹேந்த்ரியாதிஸங்காதவாஸநாபேதபேதிதா ।*
அவித்யா ஜீவபேதஸ்ய ஹேதுர்நாந்ய: ப்ரகீர்தித: ॥ (ஸூத.கீ 2-13)
கடாகாமஹாகாமவிபாக: கல்பிதோ யதா ।
ததைவ கல்பிதோ பேதோ ஜீவாத்மபரமாத்மநோ: ॥ (ஸூத.கீ 2.10)

देहेन्द्रियादिसङ्घातवासनाभेदभेदिता ।
अविद्या जीवभेदस्य हेतुर्नान्यः प्रकीर्तितः ॥ (ஸூத கீதா 2-13)
घटाकाशमहाकाशविभागः कल्पितो यथा ।
तथैव कल्पितो भेदो जीवात्मपरमात्मनोः ॥ (ஸூத கீதா 2-10)

தேஹம் இந்த்ரியம் முதலான ஸங்காத வாஸனா பேதங்களுடன் கூடிய அவித்யை என்பதே ஜீவபேதத்திற்கு காரணமாகின்றது ஸ்வத: ஜீவபேதம் கிடையாது. எவ்விதம் கடம், படம் என்ற உபாதியினால் கடாகாசம், மஹாகாசம் என்ற விபாகம் கல்பிக்கப்படுகிறதோ, அதேபோல் ஜீவபரமாத்ம பேதம் உபாதியினால் கல்பிக்கப்பட்டதுதான்.

இந்த ச்லோகங்களினால் ஜீவர்களுக்குள் பரஸ்பரபேதமும் ஜீவ ஈச்வரபேதமும் ஸ்வாபாவிகம் இல்லை என்றே தெரிவிக்கின்றது.

88. *ஶிவாதந்யதயா பாதம் ஶிவ ஏவ ந ஸம்ஶய:* । (ஸூத.கீ 2.72)

शिवादन्यतया भातं शिव एव न संशयः । (ஸூத கீதா 2.72)

89. *அதவா தேவதேவஸ்ய ஸர்வதுர்கடகாரிணீ ।*
ஶக்திரஸ்தி தயா ஸர்வம் கடதே மாயயாऽநகா: ॥ (ஸூத.கீ 3.29)

अथवा देवदेवस्य सर्वदुर्घटकारिणी ।
शक्तिरस्ति तया सर्वं घटते माययाऽनघाः ॥ (ஸூத கீதா 3.29)

சிவனைக்காட்டிலும் வேறாக அறியப்படும் வஸ்துக்கள் எல்லாமே உண்மையில் சிவனேதான். இதில் ஸந்தேஹமே கிடையாது. தேவதேவனான சிவனுக்கு அகடனகடனாபடீயஸியான

ஒரு சக்தி இருக்கின்றது. அதுவே மாயை. இந்த மாயையினால், பொருந்தாதது எதுவோ அவையெல்லாம் (வாஸ்தவமாக) இருப்பதாகத் தோற்றுவிக்கப்படுகிறது.

இந்த ச்லோகங்கள் அத்விதீயமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் மாயையினால் த்வைதம் அறியப்படுகிறது என்று தெரிவிக்கின்றன.

90. *பரமாத்வைதவிஜ்ஞாநமேவ க்ராஹ்யம் யதாஸ்திதம் ।*
நாந்யதர்கைஶ்ச ஹந்தவ்யமிதமாம்நாயவாக்யஜம் ॥ (ஸூத.கீ 3.54)

परमाद्वैतविज्ञानमेव ग्राह्यं यथास्थितम् ।
नान्यतर्कैश्च हन्तव्यमिदमाम्नायवाक्यजम् ॥ (ஸூத கீதா 3.54)

அத்வைத விஞ்ஞானம் என்பதை அவ்விதமே க்ரஹிக்கவேண்டும். தர்க்கங்களை கொண்டு அத்வைதத்திற்கு மாறாக க்ரஹிக்கக்கூடாது.

இந்த ச்லோகம் அத்வைத ஞானமே அடையவேண்டும் என்று தெரிவிக்கின்றது.

91. *தஸ்மாந்நாஸ்தீஶ்வராதந்யத்கிஞ்சிதப்யாஸ்திகோத்தமா:* ।
ஏகத்வமேவ வாக்யார்த: நாபர: பரமாஸ்திகா: ॥ (ஸூத.கீ 3.61)

तस्मान्नास्तीश्वरादन्यत्किञ्चिदप्यास्तिकोत्तमाः । (ஸூத கீதா 3.59)
एकत्वमेव वाक्यार्थः नापरः परमास्तिकाः ॥ (ஸூத கீதா 3.61)

ஹே! ஆஸ்திகர்களே! ஈச்வரனை அன்றி எந்த வஸ்துவும் கிடையாது. ஏகத்வம் என்பதே வேதாந்தவாக்ய தாத்பர்யார்த்தம்.

இந்த ச்லோகங்களில் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்று, வேதாந்தவாக்யங்கள் ஏகத்வம் என்பதையே தாத்பர்யமாக போதிக்கின்றது என்று தெரிவிக்கின்றது.

92. *போக்தார: பஶவஸ்ஸர்வே ஶிவோ போஜயிதா பர:* ॥
ஸுகது:காதிஸம்ஸாரோ போகஸ்ஸர்வமிதம் புதா: ।
ஸ்வப்நவத்தேவதேவஸ்ய மாயயைவ விநிர்மிதம் ॥
மாயயா நிர்மிதம் ஸர்வம் மாயைவ ஹி நிரூபணே ।
காரணவ்யதிரேகேண கார்யம் நேதி ஹி தர்ஶநம் ॥
மாயாபி காரணத்வேந கல்பிதா முநிபுங்கவா: ।
அதிஷ்டாநாதிரேகேண நாஸ்தி தத்த்வநிரூபணே ॥
வ்யவஹாரத்ருஶா மாயா கல்பிதா ந து வஸ்துத: ।
வஸ்துத: பரமாத்வைதம் ப்ரஹ்மைவாஸ்தி ந சேதரத் ॥
மாயாரூபதயா ஸாக்ஷாத்பரஹ்மைவ ப்ரதிபாஸதே ।
ஜகஜ்ஜீவாதிரூபேணாப்யஹோ தேவஸ்ய வைபவம் ॥ (ஸூத.கீ 4.30-35)

भोक्तारः पशवस्सर्वे शिवो भोजयिता परः ॥
सुखदुःखादिसंसारो भोगस्सर्वमिदं बुधाः ।
स्वप्नवद्देवदेवस्य माययैव विनिर्मितम् ॥
मायया निर्मितं सर्वं मायैव हि निरूपणे ।
कारणव्यतिरेकेण कार्यं नेति हि दर्शनम् ॥
मायापि कारणत्वेन कल्पिता मुनिपुङ्गवाः ।
अधिष्ठानातिरेकेण नास्ति तत्त्वनिरूपणे ॥
व्यवहारदृशा माया कल्पिता न तु वस्तुतः ।
वस्तुतः परमाद्वैतं ब्रह्मैवास्ति न चेतरत् ॥
मायारूपतया साक्षाद्ब्रह्मैव प्रतिभासते ।
जगज्जीवादिरूपेणाप्यहो देवस्य वैभवम् ॥ (ஸூத கீதா 4.30-35)

ஜீவர்கள் எல்லோரும் பசுக்களைப் போல் கர்மபலன்களை அனுபவிக்கின்றார்கள். பரமசிவன் அவர்களுக்கு கர்மபலனை கொடுக்கின்றார். சுகதுக்கம் என்ற ஸம்ஸாரமே போகம். ஹே! வித்வான்களே! இவையெல்லாமே, தேவதேவரின் மாயையினால், ஸ்வப்னம் போல் கல்பிக்கப்பட்டது. மாயையினால் உண்டானவைகளை விசாரிக்கின்றபோது அவையெல்லாம் மாயை அன்றி வேறாக இல்லை என்றே அறியப்படும். ஏனெனில் காரணத்தை அன்றி கார்யம் வேறாக இருப்பதில்லை. மாயை என்பதும் வ்யாவஹாரிக தசையில் காரணம் என்று கல்பிக்கப்படுகிறது. ஹே! முனிச்ரேஷ்ட்டர்களே! அதிஷ்ட்டானத்தை அன்றி மாயை என்பது கிடையாது. உண்மையில் பரமாத்வைதமான ப்ரஹ்மமே மாயா ரூபத்திலும், ஜகத், ஜீவன் என்பது போன்ற ரூபங்களிலும் ப்ரகாசிக்கின்றது. அஹோ! அந்த பரமாத்மாவின் மஹிமையே.

இந்த ச்லோகங்கள், ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம், ப்ரஹ்மத்தை அன்றி வேறாக அறியப்படுவதெல்லாமே மித்யை என்று ஸ்பஷ்ட்டமாகவே தெரிவிக்கின்றன.

93. *ஏகத்வேபி ப்ருதக்த்வேந வ்யபதேஶோபி யுஜ்யதே ।*
அந்த:கரணபேதேந ஸாக்ஷிண: ப்ரத்யகாத்மந: ॥ (ஸூத.கீ 5.33)
ஆத்மாஹம்ப்ரத்யயாகாரஸம்பந்தப்ராந்திமாத்ரத: ।
கர்தா போக்தா ஸுகீ து:கீ ஜ்ஞாயதே ப்ரதிபாஸத: ॥ (ஸூத.கீ 5-25)

एकत्वेपि पृथक्त्वेन व्यपदेशोपि युज्यते ।
अन्तःकरणभेदेन साक्षिणः प्रत्यगात्मनः ॥ (ஸூத கீதா 5-33)
आत्माहंप्रत्ययाकारसम्बन्धभ्रान्तिमात्रतः ।
कर्ता भोक्ता सुखी दुःखी ज्ञायते प्रतिभासतः ॥ (ஸூத கீதா 5-25)

ஸர்வ ஸாக்ஷியான ப்ரத்யகாத்மா, ஏகமாக இருந்தபோதிலும் அந்த:கரணஉபாதிபேதத்தினால் அனேகம் என்ற வ்யவஹாரம் ஏற்படுகிறது. ஆத்மா, அஹம் ப்ரத்யய ஸம்பந்தத்தினால் (அத்யாஸத்தினால்) கர்த்தா, போக்தா, சுகீ, துக்கீ என்று ப்ரகாசிக்கின்றது. உண்மையில் ஆத்மாவிற்கு ஸம்ஸாரதர்மங்கள் எதுவுமில்லை.

இந்த ச்லோகங்கள், ஆத்மபேதமும், ஸம்ஸார ஸம்பந்தமும் உபாதியினால் ஏற்படுகிறது (ஔபாதிகம்) என்றே தெரிவிக்கின்றது.

94. *அதோऽயம் ப்ரத்யகாத்மைவ ஸ்வாநுபூத்யேககோசர:* ।
ஶாஸ்த்ரஸித்தம் பரம் ப்ரஹ்ம நாபரம் பரமார்தத: ॥ (ஸூத.கீ 5.48)

अतोऽयं प्रत्यगात्मैव स्वानुभूत्येकगोचरः ।
शास्त्रसिद्धं परं ब्रह्म नापरं परमार्थतः ॥ (ஸூத கீதா 5.48)

இவ்விதம் விசாரிக்கின்றபோது, ஸ்வானுபூதிக்குமட்டுமே (ஸ்வ அனுபவத்திற்கு மட்டுமே) கோசரமாகின்ற ப்ரத்யகாத்மாவே, சாஸ்திரத்தினால் போதிக்கப்படும் பரப்ரஹ்மம். இந்த ச்லோகம் ஜீவப்ரஹ்ம ஐக்யத்தையே தெரிவிக்கின்றது.

95. *நித்யமுக்தஸ்ய ஸம்ஸாரோ ப்ராந்திஸித்தஸ்ஸதா கலு* ।
தஸ்மாத் ஜ்ஞாநேந நாஶஸ்ஸ்யாத் ஸம்ஸாரஸ்ய ந கர்மணா ॥ (ஸூத.கீ 5-73)

नित्यमुक्तस्य संसारो भ्रान्तिसिद्धस्सदा खलु ।
तस्माद् ज्ञानेन नाशस्स्यात् संसारस्य न कर्मणा ॥ (ஸூத கீதா 5-73)

நித்ய முக்த ஸ்வரூபமான ஆத்மாவிற்கு ப்ராந்தியினால் ஸம்ஸாரம் ஏற்படுகிறது. அதனால்தான் ஸம்யக் ஞானத்தினால் ஸம்ஸார நாசம் ஏற்படுகிறது. அஞ்ஞானம் நிவர்த்திப்பதற்கு ஞானம் ஒன்றே நிவர்த்தகம். அதனால் கர்மாவினால் ஸம்ஸார நிவர்த்தி ஏற்படாது. இந்த ச்லோகம் அனந்தன் கருடன் முதலானோர் நித்யமுக்தர்கள் என்றும் மற்ற ஜீவர்கள் பத்தர்கள் என்றும் தெரிவிக்கின்ற ராமானுஜமதத்தை நிராகரிக்கிறது. அதாவது, இந்த ச்லோகத்தில், எல்லோருமே நித்யமுக்தர்கள்தான். ஸம்ஸாரம் ப்ராந்தி ஸித்தம். அதனால் எல்லோருமே நித்யமுக்தர்கள்தான் என்று தெரிவிப்பதன்மூலம் ராமானுஜமதம் நிராகரிக்கப்பட்டதாக ஆகிறது.

96. *பரதத்த்வம் பரம் ப்ரஹ்ம ஜீவாத்மபரமாத்மநோ:* ।
ஔபாதிகேந பேதேந த்விதாபூதமிவ ஸ்திதம் ॥ (ஸூத.கீ 6-15)

परतत्त्वं परं ब्रह्म जीवात्मपरमात्मनोः ।
औपाधिकेन भेदेन द्विधाभूतमिव स्थितम् ॥ (ஸூத கீதா 6-15)

பரப்ரஹ்மம் என்ற பரதத்வம் ஔபாதிகபேதத்தினால் ஜீவாத்மா என்றும், பரமாத்மா என்றும் இரண்டாக இருப்பதுபோல் (வெவ்வேறாக இருப்பதுபோல்) தோன்றுகிறது.

இந்த ச்லோகம் பேதம் ஸ்வாபாவிகம் இல்லை என்று தெரிவிக்கின்றது.

97. *ஸ்வதேஹே பரதேஹே வா ந குர்யாதங்கநம் நர: ।*
யதி குர்யாத் து சக்ராத்யை: பதத்யேவ ந ஸம்ஶய: ॥ (ஸூத.கீ 7-33)
அதஶ்ச போகமோக்ஷார்தீ ஶரீரம் தேவதாமயம் ।
ஸ்வகீயம் பரகீயம் ச பூஜயேத் து விஶேஷத: ॥ (ஸூத.கீ 7.28)

स्वदेहे परदेहे वा न कुर्यादङ्कनं नरः।
यदि कुर्यात् तु चक्राद्यैः पतत्येव न संशयः॥ (ஸூத கீதா 7-33)
अतश्च भोगमोक्षार्थी शरीरं देवतामयम्।
स्वकीयं परकीयं च पूजयेत् तु विशेषतः॥ (ஸூத கீதா 7-28)

தன்னுடைய தேஹத்திலோ, மற்றவர்களின் தேஹத்திலோ சங்கம், சக்ரம் முதலான சின்னங்களை (முத்ரைகளை) போடக்கூடாது. இவ்விதம் சரீரத்தை தஹிக்ககூடிய (தப்த) முத்ரைகளை தரிப்பானாகில், ஸந்தேஹமன்றி அவன் பதிதனாக ஆகின்றான். (பாதகமே ஏற்படும்) அதனால் போகார்த்தியோ மோக்ஷார்த்தியோ, யாராக இருந்தாலும் சரீரம் தேவதாமயம் என்று பாவித்து பூஜிக்கவேண்டுமே அன்றி தப்தமுத்ராதிகளைச் செய்யக்கூடாது.

இந்த ச்லோகங்களில், ராமானுஜருக்கு ஸம்மதமான தப்தசங்கசக்ரதாரணம் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

98. *தத்த்வஜ்ஞாநேந மாயாயா பாதோ நாந்யேந கர்மணா ।*
ஜ்ஞாநம் வேதாந்தவாக்யோத்தம் ப்ரஹ்மாத்மைகத்வகோசரம் ॥ (ஸூத.கீ 8-6)

तत्त्वज्ञानेन मायाया बाधो नान्येन कर्मणा।
ज्ञानं वेदान्तवाक्योत्थं ब्रह्मात्मैकत्वगोचरम्॥ (ஸூத கீதா 8-6)

தத்வ ஞானத்தினால்தான் மாயைக்கு பாதம் ஏற்படுகிறது. வேறு கர்மாக்களினால் மாயைக்கு நிவர்த்தி ஏற்படாது. தத்வ ஞானம் என்பது, வேதாந்த மஹாவாக்யத்தினால் ஏற்படும் ப்ரஹ்மாத்மைக்யகோசரமான ஞானமே.

இந்த ச்லோகமும், ப்ரத்யக் அபின்ன ப்ரஹ்ம ஞானத்தினால்தான் ஸம்ஸார காரணமான அஞ்ஞானத்திற்கு நிவர்த்தி என்று தெரிவிக்கின்றது.

110

भागवतस्याप्यद्वैतपरत्वप्रतिपादनम् ।

ஸூதஸம்ஹிதை போன்றே பாகவத ச்லோகங்களும் அத்வைதபரம் என்றே நிரூபணம் செய்யப்படுகின்றது

1. ஸம்பத்யமாநமாஜ்ஞாய பீஷ்மம் ப்ரஹ்மணி நிஷ்கலே ।
ஸர்வே பபூவுஸ்தே தூஷ்ணீம் வயாம்ஸீவ திநாத்யயே ॥

सम्पद्यमानमाज्ञाय भीष्मं ब्रह्मणि निष्कले ।
सर्वे बभूवुस्ते तूष्णीं वयांसीव दिनात्यये ॥

பீஷ்மர் நிஷ்களஸ்வரூபமான ப்ரஹ்மத்தில் லயம் அடைவதை அறிந்த தேவர்கள் தூஷ்ணீம் பாவத்தை அடைந்தார்கள் (பேச்சற்று நின்றார்கள்).

இந்த ச்லோகம் பீஷ்மர் என்ற ஜீவாத்மா, நிஷ்கள ப்ரஹ்ம ஸம்பத்தி என்ற ஸாயுஜ்ய முக்தி அடைந்தார் என்று தெரிவிக்கின்றது. அதாவது, ஸாயுஜ்யம் என்பதே ஏகத்வம். அதனால் இந்த ச்லோகம் அத்வைதமே (தத்வம்) என்று தெரிவிக்கின்றது.

அதாவது ஞானி, அஞ்ஞானி என்ற எல்லோருக்கும் சரீர வியோகம் ஏற்படுகின்றபோது, பாஞ்ச பௌதிக ஸ்தூல சரீரம் அதன் காரணமான பஞ்ச பூதங்களில் லயத்தை அடைகின்றது. ஆனால் ஞானிகளுக்கு மட்டும் ஸுக்ஷ்ம சரீரமும் அதன் காரணமான பஞ்ச பூதங்களில் லயத்தை அடைகின்றது. அஞ்ஞானிகளின் ஸுக்ஷ்ம சரீரம் பரலோகத்திற்கு செல்கிறது. (இதுவே ஞானிக்கும், அஞ்ஞானிக்கும் வித்யாஸம்).

2. ஸ வை கிலாயம் புருஷ: புராதநோ ய ஏக ஆஸீதவிஶேஷ ஆத்மநி ।

स वै किलायं पुरुषः पुरातनो य एक आसीदविशेष आत्मनि ।

நிர்விசேஷ ஆத்ம ஸ்வரூபத்தில் ப்ரதிஷ்ட்டிதமான அந்த புராண புருஷனே இவர் என்று ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவைபற்றியே எல்லோரும் ஆங்காங்கே பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

3. ததிதம் பகவந்ராஜந்நேக ஆத்மாऽऽத்மநாம் ஸ்வத்ருக் ।
அந்தரோऽநந்தரோ பாதி பஶ்ய த்வம் மாயயோருதா ।

तदिदं भगवन्राजन्नेक आत्माऽऽत्मनां स्वदृक् ।
अन्तरोऽनन्तरो भाति पश्य त्वं माययोरुधा ।

ஹே! ராஜன், இந்த ஜகத் வாஸ்தவமாக, ஸாக்ஷி ஸ்வரூபமான பகவான்தான். அந்த பகவான் ஒருவரே. அனேகம் இல்லை ஏகம் தான். ஸர்வ ஜீவர்களுக்கும் அவரே ஆத்மா. உள்ளும், புறமும் அவரே மாயையினால் போக்தாவாகவும், போக்யமாகவும் ப்ரகாசிக்கின்றார்.

இந்த ச்லோகம், அபேதம் தத்வம் என்றே தெரிவிக்கின்றது.

4. *விஶுத்தம் கேவலம் ஜ்ஞானம் ப்ரத்யக்ஸம்யகவஸ்திதம் ।*
ஸத்யம் பூர்ணமநாத்யந்தம் நிர்குணம் நித்யமத்வயம் ॥

विशुद्धं केवलं ज्ञानं प्रत्यक्सम्यगवस्थितम् ।
सत्यं पूर्णमनाद्यन्तं निर्गुणं नित्यमद्वयम् ॥

(விசுத்தம் என்றால் விஷயாகார சூன்யம் என்று அர்த்தம்).

விஷயாகார சூன்யமான கேவல ஞான ஸ்வரூபமாக, ஸர்வாந்தரமாக, நிர்க்குணமாக, நித்யமாக அத்விதீயமாக அனாதி அனந்தமான கேவல ஞான ஸ்வரூபமே ஸத்யம்.

இந்த ச்லோகம் ப்ரத்யகாத்மாவிற்கு பூர்ணத்வம் ஏகத்வம் என்ற எல்லாமே தெரிவிக்கின்றது.

5. *ஶஶ்வத்ப்ரஶாந்தமபயம் ப்ரதிபோதமாத்ரம்*
ஶுத்தம் ஸமம் ஸதஸத: பரமாத்மதத்த்வம் ।
ஶப்தோ ந யத்ர புருகாரகவாந் க்ரியார்தோ
மாயாபரைத்யபிமுகே ச விலஜ்ஜமாநா ॥ (2.7-47)

शश्वत्प्रशान्तमभयं प्रतिबोधमात्रं शुद्धं समं सदसतः परमात्मतत्त्वम् ।
शब्दो न यत्र पुरुकारकवान् क्रियार्थो मायापरैत्यभिमुखे च विलज्जमाना ॥ (2.7-47)

பரமாத்ம தத்வம் ஸர்வதா சாந்தம், அபயம், ஞானஸ்வரூபம், சுத்தம், ஸமம், ஸத், அஸத் என்ற இரண்டிற்கும் அப்பாற்பட்டது. சப்தத்தினால் போதிக்கப்படமுடியாதது. அனேக காரகங்களைக்கொண்டு ஸாதிக்கப்படும் க்ரியைக்கு விஷயமாகாதது. உற்பத்தி, ஆப்தி, விகாரம் ஸம்ஸ்க்காரம் என்ற நான்கு விதமான க்ரியாபல ஸம்பந்தம் அற்றது. மாயை என்பதே அந்த பரமாத்மாவிடம் நேரில் நிற்கமுடியாமல் பூராவும் விலகிவிடுகிறது.

இந்த ச்லோகம், மாயை, அதன் கார்யங்களான ஸர்வ விசேஷங்களும் ஸம்பந்தப்படாத ஶுத்த சைதன்ய ஸ்வரூபமே, ப்ரத்யகாத்மஸ்வரூபம் என்று தெரிவிக்கின்றது.

6. *அஹமேவாஸமேவாக்ரே நாந்யத்யத்ஸதஸத்பரம் ।*
பஶ்சாதஹம் யதேதச்ச யோऽவஶிஷ்யேத ஸோऽஸ்ம்யஹம் ॥
ருதேऽர்தம் யத்ப்ரதீயேத ந ப்ரதீயேத சாத்மநி ।
தத்வித்யாதாத்மநோ மாயாம் யதாऽபாஸோ யதா தம: ॥

யதாமஹாந்தி பூதாநி பூதேஷூச்சாவசேஷ்வநு ।
ப்ரவிஷ்டாந்யப்ரவிஷ்டாநி ததா தேஷு ந தேஷ்வஹம் ॥
ஏதாவதேவ ஜிஜ்ஞாஸ்யம் தத்த்வஜிஜ்ஞாஸுநாऽऽத்மந: ।
அந்வயவ்யதிரேகாப்யாம் யத்ஸ்யாத்ஸர்வத்ர ஸர்வதா ॥ (2.9.32-35)

अहमेवासमेकोग्रे नान्यद्यत्सदसत्परम् ।
पश्चादहं यदेतच्च योऽवशिष्येत सोस्म्यहम् ॥
ऋतेऽर्थं यत्प्रतीयेत न प्रतीयेत चात्मनि ।
तद्विद्यादात्मनो मायां यथाऽभासो यथा तमः ॥
यथा महान्ति भूतानि भूतेषूच्चावचेष्वनु ।
प्रविष्टान्यप्रविष्टानि तथा तेषु न तेष्वहम् ॥
एतावदेव जिज्ञास्यं तत्त्वजिज्ञासुनाऽऽत्मनः ।
अन्वयव्यतिरेकाभ्यां यत्स्यात्सर्वत्र सर्वदा ॥ (பாகவதம் 2.9.32-35)

அஹமேவ ஆஸம். ச்ருஷ்டிக்கு முன் நான் ஒருவனே இருந்தேன். என்னை அன்றி ஸ்தூலமாகவோ, ஸுக்ஷ்மமாகவோ எதுவுமே இல்லை ச்ருஷ்டிக்குப் பிறகும் நான் ஒருவனே இருக்கின்றேன். அறியப்படும் ப்ரபஞ்சமும் நானே, ப்ரளயத்தில் எஞ்சி இருப்பவனும் நானே. உண்மையில் அத்விதீயத்வமாக இருந்தும், மாயையினால் த்வைதம் அறியப்படுகிறது. உண்மையில் இருக்கின்ற வஸ்துவை மறைத்து, இல்லாத வஸ்துக்களை இருப்பதாகத் தோற்றுவிக்கின்றதே மாயை. உதாரணமாக சந்த்ரன் ஒன்றே என்றாலும், சந்த்ரன் இரண்டாகத் தோற்றுவிக்கின்றது. ராகு க்ரஹம், மண்டலத்தில் இருந்தும், ராகு இருப்பதாகவே அறியப்படவில்லை. பஞ்சமஹாபூதங்களும், அதன் கார்யமான பௌதிக பதார்த்தங்களில் ப்ரவேசித்திருந்தும்கூட உபாதான காரணமான பூதங்கள் உண்மையில் ப்ரவேசிக்கவில்லை என்றே சொல்லவேண்டும்.

அதாவது, கடம் என்பது பௌதிக கார்யம், ம்ருத் என்பதே அதற்கு காரணம். கார்யமான கடத்தில் காரணமான ம்ருத் ப்ரவிஷ்ட்டம் என்றே அறியப்படுகிறது. அதனால் கடம் என்பதே ம்ருத்திற்கு ஆதாரம் என்ற ப்ராந்தி ஏற்படுகிறது. ஆனால் ம்ருத்திற்கு கடம் ஆதாரமாக ஆகமுடியாது. ஏனெனில் கடம் உற்பத்தி ஆவதற்கு முன்பே ம்ருத் இருக்கின்றது. அதனால் ம்ருத் என்பதே கடத்திற்கு ஆதாரமாக இருந்தும், ம்ருத்திற்கு கடம் ஆதாரம் என்று தோன்றுகிறது. அதேபோல் ஆத்மஸ்வரூபம் ப்ரபஞ்சத்திற்கு ஆதாரம். அதுவே ஸத்ஸ்வரூபமாக ஸர்வ ப்ரபஞ்சத்திலும் ப்ரகாசிக்கின்றது. ப்ரபஞ்சம் ஸத்ஸ்வரூபத்திற்கு ஆதாரமல்ல. ப்ரபஞ்சத்திற்கு வேறுபட்ட தனித்த ஸ்வரூபம் ஆத்மா. முமுக்ஷுவானவன், ப்ரபஞ்சத்தை வேறுபடுத்தி, அன்வயவ்யதிரேகத்தினால் ஆத்மஸ்வரூபம் பற்றி விசாரித்து அறியவேண்டும்.

இந்த ச்லோகங்கள் சதுஸ்ச்லோகி என்று பாகவதத்தில் ப்ரஸித்தமாக சொல்லப்படுகிறது. 'ப்ரஹ்மம் ஒன்றே முக்காலத்திலும் ஸத்யம். ஜகத் மாயாமயம்' என்றே தெரிவிக்கின்றது.

இந்த ச்லோகங்கள் இந்த க்ரந்தக்காரரால் வேறொரு க்ரந்தத்தில் விஸ்தாரமாக தன்னால் வ்யாக்யானம் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கின்றார்.

7. *ப்ரஹ்மந் கதம் பகவதஶ்சிந்மாத்ரஸ்யாவிகாரிண: ।*
லீலயா வாபி யுஜ்யேரந்நிர்குணஸ்ய குணா: க்ரியா: ॥ (3.7.2)

ब्रह्मन् कथं भगवतश्चिन्मात्रस्याविकारिणः ।
लीलया वापि युज्येरन्निर्गुणस्य गुणाः क्रियाः ॥ (3.7.2)

விதுரர் மைத்ரேயரிடம் இவ்விதம் கேட்கின்றார். அதாவது, ஹே! ப்ரஹ்மன்! சைதன்யமாத்ர ஸ்வரூபமென்றும், அவிகாரி என்றும் ஆத்ம ஸ்வரூபம் சொல்லப்படுமானால், அவ்விதம் நிர்க்குணமான பரமாத்மாவிற்கு குணங்களும், நிர்விகாரத்திற்கு ச்ருஷ்டி முதலான க்ரியைகளும் எவ்விதம் ஸம்பவிக்கமுடியும்? மாயா குணங்களினால் லீலையாக இவ்வித கார்யங்களைச்செய்கின்றார் என்றால் வஸ்து விரோதம் ஏற்படுகின்றதே என்று கேட்கிறார்.

இதற்கு மைத்ரேயர் ஆத்ம ஸ்வரூபம் நிர்க்குணம் நிஷ்க்ரியம் சைதன்யமாத்ர ஸ்வரூபம் என்றே பதில் ஸ்பஷ்டமாக தெரிவிக்கின்றார்.

வஸ்து விரோதம் என்றால் என்ன அர்த்தம் என்றால் - உதாரணமாக ரஜ்ஜு என்பது ஸர்ப்பமாக இருக்கமுடியாது. அதுபோல் நிர்க்குணம் என்றால் அது ப்ரபஞ்சமாக இருக்கமுடியாது என்பதே உண்மை. ஆனால் நிர்க்குண நிர்விகார ஆத்ம ஸ்வரூபத்திற்கு மாயையினால் குணங்களும், க்ரியாஸம்பந்தமும் சொல்லப்படுகிறது. மாயை என்றாலே யுக்திக்கு பொருந்தாது. அதனால் மாயை என்றாலே யுக்தி விரோதம் ஏற்படுகிறதே என்ற கேள்வியே பொருந்தாது. பந்தமே இல்லாத ஆத்மஸ்வரூபம் பந்தம் உடையதாக தெரிவிக்கின்றது. அதனால் மாயிகமான குணங்கள் க்ரியைகள் என்ற எல்லாமே, உண்மை வஸ்துவான நிர்க்குணம் நிர்விகாரஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கு விரோதம் இல்லை.

8. *பகவாநேக ஏவைஷ ஸர்வக்ஷேத்ரேஷ்வவஸ்தித: ।*
அமுஷ்ய துர்பகத்வம் வா க்லேஶோ வா கர்மபி: குத: ॥ (3.7.6)

भगवानेक एवैष सर्वक्षेत्रेष्ववस्थितः ।
अमुष्य दुर्भगत्वं वा क्लेशो वा कर्मभिः कुतः ॥ (3.7.6)

ஒரே பரமாத்ம ஸ்வரூபம் ஸர்வசரீரங்களிலும் போக்தாவாக இருக்கின்றது. இவ்விதம் பரமாத்மாவிற்கு கர்த்ருத்வம், போக்த்ருத்வங்கள் ஔபாதிகமாக ப்ராந்தியினால் அறியப்படுகிறது. ஆனால் உண்மையில் சைதன்யஸ்வரூபமான ஆத்மாவிற்கு கர்ம

ஸம்பந்தம் கிடையாது என்பதால் பாப கர்மாக்களினால், ஆனந்தம் முதலான ஸ்வரூபத்திற்கு ஹானி ஏற்படாது. அதேபோல் சுகம், துக்கம் போன்ற கர்ம பலன்களும் பரமாத்மாவினிடம் ஸம்பவிக்கக்கூடிய வாய்ப்பே கிடையாது.

இந்த ச்லோகம் ஜீவப்ரஹ்ம ஐக்யத்தையே தெரிவிக்கின்றது.

9. *ஸேயம் பகவதோ மாயா யந்நயேந விருத்யதே ।*
ஈஶ்வரஸ்ய விமுக்தஸ்ய கார்பண்யமுத பந்தநம் ॥

सेयं भगवतो माया यन्नयेन विरुध्यते ।
ईश्वरस्य विमुक्तस्य कार्पण्यमुत बन्धनम् ॥

பகவான் சக்தியாக சொல்லப்படும் மாயை என்பது தர்க்கத்திற்கு (யுக்திக்கு) பொருந்தாததுதான். அதனால் நித்ய முக்தமான ஆத்மஸ்வரூபத்திற்கு பந்தமென்பதும், கார்பண்யம் என்பதும் மாயையினால், மித்யையாக தோன்றுகின்றது என்றே அறியவேண்டும்.

இந்த ச்லோகம் ஆத்மஸ்வரூபத்திற்கு ஜீவபாவம் மாயாமயம் என்றே தெரிவிக்கின்றது.

10. *யதர்தேந விநா பும்ஸோ ம்ருஷைவாத்மவிபர்யய: ।*
ப்ரதீயத உபத்ரஷ்டு: ஸ்வஶிரஶ்சேதநாதிநா ॥
யதா ஜலே சந்த்ரமஸ: கம்பாதிஸ்தத்க்ருதோ குண: ।
த்ருஶ்யதேऽஸந்நபி த்ரஷ்டுராத்மநோ நாத்மநோ குண: ॥ (3.7.10-11)

यदर्थेन विना पुंसो मृषैवात्मविपर्ययः ।
प्रतीयत उपद्रष्टुः स्वशिरश्छेदनादिना ॥
यथा जले चन्द्रमसः कम्पादिस्तत्कृतो गुणः ।
दृश्यतेऽसन्नपि द्रष्टुरात्मनो नात्मनो गुणः ॥ (3.7.10,11)

மாயையினால் இல்லாத வஸ்துக்களும் இருப்பதுபோல் தோன்றுகிறது. உதாரணமாக ஸ்வப்னத்தில் தன் சிரச்சேதத்தை, தானே பார்க்கின்றான். இது யுக்திக்குப் பொருந்தவில்லை என்றாலும் மாயையினால் தோன்றுகிறது. இதேபோல் நித்யமுக்தமான ஆத்மா, பந்தன் என்று தோன்றுகிறது. ஆகாசத்தில் இருக்கின்ற சந்த்ரனிடம் சலனம் என்பதே கிடையாது. ஆனால் ஜலத்தில் ப்ரதிபலிக்கின்ற சந்த்ரன், சலிக்கின்றதாக, ஜலம் என்ற உபாதியில் ஏற்படும் சலனத்தை சந்த்ரனிடன் ஆரோபிதம் செய்யப்படுகிறது. அதுபோல் தேஹம் முதலானவைகளின் தர்மங்கள் ஆத்மாவில் ஆரோபிதமாகத்தோன்றுகிறது.

இந்த ச்லோகங்களில் ஆத்மாவிற்கு ஜீவபாவம் மித்யை என்றே உதாரணத்தின் மூலம் நிரூபணம் செய்யப்படுகிறது.

11. *ததா புருஷ ஆத்மாநம் கேவலம் ப்ரக்ருதே: பரம் ।*
நிரந்தரம் ஸ்வயம்ஜ்யோதிரணிமாநமகண்டிதம் ॥

तथा पुरुष आत्मानं केवलं प्रकृतेः परम् ।
निरन्तरं स्वयंज्योतिरणिमानमखण्डितम् ॥

ப்ரக்ருதிக்கும் அப்பாற்பட்ட நிரந்தரமான ஸ்வயம் ஜ்யோதிஸ்வரூபமான கேவல அஸங்க ஆத்மஸ்வரூபத்தையே, புருஷன் (பூர்ணத்வாத் புருஷன்) என்று தெரிவிக்கின்றது.

12. *அநாதிராத்மா புருஷோ நிர்குண: ப்ரக்ருதே: பர: ।*
ப்ரத்யக்தாம ஸ்வயம்ஜ்யோதிர்விஶ்வம் யேந ஸமந்விதம் ॥

अनादिरात्मा पुरुषो निर्गुणः प्रकृतेः परः ।
प्रत्यग्धाम स्वयंज्योतिर्विश्वं येन समन्वितम् ॥

ஆத்மஸ்வரூபம் அனாதி, புரிசயனத்தினால் புருஷன், நிர்க்குணம், ப்ரக்ருதி விலக்ஷணம், ஸ்வயம்ஜ்யோதிஸ்வரூபமான ப்ரத்யக் ஸ்வரூபம் ஸமஸ்த்த ப்ரபஞ்சத்திலும் அனுஸ்யூதமாக ப்ரகாசிக்கின்றது.

13. *ந ஜாயதே ந ம்ரியதே ஸஹதேஹாத்யுபாதிபி: ।*
நிமித்தைராத்மதத்தர்மா யதா ஸ்வப்நே ததீக்ஷிதா ॥
ததஸ்ய ஸம்ஸ்ருதிர்பந்த: பாரதந்த்ரயம் ச தத்க்ருதம் ।
பவத்யகர்துரீஶஸ்ய ஸாக்ஷிணோ நிர்வ்ருதாத்மந: ॥

न जायते न म्रियते सहदेहाद्युपाधिभिः ।
निमित्तैरात्मतद्धर्मा यथा स्वप्ने तदीक्षिता ॥
तदस्य संसृतिर्बन्धः पारतन्त्रयं च तत्कृतम् ।
भवत्यकर्तुरीशस्य साक्षिणो निर्वृतात्मनः ॥

ஆத்மா, தேஹம் முதலான ஸங்காதம் உற்பத்தி ஆகின்றபோது உற்பத்தி ஆவதில்லை. அவைகள் நசிக்கின்றபோதும் நசிப்பதில்லை. உபாதிதர்மங்களை ஆத்மாவில் ஆரோபம் செய்யப்படுவதால் ஆத்மாவிற்கு உற்பத்தி விநாசம் இருப்பதாக அறியப்படுகிறது. ஆத்மாவிற்கு பந்தமும் பாரதந்த்ரியமும் உபாதி ஸம்பந்தத்தினாலேயே அறியப்படுகிறது. உண்மையில் ஆத்மா அகர்த்தா. ஸாக்ஷி நித்யமுக்தன்.

14. *ஸர்வபூதேஷு சாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி ।*
ஈக்ஷிதாऽநந்யபாவேந பூதேஷ்வபி ததாத்மதாம் । (3.28-42)

सर्वभूतेषु चात्मानं सर्वभूतानि चात्मनि ।
ईक्षिताऽनन्यभावेन भूतेष्वपि तदात्मताम् । (3-28-42)

ஸர்வபூதங்களிலும், ஆத்மஸ்வரூபத்தையே பார்க்கின்றான், ஆத்மஸ்வரூபத்தில் ஸர்வ பூதங்களையும் பார்க்கின்றான். இவ்விதம் பௌதிகமான ப்ரபஞ்சத்தில் மஹாபூதங்களின் தாதாத்ம்யம் எவ்விதம் அறியப்படுகிறதோ அதேபோல் ஸர்வபூதங்களிலும் ஆத்ம ஸ்வரூபத்தையே பார்க்கின்றான்.

15. *ஆத்மா ஹி கேவலம் ஜ்ஞாநமர்தோ தேஹாத்யஸஜ்ஜட: ।*
ஸுகது:காதயோ பாவா ந தேஹஸ்ய ந சாத்மந: ॥

आत्मा हि केवलं ज्ञानमर्थो देहाद्यसज्जडः ।
सुखदुःखादयो भावा न देहस्य न चात्मनः ॥

ஆத்மா, கேவல ஞானஸ்வரூபம், தேஹாதிகள், அஸத், ஜட ஸ்வரூபம். சுகதுக்க ஸம்ஸாரங்கள் கேவல சைதன்ய ஸ்வரூபமான ஆத்மாவிற்கு கிடையாது. ஜடமான தேஹத்திற்கும் கிடையாது. இந்த ச்லோகம், ஞானஸ்வரூபமே ஆத்மா என்றும், அதனிடம் சுகம் துக்கம் போன்ற தர்மங்கள் கிடையாது என்றும் தெரிவிக்கின்றது.

16. *ஜ்ஞாநமாத்ரம் பரம் ப்ரஹ்ம பரமாத்மேஶ்வர: புமாந் ।*
த்ருஶ்யாதிபி: ப்ருதக்பாவைர்பகவாநேக ஈயதே ॥

ज्ञानमात्रं परं ब्रह्म परमात्मेश्वरः पुमान् ।
दृश्यादिभिः पृथग्भावैर्भगवानेक ईयते ॥

பரமாத்மா சைதன்யமாத்ர ஸ்வரூபம், அவரே ஈச்வரன், புருஷன். அவர் ஒருவரே என்றாலும், த்ருச்யமான உபாதிபேதத்தினால் அனேக ரூபமாக அறியப்படுகிறது. அவரே ஜீவரூபமாகவும் ஈச்வரனாகவும் ஜகத் ரூபமாகவும் பலவிதமாக ப்ரதிபலிக்கின்றார்.

இந்த ச்லோகம் ஒரே சைதன்யமே ஜீவன், ஈச்வரன், ஜகத் என்று பலவிதமாக தோன்றுகிறது என்று தெரிவிக்கின்றது.

17. *ஶுத்தம் ஸ்வதாம்ந்யுபரதாகிலபுத்த்யவஸ்தம்*
சிந்மாத்ரமேகமபயம் ப்ரதிஷித்ய மாயாம் ।
திஷ்டம்ஸ்தயைவ புருஷத்வமுபேத்ய
தஸ்யாமாஸ்தே பவாநபரிஶுத்த இவாத்மதந்த்ர: ॥

शुद्धं स्वधाम्न्युपरताखिलबुद्ध्यवस्थं चिन्मात्रमेकमभयं प्रतिषिध्य मायाम् ।
तिष्ठंस्तयैव पुरुषत्वमुपेत्य तस्यामास्ते भवानपरिशुद्ध इवात्मतन्त्रः ॥

புத்தியின் அவஸ்த்தைகளில் ஸம்பந்தமற்று இருக்கின்ற சுத்த ஆத்ம ஸ்வரூபம் சின்மாத்ரம் ஏகம், அபயம், மாயா ஸம்பந்தமற்றதாக இருந்தும் மாயையினால் ஜீவபாவத்தை அடைந்து அசுத்தமாகவும், ஈச்வர அதீனமாகவும் இருப்பதாக தோன்றுகிறது.

இந்த ச்லோகம் மாயாவசாத் சைதன்யத்திற்கு ஜீவபாவம் என்று தெரிவிக்கின்றது.

18. *விஶேஷபுத்தேர்விவரம் மநாக்ச பஶ்யாமி யந்ந வ்யவஹாரதோந்யத் ।*
க ஈஶ்வரஸ்தத்ர கிமீஶிதவ்யம் ததாபி ராஜந் கரவாம கிம் தே ॥

विशेषबुद्धेर्विवरं मनाक्च पश्यामि यन्न व्यवहारतोन्यत् ।
क ईश्वरस्तत्र किमीशितव्यम् तथापि राजन् करवाम किं ते ॥

ஜடபரதர் ராஜாவினிடம் இவ்விதம் தெரிவிக்கின்றார். ஹே! ராஜன், நீங்கள் ராஜா, நான் ப்ருத்யன் என்ற பேதபுத்திக்கு வ்யவஹாரதசையில்தான் அவகாசம் (இடம்) இருக்கின்றது பரமார்த்தமாக சிறிதும் இடமில்லை. பரமார்த்த தசையில், ஈச்வரன் என்றோ, ஈசிதவ்யன் என்றோ எந்த பேதமும் அற்ற அத்வைததத்வம் ஒன்றே இருக்கின்றது. இவ்விதம் இருந்தபோதிலும் நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று சொல்.

இந்த ச்லோகம் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது.

19. *யதாऽநில: ஸ்தாவரஜங்கமாநாமாத்மஸ்வரூபேண நிவிஷ்ட ஈஶேத் ।*
ஏவம் பரோ பகவாந்வாஸுதேவ: க்ஷேத்ரஜ்ஞ ஆத்மேதமநுப்ரவிஷ்ட: ॥

यथाऽनिलः स्थावरजङ्गमानामात्मस्वरूपेण निविष्ट ईशेत् ।
एवं परो भगवान्वासुदेवः क्षेत्रज्ञ आत्मेदमनुप्रविष्टः ॥

வாயுவானது, ஸ்தாவர, ஜங்கம சரீரங்களில் ப்ராணரூபமாக இருந்து கொண்டு நியமனம் செய்கின்றது. அதேபோல், பகவான் வாசுதேவன், ஸர்வசரீரங்களிலும் க்ஷேத்ரஜ்ஞனாக ப்ரவேசித்து, ஸர்வ வ்யவஹாரங்களுக்கும் நியந்தாவாக இருக்கின்றார்.

இந்த ச்லோகம் ஈச்வரனே, ஜீவன் என்று ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

20. ஜ்ஞாநம் விஶுத்தம் பரமார்தமேகமநந்தரம் த்வபஹிர்ப்ரஹ்ம ஸத்யம் ।
ப்ரத்யக்ப்ரஶாந்தம் பகவச்சப்தஸம்ஜ்ஞம் யத்வாஸுதேவம் கவயோ வதந்தி ॥

ज्ञानं विशुद्धं परमार्थमेकमनन्तरं त्वबहिर्ब्रह्म सत्यम्।
प्रत्यक्प्रशान्तं भगवच्छब्दसंज्ञं यद्वासुदेवं कवयो वदन्ति॥

ஏகமான பரமார்த்த ஸ்வரூபம், ஞானம், சுத்தம், அனந்தரம், ப்ரத்யக் ஸ்வரூபம், ஸத்யம், ப்ரசாந்தம், ப்ரஹ்மம், அபாஹ்யம் (அனாத்மா அல்ல) என்று தத்வ ஞானிகள் தெரிவிக்கின்றார்கள்.

இந்த ச்லோகத்தில் ப்ரத்யக் ப்ரஹ்ம ஐக்யமே சொல்லப்படுகின்றது.

21. *நித்ய ஆத்மாऽவ்யயஶ்ஶுத்தஸ்ஸர்வகஸ்ஸர்வவித்பர:* ।
தத்தேऽஸாவாத்மநோ லிங்கம் மாயயா விஸ்ருஜந் குணாந் ॥ (7.2.22)

नित्य आत्माऽव्ययश्शुद्धस्सर्वगस्सर्ववित्परः।
धत्तेऽसावात्मनो लिङ्गं मायया विसृजन् गुणान्॥ (7.2.22)

ஆத்மா, நித்யம், அவ்யயம், சுத்தம், ஸர்வகதம், ஸர்வஞ்ஞம், தேஹம் முதலான ஸங்காதங்களைக் காட்டிலும் வேறானது. ஆத்மா தன்னுடைய அவித்யையினால் சரீரங்களை தரிக்கின்றது. சுகம் துக்கம் போன்ற குணங்களையும் பலவிதமாக அனுபவிக்கின்றது.

இந்த ச்லோகம் ஆத்மா ஸர்வ வ்யாபி என்றும் ஸர்வஞ்ஞன் என்றும் தெரிவிக்கின்றது.

22. *ப்ரத்யகாத்மஸ்வரூபேண த்ருஶ்யரூபேண ச ஸ்வயம்* ।
வ்யாப்யவ்யாபகநிர்தேஶ்யோ ஹ்யநிர்தேஶ்யோ விகல்பித: । (7.6.22)

प्रत्यगात्मस्वरूपेण दृश्यरूपेण च स्वयम्।
व्याप्यव्यापकनिर्देश्यो ह्यनिर्देश्यो विकल्पितः। (7.6.22)

ப்ரத்யகாத்மாவே, த்ரஷ்ட்டாவாகவும், த்ருச்யமாகவும் மாயையினால் தோன்றுகிறது. உண்மையில், ப்ரத்யகாத்ம ஸ்வரூபம் விகல்பத்திற்கு விஷயமில்லை. இன்னதென்று நிர்த்தேசம் செய்வதற்கும் முடியாது. இவ்விதம் இருந்தபோதிலும், வ்யாப்யமான தேஹாதி ரூபமாகவும், வ்யாபகமான த்ரஷ்ட்ரு ரூபகமாகவும், மாயையினால் நிர்த்தேசம் செய்யப்படுகிறது.

இந்த ச்லோகம் நிர்விகல்பக ப்ரஹ்மமே, ஜீவனாகவும், ஜகத்தாகவும் மாயையினால் கல்பிக்கப்படுகிறது என்று தெரிவிக்கின்றது.

23. *கேவலாநுபவாநந்தஸ்வரூப: பரமேஶ்வர: ।*
மாயயாந்தர்ஹிதைஶ்வர்ய ஈயதே குணஸர்கயா । (7.6.23)

केवलानुभवानन्दस्वरूपः परमेश्वरः ।
माययान्तर्हितैश्वर्य ईयते गुणसर्गया । (7.6.23)

கேவல ஆனந்த அனுபவ ஸ்வரூபமான பரமேச்வரர், முக்குணாத்மகமான ச்ருஷ்டிக்கு காரணமான மாயையினால், ஐச்வர்யம் மறைபட்டிருக்கின்ற காரணத்தினால் ஜீவன் என்று அறியப்படுகிறார்.

இந்த ச்லோகம் சிதானந்த ஸ்வரூபமான பரமாத்மாவின் ஸ்வரூபகுணங்கள் மாயையினால் மறைக்கப்பட்டிருக்கின்றதால் ஜீவபாவத்தை அடைந்திருக்கிறார் என்று தெரிவிக்கின்றது.

24. *ஆத்மா நித்யோऽவ்யயஶ்ஶுத்தோ ஹ்யேக: க்ஷேத்ரஜ்ஞ ஆஶ்ரய: ।*
அவிக்ரிய: ஸ்வத்ருக்கேது: வ்யாபகோऽஸங்க்யநாவ்ருத: ॥ (7.7.19)

आत्मा नित्योऽव्ययश्शुद्धो ह्येकः क्षेत्रज्ञ आश्रयः ।
अविक्रियः स्वदृग्घेतुः व्यापकोऽसङ्ग्यनावृतः ॥ (7.7.19)

ஆத்மா, நித்யம், அவ்யயம், சுத்தம், அத்விதீயம், க்ஷேத்ரஞ்ஞசக்தின், ஸர்வ ப்ரபஞ்சத்திற்கும் ஆச்ரயம். நிர்விகாரம், ஸ்வப்ரகாசம், ஸர்வஜகத் காரணம், வ்யாபகம், அஸங்கம், அனாவ்ருதம் (ஆவரணமற்றவர்).

இந்த ச்லோகம், ஆத்ம ஐக்யத்தையும், வ்யாபகத்வத்தையும் தெரிவிக்கின்றது.

25. *மநோமயத்வாத்ஸர்வேऽர்தாஸ்ஸ்வப்நஜாகரயோஸ்ஸமா: ।*
த்ருஷ்டா நஷ்டா அபி த்யாதுஶ்ஶோகமோஹபயப்ரதா: ॥

मनोमयत्वात्सर्वेऽर्थास्स्वप्नजागरयोस्समाः ।
दृष्टा नष्टा अपि ध्यातुश्शोकमोहभयप्रदाः ॥

ஜாக்ரத், ஸ்வப்னம் என்ற இரண்டு அவஸ்த்தைகளிலும், அறியப்படுகின்ற ஸர்வவிஷயங்களும் மனோமயம்தான், அவஸ்த்தாபேதம் இருந்தபோதிலும் அவைகளில் காணப்படும் (அறியப்படும்) விஷயங்களில் வித்யாஸம் ஏதுமில்லை. இரண்டு அவஸ்த்தைகளிலும், விஷயங்கள் த்ருச்யமாகவும் (அறியப்படும் வஸ்துவாகவும்) விநாசியாகவும் இருக்கின்றன. இவ்வாறு அந்த விஷயங்கள் மித்யாவாக இருந்தாலும் இதைநினைப்பவனுக்கு பயம் மோஹம் சோகம் இவைகளை கொடுக்கின்றன.

26. அஹம்பவாந்நசாந்யஸ்த்வம் த்வமேவாஹம் விசக்ஷ்வ போ: ।
ந நௌ பஶ்யந்தி கவயஶ்சித்ரம் ஜாது மநாகபி ॥ (4.28.62)

अहम्भवान्नचान्यस्त्वं त्वमेवाहं विचक्ष्व भोः ।
न नौ पश्यन्ति कवयश्छिद्रं जातु मनागपि ॥ (4-28-62)

ஈச்வரன், ஜீவனிடம் இவ்விதம் தெரிவிக்கின்றார். 'நானும், நீயும் ஒன்றே. நமக்குள் பேதம் சிறிதும் இல்லை. அதனால் உன்னை, வ்யாபகனான நானே என்று அறிந்துகொள். தத்வஞானியானவன் நம் இருவருக்கும் மத்தியில் சிறிதளவு பேதத்தைக்கூட ஒருபோதும் காண்பதில்லை.

இந்த ச்லோகம், ஜீவப்ரஹ்ம அபேதத்தையே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

27. தஸ்மிம்ஸ்ததா லப்தருசேர்மஹாமதே ப்ரியஶ்ரவஸ்ய ஸ்கலிதா மதிர்மம ।
யயா மமைதத்ஸதஸத்ஸ்வமாயயா பஶ்யே மயி ப்ரஹ்மணி கல்பிதம் பரே ॥ (1.5.27)

तस्मिंस्तदा लब्धरुचेर्महामते प्रियश्रवस्य स्खलिता मतिर्मम ।
यया ममैतत्सदसत्स्वमायया पश्ये मयि ब्रह्मणि कल्पितं परे ॥ (1-5-27)

நாரதர் - ஸ்ரீவ்யாஸபகவானுக்கு இவ்விதம் உபதேசிக்கின்றார் - ப்ரியச்ரவஸ் - ப்ரியமான யசஸை உடைய பகவானிடத்தில், எனது புத்தியானது எவ்விதமான சலனமும் இல்லாமல் நிலைத்திருந்தது. அப்போது, ப்ரஹ்மஸ்வரூபமான என்னிடமே ஸத், அஸத் என்ற (ஸ்தூல, ஸூக்ஷ்ம) ஸர்வ ஜகத்தும் மாயையினால் கல்பிக்கப்பட்டிருக்கின்றது என்று நான் அறிந்தேன்.

இந்த ச்லோகம் ப்ரத்யகபின்னம் ப்ரஹ்மம் என்றே ஸ்பஷ்ட்டமாக தெரிவிக்கின்றது.

28. ந நாமரூபே குணகர்மஜந்மபிர்நிரூபிதவ்யே தவ தஸ்ய ஸாக்ஷிண: (10.2-36)

न नामरूपे गुणकर्मजन्मभिर्निरूपितव्ये तव तस्य साक्षिणः । (10-2-36)

குணங்கள், ஜன்மாக்கள், க்ரியைகள், இவைகளைக்கொண்டு ஏற்படும் நாம ரூபங்களில், (அவைகளுக்கெல்லாம் ஸாக்ஷியான) ஸர்வ ஸாக்ஷியாக இருக்கின்ற உனக்கு எவ்வித ஸம்பந்தமும் கிடையாது.

இந்த ச்லோகம் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது.

29. ரூபம் யத்தத்ப்ராஹுரவ்யக்தமாத்யம் ப்ரஹ்ம
ஜ்யோதிர்நிர்குணம் நிர்விகாரம் ।
ஸத்தாமாத்ரம் நிர்விஶேஷம் நிரீஹம்
ஸத்வம் ஸாக்ஷாத்விஷ்ணுரத்யாத்மதீப: ॥ (10-3-24)

रूपं यत्तत्प्राहुरव्यक्तमाद्यं ब्रह्म ज्योतिर्निर्गुणं निर्विकारम्।
सत्तामात्रं निर्विशेषं निरीहं सत्त्वं साक्षाद्विष्णुरध्यात्मदीपः॥ (10-3-24)

வாஸுதேவனான பகவான் ஜனனமானவுடன் (அவரை ஈன்றெடுத்த உத்தமி) தேவகியானவள், பகவத்ஸ்வரூபத்தை கண்டவுடன் இவ்விதம் ஸ்துதிக்கின்றாள்: ''அவ்யக்தமாகவும் அனாதியாகவும் நிர்க்குணமாக நிர்விகாரமாக சைதன்ய ஸ்வரூபமாக ஸத்தாமாத்ரமாக நிர்விசேஷமாக நிஷ்க்ரியமான ஸர்வ அவபாஸகமான எந்த ஸ்வரூபத்தை விஷ்ணுவென்று வேதங்கள் எல்லாம் துதிக்கின்றதோ அந்த ஸ்வரூபமே 'நீ' என்று நான் அறிகின்றேன்'' என்று துதிக்கின்றாள்.

இந்த ச்லோகம் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது.

30. *தஸ்மாதிதம் ஜகதஶேஷமஸத்ஸ்வரூபம்*
ஸ்வப்நாபமஸ்ததிஷணம் புருது:கது:கம் ।
த்வய்யேவ நித்யஸுகபோததநாவநந்தே
மாயாத உத்யதபி யத்ஸதிவாவபாதி ॥
ஏகஸ்த்வமாத்மா புருஷ: புராண: ஸத்ய:
ஸ்வயம்ஜ்யோதிரநந்த ஆத்ய: । (10-14-22,23)

तस्मादिदं जगदशेषमसत्स्वरूपं स्वप्नाभमस्तधिषणं पुरुदुःखदुःखम्।
त्वय्येव नित्यसुखबोधतनावनन्ते मायात उद्यदपि यत्सदिवावभाति॥
एकस्त्वमात्मा पुरुषः पुराणः सत्यः स्वयंज्योतिरनन्त आद्यः। (10-14-22,23)

ஸர்வ ப்ரபஞ்சமும் ஸ்வப்னம்போல் அஸத்யம் என்றே அறியப்படுகிறது. அதிக துக்கம், ஜடம், முதலான தன்மையுடைய இந்த ஜகத், நித்ய சுகபோத ஸ்வரூபமான அனந்த, அத்விதீயமான உன்னிடத்தில் மாயையினால் தோன்றி ஸத்யம்போல் பாஸிக்கின்றது. (ப்ரகாசிக்கின்றது) ஸ்வயம் மித்யையாக இருந்தாலும், ஸத்யம்போல் அறியப்படுகிறது. ஆத்மா ஏகம், பூர்ணம் (புருஷ:) ஸனாதனம், ஸத்யம், ஸ்வயம் ஜ்யோதி ஸ்வரூபம் நிர்மலம், அத்விதீயம். உபாதிஸம்பந்தம் அற்றவர். அம்ருத ஸ்வரூபம், என்று தெரிவிக்கின்றது.

இந்த ச்லோகங்கள், ஜகத் மித்யா, ப்ரத்யக் ப்ரஹ்ம அபேதம், அத்வைதம் ஸத்யம் என்று தெரிவிக்கின்றன.

31. *ப்ரபஞ்சம் நிஷ்ப்ரபஞ்சோபி விடம்பயஸி மாயயா* । (10-14-37)

प्रपञ्चं निष्प्रपञ्चोपि विडम्बयसि मायया। (10-14-37)

நிஷ்ப்ரபஞ்சமாக இருந்தும் மாயையினால் ப்ரபஞ்சத்தை ச்ருஷ்டிக்கின்றாய். (பிரம்ம ஸ்துதி)

32. வஸ்துதோ ஜாநதாமத்ர க்ருத்ஸ்நம் ஸ்தாஸ்நு சரிஷ்ணு ச ।
பகவத்ரூபமகிலம் நாந்யத்வஸ்த்வஸ்தி கிஞ்சந ॥

वस्तुतो जानतामत्र कृत्स्नं स्थास्नु चरिष्णु च ।
भगवद्रूपमखिलं नान्यद्वस्त्वस्ति किञ्चन ॥

'வஸ்து தத்வம்' என்ன என்று அறிந்தவர்களுக்கு, ஸ்தாவரம், ஜங்கமம் என்ற ஸர்வஜகத்தும் பகவத் ஸ்வரூபமே என்றும், பகவத் ஸ்வரூபத்தை அன்றி வேறாக எதுவுமே இல்லை என்றே அறியப்படுகிறது.

இந்த ச்லோகம் 'அத்வைதம்' தத்வம் என்றே தெரிவிக்கின்றது.

33. ஆத்மா ஹ்யேக: ஸ்வயம்ஜ்யோதிர்நித்யோऽந்யோ நிர்குணோ குணை: ।
ஆத்மஸ்ருஷ்டைஸ்தத்பதேஷு தேஹேஷு பஹுதேயதே ॥ (10-85-24)

आत्मा ह्येकः स्वयंज्योतिर्नित्योऽन्यो निर्गुणो गुणैः ।
आत्मसृष्टैस्तत्पदेषु देहेषु बहुधेयते ॥ (10-85-24)

ஆத்மா ஏகம், ஸ்வப்ரகாசம், நித்யம், நிர்க்குணமாக இருந்த போதிலும், தன்னால் ச்ருஷ்ட்டிக்கப்பட்ட முக்குணங்களைக்கொண்டு, பஞ்ச பூதங்களால் ஆன தேஹாதிகளை உபாதியாகக்கொண்டு பலவிதமாக (அனேகமாக) அறியப்படுகிறது.

இந்த ச்லோகம் ஆத்ம ஐக்யத்தை தெரிவிக்கின்றது.

34. ப்ரஹ்மந் ப்ரஹ்மண்யநிர்தேச்யே நிர்குணே குணவ்ருத்தய: ।
கதம் சரந்தி ச்ருதய: ஸாக்ஷாத்ஸதஸத:பரே ॥ (10-87-1)

ब्रह्मन् ब्रह्मण्यनिर्देश्ये निर्गुणे गुणवृत्तयः ।
कथं चरन्ति श्रुतयः साक्षात्सदसतःपरे ॥ (10-87-1)

பரீக்ஷித் என்ற அரசன் ஸ்ரீசுகப்ரஹ்மமஹரிஷியினிடம் (சுகபகவானிடம்) இவ்விதம் ப்ரச்னம் செய்கின்றார். ஹே! ப்ரஹ்மன்! வாக்கிற்கு விஷயமாகாததும், ஸத், அஸத் என்பவைகளுக்கு அப்பாற்பட்ட நிர்குண ப்ரஹ்ம ஸ்வரூபத்தை வேதங்கள் எவ்விதம் குண வ்ருத்தியினால் போதிக்கமுடியும்? என்று கேட்கின்றார்.

இந்த ச்லோகம் நிர்விசேஷம் ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது.

35. *நிர்குணே கேவலே ஸாக்ஷாதாத்மநோ யத்விபர்யய: ।*
ஸைஷா பகவதோ மாயா யயேதம் நிர்மமே விபு: ॥

निर्गुणे केवले साक्षादात्मनो यद्विपर्ययः।
सैषा भगवतो माया ययेदं निर्ममे विभुः॥

நிர்க்குணமான, அத்விதீயமான ஆத்மஸ்வரூபத்தில், மாயையினால் ஸகுணத்வமும், த்விதீயத்வமும் விபரீதமாக தோன்றுகிறது. இந்த மாயையினால்தான், பரமேச்வரன், ஸர்வ ப்ரபஞ்சத்தையும் ச்ருஷ்டிக்கின்றார். இந்த ச்லோகம், வாஸ்த்தவத்தில் நிர்க்குணமாக, அத்விதீயமாக இருக்கின்ற ப்ரஹ்மம் மாயையினால் ஸத்விதீயமாக ஸகுணமாக அறியப்படுகிறது என்று தெரிவிக்கின்றது.

36. *நைதந்மநோ விஶதி வாகுத சக்ஷுராத்மா ப்ராணேந்த்ரியாணி ச யதாநலமர்சிஷ: ஸ்வா: ।*
ஶப்தோபி போதகநிஷேதததயாத்மமூலமர்தோக்தமாஹ யத்ருதே ந நிஷேதஸித்தி: ॥

नैतन्मनो विशति वागुत चक्षुरात्मा प्राणेन्द्रियाणि च यथानलमर्चिषः स्वाः।
शब्दोपि बोधकनिषेधततयात्ममूलमर्थोक्तमाह यद्दते न निषेधसिद्धिः॥

எவ்விதம் அக்னியை, அக்னியின் ஜ்வாலைகள் எரிக்கமுடியாதோ, அதேபோல் அதை ப்ரகாசப்படுத்தவும் முடியாது. ஏனெனில் அக்னி ஜ்வாலைக்கு அக்னியே ஆத்மாவாக இருக்கின்றது. இதேபோல் ஜடமான மனஸ், வாக், சக்ஷுஸ், புத்தி, ப்ராணன், மற்றுமுள்ள இந்த்ரியங்கள் எல்லாவற்றிர்க்கும் ஆத்மாவாக இருக்கின்ற ஸ்வரூபத்தை, அவைகளால் ப்ரகாசப்படுத்த முடியாது. உபநிஷத் என்ற சப்தப்ரமாணமும் ஆத்ம ஸ்வரூபத்தை நேரிடையாக போதிக்கமுடியாது. அதனால் நேதி நேதி என்று இது அல்ல இது அல்ல என்று நிஷேதம் செய்தே போதிக்கின்றது. இவ்விதம் விசேஷங்களை நிஷேதம் செய்கின்றபோது, அந்த நிஷேத அவதிஸ்வரூபமாக இருக்கின்ற வஸ்து 'தானே' ஸித்திக்கின்றது (ப்ரகாசிக்கின்றது). அதனால் சப்தப்ரமாணமும் பரம்பரையாகவே ஆத்ம ஸ்வரூபத்தை போதிக்கின்றதே அன்றி நேரிடையாக போதிக்கவில்லை.

இந்த ச்லோகம், ஸர்வ நிஷேதத்திற்கு அவதிஸ்வரூபமாக நிர்விசேஷப்ரஹ்மத்தை போதிக்கின்றது.

37. *வஸ்துநோ யத்யநாநாத்வமாத்மந: ப்ரஶ்ந ஈத்ருஶ: ।*
கதம் கடேத வோ விப்ரா வக்துர்வா மே க ஆஶ்ரய: । (11-13-22)

वस्तुनो यद्यनानात्वमात्मनः प्रश्न ईदृशः।
कथं घटेत वो विप्रा वक्तुर्वा मे क आश्रयः। (11-13-22)

பரமார்த்த வஸ்துவான ஆத்ம ஸ்வரூபத்தில் பேதமே இல்லை என்றால் இவ்வித ப்ரச்னமே செய்யமுடியாதே? ஏனெனில் கேள்வி கேட்பவர் வேறு, பதில் தெரிவிப்பவர் வேறு என்று (பேதம்) இருந்தால்தானே ப்ரச்னம் செய்யமுடியும்? நிர்விசேஷம் ஆத்மஸ்வரூபம் என்றால், அதில் எந்த விசேஷத்தைக்கொண்டு பேதத்தை அறிந்து நான் உங்களுக்கு பதில் தெரிவிக்கமுடியும்? பேதத்திற்கு ஆச்ரயமான எந்த விசேஷமும் ஆத்மாவில் இருக்கமுடியாதே?

இந்த ச்லோகம் அத்விதீயம் ஆத்மா என்றே தெரிவிக்கின்றது.

38. ஆத்மா யதி ஸ்யாத்ஸுகது:கஹேது: கிமந்யதஸ்தத்ர நிஜஸ்வபாவ: ।
நஹ்யாத்மநோந்யத்யதி தந்ம்ருஷா ஸ்யாத்க்ருத்யேத
கஸ்மாந்ந ஸுகம் ந து:கம் ॥ (11-23-53)

आत्मा यदि स्यात्सुखदुःखहेतुः किमन्यतस्तत्र निजस्वभावः ।
नह्यात्मनोन्यद्यदि तन्मृषा स्यात्क्रुध्येत कस्मान्न सुखं न दुःखम् ॥ (11-23-53)

ஆத்மாவே, சுகதுக்கத்திற்கு ஹேதுவாக இருக்குமானால், சுக துக்க ஹேது என்பது ஆத்மாவிற்கு ஸ்வபாவம் என்று சொல்லநேரிடும். அவ்விதம் இருக்குமானால், சுக துக்கத்திற்கு தர்மாதர்மங்களின் அபேக்ஷ தேவை இல்லை என்றாகும். ஏனெனில் ஸ்வபாவ ஸித்தமான குணங்களுக்கு காரணம் தெரிவிக்கவேண்டிய தேவை இல்லை. அதனால் ஆத்மா ஸ்வயம், சுகதுக்கங்களுக்கு காரணமல்ல. இவ்விதம் சொல்லப்படுமானால் சுகதுக்கத்திற்கு வேறுகாரணம் இருக்கலாமே என்றால், அவ்விதம் வேறுகாரணம் இருப்பதாகவும் சொல்ல முடியாது. ஏனெனில், ஆத்மாவை அன்றி வேறாக எந்த ஒரு வஸ்துவும் உண்மையில் கிடையாது. ஆத்மாவை அன்றி வேறாக இருப்பதாக அறியப்படுவதெல்லாமே மித்யை (ம்ருஷா). அதனால், ஆத்மாவிற்கு சுகமோ, துக்கமோ, காமக்ரோதம் முதலானவைகளோ எவ்விதம் ஏற்படமுடியும்?

இந்த ச்லோகம் ஆத்மா ஸத்யம். மற்ற எல்லாமே அஸத்யம் என்றே தெரிவிக்கின்றது.

39. தந்மாயாபலரூபேண கேவலம் நிர்விகல்பிதம் ।
வாங்மநோऽகோசரம் நித்யம் த்விதா ஸமபவத்ப்ருஹத் ॥

तन्मायाफलरूपेण केवलं निर्विकल्पितम् ।
वाङ्मनोऽगोचरं नित्यं द्विधा समभवद्बृहत् ।

மனஸிற்கும், வாக்கிற்கும் கோசரமாகாத நிர்விகல்ப கேவல ப்ரஹ்மஸ்வரூபம் மாயை, அதன் கார்யமான உபாதிகளினால் இரண்டாக பிரிந்து அறியப்படுகிறது. ஆனால் உண்மையில் ப்ரஹ்மஸ்வரூபம் அபரிச்சின்னம்.

இந்த ச்லோகம் நிர்விசேஷ ப்ரஹ்மம் என்றே தெரிவிக்கின்றது.

40. *யஸ்து யஸ்யாதிரந்தோ வை ஸ வை மத்யம் ச தஸ்ய தத் ।*
விகாரோ வ்யவஹாரார்தோ யதா தைஜஸபார்திவா: ।

यस्तु यस्यादिरन्तो वै स वै मध्यं च तस्य तत् ।
विकारो व्यवहारार्थो यथा तैजसपार्थिवाः ।

எந்த வஸ்து (காரணம்) எதன் (கார்யம்) ஆதியிலும், அந்தத்திலும் இருக்கின்றதோ அந்த வஸ்து மத்யம காலத்திலும் இருக்கின்றது. இதுவே கார்யகாரண அனன்யத்வ ந்யாயம். அதனால் காரண ஸ்வரூபமான அது ஒன்றே ஸத்யம். விகாரம் (கார்யம்) எல்லாமே வ்யவஹாரார்த்தமாக கல்பிக்கப்படுகிறது. கனக குண்டலம், கடசராவாதிகள் எல்லாம் எவ்விதம் காரணத்தை அன்றி வேறாக இல்லையோ அதுபோல் என்று இந்த ச்லோகம் தெரிவிக்கின்றது.

இந்த ச்லோகம், ஜகத்காரணம் ஒன்றே ஸத்யம், ஜகத் என்பது வ்யாவஹாரமாத்ரம் என்று சொல்லப்படுவதால் ஜகத்மித்யை என்றே ஸித்திக்கின்றது.

41. *கிம் பத்ரம் கிமபத்ரம் வா த்வைதஸ்யாவஸ்துந: கியத் ।*
வாசோதிதம் ததந்ருதம் மநஸா த்யாதமேவ ச ॥

किं भद्रं किमभद्रं वा द्वैतस्यावस्तुनः कियत् ।
वाचोदितं तदनृतं मनसा ध्यातमेव च ॥

மித்யாபூதமான த்வைத ப்ரபஞ்சத்தில் அறியப்படும் வஸ்துக்களில் இது நல்லது, இது கெட்டது என்றோ, அவைகள் எவ்வளவு நல்லது, எவ்வளவு கெட்டது என்றோ சொல்ல முடியாது. ஏனெனில் அவையெல்லாம் வஸ்து அல்ல. அவஸ்து என்றே அறியவேண்டும். ஆனால் அவையெல்லாம் வாக் ஆலம்பனமே (வாக்கினால் தெரிவிக்கப்படுகிறதே) அன்றி உண்மையில் அவை எல்லாமே அந்ருதம். அதனால் அவரவர் மனதில் ஏற்படும் விருப்பத்திற்கு ஏற்றவாறு இது நல்லது கெட்டது என்று கல்பிக்கப்படுகிறது. அதனால் அந்த வஸ்துவை ஸ்துதி செய்வதற்கோ அல்லது நிந்தை செய்வதற்கோ இடமில்லை.

இந்த ச்லோகம், த்வைதம் அஸத்யம் ப்ரஹ்மமே ஸத்யம் என்று தெரிவிக்கின்றது.

42. *ஸமந்வயேந வ்யதிரேகதஸ்ச யேநைவ துர்யேண ததேவ ஸத்யம் ।*
ந யத்புரஸ்தாதுத யந்ந பஸ்சாந்மத்யேபி தந்ந வ்யபதேஸமாத்ரம் ॥

समन्वयेन व्यतिरेकतश्च येनैव तुर्येण तदेव सत्यम् ।
न यत्पुरस्तादुत यन्न पश्चान्मध्येपि तन्न व्यपदेशमात्रम् ॥

அன்வய வ்யதிரேகத்தினால், துரீய ஆத்ம ஸ்வரூபமே ஸத்யம். அந்த ஆத்மஸ்வரூபத்திற்கு கிழக்கு மேற்கு முதலான திசைகள் தெரிவிப்பது வ்யவஹாரமாத்ரம்.

43. ஏதாவாநாத்மஸம்மோஹோ யத்விகல்பஸ்து கேவலே । (11-29-16)

एतावानात्मसम्मोहो यद्विकल्पस्तु केवले । (11-29-16)

அத்விதீயமான ஆத்மஸ்வரூபத்தில் அஞ்ஞானத்தினால் இவ்வித விகல்பங்கள், ப்ராந்தியினால் அறியப்படுகின்றது (பாஸிக்கின்றது).

இந்த ச்லோகம், நிர்விகல்ப ஆத்மஸ்வரூபத்தில் அறியப்படும் விகல்பங்கள் ப்ராந்தி ஸித்தம் என்றே தெரிவிக்கின்றது.

44. விஸ்ருஜ்ய ஸ்மயமாநாந் ஸ்வாந் த்ருஶம் வ்ரீடாம் ச தைஹிகீம் ।
ப்ரணமேத்தண்டவத் பூமாவாஶ்வசண்டாலகோகரம் ॥
ஈஶ்வரோ ஜீவகலயா ப்ரவிஷ்டோ பகவாநிதி ।

विसृज्य स्मयमानान् स्वान् दृशं व्रीडां च दैहिकीम् ।
प्रणमेद्दण्डवद् भूमावाश्वचण्डालगोखरम् ॥
ईश्वरो जीवकलया प्रविष्टो भगवानिति ।

ஈச்வரன் ஸர்வபூதங்களிலும் அந்தர்யாமியாக இருக்கின்றதால் நாய், சண்டாளன், பசு, கழுதை, முதலான ஸர்வப்ராணிகளையும் தேஹவித்யாஸத்தைக்கொண்டு உயர்ந்தது, தாழ்ந்தது என்று ஏற்படும் பாவத்தை விட்டுவிட்டு நமஸ்கரிக்கவேண்டும். இவ்விதம் நமஸ்கரிப்பவர்களைப் பார்த்து பரிகசிப்பவர்களை பொருட்படுத்தாமல் அந்தர்யாமி என்ற த்ருஷ்டியைக்கொண்டு நமஸ்கரிக்கவேண்டும்.

இந்த ச்லோகம் ஜீவேச்வர அபேதத்தையே ஸ்பஷ்டமாக போதிக்கின்றது.

45. ஸுஷுப்தவச்சூந்யவதப்ரதர்க்யம் தந்மூலபூதம் பதமாமநந்தி ।

सुषुप्तवच्छून्यवदप्रतर्क्यं तन्मूलभूतं पदमामनन्ति ।

ஸுஷுப்தியை போலவும், சூன்யம் போன்றும் எவ்வித விசேஷங்களும் அறியப்படாமல் தர்க்கத்திற்கு அவிஷயமாக இருக்கின்றது என்று மூலகாரணத்தை ச்ருதிகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பிரஹ்மம் நிர்விசேஷம் என்று தெரிவிக்கப்படுகிறது.

46. *மாயாமாத்ரமிதம் ராஜந்நாநாத்வம் ப்ரத்யகாத்மநி ।*

मायामात्रमिदं राजन्नानात्वं प्रत्यगात्मनि ।

ஹே! ராஜன்! மாயாமாத்ரம் இதம். ஆத்மஸ்வரூபத்தில் நானாத்வம் மாயாமாத்ரமே அன்றி ஸத்யமல்ல. மித்யை என்றே அறிந்துகொள் என்றே தெரிவிக்கின்றது.

47. *கடே பிந்நே யதாऽऽகாஶ ஆகாஶ: ஸ்யாத்யதா புரா ।*
ஏவம் தேஹே ம்ருதே ஜீவோ ப்ரஹ்ம ஸம்பத்யதே புந: ॥

घटे भिन्ने यथाऽऽकाश आकाशः स्याद्यथा पुरा ।
एवं देहे मृते जीवो ब्रह्म सम्पद्यते पुनः ॥

கடம் உடைந்த பிறகு கடாகாசம், எவ்விதம் முன்போல் சுத்த ஆகாசமாக ஆகின்றதோ, அதேபோல் தேஹம் அழிகின்றபோது ஜீவன், ப்ரஹ்மஸ்வரூபமாக ஆகிறான்.

இந்த ச்லோகம் ப்ரத்யக் ப்ரஹ்ம ஐக்யம் என்று ஸ்பஷ்டமாகத்தெரிவிக்கின்றது.

இதுவரை மற்ற புராணங்களும் அத்வைத பரமாகவே இருக்கின்றது என்று விஷ்ணுபுராணம், ஸூதஸம்ஹிதை, பாகவதம் முதலானவைகளைக் கொண்டு நிரூபிக்கப்பட்டதால், மற்றுமுள்ள புராண ச்லோகங்கள் பற்றி இதற்குமேல் விஸ்தரிக்கவேண்டிய அவச்யம் ஏதுமில்லை. இதுவே போதுமானது என்று தெரிவிக்கப்படுகிறது.